காவ்யா



பரிமாணம்

கட்டுரைக் களஞ்சியம்

ஞானி கி. பழனிச்சாமி

காவ்யா

பரிமாணம் - கட்டுரைக் களஞ்சியம்

தொகுப்பு

ஞானி கி. பழனிச்சாமி

பரிமாணம் - கட்டுரைக் களஞ்சியம்

தொகுப்பு
ஞானி கி. பழனிச்சாமி
முதல் பதிப்பு : 2012
வெளியீடு : **காவ்யா**
16, இரண்டாம் குறுக்குத்தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
போன் : 044-23726882 / 9840480232
அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை - 5.
பக்கங்கள் :XIV+1186=1200
விலை : ரூ.1000/-

PARIMANAM - KATTURAIK KALANCHIYAM

Edited by:
Gnani Ki. PALANISAMY
First Edition : 2012
Published by **KAAVYA**
16, 2nd Cross Street, Trustpuram,
Kodambakkam, Chennai - 600 024.
Phone: 044 - 23726882 / 9840480232
e-mail : kaavyabooks@gmail.com.
Website : WWW.kaavyaa.com.
Printed at : Mani Offset, Chennai -5.
Pages: XIV+1186 = 1200
Price : ₹ 1000

முன்னுரை
பரிமாணம் – கட்டுரைக் களஞ்சியம்

1. 'பரிமாணம்' – கட்டுரைக் களஞ்சியம் என்ற பெருந்தொகுப்பை தமிழக மக்கள் குறிப்பாக மார்க்சியர் முன் வைப்பதில் நானும் என் நண்பர்களும் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். கோவை வட்டாரத்தில் 1967-68 கால அளவில் 'புதிய தலைமுறை' என்ற மார்க்சிய கலை இலக்கிய, தத்துவ இதழைத் தொடங்கி நடத்தியதன் மூலம் பெற்ற அனுபவத்தின் தொடர்ச்சியாக, நாங்கள் 1978 ஆகஸ்டில் 'பரிமாணம்' இதழ் தொடங்கினோம்.

உலக அளவில் வரலாறு, அரசியல், தத்துவம், கலை இலக்கியம் ஆகிய பல்வேறு களங்களில் மார்க்சியம் தன்னை விரிவு செய்து கொண்ட பல்வேறு பரிமாணங்களில் ஒரு சிறு பகுதியையேனும் தமிழில், தமிழக மார்க்சியருக்குத் தரவேண்டும் என்ற பொறுப்புணர்வோடு நாங்கள் தொடங்கிய இதழ் 'பரிமாணம்'.

தோழர் எஸ்.என்.நாகராசன், எஸ்.வி.இராசதுரை முதலியவர்களோடு நெருக்கமாக இணைந்திருந்து தொடர்ந்து மார்க்சியம் கற்றதோடு, எங்கள் வட்டத்திற்குள் தமிழக அளவில் மேலும் பலரை ஈர்த்துக் கொண்டு, வகை வகையான கட்டுரைகளை, கருத்துரைகளைப் பரிமாணத்தில் தொகுத்துத் தந்தோம்.

1986 வரை 16 இதழ்களை வெளியிட்டோம். 13 இதழ்களுக்கு நான் பொறுப்பேற்றிருந்தேன். இறுதி மூன்று இதழ்கள் எஸ்.வி.இராசதுரை அவர்களின் பொறுப்பில் சென்னையிலிருந்து மிகச் சிறப்பாக வெளிவந்தது. பரிமாணத்தில் வெளிவந்த அனைத்துக் கட்டுரைகளையும் பரிமாணம் நின்று

16 ஆண்டுகள் கழித்து இப்பொழுது புரட்டிப் பார்க்கும்போது எனக்குள் ஏற்படும் வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை.

2. 'பரிமாணம்' இதழ் வழியே, வெளியான சில முக்கியமான கட்டுரைகள்

குறித்து இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

70'களின் இறுதியில், அதுவரை தமிழகச் சூழ-ல் மார்க்சிய வட்டாரத்திற்கு குறைந்த அளவுக்கேனும் அறிமுகமாகாத அல்தூசர், டெர்ரி ஈகிள்டன், கிராம்ஷி, கிறிஸ்டோபர் கார்டுவெல், ரோசாலக்சம்பர்க், பால் எம். ஸ்வீஸி, நீல்பர்ட்டன், சார்லஸ் பெட்டல்ஹீம் ஆகிய பேரறிஞர்களின் கட்டுரைகளைப் பரிமாணம் வெளியிட்டது.

தமிழகத்தில் 60களின் இறுதியிலேயே அந்நியமாதல் பற்றி எங்களுக்கு அறிமுகம் செய்தவர் **தோழர் எஸ்.என்.நாகராசன்.** அந்நியமாதலை மையப்படுத்தி நாகராசன் எழுதிய அவரது முதல் கட்டுரையான 'கம்யூனிசம் விடுதலையின் இலக்கணம்' என்ற கட்டுரை பரிமாணத்தில் ஒரு தனிஇதழாக வெளியிடப்பட்டது.

அதுபோல, இங்கிலாந்தில் புகழ்பெற்ற மார்க்சியரான மக்லெல்லன் எழுதிய மார்க்ஸ் குறித்த சிறிய, சீரிய நூல் பரிமாணத்தில் ஒரு தனி இதழாக தமிழாக்கத்தில் வெளிவந்தது.

'1844 பாரிசு கையெழுத்துப் படி'களில் அந்நியமாதல் குறித்து மார்க்ஸ் அழுத்தம் திருத்தமாக எழுதியிருந்தார். இளம் மார்க்சிடம்தான் அந்நியமாதல் இடம் பெற்றிருந்தது என்றும் முதிய மார்க்சிடம் இத்தகைய உணர்வு அறவே இல்லை என்றும் எழுந்த விவாதங்களை மறுக்கும் முறையில் எஸ்.வி.ஆரின் அந்நியமாதல் நூலையொட்டிப் பரிமாணத்தில் அவரது கருத்துரைகள் வெளியிடப்பட்டன.

சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் என்று முன்பு உறுதி கூறப்பட்ட சமூக அமைப்பினுள் முதலாளியம் வெற்றி பெற்றது குறித்தும் சோவியத் ஒன்றியம் எவ்வாறு ஒரு ஏகாதிபத்தியமாக தன்னை நிறுவிக் கொண்டது என்பது பற்றியும் எழுபதுகளின் இறுதியில் பரிமாணத்தில்தான் முதன்முறையாக கட்டுரைகள் வெளிவந்தன.

அதேபோல, மாவோவுக்குப் பிறகு சீனச் சமூகத்தில் எவ்வாறெல்லாம் சீர்குலைவுகள், எக்காரணங்களோடு நேர்ந்தன என்பது பற்றிய Monthly Review கட்டுரைகள் மொழிபெயர்ப்பில் பரிமாணம் வெளியிட்டது.

மார்க்சிய வட்டாரத்தில் மட்டுமல்லாமல் வெளிவட்டாரத்திலும் இன்றுவரை கடுமையான

விவாதங்களுக்கு உட்பட்டிருப்பது ஸ்டாலின் பிரச்சனை. இந்தப் பிரச்சினை குறித்து பல்வேறு நாடுகளில் நடைபெற்று சில இதழ்களிலும் நூல்களிலும் வெளிவந்த சில முக்கியமான கட்டுரைகள் பரிமாணம் ஒரு தனி இதழில் தொகுக்கப்பட்டு வெளியாயிற்று.

இந்தியாவைப் பற்றிய மார்க்சிய நோக்கிலான வரலாறு மற்றும் அரசியல் புரிதல் குறித்து கட்சி வட்டாரங்களில் நிலவிய இறுக்கமான கருத்துரைகளுக்கு மாறாக, கட்சிக்கு வெளியில் கட்சியின் கட்டளைக்கு உட்படாமல் சுயமான முறையில் புகழ்பெற்ற மார்க்சிய அறிஞர்கள் வெளியிட்ட ஆய்வுகளின் தொகுப்பு ஒன்றை இந்து நாளிதழ் வெளியிட்டது. அறிஞர்களின் ஆய்வுகள் பரிமாணத்தில் தொகுத்துத் தரப்பட்டன.

தமிழக வரலாற்றில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய வலங்கை இடங்கை பிரச்சனை மார்க்சிய நோக்கிலான வரலாற்றுப் புரிதலுக்கு நெருக்கமாக அமைகிறது. இதுபற்றி வரலாற்று அறிஞர் கே.கே.பிள்ளை அவர்களின் நூலிலிருந்து ஒரு தொகுப்புரையை பரிமாணம் வெளியிட்டது.

கம்பரது இராமாயணம் குறித்த ஒரு சிறப்பான மார்க்சிய பார்வையை உள்ளடக்கிய க.வீரையனின் நூலிலிருந்து சில முக்கியமான பகுதிகள் பரிமாணத்தில் தொகுக்கப்பட்டன.

மார்க்சிய நோக்கில் பெரியார் அவர்களைக் குறித்த இரண்டு முக்கியமான ஆய்வுரைகள் பரிமாணத்தில் வெளியிடப்பட்டன. இந்த ஆய்வுரைகளை எழுதியவர் அறிஞர் குணாவும் ஞானியும் ஆவர்.

இந்திய வரலாறு குறித்து மிகச் சிறப்பான புரிதலுடன் யேன்மிர்தால் அவர்கள் எழுதிய நூலின் கருத்துரைகளைச் சிறப்பான முறையில் பரிமாணம் வெளியிட்டது.

இந்தியாவில் உள்ள கட்சி மார்க்சியரினுள்ளும் சுயமான முறையில் மார்க்சியம் பற்றிய நுண்ணறிவோடு இந்திய தத்துவம் பற்றியும் மார்க்சியம் பற்றியும் மிக விரிவாக எழுதியவர் கேரளத்தில் புகழ்பெற்ற மார்க்சிய அறிஞர் கே.தாமோதரன் அவர்கள். இவரைப் பற்றியும் மிக விரிவான ஒரு கட்டுரையை பரிமாணம் வெளியிட்டது. இவை தவிர பரிமாணம் வெளியிட்ட மிக முக்கியமான கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

3. பரிமாணம் – கட்டுரைக் களஞ்சியம் என்ற இந்தப் பெருந் தொகுப்பு வெளிவரும் இச்சமயத்தில் எங்களோடு முன்பு ஒத்துழைத்த நண்பர்கள், அறிஞர் பெருமக்கள் அனைவரையும் நன்றியோடு நான் நினைவு கூர்கிறேன். பரிமாணம் இதழைத் திட்டமிட்டதிலும் செயல்படுத்தியதிலும் நானும் எஸ்.வி.ஆரும் இணைந்திருந்தோம். எஸ்.என். நாகராசன் மார்க்சியத்தை எங்களுக்குள் ஆழமாக ஊன்றியவர் என்ற முறையில் என்றும் எங்கள் மரியாதைக்குரியவர். பரிமாணம் குழுவில் எங்களோடு இணைந்திருந்தவர்கள் என்ற முறையில் கண குறிஞ்சி, பொன்சந்திரன், அறிவன் முதலியவர்களோடு மொழியாக்கத்திற்கு எங்களுக்குப் பேருதவியாக எங்கள் குழுவில் இருந்தவர் என்ற முறையில் (தற்போது எங்களுடன் இல்லாத) ப.சிங்கராயர், ராயன், முருகன் ஆகியவர்களையும் நண்பர் பிருந்தாவையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

தமிழ் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை எங்களுக்கு அறிவுறுத்தியவர் என்ற முறையில் அறிஞர் குணா அவர்களை நினைவு கூர்கிறேன். பரிமாணம் இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்தவர் இரத்தினம் அவர்கள்.

நாங்கள் வெளியிட்ட பரிமாணம் இதழ்களிலிருந்து பெரும்பாலான கட்டுரைகள் ஆய்வுரைகள் முதலியவை இந்தத் தொகுப்பில் அடங்கியுள்ளன. இலக்கியம், நாடகம் குறித்த சில கட்டுரைகள் விடுபட்டுள்ளன.

சென்னையில் நடைபெற்ற இலக்கு கலாச்சார இயக்கத்தின் இரண்டு நாள் கருத்தரங்கில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் முன்வைத்த கட்டுரைகள், கருத்துரைகளின் தொகுப்பான 13வது இதழ் முழுமையாக தொகுப்பில் சேர்க்கப்படவில்லை. முழுஅளவில் மார்க்சியத்திற்கே அழுத்தம் தரும் தொகுப்பு என்பதால் இப்படிச் சில கட்டுரைகள் விடுபட்டுள்ளன.

இந்தப் பெருந்தொகுப்பின் உருவாக்கத்தில் ஒத்துழைத்தவர் என்ற முறையில் மேலும் சிலருக்கு நன்றி சொல்வது என் கடமை. குறிப்பாக கட்டுரைகள் அனைத்தையும் சிறப்பான முறையில் ஒளியச்சு செய்தவர் ஸ்ருதி பயிலக உரிமையாளர் திருமதி. ஹேமா முரளி அவர்கள். முழுஅளவில் பிழைதிருத்தம் செய்து தந்தவர் என் மரியாதைக்குரிய தோழர் உடுமலை

திரு.சந்திரமூலரசன். என் உதவியாளர் திருமதி.ஜோதிமீனா அவர்களின் ஒத்துழைப்பில்லாமல் என்னால் இன்று செயல்பட இயலாது. இப்பொழுது என்னோடு இல்லாத என் துணைவியார் இந்திராவை நினைத்துக் கொள்கிறேன்.

இறுதியாக கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக பெரும்பாலான என் கட்டுரைத் தொகுப்புகளைத் தொடர்ந்து பதிப்பித்து வெளியிடுவதன் மூலம் தமிழகச் சூழலில் என்னை நான் நிலைநிறுத்திக் கொள்ளும் முறையில் எவ்வகை இழப்பையும் பொருட்படுத்தாமல் எனக்குப் புரவலர் போல வாய்த்திருப்பவரான என் பேரன்பிற்கும் மரியாதைக்கும் உரிய என் நண்பர் 'காவ்யா' திரு.சண்முகசுந்தரம் அவர்கள், இந்தப் பெருந்தொகுப்பையும் வெளியிட அன்போடு இசைந்தமைக்காக அவருக்கும் என் மரியாதைக்குரிய அவரது துணைவியார் அவர்களுக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சில சொற்கள். கோவை வட்டாரத்தில் 'புதிய தலைமுறை' இதழ் மூலம் மட்டுமல்லாமல் 'பரிமாணம்' இதழ் வழியாகவும் மார்க்சியத்திற்கென தனி வளத்தையும் முத்திரையையும் பதித்தவர்கள் என்ற முறையில் மனநிறைவோடும் பெருமித உணர்வோடும் '**பரிமாணம் – கட்டுரைக் களஞ்சியம்**' என்ற இந்தப் பெருந்தொகுப்பைத் தமிழக மக்களுக்கு, மார்க்சியருக்கு நாங்கள் காணிக்கையாக்குகிறோம்.

ஒரு குழுவாக இணைந்திருந்து மார்க்சியத்தைத் தேடித் தேடிக் கற்றும் விவாதித்தும் எழுதியும் வந்ததோடு இயக்கமாக நாங்கள் இணைந்திருந்த அந்தக் காலம் எங்கள் வாழ்வின் பொற்காலம் என்ற மனநிறைவு எங்களுக்கு என்றும் உண்டு.

உலகச் சூழல் பெருமளவு மாறுபட்டுள்ள இன்றைய நிலையிலும் நம் வாழ்வுக்கு உயிர்ப்பும் அழகும் ஆற்றலும் தருவது மார்க்சியம் அன்றி வேறில்லை என்று நம்பும் அனைவருக்கும் இந்தப் பெருந்தொகுப்பு ஒரு கல்வி நூலாகப் பயன்படும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

நன்றி

ஞானி கி.பழனிச்சாமி

பதிப்புரை

தொழிற்பெருக்கம் மிகுந்த கோணுவட்டத்தில் மார்க்ச்சியம் வேர்விட்டு வளர்ந்து கிளைபரப்பியதில் வியப்பில்லை. கோவை வட்டத்தில் CPI/CPM கட்சிகளுக்கு மாறாக, சீனச்சார்புடைய நக்சலைட் இயக்கம் தோன்றி வளர்ச்சி பெற்ற பொழுது அதன் குரலாக கோவையில் தான் மார்க்சிய லெனினிய இயக்கம் தோன்றியது. எஸ்.என். நாகராசன், எஸ்வி. இராசதுரை ஆகியவர்களோடு ஞானியும் இணைந்து 'புதிய தலைமுறை' இதழ் தொடங்கினார். (1967-68) மாவோவின் மார்க்சியம் தான் இவர்களுக்கான தத்துவம். தொடக்கத்தில் கட்சியோடு இவர்கள் குழு இணைந்திருக்கவில்லை. 'புதிய தலைமுறை' இதழின் சாதனை மிகச்சிறப்பானது. சங்க இலக்கியம் குறித்தும் தமிழிலக்கியம் குறித்தும் சிறப்பான கட்டுரைகள் 'புதிய தலைமுறை'யில் வெளிவந்தன. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது புதிய தலைமுறையின் அழுத்தமான குரல். புதிய தலைமுறை இதழ் ஒரு அசலான மார்க்சிய இதழ். புதிய தலைமுறை இதழ் இவர்கள் வெளியேறிய பிறகுதான் கட்சி இதழாக மாறியது.

சோவியத் மார்ச்சியம் இவர்களுக்குப் போதுமானதாக இல்லை. மாவோவின் மார்க்சியமும் நாளடைவில் சீர்குலைவுக்கு உள்ளாகியது. மேற்குலகில் மார்க்சியம் குறித்த ஆய்வுகள் மிக விரிந்த அளவிலும் அசலான முறையிலும் நடைபெற்றன. இந்தியாவினுள்ளும் கட்சி மார்க்சியத்தின் இறுக்கம் இவர்களைக் கவருவதாக இல்லை. தமிழகத்திலும் இதே நிலை. இந்தச் சூழலால் தான் உலக அளவில் மார்க்சியம் பெற்ற பல பரிமாணங்களை இவர் தேடினார்கள். இவற்றில் ஒரு பகுதியையேனும் தமிழில் வெளியிடுவதற்காகப் பரிமாணம் இதழை 1978இல் தோற்றுவித்தனர். இவர் செய்த இந்தப் பெரும் முயற்சியைத் தமிழகத்தில் வேறு எந்த குழுவினரும் செய்யக் கூட நினைத்தது இல்லை. அந்த அளவுக்கு இவர் மார்க்சியத்தை மார்க்ஸ் முதலியவர்கள் படைப்புகளிலிருந்தும் உலக அளவில் பல அறிஞரிடமிருந்தும் கற்றுக் கொள்ளும் அளவுக்கு இவர் குழு மிகச் சிறந்த அறிஞர் குழுவாக அமைந்தது.

இவர்களோடு தமிழக அளவில் பல அறிவு ஜீவிகள் இருந்தனர். இவர்களில் எவரும் கட்சி மார்க்சியராக இல்லை.

பரிமாணத்தில் 16 இதழ்கள் மட்டும் வெளியிட்டனர். இவற்றை முழுமையாக தொகுத்தால் 1200 பக்கங்களுக்கு மேல் வரும். ஒருசில பகுதிகளை விடுத்து ஞானி பெரும்பகுதி கட்டுரைகளைத் தொகுத்துள்ளார்.

"குழுவாக நாங்கள் இணைந்திருந்து செயல்பட்ட காலம்தான் வாழ்நாள் வசந்தகாலம். அந்த நினைவு என்றும் எங்கள் நெஞ்சை நனைக்கிறது. எஸ்விஆர் அவர்களைப் பொறுத்தவரை சென்னையிலிருந்து 'பரிமாணம்' இதழை மிகச் சிறப்பாக கொண்டுவந்தார். எஸ்.என். நாகராசன் மட்டுமில்லாமல் எஸ்விஆரும் நானும் இன்றுவரை ஓயாமல் இயங்கிவருகிறோம். கட்சி வட்டாரத்தோடு எங்களுக்கு இணைந்து செல்ல முடியவில்லை. என்றாலும் மார்க்சியத்தோடுதான் இன்றுவரை வாழ்ந்துவருகிறோம். மார்க்சியம்தான் எங்கள் வாழ்வுக்கு ஆதார சக்தி" என்பார் இவர்.

ஞானி அவர்கள் ஓர் அற்புதமான மனிதர். வாசிப்பைச் சுவாசிப்பாகக் கருதுகிறவர், எழுத்தை இதயத் துடிப்பாக எண்ணுபவர், நாட்டுக்கேற்ற நல்லபல கருத்துகளை நாளும் சிந்தனை செய்பவர். மார்க்சியம் இவர் உயிரும் மெய்யுமாகும். எனினும் அவற்றில் இவர் நெகிழ்ச்சியையும் நீட்சியையும் கைக்கொள்ளுகிறார். இவர் கட்சிக்காரராக இல்லை என்பதால் எப்பொழுதும் கட்சிக் கட்டிக் கொள்வதில்லை. சமீபத்தில் தன் மனைவியை இழந்த துயரம் ஆறாததுதான். எனினும் அதனை ஆற்றும் அருமருந்தாக காலம் மட்டுமன்று கருத்தாழம் கொண்ட நூல்களும் தான் என்று நம்புகிறார். அதுதான் இவரது பலமும் நலமும்.

இவரது இதழ்ப்பணி சிறப்புமிக்கது. வானம்பாடி, வேள்வி நிகழ், தமிழ்நேயம்.....எனத் தொடர்வது. 'பரிமாணம்' இவரது பரிமாணத்தில் ஒரு கட்டம். அதனை அறிந்து கொள்ளவும் புரிந்து கொண்டு போற்றவும் இத்தொகுப்பு ஒரு அடையாளம்.

பேரன்புடன்

காவ்யா சண்முகசுந்தரம்

உள்ளடக்கம்

பரிமாணம் — 15

ஜனவரி - மார்ச் 1986

பரிமாணம் — 16

ஏப்ரல் - ஜுன் 1986

பரிமாணம் – 1

ஆகஸ்டு 1978

"தத்துவம், பாட்டாளி வர்க்கத்தில் தனது பொருள் வகைப் படைக் கலங்களைக் காண்பது போலவே, பாட்டாளி வர்க்கமும் தத்துவத்தில் தனது சிந்தனைப் படைக் கலங்களைக் காண்கிறது. மக்கள் என்னும் கன்னி நிலத்தின் ஆழத்தில் இந்தச் சிந்தனை மின்னல் தாக்கிய உடனே, ஜெர்மானியர் தம்மை விடுதலை செய்துகொண்டு மனிதர்களாவார்கள்".

– மார்க்ஸ்

1. நம்பார்வை

உலக அளவில் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், விஞ்ஞானம், கலை, இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளிலும் தவிர்க்க இயலாத முறையில் ஒரு தத்துவமாக, செயல்முறையாக மார்க்சியம் நிலைபெற்று வளர்ந்து வருகிறது.

இந்தப் பொது விதி நமது நாட்டுக்கும் நன்றாக – மிக நன்றாகவே – பொருந்துகிறது.

இந்தியாவுக்கு மார்க்சியம் அறிமுகமாகி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்த மார்க்சியம், இந்த நாட்டின் வண்ணத்தை மாற்றியிருக்க வேண்டும். மாற்றவில்லை.

காரணங்கள் என்ன? என்னவாக இருக்கும்?

இல்லை, நாம் மாற்றியிருக்கிறோம், நம்மால் முடிந்தவரை... என்பது நிறைவு தருவதில்லை.

நாம் தவறித்தான் இருக்கிறோம்.

நாம் மார்க்சியத்தைக் கற்கவில்லை; சரிவர, இதன் ஆழத்தோடு கற்கவில்லை. நமது நாட்டுச் சூழலில் வைத்து நாட்டின் அரசியல், பொருளாதாரம், வரலாறு, தத்துவம், கலை இலக்கியம் இவற்றில் வைத்து, இவற்றினூடே நாம் கற்கவில்லை.

கற்றதைச் செயல்படுத்தியதில் எத்தனையோ கோளாறுகள்; குறைகள்.

தவிர, மார்க்சியம் பற்றிய வரையறைகள் இன்று ஒன்றல்ல, பல. உலக அளவில் பல்வேறு வரையறைகள், விளக்கங்கள், திட்டங்கள், செயல்முறைகள்.

மார்க்சியத்தை இன்று கற்பது இவற்றின் மூலமாகத்தான். உண்மையைக் கண்டறிய ஒரு வழிப்பார்வை இல்லை.

இவற்றோடு, நாம் வாழ்வது தமிழகச் சூழல். இதற்கான, இதற்கேற்றதாக நாம் மார்க்சியத்தைக் கண்டறிய வேண்டும்.

கற்பதற்குப் 'பரிமாணம்' ஒரு வாயில். செயல்படுவதற்கு இது போதாது.

மார்க்சியத்தின் 'பரிமாணங்கள்' விரிகின்றன. இதன் பரிமாணத்தில் நம் வாழ்வு இணைந்திருக்கிறது.

மார்க்சியச் சிந்தனையாளர்களுக்குப் 'பரிமாணம்' திறந்திருக்கிறது. பங்குபெற அழைக்கிறோம்.

******

2. தத்துவம்
ஒரு புரட்சிகர ஆயுதம்

லூயி அல்தூசருடன் ஒரு பேட்டி

- மரியா அன்டோனியெட்டா மாக்சியோக்சி

*

மொழி பெயர்ப்பும், குறிப்பும், விமர்சனமும்

- எஸ்.வி. இராசதுரை

*

குறிப்பு: Philosophy As a Revolutionary Weapon *என்ற பேட்டிக் கட்டுரையின் தமிழாக்கம் இது. இது பிரெஞ்சு மார்க்சிய அறிஞரான லூயி அல்தூசரின்* (Louis Althusser) *கட்டுரைகள் அடங்கிய* "Lenin and Philosophy and other Essays" *என்ற நூலில் உள்ளது. பேட்டி கண்டவரான திருவாட்டி மரியா அன்டோனியெட்டா மாக்சியோக்சி* (Maria Antonietta Maccioucchi) *இத்தாலியப் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்தவர்.*

லூயி அல்தூசர் (1918) அப்போது பிரெஞ்சுக் குடியேற்ற நாடாக இருந்த அல்ஜீரியாவில் பிர்மான்ட்ரீஸ் என்ற இடத்தில் பிறந்தார். அல்ஜீரியாவிலும், பிரான்சில் மார்சேல், லையோன் ஆகிய இடங்களிலும் பள்ளி வகுப்புகளை முடித்த அல்தூசர், பாரீஸ் நகரில் உள்ள Ecole Normalo Suplrieure *என்ற கல்வி நிறுவனத்தில் பயின்று 1948-ஆம் ஆண்டு தத்துவத்தில் பட்டம் பெற்றார். அன்றிலிருந்து இன்று வரை அங்கு அவர் தத்துவம் பயிற்றுவிக்கும் ஆசிரியராக உள்ளார். இப்போது அக்கல்வி நிறுவனத்தின் செயலராகவும் உள்ளார். இளமையில் அவர் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தில் பங்கேற்றார். 1948-ஆம் ஆண்டு பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்.*

1. தங்களின் சொந்த வரலாற்றைப் பற்றி எங்களுக்குச் சிறிது சொல்ல முடியுமா?

மார்க்சியத்தின் தத்துவத்தின் பால் தங்களை ஈர்த்தது எது?

1948-ஆம் ஆண்டு, எனது 30 ஆம் வயதில் நான் தத்துவம் பயிற்றுவிக்கும் ஆசிரியரானேன். அப்போது பிரெஞ்சுப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தேன். தத்துவம் எனக்கு விருப்பமாக இருந்தது. நான் அதை எனது தொழிலுக்குரியதாக ஆக்குவதற்கு முயன்று கொண்டிருந்தேன். அரசியல் எனது வேட்கையாக இருந்தது. நான் ஒரு பொதுவுடைமைப் போராடியாவதற்கு முயன்று கொண்டிருந்தேன்.

தத்துவத்தில் எனக்கிருந்த விருப்பத்தைத் தட்டியெழுப்பியவை பொருள் முதல் கொள்கையும் அதன் திறனாய்வுப் பணியுமாகும். அதாவது சித்தாந்தரீதியான 'அறிவின்' அனைத்து வகைப் பூடகமாக்கல்களுக்கும் எதிரான, விஞ்ஞான முறை அறிவாகும். கட்டுக்கதைகள், பொய்கள் ஆகியவற்றை வெறும் அறவியல் வழியில் கண்டிப்பதற்கு மாறாக, பொருள் முதல் கொள்கை, அதன் திறனாய்வுப் பணி ஆகியவற்றின் அறிவு சார்ந்த கறாரான திறனாய்வு. அரசியலில் எனது வேட்கையைத் தட்டியெழுப்பியவை சோசலிசத்துக்காகப் போராடும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயல்புணர்வு, அறிவுக்கூர்மை, நெஞ்சுரம், வீரம் ஆகியவையாகும். போரும், பல்லாண்டுச் சிறை வாழ்வும், பாட்டாளிகள் உழவர்கள் ஆகியோருடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்திப் புரட்சிகரப் பொதுவுடைமையாளருடன் பரிச்சியம் ஏற்படுத்தி வைத்தன.

அரசியல்தான் அனைத்தையும் முடிவு செய்தது அது பொதுவான அரசியலன்று, மார்க்சிய – லெனினிய அரசியல்.

முதலில் நான் அவற்றைக் கண்டறிந்து புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. இது ஒரு அறிவாளியைப் பொறுத்தவரை எப்போதுமே மிகவும் கடினமானது. இது ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் கூட கடினமானதாக இருந்தது. காரணம், உங்களுக்கு நன்றாகத் தெரிந்ததே. "வழிபாட்டின்" பின் விளைவுகள், 20-ஆம் கட்சி மாநாடு,

அதனைத் தொடர்ந்து அனைத்துலகப் பொதுவுடமை இயக்கத்தின் நெருக்கடி. அனைத்துக்கும் மேலாக, நடப்புக்கால 'மனிதநேய' சித்தாந்தத்தின் பரவல், மார்க்சியத்தின் மீது பூர்சுவா சித்தாந்தம் நடத்தும் இதரத் தாக்குதல்கள் ஆகியவற்றை எதிர்ப்பது என்பது எளிதானதாக இல்லை.

மார்க்சிய – லெனினிய அரசியலை நான் மேலும் நன்றாக ஒரு முறை புரிந்து கொண்டதும் தத்துவத்தில் வேட்கை கொள்ளத் தொடங்கினேன். காரணம் நான், மார்க்ஸ், லெனின், கிராம்ஸ்சி ஆகியோரின் மாபெரும் ஆய்வுரையைப் புரிந்து கொள்ளத் தொடங்கியது தான். அதாவது தத்துவம் என்பது அடிப்படையில் அரசியல் சார்ந்தது.

முதலில் தன்னந்தனியனாகவும் பிறகு என்னைக் காட்டிலும் வயதில் இளையவர்களான தோழர்கள், நண்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் நான் எழுதிய அனைத்துமே, எங்களது கட்டுரைகளின் 'அருவத்தன்மை'யை மீறியும் இத்திட்டவட்டமான சிக்கல்களைச் சுற்றி வருபவையாகவே உள்ளன.

2. தங்களால் மேலும் தெளிவாகச் சொல்ல முடியுமா?

தத்துவத்தில் ஒரு பொதுவுடமையாளராக இருப்பது என்பது, பொதுவாகச் சொல்லப் போனால் மிகவும் கடினமானதாக இருக்கக் காரணம் என்ன?

தத்துவத்தில் ஒரு பொதுவுடமையாளனாக இருப்பது என்பது மார்க்சிய – லெனினியத் தத்துவத்தின் இயங்கியல் பொருள்முதல்கொள்கையின் ஒரு சார்பாளனாகவும் அதில் கைதேர்ந்தவனாகவும் இருத்தல் ஆகும்.

ஒரு மார்க்சிய-லெனினியத் தத்துவவாதியாவது என்பது எளிதானதல்ல மற்றெல்லா அறிவாளியையும் போலவே ஒரு தத்துவாசிரியனும் ஒரு நடுத்தர வர்க்கத்தினன்தான். அவன்

தன் வாயைத் திறக்கும் போதெல்லாம் நடுத்தர வர்க்கச் சித்தாந்தத்தையே பேசுகிறான். அச்சித்தாந்தத்தின் ஊற்றுக்கண்களும் சூழ்ச்சித் திறன்களும் எல்லையற்றவை.

'அறிவாளிகளைப் பற்றி லெனின் கூறுவதைத் தாங்கள் அறிவீர்கள். அவர்களிற் குறிப்பிட்ட சிலர் தனித்தனியாகப் பார்க்கும்போது புரட்சிகரமானவர்கள் என்றும் நெஞ்சுரம் கொண்டவர்கள் என்றும் அறிவிக்கப்படத் தக்கவர். ஆனால் ஒட்டு மொத்தமான ஒரு திரள் என்று பார்க்கும் போது அவர்கள் சித்தாந்த வகையில் 'திருத்தப்படமுடியாத' நடுத்தர வர்க்கத்தினராகவே உள்ளனர். கார்க்கியின் திறமைகளை லெனின் பாராட்டினார் என்பது உண்மை. ஆனால் கார்க்கியுமே லெனினைப் பொறுத்தவரை ஒரு நடுத்தர வர்க்கப் புரட்சியாளர்தான். (லெனின் கூறுவது போல) "பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தவாதி"யாக, (கிராம்ஸ்சி கூறுவது போல) "பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான அறிவாளிக"ளாக மாற வேண்டுமானால் அறிவாளிகள் தமது கருத்துக்களில் முற்போக்கான புரட்சியை மேற்கொள்ள வேண்டும். நீண்ட, வேதனை மிக்க, கடினமான மறு கல்வியை நடத்த வேண்டும். முடிவில்லாத புற உள் போராட்டத்தை நடத்த வேண்டும்.

பாட்டாளிகளுக்கு ஒரு 'வர்க்க இயல்புணர்வு' உண்டு. அது, அவர்கள் பாட்டாளி வர்க்க 'வர்க்க நிலைபாடு'களை அடைவதற்குத் துணைபுரிகிறது. இதற்கு மாறாக அறிவாளிகளுக்கோ நடுத்தர வர்க்க இயல்புணர்வு மட்டுமே உள்ளது. அது, மாற்றம் பெறுவதை வெறித்தனமாக எதிர்க்கிறது.

பாட்டாளி வர்க்க நிலைபாடு என்பது வெறும் 'பாட்டாளி வர்க்க இயல்புணர்வு'க்கு மேலானது. அது, பாட்டாளியின் வர்க்கப் போராட்டம் என்ற புறநிலை உண்மையுடன் பொருந்தி வருகிற தன்னுணர்வும் நடைமுறையுமாகும். வர்க்க இயல்புணர்வு என்பது அக

நிலையானதும் தானாகப் பீறிட்டு வருவதுமாகும். வர்க்க நிலைபாடு என்பதோ புறநிலையானதும் அறிவு சார்ந்ததுமாகும். பாட்டாளி வர்க்க நிலைபாட்டை எய்த, பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவைப்படுவதெல்லாம் கல்வி மட்டுமே; அதற்கு மாறாக, நடுத்தர வர்க்கத்தினரின், அறிவாளிகளின் வர்க்க இயல்புணர்வோ புரட்சிகரமான மாற்றத்துக்குள்ளாக்கப்படவேண்டும். இறுதி ஆய்வில், இக்கல்வி, புரட்சிகரமான மாற்றம், இரண்டையும் முடிவு செய்வது மார்க்சிய லெனினியத் தத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்படும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டமாகும்.

பொதுவுடமைக் கட்சியின் அறிக்கை கூறுவது போல, இத்தத்துவ அறிவானது, அறிவாளிகளில் சிலர் பாட்டாளி வர்க்க நிலைபாடுகளை நோக்கிச் செல்வதற்குத் துணைபுரியும்.

மார்க்சிய – லெனினியச் சிந்தனையானது, ஒரு விஞ்ஞானம் (வரலாற்றில் பொருள் முதல் கொள்கை), ஒரு தத்துவம் (இயங்கியல் பொருள் முதல் கொள்கை) ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.

எனவே மார்க்சிய – லெனினியத் தத்துவம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்குரிய இன்றியமையாத இரு கோட்பாட்டு ஆயுதங்களில் ஒன்றாகும். விஞ்ஞானம், தத்துவம் ஆகிய கோட்பாட்டுப் பிரிவுகளை, பொதுவுடமைப் போராடிகள் உட்கவர்ந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தேவையானவர்கள் பொதுவுடமைப் போராடிகளாவர். இவர்கள் ஒரே காலத்தில் விஞ்ஞானத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் (வரலாற்றியல் பொருள் முதல் கொள்கையினர்) தத்துவவாதிகளாகவும் (இயங்கியல் பொருள் முதல் கொள்கையினர்) இருந்து கோட்பாட்டைப் பேணிப் பாதுகாத்து அதை வளர்ப்பதில் துணைபுரிய வேண்டும்.

இத்தகைய தத்துவவாதிகள் உருவாவதற்கு எதிராக இருப்பவை இரு பெரும் சிக்கல்கள்.

முதலாவது சிக்கல் அரசியல் சார்ந்தது. தத்துவத்தைத் தனது தொழிலாகக் கொண்ட ஒருவர் கட்சியில் சேர்கிறார் எனக் கொள்வோம். அவர் சித்தாந்த வகையில் ஒரு நடுத்தர வர்க்கத்தினராகவே இருப்பார். அவர் தத்துவத்தில் ஒரு பாட்டாளி வர்க்க நிலைபாட்டை மேற்கொள்ள வேண்டுமானால் தனது சிந்தனையை அவர் புரட்சிகரமான மாற்றத்துக்குள்ளாக்க வேண்டும்.

இறுதி ஆய்வில், முடிவு செய்யக்கூடியதாக இருப்பது இந்த அரசியல் சிக்கல் தான்.

இரண்டாவது சிக்கல் கோட்பாடு சார்ந்தது. தத்துவத்தில் இந்த வர்க்க நிலைப்பாட்டை வரையறுப்பதற்காக நாம் எத்திசையில், எக்கொள்கைகளுடன் பணியாற்ற வேண்டும் என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் மார்க்சியத் தத்துவத்தை மேம்பாடு செய்யவேண்டும். அது கோட்பாடு வகையிலும் அரசியல் வகையிலும் மிகவும் விரைவாகச் செய்யவேண்டிய ஒன்று. இப்போது, இப்பணியானது மிகவும் விரிவானதும் கடினமானதுமாக உள்ளது. ஏனெனில் மார்க்சியச் சிந்தனையில், தத்துவமானது, வரலாறு பற்றிய விஞ்ஞானத்துக்குப் பின்தங்கியே உள்ளது.

இன்று நம் நாடுகளில் 'தலையாய' சிக்கலாக இருப்பது இதுதான்.

3. ஆகவே, தாங்கள் மார்க்சிய சிந்தனையில் ஒரு விஞ்ஞானம், ஒரு தத்துவம் என பாகுபாடு செய்கிறீர்கள் அல்லவா?

இப்படிப் பாகுபாடு செய்வது இன்று பலமுறை தருக்கத்துக்குள்ளாக்கப் படுவதை அறிவீர்கள் அல்லவா?

நான் அறிவேன். ஆனால் இத்தருக்கம் ஒரு பழங்கதை.

மிக மிக முறைப்படி சொல்வதானால், மார்க்சிய இயக்கத்தின் வரலாற்றில் இப்பாகுபாட்டை ஒடுக்குவது என்பது, வலப்பக்க அல்லது இடப்பக்கப் பாதை விலகலை வெளியீடு செய்துள்ளது என்பதைச் சொல்லித் தீர வேண்டும். வலப்பக்கப் பாதை விலகல், தத்துவத்தை ஒடுக்குகிறது. இங்கு விஞ்ஞானம் மட்டுமே எஞ்சுகிறது (நேர் காட்சிக் கொள்கை) இடப்பக்கப்பாதை விலகல் விஞ்ஞானத்தை ஒடுக்குகிறது. இங்கு தத்துவம் மட்டுமே எஞ்சுகிறது (அகநோக்குத் தன்மை) இவ்விதிக்கு 'விலக்கா'கவும் சில (தலைகீழாகப் புரட்டுதல்களே இவை) உள்ளன. ஆனால் இவை இவ்விதியை உறுதிப்படுத்தவே செய்கின்றன.

மார்க்ஸ் – ஏங்கல்ஸ் தொட்டு, மார்க்சியத் தொழிலாளர் இயக்கத்தில் இன்றுள்ள மாபெரும் தலைவர்கள் வரை இடைவிடாது கூறி வந்துள்ளது இதுதான்; இப்பாதை விலகல்கள், மார்க்சியத்தின் மீது ஏற்பட்டுள்ள பூர்சுவாச் சித்தாந்தத்தின் செல்வாக்கு, அதன் மேலாண்மை ஆகியவற்றின் விளைவுதான். அவர்கள் எப்போதுமே கோட்பாட்டுக் காரணங்களுக்காக மட்டுமல்லாது, உயிருள்ள அரசியல் காரணங்களுக்காகவும் இந்த (விஞ்ஞானம், தத்துவம் என்ற) வேறுபாட்டைப் பாதுகாத்துள்ளனர். 'பொருள் முதல் கொள்கையும் பட்டறிவுத் திறனாய்வும்' என்ற நூலிலோ, 'இடப்பக்கப் பொதுவுடைமைக் கொள்கை' என்ற நூலிலோ லெனின் எழுதியிருப்பதைப் பாருங்கள். அவர் கூறும் காரணங்கள் மிகமிகத் தெளிவானவை.

4. மார்க்சியக் கோட்பாட்டில் விஞ்ஞானம், தத்துவம் என்ற பாகுபாட்டை ஏற்படுத்துவதைத் தாங்கள் எப்படி நியாயப்படுத்துகிறீர்கள்?

நான் சுருக்கமாக முறைப்படுத்தக் கூடியதும், தற்போதைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான ஆய்வுரைகள் பலவற்றை உருவாக்குவதன் வழியாக இதற்கு விடை கூற விரும்புகிறேன்.

1. வர்க்கப் போராட்டத்தின் வரலாறு முழுவதிலும் – அதாவது நடைமுறையில் உள்ள மனித வரலாறு முழுவதிலும் – மிக மிக முக்கியமான நிகழ்ச்சி, பாட்டாளிகளின் இயக்கமும் மார்க்சியச் சிந்தனையும் ஒன்று கலந்த ஐக்கியமாகும் (இதன் முதல் விளைவுகள்: சோசலிசப் புரட்சிகள்).
2. மார்க்சியச் சிந்தனை (விஞ்ஞானமும் தத்துவமும்) மனித அறிவின் வரலாற்றில் முன்னுவமை காண முடியாத புரட்சி ஒன்றைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.
3. மார்க்ஸ் புதிய விஞ்ஞானம் ஒன்றை நிறுவினார்: வரலாறு பற்றிய விஞ்ஞானம். படிமம் ஒன்றைப் பயன்படுத்த என்னை அனுமதியுங்கள். நமக்கு அறிமுகமான விஞ்ஞானங்கள் பல்வேறு பெரும் கண்டங்களில் (Continents) நிறுவப்பட்டன. விஞ்ஞான அறிவுக்காக, மார்க்ஸ் தோன்றுவதற்கு முன்பு, தோற்றுவிக்கப்பட்ட இத்தகைய பெரும் கண்டங்கள் இரண்டு: ஒன்று கணிதம்: மற்றொன்று பௌதீகம். முதலாவது கிரேக்கர்களாலும் (தேல்ஸ்), இரண்டாவது கலிலியோவாலும் தோற்றுவிக்கப்பட்டன. மார்க்ஸ், விஞ்ஞான அறிவுக்காக மூன்றாவது பெருங்கண்டம் ஒன்றைத் தோற்றுவித்தார். அது வரலாறு எனும் பெருங்கண்டம்.
4. இப்புதிய பெருங்கண்டத்தைத் தோற்றுவித்தது, தத்துவத்தில் ஒரு புரட்சியைத் தூண்டியது. தத்துவம் எப்போதுமே விஞ்ஞானத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பது ஒரு விதி.

   கணிதம் என்ற பெருங்கண்டம் தோற்றுவிக்கப்பட்டபோது (பிளேட்டோவுடன்) தத்துவம் பிறந்தது. பௌதீகம் என்ற பெருங்கண்டம் தோற்றுவிக்கப்பட்டதும் (தெகார்தேயுடன்) தத்துவம்

மாற்றத்துக்குள்ளாயிற்று. இன்று அது, வரலாறு எனும் பெருங்கண்டத்தை மார்க்ஸ் தோற்றுவித்ததும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. இப்புரட்சிதான் இயங்கியல் பொருள் முதல் கொள்கை என அழைக்கப்படுகிறது.

தத்துவத்தில் ஏற்படும் மாற்றங்கள் எப்போதுமே மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் பாதிப்புகளாக இருப்பவை. எனவே அடிப்படையில் அவை, நிகழ்ச்சிகளுக்குப் பிந்தியவை. அதனால்தான் மார்க்சியச் சிந்தனையில் தத்துவமானது விஞ்ஞானத்துக்குப் பின்தங்கியே வந்துள்ளது. இதற்கு வேறு காரணங்களும் உள. அவை நம்மனைவர்க்கும் தெரிந்தவை. ஆனால், மேலே கூறிய காரணம்தான் தற்போது தலையாய காரணமாக உள்ளது.

5. மார்க்சின் விஞ்ஞான வகைக் கண்டுபிடிப்பின் புரட்சிகர வீச்சை ஒரு திரளினர் என்ற வகையில் ஏற்றுக்கொண்டவர் பாட்டாளி வர்க்கப் போராடிகள் மட்டுமே. அது அவர்களது அரசியல் நடைமுறையை மாற்றியமைத்துள்ளது. அதற்கு மாறாக – இங்கு நாம் நடப்புக் கால வரலாற்றின் மிக மிகப் பெரும் பழிப்புரையைப் பார்க்கிறோம் – ஒட்டுமொத்தமான ஒரு திரளினர் என்ற வகையில் அறிவாளிகள் – ஏன், அறிவுத் தொழிலை மிக அக்கறையுடன் மேற்கொண்டவர்கள்கூட – (மானுட விஞ்ஞானங்களில் தனிச்சிறப்பான பயிற்சி பெற்றோர், தத்துவவாதிகள்) மார்க்சின் விஞ்ஞான முறைக் கண்டுபிடிப்பின் முன்னுவமை காணமுடியாத வீச்சை உண்மையாகவே ஏற்றுக் கொள்ளாதவர்களும், ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுமாவர். இவர்கள் மார்க்சின் விஞ்ஞான முறைக் கண்டுபிடிப்பை இகழ்ந்து, கண்டனம் செய்து, அதை விவாதிக்க வாய்ப்பு நேரும்போதெல்லாம் சிதைப்பவர்கள்.

ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர அவர்கள் அனைவருமே இன்னும் அரசியல் பொருளாதாரம், சமூகவியல், மனித இனவியல், மானுடவியல், சமூக உளவியல் போன்ற பல்வேறு துறைகளில் இன்றும் கூட, 'மூலதனம்' என்ற நூல் வெளியிடப்பட்ட நூறுஆண்டுகள் கழிந்த பிறகும்கூட "சிறுபிள்ளைத் தனமான விளையாட்டில்" ஈடுபட்டுள்ளனர். இது, கலிலியோவுக்குப் பிறகு ஐம்பதாண்டுகள் கழிந்த பிறகும் சில அரிஸ்டாட்டிலிய பௌதீக விஞ்ஞானிகள் பௌதீக விஞ்ஞானத்தில் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டில் ஈடுபட்டிருந்தது போலத்தான். இந் நடுத்தரவர்க்க அறிவாளிகளின் "கோட்பாடுகள்" சித்தாந்த வகையான கால இட முரண்கள். இவை நுண்மாண் நுழைபுலங்களைக் கொண்டும், மிகமிக நவீனமான கணிதவியல் நுணுக்கங்களைக் கொண்டும் உயிரூட்டப்பட்டு வருகின்றன.

ஆனால் இக்கோட்பாட்டு வகைப் பழிப்புரை உண்மையில் ஒரு பழிப்புரை அன்று. இது சித்தாந்த வகையான வர்க்கப் போராட்டத்தின் ஓர் விளைவாகும். ஏனெனில் 'மேலாண்மை' செலுத்துவது – ஆட்சியில் இருப்பது – பூர்சுவா சித்தாந்தம் அன்றோ? சில விதி விலக்குகளைத் தவிர்த்து மார்க்சிய மற்றும் பொதுவுடமை அறிவாளிகளில் பலரும் உட்பட, அறிவாளிகளனைவரும் ஒரு திரளினர் என்ற வகையில் தமது கோட்பாடுகளில் பூர்சுவா சித்தாந்தத்தின் ஆளுகைக்கு உட்பட்டுள்ளனர். இதே போன்ற நிலைதான், சில விதிவிலக்குகளுடன், 'மானுட' விஞ்ஞானத்திலும் நிலவுகிறது.

6. தத்துவத்திலும் இதேபோன்ற பழிப்புரை நிறைந்த சூழ்நிலைமைதான். மார்க்சின் கண்டுபிடிப்பால்

தூண்டுதல் பெற்ற வியப்புமிகு தத்துவப் புரட்சியைப் புரிந்து கொண்டவர் யார்? பாட்டாளி வர்க்கப் போராடிகளும் தலைவர்களுமே. அதற்கு மாறாக, ஒட்டுமொத்தமாகக் காணும்போது, தத்துவத்தைத் தொழிலாகக் கொண்ட தத்துவவாதிகளோ அதனை ஐயுறக்கூட இல்லை. அவர்கள் எப்போதேனும் மார்க்சின் பெயரைக் குறிப்பிடுகிறார்கள் எனில், அது எப்போதுமே (இதில் விதிவிலக்கு மிகமிக அபூர்வமானது), அவரைத் தாக்குவதற்கும், அவரைக் கண்டனம் செய்யவும், அவரை உட்கவரவும், அவரைக் குறுகிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தவும், அவரைத் திரித்துப் புரட்டவும் தான்.

இயங்கியல் பொருள் முதல் கொள்கையைப் பேணிப் பாதுகாத்துள்ள ஏங்கல்ஸ், லெனின் போன்றோர், தத்துவ வகையில் குறிப்பிடத்தக்கவரே அல்லர் என்றே பாவிக்கப்படுகின்றனர். உண்மையான பழிப்புரை என்னவெனில், மார்க்சியத் தத்துவவாதிகளில் சிலரே "வறட்டுக் கொள்கைக்கு எதிரான போராட்டம்" என்ற பெயரில் இதே தொற்றுநோய்க்குப் பலியாகிவிட்டனர் என்பதுதான். ஆனால் இங்கும் காரணம், முன்பு கூறியதுதான். அதாவது இது சித்தாந்த வகையான வர்க்கப் போராட்டத்தின் விளைவு. ஏனெனில் ஆட்சியில் இருப்பது பூர்சுவா சித்தாந்தமாகும்; பூர்சுவா 'கலாச்சார'மாகும்.

7. பொதுவுடமை இயக்கம் சிந்தனையில் மேற்கொள்ள வேண்டிய முடிவான கடமைகள்: மார்க்சிய – லெனினிய விஞ்ஞானம் மற்றும் தத்துவத்தின் புரட்சிச் சிந்தனை வீச்சை ஏற்றுக் கொள்ளுதலும் அறிந்து கொள்ளுதலும்; மார்க்சியச் சிந்தனையை எப்போதும் அச்சுறுத்தி வருவதும்

அதனுள் இன்று ஆழமாக ஊடுருவியுள்ளதுமான பூர்சுவா, நடுத்தர வர்க்க உலகக் கண்ணோட்டத்துக்கு எதிராகப் போராடுதல். இவ்வுலகக் கண்ணோட்டத்தின் பொதுவடிவம்: பொருளாதாரக் கொள்கையும் (இன்று இது தொழில் நுணுக்கத்தின் ஆட்சி என்ற வடிவம் கொண்டுள்ளது) அதன் 'ஆன்மீகத் துணைவனா'ன அறவியல் கருத்து முதல் கொள்கையும் பூர்சுவா வர்க்கம் தோன்றிய காலம் தொட்டு பூர்சுவா உலகக் கண்ணோட்டத்திலுள்ள அடிப்படையான எதிர்மறைகளாக இருந்து வருகின்றன. இவ்வுலகக் கண்ணோட்டத்தின் இப்போதைய தத்துவ வடிவம், புதிய – நேர்காட்சிக் கொள்கையும் அதன் ஆன்மீகத் துணைவனான இருத்தலியல், நிகழ்வியல் அகநோக்குக் கொள்கையுமாகும். இது மானுட விஞ்ஞானங்களுக்கு மட்டுமே உரிய வகையில் எடுத்துக் கொள்ளும் வடிவம் 'ஸ்ட்ரக்சுரலிசம்' என்றழைக்கப்படும் சித்தாந்தமாகும்.

மார்க்ஸ், வரலாறு எனும் பெருங்கண்டத்தின் திறவுகோல்களை நமக்கு வழங்கியுள்ளார். இப்பெருங்கண்டத்தில் இடங்கொண்டுள்ள மானுட விஞ்ஞானங்களிற் பெரும்பாலானவை எல்லாவற்றுக்கும் மேலாக, சமூக விஞ்ஞானங்கள், ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, மோசடியின் வழியாகவே இங்கு இடங் கொண்டுள்ளன. இவற்றை விஞ்ஞானத்தின் பொருட்டு வெல்லுதல் வேண்டும்.

புதிய விஞ்ஞானத்தையும், புதிய தத்துவத்தையும் கண்டிப்பு நிறைந்த நெறியுடனும் துணிச்சலுடனும் வளர்த்து, புரட்சிகர வர்க்கப் போராட்ட நடைமுறையின் தேவைகள் அதன் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றுடன் இணைப்பதன் வழியாக, மேம்பாடு செய்தல் வேண்டும்.

சிந்தனையில் இன்று முடிவு செய்கிற இணைப்புக்கண்ணி: மார்க்சிய – லெனினியத் தத்துவம்.

5. தாங்கள், ஒன்றுக்கொன்று முரண்படுகிற அல்லது மாறுபடுவதாகத் தோன்றுகிற இருபொருட்களைச் சொல்லியிருக்கிறீர்கள்:

1) தத்துவம் அடிப்படையில் அரசியல் சார்பானது;

2) தத்துவம் விஞ்ஞானங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்விரட்டை உறவுகளை எவ்விதமாகக் கருதுகிறீர்கள்?

இங்கு நான், மீண்டும், முறைப்படுத்தப்பட்ட, தற்போதைக்குரிய ஆய்வுரைகளின் வடிவத்தில் என் விடையைக் கூறுகிறேன்.

1. வர்க்கப் போராட்டத்தில் எதிரெதிராக உள்ள வர்க்க நிலைபாடுகள், நடைமுறைச் சித்தாந்தங்களின் உலகில் (சமய அறவியல், நீதியியல், அரசியல், அழகியல் சித்தாந்தங்களில்) ஒன்றுக்கொன்று பகைத்தன்மை கொண்டுள்ள உலக கண்ணோட்டங்களால் "பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன". இவை இறுதி ஆய்வில், கருத்து முதல் கொள்கைப் போக்கும் (பூர்சுவாப் போக்கு), பொருள்முதல் கொள்கைப் போக்கும் (பாட்டாளி வர்க்கப் போக்கு) ஆகும். ஒவ்வொருவரும் கொண்டிருந்த உலகக் கண்ணோட்டம் அவரவர்க்கு இயல்பாக அமைந்த ஒன்று.

2. சிந்தனை உலகில் (விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானிகளைச் சூழ்ந்துள்ள 'கோட்பாட்டு வகை'ச் சித்தாந்தங்கள் ஆகியவை) உலகக் கண்ணோட்டங்கள், தத்துவத்தால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. தத்துவம், வர்க்கப்போராட்டத்தை சிந்தனையில் பிரதிநிதித்துவம் செய்கிறது. அதனால்தான் தத்துவம் ஒரு போராட்டமாகும் (காண்ட் கூறியதைப்போல அது ஒரு போராட்டம்).

அடிப்படையில் தத்துவம் அரசியல் போராட்டமாகும். ஒரு வர்க்கப்போராட்டம் ஆகும். இயல்பாகவே ஒவ்வொருவரும் ஒரு தத்துவவாதியாக இருப்பதில்லை. ஆனால் ஒவ்வொருவராலும் ஒரு தத்துவவாதியாக முடியும்.

3. சிந்தனை உலகு இருக்கும்வரை தத்துவமும் இருந்துவரும். ஒரு விஞ்ஞானம் (அதன் கறாரான பொருளில்) நிலவும் போது தத்துவமும் நிலவும். விஞ்ஞானங்கள் இல்லாவிடில் தத்துவம் ஏதும் இராது. உலகக் கண்ணோட்டங்கள் மட்டுமே நிலவும். போரின் குறியிலக்கையும் போர்க்களத்தையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். தத்துவப் போரட்டத்தின் இறுதிக் குறியிலக்கு உலகக் கண்ணோட்டத்திலுள்ள இருபெரும் (பொருள் முதல் கொள்கை மற்றும் கருத்து முதல் கொள்கை) போக்குகளிடையே மேலாண்மைக்காக நடைபெறும் போராட்டமாகும். இப்போராட்டத்துக்கான முதன்மையான போர்க்களம் விஞ்ஞான அறிவாகும். விஞ்ஞான அறிவுக்காகவா அல்லது அதற்கு எதிராகவா என்ற போராட்டமாகும். எனவே முதன் முதல் தத்துவப் போர் விஞ்ஞான வகையானதற்கும் சித்தாந்த வகையானதற்கும் இடையிலுள்ள எல்லைப் பகுதியில் நடைபெறுகிறது. அங்கு விஞ்ஞானங்களைச் சுரண்டிப் பிழைக்கும் கருத்து முதல் கொள்கைத் தத்துவங்கள், விஞ்ஞானங்களுக்குப் பணிபுரியும் பொருள் முதல் கொள்கைத் தத்துவங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றன. தத்துவப் போராட்டமானது இரண்டு உலகக் கண்ணோட்டங்களுக்கிடையிலான வர்க்கப் போராட்டத்தின் ஓர் பகுதியாகும். கடந்த காலத்தில் பொருள் முதல் கொள்கை எப்போதுமே கருத்து முதல் கொள்கையின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

4. சிந்தனை உலகில் இருந்த நிலைமை முழுவதையும் மார்க்சால் நிறுவப்பட்ட விஞ்ஞானம் மாற்றியமைத்தது; அது ஒரு புதிய விஞ்ஞானமாகும்: வரலாறு பற்றிய விஞ்ஞானம். எனவே முற்றிலும் முதன்

முறையாக அது, தத்துவத்தால் சிந்தனையில் பிரதிநிதித்துவம் செய்யப்படும் உலகக் கண்ணோட்டங்களை, தத்துவத்தை, நாம் அறிந்து கொள்வதை இயலக் கூடியதாக்குகிறது. அது, உலகக் கண்ணோட்டங்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை வழங்குகிறது (மார்க்சியம் சிந்தனையில் கோட்பாடுகளுக்கிணங்க நடத்தப்படும் புரட்சிகர வர்க்கப் போராட்டமே இவ்வழி முறைகள்). எனவே தத்துவமானது புரட்சிகரமான முறையில் இருவகை மாறுதலுக்குள்ளாகிறது. எந்திரவியல் பொருள் முதல் கொள்கை, 'வரலாற்றில் கருத்து முதல் கொள்கை', இயங்கியல் பொருள் முதல் கொள்கையாகிறது. சக்திகளின் வலிமைகள் தலைகீழாக்கப்படுகின்றன: இப்போது தத்துவத்தில் பொருள் முதல் கொள்கை, கருத்து முதல் கொள்கையின் மீது ஆளுகை செலுத்த முடியும். அதனால், அரசியல் நிலைமைகள் முதிர்ச்சியடையும் போது, இரண்டு உலகக் கண்ணோட்டங்களிடையே மேலாண்மைக்கான வர்க்கப் போராட்டத்தை மேலெடுத்துச் செல்ல முடியும்.

மார்க்சிய-லெனினியத் தத்துவம் அல்லது இயங்கியல் பொருள் முதல் கொள்கை, பாட்டாளிவர்க்க வர்க்கப் போராட்டத்தை சிந்தனையில் பிரதிநிதித்துவம் செய்கிறது. மார்க்சியச் சிந்தனைக்கும் பாட்டாளிகளின் இயக்கத்துக்கும் (சிந்தனை — நடைமுறை இரண்டும் ஐக்கியப்படுவதற்கான அடிப்படை மெய்மை இவ்வியக்கம் தான்). இடையே ஏற்படும் ஒன்றிப்பில், தத்துவமானது மார்க்ஸ் கூறியதைப்போல "உலகை விளக்குதல்" என்ற பணியை நிறுத்திக் கொள்கிறது. அது "உலகை மாற்றுவதற்"கான, புரட்சிக்கான ஓர் ஆயுதமாகிறது.

6. இன்று 'மூலதனம்' நூலைப்படிப்பது இன்றியமையாதது என்ற தங்கள் கூற்றுக்குக் காரணங்கள் உள்ளனவா?

ஆம். 'மூலதன'த்தைப் படிப்பதும் ஆழ்ந்து கற்றுக்கொள்வதும் இன்றியமையாதவை:-

பாட்டாளி வர்க்கப் போராடிகள் நெடுங்காலமாகவே நடைமுறையில் புரிந்து கொண்டுள்ள மார்க்சியச் சிந்தனையின் புரட்சிகரக் கூறை, அதன் அனைத்து வீச்சிலும், அனைத்து விஞ்ஞான வகையான, தத்துவ வகையான பின் விளைவுகளிலும் உண்மையாகவே புரிந்து கொள்வதற்காக, இன்று சிந்தனையைக் கடுமையாக அச்சுறுத்தும் அனைத்துவகை பூர்சுவா, நடுத்தரவர்க்க விளக்கங்களிலிருந்தும், அதாவது திரிபுகளிலிருந்தும் (இவற்றின் முதன்மையானவை பொருளாதாரக் கொள்கை மனித நேயம் என்ற எதிர்மறைகள்) பாதுகாப்பதற்காக;

நமது நாடுகளிலும் வேறு நாடுகளிலும் இன்றுள்ள வர்க்கப் போராட்டத்தை ஆய்வு செய்வதற்கு இன்றியமையாத விஞ்ஞான வகைக் கருத்தாக்கங்களை உருவாக்குவதற்காக; மார்க்சியச் சிந்தனையை மேம்படுத்த.

'மூலதனத்'தைப் படிப்பதும் ஆழ்ந்து கற்றுக்கொள்வதும் இன்றியமையாதவை. நான் மேலும் சொல்வது என்னவெனில், லெனின் படைப்புகளைப் படிப்பதும் ஆழ்ந்து கற்றுக் கொள்வதும் தேவையானது, இன்றியமையாதது. மேலும் அனைத்துலகப் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் அனுபவங்களின் தொகுப்பாக உள்ள பழைய, புதிய பெரும் படைப்புகள் அனைத்தையும் படிப்பதும் ஆழ்ந்து கற்றுக் கொள்வதும் தேவையானது, இன்றியமையாதது. புரட்சிகரப் பாட்டாளிகளின் இயக்கத்தின் நடைமுறைப் பணிகளை அவை உள்ளது உள்ள படியே ஆய்வதும், அவற்றின் சிக்கல்கள், முரண்பாடுகள், அவற்றின் கடந்தகாலம் மற்றும் அனைத்துக்கும் மேலாக, அவற்றின் நிகழ்கால வரலாறு ஆகியவற்றையும் ஆழ்ந்து கற்பதும் இன்றியமையாதது.

நமது நாடுகளில் இன்று புரட்சிகர வர்க்கப் போராட்டத்துக்கான எல்லையற்ற ஊற்றுக் கண்கள் உள்ளன. ஆனால் அவை எங்குள்ளனவோ அங்குதான், அதாவது சுரண்டப்படும் மக்கள் திரளிடையேதான் தேடிப் பிடிக்கப்பட

தொடர்பில்லாமல், மார்க்சிய – லெனினியச் சிந்தனை ஆயுதங்கள் இல்லாமல் அவற்றைக் 'கண்டுபிடித்து'விட முடியாது. "தொழில் மயமான சமுதாயம்", "புதிய–முதலாளியம்", "புதிய பாட்டாளி வர்க்கம்", "செல்வச் செழிப்பான சமுதாயம்", "அந்நியமாதல்" போன்ற பூர்சுவா சித்தாந்தக் கருத்துக்கள் விஞ்ஞானத்துக்கு எதிரானவை, மார்க்சியத்துக் கெதிரானவை, புரட்சியாளர்களுக்கு எதிராகப் போராடுவதற்காக உருவாக்கப்பட்டவை.

எனவே நான் மேலும் ஒரு பொருளைக் குறிப்பிட்டாக வேண்டும் : அது எல்லாவற்றிலும் மிகமிக முதன்மையான ஒன்று.

ஒருவர், கோட்பாடு, அரசியல், வரலாறு பற்றிய இப்படைப்புகளில் தான் 'படிப்பதை' ஆழ்ந்து கற்பதை, உண்மையிலேயே புரிந்து கொள்ள வேண்டுமானால் அவற்றை முழுக்க முழுக்க நிர்ணயிக்கிற இரண்டு உண்மைகளை அவர் நேரடியாகத் தமது அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். ஒன்று தனது திட்டவட்டமான வாழ்வில் உள்ள நடைமுறை (விஞ்ஞானம், தத்துவம்) என்ற உண்மை; மற்றொன்று, மக்கள் திரளுடன் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பில், தனது திட்டவட்டமான வாழ்வில் உள்ள புரட்சிகர வர்க்கப் போராட்ட நடைமுறை என்ற உண்மை. ஏனெனில் சிந்தனையானது வரலாற்று விதிகளை நாம் புரிந்து கொள்வதை நமக்கு இயலக்கூடிய தாக்குகிறது என்றாலும், வரலாற்றை உருவாக்குவது அறிவாளிகளோ, ஏன், தத்துவவாதிகளோ கூட அல்லர். வரலாற்றை உருவாக்குவது மக்கள் திரளே. எனவே சிந்தனையுடன் சேர்த்துக் கற்றுக் கொள்வது இன்றியமையாதது. ஆனால் அதே சமயம் மிகவும் தீர்மானகரமான வி யம் மக்களுடன் சேர்ந்து கற்றுக் கொள்வது இன்றியமையாதது.

7. தாங்கள் கறாரான சொற்களஞ்சியம் உள்ளிட்ட கறாரான தன்மைக்குப் பெருமளவு முதன்மை வழங்குகிறீர்களே, அதற்கென்ன காரணம்?

ஒரு தனிச்சொல், தத்துவ நடைமுறையைத் தொகுத்துக்கூறும் பெரும்பணியைச் செய்கிறது: சரியான கருத்துக்கள், தவறான கருத்துக்கள் இரண்டுக்குமிடையே எல்லைக்கோடு வகுத்தல்: லெனினின் சொற்கள்.

ஆனால் அதே சொல் வர்க்கப் போராட்ட நடைமுறையின் திசைக்கான அடிப்படைச் சிக்கல்களில் ஒன்றைத் தொகுத்துக் கூறுகிறது: ஒன்றுக்கொன்று பகைத் தன்மை கொண்டுள்ள வர்க்கங்களிடையே எல்லைக்கோடு வகுத்தல். நமது வர்க்க நண்பர்களுக்கும் நமது வர்க்கப் பகைவர்களுக்குமிடையே. அதே சொல்தான், சரியான கருத்துக்களுக்கும் தவறான கருத்துக்களுக்குமிடையே உள்ள ஒரு கோட்பாட்டு வகையான எல்லைக்கோடு. மக்களுக்கும் (பாட்டாளி வர்க்கமும் அதன் நட்பு அணிகளும்) மக்களின் பகைவர்களுக்குமிடையே உள்ள அரசியல் வகையான எல்லைக்கோடு.

தத்துவமானது வர்க்கப்போராட்டத்தைச் சிந்தனையில் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. அது தன் பங்குக்கு, சிந்தனையிலும் கருத்துக்களனைத்தும் (அரசியல், அறவியல், அழகியல் முதலிய கருத்துகளில்) உள்ள சரியான கருத்துகளைத் தவறான கருத்துக்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க உதவுகிறது. உண்மை என்னவெனில், சரியான கருத்துகள் எப்போதுமே மக்களுக்குப் பணி புரிகின்றன. தவறான கருத்துக்களோ எப்போதுமே மக்களின் பகைவர்களுக்கே பணி புரிகின்றன.

தத்துவமானது சொற்களுக்காகச் சச்சரவிடுவது ஏன்? வர்க்கப் போராட்ட உண்மைகள் 'கருத்துகளால்' பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. கருத்துகள் சொற்களால் 'பிரதிநிதித்துவப்படுத்தப்படு'கின்றன விஞ்ஞான தத்துவ ஆய்வுகளில், சொற்கள் (கருத்தாக்கங்கள், வகைத்திணைகள்) அறிவுக்கான "கருவிகள்". ஆனால் அரசியல், சித்தாந்த, தத்துவப்போராட்டத்தில் சொற்கள் ஆயுதங்களாகவும், வெடிகுண்டுகளாகவும் அல்லது சமனப்படுத்தும் மருந்துகள்,

நஞ்சுகளாகவும் இருக்கின்றன. சில சமயங்களில், வர்க்கப் போராட்டம் முழுவதையுமே ஒரு சொல் மற்றொரு சொல்லுக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் தொகுத்துச் சொல்லமுடியும். சில சொற்கள் தமக்குள்ளாகவே பகைவர்களைப் போல் போரிட்டுக் கொள்கின்றன. வேறு சில சொற்கள் பொருள் தெளிவின்மைக்கான நிலப்பரப்பாக உள்ளன; ஒரு முடிவு செய்யக்கூடிய ஆனால் இன்னும் முடிவுக்கு வராத போரின் குறியிலக்காக உள்ளன.

உதாரணம்: பொதுவுடமையாளர்கள். வர்க்கங்களை ஒழித்துக் கட்டவும், அனைவரும் ஒருநாள் விடுதலை பெற்றவராகவும் உடன் பிறந்தவர்களாகவும் வாழக்கூடிய ஒரு பொதுவுடமைச் சமுதாயத்துக்காகவும் போராடுகிறார்கள். ஆயினும் மார்க்சியச் செம்மை மரபு முழுவதுமே, மார்க்சியம் ஒரு மனிதநேயம் என்று கூற மறுத்துள்ளது. ஏன்? ஏனெனில் நடைமுறையில், அதாவது உண்மையில், மனிதநேயம் என்ற சொல், மற்றொரு உண்மைச் சொல்லான – பாட்டாளி வர்க்கத்துக்கு உயிர் நாடியான சொல்லான – வர்க்கப் போராட்டம் என்பதைப் போரிட்டு மாய்ப்பதற்காக ஒரு சித்தாந்தத்தால் பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக: புரட்சிவாதிகள் அறிந்துள்ளது என்னவெனில் இறுதி ஆய்வில், அனைத்தையும் முடிவு செய்வது தொழில் நுணுக்கமோ, ஆயுதங்கள் முதலியவையோ அல்ல என்பதும் போராடிகள், அவர்களது வர்க்க உணர்வு அவர்களது முழு ஈடுபாடு, நெஞ்சுரம் ஆகியவையும் தான் என்பதுமாகும். ஆயினும் மார்க்சிய மரபு முழுவதும் வரலாற்றை உருவாக்குவது 'மனிதன்'தான் எனக்கூற மறுத்துள்ளது. ஏன்? ஏனெனில், இவ்வெளியீடு நடைமுறையில், அதாவது உண்மையில், மற்றொரு உண்மை வெளியீடான, பாட்டாளி வர்க்கத்துக்கு உயிர் நாடியான வெளியீடான, வரலாற்றை உருவாக்குவது மக்கள் திரளே என்பதை மாய்ப்பதற்காகப் பூர்சுவா சித்தாந்தத்தால் பயன்படுத்தப்படுகிறது.

அதேவேளையில், தத்துவமானது, அது மிகவும் அருவமானதாகவும் கடினமானதாகவும் உள்ள விரிவான படைப்புகளிலும் கூட, சொற்களுக்காகப் போராடுகிறது, பொய் கூறும் சொற்களுக்கு எதிராகப் போராடுகிறது, பொருள் தெளிவின்மை கொண்ட சொற்களுக்கு எதிராகப் போராடுகிறது, சரியான சொற்களுக்காகப் போராடுகிறது. எண்ணச் "சாயல்க"ளுக்காகப் போராடுகிறது.

லெனின் கூறினார்: "குழுக்களிடையே உள்ள தகராறுகள், எண்ண வேற்றுமைகளைக் கறாரான முறையில் பாகுபாடு செய்து பார்த்தல் ஆகியவற்றை வேளைக் கேடானவை என்றும் தேவையற்றவை என்றும் கருதுபவர்கள் மங்கிய பார்வையினரே. இரஷ்ய சமூக, ஜனநாயகத்தின் தலைவிதி வரப்போகும் பற்பல்லாண்டுகளுக்கு இந்த அல்லது மற்றொரு "சாயலை" வலுப்படுத்துவதையே சார்ந்திருக்கும்".

("இனி செய்ய வேண்டியது என்ன?")

பிப்ரவரி 1968

விமர்சனம்

– எஸ்.வி. இராசதுரை

உலகப் பொதுவுடைமை இயக்கம் 1956–ஆம் ஆண்டு மிகப் பெரும் சிக்கலை எதிர்கொண்டது. சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் 20–ஆம் மாநாட்டில் குருஷ்சேவ், ஸ்டாலின் பற்றிய ஒரு 'இரகசிய அறிக்கை'யை வெளியிட்டு, சோவியத் நாட்டுச் சோ லிச அமைப்பில் ஏற்பட்ட தவறுகளுக்கெல்லாம் ஸ்டாலினே, ஸ்டாலின் வழிபாடே காரணம் என்று கூறியதுடன், பாட்டாளி வர்க்க மேலாண்மை, வன்முறைப் புரட்சிகொண்டு அரசு ஆண்மையைக் கைப்பற்றுதல் போன்ற புரட்சிகர நிலைபாடுகளை மறுத்தார். முதலாளியத்தை மீட்பதற்கான இம்முயற்சிகள் ஸ்டாலின் தவறுகளைத் திறனாய்வு செய்தல் என்ற வடிவத்தில் தொடங்கியது. குருஷ்சேவ் முன்வைத்த புரட்டல் கொள்கை,

உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் ஏற்கனவே பூர்சுவா சித்தாந்தத்தின், ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தல்களுக்கு பணிந்திருந்த பொதுவுடைமையாளர்களுக்கு உகந்ததாக இருந்தது.

குருஷ்சேவின் புரட்டல் கொள்கையின் செல்வாக்குக்கு உட்பட்ட பல்வேறு ஐரோப்பிய நாட்டுப் பொதுவுடமைக் கட்சிகள், ஸ்டாலின் தவறுகளால் பெருமையிழந்திருந்த 'பாட்டாளிவர்க்க மேலாண்மை', 'புரட்சிகர வன்முறை' போன்ற கருத்தாக்கங்களை, (அவற்றின் உண்மைப் பொருளுக்கு ஏற்றவாறு பாதுகாப்பதற்குப் பதிலாக) கைவிட்டு 'மனிதநேயம்', 'சமாதானம்' போன்ற கருத்தாக்கங்களைக் கொண்டு மார்க்சையும், மார்க்சியத்தையும் 'கௌரவமிக்க'வர்களாக்க முனைந்தனர். இவர்களுக்கு உகந்ததாக மார்க்சின் இளமைக் காலத்தில் எழுதியவை பயன்பட்டன. உதாரணமாக மார்க்சின் '1844-ஆம் ஆண்டு பொருளாதார, தத்துவக் குறிப்புகள்', பூர்சுவா சித்தாந்தவாதிகளால், அவர்களுக்கு ஏற்ற வகையில் விளக்கம் கூறப்பட்டது. மார்க்சை அவர்கள் தமது சிந்தனை அமைப்பில் 'உட்கவர முயற்சித்தார்கள். மார்க்சை வறட்டுத்தனமாக விளக்கிய மரபுவழிப்பட்ட பொதுவுடைமையாளர்களுக்கும் பொதுவுடைமைக் கட்சிகளுக்கும் மார்க்சின் 'தத்துவ'ப் படைப்புகள் உகந்ததாக இல்லை. காரணம் அவர்களது அதிகார வர்க்க நிலைபாடுகளுக்கும் மார்க்சின் தத்துவப் பார்வைக்கும் உடன்பாடு காணமுடியவில்லை. மற்றோர்புறம் மார்க்சியம் பற்றிய வறட்டுத்தனமான விளக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் பலர் புரட்டல் வாதிகளாக இருந்தனர். இருவகையினரும் மார்க்சின் படைப்புகளில் இளம் மார்க்ஸ் எழுதியவை, முதிய மார்க்ஸ் எழுதியவை என்ற பிளவை ஏற்படுத்தினர் – தத்தம் வசதிக்காக ஒரு தரிசனத்தின் வளர்ச்சி நோக்கிய நிலையில் எழுதியவை என்ற வகையில் மார்க்சின் படைப்புகளைப் பாராமல், இளம் மார்க்ஸ் முதிய மார்க்ஸ் என்ற பிளவை ஏற்படுத்துவதை எதிர்த்து. இரண்டு

மார்க்சுகளுக்குமிடையே அடிப்படை வேறுபாடு இல்லை என்பதைப் பல மார்க்சிய அறிஞர்கள் ஆதாரங்களுடன் மெய்ப்பித்துள்ளனர். (உதாரணமாக, டேவிட் மெக்லெல்லான், இஸ்ட்வான் மெஸ்ஜோரஸ்) — 'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கம் மார்க்சின் படைப்புகள் முழுவதிலும் மையமாக இருப்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

இளம் மார்க்ஸ் – முதிய மார்க்ஸ் என்ற சர்ச்சையில் இளம் மார்க்சை ஒதுக்குபவர் லூயிஅல்தூசர். இவரது கருத்துப்படி மார்க்சின் "பொருளாதார தத்துவக் குறிப்புகள்", "ஜெர்மன் சித்தாந்தம்" உள்ளிட்ட பல இளமைக் காலப்படைப்புகள், பயர்பாஹ் ஹெகல் ஆகிய பூர்சுவா தத்துவவாதிகளின் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளன என்றும், மார்க்சின் வளர்ச்சியில் 1845ஆம் ஆண்டில் 'அறிவுக் கோட்பாட்டில் முறிவு ஒன்று (An epistemological break) ஏற்பட்டது என்றும் அதன் பிறகு மார்க்ஸ் முற்றிலும் விஞ்ஞான வகைக் கருத்தாக்கங்கள், வகைத்திணைகள் (Categorles) ஆகியவற்றைப் பயன்படுத்தி முதலாளியச் சமுதாயத்தை திறனாய்வு செய்கிறார், வரலாற்றை விளக்குகிறார், விஞ்ஞான வகைப்பட்ட தத்துவ ஆயுதத்தைப் பாட்டாளி வர்க்கத்திடம் ஒப்படைக்கிறார் என்றும் லூயி அல்தூசர் கருதுகிறார். அல்தூசர் மார்க்சிடம் மாற்றம் ஏற்பட்டதாகக் கருதும் 1845 ஆம் ஆண்டுக்குப் பிறகு மார்க்சின் 'மூலதனம்' நூலுக்கும் மார்க்ஸ் எழுதத் திட்டமிட்டிருந்த வேறு நூல்களுக்கும் அடிப்படைக் குறிப்பான Grundrisse என்ற நூலில், இளம் மார்க்சால் பயன்படுத்தப்பட்ட பல சொற்களும் 'அந்நியமாதல்' என்ற கருத்தும் நூல் நெடுகிலும் காணப்பட்டாலும், லூயி அல்தூசர் தனது நிலைபாட்டை மாற்றிக் கொள்வதில்லை. மார்க்சின் 'மூலதனம்' நூலைப் படிப்பதற்காக அல்தூசர் எழுதிய முன்னுரை ஒன்றில், அந்நூலின் சில பகுதிகளை (உதாரணமாக Fetishism of Commodities) படிக்க வேண்டாம் என்றும், அவற்றில் ஹெகலியச் செல்வாக்கு உள்ளது என்றும் வாதிடுகிறார். மேலும் மார்க்ஸ், ஏங்கல்ஸ், மற்றும் பல பாட்டாளிவர்க்கப்

போராடிகளின் படைப்புகளிலிருந்து பாட்டாளி வர்க்கத்திற்குத் தேவையான வழிகாட்டும் தத்துவத்தையும், கருத்தாக்கங்களையும் இனிமேல்தான் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும், முறைப்படுத்தப்பட்ட வழிகாட்டி நூல் இனிமேல்தான் இயற்றப்பட வேண்டும் என்றும் அவர் கருதுகிறார்.

ஒருவகையில் அல்தூசர் அதிகாரவர்க்க வறட்டுப் பொதுவுடைமை யாளர்களுக்கும், புரட்டல் கொள்கையுடைய 'மனிதநேய' பொதுவுடமையாளர்களுக்கு மிடையில் நிற்கிறார் எனக் கொள்ளலாம். பாட்டாளி வர்க்க மேலாண்மை, புரட்சி ஆகியவற்றை விலக்கிய ஒரு மார்க்ஸ், புரட்டல் கொள்கையினருக்கும் பூர்சுவா சித்தாந்தவாதிகளுக்கும் உடன்பாடுதான். வறட்டு வாதத்தையும், அதிகார வர்க்கச் சீரழிவுக்கு உட்பட்ட சோசலிச நடைமுறையையும் திறனாய்வு செய்தல் என்பது "புரட்டல் கொள்கை மனிதநேய" நிலைபாட்டிலிருந்து செய்யப்பட்டதும், மாற்றாருடன் (குறிப்பாக சமயவாதிகள், இருத்தலியலாளர் போன்றோருடன்) 'உரையாடல் நடத்துதல்' என்ற பெயரில் பாட்டாளி வர்க்கத்தின் போர்ப்பண்பை வளர்க்கத் தவறியதும், பாராளுமன்றப் பாதையில் நம்பிக்கையை வளர்த்ததும், புரட்சியில் அக்கறை கொண்டிருந்த போராடிகள் பலரைக் 'கறாரான' 'வெட்டு ஒன்று – துண்டு இரண்டு' என்ற நிலைபாட்டுக்கு இட்டுச் சென்றது. மார்க்சில் 'மனிதநேயத்'தையும், நுண்மாண் நுழைபுலங்களையும் தேடிக் கொண்டிருந்த பாராளுமன்ற, "நாகரிக" மிக்க பொதுவுடமைச் சிந்தனையாளர் சிலரிடமிருந்து கவனத்தைத் திருப்பி உடனடியான புரட்சிகரக் கடமைகள் மீது பாட்டாளி வர்க்கத்தின் அக்கறையைச் செலுத்தவேண்டிய நிலைபாடு அல்தூசர் போன்றோருக்கு ஏற்பட்டது.

இப்பேட்டிக் கட்டுரையில் நாம்காணும் ஒன்று, தத்துவம் என்பதை முறைப்படுத்தப்பட்ட தத்துவம் என்ற பொருளில் அவர் கூறுவதாகும். எனவே 'உலகக்

கண்ணோட்டம்' என்பதிலிருந்து 'தத்துவத்தை' வேறுபடுத்துகிறார். 'அந்நியமாதல்' என்பது முற்றிலும் பூர்சுவா சித்தாந்தக் கருத்து என்று கூறும் அல்தூசர் முற்றிலும் கறாரான விஞ்ஞானக் கருத்தாக்கஙளே தேவை என்கிறார். வெறும் விஞ்ஞானக் கருத்தாக்கங்கள் எதற்கு? வாழ்க்கை பற்றிய ஒரு தரிசனத்தை நனவாக்குதல் என்ற பிரச்சினை எழுப்பப்படாமல் வெறும் விஞ்ஞானக் கருத்தாக்கங்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது? சமுதாய நிலைமைகளைப் புரிந்து கொள்ள விஞ்ஞானக் கருத்தாக்கங்கள் உதவுகின்றன என்றாலும் ஒரு தரிசனம் நோக்கியே அச்சமுதாய நிலைமைகளைப் புரிந்து கொள்கிறோம் அல்லவா! இப்படி நாம் அல்தூசருடன் விவாதிக்க முடியும்.

மேலும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் பாதிப்புகளாகவே, பின்விளைவுகளாகவே, தத்துவம் பிறக்கிறது. தத்துவத்தில் மாற்றம் ஏற்படுகிறது என்று அல்தூசர் கூறுவதும் விரிவான விவாதத்துக்கு உரியது. முறைப்படுத்தப்பட்ட தத்துவத்தையே அவர் தத்துவம் எனக் கருதுகிறார் என்பதைக் குறிப்பிட்டோம். இவ்வடிப்படையிலேயே அவர் மேற்கூறிய கருத்தைச் சொல்கிறார். இத்தகைய வரையறுப்பு கேள்விக்குரியது. மேலும் தத்துவத்தின் பாதிப்புகளால் விஞ்ஞானத்தின் வளர்ச்சி குன்றியும் கூடியும் இருப்பதையும் வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

ஐயுறத்தக்கதும் தட்டிக் கேட்கப்படக் கூடியதுமான பல கருதுகோள்களை அல்தூசர் முன்வைத்தாலும், புரட்சிக் கடமைகள் பற்றிய அவரது அக்கறையும் பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர மக்கள் திரளினரும் தாமே புரட்சியை இறுகப் பற்றித் தமது மேலாண்மையை நிலை நாட்டவேண்டுமே என்பதில் அவருக்குள்ள ஈடுபாடும் புரட்சியாளரை அவர்பால் ஈர்ப்பதில் வியப்பில்லை.

மார்க்ஸ் —

"ஆண்டுக் கணக்கில் போராட்டத்தின் மூலம் மட்டுமே, சுரண்டும் வர்க்கத்தைத் தூக்கியெறியும் வர்க்கம் பழஞ் சமுதாயத்தின் சகதியிலிருந்து தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டு, ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கத்தகுதி பெறுகிறது".

"மார்க்சியம் ஒரு விஞ்ஞானமாகத் தோன்றியது, வளர்ந்தது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால், அதே சமயத்தில் இது பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தம் தான். இந்தச் சித்தாந்தத்திற்கும் முதலாளிய, குட்டி முதலாளியச் சித்தாந்தங்களுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு, இது விஞ்ஞானத்துடன் கொண்டுள்ள இன்றியமையாத ஐக்கியம் ஆகும்..."

"விஞ்ஞானவியலின் அளவுகோல்களாக அருவமாக்கலையும் முறைப்படுத்தப் பட்ட முழுமையையும் பிரகடனப் படுத்தியதன் மூலம், அல்தூசர், விஞ்ஞான அறிவின் முறையிலிருந்து உடனடியான யதார்த்தத்தையும், வரலாற்றையும், செயல்முறையையும் விலக்குகிறார். மனிதர்களின் உண்மையான நடைமுறையிலிருந்தும் செயலிலிருந்தும் பிரிந்து, உருவக் கட்டமைப்புகள், திட்டங்கள் ஆகியவை பற்றிய ஆய்வையே சார்ந்திருக்குமானால், மார்க்சியம் ஒரு விஞ்ஞானமாகாது என்பது தெளிவாகவில்லையா?"

Page 121: M. Petrosyan: "Humanism" Progress Publishers, Moscow 1972

3. குணாவின் மார்க்சிய இயங்கியல்

– ஞானி

அண்மையில் வெளிவந்துள்ள குணாவின் 'மார்க்சிய இயங்கியல்' பல காரணங்களுக்காகக் கவனிக்கத்தக்க, விவாதத்திற்குரிய நூல். மார்க்சியத்தில் அக்கறையுடையவர் களிடம் இந்தநூல் உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தவல்லது.

குணாவின் தமிழ்நடை தனித்தமிழ் ஆகிவிட்டதேயென்று மார்க்சியவாதிகளில் பலர் குறைபட்டுக் கொள்ளக்கூடிய நல்ல தமிழ்நடை, தமிழில் மார்க்சியம் பற்றி வெளிவந்துள்ள மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்துச் சலித்த மனத்திற்கு இதமாக இருக்கக்கூடிய அழகிய தமிழ்நடை. உயர்நிலைக் கல்வியைத் தாய்மொழியில் கற்றுக் கொள்ளும்போது தான் புரியும்; மனத்தில் பதியும்; புதிய சிந்தனைகள் மலரும் என்று விவாதிக்கப்படுகிறது. மார்க்சியம் ஒரு இறக்குமதிச் சரக்கு என்ற நிலையிலிருந்து நமது மண்ணில் பயிரிடக்கூடிய வித்து என்ற நிலைக்கு மாற, இம்முறையில் நிச்சயம் இந்தநூல் உதவும். மெய்யியலோடும், அறிவியலோடும் தொடர்புடைய இயங்கியலைத் தமிழில் சொல்வது ஒரு பிரச்னை. இதில் குணாவின் வெற்றி முதல் தரமானது. இவர் பயன்படுத்தியுள்ள சொல்லாக்கத்தில் பெரும்பகுதியை நாம் இனிப் பின்பற்ற முடியும். இயங்கியல். கருத்து முதலியல், பொருள் முதலியல், மெய்யியல் முதலிய சொற்கள் இத்தகையவை. வகுப்பு என்ற சொல் வர்க்கம் என்பதன் பொருளைத் தரவில்லை. வல்லரசு என்ற சொல் ஏகாதிபத்தியம் என்ற பொருளைத் தரவில்லை. இதுபற்றி குணா சிந்திப்பது நல்லது. இயங்கியலைப் புரிந்துகொள்ள விஞ்ஞான அறிவு நிறையத் தேவை. இதற்கான தகுதி குணாவுக்கு உண்டு என்பதை நூல் உறுதிப்படுத்துகிறது. இயங்கியல் பற்றிய எந்த ஒரு நூலும் இயங்கியலை, வரலாற்றிலிருந்து புரிந்து கொள்ளும் முறையிலும், குறிப்பிட்ட கால வரலாற்றுக் கடமையை விளக்கும் முறையிலும் விவரங்களை நிறையத்

தருகின்றது. இந்தியச் சூழல், குறிப்பாகத் தமிழகச்சூழல், தமிழக வரலாற்று நிலைமைகள், வர்க்கப் பாகுபாடுகள் ஆகியவைபற்றி குணா தரும் விவரங்கள் இத்தகையவை. மேலும் இவைகளினூடே வெளிப்படும் குணாவின் பார்வை மார்க்சியவாதிகளின் பலவகை வரையறைகளில் தனித்தன்மை உடையது. தமிழக வரலாற்றின், வர்க்கப் பாகுபாடுகளின் தனித்தன்மைகளிலிருந்தே குணாவின் கருத்துக்கள் பிறக்கின்றன. இவர் கருத்துக்கள் தாங்கியுள்ள ஒரு கருதுகோள், குணா கூறுகிறபடி, மார்க்சியத்தைத் தமிழ்ப்படுத்தலாகிறது; தமிழக மண்ணுக்கு ஏற்றதாகச் செய்வதாகிறது. இதைப்பற்றி முறையான விவாதங்கள் தேவை.

புத்தகத்தின் முதன்மையான கருப்பொருள் இயங்கியல். இதில் நமது கவனம் குவிதல் நல்லது. குணாவின் சாதனையை இதிலிருந்து தான் மதிப்பிட வேண்டும். இயங்கியல் பற்றி எழுதும்போது சான்றுகள் தந்து விளக்குவதில் எப்போதும் ஆபத்து உண்டு, இம்முறையில் பிளக்கனோவை லெனின் திறனாய்வு செய்தது ஏங்கல்சுக்கும் பொருந்தும். இயற்கை நிகழ்வை அல்லது ஒரு வரலாற்றுப் போக்கைக் கூர்ந்து பார்க்கும்போது, விவரிக்கும்போது, அதன் இயக்கத்தில் இயங்கியலை நன்கு புரிந்து கொள்ள முடியும். இயற்கை நிகழ்விலிருந்து அல்லது வரலாற்றுப் போக்கிலிருந்து ஒன்றைத் தனித்துப் பிரித்து, அச்சமயத்திற்கு முதன்மைப்படுத்திச் சொல்லும்போது இந்த ஆபத்து நேர்கிறது. பாடப்புத்தகங்கள் தவிர்க்க இயலாமல் இந்தத் 'தலைவிதி'யோடு பிறக்கின்றன. குணா சான்றுகளை நிறைய அடுக்கும்போது (பக்கம் 60-65, 77-90) இத்தவறுகளை நிறையவே செய்கிறார். இவற்றில் பெரும்பகுதி சொல்லாடல்.

இயங்கியலைப் புரிந்து கொள்வதற்காகப் பகுத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. இம்முறையில் இயங்கியல் விதிகள் மூன்று என்கிறார் ஏங்கல்ஸ், நான்கு எனக் கூறினார் ஸ்டாலின். எதிர்மறைகளுக்கு இடையிலான ஒற்றுமையும்,

போராட்டமும் என விவரிக்கப்படும் முரண்பாடு தான் இயங்கியல் விதி. இந்த முரண்பாட்டை, இதன் இயக்கத்தை, ஒரு நிகழ்வுப் போக்கில் கூர்ந்து பார்க்கும்போதே, அளவு மாற்றம், இயல்பு மாற்றம் ஆவதும் எதிர்மறைகள் ஒன்றை மற்றது மறுத்தலையும் நாம் கவனிக்க முடியும். இங்கு இயக்க விதி ஒன்றே தவிர மூன்றாகப் பிரிவதில்லை. எதிர்மறைகளுக்கு இடையிலான போராட்டத்தை சிறப்பானதாக ஏங்கல்ஸ் கருதியதையும் (பக்.52) லெனினின் இத்தகைய கூற்றையும் (பக்.59) குணா குறிப்பிடுகிறார். இதை மேலும் சரியாகப் புரிந்து கொண்ட நிலையில்தான் மாவோ இயங்கியலை 'ஒருமையியல்' ஆக்கினார் என்று குணா விவரிக்கிறார். மூன்றாக விதிகளைப் பிரித்துப்போட்ட ஏங்கல்ஸையும் எதிர்மறைகளுக்கிடையிலான ஒற்றுமையை குறிப்பிடாததற்காகவும் போராட்டத்திற்கே அழுத்தம் தந்ததற்காகவும் ஸ்டாலினையும் (பக்.53) மாவோ விமர்சனம் செய்ததை குணா சரியாகவே சுட்டிக் காட்டுகிறார். இங்கு மாவோ தான் இயங்கியலை ஒருமை இயல் ஆக்கிச் செழுமைப்படுத்தினார் என்பதற்கு குணா தரும் அழுத்தம் சரியானது. ஆனால் மாவோ இயங்கியலை முழுமைப்படுத்தினார் என்பது பொருந்தாது. மறுத்தலின் மறுத்தல் தனி விதி ஆகாது; எதிர்மறைகள் ஒன்றுமற்றாவதையே இது குறிக்கிறது என்ற மாவோவின் கருத்தை குணா ஏற்கிறார். அளவு, இயல்பு பற்றிய நிலைபாடு தனிவிதியாகாது. இவை மெய்யியல் வகைத்திணைகளில் சேர்க்கத்தக்கவை என்ற குணாவின் கருத்து நம் சிந்தனைக்குரியது. விதிகள் மூன்று எனவும் இவைகளுக்கிடையிலான இடைத் தொடர்பைப் பற்றியும் குறிப்பிடும் ஏங்கல்ஸ் இடைத் தொடர்பு பற்றிய ஆய்வில் ஆழமாகச் செல்லவில்லையென்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

முரண்பாட்டின் எதிர்மறைக் கூறுகளைப் பற்றி விவாதிக்கும்போது, உற்பத்திச் சக்திகளுக்கே முதன்மை தருதல் என்பதற்கு ஸ்டாலின் கொடுத்த அழுத்தத்தை மாவோ விமர்சனம் செய்தார், பொருளியல் அடித்தளத்துக்கும்,

மேலடுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டில், சில நிலைமைகளில் உற்பத்தி உறவுகளில் மாற்றம் இல்லாமல், உற்பத்திச் சக்திகளும் வளர முடியாது என்ற கட்டம் வருகின்றது. இந்நிலையில் அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் முதன்மையானதும், தீர்மானமானதுமான பங்கை வகிக்கின்றன. இந்த உண்மையை ஸ்டாலின் தனது இறுதிக் காலத்தில், அதுவும் தயக்கத்துடன், ஏற்றார். தவிர சோசலிச அமைப்பை முன்னுக்குக் கொண்டு செல்லுகிற அடிப்படை முரண்பாடு இது என்று அவர் அப்போதும் பார்க்கவில்லை. ஸ்டாலின் பற்றிய மாவோவின் இந்த விமர்சனத்தை குணா விரிவாக (பக்.144...148) குறிப்பிடுகிறார். முரண்பாட்டின் சிக்கலை ஆழமாக ஆய்ந்ததிலும், ஆய்வைத் தொகுத்து இலக்கணப்படுத்தியதிலும் மாவோவின் மேதையை குணா சரியாகவே சுட்டுகிறார். சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் தவறான நடைமுறைகளைப் பற்றிய ஆய்விலிருந்தே, பகை முரண்பாடு, பகையல்லாத முரண்பாடு பற்றிய வரையறைகளுக்கு மாவோ வந்தார். லெனினில் கரு வடிவிலிருந்த இக்கருத்தை வளமான உருவரைப்படுத்தியது மாவோ என்பதில் ஐயமில்லை. தண்ணீரில் கட்டை மிதக்கும்: கல் அமிழும் என்பது அனுபவம். இதனுள் இயலும் உண்மையை விஞ்ஞான முறையில் இலக்கணப்படுத்துவதால் இந்த அறிவு பெரும் சாதனைகளுக்கான கருவியாவது போலவே மாவோவின் வரையறைகள் விளங்குவதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

பிரபஞ்சம், வரலாறு, சிந்தனை ஆகிய அனைத்தினுள்ளும் இயங்கும் பொதுவான இயக்கத்தைக் கண்டறிதல் போதாது. குறிப்பிட்ட ஒவ்வொரு நிகழ்வினுள்ளும் நிகழும் முரண்பாட்டின் தனித்தன்மையைக் கண்டறிதல்தான் அந்நிகழ்வினைப் பற்றிய சரியான அறிவாகிறது. ஏங்கல்ஸ் கண்டறிந்த இந்த உண்மையை இந்த உண்மையின் தனித்தன்மையை மேலும் விரிவாகவும், சரியாகவும் மாவோ பார்த்தார். சீன வரலாற்றையே

புதியதொரு திசை வழியில் செலுத்துவதற்கான மாபெரும் போராட்ட வழிகளிலிருந்து கண்டறிந்த இந்த உண்மையை மாவோ செழுமைப்படுத்தினார். ஒவ்வொரு நிகழ்வினுள்ளும் இயங்கும் முதன்மை முரண்பாட்டையும், அதன் கூறுகளுள் முதன்மைக் கூறையும் கண்டறிவதில் மாவோவின் புரிதல் அற்புதமானது. இயங்கியலுக்கு மாவோவின் பெருங்கொடையாக மதிப்பிடத்தக்கது இது. இயங்கியல் பற்றிய நூலில் மாவோவை நோக்கிய விரிவுரையாகவே எழுதுவதில் குணாவின்பால் தவறு காண்பதற்கில்லை, காரணம் உண்மை அப்படித்தான் இருக்கிறது.

அறிவுக் கோட்பாடு பற்றிய விளக்கத்தின் போது சோவியத் நாட்டில் நடைபெற்ற மொழி பற்றிய விவாதத்தை குணா விரிவாகக் குறிப்பிடுகிறார் (பக். 295, 299). மொழியை மேலடுக்கில் சேர்ப்பதா, அடித்தளத்தில் வைப்பதா என்ற சிக்கல் எழுந்தபோது, ஸ்டாலின் ஒரு வரையறையை முன்வைத்தார். மொழி மேலடுக்கிலும் சேராது: அடித்தளத்தோடும் சேராது; ஆனால் அடித்தளத்தோடு நெருக்கமான உறவுடையது மொழி என்கிறார் ஸ்டாலின். ஸ்டாலின் கருத்தை குணா ஏற்கவில்லை. மேலடுக்கில்தான் மொழியை குணா காண்கிறார். ஆனால் சமுதாய - மாற்றத்தையொட்டி மொழியில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. வர்க்கத்திற்கெனப் பிரித்துச் சொல்லத் தக்கவாறு மொழி இல்லை. வட்டார வழக்குகள், வர்க்கத்திற்கான, அல்லது சாதிக்கான வழக்குகள் காரணமாக, மொழி முற்றாகப் பிரிந்துவிடுவதில்லை. மொழியில் நிகழும் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களைவிட மிக மெதுவாகவே நடைபெறுகின்றன. இலக்கிய வழக்கின் செழுமை காரணமாக, அந்த இலக்கிய வழக்கு உயர்வர்க்க மொழி ஆகாது. தவிர, மனிதனின் உற்பத்திச் செயலுடன் மிக நெருக்கமான உறவு உடையது மொழி. இம்முறையில் மனிதன்மூலம் உற்பத்திக்கருவிகளுக்கு, நெருக்கமாக இருக்கக் கூடியதுதான் மொழி.

குணாவின் வாதத்திற்கு அடியிலிருப்பது, அடித்தளம், மேலடுக்கு என்பனவற்றைக் கறாராகப் பிரித்துச் சொல்லிவிடமுடியும் என்ற கருத்தாக இருக்கலாம். அப்படிச் சொல்லிவிடுவதன் மூலம் மார்க்சியம் அதன் இயங்கியல் எளிதாகிவிடலாம். இத்தகைய எளிமையை மார்க்சியம் ஏற்காது. ஸ்டாலின், இரண்டில் ஒன்றில்தான் உண்மை என்று அடித்துப் பேசாததில் அவருடைய மேன்மை புலப்படுகிறது. தவிர இந்த விவாதம் வெறும் மொழிப்பிரச்னை பற்றியது மட்டுமல்ல. மார்க்சியத்தில் அடித்தளம், மேலடுக்கு ஆகியவற்றிற்கிடையிலான உறவைத் தீர்மானிப்பது பற்றிய பிரச்னை. எவை எவை அடித்தளம், எவை மேலடுக்கு, இவற்றிற் கிடையிலுள்ள உறவுகளின் தன்மை என்ன? தூரம் என்ன? மேலடுக்குகள் ஒவ்வொன்றும் தனித்தனியானதா? இடைத் தொடர்புகள் உள்ளதா? அவற்றின் தன்மை என்ன? என்பன போன்ற பிரச்னைகள் தொடர்ந்து இருப்பவை. மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்னைகள் பற்றிய இத்தகைய விவாதத்தில் நாம் இறுகிவிடாமல் இருப்பது நல்லது.

மார்க்சியத்தை வளர்த்ததிலும், நடைமுறைப் படுத்தியதிலும் ஏங்கல்ஸ், ஸ்டாலின் போன்றவர்கள் ஆற்றிய மாபெரும் வரலாற்றுக் கடமைகள் கருதி, அவர்களை விமர்சனம் செய்வது தகாது என்ற வைதீக மனப்பான்மை இல்லாமல், மார்க்சியத்திற்கே தன் முதல் மரியாதை உரியது என்ற முறையில் இப்பிரச்னைகளை அணுகியுள்ள குணாவை, எவ்வளவு பாராட்டினாலும் தகும். குணா, ஏங்கல்ஸ், ஸ்டாலின் ஆகியவர்களுக்கு எதிராக மாவோவை நிறுத்தவில்லை; மாறாக அவர்களின் தொடர்ச்சியாகவே, மாவோவை மதிப்பீடு செய்கிறார்.

குணா போன்ற திறமான மார்க்சியச் சிந்தனையாளர்களிடம் நாம் மேலும் சிலவற்றை எதிர்பார்க்கிறோம். வெட்டர் போன்றவர்கள் இயங்கியலை அறவே மறுப்பது ஒருபுறமிருக்க, மார்க்சியத்தையும், அதன் புரட்சிகரமான நடைமுறையையும் ஏற்கும் சார்த்தர்

இயங்கியலை மறுக்கிறார். இயங்கியலுக்கும், புரட்சிக்கும் தொடர்பு தேவையில்லை என்கிறார். மார்க்சிய இயங்கியல் என்பது மனிதனுக்கும், வரலாற்றுக்குமான உறவைத்தான் குறிக்கும்;

> "வரலாறு முழுவதுமே, மனித இயல்பின் முற்போக்கான மாற்றம் தவிர வேறில்லை. உலகின்மீது செயல்பட்டு அதை மாற்றுவதன் மூலம் மனிதன் தன் இயல்பை மாற்றுகிறான்".
>
> - மார்க்ஸ்

பிரபஞ்சம் முழுவதுமே இயங்கியல் முறையில் இயங்குகிறதோ இல்லையோ அதற்கும், மனிதனுக்கும் வரலாற்றில் அவனது இயக்கத்திற்குமிடையிலான இயங்கியல் உறவுக்கும் அறவே தொடர்பில்லை என்ற முறையில் கிராம்சி கருத்துத் தெரிவித்திருக்கிறார். பிரபஞ்சத்தின் இயக்கவிதிதான் வரலாற்றினுள்ளும், மனிதச் சிந்தனையினுள்ளும் எதிரொளிக்கிறது என்று கூறுவதன் மூலம், பிரபஞ்சம், வரலாறு, மனிதன் ஆகியவற்றை ஒரே கட்டுக்கோப்பிற்குள் கொண்டு வருவதிலுள்ள பிரச்னைகளும், விவாதத்திற்குரியவை. இவைபற்றியும் குணா கவனம் செலுத்துவது நல்லது.

இறுதியாக ஒன்று; பண்டைத் தமிழ் மெய்யியலின் பல்வேறு கருத்து நிலைகளின் வீச்சுக்குட்பட்டுக் கிரேக்கத்தில் இயங்கியல் வளர்ந்தது; ஆசிய மண்ணில், குறிப்பாகத் தென்னகத்தில் நிலவிய 'முதிரா' இயங்கியலே - இயங்கியலோடு, கணக்கியல், வானியல், தொல்பொருளியல் முதலியனவும் - பண்டைக் கிரேக்கத்தையும், சீனத்தையும் எட்டி அங்கு புதிய வளர்ச்சி முகடுகளைத் தொட்டன. கிழக்கில் அரும்பிய இயங்கியல் சிந்தனை மேற்கில் மார்க்சியமாய் உருப்பெற்றது. அது மீண்டும் கிழக்கு உலகம் புகுந்து மாவோ சிந்தனையாய் மலர்ந்தது. இவ்வாறு

கிழக்கிலிருந்து மேற்கு, மீண்டும் மேற்கிலிருந்து கிழக்கு என உலக மெய்யியல் முழுமையாகிறது. இவ்வாறு குணா தன் நூலில் சில இடங்களில் குறிப்பிடுகிறார் (பக். 35,38,40,57).

குணாவின் ஆசை இது, ஆதாரங்கள்....?

புத்தகம் பெற:
Maraimalai Adikal Book Stall
18B, Kaliamman Koil Street,
ULSOOR,
BANGALORE – 560 008.

விலை:ரூ. 12/-

"சாதி எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, வடக்கு எதிர்ப்பு போன்ற பகுதிகளைத் தழுவிய பகுதி இயக்கமாகவே திராவிடர் இயக்கம் பிறந்தது. அத்தகைய பகுதிக்கோட்பாடுகளை, மார்க்சியம் என்னும் முழுமைக் கோட்பாட்டை யுடைய தமிழகப் பொதுவுடைமை இயக்கம் விழுங்கி உள்ளடக்கியிருக்கவேண்டும். அவ்வாறு செய்திருக்குமாயின், அத்தகைய பகுதி இயக்கங்கள் யாவும் மார்க்சியம் என்னும் முழுமையுடன் ஒன்றுபட்டிருக்கும்". "அதுபோலவே, சமஸ்கிருத எதிர்ப்பு நோக்குடைய தனித்தமிழ் இயக்கமாவது, நிலவுடைமைக்குரிய பார்ப்பனியப் பண்பாட்டையும் மேலாதிக்கத்தையும் எதிர்க்கின்ற தமிழ்த் தேசிய இன உணர்ச்சிகளை உள்ளடக்கி நிற்கின்ற ஒரு பகுதி இயக்கமாகும். நிலவுடைமைக்குரிய மேலடுக்குகளையும் எதிர்க்கின்ற முழுமை தழுவிய தமிழகப் பொதுவுடைமை இயக்கம், அப்பகுதி இயக்கத்தினுடைய நோக்கங்களையும் ஆற்றல்களையும்

புரிந்து கொண்டிருக்குமாயின், அத்தனித்தமிழ் இயக்கம் முழுமையாகிய பொதுவுடைமை இயக்கத்தில் கரைந்து ஒன்றியிருக்கும்"

குணா – மார்க்சிய இயங்கியல் – பக். 216

"தமிழகத்தை வடக்கத்திய முதலாளிகள் ஒரு வேட்டைக் காடாக்கிக் கொண்டிருந்த நிலைமைகளில். தமிழ்த் தேசிய இனத்தின் மீட்சி என்னும் சாக்கில், தமிழகக் குட்டி முதலாளிய, தேசிய முதலாளிய வகுப்புகள் எழுப்பிய போர் முழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வகுப்புப் பாசறையாகவே திராவிடர் இயக்கம் தோன்றியது. மாறாக, சில அரைவேக்காடுகள் கூறுவது போன்று சில மொழி வெறியர்களாலும், சாதி வெறியர்களாலும் அவ்வியக்கம் தோற்றுவிக்கப் பெறவில்லை. திராவிடர் இயக்கத்தின் உள்ளடக்கம் நிலவுடைமை எதிர்ப்பும் தமிழ்த்தேசிய இனத்தின் தன்னுரிமை வேட்கையுமேயாகும். அவ்வியக்கத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்குமாகிய காரணம் அவையேயாம். அவ்வியக்கத்தின் வீழ்ச்சிக்கான காரணம் அதனுடைய முதலாளிய உள்ளடக்கமாகும்". *குணா – மார்க்சிய இயங்கியல் (பக். 189)*

---

4. கலையும் மார்க்ஸியமும்

– சச்சிதானந்தன்

தமிழாக்கம்: நா.சுகுமாரன்

குறிப்பு:

"இயந்திரவியல் – சூத்திரவாத மார்க்ஸியத்தையும் திருத்தல் வாதத்தையும் எதிர்க்கிற கம்யூனிசச் சிந்தனையாளரும் கவிஞரும்" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பும் சச்சிதானந்தன், கேரளத்தில் முன்னணி விமர்சகர்களில் ஒருவர். நெருடாவின் ஆளுமையால் பாதிக்கப்பட்டு அவர் கவிதைகளை மொழிபெயர்த்தார். இவரது 'ஹரிஸ்ரி' என்ற விமர்சன நூலில் ஐயப்பப்பணிக்கர், கடமனிட்ட ராமகிருஷ்ணன் முதலியவர்களின் கவிதை ஆளுமையை வெளிப்படுத்தினார். இடது சாய்வுடைய இந்தியக் கவிஞர் பலரை – அவர்களுள் ஞானக்கூத்தனும் இடம் பெறுகிறார் – கேரளாவிற்கு அறிமுகப்படுத்தினார்.

'கலையும் மார்க்ஸியமும்' என்ற கட்டுரை பற்றிச் சச்சிதானந்தன் கூறிக்கொள்கிறார்: "யாந்திரீக வாதிகளும் திருத்தல் வாதிகளும் கூடிய ஓர் அரங்கில் வாசிப்பதற்காக இது எழுதப்பட்டது. ஒரு முடிவான பார்வை என்பதை விட ஒரு விவாதமாகவே இக்கட்டுரை முன் வைக்கப்பட்டது. இன்று திரும்பிப் பார்க்கும்போது தேவைக்கதிகமாகக் கருத்து முதல் தன்மை இக்கட்டுரையில் இருப்பதாகப்படுகிறது". அவர் தொடர்ந்து கூறுகிறார்: "இன்னும் அதிக வலிமையுள்ள 'கலை – பாஸிசம் – மக்கள்' என்ற கட்டுரை மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமாவதையே நான் விரும்புகிறேன்". அக்கட்டுரை இன்னொரு இதழில் வரும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'நான் ஒரு மார்க்ஸிஸ்ட் அல்ல' கார்ல்மார்க்ஸ் சொன்னார். அவர் மார்க்ஸியத்தைக் கண்டது வாழ்கிற, வளர்கிற ஒரு கோட்பாடாக; தன்னிறைவும் இயக்கமுமற்ற

ஒரு முரட்டுவாதமாக அல்ல. மார்க்ஸியத்தின் அடிப்படைச் சக்தி, ஆராய்ச்சியில் அல்ல. விஞ்ஞானம் என்ற நிலையில், உண்மையே அதன் இலட்சியம். அதனால் அது எப்போதும் சுயவிமர்சனம் செய்து கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் தயாராக இருக்கவேண்டும். புறவுலகில் நேர் நின்று போராடவும், பரஸ்பரம் ஆராய்ந்து கொள்ளவும் முரண்பாடுகளினூடே அனுபவங்கள் தேடிக் குறைகளைப் புரிந்து கொள்ளவும் செய்கிற தத்துவ நிலைகளே கோட்பாடுகள். சவப் பெட்டியில் அடைத்து வைத்த கோட்பாடே முரட்டு வாதமாக மாறுகிறது. இங்கோ கோட்பாடுகள் ஒருவாறு நிலைபெறுவதும் ஒரு உடன்படிக்கையையோ அரசாங்கத்தையோ தாங்கி நிறுத்துகிற கோல்களாக மாறுவதும் நிகழ்கிறது. இயக்கமற்ற ஓர் அமைப்பை மூளையிலிருந்து வார்த்தெடுத்து அதற்கு விளக்கம் தர விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதல்ல நவீன பௌதிக வாதம். மார்க்ஸியம் ஒரு வழிபாட்டு நிலையோ, மேற்கோள் தொகுப்போ அல்ல. அது தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம் மட்டுமல்ல. அதன் கனவு, அதன் கற்பனை உலகம், விருப்பத்திற்கும், செயலுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை வென்று ஆனந்தம் தேடிய முழுமையான மனிதன் என்பது. மனிதனின் பலவித தளங்களிலான அந்நியாமதலை முடிவாக்கவும், அவனுக்கு உண்மையும், ஒருமையும், ஈடுபாடும் திருப்பியளிக்கவும் விரும்புகிற எல்லாருக்குமானதே மார்க்ஸியம் என்ற கோட்பாடு. அதன் உட்சிறப்பு அது வர்க்கப் போராட்டத்தை உற்சாகப்படுத்துகிறது என்பதல்ல, வர்க்கப் போராட்டத்திற்கு மனிதனின் சுயவெளிப்பாடு என்ற இதிகாச லட்சியத்தைக் குறித்துள்ள அறிவை அளிக்கிறது என்பதுதான். மார்க்ஸியத்தின் கணிசமான பொருளாதார சித்தாந்தத்தை விடவும் கலைஞனை ஈர்ப்பது அதன் மனிதாபிமான உள்ளடக்கமே. இந்த உள்ளடக்கத்திலிருந்து ஒவ்வொரு கலைஞனும் நடத்துகிற தேர்வு வித்தியாசமானது.

மார்க்ஸியத்தின் நவீன தார்மீகம் – அதன் முக்கிய அம்சம் – நாடகாசிரியனான பெர்டோல்ட் பிரக்டை ஈர்த்தது. நெருடாவின் கவிதையில் விகசிப்பது அதன் ஆன்மீகம் – இயற்கை, பிரபஞ்சம், மனிதன் இவற்றுக்கிடையில் அது நிறுவுகிற தர்க்க ரீதியான ஒன்றிப்பு. மிருகத்தனத்திற்கெதிரான அதனுடைய எதிர்ப்பும், மனிதக் கற்பனையைப் புதுப்பிக்கும் அதனுடைய விருப்பமுமே ஓவியனான பிக்காஸோவைப் பாதித்தது எனில் சிற்பியான நீஸ்வெஸ்டினிக்குப் பிரதானம் மனித வருத்தத்தையும், உயிர் வாழ்தலையும் குறித்து அது வழங்குகிற அகத் தோற்றங்கள்.

மார்க்ஸியத்தின் மனிதாபிமான உள்ளடக்கத்தை அங்கீகரிக்கும்போதும் கூட கலைஞனின் சார்புநிலை – மனித சமூகத்துடனும் மனித நிலைபாடுகளுடனும்தான்: அவனோடும் அவனது கலையோடுமுள்ள சார்பு நிலையின் இயல்பான தொடர்ச்சியே இது. சித்தாந்தத்தின் கடும் பிடிப்புகளையோ, அரசியல் போக்குகளின் கருத்து வேறுபாடுகளையோ அவன் அனுசரிக்க வேண்டுமென்பதில்லை. காரணம் கலைஞனின் தனிப்பார்வை சித்தாந்தத்துடன் சார்ந்து நிற்க வேண்டியதில்லை. ஒரு கலைப் படைப்பின் வெளியீட்டு ஊடகங்கள் சித்தாந்த ரீதியிலான தன்மையோ, உற்பத்தியோ உள்ளவை அல்ல. யதார்த்தம் என்னவென்று வரையறுக்க அரசாங்கத்திற்கோ, பொலிட் பீரோவுக்கோ முடியாது. சமூகத்தோடுள்ள கலையின் தொடர்பை விளக்குமிடத்தில் மட்டுமே சித்தாந்தம் முக்கியத்துவமுடையது. இதுவுமெனில் கலைப்படைப்பு நிகழ்ந்த பின்பு நடக்கிற ஒன்று. கலை என்னவாக இருக்க வேண்டுமென்றும் எப்படி இருக்கவேண்டுமென்றும் கட்டளையிடுகிற கட்சிகளும் தலைவர்களும் இவ்விதத்தில் தம்மைத்தாமே பரிகாசத்துக்குரியவர்களாக்கிக் கொள்கிறார்கள். சித்தாந்தத்தோடுள்ள நம்பிக்கையை விடவும் மிகவும் முக்கியம் வாழ்க்கையோடும், ஒப்பாகவே கலையோடுமுள்ள நம்பிக்கை தான். அதனால் தான் இடசேரியும், வைலோப் பிள்ளியும்

கெ.பி.ஜியை விடவும், கெடாமங்கலம் பப்புகுட்டியை விடவும் எல்லா விதத்திலும் சிறந்த கவிஞர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் ஐயப்ப பணிக்கர், ஆற்றூர் ரவிவர்மா முதல் கடம்மநிட்ட ராமகிருஷ்ணன், கெ.ஜி.சங்கரபிள்ளை வரையுள்ள கவிஞர்களின் படைப்புகள் வயலாரினதோ, ஓ.என்.வி.குருப்பினதோ அவர்களது துர்பலரான சக கர்த்தாக்களினதோ படைப்புகளை விடவும் அடிப்படையும் யதார்த்தமும் கொண்டிருக்கின்றன. கலைஞன் சமூக அனுபவத்தை வெளியிடுவது கலைஞனின் பார்வையில்தான். தன்னுடைய கலையோடும், ஊடகத்தோடும் திட்டமான அனுபவத்தோடும் உண்மையான உறவு கொள்ளாத எந்தக்கலைஞனும் சமூகத்தோடும் உண்மையான உறவு கொள்ள முடியாது. இக்காரணத்தினால்தான் நமது கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கெல்லாம் அவற்றின் பராமரிப்பில் வளருகிற பேனா பிடிக்கிறவர்கள் இருந்தும் அவர்களில் ஒருவரேனும் கவனத்திற்குரிய இலக்கியத்தைப் படைக்கவோ, மலையாள இலக்கியத்தின் மையத்திலேறி நிற்கவோ பிராப்தியடையவில்லை. ஒரு கலைப்படைப்பு அதன் இலட்சியங்களுக்கு எதிராக மாறுவதும், ஆட்படுத்த வேண்டியவற்றுக்கு அடங்கிப் போவதும், கபடத்தன்மையிலூடேயும், வீரவழிபாட்டிலூடேயும், நிச்சூன்யமான துருப்பிடித்த சொல்லாடலூடேயும் தன்னை இழந்து போவதும், அனுபவத்தின் எளிய செயல்களிலும் கபடமான எதிர்பார்ப்பின் தொங்கல்களைப் பின்னிச் சேர்ப்பதும் செய்யும்போதுதான் நசிவடைகிறது. கற்பனையான சொல்லலங்காரங்களிலும் யதார்த்த மற்ற எளிமைகளிலும் குறுகி மனிதர்களின் புரட்சிகரமான இயக்கத்தைச் சோர்ந்துவிடச் செய்து சோம்பலின் திருப்தியை வழங்குகிற நம்முடைய முற்போக்கு இலக்கியமே இந்த நசிவிற்கு உதாரணம். துன்பப்படுகிற வர்க்கம் தன் வாழ்க்கையில் ஒருபோதும் அடைய முடியாத உலகியல் ஆடம்பரங்களை ஜனரஞ்சகத்திரைப் படங்களில் பார்த்து

உணர்ச்சிகரமான திருப்தியடைவதுபோல, தனது வாழ்நாளிலேயே யதார்த்தமாக்கித் தீரவேண்டிய புரட்சியை இலக்கியங்களில் பார்த்து எதிர்மறையான திருப்தியில் செயலற்று விடுகிறார்கள். ஜனரஞ்சக சினிமாவும் ஜனரஞ்சக இலக்கியமும் ஒன்றுபோலவே பொய்யான உலகங்களைக்காட்டி மயக்கி மக்களை அடிமைத்தனத்தில் பிணைக்கின்றன. முதலாவது, கல்யாணத்தில் முடிகிறபோது, இரண்டாவது புரட்சியில் முடிகிறது. இரண்டும் ஒரேமாதிரியான கபடந்தான். இயந்திரத்தனமும், கொச்சைப் படுத்துதலும் இந்தியாவில் இடதுசாரி இலக்கியத்தையும், இலக்கிய விமர்சனத்தையும் நாள்தோறும் பொய்யானதாகவும், பரிகாசமாகவுமாக்கிக் கொண்டிருக்கிறது. சுதந்திரமான என்பதை விடவும் ஸ்தாபனத்தின் மதிப்பீடுகளையே நம்முடைய அதிகாரபூர்வமான முற்போக்கு மேடைகளும், விமர்சகர்களும் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதற்காகப் புதியதும் யதார்த்தமுமான இடதுசாரித் தன்மையை – நவீன கலை இலக்கியங்களை - இவர்கள் பல சமயங்களிலும் விலக்கி வைத்துப் பேசவும் வேண்டிவருகிறது. "உண்மைக் கம்யூனிசத்தின்" நிலையான பரிதாபம் இது.

மேல்கட்டு என்ற சொல்லைக்கூட நமது சிந்தாந்தவாதிகள் எத்தனை இயந்திரத் தனமாக உபயோகிக்கிறார்கள். இயற்கை விஞ்ஞானத்தின் கணிதத்தோடு நிர்ணயிக்கக் கூடிய பொருளாதார உற்பத்தி நிலைகளின் பௌதிகப் பரிமாற்றமும், இந்த முரண்பாட்டை உணர்ந்து, மனிதர்கள் போராடுகிற அரசியலும், மதம், சட்டம், தத்துவம், அழகியல் இவற்றின் ரீதியிலான வடிவங்களும் எப்போதும் தம்முள் தனித்துவம் காட்டவேண்டும் என்று மார்க்லே வற்புறுத்தியதுண்டு. உன்னதமான கலை வளர்ச்சியின் சில கட்டங்களில் சமூகத்தின் பொதுவான வளர்ச்சியும் சமூக இயக்கத்தின் ஆதாரக் கட்டும், பௌதிக அடிப்படையுடன் கொள்கிற

நேரடியான உறவுகள் கலையில் காணப்படுவதில்லை என்றும் அவர் கூறுகிறார். மனித அறிவு படைப்பாற்றலற்ற ஒரு உற்பத்தியல்ல; உலகை மனிதத்துவமாக்குகிற ஒரு செயல். அடித்தளம் மேல்கட்டில் இயங்குவது போலவே, மேல்கட்டு அடித்தளத்திலும் இயங்குகிறது. மேல்கட்டிற்குச் சார்பான தன்னியக்கம் உண்டு. கலையாகட்டும், வெறும் "மேல்கட்டு"க்கு அப்பால் சிலவற்றைக் கொண்டதுதான். வெறும் சரித்திர வகையான ஆர்வத்துடன் அல்லவே நாம் இராமாயணமும், மகாபாரதமும் படிப்பது. ஹாம்லெட் என்ற உணர்வுமிக்க புத்திஜீவியைச் சிருஷ்டிப்பதில் தொழிலியல் மூலதனமும், மதச்சீர்திருத்தமும், மறுமலர்ச்சியும், சந்தேகமுடைய மனிதாபிமானமும் பங்கேற்றிருக்கலாம். எனினும் நாம் காண்பது நம்முடைய ஹாம்லெட்டைத்தான். சரித்திரத்தின் சுவர்களைத் தகர்த்து அவனுடைய மனிதத்துவம் நம்முள் பெயர்ந்து விழுகிறது. ஸொபாக்ளிஸின் துன்பியல் நாடகங்கள் சித்தாந்த ரீதியிலான மேல்கட்டு மட்டுமாக இருந்ததென்றால் அவை இன்றைய வாசகரையும், ரசிகர்களையும் சலனப்படுத்துவது எவ்வகையில்? காஃப்காவின் நாவல்கள் ஒரு சரித்திர கட்டத்தின் மரண ஓலம் மட்டுமா? அந்நியமாதல் எல்லா வடிவங்களிலும் முடிவடைவதும் மனிதன் முழுமையடைவதும் வரையிலான வலிமையுள்ள சர்வதேச இலக்கியமல்லவா அவை!

கலை இலக்கியங்களையும், தூய விஞ்ஞானங்களையும், பூர் வா, பாட்டாளி வர்க்கம், திருத்தல் வாதம், நசிவு வாதம் என்றெல்லாம் இயந்திரத்தனமாக வகைப்படுத்துவதை நவீன மார்க்ஸீய அழகியல் மீமாம்சகர்கள் தீவிரமாகப் பரிகசிப்பதுண்டு. ஷேக்ஸ்பியர் நாடகங்களையும், கிரேக்க துன்பியல் நாடகங்களையும் சுதந்திரமாக ஏற்றுக்கொள்கிற மனோவளர்ச்சி மார்க்ஸுக்கு இருந்தது. புஷ்கின் மயாகாவ்ஸ்கியைவிடவும் பெரிய கவிஞனென வெளிப்படையாகச் சொல்லவும், கட்சி இலக்கியத்தை இலக்கியக் கலையிலிருந்து பிரித்துப்

பார்க்கவுமுள்ள விநயமும், உண்மையுணர்வும் லெனினுக்கு இருந்தது. கலையின் சார்பான சுதந்திரத்தை டிராட்ஸ்கி வகைப்படுத்திக் கொடுக்கிறார். ரீல்க்காவும், காஃப்காவும் மகத்தான இலக்கியவாதிகளெனவும், அவர்களை விலக்கிச் சொல்லியது தன்னுடைய பலவீனமாயிருந்ததெனவும் சம்மதிக்க நெருடா தயங்கவில்லை. ரோஜர்கரோடியும், ஹெர்பர்ட்ரீடும், மார்க்ஸ் அழகியலைக் குறித்துத் திட்டமாக ஒன்றும் சொல்லாததைக் கொண்டே, அவர் பௌதிக வாதத்தில் செய்ததுபோல், நாம் ஹெகலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்றும், கலையின் உலகம் சித்தாந்தத்தின் சதுரங்கத்துக்குள் அடங்குவதில்லையென்றும், அது தவிர்க்கவியலாமைக்கு அப்பால் மார்க்ஸ் கனவு கண்ட யதார்த்த சுதந்திர உலகமென்றும் சுட்டிக் காட்டுகிறார்கள். ஏர்னஸ்ட் பி ர் தனது 'கலையும் சித்தாந்தமும்' என்ற நூலில் பெரும் பகுதி பெக்கட், காஃப்கா, ஸோல்ஸெனித்சின் ஆகியோரின் சமூகப் பற்றைத் தெளிவுபடுத்த உபயோகிக்கிறார். மார்க்ஸிய அழகியலே உள்ளது. "பாட்டாளிவர்க்க அழகியல்" என ஒன்று இல்லை. மார்க்ஸிய அழகியலோ இன்று பிளக்னோவ்களிலும், லூனாசார்வ்ஸ்கிகளிலும் ஒதுங்கி நின்றுவிடாமல் சுதந்திரமாகவும், புதுமையாகவும் விரிந்திருக்கிறது. எனினும் புராதனமான நமது மார்க்ஸிய முரட்டுவாதிகளும், அதிகார பூர்வமான இலக்கிய விமர்சகர்களும் பழைய இயந்திரத்தனமான சித்தாந்தங்களிலிருந்தும், கருத்தினங்களிலிருந்தும் வெளிவரத் தயாராக இல்லை. கலையுடனொத்து முன்னேறுவதற்குப் பதிலாக அவர்கள் விசித்திரமான ஒரு பழிவாங்கும் உணர்வுடன் புதிய இலக்கியவாதிகளையும், கலைஞர்களையும் பரிகசித்துக் கொண்டு நடுவழியில் நிற்கிறார்கள். முற்போக்கு – முன்னேற்றம் – வேண்டும். ஆனால் புதுமை கூடாது என்ற இந்த நிலைபாடு ஜடனோவுடையது. கலைப் படைப்பின் "பயனைக்" குறித்து அவர்களுக்குள்ள எதிர்பார்ப்பு மார்க்ஸியமல்ல. பயன்

நோக்கத்தைச் சார்ந்தது. உண்மையில் கலையின் பயன் தன்னிறைவின் தளத்தில் விரிய வேண்டியது. மனிதனுக்குத் தன்னையும், பிரபஞ்சத்தையும் குறித்துள்ள அறிவை விரிவடையச் செய்வதும், புதுப்பித்தும் செய்கிற எல்லாக் கலையும் "பயனு"ள்ளவையே. வியாச மகாபாரதம் முதல் நெருடாவின் "கான்டோ ஜெனரல்", இலியட்டின் "பாழ்நிலம்" வரையான எல்லா மகத்தான இலக்கியங்களும் மதிப்பீடுகளிலும், மதிப்பீடுகளின் வெறுமையின் துன்பியலிலும் ஊன்றி நிற்கின்றன. மனித சரித்திரத்தில் இன்றுவரை உண்டான எந்த ஒரு கலைப் படைப்பையும், அது எந்த வர்க்கத்திலிருந்து வந்ததெனினும் நாம் இழந்துவிட முடியாது. மனித நாகரிகத்தையும், மனித சாத்தியத்தையும் குறித்து அது உணர்த்துகிற அறிவும், யதார்த்தத்தின் வித்தியாசமான பாவங்களை உட்கொள்ளும் அதன் கருத்துமே அதன் கலைப்படைப்பைப் பயனுள்ளதாக மாற்றுகிறது. மனித இனத்தின் முழுமை, உண்மையுணர்வு, அழகியல் கற்பனை – இவைகளின் உயர்ந்த வெளிப்பாடு என்ற நிலையிலும், ஊடகத்தில் மேற்கொள்ளும் புதுமைகளினூடே, சமூகத்தின் அறிவுக்காரணிகளை ஜடத்தன்மை யிலிருந்து மீட்கும் உபகரணங்கள் என்ற நிலையிலும் எல்லா அடிப்படைப் படைப்புகளும் சமூக தர்மம் கடைப்பிடிக்கின்றன. காஃப்காவும், பெக்கட்டும், காமுவும், அயனஸ்கோவும் சமூகத்தைச் சித்தரிக்கிற நீதியிலும், பாணியிலும், பார்வையிலும்தான் பிளவுபட்டதும், போர் வெறியும், விபரீத ஆசைகள் கொண்டதும் அந்நியமாகிப் போனதுமான ஐரோப்பிய சமூகத்தைப் பற்றிய கடுமையான விமர்சனமிருக்கிறது. கோயா கூட்டுக் கொலைகள் படைப்பது நாம் கூட்டுக் கொலைகளை ஒழிக்க வேண்டுமென்று உணர்த்தத்தான். எல்லாக் காலத்திலும் கலைஞர்கள் துன்பியலில் கவனங்கொள்வது, துன்பங்களை நாம் எவ்வாறு ஒழிக்க வேண்டுமென்று கற்பிக்கவும் கூடத்தான் – ஒளிமய நோக்குடையது என்பதால் ஒரு

படைப்பு 'பாசிடிவா'க வேண்டுமென்றில்லை. நம்பிக்கையிழந்தது என்பதால் ஒரு படைப்பு 'நெகடி'வாக வேண்டுமென்றும் இல்லை. பல சமயங்களிலும் மறுதலையாகத்தான் காண்கிறோம். ஸொபாக்ளிஸ், ஷேக்ஸ்பியர், வால்மீகி முதல் தாஸ்தாயெவ்ஸ்கி, காஃப்கா வரையுள்ள அந்தரங்க சுத்தியுள்ள இலக்கியவாதிகள் மனித துக்கத்தைக் குறித்தே எழுதியிருக்கிறார்கள். அதிகாரிகள் கலைஞர்களிடம் எப்போதும் கேட்பது "நீங்கள் எதனால் துக்கத்தை மட்டும் காண்கிறீர்கள்?" என்றுதான். ஹிட்லரும், ஸ்டாலினும், இந்திராவும் கலைஞர்களிடம் வேண்டுவது திருப்தியில் மலர்கிற முகங்களையும், போலி வீரியத்தால் புடைத்தெழுந்த நெஞ்சையும் சிரிப்பதையுமே. எனில் எந்த நிலையிலும் கலைஞன் வேட்டையாடப் படும் பிராணியின் கூடவே இருக்கிறான்: வேட்டைக்காரர்கள்கூட அல்ல. அவன் ஆன்டிகோனியின், பெலாஜியாவின், ஜீன்வல்ஜீனின், க்ருஷ்ணவின், ஜோசப் கெயின், ஐவான் டெனிஸோவிச்சின், கர்ணனின், சீதையின், ரவியின், ஜோஸப்பின் கூடத்தான். விமர்சகனென்ற நிலையிலுள்ள தனது பங்கை மறுக்கும்போது கலைஞன் தன்னுடைய சுதந்திரத்தையும், பொறுப்பையும் நிராகரித்து ஒரு உடன்பாட்டின் தாத்பரியத்தின், அரசாங்கத்தின் பாதுகாவலனும், துதிப்பாடகனுமாக மாறுகிறான்; வர்க்கத் துரோகியாக மாறுகிறான். அதிகாரிகளுக்கும், அதிகாரத்தின் நித்தியவிமர்சகனுமான கலைஞனுக்கும் இடையேயுள்ள சாசுவதமான முரண்பாட்டைக் கண்டுவிட்டுத்தான், "எந்தக் காலத்திலும், எந்த அரசாங்கமும், கவிஞர்களின், எழுத்தாளர்களின் ஆத்மா என்னவென்று புரிந்துகொண்டதில்லை" என்று நெரூடா சொல்கிறார். எந்த நிலையிலும் சொர்க்கத்தின் கட்டெறும்பாக இருப்பதும், சக்கரவர்த்தி அம்மணமாகப் போகிறார் என்று சொல்வதும்தான் அந்தரங்க சுத்தியுள்ள கலைஞர்களின் இயல்பு. இந்த இயல்பு நஷ்டப்படுவதுடன் இலக்கியக்கலைகள் எத்தனை வலிமையற்ற, ஊக்கமற்ற,

வீரியமற்றவைகளாகப் போகின்றன என்பதற்கு மிக நல்ல உதாரணம் தொழில் தனமாகப் பிரசாரம் செய்யப்படுகிற ரஷ்ய - சீன இலக்கியங்களே. குவேராவைப் போலுள்ள புரட்சியாளர்களும், ஃபி ரைப் போலுள்ள சுதந்திர மார்க்சிய சிந்தனையாளர்களும் ஒரே குரலில் நிராகரிக்கிற "சோஷியலிஸ்ட் ரியலிஸம்' தான் அங்கு போல் இங்கும் முற்போக்குக் கலை வடிவமாக எண்ணப்படுகிறது. ரியலிஸத்தைக் குறித்த கற்பனையும் கூட மாப்பஸான் போன்றோரின் நேச்சுரலிஸத்தில் ஒதுங்கி நிற்கிறது. நமது "முற்போக்கு" மேடைகள் பிரசாரம் செய்கிற கலை-இலக்கிய மாதிரிகளும் பொதுவாக இரண்டாந்தரமானவை என்று சொல்லாமல் முடியாது. மக்களின் கலை என்ற பேரில் அவர்கள் இரண்டாந்தரத்தையே தூண்டுகிறார்கள். முப்பது வரு ங்களுக்கு மேலாகியும் கம்யூனிஸ்ட் கவிஞனுக்கு ஒற்றை உதாரணம்: மயாகாவ்ஸ்கி. நெரூடாவின் ஆற்றலோ, வயெஹோவின் எளிமையான ஒன்றிப்போ இல்லாத புகழ்பெற்ற ஒரு கவிஞன், மயாகாவ்ஸ்கி. மொழியிலும், கவிதை உருவத்திலும் உருவாக்கிய மகத்தான பரிமாற்றங்களைப் புரிந்துகொள்ள இந்த மாணவர்கள் முனையவில்லையென்பது வேறு வி யம். சோஷியலிஷ்ட் நாவலாசிரியருக்கு ஒற்றை உதாரணம்: மாக்ஸிம் கார்க்கி. தாஸ்தாயெவ்ஸ்கியின் ஆழமோ, டால்ஸ்டாயின் விரிவோ இல்லாத ஒரு ரஷ்ய நாவலாசிரியர். மலையாளத்திலிருந்து காட்டும் மாதிரிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. புரட்சிக் கவிஞர் கெ.பி.ஜி., சோஷியலிஸ்ட் ரியலிஸ்ட்: செறுகாடு, கிரிட்டிகல் ரியலிஸ்ட்: மலையாற்றூர் ராமகிருஷ்ணன். மார்க்ஸிய புத்தி ஜீவிதத்தின் கையாலாகாத் தனத்திற்கு இன்னும் உதாரணங்கள் எதற்கு? சிறந்த மாதிரிகள் இல்லையெனில், இல்லையென்று சொல்கிற உண்மை உணர்வும், பிற இந்திய மொழிகளிலோ, உலக மொழிகளிலோ உள்ள மாதிரிகளை மலையாளத்தில் வெளிப்படுத்தச் செயலாற்றுவதும் தான் இவ்வாறான சுயபரிகாசத்தை விடவும் நல்லதென்று தோன்றுகிறது.

மார்க்ஸியத்திற்கு இளம் பருவம்தான். அது புதிய கேள்விகளினூடேயும், புதிய தேடல்களினூடேயும் வளரத் தொடங்கித்தான் இருக்கிறது. எனில் அது முடிந்து போனதும், முழுமையடைந்ததுமான ஒரு விதிகளின் தொகுப்பு என நமது சித்தாந்தவாதிகள் சித்தாந்திக்கிறார்கள். புதிய கோட்பாடுகளையெல்லாம் ஒன்று இடதுசாரி தீவிரவாதமென்றோ அல்லது வலதுசாரி எதிர்மறையென்றோ முத்திரை குத்தி மறுத்துவிடுவதே தலைவர்களுக்கு விருப்பமானது. பெர்லின் கருத்தரங்கில் பங்கேற்ற இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான என்றிக்கோ பெர்லிங்கர் சொல்வது போல, 'அச்சிட்ட சில சூத்திர வாக்கியங்கள், மேற்கோள் போராட்டம், தங்களுடையதிலிருந்து மாறுபட்ட நிலைபாடெடுப்பவர்களை எல்லாம் எப்படியாவது திருத்தல்வாதியென்று முத்திரை குத்துதல்; இவ்வளவு கொண்டும் நாம் திருப்தியடைவது வழக்கம். மார்க்ஸியத்தின் வளர்ச்சிக்குப் பலவிதக் கட்சிகளுடையது போன்றே தனி நபர்களின் பங்கும் அவசியமானது". (அரசாங்கப் பார்வையை எதிர்க்கும் சுதந்திரத்தைக் குறித்து பிரஞ்சு கம்யூனிஸ்ட் தலைவரான ஜார்ஜ் மார்சே யும் வற்புறுத்துகிறார்). மார்க்ஸியத்தை உயிர்ப்புடன் நிலைநிறுத்தவும், நூதனமான கருத்துக்களினூடே வளர்த்தவும் முற்பட்டுள்ள சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் எல்லோரும் கம்யூனிஸ்ட் கட்சியின் குற்றவாளிப் பட்டியலில் இருக்கிறார்கள். அந்தோனியோ கிராம்சி, பாமீரோ, டோக்லியாட்டி, லூகாஸ், ஐசக்டுவைட்ஜர், ரொனால்ட் ரெயிங், ரீஜிஸ்டிப்ரே, சேகுவேரா, டானியல் கொஹன் பண்டிட், ஃப்ரான்ஸ் ஃபனான், ஹெர்பர்ட் மார்க்யூஸ், ஏர்னஸ்ட் பி ர், ரோஜர் கரோடி, ஜீன்பால் சார்த்தர் – இவர்களுடன் சில சிந்தனையாளர்கள் எக்ஸிஸ்டென்ஷியலிஸ்மும் மார்க்ஸியமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதல்ல என்றும் ஒன்றையொன்று நிறைவாக்கும் தன்மை உடையனவென்றும், மார்க்ஸியத்தின் வரலாற்றுப் பார்வைக்குள், தனிநபர் உறவுகளையும் உத்தரவாதத்துவத்தின் பிரச்னையையும் கூட விளக்குவதையே

எக்ஸிஸ்டென்ஷியலிஸம் செய்கிறது என்றும் சார்த்தர் தனது நம்பிக்கை மூலமும், நடவடிக்கைகள் மூலமும் தெளிவாக்கியிருக்கிறார். கிறிஸ்தவ சபைக்கும், புரட்சியாளர்களுக்கும் இடையில் கவனத்திற்குரிய விவாதங்கள் நடந்து வருகின்றன. எனினும் நம்முடைய எக்ஸிஸ்டென்ஷியலிஸ்டுகளும், கிறிஸ்தவர்களும், மார்க்சிஸ்டுகளும் இன்னும் தங்களுடைய இருட்டறையில் கதவடைத்துக் காலம் கழிக்கிறார்கள். மார்க்ஸிய புத்திஜீவிகள் மட்டுமல்ல, புதிய கலைஞர்களும் குற்றவாளிப் பட்டியலில் தான். ரஷ்யாவில் எவ்டுஷெங்கோவும், வோஸ்ட்யெசென்ஸ்கியும் முதல் அக்மாதூலினா, கொர்பன்யேவ்ஸ்கா வரையிலான ஒரு கவிஞர் கூட்டம் முழுதும் அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்கு ஆளானவர்களே. இவர்களில் ஒருவரும் கம்யூனிஸ்ட் எதிரிகள் அல்லர். லெனினிசப் பகைவரும்கூட அல்லர். க்யூபிஸமும், சர்ரியலிஸமும் போலக் கம்யூனிஸ்டுகளாலேயே நடத்தப்பட்ட புதுமையான கலை இலக்கியங்களைக் கூட 'உண்மைக் கம்யூனிஸ்டுகளால்' செரித்துக் கொள்ள இன்றும்முடியவில்லை. இடதுசாரியில் வளர்கிற நவீனகோட்பாடுகளுடனும், கலை இலக்கியங்களுடனும், அவற்றைப் படைத்தவர்களுடனும், கம்யூனிஸ்ட் கட்சிகளும், அரசாங்கங்களும் "கம்யூனிஸ்ட் சர்ச்" என்று சொல்லத் தோன்றுகிறது – காட்டுகிற சகிப்பின்மை காரணமாக ஏற்படும் நஷ்டம் மார்க்ஸியத்திற்குத் தான்; இலாபம் மற்றவர்களுக்கும். புரட்சியின் எதிரிகள் விரும்புவது மார்க்ஸியம் சகிக்க முடியாத முரட்டுத்தனமாகிப் போவதையே. மார்க்ஸிய புத்தி ஜீவிகளின் சிந்தனைப் போராட்டத்தை "ஆன்டி-கம்யூனிஸ்ட்" என்று முத்திரை குத்த முரட்டுவாதிகளும், முதலாளித்துவ உலகமும் ஒரணி திரள்வது அதனால்தான். எத்தனை எதிர்ப்புகளிருந்தாலும், எல்லா மேடைகளிலும் இயந்திரத்தனத்தை எதிர்ப்பதும், மார்க்ஸியத்தின் மனிதாபிமான அடிப்படையிலிருந்து தனி நபர் சுதந்திரத்திற்கும், கலையின் உன்னதத்திற்கும் வலிமை

ஏற்படுத்துவதும் செய்கிற ஒரு இணையான இடதுசாரித் தன்மை மனித வர்க்கத்தின் எதிர்பார்ப்புப் போல உலகமெங்கும் வளர்ந்து வரவே செய்யும்.

நன்றி - மலையாள நாடு
(27 பிப்ரவரி 1977)

மீள்பார்வை

'பரிமாணம்' அறிவாளிகளுக்கான இதழ்தானா என்று கேட்காதீர்கள். நம்மவர்களின் அறிவுத்தரம், பிரச்னைகளைப் பற்றிய பார்வையின் விரிவு, அதிகரிக்க வேண்டும், இல்லையா? அரிச்சுவடி அளவுக்கே மார்க்சியத்தை வைத்திருப்பது யாருக்கு நன்மை? தவிர, நமக்குத் தெரிந்த அரிச்சுவடிகூட சரியானதுதானா என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ளப் போகிறோம்? சிந்தித்துப் பாருங்கள்.

தமிழகத்தில் மார்க்சியம் அறிந்த பலரை நினைவில் வைத்து இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம். மார்க்சியம் பற்றிய உங்கள் படிப்பை, அனுபவத்தை, ஆய்வை, ஆலோசனைகளை மற்றவர்களோடு 'பரிமாணத்'தின் மூலம் பகிர்ந்து கொள்ளுங்கள். மார்க்சியம் பற்றிப் படிப்பவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். உங்கள் சந்தேகங்களை, பிரச்னைகளை எழுதுங்கள். விடை தேடுவோம்.

'பரிமாணம்' எந்த ஒரு குறிப்பிட்ட கட்சியோடும் இல்லை. இதில் எழுதுபவர் எந்தக் கட்சியிலும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். 'பரிமாணம்' அதில் கவனம் கொள்ளாது.

'பரிமாணம்' மார்க்சிய சித்தாந்த இதழ். தவறாது பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளுங்கள். இதழின் வளர்ச்சி நோக்கில் நன்கொடை வரவேற்கப்படுகிறது. தமிழில் இதுவே முதல் முயற்சி, தங்கள் பங்கை மறந்து விடாதீர்கள்.

~~*

பரிமாணம் – 2

அக்டோபர் 1978

“ஒவ்வொரு மனிதனும் தன் அகநிலைச் சார்பான வாழ்க்கை இலட்சியத்தை, புறநிலை வகையிலான சமுதாய வளர்ச்சி என்ற இலட்சியத்துடன் இணைந்து செல்வதற்குரிய விருப்பமும் திறனும் தகுதியும் பெறும்போது, ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தின் அங்கமாகத் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும்போது, மனித சமுதாயம் தனது விடுதலையையும் தடையற்ற முன்னேற்றத்தையும் சாதிக்க முடியும், இத்தகைய மனிதன்தான் தனது விடுதலையைத் தானே நிர்ணயிக்கும் சுதந்திரன் ஆவான்”.

– மார்க்ஸ்

1. நம்பார்வை

இந்தியாவுக்கு மார்க்சியத்தின் தேவைபற்றி எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

சோசலிசம் நோக்கி உலகம் நடைபெறும் காலத்தில் நாம் மிகவும் பின் தங்கிவிட்டோம்.

இத்தகைய மாற்றத்திற்கான தத்துவமும் நடைமுறையும் தகுதியும் உடையது, உடையதாக இருக்க வேண்டியது, பொதுவுடைமைக் கட்சி தான்.

அப்படியானால் நம் பின்தங்கிவிட்டதற்கான காரணங்களை, நமது தத்துவ, நடைமுறை சார்ந்த அனுபவங்களுக்குள் தேட வேண்டியிருக்கிறது.

இத்தகைய ஆய்வின்போது தான், மார்க்சியம் பற்றிய நமது புரிதல், மார்க்சியத்தின் பல பரிமாணங்களைப் பற்றிய கல்வி, இந்தியாவின் வரலாறு, தத்துவம், கலாச்சாரம், கலை இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள், இந்தியாவின் ஆளும் வர்க்க நடைமுறைகள், சாதி மதப் பிரச்னைகள், தேசிய விடுதலை சோசலிச மாற்றம் நோக்கிப் பிற நாடுகள் செய்த பயணங்கள் – இவ்வாறு பல பிரச்னைகள் நம் முன் வருகின்றன. இவை பற்றிய நமது புரிதல் முழுதும் ஒரு புரட்சிகரமான சமுதாய மாற்றம் நோக்கியே நாம் செலுத்தியாக வேண்டும். இடையில், இந்தியாவா, தமிழகமா என்ற பிரச்னையும் எழுகிறது.

இவை பற்றிய ஒரு பயனுள்ள தேடலைப் 'பரிமாணம்' வரவேற்கிறது. தங்கள் கட்சி தான் உண்மையான பொதுவுடைமைக் கட்சி என்று சாதிப்பதில் உள்ள அக்கறையை மீறி நாம் இயங்கி ஆக வேண்டும். நமக்குள் இறுகிப் போனதன் விளைவை நாம் நன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இது மேலும் தொடர்வதால் நம் பகைவர்க்கே பாதுகாப்பாகிறது.

முதல் இதழ் அனுபவத்தோடு 'பரிமாணம்' மீண்டும் வேண்டுகிறது. தயவு செய்து, விலகாதீர்கள்; விலக்காதீர்கள்.

2. கம்யூனிசம்
– விடுதலையின் இலக்கணம்

– எஸ்.என். நாகராசன்

நுழைவாயில்:

தமிழகத்திலுள்ள மார்க்சியச் சிந்தயைாளர்களுக்கிடையில் குறிப்பிடத் தக்கவர்களுள் தோழர் எஸ்.என். நாகராசனும் ஒருவர். விஞ்ஞானம், தத்துவம், வரலாறு, கலை இலக்கியம் முதலிய துறைகளில் ஆழ்ந்த அறிவோடு, தங்கு தடையில்லாமல் சுதந்திரமாகப் பயணம் செய்ய வல்லவர் இவர்.

உயிரியல் துறையில் ஆய்வு மேற்கொண்டிருந்த காலத்தில் சோவியத் ரஷ்யாவில் எழுந்த லைசென்கோ பற்றிய பிரச்னை, இவரை மார்க்சியத்தை ஆழ்ந்து கற்கத் தூண்டியது. இதன் விளைவாக மார்க்சியத்தைத் தனக்கு வழிகாட்டும் நெறியாக ஏற்றுக்கொண்டதை நினைவு கூர்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்த காலத்தில், புரட்டல் வாதத்திற்கெதிரான போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இதன் காரணமாகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் வெளியேற நேர்ந்தது. அதிகாரப்பூர்வமான கம்யூனிஸ்ட் கட்சி எதிலும் இவர் உறுப்பினராக இல்லை. ஆயினும், மார்க்சியம் – லெனினியம்– மாவோ சிந்தனையில் தனக்குள்ள ஆழ்ந்த பற்றை இவர் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

'கம்யூனிசம் - விடுதலையின் இலக்கணம்' என்ற கட்டுரையைத் தான் எழுதிய காலம், நோக்கம் பற்றிக் கீழ்க்கண்டவாறு அவர் குறிப்பிடுகிறார்: '1961ல் தோழர் ஜீவாவுடன் நடத்திய ஒரு விவாதத்தின் விளைவாக, இந்திய மக்களின் தத்துவ மரபுகளுடனும், அவர்களின் இயல்பான விவேகம் வெளிப்படக் கூடிய கதைகள் பழமொழிகளைப் பயன்படுத்தியும், மார்க்சியத்தை அவர்க்கிடையில் கொண்டு செல்லாததால் தான் இந்திய மக்கள் மார்க்சியத்தைத் தன்வயமாக்கிக் கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

அம்முறையில் இருவரும் சேர்ந்து ஒரு புத்தகம் எழுதத் திட்டமிட்டோம். நாளடைவில் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாகவும், தோழர் ஜீவாவின் மறைவாலும் இதை எழுத முடியவில்லை. 1967ல் கடலூர் சிறையில் இருந்தபோது, மார்க்சின் ஆதாரக் கட்டுரைகளுள் ஒன்றான, 'அந்நியமாக்கப்பட்ட உழைப்பை' மொழிபெயர்த்து, விரிவான விளக்கங்களோடு பின்னர் வெளியிட நான் மேற்கொண்ட முயற்சியைக் கட்சி ஏற்கவில்லை. இன்னொரு சமயம், தோழர் பாலதண்டாயுதம் இதை வெளியிட முயன்றதும் வெற்றி பெறவில்லை'.

இவரது கட்டுரையைப் 'பரிமாணம்' மகிழ்ச்சியோடு வெளியிடுகிறது. தோழர் நாகராசன் அரிதாக எழுதக் கூடியவர். அவரது கட்டுரை கிடைக்கும் பொழுதெல்லாம் 'பரிமாணம்' வெளியிடும்.

- ஆசிரியர்

.... An Appreciation

I am happy to be recording my appreciation of Sri S.N. Nagarajan's work on Marxism in Tamil. Though my own knowledge of Tamil is next to nothing, he read out the work to me with a brilliant translation and exposition in English. I must say that it is one thing to form one's ideas of Marxism by one's own personal reading and quite a different thing to get them from a live and totally committed exponent. I have been inducted by the above process into the vital currents of Marxist philosophy. I wish that this manner of impact will benefit others also. The book on hand opens, we may say, this process of a live communication of the spirit and substance of Marxism.

This is a book on Marxism with a difference. The author is something of a puritan in his cause and he sharply distinguishes his understanding from the popular, adulterated and deviating representations of the system of thought in question. He is also keen on differentiating the energy-oriented, dialectical and creative materialism of Marx-Engels-Lenin & Mao from what he designates consistently as 'vulgar' materialism. This is a clarification that will remove much of the sentimental aversion to the new school of materialism and predisposes entrants into it expect in it a strong vindication of what are described as the creative and higher values of life. This valuational justice has a point of great philosophical appeal.

In the exposition on hand, brief but quintessential, we have another remarkable innovation. We are accustomed to regard Marxism as a product of western civilisation. We are forcefully directed to see it as somewhat alien to the recent western ethos but fundamentally akin in its inspiration to the basic patterns of Indian and Chinese cultures. It is in this context that the learned writer affirms with great conviction that the Chinese version of communism

is both vaster and deeper in its intellectual content receiving as it does ideological support from the ancient chinese thought and culture. He entertains the hope that Indian thought also in its best can go well with the new movement and also furnish it with a great deal of indigenous motivation. Our common friend, Dr. P.K. Misra, brings in his Anthropological wisdom and sees that the foundations of Indian life at the level of the unspoiled masses contain anticipations of Marxism and integration of the new materialism with the unsophisticated Indian wisdom of ages is more than a mere possibility. It is already there in essentials and all that is required is to unfold and develop it on natural lines. This line of thinking reminds us of what Tolstoy hoped to develop out the ethos of the Russian peasantry.

It is thus easy to see in the new exposition a great deal of originality, authenticity and creative reconstruction, bringing it into focus within the matrix of Indian modes of thought. Being a scientist by practice, the author never lacks cogency of presentation. The book merits a hearty welcome.

Prof. RAGAVACHAR
Former Professor &
Head of the Department of Philosophy,
University of Mysore.

கம்யூனிசம்
– விடுதலையின் இலக்கணம்

1. 'ஒலி பிறக்க ஒளி – ஒரு பழங்காலக் கருத்து

கம்யூனிச இயக்கம் பொதுவுடைமை இயக்கம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வியக்கம் உலகில் உள்ள பெருவாரியான நாடுகளில் காணப்படுகிறது. இது உணர்வு பெற்ற உழைக்கும் மக்களின் விடுதலை இயக்கம். உலகிலுள்ள மக்களில் பெரும்பாலோர் உழைக்கும் மக்களாக இருப்பதாலேயே இந்த இயக்கம் உலக இயக்கமாக வளரும் வாய்ப்பை அடைந்துள்ளது.

'உணர்வு பெற்ற' என்ற சொல்லின் பொருள் என்ன? 'தன்-அறிவு' அல்லது 'மெய்-அறிவு' என்று கூறுவதையே 'உணர்வு-பெற்ற' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றோம். இதையே 'உன்னை நீ அறிந்து கொள்' என்று தமிழிலும், 'ஆத்மானம் வித்தி' என்று வடமொழியிலும், 'நோ தை செல்ப்' என்று ஆங்கிலத்திலும் கூறுவார்கள். தன்னை உள்ளடக்கிய அல்லது தன்னை அடக்கிய அறிவே தன் அறிவு. தன் அறிவின் அம்சங்கள் யாவை? நான் யார்? என் வாழ்வின் பயன் என்ன? அல்லது பொருள் என்ன? மற்றும் அப்படிப் பயன் உண்டென்றால் அத்தகைய பயனை எவ்வாறு அடைவது? என்பவையே தன் அறிவின் அடிப்படையான அம்சங்கள் எனப் பொதுவாகச் சொல்வார்கள். அப்படிச் சொல்வது தவறல்ல. நம்நாட்டுப் பாணியில் சொல்வதானால் 'என் வீடு எது? – அங்கு போக வழி எது? என்பதே தன் – அறிவின் சாராம்சம்.

கேள்விகள் எளிது. விடை அவ்வளவு எளிது அல்ல. என் வாழ்வின் பயன் என்ன என்ற கேள்விக்கு விடைகாண, எவை எவற்றை எல்லாம் முன்னதாக அறிய வேண்டும் என்பதைக் காணலாம்.

1. நான் யார்? எனக்கும் நான் வாழும் இந்தச் சமுதாயத்துக்குமுள்ள உறவு எத்தகையது?
2. நான் இங்கு செய்யும் வேலை அல்லது பணி என்ன?
3. இங்கு எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிலை என்ன?
4. என் பணிக்கும் என் நிலைக்கும் ஏதாவது உறவு உண்டா?
5. என் பணிக்கேற்ப எனக்கு எத்தகைய நிலை இருக்க வேண்டும்?
6. என் வாழ்வின் குறிக்கோள் எதுவாகத் தான் இருக்க முடியும்?
7. நான் அடையவேண்டிய இலட்சியம் சாத்தியம் தானா?
8. அது சாத்தியமே என்று எவ்வாறு கூறுவது?
9. இன்று இங்கு இத்தகையதொரு இலட்சியத்தை அடைய முடியாமல் எத்தகைய சக்திகள் என்னைத் தடுத்து நிறுத்திக் கொண்டு இருக்கின்றன?
10. இத்தகைய சக்திகளை எவ்வாறு வெல்வது? மேலே குறிப்பிட்டவையே தன்-அறிவின் அடிப்படை அம்சங்கள். இக்கேள்விகளுக்கு விடைகாண்பதே தன்-அறிவு காண்பதற்குச் சமம்.

இனித் 'தன்-அறிவின்' வகைகளைக் குறிப்பிடலாம். ஒரு தனி நபரின் தன் – அறிவைக் குறிப்பிட்டுப் பேசலாம். ஒரு வர்க்கத்தின் தன் அறிவைக் குறித்துப் பேசலாம். ஒரு மக்களின் (உதாரணமாகத் தமிழ் மக்களின்) தன் அறிவைக் குறிப்பிடலாம். உலக மக்களின் தன் அறிவைக் குறிப்பிடலாம்.

தன் அறிவின் அம்சங்களையும் வகைகளையும் கண்டோம். மேலே எழுப்பியுள்ள கேள்விகளுக்குத் தெளிவான விடைகளை அறிந்த பாட்டாளிகளே பொது

உடைமை இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திச் செல்கின்றனர். மற்றும் நடத்திச் செல்ல இயலும். இத்தகைய தன்-அறிவு பெறாத உழைக்கும் மக்கள் இந்தப் புரட்சிகரமான விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்திச் செல்லும் பக்குவத்தை அடைந்தவர்களாக ஆகஇயலாது.

இத்தகைய தன் அறிவைப் பாட்டாளி மக்கள் தாங்களாகவோ இயற்கையாகவோ பெறுவது சாத்தியமல்ல என்று லெனின் கூறுகின்றார். இத்தகைய அறிவை அவர்களுக்குப் புகுத்திய பெருமை, முதன் முதலாக கார்ல் மார்கசையே சார்ந்தது. இக்காரணமாகவே நவீன காலத்துக் கம்யூனிச இயக்கத்தை மார்க்சிய இயக்கம் என்றும் அழைக்கின்றனர்.

பாட்டாளி வர்க்கம் தொழிற்சங்கங்களைக் கட்டலாம். போராட்டங்களை நடத்தலாம். இருப்பினும் அவ்வர்க்கம் தானாகவே சோசலிச உணர்வையோ கம்யூனிச ஆர்வத்தையோ அடைவது சாத்தியமல்ல.

அனுமனுக்குத் தன் சக்தி தெரியாது என்றும், வயது முதிர்ந்தவனும் வரலாற்றை உணர்ந்தவனுமான ஜாம்பவான் அனுமனுக்கு அவனுடைய திறமையையும் அவனுடைய பாரம்பரியத்தையும் எடுத்துரைத்த பின்னரே அனுமன் இலங்கைக்குத் தாவிச்சென்றதாகவும் இராமாயணக் கதை கூறுகின்றது. அவ்வாறே இங்கும் உழைக்கும் மக்களாகிய அனுமனுக்கு, வரலாற்றை ஆழமாக உணர்ந்த கார்ல் மார்க்ஸ் அம்மக்களுக்கு வரலாற்றுக் கடமையையும், அவர்களுக்குள்ள சக்தியையும் கூறியதற்குப் பின்னரே இம்மக்கள் வீரமுழக்கத்துடன் தங்கள் வரலாற்றைத் தொடங்கியுள்ளனர்.

இனித் தன்-அறிவின் மாறும் அம்சங்களையும் மாறாத அம்சங்களையும் காணலாம். நான் யார், என் பணி என்ன, என் வாழ்வின் பயன் என்ன என்பன போன்ற

கேள்விகள் மட்டுமே என்றும் மாறாதவை. இக்கேள்விகளுக்குக் கிடைக்கும் விடைகளோ மாறும் தன்மை உடையவை.

இனி எவ்வகையில் விடைகள் மாறுகின்றன என்று காணலாம்.

இவ்வுலகிலேயே தன் வாழ்வின் இறுதிப் பயனை அடைய வேண்டும் என்று எவன் கூறுகின்றானோ அவன் மேலே கிளப்பியுள்ள கேள்விகளுக்கு ஒரு வகையான விடை அளிப்பான். மாறாக, பரலோகத்தில்தான் தன் வாழ்வின் பயனை அடைய முடியும் என்று கூறுவானேயானால் அவனோ மற்றுமொரு வகையான விடை அளிப்பான்.

இவ்வுலகிலேயே தன் வாழ்வின் பயனைக் காண்பேன் என்று கூறுபவனைப் பொருண்மைவாதி என்றும், லௌகீகவாதி என்றும் அழைக்கலாம். மாறாக, பரலோகத்தில் தன் வாழ்வின் இறுதிப் பயனைக் காண்பேன் என்று கூறுபவனை ஆன்மீகவாதி என்றும் சமயவாதி என்றும் சாதாணரமாகக் குறிப்பிடுவார்கள்.

இகமா, பரமா என்ற கேள்வியல்லவா மேலே கிளம்பியுள்ளது! ஆம். இகத்தில் முழுமையான நம்பிக்கை கொண்டவனை ஆன்மீகவாதி என்றும் அழைக்கின்றோம்.

இருப்பினும் லௌகீகவாதிகளிலும் பல வகையினருண்டு. அவ்வாறே ஆன்மீகவாதிகளிலும் பலவகையினருண்டு. இவ்வகையினரை வேறொரு இடத்தில் சற்றுவிரிவாக ஆராயலாம்.

தவிர, இலட்சிங்களும் பொதுவாகவே காலத்துக்குத் தக்கவாறும், வர்க்கத்துக்குத் தக்கவாறும் மாறக்கூடியவை என்பதையும் நாம் காண முடியும்.

அது மட்டுமல்ல, மெய்அறிவை அடைவது எவ்வாறு என்ற கேள்விக்கும் தரக்கூடிய விடைகள் இலட்சியத்துக்குத் தக்கவாறு மாறும். இவ்வுலகிலேயே தனது வாழ்வின் பயனை அடைய முற்படும் ஒருவன் ஐம்புலன்களால் மெய் அறிவைப்

பெறஇயலும் என்று கூறுவான் தவிர அவன் இவ்வுலகை ஒரு கனவு, மாயை என்று கண்டிப்பாகக் கூறமாட்டான். இவ்வுலகம் உண்மையே என்றுதான் கூறுவான். பொருளையும் புலனையும் மறக்கமாட்டான்.

அதற்கு மாறாகப் பரலோகத்திலேயே தனது வாழ்வின் பயனைக் காண்பேன் என்று வாதாடுபவன் இறுதியில் இவ்வுலகையும், ஐம்புலன்களையும் மெய் எனக் கூறமாட்டான், இவ்வுலகம் ஒரு கனவு போன்றது என்றும், அதேபோல புலன்களும் மெய்யைக்காண உதவமாட்டா; மாறாக, பொய்மையையே காட்டுமென வாதாடுவான். அத்தகையவன் பொருளையும் புலனையும் நம்ப இயலாது என்றே கூறுவான். இத்தகையவர்கள் 'மாயாவாதிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்'.

மேலே கண்ட உண்மைகளிலிருந்து நாம் அறியக்கூடிய மற்றுமொரு உண்மை என்ன? எல்லா மக்களிடையேயும் எல்லாக்காலங்களிலும் இதே கேள்விகள் எழுந்தே இருக்க வேண்டும். மற்றும் ஆழமான பல வகைப்பட்ட விடை மாறுபட்ட பதில்களும் கிளம்பியே இருக்க முடியும். இத்தகைய மாறுபட்ட விடைகள் மக்களை எவ்வகையில் பாதித்திருக்க வேண்டும் என்பதே மிகவும் முக்கியமான பிரச்னை. அவ்வாறு எத்தகைய பாதிப்பும் ஏற்படாமலிருந்தால் கருத்து மோதல்களும் சமயச் சண்டைகளும் ஏற்பட்டுப் பலர் கழுவிலும் காளவாயிலும் மடிய நேரிட்டே இராது. எத்தகைய கருத்துக்கள் எம்மக்களை எவ்வகையில் பாதித்திருக்கக்கூடும் என்பதையறிந்தால்தான் சமுதாயத்துள் எழுந்த, மற்றும் எழுந்து கொண்டேயிருக்கும் கருத்துப் போராட்டங்களின் உண்மைக்காரணத்தைக் காணமுடியும்.

கருத்து மோதல்கள் அனைத்துமே சமுதாயத்துள் வாழ்ந்துவரும் மக்களிடையே கிளம்பும் மாறுபட்ட அல்லது முரண்பட்ட நலன்களைப் பிரதிபலிக்கக் கூடியவைகளாகவே இருக்கும் என்னும் அடிப்படையான உண்மையை

உணர்ந்தோமேயானால் வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியும். அன்று தோன்றிய முரண்பட்ட கொள்கைகளும் அத்தகைய கொள்கைகளுக்கிடையே உருவான சண்டைகளும் எத்தகையதொரு சூழ்நிலையில் ஏற்பட்டன என்ற கேள்விக்கு விடைகாண வேண்டுமானால் இன்றைக்கும் நம் மக்களிடையே நடந்துவரும் கொள்கைப் போராட்டம் எச்சூழ்நிலையில் தோன்றுகிறது என்பதை ஆராய்ந்தாலே போதும். அத்தகைய ஆராய்ச்சியே நாம் மேலே கிளப்பியுள்ள கேள்விக்கு விடை அளிக்கும்.

கொள்கை மோதல் என்பது மக்களின் வாழ்க்கையின் குறிக்கோள்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளின் பிரதிபலிப்பே என்னும் அடிப்படையான உண்மையை உணர்ந்தால் நாம் வரலாற்றைச் சரியாகவும் முறையாகவும் சித்தரித்துக் காட்ட இயலும்.

கருத்துக்கள் வானத்திலிருந்து குதிப்பவைகளுமல்ல, சூன்யத்திலிருந்து உதிப்பவையுமல்ல இவை மக்களின் வாழ்க்கையின் காரணமாகவே தோன்றுகின்றன. ஒரு சில கருத்துக்கள் மக்கள் முன்னேற உதவும் மற்றும் மக்களை முன்னேற விடாமல் தடுத்துப் பின்தள்ளும் இத்தகைய பிற்போக்குக் கருத்துக்களைத் தெளிவாக எதிர்த்துப் போராடி வெல்வதன் வாயிலாகவே சரியான உண்மையையும், வழியையும் காண இயலும். அவ்வழிச் செல்லவும் முடியும்.

இக்காரணமாகவே கொள்கைப்போராட்டம் மானிட வளர்ச்சிக்கு இன்றியமையாத உயிர். கருத்துப் போராட்டம் என்று நின்று விடுகின்றதோ அன்று மக்களின் வளர்ச்சியும் நின்றுதான்தீரும் என்பதில் எள்ளளவும் ஐயமேயில்லை.

2. உழைக்கும் மக்கள் – அவர்கள் நிலையும் இலட்சியமும்

'சாதி இரண்டொழிய வேறில்லை'

– ஔவை

'அனைத்தும் அவன் செயலே'

– ஒரு பழங்காலக் கருத்து

உழைத்து வாழும் அனைவருமே உழைக்கும் மக்கள். இவர்களிடம் காணப்படும் ஒரே 'சொத்து' உழைக்கும் சக்தி. இதைத்தவிர வேறொன்றும் இவர்களிடம் இருப்பதாகச் சொல்ல இயலாது. இச் சக்தியை விற்றே இவர்கள் வாழ்கின்றார்கள். இவ்வகையில் தங்கள் உழைக்கும் சக்தியை விற்றுப்பிழைக்கும் உழைக்கும் மக்கள் ஒரு வகை.

தச்சன், கருமான், கொல்லன், ஆசாரி, தையல்காரன் போன்றவர்களும் உழைக்கும் மக்களா? ஆம். இருப்பினும் இவர்களிடம் உழைக்கும் சக்தி மட்டுமா காணப்படுகின்றது? அவ்வாறு கூறுவது சரியல்ல. இவர்களிடம் உழைக்க உதவும் கருவிகளும் காணப்படுகின்றன. அவரவர் தொழிலுக்குத்தக்க கருவிகளை இவர்கள் வைத்திருப்பார்கள். இவர்களைக் கைத்தொழில் செய்யும், உழைக்கும் மக்கள் என்று இனம் பிரித்துக் கூறுவதே சரியாகும்.

நகர்ப்புறங்களில் ஆயிரக்கணக்கில் ஆலைகளிலும் பாக்டரிகளிலும் வேலை செய்யும் உழைக்கும் மக்களின் நிலையைச்சற்று கவனிப்போம். இவர்களிடம் எவ்வகையான ஆயுதங்களும் காணப்படுவதில்லை. இவர்கள் ஆலையில் குவித்து வைக்கப்பட்டுள்ள இயந்திரங்களையும் கருவிகளையுமே உபயோகிக்கின்றனர். இவர்கள் தங்களுக்கெனப் பிரத்தியேகமான கருவிகளை வைத்திருப்பவர்களல்ல. இவர்களிடம் உழைக்கும் திறன் மட்டுமே காணப்படுகின்றது.

கைத்தொழில் செய்பவர்களிடம் கருவிகள் உள்ளன. நகர்ப்புறத்திலுள்ள பெரிய ஆலைகளில் வேலை செய்யும் கூலிக்காரர்களிடம் இத்தகைய கருவிகள் இல்லை. அவரிடம் காணப்படும் ஒரே ஒரு சொத்து அவருடைய உழைக்கும் சக்தியே. இதை வேறு வகையில் விளக்குவது பல பிரச்னைகளில் தெளிவை உண்டாக்கும். கைத்தொழில் செய்பவரிடம் உழைக்கும் சக்தியும் கருவிகளும் இணைந்தே இருக்கின்றன. ஆனால் நகர்ப்புறத்துக் கூலிக்காரரிடம் உழைக்கும் சக்தியும் உற்பத்திக் கருவிகளும் பிரிக்கப்பட்ட நிலையை எய்திவிட்டன. ஆலைகள் ஏற்படும் நிலையில் இத்தகைய பிரிவினை ஏற்படாமல் ஆலைகளும் ஏற்பட முடியாது. இவ்வாறு ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்கள், நகரங்களில் உருவாகிவரும் ஆலைகளில் வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது மனித வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம்.

வக்கீல்கள், வைத்தியர்கள், என்ஜினியர்கள், குமாஸ்தாக்கள், ஆசிரியர்கள் போன்றவர்களும் உழைக்கும் மக்களா? ஆம். இவர்களும் தங்களுடைய உழைக்கும் சக்தியை விற்றே இன்று பிழைக்கின்றனர். இருப்பினும் இவர்களுள் பலர் நேரிடையாக எவ்வகையான பொருள் உற்பத்தியிலும் ஈடுபடுபவர்கள் என்று சொல்ல முடியாது. இருப்பினும் உற்பத்தி சரியாக நடைபெற இவர்கள் அவசியமானவர்களே. தவிர, இவர்களும் சிறு கைத்தொழில் செய்பவர்கள் போல் தனித்தனியாக வேலை செய்கின்றனர். ஆனால் இன்று அலுவலக ஊழியர்கள் நிலை அவ்வாறு இல்லை இவர்களும் ஆலைத் தொழிலாளர்கள் போல் எளிதில் தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உணர்வையும், வாய்ப்பையும் அடைகின்றனர். மாறாக, கைத்தொழில் செய்யும் உழைக்கும் மக்கள் அவ்வளவு எளிதில் சங்கங்களை உருவாக்கிக் கொள்வதுமில்லை; அவைகளைத் திறமையாக நடத்துவதும் இல்லை என்னும் உண்மையை நாம் காணத்தவறக்கூடாது. உற்பத்திச்சாதனங்களை இழக்காமலிருப்பதும் தனித்தனியே தங்கள் வேலையைச்

செய்வதுமே, திறமையான சங்கங்கள் உருவாகாததற்கான தடைகள். உற்பத்திச்சாதனங்களை இழந்து கூட்டம் கூட்டமாக ஒரே இடத்தில் கூடி வேலை செய்பவர்களே எளிதாகச் சங்கங்களை அமைத்துக் கொள்ள முடிகின்றது. உழைக்கும் சக்தியும் உற்பத்திச் சாதனமும் எந்த அளவுக்குப் பிரிகின்றனவோ அந்த அளவு உழைப்பாளரின் சங்கங்கள் உருவாகும் வாய்ப்பு அதிகரிக்கும்.

உழைப்பாளரையே, உடைமை அற்றமக்கள் உடைமை அற்ற வர்க்கம் என்று அழைக்கின்றோம். 'உடைமை அற்ற' என்ற சொல்லின் குறிப்பிடத்தக்க பொருளென்ன? உற்பத்திச் சாதனங்களையே மார்க்ஸ் பொதுவாக உடைமை என அழைக்கின்றார். இத்தைய உடைமையை அற்ற மக்களின் கூட்டத்தையே உடைமை அற்ற வர்க்கம் அல்லது இனம் என அழைக்கலாம். இவ்வாறே உற்பத்திச் சாதனங்களைக் குவித்து வைத்திருப்போரை உடைமை பெற்ற வர்க்கம் அல்லது உடைமை பெற்ற இனம் எனவும் அழைக்கின்றோம்.

உடைமை அற்ற இனம் தன்னிடமுள்ள உழைக்கும் சக்தியை விற்றுப் பிழைக்கின்றது. இவ்வாறு விற்பதால் கிடைக்கக்கூடிய பொருளையே கூலி என அழைக்கின்றோம். உடைமை பெற்ற இனம், இவர்களுடைய உழைப்பைக் கூலி கொடுத்து வாங்குகின்றது. இன்று வேகமாக வளர்ந்து வரும் முதலாளியச் சமுதாயத்தில் கூலி கொடுப்பவரும் கூலி வாங்குபவருமே வெகுவாகக் காணப்படுகின்றனர். இத்தகையதொரு சமுதாயத்தை, கூலியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் என அழைக்கின்றோம். தவிர, இங்கு கூலி வாங்கும் உடைமை அற்ற இனம் அடிமையாகி உள்ளது. கூலி கொடுக்கும் உடைமை பெற்ற இனம் சமுதாயத்தின் எஜமானர்களாக இருக்கின்றது. இத்தகைய சமுதாயத்தைக் கூலி – அடிமைச் சமுதாயம் எனக் குறிப்பிட்டு அழைக்கின்றோம்.

உடைமை அற்ற பெரிய கூட்டத்திற்கும் உடைமையை அதிக அளவில் பெருக்கி வைத்துள்ள சிறிய

கூட்டத்துக்கும் இடையே சில தரங்களும் காணப்படுகின்றன. ஆயினும் அவைகளும் மேலே குறிப்பிட்ட இரு பண்புகளைப் பெற்றவைகளாகவே இருக்க முடியும். சிறு விவசாயிகளும், குத்தகை விவசாயிகளும் சிறு கைத்தொழில் செய்பவர்களுங்கூடச் சிலரிடம் வேலை செய்யலாம். மற்றும் சிலரைத் தங்களிடம் வேலைக்கு அமர்த்திக்கொள்ளலாம். இவர்கள் ஒருவகையில் உடைமைப் பெற்ற இனத்தவரின் பண்பையும் மற்றுமொரு வகையில் உடைமை அற்றவரின் பண்பையும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தங்கள் உழைப்பைச் சிலரிடம் விற்கின்றனர், வேறு சிலருடைய உழைப்பை விலை கொடுத்தும் வாங்குகின்றனர்.

நாம் வாழும் இன்றையச் சமுதாயத்துள் உழைப்பை விற்பது, உழைப்பை விலை கொடுத்து வாங்குவது என்ற இரண்டு அம்சங்களே பொதுவாகக் காணப்படுகின்றன. இத்தகைய சமுதாயத்துள் அதிவேகமாக உழைப்பு என்பது ஒரு விற்பனைச் சரக்காக ஆகி வருகின்றது. இங்கு உழைப்பை விலைக்கு விற்பவரும், விலை கொடுத்து வாங்குபவருமே காணப்படுகின்றனர். இவர்களே இந்தச் சமுதாயத்துள் காணப்படும் உண்மையான சாதிகள் அல்லது இனங்கள். இத்தகைய சமுதாயத்துள் எல்லாமே விலைப் பொருளாகவும், சந்தைக்கு வரும் சரக்குகளாகவும் ஆகிவிடுகின்றன. இதைச் 'சந்தைச் சமுதாயம்' என்றும் அழைக்கலாம்.

இனி உழைப்பு என்பதைக் குறித்துச் சற்றுப் பார்க்கலாம். இதன் வாயிலாகத் தான் உழைப்பை விற்றுப் பிழைக்கும் உடைமை அற்ற இனம் இச்சமுதாயத்துள் எப்பணியை ஆற்றுகின்றது என்பதை நாம் சரியாக உணர முடியும். உழைப்பு இல்லாமல் எப்பண்டமும் உரு எடுக்காது என்பது உண்மை. உலகில் மனிதனால் செல்வம் எனக் கருதப்படும் அனைத்துமே உழைப்பால் உருவானவைதான். அல்லது உழைப்பால் உருவாக்கப்படக்கூடியவையே. இப்பண்டங்கள் மனிதனின்

வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதன் காரணமாகவே அவன் இப்பண்டங்களுக்கு மதிப்பைக் கொடுக்கின்றான். இத்தகைய பண்டங்களை உருவாக்கும் பொருட்டுத்தான், உடைமை பெற்ற வர்க்கம் உழைப்பை உடைமை அற்ற வர்க்கத்திடமிருந்து கூலி கொடுத்து வாங்குகின்றது. உழைக்கும் இனம் ஏன் பண்டங்களைத் தானே உருவாக்காமல் மற்றவனுக்கு தன் உழைப்பைக் கூலிக்கு விற்க வேண்டும்? 'வெறும் கை முழம் போடாது' என்பது இங்கும் நிலைமை. பண்டங்களைப் படைக்க உற்பத்திக் கருவிகளும் கச்சாப்பொருள்களும் அவசியம். உதாரணமாக ஒரு வண்டிச்சக்கரத்தைச் செய்ய வேண்டுமானால் மரம், பட்டா போன்ற பொருட்கள் தவிர, உளி, சுத்தி போன்ற கருவிகளும் தேவை. இவை இல்லாமல் தங்களுடைய உழைக்கும் சக்தியை மட்டுமே உபயோகித்து வண்டிச் சக்கரம் செய்ய இயலாது. இக்காரணமாகவே இத்தகைய கச்சாப்பொருட்களையும், உற்பத்திச் சாதனங்களையும் தங்களுடைய உடைமை என ஆக்கிக் கொண்டுள்ள உடைமை பெற்ற இனத்துக்கு உடைமை அற்ற இனம் தனது உழைப்பை விற்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

உற்பத்திச் சாதனங்களும் உழைப்பால் தோன்றியவை என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் இந்தச் சாதாரண உண்மையைச் சரியாகப் பலர் உணராததன் விளைவாகவே தங்களையும் பிறரையும் குழப்புவார்கள். உதாரணமாக 'உழைப்பு இருந்தால் மட்டும் போதுமா? மூலதனம் வேண்டாமா?' என்று பலர் கேட்கின்றனர். உழைப்பால் உருவான ஒரு சுத்தியும் உளியும் அல்லவா பல உளிகளும் சுத்திகளும் உருவாகக் காரணமாகின்றன. இதிலிருந்து நாம் கண்டறிய வேண்டிய அடிப்படையான உண்மை என்ன? உழைப்பு வளர்ச்சி பெறவும் பண்டங்கள் பெருகவும் உழைப்பே அடிப்படையான காரணம். மூலதனம் எனப்படுவதும் இறுதியில் உழைப்பின் விளைவே என்பதையும் காணத் தவறக்கூடாது. அப்படியானால் உழைக்கும் மக்களிடம் காணப்படும்

சிறப்பான அம்சம் என்ன? படைக்கும் சக்தியே இவர்களிடம் காணப்படும் அம்சம். மனிதனால் உருவாகும் செல்வம் அனைத்துக்கும் ஆதாரமான படைக்கும் திறனல்லவா இவர்களிடம் காணப்படுகின்றது!

'ஆண்டவன் படைப்பவன்' என்பதாகக் கூறக்கேட்கின்றோம். ஆண்டவனுக்கும் படைக்கும் செயலுக்கும் நெருக்கமான உறவு இருப்பதாகத்தான் இதிலிருந்து நாம் அறியவேண்டும். அத்தகையதொரு ஆண்டவன் இருக்கின்றானா? ஆம். இந்தச் சமுதாயத்துள் ஆண்டவன் அடிமையாகக் கிடக்கின்றான். உறிஞ்சிப்பிழைக்கும் உண்ணிகள் ஆண்டவனாகக் காட்சியளிக்கின்றன. இந்த உண்மையைப் படைப்பிற்குக் காரணமாகிய உழைக்கும் மகன் அறிவது என்பது அவனுடைய தன் அறிவின் முதல் அம்சமாகிய 'நான் யார்' என்ற கேள்விக்கு விடை அறிந்ததாகப் பொருள். தவிர, தனது செயலால் ஆண்டவனாக இருக்கத் தகுதி பெற்ற இப்பாட்டாளி மகன், இச்சமுதாயத்துள் மண்டியிடும் அடிமையாகக் கிடக்கின்றான். இதுவே இவன் வாழவேண்டிய நிலைக்கும் அவன் வாழும் நிலைக்கும் இடையே காணப்படும் முரண்பாடு; அதாவது அவன் செயலுக்கும் அவன் நிலைக்கும் இடையே காணப்படும் முரண்பாடு. இத்தகைய நிலை உண்மையானால் இப்பாட்டாளியின் ஒரே இலட்சியம் எதுவாக இருக்க முடியும், அல்லது இருக்கவேண்டும்? இம்முரண்பாட்டை நீக்குவதல்லவோ இவனுடைய ஒரே குறிக்கோள். இவனுடைய பணிக்கேற்ப இவனுடைய சமுதாயத்தகுதி இருக்க வேண்டும் என்று கூறுவதே இம்முரண்பாட்டைச் சரியான முறையில் நீக்குவதன் பொருள். படைப்பவர்கள் சமுதாயத்தின் ஆண்டவர்களாக ஆகவேண்டும். இதுவே உழைக்கும் மக்களின் உன்னதமான இலட்சியம். இந்நிலையை அடையப்பாடுபடுவதே அவர்களின் கடமை. இத்தகைய இலட்சியத்தை அடைவதே அவர்களின் வாழ்க்கையின் உய்வு, விடுதலை. அதுவே அவர்கள் வாழ்வின் பேரின்பம்.

3. இடையூறுகள்

'மாயை உண்மையை மறைக்கும் திரை'

வேதாந்தக் கருத்து

'பொருளுக்கு இரையானவன் உண்மைப் பொருளைக் காண மாட்டான்'

வேதாந்தக் கருத்து

'பாசம் நீங்கில் பசு பதியாகும்'

சைவ சித்தாந்தம்

குறிக்கோளை மட்டும் அறிந்தால் அதை அடைந்ததாகக் கூறிவிட முடியாது. நினைத்தவுடன் அது நடக்க விக்ரமாதித்தன் கதையும் அல்ல, அரபுக் கதைகளுமல்ல. மந்திரத்தில் மாங்காய் விழாது. இவை போன்றவை திரைப்படத்தில் காட்டப்படலாம், கனவில் தோன்றலாம். ஆனால் மெய்யான இவ்வுலகில் சிந்தித்துச் செயல்பட்டாலன்றி எக்குறிக்கோளையும் அடைய இயலாது.

நூற்றைம்பது ஆண்டுகளாக நம் மக்கள் வெள்ளையர் ஏகாதிபத்தியக் கொடுங்கோலாட்சியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டனர். அத்தகையதொரு இலட்சியம் நியாயமானது தானா? முழுமையான வளர்ச்சிக்கு முதல் இடையூறாக வெள்ளையரின் ஏகாதிபத்தியம் இருந்து வந்தது. இக்காரணத்தாலேயே அன்றிருந்த நிலையில் வெள்ளையர் ஏகாதிபத்திய ஆட்சியை இங்கிருந்து நீக்குவதே நம் மக்களின் இலட்சியமாகவும், வாழ்வில் ஆனந்தமாகவும், வாழ்வின் பயனாகவும் தோன்றியது. அவ்வாறு தோன்றியது சற்றும் தவறல்ல. அதுவே அன்றைய நிலையில் நமது மக்களின் தன்னறிவின் முதல் அம்சமாக இருந்தது. அந்த இலட்சியத்தை நமது மக்கள் நினைத்தவுடன் அடைந்து விட்டனரா? அதை அடைய நடத்திய போராட்டங்கள் எவ்வளவு! சீரழிந்த குடும்பங்கள் எத்தனை! சுருங்கச் சொன்னால் சீரிய சிந்தனையின் வழியில் கடுமையாக

உழைத்ததன் விளைவாகவே அத்தகைய குறிக்கோளை ஓரளவாகிலும் நம் மக்கள் அடைய முடிந்தது.

அவ்வாறே உழைக்கும் மக்களும் தங்கள் இலட்சியத்தை அடைய முடியாமல் தம்மைத் தடுத்து வரும் சக்திகள் எவை என்பதையும் அவற்றை எவ்வாறு போராடி, அகற்றி, வெற்றி கொள்ள வேண்டும் என்பதையும் கண்டிப்பாக உணர்ந்தே தீர வேண்டும்.

தான் ஒரு அடிமை என்று அறியாதவனுக்கும் அத்தகைய அடிமை வாழ்விலேயே இன்பம் காண்பவனுக்கும் விடுதலையே இல்லை. தனக்கும் தெரியாது, சொன்னாலும் புரியாது என்பவனுக்கு விடிவு காலமே இல்லை.

அடிமை வாழ்வைத் துச்சமாகக் கருதி மனமார வெறுப்பவனே சுதந்திர இயக்கத்தை விரும்புவான். அவனே வழி தேட ஆரம்பிப்பான். உழைக்கும் மக்களும் தங்களுடைய கேவலமான அடிமை வாழ்வை மனமார வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தங்களுடைய அடிமை வாழ்வின் காரணத்தை அறிந்து அதை அகற்ற உறுதியுடன் ஒன்றுபட்டே தீரவேண்டும்.

எத்தகைய அடிமை நிலைக்கும் காரணங்கள் இருவகைப்படும். ஒரு வகைக் காரணங்களைக் கண்ணால் காணமுடியும்; உடலால் அனுபவிக்க முடியும். மற்றதைக் கண்ணால் காணஇயலாது, அறியவே முடியும். இத்தகைய இரு வகைக் காரணங்களையும் 'புறக் காரணங்கள்' என்றும் 'அகக் காரணங்கள்' என்றும் பிரித்துக் கூறலாம். இவைகளையே 'கரத்தால் விளையும் காரணங்கள்' என்றும் 'கருத்தால் விளையும் காரணங்கள்' என்றும் முறையே அழைக்கலாம்.

இதை விளக்க ஒரு உதாரணம். பாம்பை இரு வகைகளில் பிடாரன் தன் வயப்படுத்துகின்றான், அதாவது தனது அடிமையாக ஆக்கிக் கொள்கின்றான். மகுடியின்

வாயிலாக அதைக் கட்டுகின்றான். அவ்வப்பொழுது அதன் நச்சுப் பல்லையும் பிடுங்கி விடுகின்றான். மகுடியின் மூலம் தன்வயப்படுத்துவதைக் கருத்தால் பணிய வைக்கும் முறைக்கு ஒப்பிடலாம். நச்சுப்பல்லை அகற்றிப் பாம்பைச் சக்தியற்றதாகச் செய்வதைக் கரத்தால் பணியவைப்பதற்கு ஒப்பிடலாம். இதுவே எல்லாவகையான அதிகாரத்தின் அந்தரங்கம். 'சொல்லி இயலாததைத் தட்டி முடி' என்பதே ஆட்சியின் இரகசியம்.

கருத்தால் பணிய வைக்கும் முறையைப் 'பாடம்போடும்' முறை என்றும் அழைக்கலாம். மந்திரத்தால் புலியைக் கட்டி விடலாமென்று சிலர் கூறுவர். இது பொய்யாக இருக்கலாம். ஆனால் 'மந்திரத்தால்' மக்களைக் கட்டிவிடலாம். கருத்தை உணரக்கூடிய அல்லது அறியக்கூடிய எவனும் அத்தகைய கருத்தால் பாதிக்கப்பட்டே தீருவான். அக்கருத்து அதை அறிபவனை ஒரு வகையான செயலில் தூண்டலாம். மற்றொரு வகையான செயலில் செல்லாமல் தடுக்கலாம். அக்காரணத்தாலேயே கருத்துக்களை வெளியிடக்கூடிய, அவற்றைப்புரிந்து கொள்ளக்கூடிய மக்களையே, கருத்தால் கட்டுப்படுத்த இயலும். மக்களுக்குப் புரியாத கருத்துக்களால் அம்மக்களை கட்டுப்படுத்தவும் முடியாது. தட்டி எழுப்பவும் இயங்க வைக்கவும் இயலாது. தவிர மக்கள் கருத்துக்களை உணரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கும் ஒரு காரணத்தால்தான் இம் மக்கள் மூட நம்பிக்கைகளைக் கடந்து சிறந்த அறிவையும் அடையும் வாய்ப்புப் பெற்றுள்ளனர். விலங்குகள் மூட நம்பிக்கை கொண்டவையுமல்ல. அவை மனிதனைப் போன்று சிறந்த அறிவைப் பெறும் வாய்ப்பைப் பெற்றவையுமல்ல. விலங்குகளும் குழந்தைகளும் ஒரே நிலையில் உள்ளன. கருத்துக்கள் நம் சிந்தனையை மட்டுமா கட்டுப்படுத்துகின்றன? நமது வாய், கை, கால் அனைத்தையுமல்லவா கட்டுப்படுத்துகின்றன! அனுபவமே இவ்வுண்மையை நமக்குத் தெளிவாக்கும் நம் பகைவர் கூறும் கருத்துக்களை நாம்

நம்பும் வரையில், அவற்றை உண்மை என ஒப்புக் கொண்டு செயல்படும் வரையில், அத்தகைய பகைவரின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபடவே முடியாது. நமது விடுதலையைச் சிந்தித்துப் பார்க்கக்கூட முடியாது. இத்தகைய கருத்துகள் நம்மை முறையாகச் சிந்திக்கவும் விடா, செயல்படவும் விடமாட்டா. இத்தகைய கருத்துகளே நம்மை மடையர்களாகவும் நிரந்தரமான அடிமைகளாகவும் ஆக்கும் மந்திரம்.

இனிக் 'கரத்தால் கட்டும்' முறையைச் சற்றுப் பார்க்கலாம். உடைமை பெற்ற வர்க்கம் கூறும் கொள்கைகளையும் கருத்தையும் இதோ பதேசங்களையும் சட்ட திட்டங்களையும் எங்கெல்லாம் உடைமையற்ற வர்க்கம் உதறித் தள்ளி எறிந்து தனது விடுதலையைப் பெற உறுதிபூண்டு செயல்படத் தொடங்குகின்றதோ, அங்கெல்லாம் நாம் காண்பதென்ன? உடைமை பெற்ற வர்க்கம் தனது கூலிப் பட்டாளத்தைக் கொண்டு உணர்வு பெற்ற 'அடிமைகளை' அடக்குவதை நாம் காண்கின்றோம். போலீசும் பட்டாளமும் எவ்வாறு எப்பொழுதெல்லாம் உடைமை பெற்ற வர்க்கத்தால் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காணும் பொழுது கரத்தால் கட்டுவது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கருத்தால் ஆகாதபோது கரத்தால் அடக்க முற்படுவதே ஆட்சியின் ஒரே அடிப்படை.

இவை இரண்டில் மிக வன்மை பெற்ற ஆயுதம் எது? எது நம்மை நம்பிக்கையற்ற கோழைகளாகவும் நடைப் பிணங்களாகவும் ஆக்க வல்லதோ அதுவே மிகவும் பலம் வாய்ந்த ஆயுதம். இக்கருத்து உண்மையெனில், கருத்துகளே மிகப்பலம் வாய்ந்த ஆயுதங்கள். இவைகளே மனிதனைச் செயலற்றவனாக ஆக்கக்கூடிய குறிப்பான ஆயுதங்கள். இவ்வடிப்படையை உணர்ந்தே தோழர் மாவோ? கருத்துகள் ஆயிரம் அணுகுண்டுகளையும் விடப்பலமானவை என்றும் 'அணு ஆயுதம் ஒரு காகிதப் புலி' என்றும் கூறுகின்றார்.

தன்னறிவு பெறாத மக்களை வெகு எளிதில் அவர்களின் முழுமையான நலனுக்கு விரோதமாகவும் ஆள இயலும். ஆனால் தன்னறிவு பெற்ற மக்களை அணுகுண்டுகளைக் கொண்டும் ஆள முடியாது என்ற உண்மையை வியட்நாம் மக்களின் வீரம் மிக்க போராட்டமே நமக்குத் தெளிவாக்கவில்லையா!

மக்களின் பகைவர் கூறுவது போதனையல்ல. மாறாக அது 'போதை'. அத்தகைய போதையிலிருந்து தெளிவாகவும் உறுதியாகவும் விடுபடாமல் உழைக்கும் மக்கள் தங்கள் அடிமைத் தளைகளை உதறித் தள்ளி தங்களுடைய உண்மையான விடுதலையை அடையும் மன உறுதியைப் பெறவே இயலாது. இத்தகைய அடிப்படையிலிருந்து தான் 'ஆதிக்கம் செலுத்தும் எண்ணங்கள், ஆள்பவரின் எண்ணங்கள்' என்று விடுதலைக் காவியத்தின் ஆசானாகிய கார்ல் மார்க்ஸ் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். இதன் பொருளென்ன? நம்மை ஆண்டுவரும் எண்ணங்கள் நம்மை ஆள்வோர்களுக்குச் சாதகமானதும் அவர்களின் நலனை முழுமையாகப் பாதுகாக்கக்கூடியதுமானவை. இத்தகைய எண்ணங்களை உண்மையா மெய்யா என்று ஐயப்படக்கூடப் பல சமயங்களில் நமக்கு உள்ளத்துணிவு வருவதில்லை. அந்த அளவுக்கு இத்தகைய எண்ணங்கள் நமது சிந்தனையைக் கவ்விப்பிடித்துக் கொண்டுள்ளன. இதனாலேயே இவற்றை ஆளும் எண்ணங்களென மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். அத்தகைய எண்ணங்களில் சிலவற்றைக் காணலாம்.

உழைத்து ஓடாகிக் கிடக்கும் மக்களின் துன்பங்களுக்கும் அவர்களின் கேவலமான நிலைக்கும் இவை என்ன காரணம் கூறுகின்றன அவர்களின் துயரம் தீர என்ன வழி காட்டுகின்றன என்றும், இத்தகைய எண்ணங்கள் கூறும் விளக்கங்களையும் அவைகள் காட்டும் வழியையும் உழைக்கும் மக்கள் ஒப்புக்கொண்டு செயல்பட்டால் என்ன நேரிடும் என்பதையும் சற்றுக் காணமுற்படலாம்.

இத்தகைய கருத்துக்களைச் சுலபமாக நினைவுபடுத்திக் கொள்ள அவைகளைச் சில வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். அவைகளில் சில: 1. சமுதாய இயலை ஒட்டியவை 2. வரலாற்றை ஒட்டியவை 3. விஞ்ஞானத்தை ஒட்டியவை 4. அரசியலை ஒட்டியவை. சமுதாய இயலை ஒட்டிய கருத்துகள் என்பதனுள் சோதிடம், ரேகை பார்த்தல், சமயம் போன்றவை அடங்கும். மக்களின் வரலாறு, சாதி, இனம் மொழி போன்றவைகள் வரலாற்றை ஒட்டிய கருத்துகளில் அடங்கும். பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் வேலை இல்லாத் திண்டாட்டம் சமுதாயத்துள் விளையும் குற்றங்கள் போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்களும், அவற்றை நீக்கக் கையாளவேண்டிய முறைகள் எனக் குறிப்பிடப்படுபவையும் விஞ்ஞானக் கருத்துக்களிலடங்கும். இனி இக்கருத்துக்களில் சிலவற்றைக் காணலாம்.

நாம் வாழும் சமுதாயத்துள் உழைக்கும் மக்கள் பல வகைகளிலும் இன்னல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் படாத வேதனை எங்குமிருக்காது. வியாதிகளின் வகைகள் என்னவெனக் காண வேண்டுமா? இவர்களிடம் தான் காண முடியும். பஞ்சத்தின் உருவங்களா? இங்குதான் பார்க்க முடியும். பசிக்கொடுமையா? இங்குதான். உடலில் அரைமுழம் துணி கூட இல்லாததையும், நாய்களுடன் நடுத்தெருவிலும் சாக்கடையிலும் எச்சிலுக்காகச் சண்டையிடுவதும் இங்குதான் பார்க்கமுடியும். மனிதனுக்கும் விலங்குக்கும் வேறுபாடில்லை என்றும் மனிதனும் ஒரு விலங்கே என்றும் கூறவோ நிரூபிக்கவோ இவர்களில் சிலரின் ஒரு நாளைய வாழ்க்கையைக் கவனித்தாலேபோதும். வேறு ஆதாரமே தேவையில்லை. இவ்வளவையும் சகித்துக் கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கத்தின் இத்தகைய அவல நிலைக்கு நமது சோதிடர்கள் என்ன காரணம் கூறுகின்றனர், மற்றும் என்ன வழி காட்டுகின்றனர் எனக் காணலாம்.

'அவனவன் விதி, அவனவன் பிறந்த வேளை, விதி யாரை ஐயா விட்டது, அரசனானாலும் சரி ஆண்டியானாலும்

சரி, அவனவனுடைய கர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும், அவ்வளவே! யாரையும் குறைகூறிப் பயனில்லை. எதற்கும் ஒரு தாயத்தைச் செய்து கொடுக்கிறேன். கொஞ்சம் செலவாகும். சுமார் முன்னூறு ரூபாய்தான் செலவாகும்' இது ஒரு சோதிடர்வாக்கு.

மாரியம்மன் கோவில் பூசாரி என்ன கூறுகின்றான்? 'மாரியாத்தாளுக்குக் கோபம் வந்துவிட்டது. அதனால்தான் மழைமாரி பெய்யவில்லை, பஞ்சம் வந்துவிட்டது. அம்மனது கோபத்தைத் தணிக்க கொண்டம் குதிக்க வேணும் – கடா வெட்ட வேணும்'.

பார்ப்பனப் பூசாரியோ ஜபம் செய்யவேண்டும், அபிடே கம் செய்ய வேண்டும், அர்ச்சனை பண்ண வேண்டும் எனக்கூறுவான். அதில் லட்சார்ச்சனை வேறு, சகஸ்ரார்ச்சனை வேறு. காசுக்குத் தக்கவாறு அர்ச்சனை. மாரியம்மன் கோயில் பூசாரி முன்னூறு ரூபாயில் காரியம் முடியும் என்றால் பார்ப்பனப் பூசாரியோ மூவாயிரம் வேண்டுமென்பான். அப்பொழுதுதான் வருணபகவானின் கிருபை கிடைக்கு மென்பான்.

இனிக் கடவுளின் காவலர்களென அழைக்கப்படும் எல்லாமறிந்த ஆண்டிப் பண்டாரங்கள் கூறுவதென்ன என்று காணலாம். 'இதனைத்தும் மாயையப்பனே. இக் கஷ்டங்களையெல்லாம் கண்டு கலங்காதே, நீ காண்பதெல்லாம் நிஜமல்ல. இந்தக் கட்டையைக் காக்க கண்ணீர் விடாதே. இது அழிகின்றதே என அஞ்சாதே ஆத்திரப்படாதே. அனைத்தும் ஊழ்வினை. புலன்கள் கருதுவதனைத்தும் பொய், என் அப்பன் ஆலவாயனின் சரணாவிந்தத்தில் ஐயா நீயே சரணமென்று விழு. உன் வாழ்வின் உய்வுக்கு அது ஒன்றே வழி. இந்தா, இத்திருநீற்றைப் பூசிக்கொள். 'ஓம் சிவ சிவ' இதுவே ஆதீனத்தில் அமர்ந்திருக்கும் பண்டாரச் சன்னதிகள் கூறும் மோட்சப் பாதை.

அங்கிருந்து சென்று காமகோடி பீடத்தில் அமர்ந்துள்ள ஆதிசங்கரின் இன்றைய அவதாரம் என்று பெயர் சூட்டிக்

கொண்டுள்ளவரைக் காண்போம். அவர்பேசும் மொழி அவ்வளவு எளிதாக நமக்குப் புரியாது. அது வடமொழியும் தமிழும் கலந்த தேவாசுர மொழியாக இருக்கும். இருப்பினும் அதன் சுருக்கத்தைக் கூறலாம். 'தத்-துவம்-அஸி' என்பதின் தாத்பர்யம் (உண்மைப் பொருள்) அறிவது மட்டும் போதாது. அறிந்தவன் அறிந்தவனல்ல. ஆத்மா நித்யம். ஜீவாத்மாவுக்கும் பரமாத்வுக்கும் வேறுபாடு கிடையாது. இதுவேறு அதுவேறு என்று நாம் நினைப்பதெல்லாம் நம்முடைய அஞ்ஞானத்தினாலேயே. அதுவே மாயை. நம்முடைய அகங்காரமே காரணம். நாம் காண்பவையெல்லாம் அநித்தியமானவை. 'பிரம்ம சத்தியம் சகன் மித்யா' என்பது ஆசார்யாளுடைய வாக்கு. (பிரும்மமே உண்மை, இந்த உலகு ஒரு கனவு) இதுவே வேத வாக்கும். பிரும்மாவே ஒவ்வொரு பிரகிருதியின் லட்சியமாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான மோட்சம், என்று கூறி ஜபத்தில் ஆழ்ந்து விடுவார்.

இனி வரலாற்றுப் புரட்டல்களைச் சற்று கவனிப்போம். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பேராசிரியர்களென அழைக்கப்படுபவர்கள் அறிந்தும் அறியாமலும் கூறும் புரட்டல்களைத் தான் நாம் இங்கு குறிப்பிடுகின்றோம். வெள்ளையர்க்கே மூளை அதிகம். அவர்களுக்கே விஞ்ஞானம் கணிதம் போன்ற அறிவு சாத்தியம். கறுப்பர்களுக்கு விஞ்ஞான அறிவு கிடையாது. இத்தகைய கறுப்பர்கள் வெள்ளையர்களுக்கு அடிமைகளாக ஊழியம் செய்யவே தகுதி வாய்ந்தவர் எனச்சில வெள்ளையர் நாட்டுக் கல்லூரிகளில் இன்றும் போதிக்கின்றனர். வடவர் நம்ம வருமல்ல, நல்லவருமல்ல' என்று கூறியவர் எவ்வளவு பேர்? மேல்சாதி, கீழ்சாதி என்று பேசுபவர்களும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே புத்தியுண்டு, மற்றவர்களுக்குப் புத்தி மட்டம் என்று கூறுபவர்கள் இல்லையா? பொருளாதார மேதைகளாக விளம்பரம் செய்யப்படும் கல்லூரிப் பேராசிரியர்கள், 'ஏன் சிலரிடம் பணமும் செல்வமும்

குவிந்துள்ளன, மாறாக பலர் ஏழ்மையில் தவிக்கின்றனர்' என்ற கேள்விக்குக் கூறும் விளக்கத்தைக் காணலாம். 'சிலர் மிகவும் திறமைசாலிகள், கெட்டிக்காரர்கள். அவர்கள் தங்களின் சலியா உழைப்பாலும், விவேகத்தாலும் பணம் சேர்த்து அதை மூலதனமாக்கி அதன் வழிச் செல்வந்தர்களாக இருக்கின்றார்கள்'.

அடுத்துப் பஞ்சம் ஏன் வந்துள்ளது, வேலை இல்லாத் திண்டாட்டம் ஏன் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்று கேட்டால் 'நம் நாட்டில் மக்கள் தொகை அதி வேகமாக அதிகரித்துக் கொண்டே போகின்றது. அதே வேகத்தில் நிலப்பரப்பு அதிகரிக்கின்றதா? இல்லையே! விளைச்சல் என்ன. மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரித்துள்ளதா? இருக்க முடியாதே. அதனால்தான் பஞ்சமும், வேலை இல்லாத் திண்டாட்டமும். இது எல்லா நாடுகளிலும் ஏற்பட்டே தீரும். தவிர, இப்பொழுதெல்லாம் மருத்துவ வசதிகள் அதிகரித்துவிட்டன. எனவே இத்தகையதொரு நிலையைச் சமாளிக்க குடும்பக்கட்டுப்பாடு தான் சிறந்த வழி என்பர். குறைவான மக்கள் தொகை உள்ளதும், உலகிலேயே மிகச் செல்வம் படைத்த நாடாகிய அமெரிக்காவிலேயே வேலையில்லாத் திண்டாட்டமும், தொழிலாளர்கள் சண்டைகளும், வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டு வருவதற்கு இவர்கள் எவ்விதமான விளக்கமும் கொடுக்கவில்லை.

மக்கள் சீனாவில் நம் நாட்டைப்போல் இருமடங்கு மக்கள் இருப்பினும் அங்கு வேலையில்லாத் திண்டாட்டமோ, பஞ்சமோ, பட்டினிச்சாவோ இல்லை என்பதை இதே பேராசிரியர்கள் ஒரு தடவைகூடக் கூறுவது கிடையாது. இது போன்ற புரட்டல்களையே விஞ்ஞானப்புரட்டல் என அழைக்கின்றோம்.

இத்தகைய கருத்துக்கள் எவ்வகையில் உடமை பெற்ற ஆளும் வர்க்கத்துக்குச் சாதகமானவை எனச் சற்று காணலாம்.

மக்கள் கஷ்டங்களை அனுபவித்தே தீரவேண்டும். அவை அனைத்தும் ஆண்டவனின் திருவிளையாடல்

என்கின்றனர், அல்லது அவரவர் செய்த வினைப்பயன் என்கின்றனர். கஷ்டங்கள் என்று கூறுவதெல்லாம் நமது அறியாமையினாலேயே என்கின்றனர் மற்றொரு வகையினர். இவ்வின்னல்கள் அனைத்துமே மக்கள் பெருக்கத்தால் தான் என்கின்றனர். எவராவது உண்மையைக் கூறுகின்றனரா? உடமை பெற்ற வர்க்கம் என்ற ஒன்று சமுதாயத்தில் இருப்பதே மக்களின் இன்னலுக்குக் காரணம் எனக் கூறுகின்றனரா? இல்லையே! தவிர உடமை பெற்ற வர்க்கத்தை அவசியமற்றது என்று கூறி வர்க்கங்களற்ற சமுதாயத்தைச் சமைக்கப் பாடுபட்டுவரும் பாட்டாளி வர்க்க அரசுகளையும் அவ்வர்க்கத்தையும் வசைபாடுவதைத் தொழிலாகக் கொள்கின்றனர்.

உழைக்கும் மக்கள் இவர்கள் கூறுவதையெல்லாம் நம்பினால் அவர்களின் கதி என்ன? கோவிலுக்குச் சென்று கல்லுப்பிள்ளையாருக்குத் தேங்காய்களை உடைத்துக் கொண்டிருக்க வேண்டும். கடவுளுக்குக் காணிக்கை செலுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இல்லையேல் நட்சத்திரங்களின் நடனத்தில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். கைரேகை மாறாதா என்று தவமிருக்க வேண்டும். காளியாத்தாளின் கருணைக்குக் காத்திருக்கவேண்டும். ஜபங்களிலும், யாகங்களிலும், அஷ்டோத்திரங்களிலும், அபிடே கங்களிலும் மனத்தைப் பறிகொடுக்க வேண்டும். அல்லது இன்னல் அனைத்தும் கனவு, மாயை என்று தன்னையே ஏமாற்றிச் கொண்டு ஆனந்த மடங்களில் அபினியின் போதனையில் ஆழ்ந்து விடவேண்டும். அபினி கிடைக்கவில்லையானால் அதற்கொத்த அடயோகத்தை அனுட்டிக்க வேண்டும். இவையனைத்தும் தேவையில்லையானால் பிறக்கும் பிள்ளைகளைக் கர்ப்பத்திலேயே கொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படித் தப்பித் தவறிப் பிறந்து விட்டாலோ பிறந்தவர்களைச் சாகடிக்க முதலாளிகளின் மில்லுக்கும் அவர்களை வாழவைக்கவும் கொழுக்க வைக்கவும் அவர்களின் இலாபத்தைப் பெருக்குவதற்காகப் பிறமக்களின்மீது ஏவப்படும் யுத்தங்களுக்கும் பட்டாளங்களாக அனுப்பிவிட

வேண்டும். அல்லது தங்களுடைய இனவிருத்தி செய்யும் அங்கங்களை அறுத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய பணியைச் செய்வதாலேயே இவர்களனைவரையும் உடமை பெற்ற வர்க்கத்தின் காவலர்களென அழைக்கின்றோம். பைபிள்களையும், குரான்களையும், வேதபுத்தகங்களையும், கீதைகளையும், ஆகமங்களையும், குறள்களையும், அறநூல்களையும், தர்மசாத்திரங்களையும் அருமையாகவும், மணிக்கணக்காகவும், நாட்கணக்கிலும் பிரச்சாரம் செய்து உழைக்கும் மக்களைத் தாங்கள் கூறும் இதோபதேசங்களை நம்பி அதன்படி கிடக்கச் செய்வதே இத்தகைய காவலர்கள் செய்யும் வேலை. உழைக்கும் மக்கள் இக்கலியுக ஆண்டவர்களாகிய உடமை பெற்றவர்களுக்குப் 'பணி செய்து கிடப்பதே மாந்தர் கடமை' என்று உபதேசிக்கின்றனர். இவர்கள் மட்டுமே போதாதென்று போலீசும் பட்டாளமும் வேறு இருக்கின்றன. இவர்களனைவருமே ஆளும் உடமை பெற்ற வர்க்கத்தின் காவலர்கள்.

இத்தகையதொரு பட்டியலில் அரசியல் புரட்டலையும் சேர்க்க வேண்டும். இவர்களில் சிலர் உழைக்கும் மக்களின் உண்மைத் தலைவர்களென்றும், ஏழை பங்காளரென்றும் பெயர் கொண்டு திரிவார்கள். இத்தகையவர்கள் வாயில் சோசலிசம் என்பார்கள். அதற்கும் எத்தனையோ விளக்கங்கள்! நாளைக்கொரு மறுத்தல், சுருங்கச் சொன்னால் இவர்கள் பேசுவது இவர்களுக்கே புரியாது. ஏன் இப்படிப் பலவகையாகப் பேசுகிறீர்கள் என்றாலோ காலத்துக்கும் வளர்ச்சிக்கும் ஒத்தல்லவா போகவேண்டும் என்பார். இந்த சமயோசிதவாதிகள் சோசலிசத்தை எப்படி அடைவது என்று கேட்டாலோ 'அதற்கு ஒரே வழி என்று ஒன்றுமில்லை' என்ற லெனினுடைய வார்த்தைகளுக்குக் குதர்க்கமாக விளக்கம் செய்வார்கள். தவிர உழைக்கும் மக்களே இத்தகைய சமுதாயத்தை உருவாக்க வல்லவர்கள் என்பது வேதவாக்கல்ல என்று

வாதாடுவார்கள். அது எப்பொழுது வரும் என்றால் தமக்குத் தெரியாது என்றும், எப்பொழுது என்று குறிப்பாகச் சொல்ல முடியாது என்றும் கூறி உலகத்தையே முட்டாளாக்குவார். இப்படிக் குட்டையைக் குழப்புவார். போகாத ஊருக்கு தடங்காட்டுவார். போகவேண்டிய ஊருக்குத் தடம் தெரியாது என்பதுமே இவர்களின் பேச்சுகள் இவ்வாறு பேசும் சில அப்பாவிகளான தொழிலாளர்களின் தலைவர்கள், உண்மையிலேயே தொழிலாளர்களின் தலைவர்கள், உண்மையிலேயே தொழிலாளரின் நலனில் அக்கறை உடையவராக இருந்தாலும் இவர்கள் தங்களை அறியாமலேயே தொழிலாளி வர்க்கத்துக்குத் தீங்குகள் இழைத்துள்ளார்கள், மற்றும் உடமைபெற்ற வர்க்கத்துக்கே சாதகமாகப் பாடுபடுகின்றனர். உழைக்கும் வர்க்கம் இவர்கள் கூறும் வழியில் சென்றால் தங்களுடைய குறுகிய நலன்களைக்கூடக் காப்பாற்றிக் கொள்ள இயலாது. இவர்களும் பாட்டாளி வர்க்க அரசு அவசியமில்லை என்பதையே சொல்லாமல் சொல்வார்கள்.

மேலே குறிப்பிட்ட அனைவரும் ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் ஒரே கருத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களனைவரும் உழைக்கும் மக்களின் கருத்தையும் போராட்டத்தையும் திசை திருப்பும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தொழிலாளர்களுக்குகந்த மெய்யறிவைக் கொடுக்கவோ அத்தகைய அறிவை வளர்க்கவோ ஆர்வங்கொண்டவர்களுமல்ல, அக்கறை காட்டுபவர்களுமல்ல. மாறாக உழைக்கும் மக்களைக் குழப்பத்திலும், மடமையிலும் மூழ்கியிருக்கச் செய்வதையே தங்கள் தொழிலாக ஏற்றுக் கொண்டுள்ளனர். உழைக்கும் மக்களின் போராட்டங்களைக் கேவலம் சோற்றுப் போராட்டமாகவே ஆக்க வேண்டுமென்கின்றனர். இவ்வாறு பலவகையிலும் உடமை பெற்ற வர்க்கத்தின் ஆதிக்கத்தை உடமையற்ற வர்க்கம் தகர்த்தெறிந்து தனது விடுதலையை அடையும் வழியை இம்மியளவும் சிந்திக்காமலும்

அவ்வகையில் செயல்படாமலும் இருக்கவே அல்லும் பகலும் இவர்கள் பாடுபடுகின்றனர்.

இத்தகையதொரு திருப்பணியில் ஈடுபட்டுள்ள தாசர்களையும் பக்தர்களையும் உடமை பெற்ற வர்க்கம் போற்றாமலாயிருக்கும்? அவர்களுக்குச் சன்மானமும், பட்டங்களும், விருதுகளும் அளிக்காமலாயிருக்கும்? உடமை பெற்றவர்க்கம் கலியுகத் தேவர்களாவார்களேயானால் இவர்களனைவரும் தேவகணங்கள். தேவர்களின் பாடம் வேதம். அவ்வேதத்தை அப்பட்டமான உண்மையென உழைக்கும் மக்கள் ஒப்புக் கொண்டு அதன்படிச் செயல்படத் தொடங்கினால் அவர்கள்படுவது வேதனையன்றி வேறொன்றுமல்ல. இத்தேவர்களின் ஆதிக்கத்துக்கு இறுதியான முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமானால் முதன் முதலாக உழைக்கும் வர்க்கம் செய்ய வேண்டிய காரியமென்ன? இவர்கள் கூறும் வேதத்தை முற்றிலும் விமர்சனம் செய்து அறவே ஒதுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதை வென்றாலன்றி, மற்றும் அதனுடைய ஆதிக்கத்தினின்றும் விடுபட்டாலன்றி, அந்த உடமைபெற்ற வர்க்கத்தின் உண்மையான ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் மன உறுதியை இப்பாட்டாளி வர்க்கம் பெறாது. இத்தேவர்களும், தேவகணங்களும் சமுதாயத்துள்ளிருந்து அழிவதற்குமுன் அவர்களைக் காப்பாற்றும் அற நூல்களாகிய வேதங்களும் ஆகமங்களும் உழைக்கும் மக்களின் மனதிலிருந்து ஒழிந்துதான் தீரவேண்டும். இவற்றை அகற்றாமல் இவர்களை அகற்றுவது அசாத்தியம். இவர்களும் இவர்களின் வேதங்களும் மறையும் காலத்தில்தான் உழைக்கும் மக்களின் வேதனையும் தீரும். இதை அறிந்த காரணத்தாலேயே 'கடைசி அரசனின் கழுத்தில் கடைசிப் பாதிரியாரின் குடலை எடுத்து சுருக்குப்போடும் காலத்தில்தான் ஏழைகளுக்கு விடுதலை' என்று பிரெஞ்சு தேசத்து மாபெரும் புரட்சிவாதியான திதேரா இருநூற்றாண்டுகளுக்கு முன்பே ஆணித்தரமாகக் கூறினார்.

உடமை பெற்ற வர்க்கம் ஒப்புக்கொள்ளும் தத்துவம், வரலாறு, அறநூல், விஞ்ஞானம் அனைத்துமே அந்த வர்க்கத்தின் நலனையே உள்ளடக்கியிருக்கும். அந்த வர்க்கத்துக்குச் சாதகமான கருத்துக்களைக் கொண்டவைகளாகவே இருக்கும். இதில் உழைக்கும் உடமையற்ற வர்க்கத்துக்கு எள்ளளவும் சந்தேகமேயிருக்க கூடாது. உடமை பெற்ற வர்க்கம் ஆளும் நாடுகளிலெல்லாம் அந்த வர்க்கத்துக்குச் சாதகமான கருத்துக்களையே பல வழிகளிலும், வடிவங்களிலும் போதிக்கின்றனர். பள்ளிகளிலும், பஜனை மண்டபங்களிலும், கோவில்களிலும், கதாகாலட்சேபங்களிலும், பட்டிமன்றங்களிலும், படம்காட்டும் சினிமாக்களிலும், ரேடியோவிலும், நாடகத்திலும் வசனத்தாலும், பாட்டாலும், கூத்தாலும், எழுத்தாலும், பேச்சாலும், இசையாலும் அனைத்துமுள்ள சகல வசதிகளின் வாயிலாகவும் பரப்பி வருவதை உடமை அற்ற வர்க்கம் காணவேண்டும். இவர்களுடைய இக்கருத்துக்களைத் துச்சமாகவும், வி மாகவும் கருத உடமையற்ற வர்க்கம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இனி நாம் காணும் நிலை என்ன? இத்தகைய வி க்கடலில் அல்லவா படிக்க வகையற்ற உழைக்கும் மக்கள் இந்த யமகிங்கரர்களிடம் சிக்கி எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்க வேண்டியிருக்கிறது! இவர்கள் தத்தளிக்காமல் என்ன செய்ய? நிலைமை இப்படி இருந்தால் இத்தகைய உழைக்கும் உடமையற்ற மக்கள் எவ்வாறு வி யங்களைப் புரிந்து கொண்டு மெய் எது, பொய் எது? பால் எது, நீர் எது என்று பிரித்துப் பார்த்துச் செயல்பட இயலும் என்ற ஐயம் பலரின் மனத்தில் ஏற்படலாம். நிலைமை அவ்வாறில்லை.

உழைக்கும் உடமையற்ற மக்கள் சுலபமாக உண்மையைக் காணும் வாய்ப்பைப் பெற்றே இருக்கின்றனர். எப்படி எனக் கேட்கலாம். அவர்களின் வாழ்க்கையின் நிலையும் மற்றும் செயலுமே அவர்களின் அரிய புத்தகங்கள். அவைகள் கூறாத அல்லது கூறமுடியாத உண்மையேயில்லை. அவற்றால் காட்ட இயலாத காட்சியேயில்லை. பலரும் காண

முடியாத மற்றும் உணரமுடியாத உண்மைகளை இம்மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலிருந்தே உணரமுடியும். 'பாடுபடும் ஏழை எளிய மக்களுக்கே உண்மை எனும் தேவதை தோன்றுவாள்' என்னும் பழங்காலக் கருத்து மிக மிக உண்மை. இவர்களின் வாழ்க்கை சொல்லும் வாதங்களையும் காட்டும் வழியையும் இம்மக்கள் ஒப்புக் கொண்டே தீருவார்கள். அத்தகைய பாடங்களே அவர்களின் விடுதலைக்கான வழியாகவும் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இருப்பினும் இம்மக்கள் பிரிந்து பிரிந்து வாழ்கின்றார்களே? இவர்கள் எவ்வாறு என்று ஒன்று சேருவார்கள்? அப்படிச் சேர்ந்தால் அல்லவா அவர்களுக்குச் சக்தி என்று சிலர் சந்தேகத்தைக் கிளப்பலாம். அத்தகைய பயமும் தேவையில்லை. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது நாம் சாதாரணமாகக் கேட்கும் ஊர் மொழி. அதையே திருப்பிக் கூறினால் அதை விடப் பெரியதொரு உண்மையை அதனுள் நாம் காணமுடியும். 'வாழ்வு உண்டென்று புலனானால் ஒன்றுபடுவர் என்பதே நாம் கூறும் புதுமொழி. மகோன்னதமான புதுவாழ்வு, மறுமலர்ச்சி தங்களுக்கு உண்டென உழைக்கும் மக்களுக்குப் புலனாகுமேயானால் அவர்கள் அத்தகையதொரு வாழ்வை அடைவதையே தங்கள் ஒரே குறிக்கோளாகக் கொள்வர். அதை அடைய ஒன்றுபட்டும் தீர்வர். அவர்கள் ஒன்றுபட்டு இயங்கித் தங்கள் உன்னதமான இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள் என்பதை ருசியா, வியட்நாம், சீனா போன்ற நாடுகளின் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. தவிர அத்தகைய புதிய உலகை நிர்மாணிக்க உணர்வு கொண்டு இதய பூர்வமாகச் செயல்பட்டு வாழ்வதே இவர்களின் முழுமையான வாழ்வு, சுதந்திரமான வாழ்வு, ஆனந்தமான வாழ்வு.

இவர்களுக்குப் புதுவாழ்வு, மறுமலர்ச்சி உண்டு என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவது எது? தத்துவமும் வரலாறுமன்றி - எல்லாவற்றிற்கும் மேலாகப் போராட்ட அனுபவம். வேறெதுவும் இத்தகைய நம்பிக்கையை

ஊட்டத்தக்கதல்ல. இம்மக்களின் மெய்யறிவு இம்மக்களிடையே பரவப்பரவ இவர்கள் மகத்தான தன்னம்பிக்கையைப் பெறுவார்கள் என்பதில் இம்மியளவும் ஐயமில்லை. இவர்கள் உறுதிபூணுவார்கள். வீரநடை போடுவார்கள். இலட்சியத்தை அடைந்தே தீர்வர். இவர்களைத் தடுக்க எந்தச் சக்தியாலும் இயலாது. இதில் எவருக்கும் சிறிதளவும் சந்தேகமே வேண்டாம்.

தத்துவமே மனிதனுக்கு உயிரளிக்கும் அமுதம். இதுவே மக்களை ஐக்கியப்படுத்தும். இதுவே பொய்க்கும் பொய்யருக்கும் சாவுமணி அடிக்கும்; சவக்குழி தோண்டும்.

லண்டன் செல்ல வேண்டுமென்ற இலட்சியம், நினைத்தவுடன் நிறைவேறாது. கப்பல் ஓட்டத்தெரியாத, ஏரியில் பரிசல் ஓட்டியவன் சொல்லிக் கொடுக்கும் பாடத்தைக் கேட்டுப் புறப்பட்டால் லண்டன் போய்ச் சேரமாட்டோம். அதைக் கேட்க மாட்டேன் என்று கூறிவிட்டாலும் லண்டன் போய்ச்சேர்ந்ததாக ஆகிவிடாது.

கப்பல் எப்படிக் கட்டுவது, அதை எப்படிச் செலுத்துவது, வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் கொண்டு எவ்வாறு போகும் வழியை அறிவது, காந்த ஊசியை எப்படி உபயோகிப்பது, எந்தெந்த ஊர்வழியாகச் செல்ல வேண்டும் என்பன போன்ற பாடங்களை நன்றாகத் தெரிந்தாலன்றி லண்டன் போய்ச்சேர முடியாது. அவ்வாறே இங்கும்.

அடிமை நிலையிலிருந்து சுதந்திரமான மனிதனாக ஆகவேண்டும் என்று நினைப்பது, லண்டன் போய்ச் சேரவேண்டும் என்பதற்குச் சமம். கப்பலைக் கட்டுவது மக்கள் ஸ்தாபனங்களைக் கட்டுவதற்குச் சமம். பரிசல் ஓட்டுபவனது உபதேசத்தை ஒப்புக்கொள்ள மாட்டேனென்பது, உடமை பெற்ற வர்க்கத்தின் போதனைகளைப் புறக்கணிப்பதற்குச் சமம்.

இனி மற்றப்பாடங்கள் எங்கே? அவை எவை?

4. முதலாளிய முறை - அதனுள் வளரும் அடிமை நிலையும் அதன் சாராம்சமும்

'காண்பவையெல்லாம் மெய்யல்ல
தீர விசாரிப்பதே மெய்'
— பழங்காலக் கருத்து

உடமைபெற்ற வர்க்கத்தின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதே உடமையற்ற வர்க்கத்தின் விடுதலையின் பொருள் என்று சொல்வதன் வாயிலாக, இங்கு அடங்கியுள்ள அடிமைத் தன்மையின் பல்வேறு அம்சங்களை உணர்ந்ததாக ஆகாது. விடுதலையின் சகல அம்சங்களையும் அறிவதும் அடிமைத் தன்மையின் பல்வேறு அம்சங்களை உணர்வதும் ஒன்றே. இங்கு காணப்படும் அடிமைத் தன்மையின் பல்வேறு அம்சங்களை அறியும்பொழுதுதான் அடிமையாகிக் கிடக்கும் உடமையற்ற வர்க்கத்தின் குறிக்கோள் என்ன என்பது தெளிவாகும்.

முதலாளியச் சமுதாயத்தின் இயல்பை விளக்க முற்பட்டாலே உழைக்கும் மக்கள் எத்தகையதொரு அடிமைத்தன்மையில் சிக்கியுள்ளார்கள் என்பது தெளிவாகும். தவிர முதலாளியச் சமுதாயத்தை அகற்றி அவ்விடத்தில் புதியதொரு சமுதாயத்தைச் சமைக்க உழைக்கும் மக்கள் முற்படுவர். இத்தகைய புதிய ஆட்சியையும் அதன் விளைவாக உருவாகும் புதிய சமுதாயத்தையும் பலர் கேலியும் கிண்டலும் — பலர் அறியாமலும் சிலர் அறிந்தும் செய்யலாம் பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்தால் எல்லோரும் அங்கு அடிமைகள் போலவும் ஆடுமாடுகள் போலவும் நடத்தப்படுவார்கள்; அங்கு பலாத்காரமாக வேலை வாங்குவார்கள்; சுதந்திரம் என்பது அங்கு கிடைக்காத பொருளாகிவிடும் என்றெல்லாம் கூறிவருகின்றனர். இங்கு முதலாளிச் சமுதாயத்துள் அனைவரும் சுதந்திர மனிதர்களாக

இருப்பது போலவும் பாட்டாளி வர்க்க அரசு ஏற்படுமாயின் அங்கு சுதந்திரக் காற்றே அடிக்காது போலவும் கூறுகின்றனர். இவர்கள் கூறும் பொய்யைத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டுமாயின் இவர்கள் ஆதரிக்கும் முதலாளியச் சமுதாயத்தினுள் எத்தகைய அடிமைத் தன்மை இரவும் பகலும் வளர்ந்துவருகின்றது என்பதையும் தெளிவாக அறிவது அவசியம்.

முதலாளியம் என்பது ஒருவகையான உற்பத்தி முறை. இதனுள் ஒரு வகையான உற்பத்தி உறவு – ஒருவகையான சமுதாய உறவு தோன்றுகிறது. முதலாளியச் சமுதாயத்தை ஆராய்வது என்பதும் அதன் உற்பத்தி முறையை விளக்குவதும் அடிப்படையில் ஒன்றே. முதலாளி உற்பத்தி முறையின் குறிப்பிடத்தக்க தனித்தன்மையைக் காண்பதன் மூலம் இத்தகைய உறவு எவ்வகையானதொரு அடிமைத் தன்மையயும், இறுதியில் அழிவையும் உண்டாக்கவல்லது என்பதையும் காணலாம். தவிர மானுடனுக்கு ஒவ்வாத இத்தகையதொரு நிலையை முதலாளியச் சமுதாயத்துள் இருந்து நீக்கமுடியுமா என்ற முக்கியமானதொரு கேள்விக்கும் அப்போது விடை காணலாம். இத்தகைய ஆராய்ச்சியே பாட்டாளி மக்கள் அரசின் தேவையையும் அம்மக்களின் விடுதலையின் அவசியத்தையும் பொதுஉடமைச் சமுதாயத்தின் அவசியத்தையும் அனைவருக்கும் தெளிவாக்கும்.

முதலாளிய உற்பத்தி முறையைக் குறிப்பிடும்பொழுது நாம் காண வேண்டிய அடிப்படையான அம்சமென்ன? இங்கு உழைப்பவரும் அதை விலைகொடுத்து வாங்குபவருமே சிறப்பாக காணப்படுகின்றனர். இந்தத் தனித்தன்மையே முதலாளிய தனிஉடமைச் சமுதாயத்தை ஏனைய தனிஉடமைச் சமுதாயங்களிலிருந்து குறிப்பாக வேறுபடுத்திக் காட்டுகின்றது.

உதாரணமாகப் பண்ணை அடிமைத் தனி உடமைச் சமுதாயத்தைச் சற்று பரிசீலிக்கலாம். இத்தகையதொரு

சமுதாயம் உடைந்தே அதனுள்ளிருந்து சிறிது சிறிதாக முதலாளியத் தனி உடமைச் சமுதாயம் வளர்ந்தது. பண்ணை அடிமைச் சமுதாயத்தை நிலக்கிழார்களின் ஆதிக்கம் மிகுந்த சமுதாயமென்றும் அழைக்கலாம். இத்தகைய நிலபிரபுத்துவ தனி உடமைச் சமுதாயத்துக்கும் முதலாளியத் தனிஉடமைச் சமுதாயத்துக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு என்ன?

பண்ணையடிமை (நிலப்பிரபுத்துவ) சமுதாயத்துள் பொதுவாக சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்கே பண்டங்களை உற்பத்தி செய்தார்கள். இந்தச் சமுதாயம் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. இந்தச் சமுதாயத்துள் உற்பத்திக் கருவிகளை இழந்த தொழிலாளர்கள் எங்குமே நூற்றுக்கணக்கிலோ ஆயிரக்கணக்கிலோ சேர்ந்து வேலை செய்யவில்லை. பொதுமைப்படுத்திக் கூறுவோமானால் இந்தச் சமுதாயத்துள் உழைப்பு, உற்பத்திக் கருவி என்ற இரு அம்சங்களும் வெகுவாகப் பிரிக்கப்படவில்லை. அதாவது பெருவாரியான உழைக்கும் மக்கள் தங்கள் உற்பத்திச்சாதனங்களை இழந்த நிலைமை அடையவில்லை. தவிர ஆயிரக்கணக்கான மக்கள் வேலை செய்யக்கூடிய சாதனங்கள் எந்த ஒரு இடத்திலும் குவியவில்லை.

கிராமங்களில் இருந்துவந்த பண்ணைகளில் அடிமைகள் இருந்தனர் என்பது உண்மை. நந்தனை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் ஒரு பண்ணை அடிமையே. அவனை ஒத்தவர்கள் சோழநாட்டில் இருந்திருக்க வேண்டும். அவர்கள் தத்தம் கிராமங்களை விட்டுச்சென்று கூலிக்காரர்களாக மாறுவதற்கு அன்று வாய்ப்பு ஏற்படப் பெரும் ஆலைகள் கொண்ட நகரங்கள் ஏற்படவில்லை.

அன்று இருந்த நிலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சந்தைக்கு அதிகமாகச் செல்லவில்லை. மற்றும் முற்றிலும் வியாபார நோக்கத்துடனேயே உற்பத்தியும் செய்யப்படவில்லை. கிராமச் சந்தைகள் அன்றும் இருந்து

வந்தது உண்மையே. அங்கு பண்ட மாற்றங்களே முதற்பெரும் அம்சமாக இருந்தது. வியாபாரம் செய்வதே உற்பத்தியின் முக்கியமான குறிக்கோளாக இருக்கவில்லை. மாறாக, உபயோகமே முக்கியமான முதல் குறிக்கோளாக இருந்து வந்தது. உபயோக நிமித்தம் வியாபாரமும் இருந்து வந்தது. இத்தகையதொரு தன்மையைக் கொண்ட சமுதாய அமைப்பை, தேவையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பு என்று வரையறுத்துக் கூறுவது சரியே. இங்கு வியாபாரமோ லாபமோ உற்பத்தியின் முதல் குறிக்கோளாக இருக்கவில்லை. தேவையைப் பூர்த்தி செய்ய உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பண்டங்கள் என அழைக்கின்றோம். மாறாக வியாபார நோக்கத்துடன் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் 'சரக்குகள்' என வேறுபடுத்தி அழைக்கின்றோம்.

இனி முதலாளியச் சமுதாயத்தின் நிலைமை எப்படி இருக்கின்றது எனக்காணலாம். இங்கு சில 'பாக்டரிகள்' ஆணிகள் உற்பத்தி செய்யலாம். சில, கூத்திகள் செய்யலாம். ஒரு மில்லில் லட்சக்கணக்கான 'பேல்'கள் துணி நெய்யப்படலாம். அனைத்தையும் இந்த பேக்டரியின் சொந்தக்காரர்களோ அல்லது மில்களில் வேலை செய்பவர்களோ முழுமையாக உபயோகப்படுத்தவே முடியாது. இவை அனைத்தும் வியாபாரத்துக்காகவே உருவாக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல. இவை அனைத்துமே லாபமடைவதற்காகவே உருவாக்கப்படுகின்றன. இக்காரணத்தாலேயே இத்தகைய உற்பத்தி முறையை லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறை எனக் குறிப்பாக அழைக்கின்றோம்.

மாறாக, நிலவுடமைச் சமுதாய அமைப்பிலோவெனில் லாப நோக்கம் வெளிப்படையாகவுமில்லை. அடிப்படையாகவுமில்லை. அத்தகைய சமுதாய அமைப்பில் ஒரு நெசவாளி சந்தைக்குத் துணியைக் கொண்டு செல்வானேயாகில் அவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான

தானியங்களையோ அல்லது இதர சாமான்களையோ வாங்குவதற்காகவே அவ்வாறு செய்கின்றான். லாப நோக்கம் இங்கு இருக்க முடியாது.

தவிர நிலக்கிழார்களின் சமுதாய அமைப்பில் நாணயப் புழக்கமும் அதிகமாக இராது. இவையே, சுய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய கிராமிய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பண்ணை அடிமைச் சமுதாயத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

இதற்கு முற்றிலும் மாறான நிலைமைகள் முதலாளிய அமைப்பில் காணப்படுகின்றன. இங்கு சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் கிராமிய உற்பத்தி முறை வெகு வேகமாக மறையத் தலைப்படுகின்றது. கிராமங்கள் வெகுவேகமாக மறையத் தலைப்படுகின்றன. நகரங்களை நம்பியிருக்க வேண்டிய நிலையை அடைகின்றன. அதே வகையில் முதலாளிய அமைப்பினால் கிராமங்களிலும் வியாபார நோக்கத்துடனும் லாப நோக்கத்துடனும் உற்பத்தி செய்ய மக்கள் முற்படுகின்றனர். இதற்கு உகந்த வகையில் நாணயப் புழக்கமும் இச்சமுதாயத்தில் அதிகரிக்கின்றது. அதற்கேற்பக் காகித நாணயமும் 'பிராமிசரி நோட்டு'களும் 'டிராப்டுகளும்', பேங்குகளும் தோன்றுகின்றன. இவை அனைத்தும் உற்பத்தியின் குறிக்கோளில் ஏற்பட்டு வரும் மாறுதலையல்லவா காட்டுகின்றன! நகரங்களிலேற்பட்டுவரும் புதிய உற்பத்திமுறை வெகுவிரைவாகக் கிராமங்களை மாற்றி வருகின்றது. இத்தகைய மாற்றங்களைக் கிராமிய மக்கள் சுலபமாக ஒப்புக்கொண்டனரா அல்லது எதிர்த்துப் போராடினரா என்பதெல்லாம் மிக முக்கியமான கேள்விகள் மட்டுமல்ல, மிகவும் ரசமான கேள்விகளும் கூட.

சுருக்கமாகக் கூறுவோமேயானால், நிலப்பிரபுத்துவ முறையில் எவை எவை முக்கியமற்றதாகவும் சொற்பமானதாகவும் கண்டும் காணாமலும் காணப்பட்டனவோ, அவ்வம்சங்கள் முதலாளிய அமைப்பினுள் முக்கியமானதும் அடிப்படையானதும் வெளிப்படையானதுமான அம்சங்களாக

மாறிவிடுகின்றன. இவ்வகையில் முதலாளியம் நிலப்பிரபுத்துவத்தின் எதிர்மறை என்று கூறுவதில் தவறில்லை.

முதலாளிய அமைப்பினுள் லாபநோக்கமே உற்பத்தியின் ஒரே குறிக்கோள் என்று கூறினோம். இந்த இருசின் மீதுதான் முதலாளியச் சக்கரம் சுழலுகின்றது. லாபமே முதலாளியக் கடவுளுக்கு அர்ச்சனை செய்யும் பூக்கள், மந்திரங்கள், அபிசேகங்கள் ஆகும். அக்கடவுள் கேட்கும் ஒரே பலி, உழைக்கும் மக்களே. லாபமே இங்கு உற்பத்தியின் ஆதியும் அந்தமும். இக்கண்ணோட்டத்துடன் தான் எம்மனிதனும் இவ்வமைப்பினுள் எதையும் காண முற்படுகிறான். பொருட்களை மட்டுமன்றி மக்களையும் மக்களிடையே ஏற்படும் உறவுகளைக் காணும் பொழுதும் 'லாபம் வருமா' என்றுதான் காணவே முதலாளியம் மக்களுக்குப் போதிக்கின்றது. இத்தகையதொரு கண்ணோட்டத்தையே இச்சமுதாயத்தில் ஆதிக்கம் வகிக்கும் ஆண்டவர்கள் மக்களுக்குப் போதிக்கின்றனர்.

இனி முதலாளியக் கடவுளுக்கு மிகவும் விருப்பமான 'லாபம்' எனும் பூக்களும் பால்பழ அபிஷே கங்களும் எவ்வாறு கிடைக்கின்றன எனக் காணலாம். இதை உழைக்கும் மக்கள் மிகத் தெளிவாக அறியவேண்டும். இதை அறிய வேண்டுமாயின் உழைக்கும் மகன் ஒருவனின் ஒருநாள் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தாலே போதும். எவர் எவ்வகையில் லாபத்தை அடைகின்றனர் என்பது சுலபமாக விளங்கும். எட்டு மணி நேரம் ஒரு உழைப்பாளி வேலை செய்வதாக வைத்துக் கொள்வோம். அந்த நேரத்தில் அவன் தனது உழைப்பால் பத்து ரூபாய் மதிப்பைப் பொருளுடன் இணைப்பதாகக் கொள்வோம். அத்தகைய வேலைக்கு அவனுக்கு மூன்று ரூபாய் கூலி கொடுக்கப்படுவதாகவும் வைத்துக்கொள்ளலாம். மிகுதியாகிய ஏழு ரூபாய் முதலாளியைச் சேர்கின்றது.

மூலதனத்தின் சொந்தக்காரர் முழுமையான மூலதனத்தையும் நூற்றுக்குப் பத்து ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்கியதாகவும் வைத்துக்கொள்வோம். அந்த வட்டிக்கும் முதலுக்கும் மிகுதியாகிய ஏழு ரூபாயில் ஐந்து ரூபாய் போய்ச் சேருமானால் இன்னும் இரண்டு ரூபாய்களை இத்தொழிலாளியின் உழைப்பின் வாயிலாக அம்முதலாளி பெறுகின்றான். இம்மிகுதியை அம்முதலாளி லாபமாகப் பெறுகின்றான் என்றே சொல்ல வேண்டும். இந்த இரண்டு ரூபாயை அவன் தொழிலாளியிடமிருந்து சற்றும் செலவில்லாமல் பெறுகின்றான். இதையே 'உபரி மதிப்பு' என அழைக்கின்றனர். அதாவது உழைப்பாளி செய்த உழைப்பில் எப்பகுதியைக் கூலி கொடுக்காமல் முதலாளி பெறுகின்றானோ அதுவே 'உபரி மதிப்பு' என அழைக்கப்படுகின்றது.

இங்கு நாம் காணும் உண்மை என்ன? இதன் விளைவு என்ன? உழைப்பாளி தான் செய்த வேலையில் உண்மையான மதிப்பிலும் (அளவிலும்) ஒரு பகுதியையே தன் கூலியாக முதலாளியிடமிருந்து திரும்பப் பெறுகின்றான். இத்தகையதொரு போக்கு தொடர்ந்து நடைபெற்றால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் போகப் போக விளக்குவோம்.

உழைப்பைப் பண்டம் என அழைக்கலாம். ஏனெனில் உழைப்பல்லவா பண்டம் உருவாகக் காரணமாகின்றது! தனது உழைப்பால் உருப்பெறும் அல்லது உருவாகும் பண்டத்தில் எந்த அளவு முதலாளியைச் சேருகின்றது என்பதே இங்கு நாம் காணும் பிரச்சினை. இத்தகைய பங்கு பிரித்துக் கொள்வதில் அவனவன் தனக்குச் சாதகமான வகையில் பங்கு பிரித்துக் கொள்ள ஆர்வம் கொள்வது விந்தையுமல்ல. இருந்தாலும் இதில் யாருக்குப் பொதுவாக அதிகமான பங்கு கிடைக்கும் என்பதே முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய பிரச்சினை. தொழிலாளிக்கா அல்லது முதலாளிக்கா? எவரிடம் அதிகமாக வன்மை இருக்கின்றதோ அவருக்கே

அதிகப் பங்கு கிடைக்கும். இங்கு தயவு தாட்சணியம், சொந்த பந்தம், இனம், நாட்டுக்காரன் என்பவைகளுக்கெல்லாம் இடமேயில்லை. அப்படியானால் யாருக்கு அதிகமான பலம் இருக்கின்றது? முதலாளிக்கா அல்லது உழைப்பாளிக்கா என்பது இங்கு பிரச்சினை.

தொழிலாளிக்கு ஒரு நாள் வேலை இல்லை எனில் அவனுக்குக் கூலி கிடையாது. வீட்டில் சாப்பாடு இல்லை. முதலாளிக்குள்ள நிலை அப்படியில்லை. தொழிலாளியிடம் உற்பத்திக் கருவிகளில்லை. அவை அனைத்துமே உடமைபெற்ற வர்க்கத்திடம் அடங்கிக் கிடக்கின்றன. ஆகையால் தவிர்க்க முடியாமல் தொழிலாளி தனது உழைப்பின் மதிப்பில் ஒரு சிறு பகுதியையே கூலியாகத் திரும்பிப் பெறச் சம்மதிக்கும் ஒரு சங்கடமான, தவிர்க்கமுடியாத நிலை அவனுக்கேற்படுகின்றது.

முதலாளிக்குச் சுலபமாகக் கூலியாட்கள் கிடைக்காவிட்டால் தொழிலாளிக்குச் சற்று அதிகக் கூலி கிடைக்கும். அதாவது முதலாளிகளிடையே பலத்த போட்டி இருக்கும் வரையில் தொழிலாளிக்குச் சற்று 'கிராக்கி இருக்கும். அவனுக்குத் தனது உழைப்பில் சற்று அதிகப்பங்கு கிடைக்கும். அப்படியானால் இத்தகைய போட்டியையே தொழிலாளி விரும்பலாமா? இத்தகைய போட்டி எந்த நிலையை உருவாக்குகின்றது என்று வெகு சீக்கிரம் காணப்போகின்றோம். மேல்வாரியாகப் பிரச்சினையைப் பார்த்தால் முதலாளியப் போட்டி தொழிலாளிக்குச் சாதகமானதொரு நிலைமையை உருவாக்கும் என்பது போலக் காண்கின்றது. ஆனால் உண்மை அவ்வாறல்ல. இப்போட்டியே எவ்வகையில் தொழிலாளியை மிகக் கொடூரமாகக் கசக்கிப் பிழியுமென்பதையும் இனிக் காணப்போகின்றோம்.

முதலாளி மற்றும் தொழிலாளி இருவருமே உழைப்பின் விளைவாகிய பண்டத்தைப் பங்குபோட்டுக் கொள்வதில் தங்களுடைய போராட்டத்தைத்

துவங்குகின்றனர். இதுவே வர்க்கப் போராட்டத்தின் பொருளாதார அடித்தளம்.

இருப்பினும் ஏன் எல்லா முதலாளிகளும் பெரும் பணக்காரர்களாக ஆவதில்லை, மற்றும் பலர் திவாலாகி ஒட்டாண்டியாகவுமாகிவிடுகின்றனர் எனக் கேட்கலாம். இரண்டு வகையான காரணங்களால் முதலாளிகள் திவாலாகலாம். அவர்கள் தங்கள் தொழில்களைச் சரியாக மேற்பார்வை பார்க்காமல் போகலாம், ஏமாறலாம். இது சாதாரணமான காரணம். இதை விட முக்கியமானதும் அடிப்படையானதுமான காரணம், முதலாளிய உற்பத்தி முறையினுள்ளேயே அடங்கிக் கிடக்கின்றது. அதுவே உண்மையானதும் மற்றும் பொதுவானதுமான காரணம். அத்தகைய காரணமென்ன? முதலாளிகளிடையே ஏற்படும் வியாபாரப் போட்டியே இத்தகைய அடிப்படையான காரணம்.

ஒவ்வொரு முதலாளியும் அதிக லாபம் அடையும் பொருட்டுத்தான் உற்பத்தி செய்கின்றான்; வியாபாரமும் செய்கின்றான். இந்த லாபம் எவ்வாறு கிடைக்கின்றது என்பதைக் காண்போமேயானால் நட்டமும் எவ்வாறு ஏற்படுகிறது என்பதும் தெளிவாகும். அப்பொழுது திவாலாவதின் இலக்கணமும் விளங்கியே தீரும்.

ஒரு முதலாளி ஒரு சரக்கை விற்கும் விலையை விட மற்றவர் அதிக விலைக்கு விற்றா லாபம் அடைகின்றார்? அப்படிச் செய்ய முடியுமா? ஒரு சரக்கை ஒருவர் குறைந்த விலைக்கும் மற்றொருவர் அதிக விலைக்கும் விற்றால் எவனாவது அதிக விலை கொடுத்து வாங்குவானா? குறைந்த விலைக்கு விற்கும் சரக்குத்தான் விலை போகும்.

அப்படியாயின், எல்லாருமே ஒரே விலைக்கு விற்றால் எப்படி ஒரு முதலாளி அதிகமாக லாபம் அடைய முடியும்? மற்றவன் திவாலாக முடியும்? மூலதனத்தின் அளவுக்கு ஏற்ப ஒவ்வொருவனுக்கு லாபம் கிட்டித்தானே தீரும்? ஆம். அப்படியானால் அதிக விகித லாபம் பெறும் வழி என்ன? எவனொருவன் குறைந்த விலைக்கு விற்றும் லாபமடைய

முடிகின்றதோ அவனுக்கே இறுதியில் அதிக விகித லாபம் கிடைக்கும். மற்றவர்கள் அவன்முன் போட்டியிட முடியாது போவார்கள். இதன் இரகசியம் என்ன?

எவ்வாறு குறைந்த விலைக்குச் சரக்குகளை விற்றும் லாபம் அடையமுடியும் என்னும பிரச்சினைக்கு விடை காண்போமேயானால் முதலாளியத்தின் வளர்ச்சி மற்றும் அதன் இயல்பு இரண்டையும் குறித்துப் பல அம்சங்கள் நமக்குத் தெளிவாகும். அது மட்டுமல்ல, அதன் முடிவும் நமக்குப் புலனாகும்.

இரு முதலாளிகளுக்கு ஒரே அளவு உற்பத்தி செலவாகுமேயானால் ஒருவர் குறைந்த விலைக்கு விற்றும் மற்றவர் அதிக விலைக்கு விற்பாரேயானால் குறைந்த விலைக்கு விற்பவருக்கு நட்டமே கிட்டும். லாபம் கிடைக்க வேண்டுமாயின் உற்பத்திச் செலவைக் குறைக்க வழி காணவேண்டும்.

உற்பத்திச் செலவைக் குறைக்கவே முதலாளிகள் தொழில்களில் இயந்திரங்களையும் நவீன உற்பத்தி முறைகளையும் அடிக்கடி புகுத்துகின்றனர். இயந்திரங்கள் எவ்வாறு உற்பத்திச் செலவைக் குறைக்கின்றன? உழைப்பாளர்கள் இயந்திரங்களை ஓட்டி அவைகளிடமிருந்து வேலை வாங்குகின்றனர் என்று நாம் சாதாரணமாக நினைக்கின்றோம். ஆனால் உண்மை நேர்மாறானது என்றே கூறவேண்டும். உதாரணமாக வயலில் ஒரு வேலையாள் இரண்டு மாடுகளைக் கட்டி உழுவதில், இவன் மாடுகளிடம் வேலைவாங்குகின்றானா அல்லது அம்மாடுகள் இவனிடம் வேலை வாங்குகின்றனவா? மாடுகள் வேகமாக வேலை செய்யச் செய்ய இவனும் அதிகமாக வேலை செய்கின்றான். மட்டமான மாடுகளைக் கொண்டு உழவு செய்தால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு வேலையாள் எவ்வளவு வேலை செய்வானோ அதை விட அதிகமான வேலையை, அதே நேரத்தில் நல்ல மாடுகளைப் பூட்டி ஓட்டினால் செய்தே தீர நேரிடும். இதை உணர்ந்துதான் பண்ணையார் நல்ல

மாடுகளை உழவுக்கு வாங்குகின்றார். வேலையாளுக்கு அதிக ஓய்வு கொடுக்கவே இவ்வாறு நல்ல மாடுகள் வாங்குகின்றார் என்று நினைப்பது அப்பட்டமான முட்டாள்தனமே. இதேபோல தான் பேக்டரியிலும், உழைக்கும் மக்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட கால அளவில் அதிகமான அளவு உழைப்பை ஈர்க்கவே (அபகரிக்க) புதுப்புது வகையான இயந்திரங்களையும் வேலை முறைகளையும் தத்தம் மில்களிலும் ஆலைகளிலும் முதலாளிகள் புகுத்துகின்றனர். இத்திருப்பணிக்காகவே விஞ்ஞானத்தையும் பொறியியல்களையும் தொழில் நுணுக்கங்களையும் வெகுவாக முதலாளிய அமைப்பினுள் பயன்படுத்துகின்றனர். மாறாக, உழைக்கும் மகனுக்கு வேலைப் பளுவைக் குறைக்கவோ அவனுக்கு அதிகமான அளவு ஓய்வு கிடைப்பதற்கோ இங்கு இந்த அமைப்பினுள் விஞ்ஞானம் பயன்படுத்தப்படுவதில்லை என்னும் அடிப்படையான உண்மையை உழைக்கும் மக்கள் கவனித்தே தீரவேண்டும்.

இம்முறைகளின் வாயிலாகத்தான் குறைந்த கூலி கொடுத்து அதிக வேலை வாங்க இயலுகின்றது. இதிலிருந்து நாம் காணும் உண்மையென்ன?

முதலாளிய அமைப்பினுள் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக மட்டுமே அறிவு உபயோகப்படுத்தப்படுவதாக நினைப்பது மிகமிகத் தவறு. உற்பத்தி அதிகரிப்பைவிட முக்கியமான குறிக்கோள் என்னவெனில், அத்தகைய உற்பத்தியில் முதலாளிக்கு அதிகமான பங்கு கிடைக்கவேண்டும் என்பதே. இதையே மற்றுமொரு வகையில் கூறுவோமானால், முதலாளிய அமைப்பினுள் உழைக்கும் மக்களுக்கு அவர்களால் உருவாக்கப்பட்ட பண்டங்களில் கிடைக்கும் பங்கைக் குறைத்துக் கொண்டே போகத்தான் அறிவு பயன்படுத்தப்படுகின்றது. அதாவது முதலாளிய அமைப்பினுள் உழைக்கும் மகனை அதிகமாகவும் இன்னும் வேகமாகவும் உறிஞ்ச வகைசெய்யும் அறிவே வரவேற்கப்படுகின்றது. முதலாளிய அறிவே உறிஞ்சும் அறிவு தான். அதன் தத்துவமும் அத்தகையதே. இத்தகையதொரு

நிலை வரக்காரணமென்ன? முதலாளிகளுக்குள் ஏற்படும் வியாபாரப் போட்டியே காரணம். இதன் காரணமாகவே முதலாளிகள் அடிக்கடி புதுவிதமான இயந்திரங்களைப் புகுத்துகின்றனர். அவ்வாறு செய்வதாலேயே அவர்கள் தங்கள் லாபத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அதிகரித்துக் கொள்ளவும் சாத்தியமாகின்றது. இத்தகையதொரு கழுத்தை முறிக்கும் போட்டியில் எந்த முதலாளிகள் இப்படிப்பட்ட நவீன இயந்திரங்களையும் நவீன உற்பத்தி முறைகளையும் தங்கள் தொழில்களில் புகுத்தப் போதிய வசதியும் மூலதனமும் இல்லாமலிருக்கின்றனரோ அப்படிப்பட்டவர்கள் பண்டங்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியாமல் போகின்றனர்.

முதலாளிகளுக்குள் நடக்கும் இந்த இடைவிடாத போட்டியின் காரணமாக உண்மையில் கசக்கப்பட்டு, உருக்குலைக்கப்பட்டு, பிணமாக்கப்படுபவர்கள், உழைக்கும் மக்களன்றி வேறு யாருமில்லை. உழைக்கும் மக்களை எம்முதலாளி நன்றாகக் கசக்கிப் பிழிவது என்பதே முதலாளிகளின் போட்டியின் சாராம்சம். எந்த முதலாளி திறமையாகவும் சீக்கிரமாகவும் உழைக்கும் மக்களைக் கசக்கக் கற்றுக் கொள்கின்றானோ அவனே கைதேர்ந்த முதலாளியாக மாறுகின்றான். இப்போட்டியின் விளைவுகளின் பல வடிவங்களையும் நாம் அறிந்தே தீரவேண்டும். அப்பொழுதுதான் உழைக்கும் மக்கள் எவ்வகையிலெல்லாம் முதலாளிய அமைப்பினுள் சிக்கித் தவித்து உள்ளத்திலும் உடலிலும் உருக்குலைக்கப் படுகின்றனர் என்பது தெளிவாகும்.

உழைக்கும் மக்களை இவ்வாறு கசக்கிப் பிழிந்தே மூலதனம் குவிகின்றது. இதைச் சற்று விரிவாக விளக்கலாம். உண்மையான கூலியைக் குறைப்பதன் வாயிலாகவே லாபத்தை அடையவும் முடியும், அதிகரிக்கவும் முடியும். இவ்வம்சத்தைக் காணும்பொழுது எந்த அம்சத்தில் மூலதனத்தை முதலாளி குறிப்பாக ஈடுபடுத்துகின்றார் என்பது

தெளிவாகும். உற்பத்திச் சாதனங்களாகிய இயந்திரங்களில் தான் மூலதனத்தை அதிகமாக ஈடுபடுத்த வேண்டிவருகின்றது. முதலாளித்துவ அமைப்பினுள் இத்தகைய உற்பத்திச் சாதனங்களிலேயே மூலதனம். அதிவேகமாகக் குவிக்கப்படும். உற்பத்திச் சாதனங்கள் இராட்சத வேகத்திலும் அதி பயங்கரமான அளவிலும் பெருகுவதே இங்கு மூலதனம் பெருகும் வழி.

முதலாளிகளிடையே காணப்படும் போட்டி இறுதியில் இயந்திரங்களிடையே ஏற்படும் போட்டியாகக் காட்சி அளிக்கின்றது. இதன் காரணத்தாலேயே முதலாளிய வளர்ச்சியின் காலத்தில் வெகு எளிதில் பல இயந்திரங்கள் 'வேலைக்கு' (லாபகரமாக இல்லாமல்) லாயக்கற்று விடுகின்றன. அடிக்கடி நேர்த்தியானதும் அதிக உழைப்பை சீக்கிரமாகவும் உறிஞ்சக்கூடிய இயந்திரங்கள் வந்துவிடுவதால் பல இயந்திரங்கள் லாபகரமாக இயங்க முடியாமல் போய்விடுகின்றது. இந்நிலையில் பல சிறு முதலாளிகள் தங்களுடைய ஆலைகளை மூடுவதில் ஆச்சரியமேயில்லை. இவர்களால் இயந்திரங்களைப் புதுப்பிக்க இயலுவதுமில்லை. அதற்கான வசதி இவர்களிடமில்லை. அல்லது மூலதனம் கிடைக்காமல் போகலாம். பேங்குகளும், அதிகாரமும் பெரிய குபேர முதலாளிகளிடம் போய்ச் சேர்வதே இந்நிலைக்கு மற்றுமொரு முக்கியமான காரணம். அரசியல் போராட்டங்களும் இந்தப் பொருளாதாரப் போராட்டங்களின் பிரதிபலிப்பன்றி வேறென்ன?

பழைய இயந்திரங்களை ஓட்டினாலோ எனில் புதிய இயந்திரங்களுடன் போட்டி போட இயலாது. இதன் இறுதி விளைவு என்ன?

பல தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமையே இதன் உடனடியான விளைவு. இந்நிலையில் தொழிலாளிகள் தங்களுக்கு வேலை கொடுங்கள் எனக் கேட்டால் இம்முதலாளிகள் கூறுவதென்ன? உங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்; அப்பொழுதான் மில்லை ஓட்ட

முடியும் என்பார்கள். அல்லது உங்களுடைய சம்பளத்தையும் பிராவிடண்ட் பண்டையும் கடனாகவோ இனாமாகவோ கொடுங்கள்; மற்றும் நவீன இயந்திரங்களை இப்பணத்தின் மூலம் வாங்கிப் புகுத்த அனுமதியும் கொடுங்கள்; அப்படிச் செய்வீர்களேயானால் தான் மில்லை மறுமுறையும் ஓட்ட முடியும் என்பார்கள். இதன் அர்த்தமென்ன? "உங்களுடைய இரத்தத்தைக் கொடுங்கள். இன்னும் வேகமாக உங்களிடம் மிகுதியாயுள்ள இரத்தத்தையும் குடிக்கின்றோம்" என்பது தானே! தங்கள் வாழ்க்கையைக் குறுக்கிக் கொண்டாலும் பரவாயில்லை. ஏதோ வயிற்றுக் கஞ்சியாவது கிடைத்தால் போதும் என்று எண்ணி உழைக்கும் மக்கள் இத்தகைய ஒப்பந்தங்களை ஒத்துக்கொள்ளும் அவல நிலைக்கு உந்தப்படுகின்றனர். இதனால் அரைவயிற்றுக் கஞ்சியும் மிஞ்சாது என்பதை அவர்கள் வெகு சீக்கிரம் உணர்ந்தே தீரவேண்டும்.

இவ்விளைவுகளனைத்தும் ஏன், எக்காரணத்தால் ஏற்படுகின்றன என்பதை உழைக்கும் மக்கள் காணவேண்டும். இல்லையேல் இவர்கள் ஏமாறாமலிருக்க மாட்டார்கள். தவிர, பலவகையான போலிக்காரணங்களை உண்மையென நம்பி தங்களுடைய முழுமையான விடுதலைக்கான வழியைக் காணாமல் தவிப்பார்கள்.

இவையனைத்துமே முதலாளிய உற்பத்தி முறையின் குறிக்கோளின் விளைவுகளின்றி வேறொன்றுமில்லை. லாபமே உற்பத்தியின் ஒரே இலக்காக இருக்கும் வரையில் இத்தகைய விளைவுகள் தவிர்க்க முடியாதவை என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்டிய பெருமை மார்க்சுக்கே உரியது. இவ்வுண்மையை மறுப்பதே தங்கள் ஒரே லட்சியமாக இன்று இச்சமுதாயத்துள் உள்ள பேராசிரியர்களை ஏன் முதலாளிகளின் தாசர்கள் என்று கூறக்கூடாது?

எவ்வகையில் பார்த்தாலும் நாம் அறியும் உண்மை என்ன? லாப நோக்கத்தையே அடிப்படையில் கொண்ட முதலாளிய உற்பத்தி முறையில் சமுதாயம் இயங்கும்வரை

மக்கள் தங்கள் கூலியை இழந்து கொண்டே தான் இருக்க வேண்டும். இவ்வாறு இவர்கள் தங்கள் கூலியை இழப்பதாலேயே மூலதனம் குவிகின்றது. லாபமும் சாத்தியமாகின்றது. முதலாளியமும் ஓடுகின்றது.

ஆயினும் இதிலுமொரு சிக்கலிருக்கத்தான் செய்கின்றது. உழைக்கும் மக்கள் தங்களுடைய கூலியை இழந்துகொண்டே இருக்கின்றார்கள் என்பதன் பொருள் என்ன? அவர்கள் தங்கள் வாங்கும் சக்தியை இழந்து வருகின்றார்கள் என்பதல்லாமல் வேறென்ன? இப்படிப் பெருவாரியான மக்கள் தங்களுடைய வாங்கும் சக்தியை இழந்துகொண்டே சென்றால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை யார் வாங்குவார்கள்? வாங்கமுடியாமல் தேக்கம் ஏற்பட்டே தீரும். அதன் விளைவு, ஆலைகளை மூடுவதன்றி வேறென்ன? தொழிலாளரை உறிஞ்சாவிடிலும் ஆலைகளை மூடும் நிலை ஏற்படும்; உறிஞ்சிக் கொண்டு சென்றாலும் ஆலைகளை மூடும் நிலை ஏற்படுகிறது. அப்படிப் பார்த்தாலும் இந்தச் சமுதாய அமைப்பு நிலையானதாக இருக்கமுடியாது என்பது தெளிவாகின்றது.

லாப நோக்கத்தை அடிப்படையில் கொண்ட முதலாளிய அமைப்பு ஒழிந்தாலொழிய அதன் விளைவுகள் சமுதாயத்திலிருந்து நீங்கமாட்டா என்னும் மாபெரும் உண்மையை உழைக்கும் மக்கள் காலப்போக்கில் உணர்ந்து கொள்கின்றனர். அதே காரணத்தால்தான் இவர்கள் இத்தகைய சமுதாய அமைப்பைத் தகர்த்தெறிந்து லாபநோக்க மற்றதும், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் குறிக்கோள் கொண்டதுமான சமுதாய அடிப்படையை உருவாக்கியே தீர்வர் என்று மார்க்சியம் கூறுகின்றது. இக்காரணத்தாலேயே சோசலிசம் கண்டிப்பாகத் தோன்றியே தீரும் என்று மார்க்சும் லெனினும் கூறுகின்றார்கள். முதலாளியத்தின் அழிவுக்குக் காரணங்கள் அதனுள்ளேயே இருக்கின்றன என்பதே மார்க்ஸ் தெளிவாக்கிய மற்றுமொரு உண்மை.

உழைக்கும் மக்கள் தவிர்க்க முடியாமல் முதலாளிய உற்பத்தி முறையினுள் சிக்கிக் கொண்டு, மனமிருந்தும் இல்லாமலும் தங்களை அழித்துக் கொண்டே இருக்கின்றனர். உற்பத்திக் கருவிகளை இழந்த இம்மக்கள் பேக்டரிகளையோ ஆலைகளையோ மில்களையோ விட்டுச் சென்று பிழைக்கவழி கிடையாது. அப்படியானால் இவர்கள் என்ன செய்யவேண்டும்? லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய உற்பத்தி உறவைத் தகர்த்தெறிந்து உற்பத்திக் கருவிகள் மக்களின் முழுமையான நலனுக்குக் பயன்படும் வகையில் ஆக்குவதே இவர்களின் ஒரே இலட்சியமாக இருக்கமுடியும். மூலதனம் கண்ணுக்குத் தெரியும் வகையில் உழைப்பை அழிக்கின்றது. ஆயினும் இந்த அழிவால் மூலதனம் தன்னையுமே இறுதியில் அழித்துக் கொள்கின்றது. உழைப்பு அழிந்துவிட்டால், மூலதனம் எவ்வாறு வாழமுடியும்? மூலதனம் வளர வழிவகையின்றி சாப்பிட உணவின்றி உறிஞ்ச இரத்தமின்றி இறக்கிறது. தன்வினை தன்னைச் சுடும் என்பது போல மூலதனம் உழைப்பை அழிப்பதன் காரணமாகத் தானும் அழிந்தே தீரும். இருவகையினருக்கும் இந்தப் பழமொழி பொருந்தும். அதனால் இந்த உறவு எத்தகையது? ஒன்றை மற்றது அழிக்கும் உறவு. மற்றும் ஒவ்வொன்றும் தன்னைத் தானே அழிக்கக் கூடிய உறவு. இதுவே முதலாளியச் சமுதாயத்துள் வேகமாக வளர்ந்துவரும் உறவு நிலை என்பதே நாம் கவனிக்க வேண்டும். இத்தகையதொரு உறவை 'அன்னியமான உறவு' அல்லது 'பராதீனப்படுத்தப்பட்ட உறவு' என்று கார்ல்மார்க்ஸ் அழைக்கின்றார். அவ்வாறே மூலதனத்தையும் 'அன்னியமாக்கப்பட்ட அல்லது பராதீனப்படுத்தப்பட்ட உழைப்பு' என்று அழைக்கின்றார். இத்தகைய நிலையை 'அன்னியமாக்கப்பட்ட நிலை', 'பராதீனப்படுத்தப்பட்ட நிலை, என்றும் வர்ணிக்கின்றார்.

இத்தகைய அன்னியமாக்கப்பட்ட சமுதாய நிலையில் பல அம்சங்களையும் நாம் சரியாகப் புரிந்து கொண்டாலன்றி

முதலாளிய அமைப்பினுள் அடங்கியுள்ள அடிமைத் தன்மையின் முழுமையான உருவத்தை அறிந்தவர்களாக மாட்டோம். ஆயினும் பொதுவாகக் கூறுவோமானால் இச்சமுதாயத்துள் விளையும் அடிமைத் தன்மையைக் கூலி அடிமைத்தன்மை என்று கூறுகின்றோம்.

இத்தகைய அடிமைத் தன்மையின் காரணம் என்ன? மூலதனமாக மாறிய – அவ்வாறு உருவெடுத்த – படைக்கும் செயல் தன் பிறப்பிடமாகிய படைக்கும் மனிதனையே அழிக்கக் காரணமாகின்ற உறவே இவ்வடிமைத்தன்மைக்கான காரணம். அடிமைத்தன்மை என்பதும் ஒருவகை உறவன்றி வேறென்ன? இங்கு உழைப்பு என்பது தன் குழந்தையாகிய மூலதனத்துக்கு அடிமையாக மாறி வருகின்றது. இதன் வடிவமே கூலி அடிமைத்தனம்.

உழைப்பு அன்னியமாக்கப்படுகின்றது என்பதன் பொருள் என்ன? உழைப்பு நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, அதிவேகமாக அழிக்கப்பட்டும் வருகின்றது என்பதே அதன் அர்த்தம். இதன் பிரதிபலிப்பு எவ்வாறு காட்சி அளிக்கின்றது? உழைக்கும் மக்கள் விரும்பத்தகாத, வேண்டத்தகாத மற்றும் தீண்டத்தகாத, கூட்டமாக கணிக்கப்படுவதே இதன் பிரதிபலிப்பு. இவர்கள் சமுதாயத்துக்கு அப்பாற்பட்ட ஒரு அன்னியமான கூட்டமாகவே ஆளும் வர்க்கத்தால் கருதப்படுகின்றனர். இந்தப் பிசாசுக் கூட்டத்தைக்கண்டு ஆளும் மக்கள் எப்பொழுதுமே நடுங்கிக் கொண்டேதானிருக்கின்றனர்.

உழைக்கும் மக்கள், மூலதனத்தின் உணவு போன்றுதான் கருதப்படுகின்றனர். இதுவே அவர்களுக்குக் கொடுக்கப்படும் தகுதி. 'பணி செய்து கிடப்பதே மாந்தர் கடமை' என்று அம்மக்களுக்கு நல்லறம் போதிக்கப்படுகின்றது.

அன்னியமாதலும் தீண்டாமையும் ஒன்றே; தீண்டாமையின் சகல அம்சங்களையும் அதன் அடித்தளத்தையும் காட்டிய பெருமை மார்க்சுக்கே உரியது. வர்க்க வேறுபாடுகள் அடங்கிய பல்வேறு சமுதாயங்களுக்குள்

இத்தகைய 'அன்னியமாதல்' உருவெடுக்கின்றது என்றும் உண்மையை வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. பறையனும் புலையனும் அவனை ஒத்தவனும் பார்ப்பனிய நிலப்பிரபுத்துவ சமுதாயத்துள் முற்றிலும் தீண்டப்படாத, ஒடுக்கப்பட்ட, அன்னியமாக்கப்பட்ட, மக்களாகக் காட்சி அளிப்பது நமக்குத் தெரியாததல்ல.

இன்றைக்கு நம் முன் வளரும் சமுதாயத்துள்ளும் பார்ப்பனரை ஒத்தவர்களும் பறையனை ஒத்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இன்றுள்ள பார்ப்பனீயம் முதலாளியத் தத்துவமன்றி வேறெதுவுமல்ல. இத்தகையதொரு சமுதாயத்தையும் இச்சமுதாயத்தைத் தாங்கி நிற்கும் மனுதர்ம சாத்திரமாகிய முதலாளிய அற நூல்களையும் எதிர்ப்பவர்களை இன்றைய பறையர்கள் என்று கருதுவதே சரியாக இருக்கும். இன்றுள்ள சமுதாயத்துள் கூலி அடிமைத் தன்மையே அன்னியமாதலின் பிரதானமான வடிவமாகவும் அம்சமாகவும் காட்சி அளிக்கின்றது. இத்தகைய அடிமைத்தன்மையையும் அன்னியமாதலையும் ஒழிப்பதே விடுதலையின் உள்ளடக்கம். இதுவே மக்கள் முன் நிற்கும் பிரதானமான கடமை.

கூலிக்காரர்கள் என்ற இனமே இல்லாத சுதந்திரமான – படைக்கும் மக்களைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதே மக்கள் விடுதலையின் உள்ளடக்கமாகும். இன்றுள்ள சமுதாயத்தில் கூலி 'கொடுக்கும்' மக்களும் கூலி வாங்கும் மக்களுமே பெருவாரியாகக் காணப்படுகின்றனர். ஆகையால் மக்களைக் கூலி என்னும் கண்ணியே இணைக்கின்றது. கூலி என்னும் அம்சம் மறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கப் போராடுவதே விடுதலை இயக்கமாகவும் மாறுகின்றது.

கூலிக்கு மாரடிக்கும் சமுதாயம் மறைய வேண்டும். அன்னியமாக்கப்பட்ட உழைப்பே மூலதனம் என்ற நிலையையும் பெயரையும் பெறுமேயானால் அன்னியமாக்கப்பட்ட உழைப்பாளிதானே முதலாளி என

அழைக்கப்படுகின்றான்? ஆம். இதன் பொருள் என்ன? கூலி வாங்குபவனின் மறு உருவமே கூலி கொடுப்பவன். இருவரும் ஒன்றுதான். இருவரும் வேறுதான். கூலி வாங்குபவன் சிறிது சிறிதாகக் கரைந்தல்லவா கூலி கொடுப்பவனாக வளர்ந்துள்ளான்! இதிலிருந்து நாம் அறியும் உண்மையென்ன? கூலி கொடுக்கும் முதலாளியும் கூலி வாங்கும் தொழிலாளியும் படைக்கும் செயலில் இரண்டு தோற்றங்களே. படைப்பின் இரு நுனிகள். ஆயினும் இதில் உள்ள முக்கியமான அம்சமென்னவெனில் இவை இரண்டு நிலைகளும் ஒன்றை மற்றது அழிக்கவல்ல தன்மையை அடைந்துள்ளன என்பதே.

கூலி அடிமையாக உள்ளவன் தனது சக்தியைக் கொடுத்தே அல்லது இழந்தே கூலியைப் பெறுகின்றான். கூலி பெறவே தன் சக்தியை இழக்கின்றான். கூலிக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றான். தன்னை அழித்துக் கொண்டே ஒருவன் கூலி வாங்க முடிகின்றது. அனைவரும் 'கூலிக்கு மாரடிக்கும்' நிலைமை வளர்ந்துள்ளது. படைக்கும் செயலில் பெருவாரியான மக்களுக்கு ஆர்வமும் ஆனந்தமும் குன்றி வெறுப்பும் சலிப்புமே காணப்படும். இத்தகையதொரு நிலைமையை முற்றிலும் மாற்றியமைப்பதே கூலிக்காரர்களின் ஒரே இலட்சியம். இதில்தான் அவன் விடுதலையும் அடங்கியுள்ளது.

கூலி சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே போவதன் விளைவாக கூலி அடிமையாகிய உழைக்கும் மகன் தனக்குக் கூலி கொடுக்கும் முதலாளியாகிய 'ஆண்டவனுக்கு' சிறிது சிறிதாகத் தனது வலிமையைக் கொடுக்கின்றான். இந்த அடிமை எந்த அளவு அழிகின்றானோ அந்த அளவு இவனுடைய மறு உருவம் வலிமை அடைகின்றது. இத்தகையதொரு அபத்தமான நிலைமையைத் தொழிலாளி, விரும்பினும் விரும்பாவிடினும், உருவாக்கும் வகையில் உந்தப்பட்டுள்ளான். இதுவே முதலாளிய அமைப்பினுள் முதலாளி தொழிலாளி இருவரிடையே காணப்படும் உறவின் விளைவாக இருவரிடமும் ஏற்படும் பரஸ்பர மாறுதல்.

மூலதனம் என்பது உழைப்பின் மறுஉருவம் என்று கண்டோம். ஆயினும் எத்தகைய மறு உருவம்? உழைப்பையே அழிக்கவல்ல மறுவுருவம். இதையே பண்டத்துக்கும் படைப்பவனுக்கும் உள்ள உறவாகவும் நாம் கண்டோம் படைக்கப்பட்ட பண்டமே படைக்கும் மனிதனை அழிக்கவல்லதாக மாறிய நிலையிலேயே பண்டம் மூலதனம் என்ற பெயரை எய்திவிடுகின்றது. இந்த உறவே முதலாளியச் சமுதாய அமைப்பினுள் காணப்படும் சகல வகையான சமுதாய உறவினுள்ளும் காணப்படும் தன்மையாக இருக்கின்றது.

உழைப்பு அல்லது படைக்கும் செயல், மனிதனைக் குறிக்கும் சொல். ஏனெனில் மனிதனல்லவா படைப்புக்குக் காரணமாகின்றான்! தனது மூலத்தையே (பிறப்பிடத்தையே) அழிக்கும் மனிதனே முதலாளி. இத்தகைய மனிதன் உலகுக்கு (மக்களுக்கு) எவ்வாறு பயனுள்ளவனாக இருக்க முடியும்? இதன் காரணமாகவே மூலதனம் உலகுக்கில்லை என்று மார்க்ஸ் கூறுகின்றார். மாறாக அது உலகையே (மக்களையே) அழிக்கும் தன்மையை அல்லவா பெற்று வருகின்றது. அக்காரணத்தால் அது தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் நிலையையும் எய்தி விடுகின்றது. இறுதியில் அது தனக்குமில்லை என்ற நிலையை எய்தியே தீரும். தனக்கே தான் என்ற நிலை, தானே தனக்கில்லை என்ற நிலையை உருவாக்கும் விந்தையல்லவா இங்கு நாம் காண்கின்றோம்!

ஆயினும் தன்னைத்தானே அழிப்பதற்கு முன் மூலதனம் உழைப்பை (உலகை) அழிக்க முற்படுகின்றது. இதன் இறுதி விளைவாகவே தன்னையும் அழித்துக் கொள்ளும்.

உழைப்பாளியின் நிலை என்ன என்று காணலாம். உழைப்பாளி தொடக்கத்திலிருந்தே தானே தனக்கில்லை என்று தன் கதையைத் தொடங்குகின்றான். முதலாளி தான் பிறருக்கில்லை என்று தன் கதையைத் தொடங்கி

மறைமுகமாகத் தன்னழிவை எய்துவானேயாகில், தொழிலாளியோ நேரிடையாகவும் தெள்ளத் தெளிவாகவும் காணும் வகையில் முதலிலிருந்தே தன் அழிவுக்குக் காரணமாகின்றான். முதலாளி தொழிலாளி என்னும் உறவு இறுதியில் மனிதனின் தன்னழிவு உறவாக வளர்கின்றது என்பதே மார்க்சின் பரிசீலனை காட்டும் உண்மை.

ஒரு வகையில் காண்போமானால் இவையனைத்துமே உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாமலேற்படும் விளைவுகளாகவே காட்சி அளிக்கின்றன. இருப்பினும் இத்தகையதொரு தற்கொலை நிலையே இறுதியான தவிர்க்க முடியாத நிலை தானா? இந்த இக்கட்டிலிருந்து விடுதலை பெற்று வாழ மனிதகுலத்துக்கு வழியில்லையா? இதுவே முதலாளிய வளர்ச்சிக் காலத்தில் மனித குலத்தின் முன்எழும் ஒரே பிரச்சினை.

இத்தகைய மானிடச் சிக்கலை விலக்கியதோடு மட்டும் நில்லாமல் இதை விடுவிக்க வழிகாட்டிய பெருமையும் கார்ல் மார்க்சுக்கே உரித்தானது. மார்க்சியம், சிக்கலில் தோன்றிய தத்துவம்; சிக்கலை விளக்கிய தத்துவம்; சிக்கலை விடுவிக்க வழிகாட்டிய தத்துவம். இக்காரணமாகவே சிக்கலில் கட்டுண்டு கிடக்கும் எவர்க்குமே இத்தத்துவம் வெளிச்சத்தையும் தன்னம்பிக்கையும் கொடுக்க வல்லது. சிக்கலில் சிக்காதவர் எவர் தானுண்டு!

கூலிக்காரன் என்னும் மனிதன் தனக்கே தானில்லை என்ற நிலையில் வாழும் மனிதனாவானேயானால் அவனுக்கென்று என்ன தான் இருக்க முடியும்? அவனுக்கு எந்த வகையான உரிமையுமில்லை என்பதுதான் உண்மை. அவனுக்கு உலகமில்லை. இக்காரணத்தாலேயே அடிமைக்கு நாடு இல்லை என்றும் அவனுக்கு அடிமைத் தன்மையை தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை என்றும் மார்க்சு மிகத் தெளிவாகக் கூறினார்.

எப்படி உழைக்கும் மக்களுக்கு உலகமில்லையோ அவ்வாறே முதலாளிக்கும் நாடு கிடையாது. இவனுக்கும் உலகமனைத்தும் தேவை. உலகமனைத்தும் தன் சுரண்டலுக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கும் நிலையை முதலாளி காலப்போக்கில் எய்தியே தீர்கின்றான். அந்நிலையில் தான் அவன் அசுரத்தன்மை கொண்ட ஏகாதிபத்திய முதலாளியாக உருவெடுக்கின்றான். தன் நாட்டு மக்களை உறிஞ்சி இனி லாபமடைய வகையில்லை, அவர்களிடம் சக்தியில்லை என்ற நிலை வளர, இவன் பிறநாட்டு மக்களை உறிஞ்சப் பயணமாகின்றான். இந்நிலை முதலாளியத்தின் வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாததும் மற்றும் மறுக்க முடியாததுமான நியதி. இந்தப்போக்கே நாடுகளுக்கிடையே நடுக்கும் போராட்டங்களின் அடித்தளம். இவையே ஆக்கிரமிப்பு யுத்தங்கள். இவை முதலாளியப் போட்டியின் தவிர்க்க முடியாத விளைவுகளன்றி வேறென்ன?

உழைப்பாளியின் உடலை உறிஞ்சியே கொழுக்கின்றது என்ற ஒரே காரணத்தாலேயே மூலதனத்தின் அளவும் அதற்கொத்து அதன் வன்மையும் பெருகும். அதே சமயம் உழைப்பாளியின் பலமும் அவன் வாழ்க்கையின் நிலையும் எல்லா வகையிலும் அழிந்துகொண்டே செல்லும்.

பண்டங்கள் சந்தையில் ஏராளமாகக் குவிந்திருந்தும் அவைகளை உழைக்கும் மக்கள் வாங்க சக்தியில்லாமல் தத்தளிக்கின்றனர். இத்தகைய நிலை தோன்றுவது முதலாளிய அமைப்பினுள் ஒரு விந்தையல்ல. இன்னும் சொல்லப்போனால் இவ்வாறு பண்டங்கள் குவிவதால்தான் உழைப்பாளிகள் அவற்றை வாங்கும் சக்தியை இழக்கின்றனர். இவர்கள் முதலாளிகளிடம் இழந்த சக்திதானே இவ்வளவு அபரிமிதமான பண்டங்கள் உருவாவதற்குக் காரணம்? அப்படியிருக்க இவர்கள் எவ்வாறு இழந்த சக்தியைப் பெற முடியும்? பெற முடியுமானால் இழந்திருப்பார்களா? ஆகையால் தான் முதலாளிய அமைப்பினுள் சந்தையில் அதிகப்பண்டங்கள் தோன்றுவதே அபாயத்தின் அறிகுறி.

சரக்குகளின் அளவும் மதிப்பும் அதிகரிக்க அதிகரிக்க உழைப்பாளியின் மதிப்பும் நிலையும் அச்சரக்குகளை விட கீழாகச் செல்கின்றது. பண்டங்கள் உருவெடுக்க உழைப்பாளி அவசியம். ஆயினும் பண்டங்கள் அதிவேகமாகப் பெருகுவதாலேயே உழைப்பாளியின் வாங்கும் வன்மை அதே வேகத்தில் குறைகின்றது. அவனுடைய கூலி குறைவதாலேயே பண்டங்கள் விலைபோக முடியாத இக்கட்டு ஏற்படுகின்றது. அக்காரணத்தால் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டிய அவசியமும் மறைகின்றது. இத்தகைய தருவாயில் மில்களும், பாக்டரிகளும் மூடப்படுவது ஆச்சரியமல்லவே! இந்நிலை பண்டத்துக்கு படைப்பவன் அவசியமற்றவனாக மாறிவிடுகின்றான். உழைப்பாளியிடமிருந்த உழைக்கும் செல்வமாகிய வன்மையை அதிவேகமாக உறிஞ்சிவிட்ட காரணத்தால் அவனை இப்பொழுது பண்டம் என்னும் வேசி, வேண்டாப் பொருளாகத் தன் வீட்டைவிட்டு ஓட்டி விடுகின்றாள்.

முதலாளிய அமைப்பினுள் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கா மலிருக்கவே இருக்காது. ஒரு நிலையில் பல லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கவேண்டிய துர்பாக்கியமான நிகழ்ச்சி முதலாளியத்துடன் கூடப்பிறந்த நோய்.

ஆலைஅதிபர்கள் இன்று உழைப்பாளிகளுக்கு வேலையில்லை என்று கூறுகின்றனர். உழைக்கும் மக்களோவெனில் எப்படியோ ஒரு வேளைக் கஞ்சியாவது மிஞ்சட்டும் என்று இம்முதலாளிகளைக் கெஞ்சிக் கூத்தாடுகின்றனர். பண்டத்துக்கு உழைப்பாளி (மனிதன்) எந்த அளவு தனது உயிரைக்கொடுத்தானோ அந்த அளவு அது அவனை மாய்க்கின்றது. அவனும் தன் உயிரைக் காப்பாற்ற வகையின்றித் தவிக்கின்றான். 'இவன் வளர்த்தக்கடா இவன் மார்பிலேயே பாய்ந்துவிட்டது'. 'வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம்' என்பது உண்மையாகிவிட்டது. உற்பத்தியை

அதிகரிப்பது என்ற ஒரு குறிக்கோளை மட்டுமே மக்கள் கடைப்பிடிப்பார்களேயானால் இத்தகைய நிலை கட்டாயம் ஏற்பட்டே தீரும்.

உற்பத்திப் பெருக்கை தேசிய வளர்ச்சி, தேசீயக் கடமை, தேசீய நலன், தேச பக்தி என்றெல்லாம் சிலர் அழைக்கின்றனர். அதிலும் குறிப்பாகத் தொழிலாளர்களின் தலைவர்கள் என அழைக்கப்படுபவர் சிலரே இவ்வாறு கூறுகின்றனர். இவர்கள் கூறுவதனைத்தும் விஞ்ஞானப் புரட்டலன்றி வேறென்ன?

எவ்வாறு பல தொழிலாளர்கள் உழைக்கும் வன்மையிருந்தும் வேலையில்லாமல், வேலையை இழந்து நடுத்தெருவில் நிற்கின்றனரோ அவ்வாறே முதலாளிய அமைப்பினுள் வளர்ந்து வரும் கடும்போட்டியின் விளைவாக மெருகு கூட அழியாத பல இயந்திரங்களும் வேலையின்றிச் சும்மா கிடக்கும் நிலை ஏற்பட்டே தீர்கின்றது. வேலையில் இன்னும் இருக்கும் தொழிலாளர்கள், அதிவேகமாக அவர்களால் இயக்கப்படுவதாகக்கூறப்படும் இயந்திரங்களின் அம்சங்களாகவே மாறிவிடுகின்றனர். ஒரு பகுதி வேலையின்றித் துரத்தப்பட்டு மானமிழந்த பிச்சைக்காரர்களாக மாறும் காட்சியைக் காணுகின்றோம். இதில் பெண்கள் வேசிகளாக மாறுவதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது!

முதலாளிய உற்பத்தி முறையில் மூலதனத்தின் வளர்ச்சி தொழிலாளரைப் பொருத்தமட்டில் உள்ளத்தையும், உடலையும் எல்லாவகையிலும் சீரழிக்கின்றது, என்பதே நாம் இங்கு காணவேண்டிய இன்னொரு உண்மை.

மானிட உழைப்பு என்பது படைக்கும் செயல். இச்செயலே விலங்கையும் மனிதனையும் வேறுபடுத்திக் காட்டும் அம்சம். இச்செயலில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில்தான் ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு சாதாரணமான விலங்கு அல்ல, மாறாக தனிச்சிறப்பு வாய்ந்த, மானம் என்பதைக் கொண்ட ஒரு மானிடன் என்பதை சொல்லாமல்

சொல்கின்றான். ஆயினும் இத்தகைய படைக்கும் செயல், முதலாளிய அமைப்பினுள் இம்மனிதனை எவ்வாறு ஆக்குகின்றது?

படைக்கும் செயலான வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளிக்கு இம்மியளவாவது ஆர்வம் இருக்குமா? வேலைக்குச் செல்வதே வேண்டா வெறுப்பாகத் தானே இருக்கும்? கசாப்புக் கடைக்குச் செல்லும் ஆடு என்ன நினைக்குமோ அவ்வாறுதான் ஒவ்வொரு உழைப்பாளியின் மனமும் இருக்கும். சங்கு எப்பொழுது ஊதும், இந்த நரகவேதனை எப்போது தீரும் என்று தான் அவன் எதிர்பார்த்துக்கொண்டே இருப்பான். இத்தகைய நர(க) வேதனையை மறந்திருப்பதே அவனுடைய ஒரே விருப்பமாக அமைவது ஆச்சரியமல்ல. அதனால்தான் மிகுதி நேரத்தை குடிபோதையிலோ வேறு ஏதாவது போதையிலோ கழிக்க அவன் மனம் நாடுகின்றது. அவனிடம் இருக்கும் சில்லரையைப் பிடுங்க இன்று வேறுசில முதலாளிகளும் கிளம்பியுள்ளனர். இன்று நம்நாட்டில் கள்ளுக்கடையில்லையே என்று நினைக்கவேண்டா. அதைவிடப் போதைதரும் சினிமாக்களில்லையா? தொழிலாளர்களின் உணர்வை மழுங்கடித்துப் போலி இன்பத்தில் இவர்களைக் கனவு காண வைக்கும், பாலுணர்ச்சியே மேலோங்கிய சினிமாப்படங்கள் இந்நாட்டிலென்ன குறைச்சலா? தான்படும் துன்பத்தை எவ்வகையிலாவது மறந்தால் போதும் என்று தொழிலாளி எண்ணுவதும் விந்தையல்ல.

புலன்கள் உலகத்தின் உண்மையைக் காட்டும் என்பது விஞ்ஞானத்தின் துணிவு. ஆயினும் உண்மையைக் காட்டுவதை விட காட்டாமலிருப்பதே நல்லது என்று தொழிலாளி நினைக்கின்றான். புலன்கள் அவனுடைய கேவலமான நிலையை யல்லவோ அவனுக்கு எடுத்துக்காட்டும்? இவ்வாறு நினைவுபடுத்துவது எரிகின்ற கொள்ளியில் எண்ணையைக் கொட்டினாற்போல் அல்லவா

இருக்கும்? இதன் காரணமாகவே இவன் தனக்கு ஐம்புலன்களிருப்பதை ஒரு புண்ணியமாக நினைக்கவே மாட்டான். மாறாக மிகப்பெரியதொரு சாபக்கேடாகவே நினைக்கக்கூடும். இப்புலன்களை உணர்வற்றுப்போகச் செய்வதே இவனுக்கு நிம்மதியாகத் தோன்றும். சுருங்கச் சொன்னால் மனிதனாக இருப்பதைவிட மரக்கட்டையாக இருப்பதேமேல் என்று நினைக்க வைப்பது இம்முதலாளியமன்றி வேறு எது?

படைப்புகளில்லையேல் மனிதன் ஏனைய விலங்குகளினின்றும் வேறுபட்டவன் என்று கூற என்ன இருக்கின்றது? இருப்பினும் இம்முதலாளிய அமைப்பினுள் இப்படைப்புகளல்லவோ இவனை விலங்கிலும் கேடான நிலைக்கு அழுத்திக் கொண்டே செல்கின்றன? எச்செயல் இவனை மனிதனென்றும் மானமுடைய வனென்றும், கேவலம் மானமறியாத விலங்கல்ல என்றும் பறைசாற்றவேண்டுமோ அவையே இங்கு முதலாளிய அமைப்பினுள் அவனை மானம் கெட்டு விலங்கிலும் கேடான நிலைக்கு அதிவேகமாக மாற்றத்தலைப்பட்டுள்ளன. படைக்காமலிருப்பதே மனிதச் செயலாகக் காட்சி அளிக்கும். இது தான் அல்லவா முதலாளியக் கண்ணோட்டமும்.

மனிதன் விழித்திருக்கும் நேரத்தில்தான் படைக்கும் செயலில் ஈடுபடமுடியும், மற்றும் ஈடுபடுகின்றான். அப்படியாயின் அவன் விழித்திருக்கும் நேரத்தில்தான் மனிதனைப்போல வாழமுடியும். மாறாகத் தூங்கும் நேரத்திலோவெனில் அவனுக்கும் ஏனைய விலங்கினத்திற்கும் இருக்கும் வேறுபாடு மறைந்துவிடுகின்றது. முதலாளிய அமைப்பினுள்ளோவெனில் விழித்திருக்கும் நேரத்திலும் அவன் விலங்கினும் கேடான நிலைக்கு உந்தப்பட்டுவிடுகின்றான். விழித்திருப்பதை வெறுக்கின்றான். மனிதனாகக் காட்சியளிக்கக்கூடிய காலத்தை வெறுத்து விலங்கு நிலைக்கொத்த நேரத்தை விரும்பிச் செல்கின்றான். தூங்குவதே அவனுக்கு நிம்மதியான மானிடச் செயலாகக்

காட்சி அளிக்கும் நிலை வேகமாக உருவாகின்றது. எவ்வகையிலும் அவன் விலங்கு நிலையையே விரும்பிச் செல்கின்றான். இதுதான் முதலாளியத்தின் கீழ் படைக்கும் செயலும் படைப்புகளும் தொழிலாளிக்கு கொடுக்கும் பரிசுகள். இங்கு விலங்கு மனிதனாகவும் மனிதன் விலங்காகவும் மாறும் விந்தையையல்லவா காண்கின்றோம்? ஆம். அனைத்துமே தலைகீழாக மாறிவருகின்றன. ஆண்டவன் விலங்காகவும் (அடிமையாகவும்) விலங்கு ஆண்டவனாகவும் மாறினால் வேறு என்ன ஆகும்?

உழைப்பாளி உடனடியாகப் பல்வேறு வகையான அல்லலுக்கும் ஆளாகின்றான், முதலாளியோவெனில் காலப்போக்கில் தான் வழியை எய்துகின்றான். ஆயினும் இருவரும் உடனடியான விளைவுகளையே குறிப்பாகப் பார்க்கின்றனரேயன்றி நாளை வருவதைப் பார்க்க மறுக்கின்றனர். ஆயினும் தொழிலாளி காலப்போக்கில் நாளை ஏற்படும் நிலையையும் அறியும் வாய்ப்பைப் பெறுகின்றான். இதைக் காணாத வரையில் அவன் முதலாளிய வலைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டுதானிருப்பான்.

மேற்படி விளைவுகளை ஒவ்வொரு முதலாளிய நாடும் விதிவிலக்கின்றி அனுபவித்தே தீரவேண்டும். ஆயினும் இத்தகைய இறுதிநிலை ஏற்படும் முன்னரே இச்சமுதாய அமைப்பினுள் இந்நிலையை முற்றிலும் மாற்றி அமைக்கும் சக்திகள் தோன்றத்தான் செய்கின்றன. இப்படிப்பட்ட சக்தியே பொதுஉடமைத் தத்துவமும் உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்க இயக்கமும்.

பாட்டாளி வர்க்கம் இத்தத்துவத்தை உணர உணர, அது முதலாளியத்தைத் தகர்த்தெறிய உறுதியும் நம்பிக்கையும் அடைகின்றது. மனிதனுடைய இவ்வுலகத்தை ஓநாயும் கழுகும் உலவும் மயானமாக ஆக்கவல்ல இந்த முதலாளிய அமைப்பைச் சுவர்க்கமென்றும் இதுவே சனநாயகமென்றும், மனிதன் வாழ உகந்த மாளிகை

யென்றும் சுதந்திரக் காற்றடிக்கும் பூஞ்சோலை என்றும் பலர் வாய்கிழியப் பேசுகின்றனர். முதலாளியம் இறுதியில் சுடுகாட்டுத் தத்துவமன்றி வேறொன்றுமல்ல. பிண நாற்றத்தை நறுமணம் என்று கூப்பிட இச்சமுதாயம் கற்றுக்கொடுக்கின்றது, அவ்வளவே.

புதுஉலகைக் கட்டியே தீரவேண்டும் என்றும் அது உறுதியென்றும் கூறிக்கொண்டு தான் அசரீரிபோல பொதுஉடமைத் தத்துவம் உலகில் கிளம்பியுள்ளது. பாட்டாளி மக்கள் அதைக் கேட்க அம்மக்களுக்கு ஒளியும் பிறந்துவிட்டது. இனி இம்மக்களைத் தடுத்து நிறுத்த எச்சக்தியாலுமியலாது என்பதை உணர்த்தும் வகையில் இந்த நூற்றாண்டின் வரலாறு வெற்றி முரசு கொட்டுகின்றது.

மீண்டும் தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோள்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டு அடுத்த கட்டத்திற்குச் செல்வோம்.

முதலாளிகளின் சொத்துக்களைப் பங்கு போடுவதா இவ்வியக்கத்தின் குறிக்கோள்? அப்படிச் செய்தால், செய்வதால், ஏதாவது குணமாறுபாடு ஏற்பட்டுவிடுமா? இயலாது. மாறாக, பல குட்டி முதலாளிகளைத்தான் மறுபடியும் உருவாக்குவோம். இத்தகைய குட்டி முதலாளிகளாக ஆதியில் இருந்தவர்களிடையே ஏற்பட்ட, நடைபெற்றுவந்த, வியாபார உற்பத்திப் போட்டியின் விளைவாகத்தானே மிகப்பெரிய முதலாளிகளும் பயங்கரமான ஏகபோகங்களும் வளர்ந்தன! ஆகையால் முதலாளிகளின் சொத்துக்களைப் பங்கு போடுவதல்ல இப்புரட்சியின் இலட்சியம்.

மீண்டும் பழைய கிராமியச் சமுதாய அமைப்பை உருவாக்குவதா இவ்வியக்கத்தின் குறிக்கோள்? வயதுவந்த பையன் தகராறு செய்கின்றானென்

பதனாலும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதனாலும் அவனை மறுபடியும் குழந்தையாக மாறிவிடு என்று கூறுபவன் எவ்வளவு புத்திசாலியோ அவ்வளவு

புத்திசாலியே மறுபடியும் பழைய கிராமியச் சமுதாய அடிப்படையை வரவழைக்க வரிந்துகட்டுபவனும். தவிர அப்படி மாற்றி அமைத்தாலும் பிரச்சினை தீராது. இதுவும் இப்புரட்சியின் இலட்சியமல்ல.

மனிதனின் படைக்கும் திறனான உழைப்பு இரு கூறாகப் பிரிந்து ஒன்று மற்றதை அழிப்பதே தன் வாழ்வின் பயன் என்ற நிலையை எய்திவிட்டதால், இதை முற்றிலும் அகற்றி மூலதனம், கூலி, கூலி அடிமை என்ற கூறுகளே சமுதாயத்தில் இல்லாமல் செய்வதே இப்புரட்சியின் இலட்சியம். மூலதனம், கூலி அடிமை என்ற இருகூறுகள் சமுதாயத்துள் இருக்கும்வரையில் இவ்விரண்டும் வெகுவேகமாக மானிடமல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றன. மானிடம் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருகின்றது. இத்தகையதொரு சகிக்கமுடியாத, மற்றும் தாங்கமுடியாத பிரிவினையை அகற்றுவதே இப்புரட்சியின் இலட்சியம்.

இத்தகைய பிரிவினையின் அடிப்படைக் காரணம் பொருளாதாரப் பிரிவினையன்றி வேறென்ன? இத்தகைய பிரிவினையே மனிதனை ஆட்டிப் படைக்கும் பிசாசாக மாறிவிட்டது. நரமாமிசம் உண்பதிலேயே நாட்டம் கொண்ட மூலதனம் என்ற பிசாசு உருவத்தை எய்திவிட்ட மானிடச் சக்தியை அடக்கி, இறுதியில் அவ்வுருவத்தை அழித்தாலன்றி நிலைமை மாற்றிவிட்டதாகக் கூறமுடியாது. இத்தகைய பணியைச் செய்வதே பாட்டாளிவர்க்கத்தின் முழுமையான ஆதிக்கத்தின் கடன். இவ்வரசு சர்வாதிகாரமாகத் தானிருக்க முடியும். நரமாமிசத்தில் நாட்டம் கொண்ட பிசாசாகிய மூலதனத்துக்கு எள்ளளவும் சுதந்திரம் கொடுக்க இயலாது. அத்தகைய சுதந்திரம் கொடுப்பதன் அர்த்தம், மறுமுறையும் இப்பிசாசின் பிடிக்கு மனிதனைப் பலிகொடுப்பதல்லாது வேறு என்ன? மனிதனை அழிக்கும் செயலுக்கும் அத்தகைய சூழ்நிலைக்கும் ஒரு சமுதாய அமைப்புக்கும் வரை

வாய்ப்புக் கொடுப்பதை சனநாயகம் என்று கூறினால் அத்தகையதொரு சனநாயகம் பாட்டாளி மக்களுக்கு அவசியமா? நிச்சயமாக அவசியமில்லை.

மற்றும் இத்தகைய புதிய சமுதாயத்துள் லாபம் என்பது உற்பத்தியின் குறிக்கோளாக இருக்கவே முடியாது. மக்கள் நல்வாழ்வே உற்பத்தியின் ஒரே குறிக்கோளாக இருக்கும். இவையே பாட்டாளி வர்க்க விடுதலையின் அடிப்படையான இலட்சியங்கள்; இவர்கள் கோரும் விடுதலையின் சாராம்சமான உள்ளடக்கம். இப்பணியை உழைக்கும் மக்களன்றி எவர்தான் செய்யத்துணிவர்? நரமாமிசம் உண்ணும் மூலதனம் என்ற பிசாசால் ஒவ்வொரு கணமும் அணு அணுவாக வதைக்கப்படும் இவர்களுக்குத்தானே இப்பணியில் ஆர்வமும் துணிவும் தோன்றுவது சாத்தியம்! இவ்வாறிருக்க, நம் நாட்டிலோவெனில் சில புரட்டர்கள் கூறுவதென்ன? ‘முதலாளிகளும் சோசலிசத்தைச் சமைக்க வருவார்கள். காலம் மாறிப்போச்சு. மார்க்ஸ் கூறியதெல்லாம் காலாவதியாகிவிட்டது. இது இருபதாவது நூற்றாண்டு. புலி மாறிவிட்டது. அது ஆட்டை இனித் தின்னாது. அதுவும் இதோபதேசத்தால் சாந்த சொரூபியாகி வருகின்றது’ என்று இம்மேதாவிகள் புத்திமதி கூறுகின்றனர். புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது. ஏகாதிபத்தியம் தன் கொள்ளை வேட்டையை விட்டு விடாது. முதலாளியத்தின் அடிப்படை இலக்கணம் மாறவில்லை, மாறாது என்பதை எல்லாம் இப்புரட்டர்கள் எடுத்துக் கூறும் துணிவை ஏன் இழந்து நிற்கின்றனர்? ஏதாவது உண்மையான காரணம் இருந்தே தீரவேண்டும். இவர்கள் புலியின் நண்பர்களன்றி ஆட்டின் காவலர்களுமல்ல. இடையனின் நண்பர்களும் அல்ல. ஆளும் வர்க்கம் ஆண்டாண்டுக் காலத்திற்கு உருக்குலையாமல் அப்படியே இருக்க வேண்டும் என்பதில் இவர்கள் கொண்ட அக்கறைக்கு அளவே இல்லை.

5. மனித வரலாறும் தன் அறிவும் தோற்றமும்

எதற்கும் வரலாறு உண்டு

- ஜே.பி.எஸ். ஹால்டேன்

தத்-த்வம்-அசி (அதுவே நீ)

- வேதாந்தத்தின் சாரம்

முதலாளிய அமைப்பினுள் ஏற்பட்டே தீரும் விபரீதமான விளைவுகளை இதுவரை ஓரளவு விளக்கினோம். இத்தகையதொரு சமுதாயம் ஏன் தோன்றிற்று? அதன் பொருள் தான் என்ன? இது மானிட வரலாற்றில் ஆற்றிய பங்கு தான் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கு இனி விடை காணலாம்.

விலங்கினமாக இருந்து சிறிது சிறிதாக உருமாறியே மானிடப் பிறவி தோன்றிற்று என்பது விஞ்ஞானத்தின் துணிவு. இம்முடிவைப் பலர் சந்தேகிக்கலாம். சிலர் வெறுக்கலாம். இன்னும் சிலர் பொய்யெனக் கூறலாம். ஆயினும் இம்முடிவு உண்மையெனக்கூற ஆயிரம் ஆதாரங்களுண்டு.

மனிதனின் உடலை மட்டுமே கணக்கில் கொண்டால் அவனும் ஒரு விலங்கே என்பதை எளிதில் நாம் உணரமுடியும். அவன் தூங்கும் பொழுது ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபட்டவனல்ல. அவன் விழித்திருக்கும் வேளையில் அல்லவா தான் ஒரு சாதாரணமான விலங்கல்ல என்பதைப் பல வழிகளிலும் நிரூபித்துக்காட்ட இயலும்! விலங்குகளுக்கும் ஐம்புலன்களுண்டு. மனிதனுக்கும் ஐம்புலன்களே உண்டு. பகுத்தறிவு எனப்படும் தன்மை விலங்குகளுக்கும் உண்டு என்பதை நாம் மறக்க வேண்டாம். ஆயினும் மனிதன் எவ்வகையிலோ, தான் மற்ற விலங்குகளினின்றும் மிகப்பெரிய அளவு வேறுபடுகின்றான்.

அத்தகைய வேறுபாடு என்ன? இவ்வேறுபாட்டின் அடிப்படையென்ன? என்பவை அடிப்படையான கேள்விகள்.

வறட்டு நாத்திகம் கூறுவதென்ன? இத்தகைய குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்பதே அதன் இறுதி முடிவு. இவ்வாறு கூறுவதே இத்தத்துவத்தின் அடிப்படையான பலவீனம். அதற்கு நேர்மாறாக, ஆன்மீகமோ இத்தகையதொரு வேறுபாட்டின் மீதே அழுத்தம் கொடுக்கின்றது. இத்தகைய அடிப்படையே ஆன்மீகத்தின் பலம்.

வறட்டு நாத்திகம் எதை மறுக்கின்றதோ அதையே ஆன்மீகம் வலியுறுத்துகின்றது. மனிதனுக்குத் தனிச் சிறப்பான அம்சம் அவனுடைய உடலல்ல, அவனது உள்ளமே என்பது ஆன்மீகத்தின் அடிப்படை. வறட்டு நாத்திகம் இதை மறுக்கின்றது. உள்ளம் என்பது என்ன? இதயம், மூளை, கண் என்பவைபோல உள்ளத்தைக் காண முடியுமா, தொட முடியுமா என்று கேள்விகளை வறட்டு நாத்திகம் அடுக்குகின்றது. அவ்வாறு காட்டக்கூடியதாக இருந்தாலன்றி அத்தகைய ஒன்று இருப்பதாக ஒப்புக்கொள்ள இயலாது என்று கூறி உள்ளம் என்று ஒன்றுமில்லையென அடித்துக் கூறுகின்றது.

வறட்டு நாத்திகத்தின் இம்முடிவை ஒப்புக்கொள்ள மனம் மறுக்கின்றது. அக்காரணமாகவே பல அடிப்படைத் தவறுகளையும் மூட நம்பிக்கைகளையும் ஒப்புக் கொள்ளும் ஆன்மீகத்தை மனம் நாடுகின்றது. மாறாக, பல உண்மைகளையே அடிப்படையில் கொண்ட நாத்திகத்தை மனம் நாடக் கூசுகின்றது.

நமது தமிழகத்தில் இத்தகைய வறட்டு நாத்திகத்தை இந்த அரை நூற்றாண்டுக் காலமாக வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வந்த பெருமை பெரியார் என்று அழைக்கப்படும் ஈ.வே. ராமசாமியைச் சாரும். இவருடைய தத்துவம் அப்பட்டமான கலப்பற்ற நாத்திகம் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவருக்கு உள்ளம் என்பதன் உண்மை விளங்காத புதிராகத்தான் இருந்தது. இவர் உடலை மட்டுமே கண்டவர். மற்றும் பிறரையும் அவ்வாறே காணத் தூண்டியவர். இக்காரணமாகவே இவருக்கு ஆன்மீகமும் சமயத்தின்

சாராம்சமும் புரியவேயில்லை. இவைகளை இவர் அப்பட்டமான பூசாரிக் கூத்தாகவே வர்ணித்தார். இவருடைய நாத்திகம் உள்ளத்தைக் கண்ட நாத்திகமல்ல. அக்காரணத்தாலேயே இது உள்ளத்தை வென்ற நாத்திகமுமல்ல. உள்ளத்தைக் கண்ட நாத்திகமே உள்ளத்தை வெல்லும் நாத்திகம்.

ஆன்மீகத்தின் உயிர்நாடி எங்கு மறைந்துள்ளது என்பதை இவர் உணர்ந்தவராகவே இல்லை. இதன் காரணமாகவே இவர் பல மூட நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்களை மடையர்களென்றும் முட்டாள்களென்றும் பகிங்கரமாக வசைபாடுமளவுக்குச் சென்றார். ஏன் மக்கள் இவர் கூறும் உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்? மாறாக, இன்னும் கோவிலுக்குப் போகின்றனர். மொட்டையடித்துக் கொள்கின்றனர். தெய்வத்தையும் பூதத்தையும் வழிபடுகின்றனர். சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றனர். சோசியம் பார்க்கின்றனர். இவையனைத்தும் இவருக்குப் புரியாத புதிராகத் தானிருக்கும்.

இவருடைய தோல்வி உண்மையானது. ஆயினும் இவருக்கோ தனது தோல்வியின் உண்மைக் காரணம் புலனாகவில்லை. வறட்டு நாத்திகம் இறுதியில் புத்திசாலித்தனமான ஆன்மீகத்திடம் தோல்வியடைவது திண்ணம் என்பதற்குத் தமிழகத்தின் கடந்த ஐம்பதாண்டு வரலாறே போதிய சான்றாகும்.

'உள்ளம்' என்ற சொல் எதைக் குறிக்கின்றது? மற்றும் இவ்வுள்ளம் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? மற்றும் இது ஏன் விலங்கினங்களுள் இருக்க முடியாது என்பதையும் ஆராய்வோம்.

மனிதனுக்கும் விலங்குக்கும் இடையேயுள்ள மிகப் பெரியதும் குறிப்பிடத்தக்கதுமான வேறுபாடு அவனுக்கே உரித்தான தன் – அறிவன்றி வேறல்ல. இதையே இன – அறிவு என்றும் கூறலாம். விலங்குகளுக்கும் பகுத்தறிவு

உண்டு. ஆயினும் இவை தங்களுடைய இனத்தையோ தங்களைக் குறித்தோ சிந்திக்கின்றன என்று கூற எந்த ஆதாரமும் கிடையாது. தன்னையும் தன் இனத்தையும் சிந்திக்கும் சுட்டுப் பொருளாக ஆக்கிக் கொள்ளும் தன்மையை மனிதனிடத்தில் தான் நாம் காண்கின்றோம். அத்தகையதொரு விசேட அறிவின் அடித்தளத்தையே ஆன்மா, உள்ளம் என்ற பல வகையான சொற்களால் குறிப்பிடுகின்றனர்.

தன் – அறிவின் மையம் எது? 'நானே என் தன் – அறிவின் மையம். அதுபோல நீயே உனது தன் – அறிவின் மையம். இதிலிருந்து நாம் அறியும் உண்மையென்ன? மனிதன் தன்னையே ஒரு குறிப்பிடத்தக்க, அல்லது சுட்டிக்காட்டவல்ல, மற்றும் உணரக்கூடியதொரு வெளிப்பொருள்போல் ஆக்கிக் கொள்கின்றான்.

ஒவ்வொரு பொருளையும் இது அது என்று வேறுபடுத்தி நாம் சுட்டிக்காட்டுகின்றோம். அப்படிக் காட்டத்தக்க பொருள்கள், அறியத்தக்க பொருள்கள் எனத் தோன்றுகின்றன. அவ்வாறே மனிதன் தன்னையும் தன் இனத்தையும் எவ்வாறு தனது சிந்தனையின் வெளிப்பொருளாகவும் ஆக்கிக்கொள்கின்றான் என்பதே இங்கு எழவேண்டிய குறிப்பான கேள்வி. தவிர ஏனைய விலங்குகள் ஏன் இத்தகைய அறிவைப் பெறவில்லை என்பதும் இங்கு எழும் அடுத்த கேள்வி.

தன்-அறிவு, மெய்அறிவு ஆத்ம ஞானம் இன அறிவு என்றெல்லாம் அழைக்கப்படும் தனிச்சிறப்பான அறிவு மனிதனுக்கே உரித்தானது என்று ஆன்மீகம் வலியுறுத்துகின்றது. ஆயினும் ஐம்புலன்களால் இத்தகைய அறிவைப் பெற இயலாது என்றும் ஆன்மீகம் அடித்துக் கூறுகின்றது. ஏன், எக்காரணத்தால் என்று கேட்கத்தானே தோன்றுகின்றது. ஆம். இத்தகைய கேள்வியைக் கண்டு ஆன்மீகம் நடுங்குவதில்லை. அதற்கும் ஒரு விளக்கத்தை ஆன்மீகம் அளிக்கின்றது.

ஐம்புலன்களால் தன் – அறிவையோ, இன் அறிவையோ பெறுவது சாத்தியமானால் ஏனைய விலங்குகளுக்கும் இவ்வறிவு சாத்தியமாகத் தானே இருக்கமுடியும் என்று தனது கேள்வியை ஆன்மீகம் கிளப்புகின்றது. ஆயினும் விலங்குகளுக்கு இவ்விசேட அறிவு உண்டு எனக்கூற ஆதாரமில்லை. அக்காரணத்தால்தான் ஐம்புலன்களால் மெய்-அறிவை அடைவது சாத்தியமல்ல என்று ஆன்மீகம் கூறுகின்றது. இக்காரணத்தாலே ஆன்மீகம் 'ஆன்மா' என்ற ஒரு கருத்தை வலியுறுத்துகின்றது.

ஆன்மாவே மெய்-அறிவின் அடித்தளம். இத்தகைய ஆன்மா கடவுளால் மனிதனுக்கே தனிச்செல்வமாக அருளப்பட்டது. இதை மனிதன், விலங்குகளினின்றும் பெற்றிருக்க முடியாது. 'இல்லது வாராது' என்று அதற்கு ஒரு சான்றையும் கூறுவர். இத்தகையதொரு வாதத்தை உடைப்பது எவ்வளவு எளிதல்ல. மற்றும் மறுப்பதால் வென்றவனாகிவிடவும் முடியாது. இத்தகைய வாதத்தை வறட்டு நாத்திகம் வெல்ல இயலாததே அத்ததத்துவத்தின் பலவீனம். மற்றும் இறுதித் தோல்விக்கும் அடிப்படைக் காரணம்.

ஆன்மா என்ற ஒரு கருத்தை உண்டென ஒப்புக்கொண்டால் அத்துடன் தெய்வம், அருள் மற்றும் அருள் பெற்றவர்கள், அருள் பெறாதவர்கள், மறுபிறவி, சுவர்க்கம், விதி, வினைப்பயன் போன்ற பல கருத்துக்களையும் ஒப்புக் கொள்ள நேரிடுமே என்று வறட்டு நாத்திகம் பயப்படுகின்றது. இவையனைத்தையும் ஒப்புக்கொள்வது மதியீனம் என்பதை வறட்டு நாத்திகம் உணர்கின்றது. அக்காரணத்தாலேயே அது ஆன்மா என்ற ஒன்றும் கிடையாது என்று மொட்டையாகத் தன் முடிவைக் கூறுகின்றது.

ஆயினும் இப்படி மறுப்பதால் மட்டுமே பிரச்சினை தீராது என்பதை நாம் உணர்வது மிக அவசியம். கிளப்பியுள்ள குறிப்பான பிரச்சினைக்குச் சரியான விடை அளிக்காவிட்டால்

ஆன்மீகத்தை வென்றதாக ஆகாது. ஆன்மாவை ஒப்புக் கொள்ளாததால் 'உள்ளம்' என்பதையும் வறட்டு நாத்திகம் மறுக்கின்றது. 'உள்ளம்' 'ஆன்மா' என்பவையெல்லாம் மக்களை ஏமாற்றப் பூசாரிக் கூட்டங்கள் ஏற்படுத்திய மூடநம்பிக்கைகள் மற்றும் புரட்டல்கள் மூடநம்பிக்கைகள் மற்றும் புரட்டல்கள் என்ற முடிவுக்கு வறட்டு நாத்திகம் வருகின்றது. இதற்கு மேல் அது கூற இயலாததே இதன் தோல்விக்கு அடிப்படைக் காரணம். பொது உடைமைத் தத்துவம் (இயக்க இயலை அடிப்படையாகக் கொண்ட நாத்திகம்) என்ன கூறுகிறது?

மெய் அறிவு அல்லது இன அறிவு என்பது மனிதனுக்கே உரித்தான தனிச்சிறப்பு என்பதை இத்தத்துவம் ஒப்புக்கொள்கிறது. இத்தகைய அறிவு உதயமாகும் பொழுதே விலங்கென்ற நிலையைக் கடந்து மானுடம் தோன்றுகின்றது என்பது பொது உடைமைத் தத்துவத்தின் வாதம். இருப்பினும் ஆன்மா, கடவுள், தெய்வீகம், அருள் என்பவை போன்ற கருத்துக்களை இத்தத்துவம் மறுக்கின்றது. இவையனைத்தும் கற்பனையே எனக் கூறுகின்றது. அப்படியானால் மெய்யறிவு எவ்வாறு தோன்றுகின்றது என்பதை எவ்வகையில் இத்தத்துவம் விளக்குகின்றது என்ற கேள்வி எழுகிறது.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவைகளை நாம் கேள்விப்படுகிறோம். 'நான் சட்டியைச் செய்தேன்' என்ற வாக்கியத்தில் 'நான்' என்னும் சொல் எழுவாயாகவும் 'செய்தேன்' என்ற சொல் பயனிலையாகவும் 'சட்டி' என்ற சொல் செயப்படு பொருளாகவும் அமைந்துள்ளன. சட்டியைச் செய்யங்காலத்தில் தான் அது குறிப்பிடத்தக்க பொருளாக வரலாற்றில் தோன்றுகின்றது. அவ்வாறு செய்யப்பட்ட பொருளே அறிவின் வெளி அஸ்திவாரமாகவும் ஆகின்றது. சட்டியைக் குறித்த விசேட அறிவு அதைச் செய்ததன் விளைவாகவே தோன்றுகின்றது. மற்றும் தோன்றவும் முடியும். இவ்வாறேதான் தன்னறிவின் நிலையுமிருக்க முடியும். மனிதன் தன்னையும் தனது

இனத்தையும் எவ்வகையில் செயற்பொருளாகவும் தனது சிந்தனையின் வெளிப்பொருளாகவும் ஆக்குகின்றான் என்பதே இங்கு கிளம்பும் முக்கியமான கேள்வி. தன்னை ஒத்த ஒரு உருவத்தைச் செய்த பிறகா அவனுக்குத் தன்னறிவு ஏற்பட்டது? அப்படியானால் அவன் தன் இனத்தை எவ்வாறு வெளிப்பொருளாக ஆக்கியிருக்க முடியும்?

மனிதன் படைத்துள்ள அனைத்துமே அவனையும் அவனுடைய இனத்தையும் அடக்கியுள்ளன என்பதே மார்க்ஸ் கூறும் மாபெரும் உண்மை. ஒருவகையில் "தத்துவமசி" என்ற வேதாந்த சாரம் பெரியதொரு உண்மையைத் தன்னுள் அடக்கியுள்ளது என்றே பொது உடமை தத்துவம் கருதவேண்டும். அங்ஙனம் இருப்பதால் தான் ... ... மனிதனின் செயலே அவனை எல்லா வகையிலும் அடக்கிய மற்றும் விடுவிக்கும் அறிவைக் கொடுக்க வல்லது என்பதே இங்கு நாம் காணும் உண்மை. மனிதன் சென்ற இடமெல்லாம் அவனுடைய கைபட்ட இடமெல்லாம் – அவனிருந்தான் என்று பறைசாற்றுகிறது. அவன் பயன்படுத்தி விட்டுச் சென்ற பொருள்களனைத்துமே, அவைகளைப் பயன்படுத்திய பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், சிந்தனை உலகம் (கற்பனை உலகம்) எப்படிப் பட்டதாக இருந்திருக்க முடியும் என்று நமக்குக் காட்டுவதில்லையா? இவைகளை ஆதாரமாகக் கொண்டல்லவா அறிஞர்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் பண்டை மனிதனைச் சித்தரிக்கின்றார்கள்? மனிதனால் படைக்கப்பட்ட பொருள்களனைத்துள்ளும் அம்மனிதன் மறைந்தும் மறையாமலும் வாழ்கின்றான் என்பதே இதன் உட்பொருள்.

அவனுடைய படைப்புகளின் வாயிலாகவே மனிதன் தன்னையும் தன் இனத்தையும் தன் சிந்தனையின் வெளிப்பொருளாக ஆக்கிக் கொள்கின்றான். அவைகளை உற்று நோக்குங்கால், சிந்திக்குங்கால், ஆராயுங்கால் அவன் தன்னையும் தன்னினத்தையுமே சிந்திக்கின்றான். இதுவே அவனுடைய மெய்யறிவின் அடிப்படை, மற்றும் தோற்றம்.

படைப்பே மெய்யறிவின் அஸ்திவாரம். படைக்கும் செயலே தன்னறிவைத் தோற்றுவிக்கும் செயல். விலங்குகள் படைப்பவையல்ல. அக்காரணத்தாலேயே இவை மெய்யறிவையோ இன அறிவையோ பெற இயலாதவைகளாகின்றன. இத்தகைய படைப்பே மனிதனின் பேரறிவுக்கும் தனித்தன்மைக்கும் மூலக்காரணம்.

இவ்வாறு படைக்கப்பட்ட பொருள்கள் அவனுடைய உடலுக்கு அப்பாலிருக்கின்றன. அக்காரணத்தாலேயே இவனுடைய தன்னறிவின் அடிப்படையை இவனுடைய உடலுக்குள் காண இயலாது. இவனுடைய உடலை மட்டுமே பரிசோதனை செய்பவர்களுக்கு இவனுடைய விசேடமான தன்னறிவின் அஸ்திவாரம் கண்ணுக்குத் தெரியாது. அவர்கள் 'ஆளில்லா வீட்டில் திருடனைத் தேடிவிட்டு, அவன் இல்லவேயில்லை' என்று கூறுபவர்கள்போல, உள்ளம் என்பது கற்பனை, அத்தகைய ஒரு அங்கம் காணவில்லை என்று கூறுகின்றனர். இவர்களுக்கு உள்ளம் 'தன்னறிவு' என்பவையெல்லாம் புரியாதவையாகவும் அர்த்தமற்றவையாகவுமே தோன்றுகின்றன.

படைக்கும் செயலே உண்மையான மெய்யறிவுக்குக் காரணமாயின் புலன்களுக்கு எம்மதிப்பைக் கொடுக்கவேண்டும் என்ற கேள்வி எழும். புலன்களால் அல்லவா படைப்பு சாத்தியமாகின்றது! அவைகளாலல்லவா படைப்பை அறியவும் இயலுகின்றது! இக்காரணத்தாலேயே புலன்கள் உண்மையைக்கான உதவுபவை என்றே கூறவேண்டும். இந்தப்பிரச்சினையில் எல்லா வகையான நாத்திக வாதங்களும் ஒரே முடிவை ஆதரிக்கின்றன. புலன்கள் வாயிலாகவே உண்மையை அறியமுடியும் என்பதே எல்லா வகையான நாத்திக வாதங்களின் அடிப்படை. ஆன்மீகம், ஏன் புலன்கள் மெய்யறிவின் அஸ்திவாரமாகிய பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே அதன் தவறின் அடிப்படைக் காரணம். பொருளைச் சந்தேகித்து அதை வெறுக்கவும் துறக்கவும் அதை மாயை என்று கூறவும்

தூண்டும் ஆன்மீகம் புலனை மட்டும் எவ்வாறு ஒத்துக்கொள்ளும்? பொருளை உண்டென மதிக்கும் தத்துவங்களே புலனையும் மதிக்கும். பொருளையும் புலனையும் அவமதித்து மறுப்பதாலேயே ஆன்மீகம் தன்னறிவின் அடிப்படையை விளக்க 'ஆன்மா' என்ற ஒன்றைக் கற்பிக்க வேண்டி வருகின்றது.

படைப்பின் வளர்ச்சியின் வாயிலாகவே மானுடம் வளர்ந்துள்ளது என்பது பொது உடைமைத் தத்துவத்தின் சாராம்சம். கைகளால்தான் மனிதன் படைக்கின்றான் என்பதை சுலபமாக உணர முடியும். அதாவது கைகள் படைப்புக்குக் காரணம். இதைவிடப் பெரியதொரு உண்மை என்னவென்றால், படைக்கும் செயலே மக்களின் வளர்ச்சிக்கும் காரணம் என்பதே. அதாவது படைக்கும் செயல் கைகளுக்கும் காரணமாகின்றது. 'சித்திரமும் கைப்பழக்கம்' 'பாடப்பாட ராகம்' என்பவை போன்ற பழமொழிகள் அனைத்துமே, செயல் எவ்வாறு மனிதனை வளர்க்கின்றது. புதுமைப்படுத்துகின்றது என்பதையே வலியுறுத்துகின்றன. படைப்பு, கையின் வளர்ச்சிக்கும்; கைகள், படைப்புகள் தோன்றவும் காரணமாயிருக்கின்றன என்பதை 'படைப்புத் தோன்றக் கைகள்' என்று சுருக்கிக் கூறலாம். அதுபோல 'படைப்புத் தோன்ற மானிடம்' என்று கூறுவதும் முற்றிலும் சரியே. மனிதன் படைப்புக்குக் காரணமாகின்றான் என்பதையும் படைப்பே மனிதன் தோன்றி வளர்ந்ததற்குக் காரணமாயிற்று என்பதையும் குறிக்க இவ்வாறு கூறுகின்றோம். (இந்த வினையெச்சம் தமிழின் தனிச்சிறப்பு என்றே நினைக்கின்றேன்).

படைப்புகள் மனிதனின் மெய்யறிவுக்குக் காரணமான வெளி அம்சங்கள் என்பதை ஆராய்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. படைக்கும் செயலே நமது அறிவு வளர்ச்சிக்குக் காரணம் என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது. மூளை, புலன், படைக்கும் செயல் பண்டம் இவையனைத்தும் சங்கிலி கோத்தாற்போல் இருக்கின்றன.

இவைகளின் வளர்ச்சியும், இணைப்புமே மானிட வரலாற்றில் மிகமுக்கியமான அம்சம்.

மனிதனின் செயலே மனிதனின் உண்மையானதும் மற்றும் முழுமையானதுமான வளர்ச்சிக்குக் காரணம் என்று பொது – உடைமைத் தத்துவம் கூறுவதன் காரணமாகவே இத்தத்துவம் மனிதனுக்கு தன்னம்பிக்கையை ஊட்டவல்லது என்பதில் எள்ளளவும் ஐயமேயில்லை. இருப்பினும் இத்தகைய படைப்பும், படைக்கும் செயலும் படைப்பவனை முதலாளியச்சமுதாய அமைப்பினுள் எப்படியெல்லாம் உருக்குலைந்து சீரழிக்கின்றது என்பதையே நாம் இதுவரை குறிப்பாக விளக்கினோம். அன்று விலங்காகத் திரிந்தவனை, படைக்கும் செயல் மனிதனாக ஆக்கிற்று. இன்று அதே செயல் மனிதனை விலங்கினும் கேடான நிலைக்கு அழுத்துகின்றது. எக்காரணத்தால் படைப்பவனைப் படைப்பும் படைக்கும் செயலும் அழிக்கத் தலைப்பட்டுவிட்டன என்பதே இதுவரை நாம் விளக்கிய சில உண்மைகள்.

இவ்வாறு இங்கு இச்சமுதாயத்துள் பொருளும் படைக்கும் செயலும் அவைகளின் காரணனாகிய உழைப்பாளியை நையப்புடைத்து எல்லா வகையிலும் பொருளற்றவனாக ஆக்கத் தலைப்பட்டால், இத்தகைய படைப்பும் படைக்கும் செயலும் அவனுக்கு எவ்வாறு காட்சியளிக்கக் கூடும்? படைப்பு இவனை அழிக்கவல்ல ஒரு பொருளாகவும், படைக்கும் செயல் சீரழிக்கும் வேலையாகவும் தானே காட்சி அளிக்கும்! ஏன் ஒவ்வொரு தொழிலாளியும் இப்படித்தானே நினைக்கின்றான்!

மனிதனால் உருவெடுத்து, மற்றும் மனிதன் ஆக்கிய பொருளும், அதற்கான செயலும் மற்றுமொரு நிலையில் அவனையே அழிக்கத் தலைப்பட்டுள்ளன. இத்தகையதொரு சிக்கலில்தான் தத்துவம் உதயமாகின்றது. மற்றும் இத்தகைய நிகழ்வே எல்லாவகையான கொள்கை குழப்பங்களுக்கும் பல வகையான தத்துவங்களுக்கும் காரணமாகின்றது.

வீட்டை இடிப்பதும் சம்மட்டி, அதைக்கட்ட உபயோகமாவதும் சம்மட்டி. இப்படிப் பட்டவையே அனைத்தும். இக்காரணமாகவே எதையும் ஒரேடியாக நல்லது, கெட்டது என்று கூறுவது அவ்வளவு எளிதல்ல. சூழ்நிலைகளைச் சரியாக அறியாமல் எதையும் உறுதியாகக் கூறுவது சரியல்ல. அன்று பொருளும் மனிதனின் செயலும் எத்தகைய சூழ்நிலையில் இயங்கி வந்தன, மாறாக இன்று அவையே எத்தகையதொரு சூழ்நிலையில் இயங்கிவருகின்றன என்பதை ஆழமாகப் பரிசீலனை செய்தாலன்றி உண்மை விளங்காது. இத்தகையதொரு சூழ்நிலைப் பரிசீலனையை (இதுவே வரலாற்றுப் பரிசீலனை) வறட்டு நாத்திகமோ ஆன்மீகமோ செய்யத் தவறுகின்றது. அதாவது இவ்விரு கண்ணோட்டங்களும் வரலாற்றைக் கணக்கில் கொள்ளாத கண்ணோட்டங்கள். இதன் விளைவாகவே ஒன்று, பொருளை மொட்டையாக நல்லது என்றும் மற்றது பொருளை மொட்டையாகப் பொல்லாதது என்றும் கூறுகின்றன. ஒன்று உடலே அனைத்தும் என்றும் மற்றது உடலே உதவாதது என்றும் உரக்க கூறுகின்றன.

உண்மையென்ன? மூளை, புலன், செயல், பொருள் இவை அனைத்தும் இணைந்துள்ளவை. இந்த இணைப்பின் தன்மையையே சூழ்நிலை என்று கூறுகின்றோம். இச்சூழ்நிலை இவைகளைப் பாதிக்கின்றன. பொருளுக்கும் பொருளைப் படைக்கும் மனிதனுக்குமிடையே காணப்படும் உறவே இதில் குறிப்பாகக் காணவேண்டிய உறவு. மற்றவை இதன் விளைவாகவே தோன்றுபவை. இந்த அடிப்படையான உறவு எத்தகையதாக இருக்கின்றது என்பதைக் காண்போமேயானால் அச்சமுதாயத்துள் இயங்கும் மனிதனின் நிலையை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்ட இயலும். இவ்வடிப்படை உண்மையை முதன்முதலாக வரலாற்றில் தெளிவாக்கிய பெருமை மார்க்சுக்கே உரித்தானது. மற்றும் இத்தகைய உறவை மனிதனுக்குச் சாதகமாக மாற்றி

அமைப்பதே மார்க்ஸ் கூறும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் குறிக்கோள். இக்காரணமாகவே 'தத்துவ வாதிகள் உலகைப் பல்வேறு வகையில் விளக்கியுள்ளனர். ஆனால் உலகை மாற்றுவதே அதன் கடமை' என்று மார்க்ஸ் கூறுகின்றார்.

இனி வரட்டு நாத்திகமும் ஆன்மீகமும் எவ்வாறு பொருளையும் புலனையும் மதிக்கின்றன என்பதைச் சற்று காணலாம்.

'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது வறட்டு நாத்திகத்தின் மூல மந்திரம் பொருளிருந்தால் எல்லாம் கிட்டிவிட்டதாகவும் அது இல்லையேல் ஒன்றுமேயில்லை என்றும் இத்தத்துவம் கூறுகின்றது. பொருளில்லையேல் 'இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள்' என்று கூறுகின்றது. சொத்து, சுதந்திரம் இரண்டும் ஒன்றே என நினைக்கின்றது. சொத்து இருந்தால் சுதந்திரம், சுதந்திரம் என்றால் சொத்து என்று இவ்விரண்டையும் இணைத்தே கூறுகின்றது. பொருளே வாழ்வின் பொருள் என்று தன் அடிப்படையாக வரையறுத்துக் கொள்கின்றது. அக்காரணமாகவே புலன்களின் கேவலமான மிருகப்பசியைத் தீர்ப்பதே வாழ்வின் ஒரே குறிக்கோள்; அதுவே முழுமையான இன்பம். இதற்கப்பாற்பட்ட இன்பம், ஆனந்தம் என்பதெல்லாம் பொய், புரட்டல் என்று கூறுகின்றது. இந்நிலையில் இத்தத்துவம் காமத்தத்துவமாகவும் வெறித்தத்துவமாகவும் வளர்ச்சி பெறுவதில் ஆச்சரியமில்லை.

இத்தத்துவம் விலங்கையும் விலங்கை ஒத்த வாழ்வையுமே மானிட வாழ்வு என்று நியாயப்படுத்தும் தத்துவமாகத் தளர்ந்து விடுகின்றது. மனிதனிலுள்ள விலங்குத் தன்மையை மட்டுமே இது காண்கின்றது. அதுவே மனிதன் என்று கூறவும் தலைப்பட்டு விடுகின்றது. மனிதனுக்கும் விலங்குக்குமிடையே இருக்கும் வேறுபாடு இத்தத்துவத்திற்குப் புலனாவதில்லை. இவ்வேறுபாட்டை இத்தத்துவம் மறுக்கின்றது.

இத்தகைய நாத்திகத்தை ஒருதலைச் சார்பான, மிகைப்படுத்தப்பட்ட பொருண்மை வாதம் எனப் பொதுஉடைமைத் தத்துவம் அழைக்கின்றது. இத்தகைய தத்துவம் பொருள்களின் வன்மையையும் புலன்களின் வன்மையையும் நன்றாக உணர்கின்றது. ஆனால் அத்துடன் நிற்பதில்லை. பொருளும் புலனுமே சர்வ வல்லமை வாய்ந்தவை எனக்கூறி, பொருளையே எல்லாம் வல்ல கடவுளாக ஆக்கிவிடுகின்றது. பொருளையே மெய் என அழைக்கத் தலைப்பட்டு விடுகின்றது. மற்றவைகளைப் பொய் என அழைக்கவும் இது கூசுவதில்லை. பொருளை வழிபடுகின்றது. அதை அடைவதே வாழ்வின் உய்வு என வழிகாட்டுகின்றது. இதுவே இத்தகையதொரு நாத்திகத்தின் வீடு.

ஆன்மீகமும் பொருளின் வன்மையை நன்றாகவே உணர்ந்துள்ளது. ஆனால் அதே காரணத்தாலேயே அது பொருளைத் துற என்று உபதேசிக்கின்றது. அவ்வாறே புலன்களின் வன்மையையும் இத்தத்துவம் ஒப்புக்கொள்கின்றது. அதன் காரணமாகவே புலனை ஒழி, பொருளை விட்டு ஓடு என்று உபதேசிக்கின்றது. பொருளையும் புலனையும் பொய் என்றும் கூறும் ஆன்மீகம், பொருளையும் புலனையும் துற என்பதன் காரணமாகவே மற்றுமொரு வகையில் இவ்விரண்டின் வன்மையை ஒப்புக்கொள்வதாகவே நாம் கொள்ளமுடியும். அதே போல பொருளும், புலனும், மெய்யை மறைக்கின்றன என்றும் பொய்யையே காட்டுகின்றன என்றும் ஆன்மீகம் கூறுகின்றது.

பொருள் மக்களைப் படைக்கும் தெய்வம் என்பது வறட்டு நாத்திகத்தின் அடிப்படை. ஆனால் அது மக்களை ஆட்டிப் படைக்கும் பிசாசு என்பது ஆன்மீகத்தின் முடிவு. பொருள் சுதந்திரத்துக்குத் துணை. அதை அடைபவனுக்கே சுதந்திரமுண்டு என்பது வறட்டு நாத்திகத்தின் முடிவு. அது அடிமைத் தன்மையின் அஸ்திவாரம். இது இருக்குமளவு விடுதலை, சுதந்திரம் என்பதை எண்ணிப்பார்க்கக்கூட முடியாது என்பது ஆன்மீகத்தின் அடிப்படை.

'இவ்விரு தத்துவங்களும் எட்டிப்போட்டியாகப் பேசுவதுபோல தோன்றினாலும் தங்களுக்கே உரித்தான வகையில் பொருளின் வன்மையை ஒப்புக் கொள்கின்றன. கடவுளின் வன்மையையும் ஒத்துக்கொள்கின்றன. இரண்டும் பொருளையும் கடவுளையும் ஒத்துக்கொள்கின்றன. இப்படிக் கூறுவது ஆச்சரியத்தைத் தருகின்றதா? நாத்திகம் கடவுளை ஒத்துக் கொள்கின்றது என்று கூறினால் ஆச்சரியப்படாமலாயிருக்க முடியும்? அது எப்படி எனக் காணலாம். பொருளே கடவுள் என்று ஒன்று கூறுகின்றது. கடவுளே பொருள் என மற்றது கூறுகின்றது. பொருளை அமுதம் என்று ஒன்று மதிக்கிறது. மற்றது வி மென்று மதிக்கின்றது. இவ்விரு தத்துவங்களும் பொருளையும் கடவுளையும் கண்டு ஓடும் தத்துவங்களே.

ஒன்று, புலன்களின் இச்சையே மனிதனின் எல்லா வகைத் துன்பங்களுக்கும் மூலகாரணம் எனக் கூறுகின்றது. மற்றது, புலன்களல்லவா இன்பத்தை அனுபவிக்க அடிப்படைக் காரணம் என வாதாடுகின்றது. இரண்டும் ஒன்றுபடுவது எங்கு, எவ்வாறு?

பொருள் சர்வ வல்லமை வாய்ந்தது. அதன் முன் மனிதன் சக்தியற்றவன் என இரண்டு தத்துவங்களும் தங்களுக்கே உரித்தான பாணியில் ஒப்புக்கொள்கின்றன. அதேபோல புலன்களும் சர்வ வல்லமை வாய்ந்தவை என்றும் அவன்முன் மனிதன் வல்லமையற்றவன்தான் என்றும், அவைகளைப் பெற உழைப்பதே வாழ்வின் பயனென்று ஒன்றும், அவைகளைத் துறப்பதே வாழ்வின்பயன் என மற்றொன்றும், இரண்டும் தங்களுக்கே உரித்தான முறையில் புலனைக் கண்டு ஓடுகின்றன.

இக்காரணங்களினாலேயே இவ்விரண்டும் 'அருளை நம்பியிருக்கும் தத்துவங்கள் ஆகின்றன. ஒன்று பொருளின் அருளே தேவை என்றும் மற்றது கடவுளின் அருளே தேவை என்றும் கூறுகின்றன. இவ்விரு தத்துவங்களும் மனிதனை சக்தியற்றவனாகவே சித்தரித்துக்காட்டுகின்றன. இரண்டுமே

வரப்பிரசாதத்தையே நம்பத் தூண்டுகின்றன. பொருளின் மறுஉருவமே ஆண்டவன். அந்த ஆண்டவன்தான் எல்லாம் வல்லவன். எங்கும் நிறைந்தவன், எதையும் அறிந்தவன் என்று ஆன்மீகம் கூறுவது போலவே வறட்டு நாத்திகம் பொன் (பொருள்) எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது, எதையும் அறிய வல்லது என்று அதே ஆசனத்தில் பொன்னையும் அமர்த்துகின்றது. பொன்னையும், பொருளையும் பிசாசு என்று ஆன்மீகம் கூறுமேயானால், அந்த ஆன்மீகத்தின் ஆண்டவனைப் பிசாசு என்று வரட்டு நாத்திகம் குற்றம் சாட்டுகின்றது. ஒன்றின் கடவுள் மற்றதன் பிசாசாகக் காட்சியளிக்கின்றது. பொருளை எல்லாம் வல்ல பிசாசு என்று வர்ணிப்பதின் வாயிலாக ஆன்மீகம் பொருளைத் தனது இறைவனுக்குச் சமமாகவே மதிப்பிடுகின்றது. அவ்வாறேதான் வறட்டு நாத்திகத்தின் நிலையும். கடவுள் என்ற பிசாசின் இரும்புப் பிடியிலிருந்து தப்புவதாலேயே மனிதன் விடுதலை பெறுவான் என்றும், அப்படித் தப்பாத மனிதனை முட்டாள் மடையன் என்றெல்லாம் வசைபாடுகின்றது.

இதிலிருந்து நாம் காணவேண்டிய உண்மை என்ன? வரட்டு நாத்திகமும் ஆன்மீகமும் ஒன்றை மற்றது எவ்வளவு வெறுத்தாலும் மறுத்தாலும், இறுதியில் இவ்விரண்டும் ஒரு முக்கியமான அம்சத்தில் ஒரே முடிவுக்குத்தான் வருகின்றன. இரண்டுமே மனிதனைச் சக்தியற்றவனாகவும், அவனுக்கு அப்பால் ஏதோ எல்லாம் வல்ல ஒரு மிகப்பெரியதொரு சக்தி உள்ளதென்றும் கூறுகின்றன. இச்சக்திக்கு வெவ்வேறு பெயரைக் கொடுத்துவிட்டால் வேறுபாடு ஏற்பட்டதாகக் கூறுவது சரியல்ல. இரண்டுமே மனிதனை அவமதிக்கும் தத்துவங்கள்.

வறட்டுத்தனமான நாத்திகமும் ஆன்மீகமும், முழுமையான, வரலாறு கொண்ட, வளர்ந்து வரும் மனிதனைக் காணவில்லை. இரண்டுமே அரைகுறையான மனிதனைத் தான் கணக்கில் கொண்டுள்ளன. இரண்டுமே

பொருளுக்கும் படைக்கும் மனிதனுக்கும் இடையே காணப்படும் உயிருள்ள, மற்றும் வரலாற்றில் மாறிக்கொண்டு வரும் உறவைக் காணமுடியாமலிருக்கின்றன. தாங்கள் கண்ட அம்சங்களையே முழுமை எனக்கூறி முடிவுகளையும் கொடுக்கின்றன. ஆனால் இவ்விரு தத்துவங்களையும் மக்கள் முழுமையாக ஒப்புக்கொண்டு விட்டதாகக் கூறமுடியாது. மனிதன் பொருளைத் துறக்கவுமில்லை; அப்பட்டமான வரட்டு நாத்திகனாகவுமில்லை. பொருளுக்கும் புலனுக்கும் பரிபூரண அடிமை ஆக மக்களின் மனம் ஒப்புக் கொண்டு விட்டதாகக் கூறுவதும் தவறு.

ஆயினும் அவ்வப்பொழுது இத்தகைய போக்கு பலப்படுவதையும் நாம் காணாமலிருப்பதுமில்லை. மக்களிடம் உலவிவரும் தத்துவம் எத்தகையது? அதிலும் கொஞ்சம், இதிலும் கொஞ்சம். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால், என்பது போன்ற ஒரு கதம்ப வாதமே பெருவாரியான மக்களின் வாழ்க்கைத் தத்துவமாக இன்றுமிருந்து வருகின்றது. அத்தகைய அவியல் தத்துவம் 'பிச்சைக்காரன் வாந்தி எடுத்தது போல' இருக்கும்.

பொது உடமை வாதம் இத்தகையதொரு கதம்ப வாதமா? அல்ல. ஆயினும் இத்தத்துவம் மேலே குறிப்பிட்ட இரு தத்துவங்களிலும் அடங்கியுள்ள உண்மையைச் சற்றும் மறுப்பது கிடையாது. ஆயினும் இவ்விரண்டிலும் உள்ள உண்மையைக் கந்தலை ஒட்டுச் சேர்ப்பது போல் இல்லை. மாறாக இரண்டிலுமுள்ள தவறை மறுத்தும் இரண்டிலுமுள்ள அடிப்படை சாராம்சத்தை மறுக்காமல் மீட்டும் புதியதொரு வகையில் சமைத்த மீண்ட தத்துவமே பொது உடமைத்தத்துவம்.

மீட்டல் என்பதைத் திரட்டல் அல்லது கடத்தல் என்றெல்லாம் அழைக்கலாம். பாலிலிருந்து தயிராக்கி அதிலிருந்து வெண்ணையெடுப்பதை மீட்டலுக்கு ஒரு உதாரணமாகச் சொல்லலாம். வெண்ணையாகிய சாரம் பாலில் இருக்கிறது. ஆனால் அது வெண்ணை என்ற வடிவிலில்லை.

அதைத் தயிராக்கிக் கடைந்தாலன்றி வெண்ணை வெளியாகாது. பாலில் இருந்த நிலை வேறு. இப்பொழுது காணும் நிலை வேறு. இருப்பினும் இரண்டிலும் சாராம்சம் ஒன்றுதான் என்று கூறுவது சரியே. இதுவே மீட்டலின் இலக்கணத்துக்கு ஒரு உதாரணம்.

கேவலமான வறட்டு நாத்திகமும், பொருளுக்கும் புலனுக்கும் கொடுக்கக் கூடாத தகுதியைக் கொடுக்கின்றது. மாறாக, ஆன்மீகம் பொருளுக்கும் புலனுக்கும் கொடுக்க வேண்டிய, மற்றும் உரித்தான மதிப்பைக் கொடுக்க மறுக்கிறது. இதன் பொருளென்ன? இரண்டுமே உண்மையான மனிதனுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை மறுக்கின்றன. இரண்டுமே உண்மையான மனிதனை அறிந்த, அறியவல்ல தத்துவங்களாக இல்லை. எவ்வாறு? ஆன்மீகம் அழகிய உடலை மறுக்கின்றது. ஆன்மீகம் பொருளுக்கும் புலனுக்கும் கொடுக்க வேண்டிய, மற்றும் உரித்தான மதிப்பைக் கொடுக்க மறுக்கிறது. இதன் பொருளென்ன? இரண்டுமே உண்மையான மனிதனுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை மறுக்கின்றன. இரண்டுமே உண்மையான மனிதனை அறிந்த, அறியவல்ல தத்துவங்களாக இல்லை. எவ்வாறு? ஆன்மீகம் அழகிய உடலை மறுக்கின்றது. கொச்சை நாத்திகம் உள்ளத்தை மறுக்கின்றது. ஆன்மீகம் உடலற்ற உயிரையே மனிதன் என வாதாடுகின்றது. கொச்சை நாத்திகமோ வெனில் உயிரில்லா உடலையே மனிதனென்று அழைக்கின்றது. ஒன்று, பொருளிலும் புலனிலும் மனிதன் அடங்கிவிட்டான் என முடிவு கூறுகின்றது. மற்றது, பொருள் மற்றும் புலன் இவைகளுக்கு அப்பால்தான் மனிதனையே காணமுடியுமென்று முடிவுசெய்கின்றது. இரண்டும் வளரும் மனிதனைக் காணவில்லை. இரண்டுமே செயலற்ற, வரலாற்று வளர்ச்சியற்ற, இயக்கமற்ற, மனிதனையே சித்தரிக்கின்றன.

மனிதனின் சிறப்பான அம்சமல்லவா படைப்பு! மற்றும் இப்படைப்பல்லவா அவனை மனிதனாக்கும்

அம்சம்! இத்தகைய படைப்பையும் அதற்குக் காரணமாகிய படைக்கும் செயலையும் மறந்தால் மிகுந்திருப்பதென்ன? படைப்பற்ற விலங்கும், மனிதனற்ற பொருளுமே.

இக்குழப்பங்களுக்குக் காரணமென்ன? படைக்கப்பட்ட பொருள் ஒருநிலையில் மனிதனை ஆக்கும் சக்தியாகவும், மற்றுமொரு நிலையில் அழிக்கும் சக்தியாகவும் மாறிவிடுவதே இத்தகையதொரு குழப்பத்திற்கு அடிப்படைக் காரணம்.

மார்க்சு தெளிவாக்கிய அம்சம் எது? மனிதனால் படைக்கப்பட்ட பண்டமும் அதற்குக்காரணமான செயலும் எந்நிலையில் அம்மனிதனை ஆக்கின? மற்றும் அவையே எந்நிலையில் அவனை அழிக்கத் தலைப்படுகின்றன என்றும், ஏன் இத்தகைய நிலை ஏற்படுகின்றதென்றும் இந்நிலையை முற்றிலும் மாற்றி மனிதனின் தங்கு தடையில்லா வளர்ச்சியை எவ்வாறு உத்திரவாதப்படுத்த முடியும் என்பதே மார்க்ஸ் ஆராய்ச்சியின் சாரம். பொருளுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்படும் சிக்கலே இவருடைய ஆராய்ச்சியின் மையம். இதை விடுவிடுப்பதே புரட்சியின், மற்றும் புரட்சித் தத்துவத்தின் கடமை என்று இவர் தெளிவாகக் கூறுகின்றார்.

மார்க்ஸ் பொருளையும் அதன் வாயிலாக மனிதனின் உண்மையையும் விளக்கினார். பொருளையே காண விரும்பியவர்கள் பொருளைக்காண இயலவில்லை. அவ்வாறே மனிதனை மட்டுமே காணத் துடித்தவர்கள் மனிதனையும் காண இயலவில்லை. பொருளையும் மனிதனையும் இணைத்துப் பார்த்தவராகிய மார்க்ஸே பொருளையும் விளக்க முடிந்தது; மனிதனையும் காண முடிந்தது.

பொருள் மனிதனை (படைப்பினை)ப் பொருத்தமட்டில் பொருளற்றுப் போகுமேயானால் அந்நிலையில் அது அவனுக்கு வி மாக மாறிவிடுகின்றது. அமுதம் என்பது மாறி ஆலகால வி ம் ஆகிவிடுகின்றது. இத்தகையதொரு நிலையில் அவனுடைய செயலே அவனை அழிக்கத் தலைப்படுகின்றது.

செயலற்றுச் செல்வதே பரவாயில்லை என்ற வேதாந்தம் இந்நிலையில் தலைதூக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையே ஒரு உண்மையை மக்களுக்குப் புகட்டுகின்றது. 'தன்வினை தன்னைச் சுடும்' 'வளர்த்த கடா மார்பில் பாயும்' 'வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம்' என்பன போன்ற பழமொழிகள் உலகின் ஒரு நியதியை விளக்குகின்றன. இத்தகைய பழமொழிகள் சமுதாயத்திலேற்பட்டு வரும் சிக்கலைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. பொருளையே பெரிதெனத்தேட ஊக்கங்கொடுக்கும் தத்துவமும், பொருளை முற்றிலுந் துறக்கக் கற்றுக்கொடுக்கும் தத்துவமும் தற்கொலைக்கொப்பான நிலையையே இறுதியில் உருவாக்கவல்லன.

பொதுஉடமைத் தத்துவம் இத்தகைய தத்துவமல்ல. மாறாக பொருளை பெரிதெனப் போற்றும் தத்துவமுமல்ல. மாறாக பொருளைப் பொய்யெனத் தூற்றும் போக்குமல்ல. இது மனிதனையே போற்றும் தத்துவம். இக்காரணமாகவே இதை 'விஞ்ஞான அடிப்படை கொண்ட மானிடத் தத்துவம்' என்றும் அழைக்கின்றனர்.

முதலாளியம், நடைமுறையில் பொருளைப் போற்றும் ஒரு தத்துவமன்றி வேறென்ன? இச்சமுதாயத்துள் மனிதன் நாளுக்கு நாள் பொருளின் நிரந்தரமான அடிமையாக மாறிவருகின்றான். அதாவது பொருள் இவனை அதிவேகமாகத் தன்வயமாக்கி வருகின்றது. வேறு வகையில் இதைக் கூறுவோமானால், மனிதன் தான் படைத்த பொருளுக்குள் வெகுவேகமாக மறைந்து வருகிறான். அவன் நிற்கக்கூட இடமில்லாமல் அவன் படைத்த உலகிலேயே தத்தளிக்கின்றான். இத்தகையதொரு நிலையை முற்றிலும் மாற்றி, மறையும் மனிதனை மீண்டும் மீட்கவே பொது உடமைத் தத்துவமும், அதனை உணர்ந்த பாட்டாளி வர்க்கமும் இவ்வுலகில் போராடி வருகின்றன. அறிவுடன் கூடிய செயலல்லவா இப்பணியைச் செய்ய முடியும்? அத்தகைய பணியையே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் செய்யத் தொடங்கியுள்ளது.

6. முதலாளித்துவமும் அதன் இறுதியும்
'இலக்கணம் கூறியதற்கு இறுதியுண்டு'

முதலாளியச் சமுதாய அமைப்பின் இருளடைந்த, மங்கும்படியான, மற்றும் மனிதனுடைய வளர்ச்சிக்கு ஒவ்வாத அம்சத்தை இதுவரை பரிசீலனை செய்தோம். முதலாளியம் தனது தொடக்கத்திலிருந்தே இவ்வாறுதான் செயல்பட்டதா? முதலாளியச் சமுதாயமும் அத்தகைய உற்பத்தி முறையும் மனிதனுக்கு எத்தகைய நன்மையையும் செய்யவில்லையா? இவ்வளர்ச்சி மனிதனின் வரலாற்றில் எத்தகைய மதிப்பைப் பெறுகின்றது? இதனை இனிச்சிறிது காண்போம்.

நிலப்பிரபுத்துவ சமுதாயமும் பழைய கிராமியச் சமுதாய அமைப்பும் உடைந்தே அதனுள்ளிருந்து இத்தகைய முதலாளிய முறை உருவாயிற்று என்பதை வரலாறு கூறுகின்றது. பழைய கிராமியச் சமுதாய அமைப்பினுள் மனிதனின் ஆக்கச் சக்தி வாய்ப்பின்றி, வகையின்றி, வெளித்தோன்றி மலர வழியின்றி, ஒரு குறுகலான வட்டத்துக்குள்ளேயே, வேலியிட்ட நிலைபோல, தேங்கிக் கிடக்க நேர்ந்திருந்தது.

பொருளைப் பொருட்படுத்த இயலாத, அக்காரணத்தாலேயே பொருட்படுத்த முடியாத சமுதாயமாக அச்சமுதாயம் இருந்து வந்தது. மனிதனுடைய படைக்கும் திறன் போற்றப்படவில்லை. அவ்வாற்றல் வெளிக்கிளம்பி விசுவரூபம் எடுக்க அச்சமுதாயம் வகைசெய்யவில்லை; செய்யவும் முடிந்திராது. அத்தகைய வாய்ப்பை மக்களுக்குக் கொடுக்க அன்று சமுதாயக் காவலர்களாகவும் ஆண்டவர்களாகவும் இருந்த நிலப்பிரபுகளுக்குக் கட்டாயம் மனம் வந்திராது.

இத்தகைய தேக்கத்தை உடைத்த பெருமை, வாணிபத்துக்கே உரித்தானது. வணிகர்பெருமக்களே

இறுதியில் முதலாளியத்துக்கு வழிவகுத்தனர். இதுவே மேற்கு நாடுகளின் வரலாற்றிலிருந்து நாம் காணும் உண்மை. கிராமிய அமைப்பினுள் தூங்கிக் கிடந்த மனிதனைத் தட்டியெழுப்பிய குரலே முதலாளிய சமுதாயம் வளரக் காரணமாயிற்று; அவ்வாறு தூங்கிக் கொண்டிருந்த மனிதனைத் தட்டி எழுப்பிய தத்துவம், தன்முன் பொருண்மைவாதத்தைக் கொண்டிருந்தது. பொருண்மை வாதம் பொருளைக் காணவும் அதை வளர்க்கவும் பேருதவி செய்தது. அவ்வாறே இதனால் வளர்ச்சி பெற்ற வணிகப் பெருமக்களும், இத்தத்துவத்தின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தனர். ஒன்றை மற்றது வளர்த்தது. இதையே மறுமலர்ச்சிக் காலம் என்று அழைக்கின்றனர்.

மேற்கு நாடுகளில் நிலப்பிரபுத்துவ சமுதாயம் இருந்த காலத்தில் சமுதாயத்துள் கத்தோலிக்க சமயமே ஆதிக்கம் வகித்து வந்தது. இச்சமயத்தையும் இதன் தத்துவத்தையும் உள்ளிருந்தே ஒரு சமயப்போக்கு எதிர்க்கத் தொடங்கிற்று. இந்த மறுப்புச் சமயத்தை 'ப்ராடெஸ்டண்ட்' சமயம் என்று அழைக்கின்றனர். வளர்ந்துவரும் வணிகர்கள் இந்த மறுப்புச் சமயத்துக்கு ஆதரவாக அணிவகுத்து வந்தனர். இம்மறுப்புச் சமயத்துள் பொருண்மை வாதம் மறைந்து கிடந்தது. இருப்பினும் இம்மறுப்புச் சமயம் கடவுளை மறுக்கவில்லை. தன்னை நாத்திகம் என்றும் அழைத்துக் கொள்ளவில்லை. இருப்பினும் இச்சமயத்துள், வளர்ந்து வரும் நாத்திகம் மறைந்திருந்தது என்பதை இதை உருவாக்கிய சமயகர்த்தாக்களே உணரவில்லை. அது இயலாத காரியமும் கூட. ஆயினும் வரலாற்றை ஆராயும்பொழுதே இதுவே நாம் காணும் உண்மை.

வாணிபத்தை வளர்த்த 'புர்க்கர்கள்' (நகரத்தவர்) கடற்கரையோரங்களில் நகரங்களை உருவாக்கிக் கொண்டு வாணிபம் செய்து வந்தனர். தமிழகத்திலும் பூம்புகார், முசிறி போன்ற துறைமுகங்களை, அன்று தமிழகத்தில் வாழ்ந்த வாணிகர்களான சமண சமயத்தவர்களே பெருமளவு

பயன்படுத்தியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் கப்பல்கள் வாயிலாகப் பிறநாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்ய இயலும். பொருளீட்டவும் முடியும்.

இப்பெருமக்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கச் செய்த முயற்சியே, இறுதியில் விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிகோலியாக அமைந்தது. தமிழகத்திலும் சமணம், சைவ வைணவ சித்தாந்தங்களை வெற்றி கொண்டிருக்குமேயாயின் இங்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முதலாளியம் இயற்கையாகவே வளர்ந்திருக்கக்கூடும். அப்படி ஏற்பட்டிருக்குமேயானால் தஞ்சையிலுள்ள மடங்கள் இன்று இரா. மற்றும் பூம்புகார், முசிறி போன்ற நகரங்களும் அழிந்திருக்கமாட்டா. தமிழகத்துள் தோன்றியுள்ள சமயங்களாகிய சைவ, வைணவ சமயங்கள் நிலக்கிழார்களைக் காப்பாற்றிய சமயங்கள். இவையிரண்டும் இங்கு வளர்ந்து வந்த வாணிபத்தையும் அதற்குக் காரணமாக சமய சமயவாதிகளான வணிகர் பெருமக்களையும் உறுதியாக எதிர்த்துப் போராடி, ஆயிரக்கணக்கான சமணர்களைக் கழுவிலேற்றின என்பதை நாம் மறக்காமலிருப்பது, நமக்குத் தமிழக வரலாற்றில் மறைந்துள்ள பல ரசமான உண்மைகளைக் காண வழி வகுக்கும்.

வாணிபம் மட்டுமன்றிக் கைத்தொழிலில் மாற்றம் ஏற்பட்டு பெரிய ஆலைகளும் வளர வாய்ப்பு ஏற்பட்டுப் பெரிய நகரங்கள் தோன்றுகின்றன. இத்தகைய மாற்றங்கள் ஏற்படும் பொருட்டு இங்கு நடந்த சண்டைகள் சமயச் சண்டைகளாகவே காட்சி அளித்தன. இருப்பினும் சமயப் போர்வையின் அடியில் உலகப் பிரச்சினைகளே மறைந்து கிடந்தனவன்றி பரலோக விசயங்களல்ல என்பதே நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டிய உண்மை.

வணிகர்கள் செய்த புரட்சியே இறுதியில் முதலாளிய காலகட்டத்தை உருவாக்கிற்று. இப்புரட்சியின் விளைவாகவே பல்வேறு விஞ்ஞானங்களும் வளர்ந்தன. சிந்தனையிலும் செயலிலும் இம்மனிதன் எண்ணமுடியாத அளவு வளரும்

வாய்ப்பைப் பெற்றான். இயற்கையின் முன் மண்டியிட்டு அதைக் கண்டு நடுங்கித் தொழுதான். அதற்கு பலி கொடுத்து அதைக் கெஞ்சியும் கொஞ்சியும் வந்த மனிதன் இயற்கையை தன் பம்பரமாக ஆட்டத் தலைப்பட்டது முதலாளிய காலகட்டத்தில் தான் என்பதை நாம் மறுக்க முடியாது.

அலாவுதீன் தனது தீபத்தைத் துடைத்து ஒரு பயங்கரமான பூதத்தைக் கிளப்பியதுபோல இச்சிறு மனிதன் தன் சிந்தனையாலும் செயலாலும் அதைவிடப் பெரியதொரு பூதத்தைக் கிளப்பிவிட்டான். அவன் விரும்புவதையெல்லாம் கொடுக்கவல்ல பூதமாகத்தான் இங்கு இன்று வளர்ந்துள்ள விஞ்ஞானமும் அதனால் உருவெடுத்த கருவிகளும் காணப்படுகின்றன. ஆயினும் நிலைமை அத்துடன் நிற்கவில்லை. இந்த பூதம் இவனையேயல்லவா விழுங்கத் துடிக்கின்றது! இந்த நிலையே முதலாளியச் சகாப்தத்தின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்டு வரும் பயங்கரமான நிலை.

உலகைத் தன் வயமாக்க ஒரு பூதத்தைக் கிளப்பிய மனிதன் இன்று தான் கிளப்பிய பூதத்தின் முன் வன்மையற்ற அடிமையாக மாறும் புதியதொரு சங்கடமான நிலையையல்லவா காண்கின்றோம். மற்றும் இப்பூதம் யார்? இவனுடைய மறுஉருவம் தானே. இவனுள் அடங்கியிருந்த சக்தியல்லவா வெளியில் வந்து விசுவரூபமெடுத்து இவனையே மிரட்டத் தலைப்பட்டுள்ளது! இவனையே அடிமையாக்கி கசக்கிப் பிழிந்து இவனுடைய வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைக்கத் தலைப்பட்டுவிட்டது! அலாவுதீனின் பூதத்தைவிடப் பலவகைகளிலும் இது பயங்கரமாகத் தோன்றுகின்றது. இதை ஏன் தான் கிளப்பினேனோ என்று மனிதன் பல சமயங்களில் அஞ்சக்கூடச் செய்கின்றான்.

தன்செயலின் பலனைச் சீரணம் செய்ய இயலாததால் மெல்லவும் முடியாமல் துப்பவும் மனமின்றித் தத்தளிப்பவனாகவே மனிதன் இன்று முதலாளிய சமுதாயத்துள் காணப்படுகின்றான். இத்தகைய சிக்கலை

விடுவிக்க வழிகாட்டுவதே உண்மையான மானிடத் தத்துவம்: மக்களுக்கு உகந்த தத்துவம்; விடுதலைக்கு வழிகாட்டும் தத்துவம்.

அசுரரும் சுரரும் சேர்ந்து பாம்பைக் கயிறாகக் கொண்டு மலையை மத்தாக்கித் திருப்பாற் கடலைக் கடைந்து அமுதத்தைத் திரட்டி எடுத்ததாகப் புராணங் கூறுகின்றது. மனிதனின் படைக்கும் வன்மை கூலி கொடுப்பவன் என்றும் கூலி வாங்குபவனென்றும் (மூலதனம், உழைப்பு என்று) இரு கூறுகளாகப் பிரிந்து, விஞ்ஞானமென்ற மத்தால் (கருவி) தனது அறிவு என்ற பாம்பைக் கொண்டு கடைந்து மனிதன் என்றுமே சிரஞ்சீவியாக இருக்க வாய்ப்பைக் கொடுக்கவல்ல பொருள்களை அமுதம் போலத் திரட்டி விட்டான். இந்த அளவுதான் முதலாளியம் செய்ய இயன்றது.

இவ் அமுதத்தை அனுபவிப்பதற்கு முன்பே சுரருக்கும் அசுரருக்கும் இடையே போராட்டம் துவங்கிவிட்டுள்ளது, 'நான் தானே சொல்லிக் கொடுத்தேன், என்கின்றான் சிந்தனையின் சிகரமாக நேற்றுவரை இருந்துவந்த சுரனையொத்த முதலாளி, நானில்லாமல் நீ அதைக் கண்டிருக்கவும் முடியுமா என்கின்றான், அடிமைபோலச் சொன்னதைச் செய்துவந்த அசுரனையொத்த தொழிலாளி. இதுவே முதலாளியத்துள் வளர்ந்து வந்துள்ள நிலை.

இவ்விரு கும்பலுக்குள்தான் உண்மையான மனிதனும் மலர்ந்துள்ளான். இவன் இச்சண்டையின் உண்மைக் காரணமென்ன என்பதை அறிந்து விடுதலையடையும் வழியும் காண்கின்றான். இவ்வமுதத்தைக் கடைந்தெடுத்ததில் மிகப்பெரிய அளவு துன்பத்தை அனுபவித்த அசுரர்களே இம்மனிதனின் குரலைக் கேட்கப் பிரியப்படுவார்கள். இவர்களும் தங்கள் அமரத்துவத்தை அடைய வழிகாணும் அறிவைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.

சுரருடைய குரு கண்ணன். அசுரர்களின் குரு சுக்கிரன். கண்ணன் சுக்கிரனின் கண்ணைத் துரும்பால் குத்தியதாகப்

புராணம் கூறுகின்றது. இன்றும் கண்ணனின் வாரிசுகள் சுக்கிரனின் சந்ததிகளான பொதுஉடமை வாரிசுகளைச் சிறையிலடைக்கின்றனர், கழுவிலேற்றுகின்றனர், தூக்கில் போடுகின்றனர், துப்பாக்கியால் சுடுகின்றனர். அன்றிலிருந்து இன்றுவரை சுரருக்கும் அசுரருக்கும் இடையே உழைப்பின் பலனை அனுபவிப்பதிலேற்பட்ட சண்டை ஓயவில்லை.

இன்றைய பூலோக சுரர்களான முதலாளிகளின் கொட்டத்தையும் ஆதிக்கத்தையும் வேரோடு அறுத்துக்குழி தோண்டி புதைப்பதே மனிதன் வாழவும் வளரவும் ஒரே வழி என்று உணர்ந்து அப்பணியைச் செய்து முடிப்பதே தங்கள் இலட்சியமென்று கங்கணங்கட்டிக் கொண்டு தனது போர் முரசை இன்றைய பூலோக அசுரர்களான பாட்டாளி வர்க்கம் கொட்ட ஆரம்பித்து விட்டது. இவ்வீரமுழக்கத்தைக் கேட்டு படைப்பைத் திருடிப் பிழைக்கும் கலியுக சுரர்கள் நடுங்காமல் என்ன செய்ய முடியும்?

~~*

பரிமாணம் - 3

டிசம்பர் 1978

கண் அயர்ந்தபோது ஒரு காட்சி;
இன்பம் தரும் ஒரு கனா!
நான் எழுதிய கவிதை
என் தந்தையைப் புதைகுழியிலிருந்து
உயிர்ப்பித்தது.

கண்ணில் ஒளி நிறைய
அவர் என் கவிதையைக் கேட்டார்
அப்புறம், தன் கவிதையைப் பாடினார்
ஆழக் குழியிலிருந்து
மகமதின் ஆவி உயிர்த்தெழுந்தது.

மகமது பழங்காலப் பாடலைப்
பாடத் தொடங்கினார்
விடியும் வரை அவர் பாடலைக் கேட்க
பழங்கவிஞர்கள் திரண்டனர்.

மந்தமான மண்ணுக்குள்
நான் அழுந்தும் போது,
என்னைத் தொடர்ந்து வரும்
இளங் கவிஞனே!
உன் கவிதையால் என்னை எழுப்பு,
நான் நிம்மதியாய்ப் படுத்திருக்க.

- ரசூல் கம்சதோவ்

1. நம்பார்வை

கலை இலக்கியத் துறையில் மார்க்சியம் ஆற்றல் மிக்க கோட்பாடாக இடம் பெற்றுள்ளது.

கலை இலக்கியப் படைப்புகளின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவதில் மார்க்சியத்தின் சாதனை வியப்புக்குரியதாகி இருக்கிறது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் கலை இலக்கியத்தின் பணியைச் சுட்டுவதில் மார்க்சியம் சரியான திசை வழியைக் காட்டுகிறது.

கலை இலக்கியவாதிகளின் ஆளுமைக்குள் வரலாறும், சமூகமும் இயங்குவதை மார்க்சியம் எடுத்து விளக்கும்போது, அத்தகைய தன்னறிவு பெற்ற படைப்பாளிக்குள் விசுவரூப தரிசனம் வாய்க்கிறது. இந்த தரிசனம் இந்த விரிந்த பார்வை – அற்புதங்களைச் சாதிக்கிறது.

ஆற்றலையும் கலையழகையும் இயல்பாகத் தனக்குள் தாங்கிய மனிதன், வரலாற்றுக் களத்தில் வித்தாகிறான். மார்க்சிய நோக்கில் இலக்கியவாதியின் விளைவு இத்தகையது.

அப்படியானால், மார்க்சியம் கலை இலக்கியப் பிரச்சினைகளை முற்றாகக் கண்டதா, தீர்த்ததா என்பது கேள்வி.

மார்க்சியம் சந்தித்த பிரச்சினைகளிலும் தீர்க்கப்படாதவை பல.

தமிழகச் சூழலில் இது மேலும் உண்மை.

தமிழகத்தின் கலை இலக்கியப் பிரச்சினைகளைக் கண்டறிதலிலும் அவற்றைத் தீர்ப்பதிலும் மார்க்சியவாதிகளுக்கு மிக முக்கிய கடமை உண்டு.

இவை, தமிழக மக்களின், கலை இலக்கியங்களின், வளர்ச்சியோடு இன்றியமையாத உறவுடையவை.

அண்மையில் மார்க்சிய வட்டாரங்களைச் சேர்ந்த கலை இலக்கிய மாநாடுகள் இரண்டு நடைபெற்றன. தமிழகத்தின் கலை இலக்கியப் பிரச்சினைகளாக இங்குக்

கண்டறியப்பட்டவற்றை விடத் தீர்க்க முயன்றவை மிகச் சில.

இது மார்க்சியத்திற்குப் பெருமை தருவதாக இல்லை.

வெறும் வாய்வீரம் நமக்குப் பயன்படாது. திருவிழாக்கள் நமக்கு வலிமை சேர்க்காது.

எதிர்காலம் நமக்குத்தான் என்றால் அதைச் சாதிப்பதற்கான முறையில் நம் இயக்கமும் நடைமுறைகளும் இருக்க வேண்டும்.

"வெல்வதற்கு ஒரு உலகமே இருக்கிறது" ஆம்: கலை இலக்கியத் துறையிலும் இந்த உலகத்தை நாம் வென்றாக வேண்டும்.

2. இலக்கியத்தில் 'தானு'ம் சமூகமும்: - ஓர் இணைவுக் கோட்பாட்டை நோக்கி

- தமிழவன்

வெங்கட்சாமிநாதன் என்பவருக்குச் சூழல் என்பது என்ன அர்த்தம் தருகிறது என்று முதலில் அறிந்துவிடலாம். வெ.சா. சொல்கிறார் "தம்முள் பொறி கொண்ட எழுத்தாளர்களுக்கு அப்பொறி சுடர்விட ஒரு களம் தேவை. அதே சமயம் அப்பொறிகளின் சுடரை இனங்கண்டு கொள்ளும் ஸஹிருதயர்களின் கலைப் பிரக்ஞையைக் கொழுந்து விடச்செய்ய, அச்சுடர் பற்றும் சருகாக தாமும் சுடர்விட அக்களம் தேவை... சுடர் விட களம் அமைந்த போதும் அதை இனம் கண்டு கொள்ளும் ஸஹிருதயர்களின் குழாம் தேவை... இம்மும்முனை விரிவைத்தான், இந்த ஸஹிருதய ஒருங்கிணைவைத்தான் நான் சூழல் என்றேன்" வெ.சா.வின் இந்த வரைவிலக்கணம் முக்யமாய் மனதில் இருத்தப்பட வேண்டியது. இந்த இலக்கணத்தில் ஏதும் குழப்பம் நேர்ந்தாலும் 'நேரும்' கட்டுரை தீர்த்துவைக்கிறது. 'கலைஞனும் சூழலும்' என்ற கட்டுரையில் பொருள் கொள்ளப்படும் சூழல் இவைதான்.

1. பத்திரிக்கை 2. நண்பர்கள் 3. வாசகர்கள் 4. அரசவை இவை மட்டுமல்ல. ஆனால் கட்டுரையின் உதாரணங்களில் இருந்து இந்த நாலு வி யங்களுமே தென்படுகிறது.

பொறி என்ற ஒன்றைப் பற்றிக் கட்டுரை கூறும் போது பொறி சூழலாலும், சூழல் பொறியாலும் பாதிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. மும்முனை விரிவை சூழல் என்பேன் என்பவரிடம் சில விளக்கங்கள் கேட்கப்படலாம். அதற்கு விடையும் எதிர்பார்க்கப்படலாம்.

சூழல் என்ற கருத்து மேலும் விரிவை நோக்கிச் செல்கிற அதே இடத்தில் குழப்பமும் உருவாகி விடுகிறது. "சங்கீதம் தன்னிலே முளைவிட்டு மலர்ந்து தன்னுள்ளேயே நிறைவு பெறும் குணம் வாய்ந்தது... தியாகையருக்கு

சுயாநுபவம் போதும். ஆனால் எழுத்து எப்படி அல்ல. ஸஹ்ருதயனான இன்னொருவன், ஒருவனாவது தேவை". இங்கு, தியாகையருக்கு பொறி மட்டும் போதும் சூழல் தேவையில்லை. சூழல், பொறி என்று இரு பிரிவுகள் தோன்றியாகிவிட்டது. இங்கே சூழல் என்பது நான் சொன்ன நாலு விஷயங்களும் தான். இதுதான் ஆபத்தான ஸ்தானம், சங்கீதமும், எழுத்தும் வேறு பிரிக்கப்பட்டுள்ளது. சூழல் பொறி என்ற பிரிவுகள் எத்தனையோ வசதிகளுக்காகப் பிரிக்கப்படலாம். ஆனால் அவற்றின் பிரியாமை கவனத்தில் இருத்தப்படவில்லை, பிரக்ஞையில் செயல்படவில்லை என்பது தான் குறிப்பிடத்தக்கது. இங்கே இவரது இன்னொரு கருத்தும் இதோ: "பொறியைத் தன்னகத்தே கொண்ட ஒரு கலைஞன் பிறக்கும் வரை சமூகமும் சூழலும் எதுவும் செய்து விடமுடியாது. கலைஞனின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற குணத்தை தம்மிடையே பயன்படுத்தி, அவனது வருகைக்காகக் காத்திருக்க வேண்டியது தான். இங்கும், பொறியைக் கொண்டு கலைஞன் பிறப்பானாம். யாரோ சிலர்தான் பிறப்பதாம். அதுவும் சமூகம் காத்திருக்க வேண்டுமாம்.

ஆனால் உண்மை என்னவென்றால், பிறந்துவிட்ட எல்லா மனிதர்களும் படைப்பாற்றலும் அழகு உணர்ச்சியும் எப்போதுமே கொண்டவர்கள் என்பதுதான். சிலருக்கு வாழ்க்கையும் சமூகமும் பிறவாய்ப்புகளும், படைப்பாளியாய் அல்லது படிப்பாளியாய் விளங்கும் தன்மையில் வாய்க்கிறது. அழகுணர்ச்சி இருந்தாலும் நல்ல கலையை உணராதிருக்கும் மனிதர்களுக்கும் சூழல்தான் காரணமாகிறது. சமீப காலங்களில் முதலாளித்துவ வளர்ச்சியால் இலக்கியமும் படைப்பாளியும் ஒரு பண்டமாய் மாறிவிட்ட கொடுமையால் உருவாகும் சந்தைக்கேற்ற எழுத்து ஜனரஞ்சக எழுத்துக்களாய் மாறி இலக்கியம் அழிகிற நிலையில், மனிதனும் அழகுணர்ச்சி மீது புகை படிந்தவனாய் தோற்றம் தருகிறான். அமெரிக்க

நாவல்களும் திரைப்படங்களும் பத்திரிக்கைக் கதைகளும் உலகின் எல்லா மொழிகளையும் மனிதர்களையும் அழிக்கிறது. ஜனரஞ்சகம் தயவு தாட்சணியமின்றித் தாக்கி அழிக்கப்படக்கூடியது என்பது இக்கோணத்தில் உண்மை. ஆப்பிரிக்கக் காடுகளில் வெறிபிடித்துப்பாடும் நாடோடிப் பாடல்களும், ஆதிவாசி ஓவியங்களின் சாயல்களும் இன்றைய இலக்கியங்களில் புகுந்துள்ள Mythic தன்மையும் Levistrauss-ன் Primitive man-ம் நம்மைப் போன்ற அதே ஆழம் கொண்ட, அழகுணர்ச்சியும் கொண்டவன் என்ற கண்டுபிடிப்புகளும் இன்று JAZZ இசை ஆகவும் நவீன ஓவியங்களாகவும், ஜாய்ஸ், நகுலன், வெர்ஜினியா உல்ப், ஜேம்ஸ், ஞானக்கூத்தன், லாவண்யா எழுத்துக்களாகவும் Fellini-யின் படங்களாகவும் சந்திர சேகர கம்பார், கிரீஷ்கர்னாட், பதல் சர்க்கார், நாடகங்களாகவும் இன்று விளங்குகின்றன. இவை மனிதன் எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும் வேறுபாடின்றிப் படைப்பாளியாய் இருந்ததைக்காட்டும். நாடோடி கதைகளும், Myth-களும், கதைப்பாடல், இத்யாதிகளும் உலகம்பூரா என்றும் மனிதன் தனியாக மட்டுமின்றி, சமூகமாகவும் அழகு அனுபவங்களில் வாழ்ந்ததை, திளைத்ததைக் காட்டும். தனியாகக் கலைமனம் கொண்ட ஒருத்தன் திடீரெனப் பிறப்பது என்பதெல்லாம் பழசாய் போன வெற்றுரைகள்.

மேலே சூழல் என்ற வார்த்தை அதன் அர்த்தத்தின் ஆழங்கள் அறியப்பட்டுப் பிரயோகிக்கப்பட்ட வார்த்தையாய்ப் படவில்லை. சூழல் என்பதை சூழ்நிலை என்ற அர்த்தத்திற்குக் கீழிறக்குகிறார் வெ.சா. இவர் சரியாகவே, வாட்டுப் பார்வையுள்ள பொருள் முதல் வாதிகளை - ஆமா இன்று வளமான பார்வை கொண்ட மார்க்ஸிஸ்டுகளும் தமிழில் உண்டே, அவர்களைத் தனியாய் பிரிப்பதற்கு வெ.சா. இனி கற்றுக் கொள்ள வேண்டும் - கண்டிக்கிறபோது ஒரு வி யத்தைச் சொல்கிறார். இவர் குழப்பத்தையும், மீறி சூழல் என்பது சமூகம், பொருள் வகை உறவுகளால் ஆன சமூக

சரித்திரம் என்று புரிகிறார். இது இவருக்கு இயல்பாகவுள்ள எல்லைகளையும் மீறி முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுக்கிறது. உலகில் எங்கும் என்றும் எந்தக் கலைஞனும் எந்தச் சூழலும் பரஸ்பர பாதிப்பும் ஒன்றை ஒன்று சார்ந்த வளர்ச்சியும் மாறுதலும் பெறாது தனித்தனியே இருந்ததில்லை. இருக்கப்போவதும் இல்லை.

தெளிவாகவே பேசி விடுகிறார் வெ.சா. ஆனால் ஒரு வி யம். சூழல் என்பது ரசிக ரஞ்சனிசபா என்றோ, HMV ரெக்கார்டு என்றோ எந்தப் பார்வை கொண்ட மார்க்ஸியவாதிகளும் பேசமாட்டார்கள். அவர்கள் சூழல் என்ற வார்த்தையால் குறிப்பிடுவது தனிமனிதனுக்கும் வெளியில் புலன்களால் அறியப்படும் இயங்கிக் கொண்டிருக்கும் வெளி உலகைத்தான், சமூக இயங்கும் சக்தியைத்தான். மேலோட்டமான பத்திரிக்கை, பேனா, அச்சு போன்றவற்றை மட்டுமல்ல. உள் மனத்தைக் கண்டுபிடித்து மனோவியலில் பல பிரச்னைகளை தீர்த்த ஃபிராய்டும், உள் சமூகம் என்றும் இயங்கும் போக்கை, வரலாற்றிலும் பொருள் வகை உறவுகளிலும் கண்ட மார்க்ஸும் மேலோட்ட பார்வைக்குத் தென்படும் சக்திகளை வைத்துப் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை. பத்திரிக்கை, HMV ரெக்கார்டு இதையெல்லாம் சூழ்நிலை (Milieu) என்கலாம். சூழல் அல்ல: சூழல் என்பது இலக்கிய படைப்பின் சாராம்ச மேல்பார்வைக்குத் தென்படா உள்சக்தி; அதாவது சமூக, பொருள் வகை இயக்கமாகிய அடி ஆழ வி யம். இலக்கியத்தின் வடிவம் உள்ளடக்கம் என்றெல்லாம் சொல்கிறோமே அந்தப் பிராந்தியங்களின் செல்வாக்கும், நிர்ணய சக்திகளும். ஆக சூழ்நிலை வேறு. சூழல் வேறு. (இனி இரு சொற்களையும் வேறு அர்த்தங்களில் பிரயோகிப்பேன்).

சூழல் என்ற வார்த்தையைச் சூழ்நிலையையும் குறிப்பிட வெ.சா. பயன்படுத்துவதால்தான் இவரால் சூழல் பற்றிய தெளிந்த சிந்தனை கொள்ளமுடியவில்லை. சூழல்

என்ற வார்த்தையால் புற உலகு (Non-I) என்ற தனக்கு அதிக வழிகளை அள்ளி வழங்கும் நிலைபாட்டை தேர்ந்தெடுத்து இருக்கலாம் இவர். சில மார்க்ஸீய வாதிகள் சூழல் அல்லது சமூகம் மட்டும் தான் படைப்பை பாதிக்கும், நிர்ணயிக்கும் என்று சொல்கையில் மறுத்து விடும் போது சூழல் என்ற வார்த்தையை அதன் ஆழமான அர்த்தத்துக்குச் சொந்தமாக்குகிறார்.

வார்த்தைகளில் கறாராக இல்லாததால் உருவாகும் இந்தக் குழப்பம் பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது. முதலில் இந்தக் குழப்பமே 'பொறி' 'களம்' (சூழல்) என்ற இணைவை அதிஅற்புதமாக மார்க்சீய அறிவுத்துணையுடன் சொல்லத்தெரிந்த திறமைசாலியான வெ.சா.வைத் தியாகையருக்குப் பொறி மட்டுமே போதும் என்னும் கருத்து முதல்வாதக் கோட்பாட்டை எடுக்கத் தூண்டுகிறது. பொறி கொண்ட கலைஞன் பிறப்பதுவரை சமூகம் சாவகாசமாய் அமர்ந்திருக்கலாம் என்று சொல்ல வைக்கிறது.

இலக்கியத்தின் தோற்றம்கூட பத்திரிக்கையும் சில நல்ல படைப்பாளிகளும் இருந்துவிட்டால் நடைபெறக் கூடியதாகத் தெரியவில்லை. சிறுகதை எத்தனையோ வரு ங்கள் எழுதப்பட்டாலும் புதுமைப்பித்தன் எழுதும்வரை சிறுகதை இல்லை என்றே கூறலாம். பி.எஸ். ராமையாவுக்கு இருந்த அதேசூழல்தான் புதுமைப்பித்தனுக்கும் என்றாலும் புதுமைப்பித்தன்தான் சிறுகதையைத் தொடங்கி வைத்தவர் என்று சொல்லவேண்டும். எழுதப்படுவதெல்லாம் இலக்கியமாக முடியாது எழுதப்படுவதெல்லாம் இலக்கியமென்றால் சரி சூழ்நிலைதான் என்று கூறலாம். டி.எஸ். எலியட்டின் கவிதை என்பது அதன் யாப்பற்ற, கட்டற்ற உருவமோ அல்லது அவரது வார்த்தைப் பிரயோகமோ அல்ல; உயிர்விடும் ஒரு "நவீனகாலக்கண்ணாடி", F.R. Leavis சொல்கிறாரே Poetry that expresses freely a modern sensibility, the ways of feeling, the modes of experience, of one fully alive in his own age என்று. இதுதான் கவிதை. காலம்

தந்ததுதான் எழுத்து பெக்கட்டை Waiting for Godot-ஐ எழுத வைத்ததும், ஐயனெஸ்கோவை எழுதவைத்ததும், இந்தக் காலம். அவர்களுக்குக் கிடைத்த பத்திரிகைகள், நண்பர்கள், HMV ரெக்கார்டுகள் அல்ல. காப்காவின் மனிதன் K ஆக மாற, அவன் எழுதிய பத்திரிக்கையா காரணம்? வேர்ஸ் வொர்த்துக்கும் கீட்ஸுக்கும் காலம்தான் காரணம், பொருள்வகை உறவுகள் தான் காரணம், எனவே சூழல்வேறு, சூழ்நிலை வேறு என்று மேலும் மேற்சொன்ன பிரிவைப் பலப்படுத்துகிறேன். காலம் அல்லது சமூகம் மட்டுமே படைப்பைத் தந்துவிடும் என்று நான் வாதிட இவ்வளவும் சொல்லவில்லை. ஆனால் சூழல் என்பது பரந்து பட்ட அர்த்தத்தில், ஆழமான அர்த்தத்தில், சமூக இயங்குசக்தி என்கிற அர்த்தத்தில் பயன்படுத்தப்படும் சொல் என்பதை விளக்கவே இவ்வளவையும் சொன்னேன்.

இனி சூழல், உள்ளிருந்து எழும் பிரக்ஞை என்னும் இரண்டையும் அதாவது சூழல், பொறி என்னும் இரண்டையும் படைப்பின் முன்வைத்துச் சிந்திக்கும்போது இரண்டின் இணைவை சிலாகித்த வெ.சா. பல இடங்களில் இரண்டையும் பிரிக்கிறார் என்றும் பார்த்தோம். இந்தப் பிரிவினை சிலவேளை அவரை அதீத முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது. இவரது ஓர் வாசகம் இது. "என்னளவில் சமூகப்பிரக்ஞை என்பது ஒரு தனிமனிதன் தான் வாழும் சமூகத்தில் தன் உறவைப் பற்றித் தன் உள்ளிருந்து எழும் பிரக்ஞையாகும். இதைத் தொடர்ந்து 'இலக்கியம் எனது பார்வை' என்ற தன் கட்டுரையில் (இது என் கணிப்பில் தமிழில் இதுவரை வந்த இலக்கியப்பிரக்ஞை பற்றிய கட்டுரைகளில் தனியாய் குறிப்பிடத்தக்கது) மேற்சொன்ன கூற்றை விரிவாகவே விளக்கிச் செல்கிறார்.

இக்கூற்றையும் இது விளக்கவிரும்பும் கருத்தாக்கங்களையும் பற்றி ஒரளவு பரந்த ஆழ்ந்த, அகன்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். மேற்சொன்ன கூற்று சரியானதுதான். வேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் இந்த

உள்ளிருந்து எழும் பிரக்ஞை எப்படி, ஏன் இலக்கியமாய் ஒருவனிடத்திலும், ஓவியமாய் இன்னொருவரிடத்திலும், திரைப்படமாய் ஒருவனிடத்திலும், சிற்பமாய் இன்னொருவனிடத்திலும் வெளிப்படுகிறது? இதே உள்ளிருந்து எழும் சமூகப் பிரக்ஞை எப்படி நாட்டுப்பாடலாய் (இதற்குத் தனி ஆசிரியர் இல்லை) ஒரு சமூகத்தில் வெளிப்படுகிறது? திரைப்படக்கலை ஒரு டைரக்டரின் கலைதான் என்றாலும் நடிகனின் தனி சிருஷ்டியும், பதிப்பவனின் திறமையும், காமராக்காரனின் ஆற்றலும் குறைத்தெண்ணத்தக்கன அல்லதான். பலரின் தனித்தன்மைகளின் பொதுவான அம்சங்களின் கூட்டுதான் அங்கு கலையாய் வெளிப்படுகிறது. இந்தப் பொதுத்தன்மைகளின் கூட்டு, சமூகத்தன்மை கொண்டு விடுகிறதல்லவா! இந்தக் கூட்டு சிருஷ்டிகளை, Folklore-யை, குழு இசையை, கோயில் சிற்பங்களை, எப்படி விளக்குவது? தனிமனிதனின் உள் பிரக்ஞையின் வெளிப்பாடாகவா! இல்லையே! மனித சமூகத்தின் வெளிப்பாடல்லவா! பலரின் தனியான படைப்பாற்றல் ஒன்றாய் இணைந்து விடுகிறதே, வெளியீடு பெறும்போது! இந்த இணைவு ஒரு பொதுத்தன்மையின் அடிப்படையில்தானே? தன் முனைப்பு கொண்ட, தூய தன் பிரக்ஞை இங்கு மறுக்கப்படுகிறதே. ஒவ்வொரு தனிமனிதனும் ஒரு பொதுத்தன்மையை வேண்டி தன் தூயதான தனித்தன்மையை மறுப்பது தானே கலையாக சிருஷ்டி பெறுகிறது. மிர்கயாவின் திடீர் வெட்டுகள் கதையாசிரியனின் பொதுமையில் பதிப்பாசிரியன் இணைவதைத்தானே காட்டுகிறது? காஞ்சனாசீதா படைத்த அரவிந்தனின் கலாஉணர்வும், இசை அமைத்த ராஜீவ் தாராநாத்தும் பொதுமை காணத்தானே வேண்டும். இங்குத் தனி உணர்வின் வெளிப்பாடுதான் கலை என்ற பழைய கோட்பாடு பொருந்தாது நிற்கிறது.

ஆக இதுதான் நமக்குச் சொல்லமுடிகிறது. அதாவது, சமூகத்தின் நிகழ்வுகளும் சக்தியும் மட்டும் ஃப்ளாட்டிங்

பேப்பர்போல் படைப்பவனின் மனதில் ஒட்டிவிடுவதும் இல்லை. அதுபோல் அவனது மனதின் பிரக்ஞை அப்படியே பாய்ந்து வந்து படைப்பில் குந்துவதும் இல்லை. இப்படி கட்சி கட்டுவது உண்மையை முழுமையாய் பார்க்காது, யானை பார்த்த குருடர் கதையைத்தான் சிறப்பு செய்யும்.

இரண்டாவது வாசகம் – அதாவது ஒருத்தனது பிரக்ஞை அப்படியே பாய்ந்துவந்து படைப்பில் குந்துவதும் இல்லை என்பது - விளக்கம் கோருகிறது, தனிமனிதனும் அவனது ஆழங்கொண்ட உணர்வுகளும் தான் தனித்தனி விகற்பங்களுடன் வெளிப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. தனிமனிதனின் உணர்வுலகம் செல்வாக்கு செலுத்தாவிடில் கம்பனும், ஒட்டக்கூத்தனும் இரு தார தம்மியமுள்ள படைப்பாளிகளாய் எப்படித் தோன்ற முடியும் என்று கேட்கப்படுகிறது. கம்பன் தனியானவன், ஒட்டக்கூத்தன் தனியானவன் என்று சொல்லப்படுகிறது. எனவேதான் படைப்பில் தாரதம்மியம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உணர்வில் இருந்த மாறுபாடுதான் இருவரையும் பிரிக்கிறது என்பது சரியானால் இன்னும் கேள்வி தொடர்கிறது. எந்தத் தனிஉணர்வு ஒருத்தனைக் கவிஞனாகவும், வேறொருவனை வெறும் செய்யுள் எழுதுபவனாகவும் செய்தது? இதற்குப்பதிலாக தனிமனிதன் கம்பனுக்கு உள்வட்டம் இருந்தது என்று சொல்லப்படுகிறது. இங்குத் தனிப்பிரக்ஞை என்ற விவாதம் தடம்தவறி வெளிச்சூழல் என்ற கொள்கைக்கு நழுவுகிறது என்பதோடன்றி, ஒரே உள்வட்டம் ஏன் கம்பனைச் சிறந்த கவியாகவும் ஒட்டக்கூத்தனைச் செய்யுள் பயிற்சியாளராகவும் ஆக்கியது என்ற கேள்வியும் வருகிறது. மீண்டும் அந்தத் தனிஉணர்வு விவாதம் நொண்டி அடிக்கிறது.

அடுத்து ஓர் முக்கியமான கேள்வி! சோழர் காலத்தில் பல படைப்பு உணர்வு கொண்டவர்கள் சிற்பிகளாய் மாற, கம்பன்மட்டும் கவிஞனாய் இருந்தான். காரணம், ஓவிய, சிற்ப, இசையரபுகளும் இலக்கிய உணர்வும் முற்றிலும் மாறுபட்டனவா? சிலரிடம் இணைந்தும், சிலரிடம் தனித்தும்

இருக்கிறது என்பதா பதில்? ஏன் அப்படி என்றால், தெரியாது; என்னமோ இருக்கிறது என்பதுதானே விடை. நம் தேடல் முடிந்து விடுகிறது, தேடல் என்பது மனிதனுக்கு முடியக் கூடாது. காரணம் மனிதன் வாழ்பவன்.

இங்குத் தேடல் நம்மை நம் உணர்வுகளை விரிய வைக்கிறது. திருப்தியின்மை மீண்டும் மீண்டும் பரிமாணங்களை, அறிவு எல்லைகளை உடைத்துப் பிரயாணம் கொள்கிறது. உள்உணர்வு புறச்சூழல் என்பதை நோக்கி விரிகிறது. அதாவது தான் என்ற தனிமனிதனைக் கடந்த 'தான் அல்ல' என்ற (Non-I), சமூகம் என்ற, பொதுமைப்படுத்தப்பட்ட உணர்வு என்ற, உறவுகள் என்ற சூழலைக் குறிக்கிறேன். இங்கே மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும் சூழல்வேறு சூழ்நிலை வேறு.

சரி! எது படைப்புக்கு ஆதாரம்? கேள்விதான் எஞ்சுகிறது, இவ்வளவு தூரத்திற்கு அப்புறமும். இது கேள்வியின் ஆழத்தையும், ஈடுபட்டுள்ள துறையின் கடினத் தன்மையையும் காட்டுகிறது.

மீண்டும் கேள்வியின் பல்வேறு கோணங்களையும் ஆயவேண்டும். இதுவரை நாம் படைப்புகளையும் படைப்பாளியையும் பற்றி மட்டும் பார்த்து வந்தோம். படைப்பின் தோற்றம் பற்றியே பார்வை சென்றது. படைப்பின் இருத்தலுக்கு அதன் ஆசிரியனிடமிருந்து உற்பத்தியாகும் கோணம் மட்டுமே நமக்கு முக்கியமாய்ப்பட்டது. இது ஒரு வேளை விமர்சனம் எழுதியவர்கள் அத்தனைபேரும் படைப்பாளிகளாயும் இருந்த தனாலாயிருக்கும். அவர்களுக்கு உற்பத்தியாகும் அம்சம்தான் முக்கியம் என்பது வியப்புக்குரியதல்ல. இவர்களைத் தாண்டி விமர்சனம் மட்டும் செய்யும் நபர்களும் வரவில்லை என்பதைத்தான் அவர்களும் படைப்பின் விமர்சனம் என்பது படைப்பாளியின் வெளியீடாக மட்டும் படைப்பைப் பார்த்ததில் தெரிகிறது. இப்பார்வை குறுகிய அவர்களது தர்சனத்தைத் தெளிவாக்குவதோடன்றி அவர்களால் சில பிரச்னைகளுக்கு

விடைகாண முடியாததையும் விளக்குகிறது. எனவே படைப்புக்கும் ஆசிரியனுக்கும் உள்ள தொடர்பு மட்டும் தான் படைப்பின் சாராம்சத்தை உருவத்தை, வெளியீட்டை நிர்ணயிக்கிறது என்று சொல்வது போதாது. புதுத் தொடர்புகளுக்கும் கோணங்களுக்கும் நம் பார்வை திசை திரும்ப வேண்டியுள்ளது. இனி நாம் படைப்புக்கும் வாசகனுக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொரு படைப்பாளியும் தன்னுடைய படைப்புடன் முடிந்து விடுகிறான் என்றே சொல்லுதல் வேண்டும். படைப்புத்தான் அதன் பிறகு முக்யமாகிறது. படைப்பாளி முக்கியமில்லை. காரணம் Folklore-ல் 'தான் அற்ற படைப்பாளி' தான் தென்படுகிறான். நாடகத்தில் படைப்பாளி 'தான் அற்ற' ஒருவனாகவே நிற்க வேண்டியுள்ளது. பழங்காலமென்றால் படைத்தவன் பற்றித் தகவலே இல்லை. வரலாறே இல்லை. படைப்பாளி என்பவன் எனக்குத் தெரியாதவன். படைப்பு என் முன் வந்து கிடக்கிறது. நான் வாசகன். என் சம்பந்தம் படைப்புடன், எனவே படிக்கிறேன். வார்த்தைகளால் எனக்கு ஓர் உலகு அறிமுகப்படுத்தப்படுகிறது, படைப்பாளி நல்லவனா? கெட்டவனா? எனக்குத் தேவையில்லை. படைப்பு மட்டும் தான் எனக்குக் கிடைக்கிறது. உடனடி ஆசிரியன் பற்றிய தகவல்கள் சேகரிக்க விமர்சகனுக்கும், வாசகனுக்கும் எந்த நிர்பந்தமும் இல்லை. படைப்பாளியின் நேர்மை என்பதே படைப்பு நேர்மைதான். படைப்பில் நேர்மையானவனா, போதும் எனக்கு, காஃப்கா எப்படிப்பட்டவனோ எனக்குத் தெரியாது; தெரிய வேண்டாம் – கம்பன், வள்ளுவன் எப்படி வந்தார்களோ, தெரியவில்லை. படைப்புதான் எனக்கு அவர்களைப் பற்றிய சாட்சியங்கள். அப்படி ஒரு வேளை தெரிந்தாலும் அவை பொருட்டல்ல. காரணம் பாஸிஸ்டு ஆதரவாளரான எஸ்ரா பவுண்டுக்கு கவிதை வருகிறது. அவரது சீடரான எலியட் கவிதையில்மேதை. பாஸிஸ்டு

ஆதரவாளரான ஹைடேக்கர் சிந்தனை உலகில் கவர்ச்சியானவர்தான். எமர்ஜென்சி காலகட்டத்தில் இந்திராவை ஆதரித்த ஹுசைன் ஓவியர்தான். படைப்பாளி நல்லவன் என்றால் படைப்பும் நல்லதாக இருக்கும் என்ற ரஸ்கின், பிளாட்டோ ஆகியோரின் கொள்கைகள், நல்லவைதான் என்ற அவர்கள் நல்ல மனத்தின் பால் கவர்ச்சி ஏற்பட்டாலும் படைப்புச்செயல் அவர்களின் உள்ளிருந்து, வேறோர் பண்பிலிருந்து வெளிப்படுவதுபோல் தெரிகிறது. வெளியிலுள்ள தினசரி வாழ்க்கையுடன் அவர்கள் கொள்ளும் வாழ்வுக்கும் உள்ளிருக்கும் படைப்புக்குணத்துக்கும் உள்ள தொடர்பு எத்தகையது? இடைவெளி கொண்டதா, அப்படிக் கொண்டதென்றால் இடைவெளியின் தன்மை எத்தகையது, என்பதெல்லாம் தனியான கவனத்துக்குரிய வி யங்கள்.

வாசகனான நான் வேறு வழியில்லாமல் படைப்பை அணுகுகிறேன். அறிகிறேன். ஆனந்திக்கிறேன். இந்த ஆனந்தம் தான் நான் படைப்பாளி ஆவதற்கு மூல வித்து. என் சூழ்நிலைகள் சரியானதென்றால் கம்பனும், வால்மீகியும் கவிதை மரபு இல்லாவிட்டால் உருவாகியே இருக்க மாட்டார்கள். இவர்களின் படைப்பு என்பது, இவர்களின் முன் ஏதோ வகையில் சமூகத்தில் இருக்கும் இன்னொரு படைப்புடன் இவர்கள் வைக்கும் தொடர்பின் விளைவு. இங்கு ஓர் முக்கிய கேள்வி வருகிறது. எலியட்டுக்கு முன் மாதிரி, கவி லாபோர்க், பாட்லே போன்றோரின் பாதிப்பு இருந்தாலும் தனியான எலியட்டும் நமக்குக் கிடைக்கிறாரே, இதற்கு என்ன செய்வது? இதற்கு இன்றைய மொழியியல்வாதிகளின் ஒரு பதிலையும் போகிறபோக்கில் பார்த்துச் செல்லலாம், நாம் நினைப்பது ஒன்றாகவும், எழுதும்போது அதே வி யம் இன்னொன்றாகவும் ஆகிவிடுவது நம் அனுபவத்தில் நாம் காணும் வி யம். ஓர் உள்ளடக்கத்தில் எழுதப்படும் கதை, எழுதி முடிந்ததும் இன்னொன்றாக ஆகிவிடுகிறது. பல வருடங்களாக மனதில் கிடக்கும் கேள்வி ஒன்று நண்பர் ஒருவரிடத்தில் பேசும்போது திடீரென்று

விடையைப் பெறுகின்றது. அதாவது பேச்சின் வேகத்தில்......... பாயர்பேக்கைப் பற்றிச் சொல்லும்போது எங்கெல்ஸ், பாயர்பேக்குக்கு விவாதிப்பதற்குப் போதிய சூழலும் நண்பர்களும் இல்லாத நிலைமை அவரைப் பல கருத்துக்களை மேலும் வளர்த்து எடுக்காதவாறு வைத்துள்ளது என்கிறார். ஆக படைப்பு எழுதும்போது முழுமையை அடைகிறது இன்று. அதாவது வாய்மொழியாக இருந்தபோது வேறு பண்புகளைப் பெற்றிருந்தது. சிந்தனையும் வாய்மொழி இலக்கிய வகைகளும் பேச்சின் அமைப்பியல் தொடர்பில் (Structural relation) உருவாகின்றன. ஓவியம் வரையும்போது, உருவாகிறது. இலக்கியம், கவிதை, நாடகம் போன்றவை எழுதும்போது உருவாகின்றன. Valery போன்றவர்கள், நம் மனத்தில் கிடப்பதற்கு நேர் எதிர்மாறானது, எழுதி முடியும் போது கிடைத்தால்தான் அது நல்ல எழுத்து என்று கூறும் அளவு போகிறார்கள். ஜைமினிராயின் ஓவியங்களில், ஜைன ஓவியங்களின் பாதிப்பான கண்கோடுகளும், மூக்கு நெற்றியுடன் இணைவதும் வரையப்படும்போது ஓவியனே நினைத்திராத வடிவத்தை எடுக்கலாம்! அதற்கு சாத்யமுண்டு. இவற்றை மார்க்ஸின் Praxis என்ற கருத்துடன் இணைத்து ஓர் கலை பற்றிய கோட்பாடு போல் கிரகிக்க முடியும், மொழியியல் வாதிகளும் இன்று பேச்சு என்றும் எழுத்து என்றும் தனியான மொழியியல் விதிகள் உருவாக்கும் வளர்ச்சியை எட்டியுள்ளனர்.

ஓவியத்திலிருந்து ஓர் உதாரணத்தைச் சொல்லிவிடலாம். பிக்காஸோவின் குவர்னிகா ஓவியத்தில் இரவுச் சூழ்நிலை பின்னணியாக வருகிறது. ஆனால் குண்டுவீச்சு உண்மையில் ஸ்பெயின் கிராமத்தில் பகலில்தான் நடந்தது. இந்த இரவைப் பின்னணியாக ஏன் பிக்காஸோ எடுத்தார் எனில் The third of May 1808 என்ற ஓவியம்-அதாவது உலகப் புகழ் பெற்ற Goya-வினுடையது பதிலைத்தருகிறது. ஆக, கோயாவின் ஓவியம் பிக்காஸோவிற்கு உதவுகிறது.

மேலும் பிக்காஸோவின் ஓவியத்தில், ஒரு ஓரத்தில் வாய் பிளந்து கைகள் தூக்கி பிரலாபிக்கும் உருவம் ஒன்று தென்படுகிறது. அது வத்திக்கானில் உள்ள மைக்கேல் ஆஞ்சலோவின் Peeta என்ற ஓவியக்காட்சிகள் தாக்கம் கொண்டது என்கிறார்கள் ஓவிய விமர்சகர்கள். கோயாவுக்கு, பிரெஞ்சு விவசாயக் கொரில்லாக்கள் நெப்போலியனின் சேனையால் சுட்டுக்கொல்லப்பட்ட கொடுமையான நிகழ்ச்சி உண்மைச்சம்பவம் ஓவியத்தைத் தந்தது. ஆனால் அந்த கோயாவின் ஓவியங்களிலும் நாம் பழைய ஓவிய ரூபங்களையும் வர்ணங்களையும் காணமுடியும். அவ்வோவியத்தில் மலைமீதிருந்து இறங்கி வரும் மனித ரூபங்கள் Masaccio 427யின் ஈடன் தோட்டத்திலிருந்து துரத்தப்படல் என்ற ஓவியத்தின் பாதிப்பால் வந்தது.

ஓவிய மரபொன்று மிகச்சிறந்த ஓவிய சிகரங்களைக் கூட ஏற்படுத்துபவனிடத்திலும் தொடர் சங்கிலி அறாதவாறு இருப்பதைக் கண்டோம். சங்க இலக்கியத்திலிருந்து, பதினெண் கீழ்க்கணக்குக்கும், அதிலிருந்து காப்பிய மரபுக்கும் பக்திமரபுக்கும், சிற்றிலக்கியமரபுக்கும், பாரதிதாசன் புதுக்கவிதை வரை தொடர்ந்து வளர்ந்தோ சுருங்கியோ வரும் மரபுக்கும் தொடர்புண்டு. ஆக வாசகனுக்கும் இலக்கியத்துக்கும், அல்லது ஓவியனுக்கும் இன்னொரு ஓவியத்துக்கும் உள்ள தொடர்பு தான் இலக்கிய ஆசிரியனை அல்லது ஓவியனைப்படைக்கிறது. இது எந்த அளவு உண்மை என்பதும் வரும் கேள்விகளில் ருசுப்படுத்தலாம்.

ஒரு கேள்வி தலைநீட்டிக் கொண்டே இருக்கிறது. சங்க மரபைப் படித்த அல்லது கேட்ட ஒருத்தனுக்கு திருக்குறள் பிறப்பதைப் பாராட்டலாம். ஆனால் சிறுபஞ்சமூலமும் ஆசாரக் கோவையும் பிறக்கிறதே! புதுமைப் பித்தனைப் படிப்பவர்கள் அகிலனும் தான். ஜி. நாகராஜனும் தான். இதற்கென்ன காரணம்? படைப்புத்தான் இன்னொரு படைப்பை உருவாக்குகிறது. தீர்மானிக்கிறது

என்றால் பிரச்னைகள் மேலும் குழப்பமடையுமே தவிர தீரவழியில்லை. புறநானூற்றைப் படிப்பது முக்கியமல்ல; வெறும் படிப்பு திருக்குறளுக்கு வித்திடாது. திருக்குறள் உருவாக்கத்துக்கு வெறும் பாதிப்பு மட்டும் காரணமல்ல. அதுபோல் வெறும் திருவள்ளுவர் என்ற தனி மனிதரின் ஆளுமை அல்லது பிரக்ஞை அல்லது உள் உலகம் மட்டும் காரணமல்ல. ஆனால் தனிமனிதர் அந்தப் படைப்புடன் கொள்ளும் உறவு முக்யம். இந்த உறவில் குறையும் உண்டு. நிறையும் உண்டு. காரியாசான் குறையுள்ள உறவை வைக்க, திருவள்ளுவர் உறவு நிறையுள்ளதாகிறது. காரியாசன் உறவு ஒன்றில் தன் அல்லது உள் பிரக்ஞை என்கிற நிலைநோக்கிச் சரிகிறது. அல்லது வெளி உலகம் என்கிற நிலைநோக்கிச் சரிகிறது. உள்பிரக்ஞை நோக்கிச் செல்லும் தனி மனிதன், தன்முன்னுள்ள படைப்புக்கும் தனக்குமுள்ள தொடர்பை மதிப்பிடுதலில் அல்லது தன் இயல்புடன் இணைத்தலில் தன் பொதுமையை அதன் இயல்பில் தேடுதலில் தவறு செய்கிறான். அதன்மூலம் தன்படைப்புத்தான் உயர்ந்தது என்கிற படைப்புக்கு எதிரான மமதை உருவாகிறது அல்லது எழுதுதலே வியர்த்தம் அல்லது வெளிப்படுதல் சாத்யமில்லை. மௌனமாயிரு என்று படைப்பிலக்கியத்துக்கு எதிரானநிலை எடுக்கும் நிர்ப்பந்தம் உருவாகும். மு. தளையசிங்கம் கலையை அழிக்கவேண்டும் எனச் சொல்வதும் இங்கு இனம் காணத்தக்க வி யம்தான். வெளிஉலகில் சாய்ந்து விடுகிறபோது புகழாசை, பணஆசை ஆகியவற்றிற்கும் இலக்கியத்துக்குப் புறம்பான மாயைகளுக்கும் ஆட்பட்டு படைப்பைக் கொல்லும் குணம் படைப்பாளிக்கு ஏற்படுகிறது. அது போலவே மரபை அதிகமாகப் பிடித்துத் தொங்கும் சிருஷ்டியற்ற மனப்போக்கும் வெளிஉறவில் சாய்ந்துவிடுவதால் ஏற்படுவது கலைக்கு எதிரான தீங்காகும். சர்ரியலிசம் ஃப்யுச்சரிசம் போன்ற கலைக் கோட்பாடுகள் இவ்வளவு தாக்கத்தைக் கலை, இலக்கிய உலகில் செய்ததற்குக் காரணமே அவை

உள்உலக, வெளி உலக இருமுனைகளின் இணைப்பைச் சரியானதன்மையில் நிறைவேற்றி விடுவதனால்தான்.

தனக்கும் தான் படித்து ரசித்த கலைக்கும் உள்ள தொடர்பு. உறவு இது ஒரு தளம். அது போல் 'தன்' னுக்கும் சமூகம் என்கிற பொருள் வகை Non-I என்ற ஒன்றுக்கும் உள்ள உறவு ஒருதளம். மொத்தமாய் வரும்முடிவு, இத்தளங்களின் ஒருமித்த இணைப்பே படைப்பு. கலை,இசை, இத்யாதிகள் என்பதுதான்.

எழுதும்போது ஓர் அமைப்பு தன்னின் தொடர்பின்றித்தானே அமைந்து விடுகிறது, தானே ரூபம் கொண்டுவருகிறது என்று ஓர் வி யத்தைப் பார்த்தோம். ஒருசிலவேளை யாந்திரீக படைப்புக்கு இது ஆதாரமோ என்கிற சந்தேகம் எழாமல் இருக்கமுடியாது. காரணம், தானே ரூபம் கொள்ளும், வடிவம்பெறும் இந்தஅமைப்பு, அதாவது கலைப்படைப்பு உள்மனத்தால் பிரக்ஞை மனத்தின் தொடர்பின்றி (Unconsciously) நிர்ணயம் செய்யப்பட்டு உந்துதல் பெறுகிறது உள்மனம் வெளிமனம் இவற்றின் தொடர்பு. விடுபட்டும் தொடர்ந்தும் இருப்பது, மேலேபார்த்த பிக்காஸோ ஓவியம் உள் மன நினைவில் மனத்தால் கோயாவிடமிருந்து பெற்ற தாக்கமாகவும் இருக்கலாம். அல்லது மேல் மனநினைவுள்ள தாக்கமாகவும் இருக்கலாம். அடிமனம் என்பதும் அராஜகமானது அல்ல. ஒழுங்குக்கு உட்பட்டது. (Archetypal இலக்கிய விமர்சனத்தின் பலமே இந்த இடம்தான்) ஒழுங்குக்கு உட்பட்டது என்பது பெறப்படும் இந்த மரபின் நிர்ணய சக்தி படைப்புகளின் முக்கியமான இடத்தை வகிக்கிறது என்ற கண்டு பிடிப்பு ஸ்ட்ரக்சுரலிஸ்டு இலக்கிய விமர்சனத்தில் புதுக்கவர்ச்சியைத் தருகிறது.

இன்னும் மேலே செல்லவேண்டும். ஓவியம், சினிமா, இசை என்பனவற்றை விட எழுத்து இலக்கியங்களான கவிதை, கதை இத்யாதி மத்யமத்தால் (Medium) வேறுபட்டது. இலக்கியம் என்ற மத்யமம்

மொழியை அடிப்படையாய்க் கொண்டது. இந்த மொழி என்பது மிகமிக விடு சமானது. விட்டிஜென்ஸ்டீனாகட்டும் பாஸிஸ்டுவிஸ்டு தத்துவவாதிகளாகட்டும், லெவிஸ்ட்ராஸின் மானுடவியலாகட்டும் லெக்கன் போன்ற மனோவியல் நிபுணர்களாகட்டும், இவர்களுக்கு இன்றுமொழியியில் கொடுத்துள்ள வசதிகள் அற்புதமானவை: மொழி பற்றிய அறிவு புதுத்துறைகளுக்கும் அவற்றின் பரிமாணத்தை விரிவு செய்தபடி வீறுநடை இட்டுமேல் செல்கிறது. இந்த மொழி என்பது மனோவியலில் புது சாதனைகளைச் செய்ய ஓர் கருவியாய் பயன்படுவது போல பலதுறைகளை நவீனமாக்கியுள்ளது. ஓரளவு ஜார்ஜ் ஸ்டெய்னருக்கு இலக்கிய விமர்சனத்துக்கு உள்ளொளி வழங்கியுள்ளது. ஸ்ட்க்சுரலிஸ்டு இலக்கியவிமர்சகர்களுக்கு (இது கவிதை மீதும், நாவல் மீதும் ஜியோமிதி கணிதப்பயிற்சி செய்வதல்ல) அதிகம் உதவியுள்ளது. Roland Barthes, Jonathan Culler போன்றவர்களின் இலக்கியம் பற்றிய அறிதல்கள் இன்று உலகப்புகழ் பெற்றவை. இலக்கியத்துக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை அவர்கள் ஆழமாக மேலும் ஆய்கின்றனர். நான் இவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடுவது இலக்கியத்தில் சிருஷ்டி மனநிலையில் உள்ள நான் என்கிற உள்உலகம் பற்றிய எண்ணத்தைக் குறைக்கவேயாகும். மொழி என்பது உள்ளார்ந்த பண்பு என்கிறார், சாம்ஸ்கி என்கிற மொழியியல் விஞ்ஞானி மொழியியல்லாத ஜனங்கள் இல்லை, இந்த மொழியும் உள்மொழி வெளிமொழி என்று இருபிரிவுகளைக் கொண்டது, சிந்தனைகளின் உருவாக்கம் என்பதே வெளிப்படுத்தலுடன் இணைந்தது, ஆக இதுவரை நாம் உள் உலகத்தின் விரிவு, தான் மனம், என்றெல்லாம் சொன்னதெல்லாம் கூட ஒருவகையில் மொழிதான் என்று மொழியியலாளர் நிரூபிக்கத்தலைப்பட்டுள்ளனர். மொழி என்று சொன்னவுடனேயே இன்னொருவனுடன் தொடர்பு சாதனம் என்று புரிந்து கொள்ளுதல் இன்றியமையாத தேவையாகிவிடுகிறது. இலக்கியம் மொழியாலும்

மொழியால் ஆன இடைவெளியாலும் ஆனது. மெட்டபிஸிகல் விளக்கங்கள் மேல் விழும் பெரிய அடி இது. பிற சிந்தனைகளைக் கொஞ்சம்கூட பரிச்சயம் செய்ய விரும்பாத பழமையாளர்கள், நிலப்பிரபுத்துவ இலக்கியக் கோட்பாடுள்ளவர்கள் ஆன தமிழ் விமர்சன ஆட்களின் மத்தியில் இத்தகைய விளக்கங்கள் புது ஒளியைப் பாய்ச்ச உதவலாம். இவ்வாறு இலக்கியம் என்பது படைப்பாளியின் வெளியீடு அல்ல. வாசகன் வெளியீடு என்ற புதுச்சித்தாந்தம் இங்கு தோன்றுகிறது. எந்தப் படைப்பென்றாலும் படிப்பவனுக்கு என்ன அர்த்தத்தின் தொனியை ஏற்படுத்துகிறதோ அதுதான். இதை அறியும் படைப்பாளி தன்னை மறைக்கிறான். படைக்கும்போது, படைப்பு என்பது எலியட் சொன்ன an escape from feelings என்பதாய் மாறுகிறது. காரணம் மொழி இல்லாமல் படைப்பும் இல்லை.

இப்படி விளக்கம் கொடுக்கும் போது தமிழில் கனம் பொருந்திய ராணி வாசகனை, குமுதம் வாசகனை மதித்து மாலை போடுகிறேன் என்பதல்ல. சிறு பத்திரிக்கைகளின் வாசகன் ஒருவன் தான் வண்ண நிலவனாய் படைக்கிறான். ஞானக் கூத்தனாய் கவிதை எழுதுகிறான். கவனமான வாசகனே படைப்பாளி. வாசகன் என்கிற போதே குமுதம் வாசகன் மனப்படிமம் வந்து விடக்கூடாது. காரணம் அவன் வாசகன் அல்ல; நுகர்வோன்.

படைப்பில் படைப்பாளியின் 'தான்' என்பதன் முக்கியத்துவத்தை நான் குறைக்கிறேன். இல்லை என்கவில்லை, சில ஸ்ட்ரக்சுரலிஸ்டுகளைப் போல. ஆனால் தான் என்பதும் தனியாய் படைப்பதுமில்லை என்ற கூற்றைக் கவனிக்க வேண்டும். தானின் வெளிப்பாடு தத்துவமாயும் வெளிப்படலாம்; சில கூற்றுகளாயும், சொற்பொழிவாயும் கூட வெளிப்படலாம். வகையாகவோ எப்படியோ வெளிப்படுகிறது. ஆனால் இலக்கியம் மட்டும் தானின் வெளிப்பாடு என்பது பழைய சிந்தனை. மேற்கில் பல மதிப்புக்குரிய அறிஞர்கள் இதே கருத்தைக் கூறுகிறார்கள்.

ஆனால் இது சரியல்ல. தான் என்பது தத்துவமாய் வெளிப்படும். ஆனால் அது இலக்கியம் அல்ல. இலக்கியத்தில் தத்துவமிருக்கலாம். ஆனால் தத்துவமே இலக்கியமல்ல. இலக்கியமே தத்துவமல்ல. காமுவும், சார்த்தரும், சாந்தயனாவும், தத்துவமும் படைத்தனர். இலக்கியமும் படைத்தனர். ஆனால் இது இரு தளங்களின் வித்யாசப்பட்ட வெளிப்படல்களாகும். சார்த்தரின் Being and Nothingness-யையும் Nausea-வின் மொழிநடையையும் மட்டும் கவனிக்கும் வாசகனே இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

ஜேம்ஸ் ஜாய்ஸ் தன் முந்தியமரபை அவர் மறுப்பதும் மரபுதான். (அதாவது வாசகச் செயல்பாடு) ஞானக்கூத்தன் கம்பன் மரபை சிருஷ்டித்து எடுப்பதும் மரபுப் பிரக்ஞைதான். ஃபிராய்டுதான் சொல்லியிருக்கிறார், எந்தப் புதுக் கண்டுபிடிப்பும் புதியதல்ல.

இப்போது கம்பர் சோழர் காலத்தில் ஏன் சிற்பியாக மாறவில்லை என்பதற்கு விடை கிடைக்கிறது. பல இலக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு வருகிறது. வெ.சா. கூறும் உள்ளிருந்து எழும் பிரக்ஞை என்பதை அவர் விளக்கவில்லை. உள்ளிருந்தும் எழும் பிரக்ஞை என்பதை அவர் வெறும் தானின் வெளிப்பாடு என்றுதான் புரிந்திருக்கிறார் எப்படி எப்படி இப்பிரக்ஞை வெளியீட்டை அடையும். என்றோ, ஓவியத்தில் இசையில் எப்படி வெளியீடு உருவாகுமென்றோ, இலக்கியத்தில் எப்படி உருவாகும் என்றோ விளக்கமில்லை. இதன் காரணமாக உள்ளிருந்து எழும் பிரக்ஞை என்ற கருத்தாக்கம் அடிப்படைகளோ அளவுகோல்களோ இல்லாததாகி விடுகிறது. அடிப்படையற்றதாகிவிடும் போது வெறும் விருப்பு, வெறுப்புகளின் வார்த்தையாடல்களாய் விமர்சனம் வருகிறது. தனது தவறா வரம் மீது அதிகம் நம்பிக்கை வந்தது முதல் மதிப்பீடுகள் அகநிலை கொண்டதாக மாறிவிடும் நிர்பந்தம் தோன்றுகிறது.

இப்போது இரு வி யங்கள் தெளிவாகிவிட்டன.

ஒன்று : சூழல் என்பது வேறு; சூழ்நிலை என்பது வேறு. சூழல் என்பது தான்

படைப்புக்கு அடிப்படை.

இரண்டு : தான் என்பதும் சமூகம் என்பதும் தனித்தனியாய், ஏதாவது ஒன்று படைப்பை உருவாக்குவது இல்லை. இரண்டும் இணைவதால் வரும் உறவுதான் (இது இரண்டின் குணாம்சங்களும் கொண்ட இன்னொன்று ஆகலாம்). படைப்பை உருவாக்கும். தொழிலாளி வர்க்கத்துக் குப்பனும் முதலாளி வர்க்கத்துப் பொன்னம்பலமும் தனி மனிதர்கள் என்ற முறையில் மனிதப் பொதுகுணங்கள் கொண்டவர்கள்; ஒரே ஊரைச்சார்ந்தவர்கள். அதே சாதி. ஆனால் உற்பத்திக் கருவிகள் கச்சாப் பொருள் போன்றன, பொருள் வகைச் சூழல். உற்பத்தியின் மூலம் இரு தன்மைகளும் அதாவது முதலாளியின் உடைமைகளான பொருள்களுடன் தொழிலாளியான குப்பன் கொள்ளும் உறவு புதுப்பண்புகளைக் குப்பனிடமும், பொன்னம்பலத்திடமும் தோற்றுவிக்கின்றன. இது மாதிரி தான் மேலே சொன்ன உறவையும் காண வேண்டும்.

சூழல் சூழ்நிலை என்ற இரு பாகுபாடுகளையும் செய்யாததால் வெ.சா. தியாகையர் சூழல் இல்லாமல் பாடினார் என்று கூற வேண்டியுள்ளது. சூழலாகிய இசைமரபு போன்றவை இல்லாமல் பாட முடியாது. ஆக எதுவும் சூழலில்லாமல் தோன்றாது. தான் இல்லாமலும் தோன்றாது. பலர் மறுக்கின்ற சூழலின் இன்றியமையாமையும் இப்போது வெளிப்படையாகிறது. உள் உலகத்தின் வெளிப்பாடும், மொழியின்றி இலக்கியத்தில் சாத்தியமில்லை. என்று இலக்கிய மரபின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் உள் உலக வெளியுலக உறவு, இணைவு வலியுறுத்தப் பட்டதைக் கவனிக்கலாம். இவ்விணைவு பல தளங்களில் அமைப்புகளைச் செயல்பட வகை செய்கிறது. இந்த அமைப்புகள் தான் எழுத்தில் இலக்கியமாகிறது.

வெ.சா. இருநிலைகளிலும் உள் உலகப் பொறியும் வெளி உலக சமூகமும் படைப்புக்குக் காரணம் என்பதைச் சரி என்கின்ற நிலையிலும் அவரது செய்முறை விமரிசனத்தில் "தான்" உள் உலகத்தின் சிறப்புப் போன்றன அதிகம் பெருமை பெறுவதால் அவரது விமரிசன சிந்தனைப்போக்கில் நிகழ்ந்துள்ள குறைகள் பலவாகும். இரு நிலைகளும் அப்படியே இணைதலா என்பதும் அல்ல சிருஷ்டிபரமாய் புதுப்பண்பாக்கங்களைப் பிறப்பிக்கும் முறையில் இணைதலா என்று வேறு அவர் விரிவாய்ச் சிந்திக்கவில்லை. தன் நிலையின் உக்கிரத்தால்தான் படைப்பு வெளிப்படுகிறது, என்கின்ற பகுதிக்குச் சாய்ந்துவிடும்போது விமர்சனம் என்பது விஞ்ஞானரீதியற்றது என்று சொல்லிவிட வழிவருகிறது. ஒவ்வொருவரும் ஒரு கருத்து தெரிவித்தாலும் சேக்ஸ்பியரை அனுபவிப்பதில் ஓர் பொதுமை (Objectivity) காணப்படுகிறதே, இதுதான் விஞ்ஞான அடிப்படை, இலக்கிய விமர்சனத்தில். எனவே பொதுமையான அளவு கோல்கள் விமர்சனத்தில் செயல்படலாம். தன் அனுபவத்தின் வெளிப்பாடுதான் விமர்சனம் என்கின்ற மேல்நாட்டு விமர்சகர்கள் அளவு, நேர்மை நம் விமர்சகர்களிடத்தில் இல்லை. வேண்டிய அளவு உதாரணங்கள் இருக்கிறது. எனவே விமர்சனத்தில் ஓர் பொதுமை வேண்டும் என்றே இன்றைய தமிழ்ச் சூழலை நினைக்கும் போது தோன்றுகின்றது. அதுதான் ஆரோக்கியமானது. இதற்காக தமிழ்த் துறைகளில் நடைபெறுகின்ற கசாப்புக் கடை விமர்சனம் ஆதரிக்கப் படவேண்டும் என்பது அர்த்தமல்ல. மேற்சொன்ன ஒரு பக்கச்சாய்வு வெ.சா. போன்றவர்களைக்கூட சுமார் 1970-க்கு பிறகு ஒன்று, இரண்டு கட்டுரைகளைத் தவிர சீரழித்து விட்டது.

3. இந்தியாவில் மார்க்ஸியம் – தொடரும் தேடல் – குறையும் நிறையும்

– குணா

பொதுவுடைமைப் பொன்னுலகை நோக்கிப் பிற நாடுகள் பீடும் புகழுடனும் செம்மாந்து நடை பயின்று வருகையில் நாம் மட்டும் பின் தங்கிக் கிடப்பது ஏன் என்னும் கேள்வியைப் 'பரிமாணம், எழுப்பியுள்ளது. நானும் அதற்குரிய காரணங்களைத் தேடி வந்துள்ளேன். தொடர்ந்தும் தேடுகிறேன். பிறர் என்னுடன் உடன்படலாம். தீவிரமாக விலகியும் முரண்பட்டும் நிற்கலாம். அத்தகைய தேடலில் நெருக்கமாக வந்த ஒரு சிலரின் அதே வகைத் தேடலினால் விளைந்த முடிவுகள், நேரடியாக இல்லாமல் சுற்றிவளைத்துக் கூறுகின்றபோதும், அம் முடிவுகளுடன் நான் என்னை அறிந்தும் அறியாமலும் இணைகின்றேன். இன்றைய தேக்கநிலையில் அத்தகைய முடிவுகள், நம்மை ஒத்த பலரிடம் ஒரு நல்ல விளக்கத்தையும் ஓட்டத்தையும் பயக்கலாம் என்னும் நம்பிக்கையுடன் அண்மையில் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த அறிஞர்களில் ஒருவரான மாத்யூ குரியன் அவர்கள் ஞாயிறு (Sunday, 15-10-1978) என்னும் ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்த சில கருத்துக்களுடன் துவங்குவேன்.

"இங்குள்ள மார்க்சியலார்கள் பண்பாடு, மரபு போன்றவற்றிலான மாநில வாரியான வேற்றுமைகள், பழங்குடிநிலை, சாதிகள் போன்ற முதலாளியத்திற்கு முந்திய வடிவமைப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு ஏற்ற வீட்டுக் கணக்கைப் போடத் தவறி விட்டனர். மார்க்சியத்தின் அடிப்படை உண்மைகளை உள்நாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப ஆக்க முறையில் செயல்படுத்துவது குறைந்து காணப்படுகிறது" என மாத்யூ குரியன் கூறுகின்றார். பல மார்க்சியலார்கள் புரியாமொழி வடிவில் கிளிப்பிள்ளை போல் பயின்ற கோட்பாட்டை மட்டுமே

கொண்டிருக்கின்றனர். இந்தப் புரியாமொழி மக்களுக்குப் புரியாததாக இருக்கின்றது. ஒரு வேளை அவர்களுக்கே கூடப் புரியாததாகவும் இருக்கலாம். தங்களின் கோட்பாடுகளையும், மார்க்சிய மரபு இலக்கியங்களைப் பற்றிய அறிவையும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் மார்க்சியத்தை ஒரு கேலிப் படமாக படைக்கின்றனர். அக்கேலிப்படத்தை உண்மையானது எனக்கூறி மக்களுக்குப் புகட்டுகின்றனர். அதனால் அவர்கள் தோற்றுவிக்கின்ற எதிர்வினை வறியதாக இருப்பதில் விந்தையொன்றும் இல்லை எனத் தொடர்ந்து உரைக்கின்றார். தொடர்ந்து: "கேரளம் – நேற்று இன்று நாளை என்னும் நூலில் தன்னுடைய ஆய்வைக் கொண்டு ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு வழிகாட்டுகின்றார். அந்நூலில் அவர் கேரள மாநிலத்திலுள்ள சமுதாய ஆற்றலணிகளைப் பகுத்தாய்ந்து, அவற்றைச் சமுதாயப் புரட்சிக்காகத் திரட்டுவது எங்ஙனம் என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கின்றார். மார்க்சியலார்கள் அதே ஆய்வுமுறையில் பிற மாநிலங்களிலும் செய்ய வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்ற முதன்மைக் கூட்டாளியாகிய சமுதாய ஆற்றலணி வெவ்வேறாக இருக்கும். எடுத்துக்காட்டுக்கு, வடகிழக்கு இந்தியாவில், பழங்குடிப் பண்பாட்டைப் பயில்வது இன்றியமையாதது. பீகாரில் சாதி சிறப்பானது. தாழ்த்தப்பட்ட சாதியினர் சிக்கலை ஆய்வது மிகவும் தேவை. சுரண்டலின் வடிவங்களும் அளவுகளும் மாநில வாரியாக அலசி ஆராயப் பெறவேண்டும். ஆனால் அதைப்பற்றிய தெளிவு வருத்த மூட்டும் வகையில் குறைந்து காணப்படுகின்றது", என்று கூறி முடிக்கின்றார்.

மேற்கூறிய கருத்துக்கள் பொதுவுடைமை இயக்கத்தின் குறைநிறைகளை ஆராய முற்படுகின்ற அல்லது முனைந்த அனைவரிடமும் பொதுவாக விளங்குகின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து வகுப்பதெனின், தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தின் தோல்விகளுக்கான காரணங்களில் முதன்மையானது, இம்மண்ணுக்கு ஏற்ப

மார்க்சியத்தைப் பயிலாமையே எனலாகும். மார்க்சியம் வரட்டுக் கோட்பாடு அல்ல எனக்கூறி மனப்பாடம் செய்ததை ஆயிரம் முறை ஒப்புவித்தாலும் அத்தகைய வரட்டுத்தனத்திலிருந்து விடுபடாமையால் எழுவது அது. இம்மண்ணில் புழங்குகிற முரண்பாடுகளின் தனித்தன்மைகளை ஆராயாது அல்லது ஆராய மறுத்து, இங்குக் காண்கின்ற அவலங்களுக்கு புறத்தே இருந்து தீர்வுகளை எதிர்பார்க்கின்ற அல்லது இறக்குமதி செய்யத் துடிக்கின்ற போக்கு அது. தனி நாட்டின் புரட்சியின் தேசியத் தன்மையைப் பார்க்க மறுத்து, உலகப் புரட்சிக்குரிய பொதுக் கூறுகளில் சித்தாடுகின்ற மலட்டு மரபை ஏந்தி வருகின்ற மூளை உறிஞ்சி நிலையால் தோன்றிய விளைவு அது. சிந்தனையிலும் செயலிலும் தற்சார்பு இன்றி, வேறுநாட்டுப் புரட்சிக்காரர்கள் அகநிலையில் சிந்தித்து நமக்குத் தந்த அரசியல்வழி முறைகளைக் குருட்டுத்தனமாக இங்குப் பொருத்திப் பார்க்கும் எந்திரவியல் நடத்தையால் விளைவது வேறு எவ்வாறுதான் இருக்கும்? இங்குள்ள சாதி அமைப்புப் போன்ற முதலாளியத்திற்கு முந்திய வகுப்புகளை முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் மூடி மறைத்து, அவற்றை வகுப்புப் போராட்டத்தின் வரம்புக்குள் கொண்டுவர மறுப்பதும் அதனால் விளைந்தது. இங்குள்ள அரை நிலவுடைமைப் படைப்பு உறவுகளையும் அமைப்புகளையும் கருத்தில் கொள்ளாமல், அந்த அரை நிலவுடைமைப் படைப்பு முறைக்கும் முதலாளிய வல்லரசுச் சந்தைக்கும் இடையிலான உறவுகளை முழுமையாக அறியாமல், மேற்கத்திய முதலாளிய நாடுகளில் விளங்குகின்ற முதலாளியப் படைப்பு உறவுகளுடனும் சந்தைப் பொருளியல் விதிகளுடனும் இங்குள்ள நிலைமைகளை முற்றிலுமாகச் சமப்படுத்திப் பேசுவதும் அதன் விளைவு.

சுருங்கச் சொல்லின், தெரிந்தோ தெரியாமலோ டிராட்க்சியத்தின் நீர்ச்சுழலில் சிக்கித் தவிக்கும் அவல நிலை அது. குடியாட்சிப் புரட்சியையும் சமூக உடைமை

புரட்சியையும் ஒன்றாகப் போட்டுக் கலந்து குழப்பிக் கொள்ளும் நீரையும் பாலையும் பகுத்தறியாச் சிந்தனை நிலை அது. நாடுகளும் நாட்டினங்களும் இன்றைய மெய்மைகள் என்பதை மறந்து உலகப் புரட்சியை ஒருதலையாகப் புரிந்து கொள்வதனாலே எழுவது. புரட்சியைச் செம்மாந்து செய்து முடித்த வேற்றுப் புலப் பொதுவுடைமைக் கட்சிகளுக்குத் தலையசைப்பதும் அதனால் விளைந்தது, மாவோவின் மொழியில் சொல்வதெனின், மார்க்சிய – இலெனினியம் என்னும் உலகம் தழுவிய உண்மையை ஓர் அம்பாகக் கொண்டு, இந்திய அல்லது தமிழகப் புரட்சி என்னும் குறியை நோக்கி எய்யாத நிலை அது. மாறாக, எவ்வளவு அழகான அம்பு, எவ்வளவு கூரான முனை என வியந்து நிற்கும் ஆக்கமுறைச் சிந்தனையும் நோக்கும் நாட்டமும் செயலும் இல்லா மலட்டுத் தன்மை அது. அல்லது சரியான குறி இல்லாமல் மார்க்சியமாகிய அம்பைக் கண்டபடி எய்கின்ற தான் தோன்றிச் செயலாக வாய்த்த ஒன்று. பண்பாட்டு வேரில்லாத நிலையில் அமைவது. அஃது மார்க்சியம் – இலெனினியம் புகட்டுகின்ற மாபெரும் உண்மைகள் யாவும் உழைக்கும் மக்களிடம் ஊறித் தழைக்காத மேலோட்டமான வளர்ச்சியின் எதிரொளிப்பு.

எதிரி வகுப்பு அணியினரின் இலக்கியங்களையும் பார்வையையும் விளக்கங்களையும் போக்குகளையும் நாட்டங்களையும் அலசி ஆய்கின்ற பொறுமையும் ஊக்கமும் இல்லாமை மற்றொரு காரணம். மார்க்சிய இயங்கியலைக் கற்கவேண்டியதன் சிறப்பை எடுத்துரைக்கும் மாவோ அவர்கள், காண்ட், எகல் போன்றோரின் கருத்து முதலியலைப் பற்றிய ஆழ்ந்த விரிந்த அறிவு இல்லை என்றால், இயங்காவியலைப் பற்றிய நல்ல தெளிவு இல்லையெனின், இயங்கியலில் உறுதியாக இருக்க முடியாது என்றார். மார்க்சிய நூல்களை மட்டுமே பயில்வது போதாது; மார்க்சியலார் அல்லாதாரின் அல்லது பகை அணியின் தலைகீழ் விளக்கங்களையும் உருட்டல்களையும்

புரட்டல்களையும் திரித்தல்களையும் பற்றி அறிதலும் வேண்டும் என்றார். அவ்வாறு ஒரு தரப்பை மட்டும் அறிவது ஒருதலைப் பார்வையை வளர்த்துப் பெரும் தவறுகளை இழைக்கச் செய்யும் என எச்சரிக்கை விடுத்தார். அத்தகைய ஒருதலைப்பார்வை, வெற்றுக் கட்சிப் பார்வையை – குறுகிய கண்ணோட்டத்தை – மட்டுமே வளர்த்துள்ளது. தமிழ்த் தேசிய இனம் பொதுவாகவும் – குறிப்பாகத் தமிழ்த் தொழிலாளர் வகுப்பும் – இன்று பல்வேறு கட்சிகளால் கூறுகூறாய்த் துண்டாடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை ஒன்றுபடுத்தவல்ல ஆற்றல் மார்க்சிய கொள்கையியலுக்கு மட்டும் உரியது. அத்துடன் பொதுவுடைமையரும் கூட கூறுபட்டுக் கிடக்கின்றனர். தீமையை நன்மையாக மாற்றுவதே இயங்கியல் வழி. தீமையைக் கொண்டு தீமைக்கான காரணத்தையும் சூழ்நிலைமையையும் களைந்து நன்மையைப் படைப்பதே அது. அந்நிலையில் மார்க்சியக் கோட்பாட்டில் அடிப்படையான சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் தீர்வு காணும் நிலை இன்றி, உண்மையாயினும் பொய்யாயினும், அதனைக் குறுகிய கட்சி அல்லது குறுங் குழுவியல் பார்வையின் அடிப்படையில் அணுகும் போக்கு தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தின் குறைகளில் ஒன்று. உண்மை சொல்லக் குத்தகை எடுத்திருப்பது பொதுவுடைமையரே என்னும் கருத்து மேலோங்கி நிற்கின்றது. பிறர் சொல்வதில் பகுதி உண்மையும் இல்லை என்னும் கட்சி அகந்தை விளங்குகின்றது.

அடுத்து, பொதுவுடைமையாளர்களிடையே முதிய, இடை, இளைய தலைமுறையினர்களின் ஒன்றிப்பு இல்லாமையும் பொதுவுடைமை இயக்கம் முடங்கவும் பிளவுறவும் ஒற்றுமை குன்றவும் செய்துள்ளது. குறுங் குழுவியல் கருத்தோட்டங்களும் நுனிப்புல்லை மேயும் போக்கும் வளர்ந்து, பொதுவுடைமை இயக்கத்தையும் அது குன்றச் செய்துள்ளது. வரலாற்று நோக்கு இல்லாமை

நம்முடைய மரபு. நம் நாட்டுப் பொதுவுடைமை இயக்கத்தின் வரலாற்றைப் புகட்டுகின்ற வரலாற்று நூல்கள் தோன்றாமையும் அம்மரபைச் சார்ந்தது. இங்குமங்கும் ஓரிருவர் வரலாறு எழுதும் முயற்சியைச் செய்திருப்பினும், அதில் பொதுவுடைமை வரலாற்றைப் புதிய தலைமுறைக்குச் சொல்லித் தருவதும் மிகக் குறைவு. அம்முதிய தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையிலுள்ள இடைவெளி மிகப் பெரும் அகழி. அந்நிலையில் பொதுவுடைமை இயக்கத்தில் ஆட்சி புரிந்த வரட்டுத்தனமும், துணிவு இன்மைக்குப் பகுத்தறிவு விளக்கம் தந்த புரட்டலியலும் எழுவதற்குரிய முன்னிலைகளை எதிர்க்கத் துணிந்த புதிய தலைமுறையினர், மிகு தீவிர 'இடதுசாரி'த் தவறுகளை இழைக்கும்படி நேரிட்டதற்குக் காரணம் அத்தலைமுறை அகழியே என்பதும் மிகையாகாது.

அந்நிலையில், புரட்சி நாட்டத்தின் வேகத்தால் உந்தப் பெற்ற இளம் தலைமுறையினர், சில போழ்து அடிப்படை மரபுகளையும் பண்புகளையும் நாணயங்களையும் காற்றில் பறக்கவிட்டு, எதிரி யார் நண்பர் யார் எனப் புரியாமல், நண்பர்களையே பகைவர்களாகக் கொள்ளுகின்ற அவலத்திற்கும் அதுவே காரணம். கருத்தால் மாறுபடுபவரை வென்றெடுக்கும் பண்பாடு இன்றி, அல்லது மக்களிடையே விளங்கும் முரண்பாட்டை தீர்க்கின்ற வகை தெரியாது, தங்களுடன் உடன்படாத அனைவரும் எதிரிகள் ஆகவே அனைவரையும் எதிர்த்துப் போராடுவது என்னும் நிலைபாடு அதனால் எழுந்துள்ளது. உதிரிப் பாட்டாளிகளைக் கற்பனை வீரர்களாக வடித்துக் கொண்டு, உதிரித்தன்மையைப் புரட்சியாளனின் அணியாகக் கருதுகின்ற சிறுபிள்ளைத்தனம் அதன் விளைவு. பிஞ்சிலே பழுப்பதெனும் இயற்கைக்குப் புறம்பான நிகழ்வைப் பொதுமைப்படுத்தும் முயற்சிக்கு அது வித்திட்டுள்ளது. அது வானத்தை வில்லாய் வளைத்து மலையைக் கயிறாகத் திரிக்கப் புறப்பட்டுவிட்ட இளைய தலைமுறையின் உணர்ச்சிகளை எள்ளி நகையாடுவதோடு

நிற்கச் செய்கின்றது. தலைமுறைத் தொடர்பும் முரண்பாடும் இயங்கியல் வழியில் அமையாது போமானால், அத்தீமை நீடிக்கும். அதனால், முதுமையின் பட்டறிவைத் தொகுத்துச் சாரமாக்கிக் கொள்கைவடிவில் ஏற்றி மார்க்சியத்தை மென்மேலும் வலிவும் செறிவும் பெறச் செய்ய இயலாது போகும். இளமையின் துடிப்பும் உணர்வும் வேகமும் சரியான குறி இல்லாது சிதறிய ஆற்றல்களாகச் சிதறித் தெறிக்கும். விழலுக்கு இறைத்த நீராகும். பகுதிப் பட்டறிவும் பகுதிச் செயலாற்றலுமுள்ள இடைத் தலைமுறை, முதுமைக்கும் இளமைக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக இல்லாது கெடும்; தலைமுறை அகழி தூர்க்கப்படாது. இயக்கம் வளராது. பிளவுக்காகப் பிளவு, மேற்கோள்களை மந்திரங்களாக உருக்குலைத்தல், செயல் செத்த கோட்பாடு, தான் தோன்றித்தனமான செயல், ஒருதலைப்பார்வை, நுனிப்புல் மேய்தல் ஆகியவை தொடரும்.

கோட்பாடு என்பது மார்க்சியத்திற்கு வித்திட்டு வளர்த்தவர்களின் பட்டறிவும் எழுத்தும் மட்டுமாகாது. அவற்றுடன் மூன்று தலைமுறையினரின் பட்டறிவும் தொகுத்துச் சாறெடுத்து சேர்த்து வளர்க்கப் பெற வேண்டும். அவ்வகையில் மட்டுமே மார்க்சியம் உயிருள்ள விளக்கமாகவும் பார்வையாகவும் இம்மண்ணில் வேரூன்றிப் புரட்சிச் செயலுக்கு உயிரூட்டமாக அமைய முடியும். இல்லையெனில், இறுகி, உயிரற்ற வரட்டுத்தனமாகக் கெடுக்கப்படும். மார்க்சியம் என்னும் போர்வையில் போலிகள் கடைவிரிக்கும். புரட்சி புண்படும்.

மேற்சொன்னவை, எம் போன்றோர் பட்டறிவால் தன்னாய்ந்து உணர்ந்தவை. அவற்றை ஆக்கமுறையில் பிறர் திறனாய்ந்து தங்களின் பட்டறிவால் தொகுக்கப்பெற்ற உண்மைகளைச் சேர்த்து மீண்டும் மீண்டும் ஆராய்ந்து குறைகளைக் களையும் வகையில் செயல்பட்டு, மீண்டும் அவற்றைத் திறனாய்ந்து தன்னாய்ந்து, மீண்டும்

செயல்பட்டுப் புரட்சிக்கு உறுதி சேர்ப்போம் என்னும் நம்பிக்கை ஒளி மார்க்சியத்தை ஆய்வுக்கும் செயலுக்கும் வழிகாட்டியாகக் கொண்டவரின் நாட்டமாக அமையும் என்னும் நம்பிக்கையை இழக்கலாகாது. புரட்சியின் பின்னடைவுகளையே முன்னேற்ற நிலைகளாக்கி, நாம் இறுதியில் வெற்றி காண்போம் என்பதும் உறுதி.

*****

4. இலக்கியத் தேடல்
- முற்போக்கு வட்டார சிறுகதைளினூடு -

- கதிரவன்

ஓர் இலக்கியப் படைப்பு தனது உள்ளார்ந்த தேடலின் போது, சமுதாயச் சிக்கல்களில் தளைப்பட்டுக் கேவலப்பட்டுக் கிடக்கும் மனிதனைக் கண்டறிதலோடு எதிர்கால நோக்கிலிருந்து அவனது சுதந்திர நிலையை வெளிப்படுத்துகிறது. சமூகச் சூழல்களின் சிக்கல்களுக்கிடையில் அவனை ஒரு படைப்பாளி பார்க்கும் போது காலங்காலமாக அவனுக்குள் இயங்கும் கலாச்சார, சமுதாய ஆற்றல்கள் பற்றிய உணர்வினூடும் அவனைப் பார்க்க வேண்டும். அந்தச் சிக்கல்களினூடு அவனது தன்னுணர்வைக் கண்டு, அத்தகைய மனிதன் அந்தச் சிக்கல்களை உதறித் தள்ள விரும்புவதைக் கண்டு, அதற்கான முயற்சியை மேம்படுத்த வேண்டும். அதாவது, மனிதன் இருத்தலின் காரணமாக ஏற்படுகின்ற பிரச்னைகளைத் தனக்குள் தாங்கி, புரிந்து செரித்து, தனக்குள்ளிருந்து வரும் எதிர்வினையாக, தனக்குகந்த வடிவத்தில் வெளிப்படுத்துவது படைப்பாகிறது.

இப்படிச் சித்தரிக்கும் போது ஒரு படைப்பாளன் இருவகை ஆபத்துகளில் மாட்டிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது ஒன்று, இம்மனிதனை கால, இடச்சூழல்களிலிருந்து பிரித்து இவனை நா.பா.அகிலன் பாணியில் இலட்சியவாதியாக்கி விடுதல்: இதில் வரும் மனிதன் வானிலேயே சஞ்சரிக்கிறான். மற்றது கால, இடச்சூழல்களுக்குள்ளே இவனைச் சிக்கவைத்து அதற்குள்ளேயே இவனை உழல வைப்பது: இதில் வரும் மனிதன் சூழல்களின் ஆதிக்கத்திலேயே சிக்கிச் சிறுமைப்படுகிறான்.

தமிழ்ச் சிறுகதைகள் இவ்விரு வகை ஆபத்திலும் சிக்கித் தடுமாறுகின்றன. இதன் விளைவு. மனித மேம்பாட்டுக்கு இவை பயன்படாமையும் கலைப்படைப்பில் தாழ்ச்சியும். காலங்காலமாக ஏற்படும் தளையை அறுத்துச்

சுதந்திரத்தை நிலைநாட்ட விரும்புபவன் என்ற முறையில் கலைஞன் சுதந்திரமானவன். சுதந்திரமானவன் என்பதற்காக ஒரு கட்சி சார்பு கூடாது என்பதல்ல. அரசியலின் ஒரு பகுதி தான் இலக்கியம் என்ற கண்ணோட்டத்தில் கதை எழுதுபவர்களிடம் கட்சிக்காகக் கதை எழுதும் தன்மை ஓங்கி, படைப்பானது படைப்பாகாமல் வெறும் செய்தியாகிறது; கதைத் தயாரிப்பாகிறது. இதனால் இவன் தன் சுதந்திரம் இழந்து, கட்டளைக்கு எழுதும் எழுத்தாளனாகச் செயல்படுகிறான்.

முற்போக்குவாதிகள் என்று தம்மைக் கருதிக் கொள்பவர் கதைகளைப் பற்றி இங்கு சுருக்கமாகப் பார்ப்போம். இவர்களின் கதைகள் பெரும்பாலும் இரண்டாம் வகை ஆபத்திலேயே சிக்கிக் கிடக்கின்றன. இவர்கள் கடைப்பிடிக்க விரும்பும் வர்க்க ஆய்வோ, இவர்களின் அரசியல் முழக்கமோ இந்த ஆபத்திலிருந்து இவர்களைக் காப்பாற்றவில்லை. இவர்களின் அரசியல் சரியா, தவறா என்ற கேள்விக்குள் நாம் செல்லவில்லை. இவர்களின் அரசியல் இவர்கள் படைக்கும் மனிதர்க்குள் வரும் போது, அந்த அரசியலின் முடமான தன்மையை இவர்கள் கதைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

குமுதம், கல்கி, விகடன், இதயம் முதலிய பத்திரிக்கைகள் வியாபார நோக்கில் நடைபெறுகின்றன இவை, குறிப்பிட்டதொரு நோக்கில் கதைகளைத் தயாரிக்கும் எழுத்தாளர்களுக்கே இடம் தருகின்றன என்பது இவற்றைப் பற்றிய முற்போக்கு வட்டாரத்தின் குற்றச்சாட்டு. தாமரை, செம்மலர், சிகரம் முதலிய பத்திரிக்கைகளும் இப்பொழுது கூடியவரை மாதம் தவறாமல் வருகின்றன. வாசகர்கள் கதைகளைத்தான் அதிகம் விரும்புகின்றனர் என்ற முறையில், இவர்கள் தவறாமல் கதைகளை நிறைய வெளியிடுகின்றனர். இந்த நிலையில் கதைத் தயாரிப்பு என்பதும், இதற்காக எழுத்தாளர்களைத் தயாரிப்பது என்பதுமான வேலைகள் நடக்கின்றன. இவர்கள் கதைகள் பற்றிப் பெரும்பகுதி

இவர்களுக்கிடையில் விமர்சனம் இல்லை. சிலசமயங்களில் இலக்கியச் சங்கப் பரிசு இவர்களுக்குக் கிடைக்கும் போது, இவர்கள் அடையும் புளகாங்கிதம், இவர்களை விமர்சனத்திற் கப்பாற்பட்ட கதாசிரியர்களாக்கி விடுகிறது. முற்போக்கு வட்டாரம் மாட்டிக் கொண்டுள்ள ஆபத்தான நிலை இத்தகையது.

மத்திய தர வர்க்கத்தின் சீரழிவை டி.எஸ். ரவீந்திரதாஸின் கதை (வாக்கிங் ஸ்டிக், தாமரை. பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் '78) சித்தரிக்கிறது ஓய்வு பெற்ற கமர்சியல் மேனேஜர், வருமானம் பற்றிய பிரச்னைகளுக்கிடையில் 75ரூ கொடுத்து காரில் போய் ஒரு காபரே நடனத்தைப் பார்க்கிறார். பணம் பிரச்னையாகி விட்ட நிலையில் போவாரா? போனால், அதன் காரணம் என்ன? இவை கேள்விகள், நடனம் ஆடுவது தன் மகள். தந்தைக்கு எரிச்சல். இருந்தாலும் இறுதிவரை நடனத்தைப் பார்க்கிறார். பிறகு திரும்பி வந்து அவர் மகளைக் கண்டிக்கிறார். சாத்தியமா? கேள்வி. மகள், பணந்தேட என்று ஒரு காரணம் கூறுகிறாள், கலைப்பிடிப்பு என்று இன்னொரு காரணம் கூறுகிறாள். உண்மை இங்கு விளக்கமாகவில்லை.

கதையில் இயைபில்லாத கூறுகள் பல. இயையாமைக்கான காரணம் (எழுத்தாளர் எடுத்துக்காட்ட விரும்பும்) மத்திய தர வர்க்க மனிதர்கள் இயைபற்றுப் போய் விட்டனர். இதைச் சித்தரித்திருந்தால் கதையில் ஒரு சோகம் நிலவும். பாத்திரங்களின் அவலம் தன்னுணர்வோடு இடம் பெறும். நிலைமையின் கேவலத்திலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வுடன் இவர்களைப் படைத்திருக்க முடியும். இம்முறையில் மனிதனின் பல பரிமாணங்கள் இடம் பெற்றுக் கதையின் கலைத்தன்மை சிறக்கும். ரவீந்திரதாஸ் செய்திருப்பது, மத்திய தர வர்க்கத்தைக் கேவலப்படுத்தும் நோக்கிலான சித்திரிப்பு. இப்படிச் செய்வது, அவரது குறுகிய அரசியல் பார்வை. கதையில் மேலோங்கியிருப்பது கதாசிரியரின் விருப்பு

வெறுப்புக்கள். இவர் சித்திரிக்கும் மத்திய தர வர்க்கம், பன்றி போல இன்பம் தேடி அலைகிறது. கொஞ்சம் கூர்ந்து பார்த்தால், இந்தப் பன்றி, இன்றைய சமூக நிலைகளில் யாருக்குள் தான் இல்லை? ஒரு சரியான அரசியல் கண்ணோட்டம் இதைப் பார்க்கத் தவறுவது ஏன்? மத்தியதர வர்க்கம் பல்வேறு காரணங்களால் சிதைகின்றது, என்ற உண்மையைச் சமூக ரீதியான பார்வையில் காணாமல், காபரேவுக்குச் செல்லும் இவளையும் இன்னொருத்தியைக் கல்யாணம் செய்ய நினைக்கும் இவனையும் (இன்ஷியல்: தாமரை சூன், சூலை) இந்தக் கதாசிரியர் ஆழ்ந்து தேடுவது எதற்காக? இவர்கள் ஆட்டங்களை எத்தனை பத்திரிக்கைகள் வாரம் தோறும் தேடுகின்றன! தாமரைக்கும் இப்படி ஒரு தேடலா?

'செம்மல'ரில் வந்த கம்பராயனின் ஒரு கதையைப் பார்ப்போம். கடன் தொல்லைகளுக் கிடையில் ஓட்டல் நடத்தும் ஒரு முதலாளி, விறகு வெட்டியவனுக்குக் கூலி கொடுக்க முடியாத நிலையில் அவர்களுக்கிடையில் நடக்கும் சண்டையை ஒரு கதை கூறுகிறது. ('வருகின்ற வேளைவரை' அக்டோபர் 78) கம்பராயனின் வர்க்க அணுகலில் ஓட்டல் நடத்துபவர் முதலாளியாகி விட்டார். இனி இவரைக் கேவலப்படுத்துவது இவரின் அரசியல் உத்தி. இப்படி விமர்சனம் செய்தால், உடனே இருக்கிறது, இன்னொரு வசனம்: 'நீ எதிரி வர்க்கத்தின் கைக்கூலி, இப்படிச் சித்தரிக்க வில்லையானால் கதை கட்ட முடியாது. 'இப்ப பேசுங்க பின்னாடி நேரம் வரும்' என்ற எதிர்பார்ப்பு. இப்படிச் சண்டை மூட்டி விட்டால் நேரம் யாருக்கு வரும் என்ற கவலையின்மை. கதையில் வரும் வேலாயுதம் ஒரு கடன்காரன். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இவனது வாழ்க்கையும் இந்தச் சமூகத்தில் எப்படிப் பிரச்னைகளுக்குள்ளாகிறது என்பதையும், இவன் எப்படிச் சிக்கல்களுக்குள் அமுங்குகிறான் என்பதையும் கவனியாமல், இவனை ஒரு பூதமாக்கி ஒரு விறகு வெட்டியுடன்

போராடுவதாகக் காட்டுவது எப்படிச் சரியாகும்? படைப்பாகும்? ஒரு நேச முரண்பாட்டைப் பகை முரண்பாடாக்குவதில் தான் கம்பராயனின் அரசியல் ஞானம் வெளிப்படுகிறது. இங்கு மார்க்சியம் மதிப்பிழக்கிறது. கதை பண்ணுதல் தான் இங்கு நடைபெறுகிறது.

'மகாநதியில் வந்த ஒரு கதையில் ('தேவனே, தேவனே' சகுந்தலை) கிறித்துவ டாக்டர், மரியம்மை என்ற நர்சுடன் உறவு கொள்ள முயன்றார். முடியவில்லை. மரியம்மை, மருத்துவமனையை விட்டு வெளியேறுகிறார்.

டாக்டரிடம் உள்ள காமம் கதையில் இகழப்படுகிறது. மரியம்மையின் கற்பு புகழப்படுகிறது. காமம் என்ற குணம் டாக்டரிடம் மட்டும் தானா? கொஞ்சம் மனக்கண்ணாடியில் பார்த்துக்கொள்வோம். நம் உருவமும் அதில் தெரியும். நிலைமை சிக்கலானது. இதில் கதாசிரியருக்கு அக்கறை இல்லை. இவருக்கு வர்க்க எதிரி தெரிய வேண்டும். ஒரு டாக்டரிடம் கண்டுபிடித்து விட்டார். அப்புறம், கதையில், மதம் பற்றிய கிண்டல்கள், கதைக்கு இணைவே இல்லாத முறையில் டாக்டரின் மதச்சார்பு பற்றிய கிண்டல்கள். இவர் கற்ற மார்க்சியம் மதத்தை இப்படிக் கிண்டல் செய்கிறது.

கதை முழுவதும் காமம் நிறைந்திருக்கிறது. ரவீந்திரதாஸ் கதையில், கம்பராமாயன் கதையில், இங்கு இவர் கதையில், அப்புறம் பா.செ. கதை வரை, காமம் எங்கும் நிறைந்திருக்கிறது. எதிரிவர்க்கத்தின் சுரண்டலை எடுத்துக் காட்டுவதற்கு, இவர்களுக்குக் கிடைத்த முதன்மையான உத்தி: அவர்களின் காமம். காமம் பற்றிச் சொல்லாத கதை என்ன கதை! இப்படிச் சொல்லும் போதே, எதிரி வர்க்கத்தால் தங்கள் வர்க்கப் பெண்கள் கேவலப்பட்டுப் போவதைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. காமம் பற்றி எழுதினால் வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள். சாண்டில்யன், மணியன் எழுதினால் குற்றம். தாங்கள் எழுதுவது சரி. இப்படிப் பேச விமர்சகர்கள் இங்கே தயாரிக்கப்படுகிறார்கள். இனி எழுதலாம்.

இவர்கள் தங்கள் எழுத்திலேயே போலீஸ், முதலாளி, நிலப்பிரபு போன்றவர்களைக் கேவலப்படுத்துவது வீழ்த்துவது, என்பதில் மகிழ்ச்சி கொள்கிறார்கள். இது நம்மைநாமே ஏமாற்றிக் கொள்வதாகும். வர்க்கப் பிரச்னைகளை தொடும் கலைஞன் ஆழ்ந்த அறிவும், சமூகப் பிரக்ஞையும், படைப்பாற்றலில் பல புதுமைகளைச் செய்பவனாகவும் இருக்க வேண்டும். இவர்களைத் தமது படைப்பில் கொண்டு வரும் பொழுது மிகவும் கவனத்தோடு சொல்லாட்சி நடைபெற வேண்டும். பிரச்சினைகளை தேர்ந்தெடுக்கும் முறைகளிலேயே (உ-ம் சக்கிலியர்கள், பிச்சைக்காரர்கள், வேசிகள்) இவர்கள் அந்நியமாகி இருக்கிறார்கள். ஒரு தொழிலாளியின் வாழ்க்கையில் அவன் வாழும் நிலம், அவனுக்கும் தொழிலுக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு. அதன் பிரச்சினைகள், கட்சியுடன் பங்கு, அதிலிருந்து இவன் கற்ற அனுபவம், இத்தனைக்கிடையிலும் இவனது குடும்பம், மனைவி, குழந்தை, உறவினர் – இவன் செயல்பாட்டில் விருப்பும் வெறுப்பும், இன்பமும் துன்பமும் ஆக்கமும் அழிவும், என்பதையெல்லாம் இவர்கள் காண மறுகின்றனர். இவர்கள் கதைகளில் தொழிலாளியின் மனைவி இடம் பெறுவதில்லை. இவர்களது வாழ்வியல் அனுபவமும் அரசியல் அனுபவமும் துண்டாக நிற்பதே இதற்குக் காரணமாகும்.

இவர்களிடம் வர்க்கப் பார்வை என்பது வக்கிரமடைந்துள்ளது என்பதை நிறையக் கதைகள் காட்டுகின்றன. வர்க்க முரண்பாடுகள், சுரண்டப்படும் வர்க்கத்தைச் சீரழித்திருப்பதைப் போலவே, சுரண்டல் வர்க்கத்தையும் சீரழித்துள்ளது என்ற பார்வை இவர்களுக்கு இல்லை. இதைப் பற்றிய சரியான பார்வையிலிருந்து சரியான அரசியலையும் வகுக்க முடியும். இந்த அரசியல், நண்பர் யார்? எதிரிகள் யார், என்பதைச் சரியாகக் கணிக்கும். இந்தக் கணிப்பு இல்லாததால் இங்கு மத்திய தர வர்க்கம், சிறு முதலாளிகள் இங்கு எதிரிகளாகப் பார்க்கப்படுகின்றனர்.

வர்க்கங்கள், வரலாறு பற்றிய சரியான பார்வை இல்லாததால் தான், இவர்கள் அரசியலில் தேங்கி இருப்பதோடு, கலை, இலக்கியத் துறைகளிலும் தேங்கியிருக்கிறார்கள். இவர்கள் பெண்ணைப் பெண்ணாகத்தான் — பெரும்பாலும் மனைவியாகத்தான் தவறினால் வேசியாகப் பார்க்கிறார்கள். இவர்கள் பார்வையில் பெண்களுக்கு விடுதலை இல்லை. இவர்கள் தம் கதைகளிலேயே வர்க்கப் போராட்டத்தை முடுக்கி விடுவதல்லாமல், முடித்துவிடப் பார்க்கிறார்கள். வர்க்கப்பிரச்சினைகள் அவற்றின் தத்துவ விரிவில் பார்க்க மறுக்கிறார்கள். இதனால் எரிச்சல்கள், கேவலப்படுத்துதல், புறம்பேசுதல், இறுமாப்பில் திளைத்தல் — இப்படிப்பட்ட குணங்களுக்குள் மாட்டிக் கிடக்கிறார்கள். புறநிலைப் பார்வை என்பதை விட்டு இவர்கள் அகவயப் பட்டிருக்கிறார்கள். கலையின் ஆற்றலை, பரப்பை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மனித உறவுகளின் செழுமையை இவர்கள் காட்டவில்லை.

சிறுமையிலேயே அதிகக் கவனம் வைக்கிறார்கள். "செழுமையை நாளை பார்த்துக் கொள்ளலாம். சிறுமையே இன்று எங்களுக்கு முக்கியம்" என்று பேசுவதிலுள்ள மனிதனைப் பற்றிய அரைகுறைப் பார்வை இவர்களுக்குப் புலப்படுவதில்லை. அத்துடன் இப்படிப் பேசுவதில் ஒரு கர்வத்தையடைகிறார்கள். கலைப்படைப்பு என்பதை இவர்கள், விவரங்களின் தொகுப்பு என்ற அளவுக்குக் கீழிறக்கியிருக்கிறார்கள். சி.ஆர். ரவீந்திரனின் கதைகளில் வரும் விவரங்கள் (ஆடு, கல், நாய், வண்டி, வடை, போண்டா, மிச்சர், டீ, பீடித்துண்டு, வெங்காயம் முதலியன) வெறும் சொல் நிரப்பல்கள். கலைஞனின் அனுபவம் பார்க்கும் பொருள்களை அப்படியே எழுதுவது இல்லை. அவன் படைக்கும் ஒவ்வொரு சொல்லும் ஓர் அர்த்தப் பிரக்ஞையோடு செயல்பட வேண்டும். நாகரிகத்தின் மீது, மொழியின் மீது ஆழ்ந்த அக்கறை வேண்டும். இவர்கள் தமிழ்நடையைத் திறம்படக் கையாளப் பழகவில்லை.

சமூகப் பிரக்ஞை இவர்களிடம் அர்த்தம் கொள்ளவில்லை. இவர்கள் கையாளும் நடை மூலம் திரும்பத்திரும்ப ஒரேவகையாக எழுதும் பார்முலாக் கதைகளையே இவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இவர்களின் படைப்புகள், அரைகுறைப் பிறவிகள், மலடுகள். படைப்பு என்ற பெயருக்கான தகுதி பெறத் தவறுபவை. பத்திரிக்கைக் கதைகளிலிருந்தே இவர்கள் கதைகளைத் தயாரிக்கின்றனர். இவர்களின் கதைகளை இவர்களின் வாசகர்களே விமர்சனம் செய்கிறார்கள், அவைகளைப் படிக்காமல் இருந்து விடுவதன் மூலம். இவர்களின் கலை இலக்கிய வட்டாரங்கள் தனித்துச் செயல்பட்டாலும், அவ்வட்டாரங்களில் அவர்களுக்கேயான கலை, இலக்கியப் பிரச்சினைகள் என்றோ, கோட்பாடுகள் என்றோ இல்லை.

இவர்கள் கண் திறந்து பார்த்துக் கொள்ளட்டும். ரகுநாதன், கே.சி.எஸ். இவர்கள். இன்று எழுதாவிட்டாலும் அவர்களை இவர்கள் இன்று கற்றுக் கொள்ளட்டும். கலைப் படைப்பு தமிழில் எப்படிச் சிறந்திருக்கிறது என்பதற்கு, மௌனி, கு.ப.ரா. புதுமைப்பித்தன், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், தற்போது வண்ணநிலவன், அம்பை, பூமணி, பா. செயப்பிரகாசம் போன்ற மிகச்சிறந்த கலைஞர்களை இவர்கள் படித்துக் கொள்ளட்டும்.

5. சமூக உடைமைக்கான அறிவியல், கல்வி, பண்பாட்டை வளர்ப்பது பற்றி:

- தோழர் உவா குவோ – ஃபெங்

(ஐந்தாவது தேசிய மக்கள் பேரவையில் 26-2-78ல் ஆற்றிய உரையிலிருந்து)

தமிழாக்கம் : ந. முருகன்

நமது பொருளியல் கட்டமைப்பில் புதியதொரு எழுச்சி தோன்றியுள்ளது. அதன் விளைவாக நமது பண்பாட்டுத் துறையிலும் அந்த எழுச்சி தொடரும். நமது உழைக்கும் மக்கள் பண்டப் படைப்பில் புதிய தொழில் நுட்பங்களையும், அறிவியல் அறிவையும் திறமையோடு ஆளுகின்ற வகையில் நாம் சீன நாட்டின் அறிவியல், பண்பாட்டுத் துறைகளை மேல் நிலைக்கு உயர்த்த வேண்டும். அதே நேரத்தில் பாட்டாளி வகுப்பைச் சார்ந்த அறிவாளர்களின் பெரும்படையையும் நாம் உருவாக்க வேண்டும். நமது மாபெரும் குறிக்கோளான புதுமையும், வலிமையும் கொண்ட சமூக உடைமை நாட்டை உருவாக்குவதில் வெற்றிபெற நாம் இவ்வாறு முனைய வேண்டும்...

தொழில் துறைகளைத் தொழில் நுட்பம் மிகுந்த வகையில் மாற்றி அமைத்தல், நம் பொருள் வளங்களைப் பெருக்கும் வகையில் கனி வளங்களைக் கண்டுபிடித்தல் – குறிப்பாக, நமது பொருளியலில் குறைபாடுகளை, அதாவது எரிபொருள், மின்விசை, மூலப்பொருட்கள், பாதி பண்படுத்தப்பட்ட பொருட்கள், தொழில்கள், போக்குவரத்து, தகவல்தொடர்பு ஆகியவற்றை நிறையுடையவையாக மாற்றியமைத்தல், கூடிய விரைவில் நமது தொழில்களை மேநிலைத் தொழில் நுட்பங்களின் அடிப்படையில் திருத்தி அமைத்தல் போன்றவற்றில் நம் பங்கை நிறைவேற்ற வேண்டும். இயற்கையின் சீற்றங்களை முன்னரே கண்டறிதலும் அவற்றை இணக்கப்படுத்திக் கொள்வதும்

போன்ற திறமைகளை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். புதிய அறிவியல் நுட்பங்களை வளர்ப்பதிலும், அணுமின் நிலையங்களை அமைப்பதிலும், பல்வகையான செயற்கைக்கோள்களை மிதக்கவிடுவதிலும், இலாசர் கோட்பாட்டிலும், அதன் பயன்பாடு பற்றி ஆய்வுகளை நிகழ்த்துவதிலும், தோற்றவியல் பொறியியலுக்கு முதன்மை கொடுத்து ஆய்வு செய்வதிலும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருங்கிணைந்த மின்சுழற்சி, மின்கணிப்பான், அவற்றில் பரந்த அளவிலான ஆய்வுகள் நிகழ்த்துவதிலும் நாம் முனைப்புடன் ஈடுபடவேண்டும். அறிவியல் ஆய்வில் அண்மைக்காலத்துக் கண்டுபிடிப்புகளையும், முனைப்புடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உயர்நிலை ஆய்வுகளை நிகழ்த்தத் தக்க பல நிலையங்களை அமைக்க வேண்டும். இயற்கை அறிவியல், அடிப்படைக்கூறுகள் அடங்கிய புதிய கணக்கியல், மிகுவிசை இயக்கவியல், அணுக்கூறு உயிரியல் ஆகிய துறைகளில் கோட்பாட்டு ஆய்வுகளை நிகழ்த்துவதில் நாம் முழுகவனம் செலுத்தியாக வேண்டும். இவற்றை எல்லாம் புறக்கணித்தால் உலகின் மேநிலை அறிவியலையும் தொழில் நுட்பத்தையும், அவற்றின் துணிபுகளையும் நம்மால் அறிந்து ஆளவும், பயன்படுத்தவும் முடியாமற் போகும்; நமது கட்டமைப்பில் உள்ள முதன்மையான சிக்கல்களை முறைப்படி விடுவிக்கமுடியாமற் போகும்; கண்டுபிடிப்புகளை நிகழ்த்த முடியாமற் போகும்...

மெய்யியல், சமூகவியல் துறைகளில் சீனத்தின் கடந்தகால, நிகழ்கால நிலைகளிலும், உலக அரசியல், படைப்பியல், பொருளியல் பற்றிய கோட்பாடுகளிலும் ஆய்வு நிகழ்த்தியாக வேண்டும். 'நால்வர் கும்பல்', பிற்போக்குத் தனம், முதலாளிய, சுரண்டும் வகுப்புகளின் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய நமது திறனாய்வு, ஆழப்படுத்தப்படவேண்டும். மார்க்சிய – லெனினிய – மாசேதுங் சிந்தனைகளை விளக்கமாகவும், தெளிவாகவும் கற்றுணர்ந்து அதை ஒரு முறைமையாக்கிப் பரப்பவேண்டும்.

இது நமது நாட்டின் சமூக உடைமைப் புரட்சிக்கும், கட்டமைப்பிற்கும், மிகவும் தேவைப்படுகிறது; அனைத்துலகவியலார் என்ற முறையில், இந்த உலகத்திற்கு அதைச் செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மெய்யியல், சமூக அறிவியல் ஆகியவற்றிற்கு ஒரு தேசியவளர்ச்சித் திட்டத்தை வரைவதற்கும் – மெய்யியல், பொருளியல், அரசியல், படை அறிவியல், சட்டவியல், வரலாறு, கல்வி, இலக்கியக் கோட்பாடு, மொழியியல், மனித இனவியல், மதம் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வு நிகழ்த்துவதற்கும் நாம் ஒரு அணியை அமைக்க வேண்டும். கொள்கையியல், கோட்பாட்டியல் துறைகளில் பணியாற்றும் தோழர்கள், மார்க்சிய மெய்யியலையும், சமூக அறிவியலையும் பரப்புவதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டும்.

கல்வி, பண்டப்படைப்போடும் உழைப்போடும் இணைந்து பாட்டாளி வகுப்பின் அரசியலுக்குப் பணியாற்றும்படி செய்யவும், சரியான பயிற்சியைக் கொண்டு, கல்விப் புரட்சியில் வெற்றியை உறுதிப்படுத்தவும், நமது மாணவர்கள் ஒழுக்கம், அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகிய எல்லா முனைகளிலும் வளர்ச்சி பெறத்தக்க வகையில் பயிற்சியை முடுக்கி விடவும், அம்மாணவர்கள், சமூக உடைமை உணர்வுடனும், பண்பாட்டுடனும், உழைப்பாளராக மாறவும், நாம் சரியான முறையில் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்...

இன்று கலை இலக்கிய அணியின் இன்றியமையாத பணி யாதெனில், இன்றைய நிலைக்கேற்பக் கட்சியின் கொள்கைகளைத் திருத்தியமைப்பது என்ற தலைவர் மாவோவின் கட்டளையை உணர்வுடன் நிறைவேற்றுவதுதான். இந்த வகையில் நமது பணிவலிமை பெறவேண்டும். 'நால்வர் கும்பலால்' தோன்றிய எல்லா வகையான குறைபாடுகளும், விரைவாக அகற்றப்பட வேண்டும். கலைப் படைப்புகளின் சாரம், மக்களின் பண்பாட்டு வாழ்க்கையை விரிவுபடுத்துவதாக அமைய

வேண்டும். கலையும், இலக்கியமும், பாட்டாளிகள், உழவர்கள், படைவீரர்கள் ஆகியோருக்குப் பணிபுரிகின்ற வகையில் அமைய வேண்டும். இலக்கியம், நாடகம், திரைப்படம், இசை, நுண்கலை, கூட்டிசைக்கலை, நாட்டுப்பாடல் ஆகிய துறைகளில் பணியாற்றுபவர்கள் அனைவரும் ஒன்று திரட்டப்பட்டு, தொழிலகங்களுக்கும் நாட்டுப் புறங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவர்கள் வாழ்க்கையை அதன் மூலத்திலிருந்தே அறிந்து கொண்டு தங்களுடைய கலைப்படைப்புகளை உருவாக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். திரைப்படத் துறையில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்; ஏனெனில் அதன் தாக்கம் மிகப் பெரிது. நல்ல திரைப்படங்களை உருவாக்கும் நம் முயற்சியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். நமது கலை இலக்கியத்தின் கருப்பொருள் பல்வேறு வகையினதாக இருக்கவேண்டும். தற்காலப் புரட்சிகரமான கருப்பொருள் முதன்மை பெறவேண்டும். அதே சமயத்தில் வரலாற்று நிகழ்ச்சிகள், வேறு வகையான கருப்பொருள்கள் ஆகியவற்றிலும்கூட நாம் கவனம் செலுத்தவேண்டும். கலைப்படைப்பில், புரட்சிகரமான நடைமுறையுடன் இணைந்த புரட்சிகரமான கற்பனையியலும் கூட ஊக்குவிக்கப்பட வேண்டும். இலக்கியத் திறனாய்வுக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கவேண்டும். நாம், நமது பெருந்திரளான மக்களுக்காகப் பண்பாட்டு நடுவங்கள், திரைப்படக் காட்சிக் குழுக்கள், ஓய்வுநேரப் பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். உள்ளூர் நாட்டிய அரங்குகள் புதுப்பிக்கப்பட வேண்டும்; பல்வகைத் தேசிய இனங்களின் சிறப்புக்குரிய கலை இலக்கியம் வளர்க்கப்பட வேண்டும்.

நமது அறிவியல், கல்வி, பண்பாட்டுத்துறைகளில் முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும், புதிய வலிமைமிகுந்த சமூகவுடைமை நாட்டை உருவாக்குவதற்காகவும், அறிவாளர்களின் திறமைகளில் நாட்டம் செலுத்துவது

முதன்மையானதாகும். மிகப் பெரும்பான்மையான அறிவாளர்கள், கட்சிக்கும், சமூகவுடைமைக் கோட்பாட்டிற்கும் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொண்டவர்கள். பாட்டாளி வகுப்பு அறிவாளர்கள் தொகையில் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு இருக்கிறார்கள். "நால்வர் கும்பல்" சில அறிவாளர்களை 'ஒன்பதாம் வகை இனமாகச்' சீரழித்துவிட்டது; ஒன்றுபட வேண்டியதொரு ஆற்றலாக – பாட்டாளி வகுப்பின் நம்பிக்கைக்குரியவர்களாக – அவ்வறிவாளர்களைக் கருதுவதற்கு மாறாக, தங்களுடைய தாக்குதலுக்குரிய இலக்குகளாகவும், பாட்டாளி வகுப்பின் அனைத்ததிகாரத்தின் பலியாடுகளாகவும் அவர்களைக் கருதி இழிவுபடுத்தினர்; இவ்வாறு சமூகவுடைமைச் சூழலில் உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் இடையிலுள்ள மாறுபாட்டை, ஒரு வகுப்பு முரண்பாடாக்கி இழிவுபடுத்தினார்கள். அவர்கள், பாட்டாளிகள் உழவர்கள் ஆகியோருக்கும் அறிவாளர்களுக்கும் இடையே இருந்த உறவையும் உடன்பாட்டையும் புதைத்தார்கள்; வகுப்பு உறவுகளைக் குழப்பினார்கள்; அறிவாளர்களுக்குச் சமூகவுடைமைக் கோட்பாட்டின்பாலிருந்த ஆர்வத்தை அழித்து ஒழித்தார்கள். "நால்வர் கும்பலி"ன் நச்சுத் தன்மையான பிடிப்புகளை நாம் துப்புறவாகத் துடைத்தெறிய வேண்டும். அறிவாளர்களுடன் ஒன்றிணைந்து, கற்றுக் கொடுத்துத் திருத்தியமைப்பது என்ற கட்சிக் கொள்கையைச் சரியாகவும் தெளிவாகவும் நாம் நடைமுறைப்படுத்தவேண்டும்; அவர்களுடைய படைப்புகளுக்குரிய மதிப்பை நாம் கொடுத்தாக வேண்டும். அவர்களுடைய சிறப்புத் தகுதிகளைக் கணக்கில் கொள்ள வேண்டும்; சாதனைகளைப் பாராட்ட வேண்டும். அதே நேரத்தில், அவர்கள் முப்பெரும் புரட்சி இயக்கங்களில் தங்களுடைய உலகக் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளச் செய்கின்ற உண்மையான முயற்சிக்கு நாம் உறுதுணையாக இருந்து ஊக்குவிக்க வேண்டும்; அவர்கள்

பாட்டாளிகளுடனும், உழவர்களுடனும் ஒன்றிணைந்து நண்பர்களாகத் தங்களை அடையாளங் கண்டுகொள்வதிலும், செம்மையான சிவப்புப் பாதையில் அவர்கள் முன்னேறிச் செல்வதற்கு நாம் பாதுகாவலாக இருக்கவேண்டும். பாட்டாளி வகுப்பு அறிவாளர்களின் தொகையை அதிகப்படுத்துவதும், விரிவுபடுத்துவதுமாகிய பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

"நூறு மலர்கள் மலரட்டும்; நூறு கருத்துக்கள் பொருதட்டும்" என்பதே சீனாவின் சமூகவுடைமைக்கான அறிவியலும், பண்பாடும் புதுமலர்ச்சி காண்பதற்கான அடிப்படைக் கொள்கையும் ஆகும். கொள்கையியல் பற்றிய செய்திகளில் மார்க்சியத்தின் நிலைபாடுகளை விரிவுபடுத்துகின்ற வகையிலும், அறிவியலையும் பண்பாட்டையும், வளர்ப்பதற்காகவும், ஆறு அரசியல் அலகுகளைப் பின்பற்றுகின்ற நேரத்தில் மக்கள் திரளுக்குள் 'விரிவாகத் திறப்பது' என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதே மாவோ அவர்களது கூற்றின் சாரமாகும். தலைவர் மாவோவின் நூறு மலர்கள் நூறு கருத்துக்கள் என்ற கொள்கையை உறுதியாகக் கடைபிடித்தால்தான், போராட்டத்தின் மூலமும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமும் நறுமண மலர்களையும் களைகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் திறமையை மக்கள் பண்படுத்திக் கொள்ள முடியும்; இவ்வாறு சரியானதை வளர்க்கவும் தவறானதை வென்றெடுக்கவும் பழகிக் கொள்வார்கள்; இவ்வாறுதான் கலையில் பல்வகையான நடைகளும் உணர்வு நிலைகளும் கருத்துக்களில் பல்வேறு வகையான பார்வைகளும், பள்ளிகளும், தருக்கங்களின் வாயிலாகவும் ஒன்றுக்கொன்று தூண்டுவிப்பதன் வாயிலாகவும் வளரமுடியும்; இவ்வாறுதான் நாம் சிறந்த தகுதி வாய்ந்த மக்களை உருவாக்கவும், முதல் தரமான அறிவியல் சாதனைகளை உண்டாக்கவும் சிறந்த இலக்கியங்களைப் படைக்கவும் முடியும். எங்கே கல்வியாளர் விவாதங்களிலும் இலக்கியத் திறனாய்வுகளிலும்

முரண்பாடுகள் விளைகின்றனவோ, அங்கே நாம் அவசர முடிவுகளைத் தவிர்க்க வேண்டும். அதிகாரத் தோரணையில் ஆணைகள் பிறப்பிப்பது போன்ற 'மிக எளிய' நடவடிக்கைகள் மூலம் அவற்றிற்கு நாம் தீர்வு காணக் கூடாது; ஆனால் நடைமுறை அனுபவத்தாலும் முழுமையான கலந்துரையாடல் வாயிலாகவுமே அவற்றிற்குத் தீர்வுகாண வேண்டும்.

"நாம் முழுமையை வேண்டக் கூடாது" – நூறு மலர்கள் – நூறு கருத்துக்கள் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொழுது இந்தக் குறியீட்டை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். முழுமையை வேண்டுவது – நூற்றுக்கு நூறு சொக்கத் தங்கத்தைக் கேட்பது – குறையற்ற தூய மனிதன் – இவை யாவும் இயங்காவியல் சிந்தனையின் வெளிப்பாடுகள். 'நால்வர் கும்பல்' மக்கள் மீது சுமத்துவதற்குப் பொய்க் குற்றச் சாட்டுக்களையே எல்லா இடங்களிலும் தேடியது; சமூக உடைமை அறிவியலையும் பண்பாட்டையும் சிதைக்க அக்கும்பல் எங்கும் நிற்காது அலைந்து கொண்டிருந்தது. அக்கும்பலின் நச்சுத் தன்மையான ஆதிக்கத்தைக் களைந்தெறிய நாம் கடுமையாகப் பாடுபடவேண்டும். புதிய சமூகவுடைமைக் கருத்துக்களுக்கு உறுதுணையாக இருந்து அவற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். கலையும் அரசியலும் ஆறு அரசியல் அலகுகளுக்கு ஆதரவு அளிக்கும் வரை – கலைப் பண்போடு மிளிரும் வரை – அவை தோன்றுவதற்கு நாம் இணங்க வேண்டும். அவ்வாறு அவை தோன்றிய – அல்லது வெளியான - பின்னர் மக்களிடமிருந்து அவற்றிற்குக் கிடைக்கும் வரவேற்பு அல்லது கருத்துரையின் ஒளியில் அவற்றை நாம் மாற்றியமைக்கவும் வளர்க்கவும் செய்யலாம்.

சமூகவுடைமைக்கான அறிவியலையும் பண்பாட்டையும் தூண்டி வளர்க்க "கடந்த காலம் நிகழ்காலத்திற்குப் பணிபுரிவது" – "அயல்நாட்டுப்

பொருட்கள் சீன நாட்டுக்குப் பணிபுரிவது" என்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எல்லா நாடுகளின் மேநிலை அறிவியலையும் தொழில் நுட்பவியலையும் உணர்வுடன் கற்று, அவற்றை நம் கணக்கில் கொண்டுவர வேண்டும். தேசியத் தகுதியும் காலத்தின் தனித்தன்மையும் கொண்டதொரு சமூகவுடைமைக்கான பண்பாட்டை வளர்ப்பதற்காக, நமது பழைய பண்பாட்டிலுள்ளவற்றையும் அயல்நாட்டுப் பண்பாடுகளையும் செரித்துக் கொள்வதில் நாம் திறனாய்வு உணர்வுடன் செயல்பட வேண்டும்; அவற்றில் சாற்றை மட்டும் எடுத்துக் கொண்டு சக்கையைத் தள்ளிவிட வேண்டும். புதுமையைக் கொண்டுவர பழமையைத் தேடவேண்டும்.

தலைவர் மாவோவின் கொள்கையாகிய நூறு மலர்கள் மலரட்டும்; நூறு கருத்துக்கள் பொருதட்டும் – கடந்த காலம் நிகழ்காலத்திற்குப் பணிபுரியச் செய்தல் – அயல்நாட்டுப் பொருட்கள் சீன நாட்டுக்குப் பணிபுரியச் செய்தல் – ஆகியவற்றை 'நால்வர் கும்பல்' கடுமையாக எதிர்த்தது. அக்கும்பல் பாசிசப் பண்பாட்டுத் தனியாளுமையையும் தடைவிதிக் கொள்கைகளையும் பரவலாக நுழைத்தது. பண்பாட்டுப் புரட்சிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட, தரத்தில் சிறந்த திரைப்படங்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட திரைப்படங்களையும் தடைவிதித்துக் கிடப்பில் போட்டது. சிறந்த வரலாற்று நாடகங்கள் நடத்துவதற்கும், வழிவழியாக இருந்துவந்த இசை நாடகங்களுக்கும் பல்வேறு தேசிய இனங்களின் ஆடல்பாடல்களுக்கும் தடை விதித்தது. புதுமை நாடகங்களுக்கும், மிகச் சிறந்த சீன நாட்டு இசைக்கும், அயல்நாட்டு இசைக்கும் தடைவிதித்தது. சீன நாட்டு இலக்கியங்களையும் வெளிநாட்டு இலக்கியங்களையும் தடுத்து நிறுத்தியது; அறிவியல் பண்பாட்டு முன்னேற்றத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட மக்கள்

அமைப்புக்களைக் கலைத்தது. சிறந்த நூல்களைத் தடைப்படுத்தி, தான்தோன்றித் தனமாய்ப் பூட்டிவைத்தது. அக்கும்பலின் தவறான செயல்களின் விளைவு, பண்பாட்டு வறுமைதான். இது மக்களிடையே வெறுப்பையே விளைவித்தது. அந்தக் கும்பலின் பண்பாட்டுத் தன்னாளுமையையும் தடைவிதிப்புக் கொள்கையையும் தலைவர் மாவோவின் அறிவுரைகளின் அடிப்படையிலும் கட்சிக்கொள்கையின் அடிப்படையிலும் திறனாய்வு செய்தல் வேண்டும்.

மெய்யியல், பண்பாட்டுத் துறைகளில் இன்று அடிப்படையாக உள்ள பணிகள், தொழிலாளி வகுப்புக்குரியனவற்றை வளர்ப்பதும், முதலாளி வகுப்புக்குரியவற்றை ஒழிப்பதும் ஆகும். எல்லாப் பிற்போக்குக் கோட்பாடுகளும் அவை நிலவுடைமையைச் சார்ந்ததாயினும் முதலாளியத்தைச் சார்ந்ததாயினும் புரட்டல் தனத்தைச் சார்ந்ததாயினும் – பண்பாட்டுத் துறையில் வீழ்ச்சியைக் குறிக்கும் அனைத்தும் திறனாய்வு செய்து அகற்றப்பட வேண்டும்; அவை தண்டனைக்குத் தப்பி பரவவிடக்கூடாது. நறுமண மலர்களுக்கிடையில் நச்சுக் களைகள் இருப்பதைப்போல, உண்மை எப்பொழுதும் பொய்யுடன் முரண்பட்டு வாழ்கிறது; அதனுடன் போராடிக்கொண்டே வளர்கிறது. மார்க்சியம் அல்லாதவற்றோடும், மார்க்சியத்திற்கு எதிரானவைகளோடும் போராடும் பொழுது, பொய்மையோடும், 'அசிங்கமான' பகை கொண்டவற்றோடும் மக்கள் தொடர்பு கொள்வதற்கு நாம் தடை விதிக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கக் கூடாது; ஏனென்றால், "அது ஒரு அபாயகரமான கொள்கை; அவ்வாறு செய்வது மூளைக் கோளாறுக்கு வழிசெய்யும்; ஒரு வழிப்பாதை மூளையாக்கிவிடும்; உலகத்தை எதிர்கொள்ளவும் சவால்களைச் சந்திக்கவும் விரும்பாததொரு நிலையைத் தோற்றுவித்துவிடும்.

மக்கள் தங்களுக்குத் தேவையான எதிர்மறைப் பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வாய்ப்புத் தருவதன் நோக்கம், அவற்றின் தீமைகளிலிருந்து தங்களைத் தாங்களே அரணமைத்துத் தற்காத்துக் கொள்வதற்காகத் தான். நூறு மலர்கள் மலரட்டும்; நூறு கருத்துக்கள் பொருதட்டும் கடந்த காலம் நிகழ்காலத்திற்குப் பணிபுரியச் செய்தல் — அயல்நாட்டுப் பொருள்கள் சீன நாட்டுக்குப் பணிபுரியச் செய்தல் போன்ற கொள்கைகளைச் சரியாக நடைமுறைப்படுத்துவது, அறிவியல், பண்பாட்டுத் துறைகளில், மார்க்சிய — லெனினிய மாசேதுங் சிந்தனை ஆகியவற்றின் பங்கை வலிமைமிக்கதாக ஆக்குவதற்காகத்தான்.

*****

மீள்பார்வை

- மார்க்சியத்தில் தத்துவமும் விஞ்ஞானமும் அரசியலும் இணையவில்லை என்ற அல்தூசரின் கூற்று, தொடர்ந்து நம்முன் பெரிய கேள்விக்குறியாய் நிற்கிறது. நாகராஜன் கட்டுரையில் ஒரு பிரச்சினை; இந்தியாவின் பழங்கருத்துக்கள் - புராண இதிகாசங்கள் – கலாச்சாரப் பண்புகள் – இவற்றோடு மார்க்சியம் உறவு கொள்வதைப் போலக் காட்டுகிறார். எப்படி என்ற கேள்விக்கு நாகராசன் பதில் இன்னொரு இதழில் இடம் பெறுகிறது.
- இடையில் சில நிகழ்வுகள் முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநில மாநாட்டில் சில பிரச்சினைகள் எழுந்தன. புதுக்கவிதையை ஏற்கலாமா? கூடாதா? சிறுகதைத் துறையில் நம் வட்டார எழுத்தாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டியவை யாவை? யாரிடம்? வள்ளுவரை, இளங்கோவை, பழைய இலக்கியங்களை, பாரதியை நாம் மதிப்பிடுவது எப்படி? இலக்கியத்தில் முற்போக்குவாதத்திற்கும் மார்க்சிய வாதத்திற்கும் இடையிலான உடன்பாடுகள் வேறுபாடுகள் யாவை? விவாதிக்கப்படவில்லை; தீர்க்கப்படவில்லை. தீர்ப்பதற்கான வழிமுறையும் தீர்மானிக்கப்படவில்லை. கேரளக் கவிஞர் சச்சிதானந்தன், எக்சிஸ்டென்சியலிஸ்ட் கவிஞராம்? எப்படி? கலை இலக்கியப் பெருமன்ற மாநில மாநாட்டிலும் செயலர் அறிக்கை; சில மறுப்புகள்; முடிவெடுக்கப்படவில்லை. கட்டுரைகள் படிக்கப் பட்டன. விவாதம் இல்லை. ஜெயகாந்தனை இப்போது மன்றம் ஏற்கிறது, (மன்றத்தைப் பாராட்டுகிறோம்) எந்த வகையிலும் விமர்சனமோ விவாதமோ இல்லாமல் – இத்தனைக்கும் ஜெயகாந்தனின் தற்போதைய கருத்துகள் தீவிரம் பெற்றிருக்கும் நிலையில் – (இதற்காக ஜெயகாந்தன் பாராட்டுக்குரியவர்).

✦ நெருக்கடி நிலையின்போது நம் கலை இலக்கியவாதிகள் சுத்தமாக ஒதுங்கியிருந்தனர். அல்லது ஒத்துழைத்தனர். இது பற்றிய சுயவிமர்சனம் அறவே இல்லை. மாறாக, 'செய்தவை' பற்றிப் பெருமை பாராட்டுதல்!

✦ படைப்பில் சமுதாயத்தின் பங்கை முதன்மைப்படுத்து கிறார் தமிழவன். 'தான்' ஐக் குறைக்கிறார். வரலாறு, கலாச்சாரம் – இவை ஒதுங்கி விட்டிருக்கின்றன. தேடல் தொடர வேண்டும். கூடியவரை நாகரிகமாக, ஆழமாக நால்வர் கும்பல் பற்றிய தோழர் உவாவின் விமர்சனம் தரும் ஒளியில் பார்த்தால் ஒன்று புரிகிறது. இவர்களை நாம் இங்கும் நிறையவே சந்திக்கின்றோம். நமது கலை இலக்கியங்களை, கலாச்சாரப் பண்புகளை வளர்ப்பதில் நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்! தமிழ் இலக்கியத்தில் மார்க்சியர்களின் பார்வை, சாதனைகள் பற்றிய 'இலக்கியத் தேடல்' தொடரும் கூடவே 'இந்தியாவில் மார்க்சிய'மும்.

~~*

பரிமாணம் - 4

பிப்ரவரி -1979

"தனிமனிதனை உழைப்பின் பிரிவினைக்கு ஆட்படுத்தி விலங்கு பூட்டும் நிலையும் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமிடையே முரண்பாடும் மறைந்த பிறகு,

உழைப்பானது உயிர் பிழைக்கும் வழியாக மட்டுமல்லாத வாழ்வின் முதற் பெரும் தேவையுமாகிற பிறகு,

தனிமனிதனின் அனைத்தும் தழுவிய வளர்ச்சியுடன் கூடவே உற்பத்திச் சக்திகளும் வளர்ச்சியடைந்து விட்ட பிறகு,

கூட்டுறவால் படைக்கப்பட்ட செல்வத்தின் நீரோட்டங்கள் அனைத்தும் மேன்மேலும் பெருக்கெடுத்து ஓடும்போது,

அப்போதுதான் முதலாளிய உரிமையின் குறுகிய எல்லை முழுமையாக கடக்கப்படும். அப்போது,

சமுதாயம் தனது கொடிகளில் 'ஒவ்வொருவனிடமிருந்தும் அவனது ஆற்றலுக்கேற்ப, ஒவ்வொருவனுக்கும் அவனது தேவைகளுக்கு ஏற்ப' என்பதைப் பொறித்துக் கொள்ளும்."

-மார்க்ஸ்

1. நம் பார்வை

பரிமாணம் பற்றி எழுந்துள்ள சில கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். மார்க்சியத்தை ஆய்வறிவாகவே முன்வைப்பது பரிமாணத்தின் இலட்சியம் அல்ல. அப்படியானால், இயக்கம் – கட்சியில் இல்லாமல் என்ன மார்க்சியம் என்ற கேள்வி எதிர்ப்படுகிறது. ஏற்கெனவே இருக்கும் கட்சி அமைப்புகள் – தேர்தல் திருவிழா கூட்டணி தொழிற்சங்க மாநாடு ஊர்வலம் முதலிய நடைமுறைகளுக்குள் முற்றாக மூழ்கி - இடையிடையே எல்லாமே ஒரு இறுதி இலட்சியத்திற்காகத்தான் என்ற வேதம் ஓதலுடன் – இத்தகைய இயக்க முறையால், இருக்கும் பூர்சுவா அமைப்பைக் கட்டிக் காப்பதையே கடமையாகக் கொண்ட நிலையில் – மார்க்சியத்தை, அதன் ஆழத்தோடும், ஆற்றலோடும், அதன் பல பரிமாணங்களுடனும் இங்கு முன்வைப்பது இன்றியமையாத தேவையாகிறது. மார்க்சியம் பற்றிய அடிப்படை அறிவை – அதன் மூலங்களிலிருந்தும் வரலாற்று அனுபவங்களிலிருந்தும் அதன் பல்வகை விளக்கங்களிலிருந்தும் கற்றுச் செரித்துக் கொள்ளாத நிலையில் நடைமுறை மூலமே மார்க்சியத்தைக் கற்றுக் கொள்ள முடியும் என்ற வாய்ப்பாட்டை ஓதி, செயலில் இருக்கும் போதும் செயலைக் கடந்த பின்னரும், அதன் வழியே புதிய உண்மைகளையும் அனுபவங்களையும் கற்றுக் கொள்ளாமல் – கற்றுக் கொள்ளத் தெரியாமல் பழைய பாடத்தையே திரும்பத் திரும்ப ஒப்பிக்கின்றனர். ஒரு விஞ்ஞானி தன் ஆய்வுச் செயலில் ஈடுபடும்போது, தன் துறை சம்பந்தப்பட்ட முன்னைய – சமகாலத்து அறிவைச் சேகரித்துக் கொள்வதன் இன்றியமையாமையை ஏற்கும் போதே, ஒரு மார்க்சியவாதிக்கு இதை மறுத்து விடுகிறார்கள். இதனோடு, மார்க்சிய நெறியில், வரலாறு, பொருளியல், தத்துவம், கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றின் ஆழத்தைக் காண்பதும், நாம் வாழும் இந்திய – தமிழகச்

சூழலில் இவற்றைப் பயில்வதும் இங்கு மார்க்சியர்களின் கடமை. பயில்வது இங்குள்ள சூழலில் இயங்குவதற்காக. பரிமாணம், தன் சக்திக்கேற்ப, சிறிய அளவிலாவது, உண்மையோடு இதைச் செய்ய விரும்புகிறது. கட்சி வட்டாரங்கள் இன்று இல்லாவிட்டாலும் நாளை இதை ஏற்கும் என்ற நம்பிக்கையோடும், ஒரு சரியான இயக்கத்தின் தேவையைப் பற்றிய உணர்வோடும் பரிமாணம் தன் கடமையைத் தொடர்ந்து செய்கிறது.

2. மார்க்சின் சிந்தனை

மக்லெல்லன்

தொடக்க காலப் படைப்புகள்

மார்க்சின் தொடக்க காலப் படைப்புகள் அவர் ஜெர்மனியிலும் பாரிசிலும் இருந்த போது இயற்றப்பட்டவை. அவர், ஜெர்மன் சித்தாந்தம் என்ற நூலை எழுதும் வரை நமது வரலாறு பற்றிய பொருள் முதலியலில் கண்ணோட்டத்தை அடையவில்லை. இக்காலத்தில் மார்க்சின் படைப்புகள், அவரது பல கட்ட வளர்ச்சியைக் காட்டுகின்றன. முதலில், கற்பனாவியல் வகையிலான கருத்து முதலியல், பிறகு பகுத்தறிவு வாதம், பிறகு ஹெகலின் மெய்யியல் பற்றிய திறனாய்வு. இவ்வாறு மார்க்சின் வளர்ச்சிக் கட்டங்கள் அமைந்தன. எங்கெல்ஸ் எழுதினார்: மார்க்சின் கருத்துக்கள், ஜெர்மன் கருத்து முதல் மெய்யியல், பிரெஞ்சு அரசியல் கோட்பாடு, இங்கிலாந்தின் செம்மைப் பொருளாதாரம் ஆகியவற்றின் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டவை. மார்க்ஸ் இவற்றின் செல்வாக்கைச் செரித்துக் கொண்டார். ஆனால், இவற்றிற்கிடையில் இன்னும் ஒரு ஒருங்கிணைப்பைச் செய்து கொள்ளவில்லை.

மார்க்சின் குடும்பத்திலும், பள்ளியிலும் அவருக்குப் பின்னணியாக அமைந்தவை அறிவொளிக் காலத்தின் பகுத்தறிவு வாதமும் ஒரு மங்கலான புராட்டஸ்டண்டிய வாதமும், இவற்றிலிருந்து அடிப்படையில் வேறுபட்ட இன்னொரு செல்வாக்கும் அவருக்கு ஏற்பட்டது. மார்க்சின் மகள் கூறியபடி மார்க்சிற்கு கற்பனாவாதப் பள்ளியின் பால் பேரனால் (Baron Von Westphalen) ஆர்வம் ஏற்பட்டது. அவர் ஹோமரையும் ஷேக்ஸ்பியரையும் மார்க்சுக்குப் படித்துக் காட்டினார். ஹோமரும், ஷேக்ஸ்பியரும் மார்க்ஸ் வாழ்நாள் முழுவதும் அவரது விருப்பத்திற்குத் தகுந்த கலைஞர்களாக

விளங்கினர். பெர்லின் அவரிடத்து ஒரு தீவிரமான மாறுதலை ஏற்படுத்தியது. மார்க்ஸ் முதலில் கான்டிடமும் பிச்டேயிடமும் ஆர்வம் கொண்டிருந்தார். அப்பொழுது மார்க்ஸ் ஹெகலின் பகுத்தறிவு வாதத்தை அறவே மறுத்தார். உலகியல் மெய்மையிலிருந்து சிந்தனை பிரிவுபட்டது என்று முதலில் கருதிய மார்க்ஸ், பிறகு உலகியல் மெய்மைக்குள்ளே சிந்தனை அடங்கியது என்று கருதினார். ஆனால் மிக விரைவில் ஹெகலியத்தை மார்க்ஸ் தழுவினார். அவரது வாழ்வில் இது மிகப் பெரிய மாற்றமாகும். மார்க்ஸ் பின்னர் ஹெகலை எவ்வளவுதான் விமர்சமனம் செய்தபோதிலும் 1830ல் தனது ஆசிரியராகிய ஹெகலிடமிருந்துதான் தனது முறை நேரடியாகக் கிளைத்தெழுந்தது என்று மார்க்ஸ் முதன்முதலாக ஒப்புக்கொண்டார்.

மனித வாழ்வின் மையம் அவனது தலைக்குள் தான் அதாவது அவன் பகுத்தறிவில்தான் இருக்கிறது. அதன் தூண்டுதலால் அவன் புறவுலகத்தைப் படைத்துக் கொள்கிறான் என்ற நம்பிக்கையில் இருந்து ஹெகல் தொடங்கினார். தனது நிகழ்வியல் பற்றிய படைப்பில் மனித மனத்தின் அல்லது ஆன்மாவின் வளர்ச்சியை ஆராய்ந்தார். மெய்யியலுக்குள் வரலாற்றியல் இயக்கத்தைப் புகுத்தினார். மனித மனம் முழு அறிவைப் பெறமுடியும் என்று உறுதி கூறினார். இங்கு இப்பொழுது என்பவற்றின் உடனடி புலப்பதிவில் இருந்து மனித உணர்வின் வளர்ச்சியைப் பகுத்தாராய்ந்தார். அதன் அடுத்த கட்டம் தன் உணர்வு பற்றியது. உலகத்தைப் பகுத்தறியவும் தனது செயல்களை அதற்கேற்ப ஒழுங்கமைத்துக் கொள்ளவும் இந்தப் புரிதல் பயன்படுகிறது. இதைத் தொடர்ந்த கட்டம் பகுத்தறிவுக் கட்டம், உண்மையைப் பற்றிய புரிதலுக்கான கட்டம். அதன் பிறகு சமயம், கலை ஆகியவற்றின் உதவியால் ஆன்மா முழு அறிவைப் பெறுகிறது. அப்போது தனது அறிவின் கட்டங்களை மனிதன் உலகில் அறிகிறான். இந்தக்

கட்டங்களை 'அந்நியமாதல்கள்' என்று ஹெகல் அழைத்தார். இவை மனித மனத்தின் படைப்புகள். இவை சுதந்திரமாகச் செயல்படுவதைப் போல கருதப்பட்டாலும், மனித மனத்திற்கு மேம்பட்டது எனக் கருதப்பட்டாலும் இவை மனித மனத்தின் படைப்புகள்தான். இந்த முழு அறிவு அதே சமயம் மனித ஆன்மாவைத் திரும்ப நினைவிற் கொள்வதும் ஆகும். காரணம் தொடரும் ஒவ்வொரு கட்டமும், அக்கட்டத்தைத் தாண்டிச் செல்லும் பொழுதே முன்னைய கட்டங்களின் சில அம்சங்களைத் தம்முள் கொண்டுள்ளன. முன்னையதை அமிழ்த்தியதும் தனக்குள் சேகரித்துக் கொண்டதும் ஆகிய இந்த இயக்கத்தை ஹெகல் 'Aufhebung' என்று அழைத்தார். ஜெர்மனியில் இச்சொல் இருவகையில் பொருள்படும். ஹெகல் எதிர்மறைச் சக்தியைப் பற்றியும் பேசினார். எந்த ஒரு தற்கால நிலைக்கும் புதிதாகத் தோன்றுவதற்கும் இடையில் ஒரு நெருக்கடி நிலவுகிறது என்று கருதினார். எந்த ஒரு தற்கால நிலையும் அது மறுக்கப்பட்டு இன்னொன்றாக மாறும் போக்கில் உள்ளது என்றார். இந்தப் போக்கைத்தான் இயங்கியல் என்று ஹெகல் குறிப்பிட்டார்.

ஹெகலின் மெய்யியல் புரியாத புதிராக இருந்தது. ஆனாலும் அதனுடைய எதிர்மறையான இயங்கியல் கூறு ஒரு தீவிர திருப்பத்தைக் கொண்டிருந்தது. இளைய ஹெகலியன்கள் என்னும் அறிவாளிகளின் குழு இத்தகைய திருப்பத்தைத் தந்தார்கள். அவர்கள் சமயத்தை விமர்சனம் செய்து இறுதியில் அரசியலையும், சமுதாயத்தையும் விமர்சனம் செய்தர்கள். சமயச் சார்பிலிருந்து விலகியது இவர்கள் போக்கு. மார்க்ஸ் தன் தொடக்க காலப் படைப்புகளில் இவர்களோடு கொண்ட உறவிலிருந்து தன் கருத்துக்களை உருவாக்கினார். மார்க்ஸ் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வாக அரிஸ்டாட்டிலுக்குப் பிற்பட்ட கிரேக்க மெய்யிலைத் தேர்ந்தெடுத்தார். இத்துறையில் இளைய ஹெகலியன்கள் அனைவரும் பொதுவான ஆர்வம்

கொண்டிருந்தனர். மார்க்ஸ், தன் முன்னுரையில் குறிப்பிட்டார், "மெய்யியல் இதனை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகிறது. 'ஒரே சொல்லில் சொல்வதானால் நான் எல்லாக் கடவுளரையும் வெறுக்கின்றேன்' என்று கூறிய பிராமிதியசின் வாக்குமூலம்தான் மெய்யியலின் வாக்குமூலமும் ஆகும். மனிதனின் தன்னுணர்வே மிக உயர்ந்த தெய்வீகம் என்பதைப் புரிந்து கொள்ளாத விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள அனைத்துக் கடவுளருக்கும் எதிரான முழக்கம் இது." இதுவே இளைய ஹெகலியன்களின் சமய மறுப்பு வாதமும் ஆகும். இனி மார்க்ஸ் செல்லவேண்டிய வழி, ஹெகல் கண்டுபிடித்த விதிமுறைகளை எதார்த்த உலகிற்குப் பயன்படுத்துவதாக இருந்தது.

ஆனால் இந்தச் சிந்தனையைத் தொடர்ந்து செல்வதற்கு மார்க்சுக்கு உடனடியாக ஒய்வு கிடைக்கவில்லை. கல்வித்துறையில் ஈடுபடும் வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை. ஒரு பத்திரிக்கையாளர் என்ற முறையில்தான் எதார்த்த உலகோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. ரெய்னிஸ்சே ஜெய்டுங் என்ற பத்திரிக்கையில் எழுதிய கட்டுரைகளில் தனது கருத்தைத் தெளிவுபடுத்தவில்லை. தன்னை எதிர்த்தவரின் கருத்துகளின் மடமையை வெளிப்படுத்தும் வகையிலே அவர் கட்டுரைகள் அமைந்தன. அறிவொளிக் காலத்து எளிய பகுத்தறிவு வாதத்தையும் ஒரு தீவிர ஹெகலிய வாதத்தையும் பயன்படுத்துவதே அவருக்குப் போதுமானதாக இருந்தது. 1842 அக்டோபரில் பத்திரிக்கையின் ஆசிரியர் என்ற முறையில், அவரது பத்திரிக்கை கம்யூனிசக் கருத்துக்களோடு உறவு கொள்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கு பதில் தர வேண்டி இருந்தது. மார்க்ஸ் எழுதினார், "கம்யூனிஸ்ட்டுகளின் கருத்துகள் நடைமுறையில் செயல்படுவதை விரும்புவது ஒருபுறம் இருக்கட்டும். தற்போதுள்ள வடிவில் கம்யூனிச

கருத்துகளுக்கு ஒரு சித்தாந்தத் தகுதி இருப்பதாகக் கூட நாங்கள் ஏற்கவில்லை." அத்துடன் அத்தகைய கருத்துகளைப் பற்றி அடிப்படையான விமர்சனங்களை இனி முன்வைக்கப் போவதாகவும் உறுதி அளித்தார். விரைவில் மரத் திருட்டுக்களைப் பற்றிய சட்டம், திராட்சை பயிரிடுபவர்களின் வறுமை ஆகிய சமூக அரசியல் பிரச்சினைகளைப் பற்றி மார்க்ஸ் எழுத நேர்ந்தது. பொருளாதாரப் பிரச்சினைகளில் மார்க்ஸ் ஈடுபடுவதற்கான முதல் வாய்ப்புகள் இவை. அதிகாரத்தில் உள்ளவர்களின் நலன்களால் சட்டங்கள் உருவாவதை மார்க்ஸ் காணத் தொடங்கினார்.

பத்திரிக்கை ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்த மாதங்கள்தான் மார்க்சின் சிந்தனைகள் தீர்மானமாக உருவானதற்கான காலம். ஹெகலையும் இளைய ஹெகலிய எழுத்துகளையும் மூடியிருந்த தத்துவ மூடுபனியை அவர் களையத் தொடங்கினார். இதற்கு மார்க்சுக்கு உதவியாக இருந்தவை இரண்டு. அவர் அரசியல், வரலாறு பற்றி நிறையப் படிக்கத் தொடங்கினார். பிரெஞ்சு சோசலிசம் பற்றியும் பிரெஞ்சுப் புரட்சிப் பற்றியும் விரிவாகப் படித்தார். மிகச் சிறந்த கோட்பாடுகளிலிருந்து தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சி, சமுதாய செல்வத்தைத் திரும்பப் பகிர்ந்தளித்தல் என்னும் அடிப்படையான கொள்கையைத் தீர்க்கத் தவறியது ஏன் என்பது பற்றி அவர் தொடர்ந்து சிந்தித்தார். இக்காலத்தில் அவரிடம் பாயர் பாக்கின் செல்வாக்கும் இருந்தது. நாங்கள் எல்லோரும் 'பாயர்பாக்கியன்' ஆனோம் என்று எங்கெல்ஸ் கூறியதில் மிகைப்படுத்தல் இருந்தது. ஆயினும் அந்தச் செல்வாக்கு ஆழமாகவே இருந்தது. பாயர்பாக் முதன்மையாகச் சமயத்துறையில் ஆர்வம் கொண்டிருந்தார். கடவுள் என்பது மனிதனின் குணங்கள், விருப்பங்கள், உள்ளார்ந்த ஆற்றல்கள் ஆகியவற்றின் வெறும் வெளிப்பாடே என்பது அவரது கோட்பாடு. மனிதர்கள் இதனைப் புரிந்துகொண்டால் – அதாவது கடவுளை மனிதர்கள்தான் படைத்தனர். கடவுள் மனிதர்களைப்

படைக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டால் – இக்குணங்களையும், ஆற்றல்களையும் தம்மிடம் மீட்டுக் கொள்வர். இம்முறையில் தம் இனத்தின் அந்நியமாக்கப்பட்ட சாரத்தைத் தமக்கு மீட்டுக் கொள்வர். மார்க்ஸ் இந்த அணுகல் முறையில் ஆர்வம் கொண்டதன் காரணம் இந்த அணுகல் முறையை ஹெகலின் மெய்யியலுக்குப் பயன்படுத்த முடியும் என்பதால். பாயர்பாக்கின் கருத்துப்படி ஹெகலின் மெய்யியல் இறையியலின் இறுதி அரண். அதாவது எதார்த்தத்திலிருந்து தொடங்குவதற்கு மாறாக சிந்தனையிலிருந்து இது தொடங்குகிறது. பாயர்பாக் எழுதினார், "சிந்தனைக்கும் வாழ்நிலைக்கும் உள்ள உண்மையான உறவு இதுதான். வாழ்நிலைதான் அறிபொருள். சிந்தனை அறியப்படு பொருள். சிந்தனை வாழ்நிலையிலிருந்து தோன்றுகிறது. வாழ்நிலை சிந்தனையிலிருந்து தோன்றவில்லை."

மார்க்ஸ் 1843ல் எழுதிய ஒரு கட்டுரையில் பாயர்பாக்கின் இக்கருத்தைப் புகுத்தினார். ஹெகலை விமர்சனம் செய்த மார்க்சின் கருத்துகள் மக்களாட்சி பற்றியும், அரசின் அழிவு பற்றியும் உருவாகத் தொடங்கின. ஹெகலின் அரசியலியற் கருத்துக்களின்படி மனித உணர்வு அவனுடைய நீதித்துறை, சமூக அரசியல் நிறுவனங்களில் புறப் பொருளாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இத்தகைய நிறுவனங்களின் மூலமே மனிதன் தன்னுடைய முழுச் சுதந்திரத்தை அடைய முடியும். சமுதாய நிறுவனத்தின் மிக உயர்ந்த வடிவம் அரசு. மனிதனின் குறிப்பிட்ட உரிமைகளையும், அனைத்தும் தழுவிய அறிவையும் இணைக்க வல்லது அரசுதான். இவ்வாறு கருதிய ஹெகல், மனிதன் இயற்கையிலே சுதந்திரமானவன் என்ற கருத்தை மறுத்தார். மாறாக மனிதனின் சுதந்திரத்தை உண்மையான சுதந்திரமாக்குவதற்கான ஒரே வழிமுறை அரசுதான் என்றார். சமுதாயத்தில் நடைபெறும் பொருளாதாரப் போராட்டத்தையும் இவ்வாறு ஒருவருக்கொருவர் போரிடும் சமூக அமைப்பினால் உண்டாக்கப்பட்ட சமுதாயப்

பிரச்னைகளையும் ஹெகல் அறிந்திருந்தார். இத்தகைய நிலையை அவர் சட்டச் சமுதாயம் என்ற சொல்லால் குறிப்பிட்டார். ஆயினும் இந்தப் போராட்டங்கள் அரசின் உறுப்புக்களால் ஓர் உயர் மட்டத்தில் இணைவைப் பெறும் என்று கருதினார். ஹெகலின் இக்கருத்தை, பாயர்பாக்கின் கருத்தை அறிந்த மார்க்ஸ் மறுத்தார். மனிதர் தம்மைப் படைத்தவராகக் கடவுளையும், அக்கடவுளைச் சேர்ந்து இருக்க வேண்டியவராக மனிதனையும், சமயம் கருதியது போலவே அரசு என்ற கருத்தைச் சார்ந்தே குடும்பம் முதலிய அனைத்துச் சமூக உறுப்புகளும் இருக்கின்றன என்று ஹெகல் தவறாகக் கருதினார். இந்தப் பொது அணுகல் முறையிலிருந்தே மக்களாட்சி முறையை ஏற்றார் மார்க்ஸ். சமயம் மனிதனைப் படைக்கவில்லை. ஆனால் மனிதன் சமயத்தைப் படைக்கிறான். அதுபோல அரசியல் அமைப்பு மக்களைப் படைக்கவில்லை. மக்கள்தான் அரசியல் அமைப்பைப் படைக்கின்றனர். பல்வேறு சமூகக் குழுக்களுக்கிடையில் இணைப்புச் செயலை அதிகார வர்க்கம் செய்கிறது. இது அனைவரது நலன்களின் சார்பிலும் செயல்படும் ஒரு பொது வர்க்கம் என்று ஹெகல் கருதியதை மார்க்ஸ் மறுத்தார். மாறாக, அதிகார வர்க்கம்தான் அரசியல் வேறுபாடுகளை ஊக்குவிக்கிறது. இந்த வேறுபாடுகள் அதன் வாழ்விற்குத் தேவை. இம்முறையில் அதிகார வர்க்கம் சமுதாயத்தின் நலன்களைப் புறக்கணித்துத் தனது நலன்களையே கருதுகிறது என்று மார்க்ஸ் கருதினார். இக்கட்டுரையின் இறுதியில் அனைவர்க்கும் வாக்குரிமை என்பது அரசியல் சமூகத்தின் சீர்திருத்தத்தைத் தொடங்கிவைக்கும் இம்முறையில் மனிதனிடமிருந்து திருடப்பட்டு (அவனது உண்மை வாழ்க்கையை பாதிக்காத) அரசியல் அமைப்புகள் என்னும் துறையிடம் மாற்றப்பட்ட சமூகச் சாரம் என்பதனைத் திரும்ப அவனுக்குத் தரும் என்று மார்க்ஸ் எதிர்பார்த்தார்.

ஹெகல் பற்றிய இந்தக் கையெழுத்துப்படி வெளியிடப்படவில்லை. கரு நிலையிலிருந்த அவர் கருத்துக்கள் மார்க்ஸ் பாரிசிற்குச் சென்ற போது தெளிவான உருவம் பெற்றன. 1843-44 குளிர் காலத்தின் போது அவர் 'டியுட்ச் பிரான் சோசிசே ஜார்புசெர்' பத்திரிக்கைக்காக இரண்டு கட்டுரைகள் எழுதினார். 'யூதர்களின் பிரச்னை' என்ற முதல் கட்டுரையில் தனது முன்னைய ஆசிரியர் புரூனோ பாயரின் யூத விடுதலை பற்றிய கருத்துக்களை விமர்சனம் செய்தார். பாயரின் கருத்துப்படி யூத விடுதலை சாத்தியமாக வேண்டுமானால் அரசு கிறித்துவச் சார்பை விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் யூதர்களுக்கு எதிரான வேறுபடுத்தல் தவிர்க்க முடியாததாக இருக்கும். ஆனால் மார்க்சின் கருத்துப்படி அரசியலைச் சமயச் சார்பற்றதாக ஆக்குவது மட்டுமே மனிதர்களை, அவர்கள் மனிதர்கள் என்ற முறையில் விடுவிக்காது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிறுவன முறையில் அமைந்த சமயம் இல்லை. ஆனால் அதன் மக்கள் சமயத் தன்மைக்குப் பெயர் போனவர்கள். சமயத்தின் இருப்பு என்பது ஒரு குறைபாட்டின் இருப்பு. இந்தக் குறைபாட்டின் மூலத்தை அரசின் இயல்பில்தான் தேடிக் கண்டடைய முடியும். .. நாம் சமயச் சார்பற்ற பிரச்னைகளை இறையியல் பிரச்னைகளாக மாற்றவில்லை. நாம் இறையியல் பிரச்னைகளைச் சமயச்சார்பற்ற தன்மையுள்ளவைகளாக மாற்றுகிறோம். நெடுங்காலமாக வரலாறு மூட நம்பிக்கையாக மாறியிருந்தது. நாம் இன்று மூட நம்பிக்கையை வரலாற்றினுள் தீர்க்கிறோம். அரசியல் விடுதலை, சமயத்தோடு கொண்ட உறவு என்ற பிரச்னை நம்மைப் பொருத்தவரை அரசியல் விடுதலை, மனிதவிடுதலையோடு கொண்ட உறவு பற்றிய பிரச்னையாகிறது." இவ்வாறு மார்க்ஸ் எழுதினார். மார்க்சின் கருத்துப்படி இந்தப் பிரச்னை எழுவதற்கான காரணம் ... மனிதன் தன் வாழ்வை அரசியல் சமூகத்திலும் பொருளாதார சமூகத்திலும் கொண்டிருக்கிறான். அரசியல் சமூகத்தில்

அவன் ஒரு சமூக மனிதனாகக் கருதப்படுகிறான். பொருளாதாரச் சமுதாயத்தில் அவன் ஒரு தனிமனிதனாகச் செயல்படுகிறான். அப்பொழுது பிற மனிதர்களைக் கருவிகளாகவே கருதுகிறான். இவ்வாறு தன்னையும் ஒரு கருவியாகத் தாழ்த்துகிறான். இதன் மூலம் அந்நியச் சக்திகளின் கையில் ஒரு விளையாட்டுப் பொருளாக மாறுகிறான்.

பிரெஞ்சுப் புரட்சியும், அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனமும் அறிவித்த உலகு தழுவிய மனித உரிமைகளின் அடிப்படையில் அமைந்த அரசின் தேவை பற்றி புரூனோ பாயர் விவரித்தார். மார்க்சைப் பொறுத்தவரை, மனித உரிமைகள் என்பவை பொருளியல் சமுதாயத்தில் ஒருவரோடு மற்றவர் பகைகொள்ளும் தனித்தனி நபர்களின் உரிமைகள்தான் என்றார். இவ்வாறு சுதந்திரத்திற்கான மனித உரிமை என்பது ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு கொள்ளும் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. மனிதனிடமிருந்து மனிதன் பிரிந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டது. சொத்துக்களை மனித உரிமை என்பது, தனது விருப்பம் போல், பிற மனிதர்கள் பற்றிக் கவலை கொள்ளாமல், சமுதாயத்திலிருந்து விடுபட்டு, தனது உடமைகளை அனுபவிப்பதும் பயன்படுத்துவதும் ஆகும். அதாவது, தன்னலத்திற்கான உரிமையாகும். முன்னர் கூறிய தனிநபர் சுதந்திரமும் - பின்னர் கூறிய அதன் பயன்படுத்தலும் — இதுதான் பொருளியல் சமுதாயத்தின் அடிப்படையாகும். இது, தனது சொந்தச் சுதந்திரம் பிறரிடம் நிறைவுறுவதைக் காண்பதில்லை. மாறாக, பிறரால் கட்டுப்படுவதையே காண்கிறது.

பிரெஞ்சுப் புரட்சியால் தொடங்கி வைக்கப்பட்ட சமுதாயம், நிலவுடமைச் சமுதாயத்திலிருந்த பல சமூகப் பரிமாணங்களை இழந்துவிட்டது. இவ்வாறு விளக்கிய மார்க்ஸ், சமூகத்தின் குடிமகன் என்ற முறையில் பார்க்கப்படும் தனி நபருக்கும், பொருளியல் சமுதாயத்தின்

கூட்டிலிருந்து பிரிந்த தன்னலமிக்க உறுப்பினர்க்கும் இடையிலான இடைவெளியை நிரப்புதல் என்ற இலட்சியம் பற்றி பேசுகிறார். மார்க்ஸ் எழுதினார்: எதார்த்தமான தனி மனிதன் தனக்குள் பொதுவான குடிமகனைச் செரித்துக் கொள்ள வேண்டும். அவன் தனது அனுபவரீதியிலான வாழ்விலும் தனது தனி வேலையிலும், தனிநபர் உறவுகளிலும் ஒரு இன மனிதனாக வேண்டும். மனிதன் தனது சக்திகளைச் சமூகச் சக்திகளாகப் புரிந்து அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அவன் இனி அரசியல் சக்திகளின் வடிவில் சமூகச் சக்திகளைத் தன்னிடமிருந்து பிரித்துக் கொள்ளக் கூடாது. இதை சாதித்துக் கொள்ளும் போதே மனித விடுதலை முற்றுப் பெறும்.

இவ்வாறு யூதப்பிரச்னை பற்றிய மார்க்சின் கட்டுரை முழு மனித விடுதலையை இலட்சியமாக்கியது. அவர் தன் இரண்டாவது கட்டுரையில் அதை அடைவதற்கான வழிமுறையைச் சுட்டிக் காட்டினார். இக்கட்டுரை ஹெகல் பற்றிய விமர்சனத்திற்கு ஒரு முன்னுரையாக எழுதப்பட்டது. இக்கட்டுரை சமயம் பற்றிய மார்க்சின் புகழ்பெற்ற பொன்மொழிகளோடு தொடங்குகிறது.

"சமய மறுப்பு விமர்சனத்தின் அடிப்படை இதுதான். மனிதன் சமயத்தை உருவாக்குகிறான். சமயம் மனிதனை உருவாக்கவில்லை. ஆனால் மனிதன் உலகத்திற்கு வெளியே உட்கார்ந்து கொண்டிருக்கும் சிந்தனை வடிவினன் அல்ல. மனிதனே உலகமாகவும், அரசாகவும், சமுதாயமாகவும் உள்ளான். இந்த அரசும், இந்தச் சமுதாயமும் உலகம் பற்றிய சமயத்தின் தலைகீழான பார்வையைப் படைக்கிறது. காரணம் அவையே தம்மளவில் தலைகீழான உலகமாக உள்ளன. சமயத்திற்கு எதிரான போராட்டம் என்பது அத்தகைய உலகத்திற்கு எதிரான, மறைமுகமான போராட்டமாகும். அந்த உலகின் ஆன்மீக ஒளிதான் சமயம். சமயம் ஒடுக்கப்பட்ட உயிர்களின் பெருமூச்சு; இதயமற்ற

உலகத்தின் உணர்வு; ஆன்மாவற்ற சூழலின் ஆன்மா; இது மக்களின் அபின்."

சமயத்தின் பங்கை இவ்வாறு வெளிப்படுத்திய பிறகு மெய்யியலாரின் கடமை தம் கவனத்தை அரசியலை நோக்கித் திருப்புவது என்றார் மார்க்ஸ். ஜெர்மனி அன்று இருந்த நிலையில், பிரெஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட நிலையில் அரசியல் செயல்பாடு மிகப் பொருத்தமானது என்று மார்க்ஸ் கருதினார். ஜெர்மனியின் எதிர்காலம் முற்போக்கான அரசியல் மெய்யியலில்தான் அடங்கியிருந்தது. பிற நாடுகள் எதைச் செய்து முடித்தனவோ அதை ஜெர்மானியர்கள் சிந்தனையில் செய்தனர். ஆகவே இந்த மெய்யியலை விமர்சனம் செய்து அதைக் கடந்து செல்வது சமுதாயத்தின் எதிர்காலம் எப்படி இருக்குமென்பதைக் குறைந்த அளவு கோட்பாட்டளவிலாவது காட்டும். சமய விமர்சனம் இறுதியில் மனிதனைப் பொருத்தவரை மனிதன்தான் மிக உயர்ந்தவன் என்ற கோட்பாட்டைத் தருகிறது. அதாவது மனிதனைக் கேவலப்படுத்தும், அடிமைப்படுத்தும், புறம் தள்ளிவிடும், இகழ்ச்சி செய்யும் எல்லாச் சூழல்களையும் தூக்கி எறிய வேண்டும் என்ற இன்றியமையாத கடமையை மனிதனுக்குத் தருகிறது. ஆனால் இதில் உள்ள சிரமம் புரட்சி செய்வதற்குத் தேவையான ஒரு பொருளியல் அடிப்படையைக் கண்டறிவதில் உள்ளது. இதற்கான தீர்வை மார்க்ஸ் வெளியிட்டார். இந்த வெளியீடு மார்க்சை ஒரு தீர்க்கதரிசியாகக் காட்டியது.

"இதற்குரிய தீர்வு தீவிரமான சங்கிலித் தொடரையுடைய ஒரு வர்க்கம் உருவாவதில் உள்ளது. பொருளியல் சமுதாயத்திலுள்ள அந்த வர்க்கம் சட்டச் சமுதாயத்திற்குரிய வர்க்கம் அல்லாதது. இந்த சமூகக்குழு அனைத்துச் சமூகக் குழுக்களையும் கலைப்பதாகும். இந்தக் களம் தனது உலகு தழுவிய துன்பங்களால் ஒரு உலகியல் குணத்தைப் பெற்றதும், குறிப்பிட்டதொரு அநீதிக்கான குறியாகாமல் பொதுவான அநீதிக்கு உரியதாகி விட்டதனால்,

குறிப்பிட்ட எந்த உரிமையையும் முன் வைக்காததும் ஆன இந்தக் களத்தின் உருவாக்கலில் தீர்வு அமைகிறது. இந்த வர்க்கம் ஒரு வரலாற்றுத் தகுதிக்கு உரிமை கொள்வதில்லை. மாறாக ஒரு மனிதத் தகுதிக்கே உரிமை கொள்கிறது. இறுதியாக இந்தக் களம் பிற களங்களை விடுதலை செய்யாமல் தன்னை விடுதலை செய்துகொள்ள முடியாதது. சுருங்கச்சொன்னால் இது மனிதவியலின் முற்றான இழப்பு. ஆகவே மனிதவியலை முற்றாக மீட்பதனாலேயே தன்னை இது விடுவித்துக் கொள்ள முடியும். இந்த வர்க்கம் பாட்டாளி வர்க்கம்.

இவ்வாறு புரட்சிக்கான வாகனம் எது என்பதில் மார்க்சிற்குத் தெளிவு ஏற்பட்டது. அதிகார வர்க்கத்திற்கு ஹெகல் தவறாகத் தந்திருந்த பாத்திரத்தை மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்தில் கண்டறிந்தார். அரசியல் மட்டுமே போதாது என்பதை மார்க்ஸ் அறிந்திருந்த போதிலும் இதுவரை மார்க்சின் படைப்புகள் அரசியலைப் பற்றியே இருந்தன. தனது கட்டுரைகளோடு வெளியான எங்கெல்சின் ஒரு கட்டுரை பொருளாதார பரிமாணத்தில் மார்க்சின் ஆர்வத்தைத் தூண்டியது. அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனம் பற்றிய எங்கெல்சின் கட்டுரை தனி உடைமையையும் அதன் உடன் ஆன்மாவான போட்டியையும் கடுமையாக விமர்சனம் செய்தது. முதலாளிய பொருள் குவிப்பின் வளர்ச்சி தவிர்க்க இயலாமல் ஊதியத்தின் குறைவைக் கொண்டுள்ளது. அத்துடன் வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துகிறது. தடையற்ற பொருளாதாரத்தின் வளர்ச்சி என்பது தொடர்ந்து ஏற்படும் நெருக்கடிகளைக் குறிக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி உழைப்பாளிகளின் வேதனையை மிகுதிப்படுத்தவே பயன்படுகிறது. "மேதையை வெளிப்படுத்திய" இந்தக் குறிப்புகள் மார்க்சை மிகவும் பாதித்தன. 1844 கோடை காலத்தில் அவர் தனது குறிப்பேடுகளை எழுதத் தொடங்கினார். இவை மார்க்சின் காலத்தில் மார்க்சால்

வெளியிடப்படவில்லை. தற்காலத்தில் இவற்றைத் தொகுத்தவர்கள் பொருளாதார தத்துவ கையெழுத்துப் படிகள் என்று பெயர் கொடுத்தனர். இவை முதலாளியத்தைப் பற்றிய ஒரு தீவிரமான விமர்சனத்தைக் கொண்டவை. இந்த விமர்சனத்திற்கு ஆதாரங்கள் பல. எங்கெல்சின் கட்டுரை, ஸ்கில்லர் போன்ற ஜெர்மன் கற்பனாவியல் வாதிகளின் தொழில்துறை எதிர்ப்புக் கருத்துகள், பாயர்பாக்கின் மனித நேயம் முதலியவை. 1932ல் இவை முழுமையாக வெளியிட்ட பொழுது, இவை மார்க்சின் மிக முக்கிய தனிப்படைப்பாக சிலர் பாராட்டினர்.

இந்தக் கையெழுத்துப் படிகளில் மூன்று முக்கியப் பகுதிகள் உள்ளன. செம்மைப் பொருளாதாரவாதிகளைப் பற்றி ஒரு விமர்சனம். இது அந்நியமாக்கப்பட்ட உழைப்பைப் பற்றிய ஒரு பகுதியுடன் முற்றுப் பெறுகிறது. கம்யூனிசத்தைப் பற்றி ஒரு வர்ணனை. ஹெகலின் இயங்கியல் பற்றி ஒரு விமர்சனம்.

முதல் பகுதியில் ஸ்மித், ரிக்கார்டோ முதலிய செம்மைப் பொருளாதார வாதிகளிடமிருந்து நீண்ட மேற்கோள்கள் தரப்படுகின்றன. தொடர்ந்து வர்க்கங்கள் முற்றான எதிர்நிலைக்குச் செல்வதையும், தனிச்சொத்தின் தீய விளைவுகளையும் இவை விளக்குகின்றன. முதலாளியச் சமுதாயத்தின் நடைமுறைகளை உண்மையாக இவர்கள் எடுத்துரைத்தனர் என்று கருதினாலும் மார்க்ஸ் அவர்களின் அணுகல் முறையை மூன்று முக்கிய அடிப்படைகளில் விமர்சனம் செய்தார். ஒன்று, பொருளாதாரத்தின் இயக்கத்திற்கு உழைப்பு அடிப்படை என்பதை அவர்கள் ஒத்துக் கொண்டாலும் தொடர்ந்து உழைப்பு பெறும் வறுமையின் பாத்திரத்திற்கு அவர்கள் உடன்பட்டனர். இரண்டாவது, பொருளாதார கட்டமைப்பை ஒன்றோடொன்று எதிர்வினை புரியும் கட்டமைப்பாகக் காணவில்லை. அதாவது முதலாளிய விதிகளை அவர்கள் மாறாதது எனக் கொண்டனர். தாங்கள் விவரிக்கும் அந்தக் கட்டமைப்பின்

தொடக்கங்களை அவர்கள் விளக்கவில்லை. மூன்றாவது, பொருளாதாரச் சக்கரத்தில் ஒரு பகுதியாகவே மனிதனைப் பார்க்கும் ஒருதலைச் சார்பான கண்ணோட்டத்தை அவர்கள் கொண்டனர். மனிதனை அவனது சுதந்திரமான நேரத்தில் ஒரு மனித உயிராகப் பார்க்கவில்லை.

இவ்விடத்தில் மார்க்ஸ் அந்நியமாக்கப்பட்ட உழைப்பு என்ற தலைப்பில் ஒரு புதிய பகுதியைத் தொடங்கினார். முதலாளியச் சமுதாயத்தில் உழைப்பாளியின் பொது வறுமைப்பாட்டையும் மனிதஇயல்புக் கேட்டையும் விவரித்தார். அந்நியமாக்கப்பட்ட உழைப்பு நான்கு அம்சங்களைக் கொண்டது. ஒன்று, உழைப்பாளி தனது உழைப்பின் உற்பத்திப் பொருளான பண்டத்தோடு ஒரு அந்நியமான பொருளுடன் கொள்வதைப் போன்ற உறவு கொள்கின்றான். இப்பண்டம் அவனுக்கு மேலும் அப்பாலும் ஒரு சுதந்திரமான சக்தியாக அவனுக்கு எதிர் நிற்கின்றது. இரண்டாவது, உற்பத்திச் செயலின் போதே உழைப்பாளி தன்னிடமிருந்து அந்நியமாகிறான். காரணம் அவன் தனது எதார்த்த வாழ்வின் ஒரு பகுதியாக வேலையை, உழைப்பை அவன் கருதவில்லை. உழைப்பு அவனுக்கு உகந்ததாக இல்லை. மூன்றாவதாக, மனிதனை ஒரு இன உயிரி என்ற வகையில் ஒருங்கிணைந்த முயற்சியாக அவனது உழைப்பு அமையவில்லை. இதனால் மனிதனது இன வாழ்க்கை அவனது சமூகச் சாரம், உழைப்பின் போது அவனிடமிருந்து பிரிக்கப்படுகிறது. நான்காவதாக மனிதன் பிற மனிதரிடமிருந்து பிரிக்கப்பட்டதை அறிகிறான்.

இச்சமயத்தில் ஜேம்ஸ்மில் பற்றி மார்க்ஸ் எழுதிய ஒரு நீண்ட குறிப்பில் கடன் என்ற கருத்தைத் தாக்கி எழுதினார். இக்கருத்து ஒரு மனிதனின் அறநெறி பற்றிய பொருளாதாரத் தீர்ப்பு என்று குறிப்பிட்டார். கடனில் ஒரு நாணயம் அல்லது தாளுக்குப் பதிலாக மனிதனே பரிவர்த்தனைக்குரிய ஊடகம் ஆகிறான். அதாவது அவன் மனிதனாக அல்ல, மூலதனம், வட்டி ஆகியவற்றின்

இருப்பாக மாறுகிறான். சமகால சமுதாயத்தில் மனிதர் பரிவர்த்தனை என்ற முழு நோக்கத்திற்காகப் பொருள்களை படைக்கின்றனர். ஆகவே எனது பண்டத்தோடு நீங்கள் ஒரு மனிதர் என்ற முறையில் உறவு கொள்வதில்லை. காரணம் நானே இதனோடு மனித உறவு கொள்வதில்லை. நமக்குள் ஒருவரைப் பற்றி மற்றவர் கொள்ளும் மதிப்பு நமது பொருள்கள் நமக்குத் தரும் மதிப்பே ஆகும். இந்தக் குறிப்பின் இறுதியில் வரும் பகுதி முழுமையாக மேற்கோள் காட்டத் தகுந்ததாகும். 'ஒரு மனித முறையில் பொருள்களை நாம் படைத்திருந்தோமானால் நாம் ஒவ்வொருவரும் தனது படைப்பில் தன்னையும் தனது சக மனிதர்களையும் உறுதி செய்திருப்போம்'. 1. நான் எனது படைப்பில் எனது தனித்தன்மையையும் அதன் சிறப்பியல்பையும் புறப்பொருள் ஆக்கியிருப்பேன். இதன்மூலம் எனது செயலில் எனது வாழ்வின் தனி வெளியீட்டை அனுபவித்திருப்பேன். அத்துடன் அந்தப் படைப்பைப் பார்க்கும்போது எனது ஆளுமை எனது புலன்களுக்குப் புலப்படும் முறையில் புறப்பொருளாகி உள்ளது. இம்முறையில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதான ஒரு வலிமையாகியுள்ளது என்று நான் மகிழ்ந்திருப்பேன். 2. எனது பொருளை நீங்கள் பயன்படுத்துவதில் அல்லது அனுபவிப்பதில், எனது பொருளால் ஒரு மனிதத் தேவையை நிறைவு படுத்தினேன் என்றும் ஒரு மனிதச் சாரத்தை புறப்பொருளாக்கினேன் என்றும், அதனால் இன்னொரு மனிதனின் தேவையை நிறைவேற்றுவதற்கு ஒரு பொருளை உருவாக்கினேன் என்றும் நான் நேரிடையான இன்பத்தை அடைந்திருப்பேன். 3. உங்களுக்கும் மனித இனத்திற்கும் இடையில் ஒரு ஊடகமாக உங்களுக்கு நான் ஆகியிருப்பேன். இம்முறையில் உங்களது சாரத்தின் நிறைவாகவும், உங்களது இன்றியமையாத ஒரு பகுதியாகவும் இம்முறையில் உங்கள் சிந்தனையிலும் உங்கள் அன்பிலும் நான் ஏற்றுக் கொள்ளப்படுவதை என்னில் உணர்ந்து மகிழ்ந்திருப்பேன்.

4. எனது வாழ்வின் எனது வெளியீட்டில், உங்கள் வாழ்வின் உங்களது வெளியீட்டை உருவாக்கியிருப்பேன். இவ்வாறு எனது மனித சமூகச் சாரத்தையும் நிறைவேற்றியிருப்பேன்.

இரண்டாவது பகுதி கம்யூனிசத்தில் அந்நியமாதல் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றியது. ஜெர்மனியில் இருந்த பொழுது மார்க்ஸ் கம்யூனிசத்தை அதன் வறட்டு வாதத்திற்காகவும் ஒருதலைச் சார்பான சிந்தனைக்காகவும் மறுத்தார். ஆனால் பாரிசின் பாதிப்பு அவரை மிக விரைவில் மாற்றியது. ஆனால் மார்க்சின் கம்யூனிசம் ஒரு முரட்டுத்தனமான வகையில் சேர்ந்தது அல்ல. எல்லோரையும் சமப்படுத்திவிடும் போக்கில் கலாச்சாரம் அனைத்தையும் மறுத்து விடும் நோக்கம் கொண்டதும் அல்ல. பொறாமையினால் தூண்டப்பட்டதும் அல்ல. மார்க்ஸ் தன் கருத்துக்களை பொருள் விளங்குவதற்கு அரிய பகுதியில் தொகுத்தளித்தார்.

'கம்யூனிசம் என்பது தனிச் சொத்தினை ஒழிப்பது. இம்முறையில் மனிதனின் சுய அந்நியமாதலின் ஒழிப்பு. மனிதன் தன் சாரத்தைத் தானாக, தனக்காக உண்மையில் மீட்டுக் கொள்ளுதல், மனிதன் தன்னை ஒரு சமூக அதாவது மனித உயிராகக் கண்டு முழுமையாகவும், தன்னுணர்வுடனும் தன்னைத் திரும்பப் பெறுவது கம்யூனிசம். இயற்கை வாதத்தின் முழு நிறைவான கம்யூனிசம் என்பது மனித நேயம், மனித நேயத்தின் முழு நிறைவானது என்ற முறையில் இது இயற்கை வாதம். மனிதனுக்கும் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பகைமையின் உண்மையான தீர்வு கம்யூனிசம்.வாழ்விற்கும் சாரத்திற்கும் புறவயப்படுத்துதலுக்கும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் இடையிலான, சுதந்திரத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் இடையிலான, தனி மனிதனுக்கும் இனத்திற்கும் இடையிலான போராட்டத்தின் உண்மையான

தீர்வு கம்யூனிசம். இது வரலாற்றுப் புதிருக்கான தீர்வு. தன்னைத் தீர்வு என்று தானே அறிந்து கொண்ட தீர்வு'.

தொடர்ந்த பகுதிகளில் மார்க்ஸ் கம்யூனிசம் பற்றிய தனது கருத்தாக்கத்தின் மூன்று குறிப்பிட்ட அம்சங்களை விரித்துரைத்தார். முதலாவது கம்யூனிசம் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. அதன் தோற்றம் வரலாற்றின் முழு இயக்கம் என்று வற்புறுத்தினார். தற்கால நிலையில் முக்கியமான பிரச்சினை பொருளாதாரப் பிரச்னை. குறிப்பாக தனிச் சொத்தை ஒழிப்பது பற்றிய பிரச்னை. "தனிச் சொத்தின் ஒழிப்பும் மனித வாழ்வை மீட்டு எடுப்பதும் அனைத்து அந்நியமாதலையும் ஒழிப்பதாகும். இம்முறையில் மனிதன் சமயம், குடும்பம், அரசு ஆகியவற்றிலிருந்து தனது மனித அதாவது சமூகத்தன்மைக்கு திரும்புவதாகும். இரண்டாவது மனிதனைப் பற்றிய எதுவும் – அவனது மொழி முதல் அனைத்தும் சமூகத் தன்மையுடையது என்பதை வற்புறுத்தினார். இயற்கையுடன் மனிதன் கொள்ளும் உறவும் இந்தச் சமூக பரிமாணத்தின் பகுதியாகும். 'இவ்வாறு மனிதன் இயற்கையுடன் கொண்ட சாரமான இணைவைச் சமூகம் நிறைவடையச் செய்கிறது. இது மனிதனின் உண்மையான உயிர்த்தெழுதல் ஆகும். மனிதனின் இயற்கையியல், இயற்கையின் மனிதவியல் ஆகியவற்றின் முழு நிறைவாகும். காரணம், நான்கு புலன்களோடு விருப்பம், அன்பு முதலிய ஆன்மீக அறவியல் புலன்களும், சுருங்கச் சொன்னால் மனித அன்பும் புலன்களின் மனிதத் தன்மையும் அவற்றிற்குரிய புறப்பொருளின் இருப்பின் வழியே, இயற்கை மனிதவியல் ஆவதின் வழியே உண்டாகின்றன. ஐம்புலன்களின் வளர்ச்சி என்பது உலகின் முன்னைய வரலாற்றின் விளைவே ஆகும்'.

மூன்றாவதாக மனிதனின் சமூகப்பண்புகளுக்குத் தரும் அழுத்தம் அந்நியமாகாத கம்யூனிச மனிதனின் தனித் தன்மையை உயர்த்துவதற்கே பயன்படும். அத்தகைய மனிதனை முழுமையானவன் என்று மார்க்ஸ் வர்ணித்தார்.

அந்நியமாதல் என்ற நிலை எல்லா மனித ஆற்றல்களையும் பறிப்பதனால் அந்நியமாதலைக் கடந்து செல்வது முழுவிடுதலையாகும். இது பொருள் வகைப் பண்டங்களை உடைமை கொள்வதிலும் அனுபவிப்பதிலும் கட்டுப்பட்டு விடாது. எல்லா மனிதத் திறன்களும் பல்வேறு வகைகளில் எதார்த்தத்தை வென்றெடுப்பதற்கான வழிமுறைகள் ஆகும். அந்நியமாக்கப்பட்ட மனிதன் இதுபற்றி கற்பனை செய்வது கூட சிரமமாக இருக்கும். காரணம் தனிச் சொத்து மனிதனின் புலன் உணர்வை மழுங்கச் செய்து தன் வயத்தில் கட்டுப்பட்ட பொருள் மட்டுமே தன்னுடையது என்று கற்பித்துக் கொள்ளச் செய்திருக்கிறது. அந்நியமாதல், உடலியல், அறிவியல் புலன்களை மழுங்க வைத்துள்ளது. இறுதியாக மனிதனுக்கும் இயற்கைக்கும் இடைப்பட்ட பரஸ்பர உறவு எல்லாவற்றையும் தழுவிய ஒரே விஞ்ஞானத்தில் வெளியிடப்படும். "இயற்கை விஞ்ஞானம் நாளடைவில் மனித விஞ்ஞானத்தை தனக்குள் கொள்ளும். மனித விஞ்ஞானம் இயற்கை விஞ்ஞானத்தைத் தழுவும் போது அப்போது ஒற்றை விஞ்ஞானமே இருக்கும்."

பொருளாதாரத் தத்துவ கையெழுத்துப்படி ஹெகலின் இயங்கியலை விமர்சனம் செய்கிறது. ஹெகலின் மெய்யியல் பகுத்தறிவாக்கப்பட்ட இறையியலன்றி வேறு அல்ல என்றும், மனிதருக்கிடையிலான சமூக அறிவு என்பதில் தொடங்கிய உண்மையான பொருளியல் முறையைக் கண்டறிந்ததற்காக மார்க்ஸ் இப்பகுதியின் தொடக்கத்தில் பாயர்பாக்கைத் தொடர்கிறார். ஆனால் ஹெகலை மார்க்ஸ் முற்றாக மறுத்து விட வில்லை.

"ஹெகலின் நிகழ்வியலின் பெருமையும் தொடர்ந்து இயங்கி புதியதைப் படைக்கும் மறுத்தலின் இயங்கியலின் பெருமையும் என்னவென்றால், ஒருபுறம் ஹெகல் மனிதனின் சுயபடைப்பை ஒரு நிகழ்வுப் போக்கு என்றும், புறநிலை ஆக்கத்தை புறப்பொருள் இழப்பாகவும் கருதினார்.

இதன் பொருள் உழைப்பின் இயல்பை ஹெகல் அறிந்திருந்தார்.

மாறாக மறுபுறம் ஹெகலினால் முழு இயங்கியலும் ஒரு கருத்து முதல் நிலைபாட்டிலிருந்து பார்க்கப்படுகிறது. மனிதனின் புறநிலையாக்கப்பட்ட, அந்நிய மாக்கப்பட்ட திறன்களை மீட்டெடுத்தல் என்பது மனத்தில் தூய சிந்தனையில் மட்டுமே நிகழும் மீட்டெடுத்தல் ஆகும். ஆனாலும் மார்க்சைப் பொருத்தவரை உறுதியான நிலத்தின் மீது நின்று திடமான உலகத்தின் மீது நின்று இயற்கையின் அனைத்து ஆற்றலையும் தனக்குள் தாங்கி வெளியிடும் இரத்தத்தாலும் சதையாலும் ஆகிய எதார்த்த மனிதனிலிருந்து தொடங்கினார். கருத்து முதலியலையும் பொருள் முதலியலையும் தவிர்ப்பதாகிய உறுதியான இயற்கையியல் அல்லது மனிதநேயம் என்று தன் நிலைபாட்டைக் குறிப்பிட்டார். ஹெகல் மனிதனை உடலிலிருந்து பிரிக்கப்பட்ட உணர்வாகவும், உலகத்தை மனிதனின் நிறைவேற்றத்திற்குப் பகையானதாகவும் கருதினார். ஆனால் மார்க்ஸ் மனிதனின் உலகத்தோடு கொண்டுள்ள உறவுதான் தவறானது. தன்னை வளர்த்துக் கொள்ள அல்லது புறப்பொருளாக்கிக் கொள்ள புறவுலக பொருட்களோடு அவன் செயல்படுவது அவசியம் என்றும் தேவையென்றும் மார்க்ஸ் கருதினார். ஹெகலுக்கு எல்லா புறநிலை ஆக்கமும் அந்நியமாதலாகவே தோன்றியது. ஆனால் மார்க்சிற்கு மனிதனின் இயற்கையை தனது சகமனிதர்களின் ஒத்துழைப்போடு இயற்கையைப் பயன்படுத்தி தன்னைப் புறப்பொருளாக்கினால் அந்நியமாதலை வெற்றி கொள்ள முடியும்.

1845ல் மார்க்ஸ் பிரெஸ்ஸெல்ஸ்சிற்குச் சென்றார். அன்றிலிருந்து மார்க்சின் படைப்புகள் ஒரு முறையான உருவத்தைப் பெற்றன. இதற்கு முற்பட்ட மார்க்சின் படைப்புகள் கருத்து முதலியல் போக்கில் தொடங்கி ஒரு

குறிப்பிட்ட, திட்டவட்டமான நிலைபாட்டில் முடிவடைகின்றன. மனிதனின் அடிப்படைச் செயல்பாடு இயற்கையோடு பொருள் உற்பத்தியில் ஈடுபடும் ஒரு பரிவர்த்தனை. வர்க்க வேறுபாடுகளால் இந்தப் பரிவர்த்தனை பாதிக்கப்படுகிறது. தனிச் சொத்தின் நிறுவனங்களும், உழைப்புப் பிரிவினையும் கொண்டது முதலாளியச் சமுதாயம். ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் இந்த அந்நியமாதலை வெற்றி கொள்ள முடியும்.

வரலாறு

மார்க்ஸ் "இயங்கியல் பொருள் முதலியல் வாதம்" என்றோ, "வரலாற்றுப் பொருள் முதலியல்" என்றோ குறிப்பிட்டதில்லை. இப்படிக் கூறுவது ஒரு மொழியியல் பிரச்னை மட்டுமல்ல. வரலாறு பற்றிய அவர் அணுகல் முறையின் இறுக்கமற்ற இயல்பையே குறிக்கிறது. தனது அணுகல் முறையை வரலாறு பற்றிய பொருள் முதல் கருத்தாக்கம் என்றே அவர் குறிப்பிட்டார். மனிதனையும் அவனது வரலாற்றையும் புரிந்து கொள்வதில் முக்கியமான அம்சம், மனிதனுடைய உற்பத்திச் செயலைப் புரிந்து கொள்வதாகும் என்ற கருத்து இந்த அணுகல் முறைக்குரிய திறவுகோல் ஆகும். மனிதனின் அடிப்படைச் செயல், இயற்கையுடன் வினை எதிர்வினைகளை மேற்கொண்டு தன் வாழ்விற்கான பொருட்களைப் பெறுகின்ற செயல் ஆகும். அதாவது, அவனது உழைப்பு ஆகும். மார்க்ஸ் தன் மூலதனத்தில் மனிதன் தன்னைச் சுயமாகப் படைத்துக் கொள்ளும் கருவி உழைப்பு என்று குறிப்பிட்டார்.

உழைப்பு என்ற நிகழ்வில் மனிதனும் இயற்கையும் பங்கு கொள்கின்றனர். இதில் மனிதன் தானாகத் தனக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருள்வகை எதிர்வினைகளைத் தொடங்குகிறான். முறைப்படுத்துகிறான், கட்டுப்படுத்துகிறான். இவ்வாறு புறஉலகின் மீது செயல்பட்டு அதை மாற்றும்போதே தனது இயல்பையும்

மாற்றுகிறான். உறங்கிக் கிடக்கும் தன் ஆற்றல்களை அவன் வளர்த்துக் கொள்கின்றான். தனது ஆளுகைக்குக் கட்டுப்பட்டு அவற்றைச் செயல்படுத்துகிறான்.

உழைப்பின் மூலம் இவ்வாறு தன்னைப் படைத்துக் கொள்வதுதான் வரலாற்றில் முதன்மையான அம்சம். இந்தச் செயலை மனிதர்கள் விளக்குவதற்கான – அரசியல், மெய்யியல் அல்லது சமயச் சிந்தனைகளும் கருத்தாக்கங்களும் இரண்டாவதான அம்சங்கள். காரணம், வரலாறு என்பது தற்செயலின் விளைவு அல்ல: மாமனிதர்கள் அல்லது இயற்கை கடந்த சக்திகளாலோ உருவாக்கப்படுவதும் அல்ல. வரலாறு உழைக்கும் மனிதர்களின் பெரும்பாலும் இது குறித்த உணர்வே இல்லாமல் உண்டாக்கும் – படைப்பு ஆகும். கண்டறியக்கூடிய சில விதிகளுக்குக் கட்டுப்பட்டதும் ஆகும்.

மார்க்சைப் புரிந்து கொள்வதில் மிக முக்கியமான குறிப்பு என்னவென்றால்: தன்னை அவர் ஒரு பொருள்முதல்வாதி என்று அழைத்துக் கொண்டபோது அவர் கொண்டிருந்த கருத்து, மனிதனைப் புரிந்து கொள்வதற்கு, அவனது படைப்புச் செயலின் பொருள்வகை நிலைகளிலிருந்து தொடங்குவது முக்கியம் என்பதுதான். இதனால் மார்க்ஸ் ஒரு அனுபவ வாதி என்பது அல்ல. உயிரற்ற விவரங்களின் தொகுப்பிலிருந்து அறிவொளி வாய்த்துவிடும் என்று அவர் நம்பவில்லை. சாரத்திற்கும் தோற்றத்திற்கும் இடையில் ஒரு வேறுபாட்டை அவர் கண்டார். பூமி சூரியனைச் சுற்றுகிறதா இல்லையா என்ற பிரச்சனைக்கு எப்படிப் "பொது அறிவு" தீர்வைத் தராதோ அதுபோலவே வரலாற்றிலும் பொருளாதாரத்திலும் பொது அறிவு, நமக்கு ஒரு வழிகாட்டி ஆக முடியாது என்று கருதினார். அவர் உலகம் என்பது பொருளை மட்டும் கொண்டது என்று நம்பும் இயங்காவியல் பொருள்முதல்வாதியும் அல்ல. உண்மையில் மார்க்சின்

வரலாறு பற்றிய பொருளியல் கருத்தாக்கம், மிக விரிவாக அவரது ஜெர்மன் சித்தாந்தத்திலேயே காணப்படுகிறது. இக்கருத்துக்கள் பாயர்பாக்கின் கருத்துக்களிலிருந்து மார்க்சின் கருத்துக்கள் குறிப்பாக வேறுபடுவதைக் காட்டுகின்றன. பாயர்பாக் பற்றிய ஆய்வுரைகளில் காணப்படும் அவரது முக்கியக் குறிப்பு - மனிதன் பொருளியல் நிலைகளின் விளைவு மட்டுமே அல்ல; மனிதனை பொருளியல் நிலைகளின் விளைவாக மட்டுமே கருதும் போது அவனது அகநிலை இயற்கையோடு அவன் வினை எதிர்வினைகளைச் செயல்படுத்தும் இவனது படைப்புத் திறன் – ஒதுக்கப்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டு பிரெஞ்சுப் பொருளியலாரை விமர்சனம் செய்த மார்க்ஸ் எழுதினார்." சூழல்களை மாற்றுவது, வளர்ப்பது பற்றிய பொருள் முதலியல் கருத்து, சூழல்களே மனிதர்களால்தான் உண்டாக்கப்படுகின்றன என்பதை மறந்து விடுகிறது. தானே கற்றுக் கொள்பவன்தான் கல்வி தரவும் முடியும்."

தன்னை எதிலும் ஈடுபடுத்திக் கொள்ளாத நிலையிலிருந்து ஒருவர் உலகைப் பற்றி "புறநிலை" - சார்பற்ற அல்லது நிரந்தரமான - விவரிப்பைத் தரமுடியும் என்று உரிமை கொண்டாடுகின்ற எந்தக் கோட்பாட்டின் தகுதியையும் மார்க்ஸ் அறவே மறுத்தார். மனிதர் சிந்தனை புறநிலை உண்மைக்குக் காரணமானதா இல்லையா என்ற பிரச்னை கோட்பாட்டுப் பிரச்னை அல்ல. அது ஒரு செயல்முறைப் பிரச்னை என்றார் மார்க்ஸ். இத்தகைய நடுநிலையான ஒரு கருத்தை மனிதன் பெறுவதற்கு ஆர்க்கமெடீஸ் கூறியது போல, சமுதாயத்திற்குப் புறம்பே இருக்கவேண்டும். ஆனால் அப்படி யாரும் சமுதாயத்திற்குப் புறம்பே சென்றுவிட முடியாது. ஒவ்வொருவரும் ஒரு கண்ணோட்டத்திலிருந்தே பேசுகிறார்கள். மார்க்சின் பதினோராவது ஆய்வுரை கூறுகிறது. "இதுவரை மெய்யியலாளர் உலகத்திற்கு பல்வேறு வகைகளில் விளக்கவுரை கூறியுள்ளனர். செய்ய வேண்டுவது உலகை

மாற்றுவதுதான்." பிற்கால மார்க்சில் நேர்காட்சி வாதத்தின் சில இழைகள் தென்படுகின்றன. பிற்கால விக்டோரியச் சமுதாயத்தில் உச்சநிலை அடைந்த இயற்கை விஞ்ஞானம், மனித இலட்சியங்களிலிருந்து முற்றாக விடுபட்டதைப் போன்ற ஒரு நிலைமை இருந்தது. அத்தகைய ஒரு பொது உற்சாகம் மார்க்சையும் பாதித்திருந்தது. ஆனால் வரலாற்றின் மொத்த நிகழ்வுப் போக்கில் எந்தவொரு அம்சத்தையும் தனியே பிரித்துவிட முடியாது. அதற்குப் பிற அம்சங்களால் பாதிக்கப்படாத ஒரு முக்கியத்தை தந்து விட முடியாது என்ற ஒரு பொதுக் கருத்தை அவர் ஹெகலிடமிருந்து பெற்றிருந்தார். வாழ்நாள் முழுவதும் அவரிடம் இக்கருத்து இருந்தது.

மார்க்சின் கருத்துகள் வரலாற்றின் பொருளாதார விளக்கம் என்று குறிப்பிடப்படுகிறது. மார்க்ஸ் பொருளாதாரத்திற்குத் தந்த முக்கியத்துவம், அவரது அரசியல் பொருளாதார விமர்சனத்திற்காக முன்னுரையில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மார்க்ஸ் குறிப்பிட்டார்: "மனிதர் தம் வாழ்விற்கான சமுதாய உற்பத்திச் செயலின்போது திட்டவட்டமான உறவுகளை மேற்கொள்கிறார்கள். அவை இன்றியமையாதவை: அவர்களின் விருப்பத்தைச் சாராதவை. இந்த உற்பத்தி உறவுகள் அவர்களின் பொருள்வகைச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு திட்டவட்டமான நிலையைக் குறிப்பிடுகின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் ஒட்டு மொத்தம் சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகிறது. இந்த அடிப்படையின் மீது ஒரு சட்ட, அரசியல் மேற்கட்டு எழுகிறது. இந்த அடிப்படைக்கு இயைய சமூக உணர்வின் திட்டவட்டமான உருவங்கள் அமைகின்றன. பொருள்வகை வாழ்வின் உற்பத்திமுறை பொதுவாக சமூக, அரசியல், அறிவு வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது. மனிதர்களின் வாழ்நிலையை உணர்வு தீர்மானிப்பதில்லை. மாறாக அவர்களின் சமூக வாழ்நிலையே அவர்களின் உணர்வைத் தீர்மானிக்கிறது. சமூகத்தின் பொருள்வகை உற்பத்திச் சக்திகள்

அவற்றின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அப்போது நிலவும் உற்பத்தி உறவுகளோடு முரண்படுகின்றன. அல்லது அதையே சட்டத்தின் மொழியில் சொல்வதானால் உடமை உறவுகளோடு முரண்படுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்ற நிலையிலிருந்து மாறி அவற்றின் தளைகள் ஆகின்றன. அப்பொழுது ஒரு சமூகப் புரட்சிக்காலம் தொடங்குகிறது.

மார்க்சின் சிந்தனையில் கட்டுப்பாடு, முன்னதாகவே தீர்மானம் ஆதல் ஆகிய அம்சங்களுக்கு மிகையான அழுத்தம் தரும் போக்கு இருப்பது உண்மைதான். எங்கெல்ஸ் பிற்காலத்தில் எழுதினார் "இளைஞர்கள் சில சமயங்களில் பொருளாதாரத்துக்கு அதற்குத் தேவையானதை விடவும் அதிக அழுத்தம் தருகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஓரளவு மார்க்சும் நானுமே காரணம் ஆகின்றோம். எங்கள் எதிராளிகளுக்கு எதிராக எங்கள் முதன்மையான கொள்கையை நாங்கள் வலியுறுத்த வேண்டியிருந்தது. வினை எதிர்வினையின் போது சம்பந்தப்பட்ட பிற அம்சங்களுக்கு அதற்குரிய தகுதியைத் தர எங்களுக்குப் போதிய நேரமும் இடமும் அல்லது வாய்ப்பும் கிட்டவில்லை."

இதன் விளைவாக மார்க்சின் கருத்தில் ஒரு வகையான பொருளாதாரத் தீர்மானவாதத்தை சிலர் காண்கிறார்கள். அவர்கள் பொருளாதார அம்சத்தினால் மட்டுமே ஒரு வரலாற்றுப் போக்கில் பிற அம்சங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அல்லது மிக முக்கியமான பொருளாதாரக் காரணி என்பது உற்பத்திக் கருவிகள் மட்டுமே என்று மார்க்ஸ் குறிப்பிட்டதாக அவர்கள் கருதிக் கொள்கிறார்கள். "கையால் இயக்கும் இயந்திரம் நிலப்பிரபுவோடு கூடிய ஒரு சமுதாயத்தையும். நீராவியால் இயங்கும் ஒரு இயந்திரம் தொழில்துறையோடு இயங்கும் ஒரு சமுதாயத்தையும் தரும்" என்று மார்க்ஸ் கூறிய உரைகளில் உற்பத்திக் கருவியையே தீர்மானமான காரணி என்று அவர் சில சமயங்களில் கூறி இருப்பது உண்மைதான்.

'மேற்கட்டிலிருந்து அடித்தளத்தை முற்றாகப் பிரிக்கின்ற வரலாற்றுப் பொருளியல் கோட்பாடு எதுவும் தகுதியற்றது. காரணம் அடித்தளம் என்பதுடன் இன்றியமையாமல் மேற்கட்டின் பகுதிகள் சம்பந்தப்படுகின்றன. உதாரணமாக ஒரு சமுதாயத்தின் பொருளாதார நிர்வாகத்தின் போது, சில விதிகள் கடமைகள் பற்றிய கருத்தாக்கம் எதுவுமில்லாமல் முடியாது.' இவ்வாறு மார்க்ஸ் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டார். ஆனால் இத்தகைய விமர்சனம் குறிப்பிடுவதைப் போன்று, மார்க்ஸ் முற்றிலும் காரண விளைவுத் தொடர்புடையதாகத் தனது கோட்பாட்டை உருவாக்கினாரா என்பது ஐயத்திற்குரியது. நாம் அதிக அளவில் சொல்லக் கூடியது. மார்க்சின் கருத்தில், தொழில்நுணுக்க ரீதியான மாற்றம் தேவை. ஆனால் அதுவே சமுதாய மாற்றத்திற்குப் போதுமான நிபந்தனை ஆகாது. தவிர அடித்தளம் மேற்கட்டுடன் கொண்ட உறவை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்கள் எப்பொழுதும் திட்டவட்டமாக இல்லை. சில சமயம் மார்க்ஸ் 'தீர்மானிக்கிறது' என்றும், சில சமயம் 'கட்டுப்படுத்துகிறது' என்றும், சில சமயம் 'அதற்கொப்ப இயைகிறது' என்றும் கூறுகிறார். இதன்மூலம் இறந்தகால நிகழ்காலச் சமுதாயங்களை விளக்குவதற்கு மார்க்ஸ் நெகிழ்வோடு கூடிய கட்டமைப்புள்ள கருத்தாக்கங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்று புரிகிறது.

சமுதாயத்தில் பொருளாதாரமல்லாத காரணிகளுக்கு உடன்பாடான பங்கை மார்க்ஸ் தந்தார் என்பது தெளிவு. உண்மையில் உற்பத்திக் கருவிகளோடு உழைப்பாளிகளையும் சில சமயங்களில் சேர்த்தார். புரட்சிகர வர்க்கத்தை "உற்பத்திக் கருவிகளிலே மிகப் பெரும் உற்பத்திச் சக்தி" என்று மார்க்ஸ் அழைத்தார். குறிப்பிட்ட மேற்கோளில், உணர்வைத் தீர்மானிப்பது வெறும் வாழ்நிலை என்று அவர் குறிப்பிடவில்லை. மாறாக, சமூக வாழ்நிலை

என்று குறிப்பிட்டார். சமுதாயத்தைப் புரிந்துகொள்வதில் கருத்துக்களுக்கு இரண்டாவது முக்கியத்துவத்தையே தந்தார். ஒரு தனி மனிதனை அவன் தன்னைப் பற்றி என்ன கருதிக் கொள்ளுகிறான் என்பதைக் கொண்டு அவனைப் பற்றி நாம் தீர்மானிப்பதில்லை. அதுபோல ஒரு குறிப்பிட்ட காலம் தன்னைப் பற்றித் தரும் விளக்க உரைகளையே நாம் சார்ந்துவிடக் கூடாது. இவ்வாறு மார்க்ஸ் எச்சரித்தார். ஓர் உதாரணம் கூறுவதானால் பிரெஞ்சுப் புரட்சியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பிலும் பிரகடனம் செய்யப்பட்ட மனித உரிமைகள் என்பவை மனித இயல்பைப் பற்றிய இறவாத உண்மைகள் அல்ல. அவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் கண்டறியப்பட்டவை. நிலப்பிரபுத்துவக்கட்டுப்பாடுகளைக் முடிவுக்குக் கொண்டு வரவும், பொருளாதாரத்தில் சுதந்திரமான போட்டிக்காகவும் புதிய வணிகக் குழுக்கள் கோரிக்கை எழுப்பிய சூழலில் வைத்துப் பார்த்தால்தான் அந்த உரிமைகளை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட வர்க்க நலனுக்குச் சேவை செய்யும் முறையில் பரப்பப்படும் கருத்துக்களையே மார்க்ஸ் சித்தாந்தம் என்ற பெயரால் குறிப்பிட்டார்.

மார்க்சின் கருத்துகளும் கூட ஒரு குறிப்பிட்ட வர்க்க நலனுக்குச் சேவை செய்யக் கூடியவை. இம்முறையில் அவர் கருத்துகளும் சித்தாந்த வகையிலானவை என்று கூறினால், மார்க்ஸ் நிச்சயம் உடன்படுவார். ஆனால் அதே சமயம் அவர் இன்னொன்றையும் வற்புறுத்துவார். தனது கருத்துகள் புறநிலையான, மாறாத உண்மைக்கு உரிமை கொண்டாடவில்லை. ஆனால் அவை பாட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து தோன்றியவை; ஆகவே தகுதியானவை. இந்த நிலைபாடு, மார்க்சின் கருத்துகள் ஏதாவது ஒரு அறவியல் நிலைபாட்டைக் கொண்டுள்ளதா என்ற சிக்கலான பிரச்னையை ஓரளவு தெளிவுபடுத்தும். மார்க்ஸ் ஒரு அறவியல் நிலைபாட்டைக் கொண்டிருந்தார்.

அந்த நிலைபாடு, சமூகம், வரலாறு பற்றி அவர் கூறியவற்றிலிருந்து தனியே பிரித்து விளக்குவது ஆகாது. உதாரணமாக, மார்க்ஸ் மனித இயல்பு பற்றி ஒரு கருத்தாக்கத்தைக் கொண்டார். அது மாறாதது அல்ல. இத்தகைய ஒரு கருத்தே பிற அரசியல் மெய்யியலாருக்குச் சமூகம் பற்றிய பரிந்துரைகளை வழங்கப் போதுமான அளவுகோலாக இருந்திருக்கும். ஆனால் மார்க்சின் மனிதன் உழைத்து உற்பத்தியில் ஈடுபடும்போதே தொடர்ந்து வளர்கிறான். உலகத்தோடு தன் உறவை மாற்றுகிறான். அதன்மூலம் தனது இயற்கையை மாற்றுகிறான். படைக்கிறான்.

"மனிதன் தன்னைப் படைத்தல் (சில குறிப்பிட்ட சூழல்களில்) என்பது மார்க்சில் மையமான பிரச்னை. இதனால் உற்பத்திக் கருவிகள் என்பவை அவற்றின் சமூகக் களத்திலிருந்து பிரிக்க முடியாதவை. மார்க்சிய இயங்கியலின் மையம், புறநிலை அகநிலைக் காரணிகளின் ஐக்கியம். இந்த ஐக்கியம் ஓரளவு வரலாறு முழுவதும், புரட்சி நெருங்கும் போது அதிக அளவிலும் இருப்பது." வரலாறு, தான் எதையும் செய்வதில்லை. அளவற்ற செல்வங்களை இது உடைமை கொள்வதில்லை. இது போர்களை நடத்துவதில்லை. எதார்த்தமான உயிருள்ள மனிதர்கள் தான் உடமை கொள்வதையும் போரிடுவதையும் செய்கிறார்கள். வரலாறு ஒரு தனி மனிதனைப் போல இருந்து தனது நோக்கத்தைச் சாதித்துக்கொள்ள மனிதர்களை பயன்படுத்துவதில்லை. வரலாறு என்பது தம் நோக்கங்களைச் சாதிக்க முயலும் மனிதர்களின் செயல்பாட்டைத் தவிர வேறொன்றுமல்ல."

"மனிதர் தம் சொந்த வரலாற்றைத் தாமே உருவாக்கிக் கொள்கிறார்கள். தாம் விரும்பியதைப் போல அவர்கள் உருவாக்குவதில்லை. தாமே தேர்ந்தெடுத்துக் கொண்ட சூழ்நிலையிலும் அதை உருவாக்குவதில்லை. இறந்த காலத்திலிருந்து தரப்பட்டதும், மாற்றப்பட்டதும், தாம்

நேரிடையாக எதிர்கொள்வதும் ஆகிய சூழல்களிலேயே அதைச் செய்கிறார்கள்." இயங்கியலின் அகநிலை புறநிலைப் பகுதிகளின் இடையில் அவற்றை இணைப்பது வர்க்கம் என்ற கருத்து மார்க்சில் மிக முக்கியமானதாகும். வர்க்கங்கள் அடிப்படையான சமூகக் குழுக்கள். அவற்றின் போராட்டத்தின் மூலம் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாறுதல்களை ஒட்டிச் சமூகம் வளர்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை எடுத்த உடனே கூறுகிறது. "இன்று வரையுள்ள அனைத்துச்சமுதாயங்களின் வரலாறும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே." ஆனால் மார்க்ஸ் வர்க்கம் என்ற கருத்தாக்கத்தின் முறையான பகுப்பாய்வை எங்குமே செய்யவில்லை. எனினும் வர்க்கங்கள் பெறும் பங்கு, அகநிலை புறநிலைக் காரணிகளின் சேர்க்கை என்பது தெளிவு.

புறநிலைப் பகுதி பற்றி ஒரு கேள்வி எழுகிறது. வர்க்கங்கள் எத்தனை வகை? மூலதனம்—மூன்றாவது நூலில் இறுதியில் இந்தக் கேள்விக்கான விடை தொடங்குகிறது. அதில் மார்க்ஸ் மூன்று பெரிய சமூக வர்க்கங்களைக் குறிப்பிடுகிறார். அவை கூலி உழைப்பாளிகள், முதலாளிகள், நிலக்கிழார்கள். மருத்துவர்கள், வழக்குரைஞர்கள் ஆகியவர்கள் ஏன் தனி வர்க்கங்கள் அல்ல என்று மார்க்ஸ் எழுப்பும் முக்கியமான கேள்வியோடு கையெழுத்துப்படி முடிவடைகிறது. பல சமயங்களில் இரண்டு வர்க்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு மாதிரியை மார்க்ஸ் பயன்படுத்துகிறார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலும் மீண்டும் மூலதனத்திலும் இம்மாதிரி இடம் பெறுகிறது. ஒரு வர்க்கத்தைச் சேர்வதற்கான தகவு உற்பத்திக்கருவிகளின் சொத்துடைமை அல்லது இன்மை. இங்கு மார்க்ஸ் தனது சமகால சமுதாயத்தில் கண்ட போக்குகளை எதிர்காலப் போக்குகளாகக் காண்கிறார். இந்தப் போக்குகளில் மிக முக்கியமான ஒன்று, பாட்டாளி வர்க்கத்தின் வறுமை. பாட்டாளி வர்க்கத்தினர் முழுமையான வறுமை

அடைவார்கள் என்று மார்க்ஸ் கூறியிருக்கமுடியாது. அத்தகையதொரு கருத்து "சமுதாயத்தினூடு மனிதத் தேவைகள் நிறைவுபெறும்" என்ற அவர் கருத்தோடு இணையாது. அவர் கூறியது என்னவென்றால், உற்பத்திக் கருவிகளைச் சொந்தமாகக் கொண்டவர்களுக்கும் அவை இல்லாதவர்களுக்கும் இடையில் உள்ள வளங்களிலான இடைவெளி விரிவடையும் என்பதுதான். அவர் பல்வேறு சமூகக் குழுக்களை குறிக்க வர்க்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பிரிட்டனில் ஆளும் வர்க்கங்கள் என்பது பற்றிப் பேசினார். அவர் பண முதலீட்டு முதலாளிகளையும் தொழிற்துறை முதலாளிகளையும் இரு வேறுபட்ட வர்க்கங்கள் என்றும் கூடக் கூறினார். சமுதாயத்தின் இன்னொரு எல்லையில் உள்ளவர்களை மார்க்ஸ் உதிரிப் பாட்டாளி வர்க்கம் என்றார். அவர்களை "எல்லா வகையான திருடர்களையும், குற்றவாளிகளையும் பயிற்சி அளிக்கும் களம்; சமுதாயம் இடும் பிச்சையில் வாழும் வர்க்கம். குறிப்பிட்ட தொழில் இல்லாத மக்கள் ஊர் சுற்றிகள்; தமக்கென ஒரு அடுப்பங்கரையோ, வீடோ இல்லாதவர்கள்" என்று வர்ணித்தார். இந்த உதிரிப் பாட்டாளி வர்க்கம் சமுதாயத்திலிருந்து விலகியது. சமுதாய வளர்ச்சியில் இவர்களுக்குப் பங்கு இல்லை. சில சமயங்களில் இவர்கள் தம் சேவைகளை உடைமை வர்க்கத்திற்கு விற்பதைத் தவிர வரலாற்றில் வேறு பங்கு இல்லாதவர்கள். இரு வகுப்பு மாதிரிக்கு இன்னொரு பிரச்னை, உழவர்கள். பாட்டாளி வர்க்கம் என்று மார்க்ஸ் சாதாரணமாக வர்ணிப்பது, தொழில்துறை உழைப்பாளிகளுக்கே பொருந்தும். ஆனால் சிலசமயங்களில் முதலாளியச் சமூகங்களில் உள்ள பெரும்பான்மை மக்களைப் பாட்டாளி வர்க்கம் என்றும் குறிப்பிட்டார். இவர்களுக்குள் பண்ணை உழைப்பாளிகளும் அடங்குவர். 1875ல் பக்கூனினைப் பற்றி ஒரு விமர்சனத்தின் போது குறிப்பிட்டார்:

"முதலாளியக் குத்தகைக்காரன் உழவர்களை வெளியேற்றி விட்டான். உண்மையில் நிலத்தை உழுபவன் ஒரு பாட்டாளி வர்க்கத்தவனாக, நகர்ப்புறத்து உழைப்பாளியைப்போல ஒரு கூலி உழைப்பாளியாகி விட்டான்." அதே விமர்சனத்தில் மார்க்ஸ் கூறினார்: "சில சமயங்களில் நிலத்தை உடைமையாகக் கொண்ட உழவனும், பாட்டாளி வர்க்கத்தோடு சேர்கிறான். அதை அவன் உணரவில்லை. தன் நிலத்தின் மீதுள்ள அடமானம் என்ற சுமையின் பொருள், அந்த நிலம் உண்மையில் அவனுடையது அல்ல; அவன் வேறொருவனுக்காக உழைக்கிறான் என்பதாகும்." இவ்வாறு உழவர்களைப் பாட்டாளி வர்க்கம் என்றும் நில உடைமையாளர்களை முதலாளிகள் என்றும் கொண்டால் இரு வர்க்க மாதிரி மீண்டும் செயல்படுகிறது. மார்க்சின் பிற்கால வெளியிடப்படாத சில படைப்புக்களில் உள்ள குறிப்புக்கள், அவர் மத்தியதர வர்க்கங்களின் வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டார் என்பதைக் காட்டுகின்றன. பொதுச்சேவைத் துறைத் தொழில்கள் சமுதாயத்தில் பெறும் பங்கு அதிகரித்து வருவதையும் கண்டார். ஆனால் இந்தக் காரணிகள் பற்றி அவர் முறையாக வகுத்துரைக்கவில்லை.

வர்க்கம் பற்றி மார்க்சின் கருத்திலுள்ள இன்னொரு முக்கியமான அம்சம், அதன் அகநிலை அல்லது தீவிரத் தன்மை பற்றியதாகும். ஒரு வர்க்கம் தன்னை அத்தகையதொன்றாக உணரும் பொழுதே அது வர்க்கமாகிறது. இவ்வாறு உணர்வதில் அது பிற சமூகக் குழுவினிடம் பகை கொள்வதும் அடங்குகிறது. இதனால் வர்க்கம் என்ற சொல்லின் முழுப் பொருளில் முதலாளிகள் கூட ஒரு வர்க்கத்தினர் தானா என்று கூறுவதற்கு மார்க்ஸ் சில சமயங்களில் தயங்கினார். அவர்களைப் பற்றி மார்க்ஸ் எழுதினார்: "இன்னொரு வர்க்கத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தை நடத்த நேரும்போது தனித்தனி நபர்கள் ஒரு

வர்க்கமாக உருவாகிறார்கள். இல்லாவிட்டால் போட்டியாளர் என்ற முறையில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பகை கொள்கிறார்கள்." இது பாட்டாளி வர்க்கத்துக்கும் பொருந்தும். சில சமயங்களில் பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக அமைத்துக் கொள்ளும் முறையில் இன்னும் போதுமான வளர்ச்சி பெறவில்லை என்று மார்க்ஸ் கூறினார். "இந்த மக்கள் திரள், மூலதனத்துக்கு எதிரான ஒரு வர்க்கமாக உள்ளது. ஆனால் இன்னும் அது தனக்கான வர்க்கம் ஆகவில்லை" என்றும் மார்க்ஸ் கூறினார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் அவர் எழுதினார்: "பாட்டாளிகள் ஒரு வர்க்கமாக உருவாதல், அதன் விளைவாக ஒரு அரசியல் கட்சியாக உருவாதல் என்பது உழைப்பாளிகள் தங்களுக்கிடையில் கொள்ளும் போட்டியினால் தொடர்ந்து பலமுறையும் சிதைகிறது." 1866-ல் அகிலத்தைப் பற்றிக்கூறும் பொழுது "உழைப்பாளிகளை ஒரு வர்க்கமாக உருவாக்குவதற்கான ஒரு கருவி அது" என்றார். வர்க்கத்தின் அகநிலை அம்சம் பற்றிய தெளிவான கருத்தைப் பிரெஞ்சு உழவர்கள் பற்றிக் கூறும் பொழுது மார்க்ஸ் தந்தார்.

"தம் வாழ்க்கை முறையையும் தங்கள் நலன்களையும், தம் கலாச்சாரத்தையும் பிற வர்க்கங்களின் வாழ்க்கைமுறை முதலியவற்றிலிருந்து பிரித்து, பிற வர்க்கங்களுக்கு நேர் எதிரான பகையணியில் தம்மை நிறுத்துவதாகிய பொருளாதார நிலைகளில் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ நேரும்பொழுது அவர்கள் ஒரு வர்க்கமாகிறார்கள். சிறு நில உடைமை உழவர்களுக்கிடையில் வட்டார அளவில் மட்டுமே தொடர்பு இருந்து அவர்களின் நலன்களுக்கிடையில் உள்ள ஒருமை, ஒரு சமூகத்தையோ தேச உறவையோ ஒரு அரசியல் நிறுவனத்தையோ தோற்றுவிக்க வில்லையானால், அவர்கள் ஒரு வர்க்கமாகவில்லை. இதன் விளைவாகத் தம் வர்க்க நலனைச் செயல்படுத்துவதற்கான திறன் அற்றவராகின்றனர்."

ஒரு நிருபர், வரலாற்றுப் பொருள் முதலியல் பற்றி வினவியபோது பதினெட்டாவது புரூமேர் முதலிய நூல்களில் சமகால வரலாறு பற்றி மார்க்சின் விமர்சனங்களைப் படிக்குமாறு எங்கல்சு கூறினார். வரலாறு பற்றி மார்க்சின் அணுகுமுறையிலுள்ள நெகிழ்வை வலியுறுத்துவதற்கு மேலும் இரண்டு ஆதாரங்களைக் காணலாம். ஒன்று: கலை, சமூக, பொருளாதாரக் காரணிகளுடன் கொண்டுள்ள உறவு பற்றியது. இரண்டாவது: ரஷ்ய சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி பற்றியது.

'கிரன்டிரிசே'வுக்கு மார்க்ஸ் எழுதிய பொது முன்னுரையின் இறுதியில், பின்னர் விளக்கும் நோக்கத்துடன் பல குறிப்புகளைத் தந்தார். அவற்றுள் ஒன்று "பொருள் உற்பத்தியின் வளர்ச்சிக்கும் கலைக்கும் இடையிலான சமநிலையற்ற உறவு." அதாவது கலை வளர்ச்சியின் மிக உயர்ந்த சில காலகட்டங்கள் சமுதாயத்தின் பொது வளர்ச்சியோடு அல்லது அதன் பொருளியல் அடிப்படை – அந்த நிறுவனத்தின் மேல்வரிக் கட்டுக்கோப்புடன் நேரிடையான உறவு கொள்வதில்லை." உதாரணமாக, கிரேக்கப் புராண இயல் கிரேக்கக் கலைக்கு அடிப்படையாக இருந்தது. கிரேக்கர்களின் கற்பனையையும் கலையையும் உருவாக்கிய அவர்களது இயற்கை பற்றிய கண்ணோட்டமும் சமூக உறவுகளும், தானியங்கிகளும் இயந்திரங்களும், மின்சாரமும் உள்ள ஒரு காலத்தில் சாத்தியமில்லை. மார்க்ஸ் கேட்டார்: அச்சக சதுக்கத்தை எதிர்கொண்டபோது ஃபாமா தேவதைக்கு என்ன நேர்ந்தது? வெடி மருந்திற்கும் ஈயத்திற்கும் அருகில் அக்கிலஸ் சாத்தியம் தானா? இம்முறையில் கிரேக்கக் கலை நமது அழகியல் அனுபவத்திற்கான மூலமாக இன்னும் எப்படி இருக்கிறது? அத்துடன் சில அம்சங்களில் நம்மால் சாதிக்க முடியாத முன் மாதிரியாகவும், அளவுகோலாகவும் எப்படி அமைகிறது என்பதைப் புரிந்து கொள்வது ஒரு பிரச்னை. இந்தக் கேள்விக்கு மார்க்ஸ் தந்த விடை: "தனது மிகச் சிறந்த

அழகியல் வளர்ச்சியை அடைந்த மனித சமூகத்தின் குழந்தைப் பருவம், மீண்டும் ஒருமுறை திரும்பவராத ஒரு காலமாக என்றும் அழியாத கவர்ச்சியை ஏன் தராது?" இந்த விடை நிச்சயம் போதுமான நிறைவைத் தருவதில்லை. ஆனால் வரலாற்றுப் பிரச்னைகளுக்குத் தயாரித்த நிலையில் அளிக்கப்படும் விடைகளை அவரது கோட்பாடு நிச்சயம் தராது என்று மார்க்சுக்கு நன்றாகத் தெரியும்.

இரண்டாவது உதாரணம்: ரஷ்யாவின் வளர்ச்சி பற்றிய மார்க்சின் கண்ணோட்டம், 1877ல் மிகைலாவ்ஸ்கி, முதலாளியக் கட்டத்தைக் கடந்து செல்லத் தங்கள் நாட்டில் பாடுபடும் ரஷ்யர்களின் முயற்சியை மார்க்சின் 'மூலதனம்' கண்டிப்பதாக இருக்கிறது என்று மார்க்சின் கருத்துக்களைத் தாக்கினார். அதற்குப் பதிலளிக்கும் முறையில் ரஷ்யா முதலாளியக் கட்டத்தைத் தவிர்க்கும் சாத்தியத்தை வற்புறுத்தினார். மேற்கு ஐரோப்பாவில் முதலாளியத் தோற்றம் பற்றிய தனது வரலாற்று வரைபடத்தை ஒவ்வொரு நாட்டு மக்களும் வரலாற்றுச் சூழல்கள் எத்தகையதாக இருந்த போதிலும் – கடந்து தீர வேண்டிய ஒரு பொதுவழியாக – ஒரு வரலாற்று மெய்யியல் கோட்பாடாக மிகைலாவ்ஸ்கி உருமாற்றியதைக் கண்டித்தார். வரலாற்றை ஒரு பொதுவான வரலாற்று மெய்யியல் கோட்பாடு கொண்டு – அதை ஒரு மூலச் சாவி போலப் பயன்படுத்திப் புரிந்துகொள்ள முயலும் அணுகல் முறையை விமர்சனம் செய்தார். அந்த அணுகல் முறையின் மேலான பண்பு வரலாற்றுக்குப் புறம்பாக நிற்பதில் அடங்கியுள்ளது.

1891ல் ரஷ்ய மார்க்சியவாதியாகிய வேராசசௌயிட்ச், அவர் கருத்துக்களை விளக்குமாறு கேட்டார். அவர் கேட்டதாவது: "அண்மைக்காலத்தில், கிராம கம்யூன் முறை, வரலாற்றுப் போக்கில் அழிந்து விடுமாறு விதிக்கப்பட்ட தொன்மை முறை என்று கூறப்படுகிறது; இதைச் சொல்பவர் தங்களை உங்களது தன்னிகரற்ற மாணவர்கள் மார்க்சியவாதிகள் என்று கூறிக் கொள்கின்றனர். அவர்களது

விவாதத்தின் வலிமை வாய்ந்த பகுதி 'மார்க்ஸ் இதைச் சொன்னார்' என்பதுதான் ஆனால் அவருடைய 'மூலதனத்தி'லிருந்து நீங்கள் எப்படி இதை வருவித்துக் கொள்கிறீர்கள்? அவர் விவசாயப் பிரச்னை பற்றியோ, ரஷ்யா பற்றியோ விவாதிக்கவில்லையே என்று கேட்டால் உங்கள் மாணவர்கள் பதில் சொல்கிறார்கள். "நமது நாடு பற்றி அவர் பேச நேர்ந்திருந்தால் இப்படிச் சொல்லியிருப்பார்."

மார்க்சின் சுருக்கமான பதில்: "கிராமக்கம்யூனின் ஆற்றலுக்கு உடன்பாடாகவோ எதிராகவோ மூலதனத்தில் தரப்பட்டுள்ள பகுப்பாய்வு எந்தக் காரணத்தையும் தருவதில்லை. இதைப் பற்றி நான் செய்த சிறப்பு ஆய்வு – இதற்காக அதன் மூல ஆதாரங்களையோ நான் ஆராய்ந்திருக்கிறேன் - ரஷ்யாவின் சமூக மறுமலர்ச்சிக்கான தொடக்க நிலையாக இந்தக் கம்யூன் அமைகிறது. ஆனால் இது அப்படிச் செயல்படுவதற்கு அதன் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அதைத் தாக்கும் தீய செல்வாக்குகளை முதலில் அப்புறப்படுத்த வேண்டும். பிறகு ஒரு தன்னிச்சையான வளர்ச்சிக்கான இயல்பான நிலைமைகளை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு எனது ஆய்வு எனக்குப் புலப்படுத்தியுள்ளது.

மார்க்சின் பதில் சுருக்கமானதாக இருந்தபோதிலும் அது மூன்று மிக நீண்ட நகல்களை அடிப்படையாகக் கொண்டது. அவை உழவர் கம்யூனின் வளர்ச்சியை முழுமையாகப் பகுத்து ஆய்ந்தவை. அவை கூறும் முடிவு. "ரஷ்யக் கம்யூனைக் காப்பாற்றுவதற்கு ஒரு ரஷ்யப் புரட்சி தேவை. தவிர ரஷ்ய அரசாங்கமும் சமுதாயத்தின் புதிய தூண்களும் அத்தகையதொரு பேரழிவுக்காக மக்களைத் தம்மால் இயன்ற அளவு தயாரிக்கிறார்கள். தக்க சமயத்தில் புரட்சி வருமானால் அது தனது சக்தியை எல்லாம் கிராமக் கம்யூனின் சுதந்திர வளர்ச்சியை உறுதிப்படுத்தக் குவிக்குமானால் இந்தக் கம்யூன் முறை ரஷ்ய சமுதாயத்தின் புத்துயிர்ப்புக்கான அம்சமாகும். அத்துடன் முதலாளிய

ஆதிக்கத்தால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளைவிட ரஷ்யா மேன்மையடையும்."

இந்த இரண்டு சான்று ஆய்வுகளும் வரலாறு பற்றிய மார்க்சின் அணுகல் முறையிலுள்ள நெகிழ்வை விளக்குகின்றன.

பொருளியல்

மார்க்ஸ் தனது புகழ்பெற்ற வரலாறு பற்றிய பொருள் முதலியல் கருத்தாக்க வரையறையில் குறிப்பிட்டார்: "மனிதர் தம் வாழ்வுக்கான சமூக உற்பத்திச் செயலின்போது, இன்றியமையாததும் தம் சுயவிருப்பத்தைச் சாராததுமான திட்டவட்டமான உறவுகளை மேற்கொள்ளுகிறார்கள். இந்த உற்பத்தி உறவுகள், பொருள்வகை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு திட்டவட்டமான கட்டத்தோடு இயைகின்றன."

மார்க்சின் வரலாறு பற்றிய இக்கருத்தாக்கத்தில் அவரது பொருளாதாரக் கொள்கைகள் பொதிந்துள்ளன. பூர்சுவா சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளையும் அவற்றோடு இயைந்த பொருள்வகை உற்பத்திச் சக்திகளையும் – மார்க்ஸ் தனது மூலதனத்தின் முன்னுரையில் குறிப்பிட்டவாறு 'நவீனகாலச் சமூகத்தின் பொருளியல் விதியை வெளிப்படுத்துவது" – மார்க்ஸின் நோக்கம். மூலதனத்தின் முதல்நூல் முற்றிலும் பொருளியல் பற்றியே பேசுவதாகச் சிலர் கருதினாலும், அவருடைய பொருளியலை அவரது சமூகவியலிலிருந்தோ, அவரது அரசியல் அல்லது வரலாற்றிலிருந்தோ பிரித்து விட முடியாது. இதில் பாதிக்கு மேற்பட்ட பகுதியில், தனது வரலாறு பற்றிய பொருள் முதலியல் கண்ணோட்டத்தின் மூலம் சமகாலத்து பிரிட்டனின் முதலாளியத்தை ஆராய்கிறார். விவரங்களின் தொகுப்பும், அவரது நடையின் தெளிவும் அவரது ஆய்வு நுட்பத்தையும் அவரது இலக்கியத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. இருந்தபோதிலும், மார்க்சே கூறியபடி, ஒவ்வொரு முதல் முயற்சியும் கடினமானதே.

பொருளியல் கோட்பாடுகளைச் சுருக்கமாகத் தருமுன், அவரது அணுகல்முறை பற்றிச் சில குறிப்புகள் தருவது தேவை. அண்மைக் காலத்தில் அவரது முறையியல் பெற்று வரும் கவனமும் மேலும் ஒரு காரணம்.

கிரன்டிரிசேவுக்கு மார்க்ஸ் எழுதியபோது முன்னுரையிலும், மூலதனத்தின் இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரையிலும் மார்க்ஸ் தமது முறையை விவரிக்கிறார். மார்க்ஸ் எவ்வாறு ஹெகலுக்குக் கடமைப்பட்டிருந்தார் என்று அறிவதற்கும் இப்பகுதிகள் பயன்படுகின்றன. ஓர் ஆய்வாளரின் முன் இருப்பது அவரது ஆய்வுக்கான பொருள் பற்றிய குழப்பமிக்க விவரத் தொகுப்பே. பிறகு அவர் செய்வது, விவரத்தொகுப்பை உடைத்து, அதன் பகுதிகளாகிய மூலகங்களைக் கண்டறிய வேண்டும். இவை மிக எளிய, நுண்பொருள் வடிவிலான கருத்தாக்கங்கள். இவை ஒவ்வொன்றும் பிறவற்றோடு கொள்ளும் உறவில்தான் பொருள் பெறுகின்றன. இத்தகைய பகுப்பாய்வுக்குப் பின்னர்தான், கருத்தியல் வகையிலான தொகுப்புவேலை தொடங்குகிறது. மிக எளிய, நுண்கருத்தியல் வகையிலான கருத்தாக்கங்களிலிருந்து தொடங்கி முழுமையை மீண்டும் உருவமைக்கும் நிகழ்வுப்போக்கு இது. இம்முறையில்தான் பொருளியல் துறையில் ஈடுபடும் ஓர் ஆய்வாளர், பூர்சுவா சமூகம் பற்றிய குழப்பமான அறிவிலிருந்து தொடங்குகிறார். பகுப்பாய்வின் மூலம் அதன் மிக நுட்பமான மூலப் பகுதிகளைக் கண்டறிகிறார். பிறகு இயங்கியல் விளக்கத்தின் வழியே, இப்பகுதிகளைத் தொகுக்கிறார். இறுதியில் ஆய்வுக்குரிய பொருள் பற்றிய ஒட்டுமொத்தமான கருத்தியல் அறிவைப் பெறுகிறார். சாரத்தில் ஹெகலின் முறை இதுதான். ஒரு வேறுபாடு, பகுத்தல் தொகுத்தல் என்ற சரியான முறை தொடங்க வேண்டிய இடத்தில், தானே இயங்குவதாகிய சிந்தனையை ஹெகல் வைத்து விடுகிறார்.

நுண்பொருளிலிருந்து பருப்பொருள் நோக்கிச் செல்வதன் தேவையை ஹெகல் அறிந்திருந்தார். ஆயினும் சிந்தனையிலிருந்து தொடங்கியதன் மூலம் தனது முறையை அவர் மறைபொருள் வாதமாக்கினார். ஹெகல் தலைகீழாக நின்று கொண்டிருந்தார்: அவரை மீண்டும் காலில் நிறுத்தியதாக மார்க்ஸ் கூறியதன் பொருள் இதுதான். மார்க்ஸ் எழுதினார்: "ஹெகலுடன் எனக்குள்ள உறவு மிகவும் எளிமை யானது. நான் ஹெகலின் மாணவன். இந்த உன்னதமான சிந்தனையாளனைத் தாம் புதைத்து விட்டதாகக் கூறிக் கொள்பவர்களின் ஆரவாரம் நகைப்புக்குரியது. அது எப்படி இருந்தபோதிலும், எனது ஆசானை அணுகுவதில் நான் ஒரு திறனாய்வு மனப்பான்மையைக் கொண்டுள்ளேன். அவரது இயங்கியலிலிருந்து மறைபொருள் வாதத்தை விலக்குவதன் மூலம் ஆழ்ந்ததொரு மாற்றத்திற்கு அதனை உட்படுத்த நான் விரும்புகிறேன்".

மார்க்சின் முறையியல், ஹெகலிய முறையாக இருந்தபோதிலும், அவர் கையாண்ட கருத்தினங்கள் ஒரு மிக நீண்ட பாரம்பரியத்தின் பகுதியாக இருந்தன. இவை, செம்மைப் பொருளியலாளர்கள், குறிப்பாக ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ ஆகியவர்களுடன் உறவுடையவை. இதனால்தான் லாசலே மார்க்சை வர்ணிக்கும்போது. "பொருளியல்வாதியாக மாறிய ஹெகல்: சோசலிசவாதியாக மாறிய ரிகார்டோ" என்று குறிப்பிட்டார்.ஒருவகையில், செம்மைப் பொருளியலாளருள் இறுதியானவரும் மேம்பட்டவருமாக மார்க்ஸ் விளங்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அனைத்துப் பொருளியலாளராலும் பயன்படுத்தப்பட்டு - பிறகு வைதீகப் பொருளியலாளரால் கைவிடப்பட்ட மொழியின் பகுதியாகவே மார்க்சின் கருத்தாக்கங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருந்த பொருளியலாளர்கள், முதலாளியக்

கட்டமைப்பையும், தனிச்சொத்து லாபம், ஏறத்தாழ சுதந்திரமான சந்தை முதலியவற்றையும் என்றும் உள்ளதாகக் கருதினர். விலைகள் பற்றிய விவாதத்திலேயே தம் கவனத்தைச் செலுத்தி, இந்த அமைப்பின் செயல்பாட்டை விவாதித்தனர். இந்த 'இறுதி நிலைப் பொருளியல் பள்ளியின் பார்வையில் விலையிலிருந்து வேறுபட்ட மதிப்பு எதுவும் இல்லை. இத்தகைய ஆய்வுமுறை இரு காரணங்களால் மிக மேலோட்டமானதென மார்க்ஸ் கண்டார். முதலில், முதலாளியச் சமூகத்தின் மேற்பரப்பில் மட்டும் காணக்கூடியதொரு நிகழ்வுப் போக்கைப் பற்றிய விவரிப்பு இது. இந்த நிகழ்வுப் போக்குக்குக் காரணமான உற்பத்தி முறையைப் பற்றி இது பகுத்தாயவில்லை. இரண்டாவதாக, இந்த அணுகல் முறை, முதலாளியத்தை என்றும் உள்ளதாக ஏற்கிறது.

செம்மைக் கோட்பாட்டின் மையமாக இருப்பது, மதிப்பைப் பற்றிய உழைப்புக் கோட்பாடு. இதன்படி, பண்டங்களின் மதிப்பு என்பது அவற்றில் அடங்கியுள்ள உழைப்பின் அளவைப் பொறுத்து அளவிடப்படுகிறது. மார்க்சின் பொதுக் கருத்தாகிய – பொருளியல் வாழ்வில் அடிப்படைக் காரணியாவது சமூக ரீதியிலான உற்பத்திக்கான உழைப்பு என்பதுடன் இக்கோட்பாடு பொருந்துகிறது. மார்க்ஸ், பயன் மதிப்புக்கும் பரிவர்த்தனை மதிப்புக்கும் இடையில் வேறுபாடு கண்டார். முற்காலத்தில் பயன் மதிப்பே முக்கியமாக இருந்தது. பொருள்கள் நேரிடையாகவோ பணம் என்னும் ஊடகத்தின் மூலமோ பரிவர்த்தனை செய்யப்பட்டன. ஆனால் முதலாளியத்தில், இறுதி நோக்கம், பண்டங்களைப் பணமாக மாற்றுவதாக உள்ளது. பண்டத்தின் பயன்மதிப்பு என்பது மதிப்பிற்கான ஊற்றாக இருக்கும் தனித்தன்மை உடையது. அதனால் அதன் நுகர்வு என்பதும் உழைப்பைத் தன்னுள் கொண்டதாக இருக்கிறது. இதன் விளைவாக, மதிப்பைப் படைத்தல் என்பது, உழைப்புக்கான திறன் அல்லது உழைப்புச் சக்தி.

மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான பரிவர்த்தனையில், உழைப்பாளியின் கூலி, அவன் உற்பத்தி செய்யும் பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பைக் காட்டிலும் குறைந்த பரிவர்த்தனை மதிப்பைப் பெறுகிறது. மதிப்பின் உழைப்புக் கோட்பாட்டிலுள்ள ஒரு புதிர் இது. இதை விளக்குமுறையில் மார்க்ஸ் உபரி மதிப்புக் கோட்பாட்டை உருவாக்கினார். இதனைப் பொருளியலில் மார்க்சின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்று எங்கல்ஸ் பாராட்டினார். மார்க்ஸ் மாறாத முதல், மாறும் முதல் என்று வேறுபடுத்தினார். மாறாத முதல் என்பது, உற்பத்திக் கருவிகள், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றைப் பகுதியாகக் கொண்டது. உற்பத்தி நிகழ்வின்போது எத்தகைய மதிப்பின் அளவு மாற்றத்துக்கும் உட்படாதது இது. மாறும் முதல் என்பது, உழைப்புச் சக்தியால் குறிக்கப்படுவது. உற்பத்தி நிகழ்வின்போது, மதிப்பில் மாற்றம் அடைவது இது. இது, தனது சொந்த மதிப்புக்கு நிகரான மதிப்பை மறுபடைப்புச் செய்வதோடு, ஓர் உபரியையும் – உபரி மதிப்பையும் படைக்கிறது. இந்த உபரி தன்னளவில் வேறுபடும். சூழல்களுக்கேற்ப, அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். இவ்வாறு இருவகை முதல்களையும் மார்க்ஸ் விளக்கினார்.

மார்க்ஸ் இங்கு உழைப்புச் சக்தி என்று குறிப்பிடுவதை நாம் கவனிக்க வேண்டும். 1850-களில் மார்க்ஸ் தனது கோட்பாட்டில் இந்த நுணுக்கத்தைப் புகுத்தினார். காரணம், ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு என்பது அதில் செலுத்தப்பட்டுள்ள உழைப்பின் அளவுக்கு நிகராகுமானால், ஒருநாள் உழைப்பின் பரிவர்த்தனை மதிப்பு என்பது அதன் உற்பத்திக்குச் சமமாக இருக்கும். அதாவது உழைப்பாளிக்கான கூலி அவனது உற்பத்திக்குச் சமமாக இருக்கும்) முதலாளி உழைப்பாளியை அவனது உழைப்புச் சக்தியின் மதிப்பு அவனது உற்பத்திப் பொருளில் செலுத்துவதற்குப் போதிய நேரத்திற்கும்

அதிகமான நேரம் அவனது உழைப்பைப் பெறுகிறான். உதாரணமாக, உழைப்பாளியின் உழைப்புச் சக்தியின் மதிப்பு - அவனையும் அவனது குடும்பத்தையும் உயிரோடு வைப்பதற்கும் உழைக்க வைப்பதற்கும் சுமாராகத் தேவையானது எதுவோ, அது – ஒரு நாளுக்கு ரூ.4 என்றால், நான்கு மணி நேரத்தில் தனது உழைப்பின் உற்பத்தியில் ரூ.4 மதிப்பை அவன் செலுத்த முடியும் என்றால் – அவன் எட்டு மணி நேரம் வேலை செய்கிறான். அந்த நாளின் மறுபாதி, உபரி மதிப்பை இங்கு ரூ.4 ஐ தருகிறது. மேற்குறிப்பிட்ட உபரி மதிப்பில் வேறுபாடு, உபரி மதிப்பு வீதம் (சுரண்டல் வீதம்) என்று அழைக்கப்படுகிறது. இதை மையமாக வைத்தே முதலாளிகளுக்கும் உழைப்பாளி களுக்கும் இடையில் போராட்டம் நடக்கிறது. முதலாளிகள், வேலை நேரத்தை அதிகரிப்பதன் மூலம் அல்லது உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் உபரி மதிப்பு விகிதத்தை அதிகரிக்க இடைவிடாது முயற்சி செய்கிறார்கள். உபரி உற்பத்தி என்பது முதலாளியத்திற்கே உரியது அல்ல. முன்னர் உடைமை வர்க்கம் உபரியைத் தானே அபகரித்துக் கொண்டது. முதலாளியத்தில், முதலாளிக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையில் வெளிப்படையாக நடைபெறும் சுதந்திரச்சந்தை பேதங்களால் – அவர்களுக் கிடையில் சமஅளவு மதிப்பே மாற்றிக் கொள்ளப்படுகிறது என்பது போன்ற தோற்றத்தால் இந்தச் சுரண்டல் மறைக்கப்படுகிறது.

உபரிமதிப்புக் கோட்பாடு முதலாளியத்தின் தொலைதூர எதிர்காலத்தைப் பற்றியும் சில கணிப்புக்களைத் தருகிறது. முதலாளிகளைப் பொறுத்தவரை, அவர்களின் இலாப வீதம் குறையும்: உழைப்பாளிகளைப் பொறுத்தவரை அவர்களின் சார்பு நிலையிலான வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையும். முதலாளியக் கட்டமைப்பு நெருக்கடிகளின் தொடர்ச்சியால் குலுக்கப்பட்டு, இறுதியில் கம்யூனிசம் நோக்கிய மாற்றத்தில் முடிவடையும்.

இலாப விகிதத்தில் வீழ்ச்சிப்போக்கு என்பது—மாறாத முதல் மாறும் முதலோடு கொண்ட விகிதமாகிய முதலின் அங்ககக் கட்டமைப்பில் ஏற்படும் மாறுதலைப் பொறுத்தது என்றார் மார்க்ஸ். முதலாளிகளுக்கிடையில் ஏற்படும் போட்டியும், தொழில் நுணுக்க வளர்ச்சியும், இயந்திரங்களில் ஈடுபடுத்தப்படும் முதலின் அளவை அதிகரிக்கச் செய்யும். இது கூலியாகக் கொடுக்கப்படும் முதலுக்கு எதிரானதாகும். உழைப்புத்தான் உபரியைப் படைக்கிறது என்பதால் – உபரி மதிப்பின் விகிதம் மாறாமல் இருக்கிறது என்று கொண்டால் இலாபங்கள் வீழ்ச்சியடைய வேண்டும். உழைப்பின் உற்பத்தித் திறனை அல்லது செறிவை அதிகரித்தலின் மூலமோ அல்லது காலனிகளை விரிவுபடுத்துவதன் மூலம் மூலப்பொருட்களின் விலையைக் குறைவு படுத்துவதாலோ, உபரிமதிப்பு விகிதத்தை உயர்த்தி இலாப வீழ்ச்சிப் போக்கு தடுக்கப்படும் என்று மார்க்ஸ் அறிந்தார். ஆனால் இவை குறுகிய கால நிவாரணிகள் மட்டுமே. இவை இந்தச் சமூக கட்டமைப்பின் இறுதியழிவைத் தடுக்க முடியாது என்றார் மார்க்ஸ்.

கூலிகள் எண்ணளவில் உயர்ந்த போதிலும், ஒட்டு மொத்தமான தேசிய உற்பத்தியில் உழைக்கும் வர்க்கத்திற்குக் கிட்டும் விகித அளவு குறைந்து செல்வதால், உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு சார்பு நிலை வீழ்ச்சி ஏற்படும் என்று மார்க்ஸ் அறிந்தார். முதலாளிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியைப் போலவே தொழிலாளிகளுக்கிடையிலும் போட்டி நிலவும். வேலையில்லாத தொழிலாளர் திரளால் தொழிலாளர்கள் எப்பொழுதுமே அச்சுறுத்தப்படுகின்றனர். இதனால் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு மேல் உண்மையான ஊதியம் உயர்வதை நீண்ட காலத்துக்கு இது தடுத்து விடுகிறது. தொழிலாளி வர்க்கம் பற்றி மார்க்ஸ் மூலதனத்தில் கீழ்க்கண்ட விவரிப்பைத் தருகிறார்.

"முதலாளியக் கட்டமைப்புகளில், தனி நபர்களான உழைப்பாளிகளைப் பலி கொடுத்தே உழைப்பின் சமூக உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான அனைத்து முறைகளும் செயல்படுகின்றன. உற்பத்தியின் வளர்ச்சிக்கான அனைத்து வழிமுறைகளும், உற்பத்தியாளர் மேல்ஆதிக்கம் செலுத்துவதற்கும் சுரண்டுவதற்குமான வழிமுறைகளாக மாறுகின்றன. அவை, உழைப்பாளியை ஒரு மனிதப் பின்னமாகச் சிதைக்கின்றன. இயந்திரத்தின் ஓர் உறுப்பு என்ற அளவுக்கு அவனைத் தாழ்த்துகின்றன: அவனது வேலையில் மிஞ்சியுள்ள ஒவ்வோர் அழகையும் அழித்து, வேலையை ஒரு வெறுக்கத்தக்க சுமையாக மாற்றி விடுகின்றன. உழைப்பு நிகழ்வில் விஞ்ஞானம் ஒரு சுதந்திரச் சக்தியாகப் புகுத்தப்படும். அதே விகிதத்தில் உழைப்பு நிகழ்வோடு தொடர்புடைய அறிவுத்திறன்களை அவனிடமிருந்து அந்நியமாக்குகின்றன. அவனது வேலை நிலைமைகளைச் சிதைக்கின்றன. உழைப்பு நிகழ்வின்போது மிகக்கேவலமானதொரு கொடுங்கோன்மைக்கு அவனை உட்படுத்துகின்றன. அவனது வாழ்வு நேரத்தை உழைக்கும் நேரமாக மாற்றுகின்றன. அவனது மனைவியையும் குழந்தையையும் மூலதனமாகிய ஜகந்நாதனின் தேர்ச் சக்கரங்களின் அடியில் கிடத்தி இழுத்துச் செல்கின்றன."

மார்க்ஸ் தமது பிற படைப்புக்களில், உழைப்பாளிகளின் மேல் மூலதனம் செய்யும் கொடுமைகள் பற்றி இவ்வளவு கடுமையாகக் குறிப்பிடவில்லை. குறிப்பாக, கிரின்டிரிசேவில், வேலை நாளில் பெரும் குறைப்புக்கான சாத்தியம் பற்றிக் குறிப்பிட்டார். சமுதாயம் முழுவதற்குமான வாழ்க்கைத் தரஉயர்வு, ... மான புரட்சிக்கான நிபந்தனை என்றும் குறிப்...

இலாப விகித வீழ்ச்சிப் போக்கு, ... வர்க்கத்தின் வாழ்க்கைத் தரச் சரிவு ஆகியய... மார்க்சின் கருத்துக்கள், முதலாளியக் கட்ட... முன்னுள்ள தொடர்ந்த நெருக்கடிகளைக் குறிப்பிடு...

இந்த நெருக்கடிகள் பற்றி ஒருங்கிணைந்த கோட்பாடு ஒன்றை மார்க்ஸ் எப்பொழுதும் வகுக்கவில்லை. தமது உழைப்புக்காக அவர்கள் திரும்பப் பெற்றதற்கும் அதிக அளவிலான மதிப்புக்களை அவர்கள் படைத்திருக்கிறார்கள் என்பதை உபரி மதிப்புக் கோட்பாடு உணர்த்துகிறது. உபரி மதிப்புக் கோட்பாடுகளில் மார்க்ஸ் எழுதினார்: "உற்பத்தியாளர்களில் பெரும்பான்மையினர், தம் உற்பத்திக்குச் சமமான மதிப்பை நுகர்வதற்கு, இந்தச் சம மதிப்பை விட அதிகமாக - இது உபரி மதிப்பு அல்லது உபரி உற்பத்தி - உற்பத்தி செய்தாக வேண்டும். அவர்கள் எப்போதும் தம் தேவைகளுக்கு மீறி - அதிகமாக உற்பத்தி செய்தாகவேண்டும். அப்போதுதான் தம் தேவைகளின் எல்லைக்குள் அவர்கள் நுகர்பவர்களாக அல்லது வாங்குபவர்களாக இருக்கமுடியும். இந்த முரண்பாடு, தவிர்க்க இயலாமல் ஒரு பொருளியல் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது. நெருக்கடியின்போது விற்பனைக்கும் வாங்குதலுக்குமான சமநிலை மீண்டும் ஏற்படுகிறது. நெருக்கடிக்கான ஒரு காரணமாகக் குறை நுகர்வை மார்க்ஸ் தமது மூலதனத்தில் குறிப்பிடுகிறார்: "உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதில் முதலாளியப் போக்கு, சமுதாயம் முழுவதும் முழுஅளவில் நுகர்வைப் பெறுவதைத் தன் எல்லையாகக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றுகிறது. இதனோடு ஒப்பிடும் போது மக்கள் திரளின் வறுமையும் கட்டுப்படுத்தப்படும் நுகர்வுமே எல்லா நெருக்கடிகளுக்கும் இறுதியான உண்மைக் காரணமாகிறது."

முதலாளியம் ஒரு நிலையற்ற அமைப்பு. தான் உற்பத்தி செய்த பிரச்னைகளை, தனது எதிர்கால வளர்ச்சிக்கு மேலும் கடுமையான தடைகளைப் படைப்பதன் மூலமே அது தீர்க்கிறது என்பது மார்க்சின் பொதுக்கருத்து. மூலதனம் முதல்நூலின் இறுதியில் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்:

"இந்த மாற்ற நிகழ்வுப்போக்கின் எல்லா நன்மைகளையும் தமக்கே உரிமைப்படுத்திக் கொள்ளவும்

அபகரித்துக் கொள்ளவும் செய்கிற முதலாளியப் பெருமக்களின் தொகை தொடர்ந்து குறைந்து வருவதுடன் சேர்ந்து, வேதனையும் அடக்குமுறையும் அடிமைத்தனமும் கேவலமும் சுரண்டலும் பெருகி வருகின்றன. ஆனால், இத்துடன் சேர்ந்தே, எண்ணிக்கையில் தொடர்ந்து பெருகுவதும் முதலாளிய உற்பத்தி முறையின் செயல் முறையினாலேயே தமக்குள் கட்டுப்பாடும் ஐக்கியமும் கொண்டதுமான உழைக்கும் வர்க்கத்தின் கிளர்ச்சிகளும் வளர்கின்றன. மூலதனத்தின் ஏகபோகம், இந்நாள்வரை தன்னுடன் தனக்குக் கீழ் தோன்றிச் செழித்து வளர்ந்த தனது உற்பத்தி முறைக்கே தளையாகிறது. உற்பத்திக் கருவிகளின் மையக் குவிப்பும் உழைப்பின் சமுதாயமயமாக்கலும் இறுதியாக ஒரு கட்டத்தை அடைகின்றன. அந்நிலையில் முதலாளியக் கட்டமைப்புடன் பொருந்தா நிலை ஏற்படுகிறது. கட்டமைப்பு தகர்கிறது. முதலாளியத் தனி உடைமைக்குச் சாவு மணி ஒலிக்கிறது. இதுவரை அபகரித்தவர்கள் இப்பொழுது அபகரிக்கப்படுகிறார்கள்."

எப்பொழுது இந்தக் கட்டமைப்பு தகரும் என்பதை மார்க்ஸ் துல்லியமாகக் கூறவில்லை. கிரன்ட்ரிசே முதலிய படைப்புக்களில், மூலதனம் உபரி மதிப்பைப் பறித்தெடுப்பதற்கான எல்லாச் சாத்தியப்பாடுகளையும் செய்து முடிப்பதற்கு மிக நீண்டகாலம் ஆகும் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தினார். தானியங்கி எந்திரங்களின் ஒரு கால கட்டத்தை – எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் உடலுழைப்புக்குப் பதிலாக இயந்திரம் இடம்பெறும் முதலாளியக் கட்டத்தை மார்க்ஸ் எதிர்பார்த்தார்.

முதலாளிய அமைப்பு தவிர்க்க முடியாமல் அழிவதை மார்க்ஸ் எதிர்பார்த்தாலும், அதைப் பற்றி முற்றிலும் எதிர்மறையான கண்ணோட்டத்தை அவர் கொள்ளவில்லை. வரலாறு பற்றிய தனது பொருள் முதலியல் கருத்தாக்க வரையறையில் எழுதினார்: "உற்பத்தியில் உயர்வகை உறவுகள், அவற்றின் இருப்புக்கான பொருளியல்

நிபந்தனைகள் முன்னைய சமுதாயத்தின் கருப்பையில் முதிராத வரையில், தோன்றுவதில்லை" இம்முறையில் முதலாளியத்தில் கம்யூனிசம் உள்ளடங்கியிருக்கிறது. சமூகச் செல்வத்தில் பெருக்கமும், ஒரு பொருளியல் அமைப்பின் கீழ் உலகைப் படிப்படியாக ஒன்றிணைத்தலும், ஒரு மனிதனை – அவனது உறவுகளும் திறன்களும் பொதுவானதாகவும் உலகளாவியதாகவும் இருக்கும் முறையில் – படைப்பதற்கான சாத்தியமும், முதலாளியத்தின் சாதனைகளுள் அடங்குகின்றன. முதலாளியம், வேலைப் பிரிவினை என்னும் கடுமையான பிரச்சனையை வெற்றிக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுவதையும் மார்க்ஸ் கண்டார்.

"நவீன காலத் தொழில்துறை, தனது நாசங்களின் வழியாக, உற்பத்தியின் ஓர் அடிப்படை விதியாக வேலையில் பல வேறுபாடுகளையும் – அதன் விளைவாக பல வகை வேலைகளுக்குமான தகுதியை உழைப்பாளி பெறுவதையும் – அதன் விளைவாக, அவனது பல்வகைத் தகுதிகளைப் பெருமளவில் வளர்ப்பதற்கான சாத்தியப்பாட்டையும் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டி வருகிறது. இந்த விதியின் இயல்பான செயல்முறைக்கேற்ப உற்பத்தி முறையைக் கடைப்பிடிப்பதில்தான், சமூகத்தின் வாழ்வா சாவா என்ற பிரச்சனை அடங்கியுள்ளது. வாழ்நாள் முழுவதும் அற்பமான ஒரே செயலை திரும்பத் திரும்பச் செய்வதனால் முடமாகி அதனால் ஒரு மனிதப் பின்னமாகக் குறைக்கப்பட்ட உழைப்பாளிக்குப் பதிலாக, பல்வேறு வேலைகளுக்கான தகுதியும் உற்பத்தியில் எத்தகைய மாறுதலையும் ஏற்பதற்கான மனநிலையும் தான் மேற்கொள்ளும் பல்வேறு வகைச் சமூகச் செயல்களையும், தனது சொந்த இயல்பான – தன்னிடம் வளர்த்துக் கொண்ட ஆற்றல்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் கொள்ளக்கூடிய முழு வளர்ச்சி பெற்ற தனிமனிதனைப் படைக்க வேண்டிய கட்டாயம் நவீன

தொழில் துறைக்கு ஏற்பட்டுள்ளது. இதைச் செய்யா விட்டால், இதற்கு விதிக்கப்படுவது மரண தண்டனை.”

முதலாளியத்தின் பொருளாதார வடிவங்கள் சில, கம்யூனிசத்திற்கான பாதையை சமைக்கிறது என்று மார்க்ஸ் கருதினார். பங்கு மூலதனம், கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் மூலதனத்தின் மிகச் சிறந்த வடிவம் என்று கூறினார். கூட்டு மூலதன நிறுவனத்தை, உற்பத்தியின் முதலாளிய முறை என்ற எல்லைக்குள் உற்பத்தியின் முதலாளிய முறையைக் கடந்து செல்லும் வடிவம் என்று குறிப்பிட்டார். இம்முறையில் முதலாளிய உற்பத்தி முறையின் சமூகத் தன்மைக்கும் முதலாளியத் தனி உடைமையின் சமூக எதிர்ப்புத் தன்மைக்கும் இடையில் தொடர்ந்து பெருகும் வேறுபாடு, முதலாளியம் பற்றிய மார்க்சின் அடிப்படைத் திறனாய்வாகிறது.

மார்க்சின் பொருளியல், ஓர் ஒன்றிணைந்த கட்டமைப்பு அல்ல. 1850-களில் மார்க்ஸ் தனது கருத்துக்களில் பலவற்றை மாற்றிக் கொண்டார். குறிப்பாக உழைப்பு என்பதற்குப் பதிலாக உழைப்புச் சக்தி என்று மாற்றினார். உபரி மதிப்பு பற்றிய அவர் கருத்து அவரது பார்வையைப் பெரும்பகுதி மாற்றியது. இம்முறையில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் முதலாளியச் சிதைவு பற்றிய அவரது எளிமையான கருத்துக்களுக்கும் கிரன்ட்ரிசேவில் அவர் வெளியிட்ட கருத்துகளுக்குமிடையில் பெரும் வேறுபாடு இருந்தது. கிரன்ட்ரிசேவில், உயிர் வாழ்வுக்கான தேவை பற்றிய கருத்து, ஒரு வரலாற்றியல் தன்மையை உள்ளடக்கியது என்றும், உழைக்கும் வர்க்கத்தின் சில பகுதிகள் தம் வாழ்நிலையில் மேம்பட்டுள்ளன என்றும், உற்பத்தி உழைப்பின் உபரியைச் சார்ந்து வாழும் சமூகக் குழுக்களில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். இத்துடன் மார்க்சின் பணி முற்றுப் பெறவில்லை என்பதும் ஓர் உண்மை. தன் கடிதங்களில் புதிய விவரங்கள் பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறார். அவற்றை

விஞ்ஞான முறையில் தொகுத்து விளக்குவதற்கு முன் அவற்றைச் செரித்துக் கொள்வதன் தேவை பற்றியும் குறிப்பிடுகிறார். தனது அடிப்படைகளோடு தொடர்புடைய கோட்பாட்டு வகையிலான சிரமங்களால் அவர் தளர்ந்தாரா என்பது ஒரு பிரச்னை.

தான் ஒரு பொருளியல் விஞ்ஞானத்தைத் தோற்றுவித்ததாக மார்க்ஸ் பாராட்டும் உரிமை பற்றி நாம் செய்வது என்ன? மார்க்சைப் பொறுத்தவரை விஞ்ஞானம் என்பது இயற்கை விஞ்ஞானம் என்று சமப்படுத்த முடியாது. (ஆங்கிலச் சொல்லாகிய சைன்ஸ் என்பதைக் காட்டிலும் ஜெர்மன் சொல்லாகிய **விசன்ஸ் சாஃப்ட்** என்பது மிக விரிந்த பொருளுடையது). மார்க்ஸ் தன் வாழ்நாள் முழுவதும் இயற்கை விஞ்ஞானம், மனிதனைப் பற்றியும் சமூகம் பற்றியும் ஒரு முழுமையான விளக்கத்திற்குள் இணைக்கப்படுவதற்காக, தனது ஒரு சார்பான பொருளியல் குணத்தை இழந்து விட வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தார். குறிப்பாகத் தன் இறுதிக்காலப் படைப்புக்களில் பொருள்களில் காணப்படும் மேற்போக்கான இயக்கத்தை ஊடுருவி அதற்குள் இயங்கும் உண்மையான காரணங்களை விஞ்ஞானம் கண்டறியவேண்டும் என்பதை மிக வற்புறுத்தினார். தோற்றம் சாரம் ஆகியவற்றுக்கிடையிலான இந்த வேறுபடுத்தல் ஹெகலிலிருந்து ஸ்பினாசோ வழியாக அரிஸ்டாட்டில் வரை செல்லுகிறது. பொருளியலை, சமூகம் பற்றிய விஞ்ஞானக் கண்ணோட்டத்தின் மையம் என்று கருதியதிலும், சமூக அடித்தளமாகிய சாரத்தைப் பற்றி ஆராயாமல் சந்தை முறை என்னும் தோற்றத்தைப் பற்றியே ஆராயும் அவர் காலப் பொருளியல் கருத்தோட்டத் திறனாய்வு செய்ததிலும் மார்க்சின் தனித்தன்மை வெளிப்படுகிறது. புலப்பார்வையின் மூலமே உண்மை அல்லது பொய்யைத் தீர்மானிக்க முடியும் என்ற கொச்சைத்தனமான விஞ்ஞான முறைக்கு எதிரானது

மார்க்சின் கருத்துக்கள். இப்படிச் சொல்வதற்கு இரு காரணிகள் உள்ளன. ஒன்று, மார்க்சின் தொடக்க காலப் படைப்புக்கும், பிற்காலப் படைப்பிற்கும் இடையில் ஒரு தொடர்ச்சி வெளிப்படையாகத் தெரிகிறது. அந்நியமாதல் பற்றிய கருத்துக்கள், தன்னைத் தானே படைத்துக் கொள்பவன் மனிதன், அந்நியமாதல் அற்ற ஒரு சமூக அமைப்பு நோக்கி வரலாறு முன்னேறுகிறது ஆகிய கருத்துக்கள், மார்க்சின் எல்லாப் படைப்பிற்கும் மையமானவை. சில விவரங்களைப் பற்றிக் குறிப்பிடுவதனாலேயே மார்க்சின் கருத்துக்கள் மறுத்தலுக்கு உட்படுபவை ஆகா. இம்முறையில் அவரது படைப்புகளுக்குள் ஒரு அறவிதிப்புப் பண்பு அடங்கியுள்ளது. இரண்டாவது, மார்க்சின் பொருளியல் கோட்பாடுகள் என்பவை மாதிரிகள். அவை சில போக்குகளை விவரிக்கின்றன: அவை அனுபவவியல் எதார்த்தத்திலிருந்து ஏறத்தாழ விலகியவை. இம்முறையில் மதிப்புப் பற்றிய உழைப்புக் கோட்பாடு, சரியானதென்றோ, தவறானதென்றோ கூறி விட முடியாதது. மார்க்சைப் பொறுத்தவரை, வரையறுப்பில் இது உண்மை. உண்மையான பிரச்னை என்னவென்றால், விலைகள், இலாபம் ஆகியவற்றின் இயக்கத்தை இது விளக்குகிறதா இல்லையா என்பதுதான். இது ஒரு மிகச் சிக்கலான பிரச்னை. பொதுவாகப் பண்டங்கள், தமக்குள் அடங்கியுள்ள மதிப்பிற்கான விகிதத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் போக்கு உடையவை தற்காலிகமாக சில மாறுதல்கள் இருந்தபோதிலும் என்பது மார்க்சின் கருத்து. மூலதனத்தின் மூன்றாவது நூலில் பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதைத் தீர்மானிப்பது என்றால், பெரும்பகுதி அவற்றின் உற்பத்திச் செலவே என்று கூறினார். விலைகளுக்கும் மதிப்புகளுக்கும் இடையில் சரியான உறவைத் தீர்மானிப்பது என்ற பிரச்னை, விவாதத்திற்கு உரிய கடுமையான பிரச்னை ஆகியிருக்கிறது. தவிர, முதலாளியத்தின் எதிர்காலம் பற்றிய

மார்க்சின் கருத்திற்கு மையமாக இருப்பது இலாப வீழ்ச்சி விகிதம் பற்றிய கோட்பாடே. இந்தக் கோட்பாட்டின் தகுதியைத் தீர்மானிப்பது மிகச் சிக்கலான பிரச்னை. உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில், மாறாத மூலதனம் உழைப்பாளிகளின் தொகையை விட மிக வேகமாக, கடந்த ஒரு நூற்றாண்டிற்குள் வளர்ந்துள்ளது. ஆனாலும் இலாபங்கள் வீழ்ச்சியடையவில்லை. உழைப்பாளியின் உற்பத்தித் திறன் பெருமளவுக்கு வளர்ந்துள்ளது உண்மை. ஆகவே இலாபம் வீழ்ச்சியடைய வேண்டும் என்பதற்குக் காரணமில்லை. அதிக அளவில் நாம் சொல்லக் கூடியது, மாறும் பல அம்சங்களோடு தொடர்புடைய கோட்பாடுகளின் தகுதியைத் தீர்மானிப்பது மிகக் கடுமையானது என்பதுதான்.

பொருளியலின் நெருந்தொலைவுப் பாதிப்பிற்கு அவர் தந்த முக்கியத்துவம் என்னவாக இருந்தபோதிலும் அதன் தற்கால எதிர்காலப் போக்கைப் பகுத்தாய்வதில் அவர் எவ்வளவு நேரம் செலவிட்ட போதிலும், மார்க்சை ஒரு பொருளியலாளர் மட்டுமே என்று கூறுவது போதாது. தனது இயங்கியலின் 'புறநிலை' என்று கொண்ட அவரது பொருளியல் ஆய்வுகளை - இயங்கியலின் 'அகநிலை'யுடன் இணைப்பதில் எப்பொழுதும் அவர் கவனம் கொண்டிருந்தார். வர்க்கம், கட்சி, புரட்சி ஆகியவை பற்றிய கருத்தாக்கங்கள், இவற்றின் மூலம் முதலாளியப் பொருளியல் உள்ள இறுக்கங்களைப் பற்றிய அரசியல் உணர்வை மனிதன் பெறுதல், கம்யூனிசத்தின் பிரசவ வேதனைகளைக் குறைத்தல் ஆகியவற்றோடு தொடர்புடையது இந்த 'அகநிலை.'

அரசியல்

முதலாளிய சமுதாயத்தின் மைய நிறுவனமாகவும் மார்க்ஸ் அரசியலின் முக்கிய இலக்காகவும் இருந்தது அரசாகும். மார்க்ஸ் தமது தொடக்க காலப் படைப்புகளில், சட்டச் சமுதாயத்திற்கும் மனிதனுடைய அந்நியமாக்கப்பட்ட

சாரத்தின் நீட்சி எனக் கருதிய அரசுக்கும் இடையிலான இடைவெளிக்கே அழுத்தம் கொடுத்தார். பின்னர் வர்க்க ஆதிக்கத்தின் ஒரு கருவி அரசு என்ற கருத்தை உருவாக்கினார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் இக்கருத்தை வெளிப்படுத்தினார். "அரசு அதிகாரம் என்பது ஒரு வர்க்கம், இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட அதிகாரம் மட்டுமே. நவீன கால அரசின் நிர்வாகமென்பது, உடமை வர்க்கம் முழுவதன் செயல்களை நிர்வாகம் செய்வதற்கான ஒரு குழு மட்டுமே." மார்க்ஸ், அரசின் தோற்றம் பிற சமூக நிறுவனங்கள் வர்க்கங்கள் ஆகியவற்றின் தோற்றத்தை வர்க்க வேறுபாட்டில் கண்டார். சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் உண்மை நலன்களுக்கு எதிரானது அரசு. காரணம், வர்க்கங்கள் ஒன்றுக்கெதிராக மற்றது நடத்தும் உண்மையான போராட்டங்களை மறைக்கும் ஒரு திரை என்ற முறையில் ஒரு கற்பிதமான சமூக உறவை அது கொண்டுள்ளது. வரலாற்றுப் போக்கில் ஒவ்வொரு உற்பத்தி முறையும், ஆதிக்கத்தில் உள்ள வர்க்கத்தின் நலன்களை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட அரசியல் நிறுவனத்தைத் தோற்றுவிக்கிறது. பெருந்தொழிலும் உலகு தழுவிய போட்டியும் கொண்ட நவீன முதலாளியம், தற்கால, நவீன, தாராளவாத, ஜனநாயக அரசைத் தோற்றுவித்துள்ளது. இதன்கீழ் தங்கள் வர்க்க நலன்களை முதலாளி வர்க்கம் மிகச் சிறப்பாக வளர்த்துக் கொள்ள முடியும்.

முன்பே கூறியபடி மார்க்சின் வரலாற்றுப் பொருள்முதல் கருத்தாக்கம், பகுப்பாய்வுக்குரிய மிகவும் நெகிழ்வான கருவி. அவரது அரசு பற்றிய கருத்தாக்கமும் இதற்கு விலக்கல்ல. வர்க்க ஆதிக்கத்திற்கான கருவி அரசு என்பதற்கான முழுமையான ஒரே எடுத்துக்காட்டு வட அமெரிக்காதான் என்று மார்க்ஸ் ஒருமுறை கூறினார். காரணம், அரசியல் களம் என்பது பொருளாதாரச் சக்திகளின் கருவி மட்டும் அல்ல. மார்க்ஸ் கூறியபடி, சில

சமயங்களில் ஒரே வகையான பொருளாதாரக் கட்டுக்கோப்பு, பல்வேறு அரசியல் அமைப்புகளைத் தோற்றுவிக்கிறது. சில குறிப்பிட்ட சூழல்களில் அரசியல், பொருளாதாரத்தின் மேல் ஆதிக்கம் செலுத்துகிறது. உதாரணமாக பிரிட்டிஷ் முதலாளியத்துக்கான நிலைமைகளை டியூடர் அரசாங்கங்கள் உருவாக்கின. இங்கிலாந்து பிரான்சைக் காட்டிலும் பொருளாதார வகையில் மிக மேம்பட்டிருந்த போதிலும் பிரெஞ்சு மக்களின் அரசியல் உணர்வு ஆங்கிலேயரின் அரசியல் உணர்வுக்கு மேம்பட்டே இருந்தது என்பதை மார்க்ஸ் எப்போதும் ஏற்றிருந்தார்.

வர்க்கஆதிக்கத்தின் கருவி அரசு என்ற தனது வரையறைக்கு இரு விதிவிலக்குகளை மார்க்ஸ் ஒப்புக்கொண்டார். முதல் வகைச் சிக்கலை மார்க்ஸ் விரிவாக ஆராயவில்லை. இந்தியா, சீனா போன்ற ஆசிய சமுதாயங்களில் – ஒரளவு ரஷ்யாவில், இருந்த சர்வாதிகாரம் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலன்களுக்குச் சேவை செய்யவில்லை. அந்தச் சர்வாதிகாரம் நிலத்தில் தனி உடைமை இல்லாமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இரண்டாவது விதிவிலக்கு, மிக முக்கியமானது, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஒன்றோடொன்று போராடும் வர்க்கங்கள் ஏறத்தாழ சமபல நிலையிலிருந்தால் அரசு மிகப்பெரிய அளவில் சுதந்திரம் பெறுகிறது. அந்நிலையில் சமுதாயம் முழுவதன் மேலும் அது ஒரு ஒட்டுண்ணியாக அமர்ந்திருக்கிறது என்று மார்க்ஸ் நம்பினார். நிலஉடைமை வீழ்ச்சியைத் தொடர்ந்த முழு மன்னராட்சிக் காலத்திற்கு இது பொருந்தும் என்றார். லூயி போனாபார்ட்டின் இரண்டாவது பிரெஞ்சு அரசை அவர் ஒரு சிறந்த சான்றாகக் கருதினார்.

எவ்வகை அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அரசு என்பது, மார்க்சின் கருத்தில், முதலாளியச் சமுதாயத்தின் அந்நியமாக்கப்பட்ட கட்டமைப்பின் மையம்.

அதன் பரந்துபட்ட செல்வாக்கை ஒரு புரட்சி மட்டுமே அகற்ற முடியும். வர்க்கங்களின் இருப்போடு அரசின் இருப்பு முழுமையாக இணைந்திருப்பதால் அரசைத் துண்டு துண்டாக அழிக்க முடியாது. முன்னர் நிகழ்ந்த புரட்சிகள் யாவும் உற்பத்தி முறையில் நேர்ந்த மாறுதல்களுக்கு மிகப் பொருத்தமான இன்னொரு அரசை உருவாக்கின. முதலாளியத்தோடு தோன்றிய அரசு முறையும் இதற்கு விலக்கல்ல. இதன் தாராளவாத ஜனநாயகம், ஒவ்வொருவரும் ஒரு உடைமையாளன் ஆவதன் மூலம் தன்னைத் தான் விடுவித்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகக் கூறிக் கொண்ட போதிலும், அப்படி நடைபெறுவதில்லை. சமூகத்திலுள்ள ஒரு குழு இன்னொரு குழுவைச் சுரண்டுவதுதான் அதன் தவிர்க்க முடியாத விளைவு. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிக முக்கியமான குணம் அது வெறும் அரசியல் புரட்சி மட்டுமல்ல, அது சமூகப் புரட்சியும் ஆகும். ஒரு சிலர் மட்டுமே அனுபவிக்கும் உரிமைகளை அது வெளிப்படுத்தவில்லை. மனிதனின் சமூக, பொருளாதார வாழ்க்கைக்குள் ஊடுருவிச் செல்லும் ஒரு பொது விடுதலையை அது சாதிக்கிறது.

மார்க்ஸ் ஒரு தீர்க்கதரிசி அல்ல. எதிர்காலப் புரட்சி பற்றி அவர் மிக விரிவான தீர்க்கதரிசனங்களைத் தரவில்லை. ஆனால் ஒரு புரட்சி நடைபெறும் என்பதையும், அது எங்கே வெடிக்கும், அது வன்முறையில் நடைபெறுமா, இல்லையா, அதைச் செயல்படுத்துபவர் யார் என்பது பற்றிச் சில கருத்துக்களை மார்க்ஸ் கொண்டிருந்தார்.

சமூக, பொருளாதார நிலைகள் எத்தகையதாக இருந்தபோதிலும் ஒரு கலகத்தைக் கிளப்ப முயற்சி செய்த 'புரட்சி - ரசவாதிகளை' மார்க்ஸ் கடுமையாகக் குறை கூறினார். ஆனால், தான் அரசியலில் மிக முனைப்புடன் ஈடுபட்டிருந்த இரண்டு கால கட்டங்களில் (1848 இன் போதும் முதல் அகிலத்திலும்) புரட்சியின் உடனடி வருகை பற்றி அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில், ஜெர்மனியில் பூர்சுவா வர்க்கப் புரட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான ஒரு உடனடி முன்னோடியாக இருக்கும் என்றார். புரட்சிகர இயக்கம் தோற்ற பிறகும் இக்கருத்தை அவர் கொண்டிருந்தார். 1850ல் லண்டனில் தனது பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டபோது, ஒரு புதிய நெருக்கடியின் விளைவாகவே ஒரு புதிய புரட்சி சாத்தியம் என்பதை அறிந்தார். "சூழல்களை மாற்றவும், அதிகாரத்திற்கு உங்களைத் தகுதி உடையோராக்கிக் கொள்ளவும் 15, 20, 50 ஆண்டுகள்நடைபெறும் ஒரு உள்நாட்டுப் போரில், நீங்கள் ஈடுபட்டாக வேண்டும்" என்று தொழிலாளிகளுக்கு அவர் கூறினார். பாரிஸ் கம்யூனின் போதும் அதை அடுத்தும் மார்க்சிடம் புரட்சிகர நம்பிக்கை தோன்றியது. உழவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியம் பற்றி அவர் நம்பிக்கை கொண்டார். ஆனால் தனது முக்கியமான பொருளாதாரப் படைப்புகளில் புரட்சிக்கான வரலாற்றுக் காரணங்கள் பற்றி ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தையே கொண்டார். 'கிரன்ட்ரிசே'வில் இயந்திரங்களால் தோற்றுவிக்கப்பட்ட பிரமாண்டமான சாத்தியப் பாடுகளைச் செய்து முடிக்கும் காலம் வரை முதலாளியம் வாழும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் அவர் கொண்டிருந்த வர்க்க துருவாக்கம் – தொழிலாளர்களின் தொடர்ந்த வறுமை பற்றிய எளிய கருத்து – ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி தொழில்துறை ஆக்கத்தின் விளைவாகவே ஏற்படும் என்ற கருத்துக்கள் அடங்கி இருந்தன. ஆனால் நாற்பத்தெட்டுக்கும், முதல் அகிலத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் கருத்தில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டது. முதலாளிய அரசின் வரையறைக்குள் தொழிலாளர்கள் மிகுந்த நன்மை பெற முடியும் என்று நம்பினார். அதனால் பத்து மணி நேரச் சட்டத்திற்கு அவர்

முக்கியம் தந்தார். தவிர, உழைப்பாளர்களுக்கிடையில் ஒரு மேல்தட்டு உருவாவதைத் தொடர்ந்து தொழில்துறைப் பாட்டாளிகளுக்கிடையில் மிகுந்த வேறுபாடுகள் தோன்றுவதைக் கண்டார். உலகின் பொது நிலையைச் சார்ந்தே ஐரோப்பியப் புரட்சிகள் உருவாகும் என்று கண்டார். கலிபோர்னியா, ஆஸ்திரேலியா தூர கிழக்கு நாடுகள் ஆகியவை முதலாளியத்தின் ஆதிக்கத்திற்குள் வந்ததை அவர் கண்டார். மார்க்ஸ் குறிப்பிட்டார்: "ஐரோப்பாவில் புரட்சியின் வருகை நெருங்கிவிட்டது. அது ஒரு சோசலிச குணத்தை உடனடியாகப் பெறவும் முடியும். உலகின் பெரும் பகுதிகளில் பூர்சுவா சமூகம் உயராக்கம் பெறும்நிலையில், இந்தச்சிறிய மூலையில் அந்தப்புரட்சி நசுக்கப்படுவதை அது தடுக்க முடியாதா?

பிறிதொரு சமயம் ரஷ்யா புரட்சியின் தொடக்கமாக அமையும் என்று மார்க்ஸ் கருதினார். இதுவரை எதிர்ப்புரட்சியின் தகர்க்க முடியாத அரணாக இருந்த கிழக்கு நாட்டில் இம்முறை புரட்சி தொடங்குகிறது என்றார். இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்பு அவர் குறிப்பிட்டார்: 'மேற்கு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ரஷ்யப் புரட்சி ஒரு முன்அறிவிப்பாக இருக்குமானால், இம்முறையில் ஒன்றையொன்று நிறைவாக்குமானால், தற்போது உள்ள நிலத்தில் சமூக உடைமை கொண்ட ரஷ்ய முறை ஒரு கம்யூனிச வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமையும்." ரஷ்யாவைப் பற்றி நம்பிக்கை வளரும்போதே பிரிட்டனைப் பற்றிய நம்பிக்கை அவருக்குக் குறைந்தது. ஆங்கிலேயர்களுக்குப் பொதுவயப்படுத்தும் உணர்வும், புரட்சிகர ஆவேசமும் பொதுவாகவே இல்லை என்று கருதினார். மார்க்ஸ் ஒரு வன்முறைப் புரட்சியின் தவிர்க்க இயலாமையை நம்பவில்லை. மிக வளர்ச்சி பெற்ற சில நாடுகளில் அமைதி முறையில் புரட்சி நடைபெறும் என்று கருதினார். 1872ல் பிரிட்டன், அமெரிக்க லக்கிய நாடுகள், ஹாலந்து ஆகிய நாடுகளைக் குறிப்பிட்டார்: ஆனால்

மார்க்ஸ் தமது முதிர்ந்த வயதில் ஒரு சாதுவான பார்லிமெண்டரி ஜனநாயகவாதி ஆகிவிடவில்லை. ஒரு நெருக்கடியான நிலைமையில் சட்ட நுணுக்கங்களைக் கடைப்பிடித்த கம்யூனை அவர் கடுமையாகக் குறை கூறினார். ஒரு உள்நாட்டுப் போரை தொடங்கி வைக்காததற்காகவும் குறை கூறினார். 1871-ல் அகிலத்தின் மாநாடு ஒன்றில் அவர் அறிவித்தார்: "அரசாங்கங்களுக்கு நாம் இதைத் தெளிவாக அறிவித்துவிட வேண்டும். பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகச் செலுத்தப்படும் ஆயுத சக்தி நீங்கள். எங்கு அமைதியாக முடியுமோ அங்கு அமைதியான முறையிலும், எங்கு ஆயுதங்கள் தேவையோ அங்கு ஆயுதங்களுடனும் உங்களுக்கு எதிராக நாங்கள் முன்னேறுவோம்."

சில சமயங்களில் புரட்சியின் செவிலியாக வன்முறை அமையும் என்று மார்க்ஸ் கருதியபோதிலும், புரட்சிகர பயங்கரத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பிரெஞ்சுப் புரட்சியில் ஜாக்கோபர் பயன்படுத்திய கொடுமையை அவர் கண்டித்தார். புரட்சியின் முதிராமைக்கும் பலவீனத்திற்கும் அது ஓர் அறிகுறி என்றார். சமுதாயத்தில் எது அரும்பவில்லையோ அதை வன்முறையால் திணிப்பதை அவர் கண்டித்தார். சமூக, பொருளாதாரச் சூழல்கள் பொருத்தமாக அமையாதபோது எந்தப் புரட்சியும் தவிர்க்க முடியாமல் ஒரு பயங்கர ஆட்சிக்கு வழி வகுக்கும். அப்போது மேலிருந்து சமூகத்தை ஒழுங்கமைக்கப் புரட்சி சக்திகள் முயலும். இறுதியாக, ஒரு வெற்றிகரமான புரட்சி குறைந்த அளவு அதன் தொலைநோக்கில் - ஒரு நாட்டிற்குள்ளே அடங்கியிருப்பது சாத்தியமில்லை.

ஒரு வெற்றிகரமான புரட்சியை நிறைவேற்றுவதற்கு ஒரு அரசியல் கட்சி தேவை என்று மார்க்ஸ் நம்பினாலும் அவர் ஒரு கட்சியைத் தோற்றுவிக்கவில்லை. ஏற்கெனவே இருந்த உழைக்கும் வர்க்க நிறுவனங்களைச் சார்ந்தே அவரது அரசியல் நடவடிக்கைகள் அமைந்தன. உண்மையில்,

தற்காலப் பொருளில், ஒரு அரசியல் கட்சி என்ற கருத்தாக்கம் மக்கள் திரள் ஜனநாயகம் என்பதன் விளைவே. இக்கருத்தும் மார்க்சின் காலத்தில் படிப்படியாகவே வளர்ந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்று குணங்களைக் குறிப்பிட்டார். ஆனால் மார்க்ஸ் முனைப்புடன் செயல்பட்ட கம்யூனிஸ்டு லீக் கூட, இப்பொருளில் ஒரு அரசியல் கட்சியாக இருந்ததில்லை. முன்னூறு உறுப்பினர்களுடன் இது அரைகுறை இரகசிய முறையிலேயே செயல்பட்டது. அதை 1848-ல் மார்க்ஸ் தற்காலிகமாகக் கலைத்தார். புரட்சியின் இறுதி மாதங்களில்தான் உழைப்பாளிகளின் கட்சி ஒன்றைத் தனியாக உருவாக்குவதன் தேவையை உணர்ந்தார். முதல் அகிலம் ஒரு கட்சியாக இருக்கவில்லை. மார்க்சைச் சேர்ந்தவர்களும் அதற்குள் ஒரு தனிக் குழுவாக இருக்கவில்லை. பொதுவாகப் பார்த்தால் மார்க்ஸ் வெளிப்படையான ஒரு ஜனநாயக நிறுவனத்தையே விரும்பினார். தேசிய மாநாடுகளில் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளையே அவர் விரும்பினார். வேறுபாட்டுப் பகுதிகளை விட உடன்பாட்டுப் பகுதிகளுக்கே அவர் முதன்மை தந்தார். இம்முறையில் மார்க்சின் கட்சி பற்றிய கருத்தாக்கம், ஒரு இலட்சியவாத நிறுவனம் அல்ல. ஏற்கெனவே உள்ள உணர்வு, நிறுவனம் ஆகியவற்றின் தர அடிப்படையில் அமைந்தது. ஆயினும் இந்தக் கட்சி ஒரு முழுமையான ஜனநாயக உள்ளமைப்பைக் கொண்டதாக இருக்கவேண்டும். பாட்டாளிகளின் சுதந்திரமான படைப்பாகவே அது இருக்கவேண்டும். பாட்டாளி வர்க்க நோக்கங்களைப் பற்றிக் கோட்பாடு ரீதியிலான புரிதலைக் கொண்டிருக்கவேண்டும். இந்நிறுவனம் ஒரு அரசியல் கட்சியின் பகுதியாகவோ, அதனைச் சார்ந்தோ இருக்கக்கூடாது என்பதை வற்புறுத்தினார்.

ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி தோற்றுவிக்கும் ஒரு சமூகவகை பற்றியும் அது பற்றிய மார்க்சின் குறிப்புக்களில் தெளிவின்மை பற்றியும் விவாதம் நடைபெறுகிறது. ஆனால் மார்க்சே கருதியபடி முன்கூட்டியே ஒரு விரிவான வர்ணனை தருவது ஆதாரமற்றதாகி விடும். காரணம், சிந்தனைகள் அனைத்தும் குறிப்பிட்ட கால சமூக பொருளாதார மண்ணிலேயே வேரூன்றியுள்ளன. எதிர்காலம் பற்றிய வர்ணனை இம்முறையில் எதார்த்தத்தின் அடிப்படை அற்ற சிந்தனைகள் ஆகிவிடும். ஹெகலின் கருத்தோடு மார்க்ஸ் முற்றிலுமாக உடன்படுவார். "எந்த ஒரு தனிமனிதனும் தன் காலத்திற்கு வெளியே குதிக்கமுடியாது என்பதுபோல எந்த ஒரு தத்துவமும் தனது சமகால உலகத்தைக் கடந்துசெல்லும் என்று கருதுவது அறிவீனமாகும்." இருந்த போதிலும் மார்க்சைப் பொறுத்தவரை, ஒரு பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அடிப்படையான சாதனை, மனிதனுக்கும் இயற்கைக்கும், மனிதனுக்கும் சக மனிதருக்கும் இடையிலான மாறிய உறவுகள் – இதன் விளைவாக அரசின் உருவிலமைந்த அரசியல் ஆதிக்கத்தின் மறைவு ஆகும். வரலாறு பற்றிய பொருளியல் கருத்தாக்கத்தின்படி, மனிதனின் உற்பத்தி சக்திகளை ஒழுங்கமைப்பது அடிப்படை யானதாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சி, உற்பத்தியில், பகையற்ற முறையை ஏற்படுத்தும் முதல் புரட்சியாகும். உற்பத்திக் கருவிகள் உழைப்பாளிகளின் கைகளில் இருப்பதால் சிறுபான்மை, பெரும்பான்மையைச் சுரண்டுவதற்கான வாய்ப்பு இனி இராது. சமுதாயத்தின் சொத்து முழுவதும் சமுதாயத்தின் நன்மைக்காகவே இனிப் பயன்படுத்தப்படும். குறிப்பாக உழைப்புப் பிரிவினை ஒழிக்கப்படும். ஜெர்மன் சிந்தாந்தத்தில் மார்க்ஸ் குறிப்பிட்டார். "கம்யூனிச சமுதாயத்தில் ஒருவருக்கும் அவருக்கென ஒதுக்கப்பட்ட ஒரு செயல்துறை இல்லை. ஒவ்வொருவரும் தான் விரும்பும் எந்தத் துறையிலும் தேர்ச்சி பெறலாம். சமுதாயம் பொது உற்பத்தியை ஒழுங்கமைக்கிறது.

இதனால் இன்று ஒரு வேலையையும், நாளை இன்னொரு வேலையையும் – காலையில் வேட்டையாடுதல், பிற்பகலில் மீன்பிடித்தல், மாலையில் கால்நடைகளை வளர்த்தல், இரவு உணவுக்குப் பிறகு விமர்சனம் செய்தல் – இதே சமயம் ஒரு வேடனாக, மீன் பிடிப்பவனாக, ஆயனாக, விமர்சகனாக மாறி விடாத ஒரு மனத்தைக் கொண்டிருத்தல் – சாத்தியமாகிறது. சமூகச் செயல்பாட்டை இம்முறையில் வகுத்தல், நமது உற்பத்திப் பொருள் நம்மை மீறிய ஒரு புறநிலைச் சக்தியாதல், இம்முறையில் நமது கட்டுப்பாட்டைக் கடந்துசெல்லுதல், நமது எதிர்பார்ப்புகளைக் குலைத்தல், நமது கணக்கீடுகளை ஒழித்தல் – இதுதான் இன்றைய வரையிலான சமூக வளர்ச்சியின் மிக முக்கியமான குணம்."

உண்மையில் ஒரு மிக வளர்ச்சி பெற்ற சமுதாயத்திற்கு, சாரத்தில் இந்த கிராமிய வர்ணனையைப் பொருத்திப் பார்ப்பதில் சிரமங்கள் உள்ளன. கிரன்டிரிசேவில் தானியங்கி இயந்திரங்களின் புகுத்தலாலும் வேலை நேரத்தில் ஏற்படும் குறைப்பினாலும், வேலைப் பிரிவினை என்ற முழுமையான பிரச்னை கடக்கப்பட்டு விடும். அப்பொழுது பிரச்னை உழைப்பைப் பற்றியதல்ல. ஓய்வு நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றியதாகும்" என்றார். ஆனால் அவர் முதிர்ச்சியடைந்த போது அவர் நம்பிக்கை குறைந்தது. மூலதனம் – மூன்றாவது நூலின் இறுதியில், "சோசலிசத்தின் கீழ் உழைப்பு எவ்வளவுதான் மனிதத்தன்மை பெற்றாலும் அது அவசியமென்ற எல்லைக்குள்ளேயே இருக்கிறது. அதற்கு அப்பால்தான் மனிதச் சக்தியின் வளர்ச்சி தொடங்குகிறது. மனிதச்சக்தியின் வளர்ச்சியே அதன் இறுதி நோக்கம், அதுவே சுதந்திரத்தின் உண்மைக் களமும் ஆகும். அது அவசியமென்ற இந்தக் களத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்வதாகும். வேலை நேரக் குறைப்பு என்பது இதன் அடிப்படை முன்தேவையாகும்" என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

சமூக உற்பத்திப் பண்டங்களை சம முறையில் வழங்குதல், பணத்தின் பங்கு, திருமணம், குடும்பம் ஆகியவற்றின் எதிர்காலம் போன்ற பிரச்னைகளின் தீர்வு, சமுதாயத்தின் சமூக – பொருளாதார அடித்தளத்தை மாற்றுவதால் ஏற்படும் மனித உந்தல்களில் ஏற்படும் மாற்றத்தைச் சார்ந்ததாக இருக்கும். மார்க்ஸ், எல்லாச் சூழல்களிலும் இடம்பெறும் நிலையான விருப்பங்கள் – பல்வேறு சமூகச் சூழல்களால் இவற்றின் உருவமும் திசையும் மட்டுமே மாற்றப்படுகின்றன. இவற்றுக்கும் – ஒரு குறிப்பிட்ட சமூக வடிவத்தில், உற்பத்தி, பரிமாற்றம் ஆகியவற்றின் குறிப்பிட்ட நிலைகளில் மட்டும் தோன்றுவதாகிய சார்புநிலை விருப்பங்களுக்கும் வேறுபாடு கண்டார். ஒரு கம்யூனிச சமுதாயத்தில் நிலையான விருப்பங்கள் மாறும். இயல்பான அவற்றின் வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படும். சார்புநிலை விருப்பங்கள், அவற்றின் இருப்புக்கான நிலைமைகள் இல்லாததனால் அழியும். மார்க்ஸ் தொடர்ந்து கூறினார்: "கம்யூனிச நிர்வாகத்தின் போது எந்த ஆசைகள் மாற்றம் பெறும் – எவை அழிக்கப்படும் – என்பதை நடைமுறையில்தான் தீர்மானிக்க வேண்டும். எதார்த்தமான செயல்வகையான விருப்பங்களை மாற்றுதல் மூலமே அது தீர்மானிக்கப்படும். முன்னைய வரலாற்றுச் சூழல்களுடன் செய்யும் ஒப்புமையால் அது தீர்மானிக்கப்படாது." நிலையான விருப்பங்கள் – அவற்றில் ஒன்று உணவு விருப்பம் – பற்றி மார்க்ஸ் குறிப்பிட்டார். தொடர்ந்து கூறினார்: "விருப்பங்கள் தேவைகளின் நிலைப்பை ஒழிப்பதல்ல கம்யூனிஸ்டுகளின் நோக்கம். அவர்கள் உற்பத்தியையும் பரிமாற்றத்தையும் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒழுங்கமைக்க முயல்கிறார்கள். அதன் மூலம் எல்லா விருப்பங்களின் இயல்பான தேவை நிறைவேறுகிறது. அதாவது விருப்பங்களாலேயே தேவைகளின் நிறைவு கட்டுப்படுத்தப்படுகிறது.

கம்யூனிச சமுதாயத்தில் வேலைப் பிரிவினை ஒழிப்பின் அரசியல் இணைவாக அரசு மறைகிறது. அதாவது கம்யூனிசத்திற்கு, அரசின் இன்றியமையாத உறுப்புக்களாகிய நிர்வாக இயந்திரம், ஒரு நிலையான இராணுவம், ஒரு தொழில் முறையிலான நீதித்துறை ஆகியவை தேவையில்லை. மார்க்சின் புகழ்பெற்ற விமர்சனங்கள், பாரிஸ் கம்யூன் பற்றிய கருத்துக்களில் அடங்கியுள்ளன. கம்யூனின் வேலைத் திட்டங்களை மார்க்ஸ் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நீதிபதிகள் உட்பட எல்லா அலுவலர்களையும், அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுப்பதைப் பற்றிய கம்யூனின் கருத்துக்களை வரவேற்றார். அவர்களின் தேர்வு எந்தச் சமயத்தும் விலக்கப்படலாம். அலுவலர்கள், உழைப்பாளிகளுக்கு ஒத்த ஊதியத்தையே பெறுவார்கள். நிலைப்படைக்கு மாறாக மக்கள் ஆயுதபாணியாவார்கள். காவல்துறை, புரோகிதர் துறை ஆகியவற்றிலிருந்து அவர்களின் அரசியல் செல்வாக்கு அகற்றப்படும். இத்தகைய கருத்துக்களை மார்க்ஸ் வரவேற்றார். கம்யூனின் முன்முயற்சி, காலக்கெடுவில் நாடு முழுவதிலும் பரவலான கூட்டமைப்புடைய ஒரு அரசியலமைப்பையும் ஒரு பொதுத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட கூட்டுறவுகளின் அடிப்படையிலமைந்த ஒரு பொருளாதாரத்தையும் தோற்றுவிக்குமென்று மார்க்ஸ் நம்பினார்.

எல்லா விருப்பங்களும் இயற்கையாக நிறைவடைவதற்கான நிலைமையை உடனே அடைந்து விட முடியாது என்பதில் மார்க்ஸ் தெளிவாக இருந்தார். ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற ஒரு மாறுதல் காலம் ஏற்படுகிறது. உழைப்புப் பிரிவினையின் ஒழிப்புடனும் அரசின் மறைவுடனும் கூட கம்யூனிச சமுதாயம் ஒவ்வொரு அம்சத்திலும் – பொருளாதாரம், அறநெறி, அறவியல், அறிவியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் பழைய

சமூகத்தின் பிறப்புக் குறிகளைக் கொண்டிருக்கும். ஒரு நெடுங்காலத்திற்குப் பிறகுதான் முழு கம்யூனிசம் ஏற்படும். இந்தக் கம்யூனிசம் பற்றி மார்க்சின் புகழ்பெற்ற வர்ணனை வருமாறு: "உழைப்புப் பிரிவினைக்குத் தனி நபரை அடிமைப்படுத்தும் போக்கும், அத்துடன் மூளை உழைப்பு, உடல் உழைப்பிற்கிடையிலான பகைமையும் மறைந்த பிறகு உழைப்பு என்பது வாழ்வுக்கான வழிமுறை என்பதல்லாமல் வாழ்வின் முதல் தேவையான – பிறகு – உற்பத்திச் சக்திகள் தனிமனிதனின் முழு வளர்ச்சியோடு வளர்ந்த பிறகு கூட்டுறவுச் செல்வத்தின் அனைத்து நீரோட்டங்களும் அளவற்றுப் பெருக்கெடுக்கும் போது அத்தகைய கம்யூனிசச் சமுதாயத்தின் ஒரு உயர்கட்டத்தில்தான், பூர்சுவா கடமை என்ற குறுகிய கீழ்வானம் முழுமையாகக் கடக்கப்படும். சமுதாயம் தனது பதாகைகளில் 'திறமைக்கேற்ற உழைப்பு', தேவைக்கேற்ற ஊதியம்' என்ற வாசகம் பொறிக்கப்படும்".

மார்க்சுக்குப் பிறகு...

மார்க்சின் சிந்தனை பல்வேறு வகையான விளக்கங்களுக்கு உட்பட்டிருப்பதை நாம் இந்த அதிகாரத்தில் பார்க்கலாம். அவர் சிந்தனைகள் தொடர்ச்சியான பல விளக்க உரைகளில் மூடி மறைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில மார்க்சைத் திரித்துக் கூறுபவை. உண்மையான மார்க்சை வெளிக்கொணர்வது எவ்வளவுதான் சாத்தியமற்றதாக இருந்தபோதிலும், இந்த விளக்கவுரைகளை அவற்றுக்கான வரலாற்று அரசியல் பின்னணிகளில் வைத்துப் பார்க்கும் பொழுது மார்க்சின் கருத்துக்களைக் கண்டறிந்து ரசிப்பது எளிதாகிறது.

பலருக்குப் பலவகையாகத் தோற்றம் தரும் மார்க்சின் திறனுக்கு மூன்று காரணங்கள் கூறலாம். முதலாக, அவருடைய பல கோட்பாடுகள் உண்மையிலேயே புதிரானவை. தன் இளமைக்காலத்தில் மார்க்ஸ் தன் ஆசிரியர்

ஹெகலிடம் ஒரு தெளிவற்ற தன்மையைக் கண்டார். அதே தன்மை மாணவரிடமும் இருந்தது. காரணம், இருவருமே இயங்கியல் சிந்தனையாளர்கள். குறிப்பாக மார்க்சிய இயங்கியல் திறந்த தன்மையது.

அகநிலைக் காரணிகளும் புறநிலைக் காரணிகளும் ஐக்கியப்படும் தன்மையால், கொள்கையும் நடைமுறையும் தொடர்ந்து வினை எதிர்வினை புரிந்து புதியதாக மருவுகின்றன. மார்க்ஸ் முற்று முடிந்த முடிவுகளைத் தரவில்லை. அவர் தந்தது ஒரு முறையியல் மட்டுமே. இந்தத் தெளிவற்ற தன்மை அதிகரித்திருப்பதற்கு, அவர் படைப்பு முற்றுப்பெறவில்லை என்பதும் ஒரு காரணம். அவர் எழுத விரும்பிய பொருளியலில் முதல் நூல் மட்டுமே முற்றுப் பெற்றது. தவிர, வாழ்வின் இறுதிப் பத்தாண்டுகளில் அவர் நோயுற்றபோது, தொடர்ச்சியான படைப்பாற்றல் அவரிடம் இல்லை. ஆகவே பாரிஸ் கம்யூனுக்கும், மூலதனம் வெளியீட்டுக்கும் பிறகு நடந்த விவாதத்தில் அவரால் பங்குபெற முடியவில்லை. 1880களில்தான் அவரது கோட்பாடுகள் பரவலான கவனத்தைப் பெறத் தொடங்கின. தனது கோட்பாடு பயன்படுத்தப்பட்ட முறை பற்றி மார்க்சின் கருத்துக்களை, அவர் சில பிரெஞ்சு மார்க்சியவாதிகளைப் பற்றிக் கூறிய மதிப்புரையிலிருந்து அறியலாம். அவர் கூறினார்: "என்னைப் பொறுத்தவரை, நான் ஒரு மார்க்சியவாதி அல்ல."

மார்க்சியம் என்ற பெயர் பெற்ற கோட்பாட்டின் மாறும் தன்மைக்கான இன்னொரு காரணம், அது ஒரு மக்கள் திரள் இயக்கத்தின் கோட்பாடாக ஆனது ஆகும். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மக்கள் திரள் சார்ந்த அரசியல் கட்சிகள் தோன்றின. சோசலிசம் என்பது, புதிய தொழில்துறைச் சமுதாயத்தின் நன்மைகளைப் பெற முடியாது தடுக்கப்பட்ட அல்லது போதிய அளவு பெறாத அனைவர்க்கும் உரிய கவர்ச்சியான தீவிரமான கோட்பாடாக

இருந்தது. இந்தச் சூழலில் மார்க்சியத்தை வேறுபடுத்திக் காட்டிய தன்மை என்னவென்றால், புரட்சிகர ஆர்வத்தையும் மாற்றத்திற்கான ஆசையையும் ஒரு வரலாற்றுப் பார்வையுடனும் விஞ்ஞானம் சார்ந்தது என்னும் உரிமையுடனும் இணைக்கக்கூடிய அதன் தனித்திறன் ஆகும். தவிர்க்க இயலாதபடி இதன் கருத்துக்கள் எளிமையாக்கப்பட்டன, இறுக்கமாக்கப்பட்டன. மார்க்சியம் இலட்சக்கணக்கான மனிதர்களின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டு நெறியாக மாறியது; நிச்சயம் அது வெற்றித் தரும் என்ற நம்பிக்கை தருவதாக மாறியது. இதன் ஒரு விளைவு, அது ஒரு வறட்டுவாதமான சித்தாந்தமாக மாற்றம் பெற்றது: கூடவே அது திரிபுவாதம் என்ற மாற்றுக் கருத்தாகவும் தோன்றியது. கிறித்துவ சமய வரலாற்றில் நேர்ந்ததுபோல, புனித நூல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடமே போதிக்கப்பட்டது. வரலாறு அதற்கு உடன்பட்டு வரவில்லையானால் வரலாற்றைத் திருத்தி எழுதிவிட வேண்டியதுதான்.

மார்க்ஸ் தான் இறக்கும்போது, அவர் கையெழுத்துப்படிகள் இருந்த குழப்பமான நிலை மூன்றாவது காரணம். அவர் பணி முற்றுப்பெறவில்லை. அவை அவர் அதுவரை வெளியிட்டவற்றுக்கு அப்பால் செல்வதான கருத்துகளைக் கொண்டிருந்தன. அவை, சிலர் கருத்தின்படி, மார்க்சின் செய்தியை முற்றாக மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதாக இருந்தன. 1930 வாக்கில் மார்க்சின் தொடக்க காலப் படைப்புகளும், 1941-ல் கிரன்ட்ரிசேவும் வெளியிடப்பட்டன.

மார்க்ஸ் தன் வாழ்நாள் முழுவதும் நீடித்த நண்பராகவும் தன் பணியில் பங்கு பெற்றவராகவும் எங்கல்சைக் கொண்டிருந்தார். இந்த உண்மை, மார்க்சைப் பற்றிய வைதீகக் கம்யூனிச விளக்கங்களில் மிகையான முக்கியம் தரப்படுகிறது என்பது ஒரு உண்மை. அவர் மார்க்சுக்கு இடையறாத மன ஊக்கமும் பண உதவியும்

தந்தார் என்பதுடன் மார்க்சின் சிந்தனையின் மீது பெரும் செல்வாக்கு செலுத்தினார். 1844ல் மார்க்சின் ஆர்வத்தைப் பொருளியல் நோக்கிச் செலுத்தியவர் எங்கல்ஸ். அவர் பிரிட்டிஷ் முதலாளியத்தை முதலில் மார்க்சுக்கு அறிமுகப்படுத்தினார். மார்க்சும் இராணுவம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்டவற்றில் எங்கல்சைச் சார்ந்திருந்தார். மார்க்சுக்குப் பிறகும் 13 ஆண்டுகள் ஏங்கல்ஸ் உயிர் வாழ்ந்ததனால் மார்க்சின் சிந்தனை பற்றிய பொருளுரைகளில் அவர் முன்னைவிட அதிகமான செல்வாக்கு செலுத்தினார். அப்போது மார்க்சின் சிந்தனை ஒரு மக்கள் திரள் அரசியல் இயக்கத்தின் அதிகாரபூர்வமான கோட்பாடாக மாறத் தொடங்கியது. மார்க்சின் கையெழுத்துப்படிகளுக்குப் பாதுகாவலாக ஏங்கல்ஸ் இருந்தார். மார்க்சின் சிந்தனைகளுக்கு அதிகாரபூர்வமான உரையாசிரியராகவும் இருந்தார். மூலதனத்தின் பிற நூல்களின் வெளியீட்டுக்கான கையெழுத்துப்படிகளை அவர் தொகுத்தார். அவர் விரைந்தும் தெளிவாகவும் எழுதக் கூடியவர். கூடியவரை நல்ல பொருளில் 'கொச்சைப்படுத்தக்' கூடியவர். அவரது படைப்புகளின் முறை வகுப்பும் தெளிவும் மார்க்சின் எந்தப் படைப்பைக் காட்டிலும் அவரது நூல்கள் விரிவாகப் படிக்கப்படக் காரணங்களாயின. மார்க்சின் கருத்துக்களை அக்காலத்தில் நிலவிய நேர் காட்சி விவாதத்தோடும் விஞ்ஞான விளக்கத்தோடும் இணைத்தது எங்கல்சின் சாதனை. மார்க்சின் கல்லறைப் பேச்சிலேயே இந்த நிகழ்வு தொடங்கியது. "அங்கக இயற்கையின் வளர்ச்சி விதியை டார்வின் கண்டறிந்தது போல, மார்க்சும் மனித வரலாற்றின் வளர்ச்சி விதியைக் கண்டறிந்தார்." இந்த இணைப்பு அவரது 'டூரிங்கை எதிர்த்து' என்ற நூலில் விரிவாக விளக்கப் பெற்றது. இந்த நூல் மார்க்ஸ் இறந்த பிறகு பல ஆண்டுகளுக்கு மார்க்சியத்தின் செம்மை சான்ற விவரிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சோசலிச மெய்யியலாராகிய டூரிங்கின்மேல் நடத்திய தாக்குதலில் மார்க்சிய இயங்கியலை,

இயற்கை மனித சமுதாயச் சிந்தனை ஆகியவற்றின் இயக்கம், வளர்ச்சி ஆகியவற்றின் பொதுவிதிகளைப் பற்றிய விஞ்ஞானம் என்று அறிவித்தார். இவ்விதிகளில் மிக முக்கியமானவை, அளவு, குணமாற்றம் பெறுதல், எதிர்மறைகளின் ஊடுருவல், மறுத்தலின் மறுப்பு ஆகிய விதிகள். (மார்க்சும் தன் கோட்பாடு விஞ்ஞான ரீதியானது என்றார். அவர் படைப்பில் இடம்பெறும் இயற்கை விஞ்ஞான முறையியல் என்பதினும் குறைந்த பொருளிலேயே இச்சொல் இடம் பெறுகிறது. ஹெகலும் தன் படைப்பை விஞ்ஞான ரீதியானது என்றார்) இவ்விதிகள் புறநிலையில் தாமே இயங்குபவை, மனித மனத்தின் சார்பில்லாமல் இயங்குபவை என்று எங்கல்ஸ் கருதினார். இம்முறையில் இயற்கை உலகும் மனித வரலாற்று உலகும் ஆய்வுக்குரிய இரு வேறு களங்கள். ஆனால் மார்க்சுக்கு, அவர் இயங்கியலின் மையமான அம்சங்களில் ஒன்று, மனிதனும் அவனது சூழ்நிலைகளும். வினை – எதிர்வினை புரிதலைக் குறித்தது: அது ஹெகலிடமிருந்து வந்த கருத்து, ஹெகலின் இயங்கியலைத்தான் பயன்படுத்துவதாகவே எங்கல்ஸ் உரிமை கொள்கிறார். ஹெகல் இயற்கையின் இயங்கியலைப் பார்த்தார் என்பது உண்மை. ஆனால் அது மனித உணர்வின் பாதிப்புக்கு உட்படக் கூடியதாகத்தான் இருந்தது. முதன்மைப் பொருளாக மூலப்பொருள் வகையாக – பொருளைக் கொள்ளும் கருத்தாக்கம் மார்க்சுக்கு உரியதல்ல.

எங்கல்ஸ் இறந்த 20 ஆண்டுகளில் மார்க்சின் கருத்துகள், மேற்கு ஐரோப்பாவில் சோசலிச இயக்கத்தில், குறிப்பாக, மிகப்பெரியதும் சிறந்தமுறையில் உருவாக்கப்பட்டதுமான ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியில் ஆதிக்கம் பெறத் தொடங்கியது. கார்ல் காட்ஸ்கியின் தலைமையில் இருந்த வைதிக மார்க்சிய வாதிகளின் பார்வையில், மார்க்ஸ் முதன்மையாக ஒரு பொருளாதார அறிஞர்: முதலாளியத்தின் வீழ்ச்சியும் பாட்டாளி வர்க்க வெற்றியும் நிச்சயம் நிகழும் என்று

விஞ்ஞான உறுதிப்பாட்டுடன் விளக்கியவர் அவர். இந்தக் கருத்துரை ஏற்கெனவே திரிபுவாதிகளின் தாக்குதலுக்கு உட்பட்டிருந்தது. அவர்களில முதன்மையானவர் பென்ஸ்டீன். இவர் இங்கிலாந்தில் கண்ட ஃபேபியன் சோசலிசத்தின் செல்வாக்குக்கு ஆளானவர். பெர்ன்ஸ்டீன் தன்னை மார்க்சியவாதியாகக் கருதிக் கொண்டார். ஆயினும் நவீனத் தொழில் துறை ஜனநாயக உலகுக்கேற்ப மார்க்சின் கருத்துக்களைத் திருத்துவது தேவை என்று கருதினார். வர்க்கங்கள் எதிரணிக்கு செல்கின்றன என்பதையும் அவர் மறுத்தார். புரட்சியின் மூலம் அல்லாமல் சீர்திருத்தத்தின் மூலமே சோசலிசம் அமைதியாகச் சாதிக்கப்படும் என்றார்.

இதைக் கடுமையாக மறுத்தார் காட்ஸ்கி. மார்க்சின் கருத்துக்களுக்கு எதிரான கலகத்தை மறுத்த காட்ஸ்கி, எங்கல்ஸ் தொடங்கி வைத்த முறைப்படுத்தலைப் புதிய களங்களுக்கும் விரிவுபடுத்தினார். பொருளாதாரக் காரணங்களால் வரலாறு தீர்மானிக்கப்படுகிறது என்ற மார்க்சின் கருத்துக்கு அழுத்தம் கொடுத்தார். வரலாற்றை மாற்றவியலாத விதிகள் ஆளுகின்றன என்று கூறுவதாகிய – அறவியல் இலட்சியத்திலிருந்து விடுபட்ட விஞ்ஞான வகை – மார்க்சியத்தையே அவர் எடுத்துரைத்தார். திருத்தல்வாத விவாதத்தில் வைதிகத்தை உயர்த்திப் பிடித்த பெருமையை காட்ஸ்கி தனக்குக் கூறிக் கொள்ளமுடியும். ஆனால் மார்க்சின் கருத்துக்கள் முதன்மையாக கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை அல்லது மூலதனம் நூல்களின் உறுதியான பிரகடனங்களின் மூலமே அறியப்பட்டிருந்தன. மார்க்ஸ் எழுதியவற்றில் பாதிக்கும் குறைவாகவே வெளியிடப்பட்டிருந்தன. காட்ஸ்கியும், இரண்டாவது அகிலம் என்று அறியப்பட்டிருந்த – தமக்குள் மார்க்சியக் கட்சியின் இறுக்கம் இல்லாத – கூட்டின் தலைவர்களும், அவர்களின் கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடைப்பட்ட இடைவெளி தொடர்ந்து வளர்ந்த நிலையில், மார்க்சின்

கருத்துக்களில் இருந்து விலகியது தெளிவு. வர்க்கப் போராட்டம், சோசலிசத்தின் தவிர்க்க இயலாமை ஆகியவை பற்றித் தங்கள் வைதிகத்தை எவ்வளவுதான் வலியுறுத்திய போதிலும், அவர்களின் நடைமுறை, ஒரு ஜனநாயகத்தில் தொடர்ந்து வளரும் அதிகார வர்க்கக் கட்டமைப்போடு கூடிய ஒரு நிலைபெற்ற கட்சியின் தேவையை ஒட்டியதாகவே இருந்தது. தாங்கள் எத்தனையோ சிரமங்களுக்கிடையில் சம்பாதித்த பதவிகளை அழித்துவிடக் கூடிய ஆபத்துக்களை உடைய புரட்சிக்கான முறைகளை வளர்ப்பதைக் காட்டிலும், வாக்குகள் சேகரிப்பதிலும் தங்களது நிலையான தகுதியையும் திறமையையும் காப்பதிலும் தவிர்க்க இயலாமல் அதிக அக்கறை கொண்டனர்.

ஜெர்மன் சமூக ஜனநாயக வகை மார்க்சியம், முதல் உலகப் போரின் தொடக்கத்தால் தகர்ந்தது. தங்கள் நாட்டு அரசியல் கட்டமைப்பில் தாங்கள் கொண்டிருந்த ஈடுபாட்டின் விளைவாக, தேசபக்தி அலை எழுச்சியை அவர்களால் தடுக்க இயலவில்லை. ஆகவே போர்க்கடன்களுக்காகத் தங்கள் வாக்குகளை அளித்தனர். கருவில் சிதைந்த 1918 புரட்சியும் பாசிசத்தின் தோற்றமும் ஜெர்மனியில் பல பத்தாண்டுகளுக்கு மார்க்சியத்தின் மறைவைக் குறித்தது: மார்க்ஸ் தன் வாழ்வின் இறுதியில் ஐயுற்றதைப் போலவே, புரட்சி இயக்கத்தின் மையம் கிழக்கு நோக்கி நகர்ந்தது. இறுதியில் ரஷ்யாவில் வெற்றி பெற்ற மார்க்சியம் அந்த நாட்டின் இயல்புகளுக்குப் பெரும்பகுதி ஒத்ததாக இருந்தது. மென்ஸ்விக்குகளுக்கும் போல்ஷ்விக்குகளுக்கும் இடையில் எழுந்த புகழ்பெற்ற விவாதத்தில், இரண்டு முதன்மையான பிரச்னைகள்: ரஷ்யா, பூர்சுவாப் புரட்சிக்கு அருகில் உள்ளதா (பாட்டாளி வர்க்கப் புரட்சி தொலைவில் உள்ள நிலையில்) என்பதும், புரட்சிகரக் கட்சி எந்த அளவு மையக்குவிப்பு உடையதாக இருக்க வேண்டும் என்பதுமாகும். 1848-எழுச்சியின் போதே மார்க்சுக்குச் சிரமம் தந்த பிரச்னைகள்

இவை. இதில் ஆச்சரியமில்லை. காரணம், இந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளில் அரை நிலவுடைமை அரை முதலாளியமாக இருந்த ரஷ்ய நிலையையே அக்கால ஜெர்மனியும் கொண்டதாக இருந்தது. ஒரு பூர்சுவா புரட்சியைப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கி நடத்துவது, புரட்சிக்கு ஓர் இன்றியமையாத உறுப்பாக உழவர்கள் இருக்க முடியும், லெனின், ட்ராட்ஸ்கியிடமிருந்து 1917 ஏப்ரலில் மேற்கொண்ட இடையறாப் புரட்சி - இவ்வகையான லெனினின் கருத்துகளுக்கு, மார்க்சின் அக்காலக் கருத்துக்ககள் ஆதாரமாக முடியும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், புரட்சியை விரைவுபடுத்த முடியாது என்றும், மிகுதியான மையக் குவிப்புடைய கட்சிக் கட்டமைப்பு நம்பிக்கைக்குரியதல்ல என்றும் மென்ஸ்விக்குகள் கொண்ட கருத்து, பெரும்பாலும் மார்க்சின் பொதுக் கருத்துக்களுக்கு இயைந்தவை. ஆகவே ஜெர்மன் சமூக ஜனநாயகவாதிகள் தந்த அழுத்தத்தை விட, மார்க்சின் படைப்புக்களில் உள்ள அரசியல் பகுதிகளுக்கு போல்ஷ்விக்குகள் அழுத்தம் தந்ததில் வியப்பில்லை. கம்யூனிஸ்டு லீகில் இருந்த போது மார்க்ஸ் அனுப்பிய சுற்றறிக்கைகளை லெனின் மனப்பாடமாக வைத்திருந்தார்: அவற்றை மேற்கோள் காட்டுவதில் லெனின் ஆர்வம் கொண்டிருந்தார் என்பது பதிவேடுகளில் உள்ளன. ஆனால் கட்சி பற்றிய லெனின் கோட்பாடு, மார்க்ஸ் கருத்துடன் ஒத்ததாக இல்லை. காரணம், உழைக்கும் வர்க்கம் புரட்சிகர உணர்வைத் தானே கொள்ள முடியாது; இந்த உணர்வை முன்னணிக் கட்சி ஒன்றே அவர்களுக்குள் புகுத்தமுடியும் என்று லெனின் நம்பினார். ஆகவே, புரட்சியைத் தொழிலாகக் கொண்டவர்களை உடைய, மிகுந்த கட்டுப்பாடுகளைக் கொண்டு, மையக் குவிப்புடைய, சிறிய, ஒரு கட்சிக்கு உழைக்கும் வர்க்கம் முழுவதும் கட்டுப்பட வேண்டும் என்று லெனின் விரும்பினார்.

1917 புரட்சி வெற்றி பெற்ற பிறகு ஸ்டாலினின் இடையறாத அதிகார வளர்ச்சியின் காரணமாக, மார்க்சிடமிருந்து மிக விலகிய அரசு சித்தாந்தமாக கம்யூனிசக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. உரிய காலத்திற்கு முற்பட்டு வெடிக்கும் புரட்சி தன்னை அதிகாரத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வன்முறையைப் பயன்படுத்த நேர்வது பற்றி மார்க்சே குறிப்பிட்டிருந்தார். முன்னணிக் கட்சி என்ற கருத்து, நாளடைவில் ஒரு சர்வாதிகாரக் கட்சி இயந்திரம் – இறுதியில், ஒரே ஒரு மனிதன் – என்பதற்கு இடம் கொடுத்தது. எங்கல்சின் 'டூரிங்கை எதிர்த்து' என்ற நூலில் முதன்மையாக இருந்த இயங்கியல் விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஒரே வார்ப்பில் உருவாகிய உலகம் என்ற கருத்து லெனினாலும் தொடரப்பட்டு, இயங்கியல் பொருள் முதலியல் (இந்தத் தொடரை லெனினின் ஆசிரியர் பிளக்கனோவ் பயன்படுத்தினார்) என்ற ஸ்டாலினிய பாடப் புத்தகங்களில் தனது உச்சநிலையை அடைந்தது. மேலிருந்து உருவாக்கப்பட்டு வழங்கப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களையும் பிற கோட்பாடுகளையும் உழைக்கும் வர்க்கம் பேசாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். மார்க்சியக் கோட்பாட்டில் ஸ்டாலின் புகுத்திய ஒரு முக்கியமான அம்சம் – இதுவே டிராட்ஸ்கியுடன் நடந்த தகராறுக்கு மூலமாக இருந்தது – ஒரு நாட்டில் சோசலிசம் என்ற கருத்தாகும். இக்கருத்துடன் நிச்சயம் மார்க்ஸ் உடன்பாடு கொண்டிருக்க மாட்டார்.

மார்க்சியக் கோட்பாட்டின் இத்தகைய இறுக்கத்திற்கு எதிர்வினைகள் தவிர்க்க இயலாதவை. ஒரு கோட்பாடு என்ற முறையில் மார்க்சியத்தின் உயிர்த்தன்மை குறையும் போதே, மார்க்சிடம் இடம் பெற்றிருந்த ஹெகலிய அம்சங்களைப் பற்றிய ஆர்வம் குறையலாயிற்று. ஸ்டாலினியக் காலத்தில் ஹெகல் முற்றாகப் பிற்போக்கான சிந்தனையாளர் என்று கண்டிக்கப்பட்டார். 1917 புரட்சிக்குச் சற்று முன்னர் லெனினே கூட, மார்க்ஸ் பற்றிய படிப்புக்கு ஹெகலின் முக்கியம்

பற்றிப் பாராட்டியிருந்தார். ஆனால் ஹெகலுக்கு மார்க்ஸ் கடமைப்பட்டிருந்ததை முழுமையாகக் கண்டறிந்து அவரது பொருளாதாரம் உட்பட மார்க்சின் முழுச் சிந்தனையையும், ஒரு சோசலிச மனிதாபிமானத்தின் எல்லைக்குள் வைத்து விளக்கியவர் ஜியார்ஜ் லூகாக்ஸ்தான். மார்க்சின் கருத்தில் மையமாக இருந்தது அந்நியமாதல் பற்றிய கருத்து. இது எங்கல்ஸ் காலம் முதலே முற்றாக மறைந்திருந்தது. இதை மீண்டும் அவர் மார்க்சுக்குத் தரும் விளக்கங்களில் மையம் ஆக்கினார். லூகாக்ஸ் தனது "வரலாறும் வர்க்க உணர்வும்" (1923) என்ற நூலில் அன்னியமாதலுக்குட்பட்ட மனிதன், பாட்டாளி வர்க்க உணர்வின் மூலமும் புரட்சியின் மூலமும், தன் அன்னியமாதலைக் கடந்து செல்வதைப் பற்றிய பார்வையை விளக்கினார். ஒரு ஹெகலியன் என்ற முறையில், முன்னைய ஆண்டுகளில் மார்க்சியத்தை ஒரு விவரத் தொகுப்பு விஞ்ஞானமாகக் குறைத்த போக்கை மறுத்தார். இயற்பியல் விஞ்ஞானத்தில் செயல்படுவதைப் போன்ற மாறாத விதிமுறைகளால் சமூக ஒழுங்கு முறைகளும் ஆளப்படுகின்றன என்று கருதுவது, லூகாக்சைப் பொறுத்தவரை ஒரு மாயையை அனுமதிப்பதாகும். இந்த மாயையில் சமூக யதார்த்தம் மனிதனுடைய படைப்பு என்றில்லாமல் மனிதனுக்குப் புறம்பான அவனைச் சாராத ஏதோ ஒன்றின் புறநிலைத் தோற்றம் கொள்கிறது. சமூக விவரங்கள் ஒட்டு மொத்தமான கட்டமைப்பைப் புரிந்து கொள்ளும் பொழுதே பொருள் பெறும். இந்த முழுமை தீவிரத் தன்மையுடையது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வில்தான் இது தனது உச்ச அளவை அடைந்துள்ளது. தற்கால சமூக யதார்த்தத்தைக் கருத்தில் கொள்வதற்கு இது முழுப் பார்வையைத் தரும். இறுதி ஆய்வில் அந்த உயர் வகையான வர்க்க உணர்வும் மார்க்சியமும் ஒன்றாகும். வியக்கத்தக்க ஒரு உண்மை என்னவென்றால், மார்க்ஸ் பற்றிய லூகாக்சின் இந்த விளக்கம், மார்க்சின் தொடக்க காலப் படைப்புக்கள் வெளியிடப்படுவதற்கு முன்பே எழுதப்பட்டதாகும். மார்க்சின் தொடக்ககாலப் படைப்புக்கள்

லூகாக்சின் கருத்துக்களைப் பெருமளவு ஆதரித்தன: கோர்ஸ்க், கிராம்சி முதலியவர்கள் அறிவார்ந்த விவாதத்தில் மார்க்சியவாதிகள் ஈடுபடுவதன் தேவையை மிகவும் வற்புறுத்தினர். இரண்டாவது அகிலத்தின் மார்க்சிய இயந்திரவியல் போக்கை விமர்சனம் செய்தனர். ஆயினும் லூகாக்சின் கருத்துக்கள் அக்காலத்தில் விரிவாக அறியப்படவில்லை.

மார்க்சின் சிந்தனையை விளக்கியவர்களுக்கு 1930 வாக்கில் மார்க்சின் தொடக்ககாலப் படைப்புக்கள் வெளியானது ஒரு திட்டவட்டமான திருப்புமுனையாக விளங்கியது. இந்தப் படைப்புகள், குறிப்பாகப் பொருளாதார தத்துவக் கையெழுத்துப் படிகள் மார்க்சை காட்ஸ்கி கண்ட ஒரு வறட்சியான பொருளாதாரவாதியிலிருந்தும், சோவியத் வறட்டுவாதம் கண்ட இயங்கியல் பொருள்முதல்வாதியிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டின. மார்க்ஸ் ஒரு மெய்யியலாளராக ஒரு மனித நேயம் மிக்கவராகத் தோன்றினார். முதலாளிய சமுதாயத்தில் அவர் மனிதனின் அந்நியமாதலைப் பற்றி மிக உருக்கமான விவரிப்புகளைத் தந்ததோடு கம்யூனிசத்தில் நிறைவடைவதற்காக ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உள்ளுறைந்திருக்கும் ஆற்றல் பற்றியும் விரிவான விளக்கங்களை மார்க்ஸ் தந்தார். முதற்கால மார்க்சிடம் ஏற்பட்ட ஆர்வத்திற்கு மேலும் இரு காரணிகள் உதவின. ஒன்று, ஹெகலிடம் மீண்டும் ஓர் ஆர்வம் ஏற்பட்டது. அதன் ஓர் அடையாளம்தான் லூகாக்சின் படைப்பு. மார்க்சின் தொடக்க காலப் படைப்புகள் ஹெகலின் செல்வாக்கை நேரிடையாகக் கொண்டவை. ஆகையால் தொடர்ந்து ஹெகலின் செல்வாக்குக்கான நிலம் தயாராக இருந்தது. இரண்டாவது, ஒரு அரசியல் காரணி. மார்க்சியச் சிந்தனையாளர்களில் முக்கிய மானவர்கள், தங்களது கோட்பாடு, உடமை வர்க்கத்தின் கோட்பாட்டிலிருந்து முழுமையாக வேறுபட்டது என்று கூறிக் கொண்டிருந்தனர்.

பாசிசத்தின் ஆபத்தை எதிர்த்துப் போரிடுவதற்காக மார்க்சியவாதிகள் தங்களது மார்க்சிய மனித நேயத்திற்கும் தாராள மனோபாவமுடைய உடைமை வர்க்கத்தின் மனித நேயத்திற்கும் இடையிலான ஒப்புமைகளை ஒப்புக்கொண்டனர். நாசிசத்தின் காட்டுமிராண்டிச் செயல்களையும், பாசிச சித்தாந்தத்தையும் அவை மேற்கு ஐரோப்பிய மரபுகளை மறுக்கின்றன என்பதாக அவர்கள் விமர்சனம் செய்தனர்.

1930களிலும் இரண்டாவது உலகப் போரின் போதும் ஜெர்மனியில் அறிவார்ந்த வாழ்வு கடுமையான தொல்லைக்குள்ளாக்கியது. இதன் விளைவாக, குறைந்த அளவு மேற்கு உலகிலாவது 1940-களின் பிற்பகுதியில்தான் மார்க்சின் தொடக்ககாலப் படைப்புகளைப் பற்றிய தீவிர கவனம் ஏற்பட்டது. இச்சமயத்தில் இருத்தலியல் கோட்பாடுகளின்பால் ஏற்பட்ட விரிவான ஆர்வம் இளைய மார்க்சை வரவேற்பதற்குக் காரணமாயிற்று. எரிக் ஃப்ராமின் 'மார்க்சின் மனிதனைப் பற்றிய கருத்து' என்ற நூல் மார்க்சை ஒரு ஆன்மீக இருத்தலியல்வாதியாகப் போற்றியது. மார்க்சியத்திற்கும் ஜென் புத்த மதத்திற்கும் இடையில் ஒப்பீடுகளை இந்த நூல் செய்தது. கிறிஸ்தவர்களுக்கும் மார்க்சியவாதிகளுக்கும் உரையாடல் சாதாரணமாயிற்று. கீர்க்கோடும் மார்க்சும் ஹெகலுக்கு எதிரான இருத்தலியல் வாதத்தில் பங்கு கொண்டதாகக் கருதப்பட்டனர். அமைதியும், வளமும் நிறைந்த 1950களில் பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து வறுமைப்படுவதையும், புரட்சிகரமான பங்கை நிறைவேற்ற அது தயாராவதையும் நம்புவது கூடக் கடினமாயிற்று. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி தன்னிச்சையான ஆற்றலும் அது மனிதர்களை முகமற்றவர்களாக்கிவிடும் தன்மையும் கண்ட பல தீவிரவாதிகள், மார்க்சின் கருத்துக்கள், சமுதாயம் செல்வத்திலும், சிக்கலிலும் தொடர்ந்து பெருகும் போது மேலும் பொருத்தமுடையதாகின்றன என்று கருதினர். தனது உலகம்

பற்றிய மனிதப் படத்தில் அகநிலைக் காரணி மேலும் அழுத்தம் தரப்பட்டது. மனவியல் சிக்கலைப் பற்றிய ஆய்விலும் மனித அறிவை உருவாக்குவதில் மொழியின் முனைப்பு மிகுந்த பங்கு பற்றியும் அழுத்தம் தரப்பட்டது. மனிதன் தன்னைப் பற்றிய அறிவைப் பெற, மார்க்ஸ் தனது சித்தாந்தத்தின் மூலம் உதவுகிறார் என்ற கருத்து உலகுக்கு ஏற்பட்டது.

கிழக்கு ஐரோப்பாவில், கடைப்பட்டவர்களின் நெறியாக இருந்த மார்க்சியம், ஆளும் கோட்பாடாக அரியணை ஏறியது. பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் படிகளில் கண்ட கம்யூனிச மனிதன், ஸ்டாலினிய வகைப்பட்ட அரசு அதிகார வர்க்கங்களுடன் கொள்வதற்கான உறவு ஒன்றும் இல்லை. ஆடம் சாஃப் போன்ற எழுத்தாளர்கள், சோசலிசத்திலும் அந்நியமாதல் நீடிக்கும் என்ற கோட்பாட்டை எச்சரிக்கையோடு முன்வைத்தனர். ஸ்டாலினுக்கு எதிரான மார்க்சியவாதிகள், மார்க்சின் தொடக்ககாலப் படைப்புகளைப் பற்றிய ஆய்வை, கம்யூனிச சிந்தனையின் மூலங்களை நோக்கிச் செல்வதாகக் கருதினர். இதுவரை இத்தகைய நிகழ்வுப் போக்கிற்கான விளைவு பெரிதாக இல்லை. பிளாச்சும் கொலாகோவ்ஸ்கியும் தம் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கரோடி வெளியேற்றப்பட்டார். யூகோஸ்லேவிய மெய்யியலாளரும் அவரது செயல்முறைக் குழு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மார்க்சின் தொடக்க காலப் படைப்புக்கள் வெளியானதிலிருந்து, அவர் சிந்தனைக்கான விளக்கம். அவர் சிந்தனையின் தொடர்ச்சி பற்றிய பிரச்னையை மையமாகக் கொண்டுள்ளது. இரண்டு மார்க்சுகள் – தொடக்க கால மார்க்ஸ் - பிற்கால மார்க்ஸ் இப்படியா? அல்லது ஒரே ஒரு மார்க்சா? பழைய ஸ்டாலினிய விளக்க உரையைப் பொறுத்தவரை, மார்க்சின் பிற்காலப் படைப்புக்களுக்கு முன் பயனற்றுப் போனவை, அவரது இளமைக் காலப்

படைப்புக்கள். மார்க்சின் தொடக்க காலப் படைப்புக்களின் முக்கியத்தைக் குறைக்க விரும்பும் பிறர், மார்க்சின் கையெழுத்துப் படிகளில் மையமாக இருந்த 'இன உயிரி', 'அந்நியமாதல்' போன்ற சொற்கள் பிற்காலப் படைப்புக்களில் அரிதாகவே இடம் பெறுவதைச் சுட்டுகின்றனர். கையெழுத்துப் படிகளைக் கண்டுபிடித்து வெளியிட்ட ஜெர்மன் பதிப்பாளர்கள், முற்றிலும் எதிரான கருத்தைக் கொண்டனர். "மார்க்சின் பொருளாதார, தத்துவக் கையெழுத்துப்படிகள், மார்க்சின் முழு வாழ்நாட் பணியின் மையப்புள்ளி. மார்க்சின் அறிவுத் திட்பம் வாய்ந்த நன்கொடையின் ஒருமையையும், தொகுப்பையும், அவரது மெய்யியல் பொருளியல் வரலாற்றியல் விவாதங்கள் என்னும் சிக்கலான வலைப் பின்னலின் வழியே முன்வைப்பவை அவை." பின்னர் வெளியிடப்பட்ட கிரன்ட்ரிசே முற்றான எதிர்நிலைகளை ஏற்பதில்லை. ஆயினும் மார்க்சினுள் 'தொடர்ச்சி'யின் திட்டவட்டமான தன்மை இன்னும் விவாதத்திற்கு உரியதாகவே உள்ளது.

அண்மைக் காலத்தில், மேற்கு நாடுகளில் மார்க்சிய விளக்கத்தில் இருவகைப் போக்குகள் முதன்மை பெறுகின்றன. முதல்வகைப் போக்கு அடோர்னோ, ஹேபெர்மாஸ், மார்க்யூஸ் முதலிய 'திறனாய்வு'க் கோட்பாட்டாளர்களின் ஃபிராங்பர்ட் பள்ளியினுடையது. இவர்கள் மார்க்சியத்தின் மெய்யியல் பரிமாணத்தைப் புதுப்பிக்க விரும்புகிறார்கள். மனிதப் பகுத்தறிவின் ஆற்றலில் கொண்ட பெரு நம்பிக்கையோடு, சில வகை கருத்தாக்கங்களை அவர்கள் கண்டுள்ளனர். மார்க்சின் இறப்புக்குப் பிறகு உலகில் நடைபெற்ற மாறுதல்களை விளக்கும் நோக்கத்துடன் மார்க்சைக் கடந்து செல்பவை, இவர்களின் கருத்தாக்கங்கள். மார்க்சின் படைப்புடன் சமூக மனவியல் ஆய்வுப்பரிமாணத்தை இவர்கள் சேர்த்தனர். தொழில்நுட்ப வல்லுநர்களின் செயற்கையான கட்டுப்பாட்டிற்குள் சமூகம் தொடர்ந்து செல்லுமானால்,

சமூக யதார்த்தம் பற்றிய அனுபவ இயல் வகையிலான அணுகல்முறை இறுதியில் அந்தக் கட்டுப்பாட்டிற்குப் பாதுகாப்புத் தருவதாகவே முடியும் என்ற அடிப்படைக் கருத்தை அவர்கள் வற்புறுத்தினர். ஹேபர்மாசின் 'அறிவும் மனித நலன்களும்' என்ற நூல் இதனை வலியுறுத்தியது. முன்னைய மார்க்சியப் படைப்புக்களில் காணப்படாததாகிய - ஃபிராய்டின் செல்வாக்கை ஃபிராங்பர்ட் பள்ளியைச் சேர்ந்த அனைவரும் உணர்ந்தனர். குறிப்பாக, மார்கியூசின் 'காமமும் நாகரிகமும்' (Eros and Civilization) என்ற நூல் ஃபிராய்டையும் மார்க்சையும் இணைக்க முயன்றது. 1970களில் மாணவர் கிளர்ச்சிக்கான ஒரு விளக்கத்தைத் தனக்குள் கொண்டிருந்தது என்ற முறையில், 'ஒற்றைப் பரிமாண மனிதன்' (One Dimensional Man) என்ற நூல் மார்கியூசின் புகழுக்குக் காரணமாயிற்று. தொழில்நுட்ப சித்தாந்தத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர ஆற்றல் பற்றி நம்பிக்கை இழந்த மார்கியூஸ், சமுதாயத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், வெளியேறியவர்களாகிய அடிமட்டத் தவர்களிடம் நம்பிக்கை வைத்தார்: இவர்களோடு, சுரண்டலுக்கும் தொல்லைகளுக்கும் உள்ளாகிய கறுப்பர்கள், மாணவர்கள் ஆகியவர்களிடத்தில்தான் மனித இனத்தின் மிக முன்னேறிய புரட்சி உணர்வும் அளவற்ற சுரண்டலும் சந்திக்கின்றன என்றார். மாணவர்கள் பற்றி இது போன்ற கருத்து மார்க்சிடம் இல்லை. சமுதாயத்திற்கு வெளியிலுள்ள ஒரு சக்தி பற்றிய கருத்து, மார்க்சைக் காட்டிலும் அராஜகவாதிகளையே நினைவுக்குக் கொண்டு வருகிறது. உதிரிப் பாட்டாளிகள் பற்றிய மார்க்சின் கருத்து இதற்கு நேர் எதிரானது.

இரண்டாவது போக்கு அல்தூசர் பள்ளியினுடையது. மார்க்ஸ் பற்றிய நேரிடையான விளக்கம் தருவதாக இது கூறிக்கொள்கிறது. கட்டமைப்பு மொழியியல், மனவியல் ஆய்வு, மானிடவியல் ஆகியவை தற்போது பெற்றிருக்கும் மரியாதையைப் பயன்படுத்திக் கொண்டு, மார்க்சை ஒரு

கட்டமைப்பாளராக (structuralist) புனரமைப்பது அல்தூசரின் நோக்கம். இம்முறையில் மார்க்சியத்துக்கு முற்பட்ட இளம்மார்க்ஸ், பிற்கால விஞ்ஞானவியல் மார்க்ஸ் என்ற ஸ்டாலினியப் பிரிவினையை அல்தூசரும் கடைப்பிடிக்கிறார். இக்கருத்தின் முன்னைய வகைகளில் உள்ளதைக் காட்டிலும் நுணுக்கத் திறனுடன் இதனை வெளிப்படுத்துகிறார். ஒரு சமூக அமைப்பைப் புரிதலுக்கான திறவுகோல், அதன் பகுதிகளின் கட்டமைப்பில் உறவுமுறை - இந்தப் பகுதிகள் அந்த அமைப்பின் நெறிப்படுத்தும் விதியால் ஒருங்கிணைதல் என்பதாகும். காலச் சார்பற்ற ஒரு அறிவியற் கொள்கைக்கான அல்தூசரின் தேடல், காம்டேயை நினைவுபடுத்துகிறது. இத்தேடல், வரலாற்றையும், மெய்யியலையும் புறக்கணிக்கிறது. இம்முறை, மார்க்சின் படைப்பை, 1845-ஐ மையப் புள்ளியாக வைத்து இருவேறுபட்ட கருத்தியல் கட்டமைப்புக்களாக வெட்டிவிடுகிறது. மார்க்சை ஒரு மனிதாபிமானியாக, அல்லது ஒரு ஹெகலியனாக அல்லது ஒரு வரலாற்றியலாளராக மட்டும் பார்ப்பதை நாம் மறுத்துவிட வேண்டும். கிரன்டிரிசே வெளியிடப்பட்ட பிறகும், பிற்கால மார்க்சில் மனிதநேயப் பண்பு அல்லது ஹெகலியப் பண்புகள் இல்லை என்று மறுப்பது சரியில்லை. தன்னளவில் வரையறுக்கப்படாததும், மார்க்ஸ் பயன்படுத்தும் கருத்தாக்கங்களிலிருந்து வேறுபட்டதுமான ஒரு முறையியலைக் கொண்டு, 'உண்மையான' மார்க்சை வெளிப்படுத்துவதாகக் கூறிக் கொள்வதும் சரியில்லை.

மார்க்ஸ் கூறியதற்கு வேறுபட்டதாக இருந்தபோதிலும், அல்தூசரின் சிந்தனைகள் பெரும் வெற்றி பெற்றுள்ளன. காரணம், அல்தூசரின் மார்க்ஸ், இருத்தியலிலிருந்தும் கிறித்துவத்தின் தீவிரப் போக்கலிருந்தும் முற்றாக வேறுபட்டவர். இம்முறையில் அவர்களுடன் நடத்தும் 'உரையாடலால் தமது ஈடுபாடு நீர்த்துப் போகிறது என்று கருதுபவர்களுக்கு இந்த மார்க்ஸ்

கவர்ச்சியானவர். கோட்பாட்டு ரீதியினலான பகுப்பாய்வுக்கு இது தரும் அழுத்தமும் அனுபவ ரீதியிலான வேலையின்பால் வெறுப்பும், அறிவாளிகளுக்கு உகந்ததாக உள்ளது. மார்க்சைத் திருத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அத்தகைய திருத்தங்கள் உண்மையில் மார்க்சை திரும்பக் கண்டறிவதாகக் கூறுவது அறிவுடைமையாகாது.

உலக அரங்கின் மையமாகவும் எதிர்காலப் புரட்சிகளுக்கான களமாகவும் ஐரோப்பாவையும் வடஅமெரிக்காவையும் கருதிய மார்க்சை, மூன்றாவது உலக நாடுகளின் மக்கள் தமக்கு ஆசானாக பெருமளவில் மதிப்பது ஒரு புதிர். வரலாற்று வளர்ச்சி பற்றிய தனது கோட்பாட்டிற்கான ஐரோப்பிய வரையறைகளைப் பற்றி மார்க்ஸ் தெளிவோடு இருந்தார். ஆசிய உற்பத்தி முறை பற்றி அவர் பேசிய போதிலும், வரலாற்று வளர்ச்சி பற்றிய தனது திட்டத்தில் அதை இணைத்துக் கொள்ளவில்லை. இந்த உற்பத்தி முறை, இயங்காத்தன்மையது என்றும் உலக முழுவதிலும் முதலாளியம் பரவும்போது இது வெல்லப்படும் என்றும் மார்க்ஸ் கருதினார். இம்முறையில் முதலாளியத்தைப் பற்றிப் பேசியது போலவே காலனியாதிக்கம் பற்றியும் இரு பொருள்பட மார்க்ஸ் பேசினார். இரண்டுமே அழிவைச் செய்பவை. மனிதத் தன்மையற்றவை. அதே சமயம், ஒரு புதிய சமூக அமைப்புக்கு அடிப்படையாக இருப்பவை என்ற முறையில் புத்தாக்கம் உடையவை. இந்தியாவில் பிரிட்டிசார் பற்றிய மார்க்சின் பகுப்பாய்விலிருந்து இது தெளிவாகிறது. ஆப்பிரிக்க சோசலிசமோ அல்லது சீனக் கம்யூனிசமோ மார்க்சுக்கான ஒரு தனித்தன்மையோடுகூடிய விளக்கவுரையை வெளிப்படுத்தவில்லை. பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு நலமும் அதனால் அனுமதிக்கப்படும் அரசியல் சுதந்திரமும் உடைய நாடுகளில் கம்யூனிசத்திற்கான புரட்சியை எதிர்பார்த்தார். ஆயினும், அரசியல் சுதந்திரம் ஓர் ஆடம்பரம். தங்களால் அதைத் தாங்க முடியாது என்பதான பற்றாக்குறை உள்ள நாடுகளில் மார்க்சின் கோட்பாடுகள் பெரும் வெற்றி

பெற்றுள்ளன. வளரும் பல நாடுகளில், தேசிய, உணர்வோடு கூடிய மார்க்சியத்தின் ஒருவகை நவீனமயமாக்கும் போக்கில் மக்கள் திரள் பங்கு பெறுவதற்கான ஒரு கோட்பாடாகி உள்ளது. மாவோயிசத்தின் மையக் கோட்பாடுகள் – மக்கள் திரள் நெறி, கொரில்லாப் போர்முறையின் நீட்சியாகிய கிராமப்புறம் நகர்ப்புறத்தைச் சுற்றி வளைத்தல் ஆகியவை – மார்க்சின் மூலக் கருத்துக்களிலிருந்து மிக விலகியவை. மார்க்சியத்தின் விரிவான திட்டத்தின் கீழ், மார்க்ஸ் நம்பிய தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் இடத்தை, "வெளிநாட்டுப் பாட்டாளி வர்க்கம்" என்ற முறையில் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க மக்கள் பெறுகிறார்கள் என்பது தெளிவு. அதுபோலவே, மார்க்சின் சுரண்டல் கோட்பாட்டின் இடத்தை ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடு பெறமுடியும்.

திருத்தப்பட்ட – திரிக்கப்பட்ட – மீண்டும் கண்டறியப்பட்ட – மார்க்சின் சிந்தனைகள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மனிதசமுதாயத்தின் ஒரு பெரும் பகுதியினரை இயக்கி வருகின்றன. அதன் வரலாறு – மார்க்சே கூட மறுத்துக் கூற மாட்டாத – இக்னேசியோ சிலோனின் முடிவை நிரூபிக்கிறது.

"சோசலிசக் கோட்பாடுகள் தாமே விஞ்ஞான ரீதியானவை என்று உரிமை கொள்ளும் பொழுதே, அவை தற்காலிகமானவையாகின்றன. ஆயினும் சோசலிச இலட்சியங்கள் நிரந்தரமானவை. கோட்பாடுகளுக்கும் இலட்சியங்களுக்குமான வேறுபாடு போதுமான அளவு ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் இது அடிப்படையானது. ஒரு கோட்பாட்டுத் தொகுப்பிலிருந்து ஒரு பள்ளியை அமைக்கலாம். ஆனால் ஒரு இலட்சியத் தொகுப்பிலிருந்து ஒரு பண்பாட்டை, ஒரு நாகரிகத்தை, மனிதர்களுக்கு மத்தியில் ஒன்றுபட்ட ஒரு புதிய வாழ்க்கை முறையை அமைக்கலாம்."

******

பிற்குறிப்பு:

டேவிட் மக்லெல்லன், பிரிட்டனைச் சார்ந்த ஒரு புகழ்பெற்ற மார்க்சிய ஆய்வாளர், மார்க்சின் படைப்புக்களில் விரிவான ஆய்வினைச் செய்து பல நூல்களை எழுதியவர்.

மார்க்சின் பல்துறை ஆய்வுகளை இவர் கட்டுரை திரட்டித் தருவதோடு இடையிடையே சில கூர்மையான விமர்சனங்களையும் கொண்டுள்ளது. மார்க்சியம் பற்றிய நமது அறிவுச் செழுமைக்கு இவரது கட்டுரையும் விமர்சனமும் தூண்டுதலாக இருக்க முடியும். பிரிட்டனைச் சேர்ந்தவர்களைப் பற்றி மார்க்சின் விமர்சனத்தோடு மக்லெல்லனுடைய கட்டுரையையும் நாம் கற்பது நமக்குப் பயன்படும்.

கலைச்சொல் வளம் மிக்க ஆங்கிலத்திலிருந்து ஒரு கட்டுரையைத் தமிழுக்குக் கொண்டு வருவதிலுள்ள குறைபாடுகளும், கட்டுரைப் பொருளையும் நடையையும் புரிந்து கொள்வதிலுள்ள சில இடர்ப்பாடுகளும் தமிழாக்கத்தைப் பாதித்துள்ளன. சில குறைபாடுகள் நிச்சயமாக, தமிழாக்கம் செய்தவரைச் சார்ந்தவை.

தமிழாக்கமும், குறிப்பும்: ஞானி

~~*

பரிமாணம் – 5

மே 1979

நான் மீண்டும் சொல்கிறேன்
கண்ணை மறைக்கும் கந்தல் துணியை விலக்குங்கள்
இருட்டை நான் எப்போதும் வெறுக்கிறேன்
உன்னதமான ஒளியையே நேசிக்கிறேன்
ஏழை உலகம் எப்போதும்
ஒளியால் நிறைவதையே விரும்புகிறேன்

கறுப்புத் துணியை விலக்குங்கள்
கதிரொளி பரந்த வானத்தைப் பார்க்க விரும்புகிறேன்
என் இறுதி வேளையிலும்
வாழ்வை நேருக்கு நேர் பார்க்க விரும்புகிறேன்
விண்ணில் தவழும் மேகங்களை
பாடும் பறவைகளை
இறுதியாக ஒருமுறை பார்த்துக் கொள்கிறேன்

கந்தல் துணியை விலக்குங்கள்
இருளில் சாவைச் சந்திப்பது
ஒரு மனிதனுக்கு மரியாதையில்லை
வாழ்க்கையை நான் பெரிதும் நேசிக்கிறேன்
பெருமிதத்தோடும் நிம்மதியோடும்
சாவை நான் சந்திப்பேன்

கொலைகாரர்களே முகத்திரையை விலக்குங்கள்
உங்கள் முகத்தை முறைக்காதீர்கள்
எனக்கு மரண தண்டனை வழங்கியவர்களை
நான் நேருக்குநேர் பார்க்க வேண்டும்
இந்த நேரத்தில்
யார் யாரைக் கண்டு பயப்படுகிறார்கள் என்பதை
நான் பார்க்க வேண்டும்
கடைசியாகக் கேட்கிறேன்
கட்டை அவிழுங்கள்

- எட்வர்ட்ஸ் மிஜெலாய்டிஸ்

1. நம்பார்வை

✦ மக்லெல்லன் கட்டுரை பலரால் படிக்கப்படவில்லை. கனமான வி யங்களைக் கற்றுக்கொள்ளும் ஒரு தீவிரமான மனநிலையைப் பலர் பெறவில்லை. இத்தகைய தீவிரமான மனநிலை உள்ளவரே கற்பதைப் புரிந்துகொள்ள, திறனாய்வுடன் செரித்துக் கொள்ள இயலும். மக்லெல்லன் கட்டுரை போன்றதொரு செறிவான, வித்தியாசமான கட்டுரை தமிழுக்குப்புதியது. பிறநாட்டுப் பலகணி வழியேதான் நாம் மார்க்சியத்தைக் கற்றிருக்கிறோம்; கற்கிறோம். தம் தேவைக்கு ஏற்பக் 'குறுகத் தறித்த' மார்க்சியம், பலரது பார்வையை வரட்டுத்தனமாக்கியுள்ளது. மார்க்சியத்தை, அதன் மூலங்களிலிருந்து, திறனாய்வுடன் கற்பது தவிர மார்க்சியத்தைக் கற்றறிய வேறு வழியில்லை. இத்தகைய கல்விக்குப் 'பரிமாணம்' நிதானமாக, உறுதியுடன் முயல்கிறது.

✦ இடையில், 'சகாப்தம்' கல்லெறிகிறது. குறுகிய பார்வை எப்படியெல்லாம் பார்க்கும் என்பதற்கு இது ஒரு சான்று. படிகளுக்கும் பரிமாணத்திற்கும், சிவராமனுக்கும் ஞானிக்கும் வேறுபாடு தெரியவில்லை. ஒரே இதழில், ஒரே பக்கத்தில் இரு வேறு பெயர்கள் இடம் பெற்றால், இரண்டையும் ஒன்றெனமயங்குகிறது. மக்லெல்லன் கட்டுரையைத் திறனாய்வு நோக்கில் கற்கத்தான் 'பரிமாணம்' சொல்லுகிறது. மக்லெல்லனைப் படிக்கவே வேண்டாம் என்கிறது 'சகாப்தம்'. மார்க்ஸ், எங்கல்ஸ் முதலியவர்களின் மார்க்சியத்திற்கு ஆதாரமான நூல்கள் பற்றிய கட்டுரைகளைப் 'பரிமாணம்' நிச்சயம் வெளியிடும். அதற்குள் 'சகாப்தம்' அவசரப்பட வேண்டாம். சிறுவர் பத்திரிகை போலச் 'சகாப்தம்' கல்லெறிவது நன்றாக இல்லை. மார்க்சியத்தைக் கற்க

உதவுவது 'பரிமாணம்'. யாருக்காகவோ யாருடைய திட்டவரையறைக்கோ கோயில் கட்டுவது பரிமாணத்தின் நோக்கமல்ல. பல்வேறு சூழல்களில், பலர் தேவைகளுக்கு ஏற்ப, பல்வேறு உருவங்கள் பெற்றுள்ள மார்க்சியத்தைத் திறனாய்வு நோக்கில் கற்கவே பரிமாணம் விரும்புகிறது. மார்க்சியத்திற்குத் தான் நம் முதல் மரியாதை உண்டே தவிர, மார்க்சியக் குருமார்களுக்கு அல்ல.

✦ இந்திய மெய்யியலுக்கான தொடக்க கால அடித்தளத்தின் திராவிடத்தன்மை பற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன், எஸ்.கே. சட்டர்ஜி முதலியவர் குறிப்பிட்டுள்ளனர். குணாவின் ஆய்வு இவ்வகையில் வலிமையுடையது. பிற்கால வளர்ச்சிபற்றியும் இதேமுறையில் குணா அணுகுவது, விவாதத்திற்குரியது. தவிர வரலாற்றியல், வர்க்கப் பார்வையிலும் ஆய்வு தொடரவேண்டும். குணா எழுதும் விரிவான நூல் இம்முறையில் அமையும் என எதிர்பார்க்கலாம்.

✦ இந்திய வரலாற்றியல் பிரச்னைகளைப் பிருந்தாவின் கட்டுரை அறிமுகம் செய்கிறது. தொடர்ந்து நூலைப் படிப்பது பயன்படும். இந்நோக்கில் மேலும் சில கட்டுரைகளை 'பரிமாணம்' வெளியிடும். தோழர் நாகராசன் தரும் பதில்கள், நிறையத் துணைக் கேள்விகளை, மேலும் பல கேள்விகளை எழுப்பும்: அல்லது மறுக்கவும் படலாம். எழுதுங்கள்.

✦ 'பரிமாணம்' பல சிரமங்களுக்கிடையில் தன் கடமையைச் செய்கிறது. செயலே முக்கியம் என்று கருதுபவர்களுக்கு உடனடியாகப் பரிமாணம் பயன்படாது. மார்க்சியத்தை முற்ற முடிந்த கோட்பாடாக

– நடத்தி முடிக்க வேண்டிய செயல்முறையாக – மட்டுமே கருதுபவர்களுக்குக் கசக்கவும் செய்யும். சிந்தனையற்ற - அடிப்படைப் பிரச்னையில் மேலும் ஆய்வியல் கண்ணோட்டம் கொள்ளாத - வெற்று நடைமுறை, மார்க்சியமாகச் சிறக்க முடியாது. எதற்கும் ஒரு பதிலைக் கைவசம் வைத்திருப்பவர் நிறைந்துள்ள சூழலில், தேட்டத்தில் முனைபவர் சிரமப்படுவது 'நியாயம்' தான்.

✦ தமக்குப் பரிமாணம் கிடைப்பவர் அதற்குரிய தொகையை அனுப்பினால் கூட போதும், 'பரிமாணம்' நிலைபெறும். சுரண்டல் நமக்குள் வேண்டாம்.

***

2. தமிழர் மெய்யியல்

– குணா

உலகம் உண்மையானது என்பது ஒரு பார்வை. அதனைப் பொருள்முதலியல் என்பர். உலகம் பொய்யானது என்பது வேறொரு பார்வை. அதனைக் கருத்து முதலியல் என்பர். நாம் பார்க்கின்ற அல்லது உணர்கின்ற யாவும் மெய்யானவையா. பொய்யானவையா என்னும் கேள்வியைத் தழுவியே ஒருவர் கொண்டுள்ள பார்வையும் விளக்கமும் பெற்ற அறிவும் அமைகின்றன. அது பொருள் முதலா, அல்லது கருத்து முதலா என்னும் கேள்வியைச் சார்ந்ததாகும். அத்தகைய கேள்வியை நடுவமாகக் கொண்டு நடந்த கருத்துப் போராட்டத்தின் நெடிய வரலாறே மெய்யியலாகும். அப்போராட்டம் மார்க்சியம் பிறந்த பின்னர் ஐரோப்பிய நாடுகளில் எழுந்தது மட்டுமாகாது. மாறாக, அனைத்து நாடுகளிலும் நாகரிகங்களிலும் பண்பாடுகளிலும் எழுந்து வரலாற்றின் ஊடே வளர்ந்த நெடும் போராகும். தமிழகம் அதற்கு விலக்கல்ல. இன்னும் கூறுவதெனின், தமிழ்ச் சிந்தனையிலேயே அப்போராட்டத்தின் துவக்க நிலையைக் காணலாகும்.

"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்"
(புறம் 27)

என்றமையும் சங்கத்தமிழ்ப் பாடலில் வரும் கருத்து, உணர்ச்சி என்பது மனத்தாலேயே எழுவது: புறநிலைப் பொருட்களால் அல்ல என்னும் பொருளில் அமையும்.

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி"

என்னும் திருவள்ளுவரின் கருத்துமுதலியல் பார்வைக்கு எதிரானதாக இருப்பதைக் காண்க. அத்தகைய கருத்துமுதலியலின் எல்லைக்கே சென்று உலகம் வெறும்

மாயை எனக் கூறிய அகநிலைக் கருத்து முதலியலை மறுத்துரைக்கும் ஐயாதி சிறுவெண்திரையாரின்

"உடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்கல் உண்மை மாயமோ அன்றே"
(புறம் 363)

என்னும் வரிகளும் அன்று நிலவிய கருத்துமுதலியல் கருத்தோட்டத்தை மறுத்துரைக்கின்ற கூற்றாக அமைகின்றது.

உலகாய்தம்

உலகை ஆய்கின்ற முறை என்னும் பொருளிலான 'உலகாய்தம்', பண்டைப்பொருள் முதலியல் கருத்தோட்டம் ஆகும். அஃது, தோன்றி வளர்ந்து சிறந்து நின்றது தென்னகத்திலேதான் என்பதைச் சாரிபுத்தன் என்பவனும் மொக்கலன் என்பவனும் தென்னாடு வந்துதான் பூதவாதம் என்னும் உலகாய்தத்தைக் கற்றதாகப் புத்தசமயக் கதை ஒன்று குறிப்பிடுவதைக் கொண்டும் அறியலாம். அவ்வுலகாய்தம் உலகில் உள்ள பொருட்களும் உயிர்களும் நிலம், நீர், தீ, வளி என்னும் பொருட்களால் ஆனவை எனக் கருதியது. அவற்றுடன் வானத்தையும் சேர்த்து,

"நிலத்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"
(மரபு - பொருளியல்)

என்னும் தொல்காப்பிய வரிகள் அதனை உரைக்கக் காண்க. அத்தகைய கருத்து, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் வருகின்றது. 'பூதம்' என்பது 'பூ-பூக்கல்' என்னும் வேர்ச் சொல்லிலிருந்தே எழுந்ததாகத் தமிழாய்ந்த பாவாணரும் எடுத்துரைக்கக் காணலாம்.

பூதவியல் கோட்பாடு, பண்படாப் பொருள் முதலியலேயாகும். நிலம், நீர், தீ, வளி என்பவற்றை

அடிப்படைத் தனிமங்களாகக் கருதுவது, அறிவியல் வளர்ந்து, நீரகம் (Hydrogen) போன்ற நூற்றுக்கு மேற்பட்ட தனிமங்களே அடிப்படை நிலைகள் என்பதை உணர்த்தியுள்ள நிலையில், இக்காலத்திற்குப் பொருந்தாது. இருப்பினும், உயிர் அல்லது ஆன்மா என்பது தனித்து நிற்பது – ஒருவர் இறந்த பின்னும் உயிர் வாழ்வது – போன்ற கருத்துக்களை வீழ்த்துவதில் அவ் வுலகாய்தம் அக்கறை காட்டியது மிகவும் சிறப்பானதாகும். அது கடவுட் கோட்பாட்டை மறுக்கின்ற கருத்துக்களஞ்சியமாக அன்றிருந்தது. அன்றைய பார்ப்பனியம் படைத்த அகநிலை, புறநிலைக் கருத்துமுதலியல் நிலைபாடுகளைத்தாக்கி தகர்க்க முயன்ற சிந்தனையோட்டமாக இருந்தது.

'ஆத்திப் பூவும் கருப்புக் கட்டியும் இட்டு, வேறுசில பொருட்களையும் அதனுடன் சேர்க்கையில் மதுவாகிய பானம் பிறக்கின்றது. அதே போன்று நிலம், நீர், தீ, வளி எனும் நான்கு பூதங்களும் ஒரு வகையில் ஒன்றுபடுகையில் தன்னுணர்வு பிறக்கின்றது. அவ்வாறு பிறந்த தன்னுணர்வு, அப் பூதங்களின் கூட்டு அழிய, தானும் அழிந்து படுகின்றது. கூடிய தனிமங்கள் யாவும் பறையின் ஒலி படிப்படியாக ஒய்ந்து விடுவதைப் போலக் கெட்டுத் தத்தம் தனிமங்களுடன் மீண்டும் சேர்ந்துவிடுகின்றன' என்னும் பொருளில்,

"தாதகி பூவும் கட்டியும் இட்டு,
மற்றும் கூட்ட, மதுக்களி பிறந்தாங்கு,
உற்றிடு பூதத்து, உணர்வு தோன்றிடும்;
அவ்வுணர்வு அவ்வப் பூதத்து அழிவுகளின்
வெவ்வேறு பிரியும், பறையோ கையிற்கெடும்"

(27:263 – 28)

என்னும் மணிமேகலை வரிகளின் வாயிலாக உலகாய்தத்தின் கருத்தை அறியலாம்.

உலகாய்தம் மிகத்தொன்மையானது. சாங்கியம், யோகம் போன்ற தொன்மையான அறிவுப்பள்ளிகள் யாவும் பூதக் கோட்பாட்டை தழுவி நிற்பதைக் கொண்டு அதனை அறியலாம். இருப்பினும், அவ்வுலகாய்தம் இயங்காவியல் (Metaphysical) கூறுகள் பலவற்றைக் கொண்டு இருந்தது அதனுடைய மிகப்பெரும் குறையாகும்.

அது பொறிகளின் வாயிலாகத் தோன்றும் புலனறிவு அல்லது காட்சியளவை (Perceptual Knowledge) மட்டுமே முதலும் முடிவானதுமெனக் கருதியது. அப்புலனறிவு, கருத்தளவை (Conceptual Knowledge) அல்லது பகுத்தறிவு என்னும் நிலைக்கு உயர்ந்து செல்வதை அது மறுத்தது. அதனால், கண்ணால் காண்பது மட்டுமே உண்மை; கருதுகோள் அல்லது உய்த்தறிவு (inference) என ஒன்றில்லை என ஒரு தலையாக வழக்காடியது.

காரணவிளைவுக் கோட்பாட்டையும் உலகாய்தம் மறுத்தது. நெருப்பு காரணமெனின், புகை விளைவு ஆகும், என்னும் உண்மையை அஃது ஏற்க மறுத்தது. காலத்தால் எழுந்த யாதும் காலத்தால் மறைய வேண்டும் என்னும் நிலையைக் கருதி, நெருப்பிருக்கும் போதே புகையிருப்பதனால், புகை நெருப்பின் விளைவாகாதாம். அதாவது, காரணமும் விளைவும் ஒரே நேரத்தில் இருக்க இயலாதாம். காரணம் மறைந்ததுதான் விளைவு தோன்றவேண்டுமாம். அதனைக் கருதி, காரணத்திற்கும் விளைவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என உலகாய்தம் கருதியது. அத்துடன் நில்லாமல், அன்று வழக்கிலிருந்த நிலையாமைக் கோட்பாட்டையும் கண்மூடித் தனமாக எதிர்த்ததன் வாயிலாக அவ்வுலகாய்தம், இயங்கியல் மறுப்பு நிலையை மேற்கொண்டு நின்றது.

அறிவுக்கோட்பாடு (theory of knowledge) பற்றி ஆழ்ந்த விளக்கமின்மையால் விளைந்த மேற்போந்த மாபெரும் குறைகளைப் பயன்படுத்திய அக்காலக் கருத்து முதலியல், அவ்வுலகாய்தத்தின் கொச்சைப் பொருள் முதலியல்

கூற்றுக்களை எளிதில் தூக்கியெறிய முடிந்தது. அதனை ஒரு 'பெருந்தீனிக் கொள்கை' என்றும், 'காமவெறிக் கோட்பாடு' என்றும் அன்றைய பூசாரி வகுப்பும் பழித்துரைக்க நேர்ந்தது.

சாங்கியம்

சாங்கியம் என்பதும் தமிழ் மெய்யியலே ஆகும். சாங்கியமும் யோகமும் ஒன்றையொன்று ஒத்தவை. பெண்ணுரிமைச் சமுதாயத்தில் எழுந்த பெண் வழிபாட்டு முறையைத் தழுவியவை. பெண்ணுரிமைச் சமுதாயம் படைத்த சூல்வளமை மந்திரவியல் (Fertility magic) கருத்துக்களை அடியொற்றியவை. கொற்றவை அல்லது சக்தி வழிபாட்டுடன் உறவுடையவை. உழவுச் சமுதாயத்தில் வேரூன்றி வளர்ந்து படர்ந்தவை. அதனை நாடோடி ஆயர் வாழ்க்கையாகிய ஆரியரின் ஆணுரிமைச் சமுதாயம் படைத்திருக்க முடியாது என்பதைக் குமுகாயவியல் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சாங்கியம், யோகம் போன்ற கருத்துப் பள்ளிகளைப் பார்ப்பனிய மறைக்குள் அடங்கும் வேதியக் கருத்தோட்டங்களாக இருத்துவது தவறு.

சாங்கியம் ஒரு பெண்மைக் கோட்பாடாகும். உலகங்களும் உயிர்களும் பொருட்களும் பெண்ணின் கருவிலிருந்தே எழுந்தவை என்னும் தொல்குடி விளக்கமே சாங்கியத்தின் 'மூலப்பகுதி' என்னும் இயற்கைக் கோட்பாடாக எழுந்தது எனலாம். 'பகுதி' என்பது தூய தமிழ்ச் சொல்லாகும். அப்பகுதியே பின்னாளில் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட சமற்கிருதத்தில் 'பிரகிருதி' என்றானது, 'புவி' என்பது 'பிருதவி' எனவும் 'படி' என்பது 'பிரதி' எனவும் மருவிய சொல்லியல் வரலாற்றைப்பாவாணர் போன்றோர் சுட்டிக்காட்டுவதைக் கொண்டு அதனை அறிவதும் எளிது. 'புருடன்' என்பது சாங்கியத்தில் வரும் ஆண் கூறு. அப்புருடன் என்பது 'புறவாழ்க்கைக்கு உரியவன்' என்னும் ஆணுரிமையைக் குறிப்பதாகும்.

தொல் பொதுவுடைமைச் சமுதாயம் பெண்ணுரிமைச் சமுதாயமே என்பதைக் குமுகாயவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதற்கும் முந்திய மக்கள் நிலையில், குடும்பம் எனும் ஒன்று இல்லாத நிலை இருந்தது ஒரு வரலாற்று உண்மை. அந்நிலையில் பெண்ணே தொல்குலத்திற்குத் தலைவியானாள். பிறந்த பிள்ளையின் தந்தை இன்னான் எனக் கூற முடியாத நிலையில், பிள்ளையைத் தாயின் பெயரைக் கொண்டே குறிப்பிட்டனர். ஆணின் நிலையோ இரண்டாந்தர நிலையாக இருந்தது. அத்தகைய நிலைமைக் குறிக்கும் எச்சமாகவே – ஆணுரிமை எழத்துவங்கிவிட்ட குறிஞ்சிநிலச் சமுதாயத்தின் பிந்திய கட்டத்தில் துவங்கி வகுப்புச் சமுதாயத்தின் எழுச்சி வரையிலான காலவெளியில் – சாங்கிய மெய்யியலின் வித்துக்கள் அமைந்திருக்கலாம். அதனைக் கருதியே 'மூலப்பகுதி' என்னும் பெண்மைக் கோட்பாடு, செயல்செறிவு கொண்டதாகவும் உலகங்களையும், உயிர்களையும் படைத்தளித்ததாகவும்; ஆண் என்பவன் செயல் செத்த வெறும் பார்வையாளன் என்பதாகவும் அமைந்த பகுதி-புருடன் கோட்பாடு தோன்றியிருக்கலாம். அல்லது அது முழுக்க முழுக்க பெண்மைக்குச் சிறப்புத் தரும் மெய்யியல் விளக்கத்தைப் புதிதாக எழுந்த ஆணுரிமைச் சமுதாயத்திற்கு ஏந்திச் செல்வதைக் குறிக்கலாம். மணிமேகலையின் காலத்தில், அப்புருடன் 'ஆன்மா'வை அல்லது உணர்வைக் குறிப்பதென அதன் காலத்திற்கேற்ற ஒரு கருத்து அதன்மீது ஏற்றிச் சொல்லப் பெற்றிருக்கலாம்.

அத்துடன், பண்டைத் திராவிடருக்கே உரிய ஆண்-பெண் உறவையொட்டிய மெய்யியல் விளக்கம் சாங்கியத்தில் விளங்குவதையும் காண்க. 'மூலப்பகுதி' என்னும் முதற்பொருள், பல்வேறு 'படைப்புகளாக' அல்லது உருமலர்ச்சிகளாக (Evolutes) உருப்பெற்றதாம். அவற்றைச்

சாங்கியம் 'இலிங்கங்கள்' எனக் குறிக்கும். இலிங்கம் என்பது 'எல்' எனப்பெறும் ஞாயிறு – இரவு வழிபாடும் 'கந்து' எனும் குற்றி வழிபாடும் கலந்து மயங்கியதால் எழுந்த ஒன்றெனலாம். இன்று, திராவிடர் நாகரிகங்களே என ஃபின்னிய, சோவியத் அறிவியலாரால் கருதப்படும் ஆரியர் வருகைக்கு முந்திய சிந்துவெளி நாகரிகங்களில், எண்ணரிய இலிங்கங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளதையும் கூட இங்குக் குறிப்பிடலாம்.

மூலப்பகுதிக்கு முக்குணங்கள் உண்டாம். சத்துவம், அரசதம், தாமதம் என்பவை அவை. 'சத்துவம்' என்பது ஒளியைச் சார்ந்தது. தூய்மையையும் ஆற்றலையும் நன்மையையும் குறிக்கும். அஃது 'சத்து-உவ்வம்' எனப் பிரிக்கப்படலாம். 'சத்து' என்னும் தமிழ்ச்சொல் 'உண்மை' என்றும் 'ஊட்டம்' என்றும் பொருள்படும். உவ்-உவ-உவ்வம்-உவவம்-உவமை என்பதற்கு ஒப்பானது எனப் பொருள். அரசதம் என்பது பாசத்தைக் குறிப்பதாம். அவாவினாலும், பற்றாலும் பிறப்பதாம். அஃது ஆட்சியைக் குறிக்கும் 'அரசு' என்னும் சொல்லைச் சார்ந்ததெனலாம். தாமதம் என்பது 'தமம்' என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்துப் பிறந்திருக்கலாம். 'தமம்' என்பதற்கு 'இருள்' என்றும் 'சேறு' என்றும் பொருள் உண்டு. தாமதம் என்பது நிலத்தையும் மந்த நிலையையும் உறக்க நிலையையும் குறிப்பதாம். சத்துவம் வெண்மையையும், அரசதம் செம்மையும் தாமதம் கருமையையும் சார்ந்தவையாம்.

இருக்கு வேதத்தில் 'நீருத்தி' என்னும் நீரா மகளைப் பற்றிய குறிப்பு உண்டு. அது ஒரு திராவிடர் பெண் தெய்வமே என சாரத் பட்டேல் போன்ற ஆய்வாளர்கள் குறப்பிடுகின்றனர். அந்நீருத்திக்கு, வெண்மை, செம்மை, கருமை எனும் முக்குணங்கள் உண்டாம். அந்நீருத்திக்கு அரிசியாலான கரியநிறச் சோற்றையே படைத்தனராம். அவ்வகையில், மூலப்பகுதிக்கும், திராவிடரிடையே எழுந்த கொற்றவைக்கும் பொதுவான முக்குணங்களில் ஒரு

பொதுநிலையைக் காணலாம். அவற்றில் தொல்குடி விளக்கங்கள் மலிந்து கிடப்பதையும் பார்க்கலாம். இயற்கையாகிய மூலப்பகுதியிலிருந்தே அதனுடைய முதல், உருமலர்ச்சியாகிய அறிவு பிறக்கிறது என்பது ஒருவகையில் பொருள் முதலியல் விளக்கமே ஆகும். ஆனால் அந்த அறிவிலிருந்து பிறந்தது எனப்பெறும் 'அகந்தை' யிலிருந்தே நிலம், நீர், தீ, விளி, விசும்பு எனும் ஐம்பூதங்கள் பிறந்தனவென்பது அதனைக் கருத்தமுதலியலுக்கு இழுத்துச் செல்கின்றது. அத்தகைய ஐம்பூதங்களிலிருந்து உள்ளம் பிறந்ததென்பது மீண்டும் பொருள்முதலியலாகும். அவ்வுள்ளத்திலிருந்தே ஐம்பொறிகள் தோன்றின என்பது மீண்டும் கருத்துமுதலியலாகும். அந்த ஐம்பொறியிலிருந்து ஐம்பொறிகள் தோன்றின என்பது மீண்டும் கருத்துமுதலியலாகும். அந்த ஐம்பொறியிலிருந்து சொல்லுறுப்புகள் அல்லது தன்மாத்திரைகள் ஐந்தும் எழுந்தனவென்பது பொருள் முதலியலாகும். அவ்வகையில் சாங்கியம் நிலையானதோர் உலகப் பார்வையின்றிப் பொருள்முதலியலுக்கும் கருத்துமுதலியலுக்கும் இடையில் ஊசலாடுவதைக் காணலாம்.

போதாமைக்கு, பிற்காலச் சாங்கியம் புருடன் எனும் ஆண் கூற்றைப் பெரிதுபடுத்தி, புருடன் ஒரு மேற்பார்வையாளன் அல்லது ஆண்டான் அல்லது ஆட்சியாளன் என்னும் நிலையைத் தோற்றுவித்தது. புருடனை ஆன்மாவுடன் சமப்படுத்தியது முற்றியலும் கருத்துமுதலியலில் விழுந்தது.

ஒட்டுமொத்தமாக, சாங்கியத்தில் மேலோங்கி நின்ற பொருள்முதலியல் கூறுகள் காலப்போக்கில் தேய்ந்து வருவதையும்; தொடக்ககாலச் சாங்கியம் ஓரளவு பேய்வழிபாட்டுடன் மயங்கி நிற்பினும், அஃது கடவுள்மறுப்பு நிலையைக் கொண்டிருந்ததையும், சிறப்பாக எடுத்துரைக்கலாம்.

காரணவிளைவு உறவுபாட்டைப் பற்றிச் சாங்கியம் கூறுகையில் காரணமும் விளைவும் ஒன்றையொன்று ஒத்தவை எனக் கருதுகின்றது.

சாங்கியத்தில் சிறப்பானவற்றில் ஒன்று, அதனுடைய இருமையியல் (Dualism) ஆகும். அஃது மூலப்பகுதியென்னும் இயற்கைக்கும் புருடன் எனும் ஆன்மாவிற்கும் இடையிலான உறவு, முற்றிலும் வேறுபட்ட இருவேறு உண்மைகளுக்கிடையிலான உறவாகும் எனக் கருதுவதால், இருமையியல் கோட்பாடாகும்.

மூலப்பகுதிக்கும் புருடனுக்கும் இடையிலான உறவு குருடனுக்கும் முடவனுக்கும் இடையிலான உறவைப் போன்றதாம். குருடனுக்குப் பார்வை இல்லை. முடவனுக்கு கால் இல்லை. ஆயினும், அவர்கள் நண்பர்களாம். முடவன் குருடனின் மீது அமர்ந்து கொண்டு குருடனுக்கு வழி காட்டுவதைப் போல, முடவனாகிய புருடன், குருடனாகிய மூலப்பகுதிக்கு வழிகாட்டுகின்றானாம். அவற்றிற்கு இடையிலான முடவன் - குருடன் உறவினாலேயே மூலப்பகுதிபடி முறை வளர்ச்சிக்கு உள்ளாகிறதாம்.

அத்தகைய சாங்கிய இருமையியல், இயங்கியல் எதிர்ப்பு - இயங்காவியலே ஆகும். அன்று ஒருமையியல் (Monistic) கருத்து (விளங்கி) இல்லாமல், இருமையியல் கருத்து மட்டும் (விளங்கி) இருக்க முடியாது என்பதைக் குறிப்பால் உணர அது உதவுகின்றது. அத்தகைய விளக்கங்கள், சாங்கிய மெய்யியலைச் சார்ந்து நின்றவர்களிடையே கூட நிலவி வந்திருக்கலாம்.

யோகம்

அடுத்து, யோக மெய்யிலும் திராவிடர்களிடையே எழுந்த மந்திரவியல் நோன்புப் பயிற்சியாகும். மொகஞ்சதாரோவில் கிடைக்கப் பெற்ற யோகநிலையில் அமர்ந்திருக்கும் சிவனும், யோகநிலையில் தவம் கிடப்பது

போன்ற படிமங்களும் யோகநெறி ஆரியருக்கு முந்தியது என்பதைப் புலப்படுத்துவதாக கே.எம். பணிக்கர் போன்றோர் எடுத்தியம்பியுள்ளனர்.

ஆனால் யோக மெய்யியல், சாங்கியத்திற்கு மாறாக, முற்றிலும் ஓர் ஆணுரிமைச் சமுதாயத்தில் பிறந்திருக்க வேண்டும். ஏனெனில், சக்தி என்னும் பெண்மை நிலையுடன் ஆண்மைநிலை ஒன்றுபடுவதே யோகமுறையின் அடிப்படை. ஓகம் அல்லது யோகம் என்றாலே, 'இணைதல்' அல்லது 'கலத்தல்' எனப் பொருள். மூலாதாரத்தில் சுருண்டு கிடப்பதாகக் கருதப்படும் 'குண்டலினி' என்னும் பாம்பு, யோகநிலையில் நீண்டு, முதுகெலும்புத் தண்டின்மீது இருப்பதாகக் கூறப்படுகின்றன. ஐந்து தாமரைகளின் ஊடாகக் கடந்து நெற்றியிலான ஏழாம் தாமரையை எட்டும்போது சத்தி என்னும் பெண்மை நிலையோடு ஒன்றிக் கலந்து சத்தியாவதே அதன் பொருளாம்.

பெண்ணுரிமைக்கும் ஆணுரிமைக்கும் இடையில் விளங்கிய நீண்ட நெடும் போராட்டத்தைப் பற்றிப் புகழ்வதே அம்மையப்பன் பற்றிய தொன்மக்கதை, கரகம் ஆடுதல் போன்றவற்றில் உள்ளடங்கும் கருத்து என்பதை ஆய்ந்தோர் எடுத்துக் கூறியுள்ளனர். அக புற வாழ்க்கைகளிலான தலைமை முற்றிலும் ஆணுக்கே அமைந்தது வகுப்புச் சமுதாயத்தில் தான். வகுப்புச் சமுதாயத்தின் துவக்கநிலையில், பெண்வடிவிலான பேய்த்தெய்வங்களுக்கும் வெறியாட்டு நடத்துகின்ற உரிமை, 'பொறையாட்டி' எனப் பெற்ற பெண் பூசாரிகளிடமே அமைந்தது. பெண்ணுரிமைச் சமுதாயத்திற்கும் ஆணுரிமைச் சமுதாயத்திற்கும் இடையிலான ஒரு குறுகிய காலத்திற்குப் பெண் உடை பூண்ட பேடிகளும் அலிகளுமே பூசாரிகளாக அமைந்தனர். இன்றும் கூட சக்தி வழிபாடு நடத்தும் பூசாரிகள், பாவாடை போன்ற பெண் உடுப்புப் பூண்டே பூசை நடத்துவதைக் காணலாம். அவ்வகையில் சத்தியாகிய பெண்மை நிலையை எய்துவதே சக்தி வழிபாட்டினர்

செய்யும் யோகப் பயிற்சியின் உட்கருத்தாம். ஆகவே, அஃது சாங்கியத்திற்குப் பின் வந்தது என்பதை உய்த்தறியலாம். மூலப்பகுதியின் உருமலர்ச்சிகளாகச் சாங்கியம் இருபத்தைந்து நிலைகளைக் கூறுகின்றது. யோக மெய்யியல் அவற்றுடன் 'கடவுள்' என்பதையும் சேர்த்து அவை இருபத்தாறு எனக் குறிப்பிடுகின்றது. கருத்துமுதலியல், மூடுமந்திரவியல் (Mystical) கூறுகளை மிகுதியாகக் கொண்டுள்ளது.

நடைமுறை ஒழுக்கங்களைப் பற்றி மிகுதியாகப் பேசுகின்ற யோக மெய்யியல், எண்வகைப் பயிற்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. புலனடக்கல் (இயமம்), ஒழுக்கம் (நியமம்), இருத்தல் (ஆசனம்), உயிர்ப்பு அடக்கல் (வளிநிலை), தொகைநிலை, பொறைநிலை, ஊழ்கம் (தியானம்), மெய்ம்மறந்தமை அல்லது அறிதுயில் (சமாதி) ஆகியவை அவை.

மெய்ம்மறந்த அறிதுயில் நிலையில் ஞாயிறு திங்கள் போன்றவற்றையும் எட்ட முடியும்; பிற உலகங்களிலும் மனத்தால் வலம்வர இயலும்; எரியாத கொள்ளியையும் எரிய வைக்க முடியும்; கல்லினுள்ளும் புக இயலும் என்னும் யோக மெய்யியலின் கருத்து அப்பழுக்கற்ற கருத்து முதலியலே ஆகும். 'தெளிந்த அறிவு' என்பது சொல்லும் பொருளும் இழந்து புறநிலைத் தன்மை அற்ற வெறும் கருத்தாக மட்டுமே அமைவது என்பதும்; புறப்பொருளினால் பிறக்காத 'வித்தில்லா' அறிதுயிலைப் பற்றி உரைப்பதும்; மனித ஆற்றலுக்கு அப்பாலான தெய்வ ஆற்றலை யோகப் பயிற்சியின் வாயிலாகப் பெறமுடியும் என்பதும்; சித்தாடலைப் பற்றிப் பேசுவதும் அதனைக் கருத்துமுதலியல் நிலையில் இருத்துகின்றன. யோக மெய்யியலின் விளைநிலம், தொல்குடி மந்திரவியல் தான் என்பதைப் புலப்படுத்துகின்றன.

சமணம்

அடுத்து வருகின்ற சமணம், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே தமிழகத்தில் பரவி இருந்தது என

ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வடக்கிலிருந்து வந்த கொள்கை எனினும் சமண மெய்யியலில் திராவிடர் சிந்தனைக் கூறுகளே மேலோங்கி நிற்கின்றன. குறிப்பாக, சமணம் வளர்த்த ஊழ்க் கோட்பாடு, காரணவிளைவுக் கோட்பாட்டை வரம்பின்றி நீட்டியதால் திராவிடர்களிடையே எழுந்த கருத்தோட்டமே என எஸ்.கே. சாட்டர்ஃசி போன்றோர் எடுத்துக் கூறி, அதனால் சமணம் திராவிடச் சிந்தனையே எனக் குறிப்பிடக் காண்க.

சமண நெறியைப் படைத்தது ஆரியருக்கு முந்திய திராவிடர்களே என என்ரிச் ஃசிம்மர் என்பாரும் கூறியுள்ளார். 'ஆரியர் வாழ்வதற்கு முன்னர் இங்கு வாழ்ந்து வந்த திராவிட மக்களின் சமயம் சமணமாக இருந்தால், அது திராவிட மக்களின் நாகரிகம் எனக் கூறுவதே சரி' என டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியாரும் சுட்டிக் காட்டியுள்ளார். சமணப் பண்பாடு, வேத காலத்திற்கு முந்திய திராவிடர் பண்பாட்டை ஒத்தது என டாக்டர் மேத்தா என்பவரும் விளக்கியுள்ளார். 'வெண்சமணர்' எனக் குறிப்பிடப் பெறுகின்ற ஆசீவகர்கள், முதுமக்கள் தாழியில் அமர்ந்தே தவம் செய்ததை

"தாழியிற் பிணங்களும் தலைபடா வெறுந்தவப்
பாழியிற் பிணங்களுந் துளப்பெழப் படுத்தியே"

என்னும் தக்கயாகப் பரணியும் பிணத்தைத் தாழியில் அடக்கம் செய்யும் வழக்கை அடியொற்றி, அந்த ஆசீவகம் திராவிடர் மெய்யியலே எனக் கூறலாம்.

சமணம் படைத்த அணுக் கோட்பாடும் கூட சமணத்திற்கு முன்பு விளங்கிய பூதவியல் கோட்பாட்டை அடியொற்றி எழுந்தது எனக் கூறலாம்.

சமணம் செப்புகின்ற மெய்யியல் தனிமங்கள் ஒன்பதாகும். அவை

1. உயிர்கள் (சீவன்கள்)
2. உயிரல்லவை (அசீவன்கள்)

3. நல்வினை
4. தீவினை
5. வினைப் பொருளாகிய அணு உயிரில் ஊறுதல் அல்லது 'ஊற்று'
6. வினைப் பொருளால் உயிர் கட்டுண்டு கிடத்தல் அல்லது 'கட்டு'
7. வினைப்பொருள் உயிரில் ஊற்றெடுப்பதை அடைப்பது அல்லது 'செறிவு'
8. உயிர்அவ் வினைப்பொருளை உதிர்த்தல் அல்லது 'உதிர்ப்பு'
9. பொருளிலிருந்து அவ்வுயிர் பெறுகின்ற விடுதலை அல்லது 'வீடு' என்பனவாம்.

சமணர்களின் கருத்தில், உயிர்கள், 'பகுத்தறிவுடையவை' 'பகுத்தறிவில்லாதவை' என இருவகைப்படும். உலகியலைச் சார்ந்தவை, விடுதலை பெற்றவை என இருவகையாகும். நிலை பெயர்பவை, நிலை பெயராதவை என மீண்டும் இருவகைப்படும். நிலைபெறாதவை என்பவை மண்ணாலானவை, நீராலானவை, தீயாலானவை, காற்றாலானவை, தசையினாலாகியவை என ஐவகைப்படும். நிலைபெயர்பவை – ஈரறிவுடைய நத்தையும், மூவறிவுடைய எறும்பும், நான்கறிவுடைய நண்டும், ஐயறிவுடைய பறவையும் ஆகும்.

உடலென்பது ஐவகை. அவை; கருமன் உடையன, நீர்மைத் தன்மையன, செரிப்பன, ஒளிர்வன, வினைப்படுவன என்பவை.

பொருட்கள் அறுவகைப்படும். அவற்றில், இயக்கம் (தருமம்), ஒய்வு (அதருமம்), நிலன், (Space) புன்பொருள் (புற்கலம்) என்பவை முதல் நான்கு உயிர்கள், பொழுது என்பவை மற்றவை.

நிலனும் பொழுதும் பற்றிய சமணரின் கருத்து, பொருள்முதலியல் சார்புடையது. அஃது தொல்காப்பியம்

நிலனையும் பொழுதையும் 'முதற்பொருள்' எனச் செப்புவதை ஒத்ததாகும். தொல்காப்பியம் கி.மு. 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனப் பாவாணர் போன்ற ஆய்வாளர்கள் கூறுவது ஏற்புடைத்ததேயாகும். ஏனெனில் தொல்காப்பியத்தில், கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் குறிப்பு யாதுமில்லை. சிவனைப் பற்றிய நேரடியான குறிப்பும் இல்லை. தொல்காப்பியர், நிலனையும் பொழுதையும் பொருட்களை ஏந்தி நிற்கும் ஏந்துகலங்களாகக் குறிப்பிடுவது (கி.மு. 3-ஆம் நூற்றாண்டளவில்) பண்டைக் கிரேக்கத்தில் அரிச்டாடில் நிலனைப் பற்றி 'இயக்கவியல்' (Physics) என்னும் நூலில் குறிப்பிடும் கருத்துக்களை மிகவும் ஒத்ததாக இருப்பதையும் இங்கு எடுத்துரைக்கலாம். இயக்கமும் ஓய்வும் நிலனும் பொழுதும் கூடப் பொருட்களே எனச் சமணம் கூறுவது, முதிராப் பொருள் முதலியல் கருத்தே ஆகும்.

சமணர்களின் கருத்தில், அணுக்களே பொருட்களின் அடிப்படைக் கூறுகள். தொடக்கக் காலச் சமணத்தின் கருத்தில், அத்தகைய அணுக்கள் எவராலும் படைக்கப் பெற்றவை அல்ல. அவற்றை உடைபடாத பரமாணுக்கள் என்றும்; அப் பரமாணுக்கள் கட்டுகின்ற ஈரணுக்கள் என்றும் சமணர்கள் வகுத்தனர். அப்பரமாணுக்கள் ஒன்றோடொன்று இணைவதினாலே உலகங்கள் யாவும் பிறக்கின்றனவாம். சமணம் கூறுகின்ற நிலம் நீர் தீ வளி என்னும் நால்வகை அணுக்கள் ஒரே மாதிரியானவை அல்லவாம். அதாவது சமணரின் அணுக்கோட்பாடு (Heterogeneous Atom Theory) சீரின்மை அணுக்கோட்பாடு ஆகும். அஃது பண்டைக் கிரேக்கத்தில் டெமாக்கிரடசு போன்றோர் படைத்த சீரணுக் கோட்பாட்டிற்கு (Homogeneous Atom Theory) மாறானது. அணுக்களுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை எனும் கருத்தில்,

"ஆதி இல்லாப் பரமா ணுக்கள்"

(மணிமேகலை 27:126)

எனக் கூறுகின்ற சமணரின் நிலைபாடு, கடவுள் மறுப்பு நிலையையே கொண்டுள்ளதை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

பொருட்கள் உண்மையானவை எனக் குறிப்பிடுகின்ற சமணம், அப் பொருட்கள் 'உள்ளமை' என்பதற்கு, அவை தோன்றுதல், நிலைத்தல், மடிதல் எனப் பொருள் கூறுவது இயங்கியல் நிலைபாடாகும்.

"ஆன்ற பொருளதன் தன்மைய தாயும்
தோன்றுசார் வொன்றின் தன்மைய தாயும்
அனித்தமும் நித்தமும் ஆகிநின்று,
நுனித்த குணத்துஓர் கணத்தின் கண்ணே,
தோற்றமும் நிலையும், கேடும் என்னும்
மாற்றரு மூன்றும் ஆக்கமும் உரித்தாம்"

என்னும் மணிமேகலையின் (27:177-182) வரிகளும் அதனை மெய்ப்பிக்கின்றன.

இந்நிலையில், சமணநெறியில் பற்பல பொருளற்ற சடங்குகளும் நோன்புகளும் இருப்பினும்; சமணத்தில், ஒட்டுமொத்தத்தில், பொருள்முதலியல் கூறுகளும் இயங்கியல் தனிமங்களும் மேலோங்கி இருப்பினும், சமணத்தினும் கருத்து முதலியல் கூறுகள் மிகுதியாக விளங்குகின்ற புத்த மெய்யியலையே பலர் பெரிதுபடுத்திப் பேசுவதன் நோக்கம் இங்கு ஆராயத்தக்கதாகும்.

காரணவிளைவுக் கோட்பாட்டை மிகைப் படுத்தி, நல்வினைக்கு நல்வினையும், தீவினைக்கு – பல பிறப்பெடுப்பினும் - தீவினையும், விளைவுகளாக வந்து விளையும் என்னும் ஊழ்க் கோட்பாடு சமணர்களால் 'முறை' அல்லது 'விதி' என்னும் பொருளிலேயே குறிப்பிடுகின்றது. அத்துடன் கி.மு. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'சியாதவாதம்' என்னும் ஐயுறவுக் கோட்பாடும், ஓரளவுக்குக்

கடவுள் மறுப்பு நிலைக்கே கொண்டு செல்வதையும் சிறப்பாகக் காணலாம்.

இறுதியாக, சமணம் ஒரு பன்மையியல் கோட்பாடாகும். அஃது பொருட்களும் அவற்றையொட்டிய கருத்துக்களும் சிந்தனைகளும் பன்மை நிலையிலேயே இருப்பதாகக் கூறுகின்றது. அஃது அன்று வழக்கிலிருந்த பொருள் – ஆன்மா என்பவற்றையொட்டிய ஒருமையியல், இருமையியல் நிலைபாடுகளை மறுக்கும் முகமாக அமைகின்றது.

புத்தம்

அடுத்து, தமிழ் மெய்யியல் மீது பெரும் செல்வாக்கு வகித்தது புத்த மெய்யியல் ஆகும். திராவிடர்களிடையே அரும்பிய ஊழ்க் கோட்பாடு, வாழ்க்கையும் இளமையும் பொருளும் நிலையாமைக் கோட்பாடு, பேதைமை என்னும் மன நிலையிலிருந்தே உலகங்களும் பொருளும் எழுந்தன என்னும் கருத்து ஆகியவை – வடக்கே பிறந்தன எனினும் புத்த சிந்தனையின் விளைநிலம் பண்டைத் திராவிட மெய்யியலே என்பதைப் புலப்படுத்துகின்றன.

அசோகருடைய காலத்திலே புத்தமதம் தமிழகத்தில் நன்கு பரவி இருந்ததாம். புத்த சமயத்தைச் சேர்ந்த கூலவாணிகன் சாத்தனார், இளம்போதியார் போன்ற புலவர்களின் பாடல்கள் பல சங்க இலக்கியத்தில் உள்ளன. புத்த சாதகக் கதை ஒன்று அகத்தியர் தென்புலம் வந்தது பற்றிக் கூறுகிறது. அகத்தியர் என்னும் முனிவர் வடக்கிலிருந்து தென்னகம் வந்து காவிரிப் பூம்பட்டினத்திற்கு அருகில் ஒரு காட்டில் தவம் புரிந்து வந்தாராம். அந்த அகத்தியர் அவலோகேதிசுவரர் என்னும் புலவரிடம் தமிழ் பயின்றதாகப் புத்தமித்திரனார் என்பார் குறிப்பிடுகின்றாராம்.

"ஆயும் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன்
கேட்டு – ஏயும் புவனிக்கு இயம்பிய தண் தமிழ்"

என வீரசோழியத்தின் பாயிரம் கூறுகிறது.

தமிழகத்திலிருந்து சென்று நாளந்தா பல்கலைக் கழகத்தில் தலைமைப் பேராசிரியராக இருந்த தம்மபாலரும் **அபிதம்மாக்க சங்கிரகம்** என்னும் நூலை இயற்றிய அநிருத்திரரும், காஞ்சியைச் சேர்ந்தவர்களாம். திரிபிடகங்களில் ஒன்றான சூத்திரபிடகத்தின் பல பகுதிகளுக்குப் பாலி மொழியில் உரை எழுதியவர்கள், தம்மபால மகாதேரர், புத்த தத்ததேரர் போன்ற தமிழர்களே ஆவர். மகாயான புத்தத்தைச் சார்ந்த விஞ்ஞான வாதத்தைக் கண்டவர் தின்னாகர் என்னும் தமிழரே. தியான மார்க்கம் என்னும் புத்த சமயப் பிரிவை நிறுவிய போதிசேனர் என்னும் தமிழரே, சீனத்தில் அதைப் பரப்பினராம். யப்பானில் அது ஃசென் (zen) புத்தம் எனக் கூறப்பெற்றது. தந்திரயானம் என்னும் புத்த சமயப்பிரிவை ஏற்படுத்திய வச்சிரபோதி தமிழகத்தைச் சேர்ந்தவர்.

புத்த சமயத்தின் முன்னோடிப் பிரிவாகிய தேரவாதம் (ஈனயானம்) கூட கருத்து முதலியலே ஆகும். மிலிந்த பங்கம் என்னும் ஈனயான நூலை அதற்குரிய எடுத்துக்காட்டாக எடுத்துரைக்கலாம்.

மிலிந்தன் என்னும் அரசன் நாகசேனர் என்னும் புத்த சமயக் குரவரை அணுகி, 'மாட்சிமை தாங்கியவரே, தங்கள் பெயர் தான் என்ன? என்று கேட்டாராம். அதற்கு நேரடியாக விடை தராத நாகசேனர் தம்மைச் சுற்றி நின்ற பிற புத்த சமயக் குரவர்களை நோக்கி, நம்முடைய பெயர்தான் என்ன எனக் கேட்டாராம். அதற்கு அவர்கள் 'நாகசேனர்' என்றனராம். அவ்வாறாயின், தலையைக் காட்டி இது நாகசேனராகுமா என்று கேட்டாராம்.அவர்கள் இல்லை என்றனராம். இல்லை யெனில், பல், தோல், தசை, நார், ஈரல், வேர்வை, குருதி போன்றவை நாகசேனராகுமா எனக் கேட்க, அவர்கள் 'இல்லை' என்றனராம். நாகசேனர் அல்லாதவையால் உருவாக்கப் பெற்ற தம்முடைய முழு உருவம் நாகசேனராகுமா எனக் கேட்க அதற்கும் இல்லை என்றனராம்.

பின்னர் நாகசேனர், மிலிந்தனின் தேரைக் காட்டி அதில் எதுதான் தேர் எனக் கேட்க, மிலிந்தன் விடை தர இயலவில்லையாம். இறுதியில், ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் உருவமும் பெயரும் மட்டுமே உள்ளனவன்றி அப்பொருள் உண்மையில் இல்லை என்னும் 'பெயர் உருக்கோட்பாட்டைப்' புகட்டினாராம். பெயர் உருக்கோட்பாடு அப்பழுக்கற்ற கருத்து முதலியலே ஆகும்.

புத்த சமயத்தினர் ஐந்து கந்தங்களின் தொகுப்பே உடலும் உயிரும் எனக் கூறுகின்றனர். உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, மெய்யறிவு, (விஞ்ஞானம்) என்பவையே ஐங்கந்தங்களாம். அதன்படி, மெய்ம்மைப் பொருள்களான அத்தகைய, ஐந்தொகுப்புகளிலிருந்தே பொருட்கள் பிறக்கின்றன என்பது, அப்பழுக்கற்ற கருத்து முதலியலே ஆகும். மகாயானத்தின் மதியமிக, யோகாச்சாரப் பள்ளிகளைப் பற்றிக் கூறத் தேவையில்லை. கடைந்தெடுத்த அகநிலைக் கருத்து முதலியலே அவை என்பதை அறிவோம்.

மதியமிகம் ஒரு சார்பியல் (Relativistic) கோட்பாடு ஆகும்.

அழிவதொன்றில்லை
ஆவதொன்றில்லை
முடிவதொன்றில்லை
நிலைப்பதொன்றில்லை
தம்மொடு தாம்
ஒப்ப தொன்றில்லை – வேறு
ஆவதொன்றில்லை
இங்குமங்கும்
செல்வதொன்றில்லை. இல்லை ஆமே!

என்னும் மாயை அல்லது சூனியக் கோட்பாடு அதற்குரியதாகும்.

பக்தி இயக்கம்

அடுத்து வருவது, பக்தி இயக்கமாகும். பக்தி இயக்கம் மாந்தன் தனியாளாகி, அந்நிலையில் தனி மனித விடுதலையை நாடுகின்ற நோக்கமுடையதாகும். ஆயினும் தமிழ் இனத்தின் மறுமலர்ச்சியையும், அன்றைய தமிழ் நிலத்தில் விளங்கிய பெருவணிக வகுப்பின் அரசியலையும் ஆட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வர நிலக்கிழார் வகுப்பும் சிறுவுடைமை வகுப்பும் கிளர்ந்தெழுந்த நிகழ்ச்சியையும் அதன் வாயிலாகக் காணலாம்.

வடக்கத்திய சார்பு சமண, புத்த நெறிகளையும், அவற்றை ஏந்தி நின்ற வணிக வகுப்பினையும் எதிர்த்தது. தமிழ் நிலவுடைமை வகுப்பின் வன்முறைகள் கொண்டே நிகழ்ந்தது.

தென்னகமே பக்தி இயக்கத்தின் பிறப்பிடமாகும். தெற்கில் அரும்பிய அவ்வியக்கம் சைதன்யரின் வாயிலாக வங்கத்திற்கும், மராட்டியம், குசராத், பாஞ்சாலம் போன்ற பகுதிக்கும் பரவியது.

பக்தி இயக்கம் வன்முறையைக் கொண்டு புத்த, சமண சமயங்களைத் தமிழகத்திலிருந்து விரட்டியதற்கான காரணங்கள்:

1) முன்னர் தமிழில் சமய இலக்கியங்களையும், கல்வியையும், கேள்வியையும், இலக்கணங்களையும் படைத்த அச்சமயங்கள், பின்னர் பாகதம் (பிரகிருதம்) போன்ற வடதிராவிட மொழிகளிலும் சங்கதம் (சமஸ்கிருதம்) போன்ற செயற்கை மொழியிலும் எழுதவும் உரையாடவும் பழகியதால் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்பட்டது: வடக்கு நோக்கிய பார்வையாகிப் பின்னர் தமிழ்நாட்டின் உணர்வுக்கு எதிராக நின்றது. அதனைக் கருதியே சமணர் பழகிய பாகத, சங்கத மொழிகள் "ஞமண ஞாஞண ஞாணஞோண" மென ஒலிப்பதாகச் சுந்தரர் நகையாடினார். அதாவது அம்மதங்களில் அமைந்த அயல் புலப்பார்வையே காரணம்.

2) கடும் நோன்புகளையும் தவங்களையும் நாடியது:

3) அகநிலைக் கருத்து முதலியல் கற்பனை அளவைகளில் (speculations) ஈடுபாடு.

4) வணிக வகுப்பு நலன்கள்:

5) மக்கள் எதிர்ப்புப் பார்ப்பனியத்துடன் சோரம் போனது போன்றவை எனலாம்.

ஆயினும் பக்தி வழிபாடு சமண புத்த சிந்தனைகள் தோற்றுவித்த வீச்சுக்களிலிருந்து தப்ப முடியவில்லை. மாறாக, அச்சமண, புத்தக் கருத்துக்களையே உண்டு செரித்து நின்றது. கல்வி கேள்வியைப் பொதுவாக்கும் முயற்சி, பேய் வழிபாடு, உயிர்ப்பலி போன்றவற்றை எதிர்த்தது போன்ற நிலைகள் அதனால் எழுந்தவையாகும்.

இங்குச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது, வணிக வகுப்பிற்கும் நிலவுடமை சிறுஉடைமை வகுப்பிற்கும் இடையிலான முரண்பாடு, பெரிதும் சமய, மொழிப் போர்வையைப் போர்த்து நின்றதே ஆகும். தமிழைக் காத்தல் என்பதைக் கருவியாகக் கொண்டு வடதிராவிடச் சிந்தனையோட்டங்களாகிய சமணத்தையும் புத்த நெறியையும் எதிர்த்தது ஆகும். அதாவது தமிழை வகுப்புப் போராட்டத்தை மூடி மறைக்கும் கருவியாகப் பயன்படுத்தியதே ஆகும். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் முதலாளிய இயக்கமாக வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னுடைய வளர்ச்சிக்கு மொழியையே ஒரு கருவியாகப் பயன்படுத்தியது. அப்பக்தி இயக்கம் பயன்படுத்திய செயல் தந்திரத்தின் தொடர்ச்சி ஆகும்.

சைவ சித்தாந்தம், பக்தி இயக்கத்தின் ஒரு பகுதியாகும். சைவ சித்தாந்தம் பொருள் முதலியல் கூறுகளும் கருத்து முதலியல் கூறுகளும் மண்டிக் கிடக்கின்ற அவியலே ஆகும். சைவ சித்தாந்தம் ஆணவம், மாயை, வினை என்னும் மும்மலங்கள் உயிர்களில் பொதிந்துள்ளதாகக் கூறுகின்றது. அவை யாவும் பொய்ம்மைகளாம். அம்மாயை ஒரு

நுண்பொருளாம். மூலப் பகுதிக்கோட்பாடே உள்ளடங்கி இருக்கின்றது எனினும், அம்மாயை, தானே இயங்க முடியாது எனக் கூறுகையில், அது தனித்தியங்க வல்லதாகக் கூறப்படும் சாங்கியத்தின் மூலப்பகுதியிலிருந்து வேறுபட்டதும் ஆகும். மாயையின் அடிப்படைத் தனிமமாக அமைவது 'விந்து' எனச் சைவ சித்தாந்தம் கூறுவது சமணரின் அணுக் கோட்பாட்டை ஒத்ததே ஆகும். ஆயினும் 'விந்து' ஒலி (நாத) வடிவிலானது எனச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அது பொருட்களின் அடிப்படை அணுவாம் என்னும் கோட்பாட்டை மறுக்க முயல்கின்றது.

சைவசித்தாந்தம் இயற்கை இறைமையியலை (Pantheism) தழுவி நிற்கும் அகநிலை ஒருமையியலும் ஆகும். புத்த மெய்யியலின் நொடிப்பொழுதுக் கோட்பாட்டைச் சைவ சித்தாந்தம் மறுப்பது, அதனை இயங்காவியலிலேயே ஆழ்த்துகின்றது.

அடுத்து வைணவத்தைக் குறிப்பிடலாம். அது மால் மதமாகும். மருத நிலப் பண்பாட்டில் எழுந்த சிவ மதத்திற்கும் முந்தியது. முல்லை நிலப் பண்பாட்டில் எழுந்தது. ஒருமையியலை, ஒரு சிந்தனையியலாக முதன்முதலில் வளர்த்த சிறப்பு மால் மதத்திற்கே உரியதாகும். இறைவனை இயற்கையுடன் கலந்து நிற்பவனாக அல்லது இயற்கையை இறைவனாக வடிக்கும் அக்கருத்து, பரிபாடலில் விரிவாக அமைவதை இங்கு குறிப்பிடலாம். உள்ளபடியே, இறைவனிடம் அன்பு வழியில் சரணடைதல் என்னும் பக்தி வழியைப் படைத்தது மால் மதமே. அதனை ஆழ்வார்களின் பாடல்களின் வாயிலாக அறியலாம்.

பார்ப்பனியச் சிந்தனையாளர்களாகிய சங்கரரும், இராமானுசரும் மாதவரும் கூடத் தென்னகத்தைச் சேர்ந்தவர்களாவர். குறிப்பாக, சங்கரரின் ஒருமையியல், சூனியவாத புத்த மெய்யியல் அல்லது மாயாவாதம் என்பதன் மறுபதிப்பாகும். அதில் புதிதாக ஒன்றுமில்லை.

இராமானுசர் வகுத்த சிறப்பு ஒருமையியல், மாதவர் படைத்த இருமையியல் ஆகிய யாவும் ஏற்கெனவே பண்டுதொட்டுத் தமிழ் மெய்யியலில் விளங்கிய கருத் தோட்டங்களின் வளர்ச்சிகளே ஆகும்.

அதே இடைக்காலத்தில் விளங்கிய சித்தர்கள் உருவ வழிபாட்டையும் பொருளற்ற சடங்குகளையும் எதிர்த்திடினும், அச்சித்தர்கள் ஆண்டவன் மனத்திற்கு உள்ளே இருக்கின்றான் என்னும் நிலையைத் தழுவிய அகநிலைக் கருத்து முதலியல் கருத்துக்களையே பெரிதும் வெளிப்படுத்துகின்றனர். சிறு உடைமையாளர்களின் வகுப்புச் சார்பாளர்களாக நிற்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த வள்ளலாரின் காலம் வெள்ளை முதலாளியக் காலனியக் காலமானதால், அதற்கேயுரிய மிதவியல் கருத்துக்களைக் கொண்டுள்ளது. அஃது தமிழின் மற்றொரு மறுமலர்ச்சிக்குத் துவக்கக் காலம் எனக் குறிப்பிடலாம். அதனுடைய தொடர்ச்சியாக பாரதியார் வெளியிட்ட கருத்து முதலியல் அவியல் கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த திராவிடர் இயக்கம் ஒரு நாத்திக இயக்கமாக எழுந்தது. சாதியையும் சடங்குகளையும் மதங்களையும் கடவுட் கோட்பாட்டையும் சாடிய பெரியார் ஈ.வே.ராவின் கருத்துக்கள் பெரிதும் கொச்சைப் பொருள் முதலியலாகவே இருந்தது. மதம் எனும் மயக்கத்தைப் படைக்கின்ற சமுதாய பொருளியல் வகுப்புக்களையும் சுரண்டலையும் தீவிரமாக ஆய்ந்து சமுதாய அடிப்படையை மாற்றுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடாத பெரியார் அவர்கள், கீழ்ச் சாதி மக்களைப் பார்ப்பனரின் கொடுமைகளுக்கு எதிராக மட்டுமே திரட்டினார். அவருடைய கொச்சைப் பொருள் முதலியல் இறுதியில் கருத்து முதலியலுக்கே இட்டுச் சென்றது.

உலகம் மெய்ம்மை என்பதை விளக்கப் புகுந்த பெரியார், தேரவாத புத்தம் படைத்த பெயருருக் கோட்பாட்டையே தழுவி நின்றதை அவருடைய 'பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம்' என்னும் புத்தகத்தில் காணலாம். ஒரு பொருளுக்கு ஒரு பெயரும் ஓர் உருவமும் மட்டுமே இருக்கின்றனவே அன்றி அப்பொருள் உண்மை அல்ல என்பதே அந்தப் பெயருருக் கோட்பாடு என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டேன். அத்தகைய கொச்சைப் பொருள்முதலியல், மூட, நம்பிக்கைகளையும் மதத்தளைகளையும் ஒழிக்கவல்ல முழுமையான கருவியாக இல்லாதது, பெரியார் இயக்கத்தின் சிதைவுக்குக் காரணம் எனலாம்.

இறுதியில் மார்க்சிய மெய்யியல், தமிழகத்தில் தோற்றுவித்த பதிய நிலைமைகளைக் குறிப்பிடலாம். தமிழகப் பொதுவுடைமையர் தமிழ் வரலாற்றிலும் மண்ணிலும் பண்பாட்டிலும் வேரூன்றாத நிலையில், தாங்கள் மனப்பாடம் செய்து வைத்திருந்த மார்க்சிய மேற்கோள்களைக் குருட்டுத்தனமாக ஒப்புவித்து வருவதாலும், மார்க்சியம் என்னும் உலகம் தழுவிய உண்மையைத் தமிழகச் சூழலுக்கு ஆக்கமுறையில் செயல்படுத்தத் தவறியதாலும், தமிழகத்திலிருக்கும் முரண்பாடுகளின் தனித்தன்மைகளையும் அவற்றிற்குரிய தீர்வுகளையும் மார்க்சிய முறையில் ஆய்ந்து செயல்படாததாலும், தமிழகப் பொதுவுடைமை இயக்கம் வளர்ச்சி குன்றி இருக்கின்றது. அதற்குரிய காரணம் அகநிலையிலும் (subjectivism) கருத்து முதலியலும் கொச்சைப் பொருள் முதலியலும் இயங்காவியலும் எனக் கூறுவது பொருந்தும். அத்தகைய குறைகளைக் களைந்து தமிழ் மண்ணிலும் வரலாற்றிலும் மக்களிடத்திலும் விளங்குகின்ற முரண்பாடுகளை இயங்கியல் முறையில் அணுகி ஆய்ந்து தெளிந்து செயல்படுவராயின், அது தேங்கிக் கிடக்கும் அரை நிலவுடைமை முழுக் காலனிய தமிழகத்தில் புதிய சூழ்நிலைமைகளைத் தோற்றுவிக்கும், தமிழகப் புரட்சிக்குரிய முன்னிலைகளைப் படைக்க உதவும்.

வரலாறும் பண்பாடும் அற்ற மக்கள் போல், வீடும் நாடும் மறந்து அனைத்துலக அரங்குக்குள் புகுந்தால் போதும் என்னும் நிலையில், அரைகுறையாய்க் கிளிப்பிள்ளை போல் பிற புரட்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது நின்று இன்றைய அரை முதலாளியச் சூழல் தமிழக வரலாற்றின் ஒரு தனிக் கட்டம் என்பதை அறிகையில் மார்க்சியம் தமிழ்ப்படுத்தப் பெறும், புது விளக்கங்கள் தோன்றும். மார்க்சியம் புகட்டும் பொருள் முதலியல் இயங்கியல் கூட வரலாற்றின் வழியேதான் எழுந்தது. அத்தகைய வளர்ச்சியின் ஒரு பகுதி உள்ளபடியே, தமிழகத்திலேயே நிகழ்ந்தது என்பதை அறிவதும் சிறப்புடையதாகும். அத்தகைய தெளிவு உறுதிப்படுமாயின் தமிழகப் புரட்சி வெற்றி பெறுவது உறுதி.

******

3. 'வரலாற்றியல் நோக்கில் இந்தியா' - நூல் அறிமுகம் : பிருந்தா

- Marxist Views of India in Historical Perspective by Bastiaan Wielenga
  The Christian Literature Society, Madras.

சென்னை கிறித்தவ இலக்கிய சங்கத்தின் இந்திய மார்க்சிய ஆய்வுநூல் வரிசையில் வெளியிடப்பட்டுள்ள டாக்டர்.பாஸ்தியான் வைலெங்காவின் வரலாற்றியல் நோக்கில் இந்தியாவைப் பற்றிய மார்க்சிய கருத்துக்கள் (Marxist Views of India in Historical Perspective by Bastiaan Wielenga. The Christian Literature Society, Madras) என்னும் நூல் ஆசிய சமுதாயங்களைப் பற்றிப் பொதுவாகவும், இந்திய சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பாகவும் மதிப்பீடு செய்கிறது. இந்திய சமுதாய நிலைமைகளை முழுமையாகவும், அது மற்ற சமுதாயங்களிலிருந்து மாறுபட்டு நிற்பதற்கான தனிச்சிறப்பான கூறுகளைப் பற்றியும் மார்க்சும், இந்திய மார்க்சியர்களும் கொண்டிருந்த பார்வையைப் பற்றியும் இந்நூல் ஆய்வு செய்கிறது. எனவே, இந்திய வரலாறு, சமுதாய இயல், மெய்யியல், சமூக அறிவியல்கள், பண்பாட்டியல், மார்க்சியம் ஆகிய பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் கட்சி சார்ந்த–சாராத மார்க்சியர்களுக்கும் வைலெங்காவின் ஆய்வுநூல் விவாதத்திற்கான அடிப்படையாக அமையக்கூடும்.

கிறித்துவ இறையியல் கழகத்தில் பணிபுரியும் வைலெங்கா 'இலெனின் சிந்தனைகள்' எனும் பொருளில் பெர்லினில் ஆய்வு நடத்திக் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இந்நூலின் நீண்ட முன்னுரையில், ஏசு கிறித்துவின் போதனைகளும், மார்க்சின் கோட்பாடுகளும் சமுதாய வளர்ச்சிப் போக்கில் அடைந்த மாற்றங்களுக்கிடையே உள்ள ஒப்புமைகளையும் அடிப்படையில் அவ்விரண்டுக்கு

மிடையில் உள்ள வேறுபாடுகளையும் குறிப்பிடுகிறார். மார்க்சியம் ஒரு சமயமல்ல. கிறித்துவ நம்பிக்கை ஓர் அறிவியல் ஆய்வுக் கோட்பாடல்ல. ஒரு குறிப்பிட்ட களத்திலும், காலத்திலும் தோன்றிய ஏசு கிறித்துவின் போதனைகள் அனைத்தும் தழுவிய நம்பிக்கையாக மாறியிருப்பினும் மதகுருக்கள், திருச்சபைகள், நிறுவனங்களின் பிடியில் சமுதாய மாற்றங்களை ஒட்டியும் எதிர்த்தும் மாற்றங்களை அடைந்துள்ளன. சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட வடிவமான முதலாளித்துவ சமுதாயத்தை ஆய்ந்து ஓர் அறிவியல் கோட்பாடாக மாறிய மார்க்சியமும், கட்சி, நிறுவனங்கள், பொதுவுடைமைத் தலைவர்களின் வழியில் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. ஆசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிடும் வேறு சில கருத்துக்களாவன. பன்னாட்டுப் பொதுவுடைமை இயக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும், பல்வேறு மார்க்சிய விளக்கங்களும், வரைமுறைகளும் ரஷ்யப் புரட்சியும் அதன்பின் சோவியத்தின் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட மாற்றமும், சீனப்புரட்சியும், ட்ராட்ஸ்கிய, செகுவேராப் போக்குகளும் இந்தியாவில் உள்ள பல்வேறு பொதுவுடைமைக் கட்சிகளிலும், அமைப்புகளிலும் அவற்றின் வேர்களைக் கொண்டுள்ளன. இந்திய மார்க்சியர் இந்திய நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்யும் போது மார்க்சிய – வர்க்க ஆய்வு அளவுகோல் கொண்டு பொருளியல் அடித்தளங்கள், சமுதாய மேலடுக்கில் ஏற்படுத்தும் மாற்றங்களைக் கணக்கிட்டனரேயன்றி இந்திய சமுதாயங்களில் பண்பாட்டியல் வேர்களும், அதன் தனிச்சிறப்பு மிக்க கூறுகளும் கொண்டிருந்த பங்கை வரலாற்றியல் பின்னணியில் காணத் தவறி விட்டனர். இதற்கு, அன்று பன்னாட்டுப் பொதுவுடைமை இயக்கங்களுக்கு வழிகாட்டி வந்த பன்னாட்டுப் பொதுவுடைமை அமைப்பு (பன்னாட்டு அகிலம் என்றழைக்கப்பட்ட கோமின்டர்ன்) சில பொதுவான அளவுகோல்கள் கொண்டு மதிப்பீடு செய்யும் போது,

பண்பாட்டியல் கூறுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாததும் காரணமாகும். சாதி அமைப்புகள், சமயங்கள் போன்ற வரலாற்றியல், பண்பாட்டியல் காரணிகளைப் பற்றிய சரியான ஆய்வைக் கொள்ளாமல், பொருளியல் அடித்தளம் சமுதாய மேலடுக்கில் ஏற்படும் மாற்றங்களை மட்டும் காண்பது இயங்கியல் பார்வையில் மார்க்சியத்தைக் கற்றதாகாது. இந்திய முதலாளிய தேசியம், பொதுவுடைமையர் காணத் தவறிய பண்பாட்டியல் காரணிகளையும் இந்தியப் பண்பாட்டுச் செழுமைகளையும் விடுதலைப் போராட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது. சீன, வியத்நாமிய பொதுவுடைமைப் போராடிகள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் கொண்டிருந்த தேசியப் பிணைப்பை இந்தியப் பொதுவுடைமையர் கொண்டிருக்கவில்லை.

மார்க்சியத்திற்கும், ஆசிய தேசியத்திற்கும் பண்பாட்டு வழியில் ஓர் உள்ளார்ந்த முரண் உள்ளது. தொழில்துறை வளர்ச்சி பெற்ற மேலை நாட்டு வழி வந்த மார்க்சியப் பார்வையில் கிராமங்களும், உழவர்களும், உழவர் சமுதாயங்களும் பழமையின் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன. இச்சமுதாயம் வருங்காலத்தில் தொழில் மயமாகவும், நகர்ப்புற மாற்றங்களை அடையவும் வேண்டும். தொழில்துறைப் பாட்டாளிகளே புதிய சமுதாயத்தை ஏற்படுத்தும் புரட்சியின் முடிவான சக்திகள் என்றும், அச்சமுதாயங்களே முதன்மையான பங்கை வகிக்கும் என்றும் உழவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகள் இரண்டாவது இடத்தையே பெறவேண்டும் என்றும் சோவியத் யூனியன் செயல்பட்டது. இவ்வடிப்படை, உழவர்களைக் கொண்ட சீனம் சோசலிசத்தைக் கட்டுவதற்குத் தடையாக இருக்கும் எனக் கருதிய சீனப் பொதுவுடைமையர், சீன சமுதாய நிலைமைகளை ஆய்வு செய்து, தமக்கேயுரித்தான வழியில், உழவர்களைக் கொண்ட

மக்கள் ஜனநாயகப் புரட்சியை நடத்தி மக்கள் கம்யூன்களை 'மாபெரும் முன்னோக்கிப் பாய்ச்சல்' இயக்கத்தின் போது ஏற்படுத்தி, கிராமப்புற மக்களையும், உழவர்களையும் பழி வாங்காமல் — அவர்களை எதிரியாகக் கருதாமல் தொழிலையும், வேளாண்மையையும் வளர்த்தனர். இது சோவியத் உதவியைப் பெரிதும் சாராமல் ஆசிய நிலைமைகளில் சோசலிசத்தைக் கட்டுவதில் புதிய அடிப்படைகளைத் தோற்றுவித்துள்ளது.

மார்க்சின் கோட்பாடுகளையும், ஆசியஉற்பத்தி முறையையும் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் இந்நூலை மூன்று பிரிவுகளாகப் பகுத்துள்ளார். ஆசிய உற்பத்தி முறை வரலாறு பற்றிய மார்க்சின் கருத்துக்களையும், இந்திய மார்க்சியர்களின் மார்க்சையும் இந்திய வரலாற்றையும் பற்றிய கருத்துக்களையும், மார்க்சையும் காந்தியையும் பற்றிய இந்திய மார்க்சியர்களின் மதிப்பீடும் பல்வேறு மாறுபாடுகளைக் கொண்ட மாஸ்கோவின் பாதையும், மாசேதுங்கின் வழிமுறைகளும் இந்தியப் பொதுவுடைமை இயக்கங்களுக்கு எவ்வகையில் நேரடியாகவும், எதிர்மறையாகவும் படிப்பினைகளைத் தர முடியும் என்பதைப் பற்றியும் வைலெங்கா தம் நூலில் மதிப்பீடு செய்கிறார்.

இந்தியாவைப் பற்றி மார்க்சு:

1857இல் இந்தியாவில் ஏற்பட்ட பெருங்கலகமும் சீனத்துத் தைப்பிங் புரட்சியும், வணிக வளர்ச்சியும் மார்க்சு இந்தியாவையும், சீனத்தையும் பற்றி அறியவும் எழுதவும் காரணமாக அமைந்தன. ஐரோப்பியப் புரட்சிகளைப் பற்றி மார்க்சின் ஆய்வு ஆழமாக இருந்தது; ஆயின், இந்திய, சீன இயக்கங்களை அந்தந்த நாட்டு சமுதாய சக்திகளின் அடிப்படையில் மார்க்சு ஆழமாக ஆராயாமல், ஐரோப்பியப் புரட்சிகளுடன் ஆசிய எழுச்சிகளை ஒப்பிடுந்தன்மையுடையன அல்ல எனக் கருதினார்.

இந்தியாவில் ஐரோப்பியரின் வருகை, போர், குடியேற்ற ஆட்சி ஆகியவற்றின் பின்னணியில் மட்டுமே இந்தியப் பெருங்கலகம் ஏற்பட்டதாகவும் சீனத்தில் தைப்பிங் புரட்சி ஆங்கில வணிகம், அபினிப் போர்களின் விளைவாகவே நடந்ததாகவும் மார்க்சு கொண்டிருந்த நம்பிக்கைகளுக்கு, அவர் ஆசிய சமுதாயங்களைப் பற்றிக்கொண்டிருந்த மதிப்பீடே காரணமாகும். ஆசிய சமுதாயங்கள் தம் உள் முரண்பாட்டு இயக்கங்களால் ஐரோப்பிய நிலவுடைமை, முதலாளித்துவ சமுதாயங்கள் போல் வளர்ச்சியுறாமல், தாமே மாறாத - மாறுதலுக்குட்படாது - அந்நிய சக்திகளின் தலையீட்டால் மட்டும் மாற்றம் அடைந்ததற்கான, மூன்று காரணங்களை மார்க்சு கண்டார். நிலங்களில் தனிச்சொத்துடைமையின்மை, பெரிய அளவு நீர்ப்பாசனங்கள் போன்ற பொதுத்துறை அதிகாரங்கள் அரசின் கையில் குவிந்திருத்தல், நிலமும் அதனைச் சார்ந்த உழவும் தொழிலும் பொதுமை உரிமையாக அமைந்து தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொண்ட கிராம அமைப்பு முறை ஆகியவை, தொடர்ந்து மாறுதல்களுக்குட்படாத நிலைமையை ஏற்படுத்தின.

ஆங்கிலேயர் வருகையும், அறிவியலும், தடையிலா வாணிகமும் இந்தியப் பழஞ்சமுதாய அமைப்பை அழித்தொழிப்பதையும், அதேசமயம் அது மனித சமுதாய வளர்ச்சிக்கும் விடுதலைக்கும் வித்திடும் என்றும் அதன் இரட்டைப் போக்குகளையும் தெளிவாக மார்க்சு உணர்ந்திருந்தார். அதாவது அது, ஆசிய சமுதாயத்தை முழுமையாக அழித்து ஆசியாவில் மேற்கத்திய சமுதாய அடிப்படைகளை விதைக்கும் மார்க்சின் சொற்களில் புரட்சியைக் கொணர்வதில் வரலாற்றின் தன்னுணர்வற்ற கருவியாக இங்கிலாந்து செயல்பட்டது எனலாம்.

முதலாளித்துவத்திற்கு முந்தைய சமுதாயங்களின் அடிப்படைத் தன்மையை நிலச் சொத்துரிமையுடன் அதில்

உழைப்பவன் கொண்டுள்ள உறவைக் கொண்டு மார்க்சு காண்கிறார். ஆசிய சமுதாயங்களை நிலச் சொத்துரிமைக்கும் சமூகச் சொத்துரிமைக்கும் உள்ள உறவின் அடிப்படையில் காணவேண்டும். இத்தகைய நிலச் சொத்துரிமைச் சமுதாயங்கள் ஆசியமுறை, பண்டைய (ரோம், கிரீஸ் நாடுகளில் நிலவிய) தொன்மை அமைப்பு, ஜெர்மானிய வடிவம் என்று மூன்று வடிவங்களில் அமைந்திருந்தன. வேலைப் பிரிவினை தோன்றி நகர்ப்புற - கிராமப்புற வேறுபாடுகள் ஏற்பட்ட பின்: 1) ஆசிய முறையில் நகரங்களும், கிராமங்களும் வேறுபாடற்ற இணைவு கொண்டிருந்தன. 2) தொன்மை அமைப்பு, நகரங்களையே மையமாகவும், நிலத்தையும் வேளாண்மையையும் அடிப்படையாகவும் கொண்டிருந்தன.

(3) ஜெர்மானிய வடிவம் (மத்திய காலங்கள்) நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாறாக இருந்தாலும் அதன் பின்னைய வளர்ச்சி நகர, கிராமப்புற முரண்பாடுகளை வளர்த்தன. இந்த முரண்பாடே வளர்ந்து நிலவுடைமையை வெற்றி கொள்ளும் முதலாளித்துவமாக உருவெடுத்து நகர்ப்புற பூர்சுவா வர்க்கத்திற்கு வலிவூட்டுகிறது.

உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றம் அனைத்து உற்பத்திப் போக்கையும், உற்பத்தி செய்வோனையும், புதிய குணநிலைகளையும், உற்பத்தியிலே வளர்ச்சியையும், புதிய கருத்துக்களையும், சக்திகளையும், புதிய தேவைகளையும், புதிய மொழியையும் படைக்கும் போது, ஆசிய உற்பத்தி முறையில் மட்டும் இம் மாற்றங்கள் ஏற்படாமைக்குக் காரணம், ஆசிய கிராமங்களின் தம் தேவையைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் பொருளியல், நிலச் சொத்துரிமை அமைப்பே என்கிறார் மார்க்சு. கீழைச் சமுதாயங்களின் அரசியல் வரலாறு பெரும் இயக்கங்களோ, திரளான வளர்ச்சியோ இல்லாத சாராம்சத்தில் வட்டவடிவ வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தன.

அரை ஆசிய முறை ரஷ்யா சோசலிசத்தை நோக்கி:

1872இல் மார்க்சின் 'முதல்' மொழிபெயர்க்கப்பட்டு, ரஷ்யாவில் வெளியிடப்பட்டபின் ரஷ்ய அறிவாளிகளும் புரட்சியாளர்களும், முதலாளித்துவ வளர்ச்சியைக் கடந்த பின்னரே ரஷியா சோசலிசத்தை நோக்கிப் பயணம் செய்ய முடியுமா என்ற பெரும் கேள்வியை எழுப்பினர். 'மிர்' என்ற கிராமக் குழுமுறைச் சமூக அமைப்பை உடைத்து முதலாளித்துவத்தை வளர்த்துப் பின்னர் உற்பத்தி கருவிகளைப் பொதுமையாக்கும் சோசலிசத்தை அடைவதற்கு மாற்றுவழி இல்லையா என்ற சிக்கலை ஆய்ந்து கற்ற மார்க்சு, புரட்சிக்கு முந்திய 19-ஆம் நூற்றாண்டு ரஷ்யாவை 'அரை ஆசிய முறை' என அழைக்கிறார். இந்தியாவைப் பற்றி மார்க்சு எழுதிய இருபது ஆண்டுகளுக்குப் பின் (1877-இல்) வளர்ச்சி குறித்த பாதையில் ரஷ்யாவில் கிராமக் கம்யூன்களை ஒழித்தாக வேண்டிய தேவையை மார்க்சு ஏற்கவில்லை. ரஷ்ய உழவர்களைக் கடுமையாகச் சுரண்டிய அரசை எதிர்த்து உழவர்கள் தாமாகவே தமது அமைப்புகளை ஏற்படுத்திப் புரட்சிகரமாகக் கிளர்ந்தெழுந்து போராடுவர் என்று மார்க்சும் கம்யூன் வழிப் பொதுவுடைமை வளர்ச்சி என்று 1882-ல் எங்கெல்சும் கண்டனர். பிளெக்கனோவ் முதலிய ரஷ்ய மார்க்சியர்கள் ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி தவிர்க்கவியலாததென்றும் அதன் வழியிலேயே ரஷ்ய பழைய அமைப்பைத் தூக்கியெறிய முடியும் என்றும் கருதினார். 1893-இல் எங்கெல்சும் ரஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சியை ஏற்றுக் கொண்டார்.

மார்க்சின் மறைவுக்குப்பின் ரஷ்யா முதலாளித்துவப் பாதையில் வேகமாக முன்னேறுகிறது. 1905-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ வளர்ச்சியால் கம்யூன்கள் சிதைகின்றன. முதலாளித்துவம் வேகமாக வளர்ந்தாலும், டராட்ஸ்கி கூறுவது போல், முந்தைய சமுதாயக் கூறுகள் முற்றாக மறைந்துவிடவில்லை; மாறிய சூழ்நிலைகளில்

அவை வேறு வடிவம் கொள்கின்றன. மேற்கு ஐரோப்பாவிலிருந்து மாறுபட்ட தனிப் பண்புகளைக் கொண்ட ரஷ்ய சமுதாயத்தை மற்ற ரஷ்ய மார்க்சியர்களை விட இலெனின் மட்டுமே துல்லியமாகக் கண்டார். ஒரு தீர்க்கமான புரட்சியாளரான இலெனின் உழவர்களின் புரட்சிகரப்பங்கையும் ரஷ்ய நிலைமைகளையும் கணக்கில் கொண்டு நடைமுறை முடிவுகளை எடுத்தாலும், கோட்பாடுகளின் பிறப்பு மேற்கு ஐரோப்பிய வழிமுறையையே சார்ந்திருந்தது. இதையே மற்ற ரஷ்ய மார்க்சியர்களும் பின்பற்றினர். நடைமுறைக்கும் கோட்பாட்டுக்குமிடையே ஏற்படும் இந்த இணைவிலாப் போக்கே, பின்னர் ரஷ்யப் புரட்சிக்குப் பிந்திய கட்டங்களில் தடம்புரண்டு போவதற்கான அடிப்படையைத் தோற்றுவிக்கிறது என்று ட்ராட்ஸ்கி கருதினார். இலெனின் ரஷ்ய சமுதாயத்தில் ஆசிய முறைச் சமுதாய எச்சங்களிருப்பதையும், பூர்சுவா வர்க்கம் ஆளும் வர்க்கமாக இல்லாமல் அதிகாரத்துவ சக்திகளே ஆளுகின்றன என்றும் கண்டார். ஜார் அதிகாரத்துவ சக்திகளை வீழ்த்த பூர்சுவாப் புரட்சியின் தேவையைக் கண்ட இலெனின், 1905ஆம் ஆண்டுப் புரட்சியின் போது ரஷ்ய உழவர்கள் காட்டிய புரட்சிகர உணர்வையும் கணக்கில் கொண்டு நிலங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கட்சித் திட்டத்தில் குரல் கொடுக்கிறார். 'இது ஆசியமுறை உற்பத்திக்கு இட்டுச் செல்லும் என்றும் நமக்குச் சீன அமைப்புமுறை வேண்டாம்' என்றும் பிளெக்கனேவ் இதை மறுக்கிறார். ரஷ்ய சமுதாயத்தில் முதலாளித்துவ முறை முன்னோடிப் பங்கு வகிப்பதால் சோசலிசப் புரட்சி ஏற்பட்ட பின் ஆசியமுறை பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்று இலெனின் பதிலளித்தார். உழவர்களின் மத்திய அமைப்புகளே புரட்சி தனது ஒளியை அணைத்து விடாதிருக்கும் தடுப்பு அரண்கள் என்று இலெனின் விரும்பிய போதும், முதலாளித்துவ சமுதாயத்தில் தொழில் துறைப் பாட்டாளிகளின் புரட்சிகரப்

பங்கின் அடிப்படையிலேயே கட்சியைக் கட்டி வளர்க்கிறார். இலெனின் விரும்பியதைப் போல்சிவிக்குகள் நடைமுறையில் பின்னர் செயல்படுத்தவேயில்லை; ஆயின் சீனப் பொதுவுடைமையர் இதைச் செய்து முடித்தனர். இலெனினிடம் சற்று மிகுதியாகக் குடிகொண்டிருந்த 'ஐரோப்பிய' நோக்கு, ரஷ்ய உழவர்களின் புரட்சிகர உணர்வை முதலாளித்துவத்திற்கு எதிரானதாகக் கண்டாலும் 'ஆசியமுறை பற்றிச் சில எதிர்மறைக் கூறுகளையும் கொண்டிருந்தது. கட்சியை இந்தப் புரட்சிகர உழவர்களையும் உள்ளிட்டு மக்கள் திரள்களை எழுச்சியுறச் செய்தால் மட்டுமே அதிகாரத்துவ சக்திகள் தலைதூக்காமல் செய்யமுடியும் என்ற அடிப்படையில் இலெனின் கட்சியின் குறிக்கோளுக்குப் பெரும்பங்கை அளிக்காததால் ' அவர் மக்கள் திரள் மீது மாபெரும் நம்பிக்கை கொண்டிருந்த போதும், இலெனினுக்குப் பின்னர் மக்கள் திரள் மீது முழு நம்பிக்கை கொள்ளாத போக்கு வளர வழி ஏற்பட்டது. சுருங்கக் கூறின் இலெனின் காலத்திலும், அதன் பின்னரும் கட்சி, ரஷ்யக் கட்டாந்த தரையில் விதை மணிகளைத் தாமறியாத வண்ணமே தூவி விட்டது; பின்னர் வளர்ந்த கட்சி அதிகாரத்துவப் போக்கு என்னும் மழையில் விதைகள் திருத்தல்வாதச் செடிகளாக வளர்ந்தன' எனலாம்.

1917 புரட்சிக்குப் பின் கட்சியின் உயர்மட்டம், சோவியத் காங்கிரஸ், அரசு நிர்வாகம் ஆகியவை மத்தியத்துவப்படுத்தும் போது அதிகாரம் குவியவும் தொடங்கி விட்டது. ஸ்டாலின் தலைமையின் கீழும், இலெனின் இறுதிக் காலத்திலுமே கட்சியின் அடிமட்ட அமைப்புகள் முடிவெடுக்கும் பங்கிலிருந்து விலக்கப்படலாயின. இலெனின், புதிய அதிகாரத்துவ சக்திகள் வளர்வதைக் கண்டு வருந்தி இப்போக்கைக் கடுமையாகவும் எச்சரித்தார்.

ஸ்டாலினுடைய தலைமையின் கீழும் அவர் ஆசிய உற்பத்தி முறை, இயங்கியல், வரலாற்றியல் பொருள் முதல்

வாதம் பற்றிக் கொண்டிருந்த சில இயங்காவியல் கருத்துக்களையும் பற்றி ஆராயும் நூலாசிரியர் மதிப்பீடுகளிலிருந்து, கட்சித் தலைமையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் நோக்கு, மார்க்சிய உயிரோட்டமான இயங்கியல் நோக்கிற்கு முற்றிலும் எதிரானது என்பதையும், மார்க்சியம் ஓர் ஆக்கவியல் ஆய்வுக்கோட்பாடு என்பதையும், குறிப்பிட்ட நிலைமைகளைக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தத்தம் சமுதாயப் பொருளியல், அரசியல், மெய்யியல் அடிப்படையிலேயே காணவேண்டும் என்பதையும் நாமறியலாம்.

ஸ்டாலின் காலத்தில் பெரும்பாலும் விவாதிக்கப்படாமலிருந்த ஆசிய உற்பத்தி முறை பற்றி அவர் காலத்திற்குப் பின் மார்க்சிய பார்வையின் அடிப்படையிலும், மாறுபட்டும் விவாதிக்கப்பட்டது. மார்க்சு குறிப்பிடுவது போல், ஆசிய உற்பத்தி முறையில் தேக்கநிலை சீனம், வியத்நாம் ஆகிய கீழை நாடுகளில் இல்லை என்றும் அங்கு கணிதம், வணிகம், பணம், சட்டம், புதிய சமயங்கள் ஆகியவை வளர்ந்ததை கோட்லியர், நகுயென் தான் அங் முதலானோர் குறிப்பிடுகின்றனர். நூலாசிரியர் ஆசியமுறை உற்பத்தி பற்றிய தமது மதிப்பீட்டைக் கீழ்வருமாறு தருகிறார்.

1. முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயங்களில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி காரணமாகப் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இதனை வழி வழி வந்த சீன அறிவியல் வளர்ச்சிகளைப் பற்றிய ஜோசப் நீதாமின் நூல் விளக்கும்.
2. வெவ்வேறு குறிப்பிட்ட வடிவங்களில் இச்சமுதாயங்களில் அரசின் சுரண்டல் இருந்து வந்துள்ளது.
3. பழைய குழு முறை அமைப்புகளிலிருந்த வாழ்க்கை நெறிமுறைகளும், மனித உறவுகளும்

> சோசலிசக் கட்டமைப்புக்குத் துணை நிற்கக் கூடும். சீனப் பொதுவுடைமையர் அச்சமுதாய சமூகபண்பாட்டியல் பெருமைகளை அறவியல் ஒழுக்கவியல் முறையில் பயன்படுத்தி சோசலிசக் கட்டுமானத்தில் பொருளியல் ஊக்குவிப்புக்கு இடம் தரவில்லை.

எம்.என்.ராய், டாங்கே, ஏ.ஆர், ரேசாய் ஆகியோர் இந்தியத் தொன்மைச் சமுதாயங்களைப் பற்றி ஆய்ந்துள்ளனர். உற்பத்திக் கருவிகளிலும் உற்பத்தி உறவுகளிலும் அடுத்தடுத்து வரும் மாற்றங்களைக் கால வகைப்படுத்தித் தருவதே வரலாறு என்றும் ஒவ்வொரு நிலையிலும் முந்திய வடிவங்களின் எச்சங்களும், மேல் வர்க்கங்களின் கோட்பாடுகளும் ஒவ்வொரு சமுதாய இயக்கத்தின் மீதும் மாபெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன, என்றும் கூறும் டி.டி. கோசாம்பி இந்தியா பற்றி இரு கருத்துக்களைத் தெரிவிக்கிறார். (1) ஒவ்வொரு நிலையிலும், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், முந்திய உற்பத்தி நிலைகளுடன் கூடவே ஓர் அழுத்தமான மேலடுக்குத் தொடர்ந்து நிலவுகிறது. (2) இந்தியாவில் எந்தக் காலத்திலும் தொன்மை ஐரோப்பாவில் நிலவிய அடிமைமுறை இருந்ததில்லை. கோசாம்பி, தொன்மை வாழ்விலிருந்தும் வரலாற்றுக்கு முந்திய நிலையிலிருந்தும் நிலவுடைமைக்கு முந்திய வர்க்கச் சமுதாயம் ஏற்பட்ட விதம் குறித்தும் பின்னர் நிலவுடைமை குறித்தும் ஆராய்கிறார். அசோகர் காலம் வரையிலான தொடர்ச்சியான முன்னேற்றம் மகதப் பேரரசாக வளர்வதையும், பார்ப்பனீயச் சீர்குலைவுக்குப் பின்னர் அது வீழ்வதையும், அதன்பின் தமது தேவையைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் கிராம அமைப்பு முறைகள் தோன்றி அண்மைக்காலம் வரை அது நீடித்து வந்ததையும் கோசாம்பி படம்பிடித்துக் காட்டி ஒரு புதிய மார்க்சிய வரலாற்று விளக்கத்தை அளிக்கிறார்.

முகலாய இந்தியாவில் நிலவிய முதன்மையான முரண்பாடு அரசர்களின் அதிகாரத்துவ சக்திக்கும், உழவர் இனங்களுக்கும் இடையே இருந்த உறவே என்றும், இறுதியில் பொருளாதாரச் சிக்கல் அரசியல் சிக்கலாக உருவெடுத்துப் பெரும் நிலவுடைமையாளர்களின் தலைமையில் உழவர் கலகங்களாக மாறி முகலாயப் பேரரசு முடிவுக்கு வந்ததாக இர்பான் அபிப் கூறுகிறார்.

இந்திய கிராம சமூகங்களின் அமைப்பு அதன் வரலாறு அதன் தனிச்சிறப்புப் பற்றிய கோசாம்பியின் கருத்து மார்க்சிய ஒளியில் புதிய பரிமாணங்களைத் தருகிறது. மார்க்சு காலத்தில் அறியாதிருந்த சிந்து சமவெளிப் பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிக் கூறிய கோசாம்பி, ஆரியர் படைப்புக்குப் பின் சிறு வேளாண்மை அமைப்புகளும், பழங்குடிச் சமுதாயங்களும் சிதைந்து நகரங்களும் புதிய ஆரியமொழியும் உருவாவதை விளக்குகிறார். ஆரியர் வருகைக்குப்பின் ஆறுகளின் ஓரங்களில் நகரங்கள் தோன்றுகின்றன. வணிகம் வளர்ச்சியுற்றபின் அனைத்துச் சமுதாயங்களுக்குமான பொதுவான அரசாங்கம் வணிகர்கள் உழவர்களின் தேவையின் மீது எழுகின்றது. ஆறாம் நூற்றாண்டில் தேவைகளுக்கேற்ற கருத்துக்கள் பிறக்கின்றன. மகதப் பேரரசில் சக்திமிக்க அரசியற் கோட்பாடாக கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரம்' தோன்றி ஒரு முழுமையான முடியாட்சியின் சர்வாதிகாரத்திற்கான வழிகாட்டியாகிறது. இச்சமுதாயத்தில் சாதிப் பிரிவினைகளும், ஒருவருக்கொருவர் உதவாத 'பாராமுகமான' கிராம அமைப்புகளும் அப்போதில்லை. உழவும், தொழிலும், பெரும்படையும், ஒற்றர்களும், நுட்பம் மிக்க நிர்வாகமும் வழி வழி இருந்த முறைகளை உடைத்து வளர்ந்தன. அரசின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் பெரும்பங்கும் வெகுவேகமாக வளர்ந்தது. நிலங்கள் முன்னைய பழங்குடிகளின் ஆளுகையிலும் அரசின் நேரடி ஆளுகையிலுமாக இருமுறைகளில் இயங்கிவந்தன. புதிய அரசுக்கு நில உரிமையாளர்கள் மிகுதியான வரி செலுத்த

வேண்டும். நிலங்களில் உழைத்தவர்கள் அடிமைகளாக இல்லை. புதிய சமயக் குரவர்கள் இந்த அரசு எல்லைக்குள் நுழைவது தடுக்கப்பட்டது. உழவர்கள் வேற்றிடங்களுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடைகள் நாளடைவில் கிராமப்புற இந்தியாவில் தேக்கநிலையையும் அதுவே பின்னர் கிராமத் தேவைகளை அந்தந்தக் கிராமமே நிறைவேற்றிக் கொள்ளும் நிலையையும் உருவாக்கியது. வேளாண்மை, தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றி வந்த கிராம அமைப்பு நீண்ட வரலாற்றுப் போக்கின் விளைவேயன்றி மாற்றங்களே ஏற்படாத கீழை நாடுகளின் தனிச்சிறப்பான கூறாகாது.

இந்தியாவில் இருந்த தொன்மைப் பொதுவுடைமைச் சமுதாயம் மற்ற ஐரோப்பிய வர்க்கச் சமுதாயங்களால் வெற்றி கொள்ளப்படாமல், சாதிகளாகப் பிரிந்த சமுதாயத்தால் மாற்றப்பட்டதாக நம்பூதிரிபாத் கேரளாவைப் பற்றிய தன் நூலில் குறிப்பிடுகிறார். நாகரிகம், சமுதாய, பொருளியல் அறிவுத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி, சமுதாயங்களில் ஏற்பட்ட பிரிவுகள், பல்வேறு தொழில்கள் ஆகியவை சாதிகளையும், அவற்றில் பிரிவுகளையும் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்ததாக அவர் காணுகிறார்.

இந்தியாவில் சமயங்கள் சமுதாய அமைப்பிலும் பண்பாட்டிலும் வகித்த முதன்மையான பங்கைப் பற்றிக் கோசாம்பி விளக்கும்போது, சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து இந்திய சமுதாயத்தின் பல்வேறு கட்டங்களில் அவை ஏற்படுத்திய விளைவுகளையும் கூறுகிறார். 1500 ஆண்டுகளில் புத்த சமயத்தின் தோற்றம் வளர்ச்சி அதன் வீழ்ச்சி ஆகியவை பற்றிக் கோசாம்பி விரிவாக ஆராய்கிறார். புத்தசமயம் சடங்குகளைக் கடந்து சாதி, செல்வம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையிலன்றி அனைத்துச் சமுதாய உறுப்பினர்களுக்கும் கடமைகளை வகுக்கிறது. முழுமையான முடியாட்சியின் அதிகார

வரம்புகளையும் வரையறுக்கிறது. வேகமாக மாறி வந்த சமுதாயத் தேவைகளுக்கேற்ப அரசியல் பொருளாதாரத்தையும், புதிய சமுதாய, அறிவியற் கோட்பாடுகளையும், மனிதன் தனக்குத்தானே விடுதலையை அடைய முடியும் என்ற நம்பிக்கையையும் ஊட்டி புத்த சமயம் வளர்ந்ததை சமுதாய வளர்ச்சிப் போக்கில் சிறப்பான ஆக்கப்பூர்வமான அம்சமாகக் கருதிய கோசாம்பி, பின்னர்த் தோன்றி வளர்ந்த கீதையின் நாயகனான கண்ணனின் கோட்பாடுகளை எதிர்மறை அம்சங்களாகக் காணுகிறார்.

கோசாம்பியின் சமயம் பற்றிய சில கருத்துக்களில் மாறுபடும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, 'லோகாய்தம் – பண்டைய பொருள் முதல்வாதம் பற்றிய ஓர் ஆய்வு' என்ற நூலில் இந்திய மெய்யியல், கருத்து முதல்வாதத்தையே அடிப்படையாகக் கொண்டதல்ல என்று கூறி இந்திய வரலாற்றின் பல்வேறு காலங்களிலும் நிலவிய பொருள்முதல்வாதக் கருத்து வளர்ச்சியையும் விளக்குகிறார். இந்திய மெய்யியல் அடிப்படைகளைப் பற்றிய சரியான, ஆக்கப்பூர்வமான மதிப்பீடும், ஆய்வும் மார்க்சிய அடிப்படைகளுக்கே இட்டுச் செல்லும் என்று சட்டோபாத்யாயா கூறுவது சரியான மார்க்சிய அணுகல் முறைக்கும் சமுதாய நடைமுறைக்கும் உள்ள உறவைக் குறிக்கிறது.

இந்தியாவில் முகலாயப் பேரரசின் வீழ்ச்சி, அதன்பின் நிலவிய குழப்பநிலைக் காலத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர் வருகை, குடியேற்ற அமைப்பு, பழைய மதிப்புகள் புறந்தள்ளப்படுதல், அரசியல் ஒற்றுமை, படை, செய்தித்தாள்கள், தனிச்சொத்து, கல்வி, போக்குவரத்து மாற்றங்கள், உழவு, தொழில்களில் புதிய நுட்பங்கள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஏற்படுத்திய விளைவு, புதிய நிலவுடைமை வர்க்கத் தோற்றம், வணிக நிலவுடைமைக்கும் முதலாளியத்திற்குமிடையே உள்ள உறவு ஆகியவை பற்றி இந்திய மார்க்சியர்களும், மார்க்சும் செய்த

மதிப்பீடுகளைப் பற்றி வைலெங்கா குறிப்பிடுவது, இந்திய சமுதாயத்தைப் பற்றி முழுமையாகவும் அதன் பல்வேறு தனிப்பண்புகளைப் பற்றிக் குறிப்பாகவும் வெவ்வேறு துறைகளிலும் இந்திய மார்க்சியர்கள் ஆற்ற வேண்டியுள்ள கடமையை வலியுறுத்துவதாகும்.

மார்க்சும், காந்தியும், மாஸ்கோவும், மாசேதுங்கும் இந்திய மக்களிடையிலும் மார்க்சியர்களிடையிலும் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளைப் பற்றி நூலின் இறுதியில் விரிவாக ஆய்வு செய்துள்ள வைலெங்கா, பல முக்கியமான அடிப்படையான நேர்மையான மார்க்சிய உணர்வுடன் சமுதாய மாற்றங்களுக்காக அரசியல், பொருளியல், வரலாறு, கலை, இலக்கியம், மெய்யியல், சமுதாய இயல், சமூக அரசியல், கட்சி, தொழிற்சங்கம், உழவர் அமைப்புகள், சமூக நிறுவனங்கள் ஆகிய பல துறைகளிலும் போராடும் யாரும் ஒதுக்கித் தள்ள முடியாத பல கேள்விகளை எழுப்புகிறார்.

இந்திய சமுதாய நிலைமையைப் பற்றிய ஆய்வு என்பது மிக மிகச் சிக்கலான, ஆழமான சங்கிலித் தொடர்புடைய பொருளாகும். உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், வர்க்கங்கள் பற்றிய ஆய்வுடன் கிராம, நகர்ப்புறச் சமுதாயங்கள் பொருளியல், அரசியல், பண்பாட்டுத் துறைகளில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களும் பல்வேறு சமயங்கள், சாதிகள், உட்சாதிப் பிரிவுகள், பழங்குடி இனங்கள் வரலாற்றியல் பண்பாட்டியல் கேள்விகளும் தவிர்க்க இயலாதவை. இந்தியாவில் தொழில்துறைப் பாட்டாளிகள், உழவர்கள், சுரண்டப்படும் மக்கள் ஆகிய பெரும் வர்க்கங்களுக்கிடையே உள்ள உறவின் தன்மைகளை ஆராய்வதற்கும் அதன் அடிப்படையில் இயக்கங்களை நடத்தவும், ரஷ்யப் புரட்சியும், சீனப்புரட்சியும், பற்றிய அறிவும், ரஷ்ய, சீன சமுதாயங்கள் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்வு காணக் கையாண்ட முறையிலிருந்து

கிடைக்கும் நடைமுறை அனுபவங்களும் நமக்குப் பயனளிக்கும்.

ரஷ்யாவில் சுரண்டப்பட்ட மக்களில் பெரும்பான்மையோர் உழவர்களாக இருந்தனர். ரஷிய பொதுவுடைமையர் ஜார் அதிகாரத்தை எதிர்த்த போராட்டங்களின் போதும் அதன்பின் நடந்த உள்நாட்டுப் போரின் போதும் உழவர்களை தற்காலிக கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டனரேயன்றி அவர்களை நிலையான, உறுதியான புரட்சிகரச் சக்திகளாகக் கருதாமல் பின்தங்கிய பகுதியினராகவே கண்டனர். புரட்சிகர இயக்கத்திலோ போல்சிவிக் கட்சியிலோ கோட்பாட்டளவிலும் அமைப்பளவிலும் உழவர்கள் ஒரு இணைந்த பகுதியினராகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. தொழிற்பெருக்கத்தின்போதும் பின் கூட்டுப்பண்ணைகளிலும் அதிகாரத்துவ சக்திகளுக்கு அடங்கியவர்களாகவே அவர்கள் நடத்தப்பட்டனர். நகரங்கள் கிராமப்புறங்களை ஆண்டன; திட்டமிடல், கல்வி ஆகியவற்றிலும் உழவர்கள் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாயினர்.

சீனத்தில் 1927இல் சியாங்கே சேக் பொதுவுடைமையர்களை நகரங்களில் வேட்டையாடிய போது அவர்கள் கிராமப்புறங்களை நாடி ஆயுதப் போராட்டத்தை நடத்தினர். கிராமப்புறங்களில் புரட்சிகர உழவர்களைத் தட்டியெழுப்பி மாசேதுங்கின் தலைமையின் கீழ் பொதுவுடைமையர் உழவர் புரட்சியை நடத்திச் சீன சமுதாயத்தை மாற்றுகின்றனர். நகரங்களில் இருந்து வந்த பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் சரியான மார்க்சியக்கோட்பாடுகளின் பின்னணியில் அமைப்புகளையும் தலைமையையும் அளித்து கிராம உழவர்களைத் தமது வழி வழி வந்த தடைகளை உடைத்து முன்னேறிப் புரட்சியை நடத்த உதவுகின்றனர், வெறும் கற்பனையான சமத்துவம், சகோதரத்துவம், நீதி, நல்ல அரசாங்கம் என்ற கோட்பாடுகளை விட்டு, தேசியத் தீர்வுகளான ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம், சோசலிசத்தை நோக்கி என்ற பாதைகளில்

போராடுகின்றனர். பெரும் திரளான மக்களைச் செம்படை, கொரில்லா இராணுவ அமைப்புகள், பொதுவுடைமைக் கட்சி, ஏழை உழவர்கள் சங்கம் மகளிர் அமைப்புக்கள் ஆகியவற்றை நிறுவிப் புரட்சிகர இயக்கங்களில் ஈடுபடுத்துகின்றனர். ரஷ்யாவில் நடைபெற்றது போலன்றி, சீனத்தில் கிராமப்புற உழவர்கள் புரட்சியின் போது நகரங்களைச் சுற்றி வளைத்து வெற்றி கொள்கின்றனர், புரட்சிக்குப் பின்னர் சீனத்திலும் நகரங்கள் அதிகாரத்தின் மையங்களாயின. சோவியத் யூனியனைப் பின்பற்றித் திட்டங்கள் மையப்படுத்தப்பட்டன. சில ஆண்டுகளுக்குப் பின்னர் மாசேதுங்கும் மற்றவர்களும் இந்த நகரத்தைச் சார்ந்த வளர்ச்சி முறையைக் கைவிட்டு மாபெரும் முன்னோக்கிப் பாய்ச்சல் திட்டங்களின் அடிப்படையில் மக்கள் கம்யூன்களை ஏற்படுத்தி சோசலிசக் கட்டுமானத்தில் கிராமப்புறப் பெரும்பான்மை மக்கள் ஒதுக்கப்பட்டு விடாமல் அவர்களைத் திரட்டிப் புரட்சிகர இயக்கங்களில் அவர்களைப் பிரிக்கமுடியாத பகுதியினராக்குகின்றனர். 'யேனான் மாதிரிகளை நிறுவிப் புதிய அரசியல், மானிட உறவுகளையும், பண்பாடுகளையும் புரட்சிகர முறையில் வளர்க்கின்றனர். கட்சி உறுப்பினர்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையே நல்லுறவு வளர்க்கப்பட்டது. 1940-42 இல் நடைபெற்ற தவறுகளைத் திருத்திக் கொள்ளும் இயக்கத்திலும் 1966இல் நடைபெற்ற மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியின் போதும் நகர்ப்புறப் புரட்சி அணிகள் கிராமங்களில் உழவர்களிடமிருந்து புதிய பண்பாட்டையும், கல்வியையும் பயிலவும் மக்களுக்குச் சேவை செய்யக் கற்கவும் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். இது சீனப் பொதுவுடைமையர்களின் இடையறாத புரட்சியின் தொடர்ச்சியாக நகர்ப்புற, நாட்டுப்புற முரண்பாடுகளை அகற்றவும், மூளை, உடல் உழைப்பு வேறுபாடுகளைப் போக்கவும், அதிகாரத்துவ சக்திகள் வளராமல் தடுக்கவும் ஆன மார்க்சு கண்ட மனிதனையும், சமுதாயத்தையும்

அமைக்கும் புரட்சிகரப் பணியாகும். சீன அரசியல் போராட்டங்களை இந்த வரலாற்றுப் பின்னணியில் நோக்கும்போதுதான் சீனப்புரட்சியும், அதன்பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் முக்கியத்துவம் பெறுவதை அறியமுடியும்.

சீன உழவர்களின் முன்னைய போராட்டங்களும் எழுச்சிகளும் சில குறிப்பிட்ட எல்லைகளுக்குள்ளே நடந்தன. அவர்களிடமிருந்த தனி மனித வாத எண்ணங்கள், பயிர் உற்பத்தி, குடும்ப வாழ்க்கை அன்றாட வாழ்வுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நடத்தும் போராட்டம் ஆகியவற்றுள் மூழ்கிவிட்ட நிலைமை, சிறிய அளவு உற்பத்தி முறையில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக அவர்களிடமில்லாத சமுதாய உறவுகள் பற்றிய தெளிவான பார்வையின்மை ஆகியவற்றையும் கணக்கிற் கொண்டு சீனப் பொதுவுடைமை அணிகள், அவர்களோடு தம்மை ஒன்றிணைத்து, ஆய்வு, தன்னாய்வுகளை நடத்தி அவர்களிடமிருந்து படிப்பினைகள் பெற்றும், அவர்களுக்குக் கல்வியை அளித்தும் வரலாற்றுப் போக்கில் உழவர்களைப் பங்குபெறச் செய்து அவர்களைப் புதிய வார்ப்புகளில் வார்த்தெடுக்கின்றனர். சீனம் உழவர்களின் குறிப்பிட்ட எல்லைகளைக் கணக்கில் கொண்டாலும், திட்டமிடல், கல்வி, நலவாழ்வுத் துறைகளில் அவர்களை வெறும் பொம்மைகளாகக் கருதாமல் வரலாற்றுப் போக்கிலும், இயக்கங்களிலும் அவர்களை நீக்கமறக் கலந்து, இணைத்து வந்துள்ளது என்பது வரலாறு தரும் படிப்பினையாகும்.

புரட்சிகளுக்கு முந்திய - பின்னைய ரஷ்ய, சீன சமுதாய அமைப்புகள், வர்க்க வேறுபாடுகள், முதலாளித்துவம் ஏற்படுத்திய விளைவுகள் பொதுவுடைமைக் கட்சிகள் புரட்சிகர சக்திகளை இனம் கண்டு காலப்போக்கில் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைத்தல், பண்பாட்டுப் புரட்சி ஆகியவையன்றிப் பல மார்க்சிய அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையில் தொகுத்து வரலாற்றியல் பின்னணியில் தரும் வைலெங்கா, இந்திய உழவர்

போராட்டங்கள், தொழிலாளி வர்க்கத்தின் பங்கு, தொழிற்சங்கங்கள், பொதுவுடைமைக் கட்சிகள் தரும் அழுத்தம், அவை செயல்படும் எல்லைகள், இவ்வமைப்புகள் கண்ட, காண மறந்த அம்சங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

வைலெங்காவின் நூல் சில அடிப்படையான கேள்விகளை நம்முன் எழுப்புகிறது. வரலாற்றியல், பண்பாட்டியல், சமூக இயல், அரசியல், பொருளியல், மெய்யியல், துறைகளில், மார்க்சிய இயங்கியல் வழியில் இந்திய மார்க்சியர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொதுவுடைமைப் போராடிகள் செய்ய வேண்டிய பணிகளையும் சரிவர ஆய்வுசெய்ய வேண்டும். சோவியத் யூனியன் பொதுவுடைமைக் கட்சி உழவர்களின் புரட்சிகரப் பங்கு பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடும், மக்கள் திரள்களைப் புரட்சிக்குப் பின்னர் இயக்கங்களில் பிணைத்த முறையும் நமக்குச் சில எதிர்மறையான படிப்பினைகளைத் தருகின்றன. சீனப் புரட்சியும், மாசேதுங்கின் சமுதாய நிலைமைகளையும், வர்க்கங்களைப் பற்றிய ஆய்வுமுறையும் உழவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்திய சமுதாயத்திற்குப் பல ஆக்கப்பூர்வமான படிப்பினைகளைக் கொடுக்கின்றன. புரட்சிக்கு முந்திய சீன சமுதாய நிலைமைகளுக் கொப்ப இன்றைய இந்திய சமுதாய நிலைமைகள் இல்லையெனினும், இந்தியாவின் வரலாற்றியல் பண்பாட்டியல் காரணிகள் சில தனிச்சிறப்புகளைக் கொண்டிருப்பினும் பல்வேறு சுரண்டப்படும் வர்க்கங்களையும், சக்திகளையும் கோட்பாடுகள் அமைப்புகளின் அடிப்படையில் ஒரு தொடர்ந்த, இடைத்தொடர்புள்ள ஒருங்கிணைந்த வரலாற்று நிகழ்ச்சியாக இயக்கங்களை நடத்த சீன அனுபவம் உதவும். இந்தியத் தொழில்துறைத் தொழிலாளர் வர்க்கத்துக்கும், கிராமப்புற உழவர்களுக்குமிடையே வளர்ந்து விரிவடையும் இடைவெளியைக் குறைத்து பொருளியல் போராட்டங்களுக்கே முக்கியத்துவம் தரும் தொழிற்சங்கங்கள்

எந்த அளவுக்கு, இணையவேண்டிய இவ்விரு பெரும் சக்திகளை இணைப்பதில் வெற்றிபெற முடியும்? சுரண்டப்படும் நசுக்கப்படும் பல்வேறு பிரிவுகளுக்கிடையே உள்ள சமுதாய, பண்பாட்டியல் இணைவின்மை, இன்றைய இந்திய சமுதாய அமைப்பில் பெரும் தடைகளை ஏற்படுத்தி உள்ளதைக் கணக்கில் கொள்ள வேண்டாமா? அதிகாரத்தைக் கையிலெடுத்து உற்பத்திக் கருவிகளை, நாட்டுடைமையாக்கும்வரை இந்தப் பண்பாட்டியல் பிரச்சினைகள் காத்திருக்க வேண்டுமா? அதிகார மாற்றம் ஏற்பட்டதும் சாதித் தடைகளும், பெண் சமத்துவமின்மையும் இன்றைய அதிகார அமைப்பு முறையில் பங்கு வகிப்பதில்லையா? பொருளியல் காரணங்களினால் ஏற்பட்ட பழக்கவழக்கங்கள், பொருளியல் காரணிகள் மீதே விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதைக் காணமறுத்தல், புரட்சிகர இயங்கியல் பார்வையை ஒதுக்குவதாகாதா? இந்தியாவில் இந்துப் பேரரசுகள், முகலாய அரசு, ஆங்கிலேயர் காலனியாதிக்க அரசு ஆகியவை அரசு இயந்திரங்களில் ஏற்படுத்தியுள்ள பெரும் அதிகாரத்துவக் கட்டமைப்பு சோசலிச அதிகார மாற்றத்தில் தம்பிடிப்புகளைச் செலுத்தாதிருக்குமா? அதற்கேற்ப சமுதாய அரசியல் பண்பாட்டியல் அமைப்புகளின் பணி எத்தகையதாக இருக்க வேண்டும்? பல்வேறு பிரிவுகளையும் சார்ந்த பெரும்பான்மை மக்கள் திரள்களைச் சமுதாயக் கட்டமைப்பில் பங்கு கொள்ள வைக்காமல் கட்சி அரசு அமைப்புகள் மேலிருந்து கீழ் மட்டத்திற்கு ஒரு வழிப் போக்காக அதிகாரத்தைச் செலுத்தும் போக்கு இறுதியில் சோசலிசக் கட்டுமானத்திற்கும் தன் விடுதலையைத் தானே முடிவு செய்யும் மனிதனை உருவாக்குவதற்கும் எதிராக அமையாதா? அடைய வேண்டிய இலக்கே அடையும் வழியை முடிவு செய்கிறதா? வழிமுறைகளே இலக்குகளை நிர்ணயிக்கிறதா? மேற்கொள்ளும் வழிமுறைக்கும் அடைய வேண்டிய இலக்கிற்கும் இடையே உள்ள முரண்பாடுகளைச் சரியாகக் கையாளாதுவிட்டால், அடையும் இலக்கு அடைய விரும்பிய இலக்காக இருக்குமா?

மேற்குறித்த அடிப்படையான சில மார்க்சியக் கேள்விகளுக்கு ரஷ்ய சீன புரட்சியிலிருந்தும், புரட்சிக்குப்பிந்திய அச்சமுதாயங்களிலிருந்தும் நாம் ஆக்கப் பூர்வமாகவும், எதிர்மறையாகவும் பல படிப்பினைகளைப் பெறவேண்டும். அத்தோடு இந்திய சமுதாயத்திற்கே உரிய தனிச் சிறப்புகளை அதன் வரலாற்றுப் பின்னணியில் உணரவேண்டும். இந்தப் பிரச்சினைகளைச் சரியாகக் காண்பதும் அதில் பெரும்பான்மை மக்கள் திரள்களைப் பங்குகொள்ள வைப்பதுமே இந்திய மார்க்சியமாக இருக்கமுடியும். இதுவே இந்த நூல் இந்திய மார்க்சியர்களுக்குத் தரும் செய்தி எனலாம்.

******

4. தோழர் எஸ்.என். நாகராசனோடு – சில வினாக்களும் விடைகளும்

✦ **மார்க்சியம் பற்றி உங்களது கண்ணோட்டத்தைச் சுருக்கமாகக் கூறமுடியுமா?**

மார்க்சியம் என்பது புரட்சிகரமான மானுடத் தத்துவம்தான். மனிதன் ஆகிய இலக்கணத்தின் அடிப்படையில் அனைத்தையும் செய்யும் அளவைதான் மார்க்சியம். அவ்வாறானால் மனிதனாக ஆக்கிய அச்செயல் அது என்பதையும், மானுடப் பிறவி என்பதன் இலக்கணத்தையும் புரிந்தாக வேண்டும். மானுடப்பிறவி என்பது சுதந்திர வாழ்வு அல்லது விடுபட்ட வாழ்வு என்பதன் பிரதிபிம்பமே என்பது மார்க்சின் அடிப்படைக் கருத்து. இதுதான் விலங்கு நிலைக்கும் மானுட நிலைக்கும் இடையே உள்ள மிகப் பெரும் வேறுபாடு. இக்காரணமாகத்தான் விலங்கு, இயற்கையின் ஓர் அம்சமாகவே இருக்க, மானிடத்தன்மையை எய்திய உயிர், உலகையும் தன்னையும் சுதந்திரமாக, சுட்டுப் பொருளாகக் காணவும், எடை போடவும் செய்கிறது. இத்தகைய பண்பு விலங்கினத்திற்கு இல்லை என்பது மார்க்சின் மையக்கருத்து. அத்தகைய பண்பு, அவனே படைப்பாளியாக மாறியதன் காரணமாகத்தான் ஏற்படுகிறது. விலங்கு, இயற்கையின் படைப்பு, மனிதன் படைப்பவன், தன்னையும், தனக்கென்று உலகத்தையும் விரும்பி, உணர்ந்து படைப்பவன். இச்செயலே மிகப் புராதனமான, மானுடப் படைப்பின், விடுபட்ட வாழ்வின் அடிப்படையான ஆதிச் செயல். இதுவே முதல் புரட்சிச் செயல். ஆகையால் அனைத்தையுமே படைப்பின் – படைப்புச் செயலின் – அடிப்படையிலிருந்து விளக்குவதும் எடைபோடுவதுமே மார்க்சியம். இதுவே விடுதலையின் அடிப்படையிலிருந்து அனைத்தையும் நோக்கும் கண்ணோட்டம். இது

மார்க்சியம். ஆயினும் இப்படைப்பின் விளைவாகவே இம்மானிடம் அவ்வப்போது வரலாற்றில் தன் படைப்புக்கு இரையாகவும் மாறுகிறது. அப்போது மானுடப் பண்புகள் மறையவும், விலங்கினும் கேடான பண்புகள் விளையவும் நிலைமைகள் உருவாகின்றன. மறுமுறையாக விடுதலைப் போராட்டம் துவங்குகிறது. இதுவே மானிடத்தின் மறு பிறவிக்கான போராட்டம். இது வரலாறு. இதைத்தான் மார்க்ஸ் Manicognising himself loosing himself and regaining himself again and again in history என்றார்.

மனிதன் தன்னை தன் உட்பொருளை - தன் பிறப்பின் அடிப்படையை - விடிவின் பொருளை உணர்ந்து, பின்பு மறுமுறையாக அந்நிலை மறந்து மறுபடியும் மறுபடியும் உணர்ந்தும் வருவதே மனிதனின் வரலாறு என்றார்.

✦ கம்யூனிசம்- விடுதலையின் இலக்கணம் என்ற கட்டுரையில் 'சாதி இரண்டொழிய வேறில்லை, 'பாசம் நீங்கில் பசு பதியாகும்' போன்ற பழங்காலக் கருத்துக்களைப் பயன்படுத்துகிறீர்கள். வெறும் தொடர்கள் என்ற அளவில் பயன்படுத்துகிறீர்களா? அல்லது இக்கருத்துக்களுக்கும் மார்க்சியத்திற்கும் இடையில் இன்றியமையாத உறவைக் காண்கிறீர்களா?

எல்லாக் காலகட்டங்களிலும் சமுதாயத்திலுள்ள வர்க்க முரண்பாடுகளும் மோதல்களும் ஏதோ ஒரு உருவத்திலும் ஏதோ ஒரு வகையிலும் தாறுமாறாகக் கூட பிரதிபலித்தே தீரும். ஆயினும் அவற்றின் உண்மை உருவத்தை விஞ்ஞான ஆய்வுமுறையில் பின்பு தான் கண்டறிய முடிந்தது. சமுதாயத்தில் இருக்கும் உண்மை இம்முறையில்தான் சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற கூற்றிலும் பிரதிபலித்தது. போராட்டமும் வரலாற்றில் ஏற்பட்ட முரண்பாட்டின் பிரதிபலிப்புத்தான். இத்தகைய உண்மைப் பின்னணியை புராணக் கதைகளிலிருந்து மார்க்ஸ்

மற்றும் சிறந்த மார்சியலாளரான தாம்சன், ஃபாரிங்டன், கோசாம்பி போன்றவர்கள் விளக்கியுள்ளனர். இம்முறையை மாவோவிலும் காணமுடியும். 'தத்துவம் அஸி', நீயும் அதுவும் ஒன்றே என்ற கூற்று, 1. உலகின் அங்கம்தான் நீ

2. மனிதனால் படைக்கப்பட்ட படைப்பு மனிதனின் மறு உருவம்தான் என்று இருவகையிலும் பொருந்தும். படைப்பவனும் நீயே என்ற கருத்து இச்சூத்திரத்திற்குப் புறம்பானதல்ல. மார்க்சின் இயக்கமே மானுடப் பண்பாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சிதான். இந்தப் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொன்மைச் சமயங்களும் காரணமாக இருந்தன என்பதை மார்க்சியம் ஏற்றுக் கொள்கிறது. சமயத்தின் சிறந்த அம்சங்கள் பண்பாட்டின் தொடர்ச்சிதான் மார்க்சியம் என்று கூறலாம்.

✦ இளம் மார்க்ஸ், முதிர்ந்த மார்க்ஸ் என்று வேறுபடுத்துவது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்.

இத்தகைய ஒரு பிரிவினையை இரு சாரார் செய்கின்றனர். ஒரு சாரார் – பூர்சுவா சித்தாந்தவாதிகள். வேறு சாரார் கொச்சை நாத்திகவாதிகளாகிய சோவியத் தலைவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும். முன்னவர், இளம் மார்க்ஸ்தான் உண்மையைக் கண்டவர் என்றும், பின்னர் அதனை மறந்தும் துறந்தும் ஒரு சாதாரணமான பொருளாதாரப் புரட்சிவாதியாக மாறி விட்டார் என்றும் கூறுகின்றனர். மார்க்சிய இயக்கத்தின்பால் ஈடுபடக்கூடிய இளைஞர்களைச் சமுதாயப் புரட்சியிலும் பொருளாதார மாற்றத்திலும் ஈடுபடுத்தாமல், வேறு திசையில் இழுப்பதற்காகவே இவ்வாறு விளக்கம் தருகின்றனர். மாறாக, பின்னவர் மார்க்சின் மையப் பிரச்சனையாகிய மானுட வடிவின் முழு இலக்கணத்தை இளைஞர்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்றும், கேவலம் பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் அவர்கள் காண வேண்டும் என்றும், இன்றைய சோவியத் சமுதாயத்தில் பயங்கரமாக

உருவாகிவரும் மானுட உளப்பிரச்னையை எடுத்துப் போராடக்கூடாது என்பதற்காகவும், இளைய மார்க்ஸ் கருத்து முதல்வாதி: பின்னைய மார்க்சே சரியான பொருள் முதல்வாதி என்றும் பேசுகிறார்கள். இத்தகைய பிரிவினை மார்க்சியத்துக்கு முற்றிலும் முரணானது. மார்க்சியத் தத்துவம் முற்றாக விடுதலையின் இலக்கணம்

கம்யூனிசம் என்பது ஒரு வகையில் சமுதாயத்தின் அமைப்பு அன்றி வேறல்ல. இதுவே மானுட வளர்ச்சியின் குறிக்கோள் அல்ல என்றார் மார்க்ஸ். இதன் பொருள், தங்கு தடையில்லாத - விடுபட்ட – மானுட வாழ்வே முழுமையான குறிக்கோள். இந்நிலை தொடர்ந்து இருப்பதற்கான அடிப்படையே பொருளாதார அமைப்பு.

இதைத்தான் மாவோ மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டார். காரணம். அவருக்கு இருந்த தொன்மையான, சீனக் கலாச்சாரத்தின் மரபுதான். இத்தகைய மரபு அற்றவர்கள் மார்க்சின் மையக் கருத்தை எளிதில் புரிந்து கொள்ள இயலாது.

தமிழகத்தில் தோன்றி மலர்ந்திருந்த கலாச்சாரத்துள்ளும் இத்தகைய மானுட இலக்கணத்தை எடுத்துரைக்கும் சூத்திரம் உண்டு. இதையே 'பாசம் நீங்கில் பசு பதியாகும்' என்று சைவ சித்தாந்திகளும் கூறினர். இத்தகைய கருத்தோட்டம், பல்வேறு வகையான இந்திய சமயப் போக்குகளுக்குள்ளும் உண்டு. இத்தகைய கருத்துகளுடன் இணைத்துக் கூறினால், மார்க்சியம் இங்கு எளிதில் புரிவதுடன், மாவோ உண்மையான மார்க்சியவாதி என்பதும், விடுதலை ஆசான்கள் பரம்பரையில் வந்த உன்னதப்பிறவி என்பதும் அனைவரும் புரிந்து கொள்ள முடியும். பண்பாடு – அற்ற மேற்கத்திய கொச்சை நாத்திகத்தையே மார்க்சியம் என்று பிரச்சாரம் செய்து வருபவர்களுக்கு, மார்க்ஸ் புரியாது, மாவும் புரியாது.

✦ **எஸ்.வி. ராஜதுரையின் 'அந்நியமாதல்' படித்திருப்பீர்கள். அந்தப் புத்தகத்தின் நிறை குறைகள் பற்றி உங்கள் கருத்துக்கள் என்ன?**

இந்த நூல்தான் தமிழகத்தில் முதன்முதலாக மார்க்சியத்தின் ஊற்றுக்கண்ணாகிய மானுடச் சிக்கலை விளக்குகின்றது. இது அடிப்படையில் மனிதனின் இன்ப துன்பத்தைப் பொறுத்ததே. அந்நியமாதல் என்ற அடிப்படையிலிருந்து மார்க்ஸ் மனிதனின் பிறப்பையும் அவன் வேதனையின் காரணத்தையும் விடிவின் இலக்கணத்தையும் கூறினார். இவ்வகையில் இது தமிழில் முதல் நூல். மார்க்சின் ஆதாரக் கருத்துக்கள் அனைத்தும் இதில் கூறப்பட்டுள்ளன. மார்க்சியத்திலும் விடுதலை இயக்கத்திலும் ஆர்வம் கொண்டுள்ள அனைவர்க்கும் இந்நூல் பயன்படும். இத்தகைய சிறப்பான ஒரு பணியை அதிகாரபூர்வமான எந்தக் கம்யூனிஸ்ட் கட்சியும் செய்யவில்லை. தமிழ் தவிர வேறு இந்திய மொழிகளில் இத்தகைய புத்தகம் இது பற்றி வந்துள்ளதா என்று தெரியவில்லை.

ஒருசில குறைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். மேற்கத்திய எழுத்தாளர் களிடமிருந்து மேற்கோள்கள் காட்டுவதைவிட, தமிழகத்திற்கு உரித்தான பலர்க்கும் பழக்கமான சிறந்த இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டியிருக்கலாம். தவிர, வடசொற்களைக் குறைத்திருக்கவேண்டும். மார்க்சின் கருத்துக்களை ஆங்கிலத்திலேயே தந்து, அதன் கருத்தை அனைவர்க்கும் புரியக்கூடிய முறையில் சொந்த நடையிலேயே எழுதியிருக்கலாம். மார்சின் செறிவான கருத்துக்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது என்பது அதன் அழகைக் குறைப்பதாகும்.

✦ **இந்தியாவில் கம்யூனிச இயக்கம் பலரும் கருதுவதுபோல் வேர்கொள்ளவில்லை. இதற்கான காரணங்கள் யாவை?**

இதற்கு முற்றிலும் பொறுப்பாளி, கட்சித் தலைமைதான், மக்கள் அல்ல என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறேன்; இந்தத் தலைமையின் பிறப்பை ஆராய்ந்தாலே இதன் அடிப்படை பலவீனத்தை நாம் உணர முடியும் மற்றும் அது ஒரு புரட்சிகரமான உறுதியான, சிறந்த ஐக்கியத்தைக் கொண்டதாக இல்லாத தலைமை என்பதையும் உணர முடியும்.

மற்ற அரசியல் தலைமைகளுக்கு அவசியமற்ற ஒரு கோட்பாடு, பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு மிக அவசியம். இது ஏழை எளிய மக்களின் உண்மையான தலைமையாக இருக்க வேண்டும். ஆகையால் இது அம்மக்களிடையே இயங்கும், இயக்க, போராட்ட அனுபவமிக்கவர்களின் கூட்டுத் தலைமையாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால் அத்தலைமையின் மொழி எதுவாக இருக்கமுடியும்? அது ஒரு மொழியில் பேசும் மக்களின் தலைமையாகவே இருக்க வேண்டும். அது ஒரு நாட்டுத் தலைமையாகத் தான் இருக்க முடியும், மாறாகப் பல நாட்டு மக்களுக்கு ஒரு புரட்சித் தலைமை சாத்தியமேயில்லை. ஆகையால் அகில இந்தியாவிற்கு ஆணையிடும் புரட்சித்தலைமை உண்மையில் பாட்டாளி வர்க்கத் தலைமையாக இருக்காது. இது ஆங்கிலத்தில் பிதற்றும் அரைவேக்காடுகளின் தலைமையாகத்தான் குட்டி பூர்சுவாத் தலைமையாகத்தான் இருக்கமுடியும்.

இத்தகைய தலைமை வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் ஒரு வாரிசு, எச்சம். இந்தத் தலைமை மறைத்து, உண்மையான பாட்டாளி வர்க்கத் தன்மை கொண்ட மக்களின் பொருள் தெளிவும் செழுமையும் கொண்ட மொழி கொண்ட தலைமை ஏற்பட வேண்டும். அந்நிலையில் தான் உண்மையான புரட்சித் தலைமை ஏற்படும்.

எனது அழுத்தமான முதல் நிபந்தனையாவது: இந்தியத் துணைக்கண்டத்தில் (நாடு அல்ல) உண்மையான

கம்யூனிஸ்ட் இயக்கம் ஏற்பட வேண்டுமாயின், ஒவ்வொரு தேசத்திலும் அம்மொழி கொண்ட கட்சித் தலைமை ஏற்பட வேண்டும். அதாவது ஒரு அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பதைக் கொள்கை அடிப்படையில் நிராகரிக்கும் மனப்போக்கு உள்ளவர்களே, உண்மையான இயக்கத்தைக் கட்ட வழி காணுவார்கள்.

இரண்டாவதாக: மார்க்சிய இயக்கங்களையும் தத்துவத்தையும் குறித்த பிரச்னை, இவைகளை எளிய முறையில் மக்களின் சிறந்த மரபைத் துணையாகக் கொண்டு விளக்கி மக்களுக்கு அதனைப் புரிய வைக்க வேண்டும்.

இதன்பிறகுதான், இவர்களின் அரசியல் இங்கு சரியான அரசியலாக இல்லை என்பதைச் சொல்ல வேண்டும். சரியான அரசியலை இத்தலைமை ஏற்காததற்குக் காரணம் இவர்களின் சுயநலப்போக்குதான்.

✦ சமூக ஏகாதிபத்தியம் என்று குறிப்பிடுவதன் பொருள் என்ன?

ஏகாதிபத்தியம் என்பதற்கு லெனின் கூறிய இலக்கணம் யாது? சரக்குகளை மட்டுமே வெளிநாடுகளுக்கு அனுப்புவது அல்ல. மாறாக அதைவிட முக்கியமாக மூலதனத்தையே வெளிநாடுகளுக்கு அனுப்புவதும், அங்கே மக்களைச் சுரண்டுவதற்கு எந்திரத் தொழில்களை நிறுவுவதும் தான் என்றார் லெனின். இன்று, சோவியத் யூனியன் பண மூலதனத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுடன் பிறநாட்டுப் பெருமுதலாளிகளுடன் கூட்டுக் கொள்ளையடிக்கும் வகையிலும் சென்றிருக்கிறது. ஆகவே லெனினின் அகராதிப்படி, இது ஏகாதிபத்தியத்தன்மை கொண்டது என்பது தெளிவு. ஆயினும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாளர்களும் அதன்மீது இன்றும் பிரமை கொண்டவர்களும், அங்கு தனியார் சொத்து இல்லாதிருக்கும் பொழுது, எப்படி ஏகாதிபத்தியம் ஆகும் என்று கேட்கிறார்கள். தனிச் சொத்துதான் ஏகாதிபத்தியத்தின்

– முதலாளியத்தின் ஒரே வடிவமல்ல. மாறாக, எந்தச் சமுதாயத்தில் ஒரு சிறுபான்மையோர் பெரும்பான்மையான மக்களின் உழைப்பை அபகரித்துச் சுகமாக வாழ முடிகிறதோ அந்தச் சமுதாயம் சோசலிச சமுதாயமாகாது. சோசலிச சமுதாயமாக மாறிக் கொண்டிருக்கும். ஒரு சமுதாயத்தில் மக்களிடையேயுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் வேகமாகக் குறையும். இதற்கு நேர்மாறான நிலைதான் சோவியத் சமுதாயத்தில் உள்ளது. அங்கு ஒரு சிறுபான்மையார் (கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள். செஞ்சேனை அதிகாரிகள், அதிகார வர்க்கம், என்ஜினியர்கள், டாக்டர்கள், மேனேஜர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் – சுமார் 5 சதவீத மக்கள்) மிகப்பெரும் வசதிகளுடன் வாழ்கிறார்கள். அதற்கு மாறாக, சோவியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் சாதாரண வாழ்க்கையே வாழ்கிறார்கள்.

இது மட்டுமல்லாது, முதலாளியப் போக்குகளின் சகல அம்சங்களும் (கள்ளச் சந்தை முதல் விபசாரம் வரை) நாளுக்கு நாள் மலிந்து வருவதை உலகம் அறியும்.

தஞ்சாவூர் மடத்திற்குத் தனிச்சொத்துக்கள் இல்லை. ஆகவே அந்த மடாதிபதிகள், கம்யூனிஸ்டுகள் என்று யாராவது கூறுவார்களேயானால், சோவியத் தலைவர்களும் கம்யூனிஸ்டுகளே!

✦ தமிழகத்தில் தி.மு.க. இயக்கம் குறித்து உங்கள் மதிப்பீடு என்ன?

தி.மு.க. குறித்துத் தமிழக கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே ஒரு சரியான, திட்டவட்டமான கருத்து இன்றைக்கும் கிடையாது. அதன் வர்க்கத்தன்மை, அதன் வளர்ச்சி, அது ஏன் பிளவுபட்டது என்பது போன்ற கேள்விகளை எல்லாம் இப்பொழுது இக்கட்சிகள் விவாதிப்பதில்லை. தி.மு.க. எப்படி, ஏன், வளர்ந்து ஒரு வெகுஜன இயக்கமாயிற்று என்றெல்லாம் மார்க்சிய

அணுகுமுறையில் ஆராய்ந்தால், புரட்சி அரசியல் எங்ஙனம் இருக்கும் என்பதை மிகவும் தெளிவாக உணரமுடியும். ஆனால் இந்தப் போலிக் கம்யூனிஸ்ட் தலைமைகள் இந்தப் பரிசீலனையை முழுக்க முழுக்கக் கைவிட்டதில் ஆச்சரியம் இல்லை.

தி.மு.க.வின் துவக்ககாலத்தில் இவ்வியக்கம் குறித்து மார்க்சிஸ்ட்டுகளிடையே கேள்வி எழுந்தது அதுவும் 1954-ல். அச்சமயம் புகழ்பெற்ற விஞ்ஞானியும், மார்க்சியவாதியுமான பேராசிரியர் டி.டி. கோசாம்பி அவர்களின் மார்க்சிய போதனையின் விளைவாக மார்க்சிய வாதிகளானவர்களிடையே இப்பரிசீலனை எழுந்தது. அவர்கள் பேராசிரியரின் முடிவை ("Exasperating Essays" என்ற தொகுப்பில் உள்ள கட்டுரை) சரியென்றே ஏற்றனர். அவருடைய முடிவு என்ன? தி.மு.க. தமிழக மக்களின் தேசிய எழுச்சியின் ஒரு ஆக்கம்; அது காலப் போக்கில் தமிழக தேசிய முதலாளி வர்க்க நலனை வெகுவாகப் பிரதிபலிக்கக் கூடிய இயக்கமாகும் என்பதே. இத்தகையதொரு இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் எங்கனம் அணுக வேண்டுமென்பதையும் அவர் தெளிவாகக் கூறினார். ஆனால் அவருடைய சிந்தனைகளையும், முடிவுகளையும் இந்திய கம்யூனிஸ்டுகள் (அவர்களை 'அதிகார பூர்வமான கம்யூனிஸ்டுகள்' என்றே பேராசிரியர் இறுதிவரை குறிப்பிட்டு வந்தார்). என்றுமே பெரிதாக மதித்திருக்கவில்லை.

அவர், அன்று முதல் பெரும் கேள்வியாக இருந்து வரும் மொழிப்பிரச்னையை எடுத்துக் கொண்டு இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி அவசியமா? என்பதை விளக்குகிறார். அவர் ஸ்டாலினுடைய விளக்கத்தையே மேற்கோளாகக் காட்டி, இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி கூடாது, அது மக்களுக்கு (குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு) துரோகம் செய்வதாகும் என்றார். இது குறித்து ஸ்டாலின் நிலை என்ன? கிழக்கத்திய பல்கலைக்கழகத்து மாணவர்கள் சோவியத் ஐக்கியத்திற்கு ஒரு பொதுமொழி தேவை என்று

வாதாடினர். அதற்கு ஸ்டாலின், 'பொதுமொழி சோவியத் ஐக்கியத்தை உடைக்கும்' என்றார். அது உழைக்கும் மக்களுக்கு விவரங்கள் புரியாமல் தடுக்க எடுக்கும் பெரும் நடவடிக்கை என்றும் அது ஜனநாயக நடவடிக்கை அல்லவென்றும் அத்தகைய பொதுமொழி எப்பொழுது ஏற்படலாம் என்பதையும் விளக்கியுள்ளார். பல்வேறு மக்களும் மிகப் பெருமளவு கல்வி - கேள்வி அறிவில் மேம்பட்டு (அது தத்தம் மொழியில் தான் இயலும்) அவர்களாக விரும்பி, பொதுமொழியும் தேவை என்று எண்ணி, அது அவர்கள் வளர்ச்சிக்குத் தேவை என்ற நிலை ஏற்படும் காலத்தில் தான் ஏற்படும். அந்நிலை வளர்வதற்குமுன், பொதுமொழி என்று எம்மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் அது முற்போக்கான செயலல்ல என்றார்.

இதனைப் பேராசிரியர் கோசாம்பி சுட்டிக் காட்டி, பாட்டாளி வர்க்க அரசு ஏற்பட்ட பிறகும் கூட ஒரு பொதுமொழி கூடாது என்று ஸ்டாலின் கூறி உள்ள பொழுது, முதலாளிய வர்க்கத்தின் ஆட்சியில், ஒரு பொதுமொழி என்பது மிகவும் ஆபத்தானது என்றார். அது உழைக்கும் மக்களை அடிமைகளாகவே வைத்திருக்கச் செய்யும் சதித் திட்டம் என்று தெளிவுபடுத்தினார். இந்தியாவிற்கு ஒருமொழி என்று பேசுவது, முதலாளிவர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், ஆங்கிலப் பயிற்சியில் மேம்பாடமைந்த மேட்டுக் குடிமக்களுக்கும் லாபகரமானது மட்டுமல்ல, 99 சதவித மக்கள் இவர்களுக்குக் கைகட்டி வாய்பொத்திப் பணி செய்யும் நிலைமையைத் தான் தோற்றுவிக்கும் என்றார்.

தவிர, இது இங்குள்ளது, தேசிய இனச்சிக்கலின் ஒரு பகுதி தான் என்றும் தெளிவாகக் கூறினார். இதனை அடிப்படையாகக் கொண்டு அன்று ஒரு கம்யூனிஸ்டு குழு ஒரு அறிக்கை தயார் செய்து, மொழிச்சிக்கலில் கம்யூனிஸ்டு கட்சி முன் முயற்சி எடுத்துத் தாய்மொழிக்கே அனைத்து

அரங்கிலும் முதலிடம் வேண்டும்; இதற்காகப் போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டதை அன்றிருந்த தலைமை (அன்று ஒன்றாக இருந்த தலைமை) முழுமையாக அசட்டை செய்தது.

அக்காலத்தில் தமிழ் மொழிக்காக தி.மு.க., இந்தி எதிர்ப்பு என்ற அடிப்படையில், போராடத் துவங்கியது. அதனை கோசாம்பி கண்டு, ஆங்கிலத்தை இவர்கள் எதிர்க்கத் தவறுவதால், இவர்கள் திட்டவட்டமான பாட்டாளி வர்க்க அடிப்படையிலிருந்து பார்க்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார். ஆயினும் இவர்கள் தாய் மொழிக்காகப் போராடினர். வடவர் ஏகாதிபத்தியம் என்றனர். டாடா, பிர்லாக்களின் அரசு என்றனர். தமிழ் மக்களின் கலாச்சாரத்தைப் புகழ்ந்தனர். தாங்கள் இரண்டாந்தரக் குடி மக்களாக இருக்க முடியாது என்றனர்.

இதுகாரணமாக இவர்களின் அரசியல் தமிழக தேசிய முதலாளிகளின் குரல்தான் என்பதில் ஐயமில்லை. இது இடதுசாரித் தன்மை கொண்ட வடிவத்தில் கிளம்பியதும் ஆச்சரியமல்ல. அது ஏழை எளிய மக்களை அரசியலில் இழுக்கின்ற இயக்கமாக இருந்ததையும் காண வேண்டும். இத்தகையதொரு இயக்கம் தமிழகத்தில் மட்டுமே தோன்றி வளரக் காரணம் என்ன என்பதை இங்கு நான் ஆராயப் போவதில்லை. ஆயினும் அதற்கான காரணங்கள் 'சுதந்திரம்' கிடைப்பதற்கு முன்பே இருந்து வந்தன. தவிர, அதன் எதிரொலிகள் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பிரதிபலித்தன. உதாரணமாக இராஜாஜியைத் திட்டவட்டமாக எதிர்த்த காமராஜர் ஒருவகையில் தி.மு.க.வின் முன்னோடிதான். அதன் காரணமாகத்தான் தி.க.வும், தி.மு.கவும் காமராசரைப் புகழ்ந்தனர். காலப்போக்கில் காமராசர் அகில இந்திய குபேரர்களின் பக்கம் அதிகமாகக் சாய வேண்டி வந்தபிறகு தான் தி.மு.க. காமராஜ் காங்கிரசையும் எதிர்க்கக் காரணமாயிற்று. இவை அனைத்தையும், அகில இந்திய குபேர முதலாளிகளுக்கும் (இது ஒருவகையில் அகில இந்திய

ஏகாதிபத்திய கூட்டு மூலதனம்தான்). தமிழகத்தில் வளர்ந்து வந்த தேசிய முதலாளிகளுக்கும் இடையே நடந்துவந்த போட்டியின் விளைவாகவும், பிரதிபலிப்பாகவுமே காணவேண்டும். இதில் தமிழக தேசிய முதலாளிகள் பக்கம் நின்ற கட்சி தி.மு.க. என்பதனால்தான் அதற்கு காலப்போக்கில் பெருவாரியான மக்களின் ஆதரவு கிடைத்தது. ஆயினும் அவ்வியக்கம் தமிழக விடுதலை என்ற இலட்சியத்தைக் காலப்போக்கில் கைவிட்டதன் காரணமாகத்தான் மக்கள் ஆதரவை இழக்கலாயிற்று.

இவ்வியக்கத்தின் துவக்கம் தன்மான இயக்கம் என்பதனையும் காண வேண்டும். அது அடிமைப்பட்டவர்களைத் தட்டி எழுப்பியே தீரும். அதனை கம்யூனிஸ்ட் கட்சிகள் அசட்டை செய்ததுடன் காலப்போக்கில் தேசிய மக்களின் விடுதலை என்ற பேச்சே கூடாது என்று அதனை முற்றாக எதிர்க்கவும் செய்தன. இது தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது, இந்திய சிறைக்கூட்டில் அடிமைப்பட்டுள்ள ஏனைய மக்களுக்கும் செய்த துரோகச்செயல் ஆகும்.

இந்தப்பிரச்னையை முன்வைத்துத்தான் தமிழகத்தில் உட்கட்சிப் போராட்டத்தைத் துவக்கியவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஆனால் இந்திய மக்களது விடுதலை எங்ஙனம் என்பதை உணர தி.மு.க வளர்ச்சியைச் சரியாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது அழுத்தமான முடிவாகும்.

தி.மு.கழகம் உண்மையான கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு சிறந்த பாடம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

✦ **உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஸ்டாலின் பற்றி உங்கள் கருத்து யாது?**

ஸ்டாலின் அடிப்படையில் ஒரு உண்மையான மார்க்சிஸ - லெனினியவாதி. லெனினுக்குப் பிறகு சோவியத்

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் விளைந்த பல்வேறு திரிபுகளைத் தத்துவார்த்த அடிப்படையில் முறையாகவும் விடாப்பிடியாகவும் போராடியதில் அவர் ஆற்றிய பங்கு மிகச் சிறப்பானது. அதே போல உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியில் அரசியல் தெளிவுடன் போராட்டத்திற்கு வழி காட்டியவர் அவர். அடிப்படையில் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக முழுமையாக நின்றவர். தவறான திரிபுகளின் போக்குகளையும் அரசியல் வடிவங்களையும் தெளிவாக உணர்ந்தவர் என்பதில் சந்தேகமில்லை இருப்பினும் அவரிடம் ஒரு குறையிருந்து, காலப்போக்கில் பலப்பட்டது. அதை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று, பிற நாடுகளில் எழக் கூடிய புரட்சியைக் குறித்தது. இரண்டாவது, திரிபுகளை எதிர்த்துப் போராடும் முறைகளைப் பற்றியது.

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட அனுபவத்தையே குறிப்பாகக் கொண்டு, சோவியத் செம்படையின் உதவியில்லாமல் சுயமான புரட்சிகள் வெற்றி பெறா என்ற கருத்து அவரிடம் ஓங்கியிருந்தது. இதன் விளைவாக, அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கு சியாங்கைசேக்கை எதிர்த்துப் போராட வேண்டாம் என அறிவுரை கூறினார். ஆனால், சீனப்புரட்சி வெற்றியடைந்த பிறகும் கூட, அத்தகைய சுயமான புரட்சியே எல்லா நாடுகளிலும் ஏற்பட வேண்டும் என்று அவர் தெளிவாகக் காணவில்லை. சீனப் புரட்சியை ஒரு விதிவிலக்காகவே கொண்டார். ஆனால் சுயமான புரட்சிதான் உண்மையான புரட்சியாகும் என்பது மார்க்சிய லெனினியத்தின் படிப்பினை.

ஆசிய நாடுகளைப் போன்ற பின் தங்கிய நாடுகளில், பாட்டாளி வர்க்க இயக்கம் பலப்படவில்லை. அதனால் ஏழை விவசாயிகள், பாட்டாளி வர்க்கத் தன்மை கொண்ட புரட்சிகளை நடத்த இயலாது என்ற அடிப்படையில் தான் அவர் கருத்து அமைந்திருந்தது. சீனக் கம்யூனிஸ்டுகளை

(மாவோ உட்பட) அவர் Margarine Communists (வழவழா கொள கொளாக் கம்யூனிஸ்டுகள்) என்றும், அதிகப்படியாகக் கூறினால் (நிலச் சொத்துரிமையில் மாற்றம் விரும்பும் சீர்திருத்தவாதிகள்) என்றும் கூறினார்.

சீனப்புரட்சி வெற்றி பெற்ற பிறகும் ஸ்டாலின் நான்கு ஆண்டுகள் வாழ்ந்தார். சீனப் புரட்சியின் வெற்றிக்கும் மாவோவின் கருத்துக்களுக்கும் உட்கட்சிப் போராட்டங்களுக்கும் உறவு இருந்தே தீரவேண்டும் என்பது ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை. இயக்கத்தில் வரக்கூடிய திரிபுகள் (வலது அல்லது இடது) புரட்சிக்குப்பின் தான் வரும் என்பதில்லை. புரட்சிக்கு முன்னும் வரலாம். இத்தகைய போக்குகளை முறையாகப் போராடி வெற்றி கொள்ளாமல் எக்கட்சியும் புரட்சியில் வெற்றி கொள்ள முடியாது. இது ஒரு பொது நியதி அப்படியானால் மாவோ இதனைத் தெளிவுடன் நடத்தியவர் என்பது உண்மை. அத்தகைய போராட்டத்தின் விளைவுகளே அவருடைய படைப்புக்கள். ('உட்கட்சி முரண்பாடுகள்' - முரண்பாடுகளைக் கையாள்வது பற்றியவை. இப்படைப்புகளை ஸ்டாலின் ஆராய்ந்தார் என்பது சந்தேகத்திற்கு உரியது. ஆராய்ந்திருப்பாரானால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் அன்று வளர்ந்திருந்த புரட்டல் வாதத்தை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டத்தை, முறையாக நடத்த நடவடிக்கை எடுத்திருப்பார். எடுக்கவில்லை என்பது வரலாறு கூறும் உண்மை.

இதன் அடிப்படை என்ன? அவர் இருக்கும் வரை, மாவோவை ஒரு சிறந்த மார்க்சியவாதியாக அவர் கணிக்கவில்லை. இது ஸ்டாலினுடைய மிகப்பெரும் குறை. இருப்பினும் ஒட்டுமொத்தமாகக் கூறுமிடத்து, அவர் மேற்கொண்ட இலட்சியங்கள், கம்யூனிச இலட்சியங்கள் தான். அதனை அடைய அவர் வகுத்த போர்த் தந்திர முறைகளில் தான் பலவீனங்கள் இருந்தன.

✦ இன்று உலகக் கம்யூனிச இயக்கம் பற்றிப் பலவகையான கருத்துக்கள் கூறப்படுகின்றன. உங்கள் நிலைபாடு என்ன?

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் உள் போராட்டங்களும், பிளவுகளும் ஏற்பட்டது இது முதல் தடவையல்ல. இன்னும் சொல்லப்போனால் உள் முரண்பாட்டின் விளைவாகத்தான் உலக இயக்கமே வளர்ச்சியும் அடைகின்றது. அவ்வப்பொழுது இந்த முரண்பாடு முற்றி, இயக்கம் இரண்டாகப் பிளந்த பிறகுதான், இதுவரை புரட்சி ஏற்படாத நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டுள்ளது.

முதல் அகிலம் (உலக இயக்கம்) உடைந்த பிறகுதான் பிரெஞ்சு நாட்டில் புரட்சி ஏற்பட்டு பாரீஸ் கம்யூன் தோன்றியது. அதன் பிறகு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் பரவலாயிற்று.

அதே போல 1914ல் இரண்டாவது முறையாக அகிலம் உடைந்து, இரண்டாகப் பிளந்த பிறகுதான் ரஷ்ய புரட்சி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மிகப்பெரிய அளவில் உலகில் பல நாடுகளிலும் கம்யூனிச இயக்கம் பரவக் காரணமாயிற்று. அதே நேரத்தில் ஏகாதிபத்தியத்திற்கு மிகப்பெரும் முதல் உதையும் கிடைத்தது.

மூன்றாம் அகிலத்தைக் கலைத்த பிறகுதான் சீன மக்கள் புரட்சியும், சாத்தியமாயிற்று.

இன்று நான்காம் முறையாக உலகில் பிளவுகள் தோன்றிவிட்டன. இதன் விளைவு என்னவாகும்? இது உலகில் உள்ள எல்லா மக்களிடையேயும், புரட்சியைக் கட்டவிழ்ப்பது என்ற கொள்கைப் போராட்டம் நடப்பதன் அறிகுறியில்லாமல் வேறென்னவாக இருக்கமுடியும்? இதனைத் தடுக்க ஒரு கும்பல் சதி செய்து வருகின்றது. இவர்களும் இவர்களுடைய உலக நண்பர்களும் (ஏகாதிபத்திய பிற்போக்காளர்களும்) அழியும் காலம் நெருங்கி வருகின்றதையே இது குறிக்கின்றது. இப்பிளவும்,

போராட்டமும் ஏற்படாமலிருந்தால் இன்று உலகில் மார்க்சியம், காலம் கடந்துவிட்டது என்று கூறி இருப்பேன். இனிப் புதிதாக வேறொரு புரட்சித் தத்துவம் தேவை என்றும் கூறி இருப்பேன். இப்போராட்டத்தின் காரணமாக மார்க்சின் கருத்துக்கள் மங்கவில்லை. மறுமுறையாக, பரவலாகவும் மிக உக்கிரத்துடனும் ஒளிவீசத் தலைப்பட்டுள்ளது. அதனுள் உள்ள தீயை - விடுதலைப் பிழம்பை அணைக்க எவராலும் முடியாது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

✦ வினாக்கள் : ஞானி

~~*

பரிமாணம் - 6

ஆகஸ்டு 1979

"பொருளை மனிதன் படைக்கவில்லையாயின் மானுடத் தன்மையை எய்தியிருக்கவும் முடியாது. இப்படைப்புத்தான் இவனைப் பிற உயிர்களிலிருந்து தெளிவாக இனம் பிரித்துக் காட்டுகிறது. இதுதான் இவனின் தனிப் பெரும் செயல். இதுதான் இவனைப் படைப்பாளியாக ஆக்கியது. இதுதான் அவன் கலைஞனாக ஆகக் காரணமாயிற்று. மனிதன் இறுதியில் கலைஞன், கலையே மானுடத்தின் உயிர்.

தனது சக்தியை அந்நியமாக்காமல் மனிதனாக முடியாது. ஆயினும் அதன் விளைவிலேயே அவனுடைய வேதனை பிறக்கவும் வித்து இருக்கத்தான் செய்கிறது. அந்த வேதனை ஏற்பட்டவுடன் இவன் பேரானந்தத்தைக் காணும் வாய்ப்பையும் பெறுகிறான். இதுவே மானுட வரலாற்றின் இரகசியம். இதனை முழுமையாகத் தத்துவ அடிப்படையில் உணர்ந்த தத்துவமே நவீன காலத்துக் கம்யூனிசம்.

இந்த இயக்கம் தவிர்க்க இயலாமல் மனிதனின் ஆனந்தமான போராட்ட இயக்கமே. இது எவ்வகையிலும் தியாகமல்ல. நம் நாட்டு மரபில் கூறுவதானால், வாழ்விலேயே 'ஜீவன் முக்தி'யைப் பெறும் இயக்கமே இது. மார்க்ஸ், லெனின், மாவோ போன்றவர்கள் தங்கள் வாழ்விலேயே ஜீவன்முக்தி- விடுதலை பெற்றவர்கள்".

எஸ்.என்.நாகராசன்.

1. நம்பார்வை

- இந்தியாவில் தற்போதுள்ள அரசியல் சூழலில், அதிகார பூர்வமான கம்யூனிஸ்ட் கட்சிகள் தம் தத்துவ வறுமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளன. நிலவும் குழப்பநிலை தொடர்ந்து ஆளும் வர்க்கங்களுக்கே சாதகமாகிறது. தீவிரமான வர்க்கப் போராட்ட வழியில்லாமல் அரசியல் சதுரங்க விளையாட்டுத் திறனையே பயன்படுத்த முனைந்ததன் விளைவு இது. வசதியாக அமர்ந்து கொள்ளக் கிடைக்கும் ஆட்சி பீடங்களில் கம்யூனிஸ்டுகள் இருக்கமுடியாது. இதற்காகவே முயலும் கட்சிகள் செய்வது, மக்களுக்குத் துரோகம். இந்தத் துரோகத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு பெறுவது ஒரு கொடுமை. கம்யூனிஸ்டுகள் என்று தம்மைக் கருதிக் கொள்பவர் தங்கள் தத்துவம், நடைமுறைகளை அடிவேர் முதற்கொண்டு ஆராய்வது தேவை. இத்தகைய சுய விமர்சனத்தின் மூலமே அவர்கள் கம்யூனிஸ்டுகளாக இயங்கமுடியும். அரசியலில் நிலவும் குழப்பநிலை இதற்கொரு தூண்டுதல்.
- மதுரையில் 1980 ஜனவரியில் உலகத் தமிழ்த் திருவிழா நடைபெறுகிறது. வியாபாரிகள் இவ்விழாவை முதன்மையாக வரவேற்பார்கள். தமிழை வைத்து வியாபாரம் செய்ய விரும்பும் அறிஞர் பெருமக்களும் அரசியல்வாதிகளும் வரவேற்பார்கள். இதில் ஒன்றும் வியப்புக்கு இடமில்லை. தமிழ் மக்களின் வாழ்வு, அறிவு, கலை இலக்கியத் துறை வளர்ச்சி ஆகியவற்றில் உண்மையான ஈடுபாடு கொண்டவர்கள் இந்தத் திருவிழாப் பற்றித் தங்கள் கவலைகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.
- நாம் ஒரு புதிய உலகச் சூழலில் வாழ்கின்றோம். தீவிரமான அரசியல், பொருளாதார, சமுதாய, விஞ்ஞான, தொழில்நுட்ப மாற்றங்கள் நடைபெறும் உலகில் வாழ்கின்றோம். இதற்கான திசைவழியில் நடப்பது

தமிழர்களுக்குத் தவிர்க்க இயலாத வரலாற்றுக் கடமை. இந்தத் தேவைகளை ஒட்டியே தமிழர், நம் வரலாறு, மொழி, கலை, இலக்கியங்கள், நீதி, மதம், பொருளாதாரம் முதலியவை பற்றிய ஆய்வுகளை நடத்த வேண்டும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், கலை இலக்கியக் கழகங்கள், கட்சிகள், பத்திரிக்கைகள், கல்லூரிகள், கல்வித்துறை, திட்டக் குழு முதலியவை இந்த நோக்கங்களோடு இயங்குவதாகத் தெரியவில்லை. இவை மக்களின் வாழ்விலிருந்து விலகித் தம் சிற்றரசு பேரரசுகளை நடத்தி வருகின்றன. அதிகார மயக்கம், பதவி வெறி, போலித்தனம், தற்பெருமை, சூழ்ச்சிகள் இவையே இந்தப் பீடங்களை ஆளுகின்றன. வெறும் தமிழ்ப் பெருமை, பண்பாட்டுப் பேச்சு, ஆணவத்தையும் அறியாமையையுமே வளர்க்கின்றன. இதனால் தமிழர்கள் சிறுத்துப் போகிறார்கள்.

இத்தகைய சிந்தனைகளோடுதான் உலகத் தமிழ் மாநாட்டை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. தமிழர்களின் வாழ்வியற் பிரச்சனைகள் – இதற்கான தீர்வு – இதற்காகத்தான் பழைமை பற்றிய ஆய்வுகள் – இந்த நோக்கில் ஒரு 'திருவிழா' நடைபெற முடியாது. அங்கங்கே தென்படும் சிற்சில ஒளிக்கற்றைகள் குவிந்து திரள வேண்டும். இப்படி உருவாகும் பேரொளி தமிழர்க்கு வழிகாட்டும்.

■ பரிமாணம் தான் விரும்பியபடி ஒரு இலக்கியத் திறனாய்வு இதழைத் தர முடியவில்லை. நாளடைவில் இது சாத்தியமாகலாம். அதுவரை, ஒவ்வோர் இதழிலும் இலக்கிய விமர்சனம் ஒரு பகுதியாக இடம்பெறும். இப்பகுதியில் மார்க்சியர் என்று தம்மைக் கருதிக் கொள்பவரோடு, அவ்வாறு கருதிக் கொள்ளாதவரது

கட்டுரைகளும் குறிப்புக்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய உறவு இரு சார்பினர் வளர்ச்சிக்கும் உதவும், உதவ வேண்டும் என்ற முறையில்,

- குணாவின் 'தமிழர் மெய்யியல்' பற்றித் தமிழவனது விமர்சனம் இவ்விதழில் இடம்பெறுகிறது. குணாவின் பதில் அடுத்த இதழில் வரலாம்.

- பரிமாணம் தொடர்ந்து வருவதன் தேவையைப் பலர் உணர்ந்திருப்பது பற்றி மிகுந்த மகிழ்ச்சி. அவர்களின் ஆதரவை பல வகைகளிலும் தொடர்ந்து வேண்டுகிறோம்.

2. இந்தியாவில் சோவியத் சுரண்டலின் வடிவங்கள்

(ஹென்னர் பாபென்டீக்) –

தமிழாக்கம் : பிருந்தா

மேற்கு ஜெர்மனியிலிருந்து வெளியாகும் 'பிப்ரங்' என்ற இதழின் ஆசிரியர் குழு உறுப்பினரான ஹென்னர் பாபென் டீக் பன்முறை இந்தியாவுக்கு வருகை தந்து இந்திய நிலைகளை நேரில் கண்டவர். சோவியத் ரஷ்யா கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக 'உதவி' என்ற பெயரில் இந்தியாவின் பொருளியல் அரசியல் நிலைமைகளைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில் சுரண்டலை விரிவாக்கித் தீவிரமாக்கியுள்ளது என்பதை இக்கட்டுரையில் பல இந்திய, ரஷ்ய ஆதாரங்களைக் கொண்டு விளக்குகிறார். கடந்த 25 ஆண்டுக்கால சோவியத் ரஷ்யாவின் அரசியல், பொருளியல் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருவோர் சோசலிச ரஷ்யா சமூக ஏகாதிபத்தியமாக மாறியுள்ளதை அறியமுடியும். அதற்கு இக்கட்டுரை பல விளக்கங்களை அளிக்கிறது.

இந்தியாவைச் சுரண்டுவதில் அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் வேறுபாடுகள் இல்லையெனினும் சோவியத் ரஷ்யா இதை மாறுபட்ட வழிகளிலும் வெவ்வேறு வடிவங்களிலும் செய்கிறது. தம் நாட்டுத் தொழில் துறைப் பொருட்களை விற்கும் சந்தையாக இந்தியாவைப் பயன்படுத்துதல், மூலதன ஏற்றுமதி மூலம் இலாபம் ஈட்டல், இந்தியக் கச்சாப் பொருட்களை குறைந்த விலைக்கு வாங்குதல் ஆகியவை சுரண்டலின் பொருளாதார நோக்கங்களாகும். ஆயினும் இரு ஏகாதிபத்தியச் சுரண்டலுக்குமிடையே முக்கிய வேறுபாடுகள் உள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இந்தியத் தொழில் துறையில் தனியார் துறையே பங்காளியாக அமைகிறது. இந்தியத்

திட்டங்களின் முதுகெலும்பான அரசுத்துறையில் சோவியத் யூனியன் பங்காளியாக உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்ய அமெரிக்காவும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள உலக வங்கியும், பன்னாட்டுப் பணவியல் நிதியும் மறுத்து விட்டதால் இந்திய அரசாங்கம் தனது பொதுத் திட்டங்களுடன் உறவுகொள்ள சோவியத் யூனியன் நுழைந்ததை ஒரு பொன்னான வாய்ப்பாகக் கருதி வரவேற்றது. மிகக் குறைந்த விதிவிலக்குடன் பெருமளவு சோவியத் கடன்கள் அரசுத்துறையில் ஈடுபடுத்தப்பட்டு இந்தியத் தொழிலின் மையத்துறையான - நிலக்கரி, இரும்புக் கனிவளங்களை எடுத்தல், கனரக எந்திர உற்பத்தி, நீர், அனல் மின் நிலையங்களிலிருந்து மின் சக்தி உற்பத்தி மற்றும் எண்ணெய் உற்பத்தி, சுத்திகரித்தல் ஆகிய தொழில்களில் அவை தீவிரப்படுத்தப்பட்டன.

“உதவி“யின் உண்மை இயல்பு

அமெரிக்காவுக்கும், அதனைத் தொடர்ந்து (இந்திய உதவி கன்சார்ட்டியம் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கடன்கள் தந்த) மேலை நாடுகளுக்கு மட்டுமின்றி, சோவியத் யூனியனுக்கும் இந்தியா பெரும் கடனாளி ஆகியுள்ளது. 1970க்குப் பின் இந்தியா கடன்களைத் திருப்பித்தரும் தொகை, அது பெறும் வெளிநாட்டு உதவியையும் மிஞ்சி விட்டது. 1971-72இல் புதிய கடன்கள் ரூ.490 மில்லியன் பெறப்பட்டது. ரூ.700 மில்லியன் திருப்பித் தரப்பட்டது. 1973-74இல் சோவியத் யூனியனிடமிருந்து மேலும் ரூ.139 மில்லியன் கடன் பெற்று இந்தியா ரூ.567 மில்லியனைத் திருப்பித் தந்தது. அரசியல் அதிகாரத்தை விரிவாக்கி வலுப்படுத்திக்கொண்ட சோவியத் “உதவி நேரடியான சுரண்டல் தன்மையைப் பெற்றுள்ளது. மூன்றாம் உலக நாடுகளுக்கு சோவியத் யூனியன் கொடுத்துள்ள மொத்தக் கடன் அளவில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கை இந்தியா கடந்த 20 ஆண்டுகளில் பெற்றுள்ளது. தனது திட்டங்களுக்குத்

தேவையான கடன்களையும், தம் தேவைகளுக்கேற்ற முறையிலும் சோவியத் யூனியனிடமிருந்து அடிக்கடி பெற முடியாததால், இந்தியா தான் பெற்ற கடன்களை முழுமையாகப் பயன்படுத்துவதிலும் பெருமளவு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகிறது.

கடன் விதிமுறைகள், குறிப்பாக திருப்பிச் செலுத்தப்படும் தொகையின் விகிதங்கள், முதலீட்டின் பயனுக்குக் கிடைக்கும் மீட்சித் தொகை விகிதங்களுக்கு ஏற்றமுறையிலும் அதற்கு ஒத்ததாகவும் அமையவேண்டும். உள்நாட்டில் பொருள்களை உற்பத்தி செய்யவும், செய்யப்பட்ட – குறிப்பாக சோவியத் கடன்கள் பெருமளவு முதலீடு செய்யப்பெறும் கனரக எந்திரத் தொழிலில் கடன்தொகை திருப்பிச் செலுத்தப்படும் காலம் 10 முதல் 12 ஆண்டுகளாகும். திட்டங்கள் முடிவடைய நீண்ட காலச் சுணக்கம் ஏற்படும் போது, முதலீட்டின் மீட்சி மதிப்பு முழுவதும் இல்லாமற் போகிறது.

பொருளியல் அடிப்படையிலும், மற்ற துறைகளிலும் இந்தியா மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை விடுவிக்க இந்தக் கடன்கள் எவ்விதத்திலும் உதவவில்லை. மாறாக இவை, மேலும் இந்தியா, சோவியத்தைச் சார்ந்திருக்கும் நிலையையும் அதன் வழியாக இந்தியாவை இன்னும் கீழ்நிலைக்குத் தாழச் செய்யும் முன்நிலைமைகளை உருவாக்கவும் வழிசெய்தது. இறுதியில், 1971ஆம் ஆண்டு அமைதி மற்றும் நட்புறவு ஒப்பந்தம் ஏற்படவும், சோவியத் பொருளியல் திட்டத்துடன் (1973) இந்தியத் திட்டத்தை இணைக்கவும், இறுதிக் கட்டமாக இந்திரா காந்தி கும்பல் (ஜூன் 25, 26, 1979) நெருக்கடி நிலையைத் திணிக்கவும் அடிகோலியது.

சோவியத் கடன்திட்டத்தில் உள்ள குறிப்பிடத்தக்க அம்சம், பொருளியல் உதவிக்கும் வெளிநாட்டு வணிகத்திற்கும் இடையில் உள்ள நேரடி இணைப்பாகும்.

அமெரிக்கா இந்தியாவுக்குக் கொடுக்கும் கடன்களுக்கான வட்டி விகிதங்களை விடவும், மேலை நாடுகளின் வட்டி விகிதங்களை விடவும் சோவியத் யூனியன் பெறும் வட்டி விகிதங்கள் குறைவானதாகும். ஆயின் இன்னொரு முக்கிய மாறுபட்ட அம்சத்தையும் நாம் காண வேண்டும். பொருளியல் அடிப்படையில் வலுவற்ற ஒரு மூன்றாம் உலக நாட்டுக்கு, எளிதில் மாற்றத்தக்க ஒரு நாணய மாற்று பெரும் பயன் உள்ளது போல் தோன்றும். சோவியத் கடன்களை அரிய நாணய மாற்றுகளில் (டாலர்களில்) செலுத்தாமல் ரூபாய்களிலேயே செலுத்தலாம். அதாவது சோவியத் யூனியன் ரூபாயாகப் பெறாமல் ரூபாய்க்கீடான பொருள்களாக குறிப்பாக இந்திய ஏற்றுமதிப் பொருட்களான சணல், தேயிலை, புகையிலை, இரப்பர், தோல் போன்றவற்றைப் பெற்றுக் கொள்கிறது.

முதல் பார்வையில் இத்தகைய ஒப்பந்தம், பொருளியல் முறையில் வலுவற்ற ஒரு நாட்டிற்குப் பயன் தருவது போலத் தோன்றும். தம்முடைய சொந்த நாட்டுப் பொருட்களையும் பாதி அல்லது முழுமையாக முடித்த பொருட்களையும் தொழில்துறை நாடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலும் விலையிலும் ஏற்றுமதி செய்வதுடன் தமது நாடு தொழில்துறை நாடுகளின் முதலீட்டுச் சந்தையாக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, வளரும் நாடுகளின் தேவையாகும். மேற்போக்காகப் பார்த்தால், இந்தியாவைப் பொறுத்தவரை இத்தேவையை சமூக ஏகாதிபத்தியாவாதிகள் நிறைவேற்றுகின்றனர். அத்துடன் இந்தியாவைக் கடுமையாகச் சுரண்டவும் செய்கின்றனர்.

இந்திய ஏற்றுமதிப் பொருட்களுக்குக் குறைந்த விலை

நீண்டகால ஒப்பந்தங்களில், வாங்குவதற்கான பொருட்களின் விலை மதிப்புகளைக் குறிப்பிடுவதில்லை. மாறாக, அவர்கள் பொருட்களை வாங்குவோர் என்ற வடிவில், (பெரும்பாலும் தனிப்பட்ட வாங்குவோராக) ஏலங்கள் நடைபெறும்போது ஏற்றுமதிப் பொருட்களின்

விலையை குறைந்த விலைக்கு நிர்ணயம் செய்கின்றனர். வணிக ஒப்பந்தங்களில் எவ்வெப் பொருட்களை இந்திய சோவியத் வணிகத்தில் பரிமாற்றம் செய்து கொள்வது என்பது குறித்து எங்கும் குறிப்பிடவில்லை. 1953க்குப் பின் ஐந்து ஆண்டுக்கால ஒப்பந்தங்கள் முடிந்தபின் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் துணை ஒப்பந்தங்களில் மட்டுமே சில சமயங்களில் இவை குறிப்பிடப்படும். சோவியத் யூனியன் எந்த அளவுக்கு எந்த விலைக்குப் பொருட்களை வாங்கும் என்பது யாருக்கும் தெரியாது. இத்தகைய விரிவான ஒப்பந்தங்களைக் கண்காணிக்க, சோவியத் நிறுவனங்களுக்காக எந்த ஒரு மத்திய வாங்கும் அமைப்போ அல்லது இந்தியாவில் அந்நிய வணிகக் குழுமங்களோ இல்லை. மாறாக, சோவியத் நிறுவனங்களின் சார்பில் தனிப்பட்ட வாங்குவோரே முகவர்களாக இந்தியா முழுதும் பயணம் செய்கின்றனர். வேளாண்மைப் பொருட்கள், கச்சாப் பொருட்களை வாங்க, அறுவடைக் காலங்களில் இந்தியாவுக்கு வந்து வணிகத்தில் ஈடுபடுகின்றனர். இத்தகைய முறைகளைப் பின்பற்றுவதால், அவர்கள் பெறுகின்ற பயனை இந்தியத் தேயிலைத் தொழில் துறையை உதாரணமாகக் கொண்டால் தெளிவாக உணரலாம்.

இந்தியா ‘தன்னுரிமை’ பெற்றபின், இந்தியத் தேயிலைத் தொழிலில் அந்நிய முதலைப் பயன்படுத்தி இந்தியாவைச் சுரண்டுவதில் கடுமையான போராட்டமிருந்தது. இந்தியாவில் அந்நிய நிறுவனங்களின் பங்குகள் குறைக்கப்பட்டதால் பெருமளவு லாபங்களை அவர்கள் கவர்ந்து செல்லுதல் அவ்வளவு எளிதாக இல்லை. இந்நடவடிக்கைகள் காலனியாக்கிக்க வழிமுறைகளை உடைத்தெறியப் பயன்பட்டன. இதன் காரணமாக தமது மூலதனத்தை முதலீடு செய்ய அந்நிய முதலாளிகள் வேறு புதிய இடம் நோக்கி நகர்ந்து கிழக்கு ஆப்பிரிக்காவில், குறிப்பாக கென்யாவில் எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் ஆளாகாமல் தேயிலைத் தோட்டங்களை அமைத்தனர்.

இத்தகைய இடமாற்றங்களினால் தேயிலைத்தொழிலில் போட்டி கடுமையாயிற்று. ஆயினும் இந்தியத் தேயிலையின் தரம் உயர்ந்த முறையில் இருப்பதால் போட்டியில் மிகுதியும் பாதிப்பு ஏற்படாத முறையிலும் உலக அங்காடியில் சாதக நிலையையும் கொண்டிருந்தது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட அளவு தேயிலையை (இந்தியத் தேயிலை உற்பத்தியில் சுமார் 40%) சோவியித் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியா ஒதுக்கிவைக்க வேண்டியிருந்தது.

கிழக்கு ஆப்ரிக்காவில் வளர்ந்து வந்த இந்தப் போட்டியின் காரணமாக ஆண்டுதோறும் சுமார் 80 மில்லியன் ரூபாய்களையும் சோவியத் யூனியனுக்குக் குறைந்த விலையில் விற்பதன் காரணமாக ஆண்டொன்றுக்கு மேலும் 80 மில்லியன் ரூபாய்களையும் இந்தியா 1960 லிருந்து பத்தாண்டுகளில் இழந்து விட்டது. 1975 ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் நாள் 'இந்துஸ்தான் டைம்ஸ்' குறிப்பிட்டதாவது: 'இவ்வாரம் கல்கத்தா ஏலத்தின் போது, டார்ஜிலிங் தேயிலையை வாங்குவதை சோவியத் ரஷ்யா நிறுத்தியுள்ளது. அலகாபாத் நீதிமன்றத்தீர்ப்புக்குப்பின் ஏற்பட்ட அரசியல் உறுதியின்மை, இதற்குக்காரணமாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. டார்ஜிலிங் தேயிலை மட்டுமே இங்கு தனிப்பட்ட பண்டமாக இருப்பதால், மேற்கு ஜெர்மனியும் ஈரானும் குறைந்த அளவுக்குத் தேயிலை வாங்கினாலும் தேயிலை ஏலம் முடியாமல் தேக்க முற்றுவிட்டது. டார்ஜிலிங் தேயிலை உற்பத்தியில் 80லிருந்த 90 விழுக்காடு சோவியத் ரஷ்யாவுக்கே போகிறது. சோவியத்ரஷ்யா தேயிலை வாங்குவதில், தொடர்ந்து இத்தகைய போக்கைக் கடைப்பிடிக்குமானால் மேலும் பல தேயிலைத் தோட்டங்களை மூட வேண்டியும் பல தோட்டங்கள் திவால் ஆகவும் வேண்டிய நிலையும் ஏற்படும் என்று தேயிலைத் தொழில் துறையைச் சார்ந்தவர்கள் கூறுகின்றனர். கடந்த சில நாட்களாக சோவியத் ரஷ்யா தேயிலை வாங்கும்

போதெல்லாம், முந்தைய ஆண்டு விற்றவிலையை விட ரூ.5 அல்லது ரூ.6 குறைவாகவே கேட்கின்றனர்". (இது முந்தைய விலையைவிட 30%லிருந்து 50% வரை குறைவாகும்-ஆ-ர்).

இதே நிலைமைதான் புகையிலை வணிகத்திலும் நிலவுகிறது. சோவியத் யூனியனின் புகையிலை வாங்குவோர் இந்தியாவில் அறுவடைக் காலத்தில் பயணம் செய்து பெருமளவு புகையிலையை வாங்குவதால் சோவியத்யூனியனே சில ஆண்டுகளாகப் புகையிலை வணிகத்திலும் விரிந்த அளவுக்கு வாங்குவோனாக உள்ளது.

இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன; அந்த நாடுகள் இந்தப் பொருட்களை மறு ஏற்றுமதி செய்து மூன்றாம் உலக நாடுகளுக்கு உலக அங்காடி விலைக்கு விற்கின்றன. எடுத்துக்காட்டாக 1964இல் போலந்துதான் இம்மியளவும் உற்பத்தி செய்யாமல் 109,000 பவுண்டு பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இந்தியாவுக்கு உயர்ந்த இறக்குமதி விலைகள்:

சோவியத் யூனியன் வழங்கும் கடன்கள் மாற்ற முடியாத ரூபிள்களில் இருப்பதாலும், அந்தக் கடன்களைக் குறிப்பிட்ட திட்டங்களுக்காகவே செலவிட சோவியத் யூனியன் விதித்திருப்பதாலும் எவ்விதப் போட்டியும் அத்தொழில்களில் ஏற்பட இயலாமல் போகிறது. போட்டியின்மையும், சோவியத் யூனியன் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆகும் செலவு பற்றிய விவரங்கள் தராததாலும், பொருட்களை உயர்ந்த விலைக்கு விற்க வழி வகுக்கின்றன. போட்டி இல்லாததால், 'காலங்கடந்த' இயந்திரங்களை விற்பனை செய்யவும் முடிகிறது. இவ்விரு வழிமுறைகளுமே இந்தியாவில் சோவியத் ரஷ்யாவின் நடைமுறைகளின் பகுதியாகி விட்டன. இந்தியப்

பொருட்களுக்குக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மதிப்பிடும் விலைகளுக்கும், உலக அங்காடிகளுக்குமிடையே 15% லிருந்து 20% வரை வேறுபாடு இருப்பதாக 1969 வரை கிட்டிய தகவல்களின் படி ஆஷா எல்.ததார் தம் ஆய்வில் குறிப்பிடுகிறார். 1970-71இல் இந்தியா தான் வாங்கிய சோவியத் எண்ணெய்க்கு, மேற்கு ஜெர்மனி வாங்கிய விலையை விட 30% அதிகம் தந்தது. மற்ற நாடுகளைவிட சோவியத் உதவியையே சார்ந்திருக்க வேண்டிய நிலை அதிகமாக உருவாகியுள்ளது. இங்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டதும் சோவியத் உதிரி உறுப்புகளுடன் இயந்திரங்களைப் பழுதுபார்த்துக் கவனித்துக் கொள்ள தொழில் வல்லுநர்களும் கூடவே வந்து விடுகின்றனர். இதனால் கணிசமான அளவுக்கு நீண்ட காலச் செலவுகளும் கூடுகின்றன.

பரிமாற்ற விலைகளைத் தானே முடிவுசெய்தல்:

ரூபிளுக்கும் ரூபாய்க்கும் இடையே உள்ள மதிப்பு விகிதங்களை சோவியத் யூனியன் தான் விரும்பும் வகையில் மாற்றி அதன் மூலம் இந்தியக் கடன்களை உயர்த்தியுள்ளது.

1974 மார்ச்சுக்கும் 1975 மார்ச்சுகுமிடையில் சோவியத் யூனியன் ரூபிளுக்கெதிராக ரூபாயின் மதிப்பை 13 முறை நாணய மதிப்பிறக்கம் செய்துள்ளது. இத்தகைய ஒருதலைப் போக்கான நடவடிக்கைகளால் சோவியத் யூனியனுக்கு இந்தியாவின் கடன் சுமார் ரூ.400 கோடி உயர்ந்தது.

இந்தியாவில் சோவியத் அதிகார வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் 'இனவெறிக் கொள்கை

சோவியத் யூனியன் 'உதவி' தரும் முன்னரே மிக அதிகம் ஊதியம் பெறும் சோவியத் வல்லுநர்களே திட்டங்களை வரையவும், உருவாக்கவும், நிர்வகிக்கவும், பின்னர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் தேவையான முன் நிபந்தனைகளை விதிக்கின்றது. ஆங்கிலேயர் விட்டுச்சென்ற தனிப்பட்ட விடுதிகளில் தங்கியுள்ள

இச்சோவியத் வல்லுநர்கள், அங்கு இந்தியர்களை வேலைக்காரர்களாக மட்டுமே ஏற்றுக்கொண்டார்கள்; தற்போது தான் மிகச்சிறிய இந்திய உயர்வகுப்பினர் அக்குடியிருப்புகளில் தங்கமுடிகிறது. (இதற்கு எடுத்துக்காட்டாக கலகத்தா நீச்சல் விடுதியைக் குறிப்பிடலாம். உயர்வகுப்பு விடுதிகளில் தங்கி வந்த கிழக்கு ஐரோப்பிய நாட்டு விருந்தினர்கள், 1969இல் மேற்கு வங்காளத்தில் இருந்த ஐக்கிய முன்னணி அரசிடம் (மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் பங்கு கொண்டிருந்த அரசு) கல்கத்தா நீச்சல் விடுதியில் உள்ள மனமகிழ் வசதிகளைத் தாமும் தம் குடும்பத்தினரும் மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டியும் அதைப் பொது நீச்சல் குளமாக மாற்றக்கூடாது என்று கோரியும் விண்ணப்பம் தந்தனர்) அவர்கள் திறமை வாய்ந்த ஒரு இந்தியத் தொழிலாளியின் ஊதியத்தைப்போல் 12 மடங்கு பெறுகின்றனர். அவர்கள் தம் குடும்பத்தாருடன் தாமே கட்டிக்கொண்ட இல்லங்களிலோ அல்லது முந்தைய காலனி ஆதிக்க ஆட்சியாளர்கள் தங்கி இருந்த இல்லங்களிலோ வாழ்கின்றனர்.

சோவியத் யூனியன், சில உற்பத்தித் துறைகளை இந்தியாவுக்கு மாற்றி ஒப்பந்தம் செய்து கொள்கிறது. தவிர, அப்பொருட்களின் விலையைத் தானே நிர்ணயம் செய்து, அதைக் கொண்டு சோவியத் யூனியன் தாவளித்த கடனுக்கு ஈடுகட்டி கொள்கிறது. மாட்டுப் பிண்ணாக்கு, முந்திரி, தேயிலை, காபி, மிளகு, புகையிலை, கைவினைப் பொருட்கள், சணல் பொருட்கள் போன்றவை சோவியத் யூனியனுக்கு இன்றளவும் மிகவும் முக்கியமான இறக்குமதிப் பொருட்களாக இருந்து வருகின்றன.

சோவியத்தின் அதிகாரபூர்வ பொருளியல் ஏடான 'எகனாமிஸ்ஸ் காஜா கெஜடா' இந்நடைமுறை உண்மையைக் கீழ்க்காணுமாறு கூறுகிறது. "சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் வளரும் நாடுகளில் நிறுவப்பட்டுள்ள

நிறுவன அமைப்புகளில் இருந்து சோவியத் யூனியனுக்கு ஆண்டுதோறும் பல்வேறு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எலுவான் தொழிற்சாலையிலிருந்து எகிப்து நாட்டு எஃகுத் தகடுகளும், அலெக்சான்ரியா கப்பல் கட்டும் கூடத்திலிருந்து பொருட்களை ஏற்றிச் செல்ல உதவும் கப்பல்களும், தொழிற்சாலைகளிலிருந்து ட்ராக்டருக்கான உதிரிபாகங்களும் கிடைக்கின்றன. பெட்ரோலியம் தொடர்பான அனைத்துக் கருவிகளை ஈராக்கும், எரிவாயுப் பொருட்களைப் பெருமளவு ஈரானும் தருகின்றன.

இந்தியாவில் இத்தகைய போக்கின் வளர்ச்சியை, மத்திய பிரதேசத்திலுள்ள பிலாய் தொழிற்சாலையின் இரண்டாவது கட்ட வளர்ச்சியிலும், மேற்குவங்கத்திலுள்ள துர்க்காபூர் கண் கண்ணாடித் தொழிற்சாலையிலும் எளிதில் உணரலாம். பாதி முடிக்கப்பட்ட தொழில் துறைப் பொருட்கள் சோவியத் யூனியல் முழு உருவாக்கம் செய்யப்படுகின்றன. இதனால் மேலும் மேலும் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை வளருகிறது.

முதல் பார்வையில் இப்புதிய வெளிநாட்டு வணிகம் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு சாதகமானதாகத் தெரியும். போக்குவரத்து ஊர்திகளுக்கான பழுதுபார்ப்புக் கருவிகள், மின்கலன்கள், கார்களுக்குத் தேவையான பொருட்கள், மின்கம்பிகள், மற்றும் புள்ளி விவரக் கணிப்புப் பொறிகளின் தனிப்பகுதிகள் ஆகியவை இவற்றில் அடங்கும். அதாவது மூன்றாம் உலக நாடுகள், பன்னாட்டு சோசலிசத் தொழிற் பகுப்புத் திட்டத்தில் ஓர் இடம் பெற்று, சோவியத் யூனியனின் ஒருங்கிணைந்த மொத்தமான தொழில் வளர்ச்சிக்குத் தம் பெரும்பங்கை அளிக்கின்றன எனலாம்.

இத்தகைய இருதரப்புச் சார்பு நிலை, மூன்றாம் உலக நாடுகள் தமக்குள் பன்முகப்பட்ட ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் கிடைக்கும் நலன்களுக்கெதிராக அமைகிறது. வளரும் நாடுகள் தமது கூட்டறிக்கைகளில் கோருவது போன்று, தொழில்துறை வளர்ச்சி குன்றிய நாடுகள்

கூட்டாகத் தமது நலன்களை இத்தகைய பன்முக ஒப்பந்தங்கள் மூலம் பெறமுடியும்.

சோவியத்தின் கழிவுப் பொருட் கூடையாக இந்தியா

சோவியத் யூனியன் தான் பயன்படுத்தாத – பயன்படுத்த லாயக்கற்ற கனரக தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் கிடங்காக இந்தியாவைப் பயன்படுத்துகிறது. இந்திய அங்காடித் தேவைகளுக்கு முற்றிலும் ஒவ்வாத கனரக இயந்திரத் திட்டங்களை சோவியத் உதவியுடன் இந்தியா ஏற்படுத்த நேரிட்டது. இத் திட்டங்களின் முழுமையான திறனையும் பயன்படுத்த வழியில்லாததால், கடன்களைத் திருப்பிச் செலுத்த மிக நீண்ட காலமாவதுடன் கடன் அதிகரிக்கவும் செய்கிறது. இது இந்தியப் பொருளாதாரத்தை வலிவடையச் செய்வதற்கு மாறாக வலிவு குன்றச் செய்கிறது. பயன்படாத, மற்றும் அரைகுறை அளவே பயன்தரும் தொழில்துறை நிறுவனங்கள் நிறுவப்பட்டதால், அதற்கான செலவுக்கான வட்டியைக்கூட அவை தரும் அளவிற்குப் பயன்படவில்லை.

சோவியத் உதவியால் இந்தியாவில் 80 முக்கியமான தொழில் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமானவை, சோவியத் தம்பட்டமடிக்கும் -பிலாய், பொகாரோ உருக்காலைகளாகும். 1953லேயே நிறுவ ஒப்புக்கொள்ளப் பட்டபடி, பிலாய் ஆலை குறித்த காலத்திற்கு முன்னரே நிறுவப்பட்டு, திட்டமிடப்பட்ட வண்ணம் செயல்படத் தொடங்கியது. ஆனால் பொகாரோ ஆலை அமைப்போ சோவியத் யூனியன் மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கும் நெகிழ்விலாத் தன்மையுடைய உதவிக்கு ஓர் அடையாளமாக இருந்தது. இத்திட்டப்படி, இவ்விரு உருக்காலைகளும் தற்போதைய இந்திய உருக்கு உற்பத்தியைக் காட்டிலும் மூன்று மடங்காக உயர்ந்து. 10 மில்லியன் டன் உருக்கு உற்பத்தியை எட்டியிருக்க வேண்டும். அதாவது 1980களில் இந்தியாவின் உருக்கு உற்பத்தியளவு சோவியத் யூனியனின் உற்பத்திக்கு ஈடாக

வேண்டும். இவ்விரு உருக்காலைகளுக்கும் மிக நெருக்கமான தொடர்புடைய 4 பெரிய கனரக இயந்திர ஆலைகள் சோவியத் யூனியன் உதவியுடன் இந்தியாவில் பொதுத்துறையில் நிறுவப்பட்டன. அவற்றுள் முதன்மையான முக்கியத்துவமுடையது, பீகார் ராஞ்சியில் உள்ள கனரகப் பொறியியல் கழகத்தின் கனரக இயந்திரக் கட்டமைப்பு ஆலையாகும். பிற, உத்திரப் பிரதேசத்தில் அரித்துவாரில் உள்ள கனரக மின்பொருள் ஆலை, மேற்கு வங்கத்தில் துர்காபூரில் உள்ள சுரங்கம் மற்றும் இணைவுடைய இயந்திர உற்பத்திக் கழகம், இராஜஸ்தானில் கோட்டாவில் உள்ள கோட்டா கருவி ஆலை முதலியன.

இவ்வகைத் தொழிற்பிரிவில் சோவியத் யூனியன் பலமிக்க ஓரிடத்தைப் பிடித்துவிட்டது. சோவியத் உதவியால் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்கள் 80% உற்பத்தியைத் தம் ஆளுகையில் கொண்டுள்ளன. பிற இன்றியமையாத்துறைகள், எண்ணெய் (உற்பத்தியிலிருந்து சுத்திகரிப்பு வரை), உலோக உற்பத்தி (குறிப்பாக அலுமினியம்), மின் உற்பத்தி (நீர் மற்றும் அனல் மின் நிலையங்கள்). இந்த 80 முக்கிய திட்டங்களின் அடுத்தகட்ட திட்டமும் வளர்ச்சியும், சோவியத் யூனியனின் அப்போதைய ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தகுந்தமுறையில் இணைக்கப்பட்டிக்கின்றது. அதாவது அதன் 5வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், இந்தியாவுடன் சோவியத் யூனியன் செய்து கொண்டிருந்த 6வது ஐந்தாண்டு வணிக ஒப்பந்தத்திற்கும் ஏற்ப அமைந்திருந்தது.

சோவியத் யூனியனில், 1975 டிசம்பர் விவரத்தின்படி, உணவு உற்பத்தி 13 பங்கு குறைவாகவே (அதாவது திட்டமிட்ட 155 மில்லியன் டன்னுக்குப் பதிலாக 105 மில்லியன் டன்களே) இருந்தது. போருக்குப் பின்னர் என்றுமில்லாத வகையில் தொழில்துறை உற்பத்தி குறைந்தது. இவ்விரண்டையும் கணக்கிற் கொண்டு தீட்டப்பட்ட திட்டத்தின் விளைவுகள், இந்தியாவிலும்

தெளிவாகத் தெரிந்தன. சோவியத் பொருளாதாரத்தை முறைகேடாகக் கையாண்டதன் விளைவுகளை, இந்தியாவின் இருபெரும் உருக்காலைகளை நீண்டகால தாமதத்திற்கு உள்ளாக்கியதிலிருந்து அறியலாம். மிக உயர்ந்த திட்ட இலக்குகள், நடைமுறைக்கு மாறாக அமைந்திருந்தன. இந்தியாவின் 7 மில்லியன் டன் உருக்கு உற்பத்தி 60களில் இருந்த 3ஆவது ஐந்தாண்டுத் திட்ட உற்பத்தியைவிட அதிகமில்லை. இதற்கிடையில், பொகாரோவில் ஆலையை இந்தியா வசம் ஒப்படைக்க சோவியத் பிரதிநிதிகள் எட்டு முறை கால நீட்டிப்பு செய்தனர். இத்தகைய காலக் கழிவிற்கு இந்தியர்களே காரணம் என்று 1974 முதல் அவர்கள் குறை கூறவும் செய்தனர்.

இவ்வுண்மைகளை 18-11-1975 பீகிங்ரெவ்யூ கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "சோவியத் யூனியன், கடன் கொடுப்பவன் என்ற முறையில் வணிகத்தின் மூலம் இந்தியச் செல்வங்களைப் பெருமளவில் சுரண்டியது. இதில் சாதாரணமான முறை, குறைந்த விலைக்கு வாங்கி உயர்விலைக்கு விற்றல். உலக அங்காடி விலைகளில் 10 முதல் 15% வரையிலும் சில சமயங்களில் 30% வரையிலும் குறைவான விலைக்குப் பெருமளவு முக்கியப் பொருட்களை சோவியத் யூனியன் வாங்கிக் கொண்டது. கடனின் ஒரு பகுதியாக இந்தியாவில் நிறுவப்பட்ட சோவியத் யூனியனின் இயந்திரங்களும், தொழில்துறைக் கருவிகளும், தரத்தில் குறைந்தும் விலையில் உயர்வாகவும் இருந்தன; அதாவது சில சமயங்களில், உலக அங்காடி விலையைவிட அவை 20 முதல் 30% விலை உயர்வுடையவை. இம்முறையில் சோவியத் யூனியன் இந்திய மக்களிடமிருந்து பெரும் லாப மீட்டியது. இத்தகைய நிலைமைகளை பொகாரோ ஆலை அமைப்பில் ஏற்பட்ட கால நீட்டிப்பிலிருந்து அறியலாம்.

இந்திய அரசியலில் சோவியத்தின் ஊடுருவல்:

இங்கு குறிப்பிட்டுள்ள சுரண்டலுக்கான நிலைமைகளை சோவியத் யூனியன் ஒரேயடியாக ஏற்படுத்திக்

கொள்ளவில்லை. இந்திய தேசிய விடுதலையின் வீச்சுக்கு எதிராகவும் அமெரிக்கப் போட்டியாளர்களை எதிர்த்தும் இந்த நிலைமைகளை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் அரசு இயந்திரத்தின் மீது பெருமளவு செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டதால், உழைக்கும் வர்க்கத்தை அடக்கி வைத்து சுரண்டலுக்கான ஏகபோக நிலைமைகளை உருவாக்க முடிந்தது. இது அவர்களின் தாக்குதலில் ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய கட்டம்.

அரசு இயந்திரத்தின் மீது செல்வாக்கை வலுப்படுத்துவதற்கான மிக முக்கிய கருவியாகத் திகழ்ந்தது, அரசுத்துறை வளர்ச்சிக்கான உதவி. இம்முறையில் தன் நிலையை வலுப்படுத்திக் கொண்டபின், கீழ்க்காணும் மிக முக்கியமான அழிவு வேலைகளில் இறங்கியது.

1969: காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படுத்தி சோவியத் துறைகளை எதிர்ப்போரை

கட்சியிலிருந்து அகற்றியது.

1971: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூலம் அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரசில்

பிளவு ஏற்படுத்தி முற்போக்குச் சக்திகளைச் சங்கத்திலிருந்து வெளியேற்றியது.

1971: சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்குமிடையே "அமைதி மற்றும் நட்புறவு"

ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனால் இந்தியாவில் சோவியத்தின் இராணுவ

ஊடுருவல் ஏற்படுத்தும் சாதகமான நிலைமை ஏற்பட்டதுடன், இராணுவ, அரசியல், பொருளாதாரச் செயல்களிலும் இந்தியா சோவியத்தைச் சார்ந்திருக்கும் படி செய்தல். (பிந்தைய ஆண்டுகளில் தனித்தனி ஒப்பந்தங்களால் இது மேலும் மேலும் படிப்படியாக வளர்ந்தது).

1971: பாகிஸ்தான் மீது இந்தியாவின் படையெடுப்பு - கிழக்குப் பாகிஸ்தானைத்
தனியாக்குதல் – 15 வருட பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் –

1973: இந்தியத் திட்டக் குழுவுக்கும் சோவியத் யூனியன் அரசுத் திட்டக் குழுவுக்கும்
இடையே ஏற்படுத்தப்பட்ட 'ஒத்துழைப்பு ஒப்பந்தம்' - ஆகியவற்றின் மூலம் இந்தியாவுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையே ஏற்பட்டிருந்த 'பன்னாட்டு வேலைப்பகிர்வு' உறுதியாக்கப்பட்டது.

1975: இறுதியாக, இந்திய உழைக்கும் சக்திகளின் வளர்ந்துவந்த எதிர்ப்பை ஒடுக்கும்
முயற்சியாக நெருக்கடி நிலையைத் தோற்றுவித்தல்.

நெருக்கடி நிலைமைக்கு முன்னரும், மாபெரும் தேசிய இரயில்வே வேலை நிறுத்தத்திற்குச் சில மாதங்களுக்குப் பின்னரும், சமூக ஏகாதிபத்தியக் கொள்கைக்கு அடங்கி நடந்த காங்கிரஸ் கட்சிக்கும் திருத்தல் வாதக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிராக ஒரு ஐக்கிய முன்னணி உருவாகத் தொடங்கியிருந்தது. பாகிஸ்தான் போரின்போது திணிக்கப்பட்ட நெருக்கடி நிலைமைச் சட்டங்கள் 1971 முதல் நடைமுறையில் இருந்ததுடன், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களையும், அரசியல் போராட்டங்களையும் ஒடுக்க அவை பயன்படுத்தப்பட்டன.

இத்தகைய ஐக்கிய முன்னணியில், பாசிச எதிர்ப்புச் சக்திகள், ஜனநாயக சக்திகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் கம்யூனிஸ்ட் சக்திகள் ஒன்றுபடத் தொடங்கின. (இதில் அமெரிக்கச் சார்பு முதலாளித்துவக் கட்சியான சுதந்திராக் கட்சி சேராதது ஆச்சரியமல்ல). குறிப்பாக, இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)யின் பல பிரிவுகள் – பீகாரின் சத்யநாராயண் சிங் தலைமையின் கீழும் ஆந்திரப்பிரதேசத்தில் சந்திரபுல்லா ரெட்டியின்

தலைமையின் கீழும் இருந்த குழுக்கள் – வல்லரசுகளுக்கெதிராகவும், அதிலும் குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ஒரு தேசிய ஜனநாயக முன்னணியைக் கட்ட வேண்டியதை ஆதரித்தனர், அவர்களின் தலைமையின் கீழ், நெருக்கடி நிலைமைக்கு முன்னர் பீகாரிலும் ஆந்திராவிலும் நிலமற்ற உழைப்பாளிகள் மற்றும் உழவர்களின் போராட்டங்கள் வெகுவேகமாக வளர்ந்தன. ஜெயப்பிரகாஷ் நாராயண் நடத்திய பெரும் மக்கள் இயக்கங்களுடன் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ) நெருங்கிய உறவு கொண்டிருந்ததற்குப் பதிலடியாக இந்திரா அரசின் நெருக்கடி நிலைமை திணிக்கப்பட்டது.

இந்தியத் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் அவை வேலை நிறுத்தங்களாகவோ, ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளாகவோ இருந்தால்கூட அவற்றைச் சட்ட விரோதமானது என்று கூறி ஒடுக்கும் முயற்சியாக நெருக்கடி நிலை இருந்தது. காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத் தலைமைகள் (ஐ.என்.டி.யு.சி மற்றும் ஏ.ஐ.டி.யு.சி) இந்த அடக்குமுறையை ஒத்துக் கொண்டதுடன், எந்த வேலை நிறுத்தத்திற்கும் எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதை முழுமையாக நிறைவேற்றினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சங்கமான அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ், தொழிற்சாலை மட்டங்களில் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் முற்போக்குத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் சமூக ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் இந்திரா கும்பலின் நலன்களைப் பாதுகாக்க அதிக உற்பத்தியில் ஈடுபடுமாறு தொழிலாளர்களைத் தூண்டவும் முயற்சி செய்தது.

பொகாரோ உருக்காலை: சில உண்மைகள்

இந்தியாவிற்கான சோவியத் உதவியின் உண்மை வடிவத்தை, பொதுத்துறையின் மிகப்பெரிய திட்டமான

பொகாரோ திட்டத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு தெளிவாக அறியலாம்.

இருவேறு கூற்றுக்களின் அடிப்படையில் இத்திட்டத்தில் உள்ள முரண்பாடுகளை அறியலாம். திருத்தல் வாதக் கம்யூனிஸ்ட் கட்சியின் வார ஏடான 'லிங்க்' கில் வெளியான எ.எ. அலியின் 'முற்போக்கான இந்திய சோவியத் கூட்டு' பற்றிய கட்டுரை, பொகாரோவை இந்தியாவின் முதல் 'சுதேசி' உருக்காலை என்று பறை சாற்றுகிறது. அதே சமயம், சோவியத் யூனியனின் உருக்காலை ஏற்றுமதிக் கம்பெனியை சார்ந்த வி.குஸ்னெஸ்டோவ், 'டாஸ்' ஏட்டில் கூறுவது: 'பொகாரோவில் தொழிற்சாலைகளை நிறுவ ஒத்துழைக்கும் இந்திய சோவியத் ஒப்பந்தம் திட்டமிடலிலும் ஆலை அமைப்புக்கான கருவிகளையும், சாதனங்களையும் வழங்குதலிலும் சோவியத் நிறுவனங்கள் உயர்ந்த அளவு பங்கு வகிக்க வகை செய்கின்றது. (நவம்பர் *14-1974)* தான் கூறுவதன் பொருள் அவர்க்கு நன்கு தெரியும்!

இந்தியா, சுதேசி உருக்காலைகளை விரும்பியது. திருத்தல்வாதப் பிரச்சாரகர்கள் இந்த நோக்கத்தைத் தமக்குச் சாதகமாகத் திருப்பிக் கொண்டனர். இதில் முக்கியமாக இந்தியாவுக்குத் தேவைப்பட்டது தற்சார்பும் விடுதலையுமே; ஆனால் இறுதியில் கிட்டியது, அதன் எதிர்மறைகளே. அதாவது, இந்தியா, சோவியத் யூனியனுக்குப் பெரும் கடனாளியானதுடன், ஆலையின் திட்டமிடல், கட்டமைப்பு, நிர்வாகம் ஆகிய துறைகளில் சோவியத் யூனியனின் மிகப்பெரிய கட்டுப்பாட்டை ஏற்கவும் நேர்ந்தது.

சோசலிச வார்த்தைகளை அர்ச்சனையாக்கிக் கொண்டு, சமூக ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவின் சுதந்திரத்தை வலுவாக்குவதாக நடித்தனர்; இந்தியாவில் உள்ள தங்கள் ஏஜெண்ட்களுடன் கூட்டுச் சேர்ந்து ஏமாற்று வார்த்தைகள் மூலம் தமது ஏகாதிபத்தியச் செயல்களைச் சுளுவாக்கிக் கொண்டனர்.

ரூர்கேலா, பிலாய், துர்காபூரை அடுத்து இந்தியாவில் அரசுத்துறை சார்பில் நான்காவது உருக்காலையை ஏற்படுத்தும் முடிவு, இந்தியாவின் இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்திற்கு முன்னரே 1955 இல் எடுக்கப்பட்டது. அமைக்கப்படும் ஆலை ஓர் உருள் உருக்குத் தொழிற்சாலையாக இருக்க வேண்டும் என்று 5 ஆண்டுத்திட்டத் துவக்கத்தில் முடிவாக்கப்பட்டது. 1950களில் உள்நாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப இந்திய உற்பத்தித் திறன் இல்லாததால் இக்குறிப்பிட்ட உருக்கு உற்பத்தித் துறைக்கான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டிய தேவை எழுந்தது. ரூர்கேலாத் திட்டத்திற்கு உதவியாக அமையும் வண்ணம் பொகாரோவில் உற்பத்தித் திறனுக்குத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. 1961இல் இந்தியத் திட்டக்குழு "பொகாரோ உருக்காலைத் திட்டம் - நிறைவேற்றலில் உள்ள பிரச்சினைகள்" என்ற ஓர் அறிக்கையில் இவ்வுருக்காலைக்கான ஒரு திட்டத்தை அளித்தது, இவ் ஆலை குறித்த ஒரு விரிவான திட்டத்தை வரைந்தளிக்கும் பொறுப்பு ஒரு இந்தியப் பொறியியல் அலுவலகத்திடம் விடப்பட்டது. அத்திட்டம் கீழுள்ளவற்றைச் சேர்த்தது:

1. பொகாரோ ஒரு அரசுத்துறை உருக்காலையாக அமைந்திருப்பதால் விலையினங்கள் மிதமானதாகவும், கூடியவரை பயன்படுத்தப்படும் பொருட்களும் கட்டமைப்புச் சாதனங்களும், இந்தியப் பொருட்களாகவே இருக்க வேண்டும்.
2. தேவைப்படும் அந்நியச் செலாவணி, இந்தியாவின் சொந்த ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானமாக இல்லாமல், அந்நியக் கடன்களாகவே இருக்க வேண்டும்.
3. வரைபடம் முதல் திட்டச் செயல்பாடு ஈறாக உள்ள தொழில்நுட்பத் திட்டம் முழுவதும், இந்தியர்களின் கைகளிலேயே இருக்க வேண்டும். (இத்திட்டத்தில் இது ஒரு புதிய கூறாகும்)

இவ்வுருக்காலைக் கட்டுமானத்திற்குத் துணையாக வேற்று நாட்டு உருக்குத் தொழில்நுட்ப வல்லுனர்கள் 35 முதல் 40 பேர் தேவைப்படலாம் என்று தஸ்தூர்கோ நிறுவனம் ஒரு மதிப்பீடு செய்தது. அதே சமயம் அமெரிக்க உருக்காலைக் கழகத்திலிருந்து தருவிக்கப்பட்ட ஓர் திட்ட அறிக்கை 670 அமெரிக்கத் தொழில்நுட்ப வல்லுனர்கள் தேவைப்படும் என்று மதிப்பிட்டது. (இன்று பொகாரோவில் ஏறக்குறைய அதே அளவு சோவியத் வல்லுனர்கள் உள்ளனர்)

செலவு மதிப்பீடுகளிலும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் வெவ்வேறு கணிப்புக்கள் இருந்தன. (மொத்தமாகத் தேவைப்படும் 920 மில்லியன் டாலர்களில் 510 மில்லியன் அந்நியச் செலாவணியாகத் தேவைப்படும் என்று அமெரிக்கரும், தேவைப்படும் 650 மில்லியன் டாலர்களில் 320 மில்லியன் அந்நிய செலாவணியாகத் தேவைப்படும் என்று இந்தியரும் கணக்கிட்டனர்.) வேறு காரணங்களினால் இந்திய அரசாங்கம் அமெரிக்கக் கடனுதவி வேண்டாம் எனத் தீர்மானித்தது. அரசுத் துறையில் ஓர் உருக்காலை அமைக்க அமெரிக்கா நிதியுதவி செய்யாது என்றும், அது தன் கட்டுப்பாடுகளைத் திணிக்கும் என்றும் கருதப்பட்டது. கென்னடி நிர்வாகத்தின் கீழ் இந்தியாவில் அமெரிக்கத் தூதராக இருந்த ஜே.கே. கால்பிரெய்த், எவ்விதத்திலேனும் இந்தியாவுக்கு அமெரிக்காவிடமிருந்து கடன்களைப் பெற்றுத்தர ஆயத்தமாயிருந்தார். அதற்குக் காரணம், சோவியத் தனது திட்டங்கள் மூலம் இந்தியாவின்மீது அமெரிக்காவைக் காட்டிலும் அதிகப் பிடிப்பை ஏற்படுத்திவிடும் என்பதை அவர் சரியாக உணர்ந்திருந்ததே.

அமெரிக்க உருக்குக் கழகம், பொகாரோ உருக்காலைத் திட்டத்துக்கு ஓர் 'உண்மையான பேரத்தை' அளித்தது. இத் திட்டச் செயலாக்கம் ஏகாதிபத்தியக் கருத்தோட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தக் கருத்தோட்டத்திலிருந்து சோவியத் யூனியனின் முறை

சிறிதளவே மாறுபட்டது. "பொகாரோவில் அமெரிக்க உருக்குக் கழகத்தின் கூட்டு", கீழ்க்கண்டவாறு செலவுகளை வகைப்படுத்தியிருந்தது. தேவைப்படும் 500 மில்லியன் டாலர் அந்நியச் செலாவணியில் 100 மில்லியன் பங்குகளாக வகைப்படுத்தல்; மீதியை முடியுமானால் இந்திய, அமெரிக்க அரசுகளிடமிருந்து காப்புகள் (securities) மூலம் கடன்களை எழுப்பிப் பெறுதல். 100 மில்லியன் பங்கு மூலதனத்தில் அமெரிக்க உருக்குக் கழகம், தனிப்பட்ட இந்திய முதலாளிகள் மற்றும் இந்திய அரசாங்கம் மூன்றும் மூன்றில் ஒரு பங்காக ஏற்றல். அமெரிக்க உருக்குக் கழகத்தின் முதலீட்டில் பாதி பண மூலதனமாகவும், மறுபாதி தொழில்நுட்ப வடிவத்திலும் இருக்கும். இதன் பொருள், அமெரிக்க உருக்குக் கழகம் 500 மில்லியன் டாலர் பேரத்தை 10 வருடத்திற்குத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும்; அந்த 10 வருடக் கட்டுப்பாட்டிற்கும் உத்தரவாதம் செய்து கொடுக்க வேண்டும் – இவையனைத்தும் அதன் ஓர் "உண்மையான பேரமான" 16.7 மில்லியன் டாலர் முதலீட்டுக்கு மட்டுமே.

இந்த யோசனைகளை அது செயல்படுத்திக் கொள்ள முடியவில்லை. சோவியத் யூனியன், இந்த 16.7 மில்லியன் டாலர் மூலதனத்தையும் கொடுக்காமல் இதில் வெற்றி பெற்றதே இதில் இன்னுமொரு குறிப்பிடத்தக்க வித்தியாசமாகும். இது எப்படிச் சாத்தியமானது?

1950களின் முடிவுக்குப் பின்னர் (அதாவது 1960லிருந்து) இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே பிளவை ஏற்படுத்தும் முயற்சியை சோவியத் யூனியன் மேற்கொண்டிருந்தது. மூன்றாம் உலக நாடுகளிடையே இருந்து வந்த (இங்கு இந்தியாவுக்கும் சீனத்திற்கும் இடையே இருந்த) நல்லுறவைச் சீர்குலைக்க, சீனத்திற்கு எதிராக இந்திய ஆதிக்கச் சக்திகளுக்கு அது ஆதரவளித்தது இந்தியாவின் ஆக்கிரமிப்பு நோக்கத்திற்கு ஊக்கமூட்டியதுடன் சீனத்தின் மீது தன்னுடைய சொந்த தாக்குதலையும் மேற்கொள்ள முயன்று

கொண்டு இருந்தது. சோவியத் தொழில் நுட்ப வல்லுநர்களை சீனத்திலிருந்து வரவழைத்துக்கொண்டதாலும் இயற்கையின் சீரழிவுகளாலும் சீனப் பொருளாதாரம் நெருக்கடியிலிருப்பதால் சீனம் எந்தத் தாக்குதலையும் எதிர் கொள்ளும் நிலையில் இல்லை என்றும் அதனால் இந்தியா தாக்குதலைத் தொடர இதுவே தருணம் என்றும் சோவியத் யூனியனே ஊக்கமளித்தது. 1962ஆம் அண்டுப் போருக்குப்பின் உடனே சோவியத்யூனியன் இரு 'மிக்' தொகுதிகளை இந்தியாவுக் களித்ததுடன் "மிக்21" விமானங்களை உற்பத்தி செய்து கொள்ளும் உரிமை தந்து இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. எச்.ராய் இவ்வொப்பந்தத்தைப் பின்வருமாறு விளக்கினார்; "சோவியத் ஆயுத வணிகம் – அதிலும் குறிப்பாக நிதியியல், நுட்பவியல் துணையுடன் மிக் 21ஐ இந்தியா உற்பத்தி செய்து கொள்ள உரிமை வழங்கிய சோவியத்தின் முடிவு, இந்திய சோவியத் உறவுகளில் ஒரு பெரும் திருப்பு முனையாக அமைந்தது. இவ்வண்ணம் சோவியத் உதவிக்கான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நோக்கும்போது, இந்தியத் துணைக் கண்டத்தில் தன் செல்வாக்கைச் செலுத்துவதில் வெற்றிகொள்ள சோவியத் கவனமாகத் திட்டமிட்டுச் செயல்பட்டதைத் தெளிவாக அறியலாம்.

இந்தியாவுக்கு சோவியத்தின் பெருமளவு ஆயுத உதவிக்குப்பின் இந்திய உஅரசாங்கத்தின் ஒரு பகுதியினருக்கும் சமூக ஏகாதிபத்திய வாதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் வளர்ந்தன. அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி அரசியல் ரீதியாகவும், அரசுத்துறைகளுக்கு உதவுதல் மூலம் பொருளாதார ரீதியாகவும் கட்டுப்படுத்தி அவ்வடிப்படையில் இந்தியத் துணைக்கண்டத்தைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொணரவே சமூக ஏகாதிபத்தியவாதிகள் இவ்வுறவுகளை வலுப்படுத்த விரும்பினர். இந்திய அரசாங்கத்தின் சில பிரிவினரும் அரசு இயந்திரத்திலும் இராணுவத்திலும் இருந்த சில முக்கியத் தலைவர்களும் இவ்வுறவைப் பற்றிக் கொண்டதன் காரணம், சோவியத்

உதவியுடன் அமெரிக்க, ஆங்கிலேய மூலதனச் செல்வாக்கை விரட்டி விட்டு தம் கட்டுப்பாட்டின் கீழ் அரசுத் துறையை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கமே. இவ்விரு நலன்களுக்கும் இடையே இருந்த கோட்பாட்டுப் பிணைப்பு, திருத்தல்வாதக் கோட்பாடாகவும், நிறுவன வடிவம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் அரசு இயந்திரத்தில் ஊடுருவுவதாகவும் அமைந்தது. இதன் விளைவே ஆளும் காங்கிரசும் திருத்தல் வாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்த பாசிச சர்வாதிகார ஆட்சி.

1964-65இல் சோவியத் யூனியன், இந்திய அரசு இயந்திரத்திற்குள்ளேயே பொருளாதாரத் திட்டங்களில் ஒரு வலுமிக்க செல்வாக்கை உருவாக்கிவிட்டது. இது ஆப்கானிஸ்தானிலும் நிகழ்ந்தது. பொகாரோதிட்டத்திற்கான பேச்சு வார்த்தைகளில் சோவியத் யூனியன் இந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டது.

பிரதிநிதிகளைப் பரிமாறிக் கொண்ட சில வாரங்களிலேயே, சோவியத் யூனியன் தன் பெரும்பலத்தை இந்திய உருக்கு அமைச்சரகத்தின் மீது செலுத்தி, திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட இந்திய ஆலோசனை நிறுவனத்தை வெளியேற்றியது. இந்தியாவின் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்றான அரசுத்துறையில் திட்டங்களை அமைத்தலை-அமெரிக்க உதவி மறுக்கப்பட்ட நிலையில் – தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். தஸ்தூர்கோ நிறுவனத்தை வெளியேற்றி 800 கோடி ரூபாய்களுக்கு ஒரு மாபெரும் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலம் இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு மிக முக்கியமான துறையில் கட்டுப்பாட்டை விரிவு செய்து கொள்ளவும், அதேசமயம், இம்முறையில் அரசுத்துறையில் செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்ளவும் அவர்களால் முடிந்தது.

பொகாரோ திட்டம்: ஓர் அவசரக் கோலம் – அளவிலா இழப்பு

அனைத்து நடவடிக்கைகளும் அவசர அவசரமாக முடிக்கப்பட்டதிலிருந்தே சோவியத் யூனியன் இதற்கு எந்த அளவு அழுத்தம் கொடுத்திருக்கும் என்பதை அறிய முடிகிறது. (ஒப்பந்தம் கையெழுத்தான மூன்று மாதத்திற்குப் பின்னர்) சோவியத் ஏஜென்சி இவ் ஆலை குறித்து 28 தொகுதிகளில் தன் திட்டத்தை அளித்ததன்பின் மூன்று மாதங்களில் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதே நாளில் உருக்கு அமைச்சரகம் இத்திட்டச் செலவினம் குறித்து மதிப்பீடு செய்ய தஸ்தூர்கோ நிறுவனத்தை நியமித்தது. இதன் மதிப்பீடும், பாராளுமன்ற விசாரணைக் குழுவான பொதுத்துறை நிறுவனக் குழு பின்னர் தந்த அறிக்கையும், சோவியத் யூனியன் இந்தியா மீது பெரும் இழப்புக்குரிய இயந்திரங்களையும், உயர்ந்த ஊதியம் பெறும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் திணித்து, நேரடிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு, 'காலங்கடந்த' நிறுவன முறைகளை (சோவியத் யூனியனால் கைவிடப்பட்ட உருக்கு முறை) இந்தியாவின் தலையில் கட்டியது என்று நிரூபித்தன. (இதுபற்றிய விரிவான விளக்கங்களை பத்மதேசாயின் பொகாரோ உருக்காலை – சோவியத் பொருளாதார உதவி பற்றிய ஓர் ஆய்வு என்ற நூலில் காணலாம்). செலவினங்களை சோவியத் பிரதிநிதிகள் மிகப் பெருமளவுக்கு உயர்த்திவிட்டனர்; இதைப் பற்றி இந்திய வல்லுனர்கள் கணிக்க முடியாமைக்கும் காரணம் அவை விளக்கமாக வெளியிடப்படாததேயாகும்.

சோவியத் ஏஜெண்ட்கள் எந்த அளவு வெட்கமின்றி நடந்து கொண்டனர் என்பதை இரு எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவாக உணரலாம். தஸ்தூர்கோ தன் செலவு மதிப்பீட்டில் 100 கோடி ரூபாய்களை (பின்னர் சோவியத் தன் ஆரம்பவிலையில் 100 மில்லியன்களைக் குறைத்துக் கொண்டது) ஆட்சேபித்தது. அதில் ஒரு செலவினம், சிறுசிறு

கட்டுமானப் பணிகள் என்ற தலைப்பின் கீழிருந்த 458 மில்லியன் ரூபாய்களுக்கான செலவாகும். தஸ்தூர்கோ எழுதியது. "இவ்வளவு பெரிய தொகை 'சில்லறைச் செலவினங்கள் பட்டியலில் ஏன் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்பது புரியவில்லை ஏனெனில் கட்டுமானத்திலிருந்தே ஆகும் செலவுகள் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அத்துடன் 'எதிர்பாராத செலவினங்களில்' 385 மில்லியன் ரூபாய்கள் குறிப்பிடப்பட்டுள்யளன. மேலும் "இட மாற்றங்களினால் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கான காப்புச் செலவுகளுக்காகவும் 50 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பின்னர் அவர்கள் குறைகூறத் தொடங்கியபோது, இந்தியப் பொருட்களின் தரம் பற்றிக் குறை கூறினர். இந்திய 'சேமட்' தயாரிப்பாளர்கள் கூறியது கவனிக்கத்தக்கது. (இந்திய சேமட்கற்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மதிப்புமிக்க கற்கள்) "நம் நாட்டு சேமட் கற்களின் உருவ வெளிப்பாடு பிடிக்கவில்லை என்று ரஷ்ய வல்லுனர்கள் கூறுவது வியப்புக்குரியதாகும். அக்கற்களின் தோற்றம் பற்றி ஜெர்மன், ஆங்கிலேய அமெரிக்க வல்லுநர்கள் யாரும் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இக்கற்கள் ஊது உலைகளுக்கு வரிசைப்படுத்தப் பயன்படுகிறதேயன்றி கட்டிடங்களை அழகுபடுத்த அல்ல. அக்கற்களின் வேதியல், இயற்பியல் பண்புகள் சரியாகவே இருப்பதால் அதன் பயன்களில் குறை ஏதுமில்லை அதனுடைய வெளித் தோற்றத்தைக் காரணம் காட்டி ஏன் அதை விலக்கினர் என்பது எமக்கு வியப்பை அளிக்கிறது இவ் ஆட்சேபனையை எழுப்பியதால்தான் சோவியத் யூனியனிலிருந்து 40,000 சேமட் கற்களை இந்தியாவுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்ய முடிந்தது.

இந்தியர் தற்சார்பு பெறுவதற்கான திட்டமாக அமைக்கப்பட்ட உருக்காலையை, தொடக்கத்திலிருந்து இயக்குதல் வரையிலான அனைத்துத்தொழில்நுட்பத் திட்டமிடலையும் தன் கைக்குள் வைத்துக்கொண்டு

சோவியத்யூனியன் முழுக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவது கவனித்தற்கு உரியது. இத் திட்டத்தின் மீது சோவியத் முழுக்கட்டுப்பாட்டையும் வைத்திருக்கவேண்டும் என்பதற்கான அவர்களின் வாதத்தை, உருக்காலைகளுக்கான சோவியத் அரசு திட்ட ஏஜென்சியின் இயக்குநர் க்யூபர்ட்டின் வார்த்தைகளில் கூறலாம். ‘பொகாரோ போன்ற பெரிய ஆலைகளில் பெரிய ஏஜென்சிகள், உற்பத்தியாளர்களுடன் இடைவிடா உறவு வைத்துக்கொண்டால், உற்பத்தி, திட்டமிடல், பொருட்சேகரிப்பு ஆகிய அனைத்தும் சரிவர இயங்கும். வேறு விதமாகக் கூறனால், சோவியத் தர அளவுகள், முறைகள், குறிப்புகளுக்கேற்பவே திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படுவதால் இந்தியத் தொழில்நுட்ப வல்லுனர்களையோ, இந்திய நலன்களையோ, ஏன் இந்தியத் திட்டங்களையோ கூட, கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை’ எனலாம்.

தற்சார்பை வலுப்படுத்தல் என்ற இந்தியாவின் குறிக்கோள் சீர்குலைந்ததுடன் அதற்கு நேர் எதிராக பொகாரோ திட்டமும் திட்டநோக்கும் சமூக ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக் கேற்றதாக மாறியது. பொகாரோ திட்டம்கூட முடிவுக்கு வருவது வருடா வருடம் காலவயணப்பட்டுக் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் மூன்றாண்டுகளாகி விட்டன. ஆயினும், சோவியத் யூனியன் “இறுதியில் இந்தியா மிக உன்னத முறையில் கடன்களைத் திருப்பிச் செலுத்திவிட்டது” என்று முழுத் திருப்தியடைகிறது.

- நன்றி: - Third World Unity

3. 'அந்நியமாதல்' – எஸ்.வி. இராசதுரை பதில் தருகிறார்

எஸ்.வி.ராஜதுரையின் 'அந்நியமாதல்' மார்க்சியம் பற்றிய பல பிரச்சினைகளை முதல்முறை தமிழில் தருவதனாலும், பல பிரச்சினைகளில் வழக்கமாக மார்க்சியவாதிகள் கொள்ளும் அணுகு முறையிலிருந்து விலகி நிற்பதனாலும் ஒரு அசலான நூலாக குறிப்பிடத்தகுந்தது. இந்நூல் தொடர்ந்து எழுப்பும் பிரச்னைகள் பல. இவை கேள்விகள் வடிவில் முன் வைக்கப்பட்டபோது, ராஜதுரை தந்த பதில்கள் இவை. பிரச்னைகளுக்கு இவை முற்ற முடிந்த விடைகள் என்ற முறையில் இவை இங்குத் தரப்படவில்லை. தவிர, இவ்விடைகள் நூலைப் படிப்பதற்கு மாற்றாக அமைவனவும் அல்ல. வாசகர்களின் சிந்தனையைக் கிளறுவதில் இவ்விடைகள் நிறைவடைகின்றன.

✦ **மார்க்ஸின் கருத்தாக்கங்களில் அந்நியமாதல் மையமாக இருப்பதை நீங்கள் சிறப்பான விளக்கியுள்ளீர்கள். இந்தக் கருத்தாக்கம் எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியவர்களிடம் இடம் பெறுகிறதா? விளக்குங்கள். இல்லையெனில் காரணம் என்ன?**

முதலாவதாக எங்கல்ஸ்:

1843 டிசம்பர், 44 ஜனவரி ஆகிய இரு மாதங்களில் எங்கல்ஸ் கட்டுரை. 'Outlines of a critique of political economy. இது அரசியல் பொருளாதாரத்தில் மார்க்சுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்துவதிலும் அவர் சிந்தனையில் பெருமளவு மாற்றம் ஏற்படுத்தியதிலும் பெரும் பங்கு வகித்தது. அந்நியமாதல் என்பது எல்லா வகையான இயல்பான, அறிவார்ந்த உறவுகளைத் தலைகீழாகப் புரட்டுகிற ஒரு குறிப்பிட்ட

உற்பத்தி முறையின் காரணமாக எழுகிறது என்றும் எனவே இதை மனித குலத்தின் பிரக்ஞையற்ற நிலை என்றும் எங்கல்ஸ் கூறுகிறார்.

மார்க்ஸ், எங்கல்ஸ் இருவரும் கூட்டாக எழுதிய 'ஜெர்மன் சித்தாந்தம்', 'புனித குடும்பம்' 'கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை' ஆகியவற்றிலும் பல்வேறு இடங்களில் 'அந்நியமாதல்' இடம்பெறுகிறது. 1844ஆம் ஆண்டுக் குறிப்புகளிலுள்ள சில பகுதிகள் அப்படியே 'புனிதக் குடும்பம்' என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல்களேயன்றி 'மூலதனம்' முதலிய நூல்களின் ரஷ்யப் பதிப்புகளில் பொருள் அகர வரிசையில் 'அந்நியமாதல்' இடம் பெறுவதில்லை.

'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலும் ஜெர்மன் சித்தாந்தத்திலும்' அந்நியமாதல் என்ற கருத்தை இருவரும் கிண்டல் செய்வதாகச் சிலர் கூறுவர். ஆனால், குட்டி பூர்ஷ்வாச் சித்தாந்தவாதிகள் பிரஞ்சு சோ லிஸ்டுகள் முதலானோர் இக்கருத்தைக் கருத்து முதல்வாதக் கண்ணோட்டத்தில் பயன்படுத்துவதையே இவர்கள் எதிர்க்கிறார்கள். 'ஜெர்மன் சித்தாந்த'த்தில் தமது வரலாற்று ரீதியானதும், பொருண்மை அடிப்படை சார்ந்ததுமான நிலைபாட்டிலிருந்து இக்கருத்தாக்கத்தை விளக்குகிறார்கள். 'கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'யிலும் கூட "மற்றவர் உழைப்பின் மீது ஏவல் புரிவதற்கு", "மற்றவர் உழைப்பை அடிமைப்படுத்தும் அதிகாரத்தை மனிதனிடமிருந்து பறிப்பதே" என்ற வாசகங்கள் காணப்படுகின்றன. 'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கம் தானே இங்கு பயன்படுத்தப்படுகிறது?

1844 குறிப்புகளில் கூட மார்க்ஸ் முதியவராகவே உள்ளார். இங்கும் மனிதனை வரலாற்றுக்குள் வைத்தே மார்க்ஸ் காண்கிறார். மார்க்ஸியத்தின் நிறுவனர்களான மார்க்ஸ் – எங்கல்ஸ் இருவருக்கிடையிலும் பல்வேறு வகை வேறுபாடுகள் இருந்தன. உதாரணமாக 'இயற்கையின் இயங்கியலி'ல் எங்கல்ஸ் காட்டிய அக்கறையை மார்க்ஸ்

காட்டவில்லை. ஃபயர்பாஹை விமர்சனம் செய்யும் மார்க்ஸ், பொருண்மைக் கொள்கையை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்காகவும், மனிதனின் வரலாறு அவனது பொருண்மைத் தேவைகளால் வரையறுக்கப்படுகிறது என்றும் பயர்பாஹ் பார்ப்பதில்லை என்று குற்றம் சாட்டுகிறார்.

எங்கல்ஸ் வேறொரு நிலைபாட்டிலிருந்து பயர்பாஹை விமர்சிக்கிறார். அதாவது "பிரபஞ்சமானது இடைவிடாத வரலாறு உணர்ச்சியினூடே செல்லும் பொருளின் இயக்கம்" என்று பயர்பாஹ் பார்ப்பதில்லை என்றும் இதன் காரணமாகவே பயர்பாஹ் கருத்து முதல்வாதியாக இருக்கிறார் என்றும் எங்கல்ஸ் கருதுகிறார். எங்கல்ஸ் மறுமலர்ச்சிச் சிந்தனையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். உடனடியான அரசியல் நடவடிக்கையில் இறங்குவதும், கட்சிகளைக் கட்டுவதுமான பணி அவருக்கு இருந்தது. 'விஞ்ஞான உணர்வு மேலோங்கி வந்த ஒரு சகாப்தத்தில் எல்லாவற்றையும் விஞ்ஞான ரீதியாகப் பார்க்க விரும்பியவர். எனவே அவரது பிற்காலத்திய எழுத்துக்களில் 'அந்நியமாதல்' போன்ற தத்துவ ரீதியான கருத்தாக்கம் அவரிடத்தில் கொஞ்சம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தது என்றே கருதவேண்டும். அவர் மார்க்ஸியத்திற்கு ஒரு Instrumental Orientation கொடுத்தார். ஆயினும் அவர் போராடியது மானிட விடுதலைக்காக அடிமை நிலையிலிருந்து விடுபட, அந்நியமாதலும் அடிமை நிலையும் வேறல்லவே!

லெனின்:

மார்க்ஸின் 1844 குறிப்புகளையோ, 'க்ரண்ட்ரிஸ்' நூலையோ லெனின் படிக்கவில்லை, 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் அவர் எங்கல்ஸிடமிருந்து மேற்கோள் ஒன்றைக் காட்டும்போது 'அந்நியமாதல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அந்நியமாக்கப்பட்ட உழைப்பு என்ற சொல்லை லெனின் பயன்படுத்தாமல் இருக்கலாம், ஆனால்

மார்க்ஸால் பயன்படுத்தப்பட்ட, சமுதாய உற்பத்தி உறவு பற்றிய இக்கருத்தாக்கம் மார்க்ஸியத்தின் அடிப்படையாக உள்ளது என்பதை லெனின் தெளிவாகக் கூறுகிறார்.

'புனிதக் குடும்பம்' என்ற நூலுக்கு லெனின் எழுதிய பொழிப்புரையில் அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் உள்ள பகுதி ஒன்றைக் குறிப்பிட்டு, 'முழுமையாக வளர்ச்சி பெற்ற மார்க்ஸின் கண்ணோட்டம் என்று எழுதுகிறார். இந்த இடத்தில் இதனை மார்க்ஸின் அமைப்பு முழுவதன் அடிப்படைக் கருத்து என்றும் கூறுகிறார். (Lenin Collected Works Vol-38, Pp 26-27 29-30). மேலும் எங்கல்ஸ் பற்றிய தமது கட்டுரையில், அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் இடம் பெறும் 'புனிதக் குடும்பம்' என்ற நூலை 'புரட்சிகரப் பொருளாயத சோஸலிஸத்தின் அடிப்படைகளைக் கொண்டிருப்பதுடன் ஒரு உண்மையான மானிட நபரின் பெயரால் எழுதப்பட்டது' என்று புகழ்கிறார்.

அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் மையப் பிரச்சனையாக உள்ள 1844 குறிப்புகளைக் கருத்து முதல் வாதம் என்று ஒரு காலத்தில் புறக்கணித்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் மார்க்சிச – லெனினிச நிறுவனம்தான், லெனினின் தத்துவக் குறிப்பேடுகளுக்கு (1961-ஆம் ஆண்டுப் பதிப்பு) வழங்கிய முன்னுரையில் லெனின் புனிதக்குடும்பத்துக்கு எழுதிய பொழிப்புரையை சிலாகிக்கிறது.

1895க்குப் பின் லெனின் எழுதிய முக்கிய நூல்களில் அந்நியமாதல் என்ற சொல் வராவிட்டாலும் அதன் சாரம் இடம் பெறுகிறது. அந்நியமாக்கப்பட்ட உழைப்பின் அதீத வடிவமே ஏகாதிபத்திய மூலதனம்.

ஸ்டாலின்

எங்கல்ஸைப் போலவே மார்க்ஸியத்திற்கு ஒரு Instrumental Orientation கொடுத்தவர் ஸ்டாலின். மக்கள் இயக்கத்தைக் கட்டும் நோக்கத்துடன் மார்க்ஸியத்தை

எளிமையாக்கப்பட்ட வடிவில் சொல்வதற்காக எங்கல்ஸ் சில நூல்களை எழுதினார். இவற்றின் வரையறைகளைப் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இருந்தது. ஆனால் நான்கு விதிகளாகக் குறைக்கப்பட்ட, எளிமையாக்கப்பட்ட மார்க்ஸியத்தையே அசலான மார்க்ஸியமாக ஏற்றுக்கொண்ட ஸ்டாலின், தம் காலத்தில் லெனின் படைப்புகளைக் கூடப் பிரபல்யப்படுத்தவில்லை. லெனினிசம் என்ற பெயரால் ஸ்டாலினின் பொழிப்புரைகளே பிரபல்யம் பெற்றன. லெனினுக்குப் பிந்திய ரஷ்யாவின் நிலைமைகளில் திரிபுகள் ஏற்பட வரலாற்று ரீதியான புறக்காரணங்கள் இருந்த போதிலும், ஸ்டாலினின் சுய திருப்தியும் இதற்கு முக்கிய காரணமாகும். புதிய அதிகார வர்க்கம் தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட நேரத்தில் தான் கம்யூனிசம் மிக அருகில் வந்துவிட்டதாக ஒரு பிரமை அவருக்கு இருந்தது. முதலாளியத்திற்குப் பிந்திய சமுதாயத்தில் ஏற்படும் புதிய முரண்பாடுகளையும், சிக்கல்களையும் முதலாளியத்தின் எச்சமாகவே அவர் பார்த்தார். உண்மையான, மானிட நபரின் தேவைகளை அவரால் பார்க்க முடியவில்லை. அரசின் தேவைகளே மானிடத்தேவைகள் என்று கருதினார். எனவே அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் அவரால் கருத்து முதல் வாதமாகக் கருதப்பட்டதில் வியப்பில்லை. மேலும் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரைப் போல ஸ்டாலின் மேதாவிலாசம் பொருந்தியவர் அல்ல. ஒரு விசுவாசிக்கப்பட்ட இலட்சியத்திற்காக நேர்மையாக (இது தவறான முறையில் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்று) உழைத்தவர் இவர்.

மாவோ:

இடைவிடாத புரட்சியில் நம்பிக்கை கொண்டவர். உடைமைகளை சமூகமயமாக்கினால் மட்டுமே சோ லிசம் வந்துவிடாது என்பதையும், சோ லிசத்தின் கீழும் வர்க்கப் போராட்டம் நடைபெறும் என்பதையும் கண்டறிந்து கூறியவர். மக்களை விட்டு அந்நியமாகிய கட்சி,

நிர்வாகயந்திரம், அரசு ஆகியவற்றுக்கு எதிராகப் பண்பாட்டுப் புரட்சியை நடத்தியவர். வர்க்கப் போராட்டமில்லாமல் தத்துவம் இல்லை என்றவர். மனித வளர்ச்சிக்கு ஒரு முடிவே இல்லை என்றவர், சோ லிசத்தை நாம் கடந்தால் ஒழியக் கம்யூனிசம் வராது, கம்யூனிசத்தின் கீழும் குணவியல் ரீதியான மாறுதல்கள் ஏற்படும். கம்யூனிசத்திலும் பல கட்டங்கள் இருக்கும் என்றவர். "கலகம் செய்வது நியாயமே" என்ற கருத்தில் இடைவிடாத புரட்சி குறிப்பிடப்படுகிறது.

விடுதலை என்பது முற்றான ஒன்றல்ல. இடைவிடாத விடுதலை என்பது அந்நியமாதலிலிருந்து பெறும் விடுதலையே, மாவோவின் படைப்புக்களில் 'அந்நியமாதல்' இடம் பெறவில்லை: மாவோ அடிப்படையிலேயே ஹெகலிய விரோத மனப்பாங்கு கொண்டவர். மார்க்சியத்தின் அடிப்படைப் பார்வை ஒன்று, இத்தத்துவம் வரலாற்று ரீதியாக எடுக்கும் தற்காலிக வடிவமொன்றில் இல்லாதது வியப்புக்குரியதல்ல. இதனால் மாவோவிடம் இக்கருத்தாக்கப் புரிந்து கொள்ளல் இல்லை என்று முடிவு செய்துவிடமுடியாது.

1960களில் சோவியத்கட்சிக்கும் சீனக்கட்சிக்கும் நடந்த தத்துவப் போராட்டத்தின் போது வெளியிடப்பட்ட சௌயாங்கின் கட்டுரை ஒன்றில், இளம் மார்க்ஸ், முதிய மார்க்ஸ் என்ற வேறுபாடு இடம்பெற்றது. முதிய மார்க்சே ஏற்கத் தக்கவர் என்ற கருத்து ஒரு குறுகிய நிலைபாடுதான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பீகிங் ரெவ்யூ கட்டுரை ஒன்று, அந்நியமாதல் என்பது நீண்ட விவாதத்துக்குரிய பிரச்னை என்று குறிப்பிட்டது. இவ்விரு செய்திகளின் மூலம் சீனத்தில் அப்பிரச்னை விவாதிக்கப்படுவது தெளிவாகிறது. நவீனமயமாக்கும் திட்டங்களை மேற்கொள்ளும் சீனம் அந்நியமாதல் போன்ற கருத்தாக்கங்களைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டி இருக்கும் — நடைமுறையில் அதைக் கடந்து செல்லும் திட்டத்தை மேற்கொண்டிருந்த போதிலும்.

✦ **'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கம் இளைய மார்க்சிடம் மட்டுமே இடம் பெற்ற – ஹெகலிசத்தின் எச்சம் என்று கூறப்படுவது பற்றி உங்கள் கருத்தென்ன? விளக்குங்கள்.**

மார்க்ஸ் பயன்படுத்தும் 'அந்நியமாதல்' 'கடந்து செல்லுதல்' போன்ற சொற்கள் ஹெகலால் பயன்படுத்தப்பட்டவைதான். அதேபோல 'இனஜீவி', 'சாராம்சம்' போன்ற சொற்கள், ஃபயர்பாஹால் பயன்படுத்தப்பட்டவைதான். ஆனால் இச்சொற்களை மார்க்ஸ் எந்தப் பொருளில் பயன்படுத்துகிறார் என்பதை 1844-ஆம் ஆண்டுக் கையெழுத்துப்படிகள், ஜேம்ஸ்மில் மீதான விமர்சனக் குறிப்பு (1844), யூதப் பிரச்சனை (1843) போன்ற படைப்புகளைப் படிப்போருக்குப் புரியும். இச்சொற்கள் சிலவற்றை மார்க்ஸ் அரசியல், வரலாறு, பொருளாதாரத் துறைகளில் தரம் உருவாக்கிய படைப்புகளில் பயன்படுத்துவதில்லை என்பது உண்மையல்ல என்பது ஒருபுறமிருக்க, இத்துறைகளில் இவற்றுக்குத் தேவையில்லை. காரணம் இனஜீவி, சாராம்சம், கடந்து செல்லுதல் போன்றவை, தத்துவம், மானிடவியல் ஆகியவை சம்பந்தமான விளக்கங்களுக்குரியவை. 'இனஜீவி' என்ற சொல்லைப் பயன்படுத்தும்போது, படைப்புச் செயலில் ஈடுபடக் கூடிய, அதன் காரணமாகவே தன்னையும் தன் இனத்தையும் தன் செயல் சிந்தனை ஆகியவற்றின் சுட்டுப் பொருளாகக் கருதக்கூடியவன் மனிதன் என்ற பொருளிலும், இவனது படைப்பு வரலாற்று ரீதியாக வளர்ந்து வருவது – (சாராம்சத்தைப் போல) என்ற உணர்வோடும் மார்க்ஸ் பயன்படுத்துகிறார்.

ஹெகலின் சிந்தனையில் 'அந்நியமாதல்' என்ற கருத்து இடம் பெறுகிறது என்பதற்காக மார்க்சின் கருத்தாக்கத்திலும் ஹெகலியச் செல்வாக்கு இருக்கிறது என்று கூறுவது அறியாமைதான். ஹெகல் முற்றான ஆன்மா தன்னை வெளியில் இயற்கையாகவும், காலத்தில் வரலாறாகவும் படைக்கிறது. அப்படைப்பு 'வேறு' எனக்

கருதுகிறது. பிறகு மனிதனின் பிரக்ஞையில் அதுவே நான் என்ற உணர்வு பெறுகிறது. அதே போலவே மனிதனின் பிரக்ஞை புறப்பொருட்களை, புறவுலகாகப் படைக்கிறது. இவை பிரக்ஞையிலிருந்து வேறுபட்ட அந்நியமான ஒன்றாகக் காட்சி அளிக்கிறது. தனக்கு அந்நியமான உலகை எதிர்கொள்கிறோம் என்று நினைக்கிறது. ஆனால் தத்துவவாதியின் சிந்தனையில் அது வேறல்ல. தானேதான் அது என்ற உணர்வு ஏற்பட்டதும் இந்த அந்நியமாதல் கடக்கப்பட்டு விடுகிறது. ஹெகலின் 'அந்நியமாதல்' முற்றிலும் கருத்துமுதல் வாதக் கருத்து. பூர்சுவா சமுதாயத்தில் மனிதனுக்கும் அவனது படைப்புக்களுக்குமிடையே கண்ட உறவை முற்றானதாக்கி அதைச் சிந்தனையில் கடக்கும் போக்கு ஹெகலுடையது.

1844 ஆம் ஆண்டுக் குறிப்புகளில் 'Critique of the Hegalian philosophy as a whole' என்ற கட்டுரையைப் படித்தாலே போதும். ஹெகலின் சாதனைகள் – குறைகள் இரண்டையும் மார்க்ஸ் இயங்கியல் நோக்கில் செரித்துக் கொள்கிறார்.

மேலும் மார்க்சின் கருத்துக்களை ஒவ்வொரு கட்டமாக (பாயர்பாஹ் செல்வாக்கு இருந்த கட்டம், ஹெகல் செல்வாக்கு இருந்த கட்டம்) பிரிப்பதும், ஒவ்வொரு கட்டமும் முன்னைய கட்டத்திலிருந்து தீவிரமாக வேறுபடுகிறது என்று சாடுவதும், மறுக்ளக முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஆனால் அத்தகைய ஆதாரங்கள் இது வரையில் யாராலும் வைக்கப்படவில்லை. இப்படிப் பாகுபாடு செய்வதில் கடும் பிரயத்தனம் செய்த அல்தூஸ்ஸருக்கு எதிராக மறுக்க முடியாத சான்றுகள் வைக்கப்பட்டன. அவரே பாகுபாடு செய்யப்பட வேண்டிய கட்டம் என்று முதலில் கூறிய காலத்தை கொஞ்சம் நகர்த்தி வைத்தார். அவரது துரதிர்ஷ்டம் மார்க்ஸ் கடைசி நாள் வரை இளமையாகவே இருந்தார் அதாவது இளம் மார்க்சின் கருத்துக்கள் முதிய மார்க்சால் ஒருபோதும் கைவிடப்படவில்லை.

'அந்நியமாதல்' பற்றிய 1844 ஆண்டுக் குறிப்புகளில் உள்ள வாசகங்கள் அப்படியே மார்க்சின் பல்வேறு படைப்புகளில் இடம் பெற்றுள்ளன. எனது நூலில் நான் 'மெய்யறிவின் வறுமை', 'மூலதனம்', 'கூலியுழைப்பும் மூலதனமும்' போன்ற நூல்களிலிருந்து பல மேற்கோள்களைத் தந்துள்ளேன், மெஸ்ஜாரோஸ், மெக்லெல்லன், மாண்டெஸ் ஆகியோர் 'முதிய' மார்க்சின் படைப்புகளில் (மூலதனம் – பாகம் 1,2,3) உபரி மதிப்பு பற்றிய கோட்பாடுகள், க்ரண்ட்ரிஸ் போன்ற நூல்கள் அனைத்திலும் அந்நியமாதல் என்ற கருத்தாக்கத்தின் பல்வேறு வகை விளக்கங்கள் மட்டுமல்லாது, இச்சொல் கொஞ்சமும் மாற்றமில்லாது அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்குப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்கள். 'மூலதனம்' நூலுக்கான முதல் நகலாக இருந்தது க்ரண்ட்ரிஸ் என்பது கூறத் தேவையற்ற ஒன்று. 'மூலதனம்' நூலை எழுதுவதற்காக, மார்க்ஸ் தமது 1843-5 ஆம் ஆண்டுக் குறிப்புகளை படைப்புகளைப் பயன்படுத்தினார் என்பதை எங்கல்ஸ் நமக்குத் தெரிவிக்கிறார் (மூலதனம் 1 முன்னுரை).

'ஜெர்மன் சித்தாந்தம்' என்ற நூலில் 'அந்நியமாதல்' என்ற சொல் வக்கணையாகக் குறிப்பிடப்படுகிறது என்றும் இந்நூல் இன்னும் முழுமையாகக் கருத்து முதல் வாதச் சிந்தனையின் செல்வாக்கிலிருந்து முழுமையாக விடுபடவில்லை, எனவேதான் மார்க்சும் எங்கல்சும் அதைப் பதிப்பிக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள்.

மார்க்ஸ் உண்மையில் இந்நூலைப் பதிப்பிக்க முயன்றார். பதிப்பிக்க முடியாத காரணம் அன்றைய ஜெர்மானிய நிலைமைகள் அனுமதிக்கவில்லை என்பதுதான். "கடித்துக் குதறும் எலிகளின் விமர்சனத்துக்கு" இந்நூலை விட்டுவிடத் தயங்கவில்லை என்று மார்க்ஸ் கூறினார். காரணம் இதை எழுதிய நோக்கம் கை கூடிவிட்டது. தமக்குத்தாமே தெளிவு ஏற்படுத்திக் கொள்ளவே இருவரும் இதை எழுதினர். மார்க்சும் எங்கல்சும்

எழுதியவையெல்லாம் குறிப்பிட்ட இலக்குகளை அடையத்தான்.

'ஜெர்மன் சித்தாந்தத்தில்' தாக்குதலுக்குள்ளான தத்துவங்களின் செல்வாக்குக் குறைந்து வந்தாலும், மார்க்ஸ் – எங்கல்ஸ் ஆகியோருக்கு சுய–தெளிவு ஏற்பட்டு விட்டதாலும், இதைப் பதிப்பதில் அவர்கள் விருப்பம் காட்டவில்லை. மேலும் மார்க்ஸ் தாம் எடுத்துக் கூறும் வி யங்களை இடைவிடாது திருத்தியமைத்துக் கொள்வது வழக்கம். ஜெர்மன் சித்தாந்தத்தில்' மாற்றுத் தத்துவங்கள் பற்றிய விமர்சனம் மூலம் அவரது கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ள வடிவம் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் புரிந்துகொள்ளக் கடினமானதாக இருக்கும் என்பதை அவர் விரைவிலேயே உணர்ந்தார்.

இந்நூலில் மார்க்சால் விமர்சனத்துக்குள்ளாக்கப்படும் சித்தாந்தப் போக்குகள் (இவர்களிற் சிலர் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலும் விமர்சிக்கப்படுகின்றனர்) சில 'மானிட இயல்பு', 'மானிட சாராம்சம்', 'மனித குலம்', 'பொதுப்படையான மனிதன்' போன்ற கருத்துக்களை வெளியிட்டன. இவற்றின் கருத்து முதல்வாத, வரலாற்று நோக்கற்ற, கருத்துக்களிலிருந்து தமது கருத்துக்களை இனம் பிரித்துக் காட்டும் நோக்கத்துடன் 'அந்நியமாதல்', 'மனித சாராம்சம்' போன்ற இயங்கியல் கருத்துக்களைச் சில இடங்களில் பயன்படுத்தாமலும், சில இடங்களில் நேரடியாகப் பயன்படுத்தியும் தமது விளக்கங்களைக் கூற வேண்டிய நிலைமை இருந்தது.

'ஜெர்மன் சித்தாந்தம்' அடிப்படையில் தத்துவ, வரலாற்றுப் பிரச்சினைகளை ஆராயும் நூல். 1844 குறிப்புகளிலோ தத்துவம், பொருளாதாரம் மட்டுமல்லாமல், வரலாறு, உளவியல், மானிடவியல், அறிவியல், சமயம், சமூகவியல் ஆகியவையும் ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவிச் செல்கின்றன. மார்க்ஸ், புதிய தத்துவ அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக, தமக்கு ஏற்பட்ட தெளிவான புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் எழுதி வைத்த

சிதறல்களே இக்குறிப்புகள். அவரது செயல்திட்டம் என்னவாக இருந்தது என்பது இக்குறிப்புகளுக்கு அவர் எழுதிய முன்னுரையே சான்று. அவ்வடிப்படையிலேயே அவரது 'முதிய' கால நூல்கள் எழுதப்பட்டன. இதன் பொருள், ஆரம்பகாலத்திலிருந்து அவரிடம் மாற்றமே இல்லை என்பதல்ல. அவரது கருத்துக்கள் யாவும் முளைவிட்டு வளரும் போக்கில் இருந்த நூல் இது. சமுதாயம், வரலாறு, பொருளாதாரம், மானிடவியல் போன்ற பல்வேறு துறைகளில் அவருக்குக் கிட்டிய ஞானத்தின் அடிப்படையில் அவரது கருத்துக்கள் இடைவிடாது வளர்ச்சியடைந்தன, வளம்பெற்றன. எனவே நாம் மார்க்சின் படைப்புகள் முழுவதிலும் ஒரு அடிப்படையான ஐக்கியத்தைக் காணவேண்டும். 1844 குறிப்புகளுக்கு மார்க்ஸ் கண்டறிந்த 'மதிப்பு பற்றிய உழைப்புக் கோட்பாடு' அந்நியமாதல் என்ற கருத்தாக்கத்துடன் ஐக்கியப்படுத்தப்பட்டது.

ஹெகலின் செல்வாக்கு இருக்கிறது என்று மேலோட்டமான சொற்களைப் பிடித்துக் கொண்டு தொங்குபவர்கள் – இயங்கியல் சிந்தனையற்றவர்கள். இவர்கள் analytical mind உள்ளவர்கள் தான். 'மனிதன் ஒரு சமுதாய விலங்கு' என்று மார்க்ஸ் கூறியதால் அவரை ரூஸ்ஸோவுடனும், மனிதன் ஒரு 'அரசியல் விலங்கு' என்றதால் மார்க்ஸை அரிஸ்டாட்டிலுடனும், 'மனிதன் கருவிகள் செய்யும் விலங்கு' என்ற சொற்களைக் கொண்டு மார்க்சை பிராங்ளினுடனும் 'மதிப்பு' என்ற சொல்லைக் கொண்டு அவரைச் செம்மைப் பொருளாதாரவாதிகளுடனும் ஒப்பிடுவது போன்றதே இது.

இனி மார்க்ஸ் மீதான ஹெகலியச் செல்வாக்கு பற்றி:

1914 ஆம் ஆண்டு தமது 'தத்துவக்குறிப்பு நூல்களில்' லெனின் எழுதினார்: (முதலாம் உலகப் போர் துவங்கும் கால கட்டத்தில் தான் லெனின் தத்துவப் பிரச்னைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார், ஹெகலை ஆழ்ந்து கற்றார்)

'ஹெகலின் 'தர்க்கவியல்' முழுவதையும் ஆழ்ந்து கற்றுப் புரிந்து கொள்ளவில்லையானால், மார்க்சின் 'மூலதனத்தை, அதிலும் குறிப்பாக அந்நூலின் முதல் அத்தியாயங்களை முழுமையாகப் புரிந்து கொள்வது சாத்தியமே இல்லை".

மார்க்ஸ் கருத்து முதல்வாதத் தற்சார்பு கொண்ட ஹெகலியவாதியல்ல. ஒரு போதும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒரு பொதுக்காரணம் கண்டறிவதில் நாட்டம் கொண்டிருந்தவரல்ல. ஆனால் இயங்கியல் முறையை மார்க்ஸ் ஏற்றுக் கொண்டிருந்த அளவில் அவர் ஹெகலியச் செல்வாக்குக்கு – இதைச் செல்வாக்கு என்று கூறித் தான் ஆக வேண்டுமென்றால் - உட்பட்டிருந்தார்.

✦ மனிதன், வரலாற்றில் வேலைப்பிரிவினை, வர்க்கப்பிரிவினை, வர்க்கப் போராட்டம், தனிச்சொத்து அரசு, சுரண்டல், பல சமூகக்கட்டங்கள் – இவற்றின் வழியேதான் வளர்ந்துள்ளான். இவற்றின் மூலம் அந்நியமாகி - இழந்த தன்னைப் பெறப் போராடி - மீண்டும் தன்னை இழந்து அந்நியமாகி - இப்படித்தான் மனிதனின் வளர்ச்சி நடைபெற்று வருகிறது. அந்நியமாதல் என்ற ஒன்று இல்லாவிட்டால், வளர்ச்சி அறவே சாத்தியமில்லை. இந்நிலையில் 'அடித்தும் அணைத்தும் வளர்க்கும்' தாய்மை போல அந்நியமாதலை மதிப்பிடக்கூடாதா? முரண்பாடுகளினூடே வளர்ந்துவரும் வரலாற்றின் ஒரு பகுதியை – அந்நியமாதலை - நீங்கள் ஏன் ஒரு பகைத்தன்மையோடே சித்தரிக்கிறீர்கள்? இதன் மூலமும் குணமே சிறப்பதை ஏன் நீங்கள் பார்க்கவில்லை?

எனது நூலில் தனிச்சொத்து, வேலைப்பிரிவினை, வர்க்கப் பிரிவினை ஆகியவற்றின் மூலமாகவே மனிதனின் பொருள்வகை – ஆன்மீக ஆற்றல்கள் வளர்ந்தன என்ற மார்க்சியக் கருத்தை விளக்கியிருக்கிறேன். எர்னஸ்ட் பிரிடமிருந்து ஒரு நீண்ட மேற்கோளைக் காட்டியதும் இதனால் தான். மனிதனும் சாராம்சமும் என்ற பகுதியில்

நான் மனிதச் செயல்கள் – படைப்புகளையும் அவற்றின் காரணமாக மனிதனுக்குள்ள சாரத்தையும் ஒரு முற்றான சாத்தியப்பாடு என்ற வகையில் பொதுமைப்படுத்தியுள்ளேன். மனித ஆற்றல்கள் பெருகவும் வளரவும் தனிச் சொத்தும் உழைப்பின் பாகுபாடும் ஆற்றிய (இவை தவிர்க்க முடியாமல் சுரண்டலை உள்ளடக்கின, வர்க்கப் போராட்டத்துக்கு வித்திட்டன) வரலாற்றுப் பங்கை நான் மறுக்கவில்லை.

மார்க்ஸ் பூர்சுவா வர்க்கத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் எத்தகைய மாலைகளை அணிவிக்கிறார்! எதிர்கால லட்சியத்தின் அடிப்படையிலேயே மார்க்ஸ் கடந்த காலத்தை மதிப்பிடுகிறார். ஆனால் மனிதன் தன் ஆற்றல்களை நிறைவு செய்தல், தன்வயமாக்குதல், தன் சாரத்துக்குகந்த வாழ்வையமைத்தல் என்ற பிரச்னைகளை முறையில் பார்க்கும் போது அந்நியமாதல் என்பது ஒரு கொடுமையாக, மார்க்சின் சொற்களில் அப்படி நேர்ந்து விடக் கூடாத, ஒரு தவறு என்ற வகையில் புலப்படுகிறது.

மார்க்ஸ் ஹெகலைப்போல் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு நியாயம் கற்பிப்பவரல்ல. ஹெகலின் கருத்தினங்கள் நிகழ்காலத்துடன் முடிவடைகின்றன. மார்க்சின் கருத்தினங்கள் எதிர்காலத்தை நோக்கித் திறந்திருப்பவை. மார்க்சின் கருத்தாக்கமான 'அந்நியமாதல்' என்பதைப் புரிந்து கொள்ள ஒரே வழி 'கடந்து செல்லுதல்' என்ற கருத்தாக்கத்தை முதலில் வைப்பது தான்.

✦ **மார்க்சின் விளக்கத்திலும் உங்கள் விளக்கத்திலும் அந்நியமாதல், முதலாளியச் சமூகத்தில் மனிதனை முற்றாக ஆக்கிரமித்துள்ளதாகக் காணப்படுகிறது. தன்னை முழுமையாக இழந்துவிட்ட மனிதன், தன்னை எங்கிருந்து, எப்படி மீண்டும் திரட்டிக் கொள்ள – மீட்டுக் கொள்ள முடியும்? தன்னை மீட்டுக் கொள்ளும் சக்திகள், அந்நியமாதல் சூழலில் மிச்சம் இருக்கின்றதா? இல்லையா?**

'கடந்து செல்லுதல்' என்ற பகுதியில் இப்பிரச்னையை நான் தொட்டிருக்கிறேன். 'அந்நியமாக்கப்பட்ட பிரச்னை, அந்நியமாதல் பற்றிய உணர்வு கொண்ட பிரச்னையுமாகும்'. முற்றிலுமாக நிர்ணயிக்கப்பட்டுவிடுகிற பிரச்னை மார்க்சின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. ஆனால் 'அந்நியமாதல் பற்றிய உணர்வு கொண்ட பிரச்னை' 'உழைப்பின் சுய அந்நியமாதல்' என்ற அடிப்படைக் கண்ணியை இறுகப் பற்றாமல் விடுதலை பெற முடியாது. கலை, சமயம், குடும்பம், காதல் ஆகிய ஏதோவொன்றுக்குள் சரணடைவது, மார்க்சின் கருத்துப்படி முழு விடுதலையாகாது. மனிதனின் ஆற்றல்களில் ஏதோவொன்று மற்ற எல்லா ஆற்றல்களையும் பதிவுசெய்வது முழுவிடுதலை ஆகாது. மேலும் இச்சமுதாயத்துக்குள்ளேயே ஆற்றல்களை நிறைவு செய்யும் வாய்ப்புப் பெற்றவன், "கண்டனத்துக்குரிய சமுதாயத்தின் ஏறுவரிசையில் ஓர் உயர்ந்த இடத்தைப் பிடிக்கிறவன் தான்". ஆனால் சுரண்டல் சமுதாயத்துக்குள்ளும், அதை மீறியுமே நற்பண்புகள் வளர்க்கப்பட்டுள்ளன. அன்பு, காதல், வீரம், தியாகம் போன்றவை வளர்ந்துள்ளன. இவை வளரும் எல்லைகள் குறிக்கப்பட்ட போதிலும், குறுகிய வட்டத்துக்குள்ளேனும் இவை வளர்ந்தே வளந்துள்ளன. மானிட மதிப்பீடுகள் பல சமயத்தாலும் வளர்க்கப்பட்டுள்ளன.

✦ **அந்நியமாதல் நிகழ்வதற்கு முன்னர் – அதாவது புராதனப் பொதுவுடமைச் சமுகத்தின் தொடக்கத்திலோ இடையிலோ – அதற்கும் முன்னரோ – மனிதன் தன்னிலை – தன்னில் ஒருமை – உடையவனாக இருந்தானா? பிறகுதான் அவனுக்குள் 'சீர்குலைவு' நேர்ந்ததா?**

மார்க்சின் சிந்தனை, மனிதன் அந்நியமாதலுக்கு இரையாகாமல் இருந்த ஒரு பொற்காலத்தைப் பற்றி ஒரு போதும் பேசுவதில்லை. இன வாழ்வுக்குரிய வாழ்க்கை வாழமுடியாமல் இருக்கிற அந்நியமாக்கப்பட்ட மனிதனைப்

பற்றிப் பேசும்போது அவர் எதிர்காலத்தைச் சுட்டித்தான் பேசுகிறார். தனிச்சொத்து அமைப்புக்குள்ளேயே உள்ளார்ந்துள்ள சாத்தியப்பாடுகளைக் கருத்தில் கொண்டே, அந்நியமாதல் என்பது – ஒரு குறை, இருக்கக் கூடாத ஒன்று' என்று மார்க்ஸ் கூறுகிறார். மார்க்சின் கருத்தினங்கள் எதிர்காலத்தைச் சுட்டுகின்றன.

மேலும் மனித அனுபவத்துக்கு – மனித வரலாற்றுக்கு வெளியே வைத்துப் பார்க்கும் சிந்தனையை மார்க்ஸ் மறுக்கிறார். முற்றான துவக்கம் பற்றி நினைப்பவர்களுக்கு மார்க்சின் நிலைபாடு சங்கட மூட்டுவதாக இருக்கும்.

உலகத்தின் தோற்றம் பற்றிய பிரச்னையை மார்க்ஸ் எடுத்துக்கொள்ளும்போது, அந்நியமாதலின் தோற்றம் என்ற பிரச்னையைப் போலவே இது தவறான பிரச்சனை, இயக்க மறுப்புக் கண்ணோட்டப் பிரச்னை என்று மார்க்ஸ் கருதுகிறார். 'ஆரம்பம்' பற்றிச் சிந்திக்க வேண்டுமானால், இப்போது நிலவுகிற எல்லா நிகழ்ச்சியின் போக்குகளிலிருந்தும் ஒவ்வொன்றாகப் பிரித்தெடுத்துச் சுருக்கிக் கொண்டே வரவேண்டும். இது நம்மை தர்மசங்கடமான நிலையில் வைத்துவிடும். அதாவது நான் இப்படிச் சொல்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள், பிறகு நானே இல்லை என்பதை அனுமானித்துக் கொள்ளக் கூடிய சிக்கல் நேர்ந்துவிடும்.

இயங்கியல் சிந்தனையானது – இடைவிடாது உருவாகி வருகிற, எதிர்கால நடவடிக்கைகளை நோக்கிய, ஒரு ஸ்தூலமான முழுமைக்குள் – ஆரம்பம் பற்றிய பிரச்னைகளுக்கு அவசரமும் இல்லை. அவசியமும் இல்லை என்று கருதுகிறது. மார்க்ஸ், ஜெர்மன் சித்தாந்தத்தில் அந்நியமாதல், தனிச்சொத்து ஆகியவற்றின் மூலதாரங்கள் – ஆரம்பங்கள் என்று சிலவற்றைச் சொல்லக் காரணம் என்ன எனக் கேட்கலாம். இந்த 'மூலாதாரங்கள்' 'ஆரம்பங்கள்' ஆகியவற்றை மார்க்ஸ் தமது கருத்துக்களை ஒழுங்குபடுத்தி முன்வைப்பதற்கான அடிப்படைகளாகத் தான் கருதினார்.

இயங்கியல் சிந்தனை ஒரு சார்பு நிலையான முழுமைக்குள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள, பரஸ்பரம் கட்டுப்பாடு செய்கிற, ஒன்றுக்கொன்று நிபந்தனையாக உள்ள பகுதிகள் என்ற வகையில் தான் அந்நியமாதல், தனிச்சொத்து, உழைப்பின் பிரிவினை என்பனவற்றைக் கருதுகிறார்.

ஒரு கடந்தகால, அந்நியமாக்கப்படாத சமூக அமைப்பு - ஒரு 'பொற்காலம்' பற்றி - நமக்கு ஏதும் தெரியாது என்றால் 'அந்நியமாதல்' என்றால் என்ன என்பது நமக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்?

இயங்கியல் முறையானது, ஒரு நிகழ்ச்சிப் போக்கைத் தனியாகப் பிரித்தெடுத்து அதன் பிறகு அதைச் சோதித்துப் பார்க்கும் முறையல்ல. (இக்காரணத்தாலேயே இது பாசிடிவிசச் சிந்தனையிலிருந்தும் அதன் தர்க்க ரீதியான விளைவான பகுப்பாய்வு அறிவிலிருந்தும் மாறுபடுகிறது. மாறாக அதை வரலாற்றுக்குள்ளேயே வைத்துக் கிரகித்துக் கொள்ளக்கூடியது. இவ்வரலாற்று முழுமைக்குள் அந்நிகழ்ச்சிப் போக்கு, அதன் தொடர்புகள் உறவுகள் ஆகியவற்றைக் கிரகித்துக் கொள்ளக்கூடியது. நிச்சயமானது என்று அது கருதுவது, விஞ்ஞான செயல்முறைகளிலிருந்து விளைவதல்ல. மாறாக இறுதிப் பரிசீலனையில், நிச்சயமானது என்பது, செயலிருந்தே விளைகிறது. அந்நியமாதல் என்ற கருத்தாக்கம், மனிதர்கள் தமது வாழ்வின் மீது தமக்குள்ள கட்டுப்பாட்டையே இழந்து விடுவதற்குக் காரணமான ஸ்தூலமான சமுதாயக் கட்டமைப்புகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கான ஒரு விமர்சனக் கருவியாகும். இக்கருத்தாக்கம் முற்றான அறிவை நமக்கு வழங்குவதில்லை. (கருத்து முதல்வாதச் சிந்தனைகள் ஆரம்பம் – முடிவு – பற்றி - முற்றான அறிவைத் தருகின்றன. இறையியல் இப்படி ஒரு முற்றான அறிவைத் தருகிறது) மேலும் இது பாசிடிவிசம் போல ஒரு 'நிகழக்கூடிய' அறிவையும் தருவதில்லை.

மனிதர்கள் உலகைப் படைக்கவும், தம்மை மேலும் மனிதத் தன்மை பெற்றவர்களாக்கிக் கொள்ளவும் உகந்த முறையில், இன்னின்ன வகையில்தான் உலகின் தன்மை உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும் பண்டை காலச் சமுதாயங்களில் மனிதர்கள் நிறைவு பெற்றவர்களாக, தமது ஆற்றல்கள் – தேவைகள் ஆகியவற்றை நிறைவு செய்து கொள்ளக் கூடியவர்களாக, அந்நியமாகாதவர்களாக இருந்தார்கள் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை. ஏனெனில் அவர்களுக்குக் குறைந்த தேவைகள் – ஆற்றல்கள் மட்டுமே இருந்தன. (தேவைகளும், ஆற்றல்களும் வரலாற்றில் தான் வளர்கின்றன) இச்சமுதாயங்களில் தனி மனிதன் சமுதாய உழைப்புக்குத் தன் காணிக்கையை நேரடியாகச் செலுத்துகிறான். அவன் தனது சமூகச் சூழலுடன் இசைவு கொண்ட ஐக்கியம் கொள்கிறான். அவன் முழு வளர்ச்சியடைந்தவனாக, முழுமனிதனாகத் தோன்றுகிறான் என்றால் அதற்குக் காரணம் அவன் உணர்ந்துள்ள தேவைகளின் வீச்சு மிகமிக வரையறுக்கப்பட்டதாக உள்ளது, உண்மையில், இச்சமூகங்களின் பொருள்வகை வறுமையும் இயற்கைக்கு முன் ஆதரவற்ற நிலையிலுள்ள இவனது உணர்வும் இங்கு சமுதாய, சித்தாந்த, சமயவகை அந்நியமாதல்களின் மூலாதாரங்களாக உள்ளன.

✦ **குடும்பம், ஆண்-பெண் வேற்றுமை, வேலைப் பாகுபாடு, வர்க்க வேறுபாடு, தனிச் சொத்து, சித்தாந்தம், அரசு, நிர்வாக இயந்திரம், சமயம், கலை முதலிய பலவற்றினூடும் சேர்த்து அந்நியமாதல் நிகழ்வதாக நீங்கள் விளக்குகிறீர்கள். சோசலிசம் கடந்து கம்யூனிசம் நிகழ்முறையாகும் காலத்திலும் இவற்றில் சில தொடரும், அப்படியானால் அந்நியமாதல் கம்யூனிச சமூகத்திலும் தொடருமா? தொடருமானால் எவ்வெவ் வடிவங்களில் தொடரும்? தொடருமென்றால் அந்நியமாதல் எப்போது அறவே நீங்கும்?**

மார்க்ஸ் 'அந்நியமாதல்' நீங்கும் ஒரு சமுதாயமாகக் கம்யூனிசத்தைக் கண்ட போது "It is a resolution of the strife between existence and essence, man and nature etc., it is a resolution of the riddle of the history and it knows itself as its solution" என்று கூறுகிறார். வரலாற்றின் புதிர் விடுவிக்கப்பட்ட நிலை என்று நாம் கூறும் போது, இத்துடன் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது என்று நாம் கூறவில்லை. இத்தகைய நிலைபாடுகளை எதிர்ப்பதற்காகவே எனது 'அந்நியமாதல்' நூலில் 'கடந்து செல்லுதல்' என்ற பகுதியில் மார்க்சிடமிருந்து மேற்கோள்களும் அவற்றுக்கான விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன.

மார்க்ஸ் காணும் எதிர்காலம் திறந்த எதிர்காலம். 'வரலாற்றின் புதிர் விடுவிக்கப்பட்ட நிலை' 'விடுதலை' 'கடந்து செல்லுதல்' என்ற கருத்தாக்கங்கள் முற்றான பொருளில் சொல்லப்படுவதேயில்லை. இவையாவும் சார்பு நிலையானவை; தொடர்ந்து வளர்ச்சி பெறுபவை.

இவ்வகையில் கம்யூனிச சமுதாயத்தில் 'கடந்து செல்லுதல்' என்பது இடம்பெற்றே தீரவேண்டும். மார்க்சின் இயங்கியல் சிந்தனையில் எதிர்மறைகள் இரண்டறக் கலந்து விடுவதில்லை. அவை 'இணைவு' மட்டுமே காண்கின்றன. மனிதனின் சாரமும் அவனது வாழ்வும் ஒன்றோடொன்று கலந்து விட முடியாது. அவை ஒன்றுக்கொன்று இணைவு காணவே முடியும். மேலும் ஒவ்வொரு மனிதனும் ஒரு நிகழ்ச்சிப் போக்கு (phenomenon) அவனே சாரம் (essence) ஆகி விட முடியாது. ஒரு சாரத்தின் (இடைவிடாத வரலாற்று வளர்ச்சி என்னும்) நிகழ்ச்சிப் போக்கே அவன். மனிதனின் சாரத்திலிருந்து (இயற்கையும் மனிதனும் சேர்ந்தது) மனித வாழ்வு கொஞ்சம் பின்தங்கியே இருக்கும்.

மார்க்ஸ் வரையறுத்த பொருளில் 'கம்யூனிசம்' என்பது இன்னும் உலகில் எப்பகுதியிலும் நிறைவேறவில்லை. கம்யூனிசம் உலக அளவில் மட்டுமே சாத்தியம். கம்யூனிசத்தின் முதல் கட்டமென்றும்,

சோசலிசமென்றும், முதலாளியத்துக்குப் பிந்திய சமுதாயமென்றும் கூறப்படுகிற சமூக அமைப்புகளே இதுகாறும் நிறுவப்பட்டுள்ளன. இங்கு 'அந்நியமாதல்' என்பது வெவ்வேறு வடிவங்களில் நிலவுகின்றது என்பதை வரலாற்று அனுபவத்திலிருந்து எடுத்துக் கூற முடியும்.

எனவே வரலாற்று அனுபவத்துக்குள் இன்னும் வந்து சேராத 'கம்யூனிசத்தில்' எவ்வெவ் வகையில் அந்நியமாதல் நிலவும் என்று கேட்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆயினும் மானிட அனுபவத்தின் அடிப்படையில் ஒன்றிரண்டைக் கூற முடியும்.

உதாரணமாக, நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றை எடுத்துக் கொள்வோம். நாம் எல்லாவகையான நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள், நெறிப்படுத்துதல்கள் ஆகியவற்றை எதிர்ப்பதில்லை. உலகில் மானிடத்தன்மை நிலவ வேண்டுமானால், ஒழுங்கு நிலவவேண்டும். இந்த ஒழுங்கு ஏதோ ஒருவகை நிறுவனத்திலிருந்து பிரிக்கமுடியாதது. "தன்னுணர்வுடன் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு" மட்டுமே இருப்பதாக வைத்துக்கொள்வோம். இதற்குமே ஒரு திட்டமான வடிவம் இருந்தாக வேண்டும். இது சில வழிகாட்டு நெறிகளை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமாக இருந்தாகவேண்டும். இறுகிப் போய்விடுகிற, அந்நியமாக்குகிற சாத்தியப்பாடுகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை வழிகாட்டும் நெறியாகக் கொண்ட நிறுவனமாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வடிவம் கொண்ட நிறுவனம், குறிப்பிட்ட கடமைகளை மட்டுமே செய்ய முடியும். இக்குறிப்பிட்ட கடமைகள் இக்குறிப்பிட்ட நிறுவனத்தின் தன்மையை நிர்ணயிக்கின்றன. அதாவது, கெட்டி தட்டிப் போன, அந்நியமான, அந்நியமாக்குகிற ஒரு அமைப்பை ஒழித்துக் கட்டி விட்டு அதன் இடத்தில் உட்கார்ந்து கொள்கிற புதிய நிறுவன வடிவமும் அதன் ஆரம்பத்தில் இருந்தே கெட்டி தட்டிப் போகிற ஓர் அம்சத்தைக் கொண்டுள்ளது. ஏனெனில்,

தன்னால் எக்கடமைகளை நிறைவு செய்ய முடியவில்லையோ, அக்கடமைகளுக்கு எதிராக அது கட்டாயம் காழ்ப்புணர்வு கொண்டே தீரும். எனவே இச்சிக்கலிலிருந்து மீளுவதற்கு ஒரே வழி, கடமைகள் முற்றாக நிறைவேறி விட்டன; இலட்சியங்கள் பூரண நிறைவு கண்டு விட்டன; வரலாறு முடிந்து விட்டது; பொற்காலம் வந்து விட்டது என்று கூறுவதுதான். இந்த இலட்சிய அமைப்புக்குத் தகுந்தவாறு மாறுதலே இல்லாத தேவைகள் கொண்ட மனிதன் அல்லது தேவைகளே இல்லாத மனிதன், மாறுதலே இல்லாத கடமைகள் கொண்ட மனிதன் அல்லது கடமைகளே இல்லாத மனிதன் ஒருவனைத் தேட வேண்டியிருக்கும். இத்தகைய 'இலட்சிய அமைப்பை ஒரு 'அதிகார வர்க்கம்' தனது குறுகிய பார்வையின் மூலம், மனிதத்தேவைகளை கடமைகளை, குறுக்கி முடக்குவதன் மூலம் 'முதலாளிய எச்சங்கள்' என்று கூறுவதன் மூலம் உருவாக்க முடியும்.

இரண்டாவதாக, தனி மனிதனுக்கும், குறிப்பிட்ட சமூக வடிவத்துக்குமிடையே என்னென்ன முரண்பாடுகள் சாத்தியமோ அவற்றையெல்லாம் நீக்குவதற்கான மானிட முயற்சிகள் எவ்வளவு உணர்வு பூர்வமானதாக இருந்தாலும், அந்நியமாதலின் அம்சம் ஒன்று உள்ளுறையாக இருக்கவே செய்யும்.

உதாரணமாக ஒரு தனி மனிதனின் ஆளுமையை எடுத்துக் கொள்வோம். வேறு மனிதர்களுடன் பல்வேறு வகையான உறவுகளைப் பெறுதல் என்பதுதான் இவ்வாளுமை உருவாக முன் நிபந்தனையாகும். அவன் முதிர்ச்சியும், சொந்தக் காலில் நிற்கிற நிலையையும் அடைகின்ற கட்டம் வரையிலேனும் மற்றவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு அவனுக்கு வழங்கப்பட்ட சாதனங்கள், கருவிகளைத் தன் சுயவளர்ச்சிக்காகப் பயன்படுத்தியும், மற்றவர்களுடன் தான் கொண்டுள்ள பரஸ்பர உறவுகளில்

தனது சொந்த ஆற்றல்களைப் பயன்படுத்தியும் சோதித்துப் பார்த்தும் (இதற்குள்ள நிபந்தனை, இவை குறிப்பிடத்தக்க அளவில் ஏதோ ஒரு வடிவத்தில் இதர மனிதர்களிடம் இருக்க வேண்டும். உதாரணமாக, எனது இசையாற்றலை இவ்வாற்றல் உள்ளவரிடமே பயன்படுத்தவும், சோதித்துப் பார்க்கவும் முடியும்) இவ்வுறவுகளைப் பெறுகிறான். ஒரு மனிதனைப் பொறுத்தவரை – அவன் அதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் – அவனது சுயநிறைவு என்பது, முதலாவதாக, ஏற்கெனவே இருக்கிற, கிடைக்கக்கூடிய பாத்திரங்கள், பணிகள் ஆகியவற்றில் தன்னைப் பொருத்திக் கொள்ளும் கடமையில் கட்டாயமாக ஏற்படுகிறது. (இப்பாத்திரங்களும் பணிகளும் நிச்சயமாக அவனுக்காகவே என்று – அல்லது மற்றவர்களுக்காகவே என்று உருவாக்கப் பட்டவையல்ல. இப்படி இனிமேல் வரப்போகிறவருக்கென்றே உருவாக்கப்பட்டுத் தயாராக எதையும் வைக்க முடியாது. பூர்வஜென்மவினை ஒன்று இருந்தாதொழிய) பிறகு, இவன் இப்பாத்திரங்கள், பணிகள், ஆகியவற்றின் எல்லைகளை விரிவுபடுத்தலாம் அல்லது உடைத்துக்கொண்டு வெளியே வரலாம் – அவனுக்கேற்றதாக அவை இல்லாத போதும், அவற்றை உடைத்து வெளியேறும் அவனது வலிமை தோல்வி காணாமலிக்கும் போதும். ஆயினும் தனது சொந்த ஆற்றல்களுக்கான வடிகால்கள் இருந்தால்தான் அவற்றை நிறைவு செய்யமுடியும். அவனது சக மனிதர்கள் அவனால் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதியும், விருப்பமும் கொண்டிருந்தாலே அவனது ஆற்றல்கள் நிறைவு பெறும்.

சிக்கலுக்குள்ளான பிரச்னைகள் எப்போதுமே வரலாற்றுத் தன்மையுடையனவாக இருப்பதால், அவற்றுக்குள்ள தீர்வுகளும் வரலாற்றுத் தன்மையுடையனவாகவே இருக்கும். முன்கூட்டியே தயாராக உள்ள தீர்வுகளும் பாதுகாப்புகளும் ஏதும் இல்லை.

✦ சோசலிச சமூகத்திலும் அந்நியமாதல் நிகழும் என்று கூறுகிறீர்கள். இன்று சோவியத் ரஷ்யா, சீனா முதலிய நாடுகளில் எந்த வடிவங்களில் இது நிகழ்கிறது? விளக்குங்கள்.

முதலாளிய அமைப்பை மறுத்து, உருவாகும் புதிய அமைப்பு பழையதின் எச்சங்களையும் அடையாளங்களையும் கொண்டிருக்கும் என்பது மார்க்சிய - லெனினிய உண்மை.

'அந்நியமாதல்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமலேயே, அக்கருத்தாக்கத்தின் சாரத்தைப் புரிந்துகொண்ட நிலையில் 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் லெனின் சோசலிச சமுதாயம் என்ற மாறுதல் கட்டத்தைப் பற்றி விவரிக்கிறார். முதலாளிய உரிமை என்ற வரம்பைக் கடக்காத சமுதாயம் இது, ஜனநாயகம் என்ற வடிவத்தைத் தாண்டாத நிலை இது. விநியோகம் இன்னும் 'புற அளவுகோலான' வேலையின் அடிப்படையில் நடைபெறும் சமுதாயம் இது. எனவே சரக்கு, பணம், புற அளவுகோல் அரசு போன்ற இடைத்தொடர்புகள் இருக்கும் வரை, மனிதன் அந்நியமாதலிலிருந்து முழுமையாக விடுபடுவதாகச் சொல்ல முடியாது.

இத்துடன் சமுதாய உழைப்பை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்துதல், உழைப்பையும் அதன் விளைபொருட்களையும் விநியோகித்தல், ஆகியவை ஒரு அதிகார வர்க்கத் திரிபுகளுக்கு உட்படுத்தப்படுமானால் நிலைமை மேலும் மோசமடையும். சலுகை பெற்றவருக்கு ஒரு வகையிலும் சலுகை பெறாதவருக்கு ஒரு வகையிலுமே விநியோகம் நடைபெறும். உற்பத்திச் சக்திகள் போதுமான அளவில் வளர்ச்சி பெறாத நிலையில் நுகர்வுப் பண்டங்களின் பற்றாக்குறை, அந்நியமாதலை மேலும் உக்கிரப்படுத்தும். இப்போது கட்சி மிகக் கொடுமையான ஒன்றாகவே உணரப்படும்.

சரக்கும், பணமும், அதிகார வர்க்க அமைப்பும் ஏற்கெனவே மனித வாழ்வின் எல்லைகளைக்

குடும்பத்துக்குள் அடைத்து வைக்கும் நிலையை மேலும் அதிகரிக்கும்.

வளர்ந்து வரும் புதிய தேவைகளை - புதிய ஆற்றல்களைக் கருத்தில் கொண்டு, இருக்கிற உள்நாட்டு – வெளிநாட்டு நிலைமைகளைப் புறக்கணிக்காமல், நீண்ட கால விளைவு உண்டாக்கக் கூடிய ஒரு புதிய வகைப் பொருளியல் அமைப்பை உண்டாக்கும் முயற்சியில் சமுதாயச் சக்திகள் (இவற்றில் கட்சிக்கு வழிகாட்டும் பொறுப்பு உண்டு) ஈடுபட்டாலொழிய, 'அந்நியமாதலைக்' குறைக்கும் சாத்தியப்பாடு குறைவாகவே இருக்கும்.

நமது கருத்துகளை ஏற்றுக் கொள்ளாத 'மார்க்சீயவாதிகள்' அந்நியமாதலின் ஒரு வடிவம் 'சமயம்' என்பதையும் இதற்கு சமூக பொருளாதார நிலைமைகளே காரணம் என்றும் 'வழக்கமாக' அவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலைபாட்டிலிருந்து பார்த்தால், அண்மையில் போப் போலந்துக்கு வருகை தந்தபோது பல லட்சக்கணக்கானோர் கூடி வரவேற்றதும், பல லட்சம் போலந்து மக்களுடன், அண்டை நாடுகளிலிருந்தும் (கிழக்கு ஐரோப்பிய 'சோசலிச நாடுகள்') பல்லாயிரவர் வந்து போப்பை தரிசித்ததும் இவர்களால் விளக்கப்பட வேண்டிய ஒன்று.

சீனத்திலும் நிச்சயம் பலவகையான அந்நியமாதல்கள் இருந்தே தீர வேண்டும். ஆயினும் அங்குள்ள கட்சி 'சுய திருப்தி' கொண்ட ஒன்றல்ல. இடைவிடாத புரட்சியில் நம்பிக்கை கொண்ட ஒன்று. அங்கு அதிகாரம் பாட்டாளி வர்க்கத்திடம் உள்ளது. இறுகிப்போன வடிவங்களுக்கு எதிராக 'கலகம் செய்வது நியாயமே என்பதை ஒப்புக் கொள்ளும் கட்சி அங்குள்ளது.

சோவியத் யூனியன் நன்கு ஸ்திரப்படுத்தப்பட்ட ஒரு சமூக ஏகாதிபத்தியம். நம் நாட்டு அரசுத் துறைக் கார்ப்பரே ன்கள் போல, அதிகாரவர்க்க முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் உடைமைகளும், அரசு அதிகாரமும்

அங்கு நிலவுகின்றன. எனவே மார்க்சியக் கருத்தான 'அந்நியமாதல்' அங்கு முற்றாகப் பிரயோகிக்கப்படக்கூடியதே.

✦ **கட்சிக்காரர்களின் மார்க்சியம் பற்றிய விளக்கத்தில் அந்நியமாதல் இடம் பெறுவதில்லை. வேலைப்பிரிவினை, வர்க்கப்பிரிவினை, அரசு, வர்க்கப் போராட்டம், கட்சி, சித்தாந்தம் – இவை போன்ற கருத்தாக்கங்களைக் கொண்டே அவர்கள் மார்க்சியத்தை விளக்குகிறார்கள். அந்நியமாதல் என்ற கருத்தாக்கத்தை விலக்கி வைத்து மார்க்சியத்தை விளக்குவதில் என்ன தவறு நேர்ந்து விடும் என்று கருதுகிறீர்கள்? அந்நியமாதல் என்ற ஒரு கருத்தாக்கக் கூரையின் கீழே பிற அனைத்துக் கருத்துக்களையும் கொண்டு வரும் உங்கள் விளக்கத்தின் தனித்தன்மை அல்லது வலிமை என்ன?**

கட்சிக்காரர்கள் ஏன் 'அந்நியமாதல்' என்ற அடிப்படையில் மார்க்சியத்தை விளக்குவதில்லை என்று கேட்கிறீர்கள்? எந்தக் கட்சிக்காரர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. உண்மையில் நம் நாட்டுக் கட்சிக்காரர்கள் பெரும்பாலோர்க்குத் தத்துவ மரபும், தத்துவ உணர்வும் இல்லை. இரண்டாவதாக, நெடுநாட்களாக இந்திய அரசியலில் இடம் பெற்று அண்மையில் தீவிரம் பெற்ற குதிரை வியாபாரத்தில் (Horse trading) மட்டுமே ஈடுபடுகிற நம் நாட்டுக் கட்சிக்காரர்கள் (இவர்கள்தான் அதிகாரப்பூர்வமானவர்கள்) மனித விடுதலை பற்றி எங்கே சிந்திக்கப் போகிறார்கள்!

ஆயினும் பல்வேறு நாட்டுக் கட்சிக்காரர்களிடையே 'அந்நியமாதல்' பற்றிய விவாதங்கள் தொடர்ந்து நடந்து வந்துள்ளன. 'அந்நியமாதல்' கருத்தாக்கத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் ஆகிய இருவகையினரையும் புரட்டல் வாதிகளிடமும் காணலாம். அதேபோல மார்க்சியம் சாராத சித்தாந்தவாதிகளிடமும் காணலாம்.

1844ஆம் ஆண்டுக் குறிப்புகளில் மார்க்ஸ் கம்யூனிசம், மனித குலத்தின் விடுதலையிலேயே பாட்டாளி வர்க்கத்தின்

விடுதலை உள்ளது என்ற கருத்துக்களைக் கூறுவதால், இந்த அளவில் மட்டுமே புரட்டல்வாதிகளும், பூர்ஷ்வா வர்க்க மனித நேயர்களும் இளம் மார்க்சின் 'அந்நியமாதல்' கருத்தை ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் இக்கருத்தை முதலாளியச் சமுதாயத்தினைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வுடன் இணைத்து, வன்முறைப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றின் தேவையை வற்புறுத்தும் 'முதிய' மார்க்சை இவர்கள் ஏற்பதில்லை.

அதேபோல மானிட விடுதலை என்பதை இடைவிடாத இயக்கமாகக் காணச் சக்தியற்றவர்கள் 'விஞ்ஞானம்' என்ற பெயரால் 'அந்நியமாதல்' 'கடந்து செல்லுதல்' ஆகியவற்றை ஒரு பூர்ஷ்வாச் சித்தாந்தமாகக் காண்கின்றனர்.

வேறு சிலரோ 'அந்நியமாதல்' என்ற கருத்து சோசலிச சமுதாயத்துக்குப் பொருந்தாது என்று கூறுகின்றனர். உதாரணமாக 'அரசு' அந்நியமாதலின் வடிவம் என்ற மார்க்சியக் கருத்து சோசலிச அரசுக்குப் பொருந்தாது எனக் கூறுகின்றனர். இப்படிச் சொல்வதாலேயே பிரச்சினை முடிந்து விட்டதாகக் கூறுகின்றனர். உதாரணமாக, போபோவ் என்பவர் எழுதிய Socialism and humanism என்ற நூலில் (பக்கம் 40, 43, 44) இக்கருத்து தெரிவிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் அரசு பற்றி லெனின் கூறுவதைக் கேளுங்கள்.

"சுதந்திரம், 'அரசு' இவ்விரு சொற்களையும் இணைத்து முடிபோடுவதிலுள்ள அபத்தத்தை எள்ளி நகையாடும் எங்கல்ஸின் உரைகள் எவ்வளவு சரியானவை என்பதை இப்பொழுதுதான் நம்மால் முழு அளவுக்கு உணரமுடிகிறது. அரசு இருக்கும்வரை சுதந்திரம் இல்லை.சுதந்திரம் வந்ததும் அரசு இல்லாமல் போய்விடும்".

போபோவ் எழுதிய நூலில் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான வி யங்களே சொல்லப்படுகின்றன. இப்போது இது பிரச்சனையல்ல.

மார்க்சீயம் என்பது அடிப்படையில் முதலாளியம் பற்றிய மார்க்சின் விளக்கமாகும். முதலாளிய சமுதாயம் எவ்வாறு செயல்படுகிறது. எவ்வாறு வளர்ந்தது, எதை நோக்கிச் செல்கிறது என்பன பற்றிய ஆய்வுகளை மார்க்ஸ் மேற்கொண்டார். இவ்வாய்வுகளிலிருந்து மார்க்ஸ் வடித்தெடுத்த முடிவுகள் முற்றுப் பெறவில்லை. மார்க்சின் ஆய்வுகளுக்குரிய முதன்மையான வி யம் ஒருவருடன் ஒருவர் உறவு கொண்ட மனிதர்கள், அவர்களது படைப்புகள், அவர்களது செயல்கள் ஆகியவைதான். வர்க்கப் போராட்டம், சுரண்டல், உபரி மதிப்பு, உழைப்புச் சக்தியின் விற்பனை என்றெல்லாம் பேசினாலும், இவற்றிலும் வேறு செயல்களிலும் ஈடுபடுகிறவர்கள் மனிதர்கள் தாம். வர்க்கப் போரின் இருபுறமும் நின்று சமர்புரிகிறவர்களும், சுரண்டல் இயக்கத்தின் இருபுறமும் நிற்பவர்களும் மனிதர்கள்தாம். மனிதல்லாத அம்சங்களான உற்பத்திமுறை, வர்க்கம், மதிப்பு, உபரி மதிப்பு, சுரண்டல், விகிதம் போன்றவற்றைச் சுற்றியே மார்க்சிய விளக்கம் பொதுப்படையாக அமைந்திருப்பது உண்மை தானென்றாலும், 'அந்நியமாதல்' பற்றிய மார்க்சீயத் தத்துவம் மனிதர்களையே மையமாகக் கொண்டுள்ளது. இக்கோட்பாட்டில் மனிதனின் நிலைபாட்டிலிருந்து சமுதாயத்துடனும், இயற்கையுடனும் அவனுக்குள்ள உறவுகள் (இவை ஏற்கெனவே இருப்பவையும், உள்ளுறையாக இருப்பவையும்) பார்க்கப்படுகின்றன. அவனது வாழ்நிலை, செயல்கள் ஆகியவற்றின் விளைவாகவே அவனது நிலைமைகள் உருவாகின்றன என்ற விளக்கம் இந்நிலைபாட்டிலிருந்து பிறக்கிறது.

மனிதரல்லாத அம்சங்களைக் கொண்டு விளக்கும் போது, நிலைமைகளின் விளைபொருளாகவே மனிதன் இருக்கிறான் என்ற சிந்தனை தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் 'அந்நியமாதல்' என்ற கருத்தை விளக்குவதற்கு, எதிலிருந்து மனிதன் அந்நியமாகிறான், அவனது

சாத்தியப்பாடுகள் என்ன, மனித இயல்பு, சாரம் என்பது என்ன என்பன பற்றிய விளக்கம் தேவைப்படுகிறது. உடனடிச் சான்றுகளைக் காட்டி விளக்கம் தர முடியாது.

பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வாய்க்கப் பெற்ற சூழல்களைக் கொண்டு, அவர்களது உணர்வைப் பாதிக்கக் கூடிய கருத்துக்களை, வாதங்களை முன்வைக்க முடியும். இவற்றுக்கு உடனடிச் சான்றுகள் தர முடியும். எனவே வர்க்கப் போராட்டம், சுரண்டல், உற்பத்தி முறை போன்ற மானிடரல்லாத அம்சங்களைக் கட்சிக்காரரர்கள் பயன்படுத்தி மார்க்சீயத்தை விளக்குவதில் பெருந்தவறு ஏதுமில்லை என்று நான் கருதுகிறேன்.

ஆனால் உழைப்பின் சுய அந்நியமாதல் என்ற அடிப்படையிலிருந்தே வர்க்கம், வர்க்கப்போராட்டம், அரசு முதலியவை விளக்கப்படும் போதுதான், அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி, பகைச் சக்திகளுக்கு எதிராக நாட்டைப் பாதுகாத்தலோ, அல்லது உடைமைகளைச் சமூகமயமாக்குதலோ, மனித விடுதலை என்ற நீண்ட இயக்கத்தின் ஒரு சார்பு நிலையான வெற்றி நிலையின் பகுதி அம்சங்களே என்பது தெளிவாகும். ஏனெனில் அரசு, அதிகார வர்க்கம், படைகள், சரக்கு, பணம் போன்ற இடைத்தொடர்புகள் மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே இருக்கும்வரை அந்நியமாதல் நீங்காது.

'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கத்தை நினைவில் நிறுத்தும்போது, மானிட விடுதலை அனைவரையும் விடுவிக்கிற நிலை – என்பது பற்றிய தெளிவான சிந்தனை பிறக்கும். வெறும் தொழிற்சங்கங்களுக்குள் மட்டும் சிந்தனையை முடக்கி விடும் நிலை ஏற்படாது.

✦ **வினாக்கள்: ஞானி**

*****

பார்வைகளும் கோணங்களும் வேறுபடுகின்றன, காரணங்களோடு. இதனாலேயே விமர்சனங்கள்.

இலக்கிய விமர்சனம், அதன் சாரத்தில் மனிதன், வாழ்க்கை, வரலாறு பற்றிய விமர்சனம்.

சிந்தனை வடிவிலான விமர்சனங்கள், இறுதியில் செயல் வடிவிலான விமர்சனங்களையே கோருகின்றன.

4. நூல் அரங்கம்:

□ - ஞானி
△ - அக்கினிபுத்திரன்
+ - கதிரவன்
○ - அரசு
● - டி. கிருஷ்ணமூர்த்தி

குறியீடுகள் விமர்சனம் செய்தவரைக் குறிக்கின்றன.

□ பசி - இலக்கியச் சிந்தனை வெளியீடு

பசி - தொகுப்பு நிச்சயமாகச் சொல்லுகிறது: தி.ஜானகிராமன் ஒரு விமர்சகர் இல்லை - ரசிகர்தான் என்பதை. இவைதான் தமிழகத்தில் 78-ல் வந்த 'சிறந்த' சிறுகதைகள் என்றால், தமிழில் 78-ல் தரமான சிறந்த கதைகள் வரவில்லை என்பதை. ஒவ்வொரு மாதமும் ஒருவர் முன்னைய மாதக் கதைகளில் சிறந்த கதைகளைத்தான் தேர்ந்தெடுக்கிறார் என்றால் அவர் தேர்ந்தெடுத்தது அநேகமாகச் சிறந்த சிறுகதை அல்ல என்பதை. இலக்கியச் சிந்தனை இதைச் செய்வதை ஒரு சாதனை என்று கருதினால், அப்படி இல்லை என்பதையும். 78-ல் தமிழில் சிறந்த கதை

வெளியாகியிருக்கும் என்றால் இந்தத் தொகுதிக்கு வெளியில்தான் தேட வேண்டியிருக்கும். இலக்கியச் சிந்தனை, சிறுகதை இலக்கியத்திற்கு வேறு நல்ல வகையில் சேவை செய்வது பற்றிச் சிந்திக்கலாம்.

☐ வெள்ளை ரோஜா – தேனரசன்

வானம்பாடிகளின் கூச்சலிலிருந்து ஒதுங்கியிருந்து இவர் கவிதை கற்றிருப்பது இந்தத் தொகுதியிலிருந்து தெரிகிறது. செய்தித் தொகுப்பு, அலங்கரிப்புகள், ஆவேச முழக்கங்கள், இவற்றில் தேங்கி விடாமல் கவிதையை வளர்த்துக் கொண்டு போய்த் தத்துவத்தில் வேர் கொள்ள வைக்கவேண்டும். தேனரசனுக்கு இது சாத்தியம் என்பதைச் சில கவிதைகள் சொல்லுகின்றன. சமதரும தேவதைக்கு ஸ்நேக புஷ்பங்களைக் காணிக்கையாக்கிய கவிஞர், தேவதைக்குள் மறைந்திருக்கும் அரக்கனைப் பிறகு கண்டாரா? இல்லையா?

அன்னம் - சிவகங்கை விலை: ரூ.5/-

☐ கண்சிமிட்டும் கல்லறைகள்:

-பாப்ரியா

உற்சாகத்தோடு கவிதை எழுதுகிறார் பாப்பரியா. வரவேற்கிறோம். விழுப்புரம், இலங்கை இனக்கலவரம், புயல் கொடுமை – இவை பாப்பிரியாவிடம் கவிதைகளைக் கேட்டு வாங்கிக் கொள்கின்றன. பலிபீடம், கரகக்காரி, கள்ளக்குழந்தைகள் இவை பாப்பிரியாவைக் கவர்ச்சியாகக் கவிதை சொல்ல வைக்கின்றன. பாரத மண்ணைப் பாட்டாளிகளுடையதாக்க சபதம் எடுக்கும் குரல் முழங்கும் சூழலில், அந்த முழக்கம் இவருள் சில கவிதைகளைத் தோற்றுவிக்கின்றன. எல்லார்க்கும் கவிதையைத் தயாரித்து அளித்துவிட்டு பாப்பிரியா பரிதாபமாய்த் தனக்கென எதுவும் இல்லாமல் தனித்து நிற்கிறார்.

அகரம் - சிவகங்கை விலை: ரூ.5/-

☐ கீழைக்காற்று:

- கனல்

மார்க்சியத்தின் இயங்கியல் கோட்பாடு ஆற்றல் மிக்கது: கவர்ச்சி நிறைந்தது. மார்க்சியப் பார்வையில் அந்நியமாதல் கருத்து இக்கால மனிதனை அவனது அகத்தினுள்ளும் புறத்தோடும் நுட்பமாகக் காட்டுவது. இந்தக் கவர்ச்சியும் நுட்பமும் தமிழ்க் கவிதைக்குள் வருவது கவிஞர் கனல் மூலம். தத்துவத்தில் ஈடுபாடில்லாத வானம்பாடிகள் செய்யாததை – செய்யத் தெரியாததை கவிஞர் கனல் தொடங்கி வைத்திருக்கிறார்.

இவை கவிதைகளா? இல்லை. சொற்கோலமே என்கிறார் கவிஞர். கவிதையாகவே செய்வதும் கவிஞர்கள் கடமை.

கனலின் கருத்துக்கள், தத்துவப் பார்வையில் நிறையச் சிக்கல்களைக் கொண்டுள்ளன. விரிவாக விவாதிப்பது நல்லது.

செவ்வானம் புத்தக நிலையம்
சூலூர் – 641 402. விலை: ரூ.3/-

☐ தீவுகள் கரையேறுகின்றன:

- தமிழன்பன்

நண்பர் செகன்னாதனுடைய விமர்சனங்களை நினைவிற் கொண்டு இத்தொகுப்பைப் படிக்கும் போது தமிழன்பன் பற்றிய அவருடைய கருத்துக்கள் மதிப்பீடாகாதது தெரிகிறது. தி.மு.க.வோடு உறவு கொண்டுள்ள ஒருவர் சிந்தனையில் மார்க்சியம் செறிவு பெறுவது சாத்தியந்தான். தமிழகச் சூழலில் இதற்கான நியாயமான தேவையுமிருக்கிறது. தவிர தி.மு.க.த் தனம் பற்றி இவர் கவிதைகள் நிறையவே விமர்சனம் செய்கின்றன.

இவர் கவிதையின் ஒரு தனித்தன்மை, கவிஞர் பார்வை எல்லைக்குள் பிரபஞ்சமே அடங்கி நிற்பது. அண்ட

கோளங்கள் அத்துணையும் உன் சிறகின் விமர்சனத்தைத் தலை தாழ்த்திக் கேட்கும் என்பது இதில் ஒரு தெறிப்பு. பாரத மாதா, தாயின் மணிக்கொடி, பாராளுமன்றம், அசோகச் சக்கரம் – இவை இவர் காலடியில் தூசாகி விடுவது, கவிஞர் பார்வையின் கம்பீரத்தை காட்டுவது, புரட்சி மலர்களை ஏகாதிபத்தியவாதிகளின் காலடியில் கொட்டிய வானம்பாடிகளைப் போலல்லாமல் அவற்றை அந்தப் புதிய சூரியனுக்கே அர்ச்சனை செய்கிறார்.

☐ காந்தியும் காரல் மார்க்சும்

– மா.பா. குருசாமி

காந்திதான் பொதுவுடைமையர் வாழ்க்கை வாழ்ந்தவர். மார்க்சுக்குக் கிடைத்தது போன்ற ஓய்வு கிடைத்திருக்குமானால், காந்தி மூலதனத்தை விடச் சிறந்த நூல் எழுதியிருப்பார். ஆன்மா இருப்பது உண்மைதான். அதனால் மார்க்சியம் பொய். பொருளாதாரமே மையம் என்று மார்க்ஸ் கண்டது லண்டன் வாழ்க்கையில். நமது நாட்டு மரபையும், பண்பாட்டையும், ஆன்மீக நெறியையும் ஒட்டி உருவாக்கப்பட்ட தத்துவம். தர்ம கர்த்தாக் கொள்கை. வன்முறை மனிதனை விலங்காக்கிவிடும். மது உற்பத்தியை மார்க்ஸ் மறுக்கவில்லை. இந்தியாவின் அடிப்படை அறிவாற்றலுக்கு வர்க்கப் போராட்டம் மிகவும் தூரமானது. முதலாளிகளுக்கும் ஆன்மா இருப்பதை மார்க்ஸ் பார்க்கவில்லை. மனிதன் தெய்வாம்சம் உடையவன். எல்லா ஆன்மாக்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை. 19-ம் நூற்றாண்டு மார்க்ஸ் நமக்கு வேண்டாம். 20-ம் நூற்றாண்டு காந்தியே தேவை. இப்படிச் சொல்வதற்கான ஆதாரங்கள் எத்தனையோ பேர். விநோபா முதல் சிட்டிபாபு வரை.

புத்தகத்தில் கொட்டப்பட்டிருப்பவை அனைத்தும் குப்பைகள். குருசாமிக்கு நிச்சயமாக மார்க்ஸையும் தெரியாது. காந்தியையும் தெரியாது. தெரிந்தது தொழில்.

வெளியீடு : மதுரைப் பல்கலைக்கழகம்

☐ லங்கா ராணி:

\- அருளர்

77 இனக் கலவரத்தின் போது கொழும்பிலிருந்து 1200 அகதிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்ற சரக்குக் கப்பல் லங்காராணி இந்தப் பயணத்தோடு, ஈழத்தமிழர் வாழ்க்கை வரலாறு, இயக்கங்கள், தனி நாட்டுக்கான தேவை நோக்கில் விவரிக்கப்படுகின்றன.

விடுதலை பற்றிய உணர்வுடையவர்களும், தமிழ்ப் பண்பாடு, மொழி பற்றி வாயடிப்பவர்களும் கற்றறிய வேண்டிய களஞ்சியம் இந்நூல்.

சிவகுமாரனும் வெள்ளை வேட்டி இளைஞனும் மறக்க முடியாத மனிதர்கள்.

நாவலில் ஒரு புது வகை. இம்முறையில் தமிழ்நாட்டு வரலாற்றை நிகழ்காலப் பிரச்சனையோடு வைத்து யாராவது செய்ய வேண்டும்.

கனல் வெளியீடு:

75 ஆழ்வார் பேட்டைத் தெரு, சென்னை – 18 விலை. ரூ.10

☐ பிறகு

\- பூமணி

தமிழுக்குக் கிடைத்துள்ள இன்னொரு தலைசிறந்த நாவல், 'பிறகு'. இதில் வரும் அழகிரி, ஜெயகாந்தனின் அம்மாசிக் கிழவன், ஹென்றி பாணியில் ஒரு சித்தன். இவன், சக்கிலியக்குடியில், இல்லை, மணலூத்து கிராமத்தில் ஒரு மகான். இவனோடு முத்துக் முருங்கலும், கந்தையாவும் சேர்ந்து, கணியன் பூங்குன்றன் கணித்த மாதிரி. இவர்களால்தான் இவ்வுலகம் இயங்குகிறது. இவர்களோடு, சக்கல்லான், கருப்பன் இவர்களையும் மறக்க முடியாது.

இந்த நாவலினூடே, மணலூத்து கிராமம், எலும்போடும் தசையோடும் – நாடி நரம்புகளோடும் தெரிகிறது. ஒரு ஊரே கதையில் இயங்குவது தெரிகிறது. தமிழில் இது ஒரு சாதனை.

அழகிரி முதலியவர்களுக்குள் ஒரு தழல் அமைதியாக எரிகிறது. உரிய காலத்தில் அது கோபுரத்தையும் எரிக்கும்.

கரிசல் காட்டு மொழியின் வளமும் வலிமையும் பூமணியின் நடையில் முழுமையாக வெளிப்படுகின்றன.

அன்னம் – சிவகங்கை விலை: ரூ.10

△ ஒரு கிராமத்து ராத்திரிகள்

- பா. செயபிரகாசம்

பா.செ. தன் கதைகளில் வெளிப்படுத்தும் யதார்த்தம், கிணற்றில் விழுந்த கல்லின் மௌனத்தைப் போன்றதல்ல. அது மரப்பொந்தில் விழும் சிறு பொறியின் சலனத்தைப் போன்றது.

இத்தொகுதியில், தனக்கே உரிய கவிதை நடையில் கரிசல் மண்ணில் படிந்துள்ள வறுமையின் கோரச் சித்திரங்களை சோகம் ததும்பச் சித்திரிக்கிறார். வழக்கம் போல அவலத்திற்கு அழுத்தம் கொடுத்தாலும் அந்த அழுத்தத்தையும் மீறிக் கொண்டு வர்க்க ரோசமும் எரிமலையின் மௌனமும் கதைகளில் குமுறுவதைக் காண முடியும்.

கிராமத்தில் ஒருகாலத்தில் எழுந்த கூக்குரல்களுக்குப் பதிலாக இன்று எதிர்ப்புக் குரல்கள் எழுவதை ஒரு திட்டவட்டமான இலக்கியக் கொள்கையுடன் பா.செ. எழுதுகிறார். தாலியில் பூச்சூடியவர்கள், கரிசலின் இருள்கள், ஒரு கிராமத்து இராத்திரிகள் முதலான கதைகளின் முடிவில் வெளிப்படும் அவலம், ஒரு வஞ்சினத்தின் தொடக்கமாக, ஒரு பழி முடிப்பின் ஆரம்பமாகவே புலப்படுகிறது.

கிராமத்தின் கற்பே நிலப்பிரபுத்துவத்தால் சூறையாடப்படுவதாக பா.செ. பல கதைகளில் சித்திரித்து விடுகிறார். ஏழை விவசாயப் பெண்களின் கற்பைப் பறிப்பதில் நிலப்பிரபுத்துவத்தின் கொடுமையைச் சித்திரித்து

விட்டதாக பா.செ. திருப்தி கொள்வாரானால், இந்தத் தவற்றிலிருந்து அவர் மீள வேண்டும். ஒரு கதைக்குத் தேவையான அளவே வர்ணனைகள் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்ற அரிப்பு ஆரம்ப கால எழுத்தாளர்களுக்கு இருக்கலாம். பா.செ.வுக்கு இது தேவையில்லை.

எதிரிகளோடு சமாதான சகவாழ்வுக்காக ஆயத்தப்படுத்தும் இலக்கியங்களைச் சிலர் மும்முரமாகப் படைத்து வரும் காலத்தில், தம் கூர்மை மழுங்காத எழுத்தால் பா.செ. இன்றைய எழுத்தாளர்கள் மத்தியில் வெளிச்சம் தரும் விளக்காகத் திகழ்கிறார். மற்ற விளக்குத் திரிகள் இதிலே தாராளமாகத் தீப்பற்ற வைத்துக் கொள்ளலாம்.

+ தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்:

- வண்ணதாசன்

கதைகளில் வரும் மனிதர்கள் சுந்தரம் முதல் புஜ்ஜி வரை நமக்குள் வராமல், நமது இரக்கத்தை வேண்டி வெளியிலேயே நிற்கிறார்கள். கலைக்குரிய அகவயமாதல் நிகழவில்லை. இதனால் இவர்கள் நம் அனுபவப் பரிமாணத்தை விரிவுபடுத்துவதில்லை. வெறும் இரக்கம் வெறும் துன்புறுத்தலையே செய்யும். உயர்ந்த கலை இதில் அகப்படாது. நிகழ்ச்சியின் ஆழத்தைக் கூர்மையாக வெளிப்படுத்தும் கலை, வாழ்வுக்கான அர்த்தத்தைத் தேடிச் செல்லும். இதைத் தேடாத கலையும் கலைஞனும் சிறுத்துப் போவது தவிர்க்க இயலாது. கலையையும் மனிதனையும் பிரிக்க முடியாது. கலையைப் பிரித்து மனிதனுக்குப் பூச்சூட வைக்கக் கூடாது. வண்ணதாசன் இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

O மேல்நிலைக் கல்வி:

- துணைப்பாடச் சிறுகதைகள்

தற்காலத் தமிழ்ச் சிறுகதையில் சாதனை புரிந்தவர்களுள் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கு. அழகிரிசாமி,

ஆகியவர்களின் கதைகள் இத்தொகுதியில் உள்ளன. சுந்தர ராமசாமி, லா.ச.ரா. அசோகமித்திரன், தி. ஜானகிராமன், நீலபத்மநாபன், அம்பை, பூமணி, வண்ண நிலவன், வண்ணதாசன் போன்றவர்கள் கதை இடம்பெறவில்லை. ஜனரஞ்சகமான (பொழுதுபோக்கு) எழுத்தாளர்கள் என்ற முறையில் சமுத்திரம், எல்லார்வி, நா.பா, உமாசந்திரன் போன்றவர்கள் கதைகளும், ஏதேனும் ஒரு வகையில் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்ற முறையில் இராஜாஜி, மு.வ. போன்றவர்கள் கதைகளும் இத்தொகுதிகளில் இடம்பெறுகின்றன.

புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அழகிரிசாமி, பாரதி இவர்கள் கதைகளைத் தவிர பெரும்பாலான கதைகள் சிறிதும் சமூகப் பிரக்ஞையற்ற நாலாந்திர – வார இதழ்களின் பக்கங்களை நிரப்புவதற்கான கதைகள். இந்த எழுத்துக் குவியல்கள் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெறத் தேவையில்லை.

இத்தொகுப்பிற்கான கதைகளைத் தேர்ந்தெடுத்தவர்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள், இவர்கள் பரம்பரை நோய்களான மரபு வழிபாடு, தற்புகழ்ச்சி ஆசை இவற்றுக்கு அடிமையானவர்கள். மாணவர்கள் புதிதாகச் சிந்திப்பதை, வினாத் தொடுப்பதை இவர்கள் விரும்புவதில்லை. இவர்களின் பார்வையில், கலைப்பிரக்ஞை, உத்தி, யதார்த்த சமுதாய நடைமுறைப் பிரச்சனைகள் இவை பற்றிய அணுகுமுறை, தீர்வு இவை எதனையும் மாணவர்கள் அறிந்து விடக்கூடாது.

சிறுகதை, தோற்றக்காலம் முதல் நடை, உருவம், உத்தி, கரு, கலைத்தன்மை, வெளியீட்டு முறை முதலிய வகைகளில் பல்வேறு மாற்றங்களை அடைந்து வருகிறது. இவை தவிர, நடைமுறைச் சமுதாயச் சிக்கல்கள், தீர்வுகள் பற்றிய சிந்தனைகளைத் தூண்டும் முறையிலும் மாணவர்க்கான கதைகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ஒரு

சிறந்த சிறுகதை ஆசிரியர் அல்லது ஒரு குழு அல்லது விமர்சகர் குழு இந்தத் தேர்வைச் செய்ய வேண்டும்.

● பாம்பும் பிடாரனும்

- வண்ணநிலவன்

ஒரேவிதமான கவனத்தைக் கோருவன அல்ல எனினும், இந்த ஆறு கதைகளும் வண்ண நிலவனின் அழுத்தமான அனுபவ உலகின் பிரதேசங்களை அறிமுகப்படுத்தும் தன்மையில் ஒருமை கொள்கின்றன. படைப்பும் வாழ்க்கையும் பரஸ்பரம் பாதித்துக் கொள்பவை. பல திசைகளிலும் அலைக்கழியும் வாழ்க்கையை ஒரு வடிவத்தில் அனுபவப்படுத்தப் படைப்பு முயல்கிறது. பாம்பும் பிடாரனும் உள்ளிட்ட கதைகளில் காணும் உருவகங்கள் இக்கருத்துக்கு வலுத் தருகின்றன. இந்த உருவகங்கள் புதிய மனித மாதிரிகளாக human types உருவாகியிருப்பது கதைகளுக்கு விரிவைத் தருகிறது.

வண்ண நிலவன் தனது அனுபவங்களிலிருந்து புதிய புலன்களைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

~~*

பரிமாணம் – 7

நவம்பர் 1979

மயாகோவ்ஸ்கி தற்கொலை செய்தது எவ்வாறு?

கடைசிக் கடிதத்தில் கவிஞன் சொல்வது கொஞ்சம்
சொல்லாதது மிக அதிகம்
புரட்சியின் இளம் பருவம்
ஒருநாள் அவர்கள் வந்தார்கள்
அவனுடைய தோழர்கள்
குளிர்காலத்தில் அவனுடைய சொற்களும்
வோட்காவும் பங்கிட்டவர்கள்
இப்போது அதிகாரப் பிரபுக்களின்
நட்பு நுழையாத இரும்புச் சட்டைகளில்
அவனுக்கு மேல் தோன்றிக்
கட்டளையிட்டார்கள்:
"எங்கள் அணைக்கட்டுகளைப்பற்றி எழுது!"
அவன் எழுதினான்
அவனுடைய அணைக்கட்டுகளைப் பற்றி
மக்களுடைய அணைக்கட்டுகளைப் பற்றி
அவன் அவர்களுக்கு வழங்கினான்
தாராளமான மனித உழைப்பைப் பற்றி
ஒரு வாழ்த்துப்பாடல்.

அவனுக்குக் கட்டளையிட்டார்கள்:
'எங்கள் தலைவரைப்பற்றி எழுது'
அவன் எழுதினான்
அவனுடைய லெனினைப் பற்றி
மக்களுடைய லெனினைப் பற்றி
அவன் அவர்களுக்கு வழங்கினான்

தாராளமான மனித நேசத்துக்கு
ஒரு இரங்கல் பாடல்

தேவைகள் மூர்க்கத்தனமாயின
'எங்கள் டிராக்டர்களின் அழகைப்பற்றி
எங்கள் கம்ப்யூட்டர்களின்
அதிமனிதத் திறமை பற்றி
கர்வத்தை விட்டுவிடு
எங்கள் பத்தாண்டுத் திட்டங்கள் பற்றி
கவிதையில் பத்திரிகைச் செய்தி, எழுது'
பணிவும் கவிதையும் இப்படித்
தண்டிக்கப்படக் கூடாது
காகஸஸின் முழக்கமுள்ள தன் மத்தளத்தை
டான்யூப் அலைகள் விளையாடிக்கொள்ள
வீசியெறிந்தான்
புஷ்கின், யெஸ்யானினின்
காயம்பட்ட விரல் அடையாளங்கள் படிந்த
அந்தப் பழைய ரஷ்யத் தம்பூராவை
தூசி துடைத்து எடுத்தான்
அவன் அவர்களுக்கு வழங்கினான்
காதலின் பிரிவைப் பற்றி
ஒரு புலம்பல் கவிதை.

பிறகு மௌனமாக நடந்தான்,
சூரியனுடன் அமர்ந்து தேநீர் அருந்தி
தன்னால் முடிந்தவரை உச்சத்தில் பாடிய
அதே பழைய எழுதும் அறைக்கு
இருண்டுவருகிற சமவெளிகளுக்குமேல்
திரைகளைத் தாழ்த்தினான்
எதிரிகளுக்காக வைத்திருந்த துப்பாக்கியை
தலைக்குமேல் உயர்த்தினான்

தன் எதிரி இப்போது இதுதான் என்பதுபோல.

ரஷ்யக் கவிதைக்கு எஃகு நரம்புகள் வழங்கிய
அந்தப் பேரன்பு வெடித்துச் சிதறியது
இருபத்திரண்டு வருட நம்பிக்கை கொண்ட
கட்சிக்கார்டு ரத்தத்தில் ஊறியது
முடிவுறாத கையெழுத்துப் பிரதிகளில்
கவிஞன் ரத்தம் பாய்ந்தோடியது
வழியின்கொடூரத்தால் இலட்சியத்தின் கருணையை
மறந்துபோகிறவர்களுக்கு ஒரு எச்சரிக்கை:
வளர்ந்துவரும் அதிகாரக்
கொண்டாட்டத்திற்கெதிரே
நீண்டு வருகிற ஒரு சுட்டுவிரல்:
ஏகாதிபத்தியம் நோக்கிப்
படியிறங்குபவர்களுக்கு ஒரு அபசகுனம்.

– *சச்சிதானந்தன் 1979*

1. நம்பார்வை

தமிழகக் கலை இலக்கிய வாதிகள் – முற்போக்கு வாதிகளும்தான் – தமக்கு இன்றியமையாத தத்துவத் தேடலில், சரியான அரசியல் கண்ணோட்டத்தைப் பெறுவதில் ஈடுபடுவதில்லை என்பது வெளிப்படையான உண்மை. கலை இலக்கியச் சிக்கல்களை, அவற்றின் அடிப்படை நோக்கி ஆய்வதன் மூலம் தாங்கள் சரியான கண்ணோட்டம் பெறுவதுடன், தம் படைப்புக்களை உயிர்த்துடிப்புள்ளதாகவும் ஆற்றல்மிக்கதாகவும் உருவாக்க முடியும். கலை மனவெளியிலேயே சுழன்று திரியமுடியாது. அது மண்ணில் மலர வேண்டும். இத்தகைய படைப்புக்களை உருவாக்காமல், 'எளிய' படைப்புக்களையே செய்து பெருமை போர்த்திக்கொள்வோர் செய்வது, இலக்கியத்துரோகம்: இறுதியில், மக்களுக்குத் துரோகம். உயர்தரப் படைப்புக்களே ஒரு மொழியின் வளத்தை, மக்களின் வாழ்வை மேம்படுத்தும். முற்போக்கு இலக்கியவாதிகள் சோம்பி இருந்துவிடக்கூடாது.

நூல் அரங்குப் பகுதி, நிறையக் கருத்து வேறுபாடுகளைக் கிளப்பியுள்ளது. இதைப் 'பரிமாணம்' வரவேற்கிறது. கருத்து வேறுபாடுகளை முறையாக விவாதிப்பதன் மூலமே நம் சிந்தனையின் தரம் உயரும்: உண்மையை நெருங்கமுடியும். கருத்து வேறுபாடுகளை அங்கங்கே தமக்குள் பேசிக் கொண்டிராமல், 'பரிமாணத்'திற்குச் சுருக்கமாக எழுதுமாறு வேண்டுகிறோம். இலக்கியச் சிக்கல்களில் கருத்து வேறுபாடு கொள்வோர், அந்நியமாதல் போன்ற கட்டுரைகளில் ஆர்வம் கொள்ளாதது வருத்தம் தருகிறது. கலை இலக்கியவாதிகள் தத்துவம் நோக்கி நகர்ந்தால் என்ன!

சிறு பத்திரிக்கைகள் இயக்கம் குறித்துப் படிகள் மேற்கொள்ளும் முயற்சியைப் 'பரிமாணம்' வரவேற்கிறது. நிறுவன அமைப்புக்கள் செய்ய விரும்பாத முயற்சிகளைச் சிறு பத்திரிகைகள் செய்கின்றன. இன்றைய வரலாற்று

நிலைகளின் கட்டாயமாகத் தோன்றியுள்ள சிறு பத்திரிகைகள் தம் கடமைகளைச் சரிவரச் செய்ய, தமக்கிடையில் குறைந்த அளவிலான ஒருங்கிணைந்த இயக்க முயற்சிகள் உதவ முடியும். இந்த இயக்கம், தமிழகத்தில் புதிதாகத் தோன்றி வருகிற 'வீதி' - 'நிஜ' நாடகத்தாரோடும், தரமான புத்தக வெளியீட்டில் ஈடுபட்டுள்ள சிறு நூல் – வெளியீட்டாளரோடும் சேர்ந்து நடைபெற வேண்டும். ஈடுபாடு உள்ளவர்கள் 'படிகள்' உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்திய வரலாற்றாய்வில் மார்க்சிய அணுகல் முறையைப் பயன்படுத்தும்போது கட்சி வட்டாரத்தவர்களின் இறுகிய கண்ணோட்டம் பயன்படாததை 'இந்து' - பேட்டிக் கட்டுரை தெளிவாக்குகிறது. தமிழக வரலாற்றாய்வு பற்றியும் இத்தகைய ஒரு விவாதத்தைத் தொடங்கிவைக்க முயற்சி செய்வது நல்லது. தன்னளவில் பரிமாணம் இதைச் செய்யும்.

குணாவின் 'தமிழர் மெய்யியல்' கட்டுரை மீது தமிழவன் தந்த விமர்சனங்கள், எதிர்பார்த்தபடியே, பாவாணர் வட்டத்தில் சினத்தைக் கிளப்பியுள்ளது. பாவாணரிடம் பலர் கொண்டுள்ள அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் இதற்குக் காரணம் என்பதைப் பரிமாணம் உணர்கிறது. மொழியியல் ஆய்வில் தற்போது பரிமாணம் ஈடுபட இயலாமைக்குக் காரணம், இதன் வசதிக் குறைவே. தவிர, குணாவின் கருத்துக்கள், பாவாணரின் வேர்ச் சொற் சான்றுகளின் மீதே முழுமையாக எழுந்துள்ளதாகப் பரிமாணம் கருத்துச் செலுத்த விரும்புகிறது இந்நோக்கில் சில கடிதங்களிலிருந்து சில பகுதிகள் வெளியிடப்படுகின்றன.

2. டெர்ரி ஈகிள்டனின் 'மார்க்சியமும் இலக்கிய விமர்சனமும்'

- அறிமுகம் கௌதமன்

இன்றைய தமிழ் இலக்கிய விமர்சனச் சூழல் எத்தகையது, இதில் மார்க்சிய இலக்கிய விமர்சனச் செயல்பாடு என்ன இடம் பெறுகிறது என்பதை இலக்கிய சமூக அக்கறை பூண்ட அனைவரும் வெறும் உணர்ச்சிவசமான வசவுகள், கண்டனங்களைத் தாண்டிச் சென்று பார்க்க வேண்டியது அவசியம்.

1. முதலில் வெகுஜனமட்டத்தைக் கணக்கில் கொள்கிறபோது, மரபு வாதிகள், வியாபாரிகள், அரசினர் எனும் அமைப்பைப் பார்க்க நேரிடுகிறது. பிரக்ஞை அற்ற வெகுஜனங்களை நுகர்வோராய்க் கொண்ட சந்தை இது. இவ்வெல்லைக்குள் எழுதும் நா.பா. அகிலன், சாண்டில்யன், சுஜாதா, ஆஸ்தானகவி கவியரசு கண்ணதாசன், 'சோ', மனோகர், பிறகு மசாலாத் திரைப்படங்கள், தமிழக அரசு நூலக ஆணைக்குழுவின் நூற்றுக்கணக்கான கிளை நூலகங்களுக்காக எழுதித் தள்ளும் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள், பிறகு மாதம் ஒரு நாவல் ஒரு ரூபாய்க்கு – என்ற ஒரு அமைப்பு, எது ஞானம் என்ற பாகுபாடற்ற 'வெள்ளத்தனைய மலர்நீட்டம் போலச் செல்லுகிற வெகுஜன வட்டத்தைக் கொண்டுள்ளது. தோற்றத்தில் ஒரே வர்க்கத்தின் (அ) வர்க்க பேதங்களை மீறிய பொது குணாம்சம் கொண்டுள்ளதாய்ப் பார்க்கிற இவ்வெகு ஜன நோக்கு, இலக்கியத்தைப் 'பொழுதுபோக்கு' (அ) கவலை மறப்பு என்றே அபிப்ராயப்படுகிறது, இதனையடுத்து சற்று உயர் அளவில் கல்விக் கழகங்களின் பாடத் திட்டங்கள், ஆய்வுகள், தொடர் சொற்பொழிவுகள், இதையொட்டி வருகிற இலக்கிய, கதா காலட்சேபங்கள், பட்டிமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம், வழக்காடு மன்றம், ஆகாஷ்வாணி, தூரதர்சன்

போன்றவை வருகின்றன. இந்தப் பரந்த வட்டத்திற்குள் ஐக்கியப்படுத்துவதில், ஒரு அந்தஸ்தை எட்டுவதாய் நினைக்கிறான் ஒரு சராசரி தமிழ்க்குடிமகன். பழம் மரபு, புனிதங்கள், பொற்காலங்கள், பெரியவர்கள் சொன்னவை பெரியவை போன்ற ஆளும் கருத்துருவத்தில் கரைந்து போயுள்ளவர்கள் இவர்கள். இவர்களின் வாழ்க்கைத்தரத்தில் இடது சாரித்தனம் வேண்டப்பட, கலாச்சாரத்தில் வலது சாரித்தனமே மேலோங்கி நிற்கக் காணலாம். இத்தரப்பினர்க்கு இலக்கியப் பண்டங்களைத் துரித கதியில் புகழ்/பண/அரசியல் லாபம் கருதி உற்பத்தி செய்து தருகிற வியாபார, கல்வி, அரசு, பெரும் பத்திரிகை, 'எழுத்தாளர்' பிரசுரகர்த்தாக்கள் எனும் கும்பலின் சந்தை இது.

2. இந்த அமைப்பியல் (Institution) வட்டத்தை எதிர்த்துக்கொண்டு, கலைத்தரம், திறன், தேர்ந்த ரசனை முறையில் இலக்கியத்தை, இலக்கியத்தை மட்டுமே அணுகிய ஒரு சிறு வட்டமே 'மணிக்கொடி' 'எழுத்து' வட்டம். இவற்றின் வீச்சில் விரிந்த இன்றுள்ள சிறு பத்திரிகைகள் பலவும் இச்சூழலை ஏற்படுத்துபவை. முன்னர் சொன்ன வியாபாரப் போக்கிற்கு எதிர்நிலை கொண்ட இது, அதற்கு நேர்மாறான அளவுகளைக் கொண்டுள்ளது. இவ்வளவுகளை மேற்கொள்ளுகிற தீவிரத்தில் ஜன ரஞ்சகத்தினின்று தூரமாக்கிக் கொள்கிற உக்கிரத்தில், அரசியல், வரலாறு எல்லாமே சுத்த அபத்தம் என்ற தீவிர எதிர்மறைப் போக்கு இதனிடம் உண்டு. இலக்கிய சிகரங்கள் வெறும் வடிவ ஆய்வுகளிலேயே தேடுண்டு இவை தனி மனிதத்திறன், பொறி என்றெல்லாம் பொருத்திக் காட்டப்படுகின்றன. பெருமளவு வரலாற்றினின்று கழன்று உதிர்ந்த தோற்றத்தை இது காட்டுகின்றது. தனி மனிதனில் வேர்களைத் தேடிக் கொண்டிருப்பதால், இச்சுத்த இலக்கிய விமர்சனம், மார்க்சியத்தின் வறட்டுப் போக்கையும், வளரும் போக்கையும் சகட்டு மேனிக்குப் போட்டு அடிக்கிறது. இத்தகு சுத்த இலக்கிய வாதம் மேற்கின் உந்துதலின்

விளைவே. இவர்கள் மட்டும் வெளியூரில் யானை பிடிக்கவே மாட்டார்கள்!

3. தனிமனிதனே மூலம் என்கிற இந்த பூர்ஷ்வா கருத்துருவ நிலைக்கு எதிராக, மார்க்சியத்தின் இரு போக்குகளைக் காணலாம். ஒன்று; மார்க்சியத்தை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக்கி, முடிந்துபோன வறட்டுச் சித்தாந்தமாக்கி, ருஷ்யாவிலிருந்து வீசும் ஒவ்வொரு விமர்சனப் பருவக்காற்றுக்கேற்ப தலையை ஆட்டிக் கொண்டிருக்கிற கம்யூ, கட்சி அரசியலின் பார்வையில் பாட்டாளி வர்க்க இலக்கியம், சோசலிச யதார்த்த வாதம் என்ற இலக்கியப் பார்வைகள் முன் வைக்கப்படுகின்றன. இலக்கியத்தை அரசியல் ஆயுதமாக மட்டுமே இவர்கள் கருதுவதால், இலக்கியத் தரத்தை அதன் அரசியல் உள்ளடக்கம் கொண்டே தீர்மானித்து விடுகிறார்கள். இவர்களது அரசியல் செயல்பாடுகளுக்கு இசைய போலிப்பிரகடனங்களும், சபதங்களும், முழக்கங்களும் ஆணைகளும் ஒரு கொண்டு கூட்டிய கதையிலோ யாப்பற்ற 'கவிதைகளிலோ' சொல்லப்பட்டவுடன், கட்சிக் கட்டளைகளுக்கு விசுவாசமாக இருந்தவுடன் நல்ல 'முற்போக்கு' இலக்கியம் எனும் பாராட்டுதலைப் பெறுவதை அறியலாம். பொருளாதார அடிக்கட்டுமானத்தின் பிரதிபலிப்பே மேற்கட்டுமானம், சமூக வாழ்வின் பிரதிபலிப்பே இலக்கியப்படைப்பு, உள்ளடக்கத்தின் பிரதிபலிப்பே உருவம் என்ற ரீதியில் போகிற இந்த இயக்கவியல் விரோத கொச்சை மார்க்சிய விமர்சனம். இதன் இன்னொரு வியக்திதான் புரட்சிப்பூபாளம் பாடும் மாஜி திமுக 'கவிஞர்களும்' அவர் தம் இலக்கியப் பார்வையும்.

4. தனிநபருக்குள்ளேயே தேடுகிற மாதிரி, இலக்கியத்திற்குள்ளேயே தேடிக்கொண்டிருக்கிற குறைக்கு எதிர்த் துருவமாக இலக்கியத்தை மறந்துவிட்டு இதன் சமூக அரசியல் பொருளாதாரச் சூழலிலேயே தேடிக் கொண்டிருக்கிற குறையைக் கொண்டுள்ளது வறட்டு

மார்க்சிய விமர்சனம். இவ்விரு தளங்களிலும் காலூன்றிப் படைக்கிற படைப்பாளனை, படைப்பை, வாசகனை உறவுகளின் வழியாக விளக்க முனைந்துள்ளது, சரியான மார்க்சிய விமர்சனம். இலக்கியம், படைப்பவனின் பிரதிபலிப்பல்ல; இலக்கியத்திற்கென்ற பிரத்யேகக் கூறுகளை அவற்றின் வரலாற்று ஒழுங்கில் வைத்துக் காணவேண்டும். வடிவங்கள், தனி மனிதத்திறமை, கெட்டிக் காரத்தனத்தால் அமைவதை விட, அவை சமூகத் தன்மையே பெற்றுள்ளதைச் சுட்டி நிற்கிறது விமர்சன பூர்வமான மார்க்சிய இலக்கிய விமர்சனம். வடிவு குறித்த சர்ச்சையில் சுத்த இலக்கிய வாதிகளுக்கும் மார்க்சிஸ்டுகளுக்கும் உள்ள ஒரே ஆர்வத்தில் அடிப்படை வேறுபாடுண்டு. முன்னவர்கள் இதனை தனி மனிதனுடன் கலாச்சாரத் தளத்துடன் மட்டும் பிணிக்க, பின்னவர்கள் மரபு சமூகம் இவற்றுடன் பிணிக்கின்றனர்.

ஆனாலும், இன்றைய தமிழக மார்க்சிய இலக்கிய விமர்சனம் இன்னமும் நெருங்காத கோணங்கள் பல உண்டு. சில முயற்சிகள் மேற்கொள்ளவும் படுகின்றன. மிகச் சமீபத்தில் தமிழவன், படைப்பாளி - படைப்பு - வாசகன் உறவுகளை விளக்க முயன்றுள்ளார். படைப்பு எனும் நிகழ்வில் இதுவரை படைப்பாளன் என்ற 'கருவிலே திருவுடையானுக்கு'க் கொடுக்கப்பட்டு வந்துள்ள முக்கியத்துவத்தை இவர் அசைத்திருக்கிறார். உருமாற்றம் எய்துகிற சமூகப் பண்புகளை விளக்குகிறார். தனிமனிதனின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளாகப் படைப்பை மதிப்பிடுவதை மாற்றி, வர்க்கச் சார்பான அகத்தகவல்களின் உருமாற்றங்களை முக்கியப் படுத்தியுள்ளார். ஒற்றை ஆளாய் இத்தேடலில் ஈடுபட்டுள்ள இவரது முயற்சியைப் புரிந்து தொடர்வதில் அக்கறைகள் இதுவரை தென்படவில்லை.

தமிழக மார்க்சிய விமர்சனம் இன்னும் இலக்கியம் கருத்துருவத்தில் (Ideology) பெறும் இடம், பூணும் உறவு, இலக்கியத்துள் கருத்துருவத்தின் நிலைகுறித்துப் பார்க்கப்படவில்லை. உலக அரங்கில்

எக்ஸிஸ்டென்ஷியலிஸப் பார்வையும், அமைப்பியல் வாதமுறையும் (Structural Method) மார்க்சிய விமர்சனத்தில் இணைத்து வளம் சேர்க்கிற வளர்ச்சி நடைபெற தமிழகத்தில் மார்க்சியம் தன் மண்ணின் வகைக்கு ஏற்ப இதனைச் செய்யத்துவங்கவில்லை. நவீன மனநிலைகளின் வெளிப்பாடுகளைப் படைப்புகளில் வைத்துக் காண்கிறபோது இன்றைய அந்நியமாதல்களையும், மனமுறிவுகளையும், நம்பிக்கை வறட்சிகளையும் அறுந்து போன சிந்தனைகளையும் விளக்கவும், புரியவும், இறுதியில் மாற்றுதற்குரிய வழிகாணவும் தமிழக இலக்கிய வட்டத்தில் மார்க்சிஸ்டுகள் முனைய வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் மேற்கில், மார்க்ஸ், எங்கெல்சுக்குப் பின் நிகழ்ந்த மார்க்சிய இலக்கிய விமர்சனப் போக்குகளை பிரெக்ட், பெஞ்சமின் வரை ஒரு வரலாறாய்த் தந்துள்ளார் டெர்ரி ஈகிள்டன் (Terry Eagleton) தம் நூல் "மார்க்சியமும் இலக்கிய விமர்சனமும்"-ல் (Marxism and Literary Criticism, 1976) இவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராய்ப் பணிபுரிகிறார்.

முன்னுரையில் குறிப்பது போல இலக்கியம் குறித்த மார்க்சிய விளக்கங்களைச் சுருக்கமாக, ஆனால் முக்கிய முனைகளைத் தொட்டு விளக்கி ஒரு வரலாறாகத் தருகிறார் ஆசிரியர். 1) இலக்கியமும் வரலாறும் 2) வடிவமும் உள்ளடக்கமும் 3) எழுத்தாளனும் ஈடுபாடும் (Commitment) 4) உற்பத்தியாளனாக ஆசிரியன் எனும் நான்கு தலைப்புகளில் வகைப்படுத்தியுள்ளார்.

சிறப்பாக நோக்கத்தக்கவை: மார்க்ஸ் வகுத்த மேற்கட்டுமானத்தில் கலையின் இடம்; இது தொடர்பாக கருத்துருவத்திற்கும் கலைக்கும் உள்ள சம்பந்தம், இலக்கிய வடிவத்தின் சமூகத்தன்மையும் கருத்துருவத்துடன் பூண்ட உறவும், வடிவம் தொடர்பாய் ஜ்யார்ஜ் லூக்காஸ், கோல்ட்மான், பியர்மெகெரி ஆகியோர் தரும் மூவிதப்

பார்வைகள்; கலையில் ஈடுபாடு (Commitment) பற்றிய மார்க்ஸ்/எங்கெல்ஸ், லெனின், ட்ராட்ஸ்கி, ஸ்டாலின் காலத்திய ருஷ்யப் பார்வைகள், பிரதிபலிப்புக் கொள்கையின் குறைகள், இறுதியாக வால்டர் பெஞ்சமின், பெர்த்தோல்ட்பிரெக்ட் ஆகிய இருவரின் 'அதிர்ச்சி' 'அந்நியமாக்கும் விளைவு' கொள்கைகள் இவற்றின் குறைபாடு பெரும்பாலும் டெர்ரிஈகிள்டனின் சொற்களிலேயே முன்வைத்துச் செல்கிறது இக்கட்டுரை.

1. இலக்கியமும் வரலாறும்

முழுமையான அழகியல் கோட்பாட்டை மார்க்சும், எங்கெல்சும் வகுக்கவில்லை. கலை குறித்த இவர்களின் குறிப்புக்கள் ஆங்காங்கே, துண்டு துண்டாய்க் கிடக்கின்றன; வளர்ச்சி பெற்ற நிலைபாடுகளாய் இல்லை. இவர்கட்குப் பின் பலராலும், பல திசைகளிலும் இந்நிலை நோக்கிய தேடல் நடைபெற்றுள்ளது.

மார்க்சிய விமர்சனம் வெறுமனே சமூகவியலையும் நாவல் வெளியீடுகளையும், அவற்றில் தொழிலாளி பற்றிக் குறிப்பிடப்படுகிறதா (இலக்கியத்தில் 'சமூகவியல்' எனும் மேற்கத்திய மார்க்சிய விமர்சன முறைபோல்)' என்பதையும் பேசிக் கொண்டிருப்பதல்ல. இலக்கியத்தைப் பூரணமாய் விளக்க வேண்டும். வடிவம், நடை குறித்த கவனம் வேண்டும் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தின் விளைவாய் வடிவத்தைக் காணவேண்டும். "எல்லாக் கலையும் அதன் வரலாற்றுக் கட்டத்தின் முத்திரையைச் சுமக்கின்றன; ஆனால் மகத்தான கலையில் இம்முத்திரை வெகு ஆழமாய்ப் பொறிக்கப்பட்டுள்ளது' - Henri Mattisse.

எந்திர சாதனங்கள், தொழில் நுட்பம் மனித உழைப்பு என்பவை உற்பத்தி சக்திகள். இச்சாதனங்களை உடைமைகளாய்க் கொண்ட சுரண்டுவோரும், இவைகளற்ற தொழில்நுட்ப அறிவும், உழைப்பு மட்டுமே கொண்டுள்ள சுரண்டப் படுவோருமாகிய உற்பத்தி உறவுகள், ஒரு

சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைத் தருகின்றன. இதைத்தான் பொருளாதார அடிக்கட்டுமானம் என்றார் மார்க்ஸ். ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த அடிக்கட்டுமானத்திலிருந்து ஒரு 'மேற்கட்டுமானம்' எழுகிறது. இம்மேற்கட்டுமானத்தில் அரசு நிர்வாகம், இராணுவம், போலீஸ், நீதிமன்றம், சிறைச்சாலை முதலிய அரசாங்க வன்முறை அமைப்பும், சமயம், கல்வி, குடும்பம், சட்டம், அரசியல், தொழிற்சங்கம், தகவல் தொடர்பு சாதனம், கலாச்சாரம் முதலிய கருத்துருவ அமைப்பும் அடங்குகின்றன. உற்பத்திச் சாதனங்களைத் தனியுடைமையாக்கிக் கொண்டுள்ள சுரண்டும் வர்க்கத்திற்கு அதிகாரத்தைச் சாசனப்படுத்துவதே இம்மேற்கட்டுமானத்தின் முக்கியப் பணி, மேற்கட்டுமானத்தின் கருத்துருவ அமைப்பு ஆளும் வர்க்கத்துக்கு அதிகாரத்தை மறைமுகமாகவோ, நேரடியாகவோ சாசனம் செய்கிறது. ஆக இறுதியில் தெரிவது; ஒரு சமுதாயத்தின் பிரதான கருத்துக்கள் அதன் ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களே கலாச்சாரம் (கலை) இக்கருத்துருவ அமைப்பின் ஒரு பாதி. ஒருசமுதாயத்தில், சுரண்டும் வர்க்கம் சுரண்டப்படுவோரை ஆதிக்கம் புரிவது, உணரப்படாது அல்லது. இவ்வாறு ஒரு சாரார் ஆளுவது பிறர் ஆளப்படுவது இயற்கையானது, இவ்வாறு தான் இருந்து வந்துள்ளது, இருக்கும் என உணரப்படுகிறது. இத்தகைய எண்ணத்தின் ஒரு பகுதிதான் கலை, கலாச்சாரம் என்ற கருத்துருவ அமைப்பின் ஒரு பகுதி இது. படைப்பாளியின் மர்மமான பொறியோ, தனிநபர் உளவியலோ, படைப்பை விளக்கவியலாது. இவனது பார்வை, இவன் காலத்திய 'சமுதாய மனப்போக்கு' அல்லது கருத்துருவத்துடன் ஓர் உறவைக் கொண்டிருக்கிறது. படைப்பிற்கும் அது குடியிருக்கும் கருத்துருவ உலகுக்கும் உள்ள பின்னலான, மறைமுக தொடர்புகளைப் புரிய வேண்டும். இத்தொடர்பு 'கரு' 'கருத்து' என்று மட்டுமின்றி, நடை, படிமம் வடிவம் என்றும் விரிந்துள்ளது.

மேலும் கருத்துருவம் சுரண்டும் வர்க்க எண்ணங்களின் வெறும் பிரதிபலிப்பே அல்ல. எப்போதுமே இது ஒரு சிக்கல் வாய்ந்த நிகழ்வுதான். முட்டி மோதுகிற உற்பத்தி உறவுகளின் நிலைகளுக்கு ஏற்ப, இக்கருத்துருவத்திலும் எதிர்மறையான ஆர்வங்களும் பார்வைகளும் உண்டு. இலக்கிய விமர்சனத்தில், தூர நிற்க வேண்டியதாக நினைக்கப்படும் அரசியல், பொருளாதாரம், ஆகியவற்றைப் போட்டுக் குழப்புவதாகவும் படும். ஆனால் இவை அவசியம், படைப்பவன், வரலாற்றைத் தன் படைப்பில் வெறுமனே பிரதிபலிக்கிறதில்லை. ஒவ்வொரு படைப்பாளியும், சமுதாயத்தில் தனிநபராய், தனது சொந்த குறிப்பிட்ட நிலைபாட்டில் நின்று, ஒரு பொது வரலாற்றிற்கு உறவாகிறான். அதனைத் தனது சொந்த திட்டவட்டமான அளவையில் அர்த்தப்படுத்துகிறான். இவனுடைய ஆழ்ந்த பார்வை 'முற்போக்கோ' 'பிற்போக்கோ' அது குறியில்லை. பிற்போக்காக உள்ளதே என விசனப்பட்டால் இதனை விளக்க முனைகிறது மார்க்சியம். சரியான புரட்சிகர கலை இல்லாதபோது, மார்க்சியத்திற்கு எதிரான பிற்போக்குக் கருத்துக்கள் கூட குறிப்பிடத்தக்க இலக்கியத்தைத் தரமுடியும்.

கருத்துருவம், சமூக உறவு, உற்பத்தி சக்தி என்பனவற்றின் ஒன்றிணைந்த சமுதாய 'தளங்கள்' தான் மார்க்சிய விமர்சனத்தின் குறி. மேற்கட்டின் ஒரு பகுதியான இலக்கியம் பொருளாதாரத் தளத்தின் எந்திரகதியான பிரதிபலிப்பல்ல (எங்கெல்ஸ், ஜோசப்பிளாக்கிற்கு 1890-ல் எழுதிய கடிதம்) இரு கட்டுமானங்களுக்கிடையில் 1:1 தொடர்பு இல்லை. மேற்கட்டின் கூறுகளுக்கு தனித்தனி வளர்ச்சியும், வலுவும், உட்பரிணாமமும் உண்டு. இதனை மொட்டையாய் வர்க்கப் போராட்டம், பொருளாதாரம் என்ற வார்த்தைகளாய்க் குறைத்திட முடியாது. ட்ராட்ஸ்கி கூறுகிறார். "கலை மிக உயர்மட்டத்தில் சுய ஆட்சி கொண்டது." இது எந்த ஒரு உற்பத்தி முறையுடனும் 1:1

என்ற எளிதான பிணிப்புக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இறுதி ஆய்வில் கலை, உற்பத்தி முறையால் வரையறுக்கப்படுவதாய் மார்க்சியம் கூறும். இம்முரண்பாட்டை ஒரு எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார் ஆசிரியர். டி.எஸ். எலியட்டின் 'The waste land' பற்றியது. கொச்சை மார்க்சியத்தின்படி இக்கவிதை கருத்து முதலியல், பொருள் முதலியல் காரணிகளால் நேரடியாய் வரையறுக்கப்படுகிறது. ஏகாதிபத்திய முதலாளியத்தின் நெருக்கடியான முதல் உலகப் போரின், ஆன்ம சூன்யத்தின், ஓய்ந்து போன பூர்ஷ்வா கருத்துருவத்தின் நேரடிப் பிரதிபலிப்பு இக்கவிதை. இவ்விமர்சன முறை, பொருளாதாரத்துடன், கவிதையைத் தொடர்புறுத்தும் படிப்படியான 'தளங்களை' கணக்கில் கொள்ளவில்லை.

அமெரிக்க நகர குமாஸ்தாவாக இருந்து கொண்டு, பூர்ஷ்வா வியாபார வர்க்கத்துடனின்றி, ஆங்கில பழமைவாத, மரபுவாதத்துடன் இவர் தம்மைப் பிணித்துக் கொண்டது, கவிதையின் உருவம், மொழி, இவர் தம் தீவிர அரசியல் பழமை வாதத்திற்கு மாறாய். ஒரு புத்திலக்கியக் கவியாய் விளங்கியது, எந்தக் கருத்தியலடிப்படையில், இவர் இலக்கிய வரலாற்று வடிவங்களிலிருந்து சில 'முற்போக்கு' சோதனை ரீதியிலான வேலைப்பாடுகளைத் தெரிவு செய்தார் என்பது, இவர்க்கு வாய்த்த வெளியீட்டு முறைகள் (சிறுபத்திரிக்கைச் சூழல்) வாய்த்த வாசக வட்டம், இச்சூழலால் கவிதை நடை, உத்திகளில் பாதிப்பு - என்ற வி யங்களை மேற்சொன்ன விமர்சனம் (கொச்சை மார்க்சியம்) கணக்கில் கொள்ளவில்லை. எனவே படைப்பாளியின் சமூக நிலை, கருத்துருவ நிலை, இதற்கும் இலக்கியத்துக்கும் நிலவிய உறவின் நிலை, தத்துவம், உத்தி, வேலைப்பாடு, அழகியல் கோட்பாடு என்ற பிற கூறுகளையும் எடுத்துக்கொள்கிற போதே விமர்சனம் நிறைவடையும்.

கருத்துருவம் கருத்துக்களின் கூட்டமல்ல. சமூகத்தின் உற்பத்தி உறவுகளின் வர்க்கங்களுடன் பிணிக்கும்

மதிப்புக்களை, கருத்துக்களை, படிமங்களை இது சுட்டுகின்றது. எல்லாக்கலையும் கருத்துருவத்தின் இத்தன்மைகளைக் கொண்டே பிறக்கின்றன. பிளக்கனோவ் சொன்னபடி, கருத்துருவ உள்ளடக்கம் சுத்தமாய் இல்லாமல் ஒரு கலைப்படைப்புமில்லை. மிகத்தெளிவாக ஆளும் வர்க்க நலன்களைக் காட்டுகிற சட்டம் அரசியல் போலன்றி, கலை கருத்துருவத்துடன் மிகப்பின்னலான உறவைக் கொண்டுள்ளது. இந்த உறவை இருவகையாய் விளக்கியுள்ளனர்:-

கருத்துருவத்தின் வெளிப்பாடே கலை. கலைப் படைப்புகள் 'பொய்யான பிரக்ஞை'யின் கைதிகள். இவ்விதம், கலையைப் பிரதான கருத்துருவங்களின் வெறும் பிரதிபலிப்பு என்னும் இக்கொச்சை மார்க்சிய நிலைபாட்டால், ஏன் பெருமளவு இலக்கியம் அதன் காலத்திய கருத்துருவத்தைச் சவால் விடுகிறது என்பதை விளக்க இயலவில்லை.

2. ஏண்ஸ்ட் பி ர் தரும் விளக்கம்: சரியான கலை எப்பவும் அதன் காலத்திய கருத்துருவ வரம்புகளைக் கடக்கிறது. கருத்துருவம் நமக்கு மறைக்கிற எதார்த்தங்களை ஆழ்ந்து நோக்க வகைபுரிவது கலை என்பார். இவ்விரு விளக்கங்களும் மிகவும் சுலபத் தீர்வே சொல்கின்றன. பி ரின் விளக்கம் பூர்த்தி பெறாதது. இதைத் தொடர்ந்து நுணுக்கமாக பிரெஞ்ச் மார்க்சீயர் லூயர் அல்தூசரால் இவ்வுறவு விளக்கப்படுகிறது.

கருத்துருவத்திற்கும், எதார்த்த உலகிற்கும் (அடிக்கட்டு மானம்) உள்ள உறவு நேரடியானதன்று. கற்பனா ரீதியில் தான் இந்த எதார்த்த உலகு உணரப்படுகிறது. இதையே இலக்கியம் செய்கிறது இது ஒரு குறிப்பிட்ட நிலைமைகளில் வாழ்வதைச் சொல்கிறதேயன்றி, அந்நிலைமைகள் குறித்த அறிவார்ந்த ஆய்வையன்று. இந்த வாழ்வின் அனுபவத்தை, கலை எந்திரம் போல நேரடியாகப் பிரதிபலிக்கிறதில்லை. கருத்துருவத்தின் ஒரு வடிவாய் இலங்கும் கலை, அக்கருத்துருவத்துடன் பிணியுண்டும் அதே சமயம் இதனின்று தூரமாய் விலகியும் உள்ளது. கலையினூடே சொல்லப்படும்

கருத்துருவத்தை நம்மால் உணர முடிகிறது. அந்த அளவிற்குக் கலை விலகிக் கொண்டுள்ளது. நம்மை உணரச் செய்கிறது. கருத்துருவத்தின் தன்மையைக் காண நம்மை அனுமதிக்கும் கலை, அதனுள் மறைந்துள்ள எதார்த்தத்தை அறிய உதவுவதில்லை. இதனை அறிய உதவுவது அறிவியல் அறிவே இலக்கியம் இதைச் செய்யும் விதத்தை அல்தூசருடன் பணிபுரியும் பியர் மெ ரி சிறப்பாய் விளக்குகிறார்:

மனிதரின் சாதாரண, மேலோட்டமான கருத்துருவ அனுபவம் மாயையாக, பிரமைகளாக அமைகின்றது. இத்தகு அனுபவத்தை வி யமாய்க் கொண்டு படைப்பவன் கலைப்படைப்பில் முனைகிறான், இப்படைப்பு வினையின் முடிவில், இவ்வனுபவம் தனக்கென்று ஒரு வடிவும் அமைப்பும் பெற்றதாக வேறு ஒன்றாக உருமாற்றம் உறுகிறது. இவ்வாறு குறிப்பிட்ட கலை வடிவ வரம்புகளுக்குள் படைக்கப்படுகிறபோது, கருத்துருவத்திலிருந்து, கலை தன்னை தூரப்படுத்துகிறது; விலகிப் போகிறது. கருத்துருவத்தின் எல்லைகளை நமக்குத் தெரிவிக்கிறது. கருத்துருவ பிரமைகளிலிருந்து மீள்வதற்குக் கலை உதவுகிறது என்கிறார் மெபெ ரி.

கருத்துருவத்துடன் படைப்பைப் பிணிப்பதும் தூரப்படுத்துவதுமான ஒரு விதியைத் தேடுகிறது மார்க்சிய விமர்சனம், இலக்கியப் படைப்பை ஒரு உருவ அமைப்பாக உணர்வதே இத் தேடல்.

2. உருவமும் உள்ளடக்கமும்

வரலாற்றில் சகலவித இலக்கிய உருவவியல் கருத்துக்களை எதிர்த்தே வந்துள்ளது மார்க்சிய விமர்சனம். வெறும் உத்தி குணங்களையே கவனித்து, இலக்கியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை குறைத்து, அதை ஒரு அழகியல் விளையாட்டாய் ஆக்குவதாக உருவவியலை தாக்கி வந்துள்ளது மார்க்சிய விமர்சனம். மேலும் நடைமுறையில் அரசியல் உள்ளடக்கத்தையே கவனித்து

கலை வடிவான உருவம் பற்றிய வினாக்களை ஒதுக்கியே வந்துள்ளது - உருவம் உள்ளடக்கம் இணைவு வேண்டும். உருவத்திற்கென தனி மதிப்பில்லை - உள்ளடக்கம் இருந்தாலொழிய, என்றெல்லாம் சொன்னாலும் உருவத்தைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கத்தின் உயர்பங்கைக் காட்ட விரும்பி வந்துள்ளது மார்க்சியம்.

பின்னர் சமீபத்தில் உருவத்துக்கும், கருத்துருவத்துக்குமுள்ள உறவுகள் வலியுறுத்தப் படலாயின. உருவம், கருத்துருவம் சார்ந்ததாய் உள்ளது. இலக்கிய உருவவளர்ச்சி குறிப்பிடத்தக்க கருத்துருவ மாற்றங்களின் பலனாய் ஏற்படுகின்றது. சமூக எதார்த்தத்தை அறியும் புதிய வழி முறைகளைக் கொண்டுள்ளன. கலைஞனுக்கும் வாசகனுக்கும் புதிய உறவுகளைத் தருகின்றன. ஆங்கில நாவல் வடிவத்தின் தோற்றம் பழைய 'பிரபுத்வ' இலக்கிய மரபினின்று மாறிய புதிய பொருளாதார தனிநபர் போக்குடைய பூர்ஷ்வா வர்க்கத் தோற்றத்துடன் உறவு கொண்டிருந்ததை ஐயான்வாட் விளக்குகிறார்.

இலக்கிய உருவமாற்றங்களுக்கும் கருத்துருவ மாற்றங்களுக்கும் இடையில் சுலபமான 1:1 உறவு இல்லை. ஒவ்வொன்றிற்கும் பிரத்யேக வாழ்வுண்டு. தனக்கேயுரிய சுய இயக்கமும், பாதிப்பும் கொண்டுள்ள இலக்கிய உருவத்திற்கு சுய ஆளுமை உண்டு. (லூகாக்ஸ்) அதற்கேயான உள் அழுத்தங்களை ஒட்டியே அகப்பரிணாமம் பெறுகிறது. ஒவ்வொரு கருத்துருவக் காற்றின் வீச்சுக்கும் இது சும்மா வளைந்து கொடுப்பதில்லை. மார்க்சிய பொருளாதார கொள்கையில் ஒவ்வொரு அமைப்பும், பழைய கடந்து வந்த உற்பத்தி முறையின் எச்சங்களைக் கொண்டிருப்பது கூறப்படுவதுபோல பழைய இலக்கிய உருவங்களின் எச்சங்கள் புதிய வற்றிலும் எஞ்சி நிற்கின்றன.

ஒரு வடிவைத் தேர்கிறபோதே இத்தெரிவு கருத்துருவத்தால் ஏற்கனவே கட்டப்பட்டிருப்பதை அறிகிறான் படைப்பாளி. இலக்கிய மரபிலிருந்து கிடைக்கும்

வடிவங்களை அவன் இணைத்து, உருமாற்றலாம் – ஆனால் இவைதம்மிலும் படைப்போன் வினைபுரிந்ததிலும் கருத்துருவச் சாய்வு கொண்டே இருக்கின்றன. படைப்புக்கு எடுக்கும் மொழி, ஏற்கனவே கருத்துருவ முறைகளில் ஊறிப்போயுள்ளது. மொழியை மாற்றவும், புதுக்கவும் முடிவது படைப்பவனின் தனித்த மேதைத் தனத்தை விடவும் கூடுதலான வி யம்.

இலக்கிய உருவம் பற்றி லூகாக்ஸ்:

இவரது ஆய்வில்தான் இலக்கிய உருவம் குறித்த பிரச்னை முழுசாய் பார்க்கப் பட்டிருக்கிறது கலையில் கருத்துருவத்தை தாங்கிவருவது உருவம் தான். உள்ளடக்கமன்று. "இலக்கியத்திலுள்ள உண்மையான சமூகக்கூறு, உருவம்தான்"

மனித முழுமையைத் திரும்பவும் படைப்பவன் பெரிய கலைஞன்; முதலாளியத்தின் அந்நியமாதலால் சமுதாயத்தில் குறிப்பானவையும் – பொதுவானவையும், சிந்தனையும் – உணர்நிலையும், சமூகமும் – தனிநபரும், வரவர தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றன. இவற்றை இயக்கவியல் முறையில் சிறந்த கலைஞன் செறிவான முழுமையாக்குகிறான். இத்தகு முழுமையைப் படைப்பதே எதார்த்த வடிவம் என்கிறார் லூகாக்ஸ். தற்செயலான சமுதாய வாழ்வின் நிகழ்வுகளிலிருந்து சாரத்தைத் தெரிவு செய்து முழுமையாய் இணைப்பவனே சரியான எதார்த்தக் கலைஞன். இவ்விணைப்பைச் செய்வது அவனுடைய தனித்திறமையால் அல்ல, அவனது வரலாற்று இடத்தைப் பொறுத்தது இது. முக்கிய வரலாற்றுக் கட்டங்களில் சிறந்த கலைஞர் உதிக்க, ஊமையான கட்டங்களில் எதார்த்த நிலை சிதறி நடப்பியலாகவே (Naturalism) உருவவியலாகவோ (Formalism) தேய்கிறது. வெறும் புகைப்பட பிரதிபோல மேலோட்ட வருணனை மட்டும் தந்து சாரத்தை நோக்கி உட்செல்லாது வருவது நடப்பியல். இதில் வரலாற்றில்

ஊக்கமாய் பங்கு கொள்பவனாயின்றி, பார்வையாளனாக நிற்கிறான் எழுத்தாளன். உருவவியல், இதற்கு நேர் எதிர்திசையில் வரலாற்றுப் பொருளை இழந்து செயல்புரிகிறது.

காப்கா, காமு, ஜாய்ஸ், பெக்கெட் – இவர்களின் அந்நியமான உலகில் வரலாற்றிலிருந்து உதிர்ந்த மனிதன், தனது 'தான்'க்குப் புறம்பே ஒரு நிஜமுமில்லை எனக் காணப்படுகிறான். பாத்திரங்கள், மனநிலைகளாகக் கரைந்து, புறநிலை எதார்த்தம், அறிவுக்குப் புறம்பான குழம்பிய நிலைக்குக் கரைந்து காணப்படும் நடப்பியல் ஒருவித அருவமான புறநிலைப்பாடு, (abstract objectivity). உருவவியல் ஒருவித அருவமான அகநிலைப்பாடு (abstract subjectivity)

கோல்ட்மான் கருத்து

இவரது கோட்பாடு தோற்ற அமைப்பியல் வாதம் (Genetic Structuralism) எனப்படுகிறது. இவர் லூகாக்ஸின் தலைமைச் சீடர்; ருமேனிய விமர்சகர். ஒரு வர்க்கத்தின் முழுமையான உலகக் காட்சியை எந்த அளவு சரிவரக் காட்டுகிறதோ, அவ்வளவில் அது சிறந்த படைப்பாகிறது. படைப்பு தனி நபர்களின் விளைவல்ல; மாறாக ஒரு சமூக குழுவின் தனி நபரைக் கடந்த மனோநிலை அமைப்புகளாய்ப் படைப்பைக் காண்கிறார். 'அமைப்பியல் வாதம்' என்பதால், உள்ளடக்கத்தை விட, இதை வெளியிடுகிற வகைகளின் அமைப்பியல் பற்றியே கவனம் கொள்கிறார் என்பது தெரிகிறது. தோற்றம் (Genetic) என்பதால் படைப்பாளரின் மனநிலை அமைப்புக்கள் வரலாற்று ரீதியில் எவ்விதம் தோற்றம் கொள்கின்றன. என்பதில் கவனம் கொள்கிறார் என்பது தெரிகிறது. படைப்பு, உலகக் காட்சி, வரலாறு இவற்றுக்கிடையில் ஒரு வகைத்தான அமைப்பியல் உறவுகளைத் தேடுகிறார் இவர். எவ்விதம் ஒரு சமூகக்குழு (அ) வர்க்கத்தின் வரலாற்றிடம், தனது உலகக் காட்சியின் தொடர்பால், இலக்கிய படைப்பு

அமைப்புக்கு மாற்றப்படுகிறது என்பதைச் சொல்ல விழைகிறார். இவரது விமர்சன முறையில் சில குறைகள் உண்டு. சமூகப் பிரக்ஞை குறித்த இவர் பார்வை ("உலகக்காட்சி") மார்க்சியமன்று; ஹெகலியமே. இது அந்தந்த சமூக வர்க்கத்தின் நேரடியான வெளிப்பாடு என்றும். இதுபோல் இலக்கியப் படைப்பும் இந்தப் பிரக்ஞையின் நேரடி வெளிப்பாடு என்றும் கருதுகிறார். இந்த 1:1 பார்வையில் இயக்கவியல் முரண்கள் சிக்கல்கள் ஒரே வகையற்ற தன்மைகள், தொடர்ச்சியறுந்த நிலைகள் ஆகியவற்றுக்கு இடமில்லை. அடிக்கட்டுமானம் – மேற்கட்டுமானம் இவற்றுக்கிடையிலான உறவு எந்திர ரீதியானது எனும் அளவில் இவர் முறை குறைவுற்றுப் போகிறது.

பியர் மெஷேரீ

மேற்கண்ட லூகாக்சும், கோல்ட்மானும், இலக்கியம் ஓர் ஒருங்கிணைந்த முழுமையை உண்டாக்க வேண்டுமென்ற நம்பிக்கையை ஹெகலிடமிருந்து பெற்றுள்ளனர். (மெஷேரி கருத்து: ஒரு கலைப் படைப்பு என்ன கூறுகிறது என்பதை விட, என்ன கூறவில்லை என்பதில் தான், அது கருத்துருவத்துடன் பிணைப்புண்டிருப்பது அறியப்படும், கலை கருத்துருவத்திலிருந்து விலகிக் கொள்வதின் அர்த்தம் இங்கு புரியும். இத்தகு குறிப்பிட்ட இடைவெளிகளில், வராமைகளில், விலகலில் தான் கருத்துருவத்தின் இருப்பைப் புரியலாம் இந்த இடைவெளிகளை விளக்குபவன் விமர்சகன். இடைவெளியற்ற முழுமையான பூரண நிலையைச் சொல்வதைவிட, ஒரு படைப்பு, முரணுகிற அர்த்தங்களையும் முரண்பாடுகளையும் சொல்கிறது). கோல்ட்மான், படைப்பில் ஒரு மத்திய அமைப்பைக் காண, இவருக்கு அவ்வாறன்றி படைப்பு எப்போதும் "மத்தியம் அற்ற"தாகவே உள்ளது. (De-Centred). 'சிதைந்தது', 'கலைந்தது', 'வேறுபட்டது'. 'ஒழுங்கற்றது'

போன்ற பதங்களையே மெஷெரி படைப்பு பற்றி பேசுகையில் பயன்படுத்துகிறார். படைப்பு 'பூர்த்தி பெறாதது' என இவர் சொல்கையில், இதனை விமர்சகன் இட்டு நிரப்பச் சொல்லவில்லை. படைப்பின் இயல்பே இது; மெஷெரி பிரதானமாக உள்ளடக்கத்தின் முரண்களையே எடுத்துக்கொள்கிறார்; உருவத்தின் முரண்களையல்ல.

3. எழுத்தாளனும் ஈடுபாடும்

மார்க்சிய விமர்சனம் என்றால், படைப்பு பாட்டாளி வர்க்கத்தை உயர்த்திப் பேசவேண்டும். முதலாளிகளைக் கயவர்களாய்ச் சித்தரிக்க வேண்டும் பாட்டாளி கண்ணீர் விடாதவன்; பாட்டாளிப் பெண்கள் கற்புள்ளவர்கள்; இறுதியில் வெற்றி! வெற்றி! என்று ஆர்ப்பரித்து கொடிதூக்கி வருபவன் தொழிலாளி - எனும் சாதாரண மனிதரின் கருத்துக்களெல்லாம் ஸ்டாலினியத்தால் பெரிதும் உருவானவைதான். 1917 முதல் '28 வரை ருஷ்யாவில் (Futurism; Formalism, Imagism, Constructivism...) *பலவித கலாச்சார அமைப்புக்களும், வெளியீடுகளும் இயங்கின. பின்னர் உருவான புரோலிகல்ட்* (Proletkult) *தூய பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை உண்டாக்கும் குறி கொண்டது. கலையை ஒரு வர்க்க ஆயுதமாகக் கருதி, பூர்ஷ்வாக் கலாச்சாரத்தை அடியோடு ஒதுக்கியது. 1920-ல் உதித்த* RAPP *கலாச்சாரத்தின் சுதந்திரப் போக்குகளைக் களைந்து 'சோசலிச எதார்த்த வாத'த்துக்கு பாதை போட்டது. பின், 1932-ல் சோசலிச எழுத்தாளர் யூனியன் உதயமாகிறது. 1934ல் இதன் காங்கிரஸ் 'சோசலிச எதார்த்த வாதத்தை' அதிகாரப்பூர்வமானதாக்கியது ஸ்டாலினின் நேரடி அமைப்பாகிய இது, தொழிலாளரை சோசலிச உணர்வுக்குப் பயிற்சித்தல், நம்பிக்கை வாதமாக, வீர சாகசத்துடன் புரட்சிகர 'அற்புத நவிற்சியை'க் கொண்டு எதிர்காலத்தைச் சித்தரிப்பதாய் இலக்கியம் படைக்குமாறு கேட்டது. 1940-50ல் தொடர்ந்து படைப்பிலக்கியம் முடங்கியது. 1930ல் மாயாகோவ்ஸ்கி தற்கொலை புரிந்தார்.* Usevelod Meyerhold *எனும் சோதனைமுறை நாடகத் தயாரிப்பாளர்,*

"பரிதாபத்துக்குரிய இந்த மலட்டு சோசலிச எதார்த்தவாதம் கலைக்கு எவ்விதத்திலும் தொடர்பு கொண்டதல்ல" எனப் பிரகடனித்ததால் கைதாகிப் பின் இறந்தார். இவர் மனைவி கொலையுண்டார்.

லெனின், ட்ராட்ஸ்கி

நடுநிலை என்பதே சாத்யமில்லை. சமூக ஜனநாயக எந்திரத்தின் ஒரு திருகாக எழுத்து வர வேண்டும். வெளிப்படையான வர்க்கச் சார்பு வேண்டும்; பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் பிணிக்கப்பட வேண்டும் என லெனின், போல்ஷ்விக் கட்சியின் உள் ஒழுங்கை மனதிற்கொண்டு, ட்ராட்ஸ்கி, பிளக்கனோவ், பார்வஸ் போன்ற புத்தி ஜீவிகள் ஒரு கட்சிப் பார்வைக்குள் அடங்கி நடக்கும் அவசியத்தை மனதிற் கொண்டு எழுதினார் லெனின். இக்கூற்றை படைப்பிலக்கியம் பற்றித்தான் லெனின் கூறினதாக விமர்சகர்கள் சாடினர். பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம், முந்திய முதலாளியம் தந்த சகல மதிப்பு வாய்ந்த கலாச்சாரக் கூறுகளைத் தக்க வைக்க வேண்டும் என்றார் லெனின். படைப்பாளி என்ன படைக்கிறான் என்பதே குறி, என்ன நினைக்கிறான் என்பதல்ல. டால்ஸ்டாய் பற்றிய லெனின் கருத்து இதைத் தெரிவிக்கிறது. டால்ஸ்டாய்க்கு, வரலாற்றை சரியாய்ப் புரிவது, சிறந்த இலக்கியம் படைப்பதற்கு அவசியமாயிருக்கவில்லை. ட்ராட்ஸ்கியும் லெனின் கருத்தே கொண்டிருந்தார், 'அகன்ற, நீக்குப் போக்கான கலைக்கோட்பாடுடன்' விழிப்பான புரட்சிகரத் தணிக்கை இணைய வேண்டும். "ஆலைப்புகைபோக்கிகளைப் பற்றியோ, முதலாளியத்தை எதிர்த்துக் கிளர்ச்சி புரியவோ சொல்லிக் கலைஞர்களை எழுதச் சொல்வது மடமை" "கலையை, அதன் சொந்த விதியால் கணிக்க வேண்டும்".

மார்க்ஸ்: எங்கெல்ஸ்

இவர்களிடம் தோற்றம் கொள்வதாய்க் கூறப்படும் 'சோசலிச எதார்த்தம்', 19ம் நூற்றாண்டில் ருஷ்ய 'புரட்சிகர ஜனநாயக' விமர்சகர்கள் பெலின்ஸ்கி, செர்னிசெவ்ஸ்கி,

போன்றவர்களிடம் தோற்றம் கொண்டுள்ளது. சமுதாய வளர்ச்சிக்கான கருவியாய் இலக்கியத்தைக் கண்டனர். மார்க்ஸ், படைப்புக்கள் தமக்குத் தாமே முடிந்து விட்டவை, பட்டுப்பூச்சி தன் இயல்பால் பட்டு உற்பத்தி செய்வதைப்போல மில்டன் 'Paradise Lost' படைத்தார் என்கிறார். மின்னா காட்ஸ்கிக்கும் (1885), மார்கரெட் ஹார்க்னெசுக்கும் (1888) எங்கெல்ஸ் எழுதிய கடிதங்கள், எழுத்தாளன் மிக வெளிப்படையாக அரசியல் சார்பு கொள்ளக் கூடாது அவசியமில்லை; சரியான எதார்த்த எழுத்து தானே சமூக வாழ்வின் குறிப்பிட்ட சக்திகளை முன்னிறுத்தும் அரசியல் தீர்வுகளைத் திணிக்காமல், புகைப்படப்பாணிச் சித்திரம் இல்லாமல், இவற்றைக் கடந்தே செயல்படும் என்றார். இதுவே பின்னர் 'புறநிலைச்சார்பு நிலை' (Objective Partisanship) என உருவாயிற்று. சமூக எதார்த்தத்தைக் கையாளும் விதத்தில்தான் இச்சார்புநிலை வெளிப்படும், அகநிலையாய் நோக்குவதால் அல்ல. படைப்பு வெளிப்படையாய் ஒரு கருத்துக்காக நிற்பினும், இதனையும் தாண்டி வேறொரு மாறான பண்பைக் கூறுவதை Sue-வின் நாவலில் மார்க்ஸ் கண்டார். இந்நோக்கிலே பல்ஸாக்கை ரசித்தார்.

ஒரு படைப்பின் அகநிலை நோக்கிற்கும், புறநிலை அர்த்தத்திற்குமுள்ள பிளவே 'முரணியில் கோட்பாடு' (Principle of Contradiction). இது டால்ஸ்டாய் பற்றிய லெனின் கணிப்பிலும் வால்டர் ஸ்காட் பற்றிய லூகாக்ஸின் கணிப்பிலும் எதிரொலிப்பதைக் காணலாம்.

இலக்கியம், சில அரசியல் நோக்குகளைப் போதிக்க வேண்டும் என்று சோசலிச எதார்த்தம் சொல்கையில், நேரடியாய் இலக்கியம் சமுதாய எதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது (அ) மறுபதிவு செய்கிறது எனப் பொருள்படுகிறது. இக்கருத்தை மார்க்ஸ் கூறவில்லை. ஆயினும் இந்தப் 'பிரதிபலிப்பு வாதம்' மார்க்சிய விமர்சனத்தில் ஆழப்பதிந்துள்ளது. சரித்திரத்திலிருந்து ஒதுங்கி, இலக்கியம் தனது மூடப்பட்ட

எல்லைக்குள் இயங்குவதாய்க் கொள்ளும் உருவவியலாளர் கொள்கைக்கு நேரெதிராய் இந்நிலை எடுக்கப்பட்டுள்ளது.

லூகாக்ஸ் சற்று உயர்மட்டத்தில் இதனை விளக்கியுள்ளார்: தோற்றத்துக்கடியில் உள்ள பொது வகைகளை இலக்கியம் பிரதிபலிக்கிறது என்கிறார். ஆனால் உண்மையில் இது பிரதிபலிப்பா? உடனடி அனுபவங்களினூடேயுள்ள பொதுவகைகளை மனம் புகுந்து பார்க்க முடியுமானால், இது பிரதிபலிப்பில்லை, பிரக்ஞையின் செயல்பாடு தெரிகிறது.

ட்ராட்ஸ்கி கூறுவார்: கலைப்படைப்பு ஒரு திருப்பம், ஒரு மாற்றம், தன் சொந்த விதிப்படி நடக்கும் எதார்த்தத்தின் உருமாற்றம் இந்நிலையை மேலும் வளர்க்கும். மெெ ரி கூறுகிறார்: அடிப்படையில் எதார்த்தத்தை உருக்குலைப்பதே இலக்கியம்; அதைப் போலச் செய்வதல்ல.

4. உற்பத்தியாளனாக ஆசிரியன்

இலக்கியம், சமூகப்பிரக்ஞையின் வெளிப்பாடு, 'உலகக்காட்சி' என்றெல்லாம் இருந்தாலும், இது ஒரு தொழில். வி யங்களைச் சொல்பவை மட்டுமின்றி, நூல்கள், வெளியீட்டாளரால் பண்டங்களாய் உற்பத்தி செய்யப்பட்டு, குறிப்பிட்ட லாபத்திற்குச் சந்தையில் விற்பனைக்கும் போகின்றன. படைப்பை ஆய்பவர்களாக மட்டுமின்றி, விமர்சகர்கள், இம்முதலாளிய சமுதாயத்தில் கருத்துருவ ரீதியாய் மாணாக்கரை உருவாக்க அரசால் அமர்த்தப்படுவோராயும் உள்ளனர். மனிதரின் தனி மனித நிலையைக் கடந்த மனநிலை அமைப்புகளைச் சொல்பவராய் மட்டும் எழுத்தாளன் இல்லை, விற்பனைக்குரிய பண்டங்களை உற்பத்தி செய்ய வெளியீட்டகங்களால் அமர்த்தப்படுகிற தொழிலாளிகளாகவும் உள்ளனர். மார்க்ஸ், எங்கெல்ஸ் இக்கருத்தைக் கூறியுள்ளனர். இன்றைய மார்க்சிய விமர்சகர்கள் இதனை சமயத்தில் மறந்து விடுகின்றனர்.

கலை முதலில் ஒரு சமூக நடவடிக்கை. இது பற்றி வால்டர் பெஞ்சமின், பெர்த்தோல்ட் பிரக்ட் ஆகியோர் கருத்துக்கள் சிறப்பு வாய்ந்தவை.

வால்டர் பெஞ்சமின்

வழி வழியாய் மார்க்சிய விமர்சனம், இலக்கியப் படைப்பு அதன் காலத்திய உற்பத்தி உறவுகளுடன் என்ன இடம் வகிக்கிறது எனும் வினாவை எழுப்ப, இவர் கேட்கிறார்: அதன் காலத்திய உற்பத்தி உறவுகளினுள் இலக்கியப் படைப்பின் இடம் என்ன? இதன்படி, மற்றெந்த உற்பத்தி வடிவம் போலவே, கலையும் குறிப்பிட்ட (வண்ணம் தீட்டும் முறை, வெளியீடு, அரங்க அமைப்பு...) உற்பத்தி வேலைத்திறனை சார்ந்துள்ளது. இது, கலையின் உற்பத்திச் சக்திகளின் ஒரு பகுதியே. இவை, கலை படைப்போனுக்கும், அவனுடைய வாசகனுக்கும் இடையே ஒரு வகையான சமூக உறவுகளை ஏற்படுத்துகின்றன. மார்க்சியப்படி, ஒரு உற்பத்தி முறை, சமூக உறவுகளை ஏற்படுத்த, இதில் உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் ஒன்றுக்கொன்று முரணுகிற கட்டத்தில் நுழைகையில், புரட்சிக்கான தளம் அமைகிறது. இக்கோட்பாட்டை, கலைக்குப் பிரயோகித்ததே பெஞ்சமினின் தனித்தன்மை. இவர் கூறுவார்: புரட்சிகரக் கலைஞன் விமர்சனப் பார்வையின்றி, அப்போதுள்ள கலை உற்பத்திச் சக்திகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. மாறாய், அச்சக்திகளை வளர்த்து, அவற்றை புரட்சிகரமாய் ஆக்க வேண்டும். இவ்விதம் செய்கையில், கலைஞனுக்கும், வாசகனுக்கும் இடையில் புதிய சமூக உறவுகளை ஏற்படுத்துகிறான். அப்போதுள்ள ஊடகத்தின் ஊடாக, புரட்சிச் செய்திகளை நுழைப்பதன்று இது; ஊடகத்தையே புரட்சிகரமாய் மாற்ற வேண்டும். சரியான புரட்சிகரக் கலைஞன், கலை வி யத்தை மட்டுமே கவனிப்பதில்லை; இதன் உற்பத்தி முறைகளைக் கவனிக்கிறான். 'தன்னை ஈடுபடுத்தல்' என்பது கலையில் தனது, சரியான அரசியல் அபிப்பிராயங்களைச் சொல்வதிலும் மேலானது. தன்முன்னுள்ள கலை உருவங்களை மறு புனைவு செய்தல், ஆசிரியன், வாசகன், பார்வையாளன் ஆகியோரை, கூடப்பணிபுரிவோராய் காண்பது என்பவற்றில் 'தன்னை ஈடுபடுத்தல்' வெளிப்படுகிறது.

வழிவந்த கலைப் படைப்புக்களின் 'நிரந்தர', 'மர்ம', 'உயர்வான' தோற்றத்தை, இன்றைய எந்திரயுக படைப்புகள் அழிக்கின்றன. 'உன்னதக்கலை' எனும் நம்பிக்கையைத் தகர்க்கின்றன. நமது கருத்தாக்கங்களைத் தொடர்ச்சியாய் மாற்றியமைக்கின்றன. தொடர்ச்சியாய் ஒரு 'அதிர்ச்சி'யை ஏற்படுத்துகின்றன; பெஞ்சமின் தரும் அழகியலின் மையப் பகுதியே இந்த 'அதிர்ச்சி'க் கோட்பாடு. உதிரியான, தொடர்ச்சி அறுந்த உணர்வுகளின் பூசல் தான் நவீன நகர வாழ்வின் பண்பு. இதனை லூகாக்ஸ், மனித 'முழுமை' முதலாளியத்தில் சிதறுவதாய்க் காண்பார். பெஞ்சமின் இதில், முற்போக்கு கலை வடிவங்களுக்கு அடித்தளமான, உடன்பாடான சாத்தியப்பாடுகளைக் காண்கிறார்.

பெர்த்தோல்ட் பிரக்ட்

இவரும், பெஞ்சமினும் நண்பர்கள் கூட்டாளிகள். சோதனை முறை நாடகம் ('காவிய' நாடகம்) உண்டாக்கியவர் பிரக்ட். இவரது விமர்சனத்தின் மையம் 'அந்நியமாக்கும் விளைவு' (Alienation effect) தான். பூர்ஷ்வா நாடகம் எதார்த்தத்தின் மாயையை உண்மை போல் காட்டி, பார்வையாளரை ஈர்க்கும் நோக்குடையது. பார்வையாளன் வெறும் நுகர்வோன் தான். இவன் சிந்தனையைத் தூண்டுவதில்லை. இத்தகு அழகியல் உலகம் நிலையானது. வழங்கப்பட்டது, மாறாதது எனும் கருத்துருவ நம்பிக்கையை பிரதிபலிக்கிறதாக உணர்ந்தார் பிரக்ட். இதற்கு எதிராய். எதார்த்தம் மாறுவது, தொடர்பறுந்தது. மனிதரால் உண்டாக்கப்படுகிறது, எனவே அவர்களால் மாற்றப்படக் கூடியது எனும் நிலையை எடுக்கிறார் பிரக்ட். நாடகம், சமூக எதார்த்தத்தின் பிரதிபலிப்பன்று; 'அது பற்றிய விமர்சனமே. நாடகம் தன்னையே, தொடர்பறுந்ததாய், முடிவுறாததாய், உள்முரண் கொண்டதாய்க் காட்டுகிறது. இவரது நாடகத்தில் நடிகர்கள். தங்கள் பாத்திரங்களுடன் 'பொருந்து'வதிலிருந்து தூரமாய் நிற்கச் சொல்லித் தரப்படுகின்றனர். தாங்கள் ஏற்று நடிக்கும் பாத்திரங்களை

அவர்கள் 'காட்டுகிறார்கள்', அவைகளாய் மாறுவதில்லை. பார்வையாளனை ஆரம்ப முதல் இறுதிவரை ஈர்த்துக் கட்டிப் போட்டிருக்கும் ஒருமைப்பாட்டை உண்டாக்குவதற்குப் பதில், நாடகம் ஒரே சீரற்ற, இடையீடுகள் கொண்ட, தொடர்பறுந்த, எதிரும் புதிருமான காட்சிகளைக் கொண்டிருக்கிறது. இத்தகு 'அந்நியமாக்கும் விளைவு' நாடகத்துடன் உணர்ச்சிவசமாய் ஒன்றிப்பதைத் தவிர்க்கிறது; இந்த ஒன்றிப்பு விமர்சன அளவையின் சக்தியை முடக்கும். பரிச்சய மற்ற சம்பவங்களை 'இயல்பானதாக்கி' பார்ப்பவரின் சுகமான நுகர்வுக்கு ஏற்ப சரி செய்கிற பூர்ஷ்வா நாடகத்திற்கு எதிரானது இவர் நாடகம். பார்வையாளரின் நுகர்வில் தான் நாடகம் பூர்த்தி பெறுகிறது.

மேற்கண்ட இருவரின் கருத்துக்களில் மூன்று முக்கிய நிலைபாடுகள் உண்டு. 1. உருவம் குறித்த புது அர்த்தம் தரப்படுகிறது. 2. படைப்பவன் குறித்த மறுவிளக்கம் கொடுக்கப்படுகிறது, இவன் முந்த முந்த ஒரு உற்பத்தியாளனே படைப்பவன் இல்லை. படைப்பிற்கு உதவும் உருவம், மதிப்புகள், குறியீடு, கருத்துருவம்... போன்றவை இவனுக்கு, ஏற்கனவே உருவாகிய நிலையில் வந்து சேருகின்றன. 3. கலைப்படைப்பு குறித்த மறுவிளக்கம். முரண்பாடுகளைப் பூசி மெழுகி, பொய்யான சமன்பாட்டை உருவாக்கும் நோக்குடையது பூர்ஷ்வா நாடகம். லூகாக்சும் இதனை ஒட்டியே, முதலாளியத்தின் முரண்பாடுகளை ஈடு செய்கிறதாகப் படைப்பைக் கருதுகிறார். அந்நியமாதல்களைக் கடந்து மறுபடைப்பைச் செய்கிறதாகக் கருதுகிறார். ஆனால் பிரக்ட், கலை, முரண்பாடுகளை நீக்காது, வெளிப்படுத்த வேண்டும் என்கிறார். உபயோகத்தில் தான் படைப்பு முழுமை பெறவேண்டும்; தன்னிலே அல்ல.

எதார்த்தவாதத்தின் வீச்சை விஸ்தரித்தார் பிரக்ட். ஸ்டாலினிய வரட்டுத் தன்மைக்கு எதிரானது இவரது நிலைபாடு. இவ்விருவர் (பெஞ்சமின், பிரக்ட்) பார்வையில் சில குறைகளும் உண்டு. கலையின் தொழில் திறன் பற்றிய

கொள்கையில் உள்ளார்த்த ஆபத்தும் உண்டு. தொழில்திறன் சக்திகள், உற்பத்தி முறைகளில் எவ்விடம் வகிக்கின்றன என்பதை விடுத்து, அவை தாமே வரலாற்றைத் தீர்மானிக்கிற காரணியாக நம்பும் வலைக்குள் இவ்விருவரும் (பிரக்ட், பெஞ்சமின்) வீழ்கின்றனர். கலை, ஒரு உற்பத்தி முறை என்பதை, அது ஒரு அநுபவ முறை (புலன் உணர்வு முறை) என்பதுடன் சீராய் இணைத்துப் பார்க்கவில்லை இவர்கள். அதாவது கலைக்குள், மேற்கட்டு – அடிக்கட்டு என்பவற்றுக்குள்ள உறவு பற்றி சரிவரப் பார்க்கவில்லை. இதனையும், கலை ஒரு உற்பத்திப்பொருள் என்பதற்கும் அது ஒரு கருத்துருவம் என்பதற்கும் உள்ள உறவையும், விளக்கும் முக்கிய கட்டத்துக்கு மார்க்சிய இலக்கிய விமர்சனம் வந்துள்ளது.

மார்க்சிய விமர்சனம் பழைய இலக்கியத்தைப் படிப்பதற்கு உதவும் மாற்று வழிமுறை மட்டும் அல்ல – சுரண்டலிலிருந்து மீளுவதன் ஒரு பகுதியாகவும் உள்ளது இது.

3. இந்தியாவில் வரலாற்று ஆய்வுகள்

இந்தியாவில் புகழ்பெற்ற மார்க்சிய வரலாற்றாசிரியர் சிலரைப் பேட்டி கண்டு, அவர்களிடம் தரப்பட்ட கேள்விகளுக்கான விரிவான விடைகளை 'இந்து' - தனது 29-10-79 இதழில் OUT LOOK பகுதியில் வெளியிட்டுள்ளது. விடைகளிலிருந்து முக்கியமான பகுதிகளைச் சுருக்கமாகத் தருகிறது, பரிமாணம்: 'இந்து' இதழுக்கு நன்றி.

வரலாற்று ஆய்வில் புதிய போக்குகள்

ரோமிலா தாபர்

சமூக விஞ்ஞானங்களுக்குள் வரலாறுதான் அறிவார்ந்த கேள்விகளைக் கூர்மையாக எழுப்பும் விஞ்ஞானம் என்ற உண்மை, கடந்த சில ஆண்டுகளாக உணரப்பட்டுள்ளது. பிற சமூக அறிவியல் துறையில் ஏற்படாத அளவுக்கு மிகப்பெரும் மாற்றம் வரலாற்றுத்துறையில் ஏற்பட்டிருப்பதை பொருளியலாளரும் சமூக இயலாளரும் கூட ஏற்கின்றனர். இதற்கு என்ன காரணம்? வரலாற்று நிகழ்வுகளுக்கான பொருளுரைத்தல், பொதுக் கருத்தாக்கங்களை உருவாக்குதல் பற்றிய பிரச்னைகளில் நெடுங்காலமாகவே தொடர்ந்து விவாதம் நடந்து வருகிறது. இந்த விவாதம், இந்திய வரலாற்று ஆய்வில் ஈடுபட்ட ஐரோப்பிய அறிஞர்கள் காலத்திலேயே தொடங்கியது. தேசிய வாதிகள் வரலாற்றுத்துறை ஆய்வில் ஈடுபட்டபோது, இந்த விவாதம் மேலும் வலுப்பெற்றது. முன்னைய வரலாற்று ஆய்வாளர்களின் கோட்பாடுகளை இவர்கள் கடுமையாக விமர்சனம் செய்தனர். வரலாற்று ஆய்வில் இப்போக்கு முக்கியமானதாக இருந்தது. இதற்குப் பிறகு, இந்திய வரலாற்று ஆய்வில் மார்க்சியலாளர் பங்கு குறிப்பிடத்தக்கதாகிறது. வரலாற்றுக்குத் தேவையில்லாதது அல்லது முக்கியமில்லாதது என்று மற்றவர் ஒதுக்கி வைத்திருந்த பகுதிகளிலெல்லாம் வரலாற்றாய்வாளர்களின் ஆர்வத்தை இவர்கள் தூண்டினர். மார்க்சியத்தை ஏற்காதவர்களின் கவனத்தை இப்படித் தூண்டியது

குறிப்பிடத்தக்க உண்மை. இப்பொழுது விவாதம் உயரிய அறிவார்ந்த தளத்தில் நடைபெறுகிறது. இது மிகவும் பொருளுடையதாகிறது.

வரலாற்றின் தகவு இரண்டு வகையிலானது. கடந்த காலம் பற்றிய புரிதலைத் தருவது ஒன்று. இறந்த காலத்தின் எச்சங்கள் பல நிலவும் நமது சமுதாயத்தில் இத்தகைய புரிதலின் தேவை அதிகம். மிக முன்னேறிய தொழில்துறை வளர்ச்சியும் மிகப் பழங்காலத்தைச் சார்ந்த வேட்டையாடுதல் போன்ற தொழில்களும் ஒருங்கே நடைபெறும் நமது சமுதாயத்திற்கு, வரலாறு பற்றிய புரிதல் மிகவும் தேவை. இன்னொன்று, அரசியல் சித்தாந்தத்தில் வரலாற்றியலைத் திட்டமிட்டுப் பயன்படுத்துதல் ஆகும். அண்மைக் காலத்தில் இப்போக்கு தீவிரப்பட்டிருப்பதை, வரலாற்றுப் பாடநூல்கள் பற்றிய விவாதத்திலிருந்தும் அறியலாம்.

வரலாற்று ஆய்வில் சித்தாந்தங்களின் செல்வாக்கு

பிபன் சந்திரா

இந்திய வரலாற்றாய்வில் சித்தாந்தத்தின் செல்வாக்கு பெருமளவு உள்ளது என்பதில் ஐயமில்லை. நான்கு வகையான சித்தாந்தப் போக்குகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஏகாதிபத்திய வாதப்போக்கு, இவற்றுள் முதன்மையானது. பிரிட்டீஷ்காரர் மட்டுமல்லாமல் இந்திய வரலாற்றாசிரியர் பலரிடமும் இப்போக்கு ஓங்கியிருந்தது. தம் அரசியல் கோட்பாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைபாட்டை எடுத்தவர்களும் கூட இதில் அடங்குவர். இந்திய ஆன்மீகம் பற்றிப் பேசியவர்கள் இத்தகையவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், ஏகாதிபத்தியக் கருத்தோட்டம் உடையவர்கள், இந்திய மக்கள் ஆன்மீகத்துறையில் பெருஞ்சாதனை புரிந்தவர்கள்; ஆனால் பொருளியல் அரசியல் போன்ற துறைகளை நிர்வகிப்பதில் ஆங்கிலேயர்களே திறன்மிக்கவர் என்ற நோக்கில் இந்திய வரலாற்றைப் பார்த்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின்

தொடக்கத்தில், இந்திய சமுதாயத்தை முழுமையாக எடுத்துக் கொண்டால் – அதன் சித்தாந்தக் கட்டமைப்போடும் சேர்த்து வளர்ச்சி பெறாத அரைகுறை நாகரிகம் மட்டுமே உடைய சமுதாயம், இதற்குக் காலனியாதிக்கம் தேவை என்ற முறையில் பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் நம்பினர். பின்னர் இக்கருத்தை முன் கூறியவாறு மாற்றிக் கொண்டனர்.

இந்திய வரலாற்றாய்வியல் இரண்டாவது போக்கு, தேசியவாதம். இதன் எதிரொலியை பழங்கால, இடைக்கால வரலாற்றாய்வில் மிகுதியாகக் கேட்கிறோம். நவீனகால வரலாற்றைத் தேசியவாத நோக்கில் எழுதுவதானால், காலனியாதிக்க எதிர்ப்புக் கண்ணோட்டம் கொள்ள வேண்டியிருக்கும். தம் தொழிலுக்கு இது ஆபத்தாகி விடும்.

வகுப்புவாதக் கண்ணோட்டம் மூன்றாவது போக்கு. அறிவாளிகள் மீது தேசியவாத நோக்கு வலுவாக இருந்ததால் வகுப்புவாதம் அவர்களை ஆதிக்கம் செய்ய முடியவில்லை. 1920,30களில் வகுப்புவாத இழைகள் இருந்த போதிலும், வெளிப்படையாக இக்கண்ணோட்டம் கொள்வது நடைபெறவில்லை. சுதந்திரத்துக்குப் பிறகு, இந்தியாவில் ஆர். சி. மஜூம்தார் பாணியிலும் இதேபோல பாகிஸ்தானிலும் இக்கருத்தோட்டம் வலுப்பெற்றிருக்கிறது.

விஞ்ஞான முறையிலான வரலாற்றாய்வாளர்கள் நான்காவது பிரிவினர். இவர்களில் மார்க்சியவாதிகள் குறிப்பிடத்தக்கவர். வெபரின் பாதிப்புக்கு உள்ளானவரும் சிலர் உண்டு. வரலாற்றாய்வில் விஞ்ஞான நோக்கை ஏற்பவர் வேறு பலரும் உண்டு. இவர்களுக்கிடையில் – மார்க்சியவாதிகள், அல்லாதவர்களுக்கிடையில் கடுமையான பிளவு இதுவரை நேரவில்லை, இதற்கு முதன்மையான காரணம், கோசாம்பி முதற்கொண்டு, இத்தகைய நோக்கோடு வரலாற்றைப் பார்த்தவர்கள், மார்க்சியத்தை ஒரு சூத்திரவாதம் ஆக்காதது தான். டி.டி. கோசாம்பி, ஆர்.எஸ். சர்மா, இர்பான் ஹபீப் ஆகியவர்கள் உணர்வு பூர்வமாக

மார்க்சிய முறையியலை ஏற்றவர்கள். விவாதங்களில் இவர்கள் நேசமுறையில் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கிடையில் பொது அடிப்படை இருக்கிறது. இவர்களுள் மார்க்சியலார், அல்லாதவர்கள் உண்டே தவிர, மார்க்சிய எதிர்ப்பாளர்கள் வகுப்பு வாதிகளைத் தவிர — இல்லை.

இர்பான் ஹபீப்

47க்கு முன்பே வரலாற்றாய்வில் வகுப்புவாதக் கண்ணோட்டம் நிலவியது. வெள்ளையர் வருகைக்கு முன்னர் கூட இது ஏதோ ஒரு உருவில் இருந்தது. தற்போது, இது ஒரு குறுகிய வெறித்தனமான கண்ணோட்டத்துடன் இணைந்திருப்பது தான், இந்தியாவில் விஞ்ஞானவியல் வரலாற்றின் வளர்ச்சிக்கான பெரும் ஆபத்தாகிறது. பழங்காலத்தைப் பெருமைப்படுத்துவது இவர்கள் போக்கு. உலக அளவில் ஏற்பட்ட எந்த ஒரு முன்னேற்றமும் இந்தியாவில் தான் முதலில் நேர்ந்தது என்ற கருத்தில் புதை பொருளாய்வில் கண்ட பொருள்களுக்கு தொலைதூரமான காலத்தை வழங்குகிறார்கள். இது போலவே, விஞ்ஞானச் சிந்தனைகள், தொழில் நுணுக்கச் சாதனங்கள் என்ற முறையில் வெளிநாடுகளிலிருந்து வந்து சேருபவற்றின் தகுதியைக் குறைத்துப் பேசுகிறார்கள். இதன் விளைவாக, மத்திய கால இந்திய நினைவுச் சின்னங்களின் உருவாக்கம் பற்றிய அறிவற்ற கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவியிருக்கின்றன. இது போலவே, நவீன காலச் சிந்தனையின் அடிப்படைகள் யாவும் பழங்கால இந்தியச் சிந்தனையிலேயே இருந்தன என்றெல்லாம் கூறுகின்றனர். இந்தியா உலகுக்கு அளித்த கலாச்சார நன்கொடைகளை மிகைப்படுத்துகின்றனர். 'பெரும் இந்தியா'வைப் பெருமைப்படுத்துகின்றனர். இவை இன்று வித்தியாபவன் வெளியீடுகளிலும், பத்திரிகைகளிலும், கல்வித்துறை நூல்களிலும் மிகுதியாக இடம் பெறுகின்றன.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, இந்திய வரலாற்றாய்வில் இத்தகைய வகுப்புவாத நோக்கை

வரலாற்றாய்வாளர் பலர் எதிர்த்து வருகின்றனர். குறிப்பாக, இந்திய வரலாற்றியல் பேரவையும், இன்னும் பல்வேறு வரலாற்றாய்வாளர்களும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பாட நூல்களில் இத்தகைய கருத்துக்கள் பரப்புவதைத் தடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டு வந்துள்ளனர். தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய மறுபரிசீலனைக்கான தேவையையும், குறிப்பாக, தேசிய விடுதலை இயக்கத்தில் உழவர் தொழிலாளர் பங்கு, இடதுசாரிப் போக்குகள், பகுத்தறிவு வாதப் போக்கு இவற்றின் பங்கு பற்றிய பரீசலனையின் தேவையைப் பலர் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ் ஆதரவோடு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சாரம், இந்திய வரலாற்றியல் ஆய்வில் ஏற்பட்டு வரும் புதிய போக்குகளுக்கு எதிரிடையானதாகும். இந்திய வரலாற்றாய்வாளர்களின் விஞ்ஞானவியல் கருத்தோட்டங்கள் கொண்ட பாட நூல்கள் இவர்களின் முதல் கட்டத் தாக்குதலுக்கு உள்ளாயின. இந்திய வரலாற்றியல் ஆய்வுக் கழகத்தில் (ICHR) செய்த மாற்றங்களையும், வரலாறு பற்றிய விஞ்ஞானவியல் நூல்களின் மொழி பெயர்ப்புத் திட்டத்தைக் கைவிட்டதையும் சேர்த்துப் பார்க்கும் போது, வரலாற்றியல் ஆய்வின் மீதே இவர்கள் தொடுக்க விரும்பும் தாக்குதல் புரிகிறது.

இந்திய வரலாற்றியல் ஆய்வுக் கழகம் ஆறு, அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய போது, அரசின் தலையீடு இல்லாமல் ஒரு கழகத்தின் மூலம் விஞ்ஞானவியல் ஆய்வை ஊக்குவிப்பதாக இருந்தது. பல்வேறு அமைச்சரகங்களின் கீழிருந்த வரலாற்று ஆய்வுத் திட்டங்கள் கை விடப்பட்டு, அவற்றின் நிதி வசதிகள், இக்கழகத்திற்குத் தரப்பட்டன. இந்திய வரலாறு பற்றிய விஞ்ஞானவியல் நூல்கள் பல்வேறு மாநில மொழிகளில் மொழி பெயர்க்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டம்

சிறப்பாகச் செயல்படலாயிற்று. தன் விளைவு, இக்கழகம் கடுமையான தாக்குதலுக்குள்ளாயிற்று. ஆர் எஸ் எஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்டு, தீன் தயாள் ஆய்வு நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்ட 'இந்திய வரலாற்று, கலாச்சாரக் கழகத்தினர்', இந்தப் புதிய அமைப்பில் இடம் பெற்றனர். இனி, வித்தியா பவன் தொடர் வெளியீடுகள் மட்டும் மொழி பெயர்க்கப்பட்டு மாநில மொழிகளில் வெளியாகும்.

பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இப்போக்கை மறுத்தனர் என்று கருதுகிறேன். ஜனதா அரசு வீழ்ச்சிக்கு முன்னர், ஆர் எஸ் எஸ். ஆதரவு பெற்ற வரலாற்றியல் கழகத்திற்கு அரசின் ஆதரவு கிடைத்திருப்பதை அறிந்தும், இந்திய வரலாற்றியல் பேரவையை மார்க்சிய வரலாற்றாய்வாளர்களின் கழகம் என்று மத்திய அரசின் கல்வியமைச்சர் தொடர்ந்து பல அறிக்கைகள் வெளியிட்ட நிலையிலும், பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றுப் பேரவையில் இருந்தனர் என்பதும், முன் என்றும் கண்டிராத அளவுக்கு உறுப்பினர் தொகை அதிகரித்தது என்பதும் உண்மை. தகுதிமிக்க வரலாற்றாய்வாளர் பலர் ஆர்.எஸ்.எஸ். வரலாற்றுக் கழகத்தோடு தொடர்பு கொள்ள மறுத்தனர். தாக்குதலுக்கு உட்பட்ட பாடநூல்களுக்கு வெளிப்படையான தம் ஆதரவைத் தெரிவித்தனர்.

நெருக்கடி நிலையின்போது பலர் கைது செய்யப்பட்டதை இந்திய வரலாற்றுப் பேரவை விமர்சனம் செய்தது. தொடர்ந்து இரு ஆண்டுப் பேரவைகளில், பாட நூல்கள் பற்றிய அரசின் போக்கை விமர்சனம் செய்து ஒருமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது. ஊசலாடும் பேர்வழிகள் சிலர் இருந்தனர். இவர்கள் பெரும்பான்மையினரின் கருத்தைப் பிரதிபலிப்பவர் அல்லர்.

ரோமிலா தாபர்

இந்திய வரலாற்றை இந்து வகுப்புவாத நோக்கில் பொருள்படுத்திய முன்னவர் முயற்சிகளைக் கேள்விக்கு

உட்படுத்தியபோது, இவர்கள் தாக்குதலுக்கு உள்ளானார்கள். உயர்சாதியாரின் 'ஆரிய' மூலங்கள், குப்தர் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சி பொற்காலமாக வர்ணிக்கப்பட்டமை: பழங்கால வரலாற்றில் கேள்விக்கு உள்ளான பிரச்னைகள் இவை. இடைக்கால இந்திய வரலாற்றை, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் ஏற்பட்ட பகைமை என்ற ஒரே காரணம் கொண்டு விளக்குவதை நாங்கள் மறுத்தோம். இந்து வகுப்புவாதக் கண்ணோட்டம் கொண்ட அரசியல் கட்சியினர், இத்தகைய ஆய்வால், தங்கள் சித்தாந்த அடிப்படைகள் தகர்வதை விரும்பவில்லை. இதனால், இத்தகைய வரலாற்றாய்வாளர்களை 'இந்திய-எதிர்ப்பின'ராக முத்திரை குத்தலாயினர். மார்க்சியம் ஒரு அந்நிய சித்தாந்தம்: மார்க்சியத்தை ஏற்பவர், இந்திய எதிர்ப்புக் கருத்தினர். இவர்கள் அந்நிய சித்தாந்தத்தை இந்திய வரலாற்றில் திணிக்க முயல்கின்றனர். இத்தகைய குற்றச்சாட்டுகளைச் சில வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக்கொண்டு அவற்றைத் திரும்பக் கூறலாயினர். இந்திய வரலாற்றை 'இந்திய' முறையில் பொருள்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இவர்கள் எழுப்பினர். சில கருத்தரங்குகளில் இது விவாதிக்கப்பட்ட போது உண்மை வெளிப்பட்டது. கலாச்சார தேசியவாதத்திலிருந்து வெளிப்பட்ட சித்தாந்தமே இவர்களது கண்ணோட்டம் என்பது தெரியலாயிற்று. கடந்த சில பத்து ஆண்டுகளில் வரலாற்று ஆய்வில் ஏற்பட்டு வரும் உயர் அறிவுத் தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவர்களும் இவர்களோடு சேர்ந்து கூச்சல் எழுப்பினார்கள். பழங்கால வரலாறு பற்றிய புதிய விளக்க உரைகள் மீதே இவர்கள் கடுமையான தாக்குதல் தொடுத்தார்கள். இவர்கள் பெரும்அளவில் சராசரித் திறமையுடைய வரலாற்றாசிரியர்கள். இவர்கள் விவரங்களைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் திறன்மிக்கவர்கள். விவரங்களை பகுத்தாய்ந்து புரிதலில் இவர்களின் திறன் என்றுமே வெளிப்பட்டதில்லை. வரலாற்றாய்வு நாளுக்கு நாள் நுணுக்கமான தனித்திறன் மிக்க

ஆய்வாகி வருகிறது. வரலாற்றாய்வில் புதிய போக்குகள் தோன்றுகின்றன. இவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாதவர்கள்தான் முன் கூறியவாறு தாக்குதல் தொடுக்கிறார்கள். வரலாற்றாசிரியர்கள் மிகப்பலர் இந்தத் தாக்குதலுக்கு நன்றாகவே பதில் தந்தார்கள்.

வரலாற்று ஆய்வில் விஞ்ஞான அணுகுமுறை

ஏ.கே. பாக்சி

வரலாறு எந்த அளவுக்கு விஞ்ஞான வியலாகிறது அல்லது எந்த அளவுக்கு வரலாற்றாசிரியனின் உலகக் கண்ணோட்டத்தின் அகவியல் வெளியீடாகிறது என்பது ஈ.எச்.கார் போன்றவர்களால் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. நம் பங்கு இந்த விவாதத்தில் சில அம்சங்களைச் சேர்த்தல் தான். வரலாறு என்பது மக்களின் வாழ்வைப் பற்றியது. ஆகவே தங்கக் கோபுரங்களில் அமர்ந்துள்ள வரலாற்றாசிரியன் மக்கள் வாழ்வைச் சிறப்பாக வெளியிடுவது இயலாத செயல். கைநிறையச் சம்பளம் பெறும் ஒரு வரலாற்றாசிரியன், இந்தியக் கிராமப்புறத்தில் பல நூற்றாண்டுகளாக பஞ்சத்திலும் பட்டினியிலும் வாடியிருக்கும் மக்கள் வாழ்வை, தனது வர்க்க வேர்களைக் களைந்து கொண்டால் ஒழிய, எப்படி அறிய முடியும்? காலந்தோறும் மக்களின் போராட்டங்களைக் கணக்கில் கொள்வது தான் விஞ்ஞான முறையிலான வரலாறு ஆகும். பௌத்தர்களின் நூல்களை பிராமணர்கள் திருத்தியது மாதிரி, உழவர்களின் போராட்டங்களைக் கொள்ளைக்காரர் செயல்களாக பிரிட்டீஷ் ஆட்சியாளர் திரித்துக் கூறியது 'மாதிரியும், மக்களின் போராட்டங்களைத் திரித்துக் கூறக் கூடாது. வரலாற்றில் உண்மையைக் கண்டறிவதற்கான நுழைவாயில், சுரண்டப்படும் மக்களின் சார்பிலான நிலைபாட்டை மேற்கொள்வதாகும்.

இர்பான் ஹபீப்

வரலாறு ஒரு விஞ்ஞானமா, அல்லது வரலாற்றைப் பற்றிய விஞ்ஞானவியல் அணுகுமுறை சாத்தியமா என்பதில்

நமக்குத் தெளிவு இருக்க வேண்டும். வரலாற்றை அளவியல் முறையில் விளக்கமுடியாது, ஒரு விஞ்ஞானத்தைப் போல. வரலாறு பற்றிய விஞ்ஞானமுறை அணுகலின் வரையறை பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். நிகழ்ந்திருக்கக் கூடிய நூறு நிகழ்வுகளில், ஆதாரத்தோடு கூடிய நிகழ்வுகள் நமக்கு ஐந்து அல்லது ஆறு தான் கிடைத்திருக்கும். பழங்கால நிகழ்வுகளில் இதன் தொகை இன்னும் குறையும். இவையும் கூட, மையமான, மிக முக்கியமான நிகழ்வுகளாக இரா. இந்த வரையறைகள், வரலாற்றை, விஞ்ஞானமாக கருதுவதன் அளவைக் குறைக்கின்றன. கிடைத்திருக்கும் சில பகுதி விவரங்களிலிருந்து முழுமையை உருவாக்க வேண்டும். கற்பனாவாதிபோல, இதைச் செய்து விடக்கூடாது. வேறு சமூகங்களுடன் ஒப்பீட்டு முறையிலோ அல்லது முன்னர் அல்லது பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியிலிருந்தோ இதை உருவாக்க வேண்டும். தவிர, வரலாற்றை உருவாக்கிப் பார்க்கும்போது வரலாற்றாசிரியனுக்கு ஏற்றவாறு, ஒரு சமுதாயத்தின் சில, பல அம்சங்களுக்கு அழுத்தம் தர நேரும். இங்கு அகநிலை அம்சங்கள் நுழைகின்றன. குறுகிய பார்வை, தேசிய வெறி, சாதிப்பெருமை முதலிய அகநிலை அம்சங்களிலிருந்து விலகி வரலாற்றுச் சித்திரத்தை உருவாக்க வேண்டும்.

இந்திய வரலாற்றில் வரலாற்றுக் கட்டங்கள்

இர்பான் ஹபீப்

இந்திய வரலாற்றை இந்து, முஸ்லீம், பிரிட்டிஷ் வரலாற்றுக் கட்டங்களாக வகுத்தவர், பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள்தான். பிரிட்டனின் வெற்றிக்கு முன்னர், ஆட்சியாளர்களின் சமயம்தான் மிக முக்கியமான சக்தியாக இருந்தது என்பது அவர்கள் கருத்து. இது தவிர, இக்கால கட்டங்களுக்கு ஆதாரமான மூலங்கள் இருந்த மொழி காரணமாகவும் இப்பிரிவு ஏற்பட்டது. பழங்கால வரலாறு, சமஸ்கிருதம் பாலி மொழியோடும், இடைக்கால வரலாறு

பெர்சியன் அரபு மொழியோடும், நவீன கால வரலாறு ஆங்கில மொழியோடும் சம்பந்தம் உடையதாக இருந்தது.

வரலாற்றுக் கட்ட வகுப்பு, காலத் தொடர்புக்காகவும், வரலாற்று ஆய்வு கருதியும் செய்யப்படுகிறது. வரலாற்றின் வளர்ச்சி, பல்வேறு கட்டங்களில் பல்வேறு வேகத்துடனும் பல்வேறு குணங்களோடும் நடைபெறுகிறது. சில குறிப்பிட்ட காலங்களில், மிகக் குறுகிய கால அளவிலேயே, ஒரு சமூக அமைப்பு இன்னொரு சமூக அமைப்பாக ஒரு பாய்ச்சலாக மாறுகிறது. இத்தகைய பாய்ச்சல்களைக் கண்டறிவது, வரலாற்றாய்வில் மிக முக்கியமானதாகும். வரலாற்றுக் கட்டமைப்பை வகுப்பதில் வெற்றி பெறுவது இதைப் பொருத்து அமைகிறது.

மார்க்சியவாதிகள் மத்தியில், முதலில் புராதனச்சமூகம், பிறகு அடிமைச் சமுதாயம், தொடர்ந்து நிலவுடைமைச் சமுதாயம், பிறகு முதலாளியம் என்ற முறையில் வரலாற்றுக் கட்டங்கள் தவறாது அமைவதாகக் கருத்து நிலவுகிறது. இதற்கு மாறாக, ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கான பாய்ச்சல் பல்வேறு நாடுகளில் பல்வேறு சமயங்களில் நடைபெறுவதை விளக்குவதாகிய அணுகல் முறை பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன். முதலாளியத்திற்கு முற்பட்ட சமுதாயங்களில் சுரண்டுவதில் பல்வேறு வகையான முறைகள் இருந்தன. நிலக்கிழார் பண்ணை அடிமை முறை என்ற உறவு தான் எல்லாவிடங்களிலும் நிலவியது என்பதில்லை. இந்தியாவில் இத்தகைய உறவு முறை நிலவவில்லை. அதே சமயம் இங்கு சுரண்டல் மிக உயரிய அளவில் நடைபெற்றது. முதலாளிய சமுதாயத்தில் தான் சுரண்டல் முறை ஒரே மாதிரியான, உலகு தழுவிய முறையாகிறது. ஐரோப்பிய சமுதாயத்தில் நிலவியதைப் போன்ற வரலாற்றுக் கட்டங்களை நாம் கடன் வாங்கிக் கொள்வது பயன்படாது.

ரோமிலா தாபர்

தற்போது பயன்படுத்தப்படும் வரலாற்றுக் கட்ட வகுப்பு முறை, ஆய்வுக்கான வசதியாகிறது என்பதற்கு மேல்

இது உண்மையானதாக இல்லை. தவிர, இந்த வகுப்பு முறையின் கீழ், உள்ளார்ந்த ஒரு அறிவு ரீதியான அடிப்படை இருக்கிறது. இந்த வகுப்பு முறையை ஒருவர் ஏற்கவில்லை என்றால், அதற்கு அடியிலுள்ள அடிப்படையை அவர் மறுக்கிறார் என்றாகிறது. உதாரணமாக, பழங்காலம், இடைக்காலம் என்ற பகுப்பு முறை, இந்து முஸ்லீம் என்று வேறுபடுத்தலின் அடிப்படையில் அமைகிறது, இக்கருத்துடையவர், டெல்லி, முஸ்லீம்களின் ஆளுகைக்குள் வந்தவுடன் மாபெரும் மாற்றம் நிகழ்ந்துவிட்டதாகக் கருதுகின்றனர். கி.பி. 10-ம் நூற்றாண்டு முதல் 16 வரை மாபெரும் மாறுதல் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. அடிப்படையான சமூக-பொருளாதார மாறுதல்களின் அடிப்படையில் செய்யும் பகுப்பு முறையே சரியானதாக இருக்கமுடியும். இந்தியாவில் ஒரே சமயத்தில் எல்லாவிடத்திலும் சமுதாய மாறுதல் ஒரே அளவில் நடைபெறவும் இல்லை. மிக வேறுபட்ட சமுதாய அமைப்புகள் இங்கே அருகருகில் இருக்கவும் செய்கின்றன. இவை பிரச்னைகள்.

இர்பான் ஹபீப்

இந்திய சமுதாயம் தனக்கான ஒரு வரலாறு உடையது: இதன் வளர்ச்சியும் தனிவகையானது என்று முதலில் காட்டியவர் கோசாம்பியேயாவர். இவரைத் தொடர்ந்து இவர் வழியில் ஆய்ந்தவர்கள் ரோமிலா தாபர்: ஆர்.எஸ்.சர்மா ஆகியோர். இவர்களது ஆய்வுகள், இந்திய வரலாற்றில் பழங்காலம் என்பது பல கால கட்டங்களை உடையது: ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட வர்க்க உறவுகள் நிலவின என்பதைப் புலப்படுத்துகின்றன. 12,13 நூற்றாண்டுகளில் இந்திய வரலாற்றில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டதை சர்மா விளக்கியிருக்கிறார். கிராமப் புறத்துச் சுரண்டும் வர்க்கம் சிதைந்து, நகர்ப்புறத்தில் ஒரு அதிகார வர்க்கம் தோன்றியது. நில வருமானம், அரசின் பெயரால் நகரத்தில் இருந்த மிகச்சிறிய ஆளும் வர்க்கத்திற்குப் போய்ச்சேர்ந்தது. இந்த மாறுதலை நிலவுடைமையாதிக்க

முறையிலிருந்து 'ஆசியமுறை'க்கு மாறியதாகக் கூறலாம். இந்தச் சொல்லை மார்க்ஸ் கருதிய பொருளில் இங்கு பயன்படுத்தவில்லை. இந்த மாறுதல் ஒரு 'பாய்ச்சல்'.

வரலாற்றாய்வில் பிற துறைகளின் பங்கு

ரோமிலா தாபர்

வரலாற்று ஆய்வுக்கு மொழியியல் பெருந்துணை புரியலாம். வேதகால சமஸ்கிருதம் முற்றிலும் இந்தோ – ஆரிய மொழிதான் என்ற கருத்தை நாம் கைவிட வேண்டியவர்களாக உள்ளோம். வேதகால சமஸ்கிருதத்தில், உழவுத் தொழில் முதலிய சில தொழில்களைக் குறிப்பிடும் சொற்கள், ஆரியம் அல்லாத மொழி மூலம் உடையவை. இதிலிருந்து இன்னோர் உண்மையை அறியலாம். ஆடுமாடு மேய்ச்சலில் ஈடுபட்டிருந்தவர்கள் பேசிய மொழி, இந்தோ ஆசியமொழி. உழவர் குடியினரது மொழி, இந்தோ-ஆரியம் அல்லாத மொழி. இம்மக்களுக்கிடையிலிருந்த உறவுகள் புதிய பரிமாணத்தில் இன்று தென்படுகின்றன.

மொழியியலைப் போலவே வேறு பல துறைகளும் வரலாற்றாய்விற்குப் பெரிதும் இன்று பயன்படுகின்றன.

வரலாற்றாய்வுக்கு ஒரே ஒரு தனிமுறை என்ற எதுவும் இல்லை. ஆய்வுக்கான முறைகளும், குறிப்பிட்ட கால அறிவு நிலைக்கேற்பவும், அவ்வறிவு தொகுக்கப்படுதல், உறவுபடுத்தப்படுதல், இணைக்கப்படுதலுக்கு ஏற்பவும் மாற்றம் அடைகிறது.

வட்டார வரலாற்றின் தேவை

பிபன் சந்திரா

19-ம் நூற்றாண்டு முதல் இந்திய சமுதாயம் ஓர் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி பெற்று வருகிறது. பொருளாதாரத்தைப் பொருத்தவரை, இந்தியா ஒரே சந்தையாகி வருகிறது. ஒரு பொருளாதார அமைப்பாகி வருகிறது. அரசியல் முறையில் ஒருங்கிணைந்ததாகிறது.

அனைத்திந்திய அளவிலான சமூக வர்க்கங்கள் தோன்றி வருகின்றன. இந்திய வரலாறு என்று பேசும் அதே சமயத்தில், வட்டார, மாநில வரலாறுகளின் தேவையையும் நான் வலியுறுத்துகிறேன். காரணம், பொதுமயமாக்கப் பட்ட கருத்தாக்கங்களை வட்டார அளவில் சோதிக்க இது பயன்படுகிறது. இந்திய வரலாறு பற்றிய ஆழ்ந்த அறிவுக்கு இது பயன்படும். இந்திய வரலாறு என்று எதுவும் இல்லை என்று கூறி, வட்டாரப் பண்புகளுக்கு அழுத்தம் தரும் வரலாற்றாசிரியர்களையும் நான் அறிவேன். இவர்கள் தம் குறுகிய நலன்களுக்காக வரலாற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

இர்பான் ஹபீப்

மிக விரிந்த நிலவியல் அடிப்படையில் உருவாக்கப்படும் பொதுக் கருத்தாக்கங்களைச் சோதிக்கவும் வட்டார வரலாறு பயன்படலாம். இத்தகைய நோக்கம் இல்லாமல், தனது வட்டாரம் தன்னிகரற்ற வரலாறு உடையது என்று கட்ட விரும்பி, பிறவற்றிலிருந்து தனியே பிரித்து ஒரு வரலாற்றை உருவாக்குவது பயன்படாது. இத்தகைய கருத்தாக்கம் தவறானது. உதாரணத்திற்கு சிவாஜி பற்றிய வரலாறு. சிவாஜி ஒரு பெரிய வீரன் என்பதில் சந்தேகம் இல்லை, சிவாஜியை பெருமைப்படுத்த விரும்பி அவரை உழவர் தலைவராகவும், அவரது ஆட்சிப்பரப்பில் பொருளாதாரம் உன்னதமான முறையில் நடைபெற்றதாகவும் இப்படி எழுதத் தொடங்கி, பெரும் பகுதி கற்பனையிலான ஒரு சமுதாயத்தை உருவாக்கிக் காட்டுவது தவறு. இந்தப்போக்கு எல்லாவிடங்களிலும் உள்ளது. எனது மாநிலமாகிய உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள், உத்திரப்பிரதேசம்தான் இந்தியா என்பது போல எழுதுகிறார்கள்.

ரோமிலா தாபர்

வரலாறு, அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் நிலையில், இத்தகைய அழுத்தங்களுக்கு உள்ளாவது தவிர்க்க இயலாதது. மக்கள் தம் வட்டார வரலாற்றுடன் நெருக்கமாக உறவு கொண்டிருப்பதன் காரணமாக இப்படி நேர்கிறது.

வரலாற்றின் தேவை

ஏ.கே. பாக்சி

வளர்ச்சி பெற்ற, விஞ்ஞானவியல் நோக்கிலான வரலாறு, மக்களுக்குத் தம் மரபைப் பற்றிய தெளிவான பார்வையைத் தரும். தம்மைத் தாழ்ந்தவர் என்று மக்கள் தாமே நம்புமாறு ஆளும் வர்க்கங்கள் ஏற்படுத்தியுள்ள தவறான உணர்வைக் களையும்.

பிபன் சந்திரா

சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் தர்க்கவியல் முறையிலான கருவி ஏற்கனவே நிலவும் சமூக, சித்தாந்த மேலாதிக்கங்களை நிலை நிறுத்தவல்ல கருவி, வரலாறு என்பது ஒரு உண்மை. பிற சமூக விஞ்ஞானங்களும் இத்தகைய கருவிகளே. மாறுதல் ஏன், எப்படி நிகழ்கிறது, சிலவகை மாறுதல்கள் ஏன் நிகழ்கின்றன, எப்படி என்பதை வரலாறு மட்டுமே விளக்குகிறது. சமூகத்தை மாற்ற விரும்புவோர் வரலாற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சமூக மாறுதல்களில் அக்கறை கொண்டவர்கள் தான் வரலாறு பற்றிய சரியான பார்வையைப் பெறமுடியும்: பெற்றிருக்கிறார்கள்.

இர்பான் ஹபீப்

இந்திய வரலாற்று ஆய்வில் முக்கியமான பிரச்னை, சாதாரண மக்கள் எனப்படும் உழவர்களுக்கும் தொழிலாளர்க்கும் இந்திய வரலாற்றில் உள்ள பங்கு என்ன? எத்தகைய பங்கு? நமது நாட்டின் பழமைக்காகப் பெருமைப்படுதல் என்பது, இம்மக்களின் வேதனைகளையும் அவற்றுக்கான நிலைமைகளையும், அவர்கள் அனுபவித்த நெருக்கடிகளையும் மறந்துவிடுவதா? என்பதாகும். வரலாற்றுப் பாடநூல்கள் பற்றி எழுந்த விவாதங்கள் இத்தகைய அணுகல் முறை பற்றியதே. புவனேஸ்வரில் நடந்த இந்திய வரலாற்றுப் பேரவையில் ஒருவர் குறிப்பிட்டது போல, இத்தகைய வரலாற்று நூல்கள், நாகரிக மற்ற மக்களை வரலாற்றுக்குள்

கொண்டு வருகின்றன: அரசாங்கங்களை இகழ்கின்றன. வரலாறு இம்முறையில் மக்களுக்கு உதவ முடியும். தமக்கு அந்நியமானவர்களைப் பற்றிய கற்பனையான கதைகளை உருவாக்குவதாக வரலாறு இருக்கக் கூடாது.

ரோமிலா தாபர்

சமுதாயத்தின் இயல்பு பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோட்பாடுகள் உருவாக்கப்பட்ட பிறகு, சமுதாய பொருளியல் வரலாற்றுக்கு அழுத்தம் தரும் முறை உலகளவில் உருவாகியுள்ளது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு இதன் அழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில் முற்காலச் சமுதாயங்களின் வரலாற்றுப் பங்கைத் தீர்மானிப்பது முக்கியமாகிறது. இதை ஓர் உதாரணம் கொண்டு விளக்கலாம். இந்தியாவில் பொருளாதார மாறுதலைத் தடுக்கும் பெருஞ் சக்திகளுள் ஒன்று, மதம் என்று விவாதிக்கப்படுகிறது. மாக்ஸ்வெபரின் கருத்துக்கள் இம்முறையில் பல சமூக விஞ்ஞானிகளால் திரும்பத்திரும்ப எடுத்துரைக்கப் படுகின்றன. குறிப்பிட்ட பொருளாதார உருவங்களை வளர்ப்பதில் சமயம் பெரும் பங்காற்றியதை பழங்கால வரலாறு பற்றிய ஆய்வில் நாம் அறியமுடியும். பொருளாதார மாற்றமே சமயப் பிரிவுகளின் தோற்றத்திற்குக்காரணமாக இருந்ததையும், பொருளாதார மாறுதலின் குறிப்பிட்ட வடிவங்களுள் சமயப்பிரிவுகள் இணைந்திருந்ததையும் அறியமுடியும். இப்படிச் சொல்வதை, ஏதோ கோட்பாட்டு முறையிலான வெறும் பயிற்சி போலக் கருதிவிடக்கூடாது. இதனால் மாக்ஸ் வெபர் கருத்து தவறு என்று நாங்கள் சிலர் நிரூபிக்க விரும்புகிறோம் என்றும் இதற்குப் பொருளாகாது. தற்காலத்தில் வளர்ச்சி பற்றிய சிக்கல்கள் எழும் சூழலில் இத்தகைய புரிதலுக்கான தேவையை நாம் உணரவேண்டும். இவற்றைச் சரிவர அறிந்து கொண்டால், வளர்ச்சிக்கான திட்டத்தின் வறட்சியும் படைப்பற்ற தன்மையும் மாற்றம் பெறமுடியும்.

4. நூல் அரங்கு :

– ஞானி

சில எதிரொலிகள்

'வானம்பாடி' படித்தவர்கள் சிற்பியா இப்படி என்று வியப்புத் தெரிவித்தார்கள். நாங்கள் அறிந்த சிற்பி இப்படித்தான் என்பதுதான் எங்கள் பதில். சிற்பியிடம் வார்த்தைகளே எஞ்சியிருக்கின்றன. 'போகிற போக்கிலே' இவற்றைத்தான் தூற்றுகிறார். சிற்பிக்குத் தத்துவத்தில் அக்கறை இல்லை என்பதற்கு அவர் கவிதைகள் சான்று. சிற்பியின் கவிதைகளில் அலங்காரங்கள் அதிகம் கூடவே. செய்திகளும் கூச்சல்களும். நல்ல கவிதைகள் பல அவர் எழுதியிருப்பதை நாம் மறுக்கவில்லை. இவை நல்ல கவிதைகள்: அவ்வளவே. விமர்சனம் அவருக்குப் பிடிக்காது என்பதற்கு அவர் 'போடா போ' என்று எழுதியது சான்று. சோவியத் எதிர்ப்பில் தீவிரமும் தொடர்ந்து கவிதைத் துறையில் சாதனைகளும் கொண்ட கேரளக் கவிஞர் சச்சிதானந்தன், எப்போதே எழுதிய ஒரு வர்ணனைக் கவிதையைச் சிற்பி இப்பொழுது மொழிபெயர்ப்பது ஒரு வேடிக்கை. 'கீழைக்காற்று' அவருக்கு எப்படிப் பிடித்ததோ! சிற்பி எழுதிய ஒரு சிறந்த கவிதை: 'மதுரை வீரன்': அச்சிலை தனக்குள் முனகிற்று "அனுபவத்துத் தனி நெருப்பில் ஒற்றைப்பொழுதில் ஒரு கணம்... நான் வெந்திருந்தால்..." சிற்பி வேகவே இல்லை. பின் யாருக்கு அவர் குடம் உடைக்கப் பார்க்கிறார்? தத்துவத்தை நெருங்கினால் கலை செத்துவிடும் என்ற சிற்பியின் வேடங்கள் இரசிக்கத்தக்கவை. வார்த்தைக் கொள்ளிகளை அடுக்கி வைத்துக் கொள்ளட்டும், சிற்பி வேகப்போவதில்லை.

வானம்பாடி வரலாறு எழுதுவதாகச் சிற்பி அறிவித்திருக்கிறார். தன்னை வானம்பாடி என அழைத்துக் கொள்வதற்கு ரொம்பக் காலம் தயங்கியவரும், தத்துவம் மார்க்சியம் என்றால் வேண்டாம் என்று அடிக்கடி தள்ளி வைத்தவரும், பல சிறிய கவிஞர்களின் தோற்றம் ஒரு மகா

கவியின் தோற்றத்தைத் தடுத்துவிடும் என்று குறைபட்டுக் கொண்டவரும், வானம்பாடிகள் இயக்கமாகத் திரள்வதைத் தடுத்தவர்களில் ஒருவரும், வானம்பாடி கட்சிக்காரர்களிடம் போய்விடும் என்று எச்சரிக்கை விடுத்தவரும், இந்திராவின் நெருக்கடி நிலையை இன்று வரை ஆதரிப்பவரும், சந்தர்ப்பவாதத்தின் உச்சகட்டமாக கலை இலக்கிய மன்றம் ஏறியவரும் ஆகிய சிற்பி, வானம்பாடிகளின் இயக்க வரலாறு எழுதுவது பெரும் வேடிக்கை.

அக்டோபரில் கோவைக்கு வந்திருந்த டொமினிக் ஜீவா வானம்பாடிகளை முன்னிலைப்படுத்திக் கூறினார்: "நீங்கள் செய்தது இலக்கியத் துரோகம்". புவி கூறினார்: "இப்பொழுது நினைத்துப் பார்த்தால், எங்களுக்குள் சுய விமர்சனம் இல்லாதது பெருங்குறை". உண்மைதான். புவி தனக்கு இப்பொழுது தேவை எனக்கருதும் இந்த உணர்வு, சிற்பிக்கு என்றுமே வராது. சரி 'வரலாறு' எழுதட்டும், பிறகு, பார்க்கலாம்.

பிருந்தாவனத்துப் பிரமிடுகள்

– அறிவுமணி

ஏற்றத்தாழ்வாக அமைந்துவிட்ட வாழ்க்கையின் மீது தீராக் கோபத்தோடும், இவை இல்லாக்காலம் பற்றிய கற்பனைப் போதையோடும் கவிதை செய்கிறார் அறிவுமணி. சூரியச்சோறு, சிவப்பு நிலா ஆகிய கவிதைகளுடன் இவர் தமிழ் கவிஞர் கூட்டத்திற்குள் வருகிறார். இவரது பெற்றோருடன் சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம். வைரமுத்து குறிப்பிடுவது போல, இவர் தொடர்ந்து எழுதட்டும் – தத்துவத் தெளிவோடும் இலட்சிய வேட்கையோடும். முற்போக்குச் சிந்தனைகளுடன், கோபத்தோடும் சோகத்தோடும் கற்பனை நெடியில் கவிதை செய்வது ஒரு வட்டமாகிவிட்டது. வானம்பாடிகள் செப்பனிட்டது இந்த வட்டம். இந்த வட்டத்திற்குள்ளே சுற்றோட்டத்தில் தீவிரம் காட்டுவது தொடக்க நிலைக்குச் சரி. இதை உடைத்து

வெளியேற வேண்டும், அடுத்த பெரிய வட்டத்திற்குள் தத்துவம் தான் இதற்குக் கைகொடுக்கும்.

- அறிவுமணி

10 இரத்தினசபாபதி தெரு,

பரசைவாக்கம், சென்னை – 07

விலை ரூ.4.50

திசை தெரிந்த அம்புகள்

– செவ்வண்ணன்

கவிதையை ஆயுதமாக்கிக் கொண்டு களத்தில் இறங்குகிறார் செவ்வண்ணன். கவிதைக்குள் அரசியலைத் தொட்டும் தொடாமலும் எழுதும் நோஞ்சான்களுக்கு இவர் இடியாகத் தோன்றுவார். ஆவேசத்தோடும் கற்பனை மிதப்போடும் இராகத்தோடும் தாளத்தோடும் இவர் கவிதை செய்கிறார். கிண்டல். நையாண்டியில் இவர் ஒதுங்கவில்லை. முற்றிலும் வெளிப்படையான உடைத்தெறிந்து பேசும் நேர்ப் பேச்சுக்கள், காதலியோடும் கூடத்தான். சோகத்தை முற்றாகத் துடைத்துவிடுகிறார். காதலியின் கைவளைகளை இவர் முத்தம் இடவில்லை. அப்பாடா! தமிழ்க் கவிதைக்கு எவ்வளவு பெரிய விடுதலை! புதிய பிரகாசத்தோடு இவரது வானம் மின்னுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. சிக்கலான, புதிய படிமச் சேர்க்கைகள், நம்மைச் சோதிக்கின்றன. புதிய வார்ப்பில் பல கவிதைகள். இன்குலாப்புக்கு இளவல் இவர். பழைய பொருள்களைப் புதுமைப்படுத்திக் கொண்டிருக்காமல், தமிழ்க்கவிதை புதிய எல்லைகளுக்குள் செல்ல வேண்டும். செவ்வண்ணன் எல்லைகளை மிதிக்கிறார். உடைக்கவில்லை.

கே. ஆல்பர்ட்

121, அந்தோனி தெரு, தூத்துக்குடி - 2

விலை: ரூ.6.50

அம்மா அம்மா
– தமிழ் நாடன்

இதனைக் கையெழுத்துப் படியில் சில ஆண்டுகளுக்கு முன் படித்து அவரோடு சண்டை போட்டது நினைவுக்கு வருகிறது. இப்பொழுது அச்சில் பார்த்தால் புதிய தொகுப்புப் போலக் காட்சி தருகிறது. தமிழ்நாடன் தேறியிருக்கிறார். இந்திரா – 75 பாதிப்புக் கூட நீங்கியிருக்கிறது. சீனத்தைப் பாராட்டுகிறார். சோவியத்தை விமர்சனம் செய்கிறார். தான் அறிந்த அளவு நேர்மையாக இருக்கிறார். தனக்குள் அவர் செய்து கொண்ட இடம் இவ்வளவுதான். "தொல்காப்பியமா எழுதித் தொலைத்தீர்" என்று மார்க்சை முன்புகேட்ட தமிழ்நாடன், மார்க்சியத்தை இன்றும் சரியாகக் கற்கவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. அதனால்தான், வால்கா வலக்கரம், யாங்சிடி இடக்கரம் என்று கூறுகிறார் தமிழ்நாடன். கல்கத்தா ஸ்டேஷனில் புரட்சி இறக்குமதி ஆகாததற்காகக் கவலைப்படுகிறார் புரட்சி, இறக்குமதிச் சரக்கா? சைபீரியக் குருவி தன் பாடலை மாற்றிப்பாடுவது கேட்கவில்லையா? எனது எல்லை தெரிந்துதான் சொல்கிறேன். உங்களுக்குள் செய்து கொண்ட இடம் போதாது, தமிழ்நாடன். தவிர, சில இடங்களில் நெஞ்சுருகக் கவிதை செய்திருக்கிறார்: இந்த உருக்கம் எவ்வளவு சுகமாக இருக்கிறது!

மீறல்
– புவியரசு

புவியரசு நேரில் கூறியபடி, எஸ்.வி. ராஜதுரையின் 'எக்ஸிஸ்டென்சியலிசம்' புத்தகத்தை மூச்சுவிடாமல் படித்து, அதன் பாதிப்பிலேயே பல நாள் கிறங்கியிருந்து, அந்தக் கிறக்கத்திலிருந்து நூல் இழை அறாமல் யாத்தவை இக்கவிதைகள். புவி முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி தனக்குள்ளிருந்த சோகத்திற்கும் சூன்யத்திற்கும் வழி திறந்து வைத்திருக்கிறார் இக்கவிதைகள் மூலம். அவற்றிலிருந்து

தான் மீண்டதாகப் புவி எழுதியிருக்கிறார். மீண்டதற்கான தடயங்கள் கவிதையில் இல்லை. புவி மீண்டாரா? நான் நம்பவில்லை. இப்படிக் கவிதை எழுதியதற்காக இவரைக் கோபிக்கும் நண்பர்களை முகம் திருப்புவதற்கு புவி செய்த விளையாட்டு இது. பிரபஞ்சத்தின் சூனிய வெளியில் – வாழ்க்கை வெளியிலும் தான் – தூக்கி எறியப்பட்டு அர்த்தம் தேடித் திரியும் மனிதனது அவலங்கள், அனுபவங்கள், அர்த்தங்கள், அர்த்தம் கெட்டுப்போனதுகள், புவியின் கவிதையில் மிகக் கொஞ்சமாகவே வெளிப்பட்டுள்ளன. இது புவிக்கும் தெரியும். காலம் பற்றிச் சில கவிதைகள், செய்தியாக காலத்திற்கும் தனக்கும் ஒரு நாடகம், இருவரது ஆணவக் கூச்சல்கள் சகிக்க முடியவில்லை. புவியின் கடந்த கால சமய, வாழ்வியல் அனுபவங்களை, திரும்பப் புதிய ஒளியில், புதிய பொருளில் கண்டு நிறைய எழுதியிருக்கலாம். இப்போதைக்கு 'இது தானா?'

தாத்தாமார்களும் பேரர்களும்

– எம்.ஏ. நுஃமான்

தமிழ்க்கவிதைக்குள் புதுக்காற்றாய் வருகின்றன நுஃமான் கவிதைகள். மார்க்சியப் பார்வை கவிதைக்குத் தரும் வளம் இவர் கவிதையில் தெரிகிறது. தற்கால நிலையில் கவிதைக்கான தேவை என்ன என்பதற்கும் இவர் கவிதை சான்றாகிறது. ஈழக் கவிதையின் எளிமை, இனிமையாக இருக்கிறது. இவர் கதைக் கவிதைகள், புதுக்கவிதை முறையில் ஒரு புதிய சாளரத்தைத் திறக்கின்றன.

'அதிமானிடன்' குகை மனிதன் விண்வெளி மனிதனாக விரிந்ததை விவரிப்பதுடன், பாதி மனிதன் மற்றைப் பாதியுடன் (மனிதனைப் பற்றிய இப்பார்வை வளமான வர்க்கப் பார்வை) செய்யும் சண்டையை (கவிதையில் இந்த அம்சம் வரலாறு முழுவதும் தொடர்வதாக இருந்திருக்க வேண்டும்) விவரிக்கிறது. 'கோயிலுக்கு வெளியே' கடவுளை விடுவிக்க, இறுதியாக தம்மையும் விடுவித்துக் கொள்ள

(அதாவது, கடவுளை விடுவித்தல் இறுதியில் நமக்குள் நம்மை விடுவித்தலாக) திரண்ட கூட்டம் தொடர்ந்து முழக்கமிடுவதைச் சித்திரிக்கிறது. 'நிலம் எனும் நல்லாளில்' நடப்பியலாக வரும் இயற்கை வர்ணனைகள் அழகானவை. "காக்கா குடும்பம் கஷ்டப்படுகிறதே, ஏன்" – கேள்வி விடையைத் தேடி நம் மனத்தில் அலைகிறது. தாத்தாவும் பேரர்களும் முஸ்லீம் சமூகச் சார்பில் எழுவதாயினும், எல்லாச் சமூகத்தைப் பற்றிய விமர்சனமாகவும் நிலைக்கிறது. தமிழன் பொற்காலப் பெருமைக்கும் இது விமர்சனமாகிறது.

நயமான, கேலித்தன்மை, கவிதைகளுக்கு இனிமை தருகிறது. வரலாற்றுக் காலத்தை, அதற்கான பொருள்படுத்தும் முறையில், மன எல்லையுள் மடித்துச் சுருக்கிக் காண்பதும், கவிதை தன் உயர்தரத்தில் Myth ஆவதும், மார்க்சிய நோக்கில் ஒரு கவிமையத்திலிருந்து, உலகை, வரலாற்றைக் காண்பதும், கவிதைக்கான தற்காலத் தேவையை, உணர்த்துகின்றன. முதற்கவிதை ஒரு பொருளில் குவியவில்லை. பிற கவிதைகள், சாதனைகள்.

வாசகர் சங்கம்

கல்முனை – 6

(இலங்கை)

இக்காலக் கவிதைகள் மரபும் புதுமையும்

– து. மூர்த்தி

மூர்த்தியின் கட்டுரைகளைப் படிக்கும்போது, முற்போக்கு வட்டாரத்தினர் இதுவரை தீர்த்துக் கொள்ளாத சில பிரச்னைகள் முன்வருகின்றன. இயற்கை, காதல் பற்றி மார்க்சியர் அணுகுமுறை என்னவாக இருக்க வேண்டும்? கவிதை, பொதுவாக கலை இலக்கிய, ரசனையின் தேவை, அளவு என்ன? ஒரு கவிஞனை மதிப்பிடுவதில் சம்பந்தப்படும் பிரச்னைகள் யாவை? இலக்கியம், இலக்கிய விமர்சனத்தின் நோக்கம் அரசியல் மட்டும் தானா? தமிழகச் சூழலில் நாத்திக இயக்கம், தி.மு.க. இயக்கம் பற்றிய

மதிப்பீடு என்ன? இந்திய 'விடுதலை'யின் உண்மை யாது? இந்தியப் புரட்சி பற்றிய நமது வரையறைகள், எத்தகையதாக இருக்க வேண்டும்? சிலி, பங்களாதேஷ் பற்றிய நமது பார்வை என்னவாக இருக்கவேண்டும்? நூலைப் படிக்கின்றபோதே நமக்கு எழும் கேள்விகள் இவை. இவை பற்றிய சரியான பார்வை இல்லாமல், பொதுப்படையாக மார்க்சியம், சோசலிசம், புரட்சி என்றெல்லாம் பேசுவதில் உள்ள பொய்ம்மையை நாம் இப்பொழுதாவது அறிந்துகொள்ள வேண்டும்.

ஆதிபகவன்

– முருகையன்

உழவர்களைச் சார்ந்து தோன்றி, முதலாளியம் உழவர்களைச் சுரண்டிக் கொழுக்கிறது. உழவர்கள் கலகக் குரல் எழுப்பும்போது முதலாளியத்தின் சார்பில் அரசு அதிகாரம் தலையிடுகிறது. நீதி முதலாளியின் பக்கம் தீர்ப்பு வழங்குகிறது. உழவர் துயரங்கள் தொடர்கின்றன. இந்தக் கருவைக் கொண்டது ஆதிபகவன் நீண்ட கதைக் கவிதை. ஒரு குடும்பத்தின் கதை உருவத்திற்குள், சமுதாய வரலாற்றைச் சுருக்கிச் சொல்லும் புது முயற்சி. கவிதையை அழகழகாகப் பின்னும் தமிழகக் கவிஞர்கள், கவிதையைச் சாரத்தோடு செய்யும் ஈழக் கவிஞர்கள் முயற்சியைக் கற்க வேண்டும். வார்த்தைப் பட்டாளங்களோடும் பவனி வரும் சிற்பிகளுக்கு இது சிரமம். ஊளைச் சதையைக் குறைத்துக் கொள்வது உடலுக்கு வலிமை சேர்க்கும்.

'யாத்ரா' விமர்சகரது எதிரொலிகள் இப்பொழுது கேட்கின்றன. பதில் வேறொரு சமயத்தில்.

5. மனிதன் யார்?
(எஸ்.என். நாகராசன் குறிப்பேடுகளிலிருந்து...)

கண்ணிலே விண்ணைக் காணும் இம் மனிதனே விண்ணிற்கும் ஒரு கண்ணை வைப்பான். அழகினில் ஆபத்தைக் (Horror) காணும் இம்மனிதன் கோரமான உருவத்திலும் அழகைக் கண்டு ரசித்து லயிக்கின்றான். பட்டப்பகலில் கண்ணைத் திறந்து இவ்வுலகம் இருண்டுவிட்டது; ஒன்றுமே புரியவில்லை - புலனாகவில்லை என்னும் இவனேதான், கண்ணை மூடி பேரொளி பிறந்ததென்றும், அனைத்தையும் அறிந்துவிட்டேன் என்றும் ஆனந்த பரவசம் அடைகின்றான். காணும் காட்சியை, அனைவரும் ஏற்கும் ஒன்றைக் கற்பனை என்றும், மாயை என்றும் சத்தியம் செய்யும் இவன்தான் தனது கற்பனையை எவனும் ஏற்கமறுக்கும் ஒப்பிலாக்காட்சி என்கின்றான். அவனைக் கண்டேன் என்கிறான். மறுகணமே இல்லை இல்லை என்னையே தான் கண்டேன் என்கிறான். தான் ஈன்ற மகனில் தனது தந்தையைக் காண்பான்; புதுமையில் பழைமையைக் காண்பான். நாளையில் நேற்றையும் காண்பான். ஆம். ஒன்றில் அதன் எதிர்மறையையும் காண்கிறான். விலங்கு ஒன்றில் ஒன்றையே காண்கின்றது. அதன் எதிர்மறை ஏற்பட்டால் விலங்கு நிலைகுலைந்து இறுதியில் இறக்கவும் செய்கின்றது. ஆயினும் ஒன்றில் மற்றதை, அதன் எதிர்மறையைக் காணும் போதுதான் மனிதன் பேரறிவைப் பெறுகின்றான்; எவ்விடத்தில் எந்நிலையில், விலங்கு நிலைகுலைகின்றதோ – அந்நிலையில்தான் மனிதன் பேரறிவைப் பெறுகின்றான். விலங்கு மறைந்த இடத்தில்தான் உண்மையான மனிதன் தோன்றுகின்றான் என்று கூறுவது மிகையாகுமோ? இதனை சாமான்யமான டார்வினிஸ்டுகள் எங்ஙனம் ஏற்க முடியும்? அவர்களும் நிலைகுலைந்து தவிப்பார்கள். இவர்களும் ஒன்றில் அதன் எதிர்மறையைக் காண இயலாமல் தவிக்கின்றனர்.

கற்பனையும் அதனை ஒத்த கனவும் இல்லையேல் ஒன்றில் அதன் எதிர்மறையைக் காண முடியுமா? அதேபோல நேற்று நாளை என்பதனைத்தும் கற்பனையின்றிச் சாத்தியமோ?

மனிதனுடைய சிந்தனையில் பிரதிபலிக்கும் உலகின் பிரதிபலிப்பு, நிலையான, ஆடாத, அசையாத புகைப்படமல்ல. அது சலனத்தன்மை கொண்டது. ஊற்றுத் தன்மை கொண்ட நீர் போன்றது. இதன் காரணமாகத்தான் அது எதிர்மறைகளைக் காணும் வாய்ப்பை எய்துகின்றது.

கண்ணெதிரில் காணக் கூடியதை மட்டுமே காண்பது விலங்கு; காண முடியாததையும் காண முடிந்த நிலையில்தான் (கற்பனையின் வாயிலாகத்தான்) மனிதன் தோன்றுகின்றான்.

கற்பனையின்றிக் கலை இருக்கமுடியுமா? மனிதனே கலைஞன்! கலைஞனே மனிதன். கற்பனையின்றி ஆனைமுகத்தோனும், அர்த்தநாரீசுவரனும் தோன்ற முடியுமா? இவை அனைத்தும் மெய்யா? உலகில் காணக்கூடியவையா? காணாதவைகள் – பொய்யானவைகள். பொய் கற்பனையினும் கற்பனை. மெய் மட்டும் கற்பனைத்தன்மை அற்றதா? மிகப்பெரும் உண்மையான $E=Mc^2$ல் கற்பனைத் தன்மை இல்லாமலா இருக்கின்றது. இரண்டுமே கற்பனையின்றி விளைய முடியாதவை. கற்பனையும் கனவுமின்றி எதிர்காலம் தோன்ற முடியுமா? இதன் அடிப்படையில் தான் லெனின் தனது சகாக்களைக் கனவு காணுங்கள் என்றார்.

கனவும் கற்பனையுமே இவன் தோற்றத்தின் அடிப்படைக் காரணம். கனவும் கற்பனையும் இவ்வுலகில் மறைந்தால் அதன் பொருள் என்ன? மனிதன் மறைந்து விட்டான் என்பதல்லவா! மனிதன் மறைந்ததால் முட்டாளுமில்லை, பேரறிஞனுமில்லை –ஆனைமுகத்தோனுமில்லை. $E=Mc^2$ம் இல்லை. பொய்யுமில்லை. மெய்யுமில்லை. கடவுள் என்பவனுக்கு இலக்கணம் கொடுத்து அழைப்பவனும் இவனே –

அவனை மறுப்பவனும் இவனே. விலங்கு கடவுளைக் கண்டதுமில்லை. இல்லை என்று கூறப் போவதுமில்லை, அது கலைஞனாவதில்லை. இவன் கலைஞனாயிருப்பதாலேயே கடவுளையும் காண்பான். அவனையும் மறுப்பான்.

கனவு காண்பவனும் இவனே. கனவில் தோன்றி விளைபவனும் இவனே. அதன் பாரம்பரியமே முன்னுக்கு உந்துகின்றது. மனிதனுக்கு அவனுடைய எதிர்காலமே பெரும் உந்து சக்தியாக அமைகின்றது. எதிர்காலம் காணாத சமுதாயம் தேங்குவது மட்டுமல்ல அது அழிவின் அடையாளம்.

Every kind of human world-be it that of the most primitive or that of the most advanced society-is a fantastic world.

பரிமாணம்

கடிதங்கள் – சில பகுதிகள்

பாவாணரின் கடவுட் கருத்துக்கள் கால ஆய்வுகள் ஏற்பில்லாதனவாக இருக்கலாம். ஆனால் அவருடைய ஆய்வுகளும் முடிவுகளும் வேறு மொழித்துறை வல்லரக்கர்களால் நெருங்குவதற்கும் அரியவை... உலகின் பல்வேறு மொழிகளின், மிகுதியான சொற்களுக்குத் தமிழில்தான் வேருள்ளது எனக் கூறுவதால் பாவாணரை இகழ்ந்து ஒதுக்கித் தள்ளும் முயற்சி இன்று பரவலாக நடந்து வருகிறது. பாவாணரின் அக்கூற்று மெய்யாகுமானால் மக்களின் தோற்றம், ஒரே தொடர்புள்ள நிலப்பரப்பிலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதைத்தான் அது காட்டும்... உங்கள் கும்பலிலிருந்து வருவதெல்லாம் மார்க்சியம் பிறவெல்லாம் கீர்க்கியம் என்று பேசித்திரிவதை விட்டு விடுங்கள், இந்தியாவை ஆரியமயமாக்கக் காஞ்சி மடம், பூரிமடம், இராசகோபாலாச்சாரிகளுடன் நீங்கள் வைத்திருந்த கூட்டு ஊரம்பலம் ஏறிவிட்டதையா! இதை இன்றைய பொதுவுடைமை இளைஞர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டுவிட்டார்கள். திராவிட இயக்கத்தில் முதலாளியக் கூறுகளை, இன்று இருந்து வரும் இயக்கங்களோடு ஒதுக்கிவிட்டு, அவ்வியக்கப் பொதுமைக் கூறுகளை

வேறுபடுத்தி எடுத்துவிட்டார்கள். இன்று திராவிடப் பொதுவுடைமை முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்திய நாடுகள் ஒவ்வொன்றாய்ப் பொதுவுடைமையைத் தழுவுவது எங்கள் பிள்ளைகள் காலத்திற்கு முன்பே நடந்து விட முடியும். இந்திய நாடுகள் பொதுவுடைமையாவது உலக வரலாற்றில் பெருந்திருப்பங்களை உருவாக்கும்.

- CDCY தோழர்கள்

அண்ணாமலை நகர்.

சொல்லாராய்ச்சி வரலாற்றுக்குத் துணையாவதை ஓரளவேனும் அறிந்து கொண்டதாலேயே மேனாட்டில் தோன்றிய பேரகர முதலிகள் எல்லாம் சொற்பொருளுடன் சொன் மூலத்தையும் குறிப்பிடுகின்றன. தொடரிலக்கணம் சொற்றொடரின் வகை பற்றி ஆய்வதொன்றேயன்றி வரலாற்றிற்குத் துணைபோகாது. வண்ணனை மொழிநூல், பயிலும் மாணாக்கரை மருள வைக்கும் சில கலைச் சொற்களைப் படைத்தளித்ததேயன்றி அதனால் வரலாற்றிற்கு எப்பயனுமில்லை. குமுக மொழியியல் சற்றுப் பயன் விளைவிக்கக் கூடியதே எனினும் அதுவும் வரலாற்றிற்குத் துணையாகாது. இம்மொழியியலாய்வுகளைப் பாவாணர் அறியார் என்பார் அறியாதாரே...

பாவாணரை மார்க்சிய நெறியினரின் எதிரியாகக் காட்ட விரும்புவோர்க்கு ஓர் அறிவிப்பு. "காரல் மார்க்சு என்னும் மீட்பர்" (மண்ணில் விண்-பக் 32) என்று காரல் மார்க்சைப் பற்றியும், "மக்கள் தொகை மட்டிற்கு மிஞ்சிப் பெருகியுள்ள இக்காலத்தில், வேலையில்லாத் திண்டாட்டமும் உடனுள்ளவரை கடல் கொள்ளாக் கவலையும் தீரும் ஒரே ஒரு வழி கூட்டுடமை (பொதுவுடமை) ஆட்சியே (மண்ணில் விண்-பக்34-35) என்றும் பாவாணர் கூறியுள்ளார்.

- கு. பூங்காவனம்,

பெங்களூர்

பரிமாணம் – 8

பிப்ரவரி 1980

ஸ்டாலின் சிறப்பிதழ்

"தவறே நேராத சாதகமான வாய்ப்புகள் என்ற நிபந்தனையின் பேரிலேயே போராட்டங்களை மேற்கொள்வது என்றால் உலக வரலாற்றை உருவாக்குவது மிகவும் எளிதானதாகவே இருக்கும். மற்றோர் புறம், 'தற்செயல்க'ளுக்கு எந்தப்பங்கும் இல்லை என்றால் உலக வரலாறு மாயத்தன்மை கொண்டதாக இருக்கும்.... வரலாற்றை வேகப்படுத்துவதும் காலந்தாழ்த்துவதும் அத்தகைய 'தற்செயல்களை'யே பெரிதும் சார்ந்துள்ளன. இயக்கத்துக்கு முதலில் தலைமை தாங்குபவரின் பண்பும் இத்தகைய தற்செயல்தான்"

– மார்க்ஸ் (குகெல்மானுக்கு எழுதிய கடிதம் ஏப்ரல் 17, 1871)

1. நம்பார்வை

O ஸ்டாலின் - பிரச்னை பற்றிப் பரிமாணம் தனி இதழ் வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்ளும்போதே, இதழ் தயாரிப்பில் பரிமாணத்திற்குள்ள வரையறைகளையும் சிரமங்களையும் பரிமாணம் உணர்கிறது.

ஸ்டாலின்-பிரச்னை பற்றிய பல்வேறு சான்றாதாரங்களாக இங்குத் தரப்பட்டிருப்பவை கிடைத்த ஆதாரங்களிலிருந்து இங்குச் சுருக்கமாகவே தரப்படுகின்றன. கிடைத்தவை அனைத்தையும் இங்குத் தொகுக்க முடியவில்லை.

ஸ்டாலின் - பிரச்னை பற்றிய அணுகல் முறையில் பல்வேறு நிலைபாடுகள் எடுக்கப்படுகின்றன. ஸ்டாலின் பற்றிய முழுமையான ஆதரவு முதல், முற்றான மறுப்பு வரை பல்வேறு நிலைபாடுகள் உள்ளன. மார்க்சியத்தின் எல்லைக்குள்ளேயே இத்தகைய தீவிரமான எதிர் நிலைகளும் வெளிப்பட்டுள்ளன. மார்க்சியத்தின் எல்லைக்குள்ளிருந்து வரும் நிலைபாடுகளிலேயே பரிமாணம் கவனம் கொள்கிறது.

வரலாற்றுச் சூழலில் வைத்துத்தான் ஸ்டாலினை மதிப்பீடு செய்ய வேண்டும். வரலாற்றுச் சூழல் என்பதனுள் ரஷ்ய சமுதாய, வரலாற்று நிலையின் தனித்தன்மை முதல், இறுதியாக சர்வதேச நிலைகள் வரை பல்வேறு அம்சங்கள் சம்பந்தப்படுகின்றன. இவ்வகையில் பிற்சேர்க்கையாக இவ்விதழில் தரப்பட்டுள்ள போல்ஷ்விக் கட்சியின் வரலாறு என்ற நூலின் சில பகுதிகள் சரியான சமநிலைப் பார்வைக்கு உதவும்.

ரஷ்யாவின் முன்னைய வரலாற்று நிலைகள், தொடர்ந்து மாறி வருகிற பல பிரச்னைகள், இவற்றுக்கிடையில் கட்சியின் செயல்பாடுகள். கூடவே கட்சியில் ஏற்படும் மாறுதல்கள், இத்துடன் ஸ்டாலின் போன்ற தனிநபர் பாத்திரங்களுக்கான இடம்-இவை கலந்த

கோலத்திலான நிகழ்ச்சிகள், இவை பிரச்னைகளாக இருந்த கால நிலை மட்டுமேயல்லாது, தொடர்ந்து மாறுபட்டு வரும் கால நிலையில் முன்னைய பிரச்னைகள் பெறும் தோற்றம், இடம்-இவற்றோடு இன்றைய நிலையில், இன்றைய பிரச்னைகளுடன் இவை கொள்ளும் உறவு நிலைகள். ஸ்டாலின் பற்றிய மதிப்பீட்டில் இப்படிப் பல சிக்கல்கள் எழுகின்றன.

பிரச்னைகள் சிக்கலாக இருந்த போதிலும் பரிமாணம் தன்னளவில் தனது பார்வையைச் சுருக்கமாகத் தர விரும்புகிறது. இதுவேதான் சரியான பார்வை என்ற ஆணவத்தோடு இதைத் தரவில்லை. வேறுபட்ட பார்வை உடையவர்களுடன் ஒரு ஆரோக்கியமான விவாதத்துக்காகவும் மேலும் சரியான பார்வையைப் பரிமாணமும் பிறரும் தொடர்ந்து பெற வேண்டும் என்பதற்காகவும் இம்முயற்சி.

அடிப்படையில், ஸ்டாலின் பற்றிய பிரச்னை என்பது, உண்மையில் மார்க்சியம் என்றால் என்னவாகப் புரிந்து கொள்கிறோம், புரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான்.

ஸ்டாலின் பற்றிய குருச்சேவ் விமர்சனம், ஸ்டாலினிய எல்லைக்குள்தான் சுழல்கிறது. ஸ்டாலின் இல்லாமல் குருச்சேவ் இல்லை. குருச்சேவின் திருத்தல்வாதத் தோற்றம்தான் ஸ்டாலின் பற்றிய குரூரமான விமர்சனம்.

ஸ்டாலினின் சாதனைகள் என்பனவும் தவறுகள் என்பனவும் இருவேறுபட்ட மூலங்களிலிருந்து தோன்றியிருக்க முடியாது.

ஸ்டாலின் மாபெரும் சாதனைகள் செய்தார்; ஆனால் சில கடுமையான தவறுகளும் செய்தார்; காரணம் மனித பலவீனம் அவரிடமும் இருந்தது என்பது மார்க்சீயமாகாது.

ஸ்டாலின் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று கூறியவர் பலர், தொடர்ந்து ஆராயவே இல்லை. ஆய்வு இல்லாததற்காக இவர்கள் எதைக் காரணமாகக் கூறிக் கொண்டாலும், ஓர் உண்மையை இவர்கள் மறைத்துவிட முடியாது – மார்க்சியம் பற்றிய

தீவிரமான ஆய்வில் இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதை.

லெனின் வகுத்த புதிய பொருளாதாரத் திட்டம் நிரந்தரமாக இருக்க முடியாது; சோசலிசம் நோக்கிய ஒரு மாறுதலுக்கு இது இடம் தந்தாக வேண்டும்.

இதைத் தொடங்குவதற்குத் தேவையான உறுதி படைத்தவர்களுள் – லெனினை அடுத்து வந்தவர்களுக்குள் – ஸ்டாலினுக்கு நிகராக இன்னொருவரைக் கூறமுடியாது.

ரஷ்யா பிற்பட்ட நாடுதான். இங்குதான் புரட்சி நடந்தது. இந்தப் புரட்சியை இன்னொரு சமயத்தில் கைவிட்டுவிட முடியாது. காத்து வளர்த்தாக வேண்டும்.

காத்ததில் ஸ்டாலின் பங்கு தன்னிகரற்றது.

பிற்பட்ட நிலைமைகளில் சோசலிசத்தைக் கட்டுவதில் சிக்கலான பிரச்னைகள். இந்நிலைமைகளில், கட்டப்படுவது சோசலிசமாக நிறைவடைய முடியாது என்ற நிலை வேறு.

இந்நிலைமைகளில், சுத்தமான சோசலிசம் தோன்ற முடியாது. தோன்றுவது, சுத்தமான சோசலிசமாக இல்லை என்ற சுயவிமர்சனப் பார்வை தான் சோசலிசத்தைத் தொடர்ந்து தூய்மையானதாக்கும். இதுவேதான் சோசலிசம் என்ற இறுகல் திசைதெரியாத் தன்மையில் முடியும்.

சோசலிசம், பொருள்வகை உற்பத்தியோடு நின்று விடுவதில்லை. சமூக உறவுகளின் மேன்மையில்தான் சோசலிசம் நிறைவடைய முடியும். சமூக உறவுகளில் மேன்மைக்கு வழி செய்யவில்லையானால் பொருள்வகை உற்பத்தியும் தொடர்ந்து சாத்தியமில்லை என்ற நிலை ஏற்படும்.

பரந்துபட்ட மக்களோடு கூடித்தான் அவர்களை இயங்க வைத்துத்தான் கட்சி இதைச் சாதிக்கிறது. மக்கள் மீது நம்பிக்கையும் பேரன்பும் கொண்ட கட்சி தான் இதைச் சாதிக்கிறது.

கட்சியும் மக்களும் கைகோர்த்துத்தான் செல்லவேண்டும். மூக்கணாங் கயிற்றோடு கட்சிமுன் செல்லமுடியாது. இப்படிப்பட்ட எஜமானத்துவம் சோசலிசத்திற்குப் போய்ச் சேராது.

புரட்சியில் பங்கு பெற வேண்டிய சக்திகளை முறையாக அணுகாததால்கூட அவர்கள் எதிரணியில் இருந்து விடக்கூடிய நிலைமைகள் நேர்ந்து விடும்.

ஸ்டாலின் தவறுகள் பல இப்படி நேர்ந்தன.

- ஒரு பிற்பட்ட நாட்டில் சோசலிசத்தை கட்டுவதில் இந்த ஆபத்தைத்

தவிர்க்க முடியாது என வாதம், (டிராட்ஸ்கி) ஒரு பிற்பட்ட நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவதற்கான இன்றியமையாத தேவையையும் முறையையும், சாதகமான அம்சங்களையும் புறக்கணிக்கிறது. பிற்பட்ட நாட்டில் சோசலிசத்தைக் கட்டவே முடியாது என்ற வாதத்திற்குத் தான் இது வலிமை சேர்க்கிறது.

ஒரு சோசலிசப் புரட்சியைச் சரிவரச் செய்துமுடிக்காத நிலையில்தான் குருச்சேவ் திரிபு நேர்கிறது. இந்தப் பாதைதான் ஏகாதிபத்தியம் நோக்கிச் செல்லுகிறது.

முன் அனுபவம் இல்லை என்ற வாதம் கூட, தோற்றத்தில் தவறில்லாததாகப் பட்டாலும் முன் அனுபவம் இல்லாத நிலையில் எத்தனை எச்சரிக்கையோடு, கவலையோடு அனைத்து ஆதரவாளர்களின் ஒத்துழைப்போடு இதைச் செய்ய வேண்டும் என்பதைப் புறக்கணிக்கிறது.

சோசலிசத்திற்கான அடித்தளம் ஸ்டாலின் காலத்தில் உருவாக்கப்பட்டது என்ற வாதம், சோசலிசக் கட்டமைப்பில் பொருளாதார அடித்தளத்தையே முக்கியத்துவப் படுத்தும் வாதமாகிறது. சோசலிசத்துக்கு இன்றியமையாததாகிய மனித உறவுகள் – கலாச்சாரம் – முதலியவை - புறக்கணிக்கப்பட்டதைத்தான், கட்சி, அரசு, அதிகாரப் பீடங்களில் பார்க்கிறோம். சோவியத் யூனியன் ஒரு கலாச்சாரப்

புரட்சியைச் சாதித்து விட்டதாகக் கூறுவது கலாச்சாரப் புரட்சியைச் சிறுமைப்படுத்துவதாகும்.

- சோசலிச காலகட்டத்திலும் பகை முரண்பாடுகள் தொடர்ந்து நிலவும்

என்பதையும் இந்த முரண்பாடுகளிலிருந்து வர்க்கப் போராட்டம் தொடர்ந்து விடாப்பிடியாக நடைபெறும் என்பதையும், பரந்துபட்ட மக்களின் முன்முயற்சி, அரசியல், கலாச்சார உணர்வுகளில் மேம்பாடு, உறுதியான போராட்டம் ஆகியவற்றின் மூலமே போராட்டம் தீர்வைப் பெறும் என்பதையும் மக்கள் தம் வாழ்க்கை மேம்பாட்டைச் சாதித்துக் கொள்வதற்கே கட்சி உற்ற துணையாகத்தான் இருக்க வேண்டும். என்பதையும் வெறும் தொழிற்பெருக்கம் பொருள் உற்பத்தி ஆகியவற்றின் மூலம் மட்டுமே சோசலிசத்தின் சாரமாக விளங்க வேண்டிய மனித உறவுகளின் மேம்பாட்டைச் சாதிக்க முடியாது என்பதையும் ஸ்டாலின் அறிந்திருக்கவில்லை. மக்கள் சக்தியை நிறையச் செலவழித்துப் பெருந் தொழில்களையும் கூட்டுப் பண்ணைகளையும், மாபெரும் அதிகாரவர்க்க அரசு இயந்திரத்தையும் ஏற்படுத்தி வைத்தார் ஸ்டாலின். புரட்சி இவற்றுக்குள் முடக்கப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியப் போக்கு இவ்வமைப்புகளைத் தனக்கு சாதகமாகிக் கொண்டுள்ளது. சோவியத் யூனியனில் மக்கள் சார்பில் நடைபெறும் இன்னொரு புரட்சியின் மூலமே, மக்கள் தம் உண்மையான விடுதலையைச் சாதித்துக் கொள்ள முடியும் – அப்போது தான், ஸ்டாலின் சாதனைகள் தம் களங்கம் நீங்கி ஒளிபெறும்.

- இங்குத் தொகுத்துத் தரப்படும் விவரங்கள் விளக்கங்களிலிருந்து,

இத்தாலியப் பொதுவுடைமையாளரும் சீனப் பொதுவுடைமையாளரும் ஸ்டாலின் பிரச்சினையில் ஆரோக்கியமான பார்வை பெறுவதற்காக முயற்சி செய்ததை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். வரலாற்றின் படிப்பினைகளை சோசலிசத்தைமுன்னெடுத்துச் செல்லும் நோக்கில் பயன்படுத்திய மாவோ, ஸ்டாலின் பற்றிய

திறனாய்வை, அல்தூஸ்ஸர் விரும்பிய 'இடது சாரி நிலைபாட்டி'லிருந்து செய்துள்ளார், இப்பிரச்சினையில் இந்தியப் பொதுவுடைமையாளரின் பங்களிப்பு பெருமைப்படத் தக்கதாக இல்லை. இங்கு 'மக்கள் ஜனநாயகம்' இதழில் பி.டி. ரணதிவே எழுதிய கட்டுரையொன்றைக் குறிப்பிடவேண்டும். ஸ்டாலினின் பொருளாதாரக் கொள்கைகளை ஆராயப் புகுந்த பி.டி. ரணதிவே, இக்கட்டுரை முழுவதிலும் மாவோ மீது நேர்மையற்ற, நியாயமற்ற தாக்குதல்களைத் தொடுக்கிறார்.

பி.டி. ஆரின் மாவோ – எதிர்ப்பு புதியதல்ல. 1940களில் மாவோவை எர்ல் ப்ரவ்டர் போன்ற புரட்டலாளருடன் ஒப்பிட்டு, அனைத்துலகப் பொதுவுடைமை இயக்கத்தின் கண்டனத்தைப் பெற்றவர் இவர் என்பதை வரலாறு மறந்து விடவில்லை. ஸ்டாலினின் பொருளாதாரக் கொள்கையைத் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளும் ஒருவரிடம் நாம் முதலில் எதிர்பார்ப்பது, இக்கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்ட நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை தீமைகள், பிறகு ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு இவை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டனவா அல்லது தூக்கியெறியப் பட்டனவா, தூக்கியெறியப்பட்டதில் நியாயம் உண்டா ஸ்டாலினின் கொள்கைகளில்தான் உண்மைச் சோசலிசம் இருக்கிறது என்றால், அவற்றைத் தூக்கியெறிந்தவர்கள் புரட்டலாளர்களா என்றெல்லாம் இவர் விவாதிப்பார் என்பதைத்தான். ஆனால் இவற்றை ரணதிவே சாமார்த்தியமாக ஒதுக்கிவிடுகிறார். ஸ்டாலினின் மறைவுக்குப் பிறகு லியேன்டிவ் என்ற பொருளாதார வாதியின் சீர்திருத்தங்களை சோவியத் யூனியன் ஏற்கவில்லை என்று நிரூபிக்க முயல்கிறார். உண்மையில் லியோன்டிவை விடக் கேடுகெட்ட பிற்போக்காளர்களின் – முதலாளிய மதிப்பு விதியை நிலைநாட்டுபவர்களின் – கோட்பாடுகளே அரியணையில் ஏறியுள்ளன என்பதை ரணதிவே மூடிமறைக்கிறார். தமது அணிகளை ஏமாற்ற குருச்சேவ் மீது

ஒரு சின்னத்தாக்குதல் நடத்தும் ரணதிவே பிரஸ்னேவ், கோசிஜின் கும்பலைப் பற்றி மௌனம் சாதிக்கிறார். 'புரட்சியை ஏற்றுமதி, செய்வர்களுக்கு உள் நாட்டுத் தரகராக பணி புரிபவரிடம் நாம் உண்மைகளை எதிர்பார்க்க முடியாது. 'உற்பத்திச் சக்திகளை வளர்த்தல்' என்பதை மாவோ அறவே புறக்கணித்ததாகக் குற்றம் சாட்டும் ரணதிவே, 'நால்வர் கும்பலின்' தவறுகளையெல்லாம் மாவோவுக்கு ஏற்றிச் சொல்கிறார். இப்போது சீனத்தின் துணைப் பிரதமராக உள்ள யேஜியான்யிங்கின் உரையிலிருந்து மேற்கோள் ஒன்றைக் காட்டி மாசேதுங்கின் கடுந்தவறுகளிலிருந்து இப்போது சீனம் மீண்டு விட்டதாக வாதிடுகிறார் ரணதிவே. இதே உரையில் யேஜியான் யிங் மாவோவுக்குச் சூட்டும் புகழையும், தற்போதைய சீனத்தின் நவீனமயமாக்கும் திட்டத்தில் மாவோவின் (இதில் மாவோவின் ஸ்டாலின் பற்றிய விமர்சனங்கள் உள்ளன) போன்ற பல படைப்புகள் வழிகாட்டிகளாக உள்ளன என்று கூறுவதையும் ரணதிவே சௌகரியமாக ஒதுக்கி விடுகிறார்.

- குருச்சேவ் இருந்த வரையிலுமே சோவியத் யூனியனில் புரட்டல்வாதம்

இருந்தது, அதன்பிறகு எல்லாமே சரியாகிவிட்டது என்ற பொய்த் தோற்றத்தை உருவாக்கமுனையும் ரணதிவே போன்றவர்கள் ஸ்டாலினைப் போற்றுவது அப்பட்டமான போலித்தனமும் ஏமாற்று வேலையும்தான். ஸ்டாலினின் பொருளாதாரக் கொள்கையில் இருந்த பலவீனங்களை விமர்சித்த மாவோ, அவற்றில் இருந்த சிறந்த அம்சங்களைச் செரித்துக் கொண்டார். ஸ்டாலினியக் கொள்கைகளில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியதால் குட்டி பூர்சுவா பாதை விலகலாளராகத் தோன்றுகிறாராம் மாவோ – ரணதிவே கண்ணுக்கு ஸ்டாலினின் பொருளாதாரக் கொள்கையை ஒட்டுமொத்தமாக நிராகரித்த சேகுவாராவை எப்படி அழைக்கப் போகிறார் இந்த அதிப் புரட்சிவாதி?

- ஸ்டாலினின் மறைவுக்குப்பிறகு சோவியத்யூனியனில் ஏற்பட்டுள்ள

மாற்றங்கள் மார்க்சிய வர்க்க ஆய்வின் அடிப்படையிலேயே நடத்தப்படவேண்டும். குருச்சேவ், கோசிஜின், பிரஸ்னேவ் முதலானோர் ஒரு வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள வர்க்கத்தின் இயல்புகள் என்ற கருத்துடன் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

******

1. விமர்சனத்தின் தொடக்கம்

1. 20-வது கட்சிக் காங்கிரஸ்

குருச்சேவ் இரகசிய அறிக்கை

சோசலிசப் புரட்சிக்கான தயாரிப்பிலும் செயல்படுத்தியதிலும் உள்நாட்டுப் போரிலும், சோசலிசத்தைக் கட்டியதிலும் ஸ்டாலின் பங்கு இன்று உலகறிந்தது. தற்போது நமது கவலை முழுவதும் இன்று நமது கட்சிக்கும் எதிர்காலத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் உடைய பிரச்னை பற்றியது. எப்படி ஸ்டாலின் வழிபாடு, தொடர்ந்து வளர்ந்தது, இந்த வழிபாடு, ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், கட்சிக் கோட்பாட்டிலும் கட்சி ஜனநாயத்திலும், புரட்சிகர சட்டவியலிலும் எப்படிக் கடுமையான ஆபத்தான திரிபுகளை ஏற்படுத்துவதற்கான மூலமாயிற்று என்பது தான். கட்சியின் கூட்டுத்தலைமை என்ற கோட்பாட்டின் திரிபால் எத்தகைய தீங்கு விளைந்தது என்பதை எல்லோரும் இன்று வரை அறிந்துகொள்ளவில்லை. இதற்காக, கட்சியின் மையக்குழு இந்த விவரங்களை இப்போது முன்வைக்கிறது.

(தனி நபர் வழிபாட்டை மார்க்ஸ் எங்கல்ஸ், லெனின் ஆகியவர்கள் ஏற்கவில்லை என்பதற்கான வாதங்களைத் தருகிறார் குருச்சேவ்... தொடர்ந்து...)

லெனின் கூரிய அறிவாற்றலோடு இந்த உண்மையை வெளிப்படுத்தினார். சரியான சமயத்தில், ஸ்டாலினிடமிருந்த எதிர்மறையான குணங்களைக் கண்டறிந்தார்; கட்சியின், சோவியத் நாட்டின் எதிர்காலம் பற்றி அஞ்சிய நிலையில், ஸ்டாலின் அளவுக்கதிகமான முரட்டுக்குணம் உடையவர், தன் தோழர்களிடம் சரியான கண்ணோட்டம் கொள்ளவில்லை மாறும் குணமுள்ளவர், தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடியவர். ஆகவே, அவரைக் கட்சியின் பொதுச் செயலர் பதவியிலிருந்து மாற்ற வேண்டும் என்று லெனின் சுட்டிக் காட்டினார். 1922

டிசம்பரில் கட்சிக் காங்கிரசுக்கு லெனின் எழுதினார்: பொதுச்செயலரான பிறகு தோழர் ஸ்டாலின் அளவற்ற அதிகாரத்தைத் தன்னிடம் குவித்துக் கொண்டார். தேவையான கவனத்துடன் அவர்தன் அதிகாரத்தை எப்போதும் செலுத்துவாரா என்பது பற்றி எனக்கு நம்பிக்கையில்லை'' லெனினின் 'உயில்' எனக் கட்சி வரலாற்றில் அறியப்படும் இக்கடிதம், ஸ்டாலினைப் பதவியிலிருந்து விலக்கி, தனது தோழர்களிடம் மேலும் பொறுமை, மேலும் நம்பிக்கை, மேலும் அன்பு என்ற ஒரே குணத்தில் ஸ்டாலினிடத்திலிருந்து வேறுபடும் ஒருவரை அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்குமாறு'' கோரியது.

பதின்மூன்றாவது காங்கிரஸ் இதை விவாதித்து, லெனினுடைய விமர்சனத்திற்குச் செவிசாய்ப்பார், தனது குறையை நீக்கிக் கொள்வார் என்ற நம்பிக்கைகளில், ஸ்டாலினைத் தொடர்ந்து அப்பதவியிலிருத்த முடிவு செய்தது. (தொடர்ந்து, குரூப்ஸ்கயா காமெனவுக்கு எழுதிய கடிதத்தையும் லெனின் ஸ்டாலினுக்கு எழுதிய கடிதத்தையும் குருச்சேவ் தந்தார். குரூப்ஸ்கயாவிடம் ஸ்டாலின் கடுமையாக நடந்து கொண்டது பற்றியவை இக்கடிதங்கள்)

லெனின் இறந்த பிறகு சிறிது காலம் லெனினது அறிவுரையைக் கவனத்தில் கொண்டு செயல்பட்டார். தனது இறுதிக் காலத்தில் அறவே இதனைப் புறக்கணித்தார். தொடர்ந்து அதிகரித்து வந்த இக்குணம் இறுதிக் காலத்தில் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குக் கடுமையாயிற்று.

ஸ்டாலின் கூட்டுத் தலைமையை முற்றாகப் புறக்கணித்தார். தன்னை எதிர்த்தவர்களிடம் மட்டுமல்லாது, தனது கருத்துக்கு மாறானவர்களாகத் தான் கருதுபவர்களிடமும் மிருகத்தனமாக நடந்துகொண்டார். அவர் கருத்திலிருந்து மாறுபட்டுத் தம் கருத்தை நிரூபணம் செய்ய முயல்பவர்கள், தம் பதவியிலிருந்து விலக்கப் படுவதோடு, அவர்கள் அழிவைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பதினேழாவது காங்கிரஸை அடுத்த காலத்தில் கட்சியின் முக்கியத் தலைவர்களும் ஊழியர்களும் ஸ்டாலின் சர்வாதிகாரத்திற்குப் பலியானார்கள்.

டிராட்ஸ்கியவாதிகள், வலதுசாரிகள், பூர்சுவா தேசியவாதிகள் ஆகியவர்களுக்கு எதிரான சித்தாந்த வகைப் போரில் ஸ்டாலினது சிறந்த பங்கை நாம் ஏற்கிறோம். டிராட்ஸ்கிய ஜினோவியக் கும்பலும் புகாரியவாதிகளும், முதலாளிய மீட்புக்காகவும், உலகளவிலான பூர்சுவாக்களுக்குச் சரணடைவதற்குமான அரசியல் நிலைபாடு கொண்டிருந்தார்கள். அவர்களின் கோட்பாடு 1928-29ல் நிலை பெற்றிருந்தால், இன்று நாம் பெற்றிருக்கும் கனரகத் தொழிற்சாலைகள், கூட்டுப் பண்ணைகளைப் பெற்றிருக்க முடியாது. இவர்களோடு சித்தாந்தப் பிரச்னையில் கடுமையாக மோதிக் கொண்ட காலத்தில் கூட மிகக் கடுமையான அடக்கு முறைகள் அவர்கள்மீது ஏவப்படவில்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு நமது நாட்டில் சோசலிசத்தின் அடிப்படை கட்டப்பட்ட பொழுது – சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பொழுது – கட்சிக்கு எதிரான அரசியல் இயக்கங்கள் அரசியல் ரீதியாக முறியடிக்கப்பட்ட பிறகு – அவர்கள் மீது கடுமையான அடக்குமுறை தொடங்கியது. 1935, 37-38ல் அவர்கள் மீதான அடக்குமுறை அரசு நிறுவனத்தின் மூலம் தொடங்கியது. பிறகு, நேர்மையான பல கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவும், உள் நாட்டுப் போரிலும், தொழில் மயமாக்கலிலும், கூட்டுப்பண்ணையாக்கத்திலும் தீவிரமான பங்காற்றிய பலருக்கு எதிராகவும் இது திரும்பியது. 'மக்களின் எதிரிகள்' என்ற கருத்தாக்கத்தை ஸ்டாலின் தோற்றுவித்தார். மக்களின் எதிரிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத், தம் கருத்தை, எடுத்துக்கூற, விவாதிக்க, உரிமையில்லை. சட்டவிதிகளுக்குப் புறம்பான முறையில் அவர்கள் தங்கள் 'குற்றத்'தை ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த 'ஒப்புதல்கள்' உடல்ரீதியான வன்முறையின் மூலம் பெறப்படும். பிறகு

இவை 'நிரூபணம்' ஆகும். முற்றிலும் குற்றமற்றவர் பலர் இப்படிப் பலியானார்கள். கட்சியின் திட்டத்தை மறுத்தவர்கள் பலரை உடல் ரீதியாக அழிப்பதற்குப் போதுமான காரணங்கள் இருந்ததில்லை. மக்களின் பகைவர் என்ற வாய்ப்பாடு அவர்களை அழிக்கப் பயன்பட்டது. இவர்களிற் சிலர் லெனின் காலத்தில், அவரோடு சேர்ந்து உழைத்தவர்கள். அவர்கள் சில சமயம் தவறு செய்த போதிலும் அவர்கள் உழைப்பால் லெனின் நன்மையடைந்தார். அவர்களை லெனின் திருத்தினார். கட்சியில் அவர்களைத் தொடர்ந்து வைத்திருந்தார்.

லெனின், கட்டுப்பாட்டுக் குழுவின் கடமைகள் பற்றி கட்சி மையக் குழு – அரசியல் குழுவுக்கு எழுதிய இதுவரை வெளியிடப்படாத குறிப்பு கூறுகிறது: "தம் சோவியத் அல்லது கட்சிக் கடைமையில் தவறியதனால் மனவியல் நெருக்கடிக்கு உள்ளான எதிர்ப்பாளரிடம் ஆழ்ந்த தனிநபர் உறவோடு, அவர்களை அமைதிப்படுத்தி, விவரங்களை விளக்கி, மனவியல் ரீதியாக அவர்களுக்கு ஏற்ற பணியில் அவர்களை இருத்த வேண்டும். இது கட்டுப்பாட்டுக் குழுவின் சிறந்த கடமை".

ஸ்டாலின் முற்றிலும் வேறுபட்ட முறையில் நடந்து கொண்டார். அறவியல் நெறிகளுக்கும் சோவியத் சட்டவியலுக்கும் புறம்பாக நடந்துகொண்டார். ஒருவரிடமிருந்த தன்னிச்சையான போக்கு பலரது தன்னிச்சையான செயலுக்கு ஊக்கம் தந்தது. ஆயிரக்கணக்கில் கைது செய்தல், நாடு கடத்தல், விசாரணை இல்லாமல் மரண தண்டனை விதித்தல், இவற்றால் அச்சமும் நம்பிக்கையின்மையும் பரவலாயிற்று.

சோசலிசக் கட்டமைப்புக்கான சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதில், லெனினிய விதிகள் கடைபிடிக்கப்பட்டிருக்குமானால், புரட்சிகரமான சட்டவியல் இப்படி மீறப்பட்டிராது.

சில வரலாற்று விவரங்களை நினைவு கொள்வோம். அக்டோபர் புரட்சியின் தொடக்கநாள் பற்றிய இரகசியத்தை காமனேவும் ஜினோவிவும் வெளியிட்டனர். புரட்சிக்குப் பிறகு லெனின் இவர்களை ஒதுக்கி வைக்காமல் முக்கியப் பொறுப்புகளில் இருத்தினார். பல தவறுகளை அவர்கள் இழைத்த போதிலும் அவர்களைக் கைது செய்யவில்லை. அவர்களைச் சுட்டுக் கொல்லவில்லை. டிராட்ஸ்கியிடமிருந்து பலர் விலகி வந்து லெனினியத்தைத் தழுவினர். இவர்களையெல்லாம் அழிக்கத்தான் வேண்டுமா?

லெனின் இறந்த பிறகு சில ஆண்டுகள் கட்சிக் காங்கிரசும் மையக் குழுவும் கூடிய வரை முறையாகக் கூடின. 18வது கட்சிக் காங்கிரசுக்கும் 19வது கட்சிக் காங்கிரசுக்கும் இடையில் 13 ஆண்டுகள் கழிந்தன. இக்காலத்தில் முக்கியமான பல நிகழ்ச்சிகள் நடந்தன. போர் முடிந்த பிறகும் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் கூட்டப்படவில்லை. மையக்குழுவும் கூட்டப்படுவது அரிதாயிற்று. போர்க்காலத்தில் ஒருமுறைகூட மையக்குழு கூடவில்லை. 41 அக்டோபரில் மையக்குழு மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டு இரண்டு நாள் காத்திருந்து, கலைந்தது. உண்மையில் ஸ்டாலின் கட்சி நெறிகளைப் புறக்கணித்தார். கூட்டுத் தலைமை என்ற கோட்பாட்டை மதிக்கவில்லை.

1934-ல் நடந்த 17வது கட்சிக் காங்கிரசுக்குப் பிறகு ஸ்டாலினின் தன்னிச்சைப் போக்கு, முழுமையாக வெளிப்பட்டது. அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய விரிவான ஆய்விலிருந்து தெரிய வரும் உண்மை, 17வது காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மையக்குழுவின் உறுப்பினர்களில் 139 பேர், வேட்பாளர்களில் 98 பேர், அதாவது 70 சதத்தினர் 1937-38ல் கைதுசெய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். காங்கிரசில் கலந்து கொண்டவர்களில் 80 சதத்தினர், 1921-க்கு முன் புரட்சியின்போதும், உள்நாட்டுப் போர்காலத்திலும் கட்சியில் இருந்த பாட்டாளிகள். இவர்களில் 70 சதத்தினர்தான் கட்சிக்கும் மக்களுக்கும்

எதிரிகள் என குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் காங்கிரசில் கலந்து கொண்ட 1966 பிரதிநிதிகளில் 1108 பேர், பின்னர் கைது செய்யப்பட்டார்கள். இந்தக் காங்கிரஸ்தான் 'வெற்றியாளர்களின் காங்கிரஸ்' எனப்பட்டது. இவர்கள் தான் ஜினோவியர், டிராட்ஸ்கியர், வலதுசாரிகளுடன் சேர்ந்திருந்தார்களாம்.

கிரோவின் கொலைக்குப் பிறகு அடக்குமுறை மிகக் கடுமையாயிற்று. இன்று வரை, கிரோவின் கொலை தொடர்பான சந்தர்ப்பங்கள் முதலியவை மர்மமாகவும் விளங்கிக் கொள்ள இயலாதவையாகவும் உள்ளன.

17வது காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி விதிகளின்படி, கட்சியின் மையக்குழு அல்லது கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினரை கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டுமானால், கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் அனைவரையும் அழைத்து அவர்முன் பிரச்னையை வைத்து, கூடியவர்களில் மூன்றில் இருவர் ஏற்றுக்கொண்டால்தான் அவரை வெளியேற்ற வேண்டும். இந்த விதி பிறகு கடைப்பிடிக்கப்படவேயில்லை. 'உளவாளிகள்' 'எதிரிகள்' என்ற குற்றச்சாட்டுக்கள் இட்டுக் கட்டப்பட்டவை. ஒப்புதல் வாக்குமூலங்கள் மிருகத்தனமான சித்திரவதை மூலம் பெறப்பட்டவை. விசாரணையின் போது பலர் வாக்குமூலங்களை மறுத்தபோதிலும் தண்டனைக்குத்தப்பவில்லை.

(இவ்வாறு இட்டுக் கட்டப்பட்ட பல வழக்குகளைக் குருச்சேவ் விவரிக்கிறார். தோழர்கள் எய்கி, ருட்ஜுடக், ரோஜன்பிளம் முதலியவர்கள் பற்றிய வழக்குகள்)

இவ்வாறு பொய் வழக்கிடப்பட்டவர்கள் பட்டியல்கள் 383ல் சம்பந்தப்பட்டவர்கள் பல்லாயிரம் பேர்கள். இது 1937-38ல் மட்டும். 1954க்குப்பிறகு இவர்களில் 679 பேர்கள் மீதிருந்த குற்றச்சாட்டுகள் திரும்பப் பெறப்பட்டன. கட்சி, சோவியத் பொருளாதார, இராணுவ, தொடர்புடையவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டது, நாட்டுக்கும், சோசலிச

வளர்ச்சிக்கும் பெரும் தீங்காயிற்று. யெழோவ், கோசியரைக் கைது செய்தது, ஸ்டாலினுக்குத் தெரியாமலா? நம்பமுடியவில்லை. கோசியர், ருட்ஜுடக் முதலியவர்கள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களை விலக்கியுள்ளோம். ஸ்டாலின் யாரையும் நம்பவில்லை. நோய்க்கூறான சந்தேகக் குணம் எல்லாரையும் பகைவராக, உளவாளிகளாகப் பார்த்தது.

ஸ்டாலின் என்ற தனிநபர் கையில் குவித்த அதிகாரங்கள் உலகப்போரின் போது தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தியது. எல்லாவற்றையும் ஸ்டாலின் முன் கூட்டியே அறிந்திருந்தார். ஸ்டாலின் முன்பே தயாரித்து வைத்திருந்த போர்த்தந்திரத் திட்டப்படி, ஜெர்மன் படை மாஸ்கோ லெனின்கிராடு வரை வருவதை அனுமதித்திருந்தது: ஸ்டாலினின் மேதாவிலாசம் எதிரிகளை முறியடித்தது! இப்படி நம்பமுடியாத முறையில் ஸ்டாலின் பங்கை நாவல்களும், திரைப்படங்களும், ஆய்வுகளும் உருவாக்கிக் காட்டியுள்ளன.

போரின் போதும், பின்னரும் ஸ்டாலின் தான் ஜெர்மன் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை என்று கூறினார். 1941 ஏப்ரல் 3ம் நாள் சர்ச்சில், ஜெர்மன் தாக்குதல்பற்றி ஸ்டாலினை எச்சரித்தார். ஸ்டாலின் இதைப்பொருட்படுத்தவில்லை. நமது இராணுவ. தூதுவர் மூலங்களும் இந்த எச்சரிக்கையை விடுத்தன. ஸ்டாலின் இவற்றை மதிக்கவில்லை. தாக்குதலை முறியடிக்கத் தேவையான பலம் நமக்கிருந்தது. நாம் தயாரிப்பை உடனடியாகச் செய்திருந்தால், நமக்கு அழிவுகள் குறைவாக இருந்து இருக்கும் (இது பற்றிய விவரங்களை நிறையத்தருகிறார்) 1937-41ல் பல இராணுவத் தலைவர்களைக் கொன்று தீர்த்ததன் மூலம் நமக்குப் பாதகங்கள் நேர்ந்தன. அவர்களில் பலரது போர்க்கள அனுபவங்களை இழந்தோம். பலரைக் கொன்றதால் இராணுவக் கட்டுப்பாடு சீர்குலைந்திருந்தது. முதலில் நேர்ந்த தோல்விகளையடுத்து

'லெனின் படைத்தவற்றையெல்லாம் நாம் இழந்து விட்டோம்' என்றார் ஸ்டாலின். ரொம்பக் காலம் இராணுவ நடவடிக்கைகளில் தலையிடாமல் இருந்தார். அரசியல்குழு கேட்டுக் கொண்ட பிறகே சில முடிவுகளை எடுத்தார். தலையிட்ட போதும் பல தவறுகளைச் செய்தார். இதனால் நாம் துன்புற்றோம். (இவற்றை குருச்சேவ் விவரிக்கிறார்) ஜுகோவைப் பிறர் புகழ்வதை ஸ்டாலின் விரும்பவில்லை. ஸ்டாலினே எல்லாவற்றையும் செய்ததாகப் புகழ்பாடுவதை விரும்பினார். போரில் வெற்றிக்கான பெரும்பங்கு நமது கட்சிக்கும் மக்களுக்குமே உரியது.

போரில் நாம் வெற்றிபெற்றோம். 'லெனின் கிராடு நிகழ்ச்சி' புனையப்பட்டது. வோஸ்னெசென்கியும் குஸ்னெட் சோவும் திறமை வாய்ந்த தலைவர்கள். திடீரென இவர்கள் எப்படி மக்கள் எதிரிகளாகி ஒழிக்கப்பட்டார்கள்? போருக்குப் பிறகு ஸ்டாலின் சந்தேககுணமும் மூர்க்கத்தனமும் மேலும் அதிகரித்தன. இது பெரியாவுக்குச் சாதகமாயிற்று. ஆயிரக்கணக்கில் கம்யூனிஸ்டுகளையும் சோவியத் மக்களையும் கொல்ல இது காரணமாயிற்று. 'லெனின்கிராடு நிகழ்வை' நிகழ்த்தியவர் ஸ்டாலின். அரசியல் குழுவின் பெரும்பாலோருக்கு இதுபற்றிய முழுவிவரங்கள் தெரியாது.

ஜியார்ஜியா சோவியத் யூனியனிலிருந்து விலகி துருக்கியோடு சேர முயல்வதாகக் குற்றம் சாட்டிப் பலரைக் கைது செய்து கொடுமைப்படுத்தியதும் இத்தகைய புனைவுதான். யூகோஸ்லேவியாப் பிரச்னையைப் பெரிதாக்கியவர் ஸ்டாலின்தான். இதன்விளைவு, யூகோஸ்லேவியாவின் நட்பை நாம் இழந்தோம். மருத்துவர்களின் சூழ்ச்சி பற்றியதும் இத்தகைய புனைவுதான். இதன் விளைவாக, புகழ்பெற்ற சோவியத் மருத்துவ நிபுணர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இதில் குறிப்பிட்ட பங்கு பெரியாவினுடையது. (பெரியா பற்றி விவரங்கள் பல தரப்படுகின்றன.)

ஸ்டாலின் தனக்குத்தானே புகழ் மாலை சூட்டிக் கொண்டார். தனிநபர் வழிபாட்டை ஊக்குவித்தார். ஸ்டாலின் பற்றிய 'சுருக்கமான வாழ்க்கை வரலாறு' இவரை வானளாவ உயர்த்தியது. இந்நூல் ஸ்டாலினால் அங்கீகரிக்கப்பட்டது. சில புகழ் மொழிகளைத் தானே இதில் சேர்த்துக் கொண்டார். (சில வாசகங்கள் தரப்படுகின்றன) "கம்யூனிஸ்ட்கட்சி (போல்ஸ்விக்) – சுருக்கமான வரலாறு" கட்சி மையக்குழுவின் தனிக் குழுவால் எழுதப்பட்டது. இந்நூலில் தனிநபர் வழிபாடு நூல் நெடுகக் கலந்துள்ளது. நூலின் இறுதி வடிவம், இந்நூலை ஸ்டாலினே எழுதியதாகத் தெரிவிக்கிறது. சோவியத் யூனியனின் நாட்டுப் பாடல் கட்சி பற்றிக்குறிப்பிடவில்லை. ஆனால் ஸ்டாலின் புகழ் பாடுகிறது. ஸ்டாலினுக்குத் தெரிந்தே பல நகரங்கள், தொழிற்சாலைகள் ஸ்டாலின் பெயர் தாங்கின. தனிநபர் வழிபாட்டின் விளைவாகக் கட்சியின் தவறான விதிமுறைகள் உருவாயின. சோவியத் ஜனநாயகத்தில் திரிபுகள் ஏற்பட்டன; வறட்டுத்தனமான நிர்வாகம், தவறுகளை மறைத்தல் முதலிய போக்குகள் ஏற்பட்டன. எல்லாமே அதிகார வர்க்கக் குணம் பெற்றன.

ஸ்டாலின் கட்சிக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் சர்வ தேசப் பாட்டாளிகள் இயக்கத்திற்கும் பெரும் சேவை செய்ததை நாம் மறுக்கவில்லை. அதேசமயம் நாம் விவரித்த அனைத்தும் அவருடைய ஒப்புதலோடே நடந்தன. பாட்டாளி வர்க்க நலன்களுக்காக அவற்றைச் செய்ததாக ஸ்டாலின் நம்பினார். இதில்தான் முழுஅவலமும் அடங்கியிருந்தது.

(பான் பெஹாரி சக்ரவர்த்தி பதிப்பித்துள்ள
'Stalin Question' என்ற நூலிலிருந்து தரப்பட்டுள்ளது)

2. ஸ்டாலின் அதிகாரத்திலிருந்த போது...

குருச்சேவ் பேசியவை:

"தோழர் ஸ்டாலினுக்கு எதிராகக் கை உயர்த்துபவர்கள் நம் அனைவர்க்கும் எதிராகவும், பாட்டாளி

வர்க்கத்திற்கெதிராகவும் கையுயர்த்துகிறார்கள்! மார்க்ஸ் எங்கல்ஸ் லெனினுக்கெதிராகவும் கையுயர்த்துகிறார்கள்".

- 1937 ஜனவரி மாஸ்கோ பொதுக்கூட்டம்.

'நமது கட்சி, துரோகிகள் கூட்டத்தை தயவு தாட்சணியமின்றி நசுக்கும் டிரட்ஸ்கிய - வலதுசாரிக் குப்பைகளைத் துடைத்தெறியும், அதற்கான உத்தரவாதமாகத் திகழ்வது தோழர் ஸ்டாலினின் உறுதி குலையாத் தலைமை. பகைவர்களை முற்றாக ஒழித்துக்கட்டுவோம். கடைசி மனிதன் வரை அவர்களின் சாம்பல்களைக் காற்றில் தூவுவோம்".

- 6.6.37ல் மாஸ்கோவில் நடைபெற்ற 5வது கட்சி மாநாடு

"நமது அன்புத்தந்தையும், ஞானமிக்க ஆசிரியரும், மேதையும், கட்சி, சோவியத் மக்கள், அனைத்துலகின் உழைப்பாளி மக்கள் ஆகியோரின் தலைவருமான தோழர் ஸ்டாலின் புகழ் ஓங்குக"

- மாஸ்கோ பேச்சு 1950

கோசிஜின் சொன்னது:

தோழர் ஸ்டாலின் லெனின் சுட்டிக் காட்டிய பாதையில், கம்யூனிசத்தைக் கட்டியமைக்கும் பாதையில் நம்மைத் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறார். நமது போல்ஸ்விக் கட்சியையும் நமது அரசையும் சோசலிசத்தின் எதிரிகளிடமிருந்து பாதுகாத்தார்.

தோழர் ஸ்டாலின் லெனினின் பணியைத் தொடர்கின்ற மகத்தானவர். தோழர் ஸ்டாலின் தமது மகத்தான மேதாவிலாசத்தை வெளிப்படுத்தினார். நவீன யுகத்தின் மாபெரும் யுத்த தந்திரியும் இராணுவத் தலைவருமான தோழர் ஸ்டாலின் நமது தாய் நாட்டை ஜெர்மானிய பாசிசப் படையெடுப்பாளரிடமிருந்து காப்பாற்றினார். பாசிச அடிமைப்படுத்தப்படுதல் என்ற

ஆபத்திலிருந்து விமோசனம் பெற்றதற்கு சோவியத் மக்கள் தோழர் ஸ்டாலினுக்குக் கடன்பட்டுள்ளனர்.

- மாஸ்கோ 1950

3. பால்மைரோ டோக்ளியாட்டி

ஸ்டாலினியம் பற்றிய கேள்விகளுக்குத் தந்த விடைகளிலிருந்து:

1956 ஜுன் 16

சோவியத் தோழர்களின் விமர்சனத்தின் பொருள் இதுதான்: ஸ்டாலினுடைய தவறுகளிலிருந்தும், அவர் பற்றிய தனிமனித வழிபாட்டிலிருந்தும் சோவியத் சமுதாயத்தின் வாழ்வின் பல்வேறு அம்சங்களிலும், கட்சி, அரசு ஆகியவற்றின் செயல்களிலும் பாதகமான - தீமையான நிலைகள் தோன்றின.

இது இவ்வளவு எளிய வி யமல்ல. எல்லாப் பாதகமான அம்சங்களையும் ஒரே ஒரு பொதுக்கருத்தாகச் சுருக்கிவிடமுடியாது. இத்தகைய முயற்சியின் விளைவாகப் பொய்யான – தன்னிச்சையான – பொதுக் கருத்துக்களுக்கே போய்ச் சேருவோம். ஸ்டாலினின் தவறுகளின் விளைவாக, சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களும் சீர்குலைந்தன. தேங்கின, சட்டவியல் திரிந்தது, அதிகார வர்க்கம் பலம் பெற்றது என்பது இத்தகைய ஒரு தன்னிச்சையான முடிவாகும்.

அரசு, கட்சி ஆகியவற்றின் உயர் நிறுவனங்களில் மிகக் கடுமையான திரிபுகள் நேர்ந்தன என்பதை மறுப்பதற்கு இல்லை. ஜனநாயக வாழ்வைக் கட்டுப்படுத்தவும், தொழில் நுணுக்க, பொருளாதார வளர்ச்சி, கலாச்சார நடவடிக்கை இலக்கியம் கலை முதலிய பல்வேறு களங்களில் ஆற்றல் மிக்க சிந்தனைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் போக்குக்கும் இது காரணமாயிற்று என்பதும் உண்மைதான். ஆனால் இதைக் கொண்டு, சோவியத் சமுதாயத்தின் அடிப்படை அம்சங்கள் சிதைந்தன என்று உறுதியாகக்

கூறமுடியாது. இந்த அம்சங்கள்தான் முதலாளியச் சமூகங்களைவிட சோவியத் சமுதாயத்தை மேம்பட்டதாகச் செய்திருக்கிறது. முதலாளிய சமூகங்கள் செய்த தவறுகள் மிகக் கடுமையானவை. சோவியத் சமுதாயத்தில் நேர்ந்த தவறுகளும் நிரந்தரமானதாக இருக்க முடியாது.

ஸ்டாலின் செய்த தவறுகளை வெளிப்படுத்துவதை நான் மறுக்கவில்லை. சோவியத் சமுதாயத்தின் தலைமையில் உள்ளவர்களை ஓர் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி, சிக்கலான சோவியத் சமூக அமைப்பு முழுமையும் திரும்பவும் செயல்பட வைக்கக் கூடியதாக விமர்சனம் அமைவதை விரும்புகிறேன்...

20வது காங்கிரஸ், சோவியத் யூனியனில், ஜனநாயக வளர்ச்சிக்கான பாதையைத் திறந்திருக்கிறது என்றே நாம் முடிவு செய்து கொண்டாலும், இத்தகைய வளர்ச்சி மேனாட்டு ஜனநாயக வகை நிறுவனங்களை நோக்கியதாக இருக்கும் என்று நம்புவது தவறு.

சோவியத் ஜனநாயக வாழ்க்கை, அதிகார வர்க்க, தன்னிச்சையான தலைமையாலும், சட்டவியல் மீறல்களாலும் ஓரளவுக்காவது கட்டுப்படுத்தப்பட்டது. இப்படிக் கட்டுப்படுத்துதல் என்பது, கொள்கையளவிலாவது சாத்தியந்தான். காரணம், சோசலிச ஆளுகையும் தன்னளவில் தவறுகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் விலகியதல்ல. சோவியத் சமூகத்தில் உள்ளவர்களும் மனிதர்கள். தவிர, இது வளரும் சமுதாயம். இதில் புறநிலை அகநிலை வேறுபாடுகள் இருக்கும். வரலாற்று அலைகளுக்கு இது உட்பட்டது.

பல கட்சி முறை அல்லது ஒரு கட்சி முறை என்பது மட்டுமே. பூர்சுவா சமுதாயத்தையும் சோசலிச சமுதாயத்தையும் வேறுபடுத்தும் அம்சம் அல்ல. சோசலிச சமுதாயத்தில் கட்சி, சோசலிசத்தை அடையவும் வளர்க்கவும் பாடுபடுகிறது. இதன் வேலை, உருவாக்கும் தன்மையது. உள்நாட்டிலுள்ள அரசியல் எதிரிகளோடு விவாதித்துக்

கொண்டிருப்பது அல்ல. எதிர்த்தரப்பில் உள்ளது. வெல்லப்பட வேண்டிய புறநிலைத் தடை புறநிலை யதார்த்தம் பழமையின் எச்சங்கள். பல கட்சிகளுக்கிடையில் போட்டிகளின் மூலம் இந்த இயக்கம் நடைபெறுவதில்லை. கட்சி, சோவியத்துகள், தொழிற்சங்கங்கள் முதலிய நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வரிசைகளைக் கொண்ட சமூகக் கட்டமைப்புக்குள் நடைபெறும் இயக்கம் இது. இதற்கு ஸ்டாலின் தடையை ஏற்படுத்தினார் என்று ஸ்டாலின் விமர்சனம் செய்யப்படுகிறார். இயல்பான போக்குக்குத் திரும்புவதுதான் இதைத் திருத்துவதாகும். இதை மறுப்பது அல்ல...

ஸ்டாலின் செய்த தவறுகள், நாட்டின் தலைவர்களுக்கும் இவர்கள் மூலம் மக்களுக்கும் தெரியவில்லை என்பது நம்பக்கூடியதாக இல்லை. அல்லது அவர்களால் அவை தவறுகள் எனக் கருதப்படவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. இராணுவம், காவல்துறை முதலியவற்றுக்கு எதிராக நின்று, மாற்றங்களைக் கொண்டு வருவது சாத்தியமாக இல்லை என்ற விளக்கமும் ஏற்கக் கூடியதாக இல்லை. தான் தவறுகள் செய்து கொண்டிருந்த போதிலும் ஸ்டாலின் நாட்டில் மிகப் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார் என்று கருதுவதுதான் எனக்கு நியாயமானதாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம், ஸ்டாலின் தவறு மட்டுமே செய்தார் என்பதில்லை. நன்மையும் செய்தார் என்பதே!

20வது காங்கிரஸ், சோசலிச இயக்கம் எதிர்நோக்கியுள்ள புதிய பல பிரச்னைகளைப் பற்றிய புரிதலுக்கும் தீர்வுக்கும் உதவிய போதிலும், அவர்கள் எடுத்துக் கொண்ட நிலைபாட்டைத் திருப்திகரமானதாகக் கருத முடியவில்லை... இன்று அவர்கள் தம்மையே விமர்சனம் செய்து கொள்கிறார்கள். இது அவர்களுக்குப் பெருமை. இப்படி விமர்சனம் செய்து கொள்ளும்போது, தம் பெருமையிற் சிறிது இழக்கிறார்கள். எல்லாவற்றுக்குமே காரணம் ஸ்டாலினது

தவறுகளே என்று கூறும் போது, 'தனிநபர் வழிபாட்டு' எல்லைக்குள்ளேதான் நாம் இருக்கிறோம். முதலில் எல்லா நன்மைகளுக்குமே ஒருவரது அதிமனிதக் குணங்கள் காரணம் என்று கூறப்பட்டது. இப்போது, எல்லாத் தீமைகளுக்குமே ஒருவரது தீய குணமே என்று கூறப்படுகிறது. இருவகையிலும் மார்க்சியத்தின் உள்ளார்ந்த மதிப்பீட்டு அளவுகளுக்கு நாம் வெளியில்தான் இருக்கிறோம். உண்மையான பிரச்னைகளை இப்படித் தவிர்க்கிறோம். இப்படித்தான் சோவியத் சமுதாயமும், தனது ஜனநாயக நெறிக்கு மாறுபட்ட சில உருவங்களைப் பெற்றது. இந்த ஆய்வை சோவியத் தோழர்கள்தான் செய்ய வேண்டும்.

லெனின் தனது இறுதிக்காலப் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் புதிய சமுதாயத்திற்கு ஆபத்தாகி வரும் அதிகார வர்க்க ஆபத்தைச் சுட்டிக் காட்டினார். சந்தேகமில்லாமல் ஸ்டாலினின் தவறுகளும் சோவியத் பொருளாதார அரசியல் வாழ்வில் அதிகார வர்க்கத்தின் அளவுகடந்த பெருக்கத்தோடு தொடர்புடையதுதான் என்று தோன்றுகிறது. இங்கு காரணத்திற்கும் விளைவுக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்ப்பது சிரமமாகிறது. இந்த அளவுகடந்த அதிகார வர்க்கச் சுமை கூட, பழைய ரஷ்யாவின் அரசியல், நிறுவன, உருவங்கள் பழக்கங்களின் மரபுமுறையிலான வளர்ச்சிதானா?

ஜனநாயக அமைப்பின் மீது சுமத்தப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகளும் அதிகாரவர்க்க நிறுவன வடிவங்கள் மெல்லமெல்லத் தோன்றியதும் கட்சியிலிருந்துதான் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டுப் பண்ணைகளும் மாபெரும் சாதனைகள் என்பதில் ஐயமில்லை. மாபெரும் வெற்றிகளைச் சாதித்த உடனே, சோசலிசக் கட்டமைப்பு தானே முன்னேறும் என்பது உண்மையில்லை. புதிய வகை முரண்பாடுகள் தோன்றும். இவை மக்கள் திரள் கட்சியின் செயல் வழியே தீர்க்கப் பெறும்.

இதிலிருந்து இரு முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன. பல்வேறு நிறுவனங்களில் மக்கள் திரள்களின் செயல்கள் தேங்கி விடுகின்றன. புதிய பிரச்னைகளைப் புதியமுறையில் சந்திப்பதற்குப் பதிலாக தயாரிக்கப்பட்ட முழக்கங்கள் பரவுகின்றன. அதேசமயம் மேலிருந்து வரும் உத்தரவுகளே செயல்படுகின்றன. இரண்டாம் விளைவு இன்னும் கடுமையானது. புதிய பிரச்னைகள் – அவை எங்கும் உள்ளன. மேலுக்கு வரும்போது இவை வர்க்கஎதிரிகளின் சதியாகப் பார்க்கப் படுகின்றன. வர்க்கப் பகைவர்கள் சோவியத் யூனியனைச் சூழ்ந்திருந்தார்கள் என்பதும் உண்மைதான். புறச்சூழலைப் பற்றிய சமநிலையிலான மதிப்பீட்டுத் திறனை இழக்கும்போது, நன்மைக்கும் தீமைக்கும், பகைமைக்கும் துரோகத்திற்கும் இடையிலான வேறுபாட்டு உணர்வு அற்றுப் போகிறது. அஞ்சத்தக்க இந்தக் குழப்ப நிலைக்கு ஸ்டாலின் போலி- விஞ்ஞானவியல் வரையறைகளைத் தந்தார். பகைவர்கள் பெருகிவிட்டார்கள், சோசலிசத்தைக் கட்டுவதில் முன்னேறும் போது வர்க்கப் போராட்டம் கூர்மையடையும் என்றெல்லாம் கருதினார். இந்தக் கருத்துக்கள் எப்படி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பது ஆய்வுக்கு உரியது. இந்தச் சூழலின் வெளியீடாகவும் இதனை உருவாக்கியவராகவும் ஸ்டாலின் இருந்தார்...

பிரான்சில் மக்கள் முன்னணிக்காகவும், ஸ்பெயினில் ஆயுதங்களோடும் போராட்டம் நடைபெற்ற அதேகாலத்தில்தான், ஜனநாயகத்தையும் அமைதியையும் காக்க சோவியத் யூனியன் தீவிரமாக நின்ற காலநிலையில்தான், விசாரணைகளை வைத்துப் பார்க்கவேண்டும். அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட நிலையில் எதிரணியைச் சார்ந்த டிராட்ஸ்கியவாதிகளும் வலதுசாரிகளும் பயங்கரவாத முறையில் போராடத் தயங்கவில்லை. அரசுக்கு எதிராக எதிர்தரப்பினர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்த சதிமுயற்சிகள் ஒருபுறம்,

மறுபுறம் சட்டத்திற்குப் புறம்பான முறைகளைப் பயன்படுத்த வழக்குத் தொடர்தல், முதல்வகை நடவடிக்கை, இரண்டாம் வகை நடவடிக்கையின் கொடுமையைக் குறைக்கவில்லை.

ஸ்டாலின் விமர்சனத்திலிருந்து எழும் ஒரு பொதுப்பிரச்னை – அதிகார வர்க்கச் சீரழிவின் - ஜனநாயக வாழ்வை நசுக்குதலின் - புதியதை உருவாக்கும் புரட்சிகரச் சக்திக்கும் புரட்சிகரச் சட்டவியலை அழிக்கும் சக்திக்கும் இடையிலான குழப்பத்தின் - மக்களின் வாழ்க்கை, விமர்சனம், படைப்புச் செயல் இவற்றிலிருந்து பொருளாதார, அரசியல் தலைமையைப் பிரிப்பதின் – ஆபத்துக்களைப் பற்றிய பிரச்சனை. கம்யூனிஸ்டுக் கட்சிகள் இத்தகைய ஆபத்தைத் தடுப்பதற்கான சிறந்த வழிபற்றி ஆராய வேண்டும் – (From 'The Marxists' (By Wright Mills, Penguin Books).

4. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மையக் குழுவின் தீர்மானம் – 1956 ஜூன்

கட்சி மையக்குழுவின் பொதுச்செயலாளராக ஸ்டாலின் இருந்தபோது கட்சியின் பிற தலைவர்களோடு சேர்ந்து லெனின் கட்டளைகளை தீவிரமாக செயல்படுத்தினார். மார்க்சிய–லெனினியத்தில் கொண்ட பற்றோடு ஒரு சித்தாந்த வாதியாகவும், திறமை மிக்க அமைப்பாளராகவும், டிராட்ஸ்கியவாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் பூர்ஷ்வா தேசியவாதிகள் ஆகியவர்களுக்கு எதிராகவும் முதலாளிய சுற்றி வளைப்பு சதிகளுக்கு எதிராகவும் கட்சி நடத்தி போராட்டங்களுக்கு தலைமை தாங்கினார். இத்தகைய அரசியல் சித்தாந்த போராட்டத்தின்போது ஸ்டாலின் பெரும் மரியாதையும் செல்வாக்கையும் பெற்றார். ஆனால் நமது வெற்றிகள் அனைத்தும் ஸ்டாலினுடைய பெயரோடு தவறான முறையில் சார்த்திச் சொல்லப்படலாயின. கட்சியும் நாடும் பெற்ற

வெற்றிகளும் அவர்மீது சூட்டப்பெற்ற புகழ் மாலைகளும் ஸ்டாலினை ஆணவம் கொள்ளச் செய்தன. இந்தச் சூழலில்தான் ஸ்டாலின் தனிநபர் வழிபாடு படிப்படியாக வளர்ந்தது. இதற்கு ஸ்டாலினது சில தனிப்பட்ட குணங்களும் உதவியாயிருந்தன. இக்குணங்களை 1922 – முடிவில் சுட்டிக் காட்டினார் லெனின். லெனின் இறந்தபிறகு 13-வது கட்சி காங்கிரஸில் லெனின் கடிதங்கள் விவாதிக்கப்பட்டு, ஸ்டாலின் லெனினுடைய விமர்சனங்களுக்கு செவி சாய்ப்பார் என்ற அடிப்படையில், அவர் தொடர்ந்து பொதுச் செயலாளராக இருக்க அனுமதிக்கப்பட்டார். லெனின் இறப்பை அடுத்து சிறிது காலத்திற்கு லெனினின் விமர்சனங்களை மனத்தில் கொண்டு ஸ்டாலின் செயல்பட்டார். பிறகு தனது பணிகளை பெரிதாக மதிப்பிடத் தொடங்கி தன்னை தவறில்லாதவராக நம்பத் தொடங்கினார். வர்க்க எதிரிகளுக்கும், அவர்களது கையாட்களுக்கும் எதிராக நடைபெற்ற கசப்பான போராட்டங்களின் போதும், நாஜிகளுக்கு எதிரான போரின் போதும், உள்கட்சி சோவியத் ஜனநாயகம் ஆகியவற்றின் மீது தவிர்க்க இயலாமல் கொண்டு வரப்பட்ட கட்டுப்பாடுகளை ஸ்டாலின், அரசாங்கம், கட்சி வாழ்க்கை, ஆகியவற்றின் நிரந்தர அம்சங்களாகப் படிப்படியாக மாற்றினார். மையக்குழுவின் பொதுப்பேரவையும், கட்சி காங்கிரஸ்களும் சீரற்ற முறையில் நடத்தப்பட்டன. பல ஆண்டுகளுக்கு அவை நடைபெறவே இல்லை. ஸ்டாலின் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரானார்.

சோவியத் யூனியன் சோசலிசத்தை நோக்கி முன்னேறும் பொழுது, வர்க்கப் போராட்டம் மேலும் கூர்மையடையும் என்ற ஸ்டாலினது தவறான வரையறை சோசலிசத்தைக் கட்டுவதற்கும், கட்சியின் உள்ளும், நாட்டிலும் ஜனநாயகம் வளர்வதற்கும் பேரழிவைச் செய்தன. இந்த வரையறை, யார் வெற்றி பெறுவார்கள் என்ற மாறுதல் காலத்தின் குறிப்பிட்ட கட்டங்களுக்கு மட்டுமே சரியானது.

ஆனால் சோசலிசம் வெற்றி பெற்று சுரண்டும் வர்க்கங்களும் அவர்களின் பொருளாதார அடித்தளமும், அழிக்கப்பட்ட பிறகு, இந்த வரையறை சோசலிச சட்டவியலை பெருமளவு சீர்குலைப்பதற்கும் மக்களின் மீது அடக்குமுறைகளைச் செலுத்துவதற்கும் அடிப்படை ஆயிற்று. இந்தச்சூழலில்தான் அரச பாதுகாப்பு நிறுவனங்கள் பெரும் செல்வாக்கைப் பெற்றன. தொடக்கத்தில் புரட்சியின் ஆதாயங்களை இவை காப்பாற்றின. நாளடைவில் கட்சி, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து இவை நீங்கி ஸ்டாலினின் நேரான கட்டுப்பாட்டுக்குள் வந்தன. ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான பெரியா கும்பலின் தலைமையில் இந்த நிறுவனம் வந்த பொழுது நிலைமை மேலும் கடுமையாயிற்று. எதிரிகள் செய்த சதியின் விளைவாக பல நேர்மையான கம்யூனிஸ்டுகளும், கட்சி சார்பில்லாத சோவியத் மக்களும் கேவலத்திற்கும் துன்பங்களுக்கும் உள்ளானார்கள்.

ஸ்டாலினின் தனிநபர் வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட எதிர்மறையான வளர்ச்சிப் போக்கை யாருமே தடுக்கவில்லை என்பது உண்மையல்ல. உதாரணமாக போரின் போதும், பிற குறிப்பிட்ட காலகட்டங்களிலும் ஸ்டாலினுடைய தன்னிச்சையான செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. போர்க்காலத்தில் கட்சி மையக்குழு உறுப்பினர்களும் புகழ்பெற்ற இராணுவத் தலைவர்களும் போர்-முன்னணியிலும், பின்னணியிலும் சில குறிப்பிட்ட துறைச்செயல்பாடுகளை தம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். நிறுவன அரசியல் இராணுவத்துறைகளில் வட்டாரக் கட்சியோடும், அரசு நிறுவனங்களோடும் சேர்ந்து சுதந்திரமான நடவடிக்கை மேற்கொண்டனர்.

லெனினியக் கருத்தாங்கிய இந்த தலைவர்கள் வெளிப்படையாக ஸ்டாலினை ஏன் எதிர்க்கவில்லை? தலைமையிலிருந்து ஏன் அவரை அகற்றவில்லை? என்ற கேள்வி எழலாம். சோவியத் நாட்டை அதன்

எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவதற்கும், சோசலிசக் கட்டமைப்பிற்காகவும் ஸ்டாலின் போராடினார் என்பதை சோவியத் மக்கள் நன்கறிவர். இந்தப் போராட்டத்தின் போது அவர் சிலசமயங்களில் தகாத முறைகளைக் கடைப்பிடித்தார். லெனினியக் கோட்பாடுகளை மீறினார். இதில்தான் ஸ்டாலினின் அவலம் அமைகின்றது. ஆனால் அதே சமயம், தனிநபர் வழிபாட்டுச் சூழலில் ஸ்டாலினுக்கு எதிரான எந்த ஒரு போக்கும் மக்களால் புரிந்து கொள்ளப்பட்டிராது. தனிப்பட்ட முறையில் இவர்கள் வீரமில்லாதவர்கள் என்பது உண்மையில்லை. ஸ்டாலினை எதிர்க்கும் எவரும் இந்த நிலையில் மக்கள் ஆதரவைப் பெற முடியாது. தவிர, அத்தகைய எதிர்ப்பு சோசலிச கட்டுமானத்திற்கு எதிரானது, எனவும் கட்சி, நாடு ஆகியவற்றின் ஐக்கியத்தை சீர்குலைக்கும் முயற்சி எனவும் கருதப்பட்டிருக்கும். தவிர சோவியத் மக்கள் கட்சித் தலைமையில் பெற்ற வெற்றிகள், சோவியத் மக்களின் இதயத்தில் பெருமையுணர்வைத் தோற்றுவித்திருந்தன. இந்நிலையில், தனிநபர் தவறுகளும் குறைபாடுகளும் முக்கியமில்லாதவையாகத் தோன்றின. மேலும், ஸ்டாலினின் தவறான பல நடவடிக்கைகள் அண்மையில்தான் வெளியாயின. அதுவும் பெரியா கும்பல் வெளிப்பட்டதின் விளைவாகவும், கட்சி மீண்டும் அரசு பாதுகாப்பு நிறுவனங்களின் மீது தனது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய பிறகுமே, இவை வெளியாயின.

தனிநபர் வழிபாட்டினால் சோவியத் யூனியனின் சமூக அமைப்பே மாறியது. அல்லது சோவியத் சமுதாயத்தின் இயல்பில் இருந்தே தனிநபர் வழிபாடு தோன்றியது என்று கருதுவது முற்றிலும் தவறானது. தனிநபர் எவரும் நமது சமூக – அரசியல் அமைப்பை மாற்றி விட முடியும் என்று கருதுவது கருத்துமுதல்வாதமாகும். எந்த ஒரு சமூக அரசியலமைப்பும் அதனுடைய பொருள் உற்பத்தி முறையினாலும், உற்பத்தி சக்திகளின்

உடமைமுறையினாலும், அரசு அதிகாரத்திலுள்ள வர்க்கத்தினாலும் தீர்மானிக்கப்படுகிறது. நாற்பதாண்டுகளுக்கு மேலாக, இந்த அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருக்கிறது. தனிநபர் வழிபாட்டினால் கட்சி, அரசு ஆகியவற்றின் நிர்வாகத்தில் சில கடுமையான தவறுகள் நேர்ந்தன. வேளாண்மையை நெறிப்படுத்தியதிலும் பாஸிசத்தை எதிர்ப்பதற்காக நாட்டை தயார்படுத்தலிலும் ஸ்டாலின் கடுமையாக தவறுகள் செய்தார். போருக்குப் பிறகு யூகோஸ்லாவியாவுடன் மோதலை ஏற்படுத்தினார். இவை சோவியத் வாழ்வின் சில அம்சங்களைப் பாதித்தன.

சகோதர கம்யூனிஸ்டுக் கட்சிகள் பல தனிநபர் வழிபாட்டுக்கும், அதன் விளைவுகளுக்கும் எதிரான தமது நடவடிக்கைகளை ஆதரித்து அறிக்கைகள் தந்துள்ளன. (இவ்விடத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி, பிரெஞ்சு கம்யூனிஸ்டு கட்சி முதலியவை குறிப்பிடப்படுகின்றன) தோழர், டோக்ளியாட்டி தமது பேட்டியில், மதிப்பிற்குரிய சில முடிவுகளோடு, சில தவறான கருத்துரைகளையும் தந்துள்ளார். சோவியத் சமுதாயம் சீரழிவின் சில வடிவங்களைப் பெற்றுள்ளதா, இல்லையா என்ற அவரது கேள்வி நமக்கு உடன்பாடில்லை.

- Marxist Miscellany-18-1979

5. ரினாசிடா - விவாதத்திலிருந்து

(ஸ்டாலின் இறந்த 20வது ஆண்டு நினைவு நாளை ஒட்டி இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்த ஏடான 'ரினாசிடா'வில் வெளிவந்த விவாதத்திலிருந்து...)

புரோகாக்சி : 20-வது காங்கிரசுக்குப் பிறகு ஸ்டாலின் பிரச்னை பற்றிய ஆழ்ந்த கூட்டு ஆய்வு எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. தனிநபர் என்ற அளவில் வந்த ஆய்வில் மெட்விடோவின் நூல் குறிப்பிடத்தக்கது. ஸ்டாலின் தவறுகள் பற்றிய குற்றத்தொகுப்பிற்கும் ஒரு சரியான வரலாற்றின் ஆய்வுக்கும் இடைநிலையில் இப்புத்தகம் இருக்கிறது .. சரியான கூட்டு ஆய்வு வராமைக்குக் காரணம்?

நோவெல்லா: 20வது காங்கிரஸில் வெளிவந்த குற்றச்சாட்டுகளின் வரையறையும் முறையும் சோவியத் யூனியன் வரலாற்றுக் கட்டத்தின் குறிப்பிட்ட முக்கியமான அரசியல் பிரச்னைகளின் பாதிப்பைத் தாங்கியதாகும். இந்த அணுகல் சரியென்றால், சோவியத் கம்யூ. கட்சி அந்தக் காலத்துப் பிரச்னைகளிலிருந்து விடுபட்ட நிலையில் தான் ஸ்டாலின் பற்றிய சரியான மதிப்பீட்டைக் கொள்ள முடியும். இன்றும் அவர்கள் முற்றாக விடுபட்டதாகக் கூற முடியாது. ஆயினும் இன்று சோவியத் தோழர்கள் புதிய மதிப்பீடுகள் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். சர்வதேச ரீதியாக பிற நாட்டுக் கட்சிகளுக்கும் இதே அணுகல் முறை பொருந்தும். ஸ்டாலின் பற்றிய மதிப்பீட்டுப் பிரச்னைகள் நீண்ட கால நோக்கிலான பிரச்னைகள், உயர் அளவில் தத்துவார்த்தப் பிரச்சனைகள், சோசலிசத்தை ஒரு நாட்டில் கட்டும் முறை, வேகம், கம்யூ. கட்சியின் தலைமை பற்றிய பிரச்னைகள்.

போஃபா – சோவியத் தோழர்களைப் பாதிக்கும் பிரச்னைகள் இரு வகையானவை. இன்றைய சோவியத் சமுதாயத்தின் அரசு நிறுவனங்கள், அவற்றுக்கிடையில் உறவுகள் தலைமையின் முறைகள், சோவியத் சமூகம் பற்றிய ஆய்வு முறைகள், அவர்கள் பெற்ற சில வெற்றிகள் முதலியவற்றோடு ஸ்டாலின் காலம் மிகவும் நெருங்கியிருக்கிறது. இன்னொன்று சோவியத் நாட்டிலும் சர்வதேச அளவிலும் நடைபெறும் அரசியல் போராட்டங்களோடு இந்த இருபது ஆண்டுகளாக ஸ்டாலின் பெயரும் செயலும் சம்பந்தப்படுகிறது. சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான விவாதம் ஒரு சான்று. உள்நாட்டில் ஒரு கொள்கைத் திட்டத்தை ஆதரிப்பதிலோ மறுப்பதிலோ ஸ்டாலின் பெயர் இன்றுவரை பயன்படுத்தப்படுகிறது. ஸ்டாலின் பற்றி முதலில் மேற்கொண்ட தனிநபர் வழிபாடு என்ற அணுகல் முறையின் குறைபாட்டை நானும் உணர்கிறேன். ஆனால் இந்த அணுகல் முறை அன்றும் இன்றும் தேவையான ஒரு முன்னுரையாகவே இருக்கிறது.

நாட்டா: ஸ்டாலினது தலைமைக் கால கட்டம் பற்றிய வரலாற்று ரீதியான மதிப்பீட்டுக்கான அரசியல் மாறுதல் நடைபெறவில்லை என்று டோக்ளியாட்டிதான் முதலில் சுட்டிக்காட்டினார். இதனால்தான் அரசியல் வளர்ச்சி ஆழப்படுதல் வரலாற்று வளர்ச்சி ஆழப்படுதற்கான முன்நிபந்தனை. இதுபற்றிய தேவையை அவர் வற்புறுத்தினார். வரலாற்று ரீதியாக ஸ்டாலினையும், அவர் செயல்களையும் அவர் பற்றிய வழிபாட்டையும் மதிப்பிட அவர் கோரினார். இதுதான் மார்க்சிய அணுகல் முறை. ஸ்டாலின் பற்றிய கடுமையான இகழ்வுரைகள் ஆய்வுக்கான தொடக்க நிலை ஆய்வின் அடுத்த புதிய கட்டத்துக்கான தூண்டுதலை இது தந்தது. நிச்சயம் டோக்ளியாட்டியின் இந்த அணுகல் முறை உணர்ச்சிகளிலிருந்து விலகி நின்று சமநிலையோடு கொண்டமுறை. 20வது காங்கிரஸ் தந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு சமனப்படுவதற்கான முறை. தவிர ஸ்டாலின் பற்றிய மதிப்பீடு என்பது அரசியல் போராட்டத்தின் ஓர் அம்சமாகி விட்டது. தற்சமயம் இதற்குள் நான் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை.

20வது காங்கிரஸ் தந்த தூண்டுதலில் ஒரு விளைவு அக்டோபர் புரட்சியானது. உலகில் திறந்து வைத்த வரலாற்று இயக்கத்தின் சிக்கலான தன்மை பற்றிய உணர்வு. திரிபின் தொடக்கம் எப்போது என்பது ஒரு பிரச்னை. 1934ல் தொடங்கியதா? கூட்டுப்பண்ணை ஆக்கத்திலிருந்தா? ஒரு நாட்டில் சோசலிசம் என்பதற்கான போராட்டத்திலிருந்தா? லெனினின் மறைவுக்குப் பின்னிருந்தா? இவை அனைத்தும் ஒரு விரிவான பார்வைக்குள் அடங்கவேண்டும். தவிர லெனினுக்கும் ஸ்டாலினுக்குமான உறவையும் வரலாற்று நிலைபாட்டிலிருந்து விளக்க வேண்டும்.

வாக்கா: 20வது காங்கிரஸ் சோவியத் சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் உலக கம்யூ இயக்கத்திற்கும் ஆற்றிய பங்கைக் குறிப்பட்டதோடு சோவியத் கம்யூ கட்சியின் தலைமை மூன்றாவது அகிலத்தை தோற்றுவித்ததன் மூலம்

கோமின்டர்னின் 7வது காங்கிரசைத் தோற்றுவித்ததன் மூலமும் உலகளவிலான செல்வாக்கைச் செலுத்தியதையும் குருச்சேவின் அறிக்கையில் கண்ட ஸ்டாலினிய – கலைப்பு என்பது தனிநபர் வழிபாட்டு எல்லைக்குள்தான் சுழல்கிறது என்றும் டோக்ளியாட்டி கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இத்தகையதொரு விமர்சனம் குருச்சேவின் அறிக்கையில் இல்லை இம்முறையில் அவரது அறிக்கையின் அரசியல் ஆய்வியல் அணுகுமுறை, "ஸ்டாலினிய" வரையறைக்குள்தான் இருந்தது என்பதை விளக்கினார். ஸ்டாலினியக் கலைப்பிற்கு ஸ்டாலினிய அணுகல் முறையையே பயன்படுத்தியது, சோவியத் கம்யூ.கட்சி. உலக மக்களுக்கு இயக்கநெறியையும் இலட்சியங்களையும் வகுத்தளிப்பதில் தவறியுள்ளது. சோசலிசத்தைக் கட்டும் போக்கில் நேர்ந்த சீர்குலைவுக்கான வரலாற்று அடிப்படையாக சோசலிச உருவாக்கத்திலான புறநிலை வகையான முரண்பாடுகளை அமுக்கியதையும் தத்துவார்த்த மட்டத்தில் புறக்கணித்ததையும் டோக்ளியாட்டி சுட்டிக் காட்டினார். முரண்பாடுகள் புறநிலை வகைப்பட்ட வரலாற்று – வர்க்க முரண்பாடாக இல்லை. எதிரிகளின் சதிகளின் விளைவாக முரண்பாடுகள் ஏற்பட்டன என்பது ஸ்டாலின் கருத்து. வர்க்க இயக்கவியலை முற்றாகப் புறக்கணித்ததின் விளைவு மக்களின் யதார்த்த வாழ்விலிருந்து தொடர்ந்து விலகியதோடு அரசியலுக்குப் பதிலாக நிர்வாகத்தை – இறுதியாக அரசு இயந்திரத்தை முதன்மைப்படுத்துவதில் முடிந்தது. ஸ்டாலினியச் சீர்குலைவு பற்றிய இந்த அம்சத்தைச் சரியாகச் சுட்டிக் காட்டியதன் மூலம் டிராட்ஸ்கி சுட்டிக் காட்டியதை விட வளமான பார்வையை டோக்ளியாட்டி வெளிப்படுத்தினார்.

புரோகாக்சி: சீர்குலைவு என்ற போக்கு முதலில் வேர் கொண்டது கட்சியிலிருந்துதான் என்ற டோக்ளியாட்டியின் கருத்து சரியானதுதான். சோவியத் சமுதாயத்தில் புரட்சிகரத்

தன்மை, புரட்சியிலிருந்து தோன்றியது. இம்முறையில் பிற ஐரோப்பிய சமுதாயங்களிலிருந்தும் புரட்சிக்கு முற்பட்ட ரஷ்யாவிலிருந்தும் சோவியத் சமுதாயம் புதிய குணங்களைப் பெற்றதுதான். புரட்சிக்கு முற்பட்ட சமுதாயமும் சோவியத் சமுதாயமும் சில அம்சங்களின் தொடர்ச்சி உடையன என்றால் ஸ்டாலினிய ஆய்வுக்கு இது போதாது. புதிய சமுதாயத்தில் இந்த அம்சங்கள் எப்படித் தலைதூக்கின என்பதை விளக்க வேண்டும்.

ஸ்டாலினிசம் எப்பொழுது தொடங்குகிறது என்று தீர்மானிப்பது சாத்தியமில்லை. சோவியத் கம்யூ – கட்சியை ஒரு தொடர் இயக்கமாகப் பார்க்க வேண்டும். திறந்த மனத்தோடு இதை ஆராய வேண்டும். சோவியத் சமுதாயத்தின் புரட்சிகரத் தோற்றம் 1917 அக்டோபரில் நடைபெற்றது. ரஷ்ய புரட்சிக்கு அது நடைபெற்ற விதத்தில் விலை கொடுக்க வேண்டியிருந்தது. லெனினை இந்தப் பிரச்னை தொல்லைக்குள்ளாக்கியது. லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் இருந்த உறவு இன்னொரு பிரச்னை, லெனின் இறப்புக்கும் முன்னால் சென்றால், கூட்டுத்தலைமை தனிநபர் தலைமை என்ற பிரச்னை முன்பும் பல வகையாகத் தீர்மானிக்கப்பட்டது.
9-வது காங்கிரசில் லெனினின் கருத்துக்களை நாம் பார்க்க வேண்டும்.

அதிகாரவர்க்க சீர்குலைவு பற்றி லெனின் டிராட்ஸ்கி, ஸ்டாலின் எல்லோருமே கருத்துச் செலுத்தினார்கள். கட்சியும் அரசும் ஒன்றில் மற்றது ஊடுருவுவது பிரச்னை. அரசு இயந்திரம் ஜார்கால அதிகார வர்க்கத்தின் பல குணங்களைத் தன்னிடம் தொடர்ந்து வைத்திருந்தது. 1921க்குப் பிறகு கட்சி உறுப்பினர்களில் மிகப் பலர் அரசு இயந்திரத்தில் சேர்ந்தார்கள். அரசு, கட்சியை உள்வாங்கிக் கொண்டது. கட்சி, நிர்வாக உறுப்பாக- அரசியல் அற்றதாக உருமாறியது.

கட்சியை ராணுவ மயமாக்கியது மிக முக்கியமான பிரச்னை. சோவியத் கம்யூ, கட்சி. கடுமையான இரு

போர்களின் அனுபவத்தோடு உருவாக்கப்பட்டது என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும். உள்நாட்டுப் போர், நாஜிகளுக்கு எதிரான போருடன் கூட்டுப்பண்ணைக்கான போரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கட்சி ஊழியர்களும் கட்சி உருவாக்க உறுப்புக்களும் இவற்றின் வழியே வந்ததை நாம் மறக்கக்கூடாது. இடையிடையே கைவிடப்பட்ட உறுப்புக்கள் மீண்டும் புதுப்பிக்கப் பட்டன. அதிகாரத்துவ உறுப்புக்களும் பழக்கமும் கட்சிக்கு வந்து சேர்ந்தன. கூட்டுணர்வின் உற்சாகத்தில் இராணுவத் தன்மையாதலும் உற்சாகத்தோடு ஏற்கப்படுகிறது.

பிறகு பிரச்னைகள் எழுகின்றன. கட்சியை அரசியல் இயக்கமாக மாற்ற முயலும் போது பிரச்னைகள் ஏற்படுகின்றன. சோவியத் ஒரு கட்சி முறை (ஒன் பார்ட்டி சிஸ்டம்) இத்தகைய மாறுதலுக்கான நெகிழ்வு உடையதாக இல்லை, உள் நாட்டுப் போருக்குப் பிறகு பத்தாவது காங்கிரசில் இதே போலப் பிரச்னை, உலகப் போருக்குப் பிறகு 20வது காங்கிரசில் இப்பிரச்னை கூட்டுப் பண்ணையாக்கத்திற்குப் பிறகு இம்முயற்சி செய்யப்படவில்லை.

நாட்டா : கட்சியே நமது ஆய்வுக்கான மையமாக இருக்க வேண்டும் என டோக்ளியாட்டி கண்டது சரியே. எத்தகையது இக்கட்சி? கட்சி பற்றிய லெனினியக் கருத்தாக்கத்திலுள்ள சில காரணிகள் இதில் செயல்படுகின்றன. கட்சி பற்றிய இக்கருத்தாக்கம் நாளடைவில் அரசாகவும் உலகு தழுவிய கருத்தாக்கமாகவும் வளரக் கூடியது. புரட்சிகரப் போக்கில் கட்சியின் பங்கு பெருமைப்படுத்தத்தக்கதாகிறது. ஐக்கியம் மிகுகிறது. இறுதியில் ஒரு கட்சி ஜனநாயகமாக இது உயர்கிறது. லெனினிலிருந்து இத்தகைய முடிவுக்கு நாம் வர முடியாது. ஆனால் கட்சி பற்றிய லெனினியப் பார்வைக்கான வரலாற்று அடிப்படை பற்றிய விவரிப்பு இது. அதிகாரக் குவிதலும் ஐக்கியமும் அரசோடு நெருக்கமும் இப்படி நேர்கின்றது. பத்தாவது காங்கிரசின் போது (1921) கட்சியில் ஐக்கியம் பற்றி லெனின் கவலை கொண்டார்.

கட்சியில் ஏற்படும் பிளவு சமூகப் பின்னலிலும் பிளவை ஏற்படுத்திவிடக் கூடிய நிலை. கட்சி என்பது சமூகக் கட்டமைப்பின் மையம் என்று லெனின் பார்த்தார். 1917 முதல் 22 வரையான காலத்திலும் மையப்படுத்தலும் ஜனநாயகமும் சிறப்புற இணைந்ததாக லெனின் தலைமையிருந்தது. அரசியல் அவசர நிலைகளுக்குத் தகுந்தவாறு விதிகளை வகுப்பது – இது ஸ்டாலின் நடைமுறையாகக் கூறப்படுகிறது – லெனின் நடைமுறையல்ல. 1921-22 காலத்தில் கட்சியின் பங்கு, தன்மை பற்றிய மாறுதலுக்கான போக்குகள் தோன்றின. வர்க்கங்களாகப் பிளவுபட்ட ஒரு சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கான அரசியல் உயிரி (ஆர்கானிஸம்) என்பதிலிருந்து ஒருங்கிணைந்த ஒரு கட்டமைப்பிற்குள் உருப்படியான முறையில் செயல்படும், அரசியல் உயிரியாக மாறுவதாகிய போக்குகள் தோன்றின. இறுதியில் அரசின் அதிகாரத்துவக் கிளையாகத் தன்னைக் காணும் ஆபத்து இதில் இருக்கிறது. ஸ்டாலின் தலைமைக்கு வருவதற்கு முன்பே புறநிலையான போக்குகள் கட்சியை இவ்வழியில் செலுத்திக் கொண்டிருந்தன. தலைமையிலும் கட்சியிலும் ஏற்படும் பிளவு அரசிலும் பிளவை ஏற்படுத்தும் என்பதை 1922-23ல் லெனின் பார்த்தார். கட்சியும் அரசும் நெருங்கியிருக்கும் நிலையில் கட்சியில் ஏற்படும் பிளவு அரசிலும் ஏற்படும். லெனின் கூறிய அறிவுரை – மையக்குழுவில் பாட்டாளிவர்க்கப் பிரதிநிதிகளை அதிகரித்தல் முதலியவை – அன்றே போதுமானதாக இல்லை. அதிலிருந்து ஸ்டாலினின் தோற்றமும் அளவு கடந்த அதிகாரக் குவிப்பும், கட்சியின் ஜனநாயக வாழ்வுச் சிதைவும் – ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலப் பரிமாணத்தைப் பெறுகின்றன.

நோவெல்லா: கட்சி பற்றி ஸ்டாலினியக் கருத்தாக்கத்திற்கான மூலம் லெனினிலேயே இருந்தது என்பது உண்மை. அத்துடன் குணவியல் வகையிலான பாய்ச்சல்களும் நேர்ந்துள்ளன. ஸ்டாலினியக் காலம் நேர்கோட்டுத் தன்மையில் இல்லை. அதிலும்

மாறுதல்களும் பாய்ச்சல்களும் நேர்ந்தன. புதிய பொருளாதாரத் திட்டம் முதல் விரைவாக சோசலிசத்தைக் கட்டுவது வரையிலான காலம் போதிய தெளிவுடன் விளக்கப்படுகிறது. 1933 முதல் 35 வரையிலான காலம் நிறைய கேள்விகளை எழுப்புகிறது. இக்காலத்தில்தான் ஸ்டாலின் தலைமையில் அமைந்த கட்சியின் செயல்பாடுகளுக்கான முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன. லெனின் இறந்தது தொடங்கி இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலம் வரை, ஸ்டாலின் கட்சி பற்றிய தன் கருத்தாக்கத்தோடு தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். உயர்தரப்பிலிருந்த அரசியல் குழு ஸ்டாலின் தலைமையில் முழு நம்பிக்கை வைத்திருந்தது. தனது விருப்பத்தை அவர் திணிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஸ்டாலினியக் (கட்சி பற்றிய) கருத்தாக்கம் வெளிநாடுகள் பலவற்றிலும் இக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஸ்டாலின் மித் அல்லது ரஷியன் மித் ஏற்பட்ட காலம் அது. லெனினிலிருந்து தொடர்ச்சியாகவும் பாய்ச்சலாகவும்தான் இதை விளக்க வேண்டும்.

பாய்ச்சலுக்கான அரசியல் தேவைகள் இருந்தன. புதிய பொருளாதாரத் திட்டத்தை முடிவுக்குக்கொண்டு வருவதும் தேவை. விரைந்து சோசலிசத்தைக் கட்டுவதும்தேவை. பல ஆண்டுகள் புதிய பொருளாதாரத்திட்டம் நடைமுறையிலிருந்த போது புரட்சியின் அடிப்படை ஆதாயங்கள் சிலவற்றை இழப்பதற்கான நிலைமைகள் தோன்றின. இந்தப் போக்கை மாற்றியாக வேண்டும். லெனின் பு.பொ. திட்டத்தை என்றைக்கு இருக்க வேண்டியதாகக் கருதவில்லை. இந்நிலையில், கட்சியின் பங்கைத் தீவிரமாக வற்புறுத்த வேண்டியிருந்தது. இறுக்கமானதாக உறுதியானதாக, கட்சி உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, சர்வதேச ரீதியான போராட்டங்களும் வளர்ந்தன. சர்வதேச உறவு நிலைகளில் சோவியத் யூனியனுக்கு இது சிரமமான காலமாக இல்லை. கெடுபிடிப் போர்க்காலமாகவும் இல்லை. இறுக்கம் தளர்ந்து வந்த காலம். உள்நாட்டுப் பிரச்னைகள்தான் முதன்மை

பெற்றன. கட்சியும், தலைமையில் பெரும்பான்மையும் சர்வதேச அளவில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அனைத்தும் ஸ்டாலினுக்குப் பேராதரவாகத் திரண்டிருந்த காலம். சோசலிசத்தைக் கட்டுவதில் விரைந்து முன்னேறுவதற்கான சாத்தியம் பற்றிப் பெரும் நம்பிக்கை நிலவியது. நிர்வாகத்துறையில் மட்டுமல்லாமல் அரசியல் துறையிலும் சம்பந்தப்பட்ட பிரச்னைகளின் கடுமை பற்றிக் குறைத்தே மதிப்பிட்டனர். இந்த நம்பிக்கை சர்வதேச அளவில் பரிமாணம் கொண்டிருந்தது. கட்சியின் திறமை பற்றி அகநிலை அம்சத்தை மிகைப்படுத்திய நிலையில், புறநிலை யதார்த்தத்தின் சிக்கல் பற்றிக் குறைத்து மதிப்பிட்டனர். இந்த மிகையான நம்பிக்கை நம் அனைவருக்குமே இருந்தது. 'உலகப் பாட்டாளிகளின் தந்தை நாடு ரஷ்யா' என்ற முழக்கம் இந்தச் சூழலில்தான் இருந்தது. பொறுப்புள்ள அரசியல் தலைவர்களும் இவ்வாறே கருதினர். புறநிலையைக் குறைத்தும் அகநிலையைப் பெரிதாக்கியும் நாம் செய்யும் மதிப்பீடுகள் இன்றும் நமக்கு உள்ளன. ஸ்டாலின் பற்றிய ஆய்வை இன்னும் இந்தப் போக்கு பாதிக்கிறது. எளிமைப்படுத்துதல் என்பது லெனினிடம் இல்லை. 'விரைவில் கம்யூனிசத்தை அடைவோம்' என்ற குருச்சேவ் முழக்கம் எளிமைப்படுத்துதல்தான். கட்சியை இது பாதித்தது. தலைமைக் குழுவின் கொள்கைத் திட்டத்திலிருந்து வேறுபடுவதை அனுமதிக்காத ஒரு கட்டம் பின்னர் தோன்றியது. கட்சி ஒற்றைக்கல் மண்டபமாக (மோனோலித்திக்) மாறியது. தனக்குள்ளே இயக்கத்தை உடைய கட்சி, தனக்குள் இயக்கமற்றதாக மாறியது.

வாக்கா: சோவியத் சமுதாயத்தின் முரண்பாடுகளையும், தனித்தன்மைகளையும் வரையறை செய்ய வல்ல மைய நிறுவனமாகக் கட்சியைக் கொள்வதை நானும் ஏற்கிறேன். கட்சி மக்கள் உறவுக்குப் பதிலாக கட்சி, இயந்திர உறவையும் முதன்மைப்படுத்திய போக்கு தொடர்ந்து அதிகரித்தது. இதற்கான வேர்கள் சோவியத்

யூனியனுக்குள்ளும் எல்லாவற்றையும் விட அதிகமாக வெளியிலும் இருந்தன. 1920களின் தொடக்கத்தில் மேற்கு ஐரோப்பாவில் புரட்சி தோற்றது மிக முக்கியமான காரணம். இதன் விளைவாக மக்களின் தன்னாட்சியின் பல வடிவங்களைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் தடங்கல் ஏற்பட்டது. இவ்வகை வடிவங்கள் இல்லாதபோது அரசியலுக்குப் பதிலாக நிர்வாகத்தையே கட்சி முதன்மைப்படுத்தியது.

கட்சி மக்களுடன் கொண்ட தொடர்பை வற்புறுத்துவது புரட்சிகரமான தலைமையின் நடத்தையை மதிப்பிடுவதற்குத் தேவையாகிறது. இந்தக் கண்ணோட்டத்தில், லெனின் தலைமையிலிருந்து ஸ்டாலின் தலைமை என்பது பின்னோக்கிய குணவியல் வகையிலான பாய்ச்சல். உலகப் புரட்சி அக்காலத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தது. இதன் கண்ணோட்டத்திலிருந்து சிந்திக்கவும் தலைமை தாங்குவதுமாகிய திறன் குறைந்த காலமே, பின்னோக்கிய பயணத்தின் தொடக்கம். ஸ்டாலின் அல்ல, ஸ்டாலினியத் தலைமை நிகழ்ச்சி உலகப் புரட்சி என்ற நிகழ்சிச்சி நிரலில் இடம் பெற்றிருப்பதாகக் கருதிச் செயல்படவில்லை.

உலகப் புரட்சிக்கு ஸ்டாலினும் சோவியத் யூனியனும் அளித்த மிகச் சிறந்த நன்கொடை, (அகிலத்தின் 7வது காங்கிரசின் முடிவாகிய) பாசிசத்தை முதலில் தனிமைப்படுத்துதலும் பிறகு தோற்கடித்தலுமாகும். உலகப் புரட்சி, அக்காலக் கட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் உள்ளது என்ற முறையில் நிலைபாடு எடுப்பது என்பது ஒரு குறிப்பிட்ட அளவு சித்தாந்த வளத்தோடு இருப்பதாகும். ஸ்டாலினின் 'லெனினியத்தின் பிரச்னை'களில் இந்த வளம் இல்லை. இது ஸ்டாலினுக்கு மட்டுமல்ல. முழுத் தலைமைக்கும் பொருந்தும்.

போ∴பா: நமது ஆய்வுக்கு மையமாக இருப்பது கட்சி மக்களோடு கொண்ட தொடர்புதான். உள் நாட்டுப் போரைக் கடந்து வந்த கட்சி 1917லிருந்து வேறுபட்ட கட்சிதான். லெனினும் இதை உணர்ந்திருந்தார். தொடர்ந்து

கட்சியைப் பாதித்த பிரச்சனைகள் பல. எல்லாவற்றையும் விட முக்கியமான கேள்வி: மேட்விடேல் கூறியதுபோல, ஸ்டாலின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட விந்தையான நிகழ்வின் போது கட்சி செயலற்றிருந்தது எப்படி என்பதுதான். இதன் தொடர்பாக நான் இரு இயக்கங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, கூட்டுறவாக்கம், இது தேவையான இயக்கம். இதற்கான பின்னணி பற்றி வரலாற்றாய்வாளர் நிறைய விவரங்களைத் தொகுத்துள்ளனர். இந்த இயக்கம் நடைபெற்ற காலத்தில் சோவியத் ரஷ்யாவில் விரிவான ஜனநாயக முறையிலான விவாதங்கள் நடந்தன. 1929க்குப் பிறகு போதுமான விவரங்கள் கிடைக்கவில்லை. கூட்டுறவாக்கத்தின் இன்னொரு பிரச்சனை. முறை பற்றியது, இதுபற்றி சோவியத் நாட்டில் 1950-60ல் நடந்த விவாதங்கள் பிறகு வெளியிடப்படவில்லை. கூட்டுறவாக்கமும் அதன் முறையும் கட்சியை எப்படிப் பாதித்தன என்பது கேள்வி. லெனின் கருதியபடி போல்ஷ்விக் கட்சி பாட்டாளிகள் உழவர்கள் என்ற இரு வர்க்கங்கள் சார்ந்தது. இவற்றுக்கிடையிலான உறவு துண்டிக்கப்பட்டால் விளைவுகள் கடுமையாக இருக்கும். கூட்டுறவாக்கத்தின் போது இத்தகைய பிளவு ஏற்பட்டது.

தொடர்ந்து 1935-39ல் நடந்த நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. கடுமையான அடக்குமுறையின் போது பலியானது கட்சி தான். இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இருந்த கட்சி, முற்றிலும் வேறான கட்சி. இந்தக் கட்சியின் தன்மை என்ன என்பது சிக்கலான பிரச்னை. கட்சியின் அழிவு முன்பே தொடங்கி விட்டது. ஸ்டாலினது அதிகாரம் முழுமையானது இக்காலத்தில்தான். போரின் போது ஸ்டாலின் மக்களின் விருப்பம் அறிந்து மக்களோடு இணைந்து செயல்பட்டார் என்பது உண்மைதான்.

ஒற்றை மாதிரி சோசலிசம் பற்றிய கருத்தாக்கம் சோவியத் கட்சியதிகாரத்தின் தொடக்கம் முதலே ஏற்பட்டது. இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் கம்யூனிச அகிலம்

தோன்றியது. 7-வது காங்கிரஸ் முதற்கொண்டு பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வருவதற்கான பாதைகள் பல உள்ளன என்ற கருத்து பலப்பட்டது. போருக்குப் பிறகு கோமின்பார்ம் தோற்றத்திலிருந்து நிலைமை முற்றாக மாறியது. சோசலிசத்திற்கான பாதை மாறிய பிரச்னை, பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றியதிலிருந்து மாறி, சோசலிசத்தைக் கட்டுவது பற்றிய பிரச்சினையாயிற்று.

நாட்டா: ரஷ்யப் புரட்சி, வெற்றி பெற்ற உற்சாகத்தில் 'ரஷ்யாவில் செய்ததைப் போலவே' என்ற கருத்து ஏற்பட்டது. உள் நாட்டிலும் உலக அளவிலும் ஏற்பட்ட பிரச்னைகளைக் கண்டு, லெனின் வேறு பாதைகள் பற்றியும் சிந்தித்தார். 'ரஷ்யா முன்மாதிரியான நாடு என்பது விரைவில் மாறிவிடும்' என்று லெனின் கருதினார். மேற்கு நாடுகளில் பாட்டாளி வர்க்க இயக்கங்கள் மீது ஏற்பட்ட தாக்குதல்களும் ரஷ்யாவில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் சோசலிசத்திற்கு மாறுவதற்கான வரலாற்றுக் காலகட்டத்தின் சிக்கலான தன்மையை உணர்த்தின. இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இத்தகைய சிந்தனைகள் தீவிரமாகி வெளிப்பட்டன.

வாக்கா: மேற்குநாட்டில் புரட்சிகரசக்திகள் தம் கடமையை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்தன. கிராம்சியும் அவர் சார்ந்த குழுவும் தவிர, அக்டோபர் புரட்சியின் ஆழ்ந்த பொருளை சுயமான முறையில் விளங்கிக் கொள்ள மேனாட்டில் வேறு யாரும் முயற்சி செய்யவில்லை. சோவியத் யூனியன் மட்டும் சோசலிசத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தது. ஒற்றை மாதிரி சோசலிசம் பற்றிய கருத்தாக்கம் மேலோங்குவதற்கு இவை காரணமாயின.

சியாரோ மாண்டே: சிக்கலான இப்பிரச்சனைகள் பற்றி நாம் தொடர்ந்து ஆராய வேண்டும். பிரச்சனைகளை நாம் எளிமைப்படுத்தி விடுவது தவறாகி விடும். கட்சியிலுள்ள உறுதி வாய்ந்த இளைய தலைமுறையினருக்கு இந்த விவாதம் பயன்படும். பயன் பட வேண்டும்.

– Indian Left Review May 1974.

2. ஸ்டாலின் பிரச்சினையில் இந்தியக் கம்யூனிஸ்டுகள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி-மையக்குழுவின் தீர்மானம்(ஜூலை 1956)

மார்க்சிய-லெனினியத்தின் ஆன்மாவுக்குப் புறம்பான தனிநபர் வழிபாட்டுக்கு எதிரான உறுதியான போராட்டம் நடத்துவது தேவை. தனிநபர் வழிபாடு, மக்கள் திரளினதும் கட்சியினதும் பங்கைக் குறைப்பதோடு அவர்களின் முன் முயற்சியைத் தடுக்கிறது. முதலாளிய நாடுகளின் சுற்றி வளைப்பு, பாசிசத்தின் தோற்றம், சோவியத் யூனியன் தாக்கப்படுவதற்கான அபாயம் என்ற வரலாற்றுச் சூழலில் உறுதியான கட்டுப்பாடும் தலைமை மையக் குவிப்பும் ஜனநாயகத்தைச் சில முறைகளில் நியாயமாகக் கட்டுப்படுத்தலும் தேவைப்பட்டன. இந்நிலைமைகளில்தான் ஸ்டாலினின் சில எதிர்மறையான பண்புகள் வளரத் தொடங்கின. இது படிப்படியாகத் தனிநபர் வழிபாட்டுக்கும் கூட்டுத் தலைமையை செயல்படாமைக்கும் வழி வகுத்தது. சோவியத் ஜனநாயகச் சீர்குலைவுக்கும் உள் கட்சி நடைமுறையின் சீர்குலைவுக்கும் ஸ்டாலின் தான் முதன்மையாகப் பொறுப்பாவார் என்பது தெளிவு. ஸ்டாலின் பிற்கால வாழ்வின் போது, தனிநபர் வழிபாடு பயங்கரமான அளவில் வலுப்பெற்றது. ஸ்டாலினது இறுதிக் காலமாகிய இந்த இருபது ஆண்டுகளின் போதுதான், சோவியத் யூனியனும் உலகக் கம்யூனிச இயக்கமும் மகத்தான வளர்ச்சி பெற்றன. இக்காலத்தில் ஸ்டாலினது பங்கு பற்றிய ஒரு தலைச் சார்பான மதிப்பீடு மக்கள் மத்தியில் திகைப்பை உண்டு பண்ணுகிறது. இது கம்யூனிசத்தின் எதிரிகளால் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தப் பயன்படுத்தப்படும். எனவே, ஸ்டாலின் வாழ்க்கையையும் பணியையும் பற்றிய ஒட்டு மொத்தமான புறவயமான மதிப்பீடு தேவையென்று மையக் குழு கருதுகிறது.

ஸ்டாலின் என்ற தனி நபரையும் அவரது பங்கு பற்றியும் அவர் காலத்தில் அளவுக்கதிகமாக புகழ்ந்த விந்தை நிகழ்வுக்கான தகுந்த விளக்கம் தேவை. தன்னிச்சையான, மிகையான செயல்பாடுகளுக்கு வழிவகுத்த காரணங்கள் பற்றிய ஆய்வை மேற்கொள்வது தேவை. அப்போதுதான் தனிநபர் வழிபாடு பற்றிய சரியான மதிப்பீட்டைச் செய்யமுடியும். எல்லாத் தவறுகளுக்கும் தன்னிச்சையான செயல்களுக்கும் தனிநபர் ஒருவர் குறைகளையே காரணமாகக் கூறுவது மார்க்சீய லெனினிய முறையாகிய வரலாற்றுப் புறநிலை ஆய்வின் தரத்திற்குப் பொருந்தாது.

- Documents of the History of the Communist Party of India VIII. Vol.

அஜாய் கோஷ்: (ஜெயப்பிரகாஷ் நாராயணன் கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு எழுதிய பதிலிலிருந்து.. 1956 டிசம்பர்)

சோவியத் யூனியனின் தன்னிகரற்ற சாதனைகளையும் உலக நிகழ்ச்சிகளில் அதன் பங்கையும் அழுத்தம் கொடுத்துச் சொல்லும்போதே இடையில் நடைபெற்ற தவறுகள் குறைபாடுகளின் கடுமையை நாங்கள் குறைத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நாங்கள் வற்புறுத்திச் சொல்வது இந்தத் தவறுகள் சோசலிச சமுதாயத்தின் அடிப்படைத் தன்மையை மாற்றிவிடவில்லை. இந்தத் தவறுகளை சோவியத் யூனியனின் தலைவர்களே இதுவரை எந்த அரசும் செய்யாத அளவு உறுதியோடும் தெளிவாகவும் வெளிப்படுத்தியுள்ளனர். தவிர, இவை பற்றிய முழுமையான ஆழமான ஒரு மறு பரிசீலனை தீவிரமாக அங்குத் தொடங்கியிருக்கிறது. நீங்கள் இதுபற்றிக் கவனம் கொள்ளவில்லை.

குருச்சேவ் வெளிப்படுத்தும் வரை உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டுள்ளீர்கள். உண்மை என்னவென்றால் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இவற்றைச் சொல்லும்வரை கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களுக்கு அறவே தெரியாது.

.... சோவியத் யூனியன் சம்பந்தமான எல்லாவற்றையும் நாங்கள் இலட்சிய மயமானதாகக் கருதியது தவறு. சோசலிஸ்டுகளும் கம்யூனிஸ்ட் அல்லாத ஜனநாயக வாதிகளும் சோவியத் யூனியன் பற்றிச் செய்த விமர்சனங்கள் பற்றி நாங்கள் அதிகக் கவனம் கொண்டிருக்க வேண்டும். சோவியத் யூனியன் செய்தவை அனைத்தையும் நாங்கள் ஆதரித்தோம். சோவியத் செயல்திட்டத்தை விமர்சனம் செய்த எல்லாரையும் கண்டித்தோம். இந்தப் போக்கு எங்களில் வளர்ந்ததன் விளைவாக கம்யூனிஸ்டுகள் – சோசலிஸ்டுகள் ஐக்கியத்திற்கும் சோசலிசத்திற்கும் ஏற்பட்ட அழிவை நாங்கள் உணர்கிறோம். இந்தப் போக்கை நாங்கள் கைவிட உறுதி கொள்கிறோம்.

.... சோவியத்யூனியனில் நடைபெற்ற தவறான நடவடிக்கைகளின் அடிப்படையில், அதனுடைய சமூக பொருளாதார, அரசியல் அமைப்பை முற்றாக நீங்கள் கண்டிக்கிறீர்கள். இதற்கு மாறாக எந்த அமைப்பை நீங்கள் முன்வைப்பீர்கள்? முதலாளிய நாடுகளில் செல்வந்தர்கள் வறியவர்களை கசக்குவதாகிய ஜனநாயகத்தையா? இது உங்கள் கருத்தாக இருக்க முடியாது. நீங்கள் கூறும் மாற்று என்ன?

உங்களிடம் விஞ்ஞான முறையிலான அணுகல் முறையை எதிர்பார்த்தோம்; ஆனால் ஏமாந்தோம்.

-Documents of the History of the Communist Party of India VIII. Vol.

ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்:

சர்வ குணங்களும் பெற்ற தலைவராக ஸ்டாலினைக் கருதியது மார்க்சிய – லெனினியத்துக்கு முரணானது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரைப் போலவே ஸ்டாலினும் சிறந்த அறிவாற்றலைப் பெற்ற ஒரு மனிதராக - புரட்சியாளராக இருந்தார்.

.... அதே சமயம் ஒரு மனிதனுக்குரிய இயல்பான பல பலவீனங்களைக் கொண்டவராகவும் இருந்தார்.

தம்மிடமுள்ள தவறான போக்குகளை அகற்ற ஸ்டாலினும் கட்சியும் கூட்டாக முயற்சி செய்வதாக இருந்தால் கட்சியின் பொதுச் செயலாளராக நீடித்து இயக்கத்தை நடத்திச் செல்ல ஸ்டாலினுக்கு முடியும் என்று லெனின் கருதினார். லெனினது இந்த மதிப்பீடு நூற்றுக்கு நூறு சரியானது. குருச்சேவ் கூட்டாளிகள் ஸ்டாலின் மீது திடீரென வசைபாடத் தொடங்கினார்கள். அதுவரை தெய்வமாக இருந்தவர் திடீரென பிசாசாக மாறினார். ஸ்டாலினது உடலை அகற்றிய விதத்திலும் அவர்கள் தவறான அணுகுமுறையையே பின்பற்றினார்கள்...

(ஸ்டாலினது சாதனைகளைத் தொகுத்துச் சொல்லும் ஈ.எம்.எஸ். தொடர்ந்து எழுதுவதாவது)... அதே வேளையில் மேலே குறிப்பிட்டவைகளையெல்லாம் ஸ்டாலினது சொந்த வெற்றிகளாகக் கூறுவது உண்மைக்குப் பொருந்தாது. சோவியத் யூனியன் பகைவரை வென்று பெரும் சக்தியாக உருவாகியது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் – மையக் குழுவின் அரசின் – கட்சியின் நடவடிக்கைகளாகும். இவற்றின் தலைமை பீடத்தில் இருந்த மாபெரும் தலைவர் என்ற இடத்தை ஸ்டாலின் வகித்தார்.

ஸ்டாலினுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவர் விரும்பியோ விரும்பாமலோ – சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டுத் தலைமையைத் தாழ்த்தி, ஸ்டாலின் என்ற தனிநபரை உயர்த்தும் போக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் மட்டுமல்லாமல் உலக கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதிலும் இருந்தது. ஸ்டாலின் வி யத்தில் மட்டுமல்ல, உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அங்கமாக இருந்த ஒவ்வொரு கட்சியின் தலைவர்களது வி யத்திலும் இது பிரதிபலித்திருக்கிறது என்பது தான் இந்தச் சர்ச்சைக்கு இன்றிருக்கிற முக்கியத்துவம். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த ஸ்டாலினைப் போலவே ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு ஸ்டாலின் உருவாக வேண்டும் என்ற எண்ணமே கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பற்றிப் படர்ந்தது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முழுவதையுமே பீடித்த ஒரு நோயாக இது வளர்ந்தது. ஜனநாயக மத்தியத்துவம் பங்கப்படுத்தப்பட்டது. அதற்கு மாறாக கட்டுப்பாடற்ற மத்தியத்துவமும் எல்லா மட்டத்திலும் உள்ள கட்சி அமைப்புக்களின் ஜனநாயக நிராகரிப்பும் தனிநபர் மேலாதிக்கமும் வலுப்பெற்றன....

– தீக்கதிர் – ஸ்டாலின் நூற்றாண்டு விழா மலர்,
டிசம்பர் – 1979

பசவ புன்னையா:

"…. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 20-ஆவது காங்கிரசில் ஸ்டாலினது தனிநபர் வழிபாடு பற்றிய விமர்சனத்தின் பிரதிபலிப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அவசரத் தன்மை கொண்டதொரு கருத்தை வெளியிட்டது... சரித்திர பூர்வமான நிலைமைகள் மற்றும் ஸ்டாலினது குணாம்சத்தில் இருந்த குறைபாடுகள் ஆகியவற்றின் காரணமாக மட்டுமே சோவியத் யூனியனில் தனிநபர் வழிபாட்டு முறை வளர்ந்தது என்று வாதாடுவது பொருந்தாத வாதம். இந்தப் பொறுப்பு கணிசமான அளவுக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இதர தலைவர்கள் மீதும் சார்ந்திருந்தது. 1935 முதற்கொண்டு ஆரம்பமான கால கட்டம் முழுவதும் தனிநபர் வழிபாட்டு முறைக்கு எதிராக உறுதியான போராட்டம் நடத்துவது சாத்தியமற்றதாக இருந்தது என்று இன்றைய சோவியத் தலைமை கூறுவது சிந்திக்க முடியாததாகத் தோன்றுகிறது. நீண்ட காலத்திற்கு இத்தகையதொரு போராட்டத்தின் அவசியம் உணரப்படவில்லை என்று கருதுவது அதிகப்பொருத்தமானதாகத் தோன்றுகிறது..."

– தீக்கதிர் – ஸ்டாலின் நூற்றாண்டு விழா மலர்,
டிசம்பர் – 1979

என்.கே. கிருஷ்ணன்:

"…. ஸ்டாலின் தனிநபர் வழிபாட்டுத் திரிபுகள். சோசலிச சமுதாயத்தின் இயல்பையோ சோவியத் கம்யூனிஸ்ட்

கட்சியின் சித்தாந்த அரசியல் நிறுவன அடிப்படைகளையோ மாற்ற முடியவில்லை. நடந்தது, சோவியத் ஜனநாயகத்திலோ, சோசலிசத்திலோ, கம்யூனிசத்திலோ உள்ளார்ந்தது அல்ல. பாசிசகால கட்டத்தில் – பாசிசத்திற்கும் பாசிசத்தின் ஊடுருவலுக்கும் எதிரான போராட்டத்தின் தேவையினால் ஏற்பட்ட மிகக் கடுமையான நெருக்கடி நிலையில்தான் இது நடந்தது".

-Marxist Misellany No: 18, Stalin Special, December 1979

சோவியத் யூனியனில் முதலாளியம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது எப்படி?

-சுனில் பவார்

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு குருச்சேவ் புரட்டலாளர்களால் துவக்கி வைக்கப்பட்ட முதலாளிய மீட்பு பிரஸ்னேவ் – கோசிஜின் கும்பலால் எப்படி முழுமையாக்கப்பட்டு முதல் சோசலிச அரசை எப்படி அவர்கள் சமூக ஏகாதிபத்திய அரசாக மாற்றினார்கள் என்பதை சோவியத் நாட்டில் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டே விளக்குகிறது இச்சிறு நூல். ரூ.1.50 விலையுள்ள இந்நூலை வெளியிட்டோர்: 16

மங்கேஷ் தெரு, தி.நகர்,
சென்னை – 17.

3. ஸ்டாலின் பிரச்சனையில் சீனக் கம்யூனிஸ்டுகள்

1. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சனத்திலிருந்து

ஸ்டாலினின் குணங்களும் தவறுகளும் வரலாற்று வகையான புறநிலையான யதார்த்தம் சம்பந்தப்பட்டவை. இவற்றை ஒப்பிட்டால் அவரது தவறுகளைக் காட்டிலும் குணங்களே மிகுதி. ஸ்டாலினின் சிந்தனையையும்

செயலையும் தொகுத்துப் பார்க்கும்பொழுது, வரலாற்றுக்கு மரியாதை தரும். எந்த ஒரு நேர்மையான கம்யூனிஸ்டும் ஸ்டாலினிடம் எது முதன்மை பெறுகிறது என்று முதலில் கவனிப்பான். ஆகவே ஸ்டாலினின் தவறுகளைச் சரியாகப் புரிந்துகொண்டு விமர்சனம் செய்து வென்றெடுக்கும்போது, ஸ்டாலின் வாழ்வில் முதன்மையானது எதுவோ அதைக் காப்பதும், அவர் காத்து வளர்த்த மார்க்சிய லெனினியத்தை காப்பதும் தேவையாகிறது.

"- On the Question of Stalin" 'People's Daily'
and 'Reg Flag' September 13. 1963.

2. ஸ்டாலின் தத்துவத் தவறுகள் பற்றி

மாவோ:

ஸ்டாலினிடம் இயங்காவியல் நிலைபாடு இடம் பெற்றிருந்தது. மார்க்சிய இயங்கியல் நான்கு முதன்மையான உறுப்புக்களைக் கொண்டிருக்கிறது என்றார் ஸ்டாலின். பொருள்கள் ஒன்றோடொன்று கொண்டிருக்கும் உறவு பற்றியது முதல் உறுப்பு. காரணம் எதுவுமே இல்லாமல் பொருள்கள் உறவு கொண்டிருப்பது போலக் கூறுகிறார். ஒவ்வொரு பொருளினுள்ளும் முரண்பட்ட இரு அம்சங்கள் உறவு கொண்டுள்ளன. நான்காவது உறுப்பாக, எல்லாப் பொருளிலுமுள்ள உள்முரண்பாடு பற்றிப் பேசுகிறார். பிறகு எதிர்மறைகளின் போராட்டம் பற்றி - அவற்றின் ஐக்கியம் பற்றி எதுவுமே குறிப்பிடாமல் பேசுகிறார்.

சோவியத் யூனியனில் தொகுக்கப்பட்ட 'சுருக்கமான தத்துவ அகர முதலி'யில் இணைவு (Identity) பற்றிய குறிப்பில் ஸ்டாலின் நிலைபாடு இடம் பெறுகிறது. "போருக்கும் அமைதிக்கும், பூர்சுவாவுக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும், வாழ்வுக்கும், சாவுக்கும் இவை போன்ற நிகழ்வுப் போக்குகளுக்கிடையில் இணைவே இருக்க முடியாது" என்று குறிப்பிடப்படுகிறது... எதிர்மறைகளின்

போராட்டம் – ஐக்கியத்திற்கிடையிலான தொடர்பு பற்றி ஸ்டாலின் அறியவில்லை. ஒரு பொருள் ஒன்று இதுவாக, அல்லது அதுவாக இருக்க வேண்டும் என்ற இயங்காவியல் நிலைபாடு இது. இப்படிக் கருதுபவர்கள் எதிர்மறைகளின் ஐக்கியத்தை ஏற்பதில்லை. இதனால் அரசியல் தவறுகள் செய்யப்படுகின்றன. எதிர்மறைகளின் ஐக்கியத்தை நாம் ஏற்பதால், நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துகள் மோதட்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம்.

சோசலிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளுக்கும், மேல் கட்டுமானத்திற்கும் பொருளியல் அடித்தளத்திற்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதை ஸ்டாலின் நெடுங்காலமாக மறுத்தார். இறப்பதற்கு முன் "சோவியத் யூனியனில் சோசலிசப் பொருளாதார பிரச்னைகள்" எழுதிய போது, சோசலிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டைத் தயக்கத்தோடு குறிப்பிட்டார். தவறான கொள்கைகளும் செயல் முறைகளும் சிரமத்தைத் தோற்றுவிக்கும் என்பதை ஒப்புக் கொண்டார். அப்போது கூட இப்பிரச்னையின் முக்கியத்துவத்தை உணரவில்லை. சோசலிச சமுதாயத்தை முன்னோக்கி இயக்குகிற அடிப்படையான முரண்பாடுகள் இவை என்பதை அவர் அறியவில்லை.

Mao Tsetung : Selected Works Vol V.

3. ஸ்டாலினின் (சோவியத்) பொருளாதாரக் கொள்கைகள் பற்றி மாவோ

ஜேம்ஸ்பெக்:

முன்னுரையில்:

விடுதலையடைந்த நிலையில், சமுதாய வளர்ச்சிக்கான முன் மாதிரியாக, சோவியத் யூனியனைச் சீனமக்கள் கருதினர். சோவியத் யூனியனில் அறிவாளிகளால்

திட்டமிடப்பட்டு அதிகார வர்க்கத்தால் நிர்வாகம் செய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தவிர வேறு முன் மாதிரி அவர்களுக்கு இல்லை. இத்திட்டங்கள் கனரகத் தொழிலின் தேவைகளுக்கு கிராமப்புறத்தின் தேவைகளை உட்படுத்தின. இருந்த போதிலும், சோவியத் யூனியன் தொழில்மயமாக்குதலையும் கூட்டுற வாக்கத்தையும் சாதித்திருந்தது. உலகப்போரில் பாசிசத்தை சோவியத் யூனியன் வென்றதை, சோசலிச சமுதாயத்தின் வெற்றியாகச் சீன மக்கள் கண்டனர்.

தமக்கு முற்றான திருப்தியைத் தராத போதிலும், பொருளாதார நிர்வாகத்தில் தமக்கு அனுபவம் இல்லாததால், முதல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் சோவியத் யூனியனின் முறைகளையே பின்பற்ற நேர்ந்தது என்பதை மாவோ உணர்ந்திருந்தார். 1950களின் தொடக்கத்தில் சோவியத் முன்மாதிரியைப் பின்பற்றுவதைப் பற்றி மதிப்பிட்ட மாவோ, கிராமப்புறத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதில் சோவியத் மாதிரித் திட்டத்தால் ஏற்படும் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டினார். கிராமப்புறத்தில் சமூகப் புரட்சியைப் புறக்கணித்து, நகர்புறத்தில் குவிக்கப்படும் தொழில்துறை, தொழில் நுணுக்கவியல் வளர்ச்சியை நம்பியிருப்பது சீனாவை தொழில் மயமாக்கும் – அதே சமயத்தில் சோசலிச சமுதாயம் ஆக்குவதற்காக வெற்றி கொள்ள வேண்டிய முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்யும் என்று அஞ்சினார் மாவோ.

1955 ஜூலையில், மாவோ, நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் ஏற்பட வேண்டிய வளர்ச்சி பிரிக்கப்பட முடியாத நிலையில் ஒன்றோடொன்று ஊடுருவி யிருப்பதை விளக்கினார். “சோசலிசத் தொழில் மயமாக்குதலையும் வேளாண்மையை சோசலிச முறையில் உருமாற்றுவதையும் இருவேறான ஒன்றோடொன்று உறவற்றதாக நாம் எக்காரணம் கொண்டும் கருதக்கூடாது. எக்காரணம் கொண்டும் ஒன்றுக்கு

அழுத்தம் தந்து மற்றதைக் குறைத்து மதிப்பிடக்கூடாது'' என்றார்.

1956 ஏப்ரலில், வேளாண்மையும் சிறு தொழிலையும் புறக்கணித்து கனரகத் தொழிலுக்கு சோவியத் யூனியன் அழுத்தம் தந்ததைக் கூர்மையாக விமர்சனம் செய்தார். சிறுதொழிலிலும் வேளாண்மையிலும் தொடர்ந்து அதிகரித்த முதலீடு செய்வது மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதுடன், கனரகத் தொழிலுக்கான மூலத்தனத்திரட்சியை விரைவுபடுத்துகிறது. சோவியத் யூனியன் மைய நிறுவனங்களில் அதிகாரத்தைக் குவித்ததையும் வட்டார நிறுவனங்களைத் தளைப்படுத்தியதையும் அவைகளின் சுதந்தரமான செயல்பாட்டை மறுத்ததையும் விமர்சனம் செய்தார். உழவர்களிடமிருந்து 'மூலதன'த்திரட்சியைப் பெறும் சோவியத் மாதிரியின் அடிப்படையையே தாக்கினார் மாவோ. உழவர்களிடம் நடந்து கொள்வதில் ரஷ்யர்கள் இழைத்த கடுமையான தவறுகளின் விளைவாகவும், உழவர்களைக் கசக்கிப் பிழிந்ததாலும் உற்பத்தியில் உழவர்களின் ஆர்வத்தை நாசமாக்கியதை மாவோ விளக்கினார். "கோழி அதிக முட்டையிடுவதையே நீங்கள் விரும்பினீர்கள் கோழிக்கு நீங்கள் தீனி போடவில்லையே என்றார்''.

"On the Ten Major relationships" என்ற கட்டுரையில், தமது கட்டுமானத்திற்கான வழிமுறையை மாவோ விளக்கினார். முதலில் கனரகத் தொழில். பிறகே மற்ற துறைகள்; முதலில் பொருள் உற்பத்தி, பிறகே சமூக உறவிலும் சித்தாந்தத்திலும் மாற்றம் என்ற முறையை மாவோ மறுத்தார். சமூக அரசியல் பொருளாதாரத் துறைகளில் நாடு முழுவதும் ஒன்றாக வளரவேண்டும் என்பதை வற்புறுத்தினார்.

உற்பத்திச் சாதனங்களை அரசு உடமை கொள்வதைத் தொடர்ந்து உற்பத்திச் சக்திகளில் விரைவாக வளர்ச்சி ஏற்பட்டு, சோசலிசப் பாதையே கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்லும் என்பது ஸ்டாலினியக் கருத்தாக்கம். இப்படி

நேரும் போதே வர்க்கப் போராட்டம் கடுமை குறைந்து இறுதியில் மறையும். உற்பத்திச் சக்திகள் பற்றிய ஸ்டாலினியக் கோட்பாடு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி, உற்பத்திச் சாதனங்களைப் பொது உடைமையாக்குவதற்கே முக்கியத்துவம் தருகிறது. அரசியல், சித்தாந்தத் துறைகளில் முற்றான சமூகப்புரட்சியின் தேவையில் இது கவனம் செலுத்துவதில்லை. மக்கள் திரளின் செயலாற்றலுக்கான பங்கு, மக்கள் திரளின் இயக்கங்கள் ஆகியவற்றுக்கு இது முக்கியத்துவம் தருவதில்லை. மாவோவின் இத்தகைய விமர்சனத்திற்கான அனுபவம், அவரது யேனான் அனுபவத்திலிருந்து பெற்றதாகும். தற்சார்பு, பரவலாக்கல், அதிகாரத்துவத்திற்கு எதிர்ப்பு, கூட்டுச் செயல்முறை, பொருள்வகையல்லாத ஊக்குவிப்பு, சமூக பொருளாதார செயல்பாடுகள் அனைத்திலும் மக்கள் திரளின் பங்கேற்பு - இவை யேனான் மாதிரியின் அம்சங்கள். வளர்ச்சி, அனைத்துத் துறைகளையும் சார்ந்தது. 'இயந்திரமயமாக்கல் முதலில், பிறகு கூட்டுறவு' என்பதை மாவோ மறுத்தார். கூட்டுறவு முதலில், பிறகு இயந்திரமயமாக்கல் நடைபெறமுடியும்.

சமூக மாற்றம், தொடர்ந்து நடைபெறும் தொழில் நுணுக்கவியல் மாறுதல்களுடன் கூடி, உற்பத்திச் சக்திகளை பெருமளவு விடுவிக்கும். கூடவே கிராமப்புறத்தில் வர்க்கங்கள் எதிர்நிலைகளுக்குச் செல்லுவதைக் குறைக்கும்.

அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்குவதும் சோசலிசத்தைக் கட்டுவதற்குப் போதாது. பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சி மட்டுமே, புரட்சியை முன்னோக்கிச் செலுத்துவதற்கும் மக்கள் திரளின் உற்பத்திச் சக்திகளை விடுவிப்பதற்கும் தேவையான மனப்போக்குகளையும் நிறுவன அமைப்புக்களையும் தோற்றுவிக்க முடியாது. உற்பத்தித் துறையில் சோவியத்துகள் தொடர்ந்து முன்னேறிய போதிலும், உற்பத்தி உறவுகளில் அவர்கள் 'வளர்ச்சி' பெறாததை மாவோ சுட்டிக்காட்டினார். சோவியத் நாட்டில்

உற்பத்தி உறவுகளில் குணவியல் முறையிலான மாற்றங்கள் ஏற்படவில்லை; உறவுகள் உறைந்துவிட்டன. மக்கள் திரள்களின் படைப்பாற்றலையும் முன்முயற்சியையும் விலக்கியதன் மூலம் சோசலிச சமுதாயத்திற்கும் கம்யூனிசத்தை நோக்கிய மாறுதலுக்கும் தேவையான புதிய மனப்போக்குகளையும் நிறுவன உருவங்களையும் சோவியத்துகளால் வளர்க்க முடியவில்லை.

உற்பத்திச் சக்திகள் பற்றிய ஸ்டாலினியக் கோட்பாட்டுக்கு மூலம், மக்கள் திரள்கள். அவர்களின் போராட்டங்கள் பற்றிய ஆழ்ந்த அச்சமும் அவநம்பிக்கையுமே என்றார் மாவோ. ஸ்டாலின் தனது, சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்னைகளில்' மேற்கட்டுமானத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமல் அடித்தளம் பற்றியே கவலைப் படுவதற்கு இதுவே காரணம். மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள் என்பது புறக்கணிக்கப்பட்டு, திட்டமிடுபவர்களையே சார்ந்திருத்தல், தொழில் நுணுக்கம், சிறப்பு நிபுணர்களைப் பற்றியே கவனம் செலுத்துதல், தனிநபர் உலகக் கண்ணோட்டம் பற்றிக் கவலையின்மை இவற்றின் விளைவே நிர்வாக இயந்திரம் தனித்துப் பெருகுதல்.

(ஸ்டாலின் பற்றிய சீன மக்களின் மதிப்பீட்டை ஜேம்ஸ் பெக் கீழ் கண்டவாறு தொகுக்கிறார்) ஸ்டாலின் மாபெரும் மார்க்சிய லெனினியலாளர். லெனின் விட்டுச் சென்ற கடமைகளை நிறைவேற்றி, சோசலிசத் தொழிலாக்கம் வேளாண்மையில் கூட்டுறவாக்கம், பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி ஆகிய சாதனைகளினூடே சோவியத் மக்களை வழிநடத்திச் சென்றார். ஆனால் அவர் கடுமையான தவறுகளைச் செய்தார். சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்ட விதிகளைப் பற்றிய புரிதலில் அவர் மார்க்சிய – லெனினிய இயங்கியலிலிருந்து விலகினார். வேளாண்மையில் கூட்டுறவாக்கத்திற்குப் பிறகும் பகை முரண்பாடுகளைக் கொண்ட வர்க்கப் போராட்டமும்,

சோசலிசப் பாதைக்கும் முதலாளியப் பாதைக்கும் இடையிலான முரண்பாடும் தொடரும் என்பதை அவர் அறியவில்லை. முதலாளியத்திற்கு எதிரான போராட்டத்தில் உழைக்கும் வர்க்கத்தையும் மக்கள் திரள்களையும் அவர் சார்ந்திருக்கத் தவறியதோடு, முதலாளியப் புத்துயிர்ப்பைப் பற்றிய அச்சத்தை சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆயுதத் தாக்குதலாகவே குறைத்து மதிப்பிட்டார். வேளாண்மையையும் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் கடுமையாகப் புறக்கணித்தார். கனரகத் தொழிலுக்கு அதிகமான அழுத்தம் தந்தார். சோவியத் யூனியன் மீதான ஜெர்மன் தாக்குதல் பற்றி முன் கூட்டியே போதிய கவனம் கொள்ளவில்லை. 1930களில் எதிர்ப் புரட்சியாளர்க்கு எதிரான அடக்கு முறையின் அளவை அளவுக்கு அதிகமாகப் பரவலாக்கினார்.

- A critique of Soviet Economics by
Mao Tsetung என்ற நூலுக்கு ஜேம்ஸ்பெக்
எழுதிய முன்னுரையிலிருந்து.

4. விவாதம் தொடர்கிறது

1. ஸ்டாலின் நிகழ்ச்சிப் போக்கு

- ழான் எல்லன்ஸ்டைன்

பல வரலாற்றாசிரியர்கள், (இவர்களில் இறுதியானவர் பெத்தல்ஹீம்) சோவியத் யூனியன் ஒரு சோசலிச அரசு அல்ல, அதிகார வர்க்கம் என்ற ஒரு புதிய வர்க்கம் பாட்டாளிகளையும் உழவர்களையும் சுரண்டக் கூடிய ஒரு அதிகார வர்க்க அரசு என்று கூறுகின்றனர். பெத்தல்ஹீம் இதை முதலாளிய அரசில் ஒரு சிறப்பு வகை என்று கூறுகிறார். ஸ்டாலின் - நிகழ்ச்சிப் போக்கு என்பது இந்த வர்க்கத்தில்தான் வேர் கொண்டுள்ளது. 1921ல் உழைப்பாளிகளின் எதிர்ப்பு - கட்சி சார்ந்தவர்கள் இப்படித் தான் கூறினர். அப்போது லெனின் சோவியத் அரசு, அதிகார வர்க்கத் திரிபுடன் கூடிய தொழிலாளிகளின் அரசு என்றார். டிராட்ஸ்கியவாதிகளும் இக்கருத்தைக்

கொண்டிருந்தனர். 1929-இல் ராக்கோவ்ஸ்கி இதைப்பற்றி எழுதினார். டிராட்ஸ்கி ஸ்டாலின் நிகழ்ச்சிப்போக்கை இப்படிச் சொல்ல முடியுமா, என்பதில் சந்தேகம் கொண்டிருந்தார். இத்தாலிய டிராட்ஸ்கியவாதியாகிய ரிஸி 1939-ல் இப்படி எழுதினார்: 'முதலாளிகள் நேரடியாக சுரண்டுவதைப் போல சோசலிச சமுதாயத்தில் மக்கள் சுரண்டப்படுவதில்லை. தேசத்தின் உபரிமதிப்பின் தொகுப்பிலிருந்து அரசு பெறுவதைப் பங்கிட்டுக்கொள் கிறார்கள், அரசு உறுப்பினர்கள். இவ்வாறு மறைமுகமாக நடைபெறும் சுரண்டல் வரலாற்றுப் போக்கில் ஒரு வளர்ச்சி தான்' என்றார். டிராட்ஸ்கி, 'சோவியத் அதிகார வர்க்கம் ஒரு சுதந்தரமான உறுப்பல்ல. உழைக்கும் வர்க்கத்தில் இருந்து தோன்றிய ஒரு ஒட்டுண்ணி' என்றார்.

ஆனால் உண்மை என்ன? அதிகார வர்க்கத்தவர் கட்சி, அரசு ஆகியவற்றின் பதவிகளை வாரிசுரிமையாகப் பெறுவதில்லை இப்பதவியில் உள்ளவர் பெரும்பாலான திறன் மிகுந்த தொழிலாளிகளை விட அதிகச் சம்பளம் பெறுகிறார்கள். இவர்கள் தங்களது சம்பள மிகுதியை நிலையான அல்லது இயங்கக்கூடிய சொத்தாக மாற்றமுடியாது. இதைக் கொண்டு இவர்களை ஒரு தனி வர்க்கமாக கூறமுடியாது.

ஸ்டாலின் நிகழ்ச்சிப் போக்கைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் அரசு பற்றிய ஆய்வில் கிடைக்கிறது. ஒரு எழுச்சியிலிருந்து தோன்றி ஒரு கடுமையான உள் நாட்டுப் போரைச் சந்தித்த ஒரு புரட்சி தன்னை உறுதிப்படுத்திக்கொள்ள சர்வாதிகாரம் தேவைப்பட்டது. இதைப்பற்றி ரோசா லக்சம்பர்க் எழுதினார்: "டிராட்ஸ்கியும் லெனினும் இதற்கு கண்டதீர்வு அதாவது ஜனநாயகத்தை அகற்றிவிடுவது என்பது, அது குணப்படுத்த விரும்பிய நோயைக் காட்டிலும் கொடியது. காரணம் சமூக நிறுவனங்களின் உள்ளார்ந்த குறைபாடுகளுக்கான தீர்வை தரக்கூடிய உயிராற்றலை அது கொன்று விடுகிறது. அந்த

உயிராற்றல் என்பது பரந்துபட்ட மக்களின் செயலூக்கமுள்ள தங்குதடையற்ற அரசியல் வாழ்வாகும்". இக்கூற்றில் உண்மை உண்மை அல்லாதது இரண்டும் உண்டு. ஏனெனில் இத்தகைய சர்வாதிகாரம் இல்லாமல் புரட்சி வெற்றி பெறாதது. ஆகவே இது உண்மையல்ல. இத்தகைய சர்வாதிகாரத்தில் இருந்து ஸ்டாலினிசம் தோன்றும். ஆகவே இது உண்மை. ரோசா லக்சம்பர்க் மேலும் எழுதினார்: - "அரசின் ஆதரவாளர்களுக்கு மட்டும் ஒரு கட்சியின் ஊழியர்களுக்கு மட்டும் சுதந்திரம் என்பது சுதந்திரமே அல்ல. வித்தியாசமாக சிந்திப்பவர்களுக்கும் சுதந்திரம் உரியதாக இருக்க வேண்டும். காரணம் நீதி பற்றிய ஒரு வெறித்தனமான கருத்தாக்கத்தில் இருந்து இப்படி கூறவில்லை; அரசியல் சுதந்திரத்தில் அறிவார்ந்த வளமான, தூய்மையான அனைத்தும் இந்த சாரமான குணத்தை சார்ந்திருக்கிறது. சுதந்திரம் ஒரு தனியுரிமை ஆகும் போது இதன் திறமை மறைகிறது". முதலாளிய சமுதாயத்தில் இந்த சுதந்திரம் தொடர்ந்து கட்டுப்படுத்தப்படுகிறது. சோசலிசம் இதை தானே படைத்து விடுவதில்லை. சர்வாதிகாரம் இருபுறமும் கூர்மையான ஒரு வாள். இது 1917 முதல் '22 வரை தேவையாக இருந்தது. பிறகு அதுவே தொடர்ந்தது. அது ஜனநாயகத்தை உருவாக்கவில்லை. ஜனநாயகம் இல்லாத நிலையில் அச்சுறுத்தலே அரசாங்க முறையாயிற்று. சோவியத் ரஷ்யா சோசலிச பாதையில் செல்லும்போது ஏற்பட்ட தவறுகளுக்காக ஒருவர் எவ்வளவு தான் வருந்தினாலும், ஸ்டாலின் தோற்றத்தைக் கண்டித்தாலும், அதேசமயம், அவர் ஒப்புக்கொள்ள வேண்டும்:- சோசலிசம் இந்த வடிவில்தான் சோவியத்ரஷ்யாவில் உயிர் வாழ்ந்தது... சோசலிசம் சர்வாதிகாரத்தை தடுத்தாகவேண்டும் என்பது அவசியமில்லை... அதுபோலவே, அதைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை மெட்விடேவ் கூற்றுப்படி, 1936 முதல் '39 வரை 50 லட்சம் பேர் கைது செய்யப்பட்டனர். 4 லட்சம் முதல் 50 லட்சம் வரை கொல்லப்பட்டனர். லெனின் இடம்

பெற்ற, 11வது காங்கிரஸினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மையக்குழுவில் இடம் பெற்ற 26 பேர்களில் 16 பேர் மரணதண்டனை விதிக்கப்பட்டனர். அல்லது கொல்லப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். 1922 பொலிட் பீரோவில் இடம்பெற்ற 10 பேர்களில் 6 பேர்க்கு இந்த நிலை ஏற்பட்டது. 1924 பொலிட் பீரோவில் இடம் பெற்ற 13 பேர்களில் 8 பேருக்கு இந்நிலை ஏற்பட்டது.

- The Stalin Phenomenon (Lawrence & Wighant, London என்ற நூலிலிருந்து)

2. கமால் மித்ராசெனாய் கட்டுரையிலிருந்து – மெயின்ஸ்ட்ரீம் டிச, 29,1979.

டிராட்ஸ்கி: 'இடதுசாரி எதிர்ப்பின் தோல்விக்குப் பிறகு சோவியத் யூனியனில் ஆட்சிக்கு வந்த அதிகார வர்க்க இயந்திரத்தை படைத்தவர் 'ஸ்டாலின்' என்று கருதினார். ஸ்டாலின் ஒரு சிந்தனையாளருமல்ல, எழுத்தாளருமல்ல, பேச்சாளருமல்ல என்றார் டிராட்ஸ்கி. ஆனால் லெனின் தலைமையில் இருந்த போல்ஸ்விக் கட்சியின் பொதுச் செயலாளராக ஸ்டாலின் எப்படி நியமிக்கப்பட்டார் என்ற கேள்விக்கு டிராட்ஸ்கி பதில் சொல்லவில்லை – அதிகார வர்க்கத்தின் தோற்றத்துக்கு மூன்று காரணங்களைக் கூறினார் டிராட்ஸ்கி. செஞ்சேனையின் சீர்குலைவு, உலகப் புரட்சியின் தோல்வி உள்நாட்டில் இடதுசாரி எதிர்ப்பின் தோல்வி ஆகியவையே இவை. கட்சியின் சீர்குலைவு என்பது அரசு அதிகார வர்க்கத் தன்மை பெற்றதன் காரணமும் விளைவும் ஆகும் என்றார் டிராட்ஸ்கி. போல்ஷ்க்கட்சியின் பழைய பாட்டாளிவர்க்க முன்னணியினரை, புதிய உறுப்பினரைக் கொண்டு மூழ்கடித்த போது அரசு, அதிகார வர்க்கத்தன்மை பெற்ற நிகழ்ச்சி நேர்ந்தது. இப்போது, கட்சியின் கட்டுப்பாட்டில் அதிகார வர்க்கம் இல்லை. ஸ்டாலினைப்

பற்றியும், அரசு பற்றியும் டிராட்ஸ்கியின் இந்த குணச் சித்தரிப்பு, ஒருநாட்டில் சோசலிசத்தை கட்டுவது சாத்தியமில்லை என்ற டிராட்ஸ்கியின் நிலைபாட்டில் இருந்து தோன்றியது. ஆயினும் டிராட்ஸ்கி சோவியத் ரஷ்யாவை 'அரசு – முதலாளியம்' என்று வரையறை செய்வதை மறுத்தார். காரணம் அரசின் கையில் உற்பத்தி சாதனங்கள் குவிந்ததை பாட்டாளி வர்க்கம்தான் சாதித்தது. முதலாளிகள் அல்ல என்றார் டிராட்ஸ்கி. தவிர அதிகார வர்க்கத்தினர் தம் உரிமைகளை தம் வாரிசுகளுக்கு வழங்க முடியாது. இதனால் அரசு – முதலாளிகள் தம் தலைமுறையை காத்துக்கொள்ள வகையில்லை.

டிராட்ஸ்கிய வரலாற்றாசிரியரான ஐசக்டா ர், புரட்சிக்குப் பிறகு சில ஆண்டுகளில் பாட்டாளி வர்க்கம் சுருங்கி சீர்குலைந்ததன் விளைவாக அதிகார வர்க்கம் ஆதிக்கம் பெற்ற சமூக சக்தியாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டது, என்று கருதினார். ஒரு சர்வாதிகாரியின் குணத்திற்கு நெருக்கமான தனித்திறமையும், அறவே மனச்சாட்சியற்ற தன்மையும் கொண்ட ஸ்டாலின், அதிகார ஏகபோகத்தை செலுத்துவதற்கு மிகப் பொருத்தமானவரா யிருந்தார். தவிர முதிய உழவர் கூட்டத்தின் சோம்பலிலிருந்து ஸ்டாலின் தனது, தான்தோன்றித் தனமான சர்வாதிகாரத்துக்கு தேவையான பலத்தைப் பெற்றார். ஆயினும் ஸ்டாலினது சர்வாதிகாரத்தின் கீழ், அதிகாரவர்க்கம் தன்னை ஒரு புதிய வர்க்கமாக திரட்டிக் கொள்ளவில்லை. தவிர ஸ்டாலினது சர்வாதிகாரம், முற்போக்கான சமூகச் செயல்பாட்டை கொண்டிருந்தது. இம்முறையில் கிராம்வெல், ராபஸ்பியர், நெப்போலியன் ஆகிய புரட்சிகரமான சர்வாதிகாரிகள் கூட்டத்தில் ஸ்டாலினும் சேர்கிறார் என்பது டா ரின் மதிப்பீடு. இந்த மதிப்பீடு, சோசலிசத்தை உருவாக்குவதில் ஸ்டாலினது பெரும்பங்கை மறுக்கிறது. டிராட்ஸ்கிய, புக்காரினிய எதிர்ப்பை வென்று, புரட்சியைக் காப்பாற்றியதில் ஸ்டாலின் பங்கை டா ர் பார்க்கவில்லை.

இத்தாலிய மார்க்சியவாதியாகிய லூசியோ கோலெட்டி, ஸ்டாலினின் தலைமையை ரஷ்யாவின் மிகப் பிற்பட்ட தன்மையிலிருந்து விளக்குகிறார். "ரஷ்யாவில் பாட்டாளிவர்க்க முன்னணியினர் மிகவும் பிற்பட்ட உழவர்கள் என்னும் பெருந்தொகுதியை சார்ந்திருக்க வேண்டியிருந்தது. இதனால் போல்ஷ்விக் கட்சியில் கிளர்ச்சியாளர்கள், உறுதிவாய்ந்த அரசியல்வாதிகளுக்குப் பதிலாக - பிறரைக் கட்டுப்படுத்தும், உருவகிக்கும் வேலை வாங்கும் நிர்வாகிகளே பெருகினர். இதனால், கட்சியும், அரசும் அதிகார வர்க்கத்தன்மை பெற்றது, ஸ்டாலின் தலைமை தோன்றியது" என்றார் கோலெட்டி. ஸ்டாலினிய ரஷ்யாவையும் ஸ்டாலினுக்குப் பிற்பட்ட ரஷ்யாவையும், பூர்ஷ்வா சமுதாயம் சோசலிச சமுதாயமாக உருமாற்றமடைந்த போக்கில் ஏற்பட்ட ஒரு நீண்ட தேக்கம் என்றார். முடிவுறாத புரட்சி என்ற டாஷரின் கருத்துக்கு இது நெருங்கி வருகிறது. ஆனால் ஸ்டாலின் மூலம் வெளிப்பட்ட சீர்குலைவுகள் தவிர்க்கப்பட இயலாதவை என்பது உண்மையில்லை.

ஸ்டாலினிசத்தின் தோற்றங்கள் விளைவு பற்றி விரிவாக ஆராய்ந்தவர் சோவியத் ஆய்வாளரான ராய் மெட்விடேவ் என்பவர். இதுவரை வெளியிடப்படாத பல அரிய சான்றாதாரங்களை இவர் பயன்படுத்தினார். 1934 தொடக்கத்தில், 17-வது காங்கிரசின் போது பிட்ரோவ்ஸ்கி, ஆர்ஸோனி கிட்சு, மிக்கோயான் ஆகியவர்கள் ஸ்டாலினை நீக்கிவிட்டு, கிரோவைக் கொண்டு வர முயன்றனர். கிரோவ் அதை மறுத்தார். கிரோவின் கொலைக்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளில் இருந்து, கிரோவின் கொலைக்கு உளவு நிறுவனத்தை தொடர்புபடுத்தி, இக்கொலையில் ஸ்டாலினது பங்கை 'உறுதிப்படுத்துகிறார்'. இரண்டாவது உலகப்போருக்கு முன்சோவியத் செஞ்சேனையை ஸ்டாலின் நாசம் செய்தது பற்றியும் மெட்விடேவ் விளக்குகிறார். 1937-41க்கிடையில் ஐந்து மார் ல்களில் மூவரையும் முதல் நிலையிலிருந்த ஆறு கமேண்டர்கள் நால்வரில் மூவரையும்

இரண்டாம் நிலையிலிருந்த கமேண்டர்கள் பன்னிருவரையும் அறுபத்தி ஏழு உதவி கமேண்டர்களில் அறுபது பேரையும் ஸ்டாலின் மரண தண்டனைக் குள்ளாக்கினார். இட்லர் சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு இது ஒரு காரணமாயிற்று. 1934-53 வரை மூன்று கட்சிக் காங்கிரஸ் மட்டுமே நடந்ததையும், 18வது காங்கிரசுக்கும் 19-வது காங்கிரசுக்கும் இடையில் 13 ஆண்டுகள் கழிந்ததையும், 41 முதல் 46 வரை கட்சி மையக் குழுவின் பேரவைக் கூட்டம் எதுவும் நடைபெறாததையும் மெட்விடேவ் சுட்டிக் காட்டுகிறார். ஸ்டாலினின் தவறுகளும் குற்றங்களும் அவருடைய சாதனைகளை மிஞ்சுகின்றன என்ற மெட்விடேவின் முடிவு அவரது வரலாற்று ஆய்வு முறையின் வலிமையைக் குறைக்கிறது.

பிரெஞ்சு மார்க்சிய மெய்யியலாளராகிய லூயி அல்தூசர் தனிநபர் வழிபாடு என்ற கருத்தாக்கத்தை மார்க்சியமல்லாத போலி கருத்தாக்கம் என்று விமர்சனம் செய்தார். இவர் 'ஸ்டாலினிசம்' என்ற சொல்லை மறுத்து, 'ஸ்டாலினியத் திரிபு' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். ஸ்டாலினிசம் என்பது ஸ்டாலின் தலைமையில் ஏற்பட்ட உண்மையான சாதனைகளைப் புறக்கணிக்கிறது. சீனப்புரட்சிதான் ஸ்டாலினைப் பற்றிய தற்கால, பருண்மையான இடதுசாரி விமர்சனம் என்கிறார் அல்தூசர்.

("ஸ்டாலினிசம் என்பது கம்யூனிசம் தந்த விலையல்ல. சோவியத் மக்கள் தந்த விலை. இறுதியாக ஏகாதிபத்தியம் பறித்துக் கொண்டது ஸ்டாலினிசம்")

3. ஸ்டாலின் சகாப்தம்
- சுமித் சர்க்கார்

1930-களின் தொடக்க ஆண்டுகள் வரை சோவியத் யூனியனின் வரலாறு பற்றிய சரியான செய்திகள் கிடைத்து வந்தன எனலாம். பின்னர் 1935-லிருந்து 1956 வரையிலான

வரலாறு பெருமளவில் நம்பத்தகுந்ததாக இன்றிப் புனைகதைகளாகவே உள்ளன. இன்றும் சோவியத் அரசாங்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆவணங்களும் குறிப்பேடுகளும் உள்ள காப்பகங்கள் மூடப்பட்டே உள்ளதால் ஸ்டாலினை பற்றிய முழுமையான மதிப்பீட்டைக்கூடச் சரியாகவும், நியாயமாகவும் தெளிவாகவும் செய்ய முடியாது. ஆயினும் 1929-30-களில் ஸ்டாலின் வேளாண்மையைக் கூட்டுப் பண்ணை முறைக்குள் கொணர எடுத்த மிகத் தீவிரமான நடவடிக்கைக் காலத்திலிருந்து 'பெரும் திருப்பங்கள்' ஏற்பட்டதை மோஷிலெவின் தன் 'ரஷ்ய உழவர்களும் சோவியத் அதிகாரமும்' என்ற நூலில் விளக்குகிறார். அந்நூல் குறிப்பிடும் சில முக்கிய செய்திகளும் விவரங்களும்:- 1920-களில் சோவியத் அதிகாரம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1917-ஆம் ஆண்டுப் புரட்சி நகர்ப்புறங்களில் முதலாளிய எதிர்ப்பு மற்றும் பாட்டாளிவர்க்க சோசலிசப் புரட்சியாகவும் கிராமப்புறங்களில் உழவர் மற்றும் பெரும் நிலக்கிழார் எதிர்ப்புப் புரட்சியாகவும் இரு புரட்சிகளையும் இணைத்ததாக இருந்தது. உழவர்கள் எந்த அளவு தீவிர உணர்வு கொண்டவராக இருப்பினும், சோசலிசத்தைவிட தமக்கு நிலம் கிடைப்பதையே முக்கியமாகக் கருதியதால் 1917ஆம் ஆண்டு உழவர் புரட்சி கிராமப்புறங்களில் பரந்த அளவில் சிறுபண்ட உற்பத்தி சார்ந்த பொருளாதாரமான குட்டி முதலாளிய அடிப்படை சார்ந்ததாக மாறியது. பிற்பட்ட நாடான ரஷ்யாவில் சோசலிசம் வெற்றிபெற லெனின் முதன்மையான இரு நிலைமைகளைக் கணக்கில் கொண்டு தம் கோட்பாட்டை வகுத்திருந்தார். அதாவது உழவர்களோடு இணைந்து முன்னேறிய முதலாளிய நாடுகளைவிட, பாட்டாளி வர்க்க சோசலிசத்தை நோக்கி விரைவாக முன்செல்லுமே அவை. இதில் பாட்டாளிவர்க்க சோசலிசத்தைக் கட்டுவது நடைமுறையில் தோல்வியுறவே போல்ஷ்விக் அதிகாரம் பெருமளவு உழவர்களைச் சார்ந்து

அமைய வேண்டியும் அதன் அடிப்படையாகப் புதிய பொருளாதாரக் கோட்பாடு தோன்றவும் நேரிட்டது.

உழவர் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க உழவர்களை ஏழை, நடுத்தர, பணக்கார உழவர்களாகப் பாகுபடுத்தி சோவியத் அதிகாரம் ஏழை உழவர்களைச் சார்ந்து நடுத்தர உழவர்களைத் தம் அணியில் இணைக்க முயற்சித்து பணக்கார உழவர்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்கமுயன்றது. நடைமுறையில் இப்பாகுபாடுகளைச் செய்து பிரச்னைகளைத் தீர்ப்பது லெனின் எதிர்பார்த்தது போன்றே அவ்வளவு எளிதாக அமையவில்லை. ஏழை உழவர்களும், கூலி உழவர்களும் பெரும்பாலும் கடன்களுக்காகவும் வேலை வாய்ப்புகளுக்காகவும் 'குலாக்குகள்' என்ற பெரும் பணக்கார உழவர்களைச் சார்ந்து வாழவேண்டி நேரிட்டது. மேலும் 1920களில் வேளாண்துறைப் பொருட்களை விடத் தொழிற்துறைப் பொருட்களின் விலைகள் மிகுதியாக இருந்ததால் குலாக்குகள் கிராமங்களில் உள்ள அனைத்து உழவர்களையும் நகர்ப்புறங்களில் உள்ள போல்ஷ்விக்குகளுக் கெதிராக அணி திரட்டுவது சாத்தியமாயிற்று. போல்ஷ்விக்குகள் கிராமப்புறங்களில் வேரூன்றி ஏழை உழவர்களைக் கோட்பாட்டு ரீதியாக உறுதிமிக்க சோசலிஸ்ட்டுகளாக மாற்றும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தாததும், கட்சி அணியில் பெரும்பாலானவர்கள் நகர்ப்புற தொழிலாளி வர்க்கத்தினராக இருந்ததும், வெண் காவலர்களை எதிர்த்த சண்டையிலும் உள்நாட்டு யுத்தத்தின் போதும் அருமையான பல முன்னணிக் கட்சி ஊழியர்கள் இறந்ததும் கிராமப்புறங்களில் கட்சி ஊழியர்களின் எண்ணிக்கை நகர்ப்புறங்களை விடக் குறைந்து இருந்ததும் சில எதிர்விளைவுகளுக்குக் காரணமெனலாம். உள்நாட்டு யுத்தத்தின்போதும் புதிய பொருளாதாரக் கோட்பாட்டின் காரணமாகவும் தொழிற்துறை சீரழியத் தொடங்கியதும் கிராமப் புறங்களை நாடித் தொழிலாளர்கள் குவியத் தொடங்கி நிலங்களை உடமையாக்கத் தொடங்கினர். நகரங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை

1920இல் வெகுவாகக் குறைந்தது. இதனால் உழைக்கும் வர்க்கத்துக்கு மாற்றாக பெருமளவில் நிர்வாகத்துறை மற்றும், பதவியில் உள்ள அதிகாரத்துவ, எதேச்சதிகாரச் சக்திகளைச் சார்ந்து இருக்க வேண்டிய போக்கு வளரும் நிலை ஏற்பட்டது. இந்நிலையை மாற்றி கட்சியையும், சோவியத் ஜனநாயகத்தையும் மறு ஆக்கம் செய்ய வேண்டியதன் தேவையை எதிரணியிலிருந்து 1923ல் ட்ராட்ஸ்கியும் 1925இல் ஜினோவீவும் காமெனேவும், 1928-29இல் புகாரினும் வலியுறுத்தினர்.

பிற்பட்ட நாடான சோவியத் யூனியனில் கனரகத் தொழில்களை ஏற்படுத்தி பெரும் தொழில் மயமாக்குதலுக்குத் தேவையான முதலீட்டை உழவுத் துறையிலிருந்து கிட்டும் உபரியைக் கொண்டு செய்யும் முறையை ஸ்டாலின் 1920களின் தொடக்கத்தில் ஏற்கவில்லை. தானிய உற்பத்தி குறைந்து அரசு கொள்முதலும் குறையத் தொடங்கிய போது 1927-28 லிருந்து ஸ்டாலின் குலாக்குகளுக்குகெதிரான தீவிர நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தபோது அரசு நிர்வாக எந்திரம் அரசு தானியக் கொள்முதலுக்கு தானியம் தர மறுத்த அனைத்து உழவர்கள் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுத்தது. கூட்டுப்பண்ணை அமைப்பு தீவிரமாக்கப்பட்டது. உழவர்கள் மீது நடைபெற்ற அத்துமீறல்களுக்கு கட்சி உயர்மட்டத் தலைமையே காரணமாக இருப்பினும் கட்சி அணிகளே பொறுப்பு என்று ஸ்டாலின் குறை கூறினார். கூட்டுப்பண்ணை முறையை தீவிரமாக்கும் போக்கில் அரசு நிர்வாகமும் அதிகாரத்துவ சக்திகளும் பெரும் நிலப்பிரபுக்களுக்கெதிரான செயல்களை அனைத்து உழவர்கள் மீதும் எடுத்தபோது உணவு உற்பத்தியும் குறைந்தது: உழவர்கள் பெருமளவு கால் நடைகளைக் கொன்றனர். இன்றும் சோவியத்தில் வேளாண்மை சற்றுப் பின்தங்கியுள்ளமையை அறியலாம். இந்த 1929-30 பெரும் திருப்பத்திற்குப் பின்னரே 'ஸ்டாலினிய' எதிர்மறை அம்சங்களும் தனிமனித வழிபாடும் வளரும் நிலை ஏற்படலாயிற்று. கூட்டுப்பண்ணை முறைகளைத்

தீவிரமாக்கும் போக்கிற்கெதிராக லெனின் மனைவியான குரூப்ஸ்காயா லெனினை மேற்கோள்காட்டி 'பிராவ்தா' ஏட்டில் கட்டுரை எழுதினார். கூட்டுப்பண்ணைச் செயல்பாடுகளில் ஏற்பட்ட தவறுகளுக்கு ஸ்டாலின் பொறுப்பானாலும் ஸ்டாலின் சகாப்தம் பற்றிய வரலாற்றில் ஆய்வு மிகமிகச் சிக்கலான, விவாதத்திற்கு உரிய பொருளாகவே இன்னும் பல காலத்துக்கு இருந்துவரும். ஸ்டாலின் தொழிற்சங்கங்களையும் பிற பெரும் அமைப்புக்களையும் கட்சியின் கட்டளைகளை நிறைவேற்றும் அமைப்புக்களாக மாற்ற விரும்பினாலும் நடைமுறையில் கட்சியும் அதன் மத்தியக் குழுவும் இறுதியில் ஒரு தனிப்பெரும் தலைவருமே ஓர் அதிகாரத்துவ, எதேச்சதிகார அரசியலடிப்படையை மேலோங்கியதாக்கியது. 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் லெனின் எதிர்பார்த்த சமுதாய அடிப்படைக்குப் பெரும்பாலும் இதுமாறாக அமைந்தது.

நன்றி - Marxist Miscellany 18 - 1979

4. ஸ்டாலின் – ஒரு நூற்றாண்டு விழா மதிப்பீடு (பி.பி.ஆர்)

ஒவ்வொரு சமுதாய நிகழ்வையும் கால, சமுதாயப் பின்னணியையும் அதன் தோற்ற வளர்ச்சிக்கான காரணங்களையும் ஆய்வு செய்யும் மார்க்சிய ஆய்வு முறையிலேயே சோவியத் வரலாற்றில் ஸ்டாலின் காலத்தையும் மதிப்பீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு சமுதாயமும் குறிப்பாக முதலாளியச் சமுதாயமும் தொழில் மயமாக்கப் போக்கில் அளவிலாத் துயரை மானிடக் கூட்டத்தின் மீது திணிக்கிறது. முழு முதலாளியச் சமுதாயமாக வளர்ச்சியுறாத - நிலப்பிரபுத்துவப் பொருளியல் உறவுகளுடைய சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சி ஏற்பட்டபோது அங்கு தொழில் மயமாக்கலையும்

சோசலிசத்தைக் கட்டும் பணியையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. சோவியத் யூனியனில் விரைவான தொழில்மயமாக்கலின் போது அரசியல், சமுதாய மானிட மதிப்புகளை விலையாகத் தர நேரிட்டது. அதே சமயம் குறுகிய காலத்தில் விரைவான தொழில் மயமாக்கல் முயற்சிகளை எடுக்காதிருப்பின் 1941இல் பாசிசத் தாக்குதல்களை வென்றிருக்கவும் முடியாது என்பதையும் உணர வேண்டும்.

வேளாண்மையைக் கூட்டுப்பண்ணை முறைக்குள் கொணர்ந்த போது ஏற்பட்ட பேரிழப்புகளையும் துயரங்களையும் ஸ்டாலினே பின்னர் உணர்ந்து சர்ச்சிலிடம்கூட அக்காலத்தை மிகவும் இருண்ட காலமாகத் தாம் நினைப்பதாகக் கூறியுள்ளார். கட்சி, உழவர்களை வர்க்கப் பாகுபாட்டு ஆய்வுக்குள்ளாக்கிய போது சரியாகக் கணிக்கத் தவறியதாகவும் அதன் விளைவுகளே பெரும் துயருக்குக் கொண்டு சென்றதாகவும் பெத்தல்ஹீம் கூறுகிறார். வேளாண்மைத் துறையில் தனி உடமையை நீடிக்கச் செய்து தொழிற்துறையில் சோசலிச அடிப்படையை நிறுவியிருந்தால் இதைத் தவிர்த்திருக்கக் கூடுமா என்பதும் ஐயத்திற்கிடமானதே. ஏனெனில் வேளாண்மையை கூட்டுப் பண்ணைக்குள்ளாக்கி சோசலிசமயமாக்கியிராவிட்டால் பாசிஸ்டுகளின் தாக்குதலின் போது எதிர்த்து வெற்றி பெற்றது சாத்தியமாயிராது.

ஸ்டாலின் சோவியத்யூனியனில் தொழில்துறையை வளர்த்தபோது சோசலிசத்திற்கான தொழில் அடிப்படையை மட்டும் தோற்றுவித்தாரா அல்லது அவர் சோசலிசத்தையும் கட்டும்போக்கில் அரசு முதலாளியத்தை வளர்த்தாரா என்னும் மதிப்பீடும் உள்ளது. உற்பத்திக்கருவிகளும், உற்பத்தி உறவுகளும் சமுதாய மயமாக்கப்பட்டாலும் சோசலிசத்தைக் கட்டுவதற்குப் பதில் அரசு முதலாளியமே வளர்ந்தது என்று கூறப்படுகிறது. ஸ்டாலின் உற்பத்திக் கருவிகளை சமுதாயமயமாக்கி மீண்டும் முதலாளியம் திரும்பாமலும்

உண்மையான சோசலிசம் வளர்வதற்கான அடிக்கற்களையும் நாட்டியிருந்தார். ஸ்டாலின் சோசலிசப் பூக்கள் மலரும் மண்ணைப் பண்படுத்தியிருந்தார்; ஸ்டாலினுக்குப் பின்வந்தவர்கள் மலர்களின் மணமாகத் தம்மைக் காட்டிக் கொண்டு ஸ்டாலினைப் பழிச்சேற்றில் தள்ளினர். சோசலிசத்திற்கான அடிப்படைகளையே ஸ்டாலின் அமைத்திருந்தார். அவர் சோசலிசத்தைக் கட்டவில்லை; மாறாக அரசு முதலாளியத்தையும் கட்டவில்லை.

பிற்பட்ட நிலவுடைமைப் பொருளாதார ரஷ்யாவில் தொழில் மயமாக்கலையும் சோசலிச நிர்மாணத்தையும் ஒருசேர நடத்தாமல் ஒன்றன்பின் ஒன்றாக நடத்தியிருப்பது சாத்தியமா? இரண்டையும் எங்ஙனம் இணைத்தும் இணைந்தும் கொண்டு செல்வது என்ற கேள்விக்கு மாசேதுங் விடை கண்டாரெனலாம். அவ்விடை: அதிகாரத்தைக் கொண்டு நவீனமயமாக்கலின்போது சோசலிச மதிப்பீடுகளையும் தற்சார்பு உணர்வையும் என்றும் உள்ளத்தில் கவனமாகக் கொண்டு சீனத்தை அதன் தனித்த இயல்புகளின் அடிப்படையில் அதை ஒரு வளர்ச்சி மாதிரியாகவும் கொண்டு செயல்பட வேண்டும். சோசலிசத்தைக் கட்டும்போது சமத்துவத்தை ஏற்படுத்துதல் என்னும் எண்ணத்தை என்றும் நினைவில் கொள்ள வேண்டும். சமத்துவத்தை எட்டிவிட்டோம் என்ற பொய்மைக்குள் சிக்கிக்கொண்டு விடாத வண்ணம் மாவோவும் பிற தலைவர்களும் குறிப்பாகப் பண்பாட்டுப் புரட்சிக்குப் பின் மக்களை வலியுறுத்தினர். நவீனப்படுத்தலும், சோசலிசமும் இணைந்து வளரும் போதும், சிலகால கட்டங்களில் ஒவ்வொன்றும் முன் பின்னாகச் செல்லும் போதும் இவ்வடிப்படை உண்மையை நினைவிலிருத்தியே செயல்பட்டனர். மாவோவைப் பொறுத்தவரை 'ஒரு புதிய வர்க்கம்' தோன்றிவிடாதவாறு சமத்துவத்தை நோக்கி இடையறாத போராட்டத்தை நடத்தினார்.

இந்த மதிப்பீடு லெனின் இன்னும் நீண்ட நாள் உயிரோடு இருந்திருந்தால் லெனின் மாவோவின் வழியைத்தான் பின்பற்றியிருப்பாரேயொழிய ஸ்டாலின் வழியை மேற்கொண்டிருக்க மாட்டார் என்ற அளவில் செல்கிறது. ஆனால் ஸ்டாலின் கால ரஷ்யாவும் அது சந்தித்த பிரச்னைகளும் மாவோவுக்கும் சீனத்திற்கும் இல்லையென்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

இறுதியாக, ஸ்டாலின் தொழில்மயமாக்கலையும் உற்பத்திக்கருவிகளை சமூகவுடமையாக்கலையும் வெற்றிகரமாகச் செய்தார். உற்பத்திக்கருவிகள் சமூகவுடமையாக்கப்படுவதால் மட்டும் சோசலிச சமுதாயம் ஏற்பட்டுவிடாது. அதற்கான இன்றைய தேவை நியாயமான உணர்வு பூர்வமான சோசலிச உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துவதே. அனைத்துக்கும் மேலாக இறுதியான - உறுதியான குறிக்கோளாக சோசலிசத்தைக் கட்ட சோசலிச மனிதனைப் படைப்பது என்பதையும் உணர்வதாகும்.

நன்றி - Marxist Miscellany 18 - 1979

5. ஒரு நாட்டில் சோசலிசம் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்:

- பான் பெஹாரி சக்கரவர்த்தி

1926ஆம் ஆண்டிலேயே, லியோன் ட்ராட்ஸ்கியின் கூட்டாளி என்கிற முறையில் ஜீனோவிவ் தான் முதன் முதலாக ஸ்டாலினிடம் புரட்டல் வாதம் இருப்பதாகக் குற்றம் சாட்டியவர்; ஸ்டாலின் நிறுவமுனைவது லெனினிசமல்ல, மாறாக அவரது சொந்தக் கோட்பாடு அதாவது ஸ்டாலினிசம்தான் என்ற குற்றச்சாட்டை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)க்குள் இருந்த ஒன்றுபட்ட எதிர்த்தரப்பின் தலைவர் என்கிற முறையில் வைத்தவர் ட்ராட்ஸ்கி. ஒருநாட்டில் சோசலிசத்தின் வெற்றியைச் சாதிக்க முடியும் என்று கூறுவது லெனினிசத்துக்கு மாறானது என்று அவர்கள் வாதிட்டனர்.

கம்யூனிச அகிலத்தின் செயற்குழுவின் ஏழாவது விரிவுபடுத்தப்பட்ட பிளீனக் கூட்டத்தில், புரட்டல்வாதம் என்ற பதத்துக்கு வழங்கப்பட்ட ஜீனோவிவிய விளக்கத்தை ஸ்டாலின் அம்பலப்படுத்தினார். இவ்விளக்கத்தின்படி மார்க்ஸ் – ஏங்கல்ஸ் ஆகியோரின் பழைய வரையறுப்புகளில் புதிய காலத்தின் புதிய நிலைமைகளுக்கு உரிய வகையில் மேம்பாடு ஏதேனும் செய்வது புரட்டல்வாதமாகும். இந்தப் பேரவையில் 'ஸ்டாலினிசம்' என்பது இல்லாத ஒன்று என்பதையும் சோவியத் யூனியனில் சோசலிசம் கட்டும் சாத்தியப்பாடு என்ற அடிப்படைப் பிரச்னையில் லெனினிசத்தை எதிர்த்துப் போராடுதல் என்கிற தமது பழைய நிலைப்பாட்டையே ட்ராட்ஸ்கி இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் ஸ்டாலின் ஐயத்துக்கிடமின்றி நிரூபித்தார். ஏகாதிபத்திய யுகத்தில் ஒரு நாட்டில் சோசலிசத்தின் வெற்றியைச் சாதிக்க முடியும் என்று முதன்முதலில் உறுதிபடக் கூறியது லெனினேயன்றி ஸ்டாலின் அல்ல. 1915-ஆம் ஆண்டு ஏகாதிபத்தியப் போருக்கிடையில் இப்பிரச்னையானது ரஷ்ய சமூக ஜனநாயகவாதிகளின் பத்திரிகைகளில் எழுதப்பட்டது. இவ்வெற்றி சாத்தியமல்ல என்று மென்ஷ்விக்குகள் பதிலளித்தனர்.

மென்ஷ்விக்குகளிடமிருந்து சற்றே வேறுபாடான ஒரு நிலைபாட்டைக் கொண்டிருந்த போதிலும் ட்ராட்ஸ்கியும் இது சாத்தியமல்ல என்றே பதிலளித்தார். 'ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் நேரடியான ஆதரவு இல்லாமல், ரஷ்யாவின் உழைக்கும் வர்க்கத்தால் தன்னை அதிகாரத்தில் வைத்துப் பேண முடியாது' என்கிற தனது பழைய நிலைபாட்டைத் துவக்கமாகக்கொண்டு "ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்" என்ற முழக்கத்தை உயர்த்தினார். "ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்ற முழக்கம் பற்றி" என்ற தமது கட்டுரையில் லெனின், நவீன கால கட்டத்தில் உலக ஐக்கிய நாடுகள் என்பதுதான், சோசலிசத்தின் அரசு அமைப்பாக

இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார். ஆயினும் அவர் மேலும் கூறியதாவது:-

"ஒரு தனிப்பட்ட முழக்கம் என்கிற வகையில் உலக ஐக்கிய நாடுகள் என்பது சரியானதாக இருக்க முடியாது. ஏனெனில் இதற்கு, ஒரு தனி நாட்டில் சோசலிசத்தின் வெற்றி சாத்தியமானதல்ல என்று தவறான பொருள் வழங்கப்படக்கூடும்".

"சோசலிசத்தின் வெற்றி" என்பதைப் பொறுத்தவரை, "முதலாளிய அதிகாரத்தைத் தூக்கியெறிதல்" என்று மட்டுமல்லாமல், "சோசலிச நிர்மாணம்" என்றும் லெனின் பொருள் கொண்டார் என்பது உண்மை. மின் பொறிஞர்களின் ரஷ்யப் பேரவையின் தலைமைக் குழுவுக்கு வழங்கிய உரையில், லெனின் எழுதினார்: "விரிந்த அளவு இயந்திர உற்பத்தித்தொழிலும், வேளாண்மைக்கு அது விரிவு பெறுதலும்தான், சோசலிசத்துக்கான சாத்தியமான ஒரே பொருளாதார அடிப்படையாகும்".

"சோசலிசத்தின் வெற்றி" என்பதை "சோசலிச நிர்மாணம்" கூடத்தான் என்பதை லெனின் புரிந்திருந்தார் என்பதும், உலக சோசலிசத்தின் வெற்றியும். ஏகாதிபத்தியப் போர்களின் முடிவும் சோவியத் யூனியனில் "சோசலிச நிர்மாண"த்தின் வெற்றியைச் சார்ந்துள்ளன" என்று அவர் கருதினார் என்பதும் மிகவும் தெளிவாகவில்லையா?

18-ஆம் காங்கிரசுக்கான தமது அறிக்கையில் ஸ்டாலின். சோவியத் அரசை, "முற்றிலும் புதியது" முதற்கட்ட சோசலிச அரசிலிருந்து" மாறுபட்டது என்று வர்ணித்ததும் "நாம் கம்யூனிசத்தை நோக்கி முன்செல்கிறோம்" என்று கூறியதும் உண்மைதான். முதலாளியச்சுற்றி வளைப்புக்கிடையே "கம்யூனிசஅரசு" பற்றிய புதிய கோட்பாடொன்றினைக் கோரினார். ஆனால், இதன்மூலம் அவர் சிலர் கருதுவதுபோல் தமது "சுயமான கருத்து எதனையும் உபதேசிக்கவில்லை". அவர் செய்ததெல்லாம், சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் ஏழாவது காங்கிரஸில் லெனின்

வெளிப்படுத்திய கருத்தினை வளர்த்தது மட்டுமே. லெனின் கூறினார்: "ரஷ்யாவின் பாட்டாளி வர்க்கஅரசின் கரங்களில் உள்ள பொருளாதாரச் சக்தியானது, கம்யூனிசத்தை நோக்கிய மாறுதலை உறுதி செய்யப் போதுமானது. ஆனால் இங்குள்ள குறை என்ன? நிர்வாகச் செயல்கள் புரிகிற கம்யூனிஸ்டுகளிடையே கலாச்சாரம் இல்லாத குறை வெளிப்படையானது".

"கூட்டுறவு பற்றி" என்கிற தமது கட்டுரையில் லெனின், கூட்டுறவுகளில் விவசாயி வர்க்கம் முழுவதையும் கொண்டுவந்து ஒழுங்குபடுத்தினார். ரஷ்யா ஒரு முற்றிலும் சோசலிச நாடாகத் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளும் ஆற்றல் பெற்றுவிடும் என்பதை வலியுறுத்தினார். ஒரு கலாச்சாரப் புரட்சி இன்றி முழுமையான கூட்டுறவைச் சாதிக்க முடியாது என்பதை அவர் உணர்ந்திருந்தார். கீழ்க்காணும் சொற்களுடன் அவர்தம் கட்டுரையை முடிக்கிறார்: நம்மை இப்போது எதிர்கொண்டிருப்பது இக்கலாச்சாரப் புரட்சிதான். இக்கலாச்சாரப் புரட்சியானது, நம் நாட்டை ஓர் முற்றிலும் சோசலிச நாடாக உருவாக்குவதற்கு இப்போது போதுமானது".

கட்சி மற்றும் அரசுக் கருவிகளிலிருந்து சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள், சதிகாரர்கள் ஆகியோரை, பாட்டாளி வர்க்கத் தலைமையிலான கலாச்சாரப் புரட்சிகொண்டு வெளியேற்றுவதன் மூலம், முதலாளியச் சுற்றி வளைப்பிலும் கூட ரஷ்யாவை ஒரு முழு சோசலிச நாடாக மாற்றியமைக்க முடியும் என்று லெனின் நம்பினார் என்பதை இது மெய்ப்பிக்கவில்லையா? ரஷ்யாவில் 1921ஆம் ஆண்டு லெனின் எதைத் துவக்கினாரோ அதைத்தான் ஸ்டாலின் முன்னெடுத்துச் சென்றார்.

'இடைவிடாப் புரட்சி' என்ற பதத்தை புரட்சியின் தங்குதடையற்ற தொடர்ச்சி என்ற பொருளில் ஜனநாயகப் புரட்சியானது விவசாய மக்கள் திரளை நேச அணியாகக் கொண்டு "பாட்டாளி வர்க்கத்தினதும் விவசாயவர்க்கத்தினதும்

புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரம்" என்ற கட்டத்தினூடே சோசலிசப் புரட்சியாக வளர்தல் என்ற பொருளில் – மார்க்சிய வாதிகள் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ட்ராட்ஸ்கியின் "இடைவிடாப் புரட்சி" என்ற கோட்பாடு ஒரு விஷச் சுழலாகும். போல்ஷ்விக்குகளிடமிருந்து அரசியல் அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் வென்றெடுத்தல் என்ற அறை கூவலை அவர் கடன் வாங்கினார். ஆனால் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே தன்னை அரசியல் அதிகாரத்தில் வைத்துக் கொள்ள முடியும் என்பதையோ, வெற்றிகரமான பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவு தரும் விவசாயி வர்க்கத்தின் உள்ளுறை புரட்சிகரப் பங்கையோ அவர் நம்பவில்லை. வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளில் ஏற்படும் வெற்றிகரமான சோசலிசப் புரட்சியின் ஆதரவுடன் மட்டுமே ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தால் தன்னை அதிகாரத்தில் வைத்துக் கொள்ள முடியும் என்று வாதிட்டார். எனவே ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை. வளர்ச்சி பெற்ற மேனாடுகளுக்கு புரட்சியை எடுத்துச் செல்வதுதான் என்று கருதினார். வளர்ச்சிபெற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கமானது எழுச்சி பெற்று புரட்சி நடத்தாவிட்டால் என்ன செய்வது? ட்ராட்ஸ்கி வழங்கிய ஒரே பதில் இதுதான். "புரட்சி தோல்வியடையும் – அது வளராமல் தேங்கி நிற்கும் அல்லது நெப்போலிய சர்வாதிகாரமாக முடியும்". ட்ராட்ஸ்கி செய்த இத்திரிபுதான் – குறிப்பாக விவசாயி வர்க்கத்தின் பங்கை அவர் மறுதலித்ததுதான் – வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் விவசாயி வர்க்கத்தை நேச அணியாகக் கொண்டு தன்னை அதிகாரத்தில் வைத்துப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அதைத் தட்டி எழுப்பும் சக்தியற்ற அவரது கோட்பாட்டு வகை மலட்டுத்தனம்தான் – அன்றும் இன்றும் அனைத்து மார்க்சிய லெனினியவாதிகளாலும் உறுதியுடன் எதிர்க்கப்பட்டு வருகிறது.

அவரது கோட்பாட்டின்படி, பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் புரட்சியானது வெறும் "தொழிலாளர் அரசாங்கம்" என்பதில் மட்டுமே முடியும் கெரன்ஸ்கியின்

அரசாங்கம், போல்ஷ்விக் அதிகாரம் ஆகியவற்றுக்கிடையிலோ கோமின்டாங் அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றுக்கிடையிலோ, ஒரு இடைக் கட்டம் – அதாவது தொழிலாளர் விவசாயிகள் ஆகியோரது ஜனநாயக சர்வாதிகாரம் என்பது இல்லை – இருக்கவும் முடியாது.

ஆயினும், பத்து அல்லது இருபதாண்டுகளில் உலக சோசலிசப் புரட்சி நிறைவேறாமலிருக்குமானால், ஒரு நாட்டில் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் சிக்கலுக்கு ஆளாகும் என்பதை லெனின் முழுமையாக உணர்ந்திருந்தார். 1916ஆம் ஆண்டிலேயே இத்தகையை சாத்தியப்பாடு ஒன்று பற்றி லெனின் சிந்தித்தார். ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் ஒரு 20 ஆண்டுக் காலம் ஆண்மையற்றிருக்குமானால் ஐரோப்பிய நாடுகளல்லாத ஏகாதிபத்தியமானது (முதன்மையாக ஜப்பானிய மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம்) சோசலிசத்துக்கு மாறிச்செல்வது, இந்நாடுகளுக் கிடையிலான ஓர் போரின் காரணமாக இருபதாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்படுமானால், ஐரோப்பாவில் ஒரு பெரும் தேசியப் போர் சாத்தியமடையும். அது ஐரோப்பாவை பல பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிடும்" (ஜூனியஸ் பிரசுரம்)

இத்தகையதொரு சாத்தியப்பாட்டைப் பற்றி ஸ்டாலினும் அறியாமலில்லை. 1925 ஆம் ஆண்டு ஸ்வெர்ட் லாவ் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் அவர் குறிப்பிட்டதாவது:-

"அடுத்து வரும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் மேனாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசப் புரட்சியால் சோவியத் யூனியன் ஆதரிக்கப்படாமல் இருக்குமானால் சோசலிசப் பார்வையை இழந்துவிடும் அபாயத்தையும், சர்வதேசப் புரட்சிகரப் பார்வையை இழந்துவிடும் அபாயத்தையும், அத்துடன் இணைந்து வரும் தேசிய வாதத்தையும் எதிர்கொள்ள வேண்டியதிருக்கும்" ஆனால் சரணடைவதற்குப் பதிலாக ஸ்டாலின், இத்தகைய

அபாயங்களை எதிர்த்துப் போரிடுமாறு கட்சியை ஊக்குவித்தார். மூலாதாரச் சக்திகளுக்கு அடிபணிந்து, சாதாரண பூர்சுவா ஜனநாயகவாதிகள் நிலைக்குப் படிப்படியாகச் சீரழிந்து விட வேண்டாம் என்றும் கட்சியை எச்சரித்தார். ஏகாதிபத்திய யுகத்தில் போர் தவிர்க்க முடியாதது என்கிற லெனினிய ஆய்வுரையை மறுதலிப்பதையே நவீன புரட்டல் வாதம் தன் வாழ்வாகக் கொண்டிருக்கிறது... இவ்வாய்வுரையானது 'ஒரு நாட்டில் சோசலிசம்' என்கிற லெனினின் கோட்பாட்டின் பிரிக்கப்பட முடியாத பகுதியாக உள்ளது.

"பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இராணுவத்திட்டம்" என்கிற தமது கட்டுரையில் லெனின், ஒரு நாட்டில் சோசலிசத்தின் வெற்றியானது "எதிர்ப்புத் தன்மையை மட்டுமல்லாது சோசலிச அரசுகளின் வெற்றிகரமான பாட்டாளி வர்க்கத்தினை நசுக்குவதற்காக இதர நாட்டுப் பூர்சுவா வர்க்கத்தின் நேரடியான முயற்சியையும் உருவாக்கியே தீரும்" என்பதைச் சுட்டிக் காட்டினார். இது நிகழுமானால் "நாம் நடத்தும் போர் நியாயமானதும் சட்டப்பூர்வமானதுமானதாக இருக்கும். அது சோசலிசத்துக்கான போராக, பூர்சுவா வர்க்கத்திடமிருந்து இதர நாடுகள் அடையும் விடுதலைக்கான போராக இருக்கும்". அவர் மேலும் கூறியதாவது: "உலக முழுவதிலுமுள்ள பூர்சுவா வர்க்கத்தை நாம் தூக்கி யெறிந்து, இறுதியாக உடைமைகளை அதனிடமிருந்து கைப்பற்றிய பிறகுதான் போர்கள் சாத்திய மற்றவையாக இருக்கும்". வெற்றிகரமான பாட்டாளி வர்க்கத்தினை நசுக்குவதற்கான முயற்சிகள் நடக்கும். முதல் சோசலிச அரசு தற்பாதுகாப்புக்கான ஒரு போரை நடத்த வேண்டியிருக்கும் இப்போர் ஒடுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிராக காலனி மற்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளில் மக்கள் தேசிய விடுதலைப் போர்களை நடத்த உற்சாகம் வழங்கியது என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற லெனினயக் கருத்தாக்கம் வளர்க்கப்பட்டது.

"சொற்பமேயானாலும் சிறப்பானவை இருக்கட்டும்" என்ற கட்டுரையில் எதிர்ப்புரட்சித் தன்மை வாய்ந்த ஏகாதிபத்திய மேனாடுகளுக்கும் புரட்சிமயமானதும் தேசிய உணர்வு கொண்டதுமான கிழக்கு நாடுகளுக்கும் இடையே ஏற்படும் அடுத்த இராணுவ மோதலை"யே சோவியத் அரசின் எதிர்காலம் சார்ந்துள்ளது என்று லெனின் கூறினார். இம்மோதல் வெடிக்கும் வரை "சோவியத் கட்சியும் அரசும் மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி அரசுகள் நம்மை நசுக்கி விடாமல் தடுத்து நிறுத்தி வைக்க வேண்டும்" என்று லெனின் பரிந்துரைத்தார்.

சோவியத் அரசை நசுக்க உலக பூர்சுவாக்கள் முயற்சி செய்தன. டிராட்ஸ்கிய 'நிரந்தரப் புரட்சி'யாளர்களிடம் ஸ்டாலின் வீழ்ந்து விடாமல், ஒரு நாட்டில் சோசலிசம் என்ற லெனினியக் கோட்பாட்டின் அடிப்படையில் சோவியத் யூனியனின் பொருளாதார, இராணுவ உள்ளுறை சக்திகளை வளர்ந்த காரணத்தாலேயே, உலகின் முதன் பாட்டாளி வர்க்க அரசால் ஜெர்மானிய ஜப்பானிய பாசிச சக்திகளைத் தோற்கடிக்க முடிந்தது. பாசிச நசுத்தடியிலிருந்து பல நாடுகளை விடுவிக்க முடிந்தது. தேசிய விடுதலைப் போர்களை நடத்த காலனி நாட்டு மக்களுக்கு உற்சாகம் அளித்தது.

உலகப் போரைத் தொடர்ந்து சோவியத் யூனியனைத் தாக்குவதற்காக ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்ட புதிய முயற்சிகளை முறியடிக்க, ஸ்டாலின் உலகு தழுவிய சமாதான இயக்கத்தைத் தொடங்கினார். அதற்காக ஏகாதிபத்திய யுகத்தில் போர் தவிர்க்கப்பட முடியாதது என்ற லெனினியக் கோட்பாட்டை மறுக்கவில்லை. "தற்போதைய சமாதான இயக்கம் வெற்றி பெறுமானால், குறிப்பிட்டபோரைத் தவிர்ப்பதில், அது தற்காலிகமாக ஒத்திப் போடப்படுவதில் முடிவடையும் போர்களை அகற்றுவதற்கு, ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுவது அவசியம்" என்று எழுதினார் ஸ்டாலின்.

1950களில் நிலவிய போர்ச் சூழலில், ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு எதிரான ஆசிய, ஆப்ரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலைப் போரின்போது, விடுதலைப் போரை ஆழப்படுத்த தெளிவான அறைகூடவில் விடுத்தார். சீனம் தொட்டு செக்கோஸ்லோவேகியா வரை தோன்றியிருந்த 'புதிய அதிர்ச்சிப் படை'களுடன் சேர்ந்து அவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்க உறுதியளித்தார்.

இத்தகைய உலகு தழுவிய போராட்டம் வெடிப்பதற்கு முன் ஸ்டாலின் இறந்தார். மேற்கு நாடுகள் அவரது மரணத்தை, புதிய சோவியத் ஆட்சியுடன் இணக்கம் காண்பதற்கான வாய்ப்பாகக் கருதின. சோவியத் கட்சியையும் அரசையும் கைப்பற்றிய வலது சாரிப் புரட்டல் வாதிகள் ஏகாதிபத்திய யுகத்தில் போர் தவிர்க்க இயலாதது என்ற லெனினியக் கோட்பாட்டை மறுதலித்ததன் மூலமும், ஒரு நாட்டில் சோசலிசம் என்ற அவரது கோட்பாட்டை மறுத்ததன் மூலமும், எதிரிகளிடம் தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேரும் சகாப்தத்தைத் துவக்கினார்.

-Frontier Autumn No. 11/79

– பிற்சேர்க்கை

5. ஸ்டாலினும் சோவியத் சோசலிச நிர்மாணமும்
(போல்ஷ்விக் கட்சி வரலாற்றிலிருந்து)

ஏகாதிபத்தியவாதிகளுடன் 4 ஆண்டுகள் நடந்த போரின் விளைவாகவும், தலையீட்டுக்கு எதிராக மூன்று ஆண்டுகள் நடந்த போரின் விளைவாகவும், சோவியத் குடியரசில் வேளாண்மையும் தொழில் துறையும் முற்றாகச் சீர் குலைந்தன. போர்க் காலத்தில் பாட்டாளிகளுக்கும் உழவர்க்கும் இடையில் ஏற்பட்ட உறவு போர்முடிந்த நிலையில் சீர்குலைந்தது. போர்க் காலத்தில்

உழவர்களிடமிருந்து தேசியக் காப்புக்காக மிகையான விளைவை அரசு எடுத்துக் கொண்டது. போர்க் கால கம்யூனிச நடைமுறை இல்லாத நிலையில் உள்நாட்டுப் போரில் வெற்றி ஏற்பட்டிருக்க முடியாது. லெனின் சுட்டிக்காட்டியபடி, போர் முடிந்த நிலையில் போர்க்காலக் கம்யூனிசம் உழவர் நலன்களுடன் முரண்பட்டது. பொருளியல் சீர்குலைவு பாட்டாளிகளையும் கடுமையாகப் பாதித்தது. எதிரிகள் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. எதிரிகள் சோவியத் போர்வைக்குள் ஒளிந்து கலவரங்களைக் கிளப்பினர். 1921 மார்ச்சில் க்ரான்ஸ்டாட் எதிர்ப்புரட்சி, இத்தகையது. சோவியத் படைகள் விரைவில் இதனை அடக்கின.

போர்க்கால கம்யூனிசத்தை விலக்கிக் கொள்வதன் தேவையை கட்சியின் மையக் குழு உணர்ந்தது. மிகுதி விளைவைக் கொள்முதல் செய்வதைக் கைவிடுவதன் தேவையையும், தொழிலாளிகளுக்கிடையில் இராணுவ ரீதியான கட்டளை முறையைக் கைவிடுவதன் தேவையையும் அறிந்தது. டிராட்ஸ்கிய வாதிகளும் பிற குழுக்களும் இதனைக் கடுமையாக எதிர்த்தவர்கள். டிராட்ஸ்கியுடன் புகாரின் ஒத்துழைத்தார். தொழிற்சங்கத்தில் இராணுவ நடைமுறைகள் பயன்படாததை லெனினியவாதிகள் எடுத்துரைத்தனர். லெனின் தலைமையில் கட்சி எதிர்க் குழுக்களின் முயற்சிகளை முறியடித்தது.

1921 மார்ச்சில் பத்தாவது கட்சிக் காங்கிரஸ் கூடியது. கட்சியின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, எல்லா வகையான உட்குழுக்களையும் கலைத்துவிடக் கட்டளையிட்டது. புதிய பொருளாதாரத் திட்டம் தீர்மானிக்கப்பட்டது. அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டியதற்கு மேற்பட்ட விளைச்சலை உழவர்கள் விற்றுக் கொள்ளலாம். இத்தகைய முறையில் உழவர்க்குத் தரும் ஊக்கம், முதலாளியத்திற்குப் புத்துயிர் கொடுப்பதாக இருந்த போதிலும், உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவும் என்றார் லெனின். தனிப்பட்ட உற்பத்தியால் சிறிய அளவில் வியாபாரம் செய்து கொள்ளலாம். அரசுக்குச் சொந்தமான

தொழில்கள் தொடர்ந்து இருக்கும். போர்க்காலக் கம்யூனிச முறை முதலாளியச் சக்திகளுக்கு எதிரான நேரடித் தாக்குதல். இந்தத் தாக்குதல் அதன் எல்லை கடந்து சென்ற நிலையில் அது தன் ஆதாரத்தை இழக்கக் கூடிய ஆபத்தைச் சந்தித்தது. இந்நிலையில் சிறிது பின்னடைவும் தேவைப்பட்டது. இது பின்வாங்கல் அல்ல. நேரிடைத் தாக்குதலிலிருந்து மாறி முற்றுகையிடலாகும். டிராட்ஸ்கியவாதிகள் இதனைப் பின் வாங்கலாகவே விமர்சனம் செய்தனர். பதினோராவது காங்கிரஸில் லெனின் அறிவித்தார்: "பின்னடைவு இத்துடன் முடிவடைகிறது. மூலதனத்தின் மீது தாக்குதலைத் தொடங்குங்கள்".

புதிய பொருளாதாரத் திட்டத்தின் விளைவு ஓராண்டில் தெரியத் தொடங்கியது. உழவர்கள் தொழிலாளிகளுக்கிடையில் உறவு வலுப்பெற்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வலுவடைந்தது. மத்திய தர உழவர்களின் துணையுடன் சோவியத் அரசு குலாக்குகளின் கொள்ளையைத் தடுத்தது. பெருந்தொழில்கள், போக்குவரத்து, பாங்குகள், உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் ஆகிய துறைகளில் அரசு தன் தலைமையை நிறுவியது. பொருளாதாரம் தழைக்கலாயிற்று. 1922 மார்ச்சில் கூடிய பதினோராவது காங்கிரஸில் லெனின் அறிவித்தபடி, பின்வாங்கல் முற்றுப் பெற்றது. புதிய பொருளாதாரத்திட்டக் காலத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் பலம் பெற்றனர். இவர்களிடமிருந்து வியாபாரத்தை அரசு எடுத்துக் கொண்டு அதை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவையிருந்தது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் லெனின், உழவுத் துறையில் சோசலிசக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு தம் கூட்டுறவுத் திட்டத்தை உருவாக்கினார். கூட்டுறவுச் சங்கங்களில் தொடங்கி படிப்படியாகக் கூட்டுறவுக் கோட்பாட்டை வேளாண்மைத் துறையில் விரிவுபடுத்துவதன் தேவையை லெனின் வற்புறுத்தினார். பன்னிரண்டாவது காங்கிரஸ், லெனின் கலந்து கொள்ளாத நிலையில் அவரது பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது. சில தொழில்

துறைகளை அந்நிய நாட்டு முதலாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் (அக்டோபர் புரட்சியின் போது மறுக்கப்பட்ட ஜார் காலத்துக் கடன்களைத் தரவேண்டும் என்றும்) முன் மொழிந்த டிராட்ஸ்கியவாதிகளை காங்கிரஸ் கண்டித்தது. வெளிநாட்டு வணிகத்தில் அரசின் தனியுரிமையைக் கைவிடக் கோரிய புகாரின் சொகோல்னிலோவ் ஆகியோர்கள் ஆலோசனைகளும் மறுக்கப்பட்டன. உழவர்களைக் கசக்கிப் பிழிவதன் மூலம் தொழில் துறைகளைக் கட்டக் கோரினார் டிராட்ஸ்கி. பெருந் தொழில்கள் சில இலாபம் தரவில்லை என்பதனால் கைவிடக் கோரினார் டிராட்ஸ்கி. இவற்றைக் காங்கிரஸ் மறுத்தது. டிராட்ஸ்கியின் ஆலோசனைகளை ஏற்பது பெரும் ஆபத்தில் முடிந்திருக்கும்.

1924-ல் பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், போருக்கு முற்பட்ட நிலையை ஒப்ப முடியவில்லை. 10 லட்சம் பேருக்கு வேலை இல்லை. தொழில்துறைப் பொருட்களின் விலை மிகவும் உயர்ந்திருந்தது. தானியங்களின் விலை மிகக் குறைவாகவே இருந்தது. தொழில் துறையில் உற்பத்திச் செலவு மிக அதிகமாக இருந்தது. விவசாயிகள் இவற்றை வாங்க முடியவில்லை. இதன் விளைவு, விற்பனையில் நெருக்கடி. தொழிலாளிகளுக்கு வேலையில்லாத நிலைமை. விற்பனை நிறுவனங்களில் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம். கட்சியின் மையக்குழு, உடனடியாகத் தலையிட்டு, விலைகளைக் குறைத்தது. சிக்கலான இந்த நிலையில், 46 எதிர்ப்பாளர் ஒன்று திரண்டு. கட்சிக்குள் உட்குழுக்களுக்கு சுதந்திரம் கோரினர். இவர்கள், தொழில், விவசாயத்துறை வளர்ச்சிக்காக எந்த ஒரு ஆலோசனையையும் முன் வைக்கவில்லை. இச்சமயம் டிராட்ஸ்கியின் கடிதம், கட்சி அமைப்பைக் கடுமையாகத் தாக்கியது. போல்ஷ்விக் கட்சி சீர் குலைந்துவிட்டது என்று குற்றம் சாட்டி, கட்சி இதை விவாதிக்கவேண்டும் என்று கோரினார். விவாதத்தில் டிராட்ஸ்கிய வாதிகள் தோல்வியுற்றனர். பதின்மூன்றாவது காங்கிரஸ், டிராட்ஸ்கிய எதிர்ப்பை, மார்க்சியத்திலிருந்து

விலகிய குட்டி - முதலாளியத் திரிபாக விமர்சனம் செய்தது. தொடர்ந்து டிராட்ஸ்கி வெளியிட்ட "அக்டோபரின் படிப்பினை"களில் லெனினியத்திற்கு மாறாக டிராட்ஸ்கியத்தை முன் வைத்தார். இதை மறுத்து லெனினியத்தை நிலை நாட்டும் முறையில் ஸ்டாலினின் 'லெனினியத்தின் அடிப்படைகள்' வெளியிடப்பட்டது. டிராட்ஸ்கியத்தை முறியடித்தாலொழிய, புதிய பொருளாதாரத் திட்ட நிலைமைகளில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை, சோசலிச ரஷ்யாவை உருவாக்குவது சாத்தியமில்லை என்று ஸ்டாலின் எழுதினார்.

லெனின் 1924 ஜனவரி 21ல் இறந்தார். வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளிகள் ஆயிரக்கணக்கில் கட்சியில் உறுப்பினராயினர். 2-1/2 லட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்ந்தனர்.

புதிய பொருளாதாரத் திட்டம் நான்காண்டுகள் செயல்பட்டதன் விளைவாக சோவியத் யூனியன் பொருளாதார, அரசியல் பலம் வெகுவாக வளர்ந்தது. சர்வதேச நிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. முதலாளியம் புரட்சிகர மக்களின் தாக்குதலைச் சமாளித்து நிலைத்திருந்தது. ஜெர்மனி, இத்தாலி, பல்கேரியா, போலந்து ஆகிய நாடுகளில் எழுச்சிகள் அடக்கப்பட்டன புரட்சி அலை தற்காலிகமாகத் தாழ்ந்திருந்தது. மேற்கு ஐரோப்பாவில் முதலாளியம் தற்காலிக நிலை பெற்றிருந்தது. இதன் விளைவாக, உலகில் முரண்பாடுகள் முற்றின. அதே சமயம், சோவியத் யூனியனும் நிலை பெற்றுவிட்டது. ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேசப் பொருளாதார மாநாட்டுக்கு சோவியத் யூனியன் அழைக்கப்பட்டது. அங்கு சோவியத் யூனியனின் மீது ஏகாதிபத்திய வாதிகள் சுமத்த முயன்ற தண்டங்களை சோவியத் யூனியன் ஏற்கவில்லை. பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், முதலிய நாடுகள் தூதுவர் அளவிலான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன. போருக்கு முன்னைய வேளாண்மைத் தொழிற்துறை உற்பத்தியில் 80 சதவீத அளவை சோவியத்

யூனியன் எட்டியது. நாடு முழுவதும் மின்சார மயமாக்கும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. பாட்டாளிகள் வாழ்க்கை நிலைமை பெருமளவில் உயர்ந்தது. இந்த நிலைமைகள் சோசலிசத்தை உருவாக்கும் நாட்டுக்குப் போதியதாகவில்லை.

இப்பொழுது எழுந்த பிரச்னை: சோவியத் யூனியனின் வளர்ச்சியின் எதிர்கால நோக்கம் என்னதாக இருக்கவேண்டும்? சோசலிசத்தின் திசையிலா? வேறு திசையிலா? முதலாளிய நாடுகளில் புரட்சி பின்தங்கிய நிலையிலும் இது சாத்தியமா? புதிய பொருளாதாரத் திட்டம் முதலாளியத்தைச் சிறிய அளவில் ஊக்குவித்த போதிலும், இதன் வழியாக இதனைக் கடந்து சோசலிசத்தைக் கட்டுவது சாத்தியமா?

சோசலிசம்தான் என்பது கட்சியின் முடிவு, ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவதோடு பிரச்னை முடிவடையாது. சோவியத் யூனியனில் சோசலிசத்தைக் கட்டுவது, உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கும். சோவியத் நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவதோடு பிரச்னை முடிவடையாது. தொடர்ந்து முதலாளிய நாடுகளின் சுற்றி வளைத்தலும் தலையீடும் இருக்கவே செய்யும். இதைச் சோவியத் நாடு முறியடிக்க முடியுமா? முடியாது. இந்நிலையில் சோவியத் நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவது இறுதி நோக்கமாக முடியாது. பலநாடுகள் சோசலிசத்தை அடைவது நடந்தேறியாக வேண்டும்.

பதினான்காவது கட்சி காங்கிரஸ் (ஏக் 1925) இது பற்றி விரிவாக விவாதித்தது. ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டவே முடியாது என்பது டிராட்ஸ்கியவாதிகள் கருத்து. அமைதியான முறையில் முதலாளிய வளர்ச்சியின் மூலம் சோசலிசத்தை அடையலாம் என்பது புகாரினிய வாதிகள் விவாதம். ஜினோவிவ், காமனோவ் இருவரும், சோவியத் பற்பல தொழில் நுணுக்கத்திலும் பொருளாதாரத்திலும் பிற்போக்காக

இருப்பதால் சோசலிச வெற்றி சாத்தியமேயில்லை என்றனர். பதினான்காவது காங்கிரஸ் இவர்களை முற்றாக மறுத்து சோசலிசத்தைக் கட்டுவது என்று முடிவெடுத்தது. ஜினோவிவ், காமனோவ் இருவரும் புதிய எதிர்ப்பாளர்களாயினர். சோவியத் நாடு இன்னும் வேளாண்துறை நாடாகவே உள்ளது. நாட்டின் உற்பத்தியில் மூன்றில் இருபங்கு, வேளாண்துறை சார்ந்தது. சோவியத்நாடு, தொழில்துறை நாடாக வேண்டும். சோசலிசத்தின் வெற்றிக்கு இது இன்றியமையாதது. சோவியத்நாடு வேளாண் துறை நாடாகவே இருந்து, வேளாண்துறை உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து, இயந்திரங்களை இறக்குமதி செய்து கொள்ளலாம், என்றும் ஜினோவியவாதிகள் அறிவுரை கூறினர். இவர்களைக் காங்கிரஸ் கண்டித்தது. காங்கிரஸ் முடிந்த பிறகு லெனின்கிராடு குழு, ஜினோவிவ் கருத்தை ஏற்று, காங்கிரஸ் முடிவுகளை மறுத்தது. விரைவில் நிலைமை மாற்றம் அடைந்தது. இவர்களுக்கு எதிரான போராட்டங்களில் ஸ்டாலின் முக்கியப் பங்கு வகித்தார்.

சோசலிச முறையில் தொழில் மயமாக்கும் திட்டத்தைச் சரிவர நிறைவேற்ற முக்கிய குறைகள் களையப்பட வேண்டும். தொழிற்சாலைகளிலிருந்து, பழைய, பழுதுபட்ட இயந்திரங்களை மாற்றிப் புதிய இயந்திரங்களை நிறுவ வேண்டும். கனரகத் தொழிற்சாலைகளைக் கட்ட வேண்டும். முன்னைய ரஷ்யாவில் இல்லாத மின்சார, கனிவள, நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்கும் முறையில் புதிய, பல பெருந்தொழிற்சாலைகளைக் கட்ட வேண்டும். இராணுவ சாதனங்கள் - டிராக்டர்கள் இவற்றை உருவாக்க வேண்டும். இவற்றைச் செய்ய, மிகப் பெருமளவு முதலீடு செய்ய வேண்டும். வெளிநாட்டுக் கடன்கள் அறவே இல்லாத நிலையில், உள்நாட்டு வளங்களையே நம்பியாக வேண்டும். காலனியாதிக்க முறையில் கொள்ளையிடவோ, தோற்ற நாடுகளிடமிருந்து நஷ்ட ஈடு பெறுதலோ, சோவியத் ரஷ்யா செய்ய முடியாது. அக்டோபர் புரட்சியின்போது முதலாளிகள்

நிலப்பிரபுக்களிடமிருந்து பறித்த வளங்கள், கைவசம் உள்ளவை. இவற்றிலிருந்தே சோசலிச முறையில் தொழில் மயமாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், உற்பத்திச் செலவைக் குறைத்தல், முதலிய முறைகளில், இதைச் செய்யவேண்டும். இம்முறையில் தொழிற் பெருக்கம் தொடங்கியது.

இடையில் ஏகாதிபத்தியவாதிகளால் சில தொல்லைகள் நேர்ந்தன. 1926-ல் டிராட்ஸ்கியவாதிகளும் ஜினோவியவாதிகளும் கட்சிக்கு எதிர்க்குழுவை உருவாக்கினர். 1927ல் பிரிட்டன், சோவியத் ரஷ்யாவுடனான தூதுவர் உறவை முறித்தது. இந்நிலையில் எதிர்க்குழுவினர் ஒன்றாக இணைந்து மையக்குழு மீண்டும் ஒரு விவாதத்தைத் துவக்கக் கோரினர். தொழில் மயமாக்கும் திட்டத்தை போதுமான அளவு தீவிரப்படுத்தவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினர். கூட்டுப் பண்ணை இயக்க முறையைத் தீவிரப்படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினர். சோசலிச உருவாக்கத்தில் உழவர்களை இணைக்கும் கொள்கையை மறுத்தனர். தொழிலாளிகளுக்கும் உழவர்களுக்கும் உள்ள முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை என்றனர். விவாதம் தொடங்கியது கட்சி அரங்குகளில் அவர்கள் கடுமையாகத் தோற்றனர். மாஸ்கோ லெனின்கிராடு நகரங்களில் வெளிப்படையான ஆர்ப்பாட்டங்களைத் தூண்டினர். மையக்குழுவுக்கு எதிராகக் கட்சிக்கு விண்ணப்பித்தனர். ஆர்ப்பாட்டத்தின்போது, கட்சிக்கு எதிராக, எதிரி வர்க்கத்திற்கும் விண்ணப்பித்தனர். 1927 – நவம்பரில் டிராட்ஸ்கியும் ஜினோவிவும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

1924, 25-ல் சோசலிச தொழில்துறையின் பங்கு பொது உற்பத்தியில் 81% ஆக இருந்தது. 1926-27-இல் இது 86 சதமாகியது. தனியார் துறை உற்பத்தி 19 சதத்திலிருந்து 14 சதமாகக் குறைந்தது. யார் வெற்றி பெறுவார் என்ற கேள்விக்கான விடை கிட்டத் தொடங்கியது. இதே காலத்தில்

வணிகத்துறையில் தனியார் பங்கு 42 சதத்திலிருந்து 32 சதமாகக் குறைந்தது.

வேளாண்துறையில் நிலைமை வேறு வகையாக இருந்தது. போருக்கு முற்பட்ட நிலையிலிருந்து உற்பத்தி 91 சதத்தை அடைந்த போதிலும், சந்தைக்கு வரும் தானிய அளவு முன்னைய அளவில் 37 சதமாகவே இருந்தது. பெரும்பண்ணைகளைச் சிறு பண்ணைகளாக குறும்பண்ணைகளைச் சிறு பண்ணைகளாக குறும்பண்ணைகளாகப் பிரிக்கும் போக்கு தொடர்ந்தது. இவற்றிலிருந்து சந்தைக்கு வருவதற்கான தானியம் அறவே இல்லை. நிலைமை தொடர்ந்தால், நகர மக்களும் இராணுவமும் கடுமையான பஞ்சத்தைச் சந்திக்க நேரும். கால்நடைப் பண்ணையிலும் இதே பிரச்னை. நிலைமை சிக்கலாக இருந்தது. முதலாளியப் பண்ணை முறைக்குத் திரும்பிச் செல்ல முடியாது. கூட்டுப் பண்ணை முறையை ஏற்படுத்தியாக வேண்டும். லெனின் வகுத்த வழியில் கட்சி செயலாற்ற வேண்டிய தேவை இருந்தது. சிறுபண்ணை முறை பயன்படாது. இவற்றை இணைத்து பெருமளவு கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது லெனின் விதிப்பு. 1927 டிசம்பரில் கூடிய பதினைந்தாவது கட்சிக் காங்கிரஸ் வேளாண்துறையில் கூட்டமைப்பு முறையை ஏற்படுத்தக் கோரியது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வரையுமாறு காங்கிரஸ் அறிவுறுத்தியது. எதிர்க்குழுக்கள், லெனினியத்திலிருந்து விலகி விட்டதாலும், சர்வதேச உள்நாட்டு பூர்சுவாக்களுக்குச் சரணடையும் பாதையை மேற்கொண்டதாலும், எதிர்ப்புரட்சிக்கான கருவியாக மாறியது புறநிலை யதார்த்தமாகி விட்டதாலும், டிராட்ஸ்கி, ஜினோவிவ், காமனோவ், ராடெக் முதலியவர்கள் கட்சியிலிருந்தே வெளியேற்றப்பட்டனர். டிராட்ஸ்கி, ராடெக் முதலியவர்கள் வெளிநாட்டு உளவுத் துறைக்காகப் பணியாற்றியவர்கள் என்பதும் காமனோவ், ஜினோவிவ் முதலியவர்கள் சோவியத் ரஷ்யாவின் எதிரிகளோடு உறவு

கொண்டிருந்தார்கள் என்பதும் அப்போது கட்சிக்குத் தெரியவில்லை. தங்களை மீண்டும் கட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் விண்ணப்பித்ததைக் கூடச் சந்தேகத்தோடு தான் பார்க்க வேண்டியிருந்தது. வெளிப்படையாக அவர்கள் டிராட்ஸ்கியம், சோவியத் எதிர்ப்புச் சித்தாந்தம் என்றும், கட்சித் திட்டமே சரியானது என்றும் அறிவிக்க வேண்டும் என்பதையும் ஒரு காலக்கெடு கொடுத்து, அவர்களைச் சோதித்தே கட்சி ஏற்றுக் கொள்ளும் என்பதையும் பெரும்பாலானவர் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் நம்பத் தகாதவர்கள் என்பதை அனுபவம் நிரூபணம் செய்தது.

டிராட்ஸ்கியவாதிகளும், ஜினோவியவாதிகளும் நடத்திய ஆர்ப்பாட்டம் குலாக்களுக்குத் தைரியத்தை தந்தது. அரசுக்கு அவர்கள் விற்கக்கூடிய தானியத்தை மறுத்தனர். கூட்டுப்பண்ணைகளையும் தானியக் களஞ்சியங்களையும் கொடுத்தனர். குலாக்குகளை உழவர்களின் பார்வைக்கு முன்பே நிர்மூலமாக்கினாலொழிய கூட்டுப் பண்ணை முறை வெற்றி பெறாது என்று கட்சி கருதலாயிற்று. தாங்கள் விற்க மறுத்த தானியத்தை பறிமுதல் செய்யும் காரியத்தைக் கட்சி மேற்கொண்டது. பறிமுதல் செய்த தானியத்தில் 25 சதத்தை ஏழை உழவர்களுக்குத் தந்தது. இதனால், குலாக்களுக்கு எதிரான போராட்டத்தில், உழவர்கள் உறுதியாக ஈடுபட்டனர்.

இச்சமயம் சாக்தி மாவட்டத்தில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட பூர்சுவா தொழில் நுணுக்க அறிவாளிகள் செய்த அழிவு வேலைகளைக் கடுமையாக ஒடுக்க வேண்டியிருந்தது. போல்ஷ்விக் நிர்வாகிகள், தொழில் நுணுக்கத் திறனாளராக பயிற்சி பெற வேண்டிய தேவையை ஸ்டாலின் வற்புறுத்தினார். ஆயிரக்கணக்கில் கட்சி ஊழியர்கள் பயிற்சி பெறலாயினர். இச்சமயம், சோசலிசம் தொடர்ந்து வெற்றி பெற்று வரும் சூழலில் வர்க்க எதிரிகள் விரைவில் தாமாக அடங்கிவிடுவர் என்ற கோட்பாட்டோடு, புகாரின் – ரைகோவ் குழுவினர் குலாக்குகள் மீது கடுமையான நடவடிக்கை

தேவையில்லை என்றனர். இவர்கள் வலதுசாரி சந்தர்ப்ப வாதிகள். இவர்கள் தொழில் சங்கத்திலுள்ள அதிகாரிகளுடன் கூட்டுச் சேர்ந்தனர். தொழிலாக்கம் மக்களுக்குப் பெருஞ்சுமை என்றுகூறி கனரகத் தொழில்களைக் கைவிடக் கோரினர். இவர்கள் நாளடைவில் இடதுசாரிச் சந்தர்ப்பவாதிகளாகிய டிராட்ஸ்கியவாதிகள் ஜினோவியவாதிகளுடன் கூட்டுச் சேர்வர் என்பதில் ஐயமில்லை. 1929ல் கட்சியின் மையக்குழு இவர்கள் சதியை அம்பலப்படுத்தி புகாரினை வெளியேற்றியது. மற்றவர்களை எச்சரித்தது.

1929 ஏப்ரலில் நடைபெற்ற பதினாறாவது காங்கிரஸில் முதல் ஐந்தாண்டு திட்டம் ஏற்கப்பட்டது. திட்டத்தின் தொகை: 6460 ஆயிரம் கோடி ரூபிள். இவற்றில் தொழில் வளர்ச்சி, போக்குவரத்துக்குப் போக வேளாண்மைக்கு 2320 ஆயிரம் கோடி ரூபிள். தொழில் துறையையும் வேளாண்மையையும் நவீன மயமாக்கும் மாபெரும் திட்டம் இது. மாபெரும் உற்சாகத்தோடும் பெருந் சாதனைகளைச் செய்பவர்களைப் பின்பற்றும் சோசலிச முன்மாதிரி உணர்வோடும், திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே முடித்து விடும் உறுதியோடும் லட்சக்கணக்கான உழைப்பாளிகள் பாடுபட்டனர். மாபெரும் தொழில்துறைச் சாதனைகள் நடைபெற்றன.

கூட்டுப்பண்ணைகளை உருவாக்குவதில் உழவர்கள் உற்சாகத்தோடு ஈடுபட்டனர். பண்ணைகளும் இயந்திர டிராக்டர் நிலையங்களும் முன்மாதிரியாக விளங்கின. இவற்றைப் பார்க்க உழவர்கள் கூட்டுப் பண்ணையில் சேர ஆரம்பித்தனர். குறும்பண்ணைகளாகச் சிதறி டிராக்டர் முதலிய கருவிகளைப் பயன்படுத்த முடியாத நிலையில், வறுமையே கதியாகக் கிடந்தவர்கள், இந்தச் சோதனையில் உற்சாகத்தோடு ஈடுபட்டனர். புதிய நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரவும் குலாக்குகளிடமிருந்து விடுதலை பெறவும் இவர்கள் வழிகண்டனர். 1928-ல் கூட்டு பண்ணை நிலங்கள் 14 லட்சம் ஹெக்டர்கள். 1929-ல் 42 லட்சம் 1930 ல் 1 1,2

கோடி ஹெக்டர்கள். வேளாண்மைத் துறையில் இது ஒரு திருப்புமுனை. மத்தியதர உழவர்களும் இவற்றில் பெருமளவில் சேர்ந்தனர். முதலில் தனித்தனிக் குழுவாகச் சேர்ந்த உழவர்கள், நாளடைவில் கிராமங்களாக, மாவட்டங்களாகச் சேர்ந்தனர். குலாக்குகளை அறவே ஒழித்துவிடும் கட்டம் நெருங்கியது.

1930-33-ல் உலக முழுதும் உள்ள முதலாளிய நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட காலத்தில், சோவியத் யூனியனில் தொழில்துறை உற்பத்தி இருமடங்காகப் பெருகியது. சோசலிசப் பொருளாதாரத்தின் மேம்பாட்டை இது விளக்கியது. நெருக்கடியிலிருந்து தப்புவதற்கான முயற்சியில், பூர்சுவா வர்க்கம் (ஜெர்மனி, ஜப்பான் நாடுகளில்) பாசிச சர்வாதிகாரத்தைத் தோற்றுவித்தது இது, தங்களது முன்னைய பாராளுமன்ற முறையினால் பூர்சுவா வர்க்கம் ஆட்சி புரிய முடியவில்லை என்ற முறையில் அதன் பலக் குறைவாகவும் இந்நிலை தோன்றியது.

கூட்டமைப்பைக் கொண்டு வரும் முறையில் சில தவறுகள் நேர்ந்தன. முதலில் உற்பத்திக் கருவிகளை கட்டும் கூட்டமைப்புக்குள் கொண்டு வரும் ‘ஆர்டெல்’ வடிவமும், இது வெற்றிகரமாகச் செயல்பட்ட பிறகே, வீடு கால்நடைகள், கோழி முதலியவற்றைக் கூட்டமைப்புக்குள் கொண்டு வரும் கூட்டுப் பண்ணை முறை வடிவமும் அமைக்க வேண்டும் என்பது மையக்குழுவின் விதிப்பு. அது போலவே மேலிருந்து தரப்படும் கட்டளைகள் இயக்கத்தைச் சீர்குலைக்கும் என்பதால் உழவர்கள் தம் விருப்பத்தின் பேரிலேயே இதில் சேர வேண்டும் என்பதும் விதி. தொடக்கத்தில் ஏற்பட்ட உற்சாகத்தால் பல இடங்களில் இவ்விதிகள் மீறப்பட்டன. இந்த நெருக்கடிக்கிடையில், தங்கள் கால்நடைகளைக் கொல்லுமாறு உழவர்களைக் குலாக்குகள் தூண்டினர். குலாக்குகள் சோவியத் அரசுக்கு எதிரான கலவரங்களைத் தூண்டினர். 1930 மார்ச்சில் கட்சியின்

மையக்குழு, இத்தவறுகளைக் களைய முடிவு செய்தது. அச்சமயம் ஸ்டாலின் கட்டுரை 'Dissy with success' என்பது வெளியாயிற்று கட்சி தன்னை நெறிப்படுத்திக் கொள்ள இது உதவிற்று.

கட்சிக் கட்டளைகளை மீறிய லெனினிய ஸ்டாலினிய நெறியிலிருந்து விலகுகிற தவறுகள் இவை என மையக்குழு விமர்சனம் செய்தது. இத்தகைய இடதுசாரித் திரிபுகள், வர்க்க எதிரிக்கே சாதகமாகும் என்றும் அது கருதியது. இத்தகையவர்களை பதவிகளிலிருந்து விலக்கவும் முடிவு செய்தது. மத்திய தர வர்க்க உழவர்களைப் பற்றிய சரியான பார்வையின்மையே தவறுக்கான மூலம் என்பதையும் ஸ்டாலின் சுட்டிக் காட்டினார். இவற்றின் விளைவாகத் தவறுகள் களையப்பட்டன.

1930 ஜனவரியில் பதினாறாவது கட்சி காங்கிரஸ் கூடியது. நாட்டு உற்பத்தியில் தொழில்துறையின் பங்கு 53 சதமாகியது. நாடு தொழிற்துறை நாடாகமாறி வந்தது. இன்னும், சோவியத் நாடு, பல முதலாளிய நாடுகளுக்குப் பின்தங்கியே இருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்தை நான்காண்டுகளில் நிறைவேற்றுமாறு காங்கிரஸ் கேட்டுக் கொண்டது.

தொழில்துறையை நவீனமயமாக்குவது அடுத்த பணி. இல்லாவிட்டால் விவசாயமும் நவீனமயமாக முடியாது. தொழில் நுணுக்கத்தை பூர்சுவா அறிவாளிகளிடமே தொடர்ந்து விட்டு வைத்திருக்க முடியாது. கம்யூனிஸ்டுகள், தொழில் நுணுக்கத்துறையிடம் வெறுப்புக் கொள்வதை விட்டு, அவற்றைப் பழகிக் கொள்ள வேண்டும்.

சோவியத் தொழில் நுணுக்கத் திறனாளர்களைத் தோற்றுவித்தாக வேண்டும். ஸ்டாலின் இவற்றை மிகுதியாக வற்புறுத்தினார். இதன் விளைவாக, சில ஆண்டுகளில் ஆயிரக்கணக்கில் சிவப்புத் தொழில் திறனாளர்கள் தோன்றினார்கள். கூட்டுப்பண்ணையிலும் திறன் மிக அறிவாளர்கள் தேவை. முன்னைய குலாக்குகளும் அவர்களின்

கையாட்களும் கூட்டுப் பண்ணைக்குள் திறமையாகப் புகுந்து கொண்டனர். அவர்கள் தம் தந்திரத்தை இப்பொழுது மாற்றியிருந்தனர். உழைப்பாளிகளின் கடமையுணர்வைச் சீர்குலைக்கவும் அறுவடைக் கணக்கில் குழப்பம் ஏற்படுத்தவும் குதிரைகளுக்கு நோய்களை உண்டாக்கவும், டிராக்டர்களை நாசப்படுத்தவும் முயன்றனர். இந்நிலையை மாற்ற, கூட்டுப்பண்ணையில் அரசியல் துறைகளை ஏற்படுத்த மையக்குழு முடிவு செய்தது. 17000 கட்சி ஊழியர்கள் கிராமங்களுக்குச் சென்றனர். இதன் விளைவாக கூட்டுப் பண்ணைமுறை பலப்பட்டது.

1934ல் உழவர் குடும்பங்களில் 75 சதமும் விளைச்சல் நிலத்தில் 90 சதமும் கூட்டுப்பண்ணைக்குள் வந்தன. விளைவு அதிகரித்ததன் விளைவாக ரொட்டி முதலிய உணவுப் பொருட்களுக்கான பங்கீட்டு முறை (ரே ன்) நீக்கப்பட்டது.

1934 ஜனவரியில் நடைபெற்ற பதினேழாவது கட்சிக் காங்கிரஸ் 'வெற்றியாண்டுகளின் காங்கிரஸ்' ஆகியது. தொழில்துறையில் 99 சதமும் வேளாண்மையில் 90 சதமும் சோசலிசமயமாகியது. பழைய பொருளாதார முறைகள் ஒழிந்து புதிய சோசலிசமுறை நிலைபெற்றது. மிகுந்திருப்பது பூர்சுவா கருத்தோட்டங்களின் எச்சங்கள். பொருளாதார வளர்ச்சிக்கேற்ப மக்களின் மனநிலை வளரவேண்டும். பெரும் ரஷ்ய தேசிய வெறிவாதமும் வட்டார தேசிய உணர்வும் எஞ்சியிருக்கின்றன. இவற்றுக்கெதிராகக் கட்சி போராடவேண்டும். சரியான இடங்களில் பொருத்தமான நபர்கள் இருந்து கட்சியின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இதற்காக கட்சிமையக் குழுவின் கீழ் கட்சிக் கட்டுப்பாட்டுக் குழுவும், சோவியத் கட்டுப்பாட்டுக் குழுவும் ஏற்படுத்தப்பட்டன. நிர்வாகத் தலைமை அரசியல் தலைமையாக உயர்த்தப்பட வேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தக் காங்கிரஸில் ஏற்கப்பட்டது. 133000 ஆயிரமும் கோடி

ரூபாய்கள் இத்திட்டச் செலவு. வேளாண்மையை இயந்திர மயமாக்குவதும் போக்குவரத்துச் சாதனங்களை வளர்ப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

பதினேழாவது காங்கிரஸில் புகாரின் ரைகோவ், டோம்ஸ்கி, ஆகியோர் சுயவிமர்சனம் செய்து கொண்டனர். டிராட்ஸ்கிய வாதிகளான, ஜினோவிவ், காமனோவ் ஆகியோர் கட்சியை வானளாவப் புகழ்ந்ததோடு தங்கள் தவறுகளைக் கடுமையாக சுயவிமர்சனம் செய்து கொண்டனர். கிரோவின் உயிர்க்கெதிராக இவர்கள் சதிசெய்து வந்ததைமறக்கவே இவ்வாறு செய்தார்கள் என்பதைக் கட்சி அறியவில்லை.

1934 டிசம்பர் முதல் நாள் கிரோவ் கொல்லப்பட்டார். குற்றவாளி பிடிபட்டான். ஜினோவிய வாதிகளின் எதிர்ப்புரட்சிக் குழுவைச் சார்ந்தவனே அவன் என்பது வெளியாயிற்று. 33-34ல் அமைக்கப்பட்ட இந்தக்குழு கட்சியின் தலைவர்களைக் கொல்லத்திட்டமிட்டிருந்தது.

இந்தக் குழுவைச் சார்ந்தவர்களில் அகப்பட்டவர்கள் உயர்நீதி மன்றத்தின் ராணுவப் பிரிவால் சுட்டுக் கொல்லப்படுமாறு விதிக்கப்பட்டனர். தொடர்ந்து மாஸ்கோ மையம், என்ற எதிர்ப்புரட்சிக்குழு கண்டறியப்பட்டது. ஜினோவிவ், காமனோவ், யெவ்டோலி மோவ் முதலியவர்களின் சதி கண்டறியப்பட்டது. இவர்கள் டிராட்ஸ்கி - புகாரின் குழுவோடு தாம்சம்பந்தப்பட்டிருந்ததை மறைத்தார்கள். பின்னர் இதுவும் கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் வெண் படையுடன் தொடர்பு கொண்டிருந்ததும் வெளியாயிற்று. கிரோவ் கொலையைத் திட்டமிட்டவர்கள் டிராட்ஸ்கி, ஜினோவிவ், காமனோவ், மற்றும் அவர்களது கூட்டாளிகள் என்பது தெரியலாயிற்று. கட்சி அரசு ஆகியவற்றின் தலைவர்களைக் கொல்வது இவர்கள் திட்டம். மாஸ்கோ விசாரணையில் இவை வெளியாயின. இவர்களின் தலைவன் டிராட்ஸ்கி. இவர்கள் சோவியத் யூனியனை ஏகாதிபத்தியத்தின் தாக்குதலின் போது வீழ்த்தக் காத்திருந்தார்கள். இவர்கள் ஜெர்மன் ஜப்பான் பாசிசவாதிகளின் கைக்கூலிகள். கட்சி

இனி தன் அரசியல் குருட்டுத்தனத்தை விட்டொழித்ததாக வேண்டும்.

இனிக் கட்சியை சுத்தம் செய்தாக வேண்டும். இது 1933 முதல் தொடங்கியது. கட்சி உறுப்பினர்களின் பழைய காலவரலாறுகள் முழுமையாக ஆராயப்பட்டு புதிய கட்சிக்கார்டுகள் வழங்கப்பட்டன. எதிரிகள் கட்சிகளில் நுழைவதைக் கடுமையாகத் தடுத்தாக வேண்டும்.

சோவியத் அரசு மக்களின் எதிரிகளை நாட்டுக்குத் துரோகிகளைக் கடுமையாகத் தண்டித்தது.

பாசிசம் உலகில் விரைவாக வளர்ந்து வந்தது. இரண்டாவது ஏகாதிபத்தியப் போர், பிரகடனம் இல்லாமலேயே பலநாடுகளை தனக்குள் இழுத்துக் கொண்டது. 'ஜனநாயக' நாடுகள் தமக்கு இதில் சம்பந்தமில்லாதது போல் நடந்து கொண்டன. இவை பாசிச சக்திகளுக்கு எதிராக இணையவில்லை. தவிர பாசிசசக்திகள் பாட்டாளி வர்க்க இயக்கங்களையும் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் அடக்க வந்தவை என்பது போல கருதிக் கொண்டன.

பாசிசத்தின் ஆபத்தை அவை அறியவில்லை. சோவியத் ரஷ்யா தொடர்ந்து தொழில் துறையில் வளர்ச்சி பெற்றது. முதலாளிய நாடுகள் 1926ன் உற்பத்தி அளவில் 95 சதத்தைக் கூட எட்டாத நிலையில் சோவியத் நாடு 1926 அளவில் 56 மடங்கை எட்டியது.

தொழில் நுணுக்க வளர்ச்சியில் சாதனை புரிந்த நிலையில் தொழில் நுணுக்கத்திறனாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் முறையில் ஸ்டாக்கனோவ் இயக்கம் தோன்றியது. உற்பத்தித் திறன் பெரும் அளவில் வளர்ச்சி பெற்றது.

புதிய நிலைகளுக்கு ஏற்றதாக 1936-ல் புதிய அரசியல் சட்டம் நிறைவேறியது. 1937ல் புகாரின் டிராட்ஸ்கி கும்பல் பற்றிய புதிய உண்மைகள் வெளியாயின. டிராட்ஸ்கி, ஜினோவிவ் முதலியவர்கள்; அக்டோபர் புரட்சிக்

காலத்திலிருந்தே லெனினுக்கு எதிராகச் செய்து வந்த சதிகள் அம்பலமாயின. லெனின் ஸ்டாலின் முதலிய தலைவர்களைக் கொல்ல இவர்கள் சதி செய்தனர்.

லெனினைச்சுட்டது இந்தக் கும்பல்தான். லெனின் தலைமையைச் சீர்குலைக்க முயன்றதும் இவர்களே.

இவர்களே கார்க்கி முதலியவர்களைக் கொன்றார்கள். இவர்கள் பாசிசக் கைக் கூலிகள். இவர்களை இனி விட்டு வைக்கக் கூடாது. புகாரின் டிராட்ஸ்கி கும்பலைச் சேர்ந்தவர்களைச் சுட்டுக் கொல்ல சோவியத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

புதிய தேர்தலுக்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மையக்குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஜாடனோவ் தந்த அறிக்கையிலிருந்து பல கட்சி நிறுவனங்கள் செய்து வந்த தவறுகள் புலனாயின. இவற்றை மையக்குழு களைந்தது. போல்ஷ்விக் கட்சி, பிற கட்சிகள் மற்ற பாட்டாளிகள் உழவர்கள், அலுவலர், அறிவாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் நின்றது. இவ்வணியைச் சேர்ந்தவர் 98.6 சதம் வெற்றி பெற்றனர்.

அக்டோபர் புரட்சியின் 25 வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

- (History of the Communist Party of the Soviet Union (Bolsheviks) FLPH, Moscow 1948 என்ற நூலின் சாரம்)

***

பரிமாணத்தின் பார்வையில்
இலக்கு – கலாச்சார இயக்கம்

இந்தியாவில் – தமிழகத்தில் சமூக மாற்றத்திற்கான தேவைகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் வகிக்கும் சக்திகள், அரசியல், சமூகம், மதம், கலை இலக்கியம், பத்திரிகைகள் முதலிய பல துறைகளிலும் – பலதுறைகள் மூலமாகவும் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள, பெருக்கிக் கொள்ள முயற்சி செய்கின்றன. இதன் விளைவாக, சமுதாயத்தின் அனைத்துத் துறைகளும் ஆதிக்கச் சக்தியின்

ஆக்டோபஸ் பிடிக்கும் நாசத்திற்கும் கேவலத்திற்கும் உரியவையாகியிருக்கின்றன. இந்த நிலை தொடர்வது, மக்கள் வாழ்வின் மூலங்களை மடியச் செய்யும்.

வரலாறு தொடர்ந்து தேங்கியிருப்பதில்லை. ஆதிக்கச் சக்திகள் தமக்கு எதிர்ப்பாளர்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்கிறார்கள். வரலாற்றின் ஆக்கச் சக்திகள் தம்மைத் திரட்டிக் கொள்வது தேவையாகிறது. சமுதாய மாற்றத்தில், சரியான திசை வழியைத் தேர்ந்து கொண்ட அரசியல் வாதிகளைப் போலவே சமூக உணர்வும் பொறுப்பும் உள்ள சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியவர்க்கும் கடமைகள் இருக்கின்றன. மேன்மையான மனித உறவுகளை கலாச்சாரக் குணங்களைக் கண்டறிதலும் வளர்த்தலும், இவர்கள் கடமைகள். மேன்மையான மனித உறவுகளை - கலாச்சாரக் குணங்களைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக இவர்கள் தம் சக்திகளைத் திரட்டிக் கொள்வது காலத்தின் வரலாற்றின் தேவை.

இந்தப் பின்னணியில் தான் இலக்கு – கலாச்சார இயக்கம் தோன்றுகிறது, பக்திப்பரவசம், கும்பமேளாக்கள், சங்கராச்சாரியார் – சாயிபாபாக் கும்பல்கள், சமயச் சொற்பொழிவுகள், வானொலி, தொலைக்காட்சி முதலிய சாதனங்கள் சமயச்சக்திகளுக்கு ஒத்துழைத்தல், பெரும் பத்திரிகைகள், விளம்பரங்கள், தொடர் கதைகள், பத்திரிகைத் தளங்கள், கல் தோன்றாக் காலத்துத் தமிழ்ப் பெருமைகள், தமிழ் இலக்கிய வணிகர் திருக் கூட்டங்கள், மாணவர்களை மலடாக்கும் பாடப் புத்தகங்கள், ஆங்கில மோகம், பட்டி மன்றங்கள், ஆய்வு மன்றங்களின் சமூகப் பொறுப்பற்ற தன்மை, பல்கலைக் கழகக் குருபீடங்களில் தமிழடியார்கள் தனிநபர் வழிபாடுகள், தனித் தமிழ்க் குருபீடங்கள், திரைப்பட அலங்கோலங்கள், தலைவர் பெருமைகள், பாராட்டு விழாக்கள், தமிழ்க் கவிதைக்காக, தமிழ் இலக்கியத்திற்காகவே உயிர் வாழும் பெருமைகள், தற்காலத் தமிழ் விமர்சனத் துறைக்கு இவரை விட்டால் கதியில்லை என்ற போக்கு .... இப்படிச் சீர் குலைந்திருக்கும் கும்பல் கலாச்சார அவலங்களுக்கு எதிரானது இலக்கு – கலாச்சார இயக்கம்.

களம் பெரியதுதான். பிரச்னைகளும் பற்பல. பிரச்னைகளுக்குத் தரும் அழுத்தங்களும் வேறுபடுகின்றன. இவற்றுக்கிடையில் பொதுவான நோக்கமும் இலக்கும் தெரிகின்றன. பிரச்னைகள் பற்றிய அவரவர் பார்வைக்கான நியாயத்தோடு செயல்படுவது – பொது இலக்கு நோக்கிச் செயல்படுவது முக்கியமாகிறது.

கலாச்சார சீர்குலைவுக்கு எதிராகவும் ஆரோக்கியமான கலாச்சாரப் போக்குக்கு ஆதரவாகவும் செயல்பட விரும்பும் இலக்கு – கலாச்சார இயக்கம் முதலில் சிறு பத்தரிக்கைகள், தெரு நாடக இயக்கம், தரமான புத்தக வெளியீட்டு நிறுவனங்கள், திரைப்படச் சங்கங்கள் ஆகியவற்றின் கூட்டமைப்பாகத் தொடங்குகிறது. ஒருவர்க்கொருவர் உதவி, பொது நோக்கத்தின் அடிப்படையில் தம் சக்திகளை ஒருங்கிணைத்து வளர்த்தல், தமக்குள்ளும் பிறருடனும் ஆரோக்கியமான விவாதங்கள் நடத்துதல் மூலம் தம் கருத்துக்களைப் பரவலாக்குதல், மக்களின் கலை இலக்கிய உணர்வின் தரத்தை உயர்த்துதல், நாளடைவில் தம் சக்திகளைத் திட்டிக் கொண்டு செயல்படும் நிலையில் இயக்கமாதல் இத்தகைய பார்வையோடு இந்த இயக்கம் தோன்றுகிறது.

இது தொழிற்சங்கமா?... இல்லை. இதுவும் கும்பல் கலாச்சாரத்தின் பகுதியாகச் சீர் குலையுமா?... கூடாது. இது கட்சிகளுக்குக் காவடி எடுக்குமா? அப்படி எடுக்கக் கூடாது என்பதில் உறுதியுள்ளவர்கள் திரண்டால், அப்படி ஆகாது. இத்தகைய இயக்கம் வளரக் கூடாது என்று யார் கருதுவார்கள்? அவர்கள் ஆதிக்கச் சக்திகள் அல்லது அவர்களின் காவலர்கள் – காவடிகள். அவர்களுக்கு எதிராகத்தான் இந்த இயக்கம். ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராகத் திரளும் ஆரோக்கியமான சக்திகளோடு தான் இந்த இயக்கம்.

~~*

பரிமாணம் – 9

ஜூன் 1980

நீச்சல்

தென்கரை நீரில்
ஒரு மிடறு அப்போ
வடக்கு மீனின்
சுவைப்பு இப்போ.

நீண்ட நதியை வெட்டுகிறது
ஒரு நீச்சல்
ஆகாய விரிவை அளக்கிறது
ஒரு பார்வை

வீசட்டும் காற்று
மோதட்டும் அலை
நோக்கற்ற வெற்றுலாவை
மீறுகிறது இது.

இன்று ஓய்வு
நன்று கழிந்தது
கன்ஃபியூசியஸ் சொன்னார் அன்று
கடவுத் துறையில் நின்று
'வாழ்க்கை
பழமைக்குள் பாய்கிறது'

கொடிமரத்தை ஆட்டுகிறது
தென்றல்
மலைகள் அசையாதிருக்கையில்
கருவாகிறது ஒரு திட்டம்

பாலம் ஒன்று
பாயும் குறுக்கே
தடை
தடமாக மாறும்

மேற்கில் உயரும்
புதுச் சிகரங்கள்
நாட்டை காக்கும்
மலைகள்
அமைதி ஏரிகள்
உண்டாகும் நிறைய

இன்னும் வாழ்ந்தால்
தேவதை அதிசயிப்பாள்
பூமியின் மாறுதல்கள்
கண்டு

மா சேதுங் (1956)
(தமிழாக்கம் : தமிழ்நாடன்)

1. நம்பார்வை

பரிமாணம் – 8வது இதழ் – ஸ்டாலின் பற்றிய சிறப்பிதழ் நிறையப் பிரச்னைகளை முன் வைக்கிறது. இதற்காகப் பாராட்டும் பழிப்புரைகளும் எங்களை நிறைய எட்டுகின்றன.

மார்க்சியத்தில் ஸ்டாலின் நெடுங்காலத்திற்குத் தீராத பிரச்சனையாக இருப்பார். ஸ்டாலினைப் புரிந்து கொள்வது, மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளும் கல்வியில் முக்கியமான பிரச்னை. மார்க்சியத்தின் ஆழம் பற்றி அக்கறை கொள்ளாதவர்கள் எங்களைக் காய்வதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். இவர்கள் சச்சிதானந்தத்தின் கவிதையைக் கூடப் புரிந்து கொள்ளாததில் வியப்பில்லை.

இப்படி விமர்சனம் செய்பவர்கள், நீங்கள் படிப்பாளிகள்; பாட்டாளி வர்க்கத்திற்கு இக்கட்டுரை பயன்படுமா என்று கேட்கிறார்கள்.

மார்க்சியத்தை பாட்டாளி வர்க்கத்திடம் எடுத்துச் செல்பவர்கள் மார்க்சியம் பற்றிய விரிவான படிப்பும், மார்க்சியத்தின் அடிப்படைகளில் தொடர்ந்த ஆய்வும் கொண்டிருக்க வேண்டும் என்பதை மறுக்கமுடியாது. இவர்களுக்குப் பரிமாணம் வெகுவாகப் பயன்படலாம். இவர்கள் மூலம் பாட்டாளி வர்க்கத்திற்குப் பரிமாணம் பயன்படும். குலப்பிறப்பிலேயே ஐயம் கொண்டவர்களைப் போன்ற பார்வை, புறநிலைப் பார்வையாகாது. புரிந்து கொண்டு, அப்புறம் செய்யும் விமர்சனங்களை மகிழ்வோடு எதிர்கொள்ள விரும்புகிறோம். கட்சிக் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் திறந்த மனத்தோடு இருப்பது அரிதாக இருக்கிறது. அவர்கள் மனத்திறப்புக்குப் பரிமாணம் பயன்படும்.

தி.க.சி.எழுதினார்:–"நீங்கள் தந்த விவரங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்". மார்க்சியத்தோடு பல்லாண்டு பழகி வருபவர்க்கே இந்நிலை இது தவறு

அல்ல. இத்தகைய அணுகலே மார்க்சியம் பரவலுக்கு உதவியாக இருக்கும்.

ஸ்டாலின் காலத்தில் கலை இலக்கியப் பிரச்னைகளில் ஏற்பட்ட திரிபுகள் பற்றிய கட்டுரைகள் சிறப்பிதழில் இல்லை சிலர் குறைபட்டுக் கொண்டார்கள். Social Scientist-லிருந்து சுருக்கமாகத் தொகுக்கப்பட்ட கட்டுரை குறையைத் தீர்க்கலாம். மூலக் கட்டுரையைப் படிக்குமாறும் வேண்டுகிறோம்.

சோவியத் கலை இலக்கிய விமர்சகர்களால் புறக்கணிக்கப்படும் காட்வெல் பற்றிய கட்டுரை ஒன்று இவ்விதழில் இடம் பெறுகிறது, மிகச் சிறப்பான இக்கட்டுரையில் D.H. லாரன்ஸ், பெர்னார்டு ஷா பற்றிய மிக இறுக்கமான பார்வையைக் காட்வெல் கொண்டிருந்தது புலப்படுத்தும். இப்பார்வை பற்றிய விமர்சனம் மார்க்கோலிஸ் என்பாரின் The Function of Literature என்ற நூல் கொண்டுள்ளது. இவ்விமர்சனம் இன்னொரு முறை தரப்படும்.

திரு. க. வீரையன் எழுதிய "கம்பனும் பக்தி இயக்கமும்" என்ற நூல் கம்பனைப் பற்றிய உடன்பாடான மதிப்பீடு செய்கிறது. பொருளாதாரப் பேராசிரியராக உள்ள வீரையன் அவர்கள் இந்திய வரலாறு பற்றிய மார்க்சியக் கண்ணோட்டத்தைத் தன் நூலில் சுருக்கமாக வெளியிடுகின்றார். கம்பனைப் பற்றி ஜீவாவும், ராமகிருஷ்ணனும் கொண்டிருந்த அணுகுமுறையை விட வளமான பார்வை கொண்ட இந்நூல் ஆழ்ந்து படித்தற்குரியது. பரிமாணத்தில் மறு பிரசுரம் செய்யப்படும். இக்கட்டுரை, நூலைப் படிப்பதற்கான மாற்று அல்ல. இக்கட்டுரை பற்றிய விவாதங்களைப் பரிமாணம் எதிர்கொள்ள விரும்புகிறது. ("கம்பனும் பக்தி இயக்கமும்" – பதிப்பாளர்கள்: தீபா பதிப்பகம், திருவெண்காடு 609 114, விலை ரூ.14)

முதலிதழில் அல்தூஸரை அறிமுகப்படுத்தியிருந்தோம். கலை பற்றிய அவரது கடிதம் இவ்விதழில் இடம் பெறுகிறது.

- பரிமாணத்தை மேலும் சிறப்பாகக் கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நண்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.
- மாவோ மறைந்த பிறகு சீனத்தின் பொதுவுடைமைக் கட்சியிலும் அரசியல், சமூக, பொருளியல் வாழ்விலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உலகப் பொதுவுடைமை இயக்கத்தினரிடையேயும் சிந்தனை யாளரிடையேயும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளன. தத்தம் நாட்டுப் புரட்சியில் அக்கறையுடைய எவரும் சீனத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகளை மிகப் பொறுமையுடனும் ஆழமாகவும் புரிந்து கொள்ள வேண்டும். இம்மாற்றங்களைப் பற்றிய பல்வேறு கருத்துகளுக்கும் இடம் தந்து விவாதத்தை சீரிய பாதையில் முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறது ‘பரிமாணம்’. இதன் தொடக்கமாக அண்மையில் சீனத்துக்குச் சென்று வந்த நண்பர் ‘குணா’வின் கட்டுரையொன்று இவ்விதழில் இடம்பெறுகிறது. அடுத்து வரும் இதழ்களில் தொடர்ந்து வேறு சிலரது கட்டுரைகள் இடம் பெறும்.

தமிழகத்தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. விளைவுகளால் தமிழகத்துக்கு விமோசனம் வரப்போவதில்லை. ஆனால் மக்கள் ஈரணியாகப் பிரிந்துள்ளனர் என்பது தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. ஆலையரசர்களும், நிலப்பிரபுக்களும் தி.மு.க. – காங் (இ) பக்கம் நிற்க, நில மற்ற உழவுத் தொழிலாளர், வறிய, நடுத்தர உழவர் நகர்புறப்பட்டாளிகள், வெள்ளைக்காலர் ஊழியர் ஆகியோர் எம்.ஜி.ஆர். அணியில் நின்றனர். மக்கள் தம் நலன்களைப் பற்றிய உணர்வு கொண்டுள்ளவர்களாக உள்ளனர் என்பதும், மாற்று வழி இல்லாத வரை அவர்களது வர்க்கப்போர் தேர்தல் தீர்ப்பளிப்பு என்ற எதிர்மறை விளைவாகவே நிகழ்ந்து கொண்டிருக்கும் என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

2. கிரிஸ்டோபர் காட்வெல்

— ஏ.கே.தத் —
தமிழில்: ஞானி

1936-இன் தொடக்க மாதங்களில் இலண்டன் நகரில் போப்லார் பகுதியில் இருந்த கப்பல் செப்பனிடும் துறையில் பணிபுரிந்த தொழிலாளிகள், தமது கூட்டங்களுக்கு அடிக்கடி வந்து உரையாற்றிய அமைதியான ஒரு இளைஞனைக் கண்டார்கள். சனிக்கிழமை பிற்பகல் நேரங்களில் கிரிஸ்ப் தெருமுனையில் 'டெய்லி வொர்க்கர்' என்ற பத்திரிகை இதழ்களை வழிப்போக்கர்களிடம் விற்றுக் கொண்டிருந்ததையும் அவர்களில் சிலர் பார்த்தனர். கப்பல் துறைப் பணியாளர்களில் கொள்கை ஈடுபாடுடைய சிலர் இந்த இளைஞனிடம் ஒரு வித்தியாசமான போக்கு இருப்பதைக் கண்டார்கள். ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியாளன் என்ற கருத்துக்கு முற்றிலும் இசைந்ததொரு தோற்றத்தில் அவன் இல்லை. அவன் அவர்களுக்கு ஒரு புத்தகப் புழுவாகத் தோன்றினான். அவன் காலம் தவறாமல் பணியாற்றினான். தனது பல புத்தகங்களுக்கான தட்டச்சுத்தாள்களைத் தனது தட்டச்சுப் பொறியில் நாள் முழுவதும் அடித்த பிறகு, சரியாக ஐந்து மணிக்கு தன் அறையை விட்டு வெளியேறினான். உரையாற்றுவதற்கோ ஊதியமில்லாமல் பத்திரிகை விற்பதற்கோ அவன் சென்றான். அவனுடைய பேச்சு தீர்க்கமானதாகவும் தெளிவான உச்சரிப்புடையதாகவும் இருந்தது. அவனுடைய வேடிக்கைகள் பெரும்பகுதி வறட்சி உடையதாகவும் அவனுடைய கல்வித் தேர்ச்சியைக் காட்டுவதாகவும் இருந்தன. பாட்டாளி வர்க்கத்தின் சுவைகளுக்கு ஏற்றதாக அவனுடைய நடைமுறையும் பேச்சும் இருந்ததில்லை, சில மாதங்கள் அவனை அவர்கள் சந்தேகக் கண்களோடு பார்த்தார்கள். அவன் தன் வாழ்வுக்காகத் துப்பறியும் நாவல்கள் எழுதுவதாகப் பேசிக் கொண்டார்கள். அவன் ஒரு கவிஞர் என்று சிலரும் சிறுகதை

ஆசிரியர் என்று சிலரும் பேசிக் கொண்டனர். அவனுடைய பெயர் தாங்கிய விமானவியல் பாடப்புத்தகங்கள் பல இருப்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

ஆனால் அந்தக் குறிப்பிட்ட வட்டாரப் பொதுவுடைமைக் கட்சி அலுவலர்களுக்கு உண்மை தெரியும். அந்த இளைஞன் பலதுறை அறிஞன் என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தனர். 1907 அக்டோபர் 20 இல் புட்னியில் அவன் பிறந்தான். 16-வது வயதில் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு மூன்று ஆண்டுகள் ஒரு பத்திரிகை நிருபராகப் பணியாற்றினான். பிறகு இலண்டனுக்கு வந்து விமானவியல் புத்தக வெளியீட்டாளர்களின் நிறுவனத்தில் முதலில் ஒரு ஆசிரியராகவும் இயக்குநராகவும் கவனத்தை ஈர்க்கத் தகுந்த முறையில் ஒரு 'கியரை'க் கண்டுபிடித்தான். 25வது வயதில் அவன் விமானவியல் பற்றிய ஐந்து பாடப் புத்தகங்களுக்கும், ஏழு துப்பறியும் நாவல்களுக்கும் பல கவிதைகளுக்கும் சிறுகதைகளுக்கும் ஒரு சிறந்த நாவலுக்கும் ஆசிரியனாக விளங்கினான். 1935 கோடை காலத்தில் கார்ன்வாலில் மார்க்சு, ஏங்கெல்சு, லெனின், புக்காரின், பிளக்கனோவ் ஆகியோர்களின் படைப்புக்களைக் கற்றறிவதில் மூழ்கி இருந்தான். அடுத்த ஆண்டு இலண்டனுக்கு வந்து போப்லாரில் தங்கி இருந்தான். அந்த வட்டார பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தான். அவனது திறமையை கட்சித் தலைவர்கள் மிக விரைவில் கண்டு கொண்டனர். மக்கள் முன்னணியின் அனுபவங்களை நேரடியாகக் கற்று வர அவன் பாரிசுக்கு அனுப்பப்பட்டான். பெரும் உற்சாகத்தோடு அவன் திரும்பி வந்தான். தனது படைப்புக்களை மிக விரைவாக எழுதிக் குவித்தான். ஒரே சமயத்தில் பல புத்தகங்களை அவன் எழுதிக் கொண்டிருந்தான்.

இடையில் ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் வெடித்தது. கப்பல்தளத் தொழிலாளிகள் தம் பங்கைச் செய்யத் தொடங்கினர். 1936 நவம்பரில் போதுமான பணம்

வசூல் செய்யப்பட்டு ஒரு ஆம்புலன்ஸ் வாங்கப்பட்டது. கட்சியின் இயந்திரவியல் நிபுணன் என்று கருதப்பட்ட அந்த இளைஞன் ஆம்புலன்சை பிரான்ஸ் வழியாக ஸ்பெயினுக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஸ்பெயினில் குடியரசிடம் அதை ஒப்படைத்த பிறகு சர்வதேச படையில் பிரிட்டிஷ் பிரிவில் 1936 டிசம்பர் 11இல் அவன் சேர்ந்தான். அவனுடைய இராணுவப் பணி மூன்று மாதங்கள் கூட நீடிக்கவில்லை. 1937 பிப்ரவரி 12 ஆம் நாள் அவன் கொல்லப்பட்டான். விரைவில் கப்பல் தளத் தொழிலாளிகள் இந்தச் செய்தி அறிந்து அவனுடைய நினைவாக ஒரு இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்தனர். அதுவரைகூட அந்த இளைஞனைப் பற்றி நீண்டநாள் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய செய்தி எதுவும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஆனால், இரண்டாண்டுகளுக்குப் பிறகு மூன்று புகழ்பெற்ற படைப்புகளுக்கு ஆசிரியன் என்ற முறையில் அந்த இளைஞன் பெரும்புகழ் எய்தினான். அந்நூல்கள்: Illusion and Reality, Studies in a Dying Culture, The Crisis in Physics. இன்றுவரை மிகச் சிலர்தான் அந்த இளைஞனுடைய உண்மைப் பெயர் கிரிஸ்டோபர் செயின்ட் ஜான் ஸ்பிரிக் என்பதை அறிவார்கள். காட்வெல் என்பது அவருடைய இலக்கியப் புனைபெயர் மட்டுமே. காட்வெல்லின் மரணம் ஒரு பெரும் அவலம். காரணம் தன்னை அவர் கண்டறியத் தொடங்கிய சமயத்தில் அந்தப்புகழ்பெற்ற சிந்தனையாளரின் மரணம் நேர்ந்தது. அவர் இறந்த போது வயது 29. ஜான் ஸ்ட்ரேச்சி கூறியது போல அவருடைய குறுகிய வாழ்க்கை அவரது பேரறிவைப் புலப்படுத்தியது. அந்த இளைஞர் வாழ்க்கை நெருப்பில் தனது கைகளைச் சூடுபடுத்தி கொண்டதோடு அமையாமல் அந்த வாழ்க்கை நெருப்பு கொளுந்துவிட்டு எரியுமாறு அதைத் தூண்டினார். அவர் விமானவியல் முதல் கவிதை, துப்பறியும் கதைகள், கோன்டம் எந்திரவியல், எகலின் தத்துவம், மனவியல் ஆய்வு வரை எல்லாவற்றிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அவை

பற்றி அவன் சொல்வதற்கு சில உண்மைகள் இருந்தன. அப்படித்தான் 20 வயதில் ஒரு இளைஞன் இருக்க வேண்டும். விமானவியல், கோண்டம் எந்திரவியல் பற்றி அவன் முடிவாக எதையும் சொல்ல முடியாதும் போகலாம். ஆனால் அவனுக்கு முப்பது வயதாகும் போது அவனது பல துறை கவனம் ஒன்று அல்லது இரண்டு தேர்ந்த துறைகளில் முழுமையாக ஈடுபடும். அப்பொழுது அந்தத்துறை நிச்சயம் வளம்பெறும்.

காட்வெல் ஒரு சிந்தனையாளர் மட்டுமல்ல, செயல் வீரரும் ஆவார். உடமை வர்க்க மாயைகளிலிருந்து விடுபட்ட பிறகு ஒரு மார்க்சீய வாதிக்கு ஒரே ஒரு தேர்வுதான் இருக்க முடியும் என்று அவர் சொல்லியிருக்கக் கூடும். "சுதந்திரத்தின் முக்கியத்துவம் பற்றி நான் எவ்வாறு உணர்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். ஸ்பெயின் மக்கள் படைக்கு இன்று உதவி மிகவும் தேவை. இன்று அவர்கள் தோல்வியுற்றால் அவர்களின் போராட்டம் நாளை நமது போராட்டமாகும். என்னுடைய கடமை எது என்பதைப் பற்றி எனது நம்பிக்கை எனக்குத் தெளிவுபடுத்துகிறது". அவர் படைப்பிரிவில் சேர்க்கப்பட்ட பொழுது இப்படித்தான் கூறினார். ஜனநாயக சுதந்திரத்திற்காக ஒரு பொதுவுடைமைவாதி சாவது என்பது பிரிட்டிஷ் பொது மக்களுக்கு ஒரு பெரும் புரட்சியாகவே தோன்றியிருக்கும். பொதுவுடைமைவாதிகள் என்பவர்கள் சாம்பர்லைன், சர்ச்சிலைப் போல ஜனநாயகத்தைக் காப்பதற்காக சாகத்தயராக இருப்பதாக சொல்லிக் கொள்பவர்கள் மட்டும் அல்ல. காட்வெல், ரால்ப் ஃபாக்ஸ். கான்ஃபாக். டேவிட் கஸ்ட் ஆகியவர்களைப் போல ஜனநாயகத்திற்காக உயிர் கொடுப்பவர்களும்தான். இத்தகைய சாவுதான் அவர்களது நேர்மையைப் பிறர் நம்ப வைக்கிறது. சாவில் காட்வெலின் வாழ்க்கை நிறைவு பெற்றது. அவர் பொதுவுடைமை வாதியாக வாழ்ந்தார், இறந்தார்.

காட்வெல்லின் புகழ் மேல் குறிப்பிட்ட மூன்று முக்கியப் படைப்புக்களைச் சார்ந்திருக்கிறது. அவை

ஒவ்வொன்றிலும் மையக்கருத்தாக இருப்பது மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் உடைமைவர்க்க வாழ்க்கையின் சீரழிவுதான். ஒவ்வொன்றிலும், இந்தச் சீர்குலைவின் சிக்கலான காரணங்களை மிக நுணுக்கமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். "உடைமை வர்க்க கலாச்சாரம் இன்று கடுமையான நோய்க்கு ஆளாகி இருக்கிறது என்று கூறுவதற்கு இன்று ஒருவர் மார்க்சியவாதியாக இருக்க வேண்டியதில்லை. கலை, விஞ்ஞானம், சமயம், பொருளாதாரம், அறிவியல் ஆகிய அனைத்திலும் இன்று பிளவுகள் ஏற்பட்டுள்ளன. ஐன்ஸ்டீன் முதல் பிராய்டு வரை அவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்ட நவீன கால கலாச்சாரத்தின் தலைவர்களின் படைப்புகளில் அச்சமும், அவநம்பிக்கையும் நிறைந்திருப்பதை அவர்களின் ஆயிரக்கணக்கிலான வாக்கு மூலங்கள் காட்டுகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு முன் நிலவிய அவர்களின் நம்பிக்கைகள் அனைத்தும் காற்றில் கரைந்துவிட்டன. அனைத்துத் துறைகளிலும் அராஜகமே மையமாகிவிட்டது. இதற்கான விளக்கம் என்ன? அனைத்து உளவியல் பகுப்பாய்வாளர்களும், எட்டிங்டன்களும், கெய்ன்ஸ்களும், ஸ்பெங்லர்களும், பிஷப்களும் நவீன கால கலாச்சரத்திற்குப் பொதுவான நோயின் மூலத்தை கண்டறிய முடியாதது ஏன்? இவர்கள் இதற்கான விடை கண்டறிய ஹெர்சனின் சொற்களை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். 'நாம் மருத்துவர்கள் அல்ல. நாமே நோய்கள்.'"

ஒவ்வொரு மார்க்சியவாதியும் போல காட்வெலும் இந்த நோயின் மூலத்தை, உடைமை வர்க்க சமுதாயத்தில் பொருளுற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான அடிப்படையான சீர்குலைவில் காண்கிறார். "உடைமை வர்க்க நாகரீகத்தின் உள்ளார்ந்த ஆற்றல்கள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் இப்பொழுது அது நோய்களுக்கான மூலச்சக்தியாகி விட்டது. தேய்ந்து போன இயந்திரங்கள் இன்று தடைகளாகிவிட்டன. காலம் கடந்த உண்மைகள் மாயைகளாகி விட்டன." விளக்கம்

மார்க்சியவாதியின் ஒரு வழக்கமான இது. ஆனால் காட்வெல் இத்துடன் நின்று விடுவதில்லை. அவர் பிரச்சனைக்குள் மேலும் ஆழ்ந்து சென்று, இந்த கேவலமான நிலைகளை மாற்றுவதில் உடமை வர்க்க முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்று சொல்லப்படுபவர்களின் ஆற்றல் இன்மையை விளக்குகிறார். அவர்கள் முன் வைக்கும் அனைத்து நோய் தீர்க்கும் வழி முறைகளும் மனித சுதந்திரத்தின் இயல்பு பற்றிய அவர்களின் மிகக்கடுமையான, தவறான கருத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதை காட்வெல் விளக்குகிறார். அவர்களின் முற்போக்குச் சிந்தனை அனைத்தும், அவர்களிடம் ஆழமாக வேரோடியுள்ள ஒரு மாயையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மாயையிலிருந்து அவர்கள் தப்ப முடிவதில்லை. "உடமை வர்க்கக் கலாச்சாரம் மாயையினால் பாதிக்கப்பட வில்லை, அனைத்து மாயைகளிலிருந்து தான் விலகிவிட்டது என்ற நம்பிக்கையால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடும். உண்மையில் இதைப் பிடித்துள்ள மாயை என்னும் ஆபத்து இதில்தான் அடங்கியிருக்கிறது. அதாவது மாயைகளைக் களைந்துவிட்டதாக இது நம்புவதுதான் அந்த மாயை. கடவுள், சமயம், அறவியல், ஜனநாயகம், இருப்பியல் கோட்பாடு, இயங்காவியல் ஆகிய அனைத்து இரண்டாம் தர மாயைகளை அது களைந்துள்ளது. ஆனால் அது அடிப்படையான உடமைவர்க்க மாயையிலிருந்து தன்னைக் களைந்து கொள்ள முடியாது. மனிதன் 'இயற்கையிலேயே சுதந்திரமானவன்' என்பதுதான் அந்த மாயை. 'இயற்கையிலேயே சுதந்திரமானவன்' என்பதன் பொருள் சமுதாயத்தின் அனைத்து நிறுவனங்களும் அவனுடைய சுதந்திரமான இயல் பூக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன. முடக்குகின்றன; மனிதன் தனது சொந்த விருப்பங்களின்படி சுதந்திரமாக செயல்படும் பொழுதே அவன் தனது உயர்நிலையில் இருக்கிறான் என்பது ஆகும்".

காட்வெல் 'மாயையும் உண்மையும்' என்ற தனது நூலில் கலைத்துறையைப் பற்றிய ஆய்வில் ஈடுபடுகிறார். கலை பற்றிய மார்க்சியக் கோட்பாட்டை வகுப்பதில் இது விரிவான முதல் முயற்சி ஆகும். புத்தகத்தின் துணைத்தலைப்பு, கவிதை மூலங்களைப் பற்றிய ஓர் ஆய்வு. கலை என்பது அதன் சாரத்தில் ஒரு சமூகப் படைப்பு; இதன் வளர்ச்சி சமூக மாற்றத்தின் ஆற்றல் மிகுந்த போக்கை ஒட்டி இருக்கின்றது என்று காட்வெல் விளக்குகிறார். ஆகவே கலையியல் ஆய்வு என்பது சமூகவியல் ஆய்வு இல்லாமல் நிறைவு பெறாது. கலையில் உருவம் என்ற அம்சம் அதன் தோற்றத்தில் சமூகவியலானது. காரணம் கலைஞன் தனது படைப்பியல் வகையிலான சுய வெளிப்பாட்டுக்கு பயன்படுத்தும் இடையீட்டுச் சாதனம், மொழி முதலியவை, சமூகக் கூட்டுறவின் தேவையிலிருந்து எழும் சமூக நிகழ்வு ஆகும். கலை என்பதும் சமூகக் கூட்டுறவின் ஒரு வடிவமே. ஒரு கலைஞன் தனிமைப் பட்டநிலையில் தன்னை வெளிப்படுத்த முடியாது. அவனுடைய சுயத்தன்மை என்பது அவன், பிற மக்களுடன் கொள்ளும் சமூக உறவிலிருந்து உருவாகிறது. அவன் தனது கலையில் தன்னை முழுமையாகக் கண்டறிகிறான். கலை என்பது கலைஞன் தரும் 'செய்தி' சமூக 'வடிவம்' ஆகியவற்றின் இணைவிலிருந்து தோன்றுகிறது. 'செய்தி' மதிக்கப்பட வேண்டுமானால் அது அந்த 'உருவத்தை' மேற்கொண்டாக வேண்டும். சமூகம் மாறும்பொழுது அல்லது மாற்றப்படும் போக்கில் உள்ள போது, மெல்ல வளர்ந்து வரும் புதிய உற்பத்தி உறவின் வடிவங்கள் கலைஞனை அவன் அறியாமலேயே பாதிக்கின்றன. அவன் தனது புதிய ஆர்வங்களின் தேவைகளுக்குத் தகுந்த புதிய வடிவங்களை உருவாக்குகிறான். இவ்வாறு கலைத்துறையில் உருவமும் செய்தியும் இணைதல் என்பது சமூகத்தில் பழைய உற்பத்தி உறவுகளுக்கும் புதிய உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான இணைவை ஒத்தது. நவீனகாலக் கலையில் ஏற்பட்டுள்ள

நெருக்கடி ஒரு புறத்தில் அதனை கேவலமான வியாபார முறைகளுக்கு உட்படுத்துகிறது. மறுபுறத்தில் தாதாயிசம். சர்ரியலிசம் முதலிய தீவிரமான தனி நபர் வாதத்திற்கும் உருவமற்ற தன்மைக்கும் கொண்டு செல்கிறது. இத்தகைய நெருக்கடி தவிர்க்க இயலாதது. காரணம் உடமை வர்க்கக்கலை, உடமை வர்க்கச் சமுதாயம் போலவே தனக்கு இன்றியமையாத இணைவு மறுக்கப்படுகிறது. இரண்டுமே யதார்த்தத்திலிருந்து தப்பி ஒரு மாயையைத் தொடர்ந்து ஓடுகின்றன. ஓடிய அவை விரைவில் அழியும்.

'பௌதிகத்தில் நெருக்கடி' என்ற தனது கடைசி நூலில் காட்வெல், உடமைவர்க்க நாகரிகத்தின் அழிவை விஞ்ஞானமும் கூடத்தடுக்க முடியவில்லை என்பதை விவாதிக்கிறார். இன்று விஞ்ஞானமும் தனது ஆதாரங்களை இழந்துவிட்டது. இயந்திரவியல் விதியின் 19-ஆம் நூற்றாண்டின் உறுதிப்பாடு, குவாண்டம் பௌதிகத்தின் முடிவுகளின் காரணமாக அடியோடு தகர்ந்து விட்டது. மாக்ஸ் பிளாங்க் கூறுவது போல, "இன்றைய விஞ்ஞானக் கோயிலை நாத்திகன் ஆக்கிரமித்துள்ளான். இன்று யாரோ சிலரால் மறுக்கப்படாத விஞ்ஞானக்கோட்பாடு என்பது எதுவுமில்லை." உடமைவர்க்க சமுதாயத்தை இன்று ஆக்கிரமித்துள்ள தோல்வி மனப்பான்மை' மனநோய்த்தன்மை, மாயை விலகல் என்ற பொதுக்குழப்பம் ஆகியவற்றிற்கிடையில் இது கடைசி பாரமாக வந்து விழுந்துள்ளது. சில விஞ்ஞானிகள் கொள்ளும் எரிச்சலுக்கும் ஜேம்ஸ் ஜீன்ஸ், ஆர்தர் எட்டிங்டன் போன்றவர்கள் போலி விஞ்ஞானம், போலி மாயாவாதம் ஆகிய குழப்பங்களில் அமைதி தேடுவதற்கும் இது காரணமாகிறது.

விஞ்ஞானம் தனது சந்தேகங்களோடு தொடரும் அனுபவ வாதம் என்ற பாதையிலிருந்து விலகி மாயாவாதம் என்னும் புதைமணலை நோக்கி அறிவற்ற முறையில் செல்லும் மிகப்பெரிய ஆபத்து விஞ்ஞானத்திற்கு நேர்ந்திருக்கிறது. இந்தத் தோல்வி என்பது நம்பிக்கைக்குரிய

மனைவி திடீரென நம்பிக்கைத் துரோகம் செய்ததனால் ஏற்படும் நியாயமான கவலையினால் நேர்ந்ததல்ல. மாறாக உடமை வர்க்க நாகரிகத்தின் அடிப்படையான எதிர்மறைப் பண்பின் ஒரு பிரதிபலிப்பாக இது நேர்ந்திருக்கிறது. விஞ்ஞானம், கலையைப் போலவே அதனுடைய சமூக மையத்திலிருந்து படிப்படியாக விலகி விட்டது. உடமை வர்க்க பொருளியல் கட்டமைப்பின் சீர்குலைவு நாளுக்கு நாள் இதனை நவீன நாகரிகத்தின் எதிர்மறையான அழிவுச்சக்தி ஆக்கியிருக்கிறது. நவீன கால விஞ்ஞான மனிதனின் அவநம்பிக்கை எழுகிறது. ஆனால் விஞ்ஞானத்தின் சமூகப் பொறுப்பைப் பற்றிய ஆழ்ந்த உணர்வுடைய விஞ்ஞானிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். J.B.S. ஹால்டேன், லெவி, J.D. பெர்னால் போன்ற விஞ்ஞானிகள் மனித சமூகத்தின் விடுதலையில் விஞ்ஞானத்தின் பெரும்பங்கு பற்றி நமக்கு வற்புறுத்திச் சொல்கிறார்கள். விஞ்ஞானம் யதார்த்த உலகை வெல்ல மனிதனுக்குத் தேவையான ஆற்றலைத் தருகிறது. நிகழ்வுக்கும் அதன் இறுதித்தகுதி எதுவாக இருந்த போதிலும் சமூகத்திலுள்ள விடுதலைச்சக்தி என்னும் அதனுடைய உடனடிப் பங்கிற்கும் இடையிலுள்ள உறவின் விதிகளை மனிதன் புரிந்து கொள்ள விஞ்ஞானம் உதவுகிறது. நவீன விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி என்பது, புதிய சமூக மதிப்பீடுகளின் தொகுப்போடு கூடிய ஒரு புதிய சமூக அமைப்பின் வருகைக்கான முன் நிகழ்வே ஆகும்.

காட்வெல் "செத்துக் கொண்டிருக்கும் ஒரு கலாச்சாரத்தில் ஆய்வுகள்" என்ற தனது மிகச்சிறந்த நூலில் இப்பிரச்சனைகள் அனைத்தையும் தொகுத்து ஆய்கிறார். நமது நோய் வாய்ப்பட்ட நாகரிகத்தின் காரணங்களை ஆய்வதிலும் இந்த சிதைவின் வெளிப்பாடுகள் அனைத்தும் உடமை வர்க்க சிந்தனைகள் அனைத்தினுள்ளும் ஊடுருவி இருக்கின்றன. சுதந்திரம் பற்றிய அதனது தவறான கருத்தாக்கம் பற்றியும் இந்த நூல் மிக விரிவான முறையில் ஆராய்கிறது. இந்த நூலை உலகத்திற்கு காட்வெல் விட்டுச் சென்ற இறுதி

உயிலாகக் கொள்ளலாம். இந்த நூலில் உள்ள எட்டுக் கட்டுரைகளில், இந்த அடிப்படையான உடமை வர்க்கத் தவறிலிருந்து உடமை வர்க்க அறிவாளிகள் தம்மை விடுவித்துக் கொள்ள முயன்று தோற்றுவிடுவதையும் (ஷா, வெல்ஸ்), சமுதாயத்தின் வரலாற்றுப் போக்குகளைக் கண்டறிவதில் உடமை வர்க்கம் தோற்றுவிடுவதையும் (T.E.லாரன்ஸ்), உடமை வர்க்கக் கலைஞர்களின் பிற்போக்கான ஆர்வங்களையும் (D.H.லாரன்ஸ்) முதலாளிய சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உணர்வுத் தொடர்புகளை அமுக்குவதில் ஏற்பட்ட சோர்வையும் உடமை வர்க்க மனவியல் ஆய்வாளர்கள் கற்பனையான மனத் தெய்வங்களை கண்டறிவதையும் (பிராய்டு), தனிநபர் எதிர்ப்பு என்ற நடைமுறையை உடமை வர்க்க சமாதான வாதிகள் கடைப்பிடித்து, தோற்று ஏமாறுவதையும், மனிதர்களுக்கு இடையிலான காதலின் உடலியல், சமூகவியல் பண்பை உடமை வர்க்க சமுதாயத்தில் படிப்படியாக வெறும் உடமை உறவாக மாற்றுவதையும், இறுதியாக சுதந்திரத்தின் உண்மை இயல்பு பொதுவுடைமை சமூகத்தில் அமைவதையும் காட்வெல் விரிவாக விவாதிக்கிறார். பல தனித் தனிக் கட்டுரைகளாக பொதுத்தன்மை ஆழமாக அமைந்துள்ளது. காட்வெல் தன் முன்னுரையில் குறிப்பிடுவது போல் "சமகால நாகரிகத்தின் இதயத்தில் அமைந்துள்ள இந்தப் பொய்தான் இந்த நூலின் கரு. இந்தப் பொய் அந்த நாகரிகத்தைக் கொல்லுகிறது. ஆழத்தில் இந்தப் பொய்க்கு மறுதலையான உண்மை அமைகிறது. இந்த உண்மையே இந்த நாகரிகத்தை மாற்றி அதற்கு அதை உயிர்த்துடிப்புள்ளதாகச் செய்யும்" காட்வெலின் நிலைபாட்டை சரிவர அறிந்துகொள்ள இந்த நூலைப்பற்றி விரிவாக விவாதிப்பது தேவை.

மனிதன் 'இயற்கையாகவே' சுதந்திரமானவன் என்ற ரூசோவின் பொய்யின் மீதுதான் உடமை வர்க்கச் சமூகத்தின் கட்டமைப்பு முழுவதும் அமைகிறது. இந்தப் பொய் மனித வரலாற்று வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்

முற்போக்கான பங்கு வகித்தது. தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் உடமை வர்க்கச் சிந்தனையாளர்கள் இன்று அதற்குத் தரும் பொருளை அது என்றும் குறித்ததில்லை. ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பிறகு மக்கள் தமக்குள் கொள்ளும் உறவுகளில் மெதுவாக ஒரு மாற்றம் நிகழ்ந்தது. காலனிய வணிகம் படிப்படியாக வளர்ந்தது. உற்பத்தியில் சிறந்த முறைகள் புகுத்தப்பட்டன. கத்தோலிக்க - நிலஆதிக்க மத்திய கால சமுதாயத்தின் பொருளாதார அடிப்படை மெதுவாக மாறியது. புதிய உற்பத்தி முறையில் தாம் வகிக்கும் பங்குகளுக்கு ஏற்றவாறு, புதிய உற்பத்திச் சக்திகள் மனிதர்களுக்கு இடையில் புதிய சமூக உறவுகளை வளர்த்தன.

தேசியம், எதிர்ப்பு வாதம், தனிமனித வாதம் ஆகியவை இந்த மாற்றத்தின் அடையாளங்கள். இந்த அடையாளங்கள், அதுவரை நிலவிய நில ஆதிக்க கிறித்துவ ஆளுகையின் உலகு தழுவிய இறையியல் சரிந்து கொண்டிருந்ததைக் காட்டின. இந்தச் சக்திகள், தொழில்துறை புரட்சிக் காலத்தில் ஒரு முனையில் குவிந்தன. மக்களாட்சி என்ற கருத்தோட்டம் உணர்வு பூர்வமாக முன் வைக்கப்பட்டது. ஆனால் உடமை வர்க்கம் (முதலாளி வர்க்கம்) புரிந்து கொண்டபடி, இந்த மக்களாட்சி முறை என்பது ஒரு புதிய சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான தங்கள் உரிமை என்பதே ஆகும். இந்த சமுதாயத்தில் உற்பத்திக் கருவிகளின் உடமையாளர்கள் என்ற முறையில் அவர்கள் தான் ஆட்சி அதிகாரத்திற்கு உரியவர்கள். இந்த மக்களாட்சி முறை அனைத்து வகையான நில ஆதிக்கக் கட்டுப்பாடுகள், தனி உரிமைகள் ஆகியவற்றிலிருந்து இயற்கை மனிதனுக்கு சுதந்திரம் கோரியது. எந்த உறவிலிருந்தும் தமக்குச் சுதந்திரம் அதாவது சுதந்திரமான வணிகன், சுதந்திரமான தொழிலாளி, சுதந்திரமான மூலதனம் என்பதே சமுதாயத்தின் அடிப்படை உறவு என்பதே இக்கருத்து. தனி மனித உடமைக்கு மரியாதை தருவது

என்பதுதான் இந்த சுதந்திரத்திற்கான கட்டுப்பாடு. பிற மனிதர்களுடன் செய்து கொண்ட பணம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்ற அவன் கடமைப்பட்டவன் என்பது தவிர பிற வகைகளில் மனிதன் சுதந்திரமானவன். முதலாளியச் சமூகம் தனிச் சொத்தைக் கண்டுபிடிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் முதலாளிய சமூகம் அதன் மலர்ச்சியாகவும் விரிவாகவும் அமைந்தது. தனிச்சொத்தை சமூக உறவுகளுக்கான அடிப்படை உந்து சக்தியாக மாற்றியது. எல்லா சமூக உறவுகளும் மனிதனுக்கும் பண்டத்திற்கும் இடையிலான உறவாக குறைக்கப்பட்டது. மனிதன் ஒரு பண்டத்தை விட மேலானவன் என்பதால் தன்னை அவன் சுதந்திரமானவனாகவும் ஆதிக்கம் செய்ய வல்லவனாகவும் கருதிக் கொண்டான். இவ்வாறு முதலாளிய சமுதாயத்தில் பண்டங்களின் மேல் ஒருவன் சுதந்திரமான ஆதிக்கம் பெறுவதற்கு நிறைய பணமுடையவனாக இருக்க வேண்டும். இவன் தான் சுதந்திரமானவன். நிறையப் பணம் இருக்குமானால் சமூகத்தைப் புறக்கணித்து விட்டு ஒருவன் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

மனித சுதந்திரம் பற்றி இந்தத் தவறான கருத்து, அதன் ஆழத்தில் அமைந்த ஈர்ப்புச் சக்தியால் அனைத்து உடமை வர்க்க சிந்தனைகளையும் செயல்களையும் நாசமாக்கிறது. முதலாளிய சமூகத்தின் முற்போக்குச் சிந்தனையாளர்கள் எனக் கருதப்படுபவர்களுக்கு முற்போக்குப் பங்கு எதுவும் உண்மையில் இல்லை என்பது காட்வெலின் கருத்து. முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு மாதிரிகள் எனக் கருதப்பட்டு, மிக விரிவாகப் படிக்கப்படுகின்ற இரண்டு சிந்தனையாளர்களை - ஷா, வெல்ஸ் – எடுத்துக் கொண்டு அவர்களின் தகுதியை காட்வெல் ஆராய்கிறார்.

'மீண்டும் மெதுசெலாவுக்கு' என்ற படைப்பில் பெர்னாட்ஷா ஒரு கற்பனை உலகைச் சித்தரிக்கின்றார், இந்தச் சித்திரம் பெர்னாட்ஷாவின் உடமை வர்க்க மாயையைக் காட்டிக் கொடுக்கிறது. இந்தப் படைப்பில், மிக முன்னேறிய

மனித இனத்து மாதிரிகளாகிய பழங்காலத்து அவன்களும் பழங்காலத்து அவள்களும் 'தூய சிந்தனை'யில் தம் நாட்களைக் கழிப்பதாக விவரிக்கின்றார். செயலிலிருந்து விலகி தூய சிந்தனையில் இருப்பதாக அவர்களைக் காட்டும் இந்தக் கற்பனையான, விஞ்ஞானத் தன்மையற்ற நம்பிக்கை, உடமைவர்க்கச் சிந்தனையின் வரையறைகளுக்குள் ஷா சிறைப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. அறிவின் சமூக இயல்பையும் சுதந்திரத்தின் சமூக இயல்பையும் ஷா புரிந்து கொள்ளவில்லை. இவை இரண்டும் பிற மனிதர்களுடன் கூட்டுச் செயலில் மனிதன் ஈடுபடும் போதே தோன்றுகின்றன. நவீன விஞ்ஞானத்தை ஷா வெறுத்தார். ஒரு மந்திரவாத மருத்துவரின் உயிர்ச் சக்தி, கடவுள் ஆகிய கருத்தாக்கங்களில் யதார்த்தத்தின் வரலாற்றை ஷா திருத்தி எழுதுகிறார்.

பிரபஞ்சம் பற்றி ஷா கொண்டிருந்த கொள்கை காட்டுத் தனமானது; கருத்து முதல் வாதச் சார்பானது. ஷாவின் இலட்சிய உலகம் என்பது, அச்சுறுத்தப்பட்ட ஏழை உழைப்பாளிகளை வழி நடத்தும் அறிவுத்துறை 'சாமுராய்'களால் ஆளப்படும் ஒரு பாசிச உலகம். ஷாவின் கருத்துப்படி சுதந்திரச் சிந்தனை என்பது ஒருவகை மருந்து போல. நல்லெண்ணம் உடைய ஒருவன் அறிவில்லாத ஓர் உழைப்பாளிக்கு இதைச் செலுத்த முடியும். மார்க்சின் மூலமாக சமூகச் சக்திகளின் வரலாற்றுப் போக்கை ஷா புரிந்து கொண்டார். ஆனால் அறிவுத்திறமுடைய ஒரு மத்திய தர வர்க்கத்தால் உலகம் காப்பாற்றப்படும் என்ற உடமை வர்க்க மாயையிலிருந்து அவர் வெளிவரவில்லை இது ஷாவின் அவலம். ஷா தனக்கெதிராகவே தான் பிளவு பட்டிருந்தார். பாட்டாளி வர்க்க ஆக்கத்தை எதிர்கொண்ட நிலையில் அவர் உடமை வர்க்கத்தின் பொறுப்பு என்ற கருத்தை பிடித்துத் தொங்கினார். வரலாற்றின் இந்தக் கட்டத்தில் இத்தகைய தேர்வு ஆபத்தானது. பிறரைக்கேலி செய்யும் ஒரு மனிதன் தன்னைத்தானே கேலி செய்பவனாக இருந்த நிலையில் ஷாவும் இருந்தார். ஷாவின் நீக்கிக் கொள்ள முடியாத இந்த

அடிப்படைத் தவறு ஒரு தீவிரமான சிந்தனையாளராக அல்லது நவீனகால உணர்வில் ஒரு உண்மையான சக்தியாக மாறாமல் தடுத்தது.

"ஷா உலகத்தின் கோமாளியானார். சிறப்புரிமை உடைய அரசவைக் கோமாளி போல ஆனார். மாத்திரையின் மீது அவர் பூசிய சர்க்கரை அந்த மாத்திரை செயல்படுவதைத் தடுத்தது. அவரது மரக்கறி உணவுக் கொள்கை, பெரிய பிரச்சனைக்கு அவர் செய்த துரோகத்திற்கு ஒரு சிறிய நஷ்ட ஈடு போல ஆயிற்று; அவருடைய சீர்திருத்த வாதப் போக்கிற்கு ஒரு குறியீடாகவும் இருந்தது. அவர் விலகியிருப்பார், விவாதிப்பார் ஆனால் செயல்பட மாட்டார். அவருடைய நாடகங்களின் முன்னுரைகள் அனைத்தினுள்ளும் இடம் பெறுவது பணம்தான் கடவுள் என்பது. பணத்தைச் சம்பாதி. நீ நற்குணம் உள்ளவன் ஆவாய். பணம் இல்லாவிட்டால் நீ நல்லவனாக முடியாது. சமுதாய அமைப்பு மாறும் வரை நீ காத்திரு. ஷா இதைத்தான் திரும்பத் திரும்ப சத்தம் போட்டுச் சொல்லுகிறார். இப்படிச் சொல்வதன்மூலம் தன்னையும் பிறரையும் நம்ப வைக்கப் பார்க்கிறார். ஷாவின் முடிவு, சித்தாந்த ரீதியாக பணம், மரியாதை, புகழ், அமைதியான சீர்திருத்த வாதம் இறுதியாக முசோலினி இவற்றோடு கலப்பதில் முடிந்தது. சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு செயல் வடிவிலான நடவடிக்கை எடுக்காதவன் எவனும் அந்தச் சமுதாய அமைப்பைக் காப்பாற்றவே உதவி செய்கிறான்".

இப்படித்தான் எல்லா உடமைவர்க்கச் சிந்தனையாளர்களும் சொல்லி முடிக்கிறார்கள்:- 'சமூக அமைப்பு மாறும் வரை காத்திரு' இம்முறையில் தான் வெல்ஸ், லாரன்ஸ், புரூஸ்ட், ஹக்ஸ்லி, ரசல் பார்ஸ்டர், வாஸர்மேன், ஹெமிங்வே, கால்ஸ்வொர்த்தி, கோஸ்லர் ஆகியவர்களின் வரிசையில் ஷவும் சேர்கிறார். இவர்கள் உடமை வர்க்க நாகரிகம் தனது மாயையைக் களைந்து கொண்டதைப் பற்றி அறிவிக்கிறார்கள். இவர்கள் அவல வீரர்கள் அல்லர். ஆனால்

பரிதாபத்திற்குரிய மனிதர்கள். இவர்கள் தம்மை மீறி சூழல்களினால் செயலற்றுப் போனவர்கள் அல்ல. ஆனால் தமது சொந்த மாயையினால் செயலற்று போனவர்கள்.

காரல்மார்க்சைப் படித்ததன் மூலம் சமுதாயத்தை இயங்க வைக்கும் விதிமுறைகளைச் சிறிதளவு ஷா அறிந்திருந்தார். ஆனால் அவர் செயல்படவில்லை. இது அவருடைய உடமை வர்க்கக் கட்டுப்பாடுகளை வெளிப்படுத்துகிறது. ஆனால் HG வெல்சின் அவலமோ மேலும் இரக்கத்திற்குரியது. இவர் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு குட்டி முதலாளியாக இருந்தவர். எதிர்நிலையில் நின்ற சக்திகளை அவர் அறிந்து கொள்ளாமலும் மாற்றும் திறன் இல்லாமலும் சிறு முதலாளிக்குரிய அச்சத்திலிருந்தும் குழப்பத்திலிருந்தும் அவர் மீளவே இல்லை. வெல்ஸ் பிறந்த வர்க்கமும், அதன் வாழ்வும் ஒரு பொய்யின் மீது அமைந்தது. சிறு முதலாளிய வர்க்கம் என்பது பெரு முதலாளிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையில் கிடந்து தவிக்கும் தன்மை உடையது.

"பணத்தைப் பொறுத்தவரை இந்த வர்க்கம் சுரண்டப்படுகிறது. பெரும் பணக்கார முதலாளியின் மேசையிலிருந்து சிந்தும் சுரண்டல் சிதறல்களை உண்ண இது அனுமதிக்கப்படுகிறது. அதனால் இது தன்னை முதலாளிய அமைப்பின் ஒரு பகுதியாகக் காண்கிறது. இதற்கு வாழ்வில் ஒரே ஒரு இலட்சியம் தான் உண்டு. தனக்கு மேல் உள்ள முதலாளியச் சரக்குகளைப் பெரும் வகையில் தன்னை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொள்ளுதல் என்ற இலட்சியம் அது. இது ஒரே ஒரு அச்சத்தில் கிடந்து தவிக்கிறது. அதாவது தனது மரியாதைக்குரிய நிலையிலிருந்து பாட்டாளி வர்க்கப் பள்ளத்தில் விழுந்து விடுவோமே என்ற அச்சம். காரணம் சமயம், உரிமை' நாட்டுப்பற்று, முதலாளியத் தொழில்துறை, 'முன்னறிவு' ஆகிய மாயைகளை ஊடுருவிப் பார்க்கும் அறிவுக் கூர்மை உடைய முதலாளியின் அறிவு இதற்கு இல்லை. இதற்கென மரபு எதுவும் இல்லை. இதிலிருந்து தப்பாத எவர்க்கும் வாழ்வு இல்லை."

வெல்ஸின் வாழ்வில் பாதிப்பகுதி இப்படி அழிந்து விடாததற்கான நம்பிக்கையற்ற போராட்டத்தில் கழிந்தது. செல்வம் சேர்ந்த போதும் அவரது முன்னைய போராட்டம் தன்னுடைய பாதிப்பை அவரிடம் விட்டிருந்தது. அவர் என்றைக்குமே தனது சிறு முதலாளிய அச்சத்திலிருந்து நீங்கியிருக்க முடியவில்லை. ஆகவே உலகப்பார்வை என்று சொல்லத்தக்க முறையிலான பார்வை அவரிடம் ஏற்படவில்லை. தெளிவான தர்க்கரீதியான சிந்தனையும், தனித்தன்மையும், மிகக்குறைந்த அளவிலேயே பெற்றிருந்த இவரை ஒரு சிந்தனையாளராகப் பிறர் ஏற்றுக்கொண்டது வியப்பிற்குரியதுதான். அவர் மக்களுக்கான 'சிந்தனையாளராக' "இலட்சியக் கருத்துகளைக் கொண்ட நாவல்"களை எழுதிய ஆசிரியராக, விஞ்ஞானம், வரலாறு பற்றிய குறிப்புகளை எழுதியவராகக் கருதப்பட்டார். காரணம் தனக்கென ஒரு தொழிலை அமைத்துக்கொள்ளும் குட்டி முதலாளியத் தேவையினால் அவர் உண்மையான கலையைத் தொடர்ந்து அறிந்து கொள்ள முடியவில்லை. உண்மையான விஞ்ஞானத்தைக் கற்றுக் கொள்ள முடியவில்லை.

அவர் படைப்புத்திறன் பெறமுடியவில்லை. ஆகவே இன்றியமையாமல் அவர் நவீன – அது அவ்வளவு நவீனமும் அல்ல – கோட்பாடுகளைத் துணிவாண்மையோடு வெளிப்படுத்தியவர் ஆனார். ஆனால் இந்தச்சிந்தனைகளை ஒரு கலப்படமாக, குழப்பமாக செய்து தருவதைத் தவிர அவரால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு புதிய நூலிலும் புதிய கோட்பாடுகளில் செயல்படும் கற்பனை உலகங்களையும், மனிதர்களுக்கான புதிய விமோசனங்களையும், தற்கால மனநிறைவின்மைக்குக் காரணங்களாகப் புதிய பல இரகசியங்களையும் புதிய கடவுள்களையும் கண்ணுக்குத் தெரியாத அரசர்களையும் படைத்துத் தந்தார். மனிதனுடைய விவேகம் இன்மைதான் பாவம் வெல்ஸை வருத்தியது. மனிதன் விவேகத்துடன் இருந்தால்! ஆனால் பாட்டாளி வர்க்கம் வெல்சுக்குத்

தென்படவே இல்லை. உலகைத் 'திருத்துவது' என்ற கடமை முதலாளி வர்க்கத்திற்கு அதன் தவறுகளை எடுத்துக்காட்டுவதுதான். உடன்பாட்டின் மூலம் உலகத்தைத் திருத்தி விடலாம். மீண்டும் இது தன்னைத்தானே விழுங்கும் நச்சு வட்டம்தான்.

உடமை வர்க்க சமுதாயத்தில் மிகுந்த நேர்மையுள்ள உணர்வுள்ள சில மனிதர்களும் உள்ளனர். இவர்கள் மாறிவரும் சமூக உணர்வுகளை உள்ளுணர்வில் உணர்கிறார்கள். உடமைவர்க்க சமூகம் மனித உறவுகள் அனைத்தையும் பண ஒப்பந்தமாக சுருக்கிவிட்ட சிறுமையைக் கண்டு பொங்குகிறார்கள். ஆனால் சமூக மாற்றத்தின் விதிகளைப் பற்றி அறியாததனால் அவர்கள் முன் வைக்கும் மருத்துவமும் அப்பாவித் தனமானதாகவும் பிற்போக்கானதாகவும் அமைகின்றன. இதனால்தான் ஐரோப்பிய நாகரிகத்தின் மேல் பெரு வெறுப்பும் சுதந்திரமான மனித உறவுகளின் மீது பெருவிருப்பும் கொண்டிருந்த T.E. லாரன்ஸ் இங்கு ஒரு வீரராக விளங்க முடியவில்லை. இதனால் தான் முதலாளியத் தொழில் வளர்ச்சியின் கேவலமான சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு காய்ந்துபோன மனிதனின் இயல்பூக்கங்கள் சுதந்திரமாக செயல்படக் கூடிய ஒரு புராதன வாழ்க்கை முறையை D.H. லாரன்ஸ் மிக விரும்பினார்.

T.E. லாரன்ஸ் பற்றிய கட்டுரையில், வரலாற்றில் நாயகனின் பாத்திரம் பற்றி மிகச் சிறப்பானதொரு ஆய்வைச் செய்கிறார், காட்வெல். சமுதாய மாறுதல் போக்கின் போது வரலாற்றில் நாயகன் என்பவன் எதிர்காலத்தில் சமூகம் எத்தகைய கோலம் கொள்ளும் என்பதைப் பற்றித் தன் உள்ளுணர்வில் தெளிவற்ற முறையிலேனும் உணர்கிறான். ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவிக்கும் முறையில் சமூகச் சக்திகள் இயங்கும் நெறியில், தெளிவில்லாவிட்டாலும், சரியான உள்ளுணர்வோடு செயல்படுகிறான். தன்னைத் தொடர்பவர்களிடத்து முன்னைப் பழமையை எடுத்துச்

சொல்லி உணர்வூட்டுகிறான். இது ஒரு புதிர், தான் புரிந்து கொள்ளாத எதிர்காலத்தைப் பற்றித் தன் உள்ளுணர்வில் அவன் உணர்ந்திருப்பதை இந்தப் புதிர் காட்டுகிறது. காலங்கடந்த உற்பத்தி உறவுகளுக்கும் புதிய உற்பத்திச் சக்திகளுக்கும் இடையில் ஒரு இணைவை ஏற்படுத்துவதற்காக, பழைய சிந்தனைக்கும் புதிய நிலைக்கும் இடையில் ஏற்பட்ட அறைகுறையாக உணர்ந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவும் அவன் தன்னை அறியாமலேயே போராடுகிறான். தன் வாழ்வில் ஒரு தத்துவத்தை அவன் செயல்படுத்துகிறான். இறந்த காலத்திற்காக அவன் ஏங்குவதாக நினைக்கும் பொழுதே எதிர்காலத்தின் மொழியைத் தான் அவன் பேசுகிறான்.

"தனக்குப் பின்னர் நீடித்திருப்பவைகளுக்காக அவன் போராடுகிறான். நிகழ் காலத்திற்குப் பிறகு நீடித்திருப்பது எதிர்காலமன்றி வேறு என்ன? வரலாற்று நாயகனின் பண்பிலிருந்து மட்டும் அவனுடைய வீரத்தை விளக்கிவிட முடியாது. சூழல்கள் நாயகனை உருவாக்குகின்றன. அந்த நாயகனின் நோக்கங்களைச் சார்ந்தது அல்ல அவனது வீரத்தின் இயல்பு. அவனது செயல்பாட்டின் சமூக அர்த்தத்தை அது சார்ந்திருக்கின்றது".

சமூக நெருக்கடிகளின்போது தோன்றும் கயவர்களுடன் அல்லது வரலாற்றின் எதிர்நிலை வீரர்களுடன் வரலாற்று நாயகர்களைக் குழப்பிக்கொள்ளக்கூடாது. இவர்கள் வரலாற்றுச் சக்கரத்தைச் சிறிது காலத்திற்குப் பின் திருப்புகின்றனர். அலெக்சாண்டர், ஜூலியஸ் சீசர், ஜார்லமென், லூத்தர், கிராம்வெல், நெப்போலியன் ஆகியவர்கள் வரலாற்றின் நாயகர்கள். நாயகர்களுக்குள் நாயகனாக விளங்கியவர் நெப்போலியன். சுல்லா, மூன்றாவது நெப்போலியன், கொரன்ஸ்கி, பில் சூட்ஸ்கி, இட்லர், முசோலினி ஆகியவர்கள் கயவர்கள்.

T.E. லாரன்சின் வாழ்வில், சமூகத்தில் நிலவிய நெருக்கடியை உணர்ந்து வேதனைப்பட்ட ஒரு வீரரின் தவிப்பைப் பார்க்கிறோம். ஒரு தெளிவில்லாத எதிர்காலம்

பற்றிய ஒரு பெரும்பசியைப் பார்க்கிறோம். முதலாளியத்தின் சிறுமையிலிருந்தும் வணிகத்தன்மையிலிருந்தும் நீங்கிய வளமான சமூக உறவுகளுக்காகத் தவித்த இறந்தகாலம் பற்றிய ஏக்கம் அவரிடம் நிறைந்திருந்தது. பெடோவியன்களின் சுதந்திரமான வெளிப்படையான பழக்க வழக்கங்கள் அவரைக் கவர்ந்தன. "அவர்களின் சுதந்திரமும் நற்பண்புக்கும் தலைமைக்கும் அவர்கள் தந்த மதிப்பு அவரைக் கவர்ந்தது. பணத்திற்கு மட்டுமே மரியாதை தரும் உலகம் அவருக்கு எரிச்சலைத் தந்தது. முதலாளிய சமூகத்தின் நிகழ்காலம் பற்றிய வெறுப்பும் எதிர்காலத்தின் அழைப்பும் அவரிடம் காணப்படும் மிக விரிந்த, எளிய உலகத்தை ஒரு பொற்காலத்தின் குறியீடாக அவருக்குத் தோற்றுவித்தது".

ஆனால் T.E.லாரன்ஸ் இறந்த காலத்தின் எதிரொலியை எதிர்காலத்தின் அழைப்பாக தவறாகக்கண்டார். அவரும் அரபு பெடோவியன்களும் பண உறவிலிருந்து விலகிய சுதந்திரமான, வெளிப்படையான, சமத்துவமான சமூக உறவுகளைக் காதலித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களது திறந்தமனம் என்பது இறந்தகாலம் சார்ந்தது. ஆனால் அவருடைய ஆன்மா ஏங்கியது எதிர்காலத்தின் திறந்த மனத்திற்காக, முதலாளிய உலகில் அவர் காணத் தவறிய மதிப்பீடுகள் பெடோவியன்களிடம் அரைகுறை அளவில், புராதனத் தன்மையோடு நிலவின. இதை அவர் அறியவில்லை.

மாபெரும் போர் தொடங்கியபோது துருக்கியரின் ஆதிக்கத்திலிருந்து அரபியர்களின் விடுதலைக்காக அவர் போரிட்டார். ஆனால் இவர் போரிட்டுப் பெற விரும்பிய சுதந்திரம் என்பது உடமை வர்க்கத்தின் பொருளில் ஆன சுதந்திரம்தான். தான் எந்தத் தீமையைக் கண்டு ஓடினாரோ அதே தீமையை அவர் அரேபியாவுக்குள் கொண்டு வந்தார். "ஒரு பயங்கரமான நோயிலிருந்து தப்புவதற்காக கண் தெரியாமல் ஓடி ஒரு ஆரோக்கியமான உலகத்தை அடைய விரும்பிய ஒரு மனிதன் தானே அந்தக் கொடிய நோய்க்கு

ஆளானதைப் போல் அவர் இருந்தார்". லாரன்ஸ் தனக்கும்தான் விரும்பிய மக்களுக்கும் துரோகம் செய்தார். இராணுவ வாழ்க்கையில் நிலவிய வெளிப்படையான எளிய சகோதரத்துவத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பும், மனிதர்களுக்கு ஒரு மாபெரும் எதிர்காலத்தைத் தரும் என்று அவர் நம்பிய இயந்திரங்களிடத்து அவர் கொண்டிருந்த பக்தியும் காட்டியது என்னவென்றால், பாட்டாளி வர்க்க உலகத்தைத்தான் அவர் உண்மையாக விரும்பினார் என்பதாகும். ஆனால் ஆக்ஸ்போர்டில் அவர் செரித்துக் கொண்ட முதலாளிய மரபு அவரது பார்வையைக் கட்டுப்படுத்தி இருந்தது. இறுதியில் கசப்புணர்வோடும் அவநம்பிக்கையோடும் அவர் வாழ்க்கை முடிந்தது.

நவீன கால நாயகனின் கடமை என்பது முன் எப்பொழுதைக் காட்டிலும் சிக்கலானது. தன்னுணர்வுடைய நாயகனே இன்றைய உலகத்தின் விடுதலைக்குத் தேவை. சமுதாயத்தின் இயக்கத்தைக் காரணங்களோடு அவன் புரிந்து கொள்கிறான். அவன் கம்யூனிசம் என்ற தன்னுணர்வுடைய சமூகத்திற்காக பாடுபடுகிறான். எதிர்கால நாயகர்கள் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கியவர் லெனின், இன்றைய நாயகனின் புதிய பங்கை லாரன்ஸ் புரிந்து கொண்டிருந்தாரானால், அவர் அரேபியாவிற்குச் சென்றிருக்க மாட்டார். செஞ்சீனத்திற்குச் சென்றிருப்பார். அங்கு அவர் ஒரு போலியான நாயகனாக இல்லாமல் உண்மையான நாயகனாக விளங்கி இருப்பார்.

இவரைப்போலவே D.H. லாரன்சும், முதலாளிய பண உறவு முறையின் அழுத்தத்தால் ஆண் பெண்களுக்கிடையில் படிப்படியாக உணர்வு இறுகி சிதைந்ததை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த தற்கால நெருக்கடியில் கலைஞனுக்கு ஒரு பெரும் பொறுப்பு உண்டு என்பதை அவர் அறிந்திருந்தார். முதலாளிய நாகரிகம் கலைஞர்களை அவர்களது கலை கேவலமான வியாபாரப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு அவர்களை ஒருபுறம் தூக்குகிறது. மறுபுறம் உருவற்ற தனி

மனித வாதம் என்னும் நோய்க்கூறான எல்லைகளுக்கு அவர்களைத் துரத்துகிறது. இந்த இரு போக்குகளிடத்தும் அவர் வெறுப்புக் கொண்டார். ஒரு இலக்கிய தீர்க்கதரிசியாகத் தன்னை அவர் கண்டார். ஆனால் அவரது சமகாலக் கலைஞர்களைப் போலவே கலையின் சமூக இயல்பை அவர் அறிந்திருக்கவில்லை. இந்தத் தொடக்க நிலை அறியாமையின் காரணமாக அவர் வழங்கிய செய்திகள் நடைமுறைக்குரிய, ஆக்கபூர்வமான உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. சமகால நாகரிகத்தின் முகத்திலிருந்து கறுப்புப் பணக்கறையைத் துடைத்தெறிந்து தனிநபர் உறவுகளில் புதிய முழுமையான இலட்சியங்களைக் கொண்டு வர அவர் விரும்பினார். "எனது புராதன சமூக உள்ளுணர்வு முழுமையாகச் சிதைந்தது என்னைத் துன்புறுத்துகிறது. பால்உணர்விற்கும் அடியில் ஆழத்தில் சமூக உணர்வு இருக்கிறது என்று கருதுகிறேன். சமூக அடக்குமுறை அதிகமான அழிவைச் செய்கிறது".

லாரன்சின் வேதம் முற்றிலும் சமூகவியல் சார்ந்தது. நோயின் காரணத்தை ஆராய்ந்து அவர் சரியான முடிவைக் கண்டார். ஆனால் உள்ளார்ந்த உடமை வர்க்க மாயை இடையில் குறுக்கிடுகிறது. மனிதர்கள் உள்ளுணர்வு வகையிலான வாழ்வை நோக்கித் திரும்ப வேண்டும். அறிவின் செய்தியைக் காட்டிலும் இரத்தம் தரும் செய்தியை நம்ப வேண்டும் என்று அவர் விரும்பினார். மனிதனின் உணர்வுபூர்வமான விவேகத்தின் பங்கை மறுப்பது ஒரு தோல்வியாளனின் முழக்கம்; உள்ளார்ந்த மாயையின் விளைவு என்பதை அவர் அறியவில்லை. மனிதன் இயற்கையிலேயே சுதந்திரமானவன்; மிக நுணுக்கமான அலங்காரத் தன்மையுடைய நவீன நாகரிகத்தின் சிக்கல்களுக்கு இடையில் அவன் சிறைப்பட்டிருக்கிறான் என்று அவர் அறியவில்லை. "அவர் தந்த தீர்வு இறுதியில் பாசிசத் தீர்வாக இருந்தது; அது கம்யூனிசத் தீர்வாக இல்லை. இது லாரன்சின் அவலம். இந்தத் தீர்வு பிற்போக்கானது.

நம்மை அவர் இறந்த காலம் நோக்கி, 'தாயை' நோக்கித் திரும்பிச் செல்ல வேண்டினார். இவை அனைத்தும் பிற்போக்கின், மன நோயின், புராதனக் காலத்தை நோக்கித் திரும்புதலின் குறியீடு.

புராதனக் கால இயற்கை மனிதன் தனது தனிமைப்பட்ட சுதந்திரத்தோடு மகிழ்ச்சியாக இருந்தான் என்ற இந்தக் கருத்தாக்கம் ருசோவிலிருந்து தொடங்கியது. இது பிராய்டிடம் ஒரு போலி விஞ்ஞானக் கருத்தாக்கமாக உருப்பெற்றது. முதலாளிய உளவியலின் உள்ளார்ந்த தவறு, பிராய்டு தனது ஆய்வைத் தொடங்கிய போது அவர் மேற்கொண்ட கருத்துக்களில் உள்ளடங்கி இருந்தது. மனிதனின் உணர்வு என்பது தனித்தன்மையானது; தனி மனிதனில் சுதந்திர விருப்பம் அல்லது இயல்பூக்கங்கள் என்ற மூலத்திலிருந்து அவனுடைய சுதந்திரமான செயல் பிறக்கிறது. இந்த 'சுதந்திர விருப்பம்' அல்லது 'இயல்பூக்கங்கள்' என்பது, சமூகச் செல்வாக்குகளால் கட்டுப்படுத்தாத வரை அந்த அளவுக்கு ஏற்ப சுதந்தரமானது. இவை பிராய்டின் கருதுகோள்கள். இக்கருத்துக்கள் உளவியலில் மிக முக்கியமானவை. இவை உள்ளார்ந்த கருத்துக்கள் என்பதனால் புதையுண்ட காந்தங்களைப் போல இவை செயல்படுகின்றன. பிராய்டின் உளவியலை இவை சிதைத்து, விருப்ப நிறைவு என்பதனால் கறைப்படுத்தப்பட்ட ஒரு பொய்யான விஞ்ஞானமாக அதை மாற்றுகிறது. சில முதன்மையான, மாற்றம் அடையாத இயல்பூக்கங்களில் நம்பிக்கை கொள்வது மாறுதலை மறுப்பதாகவிடும். மண் ரோஜாப் பூவாக மாறுமானால், மண் தனக்குள் சுருங்கி தன்னை மேம்படுத்திக் கொண்டதாகக் கூறுவதைப் போன்றது இது.

முதலாளிய உளவியலாளரின் தவறு, சமுதாயவியலைப் பற்றி அவரது அறியாமையிலிருந்து தொடங்குகிறது. மனித மனம், மாறிவரும் புறஉலக எதார்த்தத்தோடு கொள்ளும் பல்வேறு வகையான உறவுகளின் மூலமும் பல்வேறு புதிய அனுபவங்களை மிக

விரிந்த உணர்வின் வழியே தொகுப்பதன் மூலமும் வளர்கிறது என்பதை அவர் மறுக்கிறார். நவீன நாகரிகத்தில் ஏற்படும் நெருக்கடிக்குக் காரணம் புராதனமான இயல்பூக்கங்களை வாழ்வின் சிக்கல்கள் நசுக்குவதிலிருந்து தோன்றுவதில்லை. ஆனால் மனித மனம், தனது வளர்ச்சி பெற்ற உணர்வை காலாவதியான சமூக கட்டமைப்போடு இணைக்க முடியாத தன்மையிலிருந்தே இந்த நெருக்கடி தோன்றுகிறது என்பதை சமூகவியல் அறிவுடைய ஒருவர் புரிந்து கொள்ள முடியும். ஆனால் "இனத்தின் மாறாத இயல்பூக்கங்களையே சார்ந்திருக்கிற அனைத்து நவீன கால உளவியல் ஆய்வாளர்களைப் போலவே பிராய்டும், மனவியல் ஆய்வு ஆர்வம் கொள்ளும் ஒன்றை விளக்க இயலாதவராக இருந்தார். அதுதான் மனவியலின் மையம், தனிமனித மனத்தின் நிரந்தரமான மாற்றமும் வளர்ச்சியும் என்பது அது". "குகையில் அகப்பட்ட பிளேட்டோவின் மனிதர்களைப் போல மனவியலானது பகுப்பாய்வு நிழல்களிலிருந்து வெளிப்புறத்தில் என்ன நேர்கிறது என்பதைக் கண்டறிய முயல்கிறது. மனத்திற்குள் பார்க்கும் அவர்கள் புறஉலக யதார்த்தத்தின் நீரோட்டங்களில் ஏற்படும் திரிபுகளினால் உண்டான இயக்கங்களால் குழப்புகின்றனர் அவை வஞ்சகமான, அமுக்கப்பட்ட இயல்பூக்கங்கள் என்று தவறாகக் கணிக்கின்றனர். அல்லது அவைகளால் உற்பத்தி செய்யப்பட்ட மாயத்தன்மை உடைய 'சக்திகளின்' இடையீடுகள் என்று தவறாகக் கருதுகின்றனர்.

இதனால்தான் பிராய்டின் முடிவுகள் விஞ்ஞானமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இல்லை. வானவியலின் புராண காலத்தைச் சார்ந்தவராக கெப்லரைச் சொல்வதைப் போலவே மனவியலின் புராண காலத்தைச் சேர்ந்தவர் பிராய்டு. "மனவியல் தனக்கான நியூட்டனுக்காகக் காத்திருக்கிறது" பிராய்டின் மனித மனம் பற்றிய கோட்பாடு விஞ்ஞானத்தின் தீர்க்கமான உள்ளார்ந்த காரண காரியத் தொடர்பு முறையில் அமைந்தது அல்ல. தனது வெளியீட்டில் அது சமயத்தன்மை

உடையது. சில புராணவியல் குறியீட்டு ஆக்கங்களைச் சார்ந்து அது பொருள்படுத்தப்படுகிறது. ஈகோ, இட் முதலியனவாகக் கூறப்படுபவை கிரேக்க ஒலிம்பசில் வாழ்ந்த பருவகாலத் தெய்வங்களைத் தவிர வேறு என்ன?

பைபிளுக்கு பல்வேறு வகையான விளக்க உரைகள் சொல்லி ஒன்றை விட்டு மற்றது பிரிந்து செல்லும் சமயப் பிரிவுகளைப் போலவே பிராய்டிய உளவியலிலும் பல பிரிவுகள் ஏற்பட்டன. பிராய்டின் மாணவர்களாகிய அட்லரும் யங்கும் அடிப்படையான கருதுகோள்களிலிருந்தும் அவரிடம் அடிக்கடி வேறுபட்டனர். ஒரு விஞ்ஞானக் கோட்பாட்டில் இத்தகைய போக்குகளுக்கு இடம் இராது. பிராய்டின் உளவியல், நனவு மனத்திற்கும் நனவிலி மனத்திற்கும் இடையிலான, என்றும் தீர்க்கவியலாத இருமையைக் கொண்டது. ஒரு நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் (இது தவிர்க்க இயலாதது. காரணம் நனவு மனம்தான் உளவியல் பகுப்பாய்வின் விதிகளை வரையறுக்கிறது). நனவிலி மனத்தின் நிகழ்வுகள் அனைத்தும் அவற்றை நனவு மனம் எப்படிப் பார்க்கின்றதோ அவ்வகையில் தோற்றம் தரக்கூடும். உடலியல் விதிகளைக் கொண்டு புரிந்து கொள்ளும் காரண காரியத் தொடர்புடைய நிகழ்வுகளாக இவை இல்லாமல் ஒழுங்காக அமைக்கப்பட்ட நனவுமன உலகினுள் திடீரென வெடித்துத் தோன்றும் தீய பிசாசுகளைப் போல இவை தோற்றம் தருகின்றன. ஆதிகால மனிதர்களின் உலகினுள் திடீரென வெடித்த இடியும் மின்னலும் தெய்வங்களின் தன்னிச்சையான செயல்களாகக் கூறப்பட்டது போல, நனவு மன உலகினுள் ஏற்படும் அதிர்வுகளை ஏற்படுத்தும் நனவிலி மனத்தின் செல்வாக்குகள் பிராய்டினால் பல முரட்டுப் பெயர்களோடு அழைக்கப்பட்டன. (Id, Lvlido, thanutos, eros முதலியன) ஆனால் மனித நாகரிகத்தையும் மனிதனைப்பற்றி முழுமையாகவும் அவர் ஆராய்கிறபொழுது நேர் எதிரான நோக்குநிலையை மேற்கொள்ளுகிறார். அனுபவம் அல்லது நனவு மனம் (கலாச்சாரம்),

இயல்பூக்கங்களை (நனவிலி மனத்தை) தடுக்கிறது அல்லது திரிக்கிறது. ஆகவே பிராய்டின் கோட்பாடு இயல்பாகவே ஒரு இருமையைக் கொண்டிருக்கிறது. அதை அவரால் தீர்க்கவியலாது வசதிக்கு ஏற்றவாறு ஒரு நிலை பாட்டிலிருந்து இன்னொன்றுக்கு அவர் மாறுகிறார்.

பிராய்டுக்கும் சார்பாக ஒன்றைக் கூறுகிறார்கள். பிராய்டியம் ஒரு விஞ்ஞானம் அல்ல. அது ஒரு மருத்துவ முறை. ஆனால் பிராய்டியம் ஒரு விஞ்ஞானம் இல்லை என்பதனாலேயே அது ஒரு மருத்துவமுறை என்பதில் தோல்வி அடைகிறது. சமுதாயம் இறுதியில் மனச்சிதைவுக்கு உள்ளாகித் தீர வேண்டும் என்று பிராய்டு கருதும் போதே, ஒரு தனிமனிதன் இன்னொருவனைக் குணப்படுத்த முடியும் என்று நம்புவது நகைப்புக்கு உரியது. ஆகவே பிராய்டியம் ஒரு மருத்துவ முறையாக ஏற்றுக் கொள்ளத் தகுதி உடையது அன்று, உயர்ந்த அளவில் பிராய்டியத்தை, "முதலாளிய நாகரிகத்தின் சிதைவை, புராணச் சொற்களில் பதிவு செய்யும் தேவதைக் கதையில் வரும் ஒரு நோய்க்கூறு ஆய்வாகக் கொள்ளலாம்" பிராய்டிய முறைக்கு மாறாகக் காதல் என்ற கட்டுரையில் காட்வெல் மனிதக் காதலை ஒரு உயிரியல் சமூகவியல் ஆய்வுக்கு உட்படுத்துகிறார். காதல் முழுவதும் பாலுறவு இன்பத்திற்கான புராதன மனிதனின் ஆசையிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்கிறது என்ற பிராய்டியக் கருதுகோளை அவர் மறுக்கிறார். அவர் கருத்தின்படி, சமூக உணர்வுகளில் உணர்ச்சிப் பண்பிற்கு மனிதன் தந்த பெயர் காதல். "சமுதாயம் என்பது காதலோடு கலந்த பொருள் உற்பத்தி. சமூக உறவுகளில் உள்ள இந்த உணர்ச்சிப் பண்பு என்பது இவ்வுறவுகளுக்குள்ள பொருளியல் அடித்தளத்திலிருந்து தோன்றுகிறது. ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதனின் குணம் அவனது உணர்ச்சி வகை, தொழில் நுணுக்க வகை உறவுகளினால் தீர்மானிக்கப்படு கிறது. இது தனித்தனியாகப் பிரிக்கக் கூடியது அல்ல. ஒரு சமூக நிகழ்வின் பகுதி இவை".

மாறாத இயல்பூக்கங்கள் பற்றிய பிராய்டியக் கருத்தாக்கத்தை காட்வெல் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கருத்தின்படி இயல்பூக்கம் என்பது எதார்த்தத்துடன் மிக நுணுக்கமான முறையில் செயல்படுவதற்காக அனுபவத்தால் கட்டுப்படுத்தப்படும் அல்லது உருமாற்றம் பெறும் ஒரு குறிப்பிட்ட உள்ளார்ந்த நடத்தை வடிவம் அல்லது எதிர்வினைகளின் தொடர்ச்சி. இந்த நிகழ்வு முறைதான் கற்றறிதல் எனப்படுகிறது. நமது காதல் பிரதிபலிப்புகளுடனும் பிறவகை பிரதிபலிப்புகளுடனும் கற்றறிகிறோம். காதலில் பல உருமாற்றம் பெற்ற நடத்தை வடிவங்களும் அடங்குகின்றன. இவை நட்பு, தியாகம், பெற்றோரிடம் அன்பு, பாலுணர்வு இன்பம் முதலியவை ஆகும்.

இறுதியாகக் குறிப்பிட்ட பாலுணர்வு இன்பம் உள்ளடங்கிய அந்த நடத்தை வடிவங்கள் பாலுறவுக் காதல் என்று அழைக்கப்பட வேண்டும். அன்பின் பிற வடிவங்களை மனத்தினுள் அமுக்கப்பட்ட உடலுறவுக்கான ஆசைகள் என அழைப்பது வளர்ச்சியை மறுத்து பரிணாம முறையை திருப்புவதாகும். இது "தனது மீசைக்குப் பச்சை வண்ணம் அடித்து, மீசை தெரியாத முறையில் ஒரு பெரிய விசிறியைப் பயன்படுத்திய வெண்மை வீரனின் திட்டத்தைப் போல வேடிக்கையானதாகும்".

சிக்கலான உடலியல் விவரங்களிலிருந்து காட்வெல் பலவற்றை விளக்குகிறார். சமூக பொருளியல் போக்கிலிருந்து இன்றியமையாமல் தோன்றி பாலுறவுக் காதல் தன்னோடு பலவகையான பொருளாதார உறவுகளை ஈர்த்துள்ளது அவற்றால் இது வளம் பெற்றுள்ளது. "பொருளியல் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தோடும், பாலுறவுக் காதலோடு சம்பந்தப்படுத்திச் சொல்லப்படும் மிக வளமான நுணுக்கமான உணர்வு வகையில் மேலும் சிறந்த நடத்தை வடிவம் இணைகிறது. உணர்ச்சிகரமான காதல் முதலாளிய நாகரித்தோடும், கனவியலான அல்லது வீர சாகசக் காதல் நில ஆதிக்க நாகரிகத்தோடும்,

பிளேட்டானியக் காதல் அடிமை முறை உடைய கிரேக்க நாகரிகத்தோடும் பொருந்துவன்".

இன்று முதலாளிய நாகரிகம் சமூக உறவுகளை பண உறவாகக் குறைத்துள்ளது. அவற்றில் இன்று அன்பு இடம் பெறவில்லை. ஒரு மனவியல் ஆய்வாளனுக்கு உலகம் முழுவதுமே அன்பில்லாமல் வறண்டு தவிப்பதாகத் தோன்றுகிறது. அன்பிற்கான இந்தத் தேவை மனநோய், வெறுப்பு, மனத்திரிபு, அமைதி இன்மை ஆகிய நோய்க்கூறான வடிவங்களில் தென்படுகிறது. "இன்று அன்பும் பொருளியல் உறவுகளும் இரு எதிர் முனைக்குச் சென்று விட்டதாகத் தோன்றுகிறது. எதிர்த் துருவங்களாகிவிட்ட இப்பிரிவினை மிகக்கடுமையான நெருக்கடியின் மூலமாக இருக்கிறது. இது முதலாளிய சமூகத்தின் மிகப்பெரும் உருமாற்றத்தைத் தோற்றுவிக்கும். ஒரு புரட்சிகரமான அழிவுக்குப் பிறகு ஒன்று மற்றொன்றிடம் திரும்பிவந்து சேர்ந்து ஒரு புதிய இணைவில் கலக்கும். அது கம்யூனிசம்".

முதலாளி வர்க்கம் புரட்சியைக்கண்டு அஞ்சுகிறது. படிப்படியான அமைதியான மாற்றத்தில் அது நம்பிக்கை கொள்கிறது. அதனால் தனது பழைய மாயையை அது இறுகப் பற்றிக் கொள்கிறது. "முதலாளி வர்க்க அமைதி வாதம் என்பது தனித்தன்மை உடையது. அதை உதாரணமாக கிழக்குலக அமைதிவாதத்தோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. முதலாளி வர்க்க அமைதி வாதத்தின் எடுத்துக்காட்டாக இருப்பவர் காந்தி அல்ல, ஃபாக்ஸ். நண்பர்கள் கழகம் முதலாளி வர்க்க அமைதி வாதத்தின் ஆன்மாவை வெளிப்படுத்துகிறது. இது தனிநபர் எதிர்ப்புமுறை ஆகும்", மனிதன் தனிநபர் என்ற முறையில் ஆற்றல் உடையவன் என்ற உடமை வர்க்கத்தவறின் மீது இந்த வாதம் எழுகிறது. ஆனால் அமைதி வழி எதிர்ப்பு என்பது ஒரு உண்மையான செயல்திட்டம் அல்ல. அது பழைய செயல்திட்டத்தை ஆதரிப்பதற்கான சப்பைக்கட்டு ஆகும். சிறுமுதலாளி வர்க்கம் பெருமுதலாளியோடு செயலற்ற முறையில் பங்கு பெறுவது

ஆகும். முதலாளி வர்க்க அறிவாளன் தனது ஆன்மாவைக் குற்ற உணர்விலிருந்து காப்பாற்றிக் கொள்ள போரிலிருந்தும் புரட்சியிலிருந்தும் விலகி நிற்க விரும்புவான். அவனுக்கு அவனுடைய ஆன்மாவைத் தவிர முக்கியமானது வேறு ஒன்றும் இல்லை. அவனுடைய ஆன்மா சிதையாமல் இருந்தால் சமூகம் அழியும்.

இம்முறையில், பிராட்டஸ்டன்ட் கிறித்துவ மதத்தைப் போல அமைதிவாதமும் அதி தீவிர தனிநபர் வாதத்தின் தன்னலத்தின், கோட்பாடு ஆகிறது. ஆன்மீக தன்னிச்சைப் போக்கின் கோட்பாடு ஆகிறது. வன்முறையிலிருந்து ஒரு தனிமனிதன் விலகியிருப்பது ஒரு தீர்வே அல்ல என்பதை அமைதிவாதி அறிவதில்லை. தனி மனிதனது செயல்கள் அனைத்தும் சமூகத்தில் பிறரைப் பாதிக்கின்றன. செயல்படாமல் மனிதர்கள் வாழமுடியாது. செயல்படாமல் இருப்பது கூட, செயலின் ஒரு வடிவமே. வாஸர்மென் குறிப்பிடுவது போல மனிதன் செயல்படுவதிலிருந்து தோன்றும் குற்றம், அவன் செயல்பட தவறுவதிலிருந்து தோன்றும் குற்றத்தோடு ஒப்பிடும்பொழுது மிகச் சிறியதே ஆகும். சமூக அமைப்பை மாற்றுவதற்கான செயல்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் அமைதி வாதி அந்த சமூக அமைப்பைக் காப்பாற்றுவதற்கு உண்மையில் உதவி செய்கிறான். "மனிதர்களின் அதிகரித்து வரும் வேதனைகளைப் பொறுத்துக் கொள்வதாகிய அமைதிவாதத்தின் எதிர்மறைத் தன்மைக்குப் பதிலாக புரட்சியாளன் கம்யூனிசம் என்ற உடன்பாட்டுத் தன்மையை வைக்கவேண்டும். உடமை வர்க்க அறிவாளிகளின் தெளிவற்ற விளக்கத்திற்கு மாறாக, பொதுவுடைமை சுதந்திரத்தின் உண்மையான இயல்பை விஞ்ஞான முறையில் வரையறுக்கிறது. ஒரு பொதுவுடைமையாளனின் பார்வையில் சுதந்திரம் என்பது அறிவின் மூலம், அந்த அறிவைக் கொண்டு புற உலகின்மீது மனிதன் செலுத்தும் ஆதிக்கத்தின் மூலம் மட்டுமே வரும்.

சுதந்திரமான மனிதன், இயற்கையின் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் காரணவியல் விதிகளை விஞ்ஞானம் மூலம் அறியவேண்டும். சமுதாயத்தில் மனித உறவுகளை நெறிப்படுத்தும் காரணவியல் விதிகளை சமூகவியல் மூலம் அறிய வேண்டும். நாம் செய்ய விரும்பியதைச் சுதந்திரமாகச் செய்ய இயலாவிட்டால் சுதந்திரம் பொருளற்றதாகிறது. இயற்கையிலும் சமூகத்திலும் செயல்படும் விதிகளை நம் ஆளுகைக்கு உட்படுத்தாவிட்டால் நாம் விரும்பியதைச் செய்ய முடியாது. கனவு காண்பவனின் சுதந்திரம் பற்றிய கருத்தாக்கம் என்பது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாகும். காரணம் முன்னர் கூறிய அறிவை அது மறுக்கிறது. இத்தகைய அறிவு இல்லாத நிலையில் உடமை வர்க்கம் சிந்திப்பதற்கும் கனவு காண்பதற்கும் மட்டுமே சுதந்திரம் உள்ளது. செயல்படுவதற்கு அல்ல. அவனது சுதந்திரம் பற்றிய கருத்து விலங்கின் தத்துவச் சார்பில்லாத கருத்து ஆகும். தன் உள்ளடக்கத்தில் இது முழுவதும் எதிர்மறைப்பண்பு கொண்டது. சமூகக் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருப்பதையே இது விரும்பும். இந்நிலையில் மனிதன் ஒரு விலங்கைப்போல சுதந்திரமாக வாழலாம். ஆனால் ஒரு விலங்கு சுதந்திரமானதல்ல. தன்னால் அறிய முடியாத இயற்கையின் விதிகளால் அது கட்டுண்டு செயலற்றுக் கிடக்கிறது. பிரபஞ்சத்தின் காரணவியல் உறவை நாம் அறியும் அளவுக்கு நாம் சுதந்திரமானவர்கள் ஆகிறோம்.

எங்கல்சின் சொற்களில் கூறுவதானால் சுதந்திரம் என்பது அவசியத்தை அறிவதாகும். இந்த அறிவு பிற மனிதர்களுடன் கொள்ளும் கூட்டுறவின் மூலமே ஏற்படும். மனிதன் தான் விரும்புவதை தனித்திருந்து செய்ய முடியாது. தனித்த நிலையில் அவன் சுதந்திரம் அற்றவன். புற உலக எதார்த்தம் பற்றி அவன் அறிவைப் பெறுவதற்கான விஞ்ஞானம் சமூகத் தன்மை உடையது. தன் உணர்வுகளைப் பற்றி மனிதன் அறிந்து கொள்வதாகிய கலை சமூகத்தன்மை உடையது. புற உலகைத் தன் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றுவதாகிய

பொருளியல் உற்பத்தி என்பது சமூகத் தன்மை உடையது. இந்தப் பொருளாதார உற்பத்தியினால்தான் மனிதன் சுதந்திரம் உடையவன் ஆகிறான், ஆகவே சுதந்திரம் என்பது அவசியம் பற்றிய சமூக உணர்வே ஆகும்.

"கம்யூனிசம் தனக்கு அடிப்படையாக சமுதாயத்தின் காரணவியல் பற்றிய அறிவைக் கொண்டுள்ளது. இம்முறையில் முதலாளிய சமூகத்தில் உள்ள அனைத்து அடிமைத்தனமும், சொத்துடையவர்களால் சொத்து அற்றவர்கள் அடிமைப்படுத்தப் படுவதும் சொத்து உள்ளவர்களும் இல்லாதவர்களும் போர்களுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் அடிமை ஆதல் முற்றுப் பெறும். உயிரற்ற சடத்தின் விதிகளை பற்றிய அறிவு என்பது போதாது. போரிலிருந்தும் பட்டினியிலிருந்தும் வெறுப்பிலிருந்தும் வன்முறையிலிருந்தும் மனிதனை விடுவிக்கும் தன் உறுதியை கம்யூனிசம் மிகப் பெருமளவு கொண்டுள்ளது. சமுதாயத்தின் காரணவியல் அறிவை பெறுவதன் மூலமே இத்தகைய தன்னுறுதியை அது பெறுகிறது. சமூகம் தன்னைப் பற்றிய சுய அறிவைப் பெறுவதன் மூலம் மனிதர்களுக்கு அவர்களின் சுதந்திர விருப்பத்தைக் கம்யூனிசம் உண்மையானதாக்குகிறது. "கம்யூனிசம் தான் சுதந்திரம்" ஆனால் முதலாளிய நாகரிகம் ரூசோ போட்ட திரைகளை இன்னும் விலக்கிக் கொள்ளவில்லை. விலக்கிக் கொள்ளாமல் தனது இன்பத்திற்கான பாதையில் கொழுந்து விட்டு எரியும் நெருப்பை நோக்கி மகிழ்ச்சியோடு செல்கிறது. "சுதந்திரத்தைப் பொன் சிலுவையில் வைத்து அது அறைந்துள்ளது. யாருடைய பெயரால் இப்படி அது செய்தது என்று நீங்கள் கேட்டால் அது பதில் சொல்லும்:- "தனி நபர் உரிமை என்ற பெயரால்"".

நன்றி: Mainstream
October 21
November 14, 1978

3. புரட்சிக்குப் பிந்திய சோவியத் பண்பாட்டு நிலைமை

– கல்பனா சஹ்னி

"புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளில் கலை இலக்கியத் துறைகளில் புதிய சோதனைகள் முகிழ்த்தபோது அக்காலத்தைப் 'பொற்காலம்' என்றும், அச்சோதனைகளே இளம் சோவியத் கலைக்கு உரமாக அமையும் என்றும், அதன்வழி 'உலகப் பண்பாட்டை'த் தன்னடிமைப்படுத்த இயலும் என்றும் பொய் மானை நம்பி ஓடிய பிற்போக்கு அடிமையரின் ஆயுதங்களைத் திருத்தல்வாத அழகியல் வாதிகளும் திறனாய்வாளர்களும் தாங்கிக்கொண்டனர்". எனக்கூறும் சோவியத் அழகியல் திறனாய்வாளர் யூரிபாராபாஷ் மேலும் கூறுகிறார்: "பகைமைக் கருத்தோட்டங்- களிலிருந்தும் தோன்றும் வெளிப்பாடுகளையும்" மார்க்சியத்தோற்றம் கொண்ட போலிகளையும் கண்டறிந்து அவற்றின் அந்நியப் பார்வைகளைத் தோலுரித்துக் காட்டும் நமது திறமையை மேலும் செழுமைப்படுத்த வேண்டும் ஆயின், இதுகாறும் மிகச்சில சோவியத் மாந்தரே தமது மாபெரும் பழஞ்சிறப்பை உணர்ந்துள்ளனர். அக்காலம் பற்றிய நேர்நிலை ஆய்வு சரியாக இதுவரை ஏதுமில்லை.

அழகியல் பற்றிய பிரச்சினைகளுக்கும், 'சோசலிச சமுதாயத்தில் கலையின் பங்கு பற்றி விழுந்த விவாதங்களுக்கும் மெட்சென்கே', பாராபாஷ் போன்ற இலக்கிய ஆய்வாளர்கள் லெனின் எழுதிய 'கட்சி நிறுவனமும் கட்சி இலக்கியமும்' என்ற கட்டுரையைத் தமக்குக் காப்பாகவே பயன்படுத்திக் கொண்டனர். மார்க்சியக் கோட்பாடு இயங்கியலையே அடிப்படையாகக் கொண்டது என்பதை அவர்கள் மறந்து செயல்பட்டனர். 1905இல் லெனின் எழுதிய கட்டுரை 1917 புரட்சிக்குப் பிந்திய காலத்தின் படைப்புக் கலைக்கும் வழிகாட்டியாக அமையாது என்ற க்ருப்ஸ்காயாவின் கடிதத்தைக் கூட அவர்கள் கவனத்திற்

கொள்ளவில்லை. கலையின் சுதந்திரம் பற்றிய புகழ்பெற்ற மார்க்சியர்களின் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளினர். கலைஞனின் சுதந்திரம் பற்றிய கிராம்சியின் கருத்துக்களை 'பொதுவுடைமைக் கட்சிக்குள் இருந்த தீவிர வாதப் போக்கை எதிர்த்து இத்தாலியக் கம்யூனிஸ்ட்கள் போராடிய போது நிலவிய தனித்தன்மை கொண்ட அரசியல் சூழலில் வடிவம் கொண்ட கருத்துக்கள்' என்று விளக்கினர். உண்மையில், யார் அதிதீவிரவாதி என்ற கேள்வி தவிர்க்கவியலாதவாறு எழுகிறது.

கார்க்கியின் விமர்சனங்கள்

1934இல் சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் முதலாம் பேரவைக் கூட்டத்தில் மார்க்சிம் கார்க்கி அத்தகைய திறனாய்வாளர்களைக் கடுமையாகச் சாடினார். "இன்றைய காலம் பற்றிய அணுகுமுறை குறித்த நமது விமர்சனம் திறமையும், புலமையுமின்றி அறியாமையுடையதாய் உள்ளது. மார்க்ஸ், எங்கெல்சு, லெனின் ஆகியோரின் ஒரு சில பொன்மொழிகளையே எடுத்தாளும் விமர்சனங்கள் புதிய கரு, விஷயங்களைப் பற்றிய மதிப்பீடு, பாத்திரங்கள், மனித உறவுகள், மாறிவளர்ந்து வரும் வாழ்வின் நேரடிக் காட்சியுலக வெளிப்பாடுகளை வெளிப்படுத்தா வண்ணம் உள்ளன. மார்க்சும், எங்கெல்சும் காண முடிந்திராத பலவும் இன்று நம் நாட்டில் நிகழ்ந்துள்ளன. சுருங்கக்கூறின் எங்கெல்சின் புகழ்மிக்க கருத்தான 'நமது மெய்யறிவு குருட்டுத் தனமானது அல்ல; செயலுக்கு வழிகாட்டி' என்ற மொழிகளை அவர்கள் முற்றாக மறந்தனர்".

கார்க்கியின் சொற்கள் இன்னும் பொருத்தமுடையனவே. மார்க்சிய, லெனினிய அடிப்படைகளை விலக்கிக் குருட்டுத் தனமாக அத்தத்துவத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பது கலை இயக்கத்தை முற்றாக மறுப்பதேயாகும். மேலும் அது மெய்மையுமாகாது. புரட்சியின் பின் விளைவுகளாக அத்துடன் இரண்டறக் கலந்த கலை இயக்கம் பற்றிய நேர்மையான ஆய்வுக்கும் அது தடை செய்கிறது. பாராபாஷ் உள்ளிட்ட

பல சோவியத் திறனாய்வாளரின் இத்தகைய போக்கு குருட்டுத் தனமாகவும் அதிதீவிரத் தன்மையுடையதாகவும் இருந்தது. சோவியத் யூனியனின் பண்பாட்டியல் நிலைமைகளைப் பற்றி இந்திய மார்க்சியர் சிலர் கலக்கங் கொண்டிருந்தனர். ஆயினும் அவர்கள் தமக்குள்ளாகவே விவாதித்துக் கொண்டனர். அந்நாட்டின் சொந்த வி யங்களை நாம் திறனாய்வு செய்வது சோவியத் எதிர்ப்புவாத பூர்ஷ்வா எழுத்துக்குச் சாதகமாகிவிடுமோ என்ற எண்ணம் இனிமேலும் இந்திய மார்க்சியர்களுக்கு வேண்டா. அந்நாட்கள் பறந்து விட்டன. சோவியத்தின் ஆக்கபூர்வமான படைப்புக்களையும் அவர்தம் குறைபாடுகளையும் மனதிற் கொண்டு சோவியத் யூனியனில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் பற்றிக் கட்டுப்பாடற்ற ஆய்வு நடத்தவும், தேவைப்பட்டால் கருத்துக்கள் கூறவும் இந்திய மார்க்சியர்கள் தயங்கக்கூடாது.

அனைத்து இழிநிலைகளிலிருந்தும், ஆளும்வர்க்கத்தைச் சார்ந்திருப்பதன் காரணமாக எழும் தளைகளிலிருந்தும் மனிதனின் படைப்புச் சக்திகளை விடுவிப்பதே பொதுவுடமையின் இலக்காகும். அத்திசை நோக்கிய முதற்படியே அக்டோபர் புரட்சி. கேடுற்ற அரசியலமைப்பு வீழ்ந்ததால், அச்சமுதாயத்தின் மதிப்புகளும், கோட்பாடுகளும், கலைஞர்களின் பங்கும் உடனடியாக மாறிவிட்டன. அவனுடைய நேயர்களும், ரசிகர்களும், பார்வையாளர்களும், திறனாய்வாளர்களும் இன்று மக்கள் திரளே - அதாவது ஒட்டு மொத்த தேசமுமே. இப்புதிய பார்வையாளர்களை நோக்கிச் செல்லும் வழிகளையும் முறைகளையும் காண எண்ணற்ற இளம் கவிஞர்களும், ஓவியர்களும் தோன்றிவிட்டனர்.

வருங்காலவியல் இயக்கம்

புரட்சியின் அடிப்படையாகத் தோன்றிய முதன்மையான இயக்கம் வருங்காலவியலாளர்கள் இயக்கம். புரட்சிக்கு முன்னும் இருந்த அவ்வியக்கத்தில் மயாக்கோவ்ஸ்கி உள்ளிட்ட கவிஞர்களே அதிகம். அவர்கள் பூர்ஷ்வா பண்பாட்டையும் கோட்பாடுகளையும் முற்றாக

ஒதுக்கினர். மயாக்கோவ்ஸ்கி அக்டோபர் புரட்சி பற்றி எழுதும் போது 'அதை ஏற்பதா? ஒதுக்குவதா? அக்கேள்வியே என்னிடம் இல்லை அது என்னுடைய புரட்சி' என்று பறைசாற்றினார். வருங்காலவியலாளர்கள் தம் திசைவழி அறிந்தனர். அக்குழுவில் வாசிலி காண்டின்ஸ்கி, காசிமிர் மலெவிச், அலெக்சாந்தர் ரோட் சென்கோ, கட்டிடவியல் அறிஞர் விளாதிமிர் டாட்லின், திரைப்பட இயக்குநர் மெயர்ஹோல்ட் மற்றும் பலர் சேர்ந்தனர்.

'வருங்காலவியலாளர் தாளிகை'யில் அவர்கள் முழக்கமிட்டனர்: "ஜார் ஒழிந்த நாளிலிருந்து அவர்தம் அரண்மனைகளும் அரங்குகள் அனைத்தும் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. சமத்துவத்தை நோக்கிய நீண்ட பயணத்தில் கலையைப் பொறுத்தமட்டில் படைப்பாளுமையின் சுதந்திர எழுத்துக்கள் தன் காவியங்களை சுவர்களிலும், மதில்களிலும், கூரை முகட்டிலும், நகர, கிராமத் தெருக்களிலும், தொழிற்சாலைகளின் புறங்களிலும், ஊர்திகளிலும் மாந்தர்தம் உடையிலும் தீட்டட்டும். கலைஞர்களும், எழுத்தாளர்களும் வண்ணக் கலயங்கள் ஏந்தித் தூரிகை கொண்டு நகரின் முன் நெற்றியிலும், நெஞ்சிலும், ரயில் நிலையங்களிலும், ஓடும் ரயில் பெட்டிகளிலும் காவியங்களைப் படைக்கட்டும். அனைத்து மக்களுக்குமான கலைத் திருவிழாக்கள் தெருவெங்கும் நிகழட்டும். அனைத்துக் கலைகளும் – அனைத்து மக்களுக்கும்".

இதன் விளைவாக கலையும், கலைஞரும் தெருவை நிரப்பினர். கலைஞரும் நாடகத் துறையினரும் எழுத்தாளர்களும் நாடெங்கும் பயணம் செய்து புரட்சியின் செய்திகளைப் பரப்பினர். புரட்சிகர வடிவமும் உருவமும் கொண்ட ஆயிரமாயிரம் சுவரொட்டிகளைக் கலைஞர்கள் படைத்தனர். மயாக்கோவ்ஸ்கி மட்டும் 4000 சுவரொட்டிகளை அக்காலத்தில் முடித்திருந்தார்.

புதிய கூத்துப் பட்டறை பிறக்கிறது

செகாவ், டால்ஸ்டாய் ஆகியோரின் நாடகங்களையும், அரசியல் கலப்பற்ற நாடகங்களையும் நடத்தி வந்த ஸ்டானிஸ்லாவ்ஸ்கியை மிஞ்சி மெயர்ஹோல்டின் புரட்சிகர நாடகங்கள் மக்கள் திரள்களுடன் நேரடித் தொடர்புடையதாகவும், அரசியலுணர்வைத் தந்து விழிப்பு ஏற்படுத்துவதாகவும் அமைந்தன. தனி மனித பாத்திர வர்ணனையாக இன்றி சமுதாய வகைப்பட்ட பாத்திர உருவங்கள் நாடகங்களில் வெளிப்பட்டன. பார்வையாளர்கள் பங்கு பெற ஊக்குவிக்கப்பட்டதால் நடிகர்களுக்கும் பார்வையாளர்க்குமிடையே இடைவெளி குறைந்து விவாதங்கள் நடைபெற்றன. அதாவது நாடங்களை 'வீதி மயமாக்கலு'க்காக அனைத்தும் செய்யப்பட்டன. மெயர்ஹோல்டின் மாணவர்களில் ஒருவரான செர்ஜி ஐன்ஸ்டீன் திரைப்படங்களில் புரட்சிகரத் தன்மையை ஊட்டி 'பொடம்கின் போர்க் கப்பல்' 'அக்டோபர்' முதலிய புகழ்மிக்க திரைப்படங்களைத் தயாரித்தார்.

'உள்ளார்ந்த தேவை'யை வெளிப்படுத்தும் முகமாக ஓவியங்களை வரைந்த வாசிலிகான்டின்ஸ்கி ஓவியத்தை இசைக்கும், வண்ணங்களை இசைக் கருவிகளின் பல பாகங்களுக்கும் ஒப்பிட்டுக் காட்டினார். அவருடைய ஓவியங்கள் ஓர் ஆத்ம உணர்தலை வெளிப்படுத்தின.

தலைமையியல், கட்டமைப்பியல் போக்குகள்

புறஉலகத் தாக்கங்களினால் ஏற்படும் உணர்வுகளுக்கே பொருளிருப்பதாகவும் கலையுணர்வில் அதுவே தலையானது என்று காசிமிர் மலெவிச் முதலிய கலைஞர்கள் தலைமையியல் வாதத்தை வளர்த்தனர். கட்டமைப்பியல் போக்கை வளர்த்தவர்கள் வருங்காலவியல் போக்கை ஒட்டி வந்தவர்களே. கலை செயல் வடிவமாக இருக்க வேண்டும்; அது உற்பத்திப் போக்கிற்குத் துணை புரிய வேண்டும் என்றும், 'கலை கலைக்காகவே' என்பதை ஒதுக்க வேண்டும் என்றும் வாதிட்ட ஆன்டன் பெவ்ஸ்னர், நாம் கபோ,

எல்லிஸ் ஸிட்ஸ்கி, ரோட்சென்கோ முதலானவர்கள் சமுதாயத்தை ஒட்டு மொத்தமாக மாற்றியமைக்க வேண்டும் என்றும் புரட்சிகரக் கலை சமுதாயப் பொருளாதாரப் புரட்சிக்குத் துணையாக அமைய வேண்டும் என்றும் கருதியவர்கள்.

பழந்தடைகள் உடைக்கப்படுகின்றன

நிலம் நாட்டுடைமையாக்கப்பட்டு, நகர்ப்புறத் திட்டமிடல் அரசின் வசமிருந்ததால் கட்டமைப்பியல் வழிவந்த கட்டிடவியல் வல்லுநர்க்குப் புதிய சோதனைகளும் பொறுப்புகளும் வந்தன. புதிய சமுதாயத்தின் சோதனைகளை இவர்கள் தாங்கினர். இக்கலைஞர்கள் அனைவரும் கலையின் சமுதாயப் பணியை நம்பினர். தொழில்களுக்கிடையிலும், கலைக்கும் தொழில்நுட்பவியலுக்கும் இடையிலும், கவிதைக்கும் வரைபடத்திற்கிடையிலும், இசைக்கும் ஓவியத்திற் கிடையிலும் இருந்த தடைகளை உடைத்தனர். புதிய புதிய கட்டிடவியல் சாதனைகள் நிர்மாணிக்கப்பட்டன. அதாவது கலை, கட்டிடவியலின் பல்வேறு பிரிவுகளுக் கிடையிலும் ஓர் ஒட்டு மொத்த இடையுறவு தொடர்ந்து வந்தது. அதேபோல் இலக்கியத்திலும் இக்காலப் பகுதி எழுச்சியும் மறுமலர்ச்சியும் புத்தாக்கமும் கொண்டிலங்கியது. மயாக்கோவ்ஸ்கியின் புரட்சிக்குப் பிந்தியகாலக் கவிதைகள் புரட்சிகர வேகம் கொண்டிருந்தன. பல்வேறு இலக்கியக் குழுக்கள் உருவாயின. கற்பனைகள், சொற்கள், படிமங்களை அடிப்படையாகக் கொண்டு 'படிமவாதியர்', கற்பனாவாதியர்' என்ற குழுக்களும் ஷ்க்லோவ்ஸ்கி, யகோப்ஸன், டின்யானோவ் ஆகியோரடங்கிய 'ஓபோயஸ்' என்ற இலக்கிய விமர்சனக் குழுவும் தோன்றின. கலையும் இலக்கியமும் பாட்டாளிவர்க்கக் கோட்பாட்டையே எதிரொளிக்க வேண்டும் என்ற 'புரோலெட்கட்' குழுவும் அதற்கு மாறான 'பெரிவல்' குழுவும் 'வோக்ம்' என்ற

விவசாயிகளின் எழுத்தாளர் குழுவும் பிற பல்வேறு குழுக்களும் தோன்றின.

கலை, இலக்கியம் பற்றிக் கட்சியின் சரியான நிலைபாடு

எண்ணற்ற பண்பாட்டு நிறுவனங்களும், கருத்தோட்டங்களும், இயக்கங்களும் தோன்றினும் பண்பாட்டியக்கத்தில் குழப்பமோ அராஜகத் தன்மையோ இல்லை. புரட்சிக்குப் பிந்திய காலத்தில் கடுமையான பொருளியல் நெருக்கடிகளும் உள்நாட்டுப் போரும், அந்நியத் தலையீடும், வேறுபல பிரச்சினைகளும் இருப்பினும் பண்பாட்டுத் துறையில் எல்லா வழிகளிலும் அரசாங்கம் தனிக்கவனம் செலுத்தி ஊக்குவித்து வந்தது. படைப்புத்துறையில் ஈடுபட்டிருந்த அறிவியக்கவாதிகளின் முன்கட்சி ஒரு நிபந்தனையை வைத்தது. 'நீங்கள் புரட்சிக்கு ஆதரவானவர்களா? எதிராகச் செயல்படுபவர்களா?' என்பதே. இதைத்தவிர படைப்புத் துறைக் கலைஞர்களின் சுதந்திரத்தில் அரசாங்கத்தின் எப்பகுதியும் குறுக்கிடவில்லை. பண்பாட்டுத் துறைப் பிரிவுத் தலைவராக இருந்த லூனாச்சார்ஸ்கிக்கே இப்பெருமையின் பெரும்பங்கு சாரும். 'தனிப்பட்ட அரசுத் தலைவரின் சுவைக்கேற்ப நாட்டின் விதிகள் என்றும் இருத்தலாகாது' என்ற கொள்கையைச் செயல்படுத்தியவர் லூனாச்சார்ஸ்கி.

கலையைக் குறித்த அரசாங்கத்தின் கொள்கையை 1925ஆம் ஆண்டு கட்சித் தீர்மானம் அனைத்து இலக்கிய வளர்ச்சிக்கும் முழு ஆதரவு தந்தது. அத்தீர்மானம் கூறியது: "இலக்கிய இயக்கங்களின் எந்த ஒரு பிரிவையும் சார்ந்து கட்சி ஆதரிக்காது. ஒட்டு மொத்தமாக இலக்கியத்திற்கு வழிகாட்டும்போது எந்த ஒரு பிரிவுக்கும் ஆதரவு தராது. அதாவது, ஒரு குடும்பத்தின் வடிவத்தைத் தீர்மானங்கள் இயற்றுவதன் மூலம் நிர்ணயம் செய்ய முடியாது. ஒரே துறையில் உள்ள பல்வேறு குழுக்களுக்கும், போக்குகளுக்குமிடையில் ஆக்க பூர்வப்

போட்டியிருப்பதையே கட்சி விரும்புகிறது. இப்பிரச்சினைக்கு வேறு எந்தத் தீர்வும் அதிகாரத்துவப் போலி முடிவாகவே இருக்கும்".

நிலைமை மாறுகின்றது

எந்த ஒரு குழுவுக்கும் ஏகபோக உரிமையைக் கட்சி வழங்கக் கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'இலக்கிய நடவடிக்கைகளில் திறமையற்ற நிர்வாகத் தலையீடு' இன்றிக் கட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. 1932-ல் 'இலக்கிய, கலை அமைப்புக்களை மறுஆக்கம் செய்தல்' என்ற கட்சியின் தீர்மானம் முன்னர் இருந்த பல்வேறு குழுக்களையும் கலைத்தது. அக்குழுக்களனைத்தும் இணைந்து 'எழுத்தாளர் சங்கம்' 'கட்டிடவியல் வல்லுநர் சங்கம்' 'கலைஞர்கள் சங்கம்' என்று மாறின. கலைக்குப் புத்தெழுச்சியூட்டும் செயல் எனப் பெரும்பாலான அறிவுவாதியர் இதைக் கருதினர். கார்க்கி, இலியா எரன்பர்க் முதலிய எழுத்தாளர்கள் இதை மனதார வரவேற்றனர். 1934-இல் நடந்த எழுத்தாளர்கள் சங்கத்தின் முதலாவது பேரவைக் கூட்டத்தில் இதற்குப் பெரும் வரவேற்பிருந்தது. அப்பேரவையில் பல முக்கியப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன; எழுத்தாளர்களுக்கெதிராக அரசியல் அவதூறு எழுப்புவதை எதிர்த்தும், இலக்கியத்தில் நிர்வாக, தலைமைகளின் தலையீட்டுக் கெதிராகவும் கடுமையாகப் பேசப்பட்டன. 'சோசலிச மெய்ம்மை வாதம்' என்ற சோவியத் இலக்கிய, இலக்கியத் திறனாய்வுப் போக்கு அப்போதுதான் தோன்றியது.

அச்சக் குரல்கள்

கார்க்கி கூறிய 'சோசலிச மெய்ம்மை வாதம்' விரிந்து பரந்த பொருளைக் கொண்டது. கார்க்கியின் பார்வையில் அது 'பல்வேறு போக்குகளையும்' உள்ளடக்கியதேயாகும். ஆயினும் அப்போதே இது பற்றிய அச்சக் குரல்கள் தோன்றின. நாடகாசிரியர் பொகோடின், எழுத்தாளர் படேயெவ் முதலானோர் அது திரிக்கப்பட்டு ஒரு வாய்பாடாகவோ

'குருட்டுத்தனமான முறையாகவோ' வளரும் அபாயத்தைக் கண்டனர். எனவேதான் அதே பேரவையில் 'சோசலிச மெய்மை வாதம்' படைப்பியக்கப் பணிகளுக்கும் வெவ்வேறு வடிவங்கள், முறைகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவும் உறுதியளிப்பதாகவும் திட்டவட்டமாக அறிவிக்கப் பட்டது. இப்பேரவைக் கூட்டம் பெரு வெற்றியாக அமைந்தது. அடுத்த பேரவையை மூன்றாண்டுகட்குப் பின் 1937-இல் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆயின் அடுத்த பேரவை 20 ஆண்டுகட்குப்பின் 1957இல் தான் நடைபெற்றது. இக்காலகட்டம் பெரும் மாற்றங்களை உள்ளடக்கியிருந்தது.

கொள்கையில் தலைகீழ் மாற்றம்

கலை, இலக்கியப் பிரச்சினைகளில் அரசின் ஒத்துழைப்பும், தலையிடாக் கொள்கையும் முழுமையாக தலைகீழ் மாற்றம் அடைந்தது; ஜ்டானோவ் போன்ற கலையுடன் எவ்விதத் தொடர்புமற்ற உயர் பதவிகளில் உள்ள செல்வாக்கு மிக்க அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. அவரைப் போன்றவர்கள் இலக்கிய, பண்பாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு எழுத்தாளனின் படைப்புக்களில் இருக்க வேண்டிய உருவம், உள்ளடக்கத்தைத் தீர்மானிக்க முனைந்தனர். முதலாவது பேரவையில் எழுத்தாளர்கள் தெரிவித்த அச்சம் மெய்யாக்கப்பட்டது. 'சோசலிச மெய்ம்மையியல்' குருட்டுத் தனமாக மாற்றப்பட்டது. பல்வேறு திறமையற்ற கட்சி அதிகாரிகளின் அடிக்கடி மாறும் முடிவுக்கேற்ப கலைஞர்கள் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் விரும்பும் கலைப்படைப்புகளைத் தீர்மானிக்கும் பணி அதிகாரத்துவ சக்திகளிடம் இருக்கும்போது கலை சுதந்திரமாகச் செயல்படுவது சாத்தியமில்லாது போகும். இப்போக்குகள் இருப்பினும் த்வார்தோவ்ஸ்கி, லேலக்கோவ், மகரெங்கோ சிமனோவ் ஆகியோரின் நல்ல படைப்புக்களும் வெளிவந்தன.

கடந்த காலத்தின் வறிய மாதிரிகள்

'சோசலிச மெய்ம்மை வாதம்' உயிரோட்டமின்றி வறியதாகப் பின்பற்றப்பட்டது. பிரம்மாண்டமான கட்டிடங்கள் எழுப்பப்பட்டாலும் அவற்றில் எழிலும் அழகும் இல்லை. ஓவியமும், சிற்பமும் பத்தொன்பதாம் நூற்றாண்டு மெய்ம்மையியலையே தழுவிய வறிய மாதிரியாகவே அமைந்தன. 'சோசலிச மெய்மையிய'லுக்கு நேரடிப் பொருள் கொண்டது. கலைப் படைப்பாளிக்கும், அதை வரையறை செய்வோனுக்குமிடையே ஓர் இடைக்குறையை ஏற்படுத்தியது. ஒரு கலைஞன் மார்க்சியனாக இருந்தால் அவன் எந்த முறையைக் கையாண்டாலும் அவனுடைய உறுதிப்பாடுகளும், கொள்கைகளும் அவன் படைப்புகளில் எதிரொளிக்கும் என்ற அடிப்படை உண்மையைக் கூடப் புறக்கணித்தனர்.

பல சோவியத் கலைஞர்கள் சிறந்த மார்க்சியர்களாக இருந்தவர்கள். 1918-லேயே மெயர் ஹோல்ட் கட்சியில் சேர்ந்தவர். இசை, நடனம், கலை, சிற்பம் ஆகிய துறைகளில் உருவியலும், இயற்கையியலும் பெரும் தாக்குதலுக்குள்ளாயின. உருவியலின் உட்சாரத்தையும், அது பூர்ஷ்வாக் கலையுடன் கொண்ட தொடர்பையும் சோவியத் ஏடுகள் விமர்சனம் செய்தன. 1936-37 இல் பத்தொன்பது புதிய நாடகங்கள் அரங்கேற்றப்படவில்லை. 1335இல் 34 படங்களும் அடுத்த ஆண்டில் ஐம்பத்தைந்து படங்களும் தயாரிக்கப்படாமல் நிறுத்தப்பட்டன. ஐன்ஸ்டீன், டோஜென்கோ, புடோவ்கின் முதலிய படத் தயாரிப்பாளர்களுக்கெதிராகவும் பிற முக்கிய இசையமைப்பாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எதிராகவும் பிரச்சாரம் தொடங்கப்பட்டன. மெயர்ஹோல்டின் நாடகங்கள் நிறுத்தப்பட்டன; அவர் கைது செய்யப்பட்டார். அபினோஜெனோவ் என்ற நாடகாசிரியர் கட்சியிலிருந்து அற்பமான காரணங்களுக்காக நீக்கப்பட்டார். புல்காகோவின் நாடகங்கள் தடைசெய்யப்பட்டன.

அரசின் போக்கில் நெளிவு சுளிவும் மாற்றங்களும் தோன்றின. இவற்றை 'மாபெரும் சோவியத் கலைக்களஞ்சியத்தின்' மூன்று வெளியீடுகளிலிருந்தும் அறியலாம். பிரெஞ்சு கம்யூனிஸ்ட் ஓவியரான லெஜர் பற்றி 1938-ல் வெளியான முதல் பதிப்பு அவரை "கடந்த 10 ஆண்டு காலமாக கலையில் அதிதீவிர உருவியல் கொள்கையைக் கடைப்பிடித்தவர்' என்று விமர்சித்தது. 1953-ல் 'ஒரு ஓவியர்' என்றது.

இருபதாவது பேரவையும் பின்னரும்

1973 இல் வெளியான கலைக்களஞ்சியத்தின் மூன்றாம் பகுதி லெஜரை 'வானளாவப் புகழ்ந்தது' இப்பொழுது தான் முதல் முறையாக லெஜர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர் என்று குறிப்பிடப்படுகிறார். மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக்கள் 1935லிருந்து 1950-கள் வரை சோவியத்தில் கலையைப் பற்றிய மார்க்சிய அழகியல் கோட்பாடுகள் எவ்வாறு பொறுமையின்மை, அதிதீவிரவாதம், திரிபுகள் மற்றும் தவறான விளக்கங்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன.

இருபதாவது கட்சிப் பேரவையும் அதன்பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் அறுபதுகளில் கலைகள் பிடிகளிலிருந்து விலகியிருக்க வழிசெய்தன. பெரும்பாலான கலைஞர்கள் புத்தாக்கம் பெற்று அவர்தம் படைப்புகள் பதிப்பிக்கப்பட்டன. ஆயின் இதுவும் சிலகாலமே நடைமுறையிலிருந்தது. எதிர்மறைப் போக்குகளை முற்றாகக் களைந்தெறிவதற்குப் பதிலாக அவற்றின் அறிகுறிகள் மட்டுமே நீக்கப்பட்டன. பதவியிலிருந்த அதிகாரத்துவ சக்திகள் தமது பிடிப்பை இறுகவே பிடித்துக் கொண்டிருந்தனர். சோவியத் வரலாற்றில் கலையும் பண்பாடும் சரியாகப் பார்க்கப்பட வேண்டும். மிக முன்னேறிய சோசலிச நாட்டு அறிவுவாதிகள் படைப்புச் சுதந்திரம் பற்றி சுதந்திரமான ஒளிவு மறைவற்ற விவாதம் செய்ய வேண்டும். நல்லெண்ணம், நட்பின் அடிப்படையில்

ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கொண்ட நல்லுறவுக் கட்சிக்கும், அறிவுவாதியர்க்குமிடையே ஏற்பட்டால் கலையில் ஓர் உண்மையான சோசலிச மறுமலர்ச்சி ஏற்பட முடியும் எனக் கொள்ளலாம். கலை, பண்பாட்டுத் துறைகளில் 1920களில் சோவியத்தில் தோன்றிய சோதனைகளும், பின்னர் நிகழ்ந்த சீரழிவுகளும் இதுகாறும் விளக்கப்பட்டன.

பிந்திய நிகழ்வுகள், கலைத்துறைகளில் திறமையற்ற நிர்வாகத்தின் தலையீடுகளாலும் அதிகாரத்துவ முறையாலும் கலைஞர்களுக்கும் அவர்தம் படைப்புகளுக்கும் பெரும் தீங்கு நேர்வதை விளக்குகின்றன. இது கட்சியும் அரசாங்கமும் கலைகளிலிருந்து பிரிந்து விலகி பகையுறவு கொண்டிருக்க வேண்டும் என்று பொருள்படாது. கலைஞனின் மேதைமையை வெளிக்கொணர அரசு நம்பிக்கை, நல்லெண்ணம், புரிதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். கலை, பண்பாட்டுத்துறைகளில் தோன்றும் புதிய பரிமாணங்களை இயங்கியல் முறையில் அணுக வேண்டும்.

4. கலை பற்றிய ஓர் கடிதம் (ஆந்த்ரே தாஸ்ப்ருக்குப் பதில் கூறுமுகமாக)
- லூயி அல்துஸ்ஸர்

புதிய விமர்சனம் என்ற ஏடு எனக்கு உங்கள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது. நீங்கள் எழுப்பியுள்ள கேள்விகள் அனைத்திற்கும் நான் ஒரு வேளை பதில் கூறாதிருந்த போதிலும் நீங்கள் சிந்திக்கும் மார்க்கத்திலேயே சென்று உங்கள் கருத்துகள் மீது எனது குறிப்புகள் சிலவற்றைச் சேர்க்க அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

முதலாவதாக, மனிதநேயம் பற்றி நான் எழுதிய முந்தைய கட்டுரை மிகவும் வி யச் சுருக்கமானது என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். அதாவது, விரிவான பரிசீலனைக்குள் செல்லாமல் சித்தாந்தம் பற்றிய ஒரு 'பரந்த கருத்தொன்றையே' அக்கட்டுரை வழங்குகிறது. அது கலையைப் பற்றிக் குறிப்பிடாததால், கலை என்பது சித்தாந்தங்களில் ஒன்றாகக் குறிப்பிட வேண்டுமா என்ற சிக்கல் எழுவது சாத்தியமாகிறது. அதாவது, தெளிவாகச் சொல்வதானால் கலையும் சித்தாந்தமும் ஒன்றேதானா என்ற கேள்வி எழுவது சாத்தியமாகிறது.

கலைக்கும் சித்தாந்தத்துக்குமுள்ள உறவு பற்றிய பிரச்சினை மிகவும் சிக்கலானதும் கடினமானதுமாகும். ஆயினும், எமது ஆய்வுகள் எத்திசையில் செல்லத் தலைப்பட்டுள்ளன என்பதை என்னால் சொல்லமுடியும். கலையானது சித்தாந்தத்துடன் ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான உறவைக் கொண்டிருந்தாலும் உண்மையான கலையை சித்தாந்தங்களில் ஒன்றாக நான் கருதவில்லை. இவ்வாய்வுரையின் அடிப்படைகள் சிலவற்றைத் தெரிந்து கொள்ள விரும்பினால் 'டால்ஸ்டாயின் விமர்சகராக லெனின்' என்ற தலைப்பில் 'சிந்தனை' (La Pen'see) இதழ் 121, 1965ல் பியர்ரி மாசெ ரெ எழுதிய கட்டுரையைக் கவனமாகப் படிக்குமாறு உங்களைத் தூண்டுகிறேன்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுரை கலைக்கும் அறிவுக்குமுள்ள உறவு பற்றிய முதல் கருத்தொன்றை உங்களுக்கு வழங்குகிறது. கலையானது (நான் இங்கு குறிப்பிடுவது உண்மையான, அசலான கலை. சராசரி அல்லது இரண்டாந்தர படைப்புகளை அல்ல) அறிவு என்று கறாரான பொருளில் சொல்கிறோமே, அத்தகைய அறிவைத் தருவதில்லை. எனவே அது அறிவுக்கு (நவீன காலப் பொருளில்: விஞ்ஞான அறிவுக்கு) பதிலியாக இருக்க முடியாது. ஆயினும் அது நமக்கு எதை வழங்குகிறதோ அது, அறிவுடன் ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான உறவைக் கொண்டுள்ளது. இவ்வுறவு இணைவைக் கொண்டதல்ல, வேற்றுமையைக் கொண்டதாகும். நான் இதை விளக்குகிறேன். மெய்மையைக் குறிப்பிட்டுக் காட்டும் ஒன்றை நாம் 'பார்க்க', 'தரிசிக்க', 'உணரச்' செய்வது தான் கலையின் குறிப்பான தன்மையாகும். நாம் நாவலை எடுத்துக் கொள்வோம். பால்ஸாக்கோ, சல்சனித்சினோ, மெய்மையைக் குறிக்கும் ஒன்றை நாம் பார்க்குமாறு, தரிசிக்குமாறு செய்கிறார்கள். ஆனால் அதை அறிந்து கொள்ளச் செய்வதில்லை.

கலையால் நமக்கு வழங்கப்படுவதையும் விஞ்ஞானத்தால் நமக்கு வழங்கப்படுவதையும் ஒன்று போலக் கருதுவதைத் தவிர்க்க வேண்டுமானால், மேலே கூறப்பட்டுள்ள முதலாவது தற்காலிகமான வரையறுப்பை உருவாக்கும் சொற்களை அப்படியே எடுத்துக் கொள்வது இன்றியமையாதது. கலை நம்மை எதைப் பார்க்கச் செய்கிறது? 'பார்த்தல்', 'தரிசித்தல்', 'உணர்தல்' என்ற (இதுவோ அறிந்து கொள்ள உதவுவதல்ல) வடிவில் நமக்கு எதை வழங்குகிறது? கலையின் பிறப்பிடமான சித்தாந்தத்தைத்தான். கலை சித்தாந்தத்தில் குளித்தெழுகிறது. அதிலிருந்து கலை என்ற வகையில் தன்னைத்தானே விலக்கிக் கொள்கிறது. அதைக் குறிப்பால் உணர்த்துகிறது. லெனினின் பரிசீலனைகளை விரிவுபடுத்தி டால்ஸ்டாய்

பற்றிய ஆய்வில் மா ரெ மிகத் தெளிவாகக் காட்டுவது இதுதான். பால்ஸாக்கும், சல்செனிதசினும் தமது படைப்பு எச்சித்தாந்தத்தைக் குறிப்பிட்டு நிற்கின்றனவோ அச்சித்தாந்தம் பற்றிய ஒரு 'பார்வை'யை நமக்குத் தருகிறார்கள். இச்சித்தாந்தம் இவர்களது படைப்பிற்கு இடைவிடாது ஊட்டம் தருகிற ஒன்று. இப்பார்வையானது, அவர்களது நாவல்களைத் தோற்றுவித்த சித்தாந்தத்திலிருந்தே அவை ஏற்படுத்திக் கொண்ட பின்வாங்குதலை ஒரு உள் விலகலை முன்னவசியமாகக் கொள்கிறது. அவை எந்தச் சித்தாந்தத்தின் பிடிப்பில் இருக்கின்றனவோ, அதை ஒரு வகையில் உள்ளிருந்தே, ஒரு உள்விலகலைக் கொண்டே தம்மைத் தரிசிக்க வைக்கின்றன. (ஆனால் அறிந்து கொள்ள வைப்பதில்லை).

இவ்வேறுபாடுகள், ஒரே பொருளின் வெவ்வேறு சாயல்கள் அல்ல. இவை திட்டவட்டமான வேறுபாடுகள். இவை கோட்பாட்டளவில் பல்வேறு பிரச்னைகளைத் தீர்வு செய்ய நமக்கு உதவ வேண்டும்.

முதலாவது, கலைக்கும் விஞ்ஞானத்துக்குமுள்ள 'உறவு' பற்றிய பிரச்சினை. பால்சாக்கோ, சல்சனித்சனோ அவர்கள் விவரிக்கிற உலகு பற்றிய அறிவு எதையும் நமக்கு வழங்குவதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் அவ்வுலகின் சித்தாந்தம் என்ற மெய்மையை நாம் 'பார்க்கவும்', 'தரிசிக்கவும்', 'உணரவும்' செய்வதுதான். நாம் சித்தாந்தம் பற்றிப் பேசும்போது, மனிதச் செயல் அனைத்திலும் சித்தாந்தம் உட்புகுந்து விடுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அது மானிட வாழ்வின் 'வாழ்ந்து பெற்ற' அனுபவத்துடனேயே (lived experience) ஒன்றுபட்டு நிற்பது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவேதான், பெரும் நாவல்களில் நாம் எந்த வடிவத்தில் சித்தாந்தத்தை பார்க்குமாறு செய்யப்படுகிறோமோ அவ்வடிவம், தனக்கு உள்ளடக்கமாகக் கொள்கிறது. இந்த 'வாழ்ந்து பெற்ற அனுபவம் கறைபடாத ஓர் மெய்மையால்

தோற்றுவிக்கப்பட்டு நமக்கு வழங்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக அது மெய்மையுடன் சித்தாந்தம் ஒரு பிரத்யேகமான உறவு கொள்கையில் இயல்பாகவே 'வாழ்ந்து பெற்ற' அனுபவம். இது ஒரு முக்கியமான குறிப்பு. ஏனெனில், கலை தனக்கே உரிய, தனித்தன்மை பொருந்திய ஒரு மெய்மையுடன் உறவு கொண்டிருக்கவில்லை; மெய்மையில் அப்படி ஒரு பிரத்யேகப் பரப்பு மீது ஏகபோக உரிமை கலைக்கு இருப்பது போலவும், ('கலையினால் அறிவு மனிதத் தன்மை பெறுகிறது' என்றும் 'கலையின் சுட்டுப் பொருள் தனிமனிதன்' என்றும் எழுதுவது மூலம் நீங்கள் உணர்த்த முனைவது இதுதான்) விஞ்ஞானம் மெய்மையின் வேறு ஒரு பிரதேசத்தின் மீது ஆட்சி செலுத்துவது போலவும் கருதப்படுவதில் ஏதும் உண்மை இல்லை. (அதாவது, 'வாழ்ந்து பெறும் அனுபவம்', 'தனிமனிதன்' ஆகியவற்றிற்கு எதிராக கட்டமைப்புகளின் கருத்துச் சுருக்கத்தை நிறுத்தும் செயல் இது) என்பதை நமக்கு இக்குறிப்பு அறிவுறுத்துகிறது. சித்தாந்தமும், விஞ்ஞானத்தால் பரிசீலிக்கப்படும் பொருள்தான். 'வாழ்ந்து பெற்ற அனுபவமும்', 'தனிமனிதனும்' கூட விஞ்ஞானப் பரிசீலனைக்குட்பட்ட பொருட்களே. கலைக்கும், விஞ்ஞானத்துக்கும் உள்ள உண்மையான வேறுபாடு. ஒரே பொருளை முற்றிலும் வேறுபடும் வழிகளில், தமக்கே உரிய திட்டவட்டமான வடிவத்தில் நமக்கு அவை வழங்குகின்றனவே, அத்திட்டவட்டமான வடிவத்திலேயே பொதிந்துள்ளது. கலை 'பார்த்தல்', 'தரிசித்தல்', அல்லது 'உணர்தல்' என்ற வடிவத்திலும், விஞ்ஞானம் 'அறிவு' என்ற வடிவத்திலும் (கறாரான பொருளில் சொல்வதானால் கருத்தாக்கங்கள் வழியாகவும்) நமக்கு அப்பொருளை வழங்குகின்றன.

இதையே வேறு வகையிலும் விளக்கலாம். சல்சனித்சின், 'தனி நபர் வழிபாடு' இருந்த காலத்தில் 'வாழ்ந்து பெற்ற அனுபவம்' (இது மேலே வரையறுக்கப்பட்ட பொருளில் இங்கு சொல்லப்படுகிறது.) அதன் பின் விளைவுகள் ஆகியவற்றை

'நாம் பார்க்குமாறு செய்கிறார்' என்றால், அவர் அவற்றைப் பற்றிய ஒரு அறிவு எதையும் தருவதில்லை. இவ்விடத்தில் அறிவு எனப்படுவது சல்சனித்சினது நாவல்கள் விவாதிக்கிற வாழ்ந்து பெற்ற அனுபவத்தை' அடிப்படையில் உருவாக்குகிற சிக்கலான செயலியக்கம் பற்றிய கருத்தாக்க அறிவாக இருக்க வேண்டும். இங்கு நான் மீண்டும் ஸ்பினோஸாவின் மொழியில் கூறுவதென்றால் கலையானது 'ஆதாரங்களைத் தவிர்த்த முடிவுகளை' நாம் 'பார்க்குமாறு' செய்கிறது. அறிவோ 'ஆதாரங்களிலிருந்து 'முடிவுகளை' உருவாக்கும் செயலியக்கத்தினுள் நம்மை ஆழமாக ஊடுருவிச் செல்ல வைக்கிறது. இது ஒரு முக்கியமான வேறுபாடு. ஏனெனில் 'தனி நபர் வழிபாடு' பற்றிய ஒரு நாவல் என்னதான் ஆழமானதாக இருந்தாலும், அத்தனி நபர் வழிபாட்டு முறையினால் வாழ்க்கையில் அனுபவித்த விளைவுகளின்பால் கவனத்தைத் திருப்ப முடியுமே தவிர, அதுபற்றிய ஒரு புரிந்து கொள்ளலை வழங்க முடியாது. 'தனி நபர் வழிபாடு' என்ற பிரச்சினையைப் பரிசீலனைப் பட்டியலில் அது சேர்க்கலாமேயன்றி இவ்விளைவுகளைச் சரிசெய்ய சாத்தியமான வழிமுறையை அதனால் வரையறுத்துக் கூற முடியாது.

இதேபோல இந்த அடிப்படைக் கோட்பாடுகள் ஒரு வேளை, நீங்கள் முன் வைக்கும் மற்றொரு கேள்விக்கு விடைதரக் கூடிய திசையைச் சுட்டிக் காட்ட நமக்கு உதவலாம்: இக்கேள்வி என்னவென்றால் பால்ஸாக் தமது தனிப்பட்ட அரசியல் விருப்புகளையும் மீறி, முதலாளியச் சமுதாயத்தில் 'வாழ்ந்து பெற்ற அனுபவத்தை' ஒரு விமர்சன வடிவத்தில் 'நம்மைப் பார்க்க வைப்பது' எவ்வாறு? 'பால்ஸாக்கின் கலையின் தர்க்கம் ஒரு நாவலாசிரியராக அவர் தமது படைப்பை உருவாக்கும் போது, அடிப்படையில் அவரது அரசியல் கருத்தாக்கங்கள் சிலவற்றைக் கைவிடும் நிர்பந்தத்துக்கு அவரை உள்ளாக்கியது' என்று நீங்கள் சொல்கிறீர்களே, இத்தகையதொரு கருத்தை நான்

நம்புவதில்லை. மாறாக, பால்ஸாக் தமது அரசியல் நிலைபாடுகளை ஒருபோதும் கைவிடவில்லை என்பதை நாம் அறிவோம். நாம் மேலும் சிலவற்றையும் அறிவோம்: அவரது பிரத்யேகமான, பிற்போக்கு அரசியல் நிலைபாடுகளே அவரது படைப்பின் உள்ளடக்கத்தை உருவாக்குவதில் ஒரு தீர்மானகரமான பங்கு வகித்தன. இது நிச்சயமாக ஒரு புதிர்தான். ஆனால் இதுதான் உண்மை. இதுபோல் ஏராளமான உதாரணங்களை வரலாறு வழங்கியுள்ளதை மார்க்ஸ் நமது கவனத்திற்குக் கொணர்ந்துள்ளார். (பால்ஸாக் பற்றிய செய்திகளுக்கு 'ஐரோப்பா' ஏட்டின் 1965 சிறப்பிதழில் ஆர்ஃபயோல் எழுதிய கட்டுரையை நீங்கள் பார்க்க வேண்டும்) இவை, சித்தாந்தங்களின் இயங்கியலில், மிகச் சாதாரணமாகக் காணப்படும் பொருள் சிதைவை எடுத்துக் காட்டும் உதாரணங்கள். டால்ஸ்டாய் பற்றி லெனின் கூறுவதைக் கவனியுங்கள் (மாசெ ரெயின் கட்டுரையில் காணப்படுவது இது): டால்ஸ்டாயின் தனிப்பட்ட சித்தாந்த நிலைபாடு அவரது படைப்பின் உள்ளடக்கத்தை உருவாக்குவதில் ஆழமாகப் புதைந்துள்ள காரணங்களில் ஒருகூறாக இருக்கிறது. பால்ஸாக் டால்ஸ்டாய் ஆகியோரின் படைப்பின் உள்ளடக்கம் அவர்களது அரசியல் சித்தாந்தத்திலிருந்து 'விலகி நிற்கிறது', அது ஏதோ ஒரு வகையில் அச்சித்தாந்தத்தை நாம் 'வெளியிலிருந்து பார்க்குமாறு' செய்கிறது. அந்த சித்தாந்தத்துக்குள்ளேயே இருக்கிற 'உள்விலகல்' மூலமாக அதை நாம் 'தரிசிக்கச் செய்கிறது' என்ற உண்மையானது, அச்சித்தாந்தம் இருப்பதை முன்னவசியமாகக் கொண்டது. நாவலாசிரியர்கள் என்ற முறையில் அவர்களது கலையானது ஏற்படுத்தும் விளைவு, அவர்களது சித்தாந்தத்துக்குள்ளேயே அது ஏற்படுத்தும் இவ்விலகலாகும் என்றும், அது நம்மை அச்சித்தாந்தத்தைப் 'பார்க்க' வைக்கிறது என்றும் கூறுவது நிச்சயமாக சாத்தியமான ஒன்று. ஆனால், நீங்கள் கூறுவது போல, 'கலைக்கென்று அதற்கேயுரிய தர்க்கம் உண்டு', அது

'பால்ஸாக்கை தமது அரசியல் கருத்தாக்கங்களைக் கைவிடுமாறு செய்தது' என்று கூறுவதற்கான சாத்தியப்பாடே இல்லை. மாறாக பால்ஸாக் அவரது அரசியல் கருத்தாக்கங்களைத் தக்க வைத்துக் கொண்டதனால்தான் அவரால் தமது படைப்பை உருவாக்க முடிந்தது. அவர் தமது அரசியல் சித்தாந்தத்தை விடாது பிடித்துக் கொண்டிருந்ததால் தான், நமக்கு அச்சித்தாந்தம் பற்றிய ஒரு விமர்சனா ரீதியான 'பார்வை'யைத் தருகிற இந்த 'உள்விலகலை' அவரால் தமது படைப்பினுள் உருவாக்க முடிந்தது.

கலையின் இருப்பும் அதன் குறிப்பிட்ட தன்மையும் நம்மிடம் எழுப்புகிற கேள்விகள் பெரும்பாலானவற்றிற்குப் பதில் சொல்ல வேண்டுமானால், ஒரு கலைப்படைப்பின் 'அழகியல் விளைவை' (aesthetic effect) உருவாக்கும் இயக்கப் போக்குகள் பற்றிய ஒரு நிறைவான (விஞ்ஞான) அறிவை உருவாக்குமாறு நாம் நிர்பந்திக்கப்படுகிறோம். வேறு சொற்களில் கூறுவதானால், கலைக்கும் அறிவுக்குமிடையே உள்ள உறவு பற்றிய பிரச்சினைக்குப் பதில் கூற நாம் கலை பற்றிய அறிவை உருவாக்க வேண்டும்.

கலையின் இருப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பது (அது அரசியல் வகைப்பட்ட அங்கீகாரமாக இருந்தாலும்) மட்டுமே, கலை பற்றிய அறிவாகாது. ஜுலியட் க்யூரியுடையது என்று சொல்லப்படும் வாக்கியத்தைப் பற்றி சில சொற்கள் கூற விரும்புகிறேன். இவ்வாக்கியத்தில் 'அழகியல் படைப்பு' 'விஞ்ஞானப் படைப்பு' என்ற பதப்பிரயோகங்கள் உள்ளன. இப்பதப்பிரயோகங்கள் மிக சகஜமான புழக்கத்தில் உள்ளவைதான். ஆனால் இவை கைவிடப்பட வேண்டும் என்பதும், இவற்றுக்குப் பதிலாக வேறொன்று பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் என் கருத்து. அப்போது தான் கலை பற்றிய அறிவு என்ற பிரச்சினையைச் சரியான முறையில் எழுப்ப முடியும். கலைஞனும், கலாரசிகனும் 'படைப்பு' போன்ற அவர்களுக்கே உரிய

மொழியில் தம்மை 'இயல்பான முறையில்' வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். அது ஒரு 'தன்னியல்பான' மொழி. ஆனால் மார்க்ஸிடமிருந்தும் லெனினிடமிருந்தும் நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், ஒவ்வொரு 'தன்னியல்பான' மொழியும் ஒரு சித்தாந்த மொழியாகும். ஒரு சித்தாந்தத்தின் வாகனமாகும். இங்கு நாம் குறிப்பிடுவது கலையின் சித்தாந்தத்தை, அழகுணர்வு விளைவுகளை உருவாக்கும் செயலின் சித்தாந்தத்தை. எல்லா அறிவையும் போலவே, கலை பற்றிய அறிவும் சித்தாந்தரீதியான தன்னியல்பான மொழியுடன் துவக்கத்திலேயே ஒரு முறிவை ஏற்படுத்திக் கொள்வதையும், அதற்குப் பதிலாக விஞ்ஞானக் கருத்தாக்கங்களின் தொகுப்பு ஒன்றை உருவாக்குவதையும் முன்னவசியமாகக் கொள்கிறது. கலை பற்றிய அறிவுக்கான ஒரு கொத்தளம் கட்டுவதை மேற்கொள்வதற்கு சித்தாந்தத்துடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய இம்முறிவைப் பற்றிய விழிப்புணர்வு கொள்வது இன்றியமையாதது. நான் இப்போது நம்புவது என்னவென்றால், கலை பற்றிய ஒரு உண்மையான அறிவைப் பெற, கலைப் படைப்பின் குறிப்பிட்ட தன்மையினுள் மேலும் ஆழமாகச் சென்று பார்க்க, 'அழகுணர்வு விளைவை' உருவாக்கும் செயலியக்கங்களை அறிந்து கொள்ள நமக்கு உள்ள ஒரே வழி 'மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்' மீது நீண்ட நேரம் செலவிடவும், மிகப்பெரும் கவனம் செலுத்துவமேயன்றி, 'வேறேதோ ஒன்றுக்கு தாவுவதற்கு அவசரம் காட்டுவதல்ல. ஏனெனில் நாம் மிக விரைவாக 'வேறேதோ ஒன்றி'ற்குத் தாவினால், கலை பற்றிய அறிவைப் பெறமாட்டோம், ஆனால் கலை பற்றிய ஓர் சித்தாந்தத்தைப் பெறுவோம்: உதாரணமாக கலைக்கும் 'மானிடத்து'க்குமிடையே உள்ள உறவுகள் பற்றியும் கலைப் 'படைப்பு' முதலியவை பற்றியும் நீங்கள் சொல்கிறீர்களே அவற்றால் தூண்டுதல் பெற்ற உள்ளுறை மனிதநேய சித்தாந்தத்தையே பெறுவோம்.

அழகுணர்வின் இயல்பான இயக்கம் பற்றிய சித்தாந்தக் கருத்தாக்கங்களல்லாத, தமது சுட்டுப் பொருளுக்குப் பொருத்தமான விஞ்ஞானக் கருத்தாக்கங்களில் – அவசியம் கருதி இவை புதிய கருத்தாக்கங்களாகவே இருக்கும் - பிரச்சினையைச் சரியான முறையில் எழுப்புவதற்காக நாம் 'மார்க்சியத்தின் அடிப்படைக் கொள்கைகள்' மீது கவனத்தைத் திருப்ப வேண்டுமென்றால் (இது மெதுவான, கடும் உழைப்பு நிறைந்த பணி) அது கலையை மௌனமாக ஒதுக்கி விடுவதற்கோ அல்லது கலையை விஞ்ஞானத்துக்குப் பலியிடுவதற்கோ அல்ல; கலையை அறிந்து கொள்வதற்கும் அதற்குரியதை அதற்குச் செலுத்துவதற்குமேயன்றி வேறல்ல.

ஏப்ரல், 1966

5. காரல் மார்க்ஸின் 'மார்க்ஸீயம்'

– சிவராமன்

(T.B. BOTTOMORE எழுதிய "Marx : Sociologist or Marxist" என்ற கட்டுரையை ஒட்டி எழுதியது.

மார்க்ஸின் சிந்தனைகளை சமூகவியல் கண்ணோட்டத்தில் காண்பதன் மூலம் மார்க்சியத்தின் ஒரு முக்கியமான அம்சத்தை அறிந்து கொள்ள இயலும். மார்க்ஸின் சிந்தனைகள் மீது மீண்டும் திரும்பியுள்ள கவனம் குறிப்பிடத்தக்கது. இதன் காரணம் சமூகவியல் சிந்தனையில் மார்க்ஸின் பாதிப்பும், சமூகவியலில் நடந்துள்ள புதிய ஆய்வுகளும் தான். பல பொருளாதார விமர்சனங்களும், அரசியல் சிந்தனைகளும் செய்துள்ளதைவிட சமூகவியல் ஆய்வுகள் மார்க்ஸியத்தை வளப்படுத்தியுள்ளன.

சமூகவியல் ஆய்வுகளில் மார்க்ஸீய சிந்தனைகள் பாதிப்பு அதிகமாகக் காணப்படுவதன் முக்கியக் காரணம் சமூகவியலில் ஆட்சி செலுத்தி வருகின்ற Functionalism என்ற நிலைப்பாட்டை, அணுகுமுறையை மார்க்ஸீயம் நேரிடையாக எதிர்த்ததுதான். Functionalism என்ற கோட்பாடு சமூகக் கட்டமைப்பை நிரந்தரமானதாக, ஒழுங்கான அமைப்பாகக் காணும்போது, மார்க்ஸீயம் சமூக அமைப்பை இடைவிடாப் போராட்டத்தின் விளைவாகக் காண்கிறது. மதிப்புகளும், ஒழுக்கமும் (Values, Morals) சமூக அமைப்பை கட்டிக்காத்து வருவதை Functionalism விளக்கும் மார்க்ஸீயமோ அம்மதிப்புக்களும், நெறிமுறைகளும் எவ்வாறு தம்முள்ளேயே முரண்படுகின்றன என்று வர்க்க கண்கொண்டு பார்க்கும் சமூக அமைப்பை கட்டிக்காப்பதில் வன்முறையின் (Force) பங்கை சுட்டிக் காட்டும்.

சுருக்கமாக: சமூக அமைப்பை ஒரு நிலை அமைதியாகப் (Equilibrium) பார்க்கிறது. (Functionalism) சமூக அமைப்பை ஒரு தொடர் போராட்டமாக சமூக மாற்றத்தை (conflict) அப்போராட்டங்களில் விளைவாகக் காண்கிறது மார்க்ஸீயம்.

சமூக அமைப்பில் போராட்டத்தின் பங்கை மார்க்ஸ் தவிர வேறு சிலரும் விளக்கியுள்ளனர், ஆனால் அவர்கள் எல்லோருமே மார்க்ஸின் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டே பிரச்சனைகளை அணுகியுள்ளனர். மார்க்ஸின் பின்வந்த எல்லா சமூகவியல் சிந்தனையாளர்களும் மார்க்ஸின் ஆவியுடன் வாதாடியவர்களே சமூக அமைப்பின் மையமாக போராட்டங்களைக் கருதிய மார்க்ஸ் சமூக அமைப்பில் உள்ள ஒழுங்கு, ஒற்றுமை பற்றியும் கூறியுள்ளார். வர்க்கங்களுக்குள்ளே ஒற்றுமையும் வர்க்கங்களுக்கிடையே போராட்டமும் செயல்படுவதை விளக்கினார். மேலும் வர்க்கபேத மற்ற சமுதாயம் அமையும் போது இப்போராட்டங்களும் முற்றுப் பெறும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

மார்க்ஸின் கருத்துக்களை - சமூகம் பற்றியதும், வர்க்கப்போராட்டம் பற்றியதும் – சரித்திர பரமானதாகவோ அல்லது விஞ்ஞான விதி முறையாகவோ கொள்ளலாம். மார்க்ஸ் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தை ஆராய்ந்து அக்கால கட்டத்தைப் பற்றிய முடிவுகளைக் கூறியதாகக் கொள்வது எவ்வளவு சாத்தியமோ அங்கனமே அவர் உலகம் தழுவிய விதி முறையைக் கண்டார் என்பதும்.

மார்க்ஸின் சிந்தனைகளின் இவ்விரண்டுமே – சரித்திர விளக்க முறையும் விஞ்ஞான அணுகுமுறையும் – இணைந்து காணப்படுகின்றன. இதன் காரணமாகவே மார்க்ஸின் பின்வந்த மார்க்ஸிய வாதிகள் இவ்விரண்டின் ஒன்றைச் சார்ந்தும், மற்றதைத் தள்ளியும் வந்துள்ளனர்.

உதாரணமாக: மார்க்ஸின் விஞ்ஞானப் பார்வையை ஏங்கெல்சும் மார்க்ஸ் அட்லரும் (Engels, Max Adler) சரித்திரப் பார்வையை லூகாக்ஸ், மார்க்யூஸ் (Lukacs, Marcuse) போன்றோரும் சார்ந்திருப்பது

இங்கு ஒரு வி யம் கவனத்தில் படுகிறது; மார்க்ஸிய வாதிகளின் ஆய்வுகளில் நேரடி விஞ்ஞான ஆய்வுகள் (Empirical Studies) குறைந்தும், சரித்திரப் பார்வையுடனான

ஆய்வுகள் அதிகமாகவும் காணப்படுகிறது. சரித்திரப் பார்வையுடனான ஆய்வுகளையும் மார்க்ஸீய வாதிகளல்லாதவரே அதிகம் செய்துள்ளனர். மேலும் மார்க்சியவாதிகள் மார்க்ஸ் எப்பிரச்னையை ஆழமாக ஆராய்ந்து துளியும் சந்தேகத்திற்கு இடமின்றி எழுதினாரோ அதையே தாங்களும் ஆராய்ந்தனர். உதாரணம்: பூர்ஷ்வா சமுதாய அமைப்பு தோன்றக் காரணமாக இருந்த நிலப்பிரபுத்துவ அமைப்பின் முரண்பாடுகள், நிலப்பிரபுத்துவ அமைப்பு மாறி முதலாளித்துவ அமைப்பு தோன்றிய கால கட்டம் முதலியன இன்றும் கூட மார்க்ஸிய வாதிகளால் அதிகம் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது. மார்க்ஸ் மேலோட்டமாகக் கூறிச் சென்ற ஆசிய சமுதாய அமைப்பு முறையைப் பற்றிய (Asianic Societies) ஆய்வுகள் செய்யப்படாமலேயே இருக்கின்றன. வர்க்கங்கள், மேல் தட்டு, (Elites) சித்தாந்தங்கள், அரசியல் கட்சிகள் இயக்கங்கள் இவை பற்றிய ஆய்வுகள் செய்துள்ளவர்கள் மார்க்ஸியவாதி களல்லாதவரே. குறிப்பாக சோம்பாட் (Sombart) வெபர் (Weber) மி ல்ஸ் (Michels) மான்ஹைம் (Manheim) வெப்லன் (Vebler) ரைட் மில்ஸ் (Wright Mills) முதலியவர்களைச் சொல்லலாம்.

வெபர் (Weber) மார்க்ஸின் பொதுவான கோட்பாடான சித்தாந்தங்களுக்கும், சமூக - பொருளாதார அமைப்புக்கும் உள்ள உறவை ஆழமாக ஆராய்ந்தார். அந்த அளவுக்கு சித்தாந்தங்களுக்கும், பொருளாதார அமைப்புக்கும் உள்ள உறவை யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. மார்க்ஸை ஒரு சிறந்த சமூக விஞ்ஞானியாகக் காணும் அட்லர் கூட மார்க்ஸின் முறையை மற்றும் அணுகுமுறை பற்றித்தான் அதிகம் எழுதியுள்ளார். மார்க்ஸின் அணுகுமுறையை உபயோகித்துத் தன் முன் இருந்த பிரச்சனைகளை ஆராயவில்லை. அதே போல ஹெகலிய சிந்தனை வழிவந்த மார்க்சை மதித்த மார்க்ஸீய வாதிகள் சிந்தனை வழிவந்த மார்க்சை மதித்த மார்க்ஸீய வாதிகள் கூட கூர்மையற்ற கற்பனைத் துறையான இலக்கிய விமர்சனத்தின் பால் தம்

கவனத்தைத் திருப்பினார்கள் (உதாரணம்: லூகாக்ஸ்) அல்லது மார்க்ஸின் முறைமை அல்லது அணுகுமுறை பற்றி எழுதினார்கள் (உதாரணம்: சாத்ரே)

மார்க்சிய வாதிகள் என்று தங்களைக் கூறிக் கொண்டவர்களின் சாதனைக்கும், மார்க்ஸிய கருத்துக்களின் பாதிப்பால் பல பிரச்னைகளை ஆராய்ந்தவர்களின் சாதனைகளுக்குமிடையேயான வித்தியாசங்கள் மார்க்சைக் குறைப்பதாகாது. மார்க்ஸிடம் இருந்த தீவிரம், உண்மை பற்றிய தேடல், விஞ்ஞான அணுகுமுறை அவர் வழிவந்த பலரிடம் இல்லாதது ஒரு பெரிய குறை, கவனத்தில் கொள்ள வேண்டிய வி யம் மார்க்ஸின் 'மார்க்ஸீயம்' ஒரு வரட்டுக் கொள்கையாக இருந்ததில்லை. அவர் தம் கருத்துக்களை பலமுறை திருத்தி, மாற்றி அமைத்துள்ளார். 'மூலதனத்தில்' அவர் செய்த பல திருத்தங்கள், மாற்றங்கள் அவரது உண்மை பற்றிய தீவிரத்திற்குச் சான்று பகர்கின்றன. தான் ஒரு முழுமையான, எக்காலத்திற்கும் பொருந்தும் அரசியல் கொள்கையைக் கண்டுபிடித்து விட்டதாக மார்க்ஸ் கூறியதில்லை. அவர் 1843 செப்டம்பரில் Ruge என்பவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதை மிகவும் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் அவர் தன்னை ஒரு மார்க்ஸீய வாதியாகச் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை என்றும் கூறுவதுண்டு. அதாவது தன் பெயரை மந்திரம் போலப் பிரயோகித்தவர்களை, போலிகளைக் கண்டித்ததாகக் கொள்ளலாம்.

ஒரு சில இடங்களில் மார்க்ஸ் மற்ற பொதுவுடமை வாதிகளை விட கொள்கைப் பிடிப்பும், வெறியும் காட்டுவதன் காரணம் அவர் தன் அளவு விஞ்ஞானப் பார்வையும், உண்மை பற்றிய வேட்கையும் இல்லாதவர்களிடம் கொண்ட கோபமே மிகக் கீழ் மட்டத்திலிருந்து சிலர் வாதாடும் போது எரிச்சலே அது என்று கொள்ள வேண்டும்.

மார்க்ஸ் மிகவும் கோபா வேசம் கொண்டு தாக்கிய ப்ரௌதான் (Proudhan) மற்றும் பகுனின் (Bakunin)

அத்தகையவர்களே. ப்ரௌதான் ஒரு கற்பனையோடிய சிந்தனையாளர் (Speculative Thinker) பகுனின் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட, குழப்பம் நிறைந்த புரட்சிவாதி. இருவருமே விஞ்ஞானப் பார்வையுடன் சமூக ஆய்வுகள் செய்ததில்லை. இதன் பொருட்டே மார்க்ஸ் அவர்களை எள்ளி நகையாடுகிறர், கடுமையாகத் தாக்குகிறார்.

மார்க்ஸிடமும், மார்க்ஸீயவாதிகளிடமும் ஒரு பெரிய குறையாகச் சொல்லப்படுவது அவர்கள் தங்கள் கனவுக்கு விஞ்ஞானப் போர்வை போர்த்துகிறார்கள் என்பதே. மார்க்ஸைப் பொருத்த அளவில் இது தவறான கருத்து ஏனெனில் அவர் தன் குறிக்கோளாகச் சொன்னது தனது கால கட்டத்தின் தவிப்புக்களை அம்பலப்படுத்துவதும், புரியவைப்பதும் தான்.

இங்கு ஒரு வி யம் கவனத்தில் கொள்ள வேண்டும் மார்க்ஸின் வாழ்க்கையில் பொதுவுடைமை பற்றி அவருக்கு இருந்த கொள்கைப் பிடிப்பும், சமூக விஞ்ஞானம் பற்றி அவருக்கு இருந்த ஆர்வமும் இணைந்தே சென்றன. சிறு வயதிலேயே பொதுவுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட மார்க்ஸ், உழைக்கும் வர்க்கத்தின் நிலை பற்றிப் பெரிதும் கவலை கொண்டிருந்தார். அவரது சமூக விஞ்ஞான ஆய்வுகள் அவர் கொண்டிருந்த பொதுவுடமைக் கருத்துக்களால், கொள்கையால் வளப்படுத்தப்பட்டது என்பது சரியே. 1840-ல் இருந்தே இவ்விரு வேட்கைகளும் மார்க்ஸின் வாழ்க்கையில் கைகோர்த்தே சென்றன. அவரது கொள்கைப் பிடிப்பு அவரது விஞ்ஞான ஆய்வுகளுக்கு தூண்டு கோலாக அமைந்தது. மிகப்பெரிய சமூக விஞ்ஞானிகளாகக் கூறப்படும் பலரிடம் இது போன்ற கொள்கைப் பிடிப்பைக் காணலாம். சமூகப் பிரச்னைகள் குறித்து திடமான கொள்கைகளைப் பலர் கொண்டிருந்தனர். உதாரணமாக (வெபர்), பாரடோ, (Pareto), தர்க்கைம் (Durkheim) முதலியவர்களைக் கூறலாம். மார்க்ஸின் கொள்கைப்பிடிப்பு அவர் அக்கொள்கைகளுக்கு மாறான உண்மைகளைக் காண என்றுமே தடையாக இருந்ததில்லை.

முதலாம் அகிலம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்களை மாற்றிக் கொண்டார். பாரீஸ் கம்யூன் பற்றி அவர் எழுதியது அவர் நேர்மைக்குச் சான்று பகரும். தன்னுடைய எல்லா எழுத்துக்களிலும் மார்க்ஸ் இந்த நேர்மையைக் கடைப்பிடித்தார். ஒருவரது கருத்துக்களை புறக்கணிக்கும் போது கூட "இவர் பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதிநிதி, ஆகவே இவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்ற நிலைப்பாட்டை எடுத்தது இல்லை. இது இன்றைய மார்க்சீயவாதிகளிடம் காண்பது அரிது. விஞ்ஞானரீதியில் மற்றவர்களுடைய வாதங்களை அலசி ஆராய்ந்து பின்னர் அவை எவ்விதம் பூர்ஷ்வா வர்க்க கருத்துக்கள் என்று விளக்கினார் மார்க்ஸ்.

மார்க்ஸ் வாழ்ந்த காலகட்டத்தில் சமூக உறவு முறைகளைப் பற்றிய அறிவு உழைக்கும் வர்க்கத்திடையே பரப்ப வேண்டியது அவசியமாக இருந்தது. அக்காரியத்தை அவர் செம்மையாகச் செய்தார்.

இன்று, ஓரளவு சமுதாய அமைப்புப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள சூழலில், வர்க்கங்களில் தோன்றியுள்ள மாற்றங்கள் பற்றிப் புதிய ஆய்வுகள் அவசியமாகிறது. இங்கு தான் மார்க்சும் மார்க்ஸீய வாதிகளும் வேறுபடுகின்றனர்.

உதாரணமாக, புதிய வர்க்கங்கள் பற்றி நல்ல முறையில் ஒரு ஆய்வு கூட சமீபகாலங்களில் மார்க்சீயவாதிகளால் செய்யப்படவில்லை. மார்க்ஸீய வாதிகளல்லாத இருவர் எழுதியுள்ள நூல்கள் மார்க்ஸீயத்தின் உள்ளார்ந்த ஆற்றலுக்குச் சான்றாக இருக்கின்றன. Ossowski–ன் Class Structure in The Social Consciousness என்ற நூலும் E.P. Thompson–ன் The Making of The English Working Class என்ற நூலும் மார்க்ஸின் கோட்பாடுகள் இன்றும் நம்முடைய தேடல்களுக்கு வழிகாட்ட முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

6. புரட்சி காலத்து இலக்கியம்

- லூசன்
தமிழில்: கோ. கேதாரநாதன்

இன்று இங்கு 'புரட்சிக் காலத்து இலக்கியம், என்னும் பொருளில் சிற்றுரை ஆற்ற வந்துள்ளேன். இந்தக் கல்லூரி என்னைப் பல தடவைகள் உரையாற்ற அழைத்திருந்த போதிலும் நானே இதனை ஒத்திப் போட்டும் வந்துள்ளேன். எதற்காக? நான் சில சிறுகதைகளை எழுதியிருக்கிறேன் என்றும் – இலக்கியம் பற்றி என்னிடத்திலிருந்து எதாவது கேட்க விரும்பியுமே அழைத்ததாக நம்புகிறேன். உண்மையில் நான் அத்தகைய சிறுகதை யாசிரியனுமல்ல. அதைப்பற்றிய விசேட அறிவும் எனக்கில்லை. நான் முதலாவதாக சிரத்தையோடு கற்றுக்கொண்டது சுரங்கத் தொழில் பற்றியேயாகும். எனவே இலக்கியத்தைவிட கரிச்சுரங்கம் அகழ் தலைப்பற்றிய சிறந்த உரையை என்னால் வழங்க முடியும் என நான் கருதுகிறேன். உண்மையில் இலக்கிய விருப்பின் காரணமாகத்தான் நான் கணிசமான அளவு வாசித்துள்ளேன். ஆனால் உங்களுக்குப் பயன்படத்தக்கதான எதனையும் நான் அந்த வாசிப்பிலிருந்து கற்றுக் கொள்ளவில்லை. அண்மைக் காலங்களில் பீக்கிங் நகரில் எனது அனுபவங்கள் நான் வளர்ந்து வந்த பழைய இலக்கிய கோட்பாடுகளில் மீதான எனது நம்பிக்கையை படிப்படியாக சிதைத்தே வந்துள்ளன. இது எப்போதெனில் மாணவர்கள் சுடப்பட்டு இறந்தபோதும் கடுமையான தணிக்கைகள் அமுலிலிருந்த போதும் இலக்கியத்தைப் பற்றிப் பேசுபவர்கள் மிகவும் பலவீனமான – எதற்கும் லாயக்கற்றவர்களேயென எனக்குப் படுகிறது. உறுதியானவர்கள் பேசுவதில்லை. அவர்கள் போராடுவார்கள். நசுக்கப் படுபவர்கள் சிலவார்த்தைகளை எழுதவோ பேசவோ கூடும். அதன் விளைவாக அவர்கள் உயிரிழக்கவும் கூடும். அவர்கள் பிழைக்கக் கூடிய அதிர்ஷ்டசாலிகளாக இருந்தால் அவர்கள்

செய்யக் கூடியதெல்லாம் உரக்கச் சத்தமிடுதலோ அல்லது கண்டனம் செய்வதோ தான். அதே வேளை பலம் வாய்ந்தவர்கள் அவர்களை நசுக்கியவாறும் மோசமாக நடத்தியவாறும், கொன்ற வண்ணமும் இருக்கிறார்கள். அப்படியானால் இந்த மக்களுக்கு இலக்கியத்தால் ஏற்படும் நன்மைதான் என்ன?

எப்படியிருந்தபோதிலும் இன்றைய புரட்சிக் காலகட்டத்து எழுத்தாளர்கள் இலக்கியம் புரட்சியில் பெரும்பங்கினை வகிக்கமுடியுமென்று கருதுகிறார்கள். ஆனால் எனக்கு இவ்வகை இலக்கியங்களில் வீரியம் இருப்பதில்லையென்றே படுகின்றது.

புரட்சிக்கு புரட்சிவாதிகளே தேவை. புரட்சி இலக்கியங்கள் தாமதித்தும் வரலாம். ஏனெனில் புரட்சிவாதிகள் எழுத ஆரம்பிக்கும்போது தான் புரட்சி இலக்கியங்கள் உருவாகின்றன. என்னைப் பொறுத்தமட்டில் புரட்சிதான் இலக்கியத்தில் பாரிய பங்கினை வகிக்கமுடியும். புரட்சிகர காலத்து இலக்கியம் என்பது சாதாரண காலகட்டத்தின் இலக்கியங்களிலிருந்து வேறுபட்டனவே. புரட்சியின் போது இலக்கியங்களும் மாறுதல்களுக்குள்ளா கின்றன. ஆனால் பாரிய புரட்சிகளே இவ்வாறு மாற்றங்களைக் கொண்டுவர வல்லது. சிறு சிறு கிளர்ச்சிகளால் இத்தகைய மாற்றங்கள் சாத்தியமில்லை.

புரட்சி என்ற பதத்தை இங்குள்ள ஒவ்வொருவரும் கேட்டுப் பழக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் இதே பதத்தை கியாங்சூ அல்லது செக்கியாங்கில் பாவித்தீர்களானால் நீங்கள் மக்களை பயமுறுத்தியவர்களாவீர்கள். புரட்சி என்பது ஒன்றும் வினோதமானதல்ல. சகலசமூக மாற்றங்களும் புரட்சியிலிருந்தே பிறக்கின்றன. இவ்வகையிலேயே மனுக்குலம் மெதுவாக வளர்ச்சியடைந்து காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இறக்குந்தறுவாயிலில்லாத சகல இனங்களும் ஒவ்வொரு நாளும் கிளர்ந்து கொண்டே யிருக்கின்றன.

மாபெரும் புரட்சிகள் இலக்கியத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? இதை மூன்று கால கட்டங்களாக வகுக்கலாம்.

1. ஒரு மாபெரும் புரட்சிக்குமுன் இலக்கியங்கள் சமூக நிலைமைகளின் மீதான அவலத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தி வேதனைக் குரல் எழுப்புகின்றன. இத்தகைய படைப்புகள் உலகம் முழுவதும் நிறைய இருக்கின்றன. இவற்றால் புரட்சிக்கு எவ்வித நன்மையுமில்லை. வெறுமனே முறையீடுகளோ அல்லது புலம்பலோ பயனற்றவை. உங்களை அடக்கி நசுக்குபவன் இவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை. புலம்பல் இலக்கியங்கள் ஒருவனுடைய முனகலையும் விரக்தியையும் வெளிப்படுத்தும் அதே வேளைகளில் அடக்கி நசுக்குபவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பையும் வழங்கி விடுகின்றன. சிலதேசங்கள் இத்தகைய புலம்பல்கள் பயனற்றன என்று கண்டபோது அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. மேலும் மேலும் வீழ்ச்சியைத் தழுவுகின்ற இந்நாடுகள் மௌனமான தேசங்களாக மாறுகின்றன. புரட்சியின் குரல்கள் ஓய்ந்து போன எகிப்து, அரேபிய, பாரசீகம், இந்தியா போன்ற நாடுகள் இதற்கு நல்ல சாட்சிகள், ஆனால் உள்ளார்ந்த வீறுகொண்ட வேறுநாடுகளோ புலம்பலைக் கைவிட்டுப் போராடத்துணிகின்றன. யதார்த்த நிலைகளை நேருக்கு நேர் எதிர்கொள்கின்றன. முனகல் கோபாக்கினியாக மாறுகின்றது. இத்தகைய இலக்கியங்களின் வருகையே புரட்சிகர மாற்றங்களுக்கு கட்டியங் கூறுகின்றன. புரட்சிக்கு சற்று முந்திய இலக்கியங்கள் மக்களின் கோபாவேசத்தையும் மாற்றத்தை வேண்டிநிற்கும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய இலக்கியங்கள்தான் அக்டோபர் புரட்சிக்கு விடி வெள்ளிகளாக மலர்ந்தன. இதற்கு விதிவிலக்குகளும் இல்லாமலில்லை. வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற இத்தகைய இலக்கியத்திற்கு போலந்தில் நீண்ட பாரம்பரியம் இருந்தபோதும் அதனுடைய மீட்சிக்கு முதலாவது உலகப் போரே வித்திட்டது எனலாம்.

2. ஒரு பாரிய புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் இலக்கியம் பின் தள்ளப்பட்டு விடுகிறது. புரட்சி அலை வீறுகொள்கிறது. வெறும் கூச்சல்கள் செயல்களாக மாறுகின்றன. மக்கள் புரட்சியை முழுமைப்படுத்துவதில் மூழ்கிப் போகிறார்கள். வறுமை தலைவிரித்தாடும் போது இலக்கியம் பற்றிப் பேச மக்களுக்கு அவகாசம் இருப்பதில்லை. பழமைவாதிகளும் புரட்சியின் வீச்சினால் அதிர்ச்சியடைந்து நிலைகுலைந்து விடுவார்கள். 'வறுமை எங்கிருக்கிறதோ அங்கிருந்தே இலக்கியங்கள் பிறக்கும்' என்பது சிலர் கூற்றாகும். இது ஒரு தவறான கருத்தாகும். ஏழ்மையில் எழுத முடிவதில்லை. எனக்கு பணக்கஷ்டம் ஏற்படும் போதெல்லாம் கடன் கேட்டுப் பீக்கிங் நதர வீதிகளைச் சுற்றித் திரிந்திருக்கின்றேனே தவிர, ஒரு சொல்கூட எழுதவில்லை. சுமையைக் காவிச் செல்பவனும், ரிக் ா வண்டியிழுப்பவனும் இலக்கியம் எழுத வேண்டுமெனில் அவர்களுடைய சுமைகளை முதலில் இறக்கி வைக்கவேண்டும். புரட்சியும் இத்தகையதே. அதிகார வர்க்கத்தினரோடு மக்கள் போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் நிலை பெற்றுள்ள சமூக அமைப்பை மாற்றுவதே முதன்மை பெறுகிறது. எழுதுவதற்கான அவகாசமோ அன்றி முனைப்போ இருப்பதில்லை. இதனால் தான் இலக்கியம் புரட்சிக் காலகட்டத்தில் தற்காலிக மௌனத்தில் ஆழ்ந்துவிடுகிறது.

3. புரட்சி வெற்றியடைந்தபின் நிலைமை ஓரளவு சுமுகமடைந்து மக்கள் நலம் பெறுகின்றனர். இலக்கியம் மீண்டும் எழுதப்படுகிறது. இக்காலகட்ட இலக்கியங்கள் இரு வகையாக அமைகின்றன. ஒன்று புரட்சியில் திளைத்து புகழ்பாடுவது. ஏனெனில் சமூகத்தின் மாறுதல்களினாலும், முன்னேற்றங்களினாலும், பழைய அமைப்பின் சிதைவாலும், புதிய அமைப்பின் நிர்மாணத்தினாலும் முற்போக்கு எழுத்தாளர்கள் ஈர்க்கப்படுகின்றனர். இரண்டாவது வகை பழைய சமூக அமைப்பின் சிதைவிற்காக – கழிவிரக்கம் கொண்டு புலம்புவது. புரட்சி ஏற்பட்டபோது நீண்ட

காலமாகவே பழைய மரபுகளிலும், சிந்தனைகளிலும் ஊறியவர்கள், திடீரென மாறிவிடுவார்கள் என்று கூறமுடியாது. அவர்களுடைய சூழல் படிப்படியாக மாறி அவர்களுடைய வாழ்க்கைப் போக்கையும் மாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. இதனால் விரக்தியுற்ற கடந்த கால வாழ்க்கை நிலையை நினைவு கூர்ந்து தங்கள் இயலாமையையும் முணு முணுப்பையும் காலத்திற்கு ஒவ்வாத புலம்பல் இலக்கியங்களாக வடிக்கிறார்கள். இவ்வகையான இலக்கியங்கள் ஒரே பிரலாபங்களாகவும், புதியமாற்றத்தைச் சகித்துக் கொள்ளாததன் வெளிப்பாடுகளாகவும் இருக்கும். இவையே புரட்சி நடந்து முடிந்திருப்பதற்கான நிலைமையைத் தெரிவிக்கின்றன.

இத்தகைய இருவகை இலக்கியங்களும் இன்று சீனாவிலில்லை. எனவே சீனப்புரட்சி இன்னும் முழுமையடையவில்லை. இது ஒரு மாறும் காலகட்டமே ஆகும். புரட்சியாளர்கள் தீவிரமாகச் செயற்பட வேண்டிய நேரமிது. பழைய இலக்கியங்கள் இன்னும் நிறையவே எஞ்சியுள்ளன. இன்று பத்திரிகைகளில் வெளிவருவனவும் பழைய இலக்கியங்களை அடியொற்றியே எழுதப்படுகின்றன. சீனப் புரட்சி எமது சமூகத்தில் மிகக்குறைவான மாறுதல்களையே ஏற்படுத்தியுள்ளது. பழமை வாதிகளின் சிந்தனைகள் எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகவில்லை. 'கான்ரன்' பத்திரிக்கைகளில் நாம் காணும் எழுத்துக்கள் இன்னும் பழைய பாணியிலமைந் திருப்பது எதனைக் காட்டுகிறதெனில், புரட்சி அலைகள் இன்னும் எமது சமூகத்தை தழுவிச் செல்லவில்லை என்பதையே. புதுமையைப்பாடும் இலக்கியங்களோ அல்லது, பழமைக்காக ஏங்கும் இலக்கியங்களோ வெளிவரவில்லை. 'குவாங்டங்' மாநிலமும் பத்து ஆண்டுகளுக்கு முன் எப்படியிருந்ததோ அவ்வாறே இப்பொழுதும் காட்சி தருகிறது. இதுமட்டுமல்ல – கிளர்ச்சிகளோ, ஆர்ப்பாட்டங்களோ ஒன்றும் நிகழவில்லை.

தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியபோதும் அவற்றை அரசாங்கத்தின் அனுமதி பெற்றே தான் செய்கின்றன. அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியல்ல இது அரசின் அனுமதியோடு நடக்கும் புரட்சி இது. சீனா இன்னும் மாறவில்லை. ஆதலால் தான் கடந்த காலத்திற்கு ஏங்கும் இலக்கியங்களோ, புரட்சியைப் போற்றும் புதுமை இலக்கியங்களோ இன்று இல்லை. ஆனால் சோவியத் ரஷ்யாவில் இவ்வகை இலக்கியங்கள் உண்டென்றே கூறவேண்டும். ஏனெனில் வெளிநாடுகளுக்கு ஓடிந்தோடிச் சென்ற பழைய ரஷ்ய எழுத்தாளர்கள் அங்கிருந்து கொண்டு பெரும்பாலும் கடந்தகால வாழ்வுக்கு ஏங்கும் இலக்கியங்களையே படைக்கும் அதே நேரத்தில் புதிய இலக்கியங்கள் அங்கு தலையெடுக்க முனைகின்றன. உன்னதமான படைப்புகள் இன்னும் வெளிவராவிடினும், புதிய இலக்கியங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு பெருகியேயுள்ளன. முழுமையான புரட்சிக்குப் பிறகே முற்றிலும் புதிய நிர்மாணிப்பைப் புகழுவார்கள். இருந்தும் இதற்குப் பிறகு என்ன நிகழுமென்று சொல்ல முடியாது. புரட்சியினால் முழு உலகும் மக்களுக்குச் சொந்தமாகிறபடியால் மக்கள் இலக்கியம் மலருமென்று நான் நினைக்கிறேன்.

இன்று சில எழுத்தாளர்கள் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் தங்களுடைய நாவல்களுக்கும், கவிதைகளுக்கும் உரிய மாந்தர்களாகப் படைக்கிறார்கள். இவை மக்கள் இலக்கியமென்றும் அழைக்கப்படுகின்றன. உண்மையில் இவை அவ்வாறில்லை. மக்கள் தங்கள் வாயைத் திறந்து இன்னும் ஒன்றையும் வெளியிடவில்லை. இவ்வகைப் படைப்புகள் பார்வையாளர்களது உணர்வு நிலையையே சித்தரிக்கின்றன. எங்களுடைய எழுத்தாளர்களிற் சிலர் ஏழைகளாக இருந்த போதிலும் அவர்கள் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விட வசதி படைத்தவர்களாவே இருக்கிறார்கள். அவர்களுடைய

படைப்புக்கள் மக்களிடமிருந்து வருவதுபோல் தோன்றினாலும் உண்மையில் அவை அவ்வாறில்லை. அவை சாமானியர்களது உண்மையான கதைகளல்ல. இன்று சில எழுத்தாளர்கள் நாட்டுப் பாடல்களை பொதுமக்களின் இதயத்திலிருந்து வருவன என்று கூறப் பதிவு செய்ய முற்பட்டுள்ளார்கள். எது எவ்வாறிருப்பினும் பழைய இலக்கியங்களின் மறைமுகமான பிடிப்புகளிலிருந்தும் அவற்றின் உள்ளார்ந்த நம்பிக்கைகளிலிருந்தும் அவர்கள் இன்னும் விடுபடவில்லை. ஏனென்றால் மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட நிலவுடைமையாளன் மீது வைத்திருக்கும் எல்லையில்லா பிரமிப்பு நீங்கவில்லை. இதைவிட அந்தக் கனவானுடைய கருத்துகளையே தம்முடையனவாகக் கூறும் போக்கும் மாறவில்லை. நாட்டுப் பாடல்களினுடைய உருவமும் அவற்றினுடைய உள்ளடக்கமும் சீரழிவுற்றனவாயே இருக்கின்றன. இத்தகைய படைப்புகளை உண்மையான மக்கள் இலக்கியம் என்று சொல்ல முடியாது. இங்கு கவிதை, புனைகதை போன்றன வேறுநாடுகளைப்போல் நன்றாக வளரவில்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது. இவற்றை இலக்கியங்கள் என்று அழைத்தாலும், புரட்சிகரகாலத்து இலக்கியமென்றோ அல்லது மக்கள் இலக்கியமென்றோ கூறமுடியாது. இன்றைய எழுத்தாளர்கள் எல்லோரும் கல்வியறிவுள்ளவர்கள். தொழிலாளர்களும், விவசாயிகளும் பூரணவிடுதலை பெறும்வரை இலக்கிய வாதிகளைப் போன்று சிந்திப்பார்கள். உண்மையான விடுதலை உழைக்கும் வர்க்கத்தினருக்கு என்று சாத்தியமோ, அதற்குப்பிறகே உண்மையான மக்கள் இலக்கியம் இருக்கின்றது' என்று சொல்லுதல் தவறாகும்.

நீங்கள் உண்மையான போராளிகள். புரட்சிக்காக போராடுகிறவர்கள். இலக்கியம் படிப்பதோ அன்றி நயப்பதோ போராடுவதற்கு துணைபோகாது. போர்முனைக் கவிதையொன்றினை நீங்கள் எழுதக்கூடும். நன்றாக எழுதியிருந்தால் போராடியதன் பின்பு நீங்கள் ஓய்வாக

இருக்கும்பொழுது வாசித்தல் ஒரு நல்ல அனுபவமே. சீனாவின் இன்றைய நிலையில் உண்மையான புரட்சிப்போரே மிகமிக அவசியம். சன் சுவான்பாங் என்ற யுத்த பிரபுவை கவிதை பயமுறுத்தவில்லை. துப்பாக்கி வேட்டே அவனை விரட்டியது. சிலர் இலக்கியம் புரட்சியில் பெரும் பாதிப்பையேற்படுத்தும் என்று நம்புகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இதில் சந்தேகமே. இறுதியில் இலக்கியம் ஒரு தேசத்தின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறதுதானென்றாலும் ஓய்வுள்ளபோதே செய்யப்பட வேண்டியது.

சில கட்டுரைகள் எழுதியதைவிட நான் ஒன்றையும் சாதிக்கவில்லை. நான் சலிப்புற்றிருக்கிறேன். இருந்தும் துப்பாக்கியை ஏந்தும் நீங்கள் இலக்கியம் பற்றி அறிய அவாக் கொண்டுள்ளீர்கள். ஆனால் நானோ துப்பாக்கி வேட்டுகளின் சத்தத்தையே கேட்க ஆர்வங்கொண்டுள்ளேன். ஏனெனில் துப்பாக்கி வேட்டுகளின் சத்தம் இலக்கியத்தைவிட கேட்பதற்கு நன்றாக இருக்கும். இதைத்தான் நான் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

குறிப்பு: ஏப்ரல் 8, 1917இல் இலக்கிய மேதை லூசுன் ஹாங்பு இராணுவக் கல்வி நிலையத்தில் "Literature of a Revolutionary Period" என்னும் பொருளில் ஆற்றிய உரையின் சுருக்க வடிவம் இது.

ஒரு புரட்சிகர ஜனநாயக வாதியாக இருந்த இலக்கிய மேதை லூசுன் கம்யூனிஸ்டாக மாறிக் கொண்டிருந்த காலத்தில் சீனாவில் மிகவும் கடுமையான போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்நிகழ்வுகள் இவரை பெரிதும் பாதித்துள்ளன. புரட்சி பற்றியும், அதில் இலக்கியம் வகிக்கின்ற பங்கினைப் பற்றியும் இவர் கொண்டிருந்த கருத்து சில அடிப்படையான இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய விவாதத்துக்குரிய புதிய சிந்தனைகள்களை முன் வைக்கின்றது.

நன்றி: 'சமர்' ஜனவரி 1980, யாழ்ப்பாணம்

⁂

7. கம்பனும் பக்தி இயக்கமும்

-

க .

வீரையன்

தமிழகத்தில் ஒரு போர்க்களம்

பௌத்தமும், சமணமும் தாங்கள் தோன்றிய காலந்தொட்டே வணிக வர்க்கத்தாருக்கு ஆதரவாய் இருந்து வந்தன. அந்தத் தொடர்பு கடைசி வரையும் நீடித்தது. இந்திய சிந்தனை பற்றிய தனது நூலில் கே. தாமோதரன் கூறுவதைப்போல், வேள்விச் சடங்குகளின் பேரில் உற்பத்தியில் பெரும் பகுதியைத் தங்களுக்காக்கிக் கொண்ட பிராமணர்கள், கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் பொதுவாகச் சமுதாய முன்னேற்றத்திற்கும், குறிப்பாக வாணிப வளர்ச்சிக்கும் பெரிய தடையாக இருந்தனர். அப்பொழுது பிராமணர்களின் ஆதிக்கத்தைத் தூக்கி எறிய சத்திரியர்களுக்கும் வணிக வர்க்கத்தாருக்கும் பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் உதவின.

வட்டி தரப்படுவதைப் பௌத்தம் ஆதரித்தது என்று ஆர்.எஸ். சர்மா சொல்கிறார். வாணிப வளர்ச்சியால் மலரும் நகர வாழ்க்கையின் விளைவான விபசாரத்தையும் பௌத்தம் சகித்துக் கொண்டதென்று அவர் கூறுகிறார். குப்தர்கள் காலத்திற்குப் பின்னால், வணிகர்கள் வீழ்ச்சி நிலைக்கு வந்தார்கள். இன்னும் மோசமான வீழ்ச்சியை அவர்களது ஆதரவைப் பெற்ற பௌத்தமும், சமணமும் சந்தித்தன. வணிகர்களின் உதவியைத் தாராளமாகப் பெற்ற அந்த மதங்கள், தங்கள் மடங்களிலிருந்து கொண்டு, தத்துவ விசாரணையிலும், தர்க்கச் சிந்தனைகளிலும் பொழுது போக்கின. சாதாரண மக்களின் வாழ்க்கையோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பு அறுந்தது. பௌத்த, சமண மதங்கள் இந்தக் காரணத்தால் மிகவும் பலவீனப்பட்டிருந்தன. மத்த விலாசப் பிரகடனத்தில், நீதியைப் புத்த பிட்சுவால் விலைக்கு வாங்க முடியும் என்ற குறிப்பு வருகிறது. எந்த அளவுக்குப்

பௌத்த சமண மதங்கள் பாதிக்கப்பட்டிருந்தன என்பதை விளக்குவதாக இந்த விவரம் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், பக்தி மதங்களின் தாக்குதலுக்குப் பௌத்த, சமண மதங்கள் ஆளாக நேரிட்டது. 'விஷ்ணு' என்னும் பெயரின் அடிப்படையில் 'வைணவம்' என்று அழைக்கப்படும் பழைய பாகவத மதத்தைப் போலவே ஆகம அடிப்படை உடையதும், நீண்ட வரலாற்றை உடையதுமான சைவ மதமும் அந்தத் தாக்குதலில் முன்னின்றது. இந்தச் சமயப்போர் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் தீவிரம் அடைந்தது. அரசின் அதிகார பலத்தோடிருந்த சமணத்தை, அந்தச் சமணத்திலிருந்து சைவத்திற்கு வந்த முதிய திருநாவுக்கரசர், பெருகி வரும் மக்கள் செல்வாக்கைப் பக்கபலமாகக் கொண்டு, சமயப் போர்க்களத்தில் சந்தித்து, இறுதியில் வெற்றி பெற்றார். பழைய வேதத்தை தொடக்ககாலத்தில் பௌத்தம் தன் வசீகரமான கோ ங்களால் வெற்றி கொண்டதென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கருதினார். அந்தப்பௌத்தத்தையும், சமணத்தையும் இசையாலும், இனிய தமிழ்ப் பாடல்களாலும், இன்னும் குறிப்பாக வசீகரமான கோ ங்களாலும் சைவம், வைணவம் என்கிற பக்தி மதங்கள் வெற்றி கொண்டன. 'கோத்திரமும் குலமும் கொண்டு செய்வீர்?' என்று அப்பர் கேள்வி எழுப்பினார். 'ஒக்கத் தொழுகிற்றீராயின் கலியுகம் ஒன்றுமில்லை' என்று நம்மாழ்வார் அழைத்தார். அடித்தளத்து மக்களை அரவணைக்கும் இந்தக் கோ ங்கள் பக்தி மதங்கள் எளிதாக வெற்றி பெறுவதற்கு உதவின. வன்முறை உணர்வுகளும், வன்முறையும் ஆங்காங்கே இந்தப் போராட்டத்தில் தலைதூக்கின. 'எதிர் தரப்பாளிகளின் தலைகளை அறுப்பதே கருமம்' என்று ஒரு ஆழ்வார் பாடினார். ஞானசம்பந்தர் வாய் வலிக்கும் அளவுக்குச் சமணர்களைத் திட்டினார்.

'கோத்திரம் குலங்களைப் பெரிதாக நினைக்கக்கூடாது' என்று திருநாவுக்கரசரின் கனவும்

'ஒக்கத்தொழுதால் கலியுகம் கிடையாது' என்கிற நம்மாழ்வாரின் கனவும், பௌத்தம் சமணத்தோடு நடந்த போரின் சூடு தணிந்ததும், பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன. சமயப் போர் நடந்த காலத்தில் அடித்தளத்து மக்களுக்கு நம்பிக்கையையும், உத்வேகத்தையும் தந்த பக்தி மதத் தலைவர்களின் இனிய பாடல்கள் வெறும் மந்திரங்களாகி விட்டன. ரிக் வேதத்தின் இனிய பாடல்களுக்குப் பிராமணங்களின் காலத்தில் நேர்ந்த கதியே இந்தப் பாடல்களுக்கும் நேர்ந்தது.

வடக்கும் தெற்கும்

தொடக்கக் காலத்தில், வருணபாகுபாடு வட இந்தியாவில்கூட பெருமளவுக்குப் பரவியிருக்கவில்லை. ஆங்காங்கே, முரண்பாடான இனக்குழுக்கள் இருந்து வந்தன. லிச்சாவியர், மல்லர் குடியரசு போன்றவைகளும் நெடுங்காலத்திற்குத் தங்கள் தனித்தன்மைகளைக் காப்பாற்றிக் கொண்டிருந்தன. கொஞ்சங் கொஞ்சமாகத்தான், வட இந்தியாவில் பழைய இனக்குழுக்கள் வருண பாகுபாட்டிற்குள் வந்து கொண்டிருந்தன. வருணபாகுபாட்டில் சேரும் புதிய கூட்டத்தினரின் புரோகிதர்களுக்குப் பிராமணர்களின் அந்தஸ்தைத் தரவேண்டிய நிர்ப்பந்தம் வேறு ஏற்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தென்னிந்தியாவில் அதுவும் தென்கோடியில் உள்ள தமிழகத்தில் ஏற்பட்ட வேலைப் பிரிவினை வருணபாகுபாடாக இருந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால் காலத்தால் மிக முந்திய தமிழ் நூல் என்று கருதப்படும் தொல்காப்பியத்தில், வருணபாகுபாட்டைப் பற்றிக் குறிப்பு வந்திருக்கிறது. வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியத்தைக் காலத்தால் பிந்திய நூல் என்று கருதுகிறார். இன்னொரு அறிஞர் தொல்காப்பியத்தைக் காலத்தால் முந்தியதென்று ஏற்றுக்கொண்டு, வருணபாகுபாடு வரும் மரபியல் போன்றவற்றைப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்று கூறுகிறார். சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய சாதிப்பிரிவுகளுடன், தொல்காப்பியம்

கூறும் வருணபாகுபாடு ஒத்துப் போகவில்லை என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. 'ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' என்னும் புகழ்வாய்ந்த நூலில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதைப் போல், வகுப்புப் பிரிவு பற்றிய இயலில், தொல்காப்பியர் மறவர், வலையர், புலையர் முதலிய வகுப்புகளைப் பற்றி கூறவில்லை.

தொல்காப்பியத்தில், பிராமணர்களுக்கு வழங்கப்படும் சமூக முதன்மையை சங்ககால இலக்கிய விவரங்கள் உறுதி செய்வதாகத் தெரியவில்லை. பல யாகங்களைச் செய்து பெயர் பெற்ற ஒரு பாண்டிய மன்னனைப்போல யாராவது சிலர் வருண பாகுபாட்டை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் பெரும்பான்மையான விவரங்களை வைத்துப் பார்க்கிறபோது சமண, பௌத்த மதத்தலைவர்களைப் போலவே பிராமணர்களும் ஒரு மதத்தலைவர்கள் என்ற அளவிலே கருதப்பட்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. மதுரைக்காஞ்சி போன்றவை தருகிற விவரங்களும் இதையே உறுதி செய்கின்றன. வட இந்தியாவில், அரசாங்கம், பொது நிர்வாகம் நீதிபரிபாலனம் ஆகியவற்றில் மிக உயர்ந்த பதவிகள் பிராமணர்களுக்கே உரிமையாய் இருந்தன என்று மெகஸ்தனிஸ் குறிப்பிடுகின்ற நிலை இருந்தது. தமிழகத்தில் அந்த நிலை இல்லையென்பதைச் சங்ககால இலக்கிய விவரங்கள் உணர்த்தி நிற்கின்றன. தெய்வ வணக்கம், வழிபாட்டு முறை ஆகியவற்றை வைத்துப் பார்த்தாலும், பிராமணர்களின் சமூகத்தலைமை இங்கே ஏற்பட்டிருக்கும் என்று நம்ப முடியவில்லை. சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் ஆரியத் தெய்வங்கள் உயர்வகுப்பினரால் வணங்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிற க.வித்தியானந்தன், பொதுமக்கள் கொற்றவை, முருகன் போன்ற பழந்தெய்வங்களையே வணங்கினர் என்று கூறுகிறார். பழந்தமிழரது தலையாய தெய்வம் கொற்றவைதான் என்று கூறுகிற க. கைலாசபதி இன்னொரு தமிழ்த் தெய்வமான முருகன், 'தாய்வழி உரிமைபெறும்

திராவிடத் தெய்வமாகத் தமிழிலக்கியங்களில் தோன்றுகிறான்' என்பதையும் குறிப்பிடுகிறார். பண்டைய தமிழிலக்கியங்களில் காணப்படும் வழிபாட்டு முறை (வெறியாட்டம்) மிகப் புராதனமானது என்பதும், சமுதாயக் கூட்டு வாழ்க்கையின் அடிப்படையில் தோன்றியது என்பது புலனாகும்' என்று அவர் மேலும் கூறுகிறார். வழிபாட்டு முறையில் பிராமணர்களின் ஆதிக்கம் வலுக்கவில்லை என்பதைக் கைலாசபதியின் மேற்கண்ட எடுத்துக்காட்டு விளக்கும்.

இவற்றை எல்லாம்விட மாணவ தர்ம சாஸ்திரம் தருகிற ஒரு குறிப்பு ஐயத்திற்கிடமில்லாமல் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கிறது. திருவினைகளைச் செய்யாததாலும், பார்ப்பனர்களைப் பார்க்காமல் காலம் கழித்தாலும் சில சத்திரிய மரபினர்கள் நான்கு வருணத்தாருக்கும் கீழாக ஆகிவிட்டார்கள் என்று அது ஒரு பட்டியல் தருகிறது. அந்தப் பட்டியலில், சீனர் யவனர் கம்போசர் போன்ற மற்ற நாட்டினருடன் திராவிட தேசத்தவரும் இடம் பெறுகிறார்கள். தமிழக அரசர்கள் பொதுவாகப் பிராமணர்களைப் பார்க்காமல் காலம் கழித்தார்கள் என்று மிகவும் பழைய இந்து தர்மசாஸ்திரம் பரிசால்லும் சாட்சியம், சங்க காலத்தில் பிராமணர்களின் தலைமையை ஏற்ற வருணபாகுபாடு தமிழகத்தில் வேரூன்றவில்லை என்பதை உறுதி செய்கிறது. சிலப்பதிகாரத்திலும் பிராமணர்கள் மிகவும் வசதியான வாழ்க்கைக்கு அன்னியர்களாகவே தெரிகிறார்கள். சிலப்பதிகாரக் காலம் வரை அவர்கள் தமிழகத்தில் சமூகத் தலைமையை அடைய முடியவில்லை என்றே தெரிகிறது. மேற்கண்ட எல்லா விவரங்களும், தென்னிந்தியாவில் பிராமணர்களின் தலைமையின் கீழ் வேலைப் பிரிவினை தோன்றவில்லை என்று கூறும் கே.தாமோதரனின் கருத்தை உறுதி செய்கின்றன.

சிலப்பதிகாரத்திலிருந்து, பல்லவர்களின் காலத்திற்கு வருகிறபோது நிலைமை அப்படியே மாறிவிடுகிறது.

தன்னிறைவான கிராமங்களில் ஆளுகின்ற பிரிவினரில், பிராமணர்கள் முதன்மையானவர்களாய் ஆகிவிடும் நிலை ஏற்படுகிறது. குப்தர்கள் காலமுதல் ஏற்பட்ட, பிராமணர்களுக்கு நிலங்களைத் தருகிற பழக்கம், அவர்களுடைய அந்தஸ்தை வெகுவாக உயர்த்திவிட்டது. 'பல்லவர் கால ஆட்சியும் சமூக வாழ்க்கையும்' என்கிற தன் நூலில் பிராமணர்களுக்குப் பல்லவர் காலத்தில் வழங்கப்பட்ட மானியங்களையும், சலுகைகளையும் பற்றி சி. மீனாட்சி விளக்கமாகக் குறிப்பிடுகிறார். மன்னர்கள் பிராமணர்களைச் சிறப்பாகக் கவனிக்க ஆரம்பித்ததற்கு பல காரணங்கள் உண்டு. கீழே காணும் காரணம், அவற்றிலே மிக முக்கியமான ஒன்றாகத் தோன்றுகிறது.

'சந்திரகுப்த மௌரியர் தொடங்கி, இந்நாட்டில் ஆண்ட இந்து, பௌத்த மன்னர்களில் பெரும்பாலோர் (ஏன்? ஒருவருமே என்றும் கூறலாம்) சத்திரியர்கள் அல்லர்... அரச பதவியை எய்துவதற்குத் திறமையும், துணிவும் வாய்ப்பும் கிடைத்தவர்கள் யாவரையும் சில சாங்கியங்களின் வாயிலாகச் சத்திரியர்களாகச் செய்யும் தகுதி பிராமணர்களுக்கு இருந்தது' என்று 'பண்டைய இந்திய அரசியல் ஆட்சி நிலையங்கள்' என்ற நூலில் ந. சுப்ரமணியன் குறிப்பிடுகிறர். முன்னர் ஏற்பட்ட பழக்கத்தினாலும், இது போன்ற காரணங்களாலும் பிராமணர்களை மன்னர்கள் தொடர்ந்து ஆதரிக்கத் தலைப்பட்டார்கள். கல்வியை மதித்தோ, சமயப்பணிகள் செய்வதற்கு ஊதியமாகவோ, அரசப் பரம்பரையின் கொடிவழிப் பட்டியலை எழுதுவதற்காகவோ இத்தானங்கள் தரப்பட்டன என்று ரொமீலாதாப்பர் குறிப்பிடுகிறார். நிலங்களைத் தானமாகப் பெறுகிறபோது, அதனோடு பல சலுகைகளும் அவர்களுக்குக் கிடைத்தன. பல்லவர்கள் காலம் முதல் கோவில்களின் முக்கியத்துவமும் அதிகரித்தது. அவற்றினுடைய நில வருவாயையும், காணிக்கை வருவாயையும் நிர்வகிக்கும் வாய்ப்புடையவர்களாகவும் பிராமணர்கள் ஆனார்கள். நிலவுடைமையால் ஏற்பட்ட

செல்வாக்கோடு, மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் மக்களை அதிகாரம் செய்யக்கூடிய வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டியது. ஒரு பகுதியிலே மட்டுமில்லாமல், இந்தியா முழுவதிலுமே பிராமணர்கள் சமூக அந்தஸ்தில் மேம்பட்டுவிட்டார்கள். இந்தச் சூழ்நிலையை உறுதி செய்து, பிராமணர்களுடைய சமூக ஆதிக்கத்தை நிலைபெறச் செய்வதற்காகப் பெரிய அறிவாளிகளான பிரபாகரர், குமாரிலபட்டர் போன்றவர்கள் தத்துவரீதியான முயற்சியில் ஈடுபட்டார்கள். பழைய பிராமணர்களின் காலத்தைத் திரும்பவும் உயிர்ப்பிக்கும் முயற்சியில் அவர்கள் பெருமளவுக்கு வெற்றிபெற்றார்கள்.

பூர்வ மீமாம்சகச் சூத்திரத்தின் கர்த்தா என்று சொல்லப்படும் ஜைமினியின் வாரிசுகளான பிரபாகரரும், குமாரிலபட்டரும், வேதமும், வேத அதிகாரமுந்தான் எல்லாம் என்று சாதித்தனர். வேத பாதுகாவலர்களான பிராமணர்களின் தலைமையைச் சமூக ரீதியிலும், மத ரீதியிலும் உறுதி செய்வதுதான் பூர்வ மீமாம்சகர்களின் இலட்சியமாக இருந்தது. குப்தர்கள் காலந்தொடங்கி, மன்னர்களின் தொடர்ச்சியான ஆதரவாலே, நிலவுடைமையாளர்களாகியதன் மூலம், பொருளாதார ரீதியில் தன்னிறைவான கிராமங்களில் பிராமணர்கள் ஆளும் வர்க்கம் ஆனார்கள். இந்தச் சூழ்நிலையில் ஆளும் வர்க்கம் ஆனார்கள். இந்தச் சூழ்நிலையில் பிராமணர்களின் மதிப்பும், மரியாதையும் மத ரீதியில் கொடிகட்டிப் பறப்பதற்குப் பூர்வ மீமாம்சகர்கள் உதவினார்கள். பிரமாணங்களின் காலத்தில், பூலோகத் தேவர்கள் தாங்கள் தான் என்று புரோகிதர்கள் உரிமை கொண்டாடியதாக டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறுகிறார். பிரமாணங்களில் மறுமலர்ச்சிக்காலம் என்று கருதப்படும் பிரபாகரர் குமாரிலபட்டர் போன்ற பூர்வ மீமாம்சகர்களின் காலத்தைத் தொடர்ந்து பூலோகத் தேவர்களாகவே பிராமணர்கள் கருதப்பட்டார்கள் என்பதைப் 'பல்லவர்கால ஆட்சியும், சமூக வாழ்க்கையும்' என்னும்

நூலில் சி. மீனாட்சியும், 'சோழர்கள்' என்னும் நூலில் கே.ஏ நீலகண்ட சாஸ்திரியும் தருகின்ற விவரங்கள் உறுதி செய்கின்றன. பல்லவர் காலந் தொடங்கி தமிழகத்தின் நீதி பரிபாலனத்தில் இந்து தர்ம சாஸ்திரங்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்தது. இந்து தர்மசாஸ்திரங்களின் ஆட்சிக்குச் சரியான அடிப்படையிட்டவர்களும் பூர்வமீமாம்சகர்களே ஆவார்கள். குமாரிலபட்டர் தந்த உத்வேகத்தால்தான் இந்து தர்ம சாஸ்திரங்களுக்கு விரிவான விளக்க உரைகள் எழுதப்பட்டன. ஊர்ப்புறத்திலே இருக்கிற பிராமணர்களும் சட்ட ஆலோசகர்களாக ஆவதற்கு வசதியாக இந்த விளக்கவுரைகள் அமைந்தன. பொருளாதார ரீதியில், மதரீதியில், சமூகரீதியில் தலைமையேற்ற பிராமணர்கள், தமிழகத்தின் நீதிபரிபாலனத்திலும் தலைமை கொள்வதற்கு ஏற்ற வகையில் பூர்வ மீமாம்சகர்கள் பாடுபட்டார்கள்.

பக்தியியக்கத்தினுடைய மக்கள் கூட்டத்தின் எழுச்சியால் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு அழிக்கப்பட்டது. இந்தப்பணி நடந்து முடிந்ததும் அடித்தளத்து மக்களின் எழுச்சியும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அடித்தளத்து மக்களை எழுச்சி கொள்ளச் செய்ய பக்தியியக்கத் தலைவர்களின் இனிய பாடல்களைக் கூடத் தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. பிராமணர்களின் தலைமைக்கு இடையூறாகக் கூடிய, அடித்தளத்து மக்களின் எழுச்சி, உட்பட எல்லாத் தடைகளும் நீங்கிவிட்டதனால் அரங்கம் முழுவதும் அவர்களுக்கே ஏகபோகமாகியது.

பல்லவர்கள் காலத்திற்குப் பின்னால், பிற்காலச் சோழர்கள் காலத்தில், பிராமணர்களுக்கு விளைநிலங்களோடு கூடிய அக்கிரகாரங்களைத் தருவது, வரம்பில்லாமல் அதிகரித்தது. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி கூறுவதுபோல் வடதேசத்திலிருந்துகூட பிராமணர்களை வரவழைத்து அவர்களுக்கு நிலவுடைமையோடு கூடிய சலுகைகளைச் சோழர்கள் அளித்தார்கள். நிலவுடைமை யாளர்கள் என்ற

முறையில் பிராமணர்களும் மற்ற நிலவுடைமையாளர்களான வேளாளர் போன்றவர்களும், தங்கள் ஆளும் வர்க்கத்தின் நலனைக் கவனித்துக் கொள்ளக்கூட்டாகச் செயல்பட்டார்கள். நிலவுடைமைச் சொத்துக்களை அதிகமாகப் பெற்றிருந்த கோவில்களும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தன. பிராமணர்களுக்கும், வேளாளர்களுக்கும், கோவிலுக்கும் இடையூறு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்பதனைக் கே.ஏ. நிலகண்ட சாஸ்திரி எடுத்துக்காட்டும் தஞ்சை மாவட்டத்தின் கீழையூரைச் சேர்ந்த கல்வெட்டு உணர்த்துகிறது. அவர் எடுத்துக்காட்டும் இன்னொரு கல்வெட்டு வேளாளருக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று தர்மசாஸ்திரம் அறிந்த பிராமணர் சொன்னதினால் அத்தண்டனை விதிக்கப்படவில்லை என்று கூறுகிறது. சக ஆளும் வர்க்கத்தார்களாகிய வேளாளர்களின் நலனையும், தங்களின் தர்மசாஸ்திர ஞானத்தினால் பிராமணர்கள் பாதுகாத்தார்கள். ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிராமணர்கள்தான் அதனுடைய பாதுகாவலர்களாகவும் இருந்தார்கள். ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த வேளாளர்கள் போன்ற மற்றவர்கள் பிராமணர்களின் முதன்மையை அங்கீகரிக்கத் தயங்கவில்லை. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி எடுத்துக்காட்டும் விவரம் இதனை உணர்த்துகிறது. பிராமணர்கள் பெரும்பான்மையாய் உள்ள ஊர்களில், வேளாளர் போன்ற மற்றவர்களுக்கு நிலவுடைமை இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அதனால், அரசக்குடும்பத்தைச் சேர்ந்த குந்தவை போன்றவர்கள் பிராமணர் அல்லாதவர்- களிடமிருந்த நிலங்களை வாங்கி அங்கிருக்கும் கோவில்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். பிராமணர்கள் தங்கள் முதன்மையில் கவனமாக இருந்ததையும், அவர்களது முதன்மை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் மேற்கண்ட விவரம் விளக்குகிறது. மதத்தலைவர்களாகவும், நீதிபரிபாலனத்தில் செல்வாக்குள்ள- வர்களாகவும் பிராமணர்கள் இருந்ததனால், அவர்களின்

தலைமையையும், பாதுகாப்பையும் மற்ற நிலவுடைமையாளர்களான வேளாளர் போன்றவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டனர்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் உயர்கல்வியும் பிராமணர்களின் ஆதிக்கத்தின் கீழ்வந்தது. பழைய தமிழகத்தில் கல்வியைப் பொறுத்தவரை சமணப்பள்ளிகள் போன்றவை பெரும்பங்கு ஆற்றின. பிற்காலச் சோழர்கள் காலத்தில் கோவில்கள் அந்தப் பணியை மேற்கொண்டன. கோவில்களின் ஆதரவால் வழங்கப்பட்ட உயர்கல்விக்குப் பிராமணர்களே பொறுப்பு ஏற்றனர். உயர்கல்வி முழுவதும் வடமொழிக் கல்வியாகவே இருந்ததைப் பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. உயர் கல்வியில் பூர்வ மீமாம்சமும் இடம் பெற்றிருந்தது. நிலவுடைமை, மதத்தலைமை, நீதிபரிபாலனம், உயர்கல்வி என்று எதை எடுத்துக் கொண்டாலும் பிராமணர்களே ஆதிக்கமுடையவர்களாகப் பிற்காலச் சோழர்கள் காலத்தில் விளங்கினார்கள். பழைய தமிழகத்தில் இந்த நிலைமையில்லை. அப்பொழுது வடக்கிலே இருந்த சூழ்நிலை தெற்கே இல்லை. வடக்கே கூட ஓரிடத்தில் இருந்ததைப் போல் இன்னொரு இடத்தில் இல்லை. இடைக்காலத்தில் நிலைமை மாறியது. பிராமணங்களின் காலத்தில் வட இந்தியாவின் ஒரு பகுதியில் உருவான பிராமணர்களின் தலைமை இடைக்காலத்தில், தென்னிந்தியாவிலும், குறிப்பாகச் சோழர் தேசத்தில் நீக்கமற நிறைந்திருந்தது. வடக்கே இருந்ததைவிட தெற்கே அந்தக் காலத்தில் பிராமணர்களின் தலைமை செல்வாக்கு பெற்றிருந்தது.

அடியெடுத்துக் கொடுத்த திருமங்கையாழ்வான்

அடித்தளத்து மக்கள் பக்தி இயக்கத்தால் எப்படி வசீகரிக்கப்பட்டார்கள் என்பதற்குத் திருமங்கையாழ்வான் உதாரணமாகத் திகழ்கிறான். "ஏழை, வழியற்றவன், கீழ்மகன் என்றெல்லாம் பார்க்காமல், அன்பு கொண்டு 'சீதை உன்

தோழி என் தம்பி உன் தம்பி, நீ எனக்குத் தோழன்' என்று நீ உவந்து சொன்ன வார்த்தைகள், என் நெஞ்சத்தில் இருந்ததால் நான் உன்திருவடியை வந்து அடைந்தேன்' என்று திருமங்கை மன்னன் பாடினான். மேலும், 'விலங்கு, மற்றோர் சாதியென்று பார்க்காமல் உவந்து அருள் செய்பவன் நீ என்பதனால், அந்த ஆதரவு எனக்கும் உண்டு என்று நம்பியதால்தான் நான் உன் திருவடியை வந்து அடைந்தேன் என்று அவன் மேலும் பாடுகிறான். அடித்தளத்து மக்களின் ஆசைக்குரலாக அவன் பாடல்கள் ஒலிக்கின்றன. அவர்களுடைய ஆசை அபிலாசைகளுக்குப் பக்தியியக்கம் இடம் தந்திருப்பதையும் மேற்கண்ட பாடல்கள் உணர்த்துகின்றன.

அடித்தளத்து மக்களின் நம்பிக்கையையும் ஆசையபிலாசைகளையும் தூண்டிய பக்தியியக்கம், சமண, பௌத்த மதங்களை அழித்த பின்னால் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. அதனோடு அடித்தளத்து மக்களின் எழுச்சியும் அடங்கிவிட்டது. பிராமணர்களை உள்ளிட்ட ஆளும் வர்க்கத்தாருக்கு மற்றவர்கள் அடங்கிவொடுங்கிய நிலையில் பிற்காலச் சோழர் பேரரசில் கம்பன் என்கிற மக்கள் கவிஞன் தோன்றினான். திருமங்கை மன்னனின் மேற்கண்ட வார்த்தைகள் அவன் நெஞ்சில் ஆழப்பதிந்தன. அடித்தளத்து மக்களின் ஆசையபிலாசைகளையும், நம்பிக்கையையும் அவன் திரும்பவும் உயிர்ப்பிக்க நினைத்தான். உயிர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், அடித்தளத்து மக்களின் எழுச்சியை அதன் தர்க்க ரீதியான முடிவுக்கும் கொண்டு போக அவன் ஆசைப்பட்டான். அடித்தளத்து மக்களின் எழுச்சிக்கும் ஆக்கத்திற்கும் தடையான சக்திகளை அவன் சந்தித்து, முறியடிக்க முயன்றான். இந்த முயற்சியில், இராமாயணம் என்கிற மகாகாவியத்தை அவன் செய்தான். திருமங்கை மன்னனின் மேலே சொன்ன வார்த்தைகளை அந்தக் காவியத்தில் அவன் அப்படியே கையாண்டான்.

பாலகாண்டத்தில், காவியத்திற்குத் தொடர்பில்லாத மாவலியின் கதை வருகிறது. விசுவாமித்திரனின் வேள்வி காக்கப் போன இராமன் ஒரு சோலையைப் பார்த்து அதன் விவரம் கேட்கிறான். அதன் தொடர்பாக மாவலியின் கதையை விசுவாமித்திரன் கூறுகிறான். இந்தக்கதையில் இரண்டு அம்சங்கள் மிகவும் வெளிப்படையானவை. மாவலி என்பவன் வானகம், வையகம் எல்லாவற்றையும் தன் வலிமையினால் கைப்பற்றி, அவற்றைப் பிராமணர்களுக்குத் தர முனைந்தான் என்பது ஒன்று. இந்தக் கொடியவனின் செயலுக்கு முடிவுகட்ட வேண்டுமென்று மற்றவர்கள் வேண்ட, அதற்குத் திருமால் உடன்பட்டுச் செயல்பட முனைகிறான் என்பது மற்றொன்று. மாவலியின் கம்பீரமான வாசகங்கள் அவனைப் பெரிதாக மதிக்க வைத்தாலும் அவன் செயல் கொடுமையானதென்று மதிக்கப்படுவதும், அந்தக் கொடுமையைத் தீர்க்கத் திருமால் உடன்படுவதும் பிராமணர்களுக்கு வரம்பில்லாமல் விளைநிலங்களோடு கூடிய உறைவிடங்களைத் தருகிற மன்னர்களுக்கு ஓர் எச்சரிக்கை போல் இருக்கிறது. அக்கிரகாரங்களை இங்கிலாந்து போன்ற நாட்டில் நிலவிய 'மேனர்' என்பதோடு வரலாற்றறிஞர்கள் ஒப்பிடுகிறார்கள். அதனால் அக்கிரகாரங்களில் கட்டாய வேலைக்கு அடித்தள மக்கள் ஆளாக்கப்பட்டார்கள் என்பது தெரிய வருகிறது. இந்தப் பின்னணியில், பிராமணர்களுக்குத் தரவேண்டும் என்கிற நோக்கத்தில் மாவலி வானகம், வையகம் ஆகியவற்றைக் கைபற்றியது கொடியவனின் செயல் என்று வர்ணிக்கப்படுவது அர்த்தமுள்ளதாகிறது. பிராமணர்கள் நிலவுடைமையாளர்களாகி, ஆளும் வர்க்கத் தலைவர்கள் ஆகிவிட்ட சூழ்நிலையில், அவர்கள் மேல் கம்பன் தொடுக்கும் 'கன்னிப்போர்' ஆக மாவலியின் கதை இருக்கிறது.

யுத்த காண்டத்தில் அவனுடைய தாக்குதல் திட்டவட்டமாகவும், தீவிரமாகவும் இருக்கிறது.

பிராமணர்களின் தனிச்சிறப்புக்கும், அவர்களுக்கு அனுசரணையாக இருக்கும் தர்மசாஸ்திரங்களுக்கும் அடிப்படையாகிற வேதத்தின் அதிகாரத்தைத் தன் தாக்குதலுக்கு இலக்காக்குகிறான் கம்பன். முன்பு மாவலியின் கதை பயன்பட்டது போல் இங்கே இரணியனின் கதை அவனுக்கு பயன்படுகிறது.

வேதங்களில் வல்ல தன்னைவிட இந்தச் சிறுவனுக்கு என்ன தெரியும் என்றமுறையில் அந்தணன் கேட்டான். அதற்குப் பிரகலாதன், 'ஆதிநாயகனுடைய பெயரைத் தவிரவேறொன்றும் எனக்குத் தெரியாது. நான்கு வேதங்களும் துணிகிற எல்லாப் பொருட்களையும் எல்லை கண்டவன் என் மனத்திலே இருக்கிறான். ஆகையால், நீ எனக்குச் சொல்லித் தருவதற்கு என்ன இருக்கிறது?' என்று பதில் சொன்னான். மேலும் தொடர்ந்து திருமாலுடைய அடியவர்களுக்கு அடியவர்கள் ஆகிவிட்டாலே, மெய்ப்பொருளைக் கண்டு கொள்ள முடியும். கேள்வியறிவு இல்லாதவர்கள் கூட வேதங்களின் அகப்பொருள், புறப்பொருள் எல்லாம் அறிவார்கள். பக்தியிருந்தால் எல்லாம் தெரியும்' என்று வேதத்தில் துறை போனவனிடம், பக்தர்களின் சார்பாளனாக நின்று அவன் பேசினான்.

பிரகலாதனின் கொள்கையின்படி பக்தியிருந்தால் போதும், என்று ஆகிறது. வேதக்கல்வி அவசியமான ஒன்றல்ல என்று வலியுறுத்தப்படுகிறது. பிரகலாதனுடைய வாதம், வேதத்தையும் வேதக்கல்வியையும் இன்றியமையாதவை அல்ல என்று ஆக்கிவிடுகிறது.

வேத, வேதாந்தங்களுக்கு மேம்பட்டவன் பரம்பொருள் என்று பிரகலாதன் வாதிட்டான். வேத வேதாந்தங்களை விடச் சாங்கியமும், யோகமும் அவனது தனிப்பட்ட நிலையை உணர்த்த வல்லவை என்று அவன் கூறினான். 'வேதமும், வேதவிதிகளுந்தான் எல்லாம்' என்கிற இரணியனின் கூற்றைக் கண்டித்து, அவற்றுக்கும் மேற்பட்டவனாகப் பரம்பொருள் இருப்பதை உணர்த்த

முற்படுகிறான் பிரகலாதன். மேலும், பிராமணத் தலைமையோடு, ஆதியிலிருந்தே முரண்பட்டு வரும் சாங்கியம், யோகம் ஆகியவற்றையும் அவன் ஆதரித்துப் பேசுகிறான்.

எந்த வேத அதிகாரத்தை எதிர்த்து, முதலில் நான் மறையாளனிடமும், பின்னர் இரணியனிடமும் பிரகலாதன் வாதிட்டானோ, அந்த வேதமுங்கூட, ஒரு பக்தனான பிரகலாதனின் கட்டளைப்படியே பணி செய்ய வேண்டும் என்று, நரசிங்கமாகிய பரம்பொருள் கூறுயது. 'ஒரு பக்தனுக்கு எல்லாம் தெரியும். வேத ஞானம் அவனுக்கு ஒரு பொருளல்ல' என்று வேதியனிடம் முதலில் பிரகலாதன் கூறினான். 'வேதந்தான் எல்லாம், அவற்றின் விதிகளும் அப்படியே' என்று வேத அதிகாரத்தை வலியுறுத்திய இரணியனிடம், வேதமும், வேதாந்தமும் உணர்ந்துரைக்க முடியாத பரம் பொருள் தான் எல்லாம் என்று கூறி, இரணியன் பேசிய பூர்வ மீமாம்சத்தின் கடவுள் மறுப்புக்குப் பதில் சொன்னான் பிரகலாதன் இந்த விவாதம் முடிவுக்கு வருகிறபோது, வேதம், ஒரு பக்தனான பிரகலாதனின் மனம்போல் பணி செய்ய வேண்டும் என்னும் நிலைமை ஏற்படுகிறது. பக்திக்கும், வேத அதிகாரத்திற்கும் ஏற்படும் மோதலில் வேத அதிகாரம் முழுத் தோல்விக்கும் ஆளாக்கப்படுவதைக் கம்பன் தெளிவாகக் காட்டுகிறான்.

'திருமாலின் அடியவர்க்கு அடியவர்களாகும் பக்தர்களுக்கு எல்லாம் தெரியும்' என்று பிரகலாதன் மூலமாக அடித்துச் சொல்கிற கம்பன், சாங்கியத்தையும், யோகத்தையும் துணைக்கு அழைத்துக் கொள்கிறான். வேத அதிகாரத்திற்கு எதிராகச் சொல்கிற கம்பன் நரசிங்கத்தை நிறுத்துவதில் வரலாற்று முக்கியத்துவமிருக்கிறது. புறச்சமயத்தைச் சேர்ந்தவர்களின் வழிபடும் ஸ்தலங்களைக் கைப்பற்றிய வைணவர்கள் அங்கே நரசிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ததாக மயிலை சீனி வேங்கடசாமி சொல்கிறார். நரசிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தது, பக்தி

மதத்திற்கும் புறச் சமயத்திற்கும் நடந்த உக்கிரமான போராட்டத்தை உணர்த்துவதாக இருக்கிறது. வேத அதிகாரத்திற்கு எதிராக நரசிங்கத்தை நிறுத்தும் செயல், வேத அதிகாரத்தை வீழ்த்துவதில் கம்பன் எவ்வளவு தீவிரமாக இருக்கிறான் என்பதைக் காட்டுவதாக இருக்கிறது. மேலும், புறச் சமயத்துடன் நடந்த போராட்டத்தோடு பக்தி மதத்தின் பணி முடிந்து விடவில்லை என்பதைக் காட்டுவதாகவும், நரசிங்கத்தை வைத்து வேத அதிகாரத்தை வீழ்த்த முயன்ற செயல் இருக்கிறது. வேள்வி, சடங்குகள் ஆகியவற்றின் மேல் நடந்த தாக்குதல் உண்மையிலேயே பிராமணர்களின் ஆதிக்கம், சலுகைகள் ஆகியவற்றின் மேல் தொடுத்த போராக இருந்தது என்கிறார் 'இந்தியத் தத்துவத்தில் மனிதனும் சமூகமும்' என்கிற நூலில் கே.தாமோதரன். அநீதி, ஏற்றத்தாழ்வு அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிரான கிளர்ச்சிகளுக்கு ஊக்கந்தரும் மூலாதாரமாகவும் அந்தத் தாக்குதல் இருந்தது என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

சோழப்பேரரசில், திருத்துறைப்பூண்டியருகே, குகையிடிக்கலகம் என்ற பெயரில் சைவமடங்கள் அழிக்கப்பட்டதையும், சோழப் பேரரசர்கள் வைதீகக் குருக்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்ததையும், அந்தக் காலத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் தலைதூக்கி நின்றதையும் எண்ணிப் பார்க்கிறபோது, இராமானுஜரின் மேல் எடுக்கப்பட்ட கொடிய நடவடிக்கைக்கு வெறும் சமயப்பூசல் காரணமாயிருக்கும் என்று எண்ண முடியவில்லை. ஆதிக்கக்காரர்களின் கழுகுப் பார்வையின் கீழ், அடித்தளத்து மக்களிடம் கருணை காட்டுபவர்களுக்கு என்ன பரிசு கிடைக்குமோ, அந்தப் பரிசுதான் இராமானுஜருக்கு அவரது வயதான காலத்தில் வழங்கப்பட்டது. எந்தப் பெயரிலே கொடுமையிழைக்கப் பட்டாலும், அதனுடைய உள்நோக்கம் இராமானுஜரின் கொஞ்ச நஞ்ச சீர்திருத்தத்தையும் முறியடிப்பதாகத்தான் இருக்க முடியும் என்பதை அந்தக் காலச் சூழ்நிலையைப்

பார்த்தால் தெளிவாக உணர முடியும். இராமானுஜரைப் போலவே கம்பனும் சோழப் பேரரசின் அதிருப்திக்குப் பாத்திரமானான், சோழ மன்னனின் புகழைப்பாடும் கவிஞர்களின் வீட்டில் பொன்னும் மணியும் குவிந்திருப்பதைப் பற்றிக் கம்பன் தன் காவியத்தில் உதாரணமாகக் குறிப்பிடுகிறான் போற்றும் கவிஞர்களுக்குப் பொன்னும் பொருளும் கிடைக்கும் என்றால், போற்றாத கம்பனைப் போன்றவர்கள் அதிருப்திக்கு ஆளாவது இயற்கை. அதிலும், கம்பன் வேத அதிகாரத்தை மறுத்து, வேதியர்களைத் தலைமையாகக் கொண்ட ஆளும் வர்க்கத்தாருக்கு அறைகூவல் விட்ட பின்னால், மன்னனைவிட தேசம் முக்கியமென்றும், மக்கள் முக்கியமென்றும் வெளிப்படையாகவே பாடிய பின்னால், சோழப் பேரரசின் விரோதம் அவனுக்கு ஏற்பட்டிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. 'அம்பிகாபதி, அமராவதி' போன்ற கர்ணபரம்பரைக் கதைகள் சோழப் பேரரசுக்கும் கம்பனுக்கும் இடையில் நிலவிய கொடிய விரோதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வடிவம் பெற்றிருக்க முடியும்.

கற்பனா சோசலிசம்

இந்தியச் சிந்தனை மரபுக்கு முற்றிலும் மாறுபட்ட சில வர்ணனைகள் கம்பனின் காவியத் தொடக்கத்திலேயே காணப்படுகின்றன. இராமன் பிறக்கவிருக்கும் நகரத்தையும், நாட்டையும் பற்றியவையாக அவை அமைகின்றன. 'வறுமையில்லை என்பதனால் வள்ளல் தன்மைக்கு இடமில்லை', 'எல்லோரும் எல்லாம் பெற்றிருப்பதனால் இல்லாதவர்களாக யாரும் இல்லை. அதனால் உடையவர்கள் என்றும் சிலரைப் பிரித்துச் சொல்ல முடியாத நிலை'. இப்படியொரு பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமூக அமைப்பு அயோத்தியில் காணப்பட்டதாகக் கம்பன் சித்தரிக்கிறான். இத்துடன் நிற்காமல் சமத்துவத்தை அதன் தர்க்க ரீதியான முடிவுக்கும் அவன் கொண்டு செல்கிறான். கல்லாதவர்கள் யாரும் இல்லையென்பதனால் கலை

முழுவதும் வல்லவர்கள் என்றும் ஒரு சிலரைப் பிரித்துச் சொல்ல முடியாது. 'கேள்வி ஞானம் ஓங்கியதால், ஒரு சிலர் மற்றவர்களைவிட மிஞ்சிப் பிரகாசிக்கவும் வாய்ப்பில்லை. பொருளாதாரச் சமத்துவத்துடன், கல்வி கேள்வியிலும் சமத்துவம் நிலவியதாகக் கம்பன் கற்பிக்கிறான். அதே சமயத்தில் சமத்துவ சமூகம் வெறும் கற்பனையாகச் சொல்லப்பட்டது என்பதனையும் பின்னால், தான் தரும் விவரங்களால் அவனே தெளிவுபடுத்தியும் விடுகிறான்.

சமத்துவ சமூக அமைப்பைப் போற்றும் கம்பனின் வர்ணனை இந்தியச் சிந்தனை மரபோடு முரண்படுகிறது. மேலும், அதற்கு ஓர் அறை கூவலாகவும் இருக்கிறது. மாறாத சமூக அமைப்பைத்தான் இந்தியச் சிந்தனை மரபு எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறது. 'வருணாசிரமம் எனப்படும், ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பைச் சாசுவதமானதென்று இந்து தர்ம சாஸ்திரங்கள் சாதித்து வந்திருக்கின்றன. சமத்துவ சமுதாயம் ஒரு பக்கமிருக்க, சமுதாய மாற்றத்தைக் கூட இந்தியச் சிந்தனை மரபு பகைத்து வந்திருக்கிறது. இந்தியச் சிந்தனை வளர்ச்சியும் பெரிய அளவு சமுதாய மாற்றங்களைப் பிரதிபலிக்கவில்லை.

சமூகத்தின் பல பகுதிகளுக்கிடையே ஒன்றிற்கொன்று நிலவி வருவதாகக் கருதப்பட்ட உறவுகளின் முழுமைக்குத்தான் இந்த நாட்டில் தர்மம் என்று பெயர் சொல்லி வந்தார்கள். ஒரு பகுதியினர் ஏவல்புரிவதற்கு மட்டும்தான் என்று கூறுகிற இதனைக் காலதேசங்களைக் கடந்த 'சநாதன தருமம்' என்று அழைத்தார்கள். இந்தத் தர்மத்தின்படியான சமுதாய ஏற்பாட்டை யாராலும் மாற்ற முடியாது என்று கருதினார்கள். இத்தர்மத்தின் அடிப்படையில் நாட்டையாளும் உரிமை மட்டும் மன்னர்களுக்கு உண்டு. தருமத்தை, அதாவது சமூகத்தில் நிலவுகிற உறவு முறைகளை மாற்றி அமைக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. சமுதாய முழுமைக்கும் தலைமை தாங்கும் சக்தியாக இந்தத் தருமம் கருதப்பட்டது.

தருமத்தை அமுல் நடத்த வேண்டியவனாக மட்டுமே மன்னன் இருந்தான்.

இடைக்காலத்திலே இந்து தர்மசாஸ்திரங்கள் இந்திய உபகண்டத்தின் தெற்கு மூலையிலேயுங்கூட ஆட்சியைக் கைப்பற்றிவிட்ட சூழ்நிலையில், சமத்துவ அமைப்பைப் பற்றிக் கம்பன் வர்ணிப்பது வைதிக மரபோடும் ஆளும் வர்க்கத்தோடும் மோதும் செயலாகிறது. சமத்துவ அமைப்பு வர்ணனையோடு மட்டும் நிற்காமல், யுத்த காண்டத்தின் இரணியன் வதைப்படலத்தில் வேத அதிகாரத்தையே நேரடியாகத் தாக்குவதன் மூலம், சமுதாய மாற்றத்தை எதிர்க்கும் சக்திகளின் மூலபலத்தையே அழிக்க முற்படுகிறான் கம்பன். வேத அதிகாரத்தின் மேல் விழும் அடி சிறிதும் தவறாமல் அதனைச் சார்ந்திருக்கும் தர்ம சாஸ்திரங்களின் மேலும் விழுகிறது. அவன் வாழ்ந்த காலத்தில் நாட்டின் நீதி பரிபாலனத்தில், தர்ம சாஸ்திரங்களின் செல்வாக்கு பூரணமாக இருந்ததால், ஆளும் வர்க்கத்தாருக்கும் சாதகமாக இருந்த நீதி பரிபாலனமும் அவன் தாக்குதலுக்கு ஆளாகிறது. நீதி சாஸ்திரங்களை ஒட்டு மொத்தமாகத் தூக்கி எறியும்படி தன் காவியத்தில் சொல்லாவிட்டாலும், சமுதாய மாற்றத்திற்கு உகந்ததாக நீதி சாஸ்திரங்களும் மாற வேண்டும் என்பதில் அவன் குறியாக இருந்தான்.

அவனது இந்த நோக்கத்தை வாலி வதைப் படலம் தெளிவாக உணர்த்துகிறது. வாலி மனுதர்மத்தின்படி நடப்பவனாக இராமனை எதிர்பார்த்திருந்தான். அதனால்தான் 'புன்தொழில் குரங்கொடு இராமன் நட்பு கொள்ள மாட்டான்' என்று அவனைப் பற்றித் தன் மனைவியிடம் கூறினான். காலத்தால் மாறாததென்று கருதப்பட்ட அந்தத் தர்மசாஸ்திரத்தின்படி சமுதாய ஏற்றத்தாழ்வு சத்தியமான ஒன்றாகும் அந்த அடிப்படையில்தான் 'புன்தொழில் குரங்கொடு' இராமன் நட்பு கொள்ளமாட்டான் என்கிற முடிவு ஏற்படுகிறது. வாலி எதிர் பார்த்தது நடக்கவில்லை. பரம் பொருளாகக் கருதப்படும் இராமன், தான் வாலிக்கும்

சொன்ன பதில் மூலம், மாறாததென்று எண்ணப்பட்ட நீதி முறையிலே மாற்றத்தைச் செய்கிறான். வாலியின் சாதிய பழக்க வழக்கங்களை நிராகரிக்க வரும் இராமன், ஒருவனைப் பிறப்பை வைத்து மதிப்பிடாமல், உணர்வையும். அறிவையும் வைத்து மதிப்பிட வேண்டும் என்று சொல்கிறான். தான் இப்படிச் சொல்வதற்கு இராமனே செயல் வடிவமும் தருகிறான். குகனைத் தன் சகோதரனாக ஏற்கிற அவன் குரங்கினத்தைச் சேர்ந்த சுக்ரீவனையும், அரக்கனான வீடணனையும், கூட உடன் பிறப்புக்களாக ஆக்கிக் கொள்கிறான். காலத்தால் மாறாதவை என்று நம்பப்பட்ட இந்து தர்ம சாஸ்திரங்கள் நிலைமைக்கேற்ப மாறத் தான் வேண்டும் என்பதனை மேற்கண்ட முறையில் கம்பன் வலியுறுத்தினான்.

இராமனை வீடணன் முதன் முதலில் சந்திக்க வரும் இடத்தில், தர்ம சாஸ்திரங்களின் பங்கு என்ன என்பதை அவன் தெளிவாக வரையறுக்கிறான். கருணை என்னும் கோவிலின் வேலிகளாக, அவன் தருமத்தையும், ஞானத்தையும் நிர்ணயம் செய்கிறான். இந்த மதிப்பீடு மரபோடு முற்றிலும் முரண்படுவதாக இருக்கிறது. மரபின்படி, வேதமும், தர்ம சாஸ்திரங்களும், அவற்றின் அளவிலேயே பூரண அதிகாரமுடையவை ஆகும். ஆனால், இங்கே கருணையைப் பாதுகாக்க வேண்டிய வேலிகளாக ஞானமும், தவமும், தர்ம சாஸ்திரங்களும் ஆகிவிட்டன. கருணைக்கு முரண்படாமல், அதற்கு ஏற்ப தர்ம சாஸ்திரங்கள் மாற வேண்டும் என்னும் கட்டாயத்தைக் கம்பன் ஏற்படுத்துகிறான். கருணைக்குக் காவலாக தர்ம சாஸ்திரங்கள் பொறுப்பேற்கும்போது, சமுதாய உறவு முறைகள் சமத்துவத்தை நோக்கிக் காலப் போக்கில் நடைபோடுவது தவிர்க்க முடியாததாகும்.

சமத்துவ சமுதாயத்தை நோக்கிய நெடும் பயணத்தைத் தொடங்கிவைக்கும் கம்பன் தர்ம சாஸ்திரங்களின் மாற்றத்தைப் பற்றிச் சிந்திப்பதோடு மட்டும்

நிற்கவில்லை. டி.டி.கோசாம்பியின் பார்வையில் நிலப்பிரபுத்துவத்தையும், பக்தி மதத்தையும் தொடர்புபடுத்துகின்ற நன்றி விசுவாசம் ஆகிய குணங்களைப் பற்றியும் அவன் சிந்திக்கிறான். சமுதாய மாற்றத்திற்குப் பயன்படும் வகையில் நன்றி, விசுவாசம் ஆகிய குணங்களையும், வீரம், மானம் ஆகியவற்றைப் பற்றியும், அவன் சிந்திக்க நேர்கிறது. நன்றி, விசுவாசம் என்கிறபோது, அவற்றோடு முரண்படக் கூடியதாக வீடணின் பெயர் தொனிக்கிறது. வீடணன் அரக்கர் தலைவனிடம் நன்றியோடும்; விசுவாசத்தோடும் நடந்து கொள்ளவில்லை, மாறாக அரக்கர் தலைவனும், அவன் அண்ணனுமான இராவணனைக் கொல்ல முனைகிற மாற்றார்களுடன் சேர்ந்து, இராவணன் இந்திரசித்தன் போன்றவர்களின் பார்வையில் துரோகியாகவும் ஆகிவிடுகிறான். இந்திய நாட்டில் பரவலாக எடுத்தாளப்படும் ஓர் உதாரணமாக 'வீடணத்துரோகம்' என்பது இன்றுமிருக்கிறது. வீடணின் செயல்களை ஓர் அர்த்தத்துடன் கம்பன் சித்தரிக்கிறான்.

வெறும் அரசுரிமைக்கு ஆசைப்பட்டவனாகக் கம்பன் காட்டும் வீடணன் அமையவில்லை. உயிர்களுக்குத் தாயைப் போன்ற உணர்வுள்ள பிரகலாதனை ஒத்த அவன். எல்லோரும் மேம்பட இராமன் நிறுவ வரும் அன்புலகுக்காக அண்ணனும், குலத்தலைவனுமான இராவணனுக்குத் துரோகம் செய்பவனாக ஆகிவிடுகிறான். நன்றியும் விசுவாசமும் போற்றப்பட வேண்டியவை யானாலும், எல்லோருடைய நலத்திற்கும் எதிராக அவை போய்விடுமானால், அவற்றை நிராகரித்துச் செல்வதுதான் தீரம். அந்தத் தீரமுள்ள அன்பு வீரனாக வீடணனைக் கம்பன் சித்தரிக்கிறான். இந்தத் தகுதியால்தான் வீடணனை இராமன் தன் உடன் பிறந்தவனாக ஆக்கிக் கொள்கிறான். நன்றியும், விசுவாசமும் எந்தச் சமூக நன்மைகளுக்காக ஏற்பட்டனவோ அந்த நன்மைகளைவிட மேலான நோக்கங்களுக்காக அவை வீடணனால் மீறப்பட்டன. நன்றி, விசுவாசம் ஆகியவை மக்களைக் கேள்விமுறையற்ற அடிமைத்தனத்திற்கு இட்டுச் செல்வதைக் கம்பனின் இந்தச் சித்தாந்தம் தடுக்கிறது.

ஒரு சமத்துவச் சிந்தனையாளன் தான் விரும்பும் சமூக அமைப்பில் மற்றவர்களின் உழைப்பினைச் சுரண்டுவதற்கு இடம் தரமுடியாது. கம்பனின் இலட்சிய சோசலிசத்திலும் மற்றவர்களின் உழைப்பிலே பிழைப்பவர் ஒதுக்கப்படுகிறார்கள். உழுதுண்பவர்கள், உழுவித்து உண்பவர்கள் என்னும் பிரிவு நிலைபெற்றுவிட்ட காலத்தில் வாழ்ந்தவன் கம்பன். நிலத்திலே உழைக்கும் மள்ளர்கள். சாலையின் முதுகு நெளியமாறு நெல்லை வண்டியிலேற்றி, விருந்தோடு உண்பதற்காக வீட்டிற்குக் கொண்டு போனார்கள் என்கிறான் கம்பன். உழைப்பவர்களுக்கே உழைப்பின் பயன் சேர்வதனைச் சித்திரமாகத் தீட்டுகிறான். இந்தச் சித்திரம் கம்பனின் கற்பனை நாட்டில், உழுவித்துண்பர்களுக்கு இடமில்லை என்பதனை உணர்த்துகிறது.

ஆளும் வர்க்கத்தின் பாதுகாவலர்கள் என்னும் முறையில் பிராமணர்களின்மேல் அவன் தாக்குதல் அதிகமாக விழுகிறது என்பதுதான் உண்மை. பிராமணர்களின் சாதிய நிறுவனத்தைச் சமுதாயத்திற்கு அவசிய மற்றதென்று வரையறுக்கும் கம்பன் அரசாள்பவரை இன்றியமையாதவராய் நினைக்கிறான். அரசனில்லாமல் ஓர் ஆட்சி இருக்க முடியாது என்னும் நம்பிக்கைதான் அதற்குக் காரணம். ஆனால் அரசனின் தன்மை, கடமை, உரிமை ஆகியவற்றை நிர்ணயிக்கும்போது அவன் தன் சமத்துவ நோக்குக்கு ஏற்பவே அதனைச் செய்கிறான்.

மன்னனுடைய தெய்வாம்சத்தையும் கேள்விக்கிடமாக்குகிறான் கம்பன். வேடர் விடுகிற அம்பு மன்னவர் நெஞ்சிலே தைக்காதா என்னும் கேள்வி மன்னவர்களின் தெய்வாம்ச வே த்தை அம்பு முனையிலே கலைப்பதைப் போல் இருக்கிறது.

வான்மீகியின் கதாநாயகனான இராமன், கம்பன் காவியம் செய்வதற்கு முன்னாலேயே கடவுளாகிவிட்டது அவனுக்கு மிகவும் வசதியாய் விட்டது. பழைய தர்மத்திற்கு ஆதாரமான வேதத்திற்கும் வேத அதிகாரத்திற்கும் எதிராக

நரசிங்கம் என்னும் பரம் பொருளைக் கம்பன் நிறுத்தினான். சமத்துவத்திற்குச் சாதகமான புதிய தர்மத்தைப் போதிப்பதற்கு இராமனாக வந்த பரம்பொருள் அவனுக்குப் பயன்பட்டான். இராமன் கடவுளாகக் கருதப்பட்டது மிகவும் பிற்காலத்தில் தான் என்கிறார். ஆர்.ஜி. பண்டார்க்கர். தமிழ் இலக்கியச் சான்றுகளும் அதையே உறுதி செய்கின்றன. பழைய சங்க இலக்கியங்களில் இராமாயணக் கதை பற்றிய குறிப்பு வந்தாலும், இராமனைக் கடவுள் என்ற அளவில் முதன் முதலில் குறிப்பிடுவது சிலப்பதிகாரந்தான். ஆழ்வார்களின் காலத்தில் இராமன் பரம்பொருள் என்பது பெரிதும் செல்வாக்குப் பெற்றது. பழைய இராமாயணக் கதையில் குகனுடன் இராமன் கொண்ட நட்பைச் சகோதரத்துவமாக மாற்றினான் திருமங்கை மன்னன். ஏற்றத்தாழ்வுகள் அற்ற நிலையில் எல்லோரையும் ஒருங்கு திரட்ட அவன் இராமனைப் பயன்படுத்திக் கொண்டான். ஒவ்வொரு அவதாரமும் யுகமாற்றத்தையோ, மனு தர்மத்தின் மாற்றத்தையோ குறித்தது என்று எஸ்.ஏ. டாங்கே கூறுகிறார். இதன் படி, வேற்றுமைகளை நீக்கி மக்களை ஒருங்கு திரட்டுவதற்கு இராம அவதாரம் திருமங்கை மன்னன் போன்றவர்களுக்குப் பயன்பட்டது. திருமங்கை மன்னன் போன்றவர்களுடன் கம்பனையும் சேர்த்துப் பார்க்கிறபோது இராம அவதாரம் யுகமாற்றத்தையும் மனு தர்ம மாற்றத்தையும் குறிப்பதாகவே இருக்கிறது. சமத்துவத்தை இலக்காகக் கொண்ட சமுதாய மாற்றத்திற்கு உதவும் புதிய தர்மத்தைப் போதிப்பதற்கு இராமன் பரம் பொருள் என்பது பெரிதும் பயன்படுகிறது.

சமத்துவத்தை இலட்சியமாகக் கற்பித்துக் கொண்ட கம்பனுக்கும், மார்க்சுக்கு முந்திய பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த கற்பனா சோசலிஸ்டுகளுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. வரலாற்றைப் பற்றிய ஒருமை நோக்கின் வளர்ச்சி' எனும் நூலில் பிளக்கனோவ் சொல்வதைப்போல் இங்கிலாந்தையும்

பிரான்சையும் சேர்ந்த அந்தக் கற்பனா சோசலிஸ்டுகள் மனித இயல்பை முதன்மையாகக் கருதினார்கள். மனித இயல்புக்கு உகந்ததாகும் சட்டங்களையும், சமுதாய முறையையும் கண்டுபிடிக்க முயன்றார்கள். ஆனால் மனித இயல்பென்றால் என்னவென்பதிலேயே ராபர்ட் ஓலினிலிருந்து, செயிண்ட் சைமனைச் சார்ந்தவர்கள் வரையிலான அந்தக் கற்பனா சோசலிஸ்டுகள் தங்களுக்குள் மாறுபட்டார்கள் என்பது வேறு செய்தி. அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவனான கம்பனும் மனித இயல்பை மையமாக வைத்தே சமத்துவத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கிறான். சாதிய தாழ்வு மனப்பான்மை போன்றவை ஒரு வகையிலும், தன்னையே மையமாகக் கொள்ளும் தன்மை, மற்றவர்களை அடிமை கொள்ளும் எதேச்சதிகாரத் தன்மை போன்றவை இன்னொரு வகையிலும் மனித இயல்பை விகாரப்படுத்துவதாக அவன் கருதினான். மனித இயல்பை மாசுபடுத்தும் இந்த விவகாரங்கள் எப்படிக் களையப்படுகின்றன என்பதையே அவன் தன் காவியத்தின் அடிநாதமாக்கினான். ஆனால் ஒரு வகையில் கம்பன் அந்தக் கற்பனா சோசலிஸ்டுகளிடமிருந்து வேறுபடுவது குறிப்பிடத்தக்க ஒன்று. சுதந்திரப் பொருளாதாரக் கொள்கையின் பிதாமகனாகும் ஆடம்ஸ்மித்தின் பிரான்ஸ் நாட்டு வாரிசான ஜே.பி.சே 'ஒரு பொருளாதார நிபுணன் அரசியல் பிரச்சனையில் ஆர்வங்காட்ட கூடாதென்கிறான். ஜே.பி. சேயினுடைய இந்தக் கருத்தைச் செயின்ட் சைமன் பாராட்டுவதைக் குறிப்பிடும் பிளக்கனோவ், ஒரு சிலரைத் தவிர பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்ற எல்லாக் கற்பனா சோசலிஸ்டுகளும் அரசியலைப் பற்றிய தீண்டாமைக் கொள்கை உடையவர்களே என்று விளக்குகிறார்.

ஒரு மாபெரும் தொடக்கம்

சமத்துவத்தை இலட்சியமாகக் கம்பன் கொண்டிருந்தாலும், ஒரு காலக்கெடுவிற்குள் நிறைவேற்ற வேண்டிய திட்டமாக அந்த இலட்சியம் இருக்கவில்லை. சமத்துவத்தை இலட்சியமாகக் கொள்கிறபோது

சமுதாயமாற்றம் ஓர் அவசியமான நியாயமாகிவிடுகிறது. நியாயமான சமுதாய மாற்றத்தைக் காரணமாக்கி ஆளும் வர்க்கத்தின்மேல் கம்பன் போர் தொடுக்கிறான். அடித்தளத்து மக்களுக்குச் சாதகமாகப் போர் தொடுப்பது தான் அவனது உடனடி நோக்கம். இந்த நோக்கத்திற்கு உதவும் சரியான தத்துவார்த்த அடிப்படையாக அவனது சமத்துவ இலட்சியம் அமைகிறது. ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போர்க் குறிப்புகள் அவன் காவியத்தில் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததுபோல் இரணியன் வதைப்படலம் அமைகிறது. 'பக்திதான் எல்லாம். வேதம், விதிகளெல்லாம் முக்கியமல்ல' என்று கூறி பிராமணர்களின் இன்றியமையாமையை அந்தப் படலத்தில் அவன் அர்த்தமற்றதாக்கி விடுகிறான். இப்படி ஒருவன் செய்வது எங்கே போய் முடியும் என்பதை டாங்கே தெளிவாக விளக்குகிறார். 'தாழ்த்தியொடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து வந்த (அந்த) ஞானிகள் சாதாரண பக்தி முறையைத் தீர்வுக்குப் பாதையாக பிராமணர்களின் இடையீடு இல்லாமலேயே கண்டுபிடித்தார்கள். செலவில்லாமல் விண்ணுலக மோட்சத்தை அடையச் செய்யும் இந்தக் கலகம் வெகுவிரைவில் கட்டாய வேலை, அதாவது சாதி - கர்ம, சாதி தர்மங்களால் ஏற்படுத்தப் பட்ட பொருளாதாரக் கட்டாயங்களிலிருந்து மண்ணுலக சுபிட்சத்திற்கான கலகமாகப் பழுத்து பக்குவமடையக் கூடும்.

கம்பன் வேத அதிகாரத்தைத் தாக்குவதோடு நின்று விடவில்லை. 'உடையாரும் இல்லை. இல்லாரும் இல்லை' என்று சமத்துவம் வேறு பேச ஆரம்பிக்கிறான் டாங்கேயின் மொழியில் சொன்னால் மண்ணுலக சுபிட்சத்திற்கான கலகத்தைத் தூண்டுபவனாகக் கம்பன் தோன்றுகிறான்.

இப்படிப்பட்ட கலகக்காரனிடம் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிராமணர்களும், மன்னனும் பகை கொள்வது தவிர்க்க முடியாததாகும். அப்படி உண்மையிலேயே பகை

ஏற்பட்டதனைக் கர்ண பரம்பரைக் கதைகள் உறுதி செய்கின்றன. முன்பு குறிப்பிட்டதுபோல் சீரங்கத்தின் கோயில் பிராமணர்கள் கம்பனின் இரணியன் வதைப் படலத்தை எதிர்க்க முற்பட்டதைக் கூறும் கர்ண பரம்பரைச் செய்தி அவன்மேல் பிராமணர்கள் கொண்ட பகையைக் காட்டும். பரணி பாடிய ஜெயங்கொண்டானும், ஒட்டக்கூத்தனும், சோழர்களின் அவையை அலங்கரித்த கவிஞர்கள், கவிச்சக்கரவர்த்தி யென்று மன்னர்களாலே பாராட்டப்பட்டவர்கள். பரணியின் பாடல்களுக்குப் பொன்தேங்காய்களால் மன்னன் பரிசளித்தான் என்னும் செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். சோழர்களின் தோளைப் புகழ்ந்த கவிஞர்களின் வீட்டில் பொன்னும் மணியும் குவிந்திருந்ததைக் கம்பனும் குறிப்பிடுகிறான். ‘கலகக் காரனான’ கம்பன் தன் தேசமன்னனைப் பெரிதாகப் பாராட்டவில்லை என்பது ஒன்று, சடையப்பன் என்பவனை மிகவும் சிறப்பாகத்தன் காவியத்தில் பாராட்டியிருக்கிறான் என்பது இன்னொன்று.

மக்கள் செல்வாக்கு மட்டுமில்லாமல், வெண்ணெய் நல்லூர்ச்சடையன் போன்ற நண்பர்களின் ஆதரவும் கம்பனுக்கு இருந்திருக்கிறது. சடையப்பனுக்குத்தன் காவியத்தில் அவன் சிறப்பு செய்ததற்கு ஆழமான காரணம் இருந்திருக்க வேண்டும். வெறும் பொன்னும், மணியும் கம்பனின் கருத்தென்றால் சடையப்பனை விடச் சோழ மன்னனின் ஆதரவே கம்பனுக்குப் பயன்பட்டிருக்கும். கம்பனைப் போன்ற ‘கலகக்காரன் பொன்னையும் பொருளையும் பெரிதாக நினைத்திருக்கமாட்டான். கம்பனைப் போன்ற ‘கலகக்காரனு’க்கு ஆதரவு தந்தவன் என்பதே சடையப்பன் எப்படிப்பட்டவன் என்பதனை உணர்த்தப் போதுமானதாகும். சடையப்பனுக்கு இராமாயணத்தில் இடந்தந்ததை பிராமணர்கள் எதிர்த்திருப்பதையும் கர்ணபரம்பரைக் கதை காட்டுகிறது. நன்றிக்குத் தன் காவியத்தில் எல்லை கட்டிக்காட்டும் கம்பன் வெறும் நன்றியறிதலின் பாற்பட்டுச் சடையப்பனைப்

பாராட்டியிருக்க மாட்டான். தன் இலட்சியத்தில் பரிவுகாட்டாத ஒருவனிடமிருந்து அவனால் எந்த உதவியையும் பெற்றிருக்க முடியாது. அதனால் சடையப்பன் கம்பனின் இலட்சியத்தை மதித்து அவனுக்கு ஆதரவு காட்டியவனாக இருக்க வேண்டும். ஆளும் வர்க்கத்தின் பகையைத் தேடிக்கொண்ட கம்பனுக்கு ஆதரவு தரும் துணிச்சல் காரனாகச் சடையப்பன் இருந்திருப்பான். கம்பன் அவனுக்குச் செய்கின்ற சிறப்பைப் பார்க்கும்போது, மன்னனாகும் தகுதியென்று அவன் காவியத்தில் நிர்ணயிக்கும் தாயன்பு நெஞ்சத்தைப் பெற்றவனாகச் சடையப்பன் இருந்திருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. பிராமணர்கள், பேரரசு ஆகியவற்றின் பகையைத் தேடிக்கொண்டவனாகக் கம்பன் இருக்கிறான். அதே நேரத்தில் அந்தப் பகையை ஓரளவு தாக்குபிடிக்கக் கூடிய மக்கள் செல்வாக்கையும், சடையப்பன் போன்றவர்களின் ஆதரவையும் கம்பன் பெற்றிருந்திருக்கிறான். ஆளும் வர்க்கத்தின் மேல் கம்பன் போர் தொடுத்ததும், சோழப்பேரரசோடு அவனுக்கு நேர்ந்த பகைச்சூழலும் குறிப்பிடத்தக்கவையாய் இருக்கின்றன.

பக்தி மத வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையைச் சோழநாட்டிலே வாழ்ந்த தமிழ்க் கவிஞனான கம்பன் ஏற்படுத்தியிருக்கிறான் என்பது கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் தெளிவாகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வேதமதத்தை எதிர்க்கும் பௌத்தமும், சமணமும் தோன்றின. ஏறத்தாழ அதே காலத்தில் மேற்கிந்தியாவில் தோன்றிய பக்தி மதமும் வேதமத எதிர்ப்பு உடையதாக இருந்திருக்கிறது. பௌத்தமும் சமணமும் மக்கள் செல்வாக்கில் மிகவும் மேலோங்கிய நிலை காலப்போக்கில் ஏற்பட்டது. வேகமாக மாறிக் கொண்டிருந்த பொருளாதாரச் சூழ்நிலைக்குப் பொருந்ததாத தன்னுடைய நெகிழ்ச்சியற்ற வருணபாகுபாடு போன்றவற்றால் மக்கள் செல்வாக்கைப் பெரிதும் இழக்கக்கூடிய நிலைக்கு வேதமதம் ஆளாகிக்

கொண்டிருந்தது. அப்போது பக்தி மதத்திற்கும், வேதமதத்திற்கும் உறவேற்பட்டது. பகவத்கீதை வேத மதத்திற்கும், பக்தி மதத்திற்கும் ஏற்பட்ட உறவை அங்கீகாரம் செய்யும் அதிகாரபூர்வமான சாசனமாகத் திகழ்கிறது. பக்தி மதத்தோடு ஏற்பட்ட உறவின் காரணமாக வேதமதத்தால் மக்கள் செல்வாக்கைப் பெருமளவுக்குத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. ரோமபுரியின் வீழ்ச்சிக்குப் பின்னால் இந்தியாவின் வணிகவர்க்கம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. கிட்டத்தட்ட தன்னிறைவான கிராமங்கள் நிறைந்ததாக இந்தியா உருமாறியது. தன்னிறைவான கிராமங்கள் வணிக வர்க்கத்திற்கு மரண அடியைத் தந்தன. அந்தச் சமயத்தில் ஊர்ப்புறத்தில், நிலவுடைமையாளர் களாகவும், நிலவுடைமையாளர்களாகிற ஆளும் வர்க்கத்தின் பாதுகாவலர்களாகவும் பிராமணர்கள் ஆகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. பிரபாகரர், குமாரிலபட்டர் போன்ற பூர்வ மீமாம்சகர்கள் பழைய பிராமணங்களின் காலத்தில் நிலவிய பிராமணர்களின் ஆதிக்கத்தைத் திரும்பவும் ஏற்படுத்த உதவினர். ஆக பிராமணர்களை உறுப்பாகவும், பாதுகாவலர்களாகவும் கொண்ட புதிய ஆளும் வர்க்கம் ஆட்சிபெறக் காத்திருந்தது.

இந்தச் சூழ்நிலையில் வணிக வர்க்கத்திற்கு ஆதரவான பௌத்தம், சமணம் போன்ற ஆளும் வர்க்க மதங்களுக்கு எதிராக மக்கள் இயக்கத்தை நடத்தி அவற்றை முறியடிப்பதில் பக்தி மதங்களான சைவமும் வைணவமும் பெருவெற்றி பெற்றன. பெற்ற வெற்றியோடு பக்தி மதம் பின்னணிக்குப் போக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பிராமணர்களைப் பாதுகாவலர்களாகக் கொண்ட நிலவுடைமை ஆளும் வர்க்கத்தின் அதிகாரம் தங்கு தடையற்றதாக ஆனது. தேவார திவ்யபிரபந்தமாகும் பக்தியியக்கப் பாடல்களைத் தேடிக்கண்டு பிடிக்கவும், அலைந்து தொகுக்கவும் வேண்டிய ஓர் அவல நிலைக்கு பக்தி மதங்கள் ஆளாகின்றன. ஆளும் வர்க்கத்தின்

பாதுகாவலர்களாக பிராமணர்களும், அவர்களுக்கு ஆதாரமாக வேத அதிகாரமும் தர்ம சாஸ்திரங்களும் விளங்கிய இந்த நிலையில் பக்தி மதத்தின் பங்கைச் சரியாக நிர்ணயிப்பதில் கம்பன் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றான். ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமாகிவிட்ட வேத அதிகாரத்திற்கு எதிராக பக்தி மதத்தைக் கம்பன் நிறுத்தினான். பக்தி மதத்தின் தொடக்க கால நிலையான வேத அதிகார எதிர்ப்பிற்குத் திரும்பவும் பக்தி மதத்தை அவன் கொண்டு வந்தான். சமண பௌத்த எதிர்ப்பில் வேத மதத்தோடு கூட்டு சேர்ந்த பக்தி மதத்தைக் கம்பன் மீண்டும் வேத அதிகாரத்தின் எதிர் தரப்பில் நிறுத்தினான். வேதமதம் தடையற்று ஆட்சி புரிந்த பழைய காலத்தில் பக்திமதம் வேத அதிகாரத்திற்கு எதிராகத் தோற்றங் கண்டது. சமண பௌத்த மதங்கள் ஆளும் வர்க்கத்தின் மதங்களான போது அவற்றை எதிர்த்து நின்றது பக்தி மதம். சமண பௌத்த மதங்களைத் தொடர்ந்து வேத அதிகாரம் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவானபோது, அதற்கு எதிராக பக்தி மதத்தை நிறுத்திய முதல் சிந்தனையாளனாகக் கம்பன் விளங்குகிறான்.

இடைக்காலப் பிற்பகுதியினுடைய பக்திமத வரலாற்றோடு சேர்த்துப் பார்க்கும்போது, கம்பன் ஒரு மாபெரும் இயக்கத்தைத் தொடங்கி வைத்திருப்பது விளங்கும். பக்தி மதத்தின் நெடிய வரலாற்றில் அவன் ஒரு மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியிருப்பது தெரியவரும். வேதத்தின் மேல்தான் கொண்டிருந்த அதிகப்படியான மரியாதையின் காரணமாக இராமானுஜர் செய்யத் தவறியதைக் கம்பன் செய்தான். வேத அதிகாரத்தின் மேல் கம்பன் தொடங்கி வைத்த பக்தி மதத்தினுடைய தாக்குதலைக் காலப்போக்கில் பக்தி இயக்கம் மேலும் உறுதி செய்தது. இராமானுஜரின் பாரம்பரியத்தில் வந்ததாகக் கருதப்படும் இராகாவானந்தர் போன்ற பக்தி மதத்தலைவர்களும் கம்பன் நிலைக்கே பெரிதும் சார்பானவர்களாகத் தெரிகிறார்கள். இடைக்காலப்

பாதுகாவலர்களாக பிராமணர்களும், அவர்களுக்கு ஆதாரமாக வேத அதிகாரமும் தர்ம சாஸ்திரங்களும் விளங்கிய இந்த நிலையில் பக்தி மதத்தின் பங்கைச் சரியாக நிர்ணயிப்பதில் கம்பன் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றான். ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமாகிவிட்ட வேத அதிகாரத்திற்கு எதிராக பக்தி மதத்தைக் கம்பன் நிறுத்தினான். பக்தி மதத்தின் தொடக்க கால நிலையான வேத அதிகார எதிர்ப்பிற்குத் திரும்பவும் பக்தி மதத்தை அவன் கொண்டு வந்தான். சமண பௌத்த எதிர்ப்பில் வேத மதத்தோடு கூட்டு சேர்ந்த பக்தி மதத்தைக் கம்பன் மீண்டும் வேத அதிகாரத்தின் எதிர் தரப்பில் நிறுத்தினான். வேதமதம் தடையற்று ஆட்சி புரிந்த பழைய காலத்தில் பக்திமதம் வேத அதிகாரத்திற்கு எதிராகத் தோற்றங் கண்டது. சமண பௌத்த மதங்கள் ஆளும் வர்க்கத்தின் மதங்களான போது அவற்றை எதிர்த்து நின்றது பக்தி மதம். சமண பௌத்த மதங்களைத் தொடர்ந்து வேத அதிகாரம் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவானபோது, அதற்கு எதிராக பக்தி மதத்தை நிறுத்திய முதல் சிந்தனையாளனாகக் கம்பன் விளங்குகிறான்.

இடைக்காலப் பிற்பகுதியினுடைய பக்திமத வரலாற்றோடு சேர்த்துப் பார்க்கும்போது, கம்பன் ஒரு மாபெரும் இயக்கத்தைத் தொடங்கி வைத்திருப்பது விளங்கும். பக்தி மதத்தின் நெடிய வரலாற்றில் அவன் ஒரு மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியிருப்பது தெரியவரும். வேதத்தின் மேல்தான் கொண்டிருந்த அதிகப்படியான மரியாதையின் காரணமாக இராமானுஜர் செய்யத் தவறியதைக் கம்பன் செய்தான். வேத அதிகாரத்தின் மேல் கம்பன் தொடங்கி வைத்த பக்தி மதத்தினுடைய தாக்குதலைக் காலப்போக்கில் பக்தி இயக்கம் மேலும் உறுதி செய்தது. இராமானுஜரின் பாரம்பரியத்தில் வந்ததாகக் கருதப்படும் இராகாவானந்தர் போன்ற பக்தி மதத்தலைவர்களும் கம்பன் நிலைக்கே பெரிதும் சார்பானவர்களாகத் தெரிகிறார்கள். இடைக்காலப்

பிற்பகுதியைச் சேர்ந்த பக்தி இயக்கம் முழுவதுமே கம்பன் காட்டிய திசையில் சென்றதாகத் தோன்றுகிறது. 'இந்தியத் தத்துவத்தில் மனிதனும் சமுதாயமும்' என்னும் தன் நூலில் இடைக்காலப் பிற்பகுதியின் பக்தி இயக்கத்தைப் பற்றி கே. தாமோதரன் தரும் விளக்கம் கம்பனின் நிலையை ஒட்டியே அவனுக்குப்பின் பக்தியியக்கம் சென்றிருப்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும். மதப் போர்வையிலேயே வரலாற்றின் பெரும்பாலான வர்க்கப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன என்று பொதுப்படையாகக் குறிப்பிடும் தாமோதரன் தன் கருத்தை இடைக்காலப் பிற்பகுதியில் நேர்ந்த சமுதாய மதப்போக்குகளை வைத்து விளக்குகிறார். ஆதிக்கம் செய்பவர்கள், ஆட்பட்டவர்கள் ஆகிய இருதரப்பாருமே தங்கள் நலனைக் காப்பாற்றிக் கொள்ள மதத்தைப் பயன்படுத்தினார்கள் என்று அவர் கூறுகிறார்.

பிராமணர்கள், மன்னர்கள் ஆகிய ஆளும் வர்க்கத்தினருக்குத் தங்கள் சலுகைகளையும் வசதிகளையும் காப்பாற்றிக் கொள்ள மதம் பயன்பட்டது போல், அடித்தளத்தினருக்குத் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள மதம் பயன்பட்டது என்று அவர் சொல்கிறார். பக்தி மதம் அடித்தளத்து மக்களுக்கும் வைதிக மதம் ஆளும் வர்க்கத்தினருக்கும் பயன்பட்டது என்பதை உணர்த்தும் அவர், வேத அதிகாரம், வேள்வி சடங்குகளின் மேல் தொடுக்கப்பட்ட பக்தியியக்கத்தின் தாக்குதல் பிராமணர்களடங்கிய ஆளும் வர்க்கத்தினரைக் குறித்ததே என்று குறிப்பிடுகிறார். 'அநீதி, ஏற்றத்தாழ்வு, அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிரான பல்வேறு வடிவங்கொண்ட சமூகக் கிளர்ச்சிகளுக்கு ஊக்கம் தரும் ஊற்றாக பக்தியியக்கம் ஆகியது என்று கே. தாமோதரன் கூறுவது கம்பனை அப்படியே நினைவுக்குக் கொண்டு வருவதுபோல் இருக்கிறது. வங்காளத்தில் பக்தியியக்கம் நிலப்பிரபுகளுக்கு எதிரான விவசாயிகளின் புரட்சிக்கு வித்திட்டதென்றும் மகாராஷ்டிரத்திலும், பஞ்சாபிலும் மொகலாய ஆட்சியை

எதிர்த்துப் போரிடவும், புதிய அரசுகளை அமைக்கவும் பக்தியியக்கம் உதவியது என்றும் அவர் மேலும் குறிப்பிடுகிறார். கிழக்கிந்தியாவில் தோன்றிய விவசாயிகளின் புரட்சிகளையும், மேற்கிந்தியாவின் ஆட்சி மாற்றங்களையும் கம்பன் குறித்த திசையில் சென்ற பக்தி மதம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆயிரம் ஆண்டு உறவுக்குப் பின்னால் வேத அதிகாரத்தின் எதிர்த்தரப்பில் பக்திமதத்தைக் கம்பன் நிறுத்தியது அதனுடைய வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பு முனையாகும்.

இந்த அடிப்படையில் பார்க்கிறபோது, இடைக்காலப் பிற்பகுதியில் வந்த பக்திமதத் தலைவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, கம்பனின் செல்வாக்குக்கு உட்பட்டு இருக்கும் வாய்ப்பு அதிகமாகத் தெரிகிறது. 'அநீதிக்கும், ஏற்றத்தாழ்வுக்கும் அடக்குமுறைக்கும் எதிரான சமூகக் கிளர்ச்சிகளுக்கு ஊக்கம் தரும் ஊற்றாக பக்தியியக்கம் இருந்திருக்கிறது, என்று வர்ணிக்கிறார்கள். 'அநீதிக்கும், ஏற்றத்தாழ்வுக்கும், அடக்கு முறைக்கும் எதிரான சமூகக் கிளர்ச்சிகளுக்கு ஆக்கந்தரும் வகையில் பக்தி மதத்தின் பணியை முதன் முதலில் திட்டவட்டமாக நிர்ணயஞ் செய்தவனும், உலகத்தின் முதல் கற்பனா சோசலிஸ்டும் ஆகக் கம்பன்தான் இருக்கிறான்.

வேத அதிகாரத்தின் மேல் பக்தி மதத்தின் சார்பில் கம்பன் தொடுத்தபோர், பிந்தைய வரலாற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறபோது, பக்தியியக்கத்தின் நெடிய வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பு முனையாக அமைகிறது. இடைக்காலத்தின் பிற்பகுதியினுடைய பக்தி இயக்கத்தின் புரட்சிகரமான போக்கைப் பார்க்கிற போது, இதற்கான ஒரு மாபெரும் தொடக்கத்தைத் தந்தவனாகக் கம்பன் தோன்றுகின்றான். இடைக்கால இந்தியாவில் வைணவ பக்தியியக்கம் சமூக, மதச் சீர்திருத்தங்களில் முக்கிய பங்காற்றியிருக்கிறதென்றும், புதிய ஆராய்ச்சிகளின் உதவியால் அதனுடைய உண்மையான வரலாற்று

முக்கியத்துவத்தை முற்றிலும் புரிந்து கொள்ளுதல் அவசியமென்றும் தன்னுடைய 'இந்தியத்தத்துவம்' என்றும் நூலில் டாக்டர் தேவி பிரசாத் சட்டோ பாத்தியாயா எழுதுகிறார். பக்தியியக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சி கம்பனை ஒதுக்கிச் செல்கிறவரை முற்றுப் பெற்றதாக ஆகாது.

குறிப்பு: அறிஞர் க. வீரையன் அவர்கள் எழுதிய 'கம்பனும் பக்தி இயக்கமும்' என்ற நூலிலிருந்து சில முக்கிய பகுதிகள் இக் கட்டுரையில் தொகுத்துத் தரப்பட்டன.

⁂

8. புதிய சீனத்தில் சில நாட்கள்

– குணா

என் சீனப் பயணம் மிகக் குறுகியது. ஆயினும் சீனத்தைப் பற்றி பத்துப் பதினைந்து புத்தகங்களைப் படிப்பதைவிட, மிகவும் வேகமாகவும், விரிவாகவும் சீனத்தைப் பற்றி நேரடியாக அறிவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுத் தந்த பயணமாக அமைந்தது.

'ஆசிய மக்களுரிமை அரங்கு' என்னும் அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்க தாய்லாந்திற்குச் சென்ற நான், அதனைத் தழுவி சீன மக்களின் நட்புறவுக் கழகத்தின் அழைப்பின் பேரில் சீனம் சென்றேன். மாவோவிற்குப் பிந்திய சீனம் பிறர் கூறுவது போல் நிறம் மாறி சாயம் வெளுத்து வருகின்றதா என்னும் பெரும் கேள்விக்கு விடை கிடைக்காதா என்னும் துடிப்பு எனக்கும் இருந்தது. போதாமைக்கு பிற தோழர்கள் வலிய வலிய மீண்டும் அதனை நினைவில் ஏற்றி வைக்க, பத்து நாள் பயணத்தில் அச்சத்துடன் அவர்கள் எழுப்பிய கேள்விகளை நெஞ்சில் சுமந்து சென்றேன்.

அவர்கள் எழுப்பிய ஐயங்கள் பொதுவாக புதியவை அல்ல. நால்வர் கும்பலின் வீழ்ச்சிக்குப் பின்னர், சீனப் பொதுஉடைமைக் கட்சியின் கொள்கைகளில் தென்படுகின்ற சில போக்குகள்; மிகுதியான 'இடதுசாரி' கோணல்களை நிமிர்த்திச் சரிப்படுத்தும் நோக்கமுடையவையாகத் தோன்றுகின்ற அல்லது சொல்லப்படுகின்ற நடவடிக்கைகளில், வலதுசாரிகள் வானவில் விரிக்கின்ற போக்குப் புலனாதல்; பண்பாட்டுப் புரட்சியைப்பற்றி இன்றைய சீனத்தலைமை கொண்டுள்ள பார்வையும் கணிப்பும்; மாவோவின் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டு, அவற்றிற்கு கல்லறை கட்டப்படுவதாக வந்த செய்திகள்; அமெரிக்க வல்லரசுடன் நெருக்கமடைந்து வரும் உறவுகள்; சோவியத் வல்லரசு பற்றிய சீனத்தின் போக்குகள்; மூன்றுலகக் கோட்பாடு: கலை இலக்கியத்துறையில்

தோன்றியிருப்பதாகச் சொல்லப்படும் முதலாளிய நெகிழ்வுகள்; பிற முதலாளிய நாடுகளுடன் கூட்டுத்தொழில்களை நாடுவதன் வாயிலாக சீனம் முதலாளியப் பாதையில் தடம் புரண்டு விட்டது என்னும் குற்றச்சாட்டு போன்ற இன்ன பிற செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அவை யாவும் சீனத்தைப் பற்றி தமிழகத்திலும், இத்துணைக் கண்டத்திலும் உள்ள புரட்சி நாடும் மக்கள் கொண்டிருந்த மிகப் பெரும் நம்பிக்கையையும், ஆர்வத்தையும் அடியிலேயே ஆட்டத் தொடங்கியுள்ள நிலையில் நான் என்னுடைய சிறிய தேடலை அங்கே தொடங்கினேன்.

ஆங்காங்கிலிருந்து புறப்பட்டு கான்டனைச் சென்றடைந்ததும் என்னை வரவேற்று பீகிங்கிற்கு வழியனுப்ப வந்திருந்த, சீன நட்புறவுக் கழக அன்பருடன் நான் துருவித் துருவிக் கேட்டு வைத்த கேள்விக்குக் கிடைத்த விடை எனக்குச் சிறிது அதிர்ச்சி தருவதாகவே இருந்தது. 'பண்பாட்டுப் புரட்சி நல்லதல்ல' என்பது அவர் அழுத்தமாகச் சொன்ன கருத்து. அதனால் பண்பாட்டுப் புரட்சியை முழுவதுமாக மறுத்து எதிர்க்கின்ற ஒரு போக்கு இருந்ததும் இருப்பதும் எனக்குத் தெரிந்தது. அதற்கு மாறான — அல்லது சமனிலை நாடுகிற ஒரு மாற்றக் கருத்து இருக்கவே வேண்டும். பிறகு நான் கேட்டறிந்த வேறு சில கருத்துக்கள் அதனை உறுதிப்படுத்தின.

பீகிங் வானூர் நிலையத்தில் தோழர் வாங் பிங்கானின் துணைவி திருமதி யாவோ ஃமூசியான் வரவேற்றார். கடுங்குளிர் (-12°). இடங்களை மட்டும் சுற்றிப் பார்ப்பதோடு நின்றுவிடாமல், மாவோவுக்குப் பின்னர் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளையும், பொருளியல் அரசியல், பண்பாட்டுக் கொள்கைகளையும் அறிவதே என் சிறப்பு நாட்டம் என்பதை அவருக்குத் தெரியப்படுத்தினேன். அதன்படி இரண்டாம் நாள் (20-2-80) மிங் அரசர் கல்லறைகளையும், சீனப்பெருமதிலையும், ஒரு பஞ்சாலையையும் பார்த்து முடித்த பின்னர், என் கேள்விகளை எழுதித் தரும்படி

அம்மையார் சொன்னார். எழுதிக் கொடுத்தேன். பீகிங்கிலிருந்த இறுதி நாளன்று, சீன நட்புறவுக் கழகத்தின் துணைத் தலைவராகிய ஃஓத்துங் எனக்கு ஒரு சிறு விருந்து தர விரும்புவதாகவும், நான் எழுப்பிய கேள்விகளை ஒட்டி கலந்துரையாடப் போவதாகவும் கூறினார்.

விருந்திற்கு முன்பு ஃஓத்துங் என்னுடைய கேள்விகளுக்கு விடை தர புகுந்தார். முதலில் நான் எழுப்பின கேள்விகளை ஐந்து துறைகளைச் சார்ந்ததாக வகுத்துக் கொண்டார். அவை,

1. நான்கு புதுமையாக்கங்கள் என்னும் கொள்கையை முன்மொழிந்து வரையப் பெற்ற பின்னர், தேசியத் திட்டத்தை திருத்தி அமைத்தல்.
2. பண்பாட்டுப் புரட்சி.
3. இன்றைய சீன சமுதாயத்தில் நிலவும் முதன்மை முரண்பாடு.
4. சீன – கம்பூச்சிய பொது உடைமைக் கட்சிகளுக்கு இடையிலான உறவுகள்.
5. அண்மையில் சீனத்தில் பரவலாக்கப்பட்டுள்ள வணிக விளம்பரங்கள்.

நால்வர் கும்பலை வீழ்த்திய பின்னர், 1977-78 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் நாடு தழுவிய பொருளியல் திட்டம் வரையப் பெற்றது. அது ஒன்று நால்வர் கும்பலின் சீனப் பொருளியலுக்கு ஏற்படுத்திய, ஈடுதர முடியா இழப்புகளை சரி செய்யும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது. ஈராண்டு காலப் பட்டறிவுகள் அத்திட்டம் பேரவா மிக்க சில குறிக்கோள்களை அடியொற்றியதாக இருந்தது. அதனால் அதனை சமன் செய்ய வேண்டி வந்தது. சீனாவில் எஃகுத் தொழிலின் இலக்கு 1985 ஆம் ஆண்டளவில் 60 மில்லியன் டன்கள் எட்ட வேண்டும் என அது வரையறுத்து இருந்ததை எடுத்துக்காட்டுக்குச் சொல்லலாம். சீனத்தில் அந்த குறிப்பளவை எட்ட முடியும் என்றாலும், அவ்வளவு எஃகு தேவை இல்லைதான். ஆகவே, இத்தகைய குறிப்பளவைத் திருத்த வேண்டி வந்தது.

அதனை யொட்டியே நாட்டுத் திட்டத்தை,

1. திருத்துதல் (Readjustment)
2. திருத்திக் கட்டுதல் (Restructuring)
3. உறுதிப்படுத்துதல் (Consolidating)
4. செப்பமாக்கல் (Improving)

என்னும் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டி வந்தது.

திருத்துதல் என்னும் நோக்கத்தின் கூறுகள் சிலவற்றை ஃஒத்துங் விளக்கத் தலைப்பட்டார்.

முதலாவதாக 90 மில்லியன் சீன மக்கள் யாவருக்கும் போதிய உணவிடுதலே முதற் பெரும் கடமையே அன்றி ஒரு சில பொருளியல் குறியளவுகளை எட்டுவது மட்டும் என்றாகாது.

இரண்டாவதாக, இன்றைய நிலைமைகளில் படைக்கப் பெறுகின்ற பண்டங்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, அப்படைப்பின் அளவை மட்டும் பெருக்குவதால், பொருளியல் வரம்புகள் விரிவுப்படுத்தப்படுமே அன்றி, அப்பொருளின் உண்மையான தேவைகளை புரிந்து கொள்ளவும், நிறைவேற்றவும் அஃது உதவாது.

மூன்றாவதாக, படைப்பதற்கென புதிதான சேர்த்துக் கொள்ளப் பெற்ற பண்டங்கள் சில பொருளியலின் உடனடித் தேவைகளையும் பொருளியல் வளர்ச்சிக்குரிய விதிகளையும் தழுவியதாக இருக்கவில்லை.

மூன்று ஆண்டு காலத்திற்கான பொருளியல் திருத்தம் அத்திட்டத்தில் இருந்த இருவகைக் கேடுகளைத் தவிர்க்கும் நோக்கத்தைக் கொண்டதாக வரையறுக்கப்பட்டது.
அவை:

1. உழவுக்கும் தொழிலுக்கும் இடையில் சமனிலை இல்லாமை.
2. பெருந் தொழிலுக்கும் சிறு தொழிலுக்கும் இடையில் சமன்மை இல்லாமை – என்பனவாகும்.

முன்பு வேளாண்மை மீது சரியான கவனம் செலுத்தப்படவில்லை. வேளாண்மை புறக்கணிக்கப்பட,

பெருந்தொழில் மட்டும் சிறப்புப் பெற்றது. தொழில் துறையிலும் சிறுதொழில் புறக்கணிக்கப்பட்டது. அதற்குரிய ஒதுக்கீடுகளையும் பெருந்தொழில் கவ்விச் சென்றது. வேளாண்மைப்பிரிவு மக்களின் அன்றாட உணவுத் தேவையைத் தீர்ப்பதுடன், சிறு தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களையும் படைக்க முடியும். உடுத்த உடையும், இதன் பிற அன்றாட தேவைக்கானப் பண்டங்களைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

அத்தகைய சமனிலா நிலையை சரி செய்யவே திட்டத்தை 'திருத்துதல்' என்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. படைப்புக்கு வேண்டிய எரிபொருள், மின்னாற்றல் போன்றவற்றின் வளர்ச்சிக்கும், பல்வேறு தொழில்களுக்கான தேவைகளுக்கும் இடையில் சமனிலையை ஏற்படுத்தவும் அத்திருத்தம் தேவைப்பட்டது. பல புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும், உரிய மின்னாற்றலும், எரிபொருளும் இல்லாமையால் பல தொழிலகங்களும், பட்டறைகளும், 20 விழுக்காட்டிற்கும் குறைவாகவே செயல்பட்டு வந்தன. அந்நிலையைத் தவிர்த்து அவற்றை முழு அளவில் இயக்குவதற்கும் அத்தகைய நடவடிக்கை தேவையாகிறது.

அனைத்து, பண்டக்குவிப்புக்கும் நுகர்ச்சிக்கும் இடையிலான முரண்பாட்டையும், உரிய முறையில் தீர்த்து வைப்பதற்கு திட்டத்தில் திருத்தம் தேவைப்பட்டது. இதற்கு முன்பு நுகர்ச்சியின் அளவு பண்டக் குவிப்பைவிட மிகையாக இருந்தது. அந்நிலை சரி செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு கூறிய ஃஓத்துங், திட்டத் திருத்தியமைப்பு நடவடிக்கைகளை விவரித்தார். முதலில் மக்களின் உணவுத் தேவையை நிறைவேற்றுவதற்காக உணவுப் படைப்பைப் (உற்பத்தியை) பெருக்குவது இரண்டாவதாக நெசவுத் தொழில் போன்ற சிறு தொழில்களைப் பெருக்கி உடையும் பிறவும் மக்களுக்கு உரிய வகையில் கிடைக்கச் செய்தல்.

மூன்றாவதாக, பெருந்தொழில்களைப் பெருக்குகையில், நிலக்கரி, மின்னாற்றல், எண்ணெய், பெட்ரோல், போக்குவரத்து உந்துகளும் அவற்றிற்குரிய பிறவும், மனைக்கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றில் நாட்டம் காட்டுதல். நான்காவதாக, பொருளியல் தேவைகளுக்கு ஏற்பவே புதிய தொழில்களையும், தொழில் துறைகளையும் நிறுவுதல். ஐந்தாவதாக, அவ்வாறு ஏற்படுத்தப்படும் தொழிலகங்களின் அளவு தற்போது கிடைக்கின்ற எஃகு, மரம், சிமெண்டு, பொறி வகைகளும் கருவிகளும் முதலீடு போன்றவற்றைத் தழுவியே அமைய வேண்டும். இறுதியாக வளர்ச்சியடைந்த தொழில் நுட்பங்கள் சிலவற்றைப் புகுத்தி, படைப்பைப் பெருக்கி, உள் நாட்டுத் தேவையை நிறைவேற்றுவதுடன் நில்லாது, ஏற்றுமதிகளையும் வளர்த்தல். இவையே திட்டத்தைத் திருத்துவதன் நோக்கங்களாம்.

அடுத்து திருத்திக் கட்டுதல் என்னும் கொள்கையை விளக்க முன் வந்தவர், பொருளியல் அமைப்பை வளர்ப்பது இன்றியமையாதது என்று குறிப்பிட்டு, அதற்கேற்ப பொருளியலில் புற நிலை விதிகளைத் தழுவியதாக அஃது இருக்க வேண்டும் என்றார். சந்தைக்குரிய விதிகளைத் தழுவியே பொருளியலைத் திட்டமிட வேண்டும் என்பதே அதன் பொருள். படைப்புக்கும் பொருள் தரவுக்கும் (Supply) இடையிலான முரண்பாட்டைத் தழுவியது அது. அவ்வகையில் படைப்பும் தரவும் விற்பனையும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். பல்வேறு துறைகளை தனித்தியங்க செய்ய வல்லதே செப்பனிட்டுக் கட்டுதல் என்னும் கருத்தின் உள்ளடக்கம் என்றார்.

மூன்றாவதாக, உறுதிப்படுத்துதல் என்னும் கொள்கையை விளக்கத் தொடங்கிய ஃஓத்துங், உரிய விதிகளும் ஒழுக்கங்களும் வரையறையும் இன்றி, யாதொரு அமைப்பும் செயல்பட முடியாது. சீனத்தில் இப்போது 35000 நடுத்தர பெரிய நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் செயல்

திறன் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும். பழைய பொறிகளும், கருவிகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அறிவியல் அடிப்படையிலான பகுத்தறிவுடன் கூடிய நிறுவக ஆட்சி புகுத்தப்பட வேண்டும்.

இறுதியாக வருவது, படைப்பு முறையையும் தொழில் நுட்பத்தையும் நிறுவக ஆட்சித் தரத்தையும் ஊக்கி வளர்ப்பது என்றார் ஃஓத்துங்.

ஃஓத்துங் அவர்கள் இதுவரை கூறிய கருத்துக்களில் புதியதொன்றுமில்லை. அவை யாவும் உழவையும் சிறு தொழிலையும் பெருக்குவதால் பெறப்படும் மிகுதி மதிப்பைக் கொண்டே பெருந்தொழிலுக்குத் தேவையான முதலீட்டைப் பெறுதல் என்னும் மாவோவின் பொருளியல் கொள்கையைத் தழுவியவை. உருசியாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு தலையாக வளர்க்கப்பட்ட பெருந் தொழில்கள், வேளாண்மையையும் அன்றாட நுகர்ச்சிப் பொருட்களைப் படைக்கக்கூடிய சிறு தொழில்களையும் சிதைத்த வரலாற்றுப் பட்டறிவைக் கொண்டு மாவோ கூறிய கருத்துக்களின் வழியில் நிற்பவை அவை என்பதில் ஐயமில்லை.

இங்கு பொங்கிவரும் கேள்வியெல்லாம் 'நான்கு புதுமை யாக்கங்கள்' என்னும் கொள்கையைச் சுற்றியனவாக இருப்பதனால், அத்தகைய புதுமையாக்கம் பற்றி ஆராயப் புகுவது நல்லது. மாவோ சீனப் பொருளியலை புதுமையாக்குவதை எதிர்த்தார் என்றும் இன்றைய சீனத் தலைமை அதனால் மாவோவிற்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது என்றும் சிலர் கருதுகின்றனர், அது உண்மையல்ல. ஒரு தலையாக பொருளியல் வளர்ச்சியை மட்டும் வலியுறுத்தி பாட்டாளி வகுப்பு அரசியலையும், வரலாற்றுப் பார்வையையும் புறக்கணிப்பதை மட்டும் மாவோ எதிர்த்தார். அதே போன்று அரசியலை மட்டும் வலியுறுத்தி பொருளியல் பெருக்கத்தை புறக்கணிப்பதையும் எதிர்த்தார். அதை

மாவோவின் எழுத்துக்களிலும், உரைகளிலும் தெளிவாகக் காணலாம். அவ்வகையில் இன்றைய சீனத்தலைமை ஒருதலையாக செயல்பட்டு பொருளியல் வளர்ச்சியை மட்டும் நாடுவது வலதுசாரி போக்குகளுக்கு வலை விரிக்காதா – என்பதைப் போகப் போகத்தான் பார்க்க வேண்டுமேயன்றி, துடிதுடிப்புடன் ஒரு முடிவுக்கு வருவது பொருந்தாது என்பது என் கருத்து.

ஆனால் படைப்பு முறையை புதுமைப்படுத்துவதை பற்றி மாவோ பலவிடங்களில் கூறியிருக்கக் காணலாம். அவ்வடிப்படையில் புதுமையாக்கம் என்பதை இனி சுருக்கமாக ஆய்வோம்.

சீனப்புரட்சிக்குப் பின்னர் புதிய சீனத்தின் பொருளியல் பழைய பாணியிலான முதலாளியம் அரசு முதலாளியமாக இருக்கும் என்று மாவோ வரையறுத்தார். அதை ஒரு இடைக்கட்டமாக – ஒரு படி நிலையாக அவர் பார்த்தார். அரசு முதலாளியத்தை படிப்படியாக சமூகவுடமை (சோசலிச) யாக மாற்றவல்ல இயங்கியல் கொள்கையை வகுத்தளித்தார்.

"முதலாளிய தொழில் துறையையும் வணிகத்தையும் மாற்றி படிப்படியாக சமூக உடைமைக்குக் கொண்டு செல்லும் ஒரே ஒரு வழி அரசு முதலாளியமே" (அரசு முதலாளியம்: சூலை 9, 1953)

அவ்வாறு அன்று விளங்கிய முதலாளியத் தொழில்களையும் வணிக நிறுவனங்களையும் அரசு முதலாளியமாக மாற்றுவதற்கு அவர் மூவகையான வழிமுறைகளை வகுத்தார். அவை: 1) ஒரு தொழிலகத்தில் அரசு தனியார் நிறுவகம் 2) மூலப்பொருள் யாவும் சமூகவுடைமை அரசிடம் உடைமையாக இருக்க. அவற்றைத் தனியார் தொழில்களுக்குத் தந்து அவற்றைக் கொண்டு படைக்கப்பட்ட பண்டங்கள் முழுவதையும் அரசே கொள்முதல் செய்வது. 3) அரசு தனியார் நிறுவனங்களுக்கு இவ்வளவு பண்டங்களைப் படைக்க வேண்டும் என்று ஆணையிட்டு, படைத்த பொருளியல்களில் பெரும்பங்கை

எடுத்துக் கொள்வது, போன்றவையாகும். அத்தகைய கூட்டு முயற்சிகளில் கிடைத்த ஆதாயத்தை,

வருமான வரி	---	34.5%
பொதுப்பணிக்கான பண ஒதுக்கீடு	---	15.0%
குவிப்புப் பணம் (புதுமுதல்)	---	30.0%
முதலாளிகளுக்கான பங்கீடு	---	20.5%
		100.00%

என்னும் முறையில் வகுத்து வரையறைப்படுத்திக் கூறினார்.

இம்முறையிலான பொருளியல் மாற்றம் சமூகவுடைமையின்கீழ் செயல்படுகின்ற முதலாளிய விதிகளுக்கு ஏற்பவே அமைந்தது. முதலை (Capital) மார்க்சு, மதிப்புக்கூறு, (Value Composition), தொழில்நுட்பக்கூறு (Technical Composition) என்று வகுத்தார். படைப்புவழி வகைகளை (Means of Production) நிலைத்திணை முதல் (Constant Capital) என்றும், உழைப்பு ஆற்றலை மாறுதிணை முதல் (Variable Capital) என்றும் விரித்துரைத்தார். அவற்றில் ஒன்றின் பெருக்கம் மற்றொன்று தேய்வதைக் குறிக்கும். சமூகவுடைமை பொருளியலிலும்கூட அவ்வாறு கூறுவதும் உண்டு. அவற்றிற்கிடையான வினைபாடுகள் புதிய சூழ்நிலையில் இயல்பால் மாறுபடுவதும் இல்லை. அதை விளக்கும் மார்க்சு உழைப்புக்கூறு பெருகுவது கூடுதலாக மிகுதி உழைப்பின் குவியல் புதிய முதலாக உருவெடுக்க, அது புதிய தொழில்களுக்கு வழி வகுக்கின்றது. அப்புதிய முதலீடு உழைப்புக் கூறு விரிவடையவும் அதனால் மிகுதியாக வேலை வாய்ப்பை உருவாக்கவும் செய்கிறது. அதைக் கருதியே மார்க்சு. "முதல் குவிவது பாட்டாளி வகுப்பைப் பெருக்குகிறது" என்று கூறினார்.

முதலாளிய சமுதாயத்தில் அத்தகைய பெருக்கம் தொழிலாளியை கூடுதலாகச் சுரண்டவும், படைப்பு, வழி வகையான தொழில் நுட்பத்தையும் பெருக்குவதற்கும் வழி

வகுக்கின்றது. ஆனால் முதலாளியச் சுரண்டலைப் பெருமளவில் தவிர்த்து, கூடுதல் உழைப்பிற்கு கூடுதல் கூலி என்னும் சமூக உடைமைக் கோட்பாடு விளங்குகின்ற அல்லது முதல் சமூகவுடைமையாக்கப்பட்டுள்ள புதிய சமுதாயத்திலும் கூட முதலுக்கு அவ்விரு கூறுகள் இருக்கத்தான் செய்யும்.

புதிய சீனத்தின் பொருளியல் கொள்கைகளை வகுத்த மாவோ, புரட்சிக்குப் பின்னர் மூன்று ஆண்டு காலம் மட்டுமின்றி, 1952-ம் ஆண்டு தொட்டுத் தொடங்கிய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காலம் வரையிலும் அரசு முதலாளியம் நீடிக்கும் என்று ஒன்றுக்கு மேற்பட்ட நேரங்களில் குறிப்பிட்டார்.

பழைய உருசியாவில் இருந்த முதலாளிகள் தொழிலாளர்களைப் பகைவர்களாகவே கருதி அக்டோபர் புரட்சியின் பயன்களைக் கெடுக்க முற்பட்டனர். அதனால் அவர்கள் முற்றுமாகத் துடைத்தொழிக்கப்பட்டனர். மாறாக சீனத்தில் புரட்சிக்கு முன்னரும் பின்னரும், இருந்த நிலை வேறு. அங்கு உள்நாட்டு முதலாளியம் சீனப்பொதுவுடைமைக் கட்சி கூட்டிய கூட்டணியில் சேர்ந்தது. அதனால் கல்வி ஊட்டல் வாயிலாக அந்த தேசிய முதலாளிய வகுப்பை மாற்றி கலைந்து கரைய வழி வகுக்கப்பெற்றது. அவர்கள் பயன்படுத்தவும், கட்டுப்படுத்தவும், மாற்றியமைக்கப்படவும் அதனை மெல்ல அழிக்கவல்ல சூழ்நிலை இருந்தது. அதை சீனம் செய்தது.

மேற் போந்த சூழ்நிலைகளில் சீனம் தனது பொருளியலை புதுமையாக்க முற்படுகிறது. புதுமையாக்கம் என்பது படைப்பு வழித்துறைகளையும் பகிர்வையும் (Distribution) புரட்சிக்கு உள்ளாக்குவது என்று பொருள்படும். மார்க்சு சொன்னது போல்,

"சிறிய மதிப்புடைய கருவிகளைப் பயன்படுத்தி பத்துபேர் ஒப்பீட்டளவில் சிறிய அளவு மூலப்பொருளை

பயன்படுத்தி வந்த முந்திய நிலைக்கு மாறாக, விலையுயர்ந்த ஒரு எந்திரத்தைக் கொண்டு ஓராள்நூறு மடங்கு மூலப் பொருளை பயன்படுத்துகின்ற அளவுக்கு உழைப்பு இயக்கத்திற்கு உரிய தொழில்நுட்ப நிலை புரட்சிகரமாக்கப்படலாம். பின்னர் சொன்ன நிலையில் படைப்பு வழித்துறைகளின் மொத்த மதிப்பைக் குறைக்கின்ற நிலை முதலின் மாபெரும் பெருக்கத்தைக் காணலாம். இதே போது, மாறும் மதிப்பில் மிகப்பெறும் குறைப்பையும் செயல்படுத்தப்பட்ட உழைப்பாற்றலில் குறைப்பையும் பார்க்கலாம். இருப்பினும் அத்தகைய புரட்சி, நிலை முதலுக்கு மாறும் முதலுக்கும் இடையில் அளவை ஒட்டிய உறவை – அல்லது மொத்த முதலீடு நிலை முதலாகவும் மாறும் முதலாகவும் வகுக்கப்படுகின்ற பங்கு முறையை மட்டுமே மாற்றவல்லது. அவ்விரண்டிற்கும் இடையிலான அடிப்படை வேற்றுமையை அது எள்ளளவும் மாற்றவில்லை.

(முதல் – முதல் பகுதி).

அதனால், படைப்புக் கருவிகளைப் புதுமையாக்குவது பெருமளவில் படைப்பு ஆற்றல்களையும், உறவுகளையும் மாற்றுவதுமில்லை. அத்தகைய செயல் சமூக உடைமைக்கு கேடு பயப்பதும் இல்லை. அது சரியான அரசியல் பார்வையில் செயல்படுத்தப்பட்டால்.

ஆயினும், அண்மையில் பிற நாடுகளுடனான கூட்டு முயற்சிகளை வரவேற்று அதற்குரிய திட்டங்களை வரவேற்று, அதற்குரிய திட்டங்களை விளக்கிய சீனத் துணைத் தலைமை அமைச்சர் யு சியுலி கூறிய மொழிகள் சிறிது கலக்கம் தருவனவாகவே உள்ளன. (புதிய சீன செய்தித்துறை ஏப்ரல் 10 1980) அதன்படி கூட்டுத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களை கூலிக்கு விலை பேசவும், துரத்தவும், சீன அல்லது வெளிநாட்டு மேலாளர்களுக்கு உரிமை இருக்கும் என்று குறிப்பிட்டார்.

நால்வர் கும்பலின் மிகு திவிர இடதுசாரி தவறுகளைத் திருத்துகையில் வலதுசாரிப் போக்குகள் தலை நீட்டவே செய்யும் என்னும் இயங்கியலை அது நினைவுறுத்துகிறது. ஆயினும் இன்றைய சீனத்தலைமை மாவோவுக்கு எதிராக முழுமூச்சுடன் செயல்பட்டு வருகின்றது என்று முடிவு கட்டுவதும், அச்சீனத் தலைமை முழுவதுமே வலதுசாரித் தலைமை என்று அவசரப்பட்டு மொழிவதும் சரியல்ல. நாம் அத்தலைமையை ஆதரித்தும் எதிர்த்தும் பேசுவது நம்முடைய இன்றைய கடமையுமல்ல. ஏனெனில் சீனப் பொதுவுடைமைக் கட்சி மிகப்பெரும் புரட்சி மரபையும் உட்கட்சிப் போராட்ட நடைமுறையையும் கொண்டது. நம் நாட்டையும் நமது சிக்கல்களையும் தலைமேல் கொண்டு செயல்படுவதே நமது புரட்சிக்கான இன்றைய தேவையாக இருக்கும். அத்துறையில் நமது கருத்துப் போராட்டங்களும் நடைமுறையும் இருப்பதே நமது மக்களுக்குப் பயன்படும்.

பண்பாட்டுப் புரட்சி

அடுத்து, பண்பாட்டுப் புரட்சியைப் பற்றிய இன்றைய சீனத் தலைமையின் போக்கைப்பற்றி ஃஓத்துங் விளக்கக் கேட்டோம். பண்பாட்டுப் புரட்சியை மாவோ தொடங்கியது மிக உயரிய நோக்கங்களைக் கொண்டிருந்தது. சீனம் நிறம் மாறாமல் இருப்பதற்கான தடுப்பு முயற்சியாகவும் வலதுசாரிப் போக்கைத் தவிப்பதற்காகவும் தொடங்கப்பட்ட இயக்கம் அது. ஆனால் அது பின்னர் கைமாறி மிகுதீவிர 'இடதுசாரி' போக்கில் கொண்டு போய்விட்டது. லின்பியாவ், காங், எழன், நால்வர் கும்பல் போன்ற பதவி வெளியிடும் பச்சோந்திகளும் நிலைமை தங்களுக்கேற்ப மிகுதியும் தீவிர புரட்சி ஒழுக்கங்களை முழங்கியவர்கள் நாடெங்கிலும் குழப்பத்தையும் கலகத்தையுமே விளைவித்து அடி முதல் நுனி வரை ஆட்சியைக் கைப்பற்றுகிற சூழ்நிலையை வகுத்துக் கொண்டனர். சீனப்புரட்சிக்கு மிகப்பெரும் கேடுகளை விளைவித்தனர். அதனால் அப்பண்பாட்டுப்

புரட்சியின் நோக்கங்கள் நல்லவையாயினும், விளைவுகள் கேடு தரத்தக்கவையாயின. லின், காங். நால்வர் கும்பல் போன்றோர் அப்பண்பாட்டுப் புரட்சியின் நோக்கங்களைக் குலைத்தனர்.

அவர்களின் இடதுசாரி வாயாடல்கள் பயனற்றவையாக இருந்தன. புரட்சியில் புடம் போட்டு எடுக்கப்பட்ட தோழர்கள் நெற்றியில் பட்டங்கள் ஒட்டப்பட்டன. அவர்கள் மார்க்சிய இயங்கியலை புறக்கணித்து கருத்து முதல் மயக்கங்களில் மூழ்கிக் கிடந்தனர் என்றார் ஒத்துங்.

அது ஓரளவு நமது நிலையை நினைவுபடுத்துகிறது.

சேற்றில் மூழ்கி, புரட்டல் கொள்கை வழி நின்ற இந்திய பொது உடைமைக் கட்சியின் பொய்த் தோற்றத்தை தோலுரித்துக் காட்டியது நக்சல்பாரி உழவர் கிளர்ச்சி. அதைத் தழுவி கொள்கையில் கலகம் செய்து வெளிவந்த இளமைப் பொது உடைமையாளர் பலர். அதிகாரணம் நோக்கைக் கொண்டிருந்தது. பின்னர் பார்த்த நிகழ்ச்சிகளோ சலிப்பூட்டுவன. கொலை வழியை அரசியல் கொள்கையாக்கி, வகுப்பு எதிரிகளின் குருதியில் கையைத் தோய்ப்பவனே உண்மையான புரட்சிக்காரன் என்று கூறித் திரிந்த சே.கு. வேரா - டிராட்ச்கி பாணிக் கோணல்களையும், தோழனை எதிரியாக்கி மயிர் பிளக்க வழக்காடிய வெற்றுரையையும், பிளவுகளையும் குறுங்குழு கொள்கை மலட்டுத் தனத்தையும் பார்த்தாகி விட்டது. நக்சல்பாரி உழவர் கிளர்ச்சி சரி என்றால், அதன் விளைவுகள் மட்டும் தீங்கு பயப்பது என்று கூறலாமா, என்னும் கேள்விக்கு விடை காண முடியுமென்றால், சீனத்தின் பண்பாட்டுப் புரட்சியைப் பற்றிக் கொண்டுள்ள இன்றைய கணிப்பை ஒருவாறு புரிந்து கொள்ளலாம். அதைவிட சீனப் பொருளியலுக்கு கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட இழப்போ 300000 இந்திய வெள்ளிகள் அதனை ஈடுகட்டி சீனத்தின் வளர்ச்சியில் ஊக்கம் சேர்க்க முன் வந்துள்ள சீனத் தலைமை, வலதுசாரிகளை எதிர்த்து நடத்த

வேண்டிய கொள்கைப் போராட்டத்தைப் பற்றிய மாவோவின் வழி முறைகளை (முதலாளிய வலதுசாரிகளின் தாக்குதலை முறியடிப்பீர் சூலை 1957) கைவிட்டு தான் தோன்றித்தனமான போக்குகளால் சீனமக்களை மிகப்பெரும் அல்லலுக்கு உள்ளாக்கியுள்ளது தெளிவாகிறது.

மாவோ தெய்வமல்ல:

மாவோவை பற்றிய இன்றைய சீனத் தலைமையின் கருத்தைக் கூறத் தலைப்பட்ட ஃஓத்துங், மாவோ சீனப்புரட்சியை வெற்றி பெறச் செய்தவர்; மார்க்சிய லெனினியத்தை மாசேதுங் சிந்தனையாக வளர்த்தெடுத்தார். மாவோ இன்றி சீனப் புரட்சி இல்லை என்று சொல்வது பொருந்தும் என்று குறிப்பிட்டார். ஆனால், மாவோவை தெய்வமாக்குவது அந்த மாமாந்தர் தவறே இழைக்கவில்லை என்று சொல்வதாகும். லின் பியாவ், காங், ஃமென் நால்வர் கும்பல் போன்றோரைப் பற்றிய மாவோவின் கணிப்பு முதலில் தவறாக இருந்தது. பின்னர் அவர் அவர்களைப் புரிந்து கொண்டுவிட்டார். அவ்வகையில் மாவோ தவறு செய்யவில்லை என்று கூறலாமா என்று கேட்டவர், இருப்பினும் சீன மக்களின் இன்றைய வழிகாட்டி நெறி மார்க்சியம் – லெனினியம்–மாசேதுங் சிந்தனைதான் என்றார். பிற நாடுகளில் இங்கு ஸ்டாலினை நோக்கியது போன்று மாவோ தகர்ப்பு நடத்துவதாகக் கருதப்படுகின்றது. அது உண்மை அல்ல என்றார் அவர்.

முதன்மை முரண்பாடு:

இறுதியில் இன்றைய சீன சமுதாயத்தில் இருக்கிற முதன்மை முரண்பாட்டைப் பற்றி விளக்கப் புகுந்தவர், அண்மையில் அரசு பற்றிய உவா குவா ஃபெங்கின் அறிக்கையை சுட்டிக் காட்டினார். அதன்படி புரட்சிக்குப் பின்னால், முப்பதாண்டுகள் கழிந்த சீனத்தில் நிலக்கிழார், செல்வ உழவர்கள், தேசிய முதலாளிகள் போன்றோர் இன்று தனியான வகுப்புகளாக இல்லை. ஆயினும்மேல் தட்டுகளில் மட்டும் அவ்வகுப்புகளின் பார்வைகளும், கொள்கைகளும்,

பண்பாடும், கலையும் இலக்கியமும் விளங்குகின்றன. அதனால், புரட்சிக்குப்பின், தேசிய முதலாளிக்கும் சீனத் தொழிலாளர் வகுப்புக்கும் இடையில் இருந்த முரண்பாடு, முதன்மை முரண்பாடாக இருந்த நிலை மாறிவிட்டது. படைப்புக்கும், மேல் தட்டுகளில் அப்படைப்புப் பெருக்கத்திற்குத் தடையாக நிற்கும் கூறுகளுக்கும் இடையிலான முரண்பாடே இன்றைய முதன்மை முரண்பாடு என்பது உவாவின் கருத்து.

அதனால் வகுப்புப் போர் சீன சமுதாயத்தில் இல்லாமல் போய்விட்டதா என்றால், வகுப்புகள் இன்றும் உள்ளன. ஆனால் வகுப்புப் போராட்டம் முதன்மையானதாக இல்லை என்பது அவருடைய கருத்து. பாட்டாளி வகுப்பு வல்லாண்மை நீடிப்பதற்கான தேவையும் இல்லாமல் போய்விடவில்லை. ஏனெனில், உலக அரங்கில் வகுப்புப் போராட்டம் உண்டு. உள்நாட்டில் எதிர் புரட்சியாளரும் ஊழல் பேர்வழிகளும் கயவர்களும் உண்டு. அதனால் அந்நிலை மாறிவிடவும் இல்லை என்பது அவருடைய கணிப்பு. இக்கருத்தை முற்றாக என்னால் ஏற்க முடியவில்லையாயினும், அது பற்றிய கருத்துப்போரை கூர்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வருவதே நலம் பயக்கும்.

இறுதியாக, வணிக விளம்பரங்கள் பரவலாக பரவி வருவதைப் பற்றிய கேள்விக்கு விடை தரப்புகுந்த ஃஓதுங் அதுமேலை முதலாளிய நாடுகளில் பயன்படுத்தப்படுவது போல் இல்லை என்றார். விற்பனைப் பண்டங்களை அறிமுகப்படுத்த விளம்பரம் தேவைதான். அதையொட்டி சீனமக்களுக்கு கருத்து வேறுபாடு இல்லாததினால், அதை பெரிதுபடுத்துவது சரியில்லை.

முடிவுக்குமுன், நான் பார்த்த சீனத்தைப்பற்றி குறிப்பிட வேண்டியது ஒருசில. அதுதான் ஏடுகள் வாயிலாகவும், பிறர் உரைகளின் வாயிலாகவும் அறிந்த அதே மக்கள் சீனம் தானே அன்றி, மாவோவின் உயரிய கொள்கைகளுக்கு குழிபறிக்கும் சீனமாக எனக்குப்

படவில்லை. சீனத்தின் புரட்சி மதிப்பை தகர்த்து தரை மட்டமாக்கத்துடிக்கும், சோவியத் வல்லரசின் பணத்தால் ஊட்டி வளர்க்கப்படும் புரட்டர்களுக்கும், டிராட்சியர்களுக்கும் வெறும் வாயே அவல் வாயாக இருக்கட்டும். சீனத்தின் நல்ல பட்டறிவுகளை மட்டும் உண்டு செரித்து, வேண்டாவதற்றைத் தவிர்த்து, நமது செந்தமிழ் மண்ணில் புரட்சியை, விடுதலையை - வித்திடும் வகையில் நாம் எண்ணவும் செய்யவும், செய்வதில் நாட்டம் காட்டுவதே இங்கு பயன் தரும். நால்வர் கும்பல் சரியா, இல்லையா இன்றைய சீனத் தலைமை வலதா, இடதா என்பதையொட்டிய சச்சரவுப் போரில் ஈடுபடுவதால் நேரடிப் பயன் இல்லை.

⁂

9. இனவெறி அரசுகளுடன் சோவியத் வர்த்தகம்

3-5-80 ஆம் நாளிட்ட (Economic & Political Weekly) சோவியத் யூனியனின் வர்த்தகத் தொடர்புகள் பற்றிய திடுக்கிடும் செய்திகளை வெளியிட்டுள்ளது.

ஆப்பிரிக்க மக்களின் காவலன் என்றும் உண்மைத் தோழன் என்றும் தம்பட்டமடிக்கும் சோவியத் யூனியனும், ஆப்பிரிக்கர்களை மட்டுமல்லாது அரேபியன்ஸ், ஆப்கானியர்கள் (இன்னும் கொஞ்சநாளில் இந்திய மக்களைக் கூடத்தான்!) விடுதலை செய்யும் புரட்சிப்பொறுப்பை(!) மேற்கொண்டுள்ள கியூபா, மற்றும் இதர கிழக்கு ஐரோப்பிய 'சோசலிச நாடுகளும் ஆப்பிரிக்காவின் கொடும் பகைவர்களான தென்னாப்பிரிக்க, ரொடிஷிய இன்றைய (ஜிம்பாவே) இனவெறியர்களுடன் வர்த்தக தொடர்பு கொண்டுள்ளன என்பதை இச்செய்தி தெரிவிக்கிறது. மேலும் சிலியில் முற்போக்கு ஜனநாயக வாதியான அல்லன்டேவின் கொலைக்காக இன்னும் கண்ணீர் விடுவதை நிறுத்தாத சோவியத்யூனியன் சிலியின் இராணுவ ஆட்சியுடனும் வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ளது. தென்னாப்பிரிக்கா, ரொடிஷியா, சிலி ஆகியவற்றுடன் தனக்கு ராஜதந்திர உறவு – அரசியல் மட்ட உறவு இல்லை எனக்கூறும் சோவியத் யூனியனின் வர்த்தகத் தொடர்பு அதன் கள்ளத்தனத்தை வெளிப்படுத்துகிறது. இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இத்தகைய கள்ள உறவுகள் இப்போது வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

சோவியத் யூனியனுக்குச் சொந்தமான மக்கள் வங்கியின் லண்டன் நகர்க்கிளை தனக்கும் சிலி நாட்டு இராணுவ ஆட்சிக்குமுள்ள கொடுக்கல் வாங்கல் விவகாரங்களை ஒப்புக்கொண்டுள்ளது. 'மக்கள் வங்கி' வெளிச்சத்துக்கு வரக்காரணம், 1976ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இவ்வங்கி ஈடுபட்ட சட்டவிரோதச் செயல்கள், லண்டனில்

சொத்துக்கள் வாங்குவதற்கான பங்குச் சூதாட்டம், பிரிட்டிஷ் வங்கி ஊழியர்களுக்கும் இவ்வங்கிக்கும் ஏற்பட்ட மோதல் ஆகியவையே. சிலியின் இராணுவ ஆட்சியுடன் 'மக்கள் வங்கி' வைத்திருந்த கொடுக்கல் – வாங்கல் விவகாரம் எப்படி அம்பலப்பட்டது? சிலி நாட்டின் ஏற்றுமதிகளை அதிகரிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்த சிலி அரசு நிறுவனம், வர்த்தகப் புள்ளிவிவரங்களை வெளியிட்டு 'மக்கள் வங்கி'யின் பாத்திரத்தை வெளிப்படுத்தியது. சிலிக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே ஆண்டு தோறும் ஏறத்தாழ 33 மில்லியன் டாலர் (ரூ.2640 கோடி) மதிப்புக்கு வர்த்தகம் நடைபெறுகிறது என மதிப்பிடப்படுகிறது. சாண்டியாகோவில் (சிலியின் தலைநகரம்) ஒரு வர்த்தகத் தூதுக்குழு அமைக்க கிழக்கு ஜெர்மனிக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதால் வர்த்தக அளவு மேலும் அதிகரிக்கும். அல்லன்டே ஆட்சியில் இருக்கும்போது சிலியிலிருந்து சோவியத் யூனியன் இறக்குமதி செய்தவற்றில் பெரும்பகுதி செப்பு மட்டுமே. ஆனால் இன்றோ, இறக்குமதியில் 30 சதவீதம் வேளாண்மைப் பொருட்கள். மீன் உரத்தூள், போர்க்கருவிகளுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் மோலிப்படியும் ஆக்சைடு என்ற ரசாயனப் பொருள் ஆகியவையும் அடங்குகின்றன.

ஐ.நா. சபை இனவெறியர் ஆட்சி செலுத்தும் நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ளக் கூடாது எனத் தன் உறுப்பு நாடுகளுக்குத் தடைவிதித்துள்ளது. இத்தடையை மீறி அப்போது நிற வெறியர் ஆட்சியிலிருந்த ரொடிஷியா (இப்போது 'ஜிம்பாப்வே') தென்னாப்பிரிக்கா ஆகிய வெள்ளை நிறவெறி ஆட்சிகளுடன் சோவியத் யூனியன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த செய்திகள் அம்பலமாகி வருகின்றன. மைக்கேல் எண்டர்பிரைசஸ் என்ற ரொடிஷியக் கம்பெனி ரஷ்ய ரசாயனப் பொருட்களுக்குப் பதிலாக, ரொடிஷியப் புகையிலையை ஏற்றுமதி செய்தது. 23-3-76 அன்று மிகெய்ல் கெட்ரோவ் என்ற சோவியத் கப்பல்

மொசாம்பிக் நாட்டிலுள்ள மாபுடோவிலிருந்தும் மடோலா என்ற இடத்திலிருந்தும் ரஷ்யக்கப்பல்களில் புகையிலையையும் மக்காச் சோளமும் ஏற்றப்பட்டன. இரஷ்யாவின் பெஸ்டாலைன் என்ற கப்பல் நிறுவனத்துக்கு மோசாம்பிக் நாட்டிலுள்ள ஏஜெண்டுகள் இந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டார்கள்.

இது மட்டுமா? ரொடிஷியாவில் டன் ஒன்றுக்கு 32 டாலர் (ரூ.256) கொடுத்து வாங்கிய உயர்தரப் பதனிடப்பட்ட தோலை டன் ஒன்றுக்கு 58 டாலர் (ரூ.464) வீதம் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது ரஷ்யா.

நமிபியாவிலிருந்து (இது தென்னாப்பிரிக்காவுக்கு அருகில் உள்ள நாடு. இதை வெள்ளை நிற வெறியர் சட்டவிரோதமாகப் பிடித்து வைத்துள்ளனர்) உயர்தர காரகுல் ஆட்டு ரோமம் ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாகிறது. 1970-ல் மட்டும் ரஷ்யா 16.8 மில்லியன் டாலர் (ரூ.134.40 கோடி) மதிப்புள்ள ரோமத்தை வாங்கியது. தென்னாப்பிரிக்காவிலுள்ள டி பீர் என்ற கம்பெனிக்கு சோவியத் வைரங்களை விற்பதற்கான உலக உரிமை வழங்கி ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

நமிபியாவின் கடலோர பகுதிகளிலிருந்து மீன்பிடிப்பதில் சோவியத் யூனியன் கொள்ளை கொள்ளையாக அள்ளிச் செல்கிறது. 1975ஆம் ஆண்டில் இக்கடலோரப் பகுதியில் பிடிக்கப்பட்ட மீன்களில் 43 சதவீதம் சோவியத் யூனியன் பிடித்ததாகும். போலந்து, கியூபா பல்கேரியா மூன்றும் சேர்ந்து பிடித்தவை 15 சதவீதமாகும். தென்னாப்பிரிக்க இனவெறி ஆட்சியின் அனுமதி இன்றியோ அல்லது அதற்கு உரிமைத் தொகை செலுத்தாமலோ மீன் பிடித்திருக்க முடியாது.

இதுபோன்ற மேலும் பல விவகாரங்கள் அமுக்கி வைக்கப்பட்டுள்ளன. காரணம் சோவியத் யூனியனின் வர்த்தக பொருளாதார உறவுகள் பற்றிய தகவல்களை எளிதில் எட்ட முடியாதபடி வைத்துள்ளது பிரஸ்னேவ் கோசிஜின் கும்பல்.

'மக்கள் வங்கி' எக்கச்சக்கமாக மாட்டிக் கொள்ளும்போது வழியில்லாமல் வெளியிடுகின்ற தகவல்களைப் போல மேலும் புதிய திடுக்கிடும் தகவல்களை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

நினைவுக் குறிப்புகள்:

ஜோசிப் ப்ராஸ் டிட்டோ (1892–1980)

நோய்ப் படுக்கையில் பல மாத போராட்டங்களுக்குப் பிறகு சென்ற ஏப்ரல் திங்களில் மரணமடைந்தார் டிட்டோ. இருபதாம் நூற்றாண்டின் வண்ணமிக்க அரசியல் தலைவர்களில் டிட்டோவும் ஒருவர். இரண்டாம் உலகப் போரின் மாபெரும் நாயகர்களில் அவரும் ஒருவர்.

ஏழை உழவர்களின் மகனாகப் பிறந்த டிட்டோவின் கரங்களில் கிழக்கு ஐரோப்பாவின் ஓர் பகுதியின் தலைவிதி மட்டுமல்லாது உலகின் தலைவிதியையும் நிர்ணயிப்பதற்கான கடமைகள் ஒப்படைக்கப்பட்டன.

போல்ஷ்விக் புரட்சிக்கருத்துக்களின் தாக்கம் பெற்றுப் பொதுவுடைமை யாளராகிய டிட்டோ, போல்ஷ்விக் கட்சியைப் போலவே யூகோஸ்லேவியப் பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கவும் பின்னர் ரஷ்ய முன் மாதிரியை ஒத்த சோசலிச அரசை உருவாக்கவும் முனைந்தார். ஆனால் ஸ்டாலின் தலைமையிலிருந்த சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் ஆதிக்கத்திலிருந்து தனது கட்சியையும் நாட்டையும் விடுவித்துக் கொண்டு உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் 'பல்வேறு மையங்கள்' சாத்தியம் என்பதை அறிவித்தார்.

ஸ்டாலினைத் தட்டிக் கேட்ட துணிச்சல் கொண்டிருந்த டிட்டோ, அதே ஸ்டாலினிச உறுதிப்பாட்டுடனும், இறுக்கத்துடனும் தன் எதிராளிகளை சமாளித்ததுண்டு. நாஜிகளின் தாக்குதலுக்கெதிரான உள்நாட்டுப் போரில் துணிச்சல் மிகுந்த தலைமையையும் ஒளிமிகுந்த

சாதனையையும் கொண்டிருந்த டிட்டோ 1937இல் யூகோஸ்லேவிய பொதுவுடைமைக் கட்சிக்குத் தலைமை ஏற்று உள்நாட்டுப் போரை யூகோஸ்லேவிய சோசலிசக் குடியரசை நிறுவும் வரை வளர்த்துச் சென்றார். புரட்சிக்குத் தலைமை தாங்கியதுடன் மட்டுமல்லாது, புரட்சியின் ஆதாயங்களை ஒன்று திரட்டி நிலைப்படுத்துவதிலும், அதைப் பாதுகாப்பதிலும் ஸ்டாலின், மாவோ ஆகியோரை அவர் நினைவூட்டுகிறார். பல்வேறு தேசீய இனங்களையும், ஆறு குடியரசுகளையும், நான்கு முதன்மையான மொழிகளையும், மூன்று சமயங்களையும் கொண்ட ஒரு கலைடோஸ்கோப் நாட்டை ஒன்றுபடுத்தி வழிகாட்டிச் சென்றது அவரது மாபெரும் சாதனை.

அவர் மேலும் ஒருவகையில் ஈடிணையற்றவராக விளங்கினார். ஸ்டாலின் தலைமையிலிருந்த போதும் சரி, அதற்குப் பின்னர் 1960ஆம் ஆண்டில் மாஸ்கோவில் 81 பொதுவுடைமைக் கட்சிகளின் மாநாடு நடைபெற்ற போதும் சரி, சீனப் பொதுவுடைமைக் கட்சி, சோவியத் பொதுவுடைமைக் கட்சி ஆகிய இரண்டினதும் கண்டனத்தைப் பெற்றவர் அவர். உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பெரும்பகுதி அவரைப் புரட்டலாளர் என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாள் என்றும் கண்டனம் செய்ய, அவரோ தொழிலாளரின் சுய நிர்வாகம்' என்ற புதிய பாதையைத் துவக்கி வைத்தார். அதே டிட்டோதான் இன்று சீனப் பொதுவுடைமைக் கட்சி, சோவியத் பொதுவுடைமைக் கட்சி இரண்டாலும் வானளாவப் புகழப்படுகிறார் (வெவ்வேறு காரணங்களுக்காக).

சோசலிசம் கட்டுவதில் பல்வேறு பாதைகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்ளும் பொதுவுடைமையாளர்கள், டிட்டோ மீது தொடுத்ததாக்குதல்களில் நியாயமற்ற காரணங்கள் இருந்தன என்பதும், யூகோஸ்லேவிய அனுபவம் பற்றிய வரலாற்று வகை மதிப்பீட்டை இவர்களிற் பெரும்பாலோர் செய்யவில்லை என்பதும் உண்மையாகும்.

சோவியத் யூனியனைப் போல் அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டுச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலக மக்களைப் பொறுத்தவரை நாஜிசத்துக்கு எதிரான வீரப் போரில் ஒளிமிக்க சாதனைகள் புரிந்தவர் என்பதோடு மட்டுமின்றி, இரு ஏகாதிபத்தியங்களின் வலை விரிப்புகளில் சிக்காமலிருக்குமாறு கூட்டுச் சேரா நாடுகளை, மூன்றாவது உலக நாடுகளை இடைவிடாது எச்சரித்து வந்ததும் தனது செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி, கூட்டுச் சேரா நாடுகளை சோவியத் செல்வாக்குக்கு கொண்டுவர காஸ்ட்ரோ செய்த முயற்சிகளை முறியடித்ததும் மிக முக்கியமான உண்மைகளாகும்.

ழான் பவுல் சார்த்தர் (1905–1980)

டிட்டோவைப் போல் மாதக்கணக்கில் மரணத்துடன் போராடவில்லைதான். ஆனால் மூன்றாண்டுகளுக்கும் மேலாக கண்பார்வை முற்றாக மங்கிப்போய் செயலற்றவராக இருந்தார் சார்த்தர். மரபு வழிப்பட்ட பொருளில் சொல்லப்படக் கூடிய, இருபதாம் நூற்றாண்டில் அரிதாகிப்போன "தத்துவவாதிகளில்" இவரைச் சேர்த்துவிடலாமா? "தத்துவவாதிகள் உலகை பல்வேறு வகைகளில் விளக்கியுள்ளனர். ஆனால் செய்யப்படவேண்டியதோ உலகை மாற்றுவதுதான்" என மார்க்ஸ் அறிவித்த நாள் முதல் "தத்துவவாதிகளி"ன் சலுகைமிக்க, கௌரவமிக்க நிலை தாழ்ந்துவிட்டது: தமது கருத்தளவிலான திட்டங்களுக்கும் முன்மாதிரிகளுக்கும் உகந்தவாறு உலகைச் செதுக்க வேண்டும் என்ற தத்துவவாதிகளின் கோரிக்கைகளுக்கு உலகம் இப்போது செவிசாய்ப்பது கூட இல்லை.

சார்த்தர் இத்தகைய 'தத்துவவாதி' தான் எனச் சொல்லிவிட முடியாது. தான் பிறந்த பூர்சுவாச் சூழலுக்கெதிராக இடைவிடாத கலகம் புரிந்தவர் அவர். அதே போல வறட்டுத்தனமான நிர்ணயக் கோட்பாடுகளை விலக்கியவரும் அவரே. பூர்சுவா மனிதாபிமானக் கோட்பாடுகளோடு, வறட்டுத்தனமான மார்க்சியச் சூத்திரத்தையும் வெறுத்தவர்

அவர். மனிதனைப் பற்றிய குறுகிய வரையறுப்புகளைத் தகர்த்தவர் சார்த்தர்.

தன் முனைப்பு, அகத்தன்மை (Subjectivity) என்பவையெல்லாம் வறட்டுச் சூத்திர நிர்ணயக் கோட்பாட்டாளர்களால் மறுக்கப்பட்டபோது, இதை முதன்மைப் பிரச்சினையாக்கியவர் சார்த்தர். இவர் இப்பிரச்சினையை எழுப்பிய முறையும் வழங்கிய விடையும் மார்க்சிய வாதிகளுக்கு உடன்பட்டவையல்ல என்பது உண்மையானாலும், அவர் இதை எழுப்பினார் என்பதே முக்கியமானது.

தனது எக்சிஸ்டென்ஷியலிசக் கோட்பாட்டிலிருந்த பூர்சுவா, தனிமனித நிலைபாடுகளையெல்லாம் நடைமுறையில் களைந்து வந்தவர் சார்த்தர். 'தத்துவம்' செயலிலிருந்து விலகியிருப்பதை ஏற்க மறுத்தவர். தத்துவம் என்பது அரசியல், அரசியல் என்பது கருத்துப்போர், கருத்துப்போர் என்பது செயலில் ஈடுபாடு, ஈடுபாடு என்பது வர்க்கப் போராட்டம், இதன் இலக்கு வர்க்க பேதமற்ற சமூக அமைப்பு இப்படி விரிந்து சென்றது அவரது நடைமுறை. 'Man is a useless passion' என்ற நிலைப்பாட்டை அவர் எப்போதோ கடந்து வந்து விட்டார்.

சார்த்தரின் 'எக்சிஸ்டென்ஷியலிசம்' பொறுப்பற்ற நபர்களால் ஒரு 'ஃபா னாக' பாவிக்கப்பட்டது. கொச்சைப்படுத்தப்பட்டது. இது குறித்து சார்த்தர் இளக்காரமாகச் சொன்னார்: "அமெரிக்காவிலிருந்து வந்த அழுக்குக் கட்டம் போட்ட சட்டைகளை ஒரு இளந்தலைமுறையினர் முழுவதும் அணிந்ததற்குக்கூட நான் தான் காரணம் என்று சொன்னார்கள், என்ன முட்டாள்தனம்".

சார்த்தர் யாருக்குமே பிடிகொடுக்காதவர். அவர் எல்லாரையும் சார்ந்தவர் – யாரையும் சார்ந்தவரல்லர். அவர் கூறினார்: "நான் ஒரு சிந்தனையாளன். அரசியல் வாதியல்ல. ஆனால் ஒரு குடிமகன் என்ற முறையில் "நிர்ப்பந்தம் செய்யும் குழுவில்" (Pressure Group) சேர முடியும்.

அதனால்தான் நான் முழு மனத்துடன் அல்ஜீரியர்கள் பக்கம் இருந்தேன். இவை ஒரு குடிமகனின் கடமைகள். என்னுடைய திறமைகள் அறிவு' சார்ந்தவையாதலால் எழுதுவதன் வழியாக ஒரு குடிமகனாகச் செயல்பட முடியும். சிந்தனையாளன் என்ற முறையில் என் கடமை சிந்திப்பதுதான் – கட்டுப்பாடு ஏதுமின்றி, அதனால் தவறுகள் செய்தாலும் சரி. எனக்கு தானே எவ்விதக் கட்டுப்பாட்டையும் வைத்துக் கொள்ளக் கூடாது; மற்றவர்கள் என்னைக் கட்டுப்படுத்தவும் கூடாது. பொதுவுடைமைக் கட்சியுடன் என் உறவைப் பொறுத்தவரை மார்க்சியம் அதனுடைய "துணைப் பயணி" களைக் (fellow-travellers) கொண்டிருந்தால்தான் தன்னுடைய சாத்தியக் கூறுகள் முழுவதையும் உணர முடியும் – அதாவது தங்களையே அரசியல் ரீதியாகச் சிறைப்படுத்திக் கொள்ளாமல் மார்க்சியத்தை உள்ளிருந்தவாறே விருப்பு வெறுப்பின்றி ஆராயும் நண்பர்கள்தான், பொதுவுடைமையாளருக்கு வேண்டிய நண்பர்கள். இவர்களே இத் "துணைப்பயணிகள்".

தத்துவவாதிகளில் படைப்பிலக்கியவாதியாகவும் இருந்தவர் சார்த்தர் போல் மிகச் சிலரே உண்டு. மிகச்சிறந்த கலைப் படைப்புகள் அவருடையவை. நாடகங்கள் தனிக் கவனத்துக்கு உரியவை. நோபல் பரிசை உதறித் தள்ளுவதிலிருந்து வேறுவகைப் புகழ்ச்சிகளை எதிர்கொள்ளுதல் வரை அவர் கொண்டிருந்த நிலைபாடு இதுதான் "நான் என் அந்தஸ்தின் கைதியாகி விடுவதை விரும்பவில்லை... நான் சில நூல்களை எழுதியுள்ளேன். ஆனால் இவற்றிலுள்ள கருத்துக்களை உலகம் மாறும் போதும் கைவிடக் கூடாது என்பதை என் கடமையாகக் கொள்ளவேண்டும் என்று நினைத்தால் நான் அதன் பிறகும் நானாக இருக்கமாட்டேன் என்று என்னையே எச்சரித்துக் கொள்கிறேன். அப்போது நான் என் நூல்களுக்கு நானே பலியாகிவிடுவேன்... ஆனால் மாற்றத்துக்குத் தயாராக இருப்பதை நான் எப்போதும் விரும்புகிறேன். நான் எழுதிய எதற்கும் கட்டுப்பட்டவனாக

என்னை நான் கருதவில்லை. அதுபோலவே, அதில் ஒரு சொல்லைக் கூட என்னுடையது அல்ல என்று கைவிட்டு விடுவதுமில்லை".

சார்த்தரின் வாழ்வு புனிதமும் வீரமும் நிறைந்த பயணம். நாஜிகளுக்கெதிரான போராட்டத்தில் அவர் பங்கு, உலக அமைதி மாநாட்டில் அவர் ஏற்ற பங்கு, 1968 ஆம் ஆண்டு பிரெஞ்சு மாணவர் – தொழிலாளர் கிளர்ச்சியில் அவரது ஈடுபாடு, கலைஞர்களின் சுதந்திரத்துக்காக அவர் காட்டிய ஆவேசம், அல்ஜீரிய மக்களின் போராட்டத்துக்கு அவர் தந்த ஆதரவு, நோபல் பரிசை நிராகரித்தது, வியத்நாம் மக்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் இழைத்த கொடுமைகளுக்கு எதிராக அவர் ரஸ்ஸலுடன் உருவாக்கிய நீதிமன்றம், மாவோயிஸ்டுகளுக்காக அவர் பத்திரிகைப் பொறுப்பு ஏற்றது, கம்பூசியர்களுக்கு அதே வியத்நாமியர்கள் 1979இல் இழைத்த அநீதியை எதிர்த்தது. இவ்வாறு நீண்ட பட்டியலில் அடங்குவது அவரது வாழ்வின் நடைமுறைச் செயல்கள். ஒரு தனி அறையில் வாழ்ந்து, சில நூல்களை மட்டுமே உடைமையாகக் கொண்டிருந்து, தமது எழுத்துக்களில் வந்த வருவாயில் மிகப்பெரும் பகுதியை புரட்சி இயக்கங்களுக்கும், இடதுசாரி இயக்கங்களுக்கும் வழங்கிய தன்னலமற்ற மனிதர் அவர்.

அவர் எழுபத்தொன்றில் சொன்ன செய்தி இதுதான்: "அறிவாளிகளுக்கு இனிமேல் சலுகையுள்ள தனி இடம் இல்லை. எழுத்துப்போராட்டம் மட்டுமே அவர்கள் கடமை என்ற நிலை இல்லை. வாளெடுக்க வேண்டியவர்கள் அவர்களுமே". சார்த்தர் சொல்வதில் எப்போதுமே மிகையுணர்வு உண்டு. ஆனால் மிகைப்படுத்தப்படுவது உண்மையே தவிர வேறல்ல.

⁂

எரிக் ஃப்ராம்

அமெரிக்காவின் தலைசிறந்த சோசலிசச் சிந்தனையாளர்களில் ஒருவரும் உலகப் புகழ்பெற்ற உளவியல் அறிஞருமான எரிக் ஃப்ராம் சென்ற மார்ச் திங்களில் காலமானார். மார்க்சின் '1844ஆம் ஆண்டு பொருளாதார, தத்துவக் கையெழுத்துப்படிகள்', மார்க்ஸ் எங்கல்ஸ் எழுதிய 'ஜெர்மன் சித்தாந்தம்', 'புனிதக் குடும்பம்' போன்ற நூல்களின் தாக்கம் பெற்று உளவியல், சமூகவியல், முதலாளியச் சரக்குப் பண்பாடு முதலியவற்றைப் பகுத்தாய மார்க்சியத்தைப் பயன்படுத்தினார். Man for Himself, The Sane Society, You shall be as Gods, Concept of Love, The Crisis of Psycho Analysis முதலியவை அவர் எழுதியவற்றில் குறிப்பிடத்தக்கவை. அவர் தன்னை கம்யூனிஸ்டு அல்லாத சோசலிசவாதி என்று அழைத்துக் கொண்டார். சோவியத் உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாட்டுச் சோசலிசங்கள் மனித முகமற்றவை என்று கருதினார். அமெரிக்க பூர்சுவா உளவியல் அறிஞர்களுக்கிடையிலும் பகை மிக்க இதர சிந்தனைப் பள்ளிகளுக்கு ஊடாகவும் மார்க்சியத்தைப் பரப்ப எரிக் ஃப்ராம் கடும் முயற்சி செய்தார். ஒருவகையில் ஃப்ராம் போன்றவர்களின் முயற்சி மேட்டுக்குடிச் சிந்தனையாளர்கள் மத்தியில் மார்க்சியத்துக்கு 'கௌரவம்' தேடும் செயலாகவே இருந்தது. இருப்பினும் சமூகத்தின் நோய்களை இனங் கண்டுகொள்ள மார்க்சியத்தை அவர் பயன்படுத்தியது, அதன் வீச்சும் விரிவும் பல துறைகளைத் தழுவும் ஆற்றல் கொண்டவை என்பதை மெய்ப்பித்தது.

⁂

'இலக்கு' கலாச்சார இயக்கம்

சென்னையில் 11-5-80 அன்று நடைபெற்ற 'இலக்கு' கலாச்சார இயக்கச் செயற்குழு தனது கொள்கைகளை மேலும் தெளிவுபடுத்தியுள்ளதை பரிமாணம் வரவேற்கிறது. தமிழ்க் கலாச்சாரச் சீர்குலைவிற்கு ஏகாதிபத்தியம், நிலவுடைமை ஆதிக்கம், முதலாளியம் ஆகியவற்றைக் காரணங்களாக இயக்கம் காண்கிறது. சாதி மதம் சடங்குகள் முதலியவற்றையும் எதிர்த்து இயக்கம் நடத்துவதை செயற்குழு வரவேற்கிறது. ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பதோடு ஆங்கில ஆதிக்கத்தையும் எதிர்க்க 'இலக்கு' கலாச்சார இயக்கம் முடிவு செய்கிறது.

'இலக்கு' கலாச்சார இயக்கத்தோடு சென்னையிலுள்ள பெண்ணுரிமை இயக்கமும் தமிழ் இயக்கமும் கூத்துப் பட்டறையும் இணைவதை பரிமாணம் வரவேற்கிறது.

டிசம்பர் இறுதியில் சென்னையில் இலக்கு இயக்கத்தின் முதலாண்டு நிறைவின் போது சிறப்பான முறையில் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்யப்படும். அதற்கு முன்னர் தமிழ்க் கலாச்சாரச் சீர் குலைவு, தமிழ்ப்பண்பாடு, நாகரிகம் தமிழிலக்கிய ஆய்வுகள் பற்றிய விமர்சனம், தமிழில் பெரும் பத்திரிகைகள் ஆகியவைப் பற்றிய விரிவான விவாதத்திற்கான சிறு வெளியீடுகள் கொண்டு வருவது பற்றி செய்யப்பட்ட முடிவைப் பரிமாணம் வரவேற்கிறது.

கோவையில் 'குமரி' வட்டத்தினர் கீழ்வெண்மணி என்ற தெருமுனை நாடகத்தைச் சிறப்பாக நடத்தி வருவதை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். 'தர்சனா' திரைப்படச் சங்கம் இதுவரை ஐந்து திரைப்படங்களைத் திரையிட்டுள்ளது. 'சங்கராபரணம்' திரைப்படத்திலுள்ள அபத்தங்களை ஒரு துண்டு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

'இலக்கு' கலாச்சார இயக்கம் மேலும் சிறப்பான முறையில் பணியாற்ற பரிமாணம் வாழ்த்துகிறது.

~~*

பரிமாணம் – 10

அக்டோபர் 1980

நான் காணும் கனவு

“நமது அன்பு மதலை யாசிக்கைப் பற்றி நினைக்கும்போது இன்ப அலை என்னை மூழ்கடிக்கின்றது.. யாசிக் மூடு தோட்டத்தில் வளர்ந்த மலர்ச்செடியாக இருக்கக்கூடாது. உண்மைக்காகவும், கொள்கைக்காகவும் போராட வாழ்க்கையில் வல்லவன் ஆகும் பொருட்டு உணர்ச்சிகளின் இயக்க அலை அனைத்தையும் அவன் பயின்று தேறவேண்டும்... கொள்கையை வெகு ஜனங்களுடன் அவனை ஒன்று படுத்துவதும் அவனுடைய வாழ்க்கையை ஒளியுறுத்தி விளக்கப் போதுமான கருத்தை – நேசிக்க வல்லவனாக அவன் இருத்தல் வேண்டும்... இந்தப் புனித உணர்வு மற்ற எல்லா உணர்ச்சிகளையும் விட வலியது.. வாழ்க்கையின் பொருட்டுச் சாவை மேற்கொள்வதும், விடுதலையின் பொருட்டுச் சிறை செல்வதும், வாழ்க்கை நரகம் அனைத்தையும் திறந்த கண்களுடன் அனுபவிக்க வலிமை பெற்றிருப்பதும், இந்த வாழ்க்கையில் இருந்து எடுத்த அழகையும் உண்மையையும் இன்பத்தையும் பற்றிய மாண்புள்ள உயர்பாடலின் இசையை உள்ளத்தில் உணர்வதும், இன்றியமையாதவை.. தற்காலத்தில் சொந்த வீட்டைத் துறந்தவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பாதையில் சென்றால் உலகனைத்தையும் பெறுவார்கள். வசதியான ‘சொந்த வீடு’ பற்றிய இன்பக் கனவு தற்காலத்தில் அறிவு ஜீவிகளுக்கு இயல்பானது. யாசிக் இந்த ஆசைக்கு இடம் கொடுக்காமல் இருக்க முடிந்தால், அழகு உணர்ச்சியும் பரிவும் அவன் உள்ளத்தில் நிலைத்திருந்தால், ‘என்னுடைய’ என்ற சொல்லும் ‘அன்புக்குரிய என்ற சொல்லும் அவனுக்கு ஒரே பொருள் கொண்டவையாக இருந்தால், அழகைத் தனக்கே உரியது ஆக்கிக்கொள்ளும் – வணிகர்களின் அர்த்தத்தில் ‘தனக்கே உரியது ஆக்கிக் கொள்ளும்’ – தேவையை உணராமல், இந்த அற்புத உலகம்

அனைத்தையும் அவன் தனதாக உணர்ந்தால், எல்லோரிலும் இன்பம் உள்ளவனாக இருப்பான். அப்போது அவன் எல்லோரையும் விட ஆக்கத்திறன் கொண்டிருப்பான். நான் காணும் கனவு இதுதான்: அவன் காணவும் கேட்கவும் உணரவும் வல்லவனாக இருந்தால், ஒருவேளை பிற்காலத்தில் வாழ்க்கை அவனுடைய பார்வையையும், செவிப்புலனையும் இன்னும் அதிகம் கூர்மை ஆக்கும், மக்கள்பால் அவனுடைய அன்பை விரிவுபடுத்தும். அப்போது அவன் கோடிக்கணக்கான மக்களுடன் இரண்டறக் கலந்து விடுவான். அவர்களைப் புரிந்து கொள்வான். அவர்களுடைய பாட்டு அவனுடைய பாட்டு ஆகிவிடும். இந்தப் பாட்டின் இசை அவனுக்குள் நிறைந்து ததும்பும், மனிதனின் உண்மை எழிலையும் இன்பத்தையும் அவன் புரிந்து கொள்வான். உணர்வான். அவன் கவிதையின் துணையால் வாழும் கவிஞன் ஆக மாட்டான். இலட்சக்கணக்கான மக்களின் பொது வாழ்க்கையை வாழ்ந்தவாறு தனது பாட்டை இயற்றுவான்."

-த்செர்ழீன்ஸ்கி

(மாபெரும் ரஷ்யப் புரட்சியாளராகிய இவர் தன் மனைவிக்கு 11-6-1913ல் எழுதிய கடிதத்திலிருந்து)

1. நம்பார்வை

இலட்சக்கணக்கான குழந்தைகள் தமிழ் கற்கவில்லை. கற்க முடிய வில்லை. கற்றதையும் அரைகுறையாகக் கற்றிருக்கிறார்கள். தேவையான விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடும் வரலாற்றுப் பார்வையோடும் கற்கவில்லை. இதனால் தமிழ்க்கல்வி வலிமை சேர்க்கவில்லை. இடையில் வந்த ஆங்கிலம் பெரும்பான்மையான மாணவர்களின் மூளையைத் தின்றுவிடுகிறது. இந்நிலையில் தமிழ் எப்படி வளரும்?

பல்கலைக்கழகங்களும் தமிழ்த்துறைகளும் ஆராய்ச்சி நிறுவனங்களும் தமிழை வைத்து என்ன செய்கின்றன? பட்டம், பதவி, பதவி உயர்வு, பெருமை இவற்றிற்காகவே 'தமிழாராய்ச்சி' நடைபெறுகிறது. பட்டியல் தொகுப்பும், சுவை நலம் பாராட்டலுமே ஆராய்ச்சியாகி விடுகின்றன. தொல்காப்பியரும் சங்கச் சான்றோரும், திருவள்ளுவரும், இளங்கோவும் வளர்த்த ஆற்றல் மிக்க தமிழ் இங்கு பலருக்கு வாழ்க்கைச் சாதனமாகியிருக்கிறது. வணிகப் பொருளாகியிருக்கிறது. இவர்களின் தமிழாராய்ச்சி மக்களுக்கானதாக – மக்களுக்கு ஆற்றல் சேர்க்கத் தக்கதாக இல்லை. தமிழ் இலக்கியங்களின் சமுதாயப் பின்னணியும் மக்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளும் பிரச்சனைகளுக்கு யார் காரணம், இவற்றை எப்படித் தீர்ப்பது என்பது பற்றியும் இலக்கிய ஆய்வாளர்கள் கவலை கொள்வது இல்லை.

தமிழ்ப் பெருமை, தொன்மை, தமிழர் நாகரிக மேன்மை முதலிய பேச்சுக்கள், இவை தொடக்கத்தில் எத்தகைய உயரிய நோக்கத்தோடு நடைபெற்றிருந்தாலும், இன்று என்ன விளைவை ஏற்படுத்தியிருக்கின்றன? எங்களுக்கு நிகர் யார் உலகில்? நாங்கள் கண்ட பண்பாடு எத்தகைய மேன்மை உடையது என்ற முறையில் ஆணவத்தையும் தற்பெருமையையும் அல்லவா ஏற்படுத்தியுள்ளன. இவை தமிழனின் பார்வையை மறைக்க வில்லையா? உலகளாவிய பார்வை பெற வேண்டியவன் தனக்குள்ளே சுருங்கி முடங்கியிருப்பது ஏன்? இப்படி இவனை முடமாக்கியவர்கள் யார்?

தமிழக மக்களின் வாழ்வு எப்படி வளம்பெறும்? தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான விளைநிலங்களும்

தொழில்களும் சுரண்டல் வாதிகளின் உடைமையாக இருக்கும்போது, கல்வி நிலையங்களும் கலாசார நிறுவனங்களும் சுரண்டல்வாதிகளின் ஆதிக்கத்திலிருக்கும் போது, இவர்களின் நலன்களுக்காகவே அரசு செயல்படும்போது, இந்த ஆதிக்கங்களை மறைக்கவே தமிழ்ப்பூசை உயர் அளவிலான ஆவேசத்தோடு நடைபெறும்போது, தமிழக மக்களின் வாழ்க்கையில் எப்படி விடுதலை, மேன்மை கிடைக்கும்? தமிழர்களின் விடுதலை மேன்மை என்பது வெறும் மொழி சார்ந்த விடுதலை தானா? பல துறைகளில் அடிமையாக இருக்கும் தமிழன், மொழித்துறையில் மட்டும் விடுதலை –மேன்மை பெறுவது சாத்தியமா?

இதற்கெல்லாம் உலகத் தமிழ் மாநாடு என்ன செய்யப் போகிறதாம்?

சிலைகள் வைத்துத் தமிழை வளர்க்கமுடியுமா? மதுரைத் தெருக்களில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொருட்காட்சிகள், விருந்துகள், வேடிக்கைகள் செய்தால் தமிழ் வளருமா? அரசியல்வாதிகள் தம்மை நோக்கியே திருப்பி வைத்துக்கொள்ளும் ஒளிவிளக்குகளால், அலங்காரங்களால் தமிழ் வளருமா? தமிழை வளர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் மடங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், பத்திரிகைகள் முதலியவை செய்யும். செய்யப் போகும் ஆர்ப்பாட்டங்களால் தமிழ் வளருமா? வலிமை பெறுமா?

மக்களுக்கு அலங்காரங்கள் ஆர்ப்பாட்டங்களைக் காட்டி அவர்களை மயக்கி மடையர்களாக்கி வலிமை அற்றவர்களாக்கி அவர்கள் மீது மேலும் இறுக்கமாக அமர்ந்து கொள்ள முயலும் ஆதிக்கச்சக்திகளால் தமிழ் எப்படி வளரும்?

அரசியல், பொருளாதாரம், மதம், கலாச்சாரம், மொழி முதலிய துறைகளில் தமிழக மக்களின்மீது அமர்ந்துள்ள ஆதிக்கச் சக்திகளிடமிருந்து தமிழக மக்களை

விடுதலை செய்வதன் மூலமே தமிழக மக்களும், தமிழும் வளர்ச்சி பெற முடியும்.

"அரசானது எவ்வகையிலும் வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது வலுக்கட்டாயமாய் இருத்தப்பட்ட சக்தியல்ல. இதேபோல அது எவ்வகையிலும் ஹெகல் வலியுறுத்தும் 'அறநெறிக் கருத்தின் எதார்த்த உரு'வோ' 'அறிவின் பிம்பமும் எதார்த்தமுமோ அல்ல. மாறாக, சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தின் விளைவே அரசு. இந்தச் சமுதாயம் தன்னுடனான தீராத முரண்பாட்டில் சிக்கிக்கொண்டு விட்டது. இணக்கம் காணமுடியாத பகைச்சக்திகளாய்ப் பிளவுண்டு விட்டது. இந்தப்பகைமை நிலைமை அகற்றத் திறனற்றதாகி விட்டது என்பதை ஒப்புக்கொள்வதன் விளைவே அரசு. ஆனால் இந்தப் பகைச் சக்திகள், முரண்பட்டு மோதிக்கொள்ளும் பொருளாதார நலன்களைக் கொண்ட இந்த வர்க்கங்கள், தம்மையும் சமுதாயத்தையும் பயனற்ற போராட்டத்தில் அழித்துக்கொண்டு விடாமல் தடுக்கும் பொருட்டு, மோதலைத் தணித்து 'ஒழுங்கின்' வரம்புகளுக்குள் இருத்தக்கூடிய ஒரு சக்தியை, வெளிப்பார்வைக்குச் சமுதாயத்துக்கு மேலானதாய்த் தோன்றும் ஒரு சக்தியை நிறுவுவது அவசியமாயிற்று சமுதாயத்திலிருந்து உதித்ததானாலும் சமுதாயத்திற்கு மேலானதாகத் தன்னை அமர்த்திக் கொண்டு மேலும் மேலும் தன்னை அதற்கு அயலானாக்கிக் கொள்ளும் இந்தச் சக்தியே அரசு". -எங்கெல்ஸ்

2. அன்டோனியோ கிராம்சி – வாழ்வும் சிந்தனையும்

–ஞானி

இளமைக்காலம்:

இத்தாலியின் ஒரு பகுதியாகிய சார்டினியாவில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 1891–இல் பிறந்தார் கிராம்சி. தந்தையார் எழுத்தர். தாயார் ஏழை உழவர் குடும்பத்தைச் சேர்ந்தவர். கிராம்சியின் ஏழாம் வயதின் போது பணக் கையாடல் குற்றத்திற்காகத் தந்தை சிறைக்குச் சென்றார். வெளிவந்த போது அவருக்கு வேலை இல்லை. கிராம்சியுடன் பிறந்தவர்கள் அறுவர். பள்ளியை விட்டு விலகிய கிராம்சி சில ஆண்டுகள் அலுவலகப் பையனாகப் பணிபுரிந்தார். ஒன்பதாவது வயதில் டியூரின் பல்கலைக் கழகத்தில் படிக்க உதவித்தொகை கிடைத்தது. வறுமை மிக்க குடும்பச் சூழல், உடல் நலக் குறைவு, கூன் விழுந்த முதுகு இவற்றோடு கிராம்சி பயின்றார்.

சார்டினியா, உழவுத்தொழில் பெரும்பகுதி இடம்பெறும் பகுதி. கிராம்சி குடும்பம் பரவாயில்லை என்று சொல்லத்தக்க நிலைமை. டியூரினில் இவர் பார்த்த தொழிலாளர்களை விட வறிய நிலையில் சார்டினியா உழவர்கள் வாழ்ந்ததைக் கிராம்சி என்றும் மறக்கவில்லை. தான் வாழ்ந்த சார்டினியாவின் ஆழ்ந்த வேர்களைத் தம்மிடம் கொண்டிருந்தார். தம் மக்கள் கலாச்சாரம், மொழி, பாடல்கள் முதலியவற்றிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

நவீனத் தொழில்வளம் மிக்க டியூரினுக்கு அவர் சென்ற பொழுது நகரம் அவரை அச்சுறுத்தியது. விரைவில் டியூரின் நகரத்தின் வரலாற்று முக்கியத்துவமும் அரசியல் கொந்தளிப்பும் அவரது உணர்வில் கலக்கத் துவங்கின. தொழில் துறை வளர்ச்சியின் தேவையை அவர் ஏற்றார். எதிர்காலவியல் இயக்கத்தைச் (Futurist Movement) சார்ந்த கலைஞர்களிடம் ஈடுபாடு கொண்டார். டியூரினிலிருந்த கார்

தொழிற்சாலை அதிபர்கள் நவீனகால மன்னர்களாக அவருக்குக் காட்சி தந்தனர். இவற்றோடு இத்தாலியின் அறிவுச்சூழல், முதல் உலகப்போருக்கு முன்னர் ஏற்பட்ட நெருக்கடிகள், இத்தாலிய சோசலிசக் கட்சி, பாலமயிரோ டோகிலியாட்டி, ஆஞ்சலா டாஸ்கா முதலிய நண்பர்களின் உறவு இவற்றின் பாதிப்புக்கு வெகுவாக ஆட்பட்டார் கிராம்சி.

இத்தாலியின் சிந்தனைச்சூழலில் பெரும் செல்வாக்குச் செலுத்தியவர் பெனிடிட்டோ குரோஸ். இவர் ஒரு தத்துவவாதி (1866ல் பிறந்தவர்). இயற்கை விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்பட்ட நேர்க்காட்சிவாத அணுகல் முறையைக் கடுமையாகத் தாக்கினார். வரலாற்று மாற்றம், கலைப்படைப்பு ஆகியவற்றில் அகநிலைப் பண்பை முதன்மைப்படுத்தினார். மார்க்சைக் கற்கத் துவங்கிய குரோஸ், ஹெகலிடம் பற்றுக்கொண்டார். 18ஆம் நூற்றாண்டு இத்தாலியச் சிந்தனையாளர் விகோவின் பாதிப்பும் இவரிடம் இருந்தது. இவர்களிடமிருந்து வரலாறு என்பது சமூகம், சிந்தனை முதலிய பல துறைச் சார்பு கொண்டது என்பதை அறிந்தார். வரலாறு என்பது மனித ஆன்மாவின் வரலாறுதான். வரலாற்று மாறுதல்கள், தனிமனிதர்களிடமும் குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகளிலுமே வெளிப்படுகின்றன. வரலாறு மனித சுதந்திரம் பற்றியது. வரலாற்றுக் கட்டங்கள் என்பவை மனித சுதந்திரத்தின் வளர்ச்சி நோக்கியவை. இத்தகைய கருத்துக்கள் கொண்ட குரோஸ், இறுதியில் எல்லாமே எப்படியோ சரியாகி விடும் என்று நம்பினார்.

அரசியல், கலை முதலிய மனிதச் செயல்முறைகள் அனைத்தும் தழுவியது வரலாறு என்பதோடு, பழமைக்கும் புதுமைக்கும், இறப்பு. நிகழ்வு. எதிர்காலம் ஆகியவற்றுக்கும் இடையில் உள்ள உறவுமுறை பற்றிய கருத்தாக்கத்தையும் குரோஸிடமிருந்து கற்றார் கிராம்சி. நேர்க்காட்சி வாதத்தின் வரையறைகளையும் அறிந்தார். சமகாலத்திய மார்க்சியவாதிகள் கற்பித்துவந்த இயந்திரவியல் வகைப்பட்ட

மார்க்சியத்தின் போதாமையையும் அறிந்தார். பாஸ்டோர் என்பவரின் சொற்பொழிவு களிலிருந்தும் லேபிரியாலோ என்பவரின் மார்க்சிய விளக்கங்களிலிருந்தும் பலவற்றைக் கற்றுக்கொண்டார். தனது சமகால சோசலிசவாதிகள் பலரைக் காட்டிலும் கலாச்சாரம் பற்றிய ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்தார் கிராம்சி. குரோஸின் பாதிப்புக்களூடே மார்க்சியத்திற்கு வந்துசேர்ந்த கிராம்சி இறுதிவரை குரோஸின் பாதிப்பிலிருந்து விடுபடவில்லை என்பதாகவும் சில விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

மார்க்சியத்திற்கு எதிரான குரோஸின் கருத்துக்களை கிராம்சி விமர்சனம் செய்து வந்தார். இத்தாலிய வகைத் தாராளவாதத்தின் தத்துவவாதி குரோஸ். குரோஸின் தத்துவம், சிந்தனை வகைப்பட்டதாகவே இருந்தது. ஒருவர் எடுக்கும் தத்துவ நிலைபாடு, இன்றியமையாமல் அரசியல் செயல்பாட்டில் முடிவு அடையவேண்டும் என்று குரோஸ் நம்பவில்லை. ஆயினும் முதல் உலகப் போரின் போது சிந்தனையாளர் பலரும் குழம்பித் தவித்த நிலையில், இறுதியில் பரலாற்றின் அறிவார்ந்த தன்மை வெற்றிபெறும் என்ற நம்பிக்கையோடு இருந்த குரோஸைப் பாராட்டினார் கிராம்சி. குரோஸின் தத்துவம், பெரும் அளவுக்குச் செயல்முறைத் தத்துவத்தின் சிந்தனாவாத மொழிபெயர்ப்பு என்று பிற்காலத்தில் எழுதினார். குரோசுக்குத் தம் காலத்தவர் பட்ட கடனைப் பாராட்டினார் கிராம்சி. குறிப்பாக மதத்தின் உதவி இல்லாமல் மனிதன் வாழ முடியும் என்ற குரோசின் கூற்றைப் பெரிதும் பாராட்டினார். வரலாற்று வளர்ச்சியில் கலாசாரம், சிந்தனை, பெரும் சிந்தனையாளர்கள், அரசு ஆகியவற்றின் பங்கைப் பற்றித் தங்கள் கவனத்தைத் திருப்பியவர் குரோஸ் என்று பிற்காலத்தில் தனது சிறைக் குறிப்பேடுகளில் எழுதினார்.

இதேகாலத்தில் இத்தாலியில் சோசலிசக் கோட்பாட்டாளர் பலர் மார்க்சியத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். இவர்களில் சிலர் பாராளுமன்ற நிறுவனங்களை விமர்சனம்

செய்தனர். பிரஞ்சுக்காரராகிய ஜியார்ஜஸ் சொரேல் கருத்துக்களும் இத்தாலியில் இடம்பெற்றன. பாட்டாளி வர்க்கம்தான் சமூகத்திற்குப் புத்துயிர் கொடுக்கவல்ல அறிவியல் ஆற்றல் உள்ளது: சோசலிசம்தான் நிகழ்காலத்திற்கான சமயம், பண்பாடு, சொரேலின் இக்கருத்துக்கள் கிராம்சிக்கு ஏற்றவையாக இருந்தன. பாட்டாளி வர்க்க அரசியல், கலாச்சாரத் துறைகளில் தனது சொந்தக்கால்களில் வேர்கள் நிற்கவேண்டும் என்பதிலும், உரோம கத்தோலிக்க சமயம் போலவே வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவியதாக சோசலிசம் அமைய வேண்டும் என்பதிலும் சொரேலின் கருத்துக்களுடன் கிராம்சி உடன்பட்டார்.

1911 முதல் 15 வரை டியூரின் பல்கலைக்கழகத்தில் பயின்றபோது தீவிரமான சோசலிச அமைப்புக்களுடனும் உறவு கொண்டார் கிராம்சி. 13இல் நடைபெற்ற கார்த் தொழிற்சாலை வேலைநிறுத்தமும், சார்டினியாவில் நடைபெற்ற தேர்தல் அனுபவங்களும் அவரை ஒரு சோசலிசவாதி ஆக்கின. பின்னர் சோசலிச இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட பொழுது மார்க்சியவாதி ஆனார் கிராம்சி.

கட்சிப்பணி:

முதல் உலகப் போர்ச்சூழலில் இத்தாலிய சோசலிசக் கட்சிக்குள் கடுமையான பிளவுகள் ஏற்பட்டன. எற்கனவே இருக்கும் அரசியல் பொருளாதார அமைப்பின் உள்ளேயே சீர்திருத்தம் செய்து கொள்ளலாம் என்ற ஒரு பிரிவும், கட்சி முதலியவற்றைக் கட்டி வைத்தால் மார்க்ஸ் எதிர்பார்த்த வரலாற்று மாற்றம் நேர்ந்துவிடும் என்ற வைதீக மார்க்சியப் பிரிவும் கட்சிக்குள் ஏற்பட்டன. முதல் உலகப் போரில் இத்தாலி நடுநிலை வகிக்க வேண்டும் என்ற கருத்தும் பிரிட்டன் பிரான்சுக்குச் சார்பாக இத்தாலி தலையிட வேண்டும் என்ற கருத்தும் கட்சிக்குள் ஏற்பட்டன. இவை தவிர, இத்தாலி உழைப்பாளர் இயக்கத்தினுள்

அராசகவாதிகளும் சிண்டிகலிஸ்டுகளும் செயல்பட்டனர். இச்சமயத்தில் சோசலிச இயக்கத்தில் பங்கு பெற்ற கிராம்சி, போரில் இத்தாலி தலையிட வேண்டும் என்று முசோலினியைப் போலவே தாமும் கருதலானார். முசோலினியை ஆசிரியராகக் கொண்ட 'அவந்தி' முதலிய பத்திரிகைகளில் இவர் கட்டுரைகள் வெளியாயின. புரட்சிகரமான செயல்களுக்கு இப்சன், பிரான்டல்லோ முதலிய நாடக ஆசிரியர்களின் பங்கைச் சிறப்பித்து எழுதினார். அரசியல் ரீதியான புரட்சிக்கு முந்திய கட்டத்தில் ஒரு புதிய கலாச்சாரச் சூழலின் தேவை பற்றி நிறைய எழுதினார். தொழிலாளர்கள் ஒரு புதிய நாகரிகம், வாழ்க்கை முறை பற்றிய கல்வியைப் பெற வேண்டும். தத்துவம், வரலாறு, கலைப்படைப்பு முதலிய பல துறைகளிலும் தொழிலாளர்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இவ்வாறு அவரது தனித்த சிந்தனைகளை அவர் கட்டுரைகள் வெளிப்படுத்தின. இவற்றோடு கலாச்சாரத்திற்கும், அரசியலுடன் கலாச்சாரம் கொள்ளும் உறவிற்கும் அவர் முக்கியத்துவம் தந்தார். இவற்றுடன் மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் பலவற்றிலும் அவர் தீவிரமான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

1917 பிப்ரவரி ரஷ்யப் புரட்சியைக் கிராம்சி வரவேற்றார். போல்சுவிக் கட்சி, லெனின் பங்கு ஆகியவற்றைப் பெரிதும் வரவேற்றார். 17க்கு முன் லெனின் படைப்புக்கள் இத்தாலிக்கு வந்துசேரவில்லை. 17 அக்டோபர் புரட்சி, பூர்சுவாப் புரட்சியைக் கடந்து பாட்டாளி வர்க்கப் புரட்சியாக மலர்வதன் சாத்தியத்தை அறிந்து கொண்டார். ரஷ்யப் புரட்சி மார்க்சின் மூலதனத்துக்கு எதிரானது என்று எழுதினார் கிராம்சி. போல்சுவிக்குகள் மார்க்சின் சில வரையறைகளை மறுத்தபோதிலும் மார்க்சின் உயிர்ப்பைச் செயல்படுத்தி உள்ளனர் என்று பாராட்டினார். இக்காலத்தில்தான் இவரது சிந்தனையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. சூழல்களைப் புரிந்து கொண்டு புரட்சி செய்வது

என்பதற்கு மாறாக, சூழல்களைப் புரிந்து கொள்ளவே புரட்சி செய்தாக வேண்டும் என்ற கருத்திற்கு வந்து சேர்ந்தார். இக்காலத்தில் இத்தாலிய சோசலிசக் கட்சியில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவராக கிராம்சி இருந்தார்.

போரின் முடிவில் ஏற்பட்ட பொருளியல், சமூக அரசியல் சீர்குலைவின் விளைவாக 1922இன் முடிவில் முசோலினி பதவிக்கு வந்தார். 19-20 காலத்தில் சோசலிசப் புரட்சிக்கான வாய்ப்புக்கள் மிகுந்திருந்தன. தொழிற்சங்க உறுப்பினர் தொகை 20 இலட்சமாக உயர்ந்தது. 19 தேர்தலில் சோசலிசக் கட்சி குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்தது. புரட்சி பற்றிய அச்சம் சில வட்டாரங்களில் மிகுந்தது. பொருளியல் அரசியல் ஆகியவற்றில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளைப் பாராளுமன்றக் குடியாட்சி முறை தீர்க்க முடியாமல் திணறியது.

இந்தச் சூழலில் கிராம்சி தன் நண்பர்களுடன் சேர்ந்து "புதிய அமைப்பு" (Ordine Nuavo) என்ற பத்திரிகையை வெளியிட்டார். சோசலிசக்கட்சித் தலைமையை, புரட்சிகர நோக்கிலிருந்து கடுமையாக விமர்சனம் செய்தார். கிராம்சி தனது சிந்தனைகளை இதில் வெளியிட்டார். மார்க்சிய சித்தாந்தப் பிரச்சனைகளும் இவ்விதழில் விவாதிக்கப்பட்டன.

டியூரின் நகரத்தில் பெரும் அளவிலிருந்த தொழிற்சாலைகளில் போர்க்காலத்தில் தொழிற்சங்கங்கள் வலிமைபெற்று இயங்கின. இவற்றுடன் தொழிற்சாலை ஆலோசனைக் குழுக்களும் (Factory Councils) வலிமையோடு இருந்தன. சோவியத்புரட்சியில் சோவியத்துகள் வகித்த பங்கினை இந்த ஆலோசனைக் குழுக்கள் ஆற்ற முடியும் என்று கிராம்சி நம்பினார். இந்த ஆலோசனைக் குழுக்கள் புரட்சிகர இயக்கத்தின் கருவாக அமைவதோடு, எதிர்கால சமூகத்தின் உருவமைப்பாகவும் திகழமுடியும் என்று நம்பினார். இவை தொழிலாளர்க்கான கல்வி மையங்களாகவும் சோசலிச ஆய்வு மையங்களாகவும் செயல்படமுடியும். இந்தக் குழுக்கள் தொழிற்சங்க

இயக்கத்தில் ஏற்பட்டு விடக்கூடிய அதிகார வர்க்க அமைப்பிற்கு மாற்றாகவும் அமையமுடியும். இத்தகைய அமைப்புகளுடன் உறவு கொண்ட கட்சிதான், புரட்சிகர கட்சியாக இருக்கமுடியும். இந்தக்குழுக்களுக்குள் தொழிலாளர்களின் இயங்குசக்தி முழுமையாக வெளிப்படும். இவற்றின் மூலமே எதிர்கால கம்யூனிசச் சமூகம் உருவாகமுடியும். இவற்றின் வழியேதான் கட்சி செயல்பட முடியுமே ஒழிய இவற்றிற்குப் புறம்பாக இருந்து இவற்றை ஆளுவதனால் அல்ல. இம்முறையில்தான் சுதந்திரத்திற்கும் அதிகாரத்திற்கும் இடையில் உள்ள பிரச்சனை தீரும். தன்னியக்கமும் ஒழுங்கும் வளரும். இந்தக் குழுக்களில் தொழிற்சங்க உறுப்பினர்களோடு நிறுவன அமைப்பில் வராத பிற தொழிலாளர்களும் கட்சி ஆதரவாளர்களும் பங்குபெற முடியும். நிச்சயம் இத்தகைய ஆலோசனைக் குழுக்களை, இறுக்கமான கட்சி அமைப்பை விரும்பக்கூடியவர்களும், பொருளாதார வாதத்திற்கு ஆட்பட்ட தொழிற்சங்கவாதிகளும் விரும்பமாட்டார்கள் என்பது உறுதி.

இத்தகைய தொழிற்சாலைக் குழுக்களை, டியூரினில் உரிமை பெற்றிருந்த, உலோகத் தொழிற்சங்கத்தலைவர் கடுமையாக எதிர்த்தனர். சீர்திருத்தவாதிகளுக்கும் புரட்சிவாதிகளுக்கும்கூட இக்கருத்து உடன்பாடில்லை. டியூரின் நகரைத் தவிர வேறு நகரங்களில் இக்குழுக்கள் வேகம் பெறவில்லை.

கிராம்சியின் கருத்தை சோசலிசக் கட்சியில் முக்கியத் தலைவர்களுள் ஒருவராகிய போர்டிகா (Bordiga) கடுமையாக எதிர்த்தார். சிறிய, தனக்குள் முற்றிலுமான இணக்கம் கொண்ட விட்டுக் கொடுக்காத, ஒரு புரட்சிகரக் கட்சியையே போர்டிகா உருவாக்க விரும்பினார். கிராம்சி போன்ற அறிவாளிகளின் செல்வாக்கு சோசலிச இளைஞர் பேரவையில் ஏற்படுவதை போர்டிகா விரும்பவில்லை. 19இல் சோசலிசக் கட்சி தனக்குள் இருந்த சீர்திருத்தவாதப் பிரிவினரை விலக்கிவிட வேண்டும் என்று கோரினார் போர்டிகா. அடுத்த

ஐந்து ஆண்டுகளுக்கு கிராம்சியும், போர்டிகாவும் எதிர்த்துருவங்களிலிருந்து இயங்கலாயினர்.

இதற்கிடையில் இத்தாலியின் அரசியல் நிலைமைகள் புரட்சிகர நிலைமையை நோக்கி விரைந்தன. 1919 அக்டோபரில் கூடிய சோசலிசக் கட்சிப் பேரவை கம்யூனிஸ்ட் அகிலத்துடன் தனது இணைப்பை உறுதிப்படுத்தியதுடன் உடனடியாக சோவியத்துக்களை உருவாக்கக் கோரியது. நிகழ்ச்சிகளின் வேகத்தோடு ஒத்து கட்சி இயங்கவில்லை. ஆளும் வர்க்கம் சோசலிசக்கட்சியை முறியடிக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்கத் தொடங்கியது. டியூரின் தொழிலதிபர்கள் ஆலைக்குழுக்களை அங்கீகரிக்கவில்லை. தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடங்கினர். முதலாளிகள் தொழிற்சாலைகளை மூடினர். வேலைநிறுத்தத்தை கண்டிக்க அரசாங்கம் பெருமளவில் துருப்புக்களை அனுப்பியது. தொழிற்சாலைகளைத் தொழிலாளர்கள் ஆக்ரமித்தனர். தென் மாநிலங்களில் உழவர்கள் நிலங்களை ஆக்கிரமித்தனர். நாணய மதிப்பு வீழ்ந்தது. பொருளாதாரச்சரிவு முழு அளவில் நேர்ந்தது. புரட்சிக்கான எதிர்பார்ப்பு நிறைய இருந்தன. இச்சமயத்தில் தொழிலதிபர்களுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் இடையில் சமரசம் ஏற்பட்டது. இதை ஏற்படுத்தியது அரசு. தொழிற்சங்க உறுப்பினர்களுக்குச் சலுகைகள், தொழிற்சாலை நிருவாகத்தில் பங்கு முதலியவை வழங்கப்பட்டன. அரசின் கட்டமைப்பில் தொழிற் சங்கங்கள் இணைந்திருப்பதற்கான முயற்சி வெற்றி பெற்றது. கிராம்சி அஞ்சியது நிறைவேறி ஆலைக் குழுக்கள் பற்றிய முயற்சி படுதோல்வி அடைந்தது. சீர்திருத்தவாதம் வெற்றி பெற்றது.

கிராம்சியின் கருத்தாக்கங்கள் பல, கட்சியிலிருந்தும் தலைமையிலிருந்தும் அவரை ஒதுக்கின. போர்டிகாவின் தலைமைக்கு ஆதரவு பெருகியது. 1921 சனவரியில் கூடிய கட்சிப் பேரவையில் கட்சி உடைந்தது. போர்டிகாவின் முயற்சிகள் நிறைவேறின. இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது. கட்சியின் மத்தியக்குழுவில் கிராம்சி

சேர்க்கப்பட்டார். ஆனால் நிருவாகக் குழுவில் இடம் பெறவில்லை. போர்டிகாவின் கட்சி அமைப்பு பற்றிய கருத்தாக்கத்தைத் தற்காலிகமாக கிராம்சி ஏற்றுக் கொண்டார்.

1921-22இல் பாசிசக் கட்சி தொடர்ந்து வலிமை அடைகிறது. கம்யூனிஸ்டுகளுக்கும் சோசலிஸ்டுகளுக்கும் எதிராக ஒரு 'உள்நாட்டுப் போரை' அது நடத்தியது. தொழிலாளர் இயக்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதே பெரும்பணி ஆயிற்று. சோசலிச அரசு ஏற்படுவதற்கான நம்பிக்கை மங்கத் தொடங்கியது. இச்சமயம் கிராம்சியின் உடல் மிகத் தளர்ச்சி அடைந்தது. பாசிசத்திற்கு எதிரான இயக்கத்தில் தொழிலாளர்களின் பிற இயக்கங்களை இணைத்துக் கொள்வது கூடாது என்பதில் போர்டிகா தொடர்ந்து பிடிவாதம் கொண்டிருந்தார். 1922 மே மாதத்தில் கோமின்டர்ன் பிரதிநிதி என்ற முறையில் கிராம்சி மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்டார்.

1922 அக்டோபரில் முசோலினி பிரதமரானார். பாசிச ஆட்சிக்காலம் தொடங்கியது. மாஸ்கோவில் உடல்நலக் காப்பகத்தில் கிராம்சி இருந்த போது, கியூலியா என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். 1924 மே மாதத்தில் இத்தாலிக்குத் திரும்பினார். கம்யூனிஸ்டுகளைப் பாசிஸ்டுகள் கடுமையாக வேட்டையாடிய காலத்தில் கிராம்சி பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சி பிற கட்சி அமைப்புகளோடு கூடி பாசிசத்தை எதிர்க்க வேண்டும் என்ற அகிலத்தின் போர்த்தந்திரம் போர்டிகாவுக்கு உடன்பாடில்லை. இந்நிலையில் கட்சியின் தலைமைப் பொறுப்பு கிராம்சிக்கு வந்து சேர்ந்தது. 1926இல் தான் கைதாகும் வரையில், இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சி, அகிலம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார் கிராம்சி. டியூரின் அனுபவம் தோற்றதற்கான காரணம், தேசிய அளவில் வலிமை வாய்ந்த, தனக்குள் இறுக்கம் கொண்ட ஒரு கட்சி இல்லாததுதான் என்ற முறையில் கட்சியை உருவாக்க முயன்றார் கிராம்சி.

சோசலிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான செராட்டியும் அவர்களைச் சார்ந்தவர்களும் கிராம்சியின் முயற்சியால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்து சேர்ந்தனர்.

தொடக்கத்திலிருந்தே பாசிசத்தின் தோற்றத்தை, பூர்சுவா அரசின் தோல்வியாகவும் சிதைவாகவும் கிராம்சி மதிப்பிட்டார். முதலாளிய வன்முறையின் சட்டத்திற்குப் புறம்பான வடிவம் பாசிசம். போரால் பாதிக்கப்பட்ட பூர்சுவா பொருளாதாரக் கட்டமைப்பைக் காக்கவும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும் முதலாளியம் கண்டுபிடித்த இறுதிவடிவம் பாசிசம். இந்தப் பாசிசத்தின் ஆதரவுச் சக்தியாக இருந்தவர்கள் நிலக்கிழார்களும் முதலாளிகளும் சிறு முதலாளிய வர்க்கமும் என்று மதிப்பு இட்டார் கிராம்சி. பூர்சுவா வர்க்கம் தன்னைக் காப்பாற்ற, இதுவரை அது உருவாக்கிய அரசமைப்பை, அது அழித்திருக்கிறது. சீர்திருத்தவாதிகளில் சில கருதியது போல இது புரட்சி அல்ல. பூர்சுவாக்களின் இந்தச் சர்வாதிகாரம் விரைவில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு வழி திறக்கும் என்று கிராம்சி மதிப்பிட்டார்.

ஆனால் கிராம்சியின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சிறு குழு அளவிலேயே எஞ்சியது. இதே சமயத்தில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கமும் சில பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தது. ஜெர்மன் புரட்சி (1923) பெரும் தோல்வியுற்றது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ட்ராட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு சர்வதேச இயக்கத்தில் பெரும் பிரதிபலிப்புகளைத் தோற்றுவித்தது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்படும் பிளவு, உலகளவில் கட்சித் தலைமை பற்றிய அவ நம்பிக்கையைப் பாட்டாளிகள் மத்தியில் ஏற்படுத்தி விடும் என்று அஞ்சினார் கிராம்சி. தேசிய அளவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் இயக்கத்தின் ஒற்றுமையை வலியுறுத்தினார் கிராம்சி. ரஷ்யாவில் அதிகார வர்க்க வளர்ச்சியைப் பற்றிய

ட்ராட்ஸ்கியின் பார்வையோடு கிராம்சிக்கு உடன்பாடு இருந்தது. "நீங்கள் கட்சியை கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். லெனின் தலைமையில் உருவான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நெறிகாட்டும் திறத்தை அழித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தனிநபர் சண்டைகளுக்கு இடையில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணிக்கிறீர்கள்" என்று கிராம்சி ரஷ்யத் தலைவர்களுக்கு எழுதினார். அச்சமயம் டோக்லியாட்டி மாஸ்கோ போய்ச்சேர்ந்தார். ரஷ்யத் தலைவர்கள் பற்றிய கிராம்சியின் விமர்சனத்தை டோக்லியாட்டி ஏற்கவில்லை.

சிறைப்படல்:

கிராம்சி 1926 நவம்பர் 8ஆம் தேதி கைதானார். முன்பே வெளிநாட்டில் அவர் புகலிடம் தேட வேண்டும் என்று நண்பர்கள் கூறிய அறிவுரையை அவர் ஏற்கவில்லை. மனைவி மாஸ்கோ திரும்பினார். முதலில் கிராம்சி மிலானில் விசாரிக்கப்பட்டார். குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லை. பின்னர் உரோமில் விசாரிக்கப்பட்டார். விசாரணையின்போது அரசுத்துறை வழக்குரைஞர் முசோலினியை மேற்கோள் காட்டிக் கூறினார். "இருபது ஆண்டுகளுக்கு இவர் மூளை சிந்தனை செய்வதைத் தடுக்க வேண்டும்". இரண்டு ஆண்டுகளுக்கு முன் சார்டீனிய கட்சித் தலைவர் ஒருவருக்கு எழுதிய கிராம்சியின் கடிதம் போலீஸ் தரப்பில் சான்றாக வைக்கப்பட்டது. உள்நாட்டுப் போர், கொள்ளையிடல் முதலியவற்றைத் தூண்டும் வகையில் கிராம்சி ஒரு கூட்டத்தில் பேசியதாகவும் குற்றச்சாட்டில் கூறப்பட்டிருந்தது. கிராம்சி இதை மறுத்தார். ஆயினும் இறுதியில் 20 ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

பத்தாண்டுக் காலச் சிறை வாழ்வின் போது அவர் பட்ட துன்பங்கள் அளவற்றவை. மன்னிப்புக் கோரினால் விடுதலை கிடைக்கும் என்ற முசோலினியின் நிலைபாட்டை

இறுதிவரை கிராம்சி ஏற்கவில்லை. ரஷ்யாவில் கைதான கத்தோலிக்கப் பாதிரியார்களுக்குப் பதிலாக கிராம்சியைப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம் என்ற சோவியத் ரஷ்யாவின் ஆலோசனையை முசோலினி ஏற்கவில்லை. 'மன்னிப்பு தன் உடலைக் காக்கலாம். ஆனால் தன் ஆன்மாவைக் கொன்று விடுமே' என்று கேட்டார். கிராம்சி தற்கொலையைத் தேர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவர் அனுபவித்த நோய்கள் பற்பல. அடிக்கடி மயங்கி விழுந்தார். பலமுறை நினைவு மறதிக்கு ஆட்பட்டார். வலது நுரையீரல் காசத்தால் பாதிக்கப்பட்டு பலமுறை இரத்த வாந்தி எடுத்தார். அவரது பற்களெல்லாம் விழுந்து விட்டன. தொடர்ந்து பல மாதங்கள் எழுதக் கூட முடியவில்லை. இறுதியாக அவரைப் பார்த்தவர்களுக்கு அவர் ஒரு நிழல் உருவம் போலத் தென்பட்டார். இறுதியாக உடல்நலக்கேடு கருதி தற்காலிகமாக விடுதலை செய்யப்படும் தறுவாயில் 1937 ஏப்ரல் 27இல் 46 ஆவது வயதில் அவர் காலமானார்.

முசோலினியின் விருப்பம் நிறைவேறவேயில்லை. சிறையில் பல சிரமங்களுக்கு இடையில் தொடர்ந்து 10 ஆண்டுகளில் 33 குறிப்பேடுகளில் அவர் தமது சிந்தனைகளை வடித்தார். அச்சில் அவை பிறகு 2350 பக்கங்களில் வெளியிடப்பட்டன. வரலாறு, தத்துவம், அரசியல், இலக்கியம் பற்றியும் அவர் தன் கொழுந்தி டாட்டியானாவுக்கு எழுதிய கடிதங்களும் இவற்றில் அடங்கும். சிறையில் சிறை அதிகாரிகள் அனுமதித்த அளவுக்கே அவரால் படிக்க முடிந்தது. வெளி உலகில் மனிதர்களைப் பார்க்க வேண்டும் என்ற பேராசை அவரைப் பெரிதும் துன்புறுத்தியது. இத்தாலிய அறிவாளிகளின் வரலாறு பற்றியும், மொழியியல் ஒப்பாய்வு பற்றியும் பிரான்டல்லோ பற்றியும், இலக்கியத்தில் பொதுமக்களின் சுவை உணர்வு பற்றியும் மிகவிரிவாக அவர் எழுதத் திட்டமிட்டிருந்தார். அவர் திட்டமிட்டிருந்தது நிறைவேற வில்லை. ஆனால், அவை பற்றியெல்லாம்

அவரது 'சிறைக்குறிப்பேடு'களில் (Prison Note Books) நிறையக் குறிப்புக்கள் இடம் பெற்றன.

சிறைக் குறிப்பேடுகள்

சிறைக் குறிப்பேடுகளில் மார்க்சியத்தை செயல்முறை தத்துவம் (Philosophy of Praxis) என்று குறிப்பிடுகின்றார் கிராம்சி. லெனின், ஸ்டாலின் முதலியவர்களின் பெயர்களை சிறை அதிகாரிகளின் பார்வையிலிருந்து தப்புவதற்காக மாற்றிக் கொள்கிறார். செயல்முறைத் தத்துவம் என்று மார்க்சியத்தை அவர் குறிப்பிட்டது மிகவும் சரியாகப் பொருந்தும். குரோசின் வரலாற்றியலை அவர் முற்றிலுமாக ஒதுக்க முடியவில்லை. அவருக்குள் குரோசுக்கும் லெனினுக்கும் இடையில் இடைவிடாத விவாதம் நடைபெற்றது. லெனினின் கோட்பாடும் நடைமுறையும் அவரைப் பெரிதும் பாதித்தன. அவரது மேலாண்மை (Hegemony) என்ற கருத்தாக்கம் அவர் லெனினிடமிருந்து பெற்றதுதான். கம்யூனிஸ்ட் அகிலத்தின் கோட்பாடுகள் நடைமுறைகளை இத்தாலியின் வரலாற்று மொழியில் தந்ததுதான் தனது 'புதிய அமைப்பு' இதழின் கடமையாக இருந்தது என்று குறிப்பிட்டார் கிராம்சி. மார்க்சியத்தை அவர் இத்தாலிய சூழலுக்கு உரியதாக உருவாக்க முயன்றார். பிற மார்க்சியவாதி எவரைக் காட்டிலும் மார்க்சியத்தின் வரலாற்று பரிமாணத்திலும், அதன் கலாச்சாரப் பரிமாணத்திலும் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இத்தாலிய சோசலிசக் கட்சியின் சித்தாந்தத்திலும் நடைமுறையிலும் ஏற்பட்ட தவறுகள், நேர்காட்சிவாதத்துடனும் வறட்டுப் பொருள்வாதத்துடனும் அவர்கள் கொண்ட உறவு என்று விமர்சனம் செய்தார்.

புகாரின் திறனாய்வு

"வரலாற்றுப் பொருள் முதலியல் கோட்பாடு என்ற புகாரின் நூல் 1921ல் ரஷ்யாவில் வெளிவந்தது. இதன் பிரஞ்சு மொழிபெயர்ப்பு 1927இல் வந்தது. இந்த நூல் பற்றிய விமர்சனங்கள் கிராம்சியின் சிறைக் குறிப்புகளில் இடம்பெறுகின்றன. கிராம்சி விமர்சனம் எழுதிய

அதேகாலத்தில் புகாரின் ரஷ்யாவில் கடுமையான விமர்சனத்திற் குள்ளாகி பிறகு சில ஆண்டுகளில் விசாரணை செய்யப்பட்டுக் கொலை தண்டனை விதிக்கப்பட்டார். மார்க்சியம் தேங்கிவிடக் கூடாது என்பதிலும் உழவர்கள் பங்கு பற்றிய பிரச்சனையிலும் புகாரின் கொண்டிருந்த கருத்தையே கிராம்சியும் கொண்டிருந்தார். புகாரின் பற்றிய கிராம்சியின் விமர்சனத்திலிருந்து, கிராம்சியின் மார்க்சியம் பற்றிய விளக்கங்களைத் தெளிவாக அறியமுடிகிறது.

புகாரின் மார்க்சியத்தை வரலாற்றியல் கோட்பாடு என்பதை விட சமூகவியல் கோட்பாடாக மதிப்பிட்டார். இயற்கை விஞ்ஞானம்தான், பிறவகையான அறிவுத் துறைக்கான அடிப்படை வரையறைகளைத் தருகிறது என்றார் புகாரின். இயங்கியல் என்பதை, சக்திகளின் சமநிலை என்ற இயந்திரவியல் கோட்பாடாக விளக்கினார். இவ்வகை விளக்கங்களைக் கடுமையாக மறுத்தார் கிராம்சி. வரலாற்றியல், அரசியல் தரும் விவரங்களைத் தொகுத்து ஏற்கெனவே இயற்கை விஞ்ஞானம் தந்த நேர்காட்சிவாத வரையறைகளின் அடிப்படையில் செயல்படும் சமூகவியல், இயங்கியல் தன்மை உடையதாக இருக்க முடியாது என்றார் கிராம்சி. பிற துறைகள் பலவற்றையும் தழுவியது வரலாறுதானே ஒழிய சமூகவியல் அல்ல. சமூகவியலின் அடிப்படையாக உள்ளது வறட்டுத்தனமான பரிணாம வாதமே. உளவியல் மாற்றம் குணவியல் மாற்றத்திற்கு வழிவகுப்பதை சமூகவியல் அறியாது. வரலாற்றியல் வளர்ச்சிகள் முன்னைய திட்டப்படி அவ்வாறே நடைபெறக் கூடியவை அல்ல மனிதர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளில் தம் செல்வாக்கைப் பயன்படுத்த முடியும். இதைச் சமூகவியல் விளக்கமுடியாது. புரட்சி, அதற்கான தயாரிப்புக் கட்டத்தில் மக்கள் திரளின் உணர்வில் ஆழ்ந்த மாற்றங்களை உருவாக்குதலோடு தொடர்புடையது. அதற்குப்பிறகு அவர்களின் ஆற்றல்மிக்க சக்திகளாகிறார்கள். இதனை இயந்திரவியல் முறையில் வகுத்துவிட முடியாது.

கிராம்சியின் அரசியல் தத்துவத்தில் இப்பண்பு முக்கிய இடம் வகிக்கிறது.

கிராம்சியின் கருத்தின்படி, மனித அனுபவத்தில் முதன்முறையாக வாழ்க்கை, சிந்தனை ஆகியவற்றின் அனைத்துத் துறைகளையும் – வரலாறு, தத்துவம், அரசியல், விஞ்ஞானம் முதலிய அனைத்தையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தது, செயல்முறைத் தத்துவமாகிய மார்க்சியம்தான். இது ஒரு ஒருங்கிணைந்த, முதன்மையான தத்துவம், வரலாற்றுக் கட்டத்திலும், உலகச் சிந்தனையிலும் இது ஒரு புதிய கட்டத்தைத் திறந்திருக்கிறது. மரபு முறைப்பட்ட கருத்து முதலியல், பொருள் முதலியல்களுக்கு அப்பால் இதுசெல்லுகிறது. அதேசமயம் பழஞ்சமூகங்களின் தத்துவத்திலுள்ள உயிர்த்தன்மையை இது தனக்குள் தாங்கியிருக்கிறது. இயங்கியலின் உண்மையான பொருள் இது என்று விளக்கினார்.

இயங்கியல்:

இயங்கியலின் பல பண்புகளை விளக்கும்போது கிராம்சி ்றிப்பிடுகிறார்: "செயல்முறைத்தத்துவம், ஹெகலியத்தின் சீர்திருத்தமும் வளர்ச்சியுமாகும். வறட்டுத் தனமான சித்தாந்தப் பண்புகளிலிருந்து விடுதலை பெற்ற, விடுவிக்கப்பட்ட தத்துவம் இது. தத்துவவாதி, தனி நபர் என்ற முறையிலும், ஒரு முழுமையான சமூகக் குழு என்ற முறையிலும் தன்னைப் புரிந்துகொள்கிறார். சமூக முரண்டுகளைப் புரிந்து கொள்வதோடு, முரண்பாட்டில் ஓர் அம்சமாகத் தன்னைக்கண்டு இந்த அம்சத்தை அறிவுக் கோட்பாடாகவும் அதே சமயத்தில் செயல்வகைக் கோட்பாடாகவும் உயர்த்துகிறவர் தத்துவவாதி.

கிராம்சியின் பார்வையில் இந்த அம்சம் மார்க்சியத்தின் மையப் பிரச்சனைகளில் முக்கியமான ஒன்று. வறட்டுத்தனமான மார்க்சியம் - புகாரின் கோட்பாட்டையும் இதில்தான் சேர்த்தார் கிராம்சி - அறவியல், சட்டம், தத்துவம், கலை, சிந்தனைத்துறை முதலிய அனைத்தையும்

உள்ளடக்கிய மேற்கட்டு, பொருளாதாரக் கட்டமைப்பால் நேரிடையாகக் கட்டுப்படுத்தப்படுகிறது என்கிறது. ஆனால், கிராம்சி, வரலாற்றுப் போக்கில் சிந்தனைக்கும், தனி மனிதர்க்கும் அதிகமான பங்கு இருப்பதை வலியுறுத்துகிறார். இதை விளக்கும் முறையில்தான் அளவியல் மாற்றம் குணவியல் மாற்றமாகிறது என்ற ஹெகலியக் கோட்பாட்டை தனிமனிதர்க்கும் பயன்படுத்துகிறார் கிராம்சி. பொருள்வகை மாற்றங்கள் மனிதர்களின் உணர்வில் ஏற்படுத்தும் மாற்றங்களை இவ்வாறு குறிப்பிடுகிறார். திரும்ப இவை பொருளியல் மாற்றத்தைச் செய்கின்றன. நீர் ஆவியாவற்கு, புறத்திலிருக்கும் வெப்பம் காரணமாகிறது. மனிதர்களைப் பொறுத்தவரை, புறத்தூண்டுதல் என்பது எது? பௌதிகச் சக்திகள் இத்தகைய தூண்டுதலாகிவிட முடியாது. இவ்வகை இயக்கத்திற்கு, மனிதன் தன்னுணர்வோடு தனது ஆற்றலை வழங்குவதன் மூலம் தன் பங்கைச் செலுத்துகிறான். ஒரு புதிய உணர்வு இம்முயற்சியில் எழுகிறது. இவ்வகை விளக்கத்திற்கு கிராம்சி, மார்க்சிடமிருந்து பொருத்தமான மேற்கோள்களைப் பயன்படுத்துகிறார். "அரசியல் பொருளாதார விமர்சனம்" என்ற நூலில் மார்க்ஸ் குறிப்பிட்டிருந்தார்: "உற்பத்திச் சக்திகள் அனைத்தும் தமக்கான முழு வளர்ச்சி பெறும் வரையில், எந்தச் சமூக அமைப்பும் தானாக அழிவது இல்லை. பழைய சமூகத்தின் கருப்பையில் அதன் பொருளியல் நிலைமைகள் முற்றாக முதிர்ச்சியுறும் வரையில், புதிய உயர்நிலை உற்பத்தி உறவுகள் தோன்றுவதில்லை." ஒவ்வொரு வரலாற்றுச் சூழலின் சிக்கலான நிலையையும், அதற்குள் உள்ள அதுவரை அறியாத சாத்தியப்பாடுகள் பற்றியும் விளக்குவதற்கு மேற்கண்ட மேற்கோளை கிராம்சி பயன்படுத்தினார். புரட்சிகர மாற்றம் பற்றி மார்க்ஸ் எழுதியவற்றிலிருந்து மேலும் ஒரு மேற்கோள்: "இத்தகைய புரட்சிகர மாற்றங்களை ஆராயும்போது, உற்பத்திக்கான பொருளாதார நிலைமைகளின் பொருளியல் மாற்றத்திற்கும்

(இவற்றை இயற்கை விஞ்ஞானத்தில் செய்வது போல திட்டமாகத் தீர்மானிக்க முடியும்) சட்ட, அரசியல், சமய, கலையியல், தத்துவம் – சுருக்கமாக சித்தாந்த வடிவங்களுக்கும் (இவற்றில் மனிதர் இந்தப் போராட்டத்தைப் பற்றிய உணர்வு பெற்று, போராடித் தீர்க்கிறார்கள்) இடையில் ஒரு வேறுபாட்டை எப்போதும் செய்துகொள்ள வேண்டும்." இதுபோலவே எங்கல்ஸ் எழுதியிருந்ததைப் பற்றியும் கிராம்சி அறிந்திருந்தார்.

இம்முறையில், அடித்தளமும் மேற்கட்டும் ஒன்றை மற்றது பாதிக்கின்றது. இதுதான் உண்மையான இயங்கியல் இம்முறையில் மதிப்பிட்ட கிராம்சி, அவர் காலத்திலிருந்த வேறு எந்த மார்க்சிய வாதியையும் விட வரலாற்றுப் பார்வையில் மேற்கட்டின முக்கியத் துவத்தையும், சிந்தனையாற்றல் பற்றியும், பொருளாதார சூழலுக்கும் அறிவுத்துறை வளர்ச்சிக்கும் இடையில் திட்டவட்டமான இணைவை நிறுவும் சாத்தியப்பாடு இல்லை என்பதையும் வலியுறுத்தினார்.

வரலாற்று விளக்கம்

இக்கருத்தைத் தனது சிறைக்குறிப்பேடுகளில் மேலும் வளர்த்தார் கிராம்சி. சமூகத்தில் நெடுங்கால அளிவிலான நிகழ்வுகளை ஒருங்கிணைந்த இயக்கங்கள் – (Organic Movements) என்றும், சில சந்தர்ப்பங்களில், உடனடியாக, தற்செயலாக, நடைபெறுதை தனி அல்லது தற்காலிக நிகழ்வுகள் (Conjuctural movements) என்றும் வேறுபடுத்தினார். வரலாற்றுக் கட்டத்தை ஆராயும் பொழுது இந்த வேறுபாட்டின் முக்கியம் புலப்படும் என்றார் கிராம்சி. பல பத்தாண்டுகள் தீர்க்க முடியாத கட்டமைப்பு வகைப்பட்ட முரண்பாடுகள் எழுகின்றன. இருக்கும் நிலைமைகளைக் காக்க விரும்பும் அரசியல் சக்திகள், சில குறிப்பிட்ட எல்லைகளில் பிரச்சனைகளைத் தீர்க்க முயல்கின்றன. இம்முயற்சிகள் தற்காலிக வகையானவை. நிரந்தரமானதும் தற்காலிகமானதுமானவற்றுக் கிடையிலான உறவைத்

தீர்மானிப்பது சிரமம். தற்காலிகச் செயல்பாடுகள் தீர்க்கமானவை என்பது போன்ற கருத்துக்கள் சில சமயங்களில் ஏற்பட்டு விடுகின்றன. இப்படி விளக்கினார் கிராம்சி. ஏற்கெனவே லெனின் கூறியபடி, பொருளாதார சக்திகளால் தீர்மானிக்கப்படும் வரலாற்று வரையறைக்குள் நிகழக்கூடிய ஏற்றத்தாழ்வு அலைகள் என்ற கருத்தாக்கத்திற்கு ஏற்ற கருத்து கிராம்சியினது.

இவற்றின் தொடர்பாக (Historical bloc) என்ற கருத்தை உருவாக்கினார் கிராம்சி. இது தொடர்ந்து திட்டவட்டமான விளக்கம் தரவில்லை என்ற போதிலும், அவரது குறிப்புக்களிலிருந்து கிடைக்கும் விளக்கம் பின்வருமாறு:

ஒரு புரட்சிகரமான சூழலை உருவாக்கும் முறையில் புறநிலை, அகநிலைச் சக்திகளின் ஒருங்கிணைந்த ஒரு சந்தர்ப்பத்தை இத்தொடரால் கிராம்சி குறிப்பிட்டதாகத் தெரிகிறது. பழைய சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு சிதைவுறும் சமயத்தில், மனஉறுதியும் தீர்மானமும் வரலாற்று அறிவில் தெளிவும் உடைய மனிதர்கள், இந்தச் சூழலைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை இப்படிக் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. பொருள்வகைச் சக்திகளை உள்ளடக்கமாகவும் சித்தாந்தங்களை உருவமாகவும் கொண்டுள்ள historical bloc என்றும் கிராம்சி குறிப்பிட்டிருக்கிறார். அடித்தளம் மேற்கட்டின் இணைவையும் இப்படிக் குறிப்பிடுகிறார். தனி மனிதனுக்குள் இத்தகைய ஒரு கூட்டிணைவு நேர்வதை இயங்கியல் முறையில் விவரிக்கிறார் கிராம்சி: சமூகத்திலும் இது நேர்வதையும் விளக்குகிறார். மனிதர் தம் ஆளுமையைத் தாமே உருவாக்குகிறார்கள். தமது மனஉறுதிக்கு குறிப்பிட்டதொரு ஆளுமை நோக்கிய திசைவழியைத் தாமே தருவதன் மூலமும் - தனது சொந்தத் திறன்கள் வரையறைகளின் அளவில், இந்த மனஉறுதியை நிறைவேற்றுவதற்கான ஒட்டு மொத்தமான நிலைமைகளில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலமும் மனிதர் தம் ஆளுமையை உருவாக்கிக் கொள்கிறார்கள் என்றார் கிராம்சி.

பிராய்ட் பற்றி:

சிறை வாழ்வின் துன்பங்களுக்கிடையில் இடைவிடாது படிப்பதையும் எழுதுவதையும் மேற்கொண்டிருந்தார் கிராம்சி. மாஸ்கோவில் இருந்த துணைவியார் அடிக்கடி மனநோய்க்கு ஆளாயினர். அப்போது அவர் டாடியானாவுக்கு எழுதிய கடிதங்கள் குறிப்பிடத்தக்கவை. பிராய்டை அவர் படித்திருந்தார். பிராய்டியக் கோட்பாடுகளின் பயன்பாட்டு எல்லைகள் குறுகியவை என்று குறிப்பிட்டார். "ரொமான்டிக் இலக்கியங்களில் இகழப்பட்டவர்கள், வேதனைக்குள்ளாக்கப்பட்டவர் என்று குறிப்பிடப்படும் சமூகப் பகுதியினர்க்கே உளவியல் பகுப்பான முறை உதவலாம் என்று கருதுகிறேன். நவீனகால வாழ்வின் இருப்புப் பிடிப்பிற்குள் சிக்குண்ட தனி நபர்கள் – இப்படி சிக்குண்ட நிலையில் ஒரு புதிய அறவியல் சார்ந்த நிலைக்கு வர இயலாதவர்கள் – இத்தகையவர்க்கே உதவி செய்யமுடியும். வரலாற்றின் சில குறிப்பிட்ட கட்டங்களில் – குறிப்பிட்ட சூழல்களில் நிலைமை கடும் மோதலுடையது ஆகிறது. மிகக் கடுமையான கூர்மையான நெருக்கடிகள் நேரும் பொழுது அசுரத்தனமான கூட்டுச் சக்திகள் வெளியிடப் பெற்று அவை தனிநபர்களைத் தாக்கி நெருக்கும் போது இத்தகைய நிலைமைகள், மிக நுட்பமான – உன்னதமான மனநிலையுடையவர்களுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கின்றன. ஆனால் பண்பாடு மிக்க சமூகத்தில் செயல்திறனுள்ள மனிதன் தன்னைத் தானே சிறந்த முறையில் உளப்பகுப்பாய்வு செய்து கொள்ள முடியும்."

இன்னொரு கடிதத்தில், இகழப்பட்டவர்கள், வேதனைக்குள்ளாக்கப் பட்டவர்கள் – இவர்களை உளவியல் நெருக்கடிகள் பாதிப்பதோடு, பழைமையான பழக்கவழக்கங்கள், பழைய முறைச் சிந்தனைகள் என்ற பழக்கங்களோடு கூடிய மனஇயல் போக்குள்ள தனிநபர்களுக்கு அவர்களிடம் சமூகம் கோரும் கடமைகளுக்கும் இடையில் மோதல் நேரும் பொழுதும் இத்தகைய மன இயல் நோய்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார். இந்தப் பிரச்சனைகளில்

ஆபத்தான முறையிலேயே தீர்க்கப்படுகின்றன. அடக்கப்பட்ட உணர்வுகள் நோய்க்கூறான முறையில் வெடிக்கின்றன. சமூகக் கயமைத்தனம் இத்தகைய உணர்வுகளைச் செயலற்றதாக்கி மனத்தின் ஆழத்தில் மாட்டி வைத்திருக்கின்றன.

பிராய்டியக் கருத்தாக்கங்களைச் சில வரையறைகளுடன் ஏற்கும் கிராம்சியிடம் அரசின் விதிப்புக்களும் தனிமனித மனச்சாட்சியின் விதிப்புக்களும் ஒரு இலட்சிய சமுதாயத்தில் ஒன்றிணையும் என்ற சோசலிச கருத்தாக்கமும் இடம்பெறுகிறது. மிகக்கடுமையான முரண்பாடுகளின் மோதலின் போதும், மீறமுடியாத கட்டுப்பாட்டின் அழுத்தத்தின் போதும்கூட ஒரு குறிப்பிட்ட அளவு சாந்த நிலையை மனிதன் பெற முடியும் என்கிறார் கிராம்சி. அதாவது, இத்தகைய நிலைகளில் வரலாற்று முறையில், இயங்கியல் முறையில், மனிதன் சிந்திப்பதில் வெற்றி பெற்று அறிவார்ந்த நேர்மையுடன் - விருப்பு வெறுப்பின்றி - தனது கடமையோடு அவன் ஒன்ற முடியுமானால் இத்தகைய மனிதன் தனக்குத்தானே மருத்துவன் ஆகலாம் என்கிறார்.

தத்துவவாதி:

தனது செயல்பாட்டுக்கான சாத்தியப்பாடுகளைப் பற்றிய தெளிவான கருத்து உடைய மனிதன் – இதைச் செய்வதற்காகத் தனது வரலாற்றுச் சூழல் பற்றிய அறிவை உடையவன். இத்தகைய புரிதலோடு, தனது சூழலை மாற்றச் செயல்படுபவன். தனது வளர்ச்சியையும் தனது சூழலின் வளர்ச்சியையும் சாதிக்கமுடியும். இத்தகைய செயல்படும் மனிதன்தான் உண்மையான தத்துவவாதி.

"இயற்கை உலகின் பகுதியாக மட்டுமே உள்ளவன் அதனுடன் உறவில் கலப்பதில்லை. செயல்பாடு, தொழில் நுணுக்கத்தின் மூலமே இயற்கை உலகோடு உறவு கொள்கிறான். மேலும், இவ்வுறவுகள் இயந்திர வகையானவை அல்ல. இவை செயலாற்றலும் தன்

உணர்வும் உள்ளவை – தன்னை இதயமாக – மையமாகக் கொண்ட சிக்கலான உறவுகளை மாற்றும் அளவுக்கே மனிதன் தன்னை மாற்றிக் கொள்கிறான். இப்பொருளில், உண்மையான தத்துவவாதி என்பவன் அரசியல்வாதி யாகிறான். இத்தகையவன், நாம் ஒவ்வொருவரும் பங்கு பெறுகிற உறவுகளின் தொகுப்பு என்ற சூழலைப் புரிந்து கொண்டு அதனை மாற்றச் செயல்படும் மனிதன். ஒருவனின் தனியாளுமை என்பது இத்தகைய உறவுகளின் தொகுப்பு என்றால், ஒருவனின் ஆளுமையைப் படைப்பது என்பது இத்தகைய உறவுகள் பற்றிய உணர்வைப் பெறுவதும் இத்தகைய உறவுத் தொகுப்பை மாற்றுவது என்பதும் ஆகும்."

அறிவாளிகள்:

வரலாற்று உணர்வைப் பெறுவது தான் வாழும் சமுதாயத்திற்கும் தனக்கும் சரியான வழி எது என்பது பற்றிய உணர்வைப் பெறுவது என்பது அறிவாளியின் கடமை. கிராம்சியின் புரட்சிகர மாற்றம் பற்றிய கோட்பாட்டில் அறிவாளியின் பங்கு இம்முறையிலேயே முக்கியத்துவம் பெறுகிறது கிராம்சியின் விளக்கங்கள் சிக்கலானவை. ஒருபுறம், மக்கள் திரள்களுக்கான சித்தாந்தத்தையும் தத்துவத்தையும் வழங்கி, அதன்மூலம், பொதுமக்கள் தம்மை ஆள்பவர்களைக் கேள்விக்கு உட்படுத்த இயலாத முறையில், ஆளும் வர்க்கம் தன் 'மேலாண்மை'யைச் செலுத்த உதவும் அறிவு ஜீவிகள் (Intelligentia) என்பவரையும் இச்சொல்லால் குறிப்பிடுகிறார். மறுபுறம் ஒவ்வொரு மனிதனும் அறிவாளிதான். ஒரு திறனை, மொழி அறிவைப் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் தனது அறிவுத்திறத்தை வெளிப்படுத்துகிறான் என்றும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு மனிதனும் ஒரு 'தத்துவவாதி', கலைஞன், சுவைஞன், ஒவ்வொருவனும் உலகக் கண்ணோட்டம் பற்றிய ஒரு குறிப்பிட்ட வகையில் பங்கு பெறுகிறான். இம்முறையில் ஒரு உலகக் கண்ணோட்டத்தைத் தாங்குகிறான்.அல்லது மாற்றுகிறான்.

இம்முறையில் சிந்தனையில் புதிய உருவங்களைப் படைக்கிறான் என்கிறார் கிராம்சி.

ஒவ்வொரு மனிதனும் அறிவாளிதான் என்றால் அறிவாளிகள் வகுப்பையும் அதன் சமூகப் பங்கையும் எப்படி மதிப்பிடுவது என்ற கேள்வி எழுகிறது.

அறிவாளிகளின் சமூகப் பங்கைப் பற்றி விரிவாக ஆராயும் போக்கில், 'மரபுமுறை அறிவாளிகள்', ஒருங்கு இணைந்த அறிவாளிகள் (Traditional and Organic) என்ற வேறுபாட்டைச் செய்கிறார். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அறிவுத் தலைமையை ஆற்றுபவர்கள் மரபுமுறை அறிவாளிகள். ஒருங்கிணைந்த அறிவாளிகள் என்பவர், தாம் சார்ந்த வர்க்கத்தோடு முற்றாக இணைந்தவர் என்கிறார் கிராம்சி. மத்திய காலத்தில் நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தோடு இருந்த புரோகிதர்கள், 'மரபுமுறை' அறிவாளிகள், அவர்கள் முன்னைய காலத்தில் ஒருங்கிணைந்த அறிவாளிகளாக இருந்தவர்கள். நாளடைவில் இவர்கள் தாம் சார்ந்திருந்த குறிப்பிட்ட வர்க்கத்துடனான உறவுகளில் இருந்து விடுபட்டு, ஆதிக்கத்திலுள்ள சமூகக் குழுவிலிருந்து சுதந்திரமானவர்களாகத் தம்மை முன்வைக்கிறார்கள். ஆளும் வர்க்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்திருப்பதற்கு இவர்கள் காரணம்.

புரோகிதர்களைத்தவிர, மரபுமுறை அறிவாளிகள் என்று பேசும் பொழுது, கிராம்சி குரோஸை மனத்தில் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இத்தகைய அறிவாளிகள் தம்மைச் சுதந்திரமானவர்களாகக் கருதிக்கொள்வது ஒரு பிரமை என்கிறார் கிராம்சி. குரோஸ் முதலிய தாராளவாத தத்துவவாதிகள், தம்காலத் தொழிலதிபர்களுடன் இணைந்தவர்கள். அவர்கள் சார்பில் – பழைய காலப் புரோகிதர்களைப் போல – வாதாடுபவர்கள்.

மரபுமுறை அறிவாளிகளின் உண்மையான கடமை, தமது பழைய சார்புகளை ஒப்புக்கொண்டு, புதிய புரட்சிகர வர்க்கத்துடன் ஒருங்கிணைவதுதான். இம்முறையில் இவர்கள்

ஒருங்கிணைந்த அறிவாளிகளாக முடியும். இப்படி இணைந்தவர்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சி உறுப்பினராதல் தவிர்க்க இயலாதது. இத்தகையவர் பங்கு செயல்வகையிலானது, சொற்பொழிவாற்றுவதல்ல. இவர்கள் கடமை, அத்துடன், செயல்முறை வாழ்வில் பங்கு பெறுதல்: உருவாக்குதல் : இவர்கள் சார்ந்த கட்சிதான், இவர்கள் சார்ந்த வர்க்கத்திற்கு அறிவுத் தலைமை மேற்கொள்கிறது. மக்கள் திரளுடன் இணைந்த அறிவாளிகள்தான் வரலாற்றில் பங்கு பெறுகிறார்கள்.

நவீன கால அரசன்:

இத்தாலிய அறிவாளிகளின் வரலாறு பற்றிய குறிப்புகளைத் தரும் கிராம்சி, இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்திய மாக்கியவெல்லி பற்றிப் பாராட்டி எழுதுகிறார். ஒருசமயம் குரோஸ் மார்க்சைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, பாட்டாளி வர்க்கத்தின் மாக்கியவெல்லி என்று குறிப்பிட்டார். இதை மனத்தில்கொண்டு, 16ஆம் நூற்றாண்டு இத்தாலிய சமூகத்தைப் பகுத்தாய்ந்த மாக்கியவெல்லியின் முறையைச் சமகாலச் சமுதாய ஆய்வுக்குப் பயன்படுத்த விரும்பினார் கிராம்சி. மாக்கியவெல்லி எழுதிய Prince புத்தகம் போல நவீன காலச் சமூகம் பற்றிய Modern Prince எழுத முயன்றார் கிராம்சி. இருபதாம் நூற்றாண்டில், அரசியல் மாற்றத்தைத் தோற்றுவித்து நிறைவேற்றும் அரசனாக இவர் அரசியல் கட்சியைக் குறித்தார்.

மாக்கியவெல்லி தன் காலத்து ஆளும் வர்க்கத்திற்குத் தேவையான கல்வியைத் தர முயன்றார். திருச்சபையின் கோட்பாடுகளுக்குள் மாட்டிக்கொள்ளாமல், இத்தாலியை எதிர்கொண்ட அரசியல் கடமைகள் பற்றிய யதார்த்தத்தைக் கற்றுத்தர முயன்றார். அதுபோல 'நவீன கால அரசன்' அதாவது, கட்சி, பாட்டாளி வர்க்கத்திற்கான கல்வியைத் தந்து, எதிர்கால ஆளும்வர்க்கமாக அதனைப் பயிற்றுவிக்கும் கடமை உடையவன். அறவியலிலிருந்து அரசியலைப் பிரித்தது மாக்கியவெல்லியின் சாதனை எனப் புகழ்ந்தார்

கிராம்சி. பொய்யான அறவியலிலிருந்து அரசியலைப் பிரித்து, உண்மையான அறவியலும் அரசியலும் இணைவதை விரும்பினார் மாக்கியவெல்லி. இக்கருத்தை கிராம்சி ஆதரிக்கிறார். இக்கருத்தை உறுதியாகப் பற்றி நிற்கிறார் கிராம்சி. எந்த அரசியல், பொருளாதார மாற்றமும் அறிவுத்துறை அறவியல் மாற்றத்தோடு இணைந்திருக்க வேண்டும். நவீன கால அரசன், அதாவது கம்யூனிஸ்ட் கட்சி, தான் வளர்ந்து செல்லும் போது, அறிவுத்துறை, அறவியல் உறவுகளை முற்றிலும் புரட்சிகரமாக மாற்றுகிறது. கட்சியை வளர்க்கும், பலப்படுத்தும் அல்லது எதிர்க்கும் முறையிலேயே அவற்றின் நன்மை தீமை தீர்மானிக்கப்படும். மனிதர்களின் மனத்தில் கட்சியே இடம் பெறுகிறது. வாழ்வின் எல்லாத் துறைகளையும் இவ்வாறே அது மாற்றுகிறது என்கிறார் கிராம்சி.

"மேலாண்மை"

கட்சி, ஒரு புதிய புரட்சிகரமான உறுதியைப் படைக்க வேண்டும். புரட்சியில், ஏற்ற இறக்கமாக கட்டங்கள் உண்டு. புரட்சி என்னும் இராணுவ தந்திரத்தில், இயக்கம் போலவே நிலைப்புக்கும் முக்கியத்துவம் இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் இடையறாத புரட்சி என்ற கோட்பாட்டை விமர்சனம் செய்கிறார் கிராம்சி. பெருமளவு மக்கள் திரள் சார்ந்த அரசியல் கட்சிகளும் பெரும் பொருளாதார அமைப்புக்களும் இல்லாத கட்டத்தில் இடையறாத புரட்சி என்ற வாதம் சரியானதுதான். ஆனால், மையத்தில் குவிந்த அரசின் அதிகாரமும், அதற்குள் மக்களுடைய திரள் நிறுவனங்களின் அதிகாரமும் அதிகரித்தபோது இடையறாத புரட்சி என்பதற்குப் பதிலாக 'அரசியல் மேலாண்மை' இடம் பெறுவதாக கிராம்சி கருதுகிறார். எந்த ஒரு ஆளும் வர்க்கமும் தான் வெற்றி பெற, நிலைத்து நிற்க. இத்தகைய மேலாண்மை ஏற்படுத்துவது தேவை. நவீன கால அரசனின் கடமை, இத்தகைய மேலாண்மையை ஏற்படுத்துவதாகும். அமைதியான புரட்சிக்காலத்தில் மக்களின் மனத்தில் இத்தகைய மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

கிராம்சி, தனது மேலாண்மை என்ற கருத்தாக்கத்திற்கு லெனினுக்குத் தான் கடமைப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். கட்சி, தனது செயல்திட்டத்திற்காக சித்தாந்த அடிப்படையை மக்களுக்குத் தெளிவுபடுத்திவிடவேண்டும். மக்களைப் பொருளாதாரவாதக் கவர்ச்சியிலிருந்து தடுப்பதற்கு இது வழி என்றார் லெனின். இந்த வரையறுப்பை மார்க்சியத்துக்கான நன்கொடை என்றார் கிராம்சி. மேலாண்மை தனது செயல் வடிவில் ஒரு புதிய சித்தாந்தக் களத்தைப் படைக்கிறது. மனஉணர்வில் மாற்றத்தைச் செய்கிறது. ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்திற்குத் தக்கதொரு புதிய ஒழுக்கவியல் நாம் புகுத்துவதில் வெற்றியடையும் போது, தத்துவத்தின் - புதிய – முழுமையான மாற்றம் நிகழ்கிறது என்றார் கிராம்சி. இத்தகைய கருத்து குரோசிடமும் இருப்பதைத் தொடர்புபடுத்துகிறார் கிராம்சி.

ஒரு அரசியல் வர்க்கத்தின் மேலாண்மை என்பதன் பொருள், சமூகத்தின் பிற வர்க்கங்களும் தனது அறவியல், அரசியல், கலாச்சார மதிப்பீடுகளை ஏற்குமாறு தூண்டி வெற்றி பெறுதல் என்றார் கிராம்சி. இதில் வெற்றி பெறும் ஆளும் வர்க்கம், வன்முறையை அதிகம் பயன்படுத்த வேண்டியிராது. பாராளுமன்ற ஆளுகையில் மேலாண்மைச் செயல்படும் வழக்கமான முறை, வன்முறையையும் பொதுக்கருத்தை தக்க அளவில் பயன்படுத்தலாகும். வன்முறையை பொதுக்கருத்தை உருவாக்குதலையும் செயல்படுத்த முடியாத இடைவெளியில்தான், ஊழல் வந்து அமர்கிறது என்றும் விளக்குகிறார் கிராம்சி. நெருக்கடிக் காலங்களில் மேலாண்மைச் சாதனம் சிதைகிறது; எந்த ஒரு குழுவும் ஆளுதற்கேற்ற பொதுக்கருத்தை உருவாக்க முடிவதில்லை. இத்தகைய நிலை, புதிய மேலாண்மைச் சாதனத்தை உருவாக்கவேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. இல்லாவிட்டால் அரசின் வன்முறைக்கே இடம் வாய்க்கிறது.

ஒவ்வொரு வரலாற்று மாற்றக் காலத்திற்கும் மேலாண்மையை உருவாக்குவதில் அறிவாளிகளின் பங்கை

வலியுறுத்துகிறார் கிராம்சி. மேலாண்மையைச் சாதிப்பதும் நிறுத்துவதும் பெரும்பகுதி கல்வித்துறை சம்பந்தப்பட்டது. ஒரு கூட்டு தேசிய மன உறுதியை உருவாக்குவதுதான் கல்வித்துறையின் சாதனை வெளிப்படுகிறது. இத்தகைய மனஉறுதியை உருவாக்குவதில், மக்கள் திரளுடன் அறிவாளிகள் கொள்ளும் உறவு இன்றியமையாதது. மக்களின் அடிப்படையான ஆர்வங்களை அறிந்து கொள்ளாமல் – அவை பற்றிய உணர்வு கொள்ளாமல் மக்களுடன் இவ்வகையில் அறிவாளிகள் உறவேற்படுத்திக் கொள்ளாமல் – இதைச் சாதிக்கமுடியாது. இத்தகைய உணர்வில்லாத உறவுகள் அதிகார வர்க்கத்தன்மை உடையனவாகின்றன. அறிவாளிகள், ஒரு சாதியாக, போதகர்களாக மாறுகின்றனர்.

மக்கள் கலாச்சாரத்துடன் கிராம்சி கொண்ட உறவை, இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். அரசியல் கட்சிக்குள் உள்ளார்ந்த ஜன நாயகத்தின் தேவையையும் இதிலிருந்து அறியமுடியும். தொழிற்சாலைக் குழுக்களில் தலைவர்களையும், தொண்டர்களையும் இணைப்பது பற்றிய அவரது Historical bloc பற்றிய கருத்தும் இதிலிருந்து தெளிவுபடுகிறது. இம்முறையில்தான் தலைவர்களும் தொண்டர்களும், ஆள்பவர்களும் ஆளப்படுபவர்களும் ஒன்றிணைந்து செயல்படுகிறார்கள். அதிகார வர்க்கம் எந்த நிறுவனத்தையும் உறுதியாக – இயக்கமற்றதாகச் செய்துவிடும். ஜனநாயக முக்கியத்துவம் என்பதில்தான் அதிகாரவர்க்கத் தீமையை வெல்லமுடியும். உடல் உழைப்பு, மூளையுழைப்பு என்பதை இணைத்தல், சட்டவியல் நிர்வாக அதிகாரங்களுக்கு இடையில் நெருங்கிய இணக்கம். (இம்முறையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசு அலுவல்களை நிர்வகிப்பதிலும் ஈடுபாடு கொள்வார்கள்) ஆகியவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தினார் கிராம்சி.

இப்படிப் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி - துண்டு துண்டாக ஆயினும் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. கிராம்சியின் சிறைக் குறிப்பேடுகள்.

"மார்க்ஸ் எங்கல்ஸ் ஆகியவர்களின் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்துசெய்ய உண்மையிலேயே முயன்றவர் யார்?" என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு அல்தூசர் தந்த பதில்: கிராம்சி பற்றித்தான் என்னால் சிந்திக்கமுடியும்." மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் பற்றித் தீவிரமான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார் கிராம்சி. பொருளாதார விதிகளுக்கும் மேற்கட்டுக்குமான உறவுகள் பற்றிய அவர் ஆய்வுகள் வறட்டுத்தனமாக இயங்கியலை விளக்குவது பற்றிய மறுப்புரைகள், வரலாற்றில் சிந்தனைக்கும் தனி மனிதரின் மன உறுதிக்குமான பங்கை நிர்ணயிக்க முயன்றதன் மூலம் வரலாற்றுப் பொருள் முதலியலைப் புதிதாக வரையறை செய்த அவர் முயற்சிகள், சிந்தனை கலாச்சாரப் பண்புகளுக்கு அவர் தந்த அழுத்தங்கள், மேலாண்மை பற்றிய அவரது கோட்பாடு, முதலியவை கிராம்சியைப் பிற மார்க்சியவாதிகளிலிருந்து பிரித்துக் காட்டும் சிறப்பியல்புகள், சமூக உறவுகளில் கலாச்சாரத்திற்கு அவர் தந்த அழுத்தத்தை வேறு யாருமே தந்ததில்லை. புரட்சிகர இயக்கப் போக்கிலும் புரட்சிகர மாற்றத்திலும் புரட்சியை நிலைப்படுத்துவதிலும் சிந்தனையாளர் பங்கு பற்றிய அவரது ஆய்வுரைகள், கட்சி பற்றிய கருத்தாக்கங்கள் முதலியவை, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அவரது 'சிறைக் குறிப்பேடுகள்' இருபதாம் நூற்றாண்டு ஐரோப்பிய இலக்கியத்திலும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாற்றிலும் அவருக்குத் தகுதியாக இடம்தருபவை. மார்க்சியக் கோட்பாட்டாய்வில் ஆர்வம் உடைய அனைவர்க்கும் அவரது படைப்புக்கள் உண்மையோடு விளங்குபவை.

கிராம்சியின் படைப்புக்கள், மார்க்சியவாதிகள் மத்தியில் மட்டுமல்லாமல் பிற தத்துவவாதிகளிடமும்

செல்வாக்குப் பெற்றுள்ளன. கிராம்சி, இத்தாலிய, ஐரோப்பிய கலாச்சார மரபில் வேர் கொண்டார். ஆகவே, இவருக்கு மார்க்ஸ், லெனின் போலவே விகோ, ஹெகல், சொரேல், குராஸ் முதலியவர்களும் முக்கியமானவர்களாகத் தோன்றினர். இவர்களுக்கு எதிரான விமர்சனங்களை அவர் கொண்டிருந்த போதிலும். இதனால் மார்க்சியத்தைச் சாராத பிற தத்துவவாதிகளுக்கு, கிராம்சியோடு விவாதிப்பது அவர்களுக்கே பயனுடையதாக இருக்கும்.

கிராம்சி தன் காலத்தில் வெளியுலகில் உள்ள மார்க்சியவாதிகளோடு தொடர்பு கொள்ள வாய்ப்பற்றவராக இருந்தார். லெனின், டிராட்ஸ்கி, புகாரின், ஸ்டாலின் தவிர பிறர் பற்றிய குறிப்புக்கள் அவரது படைப்புக்களில் இடம்பெறவில்லை. மார்க்சியக் கோட்பாடு, காலத்தின் தேவைக்கேற்றபடி பல்வேறு வகை வளர்ச்சிகளைப் பெறுகிறது என்ற ரோஸா லக்ஸம்பர்க் கருத்தால் அவர் கவரப்பட்டிருந்தார். புரட்சிக்கு, மக்கள் திரள்களின் ஆதரவைப் பெறுவதன் தேவையை லக்ஸம்பர் போலவே கிராம்சியும் வற்புறுத்தினார். கிராம்சி ஆர்வம் கொண்டிருந்த துறைகளில் அவர் காலத்தில் ஆர்வம் கொண்டிருந்தவர்களாக ஹங்கேரியைச் சேர்ந்த ஜியார்ஜி லூகாக்சையும், ஜெர்மனியைச் சேர்ந்த கார்ல்கோர்ச்சையும் குறிப்பிடலாம். இவர்களும் வரலாற்றுப் பொருள் முதலியலை விளக்குவதில் கலாச்சார, தத்துவப் பண்புகளுக்கு முக்கியத்துவம் தந்தனர். கிராம்சியின் சிந்தனையின் சில கூறுகள், பிராங்க்பர்ட் பள்ளியினரின் சிந்தனைகளுடன் ஒத்திருந்த போதிலும், அவரது சிந்தனை எப்போதும் செயல்முறைத் தத்துவச் சார்பிலேயே இருந்தது. இவரது செயல்முறைத் தத்துவம், மக்கள் சார்பு மிக்கதாகவும் மேலும் மனிதவியல் சார்ந்ததாகவும் இருந்தது. 20ஆம் நூற்றாண்டில் மாபெரும் மார்க்சிய சிந்தனாவாதியாக இருந்த கிராம்சியின் படைப்புக்கள், பொருளியல் வரையறைகளிலிருந்து

விடுதலை பெற முயலும் மனித ஆன்மாவின் சுதந்திரத்தை விளக்கவல்ல மாபெரும் எடுத்துக்காட்டாகத் திகழும்.

தொகுப்பு: மணிவாசகன்

பின் குறிப்பு: கட்டுரைக்கான ஆதார நூல்:
Gramsci – By James Foll Fantana Collins 1977

மேலும் சில குறிப்புக்கள்: Antonio Gramsci –
Towards an Intellectual Biography
By Alastair Davidson
Merlin Press – London 1977
என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டன.

⁂

3. இந்திய வரலாற்று ஆய்வுகளில் வகுப்புவாதக் கண்ணோட்டம்

கடந்த நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் எழுதப்பட்டு (புனையப்பட்டு) கற்பிக்கப்பட்டு வருகிற இந்திய வரலாறு, இந்த நூற்றாண்டின் இடையிலேயே கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. காரணம், இவ்வரலாறு உண்மைக்குப் புறம்பாக, ஆய்வுநோக்கிற்குட்படாத, அதேசமயம் சடங்குத்தனமாக அமைந்துள்ளதே யாகும். இதன் பிற்போக்கு நிலைக்கெதிராக கண்டனக் குரல் கொடுத்தவர்களில் ஒரு சிலரே இக்கட்டுரைக்கும் முதன்மையானவர்கள். ரோமிலா தாபர், ஹர்பான்ஸ் முகியா, பிபன்சந்திரா. Communalism and the writing of Indian History – PPH 1977 எனும் கட்டுரைத்தொகுப்பின் சாரமே இங்கு தரப்படுகிறது. இவர்கள் மூவரும் முறையே பண்டைக்கால இந்தியா, இடைக்கால இந்தியா, நவீன கால இந்தியா பற்றிய ஆய்வுகளை பற்றித் திறனாய்வு செய்கின்றனர், இந்நூலில்.

பண்டைய இந்திய வரலாறு

இந்திய வரலாற்று ஆசிரியர்கள் (யாராகிலும்) குறுகிய தேசிய இன வாதத்திற்கு, வகுப்பு வாதத்திற்கு (தற்காலிகப் பயன்மை நோக்கின் சார்பாக) நின்றதில்லை என்பதே இதுவரை நமக்குக் கற்பிக்கப்பட்டது. ஆனால் உண்மை நிலை, முற்றிலும் வேறானது. இடைக்கால, தற்கால வரலாற்றை விளக்க, புரிந்து கொள்ள, வகுப்புவாத அடிப்படையில் எழுதத் தொடங்கிய ஆசிரியர்கள் இந்த அளவுகோலை, பண்டைய இந்திய வரலாற்று அமைவுக்கும் பொருந்தினர். கற்றவரிடையே வகுப்புவாத நியாயத்தை நிலைநாட்டுவதோடு, அங்கீகாரத்தைப் பெறவும் இந்நிலைப்பாட்டை மேற்கொண்டனர். இவ்வாறு எவ்வித விமர்சனத்திற்கும் உட்படுத்தாது இவர்கள் பண்டைய வரலாற்றை உன்னதமான இந்து சமுதாயமாகக் காட்டியதோடு

முஸ்லீம்கள் வருகையை இதன் வீழ்ச்சிக்குக் காரணமாக முன்வைத்தனர். இவ்விந்திய வகுப்புவாதிகளின் குறுகிய வரலாற்றுப் பார்வை, முஸ்லீம் வரலாற்று அறிஞர்களையும் வகுப்புவாத நோக்கில் இடைக்கால இந்திய வரலாற்றைத் தொகுக்கத் தூண்டியது. இதுவேதான் பின்னர் இந்து முஸ்லீம் பிரிவினைக்கும் கால்கோளிட்டது.

பண்டைய இந்திய வரலாறும், அதன் சார்பான கலாச்சாரம் பற்றியும் புனையப்பட்டதே 18-ஆம் நூற்றாண்டில்தான். 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசிய – ஐரோப்பிய வாணிபத்தின் வாயிலாக வந்து சென்ற அறிஞர்கள் மற்றும் சமயக் குழுக்களின் ஆதரவில் தோன்றிய "ராயல் ஏஷியாடிக் சொசைட்டி" தொன்மைச் சான்றுகளைத் தொகுக்க, ஒழுங்குபடுத்தத் தொடங்கியது. கீழை நாட்டு ஆய்வாளர்கள் கற்றுக் கொண்ட சமஸ்கிருத மொழி, பெரும்தூண்டுகோலாக அமைந்ததால் வேதகால இலக்கியங்களை உயர்த்திப் பிடித்தனர். அக்காலப் பாடல் நோக்கிலேயே சமகால இலக்கியங்களைப் புனைந்தனர். ஆரிய கலாச்சாரத்தை நாகரிகத்தை கிரேக்கத்தோடு சமன்படுத்தினர். மேற்கத்திய வரலாற்றுக் கட்டங்களை, குறிப்பாக, தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய சமுதாய மாற்றங்களைக் கண்டு அஞ்சி ஐயுற்றதோடு, புறக்கணிக்கவும் செய்தனர். மாறாக, கற்பனை வடிவில் தொன்மைக் கலாச்சாரத்தை நிர்மாணிக்கவும் துணிந்தனர். இப்படி இந்தியத் தொன்மையினை, புதைகுழியினின்று தோண்டி உயிர்ப்பிக்க முனைந்தவர்களின் தந்தையே மாக்ஸ்முல்லர். இவரே இந்திய வரலாற்றில் வகுப்புவாதத்திற்கு அடித்தளமுமிட்டவர். இவரது குறுகிய வகுப்புவாதக் கோட்பாடே பின்னர் ஜேம்ஸ் மில் இந்திய வரலாற்றை இதே அடிப்படையில் எழுதத் தூண்டியது.

ஜேம்ஸ்மில்லின் "பிரிட்டீஷ் இந்திய வரலாறு" குறுகிய வகுப்புவாத அடிப்படையில் எழுதப்பட்டது. இவரே முதன்முதலில் இந்திய வரலாற்றை மூன்று பகுதிகளாகப்

பிரித்தமைத்தார். இவை இந்து நாகரிகம், முஸ்லீம் நாகரிகம், ஆங்கில நாகரிகம் (நல்ல வேளை கிறித்துவ நாகரிகம் என்றில்லை) மில்லினுடைய வரலாறு, பின்னர் வந்த நிர்வாகத்தினருக்கும், ஆங்கில வரலாற்று ஆசிரியர்களுக்கும் விவிலிய நூலாக்கப்பட்டது. இதில் வேறொரு அம்சம் என்னவெனில், இந்து கலாச்சாரத்தை கடுமையாகச் சாடிய இவர், முஸ்லீம் கலாச்சாரத்தை அனுதாபத்துடன் அணுகுகிறார். இப்போக்கு மற்ற சில கீழ்நாட்டு ஆய்வாளர்களைத் தொன்மை இந்து நாகரிகத்தைச் சற்று அதீத நிலைக்குக் கொண்டு செல்லவும் தூண்டியது.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், எழுந்த இந்திய வரலாற்றாசிரியர்கள் தவிர்க்க முடியாது தேசிய எழுச்சிக்கு (இயக்கத்திற்கு) ஆட்பட்டனர். அவர்கள் தங்களை தேசிய வரலாற்றாசிரியர்கள் என அழைத்துக் கொள்ளாத போதிலும் வரலாற்றைத் தேசிய நோக்கிலேயே விளக்கிவந்தனர். இவர்கள் கீழைநாட்டு ஆய்வாளர்களின் பாதிப்புக்குள்ளாகி "இந்து" இந்தியா என்றே ஆய்வுகளைத் தொகுத்தனர். இதைப் பொறுத்து அவர்களுக்கு எவ்வித விமர்சனமும் இருக்கவில்லை என்பதோடு அக்கால வரலாற்றாசிரியர்களில் பெரும்பாலோர் பிராமணர்களாகவும் இருந்து வந்தமையால் வேதங்கள் அவை தொடர்பான போக்குகள் விமர்சிக்கப்படவே இல்லை.

தொன்மைக் காலத்தை உன்னதப்படுத்துவதன் மூலம் தேசிய இயக்கத்திற்கு ஒரு குணாம்சத்தைத் தோற்றுவித்தனர். காலனிய ஆதிக்க எதிர்ப்பிற்கும் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பிற்குமிடையே இது அவர்களுக்கு சற்றே ஆறுதல் தந்ததோடு, தர்மசாத்திரங்கள் போன்ற நூல்களும் சமூகச் சிக்கல்களிடையே அமைதியைத் தோற்றுவிக்கும் என நம்பினர்.

ஆயினும் தேசிய வரலாற்றாசிரியர்களின் மாபெரும் இழிநிலை என்னவெனில், அவர்கள் மில்லின் வரலாற்றுப் பாகுபாட்டை எதிர்க்கத் துணியவேயில்லை. இதற்குக் காரணம், அவர்கள் தொடர்ந்து அரசியல் மற்றும் ஆட்சி

வரலாற்றை, அவற்றிற்கான பங்கை, முற்றிலும் ஒதுக்கி வைத்திருந்தனர். இந்நிலை தொடர்ந்து இந்து நாகரிகம் கற்காலமாகவும், முஸ்லீம் காலம் வீழ்ச்சிக்காலமாகவும் இவர்களால் படம் பிடிக்கப்பட்டது. இந்து-முஸ்லீம் பிரிவினை வரலாறு, ஆங்கிலேயர் இந்தியாவை வெற்றி கொள்ளக் காரணமாக இருந்ததோடு இந்தியா-பாகிஸ்தான் எனத் துண்டாடவும் கூடத் தூண்டுதலாயிற்று.

கி.மு.1000 முதல் கி.பி.1200 வரையுள்ள காலத்தை இந்துக் காலமாக இந்துக்கள் ஆதிக்கத்தில் இருந்த காலமாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இக்காலத்தில், இந்தோ ரக்கர்கள், சாகர்கள், கு ானர்கள் ஆட்சியில் புத்தமதமே அரியணையில் இருந்து வந்தது. ஆனால் வரலாற்றில் புத்தமதம் இங்கு புறக்கணிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்து மதம் என்ற ஒன்று, அதற்கான வடிவில் தொடங்கியதே குப்தர் காலத்திற்குப் பின்புதான் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு). .... இயக்கங்கள் வலுப்பெற்றதே இடைக்கால இந்தியாவில்தான். ஆனால் இந்த இடைக்காலம் (கி.பி.12க்குப்பிறகு) பெரும்பாலான வரலாற்றாசிரியர்களால் இந்துக்களின் வளர்ச்சிக் காலமாகக் கருதப்படுகிறது.

இதுபோன்றே, இந்துக்கள், முஸ்லீம்களினின்று தங்களது காலத்தைப் பாகுபடுத்திக் காட்டுவதிலும் குழப்பம் அதிகம். காரணம் கி.பி. 7 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை ஆண்டவர்கள் அரேபியர், துருக்கியர், பெர்சியர்கள். அவர்கள் மத அடிப்படையிலல்லாது அரசியல் சார்ந்த அந்நியர்களாகவே, மிலேச்சர்களாகவே கூறப்பட்டு வந்தனர். (கலாச்சார வேறுபாடு) 13ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்களின் நிலையான ஆட்சி தோன்றிய பின்னர்தான் இந்துக்கள் தங்களது மத வீழ்ச்சியை ஒப்புக்கொண்டனர்.

ஆட்சி மாற்றங்களின் தொகுப்பே இந்திய வரலாறு எனக் கொண்டாலும், மில்லின் வரலாற்றுப் பகுப்பாய்வு மாறானது. ஆட்சிமாற்றங்களின் காலவரிசை சரியான அடிப்படையில் நோக்கப்படவில்லை. கங்கைச்

சமவெளியின் அரசியல் மாற்றம் மட்டுமே பிரதானம் எனில் இப்பாகுபாடு என்று ஒப்புக்கொள்ளப்படலாம். ஆனால் இந்தியா அல்லது இந்திய முழுமைக்குமென்றாலும்கூட, மிகுந்த சிக்கல் உண்டாகிறது. ஏற்கெனவே கி.பி.8ஆம் நூற்றாண்டில் சிந்துவை அரேபியர் ஆட்கொண்டனர். 11ஆம் நூற்றாண்டில் பஞ்சாப் துருக்கியர் வசமாயிற்று. 13ஆம் நூற்றாண்டில் வைசாலியை வசப்படுத்தினர். 14-ம் நூற்றாண்டு தக்காணத்தில் அடியெடுத்து வைத்தனர். தக்காணத்தின் தெற்குப்பகுதிக்கு அவர்கள் வர நீண்டகாலமாயிற்று. இவ்வாறு முஸ்லீம் ஆட்சி தொடங்கியதற்கான காலம் சரியாகக் காட்டப்படவில்லை. கி.பி.1000 முதல் 1200 என்ற ஆட்சி மாற்றப்பாகுபாடும் கூட வட இந்தியாவின் ஒரு பகுதிக்கே பொருந்தும்.

இவ்வாறு மக்களது தேசிய, கலாச்சார நோக்கிற்குப் புறம்பாக, குறுகிய இன, வகுப்புவாத அடிப்படையில் எழுதப்படும் வரலாறு பொதுவாக அநுமானவாகவும், விமர்சனமற்ற குறிப்புகளாகவும் கேள்விகளுக்குப் புறம்பானதாகவும் அமைந்து விடுகிறது. இவ்வொழுங்கற்ற கற்பனைத் தொகுப்பு (சான்றுகள்)கள் தான் தலைமுறைகளாகப் பள்ளி, கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இதில், தோன்றிய சில சிக்கல்கள், அடிப்படையாக இந்திய வரலாற்றைப் பாதிக்கின்றன.

இவற்றுள் மிகவும் புரையோடிப்போன – சலிப்பு தரக்கூடிய ஒன்று. "ஆரியர் நாகரிகம்". இவர்களைத் திராவிடர்களிடமிருந்து பிரித்துக்காட்ட மொழியை மட்டுமே ஆதாரம் காட்டி வந்தனர். ஆனால் நிகழ்காலத் தொல்பொருள் ஆய்வுகள், ஆரியர்கள் பற்றி வெவ்வேறு சான்றுகளைத் தருகின்றன. அவை எப்படி இருப்பினும், "ஆரியத்தூய்மை"யைப் பிரிப்பதும், வலியுறுத்துவதும் சாத்தியமானதல்ல. இப்படிப் பட்ட ஆய்வுகள் மேலும் ஒரு படி சென்று, அரப்பா கலாச்சாரம் கூட ஆரியமயமானது என்பதோடு, ஆரியரின் பூர்வீகம் இந்தியாதான் என

நிரூபிக்கவும் துணிந்தனர். உண்மை என்னவெனில், வேத இலக்கியங்களை விமர்சனப் போக்கின்றி, கண்மூடித்தனமாக, இதற்குப் பயன்படுத்திக் கொண்டனரே அன்றி, தொல்பொருள் ஆய்வுகளை இதற்குச் சான்றுகளாகக் காட்ட மறந்தது, இவ்வாறான "ஆரிய மாயை" தோன்றக் காரணமாயிற்று.

இரண்டாவதாக, ஆரியர் பிரச்சினை போன்றே 'குப்தர்களின் பொற்காலமும்', மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய ஒன்று. இக்காலம் இந்து மறுமலர்ச்சிக் காலமாகக் கருதப்படுகிறது. ஆனால் முதன்மையான கலைச் சாதனைகள், பௌத்த மடங்களின் சாயல்கள் கொண்டவை. அறிவியற் கண்டுபிடிப்புகளிலும் வெளிநாட்டு அறிஞர்களின் பங்கு மறுக்கக்கூடியது அல்ல. இந்துமதத்தின் (பாரம்பரியத்தின்) முதன்மைக் கூறான "அகிம்சை கூட இந்திய நெப்போலியன் (சமுத்திரகுப்தரின் வெற்றிகள்) வாழ்வில் தோற்றுப்போகிறது. எஞ்சியுள்ளவை கவிகாளிதாசரின் படைப்புக்கள், புராணப்பாடல்களின் தொகுப்பு, நாணயங்கள், கல்வெட்டுகள் மட்டுமே. இவை மட்டுமா, ஒரு இந்துப் பொற்காலத்தை நிர்ணயிப்பது?

மூன்றாவதாக, இந்தியக்கலாச்சாரத்தின் ஆன்மீக அம்சமாக 'அகிம்சை' விளங்கியதால், காந்தியின் பங்கு தேசிய இயக்கத்தில் முதன்மை பெற்றது. இத்தத்துவம் தொடக்கத்தில் புத்த, சமண மதங்களாலேயே உயிரூட்டப்பட்டது என்பதுடன் இது இந்தியாவிற்கு மட்டும் உரியது என்பதுமல்ல; தொடக்கக்காலக் கிறித்துவர்களும் இதனை மேற்கொண்டிருந்தனர். இருப்பினும் நடைமுறையில் அகிம்சை இங்கு கடைப்பிடிக்கவில்லை என்பதற்கு முக்கிய சான்றுகள், பகவத் கீதையின் மையக்கருத்தும், பாரதப் போரும் ஆகும். ஒரே ஒரு விதிவிலக்கு, பேரரசர் அசோகரின் அகிம்சைக் கொள்கை ஆனால் அவரது இக்கொள்கையே பின்னால் மௌரியப் பேரரசு செல்லரித்துப் போக, முதன்மையான காரணமாயிற்று. பண்டைய வரலாற்று நாயகர்களாகக் கருதப்படும் அஜாத சத்துரு, சந்திரகுப்த மௌரியர், கனிஷ்கர், சமுத்திரகுப்தர்,

ஹர்சர், புலிகேசி 11, மகேந்திர பல்லவர், இராசேந்திர சோழன் முதலானோர், வரலாற்றில் மகோன்னத்துவம் பெற்றமைக்குக் காரணம் அவர்களின் போர் வெற்றிகள், சமுத்திர குப்தரது ஒவ்வொரு வெற்றியும், அவரைப் புகழேணியில் உயர்த்தியதோடு நெப்போலியனுக்கு நிகராகச் செய்தது. எங்கே போயிற்று இந்த அகிம்சை?

நான்காவது, முஸ்லீம் அரசர்கள் பற்றி, குறிப்பாக கஜினி முகமது பற்றித் தெளிவான பார்வை, வரலாற்று ஆய்வாளர்களுக்கு இருக்கவில்லை என்பதற்குச் சான்றே. அவரை, 'கோயில்களை இடித்தவர்; விக்கிரகங்களைத் தரைமட்டமாக்கியவர்; கொள்ளையடித்தவர்; காரணம் அவர் ஒரு முஸ்லீம் (உருவ வழிபாட்டு எதிர்ப்பு) என்ற கூற்றுகள். ஆனால், எதிர்ப்புகள் வந்த போதே கஜினி அவ்வாறு செய்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இத்தோடு இந்துப் பாரம்பரியப் பேரரசர்களே இக்காரியத்தைத் துணிச்சலுடன் செய்து வந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டு, கல்ஹணரின் ராஜதரங்கினியில் குறிப்பிட்டபடி, காஷ்மீர் அரசர் ஹர்சர் தனி அதிகாரிகளை நியமித்துக் கோயில்களை இடித்துச் செல்வங்களைக் கொள்ளையிட்டார் என்பது.

இப்படிக் குறிக்கப்படுவதன் நோக்கமெல்லாம் வகுப்புவாத நோக்கில் எழுதப்படுவதை விமர்சிப்பதுதான். உண்மை யாதெனில், வகுப்புவாத நோக்கில் விளக்கப்படும் வரலாறு தரத்தில் குறைந்த நிலைக்கு இட்டுச்செல்லும். இதுவே அந்த நாட்டு அரசியல் பின்னணிக்குப் புராண, கற்பனை அமைப்பை அளித்துவிடும்.

இதைவிடுத்து, பண்டைய இலக்கியங்களைப் பகுத்தாய்ந்து முறைப்படுத்தி, தெளிவு கொள்ளுதல் வரலாற்றிற்குச் சரியான பார்வையைக் கொடுக்கும். இந்நிலையில் மதச்சார்பான நூல்கள் – வேத இலக்கியங்கள் விமர்சனத்துள்ளாகின்றன. வாணாசிரம முறையில் எழுந்த தர்மசாத்திரங்கள் எதிர்க்கேள்விகளுக்குள்ளாகின்றன. இவ்விலக்கியங்களிலும் காளிதாசரின் படைப்புக்களிலும்

கூட, சமூகத்தில் முதன்மை வகித்த அரசர்கள், முனிவர்கள், சமய மடங்கள், பெரும் வணிகர்கள் முதலான மேல்தட்டு மக்களைப் பற்றிய வரலாற்றைத் தான். அவர்களது சாதனைகளை, தந்திரங்களை - வாழ்நிலைகளைத்தான் அறிய முடிந்ததேயன்றி அவை அக்காலங்களின் குரல்களாக இருக்கவில்லை. இதில் மற்றொரு விநோதமான நிகழ்ச்சி, பிராமண இலக்கியங்களில் சார்வாகம், லோகாய தத்துவத்தின் பங்கு மறைக்கப்பட்டு விட்டது. புத்த சமண நூற்குறிப்புக்களினின்றே இவர்கள் பற்றி அறிய முடிந்தது. மேலும் பண்டைய சமூகத்தின் அனைத்து மக்களின் அரசியல், பொருளியல், மதச்சார்பான செய்திகளை வெளிப்படுத்தும் கருவியாக, புது பரிமாணத்தைத் தோற்றுவிப்பவையாகத் தொல்பொருள் ஆய்வு பயன்படுகிறது. ஆனால் இவை இலக்கியங்களைக் காட்டிலும் குறைவாகவே வரலாற்றுச் சான்றாகவே பயன்பட்டு வருகின்றன.

சரியான பண்டைய இந்திய வரலாறு எழுதப்படுவதற்கு இங்குச் சில கேள்விகள் பயன்படும். (1) அன்றைய சமூகத்தின் சண்டை ச ீரவிற்கான காரணம், விளைவுகள் ஏன் சரியாக விளக்கப்படவில்லை? 2) தொடர்ந்து நடந்த போர்கள், அரியணை ஆக்கிரமிப்புகளும், அரசு குடும்பம் சாராத, மற்றைய சமூகத்தை எந்த அளவில் பாதித்தது? 3) பல்வேறு மதக்குழுக்களிடையே இருந்து அடிப்படை முரண்பாடுகள், அசோகரது அகிம்சை முயற்சி பின் மதங்கள் உடைதல், வேறாதல் தளர்நல (4) பிராமணர்களுக்கும் சார்வாளர்களுக்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் அவர்களது அடிச்சுவட்டையே எவ்வாறு பிராமண இலக்கியங்களிலிருந்து நீக்கக் காரணமாயிற்று. 5) ஆரியர்களுக்கும் தாஸ்யூக்களுக்கும் பாணியர்களுக்கும்) இருந்த முரண்பாடு வெறும் இனச்சார்பானதுதானா? உள்நாட்டு வெளிநாட்டு மக்களுக்கிருந்த முரண்பாடு எவை? 6) எந்த ரீதியான கண்ணோட்டத்தை 13ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்த இந்தியர்கள், அராபியர் துருக்கியர் மீது கொண்டிருந்தனர்?

(7) கி.பி. 1200க்குப் பிறகு நிகழ்ந்த இந்து முஸ்லீம் கலகங்கள் மதச்சார்பானவை மட்டும் தானா? இவை போன்ற கேள்விகள், அர்த்தமுடைய ஒரு வரலாற்று ஆய்வைத் தோற்றுவிக்கும்). இவை முதலாவதாக சமூகத்தின் ஒவ்வொரு படிநிலை வளர்ச்சியையும் அறியஉதவும். அதோடு தெளிவான வரலாற்றுத் தொடர்பையும் நமக்குத் தரும். இரண்டாவதாக, இந்திய வரலாற்றைப் பாதித்த வரலாற்றுச் சான்றுகளைத் தெளிவாக உணரமுடியும். இதிலிருந்துதான் முஸ்லீம் வருகையின் பாதிப்பு பண்டைய இந்திய வரலாற்றின் மீது எவ்வாறு இருந்தது என்பதோடு உண்மையான பண்டைய வரலாற்றை அறியவும் உதவும்.

இடைக்கால இந்திய வரலாறு:

இடைக்கால இந்திய வரலாற்றில் ஏழு நூறு ஆண்டுகளை "முஸ்லீம் இந்தியா" என அர்த்தப்படுத்தி குறுகிய பார்வையில் வரலாற்றை வரையறுத்தனர். தொடக்கத்திலேயே இரண்டு கேள்விகள் எழுந்து விடுகின்றன. (1) இந்திய வரலாறு என்பது ஆட்சியாளர் வாழ்க்கை அவர்தம் குடும்பச் சூழல் என்றே கருதப்படல். அரசன் பின்பற்றுகின்ற மதமே, நாட்டின் நிர்ணயச் சக்தியாகவும் எடுத்துக் கொள்ளப்படல் (2) தொடக்கத்திலிருந்த சமத்துவ சமூகம் என்ற இஸ்லாமின் பார்வையை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் இஸ்லாம் கொண்டிருந்ததாக இந்திய முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் கருதியது. பிற்காலத்தில் சமத்துவம் என்ற பார்வை மறைந்து முழுச்சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டது. இதை இவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவேயில்லை.

ஆகவே, நமக்குச் சொல்லப்பட்ட இடைக்கால இந்திய வரலாறு என்பது ஒரு பகுதி என்பதோடு, எடுத்துக் கொண்ட ஆய்வு நோக்கு, வரலாற்றுச் சாரமற்றதாகும். வரலாற்றில் கற்க வேண்டிய படிப்பினை என்பது, ஒவ்வொரு காலகட்டத்திலும் சமுதாயத்தில் தோன்றிய வளர்ச்சிகள்; சமூகத்தின் உற்பத்தி அமைப்பில் பெற்ற மாற்றங்கள், அதன் விளைவாக உருவான சமூக அமைப்புகள். இவ்வாறு கற்பதே

சமூக முழுமைக்குமான வரலாறாக இருக்கும். சமகாலத்திய வரலாற்றாசிரியர்கள் அனைவரும் மன்னனது அரசவையில் அங்கம் வகித்தவர்கள் அல்லது அரசு செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தமையால் குழுச்சண்டை காரணமாக பல வரலாற்று உண்மைகளினின்று அந்நியப்பட்டு இருந்தனர். இவர்களது எழுத்துக்கள் முழுதும் இவ்வரசவை நிகழ்ச்சிகளின் போக்கைச் சார்ந்தே அமைந்து இருந்தன. இவ்வாறு, ஆளும் வர்க்கத்தாரிடையே தோன்றிய சண்டைகளும், சச்சரவுகளும் சமாதானங்களுமே இந்திய வரலாறு என்பது, சமூக முரண்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு ஆதாரமாக இல்லை. அத்தோடு வரலாற்று ஆசிரியர்கள் அன்று எழுதியவை எல்லாம் தாங்கள் எதிர்நோக்கியது (விரும்பியது) என்ன என்பதேயொழிய, என்ன நடந்தது என்பதை அல்ல. உதாரணமாக 1) அலாவுதீன் கில்ஜி, அரசுக்காகவோ அல்லது தனக்காகவோ மதத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 2) அதுபோல், ரஜஹான், ஔரங்கசீப்பின் மத மாற்ற நடவடிக்கைகள் குறிப்பிட்டதொரு அரசியல் சார்ந்த தனி பெயரையோ, அவர் தம் குடும்பத்தையோ அல்லாது, சமூக அளவில் செய்யவேயில்லை. இவ்வகையில் தேசிய வரலாற்று ஆசிரியர்களும், வகுப்புவாதிகளைப் போன்றே குறுகிய நோக்கில் ஒரு சார்பாக வரலாற்றை எழுதி வந்தனர். 3) அக்பர் ஆட்சியும் கூட "மதச் சார்பற்ற ஆட்சி", மதச் சார்பற்ற நாடு" எனப் புகழ்ந்தனர். உண்மை யாதெனில் "மதச் சார்பற்ற நாடு" என்பது ஒரு புதிய கருத்தாக்கமே. அத்தோடு இக்கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டால் மற்ற ஆறரை நூற்றாண்டு ஆட்சியும் மதச் சார்பானதாகிவிடும்.

7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய "இஸ்லாம்", அக்காலத்தில் உலகமனைத்தையும் ஒரு முற்போக்குச் சிந்தனைக்கு ஆட்படுத்தியது. ஒரே கடவுள் என்ற கோட்பாட்டின் மூலம் முகம்மது நபி, சமத்துவ சமுதாயம் எனும் கருத்தைக் கொணர்ந்தார். அனைவரும் சமம்,

ஆண்டவனுக்கு முன்; மனிதனுக்கு மனிதன் சகோதரனாகப் பாவித்தல் போன்றவை அதன் அடித்தளங்களாக அமைந்தன. காலப்போக்கில், பாரசீக வெற்றிக்குப்பின், முஸ்லீம் மக்களிடையே ஆதிக்க மனோபாவம் தலையெடுத்தது. இதன் தொடர்ச்சியே இந்தியாவை வெல்லுதல் ஆனால் வரலாற்று உண்மைகளுக்குப் புறம்பாக–துருக்கிப் பேரரசை நிறுவவே, பலரும் போர்களை மேற்கொண்டனர்; வெற்றி பெற்றதற்கு அறிகுறியாகவே கோயில்களை இடித்து, மசூதிகளை எழுப்பினர். இந்து அரசர்களை வென்ற நிலையில் அவர்கள் சிற்றரசர்கள், ராணாக்கள், ஜமீன்தார்கள், சௌத்ரிகள் ஆகியவர்களுடன் சமாதானமாகவே ஆட்சி புரிந்தனர். இவர்கள் கப்பம் செலுத்தினார்களேயொழிய, எந்த உடமையையும் உரிமையையும் இழக்கவில்லை. அத்தோடு உள் ஆட்சி முழுமையும் இந்துக்களின் வசமே இருந்து வந்தது. இதே இந்துக்களேதான், துருக்கியர் பேரரசு நிறுவவும், மேற்கொள்ளவும் காரணமாக இருந்தனர். சுருங்கக்கூறின், இவர்கள் துருக்கிய ஆட்சியாளரில் ஒரு பகுதியாகவே விளங்கினர்.

உண்மையாகக் கூறுமிடத்து, பெரும் அளவிற்கு சமுதாயத்தில், முஸ்லீம் அரசர்கள், மத மாற்றத்தில் ஈடுபட்டதாகவோ அதற்கான கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதாகவோ சான்றுகள் இல்லை. அரசியல் முக்கியத்துவம் கருதியே சில குடும்பங்கள் இதற்கு ஆட்படுத்தப்பட்டனர். இதிலும்கூட விசுவாசம் காட்டிய ராஜாக்கள், இராசபுத்திரர்கள், ராணாக்கள் ஆகியோர் மத மாற்றத்திற்காகக் கட்டாயப்படுத்தப்பட வில்லை.

நெடுநாளாக நிலவும் மற்றொரு குற்றச்சாட்டு. இந்துக்கள் மீது முஸ்லீம் ஆட்சியாளர் விதித்த ஜிஸியா வரி. முஸ்லீம்களுக்கும், மாறியவர்களுக்கும் கூட 'ஜகாத்' எனும் தனிவரி விதிக்கப்பட்டது. ஜிஸியா வரி பற்றியும் கூட மிகுந்த குழப்பம் உள்ளது. தக்காணத்தில் இந்து அரசரே, யூத இனத்தவரிடம் ஜிஸியா வசூலித்தனர். வெளிநாட்டு

ஆதாரம் மூலம், முஸ்லீம் அரசர்கள், முஸ்லீம் மக்களிடம் வசூலித்த வரியே ஜிஸியா, பிரோஷ் துக்ளக் ஆட்சி நீங்கலாக, வேறெந்த ஆட்சியிலும் இவ்வரி, பெண்கள், குழந்தைகள், இயலாதவர், பிராமணர்கள், போர் வீரர்கள் ஆகியோரிடம் வசூலிக்கப்படவில்லை.

இதுபோன்றே, கோயில்கள் தரைமட்டமாக்கப்படல் இந்துக்களை முஸ்லீம்களாக்கு வதற்காகவே என்பதாக வைதீக இந்துக்கள் விவாதித்து வந்தனர். இதே கருத்தைப் பிற்போக்கு முஸ்லீம் மதவாதிகளும் ஆதரித்து வந்தனர். உண்மையில், கோயில்களைத் தகர்ப்பதை, அந்நிய ஆக்கிரமிப்பென்றே தாழ்த்தியது. மேற்கு நாடுகளில் கற்ற இந்திய மாணவர், இந்து முஸ்லீம் பாகுபாட்டை, கத்தோலிக்க - பிராட்டடஸ்டண்டு போராட்டமாகப் பார்த்தனர். இப்பார்வை வேரூன்ற ஆங்கிலேயர் ஆதரவளித்தார்களே தவிர, வகுப்பு வாத நோக்கில் இந்திய வரலாறு எழுதப்படுவதையும், முன்னைய ஆட்சியாளர்கள் உன்னத மனிதர்களாக்கப்படுவதை மறுக்கவில்லை. ஆனால் தங்களது பேராதிக்கக் கொள்கையைக்காக்க அடக்குமுறையை அவ்வப்போது தவறாது பயன்படுத்தி வந்தனர்.

இத்தகைய வகுப்புவாதப் பார்வை மறைய அல்லது அதன் வேரறுக்க வரலாற்றை ஒரு நீண்ட தெளிவான நோக்கில் ஆயவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, பொருளியல் வரலாறு, மத எல்லைகளை உடைத்தெறிவதோடு, வர்க்க நலன்கள், வர்க்ககூட்டிணைவு, வர்க்க முரண்பாடுகள் ஆகியவற்றையே வெளிப்படுத்தும். இதேபோன்று, சமூகப் பொருளியல் வரலாறு, அரசர்கள், பிரபுக்கள், அதிகாரிகள், ஜமீன்தார்கள் முன், அனைத்து இந்து முஸ்லீம் மக்களுமே ஒரு சேர (எல்லா முஸ்லீம்களும் ஆளும் வர்க்கத்தவர் அல்ல) நசுக்கப்பட்டு வந்ததையும், சமூகரீதியாக இந்துக்களைப் போலவே, முஸ்லீம்களும், சாதிப் பாகுபாட்டால் (சரீப் முஸ்லீம் உயர்ந்த சாதியினர், அஜ்லப் தாழ்ந்த முஸ்லீம்கள்) இரண்டு பட்டதோடு ஒடுக்கப்பட்டு

வந்தனர். தொடர்ந்து ஆட்சிமுறை வரலாறு, வேலைப் பங்கீட்டுக் கொள்கை, நிதிக்கொள்கை, நிர்வாக அடிப்படைகள் போன்றவற்றின் வாயிலாக, இடைக்கால இந்திய அரசர்களின் இந்துக்களோ, முஸ்லீம்களோ குறிக்கோளற்ற ஆட்சியை, மராத்திய, முகலாய வெள்ளையரின் நிதி நிர்வாக ஒழுங்கின்மையையும் இவற்றின் மீது வகுப்புவாதத்தின் தாக்குதல்கள் செல்லுபடியாகாத நிலைமையினையும் புலப்படுத்தும். இன்னும் சற்று ஆழமாக, அரசியல் வரலாற்றை ஆய்வோமாயின் இந்திய அரசுகளின் அரசியல், உலக அரசியல் வரலாற்றில் பொருளியல், அரசியல் நகல்களின் பின்னணியில் (மதப் பின்னணியில் அல்ல) அமைந்துள்ள விதத்தைக் கவனிக்க முடியும். அரசர்களாகட்டும், அரசுக்கெதிரான கலகக்காரர்களாகட்டும், பேராசை மற்றும் பொருள்வகை நலன்களுக்காகத் தான் மறைமுகமாக மதத்தைக் கருவியாக்கிக் கொண்டது புலப்படும். சமூக கலாச்சார வரலாறு, அடிமட்டத்தில் வாழ்ந்த இந்து முஸ்லீம்களிடையே நிலவிய கலாச்சார பிணைப்பு அதன் ஒன்றிய வளர்ச்சி, தொடர்ந்து கிராமிய சூழலில் இந்து முஸ்லீம் இணைந்த சமூக வாழ்வினை வெளிக்கொணரும், அத்துடன் மதத்திற்குப் புறம்பாக, சமூகத்தில் நிலவிய பாகுபாட்டினை, பிரிவினைகளைத் தனித்துக் காட்டும். அனைத்திற்கும் மேலாக அனைத்து மக்களின் வாழ்நிலை பற்றி, சமூக, பொருளியல் மற்றும் அரசியல் வளர்ச்சியில் அவர்களது பங்கு பற்றி கற்றுக் கொள்வதானது, வகுப்புவாத நோக்கிலமைந்த வரலாற்றின் பொருத்தமின்மையைத் தெளிவுபடுத்தும். மேலும் வரலாற்றாய்வாளர்கள் ஏகாதிபத்தியத்தையும், தேசிய இயக்கத்தையும் சுயமாகக் கவனித்திருப்பின் நிச்சயம் இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பங்கு பற்றி ஆராய்ந்திருக்க முடியும்.

உண்மையில் 1920, 30களில் வகுப்புவாத நோக்கில் எழுதிவந்த வரலாற்றாசிரியர்கள் யாவரும் சபிக்கப்பட

வேண்டியவர்கள் அல்ல. இவர்களில் பெரும்பாலானவர் இது சரியான அடித்தளம் இல்லை என்பதே தெரியாதவர்கள். காரணம் இவர்கள் கொண்ட பார்வையின் மீதே, ஆங்கிருந்த வரலாற்றாசிரியர்களும் நின்று "இந்து" இந்தியா ஒன்றே முஸ்லீம்கள் அந்நியர்களே என இன (வகுப்பு) வாதத்தைக் கோடிட்டுக் காட்டி வந்தனர்.

வரலாற்று நோக்கில், சரியான விமர்சனத்துடன் பண்டைய இடைக்கால நவீனகால கலாச்சார, மதம் பற்றிய பார்வை கொள்ளாத காரணத்தால் இது ஒரு மதிப்பீட்டை ஆரோக்கியமான இயக்கத்தை வளர்க்கவில்லை. அதுபோலத்தான், 19ஆம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்களும் 20 ஆம் நூற்றாண்டின் அரசியல் இயக்கங்களும் விமர்சனத்தின் எல்லைக்கோட்டை நெருங்கவில்லை. இராசாராம் மோகன்ராய், சுவாமி தயானந்த சரசுவதி, விவேகானந்தர், அரவிந்தர், திலகர், லாலா லசபதி ராய், காந்தி போன்றோர் பற்றி மாற்றுக் கருத்துக்கள் ஏதுமின்றி பாடப்புத்தகங்கள், செய்தித்தாள்கள் வானொலி, நிகழ்ச்சிகளில் தொன்றுதொட்டு புகழப்பட்டு வருகின்றனர். இதையே பின்பு வகுப்பு வாதிகள் குறுகியநோக்கில் பயன்படுத்தத் தொடங்கினர். 'இவ்வரலாற்று நாயகர்கள்", "மேதைகள்" எவரும் தங்களது கோட்பாடுகளிலோ செயல்பாடுகளிலோ தெளிந்த பார்வை கொண்டிருக்கவில்லை என்பதை நாம் யாருக்கும் கற்றுக்கொடுக்க முயலச் செய்யவில்லை. இதுபோன்றே அரசியல் அரங்கில் உன்னதமானவர்களாகத் திகழ்ந்த கோகலே, ரானடே, தாதாபாய் நௌரோஜி, பி.சி.பால் போன்றோர் ஏகாதிபத்திய எதிர்ப்பை வெகுவாக காட்டிக்கொள்ளாதபோதும் (வகுப்புவாதநோக்கில்) புகழப் படுகின்றனர். இவ்விரு நூற்றாண்டுகளில் வாழ்ந்த தலைவர்கள் அனைவரும் அரசியலுக்கும் மத்திற்கும் உள்ள வேறுபாடு, சாதி அமைப்பின் நிலை, வரலாற்றுப் பிரச்சினைகள் அல்லது புதிய இந்திய சமுதாயம் எவ்வாறு அமைவது, சிறுபான்மை மதத்தவர் ஆகிய பிரச்சினைகளிலும் தவறான பார்வையே கொண்டிருந்தனர்.

இவ்வாறான நிலைபாடுகள் பற்றி வானொலி செய்தித்தாள் மேலும் அரசியல் தலைமைகள் மௌனமாக இருந்ததன் மூலம் இவற்றை மறைமுகமாக தேசியக் குலைப்புக் கருவிகளாக வலுப்படுத்தினர்.

வகுப்புவாதத்தின் நடைமுறை அல்லது உண்மையான வடிவம் என்பது, தேசிய நாயகர்களை உருவாக்கியதும் அவர்கள் பற்றி பிரச்சாரத்தை மேற்கொண்டதுமேயாகும். 20-ஆம் நூற்றாண்டின் இடையில் முளைத்த தேசியம் மற்றும் தேசிய உணர்வைத் தூண்டும் முயற்சிகள் இவர்கள் மூலமே துவக்கப்பட்டன. சாதாரண மக்களிடையே இவ்வுணர்வை நிலைநாட்ட இவர்களே தேவைப்பட்டனர். ஒன்று, இவர்கள் நாடு தழுவிய இயக்கத்திற்கு அடையாளமாக இருந்தனர். இரண்டு, தேசியப் பிரச்சாரத்திற்காக எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர், அலுவல்துறை சார்ந்தோர் தங்களது விருப்பங்களின் தீர்வாக இந்நாயகர்களை வானளாவப் புகழ்ந்தனர். மூன்று, இந்தியர்கள், ஆங்கிலேயரின் கொள்கைக்குப் புறம்பாக, சுயமாகத் தங்களால் நாட்டை ஆளமுடியும் எனக் காட்ட வேண்டும் என்ற ஆவலில், வரலாற்று மனிதர்களை அவர் தம் சாகசங்களை உயர்த்திப் பிடித்தனர். இறுதியாக, உண்மையான தேசிய போராட்ட நாயகர்களை உருவாக்க இம்மாதிரியான அரசியல், மதம் சார்ந்த (அரசர்), தலைவர்களை அடையாளம் காட்ட வேண்டிவந்தது. இவ்வாறாக நின்றவர்களில் சிலரே ராணாபிரதாப், சிவாஜி, குரு கோவிந்தசிங் போன்றோர். அனைத்துப் பிரச்சாரக் கருவிகளாலும், தேசிய நாயகர்கள் உருவாக்கப்பட்டனர். ஆனால் இவ்வாறு "நாயகர்கள்" கண்டுபிடிப்புக்கு எவ்விதத் தெளிவான காரணமோ, விமர்சனமோ இருக்கவில்லை. வெறும் உணர்ச்சியால் தூண்டப்பட்ட அரசியல்தான் இதற்குக்காரணம். மேலும் இவர்களில் பலரும் ஏதோவொரு காரணத்திற்காகக் கூட குறைந்தபட்சம் ஆங்கிலேயரை உறுதியாக எதிர்த்து நின்றவரில்லை. வெறுமனே பிரிதிவிராஜ் போன்ற இந்து

அரசர்களே புகழப்பட்டமையால் முஸ்லீம்களும், அவர்களது அரசர்களை முன்நிறுத்தி மதப்போருக்குத் தயாராயினர்.

இதற்கு முக்கியமான காரணம், வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் எந்த மனிதரையும் இந்திய மக்களில் வீரம்செறிந்த தலைவர்களாக ஆங்கிலேயர் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் முன்னெச்சரிக்கையாக 1857 போரில் பங்காற்றிய வீரத் தலைவர்களைப் புகழ்ந்துபேச மதத் தடை விதித்தனர். மேலும் இவர்களுக்குக் கீழ் ஏதோ நிறுவனத்தில் பணியாற்றியதால் கல்லூரி, பள்ளியாசிரியர்கள், எழுத்தாளர், பத்திரிகையாளர் ஆங்கிலேயருக்கு எதிராக எழுதவோ பேசவோ விரும்பவில்லை. மேலும் குறுகிய தேசியவாதத்தை உண்டாக்கவே அவர் தம் பிரச்சாரம் பயன்பட்டது. இவ்வாறுதான் பாடப்புத்தகங்கள் மற்றும் வரலாற்று இலக்கியப் புத்தகங்கள் வகுப்புவாத நோக்கில், சாதீயநோக்கில் இராச்சிய வீரர்களைச் சார்ந்து எழுத ஆங்கிலேயர் அனுமதித்தனர். தேசீயத் தலைவர்களில் ...... முக்கியமானவரான திலகர், சிவாஜியை வானளாவ வீரம் செறிந்த நாயகராகப் புகழ்ந்தமைக்குக் காரணம், அவரது குறுகிய வகுப்புவாதப் பார்வையே. அவர் ஆங்கிலேயரின் வருகையை ஒரு அரசியல் வரலாற்று முன்னேற்றமாகவே வெகுகாலம் கருதி வந்தார். இவ்வாறான "இடைக்கால நாயகர்களின்" வரலாறு மற்றும் அவர்தம் புகழாரங்கள் இருதேசக் கொள்கைக்கே – இந்தியப் பிரிவினைக்கே வலுவூட்டியது. தேசீயவாதிகள் யார் யார் பேரில் போராடினார்களோ, அவர்கள் முற்றிலும் முஸ்லீம் விரோதிகள். (இடைக்காலத்தில்) இவர்கள் எதிர்த்துப் போராட வேண்டிய ஆங்கிலேயர் இரண்டாம் பட்சம் ஆயினர். ஆக, சுதந்திரப் போராட்டம் என்பது வகுப்புவாத அடிப்படையில் அமைந்திருந்ததே தவிர வேறொன்றுமில்லை.

இவ்வாறான தேசிய நாயகர்களை உருவாக்க வேண்டாம் என்பதல்ல நமது பிரச்னை. ஏன் அசோகரோ, அக்பரோ, சைதன்யரோ, குருநானக்கோ வரலாற்றின்

நாயகர்களாக இவர்களது தேசியப் போராட்ட வரலாற்றில் இடம்பெறவில்லை? ஏனெனில் இவர்கள் யாரும் முஸ்லீம்கள் காலத்தில் அவர்களை எதிர்த்தவர் அல்ல. இந்துக்களின் பொற்காலம் என்று புகழப்படுகிற ஆட்சியினைச் சார்ந்த அரசர்கள் கூட முன்நிறுத்தப்படவில்லை.

நமது எண்ணமெல்லாம், இவ்வாறான தலைவர்களை, வீரர்களை, அரசர்களைப் புகழவேண்டாம் என்பதல்ல. மாறாக உண்மையில் வரலாற்றில் உறுதியான குறிக்கோளுடன் நின்று சரியான பாதையில் தீர்க்கமான முடிவை அடைந்தவர்களை - அடைய முயற்சி செய்தவர்களைப் பற்றி எழுத, பேச தற்காலத்தில் ஒரு நல்ல வாய்ப்பு உள்ளது என்பதை வெளிப்படுத்துவதுதான்.

-தொகுப்பு: இரத்தினம்.

⁂

4. விஞ்ஞானமும் – அறமும்

விஞ்ஞானத்தின் தன்மை:

– எஸ்.என். நாகராசன்

விஞ்ஞானம் என்பது இறுதியில் ஓர் ஆய்வுமுறை, அதன் குறிக்கோள் உலகினை அறிவதே. அதன் உண்மையைக் காண்பதே. அதன் வழிமுறையையே இங்கு ஆய்வுமுறை என்று அழைக்கின்றோம். இதன் வாயிலாகப் பொருள்களின் தன்மையையும் அவை எங்ஙனம் இயங்குகின்றன என்பதையும் நாம் அறிகின்றோம். இக்காரணமாகவே பொதுவாக விஞ்ஞானம் அடிப்படையில் சோதனைமுறை. மற்றும் அக்காரணமாகவே அது மிகவும் செயலுக்கு உறுதுணையாகவும் அமைகின்றது. பயனுள்ள தன்மையே அதன்மீது அபாரமான நம்பிக்கை ஏற்படவும் காரணமாகின்றது, இது தவிர விஞ்ஞானமும் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட தன்மையையே வரவேற்கின்றது, அத்தகைய தன்மையே உண்மையை உணர உதவும் முதல் பெரும் பண்பு. விஞ்ஞானம் இறுதியில் உலகின் தன்மையை அறிய மனிதனால் உருவாக்கப்பட்ட ஓர் ஆய்வுமுறை.

ஆயினும் விஞ்ஞானத்தின் மற்றுமொரு தன்மையையும் நாம் அறிவது மிக அவசியம். விஞ்ஞானம் இது நல்லதா, கெட்டதா என்ற கேள்வியைக் கேட்பதே கிடையாது. பூமி உருண்டையாக இருப்பது நல்லதா, தட்டையாக இருந்தால் நல்லதா என்று கேட்டால் அது அர்த்தமற்றது. விஞ்ஞானியின் அளவுகோல்கள் அறவியலின் அளவு கோல்கள் அல்ல. நல்லது, கெட்டது, உயர்ந்தது, தாழ்ந்தது, பாவம், புண்ணியம் என்ற பிரச்சனைகளெல்லாம் அவனுடைய ஆராய்ச்சியில் பயன்படுத்தப் படும் அளவைகளேயல்ல அதேபோல எந்த ஒரு ஆராய்ச்சியும் நல்லதா, கெட்டதா என்பது விஞ்ஞானத்திற்குக் கிடையாது. எதனை வேண்டுமானாலும் விருப்பு வெறுப்பின்றி ஆய்வது விஞ்ஞானத்தின் தன்மை.

இத்தகையதொரு பண்பு ஒருவகையில் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு மிக அவசியம். அதேபோல இப்பண்பின் காரணமாகவே இன்னுமொரு பண்பும் பிறக்கக் காரணம் ஏற்படுகின்றது. ஆனால் சமயவாதிகளோ, முதலில் துவக்கும் கேள்வி நல்லது கெட்டதைப் பற்றியதே. இப்படிச் செய்வது பாவம், அப்படிச் செய்வது புண்ணியம் என்பதே இவர்களின் அளவை. இத்தகைய அளவையை விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட அளவையாகவே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இத்தகைய அளவை மறுப்புத்தன்மையே தற்கால விஞ்ஞானத்தின் சிறப்பியல்பு. இதன் காரணமாகவே ரஸ்ஸல், விஞ்ஞானம் அடிப்படையில் அதாவது அது அறமோ, அதன் மறுப்போ கொண்டதல்ல என்றார். விஞ்ஞானத்தின் ஒரே குறிக்கோள் உலகின் தன்மையை அறிவது ஒன்று தான் என்பது ரஸ்ஸலின் கூற்றிலிருந்து வெளியாகும் ஓர் உண்மை.

இத்தகையதொரு பண்பினைத் தற்கால விஞ்ஞானம் ஏன் பெற்றது என்பதன் வரலாற்றையும் நாம் காண்பது அவசியம். நவீனகால விஞ்ஞானம் மேற்கத்திய கலாச்சாரத்தில்தான் தோன்றியது. அது தோன்றிய காலத்தில் தவிர்க்கமுடியாமல் அங்கு ஆதிக்கம் செலுத்தி வந்த சமயக் கருத்துக்களை, குறிப்பாக கத்தோலிக்க சமயக் கருத்துக்களை நிராகரிக்க வேண்டி வந்தது. இதனைக் கத்தோலிக்க சமயம் பலமாகத் தாக்கியது. பைபிளில் கூறியவைகளை எந்த வகையில் இம்மியளவு மறுத்தாலும் அவர்களை சித்திரவதை செய்தது. கோபர்நிக்ஸ், கலிலியோ, ப்ரூனோ, ரோஜர்பேகன் போன்றவர்களெல்லாமே தாங்கள் அறிந்த பேருண்மைகளை வெளிப்படையாகவும் அனைவரும் உணரும் வகையில் தெளிவாகவும் கூற அஞ்சியதை மேற்கத்திய வரலாற்றில் காணலாம்.

இதன் விளைவாகவே சமயத்திற்கும், விஞ்ஞானத்திற்குமிடையே பலத்த போராட்டம் துவங்கியது.

ஆயினும் அன்றிருந்த நிலையில் விஞ்ஞானிகள் பலம் வாய்ந்த சக்தியாக இருக்கவில்லை. அதேபோல விஞ்ஞானத்தை வேண்டி விரும்பிய வணிகர்களும் பலம் பொருந்திய சக்தியாக இருக்கவில்லை. இதன் காரணமாகவே விஞ்ஞானம் (விஞ்ஞானிகள்) சமயத்திடம் சமரசம் செய்து கொள்ள வேண்டி வந்தது. நாங்கள் உலகினைக் குறித்த சாமானியமான செயலுக்குத் தேவையான செய்திகளைக் குறித்துத்தான் ஆராய்கின்றோம். ஆனால் சமயத்தில் கூறப்படும் பேருண்மைகளைக் குறித்து எங்கள் விஞ்ஞானம் ஒன்றுமே கூற இயலாது என்று கூறி தங்கள் ஆராய்ச்சிக்கு சற்று சலுகை பெற்றனர். ஆயினும் இந்த உடன்பாடு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதே இன்றுவரை நாம் காணும் வரலாற்று உண்மை.

இத்தகையதொரு சமரசத்தில் பெருமுயற்சி செய்த அறிஞர் இமானுவல் காண்ட். இதற்காக இவர் செய்த உத்தி, உலகினை இரண்டாகப் பிரித்ததுதான். ஒன்று நாம் காணும் மற்றும் புலன்களால் உணரும் சாமானிய உலகம். மற்றது புலன்களாய் அறிய இயலாத நுண் உலகமும் அதன் பண்பும். முதல் உலகமே விஞ்ஞானத்துக்கு உட்பட்டது. இரண்டாவது உலகம் சமயத்தின் உலகம். முதல் உலகத்தை அறியப் பயன்படுத்தும் முறை, இரண்டாவது உலகை உணரப் பயனற்றது என்றார். ஆகையால் சமயம் கூறும் பேருண்மைகளைச் சரியா தவறா என்று கூற விஞ்ஞானம் முற்படக்கூடாது என்றார் இந்தச் சாதுரியமான உத்தியினால் அவர் விஞ்ஞானத்தைக் காப்பாற்ற முயன்றார். அதேபோல அனாவசியமாக சமயவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்காமலும் இருக்கலாம் என்று எண்ணியிருக்கலாம்.

ஆனால் இத்தகைய போக்கின் விளைவாக விஞ்ஞானிகள் நல்லது, கெட்டது என்ற கேள்விகள் எழுப்புவதைத் தவிர்த்தனர். என்ன நேர்ந்தால் நமக்கென்ன என்ற போக்கு வளரவும் காரணமாயிற்று. ஆயினும் விஞ்ஞானத்தின் இப்போக்கால் உலகிற்குப் பெரும் தீங்கு அதிகமாக 1947 வரை வளரவில்லை என்பதும் உண்மை.

விஞ்ஞானமும் விளைவுகளும்

முதல் உலகப்போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். மனிதனால் உருவாக்கப்பட்ட செல்வம் பெருமளவில் அழிக்கப்பட்டது. பல குடும்பங்கள் சீரழிந்தன. ஆயினும் அந்த நிலையில் கூட உலகமே அழிந்து போய் விடுமளவுக்கு விஞ்ஞானமோ (மனிதனுடைய அறிவு) இயந்திர வளர்ச்சியோ (டெக்னாலஜி) ஏற்பட்டுவிட்டதாக எவரும் கருதவில்லை. ஆம். முதல் உலகப்போரில் மனிதனால் படைக்கப்பட்ட விஞ்ஞானமும் இயந்திரங்களும் மனிதனுக்கே எதிராகப் பயன்படுத்தப்பட்டது உண்மை, அதனைப் பல விஞ்ஞானிகள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதும் உண்மை. இருப்பினும் விஞ்ஞானிகள் இந்தப் போரை, தங்கள் செயலுக்கும், கூட்டு விவாதங்களுக்கும் ஓர் தடையாகத்தான் கருதினர். தங்களுக்குள் விரோத மனப்பான்மையை ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறப் பெரும் ஆதாரமில்லை. ஜெர்மன் விஞ்ஞானிகளும், இங்கிலாந்து விஞ்ஞானிகளும் ஒருவரை மற்றவர் பகைஉணர்ச்சியுடன் பார்த்துக்கொள்ளவுமில்லை. இப்போர் தங்களுடைய விளைவு என்றும் கருதிஇருக்கமாட்டார்கள். அரசியல்வாதிகளே இதற்குக் காரணம் என்றே கருதினார்கள். தவிர அரசியல்வாதிகளை மேன் மக்களாகவும் இவர்கள் கருதியிருக்கமுடியாது. முன்பு இங்ஙனம் சமயவாதிகளுடன் சமரசம் செய்துகொண்டு தங்கள் விஞ்ஞானத்தை வளர்ப்பதிலேயே நோக்கம் கொண்டவர்களாக இருந்தனரோ அதேபோல இன்று இந்த அரசியல்வாதிகளிடம் சச்சரவு செய்யாமல் தங்கள் விஞ்ஞான ஆய்விலேயே குறிக்கோளாக இருந்தனர் என்பதையே நாம் காண்கின்றோம். ஆம், இங்குமங்கும் ஓரிரு விவேகிகள் இத்தகைய போரை வெறுத்துத் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர். ஆயினும் பெருவாரியான விஞ்ஞானிகள் இந்த மானுட அழிவுச் செயலிலிருந்து ஒதுங்கி நின்றவர்களாகவே காட்சி அளித்தனர். ஆயினும் நிலைமை இவ்வாறே இருக்க முடியவில்லை என்பது இரண்டாவது உலகப் போரில் தெளிவாயிற்று.

இரண்டாம் உலகப்போர் மானுட அறிவு வளர்ச்சியில் மிகப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. இதுவரை எண்ணிக்கூடப் பார்க்கஇயலாத சாதனைகளை இப்போரின் இறுதிக்காலத்தில் மனித உலகம் காணமுடிந்தது. 1945 லிருந்து 1980 வரையில் ஏற்பட்ட மாபெரும் புரட்சியை Technological revolution 'தொழில்நுணுக்கமுறைப் புரட்சி' என அழைக்கலாம். இந்தப்புரட்சியின் பல்வேறு வாய்ப்புகளை இனிவரப் போகும் உலகம் அனுபவித்தே தீரும். இந்தக்காலத்துள் (40 வருடம்) ஏற்பட்டுள்ள 'வெடிப்பு' சாமானியமானதல்ல. ஆனால் இது விஞ்ஞான அறிவில் ஏற்பட்ட புரட்சி என்று கூற இயலாது. அதேபோல மானுட உலகின் விவேகம் புதியதொரு கட்டத்தை அடைந்து விட்டது என்றும் கூறமுடியாது. ஆனால் ஒன்றை மட்டும் திட்டவட்டமாகக் கூற முடியும். மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ள அவனிடம் சக்தி ஏற்பட்டு விட்டது என்று கூறமுடியும். 20ஆம் நூற்றாண்டு வரை அவன் விரும்பியிருந்தாலும் அவனால் மனித இனத்தை முழுக்கமுழுக்க அழிக்கமுடிந்திராது. அத்தகைய சக்தியை அவன் பெற்றிருக்க வில்லை. ஆம் இம்மனிதன் (குறிப்பாக மேற்கத்திய மனிதன்) அந்த சக்தியைப் பெற்றான். இதுவும் அவனுடைய அறிவின் காரணமாகத்தான். துப்பாக்கி கொண்டு டாஸ்மானிய மக்களை அழித்தான். டோடோ கோழியை அழித்தான். ஆயினும் உலக மக்களை அழிக்க அவனால் முடிந்திராது என்பதுதான் உண்மை. ஆனால் இன்றுள்ள நிலை அப்படி இல்லை. இன்று அவனுடைய சக்தியால் உலகிலுள்ள மக்கள் அனைவரையும் அழிக்கமுடியும். இந்தசக்தி இறுதியில் விஞ்ஞானத்தின் விளைவே.

இதன் விளைவுகள் – இதன் விளைவாக ஏற்பட்ட கருத்துகள்:

1. விஞ்ஞானமும் அதனால் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் ஆபத்தானவை. இவை தடை செய்யப்படவேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் மனிதன் எவ்வாறு எளிமையான வாழ்க்கை வாழ்ந்திருந்தானோ அவ்வாறு வாழ்வதற்கான வழிமுறைகளைக் காண்பதே இனி விடிவு என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

2. மற்றொரு சாரார், விஞ்ஞானத்தாலும் தொழிற்புரட்சியாலும் ஏற்படக்கூடிய நன்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்க வேண்டுமென்றால் அதனால் ஏற்படக்கூடிய சில பல தீமைகளையும் தவிர்க்க முடியாது; அதை அனுபவித்தே ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் இத்தீமைகளுக்கு இரையாக ஆசிய, ஆப்பிரிக்க மக்களை ஆக்கினால் ஐரோப்பிய மக்கள் நிரந்தரமாக நன்றாக வாழ முடியும் என மறைமுகமாகக் கூறுகிறார்கள். இவர்களின் கருத்தோட்டத்தில் உலகில் ஏற்பட்டு வரும் மிகப் பெரும் சிக்கல்களுக்கு அடிப்படையான காரணம் ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் வேகமான இனப்பெருக்கமே என்பது, இவர்களுடைய இன விருத்தியைக் கட்டுப்படுத்த வகை இல்லாமற்போனால் இவர்களை அழிப்பதே உகந்தவழி என்றும் சொல்லாமற் சொல்கின்றனர். இப்படிப்பட்ட பாசிசக் கருத்துகளை ஏற்கும் விஞ்ஞானிகளும் உண்டு.

3. மூன்றாவது கருத்து, விஞ்ஞானமும், தொழிற்புரட்சியும் இறுதியில் மனிதனின் சக்தியின் வெளிஉருவமே. இதனை மனிதன் கட்டுப்படுத்தி நிரந்தரமாக சுதந்திர ஜீவியாக இருக்க முடியும். ஆயினும், இதனை அடைய மிகப் பெரும் சமுதாயப் புரட்சி தேவை – குறிப்பாகச் சொன்னால், உலகிலிருந்து முதலாளித்துவத்தை அகற்றி அவ்விடத்தில் ஒரு சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கினால் மனிதனுடைய விஞ்ஞானம் மற்றும் தொழிற்புரட்சி இரண்டினுடைய முழுப்பயனை மானிடச் சமுதாயம் அனைத்தும்

நிரந்தரமாக அனுபவிக்க முடியும். (மார்க்சியக் கருத்து).

4. ஆயினும் இந்தச் சிக்கலில் உள்ளடங்கியுள்ள மிகப் பெரும் பிரச்சினை என்னவென்றால் காலங்கடந்த, பொருளற்ற, அறமும் (முதலாளிய அறம்) அறப்பொருளற்ற விஞ்ஞானமுமே. இதற்கு விடிவு ஏற்படும்பொழுது விஞ்ஞானமும் பொருள் பெற்றுவிடும்: அறமும் உயர்ந்த நிலையை (மனிதனின் பகுத்தறிவுக்கு ஒத்த நிலையை) அடைந்துவிடும். அந்நிலையில் விஞ்ஞானத்திற்கும் அறத்திற்கும் இடையே கிளம்பிய பிளவு மறைந்து விடும்.

5. பொதுவாக மார்க்சிய அணுகுமுறை அறக்கண்ணோட்டத் துடன் அமையவில்லை என்று சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறானது. மார்க்ஸ் அடிப்படையில் ஒரு மிகப் பெரும் விஞ்ஞானி; அவருடைய ஆய்வு விருப்பு வெறுப்பற்ற ஒன்று. இருப்பினும், அவருடைய இலட்சியத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வோமேயானால் அதனுள் அடங்கியிருப்பது மனிதனுடைய சுதந்திரமான – ஆனந்தமான இன்ப வாழ்வுதான். இதனை எங்ஙனம் அறநோக்கற்ற கருத்தோட்டம் என்று கூறமுடியும்? மார்க்சியம் இறுதியில் மிகப் பெரும் மானுட அறத்தையும் விஞ்ஞானத்தையும் இணைத்த கண்ணோட்டம்.

இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் ஏற்பட்ட விளைவுகளை இனிக் காணலாம். அமெரிக்க ஏகாதிபத்தியம் போர் முடியக் கூடிய நிலை வந்திருந்தும் தன் ஆதிபத்தியத்தை எவரும் எதிர்க்கக்கூடாது என்ற அடிப்படை எண்ணத்தோடு (குறிப்பாக அன்றுவரை உலகில் அடிமைகளாக இருந்த ஆசிய, ஆப்பிரிக்க மக்கள்)

ஜப்பானிய மக்கள் மீது இரண்டு அணுகுண்டுகளை வீசியது. இலட்சக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். அதுமட்டுமின்றி மிஞ்சி இருந்த மக்களின் சந்ததிகள் அணுக்கிரணங்களால் ஏற்பட்ட விபரீத விளைவுகளை அனுபவித்துத்தான் வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இவ் அரக்கத்தன்மையை, அணு ஆயுதங்களை உருவாக்கக் காரணமாக இருந்த விஞ்ஞானிகள் தடுக்க முடியவில்லை. இரண்டாம் உலகப்போரின்போது பல விஞ்ஞானிகளின் வேண்டுகோளுக்கும் செவிசாய்க்காமல் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசியது. தங்களால் அணு ஆயுதங்களை உருவாக்க மட்டுமே முடியுமென்றும் அதன் அழிவுச் செயல்களைத் தடுத்து நிறுத்த இயலாத நிலை இருக்கிறது என்றும் உணர்கின்றனர். இந்நிலையில் கிளாஸ்பக்ஸ் அணுகுண்டின் இரகசியத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சோவியத் யூனியனுக்குக் கூறிவிடுகிறார். இதைப் பலரும் தேசத் துரோகச் செயலெனக் கூறினாலும் அவருடைய தந்தையும் உலகில் பலரும் மானுட சமுதாயத்திற்கு அவர் செய்த பெரும் தர்மம் என்றே கூறினர். அங்ஙனம் அவர்கள் கூறியது இம்மியும் தவறல்ல. இதுவரை உலகில் தோன்றிய எம் மகானும் தம்மைக் குறுகிய தேசப்பற்றுக்குள் அடைத்துக்கொள்ளவில்லை. அதேபோல எவனொருவன் உலகமக்களின் நன்மைக்காகவே செயல்படுகின்றானோ அவனை சுயநலவாதக் கும்பல்கள் தேசத்துரோகி என்று அழைப்பதிலும் ஆச்சரியமில்லை. இதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக, இரண்டாவது உலகப் போர் நடந்த காலத்தில் இருபெரும் பௌதிக விஞ்ஞானிகள் அணுச்சக்தியின் இரகசியத்தை அறிந்தார்கள். இருப்பினும் அவர்கள் அணுஆயுதம் செய்யக்கூடிய எந்த ஒரு யுக்தியையும் இட்லர் கும்பலுக்கு இம்மி அளவும் காட்டிக் கொடுக்க முற்படவில்லை. இச்செயல் குறுகிய பார்வையில், தேசத் துரோகச்செயல். ஆயினும் அவர்கள் அவ்வாறு செய்யாததால்தான் உலகமக்கள் இன்று பாசிசத்திற்கு

அடிமையாக இல்லாமல் வாழ்கின்றார்கள். இவர்களின் இச்செயல் மானுடச் சமுதாய அடிப்படையில் மிகப் பெரும் தார்மீகச் செயல். இவ்வாறு நோக்கில், கிளாஸ்பக்ஸ் மற்றும் இவர்களைப்போன்ற விஞ்ஞானிகள் வெறும் சாமானியமான விஞ்ஞானிகள் மட்டுமல்ல. மிகப்பெரும் அறத்தைக் கடைப்பிடித்த மேன்மக்கள். ஒருவகையில் இவர்கள் வாழ்வின் பொருளை அறிந்தவர்கள்.

மனசாட்சி கொண்ட விஞ்ஞானிகள் அனைவரிடையிலும் ஏற்பட்டுள்ள உளத்தவிப்பு உண்மையானதே. (இத்தகைய தவிப்பு கேவலம் காசுக்காகத் தங்களை விலைக்கு விற்கும் விஞ்ஞானிகளிடம் இம்மியும் இல்லை என்பதும் உண்மை). அதாவது மனசாட்சி கொண்ட விஞ்ஞானிகள் அனைவருமே வழிமுறையில் மாறுபட்டிருந்தாலும் குறிக்கோளில் ஒன்றுபட்டுத்தான் நிற்கின்றார்கள். தவிர, இவர்கள் இதன் விடிவுக்கு ஆழ்ந்த முயற்சியில் ஈடுபட்டுத்தான் இருக்கின்றார்கள்.

இன்றைய உலகம் மூன்றாகப் பிரிந்து நிற்கிறது. இக்கருத்தை மாசேதுங் கூறியதன் காரணத்தால் ஒதுக்கத் தேவையில்லை. காரணம் அது உண்மை. இந்த மூன்று உலகிலும் செயல்படும் விஞ்ஞானிகளிடையே இம்மானுடப் பிரச்சினை கிளம்பித்தான் உள்ளது. இந்த மூன்று உலகில் உள்ள விஞ்ஞானிகளில் பெரும்பாலோர் எந்த அளவிற்குத் தங்கள் பொறுப்பை உணர்ந்து உலக மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்படுகிறார்களோ அந்த அளவுக்குத்தான் விஞ்ஞானம் அறத்தன்மையை எய்தியுள்ளதென்று கூறமுடியும். இருப்பினும் இத்தகைய உணர்வு விஞ்ஞானி களிடையே அதிகமாகி வருவதையும் நாம் காண்கிறோம். இனி இவ்விஞ்ஞானிகள் தங்கள் குறிக்கோளில் வெற்றிபெற வேண்டுமென்றால் எந்தெந்தச் சக்திகளோடு இணைந்தும், எந்தெந்தச் சக்திகளை எதிர்த்தும் நடவடிக்கைகள் எடுத்தே ஆகவேண்டும் என்பதைக் காணலாம்.

எவர் ஏற்றாலும், ஏற்க மறுத்தாலும் இன்றைய உலகின் மானுட வாழ்வுக்கு ஊறு செய்யும் போக்குகளைப் பிரதிபலிக்கக் கூடிய சக்திகள், மனிதனின் சுயநலப்போக்கின் பிண்டங்களாகிய பல்வேறு வகையான ஏகாதிபத்தியங்களும் அதனுடைய ஆதரவாளர்களுமே. இத்தகைய சக்திகளை எதிர்த்துப் போராடக்கூடிய உறுதியான மக்களோடு இணைந்து செயல்பட்டாலன்றி விஞ்ஞானிகள் தங்கள் உயர்ந்த இலட்சியத்தை அடைய முடியாது. அத்தகைய சக்திகளில் முதன்மையானது மூன்றாவது உலக மக்களன்றி வேறு யாருமல்ல. இம்மக்களின் இன்றைய போராட்டமே உண்மையில் உலகில் மானுடம் தழைக்க வழிவகுக்கும் போராட்டம்.

நவீனகாலத்து விஞ்ஞான அமைப்பு ஒருவகையில் புதிய காலத்து விஞ்ஞான அமைப்பிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையில் விஞ்ஞானம் என்பது அரசுகளால் ஒரு துறையாக அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படவில்லை. மிகப் பெரும் விஞ்ஞானிகள் கல்லூரிப் பேராசியர்களாக இருந்திருக்கலாம் அல்லது செயல்பட்டு வந்திருக்கலாம். நியூட்டனோ டார்வினோ அரசு ஊழியர்களாக இருக்கவில்லை. ஆனால் நிலை இவ்வாறில்லை. இன்று எத்துணை பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும் அவன் அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு விஞ்ஞானக் கூடத்திலோ அல்லது முதலாளிகளால் நிறுவப்பட்ட விஞ்ஞானக்கூடங்களிலோ அரசோ, முதலாளிகளோ தரும் துறையில்தான் தமது ஆய்வுகளைச் செய்யவேண்டி இருக்கிறது. அதை எதிர்த்து நிற்க அவர்களால் இயலாது. எடுத்துக்காட்டாக, மிகச் சிறந்த விஞ்ஞானியான வெபரன்ஹுமரை ஹைட்ரஜன் குண்டைத் தயாரிக்கத் தனக்கு விருப்பமில்லை என்று கூறிய நிலையில் அமெரிக்க அரசாங்கம் அவரை தேசத்துரோகி என்றும் கம்யூனிஸ்டு என்றும் முத்திரையிட்டு உயிரைப் பறிக்கவே திட்டமிட்டது. இவ்வாறு உலகப்புகழ்பெற்ற

விஞ்ஞானிகளின் நிலை இருக்குமானால் மற்ற விஞ்ஞானிகளின் நிலையைக் கேட்கவேண்டாம். விஞ்ஞானிகளின் இந்த அவலநிலை மாறவேண்டுமெனில் அவர்களிடையே விஞ்ஞானத்தின் உண்மைப் பொருள் என்ன என்ற கேள்வியெழுந்து அதற்குச் சரியான விடையும் தெளிவாகித்தான் தீர வேண்டும்.

ஆயினும், நம் நாட்டில் இருக்கக்கூடிய பெரும்பான்மையான விஞ்ஞானிகளுக்கு இத்தகைய ஒரு பிரச்சினை இருப்பதாகவே தெரியவில்லை. இன்று இங்கு உள்ள அரசு எத்தகைய பணியைச் செய்யத் தூண்டினாலும் பொருளும், பதவியும் கொடுத்தால் போதுமென்று செய்யக் கூடியவர்களே நம் நாட்டில் உள்ள பெரும்பகுதி விஞ்ஞானிகள். இத்தகைய போக்கானது நம் நாட்டில் உள்ள அறிவாளிகளின் வேசித்தன்மைக்கு எடுத்துக்காட்டே.

இத்தகைய நிலையில் விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் அறிஞர்களும் இன்றைய உலகின் முன் எழுந்துள்ள மிகப்பெரும் மானுடப் பிரச்சனையை அறிந்து தெளிந்து முறையாகச் செயல்பட்டார்களேயானால் அவர்களும் தம் வாழ்வின் பொருளைப் பெற்றவர்களாவார்கள்; மக்களும் அவர்களை வாழ்த்துவர்.

நூலரங்கு

- ஞானி

1. தமிழ்ச் சிறுகதை வரலாறு:

- முதற்பகுதி: வேதசகாயகுமார்

தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிய விரல் விட்டு எண்ணக்கூடிய தரமான நூல்களுள் ஒன்று இது. ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள - கல்வித்துறை வட்டாரங்களில் போற்றப்படுகிற - சில மதிப்பீடுகளை உதறி விடுகிறார் குமார். தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் மூவர் பற்றிய இவர் மதிப்பீடு கவனிக்கத்தக்கது. நூலின் நாயகராகப் புதுமைப்பித்தன் விசுவரூபம் எடுக்கிறார். கல்கி என்றால் குமாருக்கு ரொம்பவும் இளக்காரம். மௌனி பற்றிய மதிப்பீட்டில் அவசரப் பட்டிருக்கிறார். செல்லப்பா, க.நா.சு. ராமையா ஆகியவர்களின் படைப்புக்களை விரிவாக ஈடுபாட்டோடு அணுகியிருக்கலாம். கலைப்பார்வை ஒன்றின் மூலமே எல்லாப் படைப்பாளிகளையும் அணுகியிருக்கிறார். இதனால் பாரதி இவரிடம் சிறுத்துப் போகிறார். யதார்த்தவாதம், காந்தியம் பற்றிய இவரது பார்வையில் ஆழமில்லை. இலக்கியங்களின் பின்னணியாகிய சமுதாயம் – சமுதாய வரலாறு பற்றி குமார் மேலும் கற்றறிவது நல்லது.

விலை: ரூ.10 கிரியா

268. இராயப்பேட்டை, நெடுஞ்சாலை, சென்னை – 14.

2. கொட்டுமேளம்

- தி. ஜானகிராமன்

12 கதைகள் கொண்ட இந்தத் தொகுப்பு பல ஆண்டுகளுக்குப் பிறகு (25) மீண்டும் வந்திருக்கிறது. தற்காலத் தமிழ் இலக்கியத்தில் சாதனையாளர்களில் குறிப்பிடத்தக்கவர் தி.ஜானகிராமன். குப்பைகளுக் கெல்லாம் பரிசு கொடுத்ததன் மூலம் சாகித்திய அகாடமி

தனக்கு இலக்கியத் தகுதியைக் கண்டறியத் திறம் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறது. இப்போது இவருக்குப் பரிசு கொடுத்ததன் மூலம் தனது கள்ளத்தனத்தையே காட்டியிருக்கிறது அகாடமி. அது கிடக்கட்டும். இந்தத் தொகுப்பில் பல நல்ல கதைகள் இருக்கின்றன. எம்டன் நமக்குள் வாழ்கிறான். 'பொட்டை', 'தவம்' போன்ற கதைகளில் மனிதர்களை மிகைப்படுத்தி அழகு காட்டுகிறார். சமூகத்தில் எத்தனையோ பிரச்னைகளுடன், எத்தனையோ சூழல்களில் வாழும் விதவிதமான மனிதர்கள் பல கதைகளிலும் வருகிறார்கள். மனிதர்களை விதவிதமான மனிதர்களை - வேடிக்கை பார்க்கும் தி.ஜானகிராமனின் குணம்—இப்படி வேடிக்கை பார்ப்பதிலேயே லயித்திருக்கும். குணம் — மனிதர்களை மேலும் ஆழ்ந்து பார்க்கத் தடையாயிருக்குமோ? இவரிடமுள்ள கவர்ச்சிக்கான காரணத்தைத் தேடும் குமார் (கொல்லிப்பாவை) தொடர்ந்து ஆராய வேண்டும்.

விலை: ரூ.10 வயல்

8–டி, ராமசாமி நாயுடு சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை — 1.

3. உரித்த யானை

- துரை. சீனிச்சாமி

முற்போக்கு இலக்கியச் சார்பில் பேசும் ஒருவர், இந்தச் சமூக, அரசியல், கலாச்சாரச் சூழல்களில் எதிர்ப்படும் பிரச்னைகளில் சிக்கி - உடனடியாகப் பிரச்னைகள் தீர்வதற்கு வழி இல்லாததால் வேதனைப்பட்டு, தனக்குள் அந்நியமாகி, கனவிலும், தனிமையிலும் தடுமாறி இப்படித்தான் அகப்பட்டிருக்கும் சிக்கலான நிலைமையைக் கவிதையில் தரலாமா? தரலாம். தர வேண்டும். அப்படித் தரும் போது கவிதைத்தரம் உயரும் என்பதற்கு இந்தத்தொகுதி, சான்று. முத்திரைகளில் முகம் புதைக்கும் போலிகளுக்கு

இவர் கவிதைகள் கசக்கும். என்ன செய்யலாம்? சீனிச்சாமி சிக்கியுள்ள அவலத்திற்கு இந்தப் போலிகளும் தானே காரணம்.

விலை: ரூ.4 அகரம்

சிவகங்கை 623 560.

5. சங்க இலக்கியத்தில் சமுதாயப் பிரச்னைகள் - ஞானி

சங்ககாலம் ஒரு மாறுதல் காலம். குறிஞ்சி, முல்லை, நெய்தல் நில நாகரீகங்களை மீறி மருதநில நாகரீகம் வளர்ந்து, அவற்றை வெற்றி கொண்ட காலம். குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்து வந்த குலச் சமுதாயத் தலைவர்களை, மருதநில வேந்தர்கள் வென்று தமது அரசை நிலைநிறுத்திய காலம்.

நால்வகைப் படைகளின் இறுமாந்த தோற்றத்தோடும், மருதநில விளைச்சலின் ஆற்றலோடும் வந்து மோதிய வேந்தர்களுக்கு முன், இயற்கைப் பொருளாதாரத்தையும் தம்மையும் மட்டுமே நம்பி வாழ்ந்த பாரி முதலிய குறுநிலத் தலைவர்கள் நிற்கஇயலாமல் அழிந்ததில் வியப்பில்லை. இயற்கையின் விளைவை முழுமையாகத் தமக்குள் பங்கிட்டுத் துய்த்து வாழ்ந்த குறுநிலத் தலைவர்கள், நகரங்களையும் நால்வகைப் படைகளையும், உடைமைகளையும் தொகுத்துக்கொண்ட வேந்தர்கள் முன்நிற்க இயலாது அழிந்தனர். குமணனுக்கு எதிராக இளங்குமணனும், கோப்பெருஞ்சோழனுக்கு எதிராக அவனது மக்களும் கொண்ட பகைமைக்குக் காரணம், தற்செயலானது அல்ல.

ஒரு மாங்கனியை உண்டமைக்காக, நன்னன் புரிந்த பெண் கொலையும் இத்தகையதே. உடைமை பற்றிய பற்றும் அதைக் காப்பாற்றுவதற்கான தவிர்க்க இயலாத பகைமையும் கொடுங்கோன்மையும் சமுதாயத்தில் தோன்றிப் பெருகி வருவதன் விளைவுகள் இவை.

முன்னைய சமுதாயத்தில், சமுதாயத்தின் உற்பத்தியில், அந்தச் சமுதாயத்தை இன்புறுத்துபவர், ஊக்கப்படுத்துபவர் என்ற வகையில் பாணர்கள், விறலியர், கூத்தர்கள் ஆகிய கலைஞர்கள் பெற்ற நியாயமான, உரிமையான பங்கு, உடைமைப் பற்று பெருகி வரும் சமுதாயத்தில் மறுக்கப்பட்டதன் விளைவாகத்தான், அவர்கள் தமது வேரை

இழந்து தம்மை ஆதரிக்கும் குறுநிலத் தலைவர்கள், மன்னர்களைத் தேடி, பழுத்த மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப் போல நாடு முழுவதும் அலைந்து திரிந்தார்கள். அந்தப் பெருமைக்குரிய பழஞ்சமுதாயம் மறைந்து விட்டதைத்தான் "இனி பாடுநரும் இல்லை, பாடுநருக்கொன்று ஈகுநரும் இல்லை" என்ற கையறு நிலை ஒளவையின் மூலமாகத் தெரிவிக்கிறது. வேந்தர்களை எதிர்த்துநின்று, தமக்கே சொந்தமாகியிருந்த அந்தச் சமுதாயத்தை காக்கும் முறையில், வாழ்வதை துச்சமாகக் கருதி வீரத்தையே ஆயுதமாகக் கொண்டு போரிட்ட அந்த வீரர்களின் யுகம் மறைந்து புதிய சமுதாயம் நிலை பெறலாயிற்று.

சங்ககாலம் என்று கூறப்படும், ஏறக்குறைய 200 ஆண்டுக்கால வரலாறு இது. இந்தக் காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கிடையில், குறுநிலத் தலைவர்களுக்கும் வேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்கள் மிகப்பல. இப்போர்களில் நகரங்கள் எரிக்கப்பட்டன. விளைநிலங்கள் பாழாக்கப்பட்டன. ஏரி, குளங்கள் தூர்க்கப்பட்டன. எண்ணற்ற மக்கள் கொல்லப்பட்டனர். இவற்றின் விளைவாக சங்க காலத்தின் இறுதியிலும், சங்கப்பிற்காலமாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்திலும் தமிழகத்தில் பெருகி இருந்த வறுமைக் கொடுமையை நாம் பார்க்கின்றோம். திருக்குறள் முதலிய அறநூல்களில் வறுமையின் குரல் ஓங்கி ஒலிப்பதைக் கேட்கிறோம்.

ஒரு சமுதாயம் மாறி இன்னொரு வகைச் சமுதாயம் உருவாகும் போது, தவிர்க்க இயலாமல் ஏற்படும் அவலங்களுள் இவை சேர்கின்றன.

முன்னைய சமுதாயத்தில் வாழ்க்கை, குறிஞ்சிக்குள், அல்லது முல்லைக்குள் அல்லது நெய்தலுக்குள் பெரும்பகுதி அடங்கி விடுகிறது. பிற நிலங்களுடன் கொண்ட தொடர்பு மிகச் சிறிய அளவினதாகவே உள்ளது. அந்நிலையில் மருத

நில நாகரீகம் வளர்ந்து மேலோங்கி வரும் போது, பிற நில நாகரீகங்களை இது பாதிக்கவே செய்கிறது.

ஆற்றுத்தண்ணீரை தேக்குவதற்காக—கால்வாய்களை நெடுந்தொலைவு அமைப்பதற்காக - விளைநிலங்களை உண்டாக்குவதற்காக — நகரங்களில் பெருகி வரும் தொழிற் பொருட்களை விற்பதற்காக — மருதநில நாகரீகம் தன் எல்லையை விரிவாக்க வேண்டியதாகிறது. தவிர்க்க இயலாதபடி பிற நிலமக்களுடன் உறவு கொள்வது தேவையாகிறது. சில சமயங்களில் இவ்வுறவு வஞ்சிப்போரின் மூலம் சாதிக்கப்படுகிறது. இவ்வகையில் தொடக்கத்தில் திணைமயக்கமாகத் தோன்றிய நிகழ்ச்சி நாளடைவில் வரலாற்று நிகழ்ச்சியாகி இறுதியில் புதிய நாகரீகத்தின் வெற்றியாகி விடுகிறது. இந்நிலையில் பழைய சமுதாயம் மறைந்து புதிய சமுதாயம் தோன்றி விடுகிறது. இந்தச் சமுதாயத்தில் புதிய தொழில்கள், புதிய பொருட்கள், புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. முன்னைய சமுதாயத்தில் விளைவு முழுவதும் துய்க்கப்பட்டது. விளைவென்பதும், மலைபடு பொருட்களாக, மாடுகளின் பயன்களாக, கடல்படு பொருட்களாக, பெரும் பகுதி இயற்கைப் பொருட்களாகவே இருந்தன. புதிய சமுதாயத்தின் மனிதனின் உழைப்பின் விளைவாக, புதிய கருவிகளின் விளைவாக பொருட்கள் உண்டாக்கப் படுகின்றன. இருப்பதை தின்று தீர்க்கும் முறை மாறி இருப்பதை வைத்து வளர்த்துப் பெருக்கி அனுபவிக்கும்முறை ஏற்படுகிறது. புதிய சமுதாயத்தில் கல்வி தொழில்முறைகள் ஏற்படுகின்றன. அறிவு பெருகுகிறது.

முன்னைய சமுதாயத்தில் ஓரிடத்தில் மட்டுமே குறுகிக் குவிந்து கிடந்த மக்கள், அந்தச் சமுதாயத்தின் வேர்கள் பிடுங்கப்பட்டு விட்டதனால், இருந்த இடத்தை விட்டு வெவ்வேறிடங்களுக்கு, வெவ்வேறு தொழில்களை நாடிச் செல்ல வேண்டியவர்களாகி விட்டனர். முன்னைய சமுதாயத்தின் பாதுகாப்பு இவர்களுக்கு இல்லை. அதுபோலவே முன்னைய சமுதாயத்தின் பழமையும்

இவர்களிடம் இப்போது இல்லை. முன்னைய சமுதாயம், பொதுமைச் சமுதாயம். இச்சமுதாயம் உடமைச் சமுதாயம். முன்னையச் சமுதாயம் பண்பாட்டைக் கொண்டிருந்த சமுதாயம். இச்சமுதாயம் உடைமையைச் சந்திக்கும், போட்டி, பொறாமை, தற்பெருமை முதலிய பண்புகளை வளர்க்கும் சமுதாயம். இந்தச் சமுதாயத்தின் செல்வந்தர்கள், தலைவர்கள், பழஞ்சமுதாயத்தின் ஆதரவைக் காட்டுவதற்காக பழஞ்சமுதாயத் தலைவர்களிடம் பெண் வேண்டும்போது, அந்த மறவர்கள் இந்த 'அநாகரீக' மனிதர்களுக்குத் தம் பெண்களைத் தர மறுக்கவே செய்தார்கள். உன்னதமான அந்த பொதுமைச் சமுதாயத்தோடு சேர்ந்து போரிட்டோ, வடக்கிருந்தோ, தீப்புகுந்தோ மடிவார்களே அல்லாமல், இந்தப் புதிய சமுதாயத்தின் 'புன்மையை' ஏற்று அதற்குள் வரமாட்டார்கள். பழைய சமுதாயத்தின் பொதுமையை மேலும் வெறித்தனமாகக் கடைப்பிடித்துத் தம் தலையைக்கூட குமணனைப்போல் கொடுத்துவிட்டு மடிவதையே அவர்கள் விரும்பினார்கள். தம் தலைவர் மடியும்போது அவரோடு புலவர்களும், சான்றோர்களும் மடியவே விரும்பினார்கள்.

கல்பொருதிரங்கும் மல்லற் பேரியாற்று வெள்ளம்போலப் பேராற்றலோடு வந்தது இந்தப் புதிய சமுதாயம். இந்தச் சமுதாய வெள்ளத்தில் அகப்பட்டவர்கள் புணைகளைப் போல, புதிய சமுதாயத்தின் விதிவழியே சென்றாக வேண்டும். இதன் வேகத்தை எதிர்த்து நிற்கமுடியாது. கண்ணுக்குப் புலப்படாமல், ஆகவே வெறித்தனமாக வரும் இந்தச் சமுதாயத்தில் சிலர் திடீரென்று உயர்ந்த இடத்திற்கேறிப் பெரியவராகின்றனர். சிலர் காரணம் இல்லாமல், தெரியாமல் சிறியவராகின்றனர். இதற்காக இவரைப் பாராட்டுவதோ, மற்றவரை இகழ்வதோ அர்த்தமற்றதாகி விடுகிறது. குறுகிய முன்னைய நில எல்லைகளைக் கடந்து, உருவாகி வரும் இந்த விரிந்த சமுதாயத்தில், அவனது ஊர் என்று, உறவினர் என்று எவரும்

இல்லை. யாதும் ஊரே யாவரும் கேளிராகின்றனர். புதிய சமுதாயத்தை இவ்வாறு கணிக்கின்றனர் பூங்குன்றனார்கள். முன்னைய சமுதாய மண உறவுகள் மாறி, எங்கிருந்தோ வருபவர், யார் யாரையோ சந்தித்து உறவு கொள்கின்றனர். யாயும் யாயும் யாராகி யரோ; எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் என்ற வியப்பு இவர்களுக்குள் ஏற்படுகிறது. சந்திக்கும் நிலையிலேயே, காதற் பரவசம் பெரிதாக எழுகிறது. இவர்கள், எப்படிச் சேர்ந்தார்கள் என்று புரியாத நிலையில்தான் ஊழ் இவர்களைக் கூட்டுவித்ததாக இலக்கணம் எழுதலாயினர்.

சங்ககாலத்தில் குறுகிய நில எல்லைகளைக் கடந்து மக்கள் வாழ்க்கை விரிந்து வருவதை இலக்கியத்தில் விரிவாகப் பார்க்கிறோம். போருக்காக, பொருளீட்டு வதற்காக இவர்கள் பெருமளவில் தமது ஊரை விட்டு, தமது நில எல்லையைக் கடந்து நகரங்கள் நோக்கி, நாடு கடந்து செல்வதை, அகப்பாடல்களில் பெரும்பான்மையாக உள்ள பாலைப் பாடல்கள் தெரிவிக்கின்றன. தமது குறுகிய நில எல்லைக்குள் வாழ முடியவில்லை என்பதையும் பொருளின் தேவை இன்றியமையாது பெருகிவிட்டதையும் இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. ஏற்கெனவே நாம் கூறியவாறு போர்கள் விரிந்த அளவில் நடைபெறுவதையும், வறுமை சமுதாயத்தினுள் விரைந்து வருவதையும் இப்பாடல்கள் தெரிவிக்கின்றன. வாழ்க்கை ஒருவகையில் விரிந்து வரும் அதே சமயத்தில், வாழ்க்கையில் பெருகி வரும் பிரிவு பாலைத் தன்மையையும் நாம் மறுத்துவிட இயலாது. தலைவனைப் பிரிந்த நிலையில் குறிப்பிட்ட காலத்திற்குத் தன் மனத்தை ஆற்றியிருக்கும் தலைவியின் துன்பநிலை பற்றி முல்லைப்பாடல்களும், ஒருவகையில் சமுதாயத்தில் தவிர்க்க இயலாதவாறு பெருகிவரும் போர் – பொருளீட்டம் – உடமையாதிக்கம் - பிரிவு–பாலைத் தன்மையின் பகுதியாகி விடுகின்றன. அதுபோலவே குறிப்பிட்ட கால அளவுக்குள் பொருள் தேட்டம் முடியாமையையும், போர்மிக்க சூழலில்

வழிப்பறி கள்வர் பெருகிய சூழலில், தலைவன் குறிப்பிட்ட காலங்கடந்தும் கூட, தன் வீட்டிக்குத் திரும்ப இயலாத நிலையையும், நெய்தல் பாடல்கள் புலப்படுத்துகின்றன. போர்கள் பெருகிய சூழலில், பொருளீட்டத்துக்கான வழிகள் சிக்கலான நிலையில், தலைவனது சாவு எதிர்பார்க்கத்தக்கதே. இந்நிலையில் கையறுநிலை. இரங்குதல் நிலை பெருகுவதில் வியப்பில்லை.இவ்வகையில் நெய்தற்பாடலும் ஒருவகையில், பாலையின் பாலைத் தன்மையின் தொடர்ச்சியாகின்றன.

இவ்வளவும் மருதநில நாகரீகத்தின் பரிசுகள், நிலத்தில் விளைச்சலும், நகரங்களில் தொழில்களும் பெருகிவரும் சூழலில் உடமை வளர்ந்து வருகிறது. செல்வம் தனக்கேற்ற தனது இன்பத்துய்ப்புக்கான சூழலை ஏற்படுத்துகிறது. செல்வாக்கான வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை, சங்க இலக்கியத்தில் காணப்படும் நகர வர்ணனை களிலிருந்து அறிகிறோம். பரத்தைகள் நகரவாழ்வின் செல்வச் செழிப்பின் பகுதியாகி விட்டனர். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு பெருகி வரும் நிலையில் வேந்தர்களின் படையெடுப்பும், குறுநிலத் தலைவர்களின் அழிவும் பெருகிய நிலையில் பூசல் ஊடல் அதிகரிக்கின்றது. பொருள் உற்பத்தியில் பொருளீட்டத்தில் ஆடவர்களின் பங்கு அதிகரிப்பதற்கேற்ப, மகளிர்க்குக் கற்பு அணிகலன் சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது.

இப்புதிய சமுதாயம் வேளாண்மை, தொழில் வளர்ச்சியைப் பெருக்கி, நகரங்கள், நாகரிகம், கல்வி முதலியவற்றை ஊக்குவித்ததன் மூலம் முன்னைய சமுதாயத்தை விட, வளர்ச்சி பெற்ற சமுதாயமாகிறது. குறுகிய நிலங்களிலிருந்தும் குறுகிய வாழ்க்கை முறையிலிருந்தும் மக்களை விடுவித்து, மக்களிடம் புதிய உறவு முறைகளை இது வளர்த்து வருகிறது. பண்டைச் சமுதாயத்திலிருந்த பொதுமை, நீதி ஆகியவை, தனது சமுதாய அடிப்படையோடு அழிந்து விடுவன அல்ல. அவை புதிய சமுதாயத்தின் கட்டுமானத்திற்குள்ளும்,இக்கட்டுமானத்திற்கேற்பத் தன்னை

உருமாற்றிக் கொண்டு வாழ்கின்றன. இப்புதிய சமுதாயமும், தனக்குத் தேவையான கலாச்சாரத்தை பழைய சமுதாயத்திலிருந்து தேவையான அளவு ஏற்றுக்கொள்கிறது.

பொருளாதார அடிப்படை மாறினாலும் தான் அழியாமல் புதிய நிலைகளுக்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளும் கலாச்சாரத்தின் தன்மை இது. இவ்வகையில் பழஞ்சமுதாயத்தின் பொதுமை, புதிய சமுதாயத்தில் கொடையாக - ஈகையாக - விருந்தோம்பலாக இடம்பெறுகிறது. பழஞ்சமுதாயத்தில் மக்களுக் கிடையில் ஏற்றத் தாழ்வற்ற தன்மை, புதிய சமுதாயத்தில் அன்பாக, காதலாக, அருளாக மாறுகிறது. பழஞ்சமுதாயத்தின் தொடர்ச்சியாகவே புதிய சமுதாயத்தில் புலவர்கள், சான்றோர்கள், நீதியை விளக்குகிறார்கள்.

சங்ககாலத்திற்கு முற்பட்டதொரு காலத்தில் வரையறையற்ற புணர்ச்சிமுறை இருந்திருக்கக்கூடும். கைக்கிளை, பெருந்திணை என்று கூறப்படும் உறவுமுறைகள், அக்காலத்தில் இயல்பான உறவுமுறைகளாக இருந்திருக்கமுடியும். நாளடைவில் புலவர்கள், சான்றோர்கள் நோக்கில் இவை தவறாகி விடுகின்றன. இவர்கள்தான் ஐந்திணை முறைக்குப் பெருமை தருகிறார்கள். ஆணும் பெண்ணும் தாமே இணைந்து விடும் முறை, முன்னைய சமுதாயத்தின் தொடர்ச்சிதான். குலம், செல்வம், நிலம் முதலியவை பார்க்கும் தனிஉடைமைச் சமுதாயத்தின் பெருந்திணை உறவுக்கே பெரும் இடம் இருக்கமுடியும். களவில் புணரும் முன்னைய சமுதாய உரிமை முறையும் சான்றோர்களின் உடன்பாடு பெற்ற புதிய சமுதாயத்தின் மணமுறையும் கற்புமுறையும் இங்கே இணையும் நிலைமை தோன்றுகிறது. சான்றோர்கள் இதனைப் பெரிதும் வரவேற்கவே செய்கிறார்கள். நிலம் கடந்து, முன்னைய உறவு கடந்து, உடைமை கடந்து இவர்கள் கொள்ளும் காதல், அவர்களால் வரவேற்கப்படுகிறது. இது சான்றோர் முறை : புலனெறி வழக்கு. இதை உலகம் - சமுதாயம்

ஏற்பதில்லை. இவர்கள் காதலுக்குத் தடையாக இருக்கின்றனர். அம்பலும் அலரும் கிளப்புவர்கள் இவர்கள், தாய், தந்தையர் இவ்வுறவை ஏற்பதில்லை. இற்செறிப்பு முதலிய வகைகளில் தடை ஏற்படுத்துகின்றனர். தலைவன், தலைவியர் உடன்போக்கின் போது பின்தொடர்கின்றனர் தலைவியைப் பிரித்துக் கூட அழைத்து வந்து விடுகின்றனர்.

நல்ல குலத்தில் பிறந்தவனுக்கு, செல்வம் மிக்கவனுக்கு தன் மகளை ஊரறிய மணம் முடித்து வைப்பதையே பெற்றோர் விரும்புகின்றனர். பொய்யும், வழுவும் தோன்றிய நிலையில், மணமுறை இவ்வாறு தோன்றியது. தமது பெண்ணின் திருமணத்தை தாம் தீர்மானிக்கவே பெற்றோர் விரும்புகின்றனர். தனியுடைமை தோன்றி விட்டதன் தவிர்க்க இயலாத போக்கு இது. குலம், செல்வம் முதலியவை பார்த்து நடைபெறும் திருமணமே நடைமுறையாகிறது. அதாவது சான்றோர்கள் அன்பின் ஐந்திணையைப் பாராட்டிக் கொண்டிருந்த போதிலும் சமுதாய நடைமுறை வேறு வகையாக இருப்பதைத் தான் இலக்கியம் தெரிவிக்கிறது. காதலித்தவன் கைவிட்டு விடுவானோ, பொருளுக்காகப் பிரிந்தவன் தன்னை மறந்து விட்டானோ? என்றெல்லாம் தலைவியரும், தோழியரும், செவிலித் தாயரும் ஐயுற்றதில் அவலம் கொண்டதில் பொருள் இல்லாமல் இல்லை. ஒருவகையில், காதலர்க்கும் சமுதாயத்திலுள்ள பெற்றோர் முதலியவர்க்கும் கடுமையான பகை இருக்கவே செய்கிறது. காதலைச் சான்றோர்கள் எவ்வளவு பாராட்டிய போதிலும், சமுதாயத்தில் பெருகி நடைமுறையாகவில்லை. தனியுடைமை தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றவுடன் காதல் புதைக்கப்பட்டது. சான்றோர்கள் ஐந்திணைப் பாடல்கள் பாடும் வழக்கத்தைக் கைவிட்டனர். முன்னைய சமுதாயத்திற்கும், புதிய சமுதாயத்திற்கும் ஏற்பட்ட மோதலில் பிறந்தது. சங்க இலக்கியம் – மோதல் வளர்ந்து பெருகி வெடித்து முடிந்தவுடன் சங்க இலக்கியமும் முடிந்து விடுகிறது.

குறிப்பிட்ட நில எல்லைக்குள் நடைபெற்ற வாழ்க்கை முடிந்துவிட்டது. வாழ்க்கைக்கும் இயற்கைச் சூழலுக்கும் இருந்த இயற்கைத் தன்மை மாறி, இயற்கையை மாற்றியமைப்பதன் மூலம் வாழ்க்கையை மாற்றியமைக்கும் முறை வந்துவிட்டது. இதன் மூலம் உரிய பொருளுக்கும் – கரு, முதற்பொருளுக்கும் கூறப்பட்ட உறவுமுறை சிதைந்து விட்டது.

பாரி முதலிய வள்ளல்கள் வாழ்ந்த குலச் சமுதாயம் தான் வாழ்வதற்காக நடத்திய வீர யுகப் போராட்டம் முடிவடைந்ததன் மூலம், இடைக்காலம் முழுவதும் முன்னைய குலச் சமுதாயத்தின் மீது மக்களும் புலவர்களும் கொண்டிருந்த மயக்கம் தீர்ந்துவிட்டது. சமுதாயத்தில் புதிய விதி ஆதிக்கம் பெறத் தொடங்கி விட்டது. ஒரு வீட்டில் சாவுப் பறையும், இன்னொரு வீட்டில் மணமுரசும் முழங்குவதை ஏற்றுக் கொள்ளும் பண்பற்ற உலகம் தோன்றிவிட்டது. காதலுக்குக் கிடைத்த எழுச்சி கருகிவிட்டது. பொருள் பலம், உலகாளத் தொடங்கிவிட்டது. நெல்லும் நீரும் மன்னன் இல்லாமல் இனிப் பெறமுடியாது. ஆகவே இனி நெல்லோ நீரோ மக்களுக்கு உயிர் தர முடியாது. மன்னன்தான் இனி மக்களுக்கு உயிர் தருபவனாகி விட்டான். முன்னைய சமுதாயத்தின் பாதுகாப்பு, இனிக் கலைஞர்களுக்கு இல்லை. பாணர்கள் இனி பரத்தையர்கள் வீட்டில் சேவகம் பார்த்தாக வேண்டும். மக்களுக்கு இனி நம்பிக்கை தருவதற்குரிய பாரிகள் இல்லை. இவ்வுலகம், இனி அவர்களை விட்டுப்போகிறது. இனி அவர்கள் மறுஉலகைத்தான் நம்பியாக வேண்டும். தம்மை இவர்கள் இனி வாழ வைத்துக் கொள்ள முடியாது. இவர்களைக் காப்பாற்ற இனி கடவுளர் வேண்டும். தமது வாழ்விலிருந்து நீதி நழுவி விட்டது. இனி இவர்கள் நீதியைத்தேடிக் கண்டடைய வேண்டும். இந்த உடலியல் வாழ்க்கை இவர்களுக்கு அவலமாகி விட்டது. கேவலமாகி விட்டது. இனி இவர்கள் ஆன்மாவைத் தேடிப் பெற்றாகவேண்டும். வாழ்க்கையின் இலக்கணத்தை ஆராயும்

பொருள் இலக்கணம் இனி இவர்களுக்கு வேண்டாம். இயற்கையை ஆராய்ந்து முதற் பொருள், கருப்பொருள் வகுக்கும் முறை இனி வேண்டாம். இனி இவர்களுக்குத் தேவை நீதிகள் சமயங்கள்.

இவ்வாறு சங்க காலமும், சங்க இலக்கியமும் இனித் தொடர்ந்து வாழ்வதற்குத் தேவையில்லாமல், சமயத்திற்கு இடம் கொடுத்து மறைகின்றன.

1975

6. சோழர் காலத்தில் வர்க்கப் போராட்டம் – வலங்கை இடங்கைக் குலங்கள்

சோழர் காலத்தில் ஓங்கிவளர்ந்த குல வேறுபாடுகளில் மிகவும் தீய விளைவுகட்குக் களனாக இருந்தது, வலங்கை, இடங்கை என்னும் பிளவாகும். இவ்விரு பிரிவினருக்கும் இடையே பல கடும் பூசல்கள் நேரிட்டுள்ளன. இப்பூசல்கள் சோழப்பேரரசின் காலத்திற்கு முன்னே தோன்றி விசய நகரத்துப் பேரரசர் காலத்தில் தொடர்ந்து வளர்ந்து வந்து ஆங்கிலேயர் அரசாட்சியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் நடைபெற்று வந்தன. சென்ற நூற்றாண்டில் இப்பூசல்களின் காரணமாகச் சென்னையின் தெருக்களில் மனித இரத்தம் சிந்தியதுண்டு. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வலங்கை–இடங்கை வேறுபாடுகள் திடீரென மறைந்துவிட்டன. இப்போது மக்களுக்கு அப்பெயர்களின் பொருளே இன்னதென விளங்குவதில்லை. இந்த வேறுபாட்டை வரலாற்று நூல்களின் பக்கங்களிற்றான் விளங்கக் காண்கிறார்கள். ஒன்பது நூற்றாண்டுகளாகத் தமிழரின் வாழ்க்கையை அலைக்கழித்து வந்த சமூகக் கேடு ஒன்றன் தோற்றமும் முடிவும் வரலாற்று விளக்கங் காணாத மறை பொருள்களாகவே உள்ளன.

வலங்கை – இடங்கைப் புராணம் என்ற நூற்சுவடி ஒன்று மக்கன்ஸி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுச் சென்னை பழஞ்சுவடிகளின் நூல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. வலங்கைப்பிரிவில் தொண்ணூற்றெட்டுக் குலங்களும் இடங்கைப்பிரிவில் தொண்ணூற் றெட்டுக் குலங்களும் சேர்ந்திருந்தனவென்றும், அக்குலங்களுள் பெரும்பான்மை யானவை கலப்புக்குலங்கள் என்றும் அச்சுவடி கூறுகின்றது. கரிகாற்சோழன் வலங்கை – இடங்கைப் பாகுபாட்டை தோற்றுவித்தான் என்று ஒரு வரலாறு கூறுகின்றது. வேறு ஒரு வரலாறும் உண்டு. மூன்றாம் குலோத்துங்கனின் நாற்பதாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில், மூன்றாம் குலோத்துங்கன்

காலத்தில்தான் இப்பாகுபாடு வகுக்கப்பட்டதென்றும் சிலர் கூறுவர். இடங்கைப் பிரிவினர் தாம் எப்படித் தோன்றினர் என்பதைப் பற்றிய செய்தி ஒன்றைக் கூறுகின்றனர். அஃதாவது, காசிப முனிவர் இயற்றி வந்த வேள்விக்கு அரக்கர்கள் பல இடையூறுகளை இழைத்து வந்தனர். அம்முனிவரின் கட்டளையின்படி இடங்கைத் தொண்ணூற்றெட்டு வகுப்பினர் ஒமகுண்டத்தினின்றும் தோன்றி வேள்வியைப் பாதுகாத்து வந்தனர். அவர்கள் சோழநாட்டுக்கு வந்து சேர்ந்தனர். அரிந்தம சக்கரவர்த்தியானவன் காசிபரோடு உடனிருந்து வேள்வியை வளர்த்து உதவிய வேதியரைப் பாராட்ட விரும்பினான். அதற்காக அவர்களைப் பல்லக்கில் ஏற்றிச் சென்றான். இடங்கை வகுப்பினர் பல்லக்கின் பின்புறம் அமர்ந்து அப்பிராமணரின் உடைகளையும் மிதியடிகளையும் ஏந்திச்சென்றனர். பிராமணர்கள் கீழே இறங்கும்போது இடங்கையினர் அவர்களுக்கு இடப்புறம் நின்று கைகொடுத்துத் தாங்கிக்கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு இடங்கையினர் எனப் பெயர் வழங்கி வரலாயிற்று. அப்பிராமணர்கள் திருவெள்ளறை, பாச்சல், திருவாசி, திருப்பிடவூர், ஊற்றத்தூர், காரைக்காடு ஆகிய இடங்களில் குடியேறினர். இடங்கையினர் என்று தமக்குப் பெயர் வந்ததையும், தாம் பெற்ற விருதுகளையும் இவர்கள் காடுகளில் இழந்துவிட்டனர். நெடுங்காலம் கழிந்த பிறகு இவர்கள் வழிவந்தவர்கள் தம் பிறப்பை அறிந்தனர். ஆகவே தமக்குள் வேற்றுமை எதையும் வளர்த்துக் கொள்ளக் கூடாதென்றும், நம் குல உரிமையை என்றும் எங்கும் நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்றும், தாம் நடந்து போகும் போது தமக்கு முன்பு குடை பிடித்தல், கொம்பு ஊதுதல் ஆகிய கௌரவச் சின்னங்களைத் தம் பிறப்புரிமையாகக் கொள்ள வேண்டும் என்றும் இடங்கையினர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். இவ்வரலாறு வெறுங் கற்பனை என்றே தோன்றுகிறது.

வலங்கையினரைப் பற்றிய வரலாறு ஒன்றும் கிடைக்கவில்லை. மன்னனிடத்தில் இரு கட்சியினர் தமக்குள் ஏற்பட்ட பூசல்களைப் பற்றி முறையிடும் போது ஒரு கட்சி மன்னனின் வலப்புறத்திலும், மற்றொரு கட்சி அவனுடைய இடப்புறத்திலும் நிற்றல் மரபு. இன்றும் நீதிமன்றங்களில் நீதிபதிக்கு எதிரில் குற்றம் சாட்டுபவர் ஒரு புறத்திலும், குற்றம் சாட்டப்பட்டவர் மறுபுறத்திலும் நிற்பதைக் காணலாம். மன்னனின் வலப்புறம் நின்ற கட்சியைச் சேர்ந்த வகுப்பினருக்கு வலங்கையினர் என்றும், இடக்கைப்புறம் நின்ற கட்சி வகுப்பினருக்கு இடங்கையினர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று ஊகிக்க வேண்டியுள்ளது. காஞ்சிபுரத்தில் இம்முறை வழங்கியதாக அறிகின்றோம். அதனாலேயே அந்நகரத்தில் வலங்கை – இடங்கைக்கோயில், வலங்கை – இடங்கை மண்டபங்கள், வலங்கை – இடங்கைத் தேவரடியார்கள் என்ற பாகுபாடு காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வலங்கை – இடங்கை வகுப்பினரிடைய பல பெரும் பூசல்கள் விளைந்து வந்துள்ளன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள. இத்தகைய கலகம் ஒன்று ஏற்பட்ட செய்தியைத் திருவரங்கத்தின் கல்வெட்டு ஒன்றின் வாயிலாக அறிகின்றோம். அக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனுடைய பதினொன்றாம் ஆட்சியாண்டில் நாட்டப் பட்டது. வலங்கை இடங்கைக் கலகம் அவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டில் நடைபெற்றது (கி.பி.1071). இக்கலகம் நடைபெற்றபோது கலகக்காரர்கள் கிராமத்தைச் சுட்டு எரித்தனர்; கோயில்களை இடித்துத்தள்ளினர். அவர்களைத் தொடர்ந்து கொள்ளைக்காரர்கள் கோயில் சிலைகளையும் கோயில் பண்டாரத்தையும் சூறையாடினர். அவர்களுடைய கொள்ளைகளிலிருந்து சில பொருள்கள் மீட்கப்பட்டன. அவற்றைக் கோயிலில் வைத்துப் பாதுகாக்க முடியவில்லை. கிராமத்தை மீண்டும் சீரமைக்கவும், மக்களை அங்குக் குடியமர்த்தவும், இடிந்துபோன மதிற்சுவர்களை எழுப்பிக் கோயிலைப் பழுதுபார்த்துச்

சிலைகளை மீண்டும் பழையபடியே அமைக்கவும் கிராமச்சபையினர் கோயில் பண்டாரத்திலிருந்து ஐம்பது கழஞ்சு பொன் கடன் வாங்கினர். இராசேந்திர சோழன் மாடைக்கு அரை மாற்றுக் குறைவாக இருந்தது அப்பொன். கடன் மேல் இருபத்து ஐந்து கழஞ்சு பொன் வட்டி ஏறிற்று. வட்டியும் முதலுமாகக் கூடிய எழுபத்தைந்து பொன்னில் ஐந்து கழஞ்சு பொன்கோயிலைப் புதுப்பிக்கவும், சிலைகளை அமைக்கவும் செலவு ஆயிற்று. மிகுதி எழுபது கழஞ்சு பொன்னுக்கு ஈடாக அச்சபையானது கோயிலின் அன்றாட வழிபாட்டுக்காகக் கோயில் நிலங்களை இறையிலி நிலங்களாக மாற்றிக் கொடுத்தது.

இக்கலகம் விளைந்த இடம் இராசமகேந்திர சதுர்வேதி மங்கலம் என்ற பிராமணக் கிராமமாகும். அக்கிராமம் நித்த விநோத வளநாட்டுக் காந்தார நாட்டைச் சேர்ந்தது. இப்போதைய பாபநாசம், நன்னிலம் தாலுக்காக்களுக்கு அக்காலத்தில் நித்த விநோத வளநாடு என்று பெயர் வழங்கி வந்தது. நாட்டின் இப்பகுதியில் ஏற்பட்ட பூசல்களைப் பற்றிய செய்தியைத் திருவரங்கம் கோயிலின் மேல் பொறித்து வைத்ததற்குக் காரணம், அக்கல்வெட்டானது பெரியதொரு கோயிலில் பொறிக்கப் பட்டால் நீண்டகாலம் அழியாமல் இருக்கும் என்பதற்காகத்தான் இருக்கவேண்டும். சிறுகிராமத்தில் நாட்டப் பெறும் கல்வெட்டுகள் இத்தகைய கலகங்களினாலோ, வேறு எக்காரணத்தாலோ என்றும் அழிந்து மறைந்து போகக் கூடும்.

இக்கல்வெட்டுச்செய்தி கூறும் வலங்கை இடங்கைப்பூசல் நடைபெற்றதற்கு ஆழ்ந்ததொரு காரணம் ஏதேனும் இருந்திருக்க வேண்டும். அன்றேல், கோயிலை இடித்து நிரவுமளவுக்கு அக்காலத்துக்குக் குடிமக்களுக்கு நெஞ்சுரம் ஏற்பட்டிராது. இப்பூசல் நீண்டகாலமாகவே இருந்து வந்திருக்கவேண்டும். வலங்கை வகுப்பினர்களுக்கு அரசாங்கச் செல்வாக்கும், வாழ்க்கை வசதிகள் விருதுகள் போன்ற நலன்களும், சிறப்புகளும் ஏராளமாக வழங்கப்பட்டு

வந்தன என்று கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இடங்கையினரின் நிலைமை பலபடிகள் தாழ்ந்தே இருந்து வந்தது. அதனால் அவர்கள் மனம் புழுங்கியவர்களாய், வலங்கையினரின் மேல் போர் தொடுத்தனர் என அறிகின்றோம். வலங்கையினர் மட்டுமின்றி பிராமணர், வேளாளர், வன்னியர் போன்ற இதர குலத்தினரும் இடங்கை வகுப்பினருக்கு இன்னல்கள் விளைத்தனர்.

வலங்கையினர் மன்னரின் படைகளில் சிறப்பிடம் அளிக்கப் பெற்றிருந்தனர். வலங்கைப்பழம் படைகளிலார், பெருத்தனத்து வலங்கைப் படைகள், அழகிய சோழத் தெரிந்த வேளைக்காரப் படைகள், என்ற பெயரைத் தாங்கிய படைகள் சோழ மன்னரிடம் இருந்தன. இடங்கையினரைப் பற்றிய தனிக்குறிப்புகள் கல்வெட்டுகளில் காணப்படுவது இல்லை. வலங்கையினருடன் வைத்தே அவர்களைப் பற்றிய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, படைகளுடன் இடங்கையினரும் ஏதேனும் ஒரு தொடர்பு கொண்டு இருந்தனரோ, என்று ஊகிக்க வேண்டியுள்ளது. எனினும், அவர்கள் பெரும்பாலும் வணிகர்களாகவும், தொழிலாளர் ஆகவுமே பிழைப்பை நடத்தி வந்தனர் எனத் தெரிகின்றது. இவ்வூகத்துக்குச் சான்று ஒன்றும் உள்ளது. சிங்கள மன்னன் விசயபாகுவின் பொலன்னருவைக் கல்வெட்டு ஒன்று ஒரு செய்தியைக் கொண்டுள்ளது. அவன் புனிதச் சின்னமாக புத்த பகவானின் பல் ஒன்றைவைத்து அதன்மேல் கோயில் எழுப்பினான். 'அக்கோயிலுக்கு மூன்று கைத்திருவேளைக்காரன் தலதாயப் பெரும்பள்ளி' என்று பெயர்சூட்டி அதை வேளைக்காரரின் பாதுகாப்பில் விட்டுவைத்தான். அவ்வேளைக்காரர்கள் 'மாதாந்திரத் தோங்கூடி எங்களுக்கு மூதாதைகளாயுள்ள வளஞ்சியரையும் எங்களோடு கூடி வரும் நகரத்தார் உள்ளிட்டோரையும் கூட்டி... கலந்து பேசி, மன்னனுடைய விருப்பத்துக்கு ஒப்புக்கொண்டு கல்வெட்டில் வலங்கை, இடங்கை சிறுதனம் பிள்ளைகள் தனம் வடுகர், மலையாளர் பரிவாரக் கொந்தம் பலகலனை உள்ளிட்ட

திருவேளைக்காரோம்' என்று கையொப்பமும் இட்டார்கள். தலனை யென்றால் தொழிலாளர்கள் என்று பொருள்.

மாதந்திரத்தாரின் மூதாதையரான வளஞ்சியரும் மாதாந்திரத்தாருடன் இணைத்துப் பேசப்படும் நகரத்தாரும் வாணிகம் நடத்தியவர்கள். வளஞ்சியருக்கும் நகரத்தாருக்கும் உள்ள வேறுபாடு என்ன எனத் தெரியவில்லை. மாதந்திரத்தாரின் தலைமை அல்லது மூல அலுவலகம் வடக்கே பிஜாப்பூரின் அண்மையிலுள்ள ஐயப்பொழிலில் அமைந்திருந்தது. வளஞ்சியர்கள் இம்மூல இடத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். எனவே மாதந்திரத்தாரின் மூதாதையர் 'வளஞ்சியர்' எனக் குறிக்கப்பட்டு உள்ளனர். ஐயப்பொழிலைத் தலைமையிடமாகக் கொண்டு நடைபெற்ற வாணிக நிறுவனத்துக்கு 'நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' என்றும் பெயர். மாதந்திரத்தார் படைத்தலைமையின் நிருவாகக் குழுவாவர். ஆகவே இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேளைக்காரர்கள் வாணிகத்துறையுடன் தொடர்பு கொண்டவர்கள் என ஊகிக்க இடமுண்டு.

கோவில்களைப் படையினரிடம் பாதுகாப்புக்காக ஒப்படைக்கும் வழக்கம் அந்நாளில் தமிழகத்திலும் இருந்து வந்ததாகப் பல கல்வெட்டுச் செய்திகளின் மூலம் தெரிந்து கொள்ளுகின்றோம். முதலாங் குலோத்துங்கன் காலத்தில் சேரன்மாதேவி பக்தவச்சலன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட சில அறங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு 'மூன்று கை மாசேனை என்ற பெயருள்ள படைஒன்றினிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. திருவாலீசுரத்தின் கோயிலும் இச்சேனையின் பாதுகாப்பிலேயே இருந்து வந்தது. தஞ்சை மாவட்டத்திலுள்ள புஞ்சை என்னுமிடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்று, அவ்வூர்த் தேவதான நிலங்களில் சில கோயிலுக்கே உரிமையானவை என்பதை உறுதியாக்கும் பொருட்டுத் திரிசூல வேளைக்காரர் பணிபுரிந்து வந்தனர் என்று இதனால் அறிகின்றோம். பாண்டி நாட்டில் பெருங்குளம் என்ற ஊரில் வலங்கை மகாசேனையினர்

குன்றமெறிந்த பிள்ளையார் கோயிலுக்குச் சில நிலங்களை விற்றார்கள். இப்பெரும் படையினில் எட்டுப் பிரிவுகள் அடங்கியிருந்தன.

இக்கல்வெட்டுச் செய்திகளை ஆய்ந்துநோக்கில் மூன்று கைமாசேனை என்பது மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்ததென்றும், அவற்றுள் ஒன்றான வலங்கைப் பிரிவு சில தொழிலாளர்களைக் கொண்டது என்றும் மூன்றாவது பிரிவு கோயில் பணியாளர்களைக் கொண்டிருந்ததென்றும் ஊகிக்க இடமேற்படுகின்றது.

இடங்கை வகுப்பினர் பலராலும் துன்புறுத்தப்பட்டு வந்தனர். இவர்கள் அவ்வக் காலங்களில் பட்ட துன்பங்களையும் அவர்கள்மீது ஏற்றப்பட்ட வரிச்சுமைகளையும் பற்றிப் பல கல்வெட்டுகள் செய்திகள் கூறுகின்றன. நிகரிலி சோழ மண்டலத்து எழுபத்தெட்டு நாடுகளும், ஜயங்கொண்ட சோழ மண்டலத்தின் நாற்பத்தெண்ணாயிரம் பூமியும், பெரும்படை வலங்கை மகாசேனைக்கு வழங்கப்பட்ட இராசேந்திர சோழப் பதினெண் பூமியும் உள்ளிட்ட நாடுகளில் சோழ வமிசம் தோன்றின நாள் முதலே பசுக்களுக்கும் எருமைகளுக்கும் வரி விதிக்கப் பட்டதில்லை என்றும், அதனால் அதிகாரி மூவேந்த வேளாண் விதித்த இப்புதிய வரிகளை அவர்கள் செலுத்த வேண்டியதில்லை என்றும் வளர்ச்சி செய்து பதினெண் வி யத்தார்களும் தாம் கொடுக்க வேண்டிய வரி விகிதங்களை அறுதியிட்டு முடிவு கட்டினார்கள்.

வளஞ்சியர் என்ற வாணிகக் குழுவினைப் பற்றி முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய காட்டூர்க் கல்வெட்டு ஒன்று விரிவான செய்திகளைக் கூறுகின்றது. ஒரே வளஞ்சிய சமயத்தைப் பாதுகாப்பவர்கள் இவர்களே என்றும், இவர்கள் வாசுதேசன், கந்தழி, வீரபத்திரன், ஆகிய கடவுளரிடம் தோன்றியவர்கள் என்றும், பட்டாரகி (துர்க்கை)யை வழிபடுபவர்கள் இவர்கள் என்றும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது. இவர்களுள் பல பிரிவினர் உண்டு. நான்கு திசைகளின் ஆயிரம் வட்டங்கள், பதினெண்

நகரங்கள், முப்பத்திரண்டு வேளர்புரங்கள், அறுபத்து நான்கு கடிகைத் தானங்கள் ஆகியவற்றினின்றும் இவர்கள் வந்தவர்கள். இவர்கள் குழுவில் செட்டிகள், செட்டிப் பிள்ளைகள், கவரர்கள், கந்தழிகள், பத்திரகர்கள், காவுண்ட சுவாமிகள், சிங்கம், சிறுபுழி, வலங்கை, வாரியன் ஆகியவர்களும் சேர்ந்திருந்தனர். இந்த நானாதேசிகள் மைலார்ப்பு (மைலாப்பூர்) என்ற இடத்தில் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். மையப் பொழிலாக இருந்த காட்டூரை வீரப்பட்டினமாக மாற்றவேண்டும்; எல்லா வரிகளினின்றும் அதற்கு விலக்கு அளிக்கவேண்டும்; குழுவினர் பெற்றுவந்த ஊதியத்தை இரட்டிப்பு மடங்காக்க வேண்டும். அன்று முதல் உருவிய வாளுடன் வரி தண்டுவோர்கள், வரிக்காகச் சிறைபிடிப்போர்கள், வரி கொடாதவர்களைப் பட்டினி போட்டோ, அல்லது வேறு எந்தவகையிலோ துன்புறுத்துபவர்கள் ஆகிய வணிகர்கள் இந்நகரத்தில் வாழக்கூடாது. அப்படி வாழ்வார்களாயின் அவர்கள் வளஞ்சியர் குலத்தினின்றும் விலக்கப்படுவார்கள்.

சிலசமயம் வலங்கையினர், இடங்கையினர் ஆகிய இரு வகுப்பினருமே பிராமணரையும், வேளாளர்களையும் எதிர்த்துப் போராட வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டதுண்டு. ஆடுதுறை வட்டத்தில் பிராமணர்களும், வேளாளர்களும் காணியாட்சி கொண்டாடினர். அவர்களுக்கு எதிராக வலங்கை 98 குலங்களும், வழுதலம்பட்டு ஊசவாடி ஆகிய ஊர் இடங்கையினரும், தமக்குள் ஒற்றுமையுடன் வலங்கை 98 குலத்தினர், இடங்கை 98 குலத்தினர் ஆகியவர்கள் தாம் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய இராசகரம் இறை முறைமையையும், கோயிலுக்கு அளிக்க வேண்டிய வரிகளையும், தம்தம் நிலங்களின் தரத்துக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்துகொண்டனர், என்று வைகாவூர்க் கல்வெட்டுகள் கூறுகின்றன. நிலத்தின் தரங்கள் பின்வருமாறு பிரிக்கப்பட்டன: நெல்வயல்கள், உழவுக்குக் கொண்டுவந்த தரிசுகள், காடுகொன்று நிலமானவை, 'கடைப்பூ நிலங்கள்',

இறைப்பு நிலங்கள், வாழைத் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள், படுகைத் தாக்கிலுள்ள வாழை கரும்புத்தோட்டங்கள், செந்தாமரை பூக்கும் சதுப்புகள், மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு விளையும் தோட்டங்கள், வழுதுணைக்காய் (கத்தரிக்காய்), பூசணிக்காய் முதலியவை விளையும் நிலங்கள், நெல்லுப் பருத்தி, வரகு பருத்தி, கடுகு, பனிக்கடலை, கோதுமை, குசும்பை ஆகியவை விளையும் நிலங்கள், ஏரிவாய், தாங்கல்வாய், கொள் விளையும் புழுதி, எள் விளையும் புன்செய், தனிப்பருத்தி, தனி ஆமணக்கு, தினை, பனிவரகு, சாமை விளையும் நிலங்கள், வேதி கொழுந்து, ஒளி மூடு கொழுந்து விளையும் நிலங்கள், பாக்கு, தென்னை, பலா ஆகிய வான் பயிர் விளையும் நிலங்கள் என்பன அத்தரங்கள். இவ்வலங்கை இடங்கையினர் தாம் வீட்டுவரி வெலுத்தவும் ஒப்புக் கொண்டனர். தந்திரிமார் செட்டி, கைக்கோள நெசவாளர், சாலிய நெசவாளர், நியாயத்தார், மன்றாடிகள், சரிகைத் தறி நெய்வோர், குயவர், நாவிதர், வண்ணார், கள்ளக் காணன், வாணியர், பறையர், ஆகியவர்கள் மேல் தொழில்வரி விதித்தார்கள்.

அரசாங்க அதிகாரிகளும், சீவித நிலங்களின் உரிமையாளரும், காணியாளரும், பிராமணரும் அரசாங்கத்தின் சார்பில் வலங்கை – இடங்கையினரிடமிருந்து தண்டிய வரியைத் தாமே கையாடி வந்தனர். அதனால் இக்குலத்தினர் அவர்கட்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தரக் கூடாதென்றும், அவர்களுக்குக் கணக்கு எழுதக்கூடாது என்றும், அவர்கள் திட்டங்கள் எவற்றுக்கும் உடன்படக் கூடாதென்றும் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இவ்வொப்பத்தை மீறுபவர்களைக் கண்டஇடத்தில் குத்திக் கொன்றுவிட வேண்டுமென்றும், அவர்கள் கண்டிப்பான முடிவு ஒன்றை மேற்கொண்டனர். இச்செய்தியை விருத்தாசலம் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. இதேவிதமான ஒப்பந்தம் ஒன்றைத் தஞ்சை மாவட்டம்

கொறுக்கைக் கல்வெட்டு ஒன்றும் கூறுகின்றது. அவ்விடத்தில் வலங்கை தொண்ணூற்றெட்டுக் குலத்தினர், இடங்கை தொண்ணூற்றெட்டுக் குலத்தினர் ஆகியவர்கள் மேல் விதிக்கப்பட்ட வரிகள் அவர்களுடைய நிலத்தில் கிடைத்து வந்த வருமானத்தின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. அவ்வரிகளின் சுமையைத் தாங்கமுடியாமல் இவர்கள் ஊரைவிட்டு ஓடிவிடவும் எண்ணினர். தாம் ஒற்றுமையாக இராத காரணத்தால்தான் இக்கொடுங் கோன்மை நிகழ்ந்து வந்தது என்று அறிந்து தம் வருமானத்துக்கு ஏற்ற வரியையே கொடுப்பது என்றும், முறையற்ற வரிகளை எதிர்ப்பது என்றும் இவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

வலங்கை உய்யக் கொண்டான் குலத்தினர் வறுமை வாய்ப்பட்டவர்களாய் அரசாங்கத்தினிடம் மன்றாடித் தாம் செலுத்தி வந்த வரி விகிதத்தைக் குறைத்துக் கொண்டனர்.

வலங்கை இடங்கை மகன்மை என்றொரு வரி தண்டப்பட்ட தென்றும் அவ்வரித்தொகை கோயிலுக்குக் கொடுக்கப்பட்டதென்றும் திருவெண்காட்டுக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

இடங்கைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள குலங்களுள் சில வாணிகத்துடனும் உழைப்புடனும் தொடர்புடையன. அவர்கட்குப் பெரிய சுமையாக இருந்தது சுங்கவரி. இவ்வரியினால் வணிகர்கட்குப் பலவிதமான இடைஞ்சல் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள் சுங்கவரியை எதிர்த்துக் கலகங்கள் விளைத்தனர். திருவரங்கத்துக் கல்வெட்டுத் தெரிவிக்கும் கலகமும் அவற்றுள் ஒன்றாக இருக்கலாம் என்றும் ஐயுற வேண்டியுள்ளது. ஏற்கெனவே வலங்கையினருக்கும், பிராமணருக்கும் வேளாளருக்கும் அரசன் அளித்திருந்த சலுகைகளைக் கண்டு இடங்கையினர் பொருமிக் கொண்டிருந்தனர். அஃதுடன் சுங்கத்தின் சுமை வேறு அவர்களை வாட்டி வந்தது. சுங்கம் மனுவின் காலத்திலிருந்தே விதிக்கப்பட்டு வந்ததாகவும், மனு

தருமத்தில் சுங்கமும் ஏற்றம் பெற்றிருந்ததும் தெரிகின்றது. மிகப் பண்டைய அரசுரிமையின்றும் விலக்குப்பெறுவது அவ்வளவு எளிதன்று. விண்ணப்பத்தாலும் வேண்டுகோளினாலும் அதைச் சாதித்துக்கொள்ள முடியாது என்று இடங்கையினர் உணர்ந்தவர்களாய், வேறு ஒன்றும் சமாதானமாகச் செய்யமுடியாத நிலையில் உளம் கனன்று புரட்சியில் இறங்கலாயினர். அவர்கள் குடிமக்கள் செய்யக் கூடாத கொடுமைகளைச் செய்தனர். கோயில் ஒன்றை இடித்தார்கள். கொள்ளைக்காரர்கள் இவர்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டு கோயில் சிலைகளையும் மூலபண்டாரத்தையும் திருடிச்சென்றனர். இத்தகைய கலகங்கள் வேறு இடங்களிலும் ஏற்பட்டிருக்கக்கூடும். இவர்களுடைய வன்முறைச் செயல்கள் முதலாம் குலோத்துங்கனின் கருத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். அவன் வணிகரின் எதிர்ப்பின் நோக்கத்தை உணர்ந்து சுங்க வரியை நீக்கிவிட்டான். சுங்கத் தவிர்த்த சோழன் என்று ஒரு விருதும் அவனுடைய பெயருடன் இணைந்தது. வீரராசேந்திர சோழன் இறந்து அவனுடைய மகன் அதிராசேந்திரன் பட்டத்துக்கு வந்தான் (கி.பி.1070). அப்போது நாட்டில் பெருங் குழப்பமும் கலகமும் உண்டாயின. ஒரு கலகத்தின்போது அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். இடங்கையினரின் கலகங்கள் கோயிலுக்கும் கோயில் உடமைகட்கும் சேதம் உண்டு பண்ணினதுமின்றி ஒரு மன்னன் உயிரையே குடிக்குமளவுக்கு மிக வன்மையானதாக இருந்திருக்க வேண்டும்.

வலங்கையினருக்கும் கைக்கோளாருக்குமிடையே உரிமைகளுக்காகவும், விருதுகளுக்காகவும் பெரும் பூசல்கள் தேர்ந்துள்ளன.

சிலகுலத்தினர் ஒன்றுகூடி அரசியலிலும் அரசுரிமைப் போராட்டங்களிலும் தலையிட்டு வந்தனர் எனக் கல்வெட்டுச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. வடஆர்க்காடு மாவட்டம், செங்கம் இடபேசுவரர் கோயிலில் இக்கல்வெட்டு

அமைக்கப்பட்டுள்ளது. பல குலத்தினர் ஒன்றுகூடித் தமக்குள் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டனர். தாம் அனைவரும் குறிப்பிட்ட குறுநில மன்னன் ஒருவனுக்கே குடிகளாக வாழ்ந்து வர வேண்டியவர்கள் என்றும், அவனுடைய மகனோ ஏனைய தலைவர்களோ அரசுரிமை பாராட்டுவாராயின் அவர்களையும் அவர்களுக்கு உடந்தையானவர்களையும கொன்றுவிட வேண்டுமென்றும், அவர்களுடைய பெண்டிரைக் கற்பழிக்க வேண்டுமென்றும், அவர்களைச் சார்ந்தவர்களைக் குலநீக்கம் செய்யவேண்டுமென்றும், தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இந்த ஒப்பந்தத்தை மீறியவர்கள் 'புல்லுப்பறிக்கிற பறையருக்குத் தம் பெண்ணைக் கொடுத்த இழிவையடைந்தவர்களாவார்கள். தாயின் 'மிணாளன்' (மணாளன்) ஆன மாபாதகர்களாகக் கருதப்படுவர்; அது மட்டுமின்றி செவ்வாய்க்கிழமை தோறும், செயங்கொண்ட நாச்சியார் என்ற கிராம தேவதையின் முன்பு ஆடுகள் பலியாகும் இடத்தில் அவர்கள் நரபலியிடப்படுவார்கள் என்று அவ்வொப்பந்தம் சில தண்டனைகளையும் குறிப்பிடுகின்றது. 'நாட்டு நாயகம் செல்வோர்களும், மன்றாடு வோர்களும், பிள்ளை முதலிகளும், தனியாட்களும், கூலிச் சேவகர்களும், கோவிந்த விச்சாதிரும், நவிரமலைத் தென்பற்று நாட்டவரும், நாட்டு முதலிகளும் உள்ளிட்ட பல சனத்தோரும், அடிவாரத்து மலையாளரும், மலையாள முதலிகளும், பிள்ளை முதலிகளும், தனியாட்களும், கூலிச் சேவகர்களும், கோவிந்த விச்சாதிரும், நவிரமலைத் தென்பற்று நாட்டவரும், நாட்டு முதலிகளும் உள்ளிட்ட பல சனத்தோரும், அடிவாரத்து மலையாளரும், மலையரண் முதலிகளும், செட்டிகளும், வாணிகரும், கணக்கரும், கருமப்பெரும் பன்னாட்டவரும், பன்னாட்டுமுதலிகளும், பொற்கொற்ற கைக்கோளாரும், ஆண்டார்களும், சிவப் பிராமணரும், உவச்சரும், தென்கலை நாட்டு, வடகலை நாட்டவரும், தென்மலை நாட்டவரும்... புலவரும்

பண்ணுரவாரும், நியாயத்தாரும், பன்னிரண்டு பணி மக்களும் உள்ளிட்ட பெரும் வேடரும், பாணரும், பறையரும் இருளரும் உள்ளிட்ட அனைத்துச் சாதிகளும், அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக அனைத்துச்சாதிகளும்... இவ்வொப்பந்தத்தில் கையொப்பம் செய்துள்ளனர். இக்கல்வெட்டின் காலம் கி.பி.1250. அக்காலத்தில் உயர்ந்த குலம், அந்தணர் குலம் என்றும், மிகத் தாழ்ந்த குலம் அரிப்பர் குலம் என்றும் அறிகிறோம். அரிப்பர் என்போர் மணலையரித்தும் பொன்னெடுப்போர் ஆவர்.

வலங்கை-இடங்கைப் பிரிவுகளல்லாமல் இரதகாரர் என்று வேறு ஒரு குலப்பிரிவும் இருந்ததாகவும், அவர்கள் அனுலோமர்கள் என்றும் சில கல்வெட்டுகள் கூறுகின்றன. உணர்குலத்துத் தந்தைக்கும் தாழ்குலத்துத் தாய்க்கும் பிறந்தவர்கள் அனுலோமர் எனப்படுவர். த்திரிய தந்தைக்கும் வைசிய தாய்க்கும் பிறந்தவர் மாகிஷ்யர்கள்; வைசிய தந்தைக்கும், சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்கள் கரணீகள்; மாகிஷ்யர் தந்தைக்கும் கரணீ தாயக்கும் பிறந்தவர்கள் இரதகாரர்கள்; யாக்ஞவல்கியர், கௌதமர், கௌடில்யர் ஆகியவர்களின் சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த இரதகாரர்கள் இன்ன தொழிலில்தான் ஈடுபடலாம் என்று இராசாசிரய சதுர்வேதி மங்கலத்துப் பிராமணர்கள் விதிகள் வகுத்தனர். அவற்றின்படி, கட்டடம் கட்டுதல், இரதங்களைச் சமைத்தல், வேதியரின் வேள்விகளுக்கு வேண்டிய சட்டுவங்கள், தட்டுகள், முதலியவற்றைச் செய்து கொடுத்தல், மண்டபங்களைக் கட்டுதல், மன்னர்களுக்கு மணிமுடிகள் வனைதல் ஆகிய பணிகள் இரதகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வகுப்பினருக்கு உபநயனம் செய்து கொள்ளும் உரிமையுண்டு. இரதகாரர்கள் பிரதிலோமர்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

குலங்கள் ஒன்றோடொன்று கலந்ததினால் பல புதிய குலங்களும் நூற்றுக்கணக்கில் தோன்றலாயின.

பறையர் என்ற குலத்தினரைப்பற்றி இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் பல செய்திகள் கிடைக்கின்றன. பறையர்கள் தனித்தனிச் சேரிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கெனத் தனிச் சுடுகாடும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஏனைய குலத்தினரைப் போலவே அவர்கள் முழுச் சொத்து உரிமை பெற்ற குடிகளாக வாழ்ந்தனர். கிராமத்தார்கள் எழுதிக்கொடுத்த ஆவணங்களில் பறையர்கள் கையெழுத்து இட்டுள்ளனர். சோழர் காலத்தில் தீண்டாதவர்கள் என்றோ தீண்டாளர்கள் என்றோ இவர்கள் அழைக்கப்படவில்லை. ஆனால், புல்லுப் பறிக்கிற பறையன் தாழ்ந்தவனாகக் கருதப்பட்டான். அஃதுடன் ஆவுரித்துத் தின்று வாழ்ந்த புலையரும் சமூகத்தில் தாழ்ந்தவராகக் கொள்ளப்பட்டனர். இக்குலத்தினருள் 'ஊர்ப்பறையன்' என்ற ஒரு பிரிவினரும் இருந்தனர். ஊர்ப்பறையன் மண்டை சோமநாதன் ஏழிசை மோகப்படைச்சன் என்பான் ஒருவன் முதலாம் இராசராசன் காலத்தில் கோயிலில் சந்திவிளக்கு ஒன்று ஏற்றி வரத்தானம் அளித்துள்ளான். பறையடியான் ஒருவன் திருக்கழுக்குன்றம் கோயிலில் விளக்கு ஒன்று எரிக்க ஏற்பாடுகள் செய்து வைத்தான். வேறு பலரும் கோயில்களுக்குத் தானம் அளித்த செய்திகள் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. ஆனால், கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் திருக்காவலூர்ப் பகுதியில் பறையர் மிகவும் இழிந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

பறையருக்கும் ஏனைய குலத்தினருக்குமிடையே அடிக்கடி பூசல்கள் விளைந்ததுண்டு. கற்றுப்பட்டு, பாகனேரி என்ற ஊர்களையுள்ளிட்ட இருபத்து நான்கு ஊர்களின் குடிமக்களுக்கும் பறையருக்குமிடையே பூசல் ஏற்பட்டது. பறையர் செய்து வந்த ஊழியத்துக்குத் தக்க கூலியை அக்குடிமக்கள் கொடுக்கவில்லை என்பதுதான் அப்பூசலுக்குக் காரணம் என அறிகின்றோம். இரு கட்சியினரும் ஒருவரோடு ஒருவர் கை கலந்தனர்.குருதி சிந்திற்று. கங்கைராயன் என்பான் ஒருவன் தலையிட்டுப் பூசலைத் தீர்த்து வைத்தான்.

குடிமக்கள் பறையருக்குச் சில உரிமைகள் வழங்கவேண்டுமென்றும், சுப, அசுப காலங்களில் அவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு அறுவடைப் பண்டங்களை அளக்க வேண்டுமென்றும் அவன் ஏற்பாடுகள் செய்து கொடுத்தான்.

பிராமணரையும் வேளாளரையும் எதிர்த்தும் கலகங்கள் அமைந்துள்ளன. இவ்விரு வகுப்பாரையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களுக்கு இருபதினாயிரம் காசுகள் தண்டம் விதிக்கப்படும் என்றும், தண்டம் செலுத்தத் தவறினால் குற்றவாளிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் மூன்றாம் குலோத்துங்கனின் ஆணை ஒன்று பிறந்தது. கவுணியன் ஸ்ரீ கபாடன், ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீகபாடன் பெரியாண்டான் ஆகியவர்கள் கலகம் செய்து அரிநாராயணன் என்ற பிராமணன் வீட்டுக்கு எரியூட்டியதாகவும் அதற்காக அவர்கள் தண்டம் விதிக்கப்பட்டதாகவும் கீழையூர்க் கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகின்றது. கவுணியன் ஸ்ரீகபாடன் என்பவன் சிவப்பிராமணன் ஆவான். அந்தணருக்கே இக்கோத்திரம் உரியது. பிராமணர்கள் பிராமணரையே எதிர்த்துக் கலகம் விளைத்துள்ளனர். எனவே, பிராமணருக்குள்ளேயே பூசல்களும், கலகங்களும் நேரிட்டிருக்கின்றன என்று கொள்ள வேண்டியுள்ளது.

கோயிலின் கொட்டு மேளங்களிடையே, பதியிலாரும் தனிச்சேரிப் பெண்களும் ஆடிய இசைக் கூத்துக்களினிடையே, அந்தணர் ஆற்றிய வேள்விகள், ஓதிய மறையொலி ஆகியவற்றுக்கிடையே, பேரரசர்களும், சிற்றரசர்களும் ஆங்காங்குக் கொண்டாடிய விழாக்கள், களியாட்டங்க ளினிடையே குடிமக்கள் வாழ்வில் ஆழ்ந்த சாதிப்பிளவுகளும், உரிமைப் போராட்டங்களும் வரிச்சுமைப் பாரமும், ஏழ்மையும், பஞ்சமும் அவர்களுக்கு அளவற்ற இன்னல்களையும், சீர்கேட்டையும் விளைவித்து வந்தன. தாம் பிறந்த குலத்தின் காரணமாகவும் தாம் செய்து வந்த தொழிலின் காரணமாகவும், தாம் விளைவு செய்த பண்டங்களின்

காரணமாகவும், பலவகையான வரிகளையும், கட்டணங்களையும், கடமைகளையும், மகன்மைகளையும், சுங்கங்களையும் அரசாங்கத்துக்கும் கோயில்களுக்கும் செலுத்த வேண்டியவர்கள் ஆனார்கள். சோழர்கள் காலத்தில் குடிமக்களின் மேல் விதிக்கப்பட்ட வரிகள் நானூற்றுக்கும் மேற்பட்டிருந்தன எனக் கல்வெட்டுகள் கூறும் செய்திகளால் அறிகின்றோம்.

குடிமக்களின் வரிப்பணத்தைக்கொண்டும் பகைவரிடம் கைப்பற்றிய பொருள், கவர்ந்த திறைகள் ஆகியவற்றைக் கொண்டும் மன்னர் கோயில்கள் எழுப்பினார்கள்; மடங்கள் அமைத்தார்கள். அக்கிரகாரங்களையும் நூற்றுக்கணக்கான சதுர்வேதி மங்கலங்களையும் நிறுவினார்கள். கோயில்களிலும், மடங்களிலும் வேதம் முழங்கிற்று. 'குழல் ஒலி, யாழ் ஒலி, கூத்தொலி, ஏத்தொலி, விழவொலி விண்ணளவுஞ்சென்று விம்மின. சிதம்பரம் தேவரடியார்களுக்குத் தனித்தனி இல்லங்களும், தெருக்களும் எடுக்கப்பட்டன. ஆனால், கிராமங்களையும் ஊர்களையும், அடுத்து இருந்த புலைப்பாடியில் பழங்கூரையுடைய புல்குரம்பைச் சிற்றில்கள் நெருக்குண்டு காணப்பட்டன. ஆங்குப்பிறந்து வளர்ந்த குழந்தைகள். 'கார் இரும்பின் சரி செறிகைக் கருஞ்சிறார்களாகக்' காட்சியளித்தனர். அப்பாடியில் வாழ்ந்திருந்த புலையர்கள் 'ஊரில் விடும் பறைத்துடவை உணவு உரிமையாகக் கொண்டு சார்பில் வரும் தொழில் செய்வார்.' குடிமக்கள் நெஞ்சில் குமுறல்களும், ஏமாற்றமும் ஏக்கமும் வளர்ந்து சாதிப் பூசல்களாகவும், கலகங்களாகவும் கவடு விட்டுப் படர்ந்தன.

தொகுப்பு: ஞானி

-டாக்டர் கே.கே.பிள்ளை

நூல்: "தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்"

பக்கம்: *313-326.*

~~*

பரிமாணம் - 11

மே 1981

நாம்

"நமது இயக்கம் சீர்திருத்த இயக்கம் அல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவத் தன்மைக்கு மத சம்பந்தமாக, கடவுள் சம்பந்தமாக, பொருளாதார அரசியல் சம்பந்தமாக அனுகூலமானவை இல்லை. ஆகவே எப்படி சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தம் இவை இன்னும் நெடுங்காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாய்ப் போவதற்கு இடையூறாய் கடவுளும், மதமும், அரசாங்கமும் குறுக்கே போடப்படுகின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொதுநலச் சேவைக்காரர்கள் அல்ல. புரட்சிக்காரர்கள். நமக்கு சீர்திருத்தக்காரர்களும் பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள். தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும் குஷாலாகச் செய்ய வேண்டியதுதான்"

பெரியார் 30-1-33

1. நம்பார்வை

- *உலகத் தமிழ் மாநாடு, இலக்கு கலாச்சார இயக்கம் எதிர்பார்த்தபடியே ஆரவாரமாக நடந்து முடிந்துள்ளது. உலகத் தமிழ்க் கருத்தரங்கைத் திட்டமிட்டுத் தொடங்கியவர்களுக்கு மாநாட்டில் மரியாதை இல்லை. அந்த இடங்களில் கொலு பொம்மைகள் அமர்ந்திருந்தனர். பொதுநிலை மாநாட்டுக்கும் ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கும் தர அளவில் வேறுபாடே இல்லை. பெருஞ்சித்திரனாருக்கும், சிவத்தம்பிக்கும் கொடுக்கப்பட்ட 'மரியாதை' தேவையானதுதான். தமிழ் வளர்ச்சிக்கான மாநாடு இது என்று இவர்கள் எப்படித்தான் நம்பினார்களோ! ஆய்வாளர்கள் மட்டும் கூடும் இன்னொரு உலகக் கருத்தரங்கை நாம் வரவேற்கிறோம். தஞ்சையில் உருவாக்கப்படவிருக்கும் உலகத் தமிழ்க் கழகம், இன்னொரு சுமையாகவே இருக்கும். தமிழால் உயிர் பிழைப்பவர்கள் தமிழைச் சாகடிப்பதிலும் தம்மை வாழ்வித்துக் கொள்கின்றனர்.*
- *உலக நிலைமைகளில் மீண்டும் ஒரு கொந்தளிப்பு உருவாகிறது. ஏகாதி பத்தியங்களின் கொள்ளைகளும் கொடுங்கோன்மையும் உலகெங்கிலும் பல எரிமலைக் கிடங்குகளைத் தோற்றுவித்துள்ளன. ஜனநாயகம் எல்லா இடங்களிலும் சவக்குழிக்குப் போகிறது. இந்தியாவிலும் இதே நிலை. கலை இலக்கியம் பண்பாடு திறனாய்வு முற்போக்கு என்று மொட்டையாகப் பேசுவதன் பொய்ம்மை வெளிப்படையாகத் தெரிகிறது. 'இனி ஒரு விதி' செய்யக் கலை இலக்கிய வாணர்கள் முன்வர வேண்டும்.*
- *பரிமாணம் தொடர்ந்து வெளிவரும், 10 இதழ்கள் இதே வடிவில். நண்பர்கள் ஒத்துழைப்பைத் தொடர்ந்து வேண்டுகிறோம். பெரியாரியம் – கட்டுரைகள் பற்றிய திறனாய்வுகளை வரவேற்கிறோம்.*

- ஜி. நாகராஜன் மறைவு குறித்து பரிமாணம் வருந்துகிறது. மார்க்சியம் பற்றி அவரது படிப்பும், விமர்சனங்களும் விரிவானவை. 'மார்க்சியவாதிகளும் மனைவிகளும்' என்று ஒரு சிறுகதைத் தொகுதி கொண்டு வர வேண்டும் என்று அவர் விரும்பியிருந்தார். எல்லாமே 'காற்றோடு' போய்விட்டன. இதற்காகவும் பரிமாணம் வருந்துகிறது.

2. மார்க்சியமும் பெரியாரியமும்:

- குணா

பொதுவுடைமைக் கொள்கையைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி யவர்களில் சிறப்பானவர்கள் மா.சிங்காரவேலரும் பெரியாரும் ஆவார். சிங்காரவேலரின் அறிவியல் விளக்கங்களையும் பொதுவுடைமைக் கருத்துக்களையும் 1025-ஆம் ஆண்டு தொட்டுத் தாம் நடத்தி வந்த 'குடியரசு' என்னும் வார ஏட்டின் வாயிலாகவும் குறுநூல்களின் வாயிலாகவும் வெளியிட்டு அறிமுகப்படுத்தியவர் பெரியார். அவர்களுடைய நட்பு அவர்களைப் பிணைத்து நின்ற கொள்கை வழிப்பட்டது.

1925-ஆம் ஆண்டில் பார்ப்பனரின் கோட்டையாகச் செயல்பட்டு வந்த பேராயக் கட்சியிலிருந்து வெளியேறிய பெரியார், தன்மான இயக்கத்தைத் தொடங்கினார். பார்ப்பன மறைகளையும் தொன்மக் கதைகளையும் புரட்டுகளையும் சாதி வண்ண அமைப்பையும் எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய பெரியாருக்கு சிங்காரவேலர் தோளோடு தோள் நின்றார். சிங்காரவேலருக்கு வழிச் செலவு தந்து அழைத்து அவரைத் தன்மான இயக்கத்தின் கொள்கைத் திட்டத்தை வரையச் செய்த செய்தியை பெரியாரே குறிப்பிட்டிருக்கின்றார்.

மார்க்சும் எங்கெல்சும் 1847-ஆம் ஆண்டில் வரலாறு படைத்த பொதுவுடைமைக் கட்சி அறிக்கையை வெளியிட்டனர். அதனைத் தமிழாக்கி 1931-ஆம் ஆண்டில் (4-10-1931 இதழ்) குடியரசு என்னும் தன்னுடைய ஏட்டில் முதன்முதலில் வெளியிடச் செய்தவரும் பெரியாரே ஆவர்.

1932-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் மே 19 வரை சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் செய்து விட்டு நாடு திரும்பிய பெரியார், முனைப்புடன் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்பி வரத் தொடங்கினார். இலங்கை வழியாகத் தாயகம் திரும்பிய பெரியார், "உலகிற்கு அரசன் அரசாட்சி என்பதாக ஒருவன் இருந்து வருவதன் காரணமெல்லாம் கூடச் செல்வர்களின் செல்வங்களைக்

காப்பாற்றவும் சோம்பேறி வாழ்க்கைகளையும் அவர்களது தத்துவங்களையும் பிறர் இகழாமல் இருக்கவுமே ஒழிய, மற்றபடி மக்கள் சமூகம் துன்பப்படாமலோ மற்றவர்களால் கொடுமைப்படுத்தப்படாமலோ, அனைத்துத் துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியோடு நம்புங்கள்'' (இலங்கைப் பேருரை – பக்கம் 10) என்ற கருத்தும் அன்றைய சோவியத் நாட்டில் கண்ட எழுச்சி பயக்கவல்ல மாற்றங்களைக் கண்டதால் உதிர்த்த அரசியல் சிறப்புடையது. குடியரசு ஏட்டில் மீண்டும் அவர்,

“பொதுவுடைமைக் கொள்கையின் இறுதிக் குறிக்கோள் உலகம் முழுவதும் ஒரு குடும்பம் – உலக மக்கள் யாவரும் உடன்பிறப்புக்கள் உலகத்தில் உள்ள செல்வம், இன்பம், இன்பதுன்பங்கள் முதலியவை யாவும் அக்குடும்பச் சொத்து, குடும்ப

இருந்த சோவியத் நாட்டைப் பற்றிப் பெரியார் கொண்டிருந்த உயர்ந்த மதிப்பை அறிய உதவுகின்றது. அத்தகைய கருத்துக்களைப் பெரியார் பரப்பியதற்கு,

30-12-1933-இல் அவரை ஆட்சிக்கு எதிர்ப்பானவராகக் கருதி ஆங்கிலக் குடியேறி அரசு பெரியாரைச் சிறையில் அடைத்தது. காந்தியைப் பற்றியும் பேராயக் கட்சியைப் பற்றியும் திராவிட நாடு கோரிக்கை பற்றிய சிக்கல்களையும் விளைவுகளையும் கருதி, பின்னர் அவருடைய பொதுவுடைமை ஆர்வம் தொய்வடைய நேர்ந்தது.

உடன்பாடு தேவை: இந்நிலையில் பெரியாருக்கும் தமிழகப் பொதுவுடைமை யருக்கும் ஏற்பட்ட பிணக்கும் ஒரு வரலாறு. அத்தகைய பிணக்கு முற்றி வழக்காடல்கள் பெருத்தபோதும், பெரியார் பார்ப்பனர் தலைமையிலான பொதுவுடைமையரையும் அவர்களின் புரட்டல் கொள்கைகளையும் சாடினாரே அன்றி, பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராகத் திரும்பினாரில்லை. சிங்காரவேலருடன் தோளோடு தோள்நின்று முன்னர் பொதுவுடைமைக் கருத்துகட்கு வித்திட்ட பெரியார், பின்னர் பொதுவுடைமையரிடமிருந்து விலகிச் சென்றதற்குரிய

பெரும் பழியைத் தமிழகப் பொதுவுடைமையரே தாங்கிக் கொள்ள வேண்டும். அந்தப் பிளவுக்குரிய காரணத்தை விளக்குவதற்கு முன், பெரியார் சிந்தனையின் முதன்மைக் கூறுகளை ஆய்வதும், அத்துறையில் தமிழகப் பொதுவுடைமையர் கொண்டிருந்த மலட்டுத் தனமான வரட்டு நிலைபாடுகளை ஆய்வதும் இங்கு பொருந்தும்.

பெரியாரின் சிந்தனையின் சிறப்புக் கூறுகளைப் பின்வருமாறு அமைக்கலாம்.

1) கடவுள் மறுப்பு - மத எதிர்ப்பு - மூட நம்பிக்கை எதிர்ப்பு
2) பார்ப்பனியச் சாதி எதிர்ப்பு - தீண்டாமை எதிர்ப்பு
3) இன விடுதலை – தனிநாடு கோரிக்கை
4) இந்தி எதிர்ப்பு
5) முதலாளியத் தேர்தலில் – அரசியலில் பங்கு பெறாமை
6) சீர்திருத்த இயக்கத்தை வளர்ப்பது
7) பெண் விடுதலை – என்பன அவை

அதற்கு நேர்மாறான நிலைகளைத் தமிழகப் பொதுவுடைமையர் கொண்டிருந்ததற்குரிய காரணங்கள்:

1) பார்ப்பனத் தலைமை, சாதிகள் தானாக மறைந்து விடும் எனச் சொல்லிச் சித்தாடியது. கீழ்ச்சாதித் தொழிலாளர் தலைமை உருவாகாமல் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டது.

2) மார்க்சியத்தை வெற்றுப் பொருளியல் கொள்கையாக மட்டுமே உருக்குலைத்து – தங்களை ஒரு சோற்றுக் கட்சியினராக மாற்றிக் கொண்டு – பொருளியல் அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ள மேலடுக்குகளாகிய மெய்யியல், சமயம், மதம் பார்ப்பனிய மறைகளும், தொன்மங்களும், தீண்டாமை வழிநின்ற சாதி அமைப்புகள், மூடப்பழக்க வழக்கங்கள், கலை, இலக்கியம் ஆகிய துறைகளைச் சுற்றிய கருத்துப் போராட்டத்தினைப் புறக்கணித்தது.

3) நாட்டினங்களின் சிறைக்கூடமாகிய பன்னாட்டின அரசே 'இந்தியா' என்னும் கொள்கையை வஞ்சித்து, 'ஓர் இந்தியா' (பாரதம்) என்னும் புதிய பார்ப்பனிய சூழ்ச்சிக்கு இரையானது. தமிழின விடுதலைக்கு எதிர்ப்பாகச் செயல்பட்டது. தனியரசுரிமை, தனியுரிமை, தன்னுரிமை என்பனவற்றின் அடிப்படையில் தனி நாட்டுரிமை (right of self-determination) பற்றி இலெனின் வகுத்த தலைசிறந்த கொள்கையை கைவிட்டு, புதிய பார்ப்பனியப் பெருநிலக்கிழமை – தரகு பெருமுதலாளிய வட இந்திய வல்லரசுடன் சோரம் போனது. முதல் எதிரி யாரென அறியாது, திராவிட அல்லது தமிழக விடுதலை என்னும் போர் முழக்கத்தை முன்வைத்த தமிழகக் குட்டி முதலாளிய – தேசிய முதலாளிய வகுப்புகளைத் தன்னுடைய நட்பு அணியாகப் பாராமல், அவற்றை எதிர்க்க வரிந்து கட்டிக் கொண்டு வடநாட்டு மார்வாரி - குசராத்தி நலன்களோடு உறவு கொண்டது. அதாவது, எதிரி யார் நண்பன் யார் என்று அறியாத நிலை – நண்பனை எதிரியாக்குகின்ற, எதிரியை நண்பனாக்குகின்ற குழறுபடி.

4) தமிழகத்தின் தனித்தன்மைகளையும் தனி முரண்பாடுகளையும் பற்றிய தொடக்க அறிவே இல்லாமல் பிறநாட்டுப் புரட்சிகளைப் பற்றியே எண்ணியும் வரட்டுத்தனமாகப் பேசியும் வந்த மண்ணுக்கு ஒட்டாத அயல்-புலப் பார்வை, சுருங்கச் சொல்வதெனின், மார்க்சிய, இலெனினியக் கோட்பாட்டை மண்ணுக்கும் சூழலுக்கும் ஏற்ப ஆக்க முறையில் பழகாத மலட்டுத்தனமும் வரட்டுத்தனமும்.

5) இந்தி வழியாக வடக்கத்திய இந்தியத் துணை வல்லரசு நடத்திய பண்பாட்டுத் தாக்குதலை எதிர்க்காமல், சில நேரங்களில் ஐந்தாம் படை வேலையைச் செய்தது.

6) முதலாளியத் தேர்தல் முறையில் சிக்குண்டு புரட்சிக் கொள்கையையும் நடைமுறையையும் கைவிட்டு மக்களிடமிருந்து தனிமைப்பட்டது.

7) தமிழையும் தமிழ் மக்களையும் மொழிப்பற்றையும் சிறுமை செய்து மக்களுக்குப் புரியாத இடைக்கால நடையில் எழுதி வந்தது போன்றன என்று கூறலாம்.

அத்தகைய முரண்பட்ட போக்குகளால், தமிழ் மக்களின் விடுதலைக் காலம் தாழ்த்தப்பட்டு விட்டது. பெரியாரின் திராவிடர் இயக்கமும் தமிழகப் பொதுவுடைமை இயக்கமும் இணைந்து செயல்பட்டிருந்தால், இந்நேரம் தமிழகம் புரட்சிகர மாற்றங்களைக் கண்டிருக்கும். இவ்விரு இயக்கங்களுக்கு இடையிலான பிளவின் இடைவெளி குறைக்கப்பட வேண்டிய தேவையை வரலாறு இன்று உணர்த்துகின்றது. இவ்விரு இயக்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டை பகையற்ற முரண்பாடாகக் கருதி, கொள்கைப் போராட்டம் - திறனாய்வு – வென்றெடுத்தல் என்னும் முறையில் அதற்குத் தீர்வு காணவேண்டும். பகை முரண்பாடாக இனியும் அதை விட்டு வைப்பது ஆகாது.

அத்தகைய வரலாற்று உடன்பாடு மீண்டும் தோன்ற வேண்டுமாயின், தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தினர் செய்ய வேண்டியன சில. அவை:

1) புதிய பார்ப்பனிய முதலாளியத் தலைமையைத் தூக்கி எறிய வேண்டும்.

2) மார்க்சியப் புரட்டலைக் கொள்கை வழியில் வீழ்த்தி அதனுடைய புரட்சிக் கோட்பாட்டை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும்.

3) புரட்டல் கொள்கைக்கு வித்திடுகின்ற முதலாளியப் பாராளுமன்ற வழியை விட்டொழிக்க வேண்டும்.

4) மார்க்சியமெனும் உலகம் தழுவிய அறிவியலைத் தமிழ் மண்ணுக்கு ஏற்பப் பழகவேண்டும்.

முதலாளியத்திற்கு முந்திய சாதி வகுப்புகளை எதிர்ப்பதை வகுப்புப் போராட்டத்துடன் இணைக்கவல்ல கொள்கைத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

5) இந்தியப் புரட்சி என்னும் ஒரே கால 'குட்டி உலகப் புரட்சி' டிராட்சியத்தின் வீச்சுக்கு உட்பட்டது. அந்த டிராட்சிய குழப்பத்திலிருந்து விடுபெற வேண்டும். புரட்சிக்கான மூளையையும், திட்டத்தையும், அறிவையும் இறக்குமதி செய்யாமல் சிந்தனையிலும் செயலிலும் தற்சார்பு நிலையைப் பெற வேண்டும்.

6) தமிழ் மக்களின் குமுகாய உளவியலையும் மொழியையும் மக்களையும் பிற வரலாற்று நிலைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

7) முறையான வகுப்பு ஆய்வு வேண்டும்; நண்பனையும் பகைவனையும் வகுப்பாய்வு செய்து தீர்மானிக்க வேண்டும்.

8) தமிழ் மக்களுக்கும் வட இந்திய வல்லரசுக்கும் இடையிலான முரண்பாடு உழவர் வகுப்பினர்க்கும் அரை நிலக்கிழமை முறைக்கும் இடையிலான முரண்பாடு, முதலாளிய வகுப்பிற்கும் பாட்டாளி வகுப்பிற்கும் இடையிலான முரண்பாடு, இந்திய பெருமுதலாளியத்திற்கும் தமிழ்நாட்டின் முதலாளிக்கும் இடையிலான முரண்பாடு, புதிய பார்ப்பனிய அதிகார வகுப்பிற்கும் கீழ்ச்சாதி மக்களுக்கும் இடையிலான முரண்பாடு எதுவென அறிதல்வேண்டும். சோவியத்–அமெரிக்க வல்லரசுகளின் முட்டுத் தாங்கி களைக் கொண்டு விளங்குகின்ற இந்தியத் துணைவல்லரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்பதை உணரவேண்டும். அயல் வல்லரசுகளின் சுரண்டலும் முதலீட்டு வேட்டையும் தில்லி வழியாகவே தமிழகத்திற்குள்

புகமுடியும். ஆகவே, வல்லரசு எதிர்ப்பு என்னும் கடமையை உருப்படியாக உருவகப்படுத்த தில்லியையே இலக்காக அமைத்தல் வேண்டும். இவ்வகையில், திராவிடர் இயக்கத்துடன் இழந்த உறவுகளை மீட்க இயலும்.

ஒன்றே போல் வேறாம்: அதனால், பெரியாரினுடைய சிந்தனைக்கும் மார்க்சியத்திற்கும் இடையே வேற்றுமையே இல்லை என்றாகாது. வேற்றுமையும் இல்லாமல் போய்விட முடியாது. மார்க்சிய கொள்கை பெரியாருடைய கொள்கையிலிருந்து மாறுபடுகின்ற இடங்களையும் முறைகளையும் எடுத்தாய்வதும் நன்மை பயக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ள வழி வகுக்கும்.

மார்க்சிய அறிவே பொதுவுடைமை இயக்கத்தில் அடிப்படை. அம்மார்க்சியத்தின் கூறுகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1) மார்க்சிய உலகப் பார்வை
2) மார்க்சிய முறையியல் (Methodology)
3) வகுப்புப் போராட்டக் கோட்பாடு
4) புரட்சியின் போர்த் தந்திரத்தையும் செயல் தந்திரங்களையும் விளக்குகின்ற புரட்சிக் கோட்பாடும் ஈடுபாடும்.
5) சமூகப் பொருளியல் ஆய்வு.
6) கலை, இலக்கியம், சமயம், ஒழுக்கம், பண்பாடு, வழக்காடுகள், நம்பிக்கைகள் போன்ற மேலடுக்குகளைப் பற்றிய அறிவு விளக்கமும் நிலைபாடும்.

மாந்தரின் உள்ளத்திற்கும் எண்ணத்திற்கும் அப்பால் தனித்து இருக்கும் புறநிலை மெய்ம்மையை புற உலகு ஆகுமென மார்க்சியம் கருதுகின்றது. அதுவே மார்க்சியத்தின் உலகப்பார்வை. அப்புற உலகின் நிழல்கள் மாந்தரின் புலன்களின் மீது ஏற்படுத்துகின்ற அழுத்தங்களே புலனுணர்வுகள். அத்தகைய புலனுணர்வுகளும் தன் வினைச்செயல்களும் (reflexes) அப்புற மெய்ம்மைகளைப்

பற்றி கருத்துக்களுக்கு வித்திடுகின்றன. அது மூளையில் நிகழ்கின்றது. அத்தகைய கருத்துக்கள் மூளையில் தொகுக்கவும் பகுக்கவும் மீண்டும் – தொகுக்கவும் பெறுவது என்னும் தொடர் இயக்கத்திற்கு உட்பட்டு இடையறாது இயங்குகின்றன. அதையே எண்ணம் அல்லது சிந்தனை என்று மார்க்சியம் குறிப்பிடுகின்றது.

அந்த எண்ணம் பயக்கின்ற அகநிலை இயக்கம் புறப்பொருளையும் புற உலகையும் அடியொற்றி இருக்கின்றது. புற மெய்மையைப் பற்றியும் தன்னைப் பற்றியும் மாந்தன் கொண்டிருக்கின்ற தன்னுணர்வே அந்த அகநிலை. அகத்தின் மீதான பதிவுகளில் இயக்கமாகிய எண்ணம் அத்துடன் நின்று விடாமல், புறத்தை மாற்றவல்ல உள் ஆற்றலாக – கற்பனையாக – மீண்டும் உருவெடுக்கின்றது. திரும்பவும் புறத்திற்கு திரும்புகின்றது. புறப்பொருளிலிருந்து எண்ணத்திற்கு – மீண்டும் எண்ணத்திலிருந்து பொருளுக்கு – என்று இதனுடைய இயக்கத்தைச் சுருங்கச் சொல்லலாம்.

பொருளுக்கும் கருத்துக்கும் இடையிலான உறவைப் பற்றி விளக்கப் புகுந்த விளக்கங்கள் பல. பொருள் முதலில் வந்ததா, கருத்து முதலில் வந்ததா என்பது கேள்வி. அக்கேள்வி மக்களினம் பண்படவும் சிந்திக்கவும் தொடங்கிய நாள் முதல் எழுப்பப்பட்டு வருகின்ற அடிப்படைக்கேள்வி. பொருளை அறிவின் ஊற்றுக் கண்ணாகக் கருதுபவர்கள், பொருள்முதல் கொள்கையைச் சார்ந்தவர்கள், கருத்துத்தான் புறபொருட்களைப் படைக்கின்றது என்று வழக்காடுபவர்கள், கருத்துமுதல் கொள்கையினர். பொருளைப் முதன்மைப்படுத்தியவர்கள் உலகம் மெய் என்றனர். கருத்தை முதலில் வைத்தவர்கள் உலகம் பொய் என்றனர்.

உலகத்தையும் பொருட்களையும் உள்ளத்தையும் இயக்குவிப்பது. அவ்வவற்றிற்குள் அமைகின்ற அகப் புற முரண்பாடுகளே என்பது இயங்கியலின் கருத்து. அவை அவற்றிற்குரிய இயற்கை (இயல் – கை) என்பதும் அவர்களின் நிலை. ஆகவே தோற்றமும் முடிவும் இன்றி,

ஒன்று மற்றொன்றாக இயற்கைப் பொருட்கள் இடையறாது முரண்படவும் மாறுபடவும் படிமுறை வளர்ச்சிக்கு உட்படவும் செய்வதே, இயற்கையின் இயல்பு என்பது அது தருகின்ற விளக்கம். மார்க்சியப் பொருள் முதலார், இயற்கை உலகம் எவராலும் படைக்கப்படவில்லை என்று அடித்துச் சொல்கின்றனர். அதனையே இயங்கியல் பொருள் முதலியல் என்பர். மாறாக, பொருட்கள் தத்தமக்குள் உள்ளடங்குகின்ற முரண்பாடுகள் அளவால் முற்றி படிமுறை வளர்ச்சிக்கு உட்பட்டு – ஒன்று மற்றொன்றாக இயல்பால் திரிகின்ற இயங்கியலை உலகில் இயற்கை என்பதை மறுப்பவர்கள் இயங்காவியலார் (Metaphysicists). அவர்களில் சிலர் ஆண்டவனால் படைக்கப்பட்ட உலகங்களும் இயற்கையும் உயிர்களும் மாறாமல் மருவாமல் இருப்பதாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர் பொருட்கள் இயங்குவதை ஏற்றுக்கொள்வர். ஆனால், நியூட்டனின் எந்திரவியல் விதிகட்கு உட்பட்ட – கண்ணுக்குத் தெரிகின்ற இயக்கத்தை மட்டுமே அவர்கள் உண்மை என்பர். கண்ணுக்குப் புலப்படாத உயிர்வினை, உள்ள இயக்கம் போன்ற நுண் இயக்கங்கள் உயிர்ப்பொருட்களின் உயிர்க் கூறுகளுக்கு உள்ளடங்குகின்ற முரண்பாட்டால் விளைவதை அவர்கள் பெரிதாகக் கொள்வதில்லை. சிலபோது பேரியக்கத்து விதிகளை நுண்ணியக்கத்தை விளக்குவதற்குப் புகுத்தி, அந்த இருவேறு நிலைகளையும் – அவ்விரு வேறு இயக்க வடிவங்களுக்கு உரிய விதிகளையும் - போட்டுக் குழப்பிக்கொள்வர். ஆகவே இயங்காவியலிலும் பல கோணங்களும் சாய்வுகளும் உண்டு. உலகம் பொய்யாயினும் மெய்யாயினும் அவற்றைப் புறத்திலிருந்து படைக்க அல்லது இயக்க ஓர் ஆற்றல் வேண்டும் என்பது சமயங்களின் கருத்து. அத்தகைய சமயங்களை வரட்டுக் கொள்கைகளால் உரம் ஏற்றி அதற்குரிய சடங்குகளையும் வழிபாடுகளையும் அமைப்புகளையும் உருவாக்கிக் கொண்ட நிலையே மதம்.

மார்க்சியம் அத்தகைய புறக்காரணக் கோட்பாட்டை ஒப்புவதில்லை. எப்பொருளுக்கும் உள்ளடங்குகின்ற முரண்பாடுகளால் விளைவனவே நிகழ்வுகள் என்று அது

கருதுகின்றது. அதனால் அது சமயங்கள் தருகின்ற உலக விளக்கத்திற்கும் மத அமைப்புகளுக்கும் முரணானது. அவ்வகையில், பொருளை முதல் நிலையில் வைப்பது பொருள் முதல் உலகப்பார்வை. அவை முரண்பாடுகளின் வாயிலாக இடையறாது வளர்ந்து கொண்டும் மாறிக்கொண்டும் தேய்ந்து கொண்டும் செத்துக் கொண்டும் இருக்கின்ற இயக்கத்தை எடுத்துரைப்பது இயங்கியல் என்னும் அறிவு முறையியல். பொருள்முதல் உலகப்பார்வையும் இயங்கியல் முறையியலும் இணைந்ததே மார்க்சியம்.

அத்தகைய மார்க்சிய உலக விளக்கத்திற்கும் பெரியார் கொண்டிருந்த உலக விளக்கத்திற்கும் இடையில் ஒற்றுமையும் உண்டு; கூரிய வேற்றுமையும் உண்டு. பெரியாருடைய உலகப் பார்வையும் கூட பொருள்முதல் உலகப் பார்வையே. "மெட்டீரியலிசம் அல்லது பிரகிருதவாதம்' என்னும் குறுநூலும் தத்துவ விளக்கம் என்னும் தலைப்பில் 1947-ஆம் ஆண்டில் சேலம் கல்லூரியில் அவர் ஆற்றிய உரையும் பெரியாருடைய உலகப் பார்வையை முழுமையாக எடுத்துரைக்க வல்லன.

பெரியாருடைய பொருள்முதல் பார்வையின் கூறுகள் மூன்று. அவை:

1) ஐம்பூதக் கொள்கை
2) ஆன்மா மறுப்புக் கோட்பாடு
3) பெயருருக் கோட்பாடு என்பன.

அவை யாவும் பண்டைய உலகாய்ந்த கருத்தோட்டத்தையும் புத்த சமய விளக்கத்தையும் சார்ந்திருக்கின்றன. மாந்தரையும் பிற உயிரினங்களையும் இயைபியல் (Chemical) முறையில் திரண்ட வெற்றுக் கலவைகள் – கூட்டுக்கள் – என்னும் கருத்து ஐம்பூதக் கொள்கையிலிருந்து எழுந்த எந்திரவியல் (mechanistic) கருத்து. அத்தகைய கருத்தைப் பெரியார் கொண்டிருந்ததை விளக்க ஓரிரு எடுத்துக்காட்டுகளை சுட்டிக் காட்டலாம். மாந்தனைப் பற்றி விளக்கப் புகுகின்ற பெரியார்:

"உலகில் காணப்படுகின்ற எல்லாப் பொருட்களையும் போல மாந்தனும் ஒரு பொருளேயாகும். இயங்குவது இயங்காதது, உயிருள்ளது உயிரல்லாத ஆகிய பொருட்கள் யாவும் பெரும்பாலும் கூட்டுப் பொருட்களேயாகும். அதோடு அவை யாவும் குறிப்புப்பெயர்ப் பொருட்களுமாகும். அந்தந்த தோற்றத்திற்கு மட்டுமே உரிய அந்தந்த பெயர் உடையனவாகும். எடுத்துக்காட்டுக்கு – ஒரு பொருளாகிய கூட்டை – சேர்க்கையைப்-பிரித்துவிட்டால், அந்தப் பொருளுக்கு உள்ள பெயர் மறைந்து விடுகின்றது. அவ்வாறு பிரித்த பொருளுக்கு வேறு ஒரு பெயர் ஏற்படும். இப்படியே, கட்டுக்கள் – சேர்க்கைகள் - பிரியப் பிரிய பெயர் மாற்றமடைந்து – காண முடியாததாகி - பெயர் சொல்லவே முடியாத மயக்கம் உண்டாகி - முடிவில் மூலப்பொருளின் தன்மையை அடைந்து விடும். இப்படிப்பட்ட சேர்க்கைப் பொருட்களில் ஒன்றுதான் மனிதன் என்பதை உணர்க" (தத்துவ விளக்கம், பக்கம் 22, 23) என்று கூறுகின்றார். அத்தகைய கூற்று பெரியாரிடம் சிறப்பாக இருந்ததென்பதைக் காட்ட இன்னுமொரு சான்றையும் எடுத்துரைக்கலாம்.

"ஒரே மரத்தில் ஒரே கனிமமாகிய இரும்பால் செய்த ஒரே கருவியைக் கொண்டு ஒரே ஆளாகிய தச்சன் செய்கின்ற பொருட்கள் நாற்காலி, இருக்கை, கட்டில், பெட்டி, இழுப்பறைப் பெட்டி (பீரோ), வண்டி, தொடர்வண்டி, கப்பல், இது – அதுவென பல பொருட்களாகக் காணப்படுகின்றன. அதாவது, மரம், இரும்பு ஆகிய இரு மூலப்பொருட்கள் சேர்க்கையால் மாறிய தோற்றங்களைக் கொண்ட பல்லாயிரக்கணக்கான பொருட்களாகக் காணப்படுகின்றன. அதுபோலவே, உயிர் விலங்குகளும் – குறிப்பாக மாந்த உயிரும் – ஒரு சில மூலப்பொருட்களின் சேர்க்கையின் விளைவாக மாந்தனாகத் தோற்றமளிக்கவும் நகரவும் இயங்கவும் செய்கின்ற ஒரு பொருளே ஆகும். மாடு, பன்றி, கழுதை, குதிரை, யானை, சிங்கம், புலி, நரி, பாம்பு, தேள், பறவை, பூச்சி, புழு, நுண்ணுயிரி முதலாகிய உலகில் வாழ்கின்ற உயிர்கள் யாவும் இப்படிப்பட்ட பொருட்களின்

சுட்டுச் சேர்க்கையால் ஏற்பட்ட தோற்றங்களே யாகும்". (அதே உரை 24) என்னும் பெரியாருடைய கருத்தும் அவ்வழி நிற்பதேயாகும்.

ஐரோப்பாவில் பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இயற்பியலும்

(Physics) இயைபியலும் (Chemistry) உயிரியலும் நிலபொதியியலும் (Geology) போன்ற அறிவியல் துறைகள் அரும்பின. அவற்றின் வீச்சுக்கு உட்பட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைநிலையில் செருமனி நாட்டில் மெய்யியல் துறையில் ஒரு பெரும் புரட்சியே நிகழ்ந்தது. அதற்குரிய பின்புலம் அன்று செருமனியில் தோன்றிய புதிய தொழில்துறை ஆகும். அதனால் இயற்கை அறிவியலில் புதிய எழுச்சிகள் தோன்றின. அத்தகைய மெய்யியல் புரட்சியைத் தொடங்கி வைத்தவர்கள் காரல் வாக்ட் (Karl Vogt, 1817–1895) லுட்விக் புச்னர் (Ludwig Buchner, 1824-1899) போன்ற முதலாளிய அறிவியலார் ஆவர். அவர்களின் தாக்குதல் செர்மானிய மரபு மெய்யியலையும் எகல் (Hegal) படைத்த இயங்கியல் கருத்துமுதல் விளக்கங்களையும் குறியாகக் கொண்டிருந்தன. அதன் வழியில் இயங்காவியல் (இயற்பியலுக்கு அப்பாலானது என்னும் பொருளிலான Metaphysics) நிலைக்கு செருமானிய மெய்யியல் தள்ளப்பெற்றது. வாக்ட், புச்னர் போன்றோரை 'கேலிப்படம் போன்ற நாடோடி பரப்புநர்கள்' (Caricature-like itinerant preachers) என எங்செல்சு நகையாடினார். அன்றைய செர்மானிய பல்கலைக்கழகங்களில் அதனால் பல்வகைப்பட்ட அவியல் கருத்துக்கள் முட்டி மோதத் தொடங்கியதைப் பற்றிச் சுட்டிக்காட்டினார். அத்தகைய அவியல் கருத்துக்களுக்கு இடையில் ஒரு பொதுத்தன்மை இருக்கத்தான் செய்தது. அதைப் பற்றி குறிப்பிட்ட எங்கெல்சு:

"அவை யாவும் பழைய மெய்யியல் நெறிகளின் மிச்ச சொச்சங்களை வைத்தே புனையப்பட்டிருந்தன; ஒரே அளவில் இயங்காவியல் நிலையைக் கொண்டிருந்தன" (இயற்கையின் இயங்கியல்) என்று குறிப்பிட்டார்.

உயிர்ப்பொருட்கள் யாவும் கரியப்பொருட்களின் சேர்க்கையை (Carbon compound) அடிப்படையாகக் கொண்டவை என்னும் கருத்தின் அடிப்படையிலேயே வாக்ட், புச்னர் போன்ற அறிவியலாரின் கோட்பாடுகள் அமைந்தன. கரியக் கலவைகளும் பிறவகைத் தனிமக் கலவைகளும் குறிப்பிட்ட விழுக்காடுகளில் ஒரு சேர உயிர்கள் பிறந்தன என்னும் விளக்கமும் அவர்களின் நிலையாகும். அத்தகைய விளக்கம் கரியக் கலவைகள் புரதப் (Protein) பொருட்களாகி நுண்ணுயிர்களாகிப் பேருயிர்களாகி வளர்ந்து சிறப்பதற்கு எடுத்துக் கொண்ட பல மில்லியன் ஆண்டுக்கால வரலாற்றைச் சிறுமைப்படுத்தியது. உயிரின வரலாற்றின் முழு வரலாற்றையும் செயற்கையாகப் படைத்துக் காட்டமுடியும் என்று கூறி, அறிவியலைக் கொச்சைப் படுத்தியது. படிமுறை வளர்ச்சியியல் பற்றிய பார்வை அதற்கு இல்லை. இறந்த காலத்தை நிகழ்காலத்துடன் போட்டுக் குழப்பிக் கொண்டது. அதனைக் கருதியே அத்தகைய பொருள்முதலியவை மார்க்சும், எங்கெல்சும் கொச்சைப் பொருள் முதலியல் (Vulgar Materialism) என்று குறிப்பிட்டனர். அத்தகைய எந்திரவியல் விளக்கத்தை மார்க்சும், எங்கெல்சும் மறுத்துரைத்தனர். உயிர்ப் பொருட்கள் செத்துச் சிதைய, அவற்றிலிருந்து பிரிந்த பொருட்கள் மீண்டும் இயையியல் கூட்டு வாயிலாகப் புதிய உயிரிகளாகப் பிறப்பதாகக் கருதிய அத்தகைய கருத்துக்கள் யாவும் டார்வினின் உயிரினத்தோற்றக் கோட்பாடு பிறப்பதற்கு முன்னர் இருந்தவை. அதனைக் கருதியே எங்கெல்சு: "இயைபியல் முறையில் உயிரிலாப் பொருட்களிலிருந்து பாலூட்டிகள் யாவும் நேரடியாகப் படைக்கப் பெற்றதென இனி யாரும் நம்புவதில்லை" என்று குறிப்பிட்டார்.

அத்துடன் அமையாமல்,

"வடிவிலா ஓரணுவுயிரி (monera) நமக்கு அறிமுகமாகியதிலிருந்து வடிவிலாது உயிர் வாழ்கின்ற புரதத்திலிருந்து (protein) அன்றி - செத்த பொருளிலிருந்து – எந்தவொரு தனி உயிரணுவும் நேரடியாகத்

தோன்றியதாக விளக்கப் புகுவது மடத்தனமானதாகப் படுகின்றது. நாற்றம் வீசுகின்ற சிறு அளவு தண்ணீரை வைத்துக் கொண்டு தான் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் எடுத்துக் கொண்ட ஒன்றை சாற்றுயிரி - (infusoria) இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் படைத்துக் காட்டும்படி இயற்கையை வற்புறுத்த முடியும் என்று நம்புவதும் அத்தகையதே" என்றும் அவர் தொடர்ந்து விளக்கினார். ஓரணுவுயிர் தோன்றவே பல மில்லியன் ஆண்டுக்காலம் பிடித்தது. அந்த ஓரணுவுயிரானது பல்லணுவுயிராகவும் பறப்பன வாகவும் பாலூட்டிகளாகவும் மாந்தனாகவும் படிமுறை வளர்ச்சி பெறுவதற்கு இயற்கைக்குப் பல மில்லியன் ஆண்டுகளாயின. அதனைவிடுத்து, சில விழுக்காடுகளில் - சில சூழ்நிலைமைகளில்—உயிரிலாப்பொருட்கள் கூட்டுப் பொருட்களாகச் சேர்ந்ததனாலேயே இன்றைய விலங்கினங்களும் மக்களினமும் தோன்றியதாகக் கருதுவது, இயற்கையின் படிமுறை வரலாற்றைச் சிறுமைப்படுத்துகின்ற கொச்சைப் பொருள்முதல் கண்ணோட்டம் என மார்க்சியம் சாடுகின்றது.

இயைபியல் பொருட்களின் வெற்றுக் கூட்டுக்களே உயிரினங்கள் என்னும் கூற்றைச் சிறிது மாற்றிச் சொல்லச் சிலர் முயன்றனர். வேளாண்மை இயைபியலுக்கு வித்திட்ட லீபிக் (Justus Liebig, 1803 – 1873) மாரிசு வேக்னர் (Moriz Wagner 1811-1887) என்னும் உயிரியலார், எர்மான் எல்ம் ஃஓல்ட்சு (Hermann Heimlıottz 1821-1194) என்னும் இயற்பியலார் போன்றோர் அவர்களில் சிறப்பானவர்கள். உயிருக்கு அடிப்படையான புரதப் பொருட்கள் நித்தமானவை. அவை விண்வெளியிலிருந்து இஞ்ஞாலத்திற்கு வந்தவை. புவியில் வளரும் வாய்ப்புக்கிடைத்த இடங்களிலெல்லாம் வளர்ந்தவை என்றும் அவர்கள் கருதினர்.

இத்தகைய 'நிலையான புரதக்' (eternal protein) கோட்பாட்டை மறுத்துரைக்கப் புகுந்த எங்கெல்சு சுட்டிக்காட்டிய குறிப்புகள் பின்வருமாறு:

அ) புரதத்திற்கு அடிப்படையாகிய கரியக் கலவைகள் நிலையானவை அல்ல;

அவை சிக்கல் வாய்ந்தவையே அன்றி எளிமையானவையும் அல்ல.

ஆ) அவை ஓரளவு நிலையானவை என்று நாம் குறிப்பிடுவோமாயின், குறிப்பிட்ட சில சூழ்நிலைமையிலும் கலப்புக்களிலும் வேக்காட்டிலும் அழுத்தத்திலும் மின் உள்ளாற்றலிலும் அவை மீண்டும் மீண்டும் தோன்றவும், அழியவும் செய்கின்றன என்றுதான் பொருள்படும். கரிஇருதீயதை (CO_2) மீத்தேன் (CH_4) போன்ற எளிய கரியக் கலவைகள் மட்டும் எல்லாவிடங்களிலும் தோன்றவும் நிற்கவும் அழியவும் செய்வன.

இ) இதுவரை நாமறிந்த கரியக் கலவைகளில் மிகவும் உறுதியிலாக் கரியக் கலவை புரதமே ஆகும். அப்புரதத்திற்கெனச் சில தனிச்செயற்பாடு உண்டு. அந்தச் செயற்பாட்டையே உயிர் என்று சொல்கின்றோம். இயைபியல் இயற்பியல் செயற்பாடுகள் மட்டுமல்லாமல், ஊட்டமும் மூச்சும் கழிப்பும் உறுத்தலும் இனப்பெருக்கமும் போன்ற செயற்பாடுகளும் புரதத்திற்கு உண்டு.

ஈ) புரதப் பொருட்களின் வாழ்முறையே உயிர் என்பது. புறத்தே இருக்கின்ற இயற்கைச் சூழலுடன் உயிர் வினை (metabolism) என்னும் செயல்பாட்டின் காரணமாகப் புரதப் பொருட்கள் புறத்தே இருக்கின்ற இயற்கைச் சூழலுடன் வினைப்படுகின்றன. அத்தகைய உயிர்வினையால் விளைகின்ற பரிமாற்றமே அப்புரத வாழ்வின் இன்றியமையாக் கூறு. உயிர்வினை அற்றுப் போகுமாயின், அப்புரதம் சிதைந்து போகின்றது. ஊட்டம், மூச்சு, கழிவு, உறுத்துணர்வு, இனப்பெருக்கம் போன்ற அதன் கூறுபாடுகளும் அற்றுப் போகின்றன. புறப்பொருளுடனான அத்தகைய பரிமாற்றம், உயிரிலாப் பொருட்களிலும் - கீழ்நிலையில் - நிகழ்வதுண்டு. அஃது இயைபியல் வினைபாடுகளால் எழுவது. ஆனால் உயிர்ப் பொருட்களுக்கும் உயிரிலாப்

பொருட்களுக்கும் உரிய புறப் பரிமாற்றங்களில் வேற்றுமை உண்டு. புறப் பொருளுடனான பரிமாற்றம் என்னும் வினைப்பாட்டால் உயிரிலா இயைபியல் பொருட்கள் அழிந்து போகின்றன. மாறாக, உயிர்ப் பொருட்களின் வாழ்வுக்கு இன்றியமையா முன்னிலையே அந்த உயிர்வினைப் பரிமாற்றம் ஆகும்.

உ) புரதப் பொருட்களை இயைபியல் முறையில் செயற்கையாகவும் படைக்கலாம். அவ்வாறு படைக்கப் பெற்ற செயற்கைப் புரதம் மிகவும் பண்படாத ஓரணுவுயிரி வடிவிலானதாகவும் மட்டுமே இருக்கமுடியும். ஏனெனில், உயிரணுவுக்குப் புறப் படலம் தோன்றவே பல்லாயிரம் ஆண்டுகளாயின. அவ்வுயிரணுப் புறப்படலத்திற்கு ஏற்ற உள்ளடக்கமும் வடிவமும் அமையவும் அது வழிவழியாக மரபியல் பண்புகளின் வாயிலாகப் பெருகவும் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளாயின. அதற்குரிய வடிவமும் செயல்பாடும் அமையவும் மாறவும் மருவவும் இன்னும் நெடுங்காலம் ஆகியது. டிராபே (Moriz Traube, 1826-1894) படைத்த செயற்கை உயிரணுக்களும் இயற்கையாகக் கிடைக்கின்ற ஓரணுவுயிரிக்கு மிகவும் தாழ்ந்தவையாகவே இருந்தன.

உயிரின உயிரிகள் யாவும் உயிரிலாப் பொருட்களின் வெற்றுக் கூட்டுக்களாகி "பிறப்பு, அழிவு, இனப்பெருக்கு, முடிவு" என்னும் இயக்கத்திற்கு உட்பட்டவை என்னும் பெரியாரின் உலகப் பார்வை, வாக்ட், புச்னர் போன்றோரின் குறை பொருள் முதலியவை ஒத்திருப்பதை மேற்சொன்ன குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் செருமனி நாட்டு அறிவியலாரிடையே எழுந்த மெய்யியல், பண்டைய பொருள்முதல் கருத்துக்களின் மீட்சியாக இருந்ததைப் பற்றிக் கண்டோம். அஃது இயங்காவியலின் நிலையைக் கொண்டிருந்ததையும்

குறிப்பிட்டோம். பெரியாரின் பொருள்முதலியலும் அதை நினைவுபடுத்துகின்றது. உயிர்களின் தோற்றத்தைப் பற்றிய பெரியாரின் உலகப் பார்வை பண்டைய உலகாய்த, புத்த அறிவு விளக்கங்களின் மீட்சியாக – அவர் காலத்தில் தமிழகத்திற்குத் தெரிந்த அரைகுறை அறிவியல் அறிவின் அடிப்படையில் – அமைவதாகும் என்று கூறுவதும் தவறாகாது. அதனைக் கொண்டே பெரியாரின் உலகப் பார்வை குறை பொருள்முதலியல் என்று கூறத் துணிவர். ஆகவே புறஉலகை விளக்குவதற்கும் கடவுட் கோட்பாட்டையும் சமய விளக்கங்களையும் மறுப்பதற்கும் பெரியார் அளவையியல் (logical) விளக்க முறையை மட்டுமே சார்ந்து இருந்தார். அறிவியல் கோட்பாடுகளை தழுவி நிற்கவில்லை. அதற்குரிய காரணம் அவர் ஏடறியா மக்களிடம் பகுத்தறிவைப் பரப்புவதில் காட்டிய தனி ஆர்வமும் அதற்குத் தேவைப்பட்ட எளிய விளக்க முறையும் ஆகும். முட்டையிலிருந்து கோழி வந்ததா, கோழியிலிருந்து முட்டை வந்ததா என்பது போன்ற கேள்விகளுக்கு உயிரியல் அறிவின் அடிப்படையில் விளக்கப் புகுந்த சிங்காரவேலரின் விளக்க முறையிலிருந்து அது தெளிவாக மாறுபட்டு இருக்கின்றது.

அடுத்து, ஆன்மாவைப் பற்றிய பெரியாருடைய கருத்தைக் குறிப்பிடலாம். அது உலகாய்தக் கொள்கையினர், புத்த சமயத்தினர் முன்மொழிந்த ஆன்மா மறுப்புக் கோட்பாட்டைத் தழுவியது. மாந்தன் இறந்த பின்னர் அவர்கள் உடலம் கெட்டழிகின்றது. அதற்கப்பால் அவனின் ஆன்மா என்று ஒன்று தனித்து இருப்பதில்லை. ஆன்மா அணுவுக்கும் சிறியது; கண்ணுக்குப் புலப்படாதது; அழிவிலாது நிலையானது; நுண்பொருள் வடிவிலானது. இந்து சமயம் அவ்வாறு கூறுவதைப் பெரியார் மறுத்துரைக்கின்றார். ஆன்மாவைச் சிலர் உயிர் என்று கொள்வதையும் பெரியார் சுட்டிக்காட்டுகின்றார். அப்படிக் கருதுவதாயினும், உயிர்ப் பொருள் தன்மை அற்றது என்பது பெரியாரின் கருத்து. பொருள்தன்மை அற்றது என்பதற்கு இயங்கும் தன்மையது என்று மட்டுமே அவர் பொருள்

கொள்கின்றார். உயிரைக் காற்று (பிராணன்) என்று கருதினாலும், அது நெஞ்சத்தில் இயங்கிக் கொண்டிருப்பது என்றுதான் பொருள்படும் என்றும் கூறுகின்றார். அசைகின்ற ஆற்றலை உடலுக்குத் தருவது ஆன்மா என்னும் இயக்கமே என்பதும் அவருடைய கூற்று. ஆகவே, உடலிலிருந்து பிரிந்து அவ்வான்மா இருக்க முடியாது; வினைக்கு ஏற்ற பலனை அது படைக்க முடியாது; உடலை விட்டு விலகி அத்தகைய பயனையும் அதனால் நுகரவும் இயலாது என்பது பெரியார் கூறுகின்ற முடிவுகள். தன்னுணர்ச்சியே ஆன்மா எனப் பொருள் கொண்டாலும், அதற்குப் பொருண்மை வடிவம் இருப்பதாகச் சொல்ல முடியாது என்றும் பெரியார் கருதுகின்றார். தன்னுணர்வு எழுகின்ற முறையைச் சொல்லப் புகுந்த பெரியார்:

"தானாக உண்டாகும் ஓர் உணர்ச்சியை ஒரு பொருள் என்று கருதினால், அந்தப் பொருளை எப்படிக் காட்சியாலோ கருத்தாலோ அறியமுடியும்? அந்த உணர்ச்சி தானாக எப்படி உண்டாகிறது என்றால், பொருட்களின் தனிமங்கள் ஒன்றோடு ஒன்று சேர்வதால் இன்ன மாதிரியான தன்மை செயல், மாறுதல் ஏற்படும் என்கிற இயைபியல் தன்மைகள் இயற்கையாகவே இருக்கின்றன. எடுத்துக்காட்டுக்கு, மஞ்சளுடன் சுண்ணாம்பைச் சேர்த்தால் அல்லது தானாகச் சேர நேரிட்டால், சிவக்கின்றது. நீலமும் மஞ்சளும் சேர்ந்தால் பச்சை ஆகின்றது. சிலவகை வளிகள் ஒன்று சேர்ந்தால் தண்ணீர் தோன்றுகின்றது. சில பொருட்கள் சேர்ந்தால் நஞ்சாகின்றது. சில பொருட்கள் சேர்ந்தால் பொங்குகின்றன. தளபுள தளபுள என்று ஓசை எழுகின்றது. சில பொருட்கள் ஆவி வடிவமாகி மறைந்து போகின்றன. சில ஆவி வடிவமாகிப் பின்னர் கட்டிப் பொருளாகின்றன. சில பொருட்களைக் கூட்டினால் - சில பொருட்கள் தாமாகக் கூட்டுச் சேர்ந்தால் - சில நன்மைகள் தானாகத் தோன்றுகின்றன; தானாக ஏற்படும் இத்தன்மைகளுக்குத்தான் நாம் தனித் தனிப் பெயர்கள் வைத்து அவற்றைத் தனித்தனிப் பொருளாகக் கருதுகின்றோம். அது போலவே மனித உடலமைப்பு ஆகிய கூட்டு, 'உயிர்' என்னும் இயக்க

ஆற்றலாய் இயக்கப்படும் போது, பேசுதல், நினைத்தல், பார்த்தல், கேட்டல், சினத்தல், சிரித்தல், அழுதல், பாடுதல், அடித்தல், விந்தைகளைக் கண்டுபிடித்தல், பறவைக் கப்பலிலிருந்து பார்த்தல் போன்ற செயல்கள் நிகழ்கின்றன. (தத்துவ விளக்கம், பக்கம் 37-38) என்று விரித்துரைக்கின்றார்.

உயிராகிய இயக்கம் இயங்குவதைப் பற்றிய பெரியாருடைய கருத்து மீண்டும் எந்திரவியல் (mechanical) புற இயக்கத்தை மட்டும் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. உயிர் என்னும் இயக்கம் புரதப் பொருட்களின் வாழ்முறை. அதுவே உயிர் வினை (metabolism) என்னும் நுண் இயக்கம். அந்த நுண் இயக்கத்தின் விதிகள் எந்திரவியல் (mechanical) அல்லது இயற்பியல் (physical) பெயர்ச்சிகளிலிருந்து (motions) இயல்பால் வேறானவை. எளியருக்குப் புரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டு அவற்றை மிகையாக எளிமைப்படுத்துவதும் மாறுபட்ட பொருளையே கொடுக்கும். எந்திரவியல் விதிகளை உயிரியல் துறை மீது வலியத் திணிக்கின்ற கொச்சைப் படுத்தலாகவே இருக்கும்.

"இயங்கும் தன்மை உடையது என்பதால், இதற்குச் சான்றாக, வேலை செய்து கொண்டிருக்கின்ற எந்திரத்தை அல்லது அஃது இயங்கிக் கொண்டிருக்கின்ற தன்மையைச் சொல்லலாம். ஒரு மணிக்கூடு ஓடிக் கொண்டிருப்பது போலவும் - ஒரு பொறி எந்திரம் ஓடிக் கொண்டிருக்கும் போது அதன் அசைவின் காரணமாக அதனுடன் இணைக்கப் பெற்றுள்ள பிற எந்திரக்கருவிகள் வேலைசெய்வது போலவும் - உயிர் என்பதும் ஓர் இயங்கும் தன்மையாகும். அந்த இயங்கும் தன்மையாகிய உயிருக்குக் காரணமாக இருப்பது உடலின் கூட்டு அமைப்பும், உடலுக்கு அவித்து வரும் உணவுப்பொருட்களும் ஆகும். அமைப்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதற்குத் தேவையான உணவு இல்லாவிட்டால் அது சரிவர இயங்காது. ஆகவே, உயிர் என்பது உடல் கூட்டு அமைப்பாலும் அதற்கு அளிக்கப்படுகின்ற உணவாலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற தன்மையேயாகும்" (தத்துவ விளக்கம், பக்கம் 35,36) என்னும் பெரியாருடைய கூற்று - உயிரைப் பற்றி அவர் கொண்டிருக்கின்ற கருத்து - மரபு

எந்திரவியல் (classical mechanics) அடிப்படையிலானது என்பதைப் புலப்படுத்துகின்றது. மாறாக, உயிரியல் புகட்டுகின்ற இயங்கியல் பாங்கில் இல்லை. பல்வகை உயிரணுக்களில் உயிர்வினையால் ஏற்படுகின்ற விளைவாகவும் காரணமாகவும் படிமுறை வளர்ச்சியால் திரண்டு தனி உருவமைப்பும் தனிச் செயல்பாட்டையும் கொண்ட உயிரணுத் தொகைகளின் நடுவப்படுத்தப்பட்ட இயக்கமாகவும் – உயிரைக் கருதுகின்ற ஆழ்ந்த அறிவியல் விளக்கம் அதில் இல்லை. சாவு என்பது வாழ்வது, வாழ்வென்பது சாவது என்னும் பொருளில் உயிரணுக்கள் இடையறாது பிறந்து கொண்டும் வாழ்ந்து கொண்டும் மடிந்து கொண்டும் இருக்கின்ற இயங்கியல் தெளிவு அங்கு இல்லை.

இதேபோல், தன்னுணர்வு என்னும் நிலை, உளவியல் கூறாக வைத்து ஆராயப் பெறவில்லை. உறுத்துணர்விலிருந்து தொடங்கி பிற புலனுணர்வுகளால் மூளையில் ஏற்படுகின்ற அழுத்தங்களையும் பதிவுகளையும் தொகுக்கவும் செய்கின்ற உளவியலின் படிமுறை வளர்ச்சி அதனால் வெளிப்படவில்லை, எண்ணுவது மூளையின் வாழ்முறை என்னும் தெளிவு இல்லை. புலனறிவு (காட்சி) கருத்தறிவாக (பகுத்தறிவாக) மாறுவதையும், அக்கருத்தறிவு புறத்தை மாற்றவல்ல செயலை ஊக்குவிப்பதும் பற்றிய விளக்கம் இல்லை. கட்டுற்ற தன்வினைச் செயல் (conditioned reflex) கட்டுறாத் தன்வினைச்செயல் (unconditioned reflex) போன்ற உயிர்நிலை உளவியல் இயற்பாடுகளைத் தழுவி நிற்பதே தன்னுணர்வு என்னும் தெளிவு இல்லை. புறத்திற்கும் அகத்திற்கும் இடையில் நிகழ்கின்ற எதிரெதிர் வினைபாடுகள் தோற்றுவிக்கின்ற அகக்காழ்ப்புகளும் தற்காப்பு உணர்ச்சியும் ஆராயப் பெறவில்லை. விலங்கினத்திலிருந்து மக்களினம் எழுகின்ற வரையில் அவை பெற்ற படிமுறை வளர்ச்சி பற்றிய ஆய்வும் இல்லை. தேவையும் தன்னுணர்வும் பற்றிய விளக்கம் இல்லை. புற உண்மையில் விளங்குகின்ற அகநிலை உளப்பாடுகளை ஆட்கொள்கின்ற முறைமைகளை மக்களினம் தெரிந்து வைத்திருப்பதனால் வழிவழியாய் பெறப் பெறுவதையும் பற்றிய விளக்கமும் இல்லை.

உயிர்நிலை, தன்னுணர்வு, கட்டுறா – கட்டுற்ற தன்வினைச் செயல்கள், குமுகாய உணர்வு, எண்ணம் போன்றவற்றை உள்ளடக்கிய தொகைநிலையே ஆன்மா என்னும் முழுமை தழுவிய வரையறுப்பும் தென்படவில்லை. அதனைக் கருதியே, பெரியாருடைய பொருள்முதல் பார்வையும் குறைபொருள் முதலியலே என்று கருதுகின்றோம்.

பெரியாரின் உலகப் பார்வையில் மற்றொரு சிறப்புக் கூறு, அவருடைய பெயர் உருக்கோட்பாடு (form and name theory). அது புத்த சமயம் மொழிந்த விளக்கத்தைத் தழுவியது. புத்த சமயம் படைத்தளித்த சார்பியல் (relativism) அடிப்படையில் அமைந்தது. நில்லாமைக் கொள்கையும் அதற்குள் அடக்கம். மிலிந்தபன் என்னும் தேரவாத (ஈனயான) புத்த நூல் குறிப்பிடுகின்ற கருத்தையே பெரியாரும்: "ஒரு மாந்தனைப் பாருங்கள். அவன் தோற்றத்தில் மனிதனாக இருக்கின்றான், பொருளில் மாந்தனா என்பதற்கு எது மாந்தன் என்று தொட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம். நீங்கள் அந்த மனிதன் என்பதை எந்த இடத்தில் தொட்டுக் காட்டினாலும் அந்த இடத்தைக் கொண்ட பகுதிக்கு, உறுப்பிற்கு வேறு பெயர் இருக்கிறது. நீங்கள் எதைத் தொட்டாலும் சரி, தலையைத் தொட்டால் அதற்குப் பெயர் தலை. கையைத் தொட்டால் கை, காலைத் தொட்டால் கால். மார்பைத் தொட்டால் மார்பு, முதுகைத் தொட்டால் முதுகு. இப்படியாக நீங்கள் மனிதனின் எந்தப் பகுதியைத் தொட்டாலும் அதற்கு வேறு பெயர் இருப்பது மட்டுமல்லாமல், அப்பகுதிகளை மறுபடியும் தொட்டுக் காட்டும்படி கேட்டால், நீங்கள் தொடுகின்ற பகுதிகளுக்கும் வேறு பெயர்கள் இருக்கின்றன. அதாவது தலையைத் தொடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். தலை என்று சொல்லிக்கொண்டு நீங்கள் மயிரையோ, தோலையோதான் தொடுவீர்கள். அப்படியேதான் வீடு, விளக்கு, மேசை, நாற்காலி, செருப்பு, விளக்குமாறு, கலம், வண்டி, கப்பல் முதலிய எல்லாப் பண்டங்களாகுமாம். இதிலிருந்து என்ன விளங்குகின்றது? பொருள் என்ற யாதும் பல பொருள் கொண்ட ஒரு சேர்க்கைப் பொருள். அதாவது, பல தன்மைகள் சேர்ந்த ஒரு கூட்டுப் பொருள். அந்தக்

கூட்டுப் பொருள் என்பதும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு மாதிரியான அமைப்புக்குப் பெயராகக் கொண்டதேயொழிய தனிப்பொருள் – அதாவது அதுவே முடிந்த பெயர் கொண்ட பொருள் அல்ல. (தத்துவ விளக்கம், பக்கம் 23-24) என எடுத்துச் சொல்கின்றார்.

இத்தகைய கூற்றில் முழுமைக்கும் பகுதிக்கும் இடையிலான இயங்கியல் உறவு பற்றிய பார்வை இல்லை. ஒரு முழுமைக்குரிய பெயர் வேறு. அதன் பல்வேறு பகுதிகளுக்கும் பெயர்கள் வெவ்வேறு. ஒரு தனி ஆலமரம் இருக்கின்றது. அது போன்ற தனித்தனி ஆலமரங்களும் இருக்கின்றன. கூர்ந்து பார்த்தால் அவற்றிற்கு இடையில் கிளைகளின் அமைப்பிலும் உயரத்திலும் இலை அடர்த்தியிலும் விழுதுகளின் எண்ணிக்கையிலும் வேற்றுமைகள் இருக்கின்றன. இருப்பினும், அத் தனித்தனி ஆலமரங்களுக்கு இடையிலான (இலை அமைப்புப் போன்றவற்றிலான) பொதுத் தன்மைகளைக் கருதி ஆலமரம் என்னும் பொதுக் கருத்து பிறக்கின்றது. புறநிலையிலான தனி ஆலமரம் என்னும் உருப்படியான மெய்மைப் பொருள் இன்றி, 'ஆல மரம்' என்னும் பொதுநிலை பிறக்காது. 'மரம்' என்பதும் அதை விட மற்றொரு பொதுக்கருத்து. அத்தகைய பொதுக்கருத்துக்கள் யாவும் உருவமைப்பியலையும் செயற்பாட்டியலையும் தழுவியவை. உருப்படியை (concrete) அருவமாக்கி விடுவதன் (abstract) அடிப்படையிலானவை. அதனால், ஒரு தனி ஆலமரத்திற்குப் பொருளடக்கம் இல்லை – அஃது உண்மை இல்லை – என்று கூறுவது பொருந்தாது. அதற்குப் பெயரும் உருவமும் மட்டுமே இருக்கின்றது என்று கூறுவது அதனுடைய பொருண்மை நிலையை மறுக்கின்ற கருத்துமுதல் பார்வையாகும். புத்த சமயம் வகுத்த பெயருருக் கோட்பாடு அதனால் கருத்து முதலியமாகவே இருக்கின்றது. பெரியாரும் அதனை ஒப்புவிக்கும் போது – அவருடைய குறை பொருள் முதலியல் – உள்ளடக்கத்தில் கருத்து முதலாகவே இருப்பதை உணர முடிகின்றது.

"திருடன், பொய்யன், கோபக்காரன், வஞ்சகன், பொறாமைக்காரன், நன்றி இல்லாதவன். வெறும் தன்னலக்காரன் போன்றவர்கள் அத்தனை பேரும் – 100க்கு 90க்கு மேற்பட்டவர்கள் – அவர்களின் இயல்பு அல்லது உடல் அமைப்பு ஆகியவற்றின் காரணத்தால் ஏற்பட்ட பிறவிக்குணம் கொண்டவர்களே ஆவர்".

(தத்துவ விளக்கம் பக்கம் 27).

"தோற்றம் அதாவது பார்வை எப்படிக் கண்களின் தன்மையைப் பொறுத்ததோ, எப்படி கேள்வி காதுகளின் தன்மையைப் பொறுத்ததோ, அதுபோல்தான் அறிவு, ஆற்றல், நுட்ப உணர்வு, ஆராய்ச்சி, விந்தை, கண்டுபிடிப்பு முதலாகிய தன்மைகளும்; கோபம், சிரிப்பு, சிடுமூஞ்சி, நட்புணர்வு, வஞ்சகம் முதலிய தன்மைகளும், உறுப்புக்களின் அல்லது இயைபியல் பொருட்களின் அமைப்பையே பொறுத்தவை யாகும்" (தத்துவ விளக்கம். பக்கம் 28) என்பதும் பெரியாருடைய கூற்று.

இயல்புகளும் தன்மைகளும் ஒருவருடைய குமுக உறவுகளாலும் உள்ள வளர்ச்சிகளாலும் பண்பாட்டுக் கூறுகளாலும் எழுபவை என்பதை மறந்த நிலை அதுவாகும். அதுவும் குறைபொருள் முதல் வழியில் நிற்கின்றது.

இதுவரை ஆராய்ந்த பெரியாருடைய உலகப் பார்வையைப் பற்றி மார்க்சியம் வகுத்துக் கொண்ட இயங்கியல் பார்வையிலிருந்து மாறுபட்டு எளிய எந்திரவியல் சார்பு குறை பொருள் முதலியலாக இருப்பது அதனால் தெளிவாகின்றது.

வகுப்பு உடன்பாடு: மார்க்சியத்தின் மற்றொரு கூறு அதனுடைய வகுப்புப் போராட்டக் கொள்கை. தொழிலாளர் வகுப்பு, உழவர் வகுப்புடனும் பிற வகுப்புடனும் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றி சமூகவுடைமை அரசை அமைப்பதற்கு ஏற்ற புரட்சி நெறிகள் அதனைத் தழுவியது. சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் – ஒடுக்குபவன்; ஒடுக்கப்படுபவன் என்னும் வகையில் குமுகாயம் பல வகுப்புகளாகக் கூறுபட்டுக் கிடப்பதைப் பெரியாரும் ஏற்றுக் கொள்கிறார்.

தமிழ்க் குமுகாயத்தில் அரை நிலக்கிழமை படைப்பு முறையும் உறவுகளும் முதலாளிய படைப்பு முறையும் உறவுகளும் அமைந்து முரண்பட்டுக் கிடக்கின்றன. முன்னது தேய பின்னது வளர்ந்து வருகின்றது. முதலாளிய குமுகாய உறவுகள் தோன்றுவதற்கு முக்கிய நிலக்கிழமைச் சமுதாயத்திற்கு உரிய தொழிற்பிரிவினைகளும் வகுப்புகளும் பிறப்பு அடிப்படையிலானவை. அவற்றைச் சாதிகள் என்றும் உட்சாதிகள் என்றும் குறிப்பிடுவோம்.

ஆனால், பெரியார் அம்முதலாளிய வகுப்பிற்கு முந்திய சாதி முறையை எதிர்ப்பதிலேயே தனி கவனம் காட்டினார். தொழிலாளர், உழவர் என்னும் இக்கால வகுப்புகளின் அடிப்படையில் 1952-ஆம் ஆண்டு திராவிட உழவர் – தொழிலாளர் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தினார். அதில் முரண்பட்ட நோக்கங்கள் உண்டு. 'திராவிடத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் வேலை செய்யும் பண்ணையார் மிராசுதார், முதலாளிகள், ஆண்டைகள் ஆகியவருக்கும் இடையில் நட்பும் நல்லுறவும் நம்பிக்கையும் கூட்டுப் பொறுப்பும் இருக்கும்படி செய்வது" (திராவிட உழவர் – தொழிலாளர் கழக அமைப்பு நோக்கங்கள். பக்கம் 4) என்னும் அதனுடைய நோக்கம் தெள்ளத் தெளிவாக வகுப்புப் போராட்ட முறைக்கு எதிர்ப்பான வகுப்பு உடன்பாட்டுக் கொள்கை என விளங்குகின்றது. இதனைப் பெரியார் 'பங்காளி நிலை' என்று குறிப்பிடுகின்றார். அத்தகைய நிலையைப் பெரியார் எடுத்ததற்கான காரணங்கள்:

அ) தொழிலாளர் – உழவர் கழகங்களைச் சுட்டிச் செயல்பட்டு வந்த பிற கட்சியினர் அவற்றைத் தங்களுடைய கட்சி நலன்களுக்காகவும் தேர்தல் வாக்கு வேட்டைக்கும் பயன்படுத்திக் கொண்டனரேயன்றி, தொழிலாளரின் வகுப்பு விடுதலைக்கு வித்திடாமை.

ஆ) கூலி உயர்வு பெற்ற தொழிலாளி அப்பணத்தைக் கொண்டு பூசைக்கும் கோயில் குளங்களுக்கும் திருவிழாக்களுக்கும் கூத்துக்களுக்கும் பார்ப்பனப் பூசாரிகளுக்குமே அளிப்பதைத் தடுத்து நிறுத்தி, அவர்கள் மூட நம்பிக்கைகளைக் களைய முயலாமை.

இ) தொழிலாளர் கழகங்கள், முதலாளி - தொழிலாளி என்னும் வேற்றுமை நிலைக்கும் பார்ப்பனியத்திற்கும் பாதுகாப்புக் கொடுத்து வருகின்ற முதலாளிய அரசை ஒழிக்க ஒன்றும் முயலாமை. கூலிப் போராட்டங்களை மட்டும் நடத்தி வருகின்ற அவை யாவும் வகுப்பும் போராட்டத்தை நடத்தாமை.

ஈ) இனஇழிவு நீக்கமே முதன்மையானது. பொருளியல் வேற்றுமையை நீக்குவது அடுத்துப் பார்க்க வேண்டியது என்பதும் பெரியாரின் நிலைபாடு. "மதத்திலும் அரசியலிலும் பொருளியலிலும் பார்ப்பனர்களுக்கும் வடநாட்டுக் காரர்களுக்கும் அடிமைப்பட்டு இருக்கும் இந்த நாட்டைப் பார்ப்பனர், பனியா, வடநாட்டார் கூட்டத்தினரிடமிருந்து விடுவித்துத் தன்னுரிமை பெற்ற நாடாக்கும்" கொள்கை அதுவாகும்.

உ) பொதுவுடைமை இயக்கமும் சமூகவுடைமை (சோசலிச) இயக்கமும் பார்ப்பனர்களின் பிடிப்பில் இருப்பது போன்றனவாகும். அத்தகைய வகுப்பு உடன்பாடு நிலையை மேற்கொண்ட பெரியார் நாட்டுப்புறத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்: "பண்ணையாளர்களுக்கு முன்னிலும் அதிக வெள்ளாமை கிடைக்கும்படி செய்தால், பண்ணையாருக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் தானாகவே நன்மை ஏற்படவும் முடியும்" (அதே திட்டம் பக்கம் 15) என்று குறிப்பிட்டார். அத்தகைய நிலைபாடு. "முடிவில் தொழிலாளி - முதலாளி, நிலத்துச் சொந்தக்காரன் - நிலத்துக் கூலிக்காரன் என்பதான சொற்களே அகர முதலியில் இல்லாதபடி செய்ய வேண்டும் என்பதுதான் திராவிடர் கழகக் குறிக்கோள்" (அதே திட்டம் பக்கம் 16) என்று இறுதியில் குறிப்பிடுவதற்கு எதிரான ஒருவகை முரணணியாக அமைந்து விடுகின்றது. இத்தகைய நிலை தமிழகப் பொதுவுடைமையர் பெரியாரின் இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் எழுந்த தொய்வுநிலையும் வீழ்ச்சியுமே என்று கருதி அமைதி கொள்வோம்.

பின்னாளில் பெரியார் பொதுவுடைமை அமைய வேண்டுமாயின் இன்றுள்ள அரசுதான் அந்த வாழ்வியலைக்

கொண்டு வரவேண்டும் என்று கருதினார். "பொருளியல் சமத்துவம் வேண்டுமென்பது எனது கொள்கையாக இருந்தாலும் மக்களே மக்களிடமுள்ள பொருளைக் கவரும்படிச் செய்வது பொருளியல் வேறுபாட்டை விடக் கேடான செயலாகும், ஆதலால் சட்டம் செய்து அரசே பங்கிட்டுக் கொடுக்கும்படி செய்ய வேண்டும்." (விடுதலை, 30-3-68).

இதனால் பெரியார் மக்கள் நேரடியான புரட்சிச் செயல்பாடுகளில் பங்கெடுத்து ஆட்சியைக் கைப்பற்றுகின்ற புரட்சிவழியை எதிர்க்கவே செய்தார். அவருடைய போக்கு மெல்லியல் (Liberalism) கூறுகளை மிகுதியாகக் கொண்டது. புரட்சிக்கு வழியாகச் சீர்திருத்தம் என்னும் முறையைத் தழுவியது. மார்க்சியம், அரசும் புரட்சியையும் பற்றி மார்க்சியம் கொண்டுள்ள நிலைக்கு அது நேர்முரணானது. பெரியார் முதன்மை நாட்டம் காட்டிய பார்ப்பனிய எதிர்ப்பும் சாதி எதிர்ப்பும் மூட நம்பிக்கை எதிர்ப்பும் போன்ற யாவும் அளவு மாற்றத்தைத்தான் தோற்றுவித்திருக் கின்றனவே அன்றி ஒரு இயல்பு மாற்றத்தை படைத்திடவும் இல்லை; படைக்கவும் இயலாது.

புதிய பார்ப்பனிய உட்பகை:

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தேர்தல் முறை புகுத்தப் பெறுவதற்கு முன்னர், பார்ப்பனரின் தலைமையும் பிடிப்பும் நாட்டுப்புறம் வரையில் பரவலாகக் கிடந்தது. நயன்மைக் கட்சியும் தன்மான இயக்கமும் திராவிடர் கழகமும் பார்ப்பனரின் மேலான்மையை எதிர்த்தனர். அதற்குத் துணையாக இருந்த 'ஓராள், ஒரு வாக்கு' என்னும் முதலாளியத் தேர்தல் முறை புகுத்தப் பெற்றது. அத்தகைய அரசியல் தேர்தல் முறையால் எண்ணிக்கையில் சிறியரான பார்ப்பனர் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். அதனால் அடிப்படை அரசியல் அதிகாரமும் நிறுவனங்களும் இடம் பெயர்ந்தன. ஊரகப் புறத்தில் இருந்த பார்ப்பனர் அகரத்திற்கும் தாழ்த்தப்பட்டோர் சேரிக்கும் இடையில் அமைந்த சூத்திர மேல் சாதி நிலவுடைமை வகுப்பினரிடம் அது கை மாறியது. அதனைச் செய்தது, நயன்மைக் கட்சியும்

தன்மான இயக்கமும் கட்டிய பார்ப்பனரை எதிர்த்தக் கூட்டணி.

அந்தக் கூட்டணியில் தீண்டப்படாத - தீண்டத்தக்க கீழ்சாதியினரும் உள்ளடங்கி இருந்தனர். பார்ப்பனர் நாட்டுப்புற அரசியல் அதிகாரத்தை இழந்து நகர்ப்புற அதிகார வகுப்பாகித் தங்களுடைய செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்டனர். இந்நிலையில், அன்று விளங்கிய பார்ப்பனர் எதிர்ப்புக் கூட்டணி அண்மையில் உடைபடத் தொடங்கியது. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் நிலவுடைமையராகிய சூத்திர சாதியினருக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடையலாயிற்று. அதன் விளைவே கீழ்வெண்மணி வேள்விகளும் விழுப்புரம் சாதிக் கலவரங்களும் போன்ற நிகழ்ச்சிகளும்.

இவையாவும் பெரியார் முழு மூச்சுடன் கட்டிய இயக்கம், பார்ப்பன எதிர்ப்பு இயக்கமாக மட்டும் குறுகிவிட்டதேயன்றி, பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கமாக விரிந்துப் பெருகவில்லை என்பதை உணர்த்துகின்றன.

கீழ்ச்சாதி மக்கள் வேகமாக சமஸ்கிருதப் பண்பாட்டுச் சேற்றில் விரும்பி அழுந்த முயல்வதும், தீண்டப்படாத சாதியினருக்கும் சூத்திர நிலவுடைமைச் சாதியினருக்கும் இடையிலான தன்மான – பொருளியல் போராட்டங்கள் வலுப்பெற்று வருவதும், புதிய பார்ப்பனியத்தின் விளைவுகள். அத்தகைய புதிய பார்ப்பனியத்தின் வீச்சினால் தோன்றியுள்ள பறைய பார்ப்பனரும், பள்ளப் பார்ப்பனரும், கள்ளர் பார்ப்பனரும், நாடார் பார்ப்பனரும், முதலியார் பார்ப்பனரும், வேளாளப் பார்ப்பனரும், எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர். கீழ்ச்சாதியினரிடம் பரவி வருகின்ற இத்தகைய புதிய பார்ப்பனியம் தடுத்து நிறுத்தப் பெற்று அழிக்கப்பெற வேண்டும். புதிய பார்ப்பனியமே கடந்த பத்தாண்டுகளில் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்து வருகின்றது.

தன்மான இயக்கமும் திராவிடர் கழகமும் பெரிதும் – ஓரிரு மாவட்டங்களைத் தவிர–பொதுவாக நகரப்புற-பேரூர் இயக்கங்களாக இருந்துவிட்டன.அரசு பதவிகளிலும் கல்வி

நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் பிறவற்றிலும், படித்த பார்ப்பனர் அல்லாதவருக்குப் பதவியில் பங்கும் ஒதுக்கீடும் என்று கேட்டதுடன் நின்று கொண்டன. அதனால் தங்களுக்குள் தங்களை உள்ளிருந்தே கெடுக்கின்ற எதிர்மறையாகிய புதிய பார்ப்பனியத்தை தோற்றுவித்துக் கொண்டன. இந்நிலை மாற வேண்டுமாயின், சாதி எதிர்ப்பு இயக்கம் நாட்டுப்புறத்தில் காலூன்றி வளர வேண்டும். அதனால் அது வகுப்பு (class) இயக்கமாகவும் மருவிட வேண்டும். நகர்ப்புற இயக்கமாக அமைந்து விட்ட குட்டி முதலாளிய - புதிய பார்ப்பனிய அலைகளுக்கு எதிராகச் செயல்பட வேண்டும். அதனை செய்ய வல்லது நிலத்தைச் சுற்றிய உழவர் புரட்சியேயாகும். பாராளுமன்றக் குடியாட்சி புதிய அமைப்பு பார்ப்பனியத்தின் விளை நிலம். சலுகைகள் அதற்குரிய வடிகால். மாறாக, புரட்சி வழியில் நாட்டுப்புற பகுதிகள் சிறிது சிறிதாக விடுதலை பெறுமானால் - அங்குள்ள அரசியல் அதிகார வடிவமைப்பு மாற்றி அமைக்கப் பெறும். உழவர் அதிகாரங்கள் நிறுவப் பெற்று அவை சாதியால் ஒடுக்கப்பட்ட சாதியினரின் வல்லாண்மையாகவே இருக்கும். அதே போது வகுப்பால் உழவர் கூலிகளின் - வறிய சிறிய உழவர்களின் கூட்டு அதிகாரமாகவும் இருக்கும். அவ்வகையில், வகுப்பும் (Class) சாதியும் மயங்கி விடும். வகுப்பால் உழவர் கூலிகளும் வறிய - சிறிய உழவர்களும் - சாதியால் கீழ் நிலையானவரும்—யாருடைய அதிகாரத்தை தூக்கி எறிவர்? சாதியால் மேல் சாதிக்காரனாகிய—வகுப்பால் பெருநிலக்கிழானாகிய - ஆண்டைகளின் அதிகாரத்தையே தூக்கி எறிவர். அங்கு சாதியும் வகுப்பும் மீண்டும் மயங்கும்.

பெரியார் இயக்கத்தின் நலிவிற்கான மற்றொரு காரணமும் உண்டு. முதலில் தனித்தமிழ்நாடு கேட்டு வந்த பெரியார், பின்னர் அதனை திராவிட நாடு கோரிக்கையாக மாற்றிக் கொண்டார். திராவிடம் என்பது ஒரு மொழிக் குடும்பத்தை குறிக்கும். அஃது ஓர் நாட்டினத்தைக் குறிக்காது. தனிப் பெரும் மொழி, தனி நிலவியல் அமைப்பு, தனிப் பண்பாடு, தனி வரலாற்றுப் பொது நிலை, தனி உளப்பாங்கு போன்றவற்றைக் கொண்டு வரலாற்று

அடிப்படையில் அமைந்து விட்ட நிலையான ஒரு குமுகமே நாடு அல்லது நாட்டினம் என்னும் தெளிவுக்கு புறம்பாகிய நிலையாக அஃது அமைந்து விட்டது. அத்தகைய பார்வை பொய்த்து விட்ட நிலையில், திராவிடர் என்னும் மொழிக் குடும்பத்தினரை ஒரு தனி நாட்டினமாக பெரியார் வகுத்துக் கொண்டது ஒரு வரலாற்று வழு. இதனைப் பெரியார் முன்னர் உணர்ச்சி வயப்பட்டு வெளியிட்டதாக தன்மான இயக்கத்தில் அவருடன் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெரியாரின் மறைவுக்குப் பின்னர் வெளியிட்ட செய்தியை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம். தமிழக விடுதலை என்னும் நாட்டினக் கோரிக்கை அதனால் தாக்குற்று பின்னுக்குத் தள்ளிப் போடப்பட்டது.

பெரியார் மக்களின் எதிர் வன்முறையை எதிர்த்தார். காந்தியின் அறவழி (அகிம்சை) என்னும் வழி மயக்கத்தில் தோய்ந்து இருந்தார். ஆயினும், மக்களைத் தட்டி எழுப்பியதில் அவர் ஓர் எல்லைக் கல்; தனி வரலாற்று நிலை. முன்னர் குறிப்பிட்ட அத்தகைய வரலாற்று வழுவை திருத்திக் கொண்டு பெரியாரின் உள்ளக் கிடக்கையையும் உள்ளடக்கிய வகையில் செயல்பட்டு - புதிய இலக்குகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அவ்வகையில் வரம்புகளைத் தொடுவதே பிரிந்துபட்ட மார்க்சிய முறையினையும் பெரியாரின் நோக்கங்களையும் இணைக்க உதவும். தமிழகத்தில் ஒரு குமுகாய புரட்சி அதனால் விளையும். தமிழகம் விடுதலை பெற்று மக்கள் குடியாட்சியாக மலரும்.

பின் குறிப்பு: பெரியாரின் மேற்கோள்கள் சமற்கிருதத்தை விலக்கிய நடையில் ஓரளவு திருத்திக் கொள்ளப் பெற்றுள்ளன.

⁂

3. பெரியாரின் சிந்தனைகள் - சில திறனாய்வுக் குறிப்புக்கள்:

- ஞானி

தமிழக மக்களுக்காக 50 ஆண்டுக் காலம் பாடுபட்டவர் பெரியார். மக்கள் சார்பிலான தமிழகச் சிந்தனைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியில் ஒரு பேரலையாக எழுந்தவர் பெரியார். தமிழகத்தில் வள்ளுவர், சித்தர்கள், வள்ளலார் ஆகியவர்களுக்கு நிகரான பெருமைக்கு உரியவர். அனைத்திந்திய அளவில் புத்தர், அம்பேத்கார் ஆகியவர்களுக்கும், எதிர்நிலையில் சங்கரர், விவேகானந்தர் ஆகியவர்களுக்கும் நிகரான பெருமைக்கு உரியவர். இந்திய – தமிழக சமூக முரண்பாடுகள் கடுமையாக பெரியாரிடம் பிரதிபலித்தன. இன்றுள்ள பல பிரச்சனைகளில் பெரியாரின் பாதிப்புகள் அழுத்தமாகப் பதிந்துள்ளன. இவை இன்னும் நீண்ட காலத்திற்குத் தொடரும் இந்திய – தமிழகச் சமூக அளவிலான புரட்சியின் வெற்றியில் பெரியாரின் பங்கு என்றும் மரியாதையோடு நினைக்கப்படும். தமிழகத்தில் சமதர்மத்தின் தேவையை வற்புறுத்திய மூலவர்களில் ஒருவர் பெரியார். பெரியாரின் மேன்மைகள் முரண்பாடுகள், சாதனைகள், தோல்விகள் ஆகிய அனைத்தும் இந்திய தமிழக சூழலோடு தொடர்புடையவை. இக்கட்டுரை சிறிய அளவில் பெரியார் சிந்தனைகள் பற்றிய சில திறனாய்வுகளை முன்வைக்கிறது. பெரியாரின் கருத்துரைகள் திரு.ஆனைமுத்து அவர்களின் தொகுப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

திசை வழி மாற்றம் – 1

திருத்தப்பட்ட சுயமரியாதை இயக்க வேலைத் திட்டத்தில் காணப்பட்ட சில கோரிக்கைகள்: (1-1-1932) பிரிட்டீசு முதலிய முதலாளித் தன்மை கொண்ட ஆட்சியிலிருந்து பூரண விடுதலை, தேசக் கடன்கள் ரத்து, தொழிற்சாலை, இரயில்வே, பாங்கி, கப்பல் ஆகியவை தேசியமயமாக்கப்படல், விவசாய நிலங்கள், காடுகள், தாவர

சொத்துக்கள் பிரதி பிரயோஜனம் இல்லாமல் பொதுமக்கள் உரிமை ஆக்குதல், குடியானவர், தொழிலாளர் கடன்கள் ரத்து, சுதேச மன்னர்களை மாற்றி இந்தியாவை தொழிலாளி, குடியானவர் சரீர வேலைக்காரரின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வருதல்.

கோவைக் கூட்டத்தில் *(30-1-33)* பெரியார் பேசியவை: "நமது இயக்கம் சீர்திருத்த இயக்கம் அல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவத் தன்மைக்கு மத சம்பந்தமாக, கடவுள் சம்பந்தமாக, பொருளாதார அரசியல் சம்பந்தமாக அனுகூலமானவை இல்லை. ஆகவே எப்படிச் சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தம் இவை இன்னும் நெடுங்காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாய்ப் போவதற்கு இடையூறாய் கடவுளும், மதமும், அரசாங்கமும் குறுக்கே போடப்படுகின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொதுநலச் சேவைக்காரர்கள் அல்ல. புரட்சிக்காரர்கள்.நமக்குச் சீர்திருத்தக்காரர்களும் பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள். தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும் குஷாலாகச் செய்ய வேண்டியதுதான்" *(509-512).*

கட்சிக்குள் ஏற்பட்ட கடுமையான விவாதம் ஒன்றின்போது பெரியார் கூறியது: "பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்திற்குப் பொருளாதாரமும் அரசியலும் அவசியமானது அல்லவா? இந்த இரண்டையும் விட்டு விட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக, புராண முட்டாள்தனத்தையும், பார்ப்பனச் சூழ்ச்சியையும் பேசிக் காலம் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்து போவதே போவதே மேலான காரியம் என்று சொல்வேன்" *(ஏ.எஸ்.கே. நூல் பக்.11)*

இவர்தான் பெரியார்.

ஆனால் நிலைமை மாறுகிறது. பகத்சிங்கின் 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்? கட்டுரையை வெளியிட்டதற்காகப் பதிப்பாசிரியர் முதலியவர்கள் மீது ராஜதுவேஷக் குற்றம் சாட்டப்பட்ட போது குடியரசு இதழில் வெளிவந்த அறிக்கை: (31-3-55) "சுயமரியாதை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் அல்ல, சர்க்காரோடு ஒத்துழையாமை இயக்கம் அல்ல. சட்டத்தையும் சமாதானத்தையும் மதிக்காத இயக்கம் அல்ல. சுயமரியாதை இயக்க வேலைத்திட்டம் சட்டவரம்பிற்கு உட்பட்டே நடக்கும்'.

இதன்பிறகு பெரியாரின் திசைவழியும் வேகமும் மாறுகின்றன. சீர்திருத்தப்போக்கு பற்றிய பெரியாரின் திறனாய்வுரைகள் இனித் தமது இயக்கத்திற்கும் பொருந்தும். பெரியாரின் மாற்றம் தெலிங்கானா புரட்சிக்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறை மாற்றத்திற்கு நிகரானது.

இதைப்பற்றி சிங்காரவேலர் எழுதினார்: "சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்து ஓங்கி வளர்ந்து, தற்சமயம் கீழ்நோக்கி விட்டது. ஆனால் மேற்படி இயக்கமும் அதன் தலைவரான, ஈ.வெ. ராமசாமியும் சமதர்மக் கொள்கை பரவுவதில் செய்த ஊழியத்தைத் தென்னிந்தியா எப்பொழுதும் மறக்க முடியாது. சமதர்மத்திற்காக நேற்றுவரை பாடுபட்ட ஈ.வெ. ராமசாமி ஏதோ தான் தெரியாமல் விஷயங்களைச் செய்து விட்டதாகவும் தான் நல்ல பிள்ளை என்றும் சர்க்காருக்கு வேண்டியவர் என்றும் சமதர்மத்திற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்ல ஆரம்பித்து விட்டார். மே. 1935 (அரசியல் நிலைமை. N.C.B.H).

மதச்சார்பு – 2

"மக்கள் வாழ்க்கை நலத்திற்கு என்று ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளை உணர்ந்து அதன்படி ஒழுகமுடியாத நிலையில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கருதப்பட்ட காலத்தில் அப்போதுள்ள அறிஞர்கள்: மோட்சம், நகரம், எமன், விதி, கர்மம் என்ற கொள்கைகளை உண்டாக்கி மதக்கட்டுப்பாட்டிற்கு இணங்கி நடக்கும்படி செய்தார்கள். இவற்றை மனிதன் சொன்னான் என்றால் நம்ப மாட்டார்கள்

என்று கருதி கடவுள் சொன்னார். முனிவர் சொன்னார் என்று கூறினார்கள் (1348) மதங்களை உண்டாக்கியவர்கள் பெரியவர்களாய், விவேகிகளாய், பரோபகாரிகளாய் இருந்திருக்கலாம். அவர்களிடத்தில் எனக்குச் சண்டை இல்லை. அவரவர்கள் அந்தந்தக் கால நிலைக்கு ஏற்றபடி அனுகூலித்தவர்களாக இருந்திருக்கலாம். கிறிஸ்து நாதர் ஆகட்டும் முகமதுநபி ஆகட்டும் அந்தந்த காலத்திற்கு அவர்கள் சரியானவர்களாய் இருந்திருக்கலாம். எப்போதைக்கும், எல்லாக் காலத்திற்கும் அவர்கள்தான் வழிகாட்டிகள் என்றால் அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. (2071).

பெரியாரின் மதச்சார்பான கருத்துக்கள் இவை. இக்கருத்துக்கள் சரியானவையோ இல்லையோ – இவை பெரியாரின் பெருந்தன்மையைப் புலப்படுத்து கின்றன. மதங்களின் தோற்றம் பற்றிய பெரியாரின் கருத்து திட்டவட்டமாக இல்லை. வரலாற்றின் தேவையையொட்டி மதங்கள் ஏற்பட்டன என்ற அறிவாய்ந்த யூகமே இக்கருத்துக்களில் உள்ளன. வரலாற்றுச்சூழலில் சமுதாயத்தின் சில தேவைகளை யொட்டி மதம் பிறக்கிறது எனக் கூறும் மார்க்சியருக்கும் இத்தகைய கருத்துக்கள் மறுக்கத்தக்கவை அல்ல.

"மதக் கொள்கைக்குப் பொதுவுடைமைத் தத்துவம் விரோதமானதாக இல்லை. எல்லா மதமும் மக்கள் யாவரும் சகோதரர்கள் என்றும் எல்லாமே ஒரேவித இன்பத்தையும் செல்வத்தையும் அடைய வேண்டும் என்றும் கற்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவுடைமைத் தத்துவம் ஆத்திகத்திற்கும் விரோதமானது அல்ல. ஆத்திகம் என்பது கடவுள் என்பதாக ஒன்று இருக்கிறது என்றும் அது பாரபட்சமற்றது, அதுவே உலகத்தில் சகல ஜீவராசிகளையும் படைத்தது என்றும் கூறுகிறது. பொதுவுடைமைத் தத்துவம்தான் மோட்ச நிலை, முத்தி நிலை, (1708 – 10.9.33). பொதுவுடைமைக் கருத்துக்களில் அழுத்தம் கொண்ட நிலையில், மதத்திலிருந்து திரட்டப்படவேண்டிய ஆற்றல்களில் பெரியார் அக்கறை கொண்டதற்கு இது சான்று.

மதத்திற்குள்ளும் ஒரு வர்க்கப் போராட்டம் நடைபெறுவதைப் பற்றிய உணர்விலிருந்தே இக்கருத்துக்கள் பிறக்கின்றன. நல்ல நோக்கங்களுடன் தோன்றிய மதம் இன்றைய நிலையில் எப்படி இருக்கிறது என்ற கேள்வியைப் பெரியார் ஆணித்தரமாக எழுப்பினார். 'நல்லது' எப்படித் 'தீயது' ஆயிற்று? ஆதிக்க வாதிகளுக்கும் மதம் எப்படி இரையாயிற்று?

மதம், விஷம் – 3

"மனிதர்களுக்குள் மதம் உயர்வு, தாழ்வு கற்பிக்கிறது மாத்திரம் இல்லாமல் பொருளாதாரத்தில் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கும் மதம் மூல காரணமாகிறது. உடல் வலிக்கப்பாடுபட ஒரு சாதியும், நோகாமல் உட்கார்ந்து கொண்டு சாப்பிட ஒரு சாதியும் மதம் சிருஷ்டிக்கவில்லையா? பாட்டாளிகளில் தரித்திரராகவும் வயிற்றுச் சோற்றுக்கு அடிமையாகவும் கீழ்சாதியாராகவும் கீழ்மக்களாக இருக்கவும் பாடுபடுவதும் சரீர உழைப்பு உழைப்பதும் தோஷம் என்று ஏற்படுத்திக் கொண்டவர்கள் கவலையற்ற வாழ்வு வாழவும் செல்வம் பெருக்கிக் கொள்ளவும், மற்றவர்களை அடக்கி ஆளவும் மதம் அல்லாமல் வேறு காரணம் என்ன? மிருகங்களுக்கு சாதி வித்தியாசம் உண்டா? மனிதன் மட்டுமே இப்படி இருப்பதற்கு மதம் அல்லாமல் வேறு என்ன?" (1382) மதத்தின் நன்மையான தோற்றம் பற்றிப் பேசியவர், மதமே தீயது என்றும் பேசுகிறார். இந்தப் பேச்சில் சாதி என்பது வர்க்கத்தைத்தான் குறிக்கிறது. மதம் வர்க்கங்களைத் தோற்றுவிக்கிறது. மிருகமாக இருந்து மதத்தின் மூலமும் மனிதனாகிய பழைய பாடத்தை வசதியாக மறந்து விடுகிறார் பெரியார். வரலாற்றின் ஆதார சக்தி ஆக்குகிறார். மதத்தை இதன் மூலம் மார்க்சியத்தை இனிச் சாதாரணமாகத் தூக்கி எறிந்து விடலாம். "மதம் என்பதை அபின் என்றார் ஒரு பெரியவர். நான் விஷம் என்கிறேன்" (2022) என்கிறார் பெரியார், இனி இம்முறையில் பெரியார் தீவிரவாதியாகக் காட்சி தரலாம்.

"அரசியல் கொடுமைகளைவிட மத சம்பந்தமான கொடுமைகள் மிக அதிகமாக இருப்பதே இன்றைய நமது தளர்ச்சிக்குக் காரணம். அரசியல் கொடுமைகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். பார்ப்பனர்களின் புரட்டிலிருந்து தப்பும் நமக்கு ஆங்கிலேயரை எதிர்ப்பது பெரிதல்ல. (1544) தீண்டப்படாத மக்களுக்கு ஏதாவது விடுதலை வேண்டுமானால் அரசாங்கத்தைக் கொண்டுதான் செய்து கொள்ள வேண்டும். (1604) தீண்டப்படாதவரைப் பொறுத்தவரை, நல்ல காலத்தின் அறிகுறியாக இந்தியாவின் ஏகசக்கராதி பத்தியமானது இந்திய அரசர்கள் கையில் இல்லாமல் ஒரு அன்னிய அரசிடத்தில் இருக்கிறது" (1604) தாழ்ந்த சாதியினருக்கு ஆங்கிலேயர் உடனடி எதிரிகள் அல்லர் என்பது ஓர் உண்மை நிலைமை. உடனடி எதிரிகள் உயர் சாதியினர். இவர்களில் ஒரு பகுதியினர் பார்ப்பனர்கள், இவர்களைக் கொண்டது நிலவுடைமை ஆதிக்கமுறை, சாதித்தகர்வு நிலவுடைமைத் தகர்வோடு தொடர்பு டையது. நிலவுடைமைக்குக் காவல், அரசு—ஏகாதிபத்தியம். ஏகாதி பத்தியத்தையும் நிலவுடைமையையும் தகர்க்காமல் சாதி மத ஒழிப்புப் பற்றிய பேச்சு சாக்கடையை வைத்துக்கொண்டே கொசுக்கொல்லும் முயற்சி. இதற்காக வீரப்பேச்சுக்கள். ஆரவார நடவடிக்கைகள்.

அரசியல் விடுதலையோடு சமூக விடுதலையையும் தொடக்கத்தில் குறிக்கோளாகக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சி சமூக விடுதலையைக் கைவிட்டது. இந்திய விடுதலை இயக்கத்தோடு இந்தியக் கலைகள் முதலியவற்றுடன் இந்து சமயமும் புத்துயிர்ப்புப் பெற்றது. காந்தியார் இந்து சமயச் சார்பினர். வருணாசிரமக் காப்பில் ஈடுபாடு கொண்டிருந்தார். வைக்கம் போராட்டத்தில் காந்தியார் செய்த துரோகம் மறக்கத்தக்கது அல்ல. இந்தச் சிக்கலான சூழ்நிலைமையில்தான் பெரியாரின் சாய்வு புரிந்து கொள்ளத்தக்கது. சமதர்மத்தில் வேர் கொண்டிருக்கும் போது பெரியாரிடத்திலிருந்த தெளிவு தற்போது இல்லை. அவரது முன்னைய தீவிரம் தற்பொழுது இடம் மாறுகிறது. இது சமதர்மத்திற்கும் எதிர்நிலை ஆகிறது.

சாதி மதங்களும் சமுதாயமும் – 4

"பிறவி காரணமாக உள்ள உயர்வு தாழ்வு மதத்தில் சம்பந்தப்படுத்தப்பட்டு, அம்மதம் பாமர மக்கள் ரத்தத்தில் ஊறி இருக்கிறபடியாலும், அதுவே அரசியலுக்கு ஆதாரமாக இருப்பதாலும், அதை மாற்றாமல், அதை மாற்றுவதற்குத் தகுந்த முயற்சி எடுக்காமல் மேல்நாட்டுச் சமதர்மம் பேசுவது பாலைவனத்தில் சத்தம் போடுவது போலாகும். முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால் உள்ள பேதங்களை ஒழித்தாக வேண்டும். இதுவே இந்நாட்டு சமதர்மத்திற்கு முதற்படி. நமது நாட்டில் பொருளாதார பேதத்திற்கும் சமூக சாதி பேத முறை தான் பெரிதும் காரணமாய் – காவலாய் இருந்து வந்திருக்கிறது (1700). ஏழை பணக்காரன் வேறுபாடுகளை மாற்றவேண்டும் என்று சொல்லும்போது கடவுளையும், மதக்கொள்கைகளையும் குறுக்கே கொண்டுவந்து போட்டால் அவற்றை ஒழிக்காமல் எப்படி இருக்க முடியும் (1702) வெறும் பொருளாதார சமதர்மம் பார்ப்பனரை ஒன்றும் செய்துவிடாது. சாதிமுறையின் ஆணிவேராக இருக்கும் பார்ப்பனனை ஒழிக்கும் முயற்சியே சமதர்ம வாதியின் முதற்கடமை (1705) பார்ப்பனருக்கும் மற்றும் மேல்சாதிக்காரருக்கும் இருக்கும் உயர்வை முதலில் ஒழித்தாக வேண்டும். இதிலேயே அரைப்பாகம் பொதுவுடைமை ஏற்பட்டுவிடும் (1713). திராவிட மக்கள் அனைவரும் தொழிலாளிகள் திராவிடனாய் இருப்பதாலேயே அவன் தொழிலாளியாயும் பார்ப்பனாய் இருப்பதாலேயே அவன் முதலாளியாகவும் இருக்கிறான். தொழிலாளர் கவனம் ஸ்டிரைக், சம்பள உயர்வு. அடிதடி என்ற பக்கத்தில் செலுத்தப்பட்டதே தவிர இந்தப் பேதத்தை ஒழிக்கும் முயற்சியில் திருப்பிவிடப்படவில்லை" (1741)

சாதி மதங்களும் கடுமையான உள்ளாற்றல்களோடு இந்திய – தமிழகச் சூழலில் இருக்கின்றன என்ற உண்மை, இவை பொருளியல் சக்திகளோடு இணைந்துள்ளன என்பதை மறுத்துவிட முடியாது. இவற்றின் தோற்றத்திற்கும் இந்த உண்மை பொருந்தும். பொருளாதார சக்திகளிலிருந்து சாதி மதங்களைப் பிரித்துத் தகர்ப்பது என்பது சாத்தியமில்லை;

இவை மேற்கட்டின் பகுதி. ஆகவே இவை வெறும் நிழல்; மூல உருவங்களாகிய பொருளியல் அடிப்படைகள் அழிந்தவுடன் இவை தானே மறையும் என்று பொதுவுடைமையர் பொருளாதாரவாதம் மட்டுமே பேசியிருக்கலாம் ஆனால் இது உண்மையில்லை. மேற்கட்டின் கடுமையான அழுத்தங்களை - சக்திகளை மறுப்பது மார்க்சியம் அல்ல. தவிர சாதிப்பிரிவினைகள் இந்தியச் சூழலில் வர்க்கப் பிரிவினையின் பகுதிகள். இம்முறையில் இவை அடித்தளத்திற்கு நெருக்கமானவை. ஆகவே இவை மேலும் சரியாகக் கணிக்கப் பட்டிருக்க வேண்டும். இவற்றின் ஒழிப்புக்கான இயக்கத்தில், இவற்றின் பொருளாதாரப் பின்னணியோடு சேர்த்து இவற்றின் ஒழிப்புக்கான இயக்கத்தில் பொதுவுடைமையர் பங்கேற்றிருக்க வேண்டும். இந்தியச் சூழலில் எத்தகைய இயக்கம் கட்டுவது என்பதில் பொதுவுடைமையர் இதுவரையிலும் முடிவு செய்யாத எத்தனையோ சிக்கல்களில் இதுவும் ஒன்று. இந்நிலையில் தான் பெரியாரைச் சார்ந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த வகையில் தனித்து இயங்கவேண்டி இருந்தது.

இந்நிலையில் அவர்களின் கோட்பாட்டு வகுப்பில் நிறையத் திரிபுகள் தெரிகிறது. சாதி மதங்கள் யாரோ குறுக்கே கொண்டுவந்து போட்டவை அல்ல. இவை கூடவே தோன்றியவை. இவற்றின் தோற்றத்தில் 'திராவிடரு'க்கும் பங்குண்டு. ஒரு காலத்தில் தேவையாக இருந்து பிறகு தடையாகி விட்டவை இவை. இவை நிலவுடைமை, முதலாளிய முறைகளுடன் நெருக்கமாகப் பிணைந்தவை. தமிழகத்தில் மடங்களுடனும், மேல் சாதிக்காரர்களுடனும் பிணைந்தவை. இவற்றை அழிப்பதும் தேவையான செயற்பாடுகள் ஆரிய எதிர்ப்பாகவே செயற்பாட்டைக் குறுக்கிக் கொண்டது, மேல் சாதியினருக்கும் உடமைவாதியினருக்கும் பாதுகாப்பான நடைமுறைகள். இம்முறையில் மார்க்சிய எதிர்ப்பாகவும் இவை வடிவம் பெறுகின்றன. பொதுவுடைமையர்க்கு எதிரான தொழிலாளர், விவசாய இயக்கங்களைப் பெரியார் கட்டுவதில் ஒரு சமயம் ஈடுபட்டிருப்பதை நினைவில் கொள்ளலாம்.

புராணங்கள்... சடங்குகள் –5

இந்தியக் கண்டத்தில் ஆரியர் வருவதற்கு முன் சிவன், விஷ்ணு இல்லை. கோவிலில் உள்ள உருவங்கள் அவற்றின் தோற்றத்திற்கான கதைகள், பூசைகள், உற்சவ முறைகள். நைவேத்திய சாதனங்கள், திருமணச் சடங்கு முறைகள், பெண்ணடிமை ஆரியருடையவை. புராணங்கள், இதிகாசங்கள். வேத சாஸ்திரங்கள் ஆரியர்தம் உயர்விற்குச் செய்து கொண்டவை. இராமன் அயோக்கியன், இராமாயணத்தின் உட்கருத்து. ஆரியர் தமக்கு உரிமை இல்லாத நாட்டில் வாழ்வதற்கு வழி தேட முயன்றதைப் பற்றிய கதை. தென்னாடு உயர்ந்ததைப் பொறுக்க முடியாத ஆரியர் அகத்தியனை அனுப்பித் தென்னாட்டைத் தாழ்த்தினர். அகலிகை, திரௌபதி, சீதை ஆகியவர்கள் ஆபாசமானவர்கள். மண்டோதரியிடம் குற்றமில்லை. விஷ்ணு ஆரியத்தில் எதிரிகளை அழிக்கவே அவதாரம் எடுத்தான்.

இவ்வாறெல்லாம் பெரியார் தம் பகுத்தறிவுச் சிந்தனைகளை விவரித்தார். இவற்றினுள் சில உண்மைகள் அடங்கி இருந்தன என்பதை நாம் மறுக்கமுடியாது. நிகழ்காலத்தின் அவசரத் தேவைகள் இவற்றினுள் வெளிப்பட்டன. நிகழ்காலப் பிரச்சனை பற்றிய பார்வை பழங்கால வரலாற்றினுள்ளும் சென்றது. புராணங்கள் முதலியவற்றை அவை எழுந்த வரலாற்றுச் சூழலில் வைத்துப் பெரியார் பார்க்கவில்லை. வரலாற்றுப் பொருளியல் சூழல்களில் சமூக முரண்பாடுகளோடு வாழ்ந்த மனிதர்களை, ஆரியராகவே, திராவிடராகவே பெரியார் பார்த்தார்: திராவிடர் நம்மவர். ஆகவே அவர்களிடம் குற்றமே இருக்க முடியாது. ஆரியர் பகைவர் ஆகவே குற்றமே உருவானவர் என்றும் பார்த்தார், சிவன், விஷ்ணு, பூசைகள், சடங்குகள், புராணங்கள், சாதி, புரோகிதர் முதலியவை திராவிடச் சார்பானவையும் தான். பெரியார் கருதியவாறு தூய்மையான ஒரு தொன்மை எந்த இன மக்களுக்கும் இருந்ததில்லை. உலகம் முழுவதும் மக்களினம் வரலாற்றில் தவிர்க்க இயலாத முறையில் மந்திரவியல், சடங்குகள், ஆவிகள், கடவுளர் முதலியவற்றின் மூலமும்

வளர்ந்திருக்கின்றது. இவை இந்திய சூழலில் ஏகாதிபத்தியம், நிலவுடைமை இணைப்பின் காரணமாக இவை நெடுங்காலத்திற்குக் காப்பாற்றப்பட்டன. பெரியார் தூய்மையான திராவிடப்பழமை பேசியது, சாதி மாதங்கள் முதலியவை அறவே இல்லாத ஒரு எதிர்கால நிலைமைக்காக. ஆகவே வரலாற்றிலிருந்து பிரித்து இவர் கண்ட திராவிடத் தூய தொன்மை, ஆற்றல் மிகுந்த ஒரு தொன்மம் (Myth).

கடவுள்களின் பரிணாமம் பற்றி ஒரு சமயம் பெரியார் குறிப்பிட்டார். சிவன் கற்பிதம் மிகப்பழமையான காட்டுமிராண்டிக் காலத்தது. விஷ்ணு சிறிது நாகரிகம் ஏற்பட்ட பின் கற்பிக்கப்பட்ட கடவுள். கலை அறிவு கல்வியின் உருவமாகிய பிரம்மா, இன்னும் பிற்காலத்தில் கற்பிக்கப்பட்ட கடவுள். இப்படிப் பார்த்தால் கடவுள்கள் புராணங்களின் பரிணாமத்தன்மை விளங்கும். *(1842)*

வரலாற்று உண்மைகளுக்கு எவ்வளவு நெருக்கமாகச் சென்றிருக்கிறார் பெரியார். வரலாற்றுச் சூழலிலிருந்தே தெய்வங்கள், புராணங்கள் முதலியவற்றின் தோற்றத்தை இன்னும் கூர்ந்து பார்த்திருந்தால் பெரியார் கண்டிருப்பார். வரலாற்றைச் சூழ்ந்திருக்கும் மாயத்திரை விலகியிருக்கும், வரலாற்றுப் பொருள் முதலாளராய் உண்மைகளைக் கண்டிருப்பார். ஆனால் பெரியார் பார்ப்பதற்குப் பெயர், பகுத்தறிவுப் பார்வை. தனது சிந்தனைக்குள்ளிருந்தே – தனது வெறுப்பு விருப்பிற்கு உட்பட்டே – உலகத்திற்குப் பொருள் சொல்லும் முறை இது. புறத்திலிருந்து வரலாற்றிலிருந்து உண்மைகளைத் தேடித் தொகுக்கும் முறை அல்ல இது. இந்தப்பகுத்தறிவு தனக்குள் உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்ப்பதில்லை. பகுத்துக்கொண்டே போய் இறுதியில் ஏதுமற்ற இன்மைக்கு அதுபோய்ச் சேருகிறது. இடையில் அது எதையும் திரட்டிக் கொள்வதில்லை.

உறவு முறை என்ற புகழ் பெற்றதொரு கட்டுரையில் (குடியரசு 2-6-46) பெரியார் உலகம் முழுவதும்

பல்வேறு நாடுகளில் மனிதர்களுக்கிடையில் நிலவும் உறவு முறைகளைப்பற்றி ஆராய்கிறார். முஸ்லீம்கள், சிறிய தகப்பனார், சிறிய தாயார் பெண்களை மணக்கிறார்கள். சயாமில் அரசன் தன் சகோதரியை மணக்கிறான். பவுத்த இராமாயணம் இராமனுக்குத் தங்கை சீதை என்கிறது. இவற்றைக் குறிப்பிட்டு விட்டு பொதுமைப்படுத்துகிறார். "உலகச் சமூகம் முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரு முறையோ, வரையறையோ காரண காரியங்களோ பொதுவாய் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இவ்விஷயங்களில் இன்னதுதான் சரி தப்பு என்று குறிப்பிடுவதற்கு இடம் இல்லை. கல்வி பற்றிய காரியங்களுக்கு பாவம், புண்ணியம், கடவுள், தண்டனை, மானம், பொருத்தம் என்று கூறும்படியான எவ்வித முறையும் இல்லை. சமயோஜிதம் என்பதைத் தவிர வேறு வழிகாட்டி இருப்பதாகத் தெரியவில்லை". *(1946–96)*

விளக்கைக் கையிலேயே வைத்துக்கொண்டேபோய் ஆழக்கிணற்றில் விழுகிறார் பெரியார். பகுத்தறிவு சூனியத்தில் புதைகிறது. மனித உறவுகளை வரையறைப் படுத்தவல்ல நெறி அறியாத நிலையில், இனி எதுவும் செய்யலாம். சமயோஜிதம் வழி காட்டுகிறது. இவ்வி யங்களில் இன்னதுதான் சரி தப்பு என்று குறிப்பிடுவதற்கு இல்லை என்று கூறியவர். 'தம் பழங்காலப் புராணங்கள் தான் பெற்ற மகளை, தாயைப் புணர்ந்த கதைகள், குருவின் மனைவி, சகோதரன் மனைவி கலவி, கடவுள்கள் பக்தைகளிடம் கலவி பற்றிய கதைகளைக் குறிப்பிடுவதாக எழுதுகிறார். ஆரியரிடம் எவற்றையெல்லாம் குற்றமாகக் கண்டாரோ அவையெல்லாம் இப்பொழுது சரியுமில்லை. தப்புமில்லை. வரலாறு, கூரை சரிந்து புதைகிறது. பெரியார் முன்பு சொன்னாரே – இவற்றையெல்லாம் பேசிக்கொண்டா காலம் கழிப்பது? "திருமண முறையே கூடாது. ஒழிக்கப்பட வேண்டியது" *(178)* பெரியாரது இன்மை நாத்திகக் கோட்பாடு இப்படியெல்லாம் அவரைச் சொல்ல வைக்கிறது.

பகுத்தறிவு – 6

"எத்தனையோ கோடிவித ஜீவ பிராணிகளில் மனிதன் என்பது ஒரு விதமான தோற்றமுடைய உருவத்திற்குச் சொல்லப்படும் பெயரே ஒழிய மனிதன் என்ற ஒரு தத்துவத் தனிப்பொருள் இல்லை. (1097) மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத ஓரளவு அறிவின் சிந்தனா சக்தி மனிதருக்கு இருக்கிறது என்கிற அளவிற்கு வித்தியாசம் மாத்திரம்தான் உண்டே தவிர மற்றபடி தனிப்பட்ட மேன்மை சொல்வதற்கில்லை. ஏனெனில் மனிதனுக்கு இல்லாத பல சக்திகள் விசேடக் குணங்கள் மற்ற ஜீவராசிகளிடம் காணலாம் (114) பகுத்தறிவுள்ள மனிதன்தான் பின் சந்ததிகளைப் பற்றி முட்டாள்தனமாகக் கவலைப்படுகிறான். ஜீவராசிகள் தம் குட்டிகளைக் கவனிப்பதே இல்லை. பகுத்தறிவு இல்லாத எந்த ஜீவராசியும் தம் குட்டிகளைக் கவனிப்பதே இல்லை. பகுத்தறிவு இல்லாத எந்த ஜீவராசியும் வருத்தி வாழ்வதில்லை... நாய், பன்றி, கழுதை இவைகளில் சாதி கிடையாது. மனிதன் மனிதன்மீது சவாரி செல்கிறான். பகுத்தறிவு இருப்பதாலேயே மனிதன் மேன்மையானவன் என்று எப்படிச் சொல்வது... சமூக வாழ்க்கை இல்லாது காட்டில் திரிந்தபோது இல்லாத கெட்ட குணங்கள் சமூக வாழ்க்கையில் வந்த பிறகு ஏற்பட்டன. (1115) பரஸ்பர உதவிக்காக ஏற்பட்ட சமூக வாழ்க்கை, பரஸ்பர தொல்லைக்கும், உபத்திரவத்திற்கும் ஆளாகி விட்டது. சமூகத்துறையில் உள்ள வேற்றுமை பகைமை முதலிய குணங்கள் பகுத்தறிவு இல்லாததனால் அல்லது பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தத் தெரியாததால் ஏற்பட்டவை (1116)

மனிதப்பிறவி ஒரு லட்சியமற்ற பிறவி மனிதன் பிறக்கிறான், பற்பல எண்ணுகிறான்: இறுதியில் செத்துப் போகிறான். மனிதன் பிறப்பது முதல் செத்துப் போவது வரை இடையில் நடைபெறும் காரியங்கள் எல்லாம் சுற்றுச் சார்பு, பழக்கவழக்கங்கள் இவைகளைப் பொறுத்தே நடைபெறுகின்றன. எனவே மனித வாழ்வு லட்சியமற்ற வாழ்வு (1136) மனிதன் பிறந்து இறக்கும் வரை இடையில் உள்ள காலத்தில் ஏதாவது பயனுள்ள காரியம் செய்ய

வேண்டும். சமுதாயத்துக்குப் பயன்தரும் வாழ்க்கையே சிறந்த லட்சியம் (1116)

மனிதன் நிச்சயமாக ஒரு தனிப்பொருள்தான். விலங்கினத்திலிருந்து வேறுபட்டவன்தான். படைப்பியல்புதான் இவனை விலங்கிலிருந்து பிரித்தது. கைகளைப் பயன்படுத்தி- கருவிகளைப் பயன்படுத்திப் பொருட்களை உருவாக்குவதன் மூலமே இயற்கையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுகிறான் மனிதன். எந்த விலங்கைக் காட்டிலும் மனிதன் இதனாலேயே மேலானவன். இதனாலேயே தன்னுணர்வு மனிதனுக்கே உரிய குணம். தன் படைப்புக்களை - அவற்றின் மூலம் தன்னை எதிர் வைத்து – தன்னைப் புரிந்துகொள்ள - கணிக்க – தன் உயர்வு பற்றிக் கற்பனை செய்ய – சாதிக்க வல்லவன் மனிதன். இவனது போட்டி பொறாமை முதலிய 'தீய' குணங்கள் சமுதாய முரண்பாட்டுச் சிக்கலிலிருந்து பிறப்பவை. வர்க்க வேறுபாடு மனித சமூக வரலாற்று நிகழ்ச்சிக்குத் தேவையாக இருந்தது. காட்டு வாழ்க்கையும் நாகரிக வாழ்க்கையும் இம்முறையிலேயே வேறுபடுகின்றன. சமூகம் வர்க்கங்களாக பிளவுண்டது. மனித அறிவும் ஆற்றலும் காலத்திற்குக் காலம் வளர்ந்து வருகிறது. வரலாற்றின் ஒரு பாய்ச்சலாகத் தோன்றியவன் மனிதன். பகுத்தறிவு பாய்ச்சலை விளக்குவதில்லை. பகுத்தறிவு, பகுதி அறிவு. படைப்புச் செயலிலிருந்து தோன்றுவதும் திரும்பவும் படைப்புச் செயலில் இணைவதும் அறிவு. மனிதன் தன்னைப் பற்றித்தானே சிந்திக்கும்போது தான் மெய்யியல் அறிவு பெறுகின்றான். மனிதத் துயரங்கள், நிலவுடைமை, முதலாளியம், ஏகாதிபத்தியம் முதலியவற்றோடு தொடர்புடையவை. மனிதனைச் சூழல் பாதிக்கிறது. அந்தச் சூழலலை தனக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்கிறான் மனிதன். மனித வரலாறு இத்தகையது. வரலாற்று வளர்ச்சிப் போக்கிலேயே மனிதனின் குறைகள் தீரும். என்றாவது முழுமையாகத் தீருமா என்று சோதிடம் பார்த்துப் பயன் இல்லை. மனிதப் படைப்புக்கு நோக்கம் உண்டு: படைப்பின் நோக்கம் விடுதலை.

இயற்கையிலிருந்தும் வர்க்க முரண்களிலிருந்தும் விடுதலை. தனது உடல் நொய்மையிலிருந்தும் விடுதலை. விலங்கிலிருந்து வந்தவன் மனிதன். இவனிடம் விலங்கியல்பு தொடர்கிறதா என்பது கேள்வி. பதில் ? பொதுப்படையான மனிதன் பற்றி சமுதாய வரலாற்றோடு சம்பந்தப்படுத்தாது அவனது குற்றங்கள் குறைகள் பற்றிக் கவலைப்படுவது என்றால் நிறையக் கவலைப்பட வேண்டும். அந்த மன நிலையிலிருந்து நிறையக் கருணை, தியாகம் ஆகியவற்றைக் கிளப்பிக்கொள்ள முடியும். இவ்வகைப் போக்கு மிகை உணர்வாக – மிகை மனித நேயமாக வெளிப்படும். வள்ளலார், டால்ஸ்டாய்கள் இத்தகையவர். வரலாற்றில் வர்க்க முரண்பாட்டுச் சிக்கலில் – சமூக அடிப்படையில் வேர் கொள்ளாத பகுத்தறிவு - திசை தெரியாத – ஆகாயத்தில் வேர்விட முயற்சி செய்யும் அறிவு பகுத்துப்பகுத்து இறுதியில் ஒன்றுமே இல்லை என்ற சூனியவாதமும் பேசக்கூடியது. இங்கு இதன் பொருள் முதற்சார்பு அறவே கழன்று விடுகிறது.

பெரியாரியமும் மார்க்சியமும்–7

பெரியார் ஒருங்கிணைந்த சிந்தனையாளர் அல்லர். அவரது சிந்தனைத் தொகுப்பில் ஒன்றோடு ஒன்று ஒட்டாத பல கூறுகள் உண்டு. இப்படிச் சொல்வது பெரியாருக்கு இகழ்வு அன்று. படிக்காத – பலதுறை அறிவைத் தேடிப் பெறவாய்ப்பு இல்லாத நிலையில் இருந்தார் பெரியார். இவை பற்றிச் சிந்தித்து பெற கட்டுக்கோப்பான தொகுப்பை உருவாக்கிக்கொள்ள காத்திருக்க முடியவில்லை. நிலைமைகள் அப்படி இருந்தன. அதனாலேயே அவரது 'சுய' சிந்தனை தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தது – இறுதிவரை.

பெரியாரது பகுத்தறிவு இணைந்திருக்க வேண்டிய பலவற்றைப் பிரித்துவிட்டது. ஏகாதிபத்தியம் - நிலவுடமை – சாதி மதப்பிரிவும் இத்தகையது. இதன் விளைவு ஒரு முனையில் விடைப்பு. இந்தியாவில் ஏகாதிபத்தியமும் நிலவுடைமையும் இணைந்திருந்தன. இவற்றுக்கு எதிர்ப்பைச் செய்யவேண்டிய சக்திகள் ஏகாதிபத்தியம் நோக்கியே –

அதுவும் அரைகுறையாகத் தமது போராட்டங்களைச் செய்தன. நிலவுடைமைக்கு அழிவு இல்லை. இந்தப் பெரிய சூழலில்தான் பெரியாரை வைத்துப் பார்க்கவேண்டி இருக்கிறது. பிளவுண்ட சூழலில் பெரியார் ஒரு சிறு எல்லைக்குள் இருந்து போராடினார். அரசியல் விடுதலைக்காகக் காந்தியார் போராடியதைப் போலவே பெரியாரும் சமூக விடுதலைக்குப் போராடினார். காந்திக்கு நிகரான பெருமை உடையவர் பெரியார். இந்திய விடுதலையில் பெரியாருக்கும் சிறந்த பங்கு உண்டு. பெரியாருக்குப் பக்கத்திலிருந்தவர்கள் பலர் நிலவுடைமைக்காரர்கள். அப்புறம் குட்டி முதலாளியப் படிப்பாளிகள். தன் வாழ்வில் ஏற்பட்ட சில அனுபவங்கள் பெரியாரைக் கடுமையான பிராமண எதிர்ப்பாளராக மாற்றியது: சமூக நிலைமைகளும் அப்படி இருந்தன. கட்சிக்குள்ளும் நிலைமை அப்படி. வெளியில் காங்கிரஸ்காரர்கள் பொதுவுடைமையர் பற்றிப் பெருமையாகச் சொல்வதற்கும் இல்லை. இந்திய வரலாற்றுத் தேக்கம் அனைவரையும் கடுமையாகப் பாதித்திருந்தது.

பெரியாரின் பகுத்தறிவு முறைச் சிந்தனை விரிந்திருந்தால் தமிழக மக்கள், சமூக வரலாறு, விஞ்ஞானம் பற்றி மேலும் தெளிவான அறிவைப் பெற்றிருக்க முடியும். புராணங்கள் தமிழக வரலாறு பற்றிய சரியான ஆய்வுகளின் மூலம் வரலாறு பற்றித் தெளிந்த அறிவைப் பெற்றிருக்க முடியும். வரலாற்றாய்வில் ஏற்பட்ட முடக்கம் இன்னும் நீங்கிய பாடில்லை. பகுத்தறிவில் முட்டும் முடங்கியவர்கள் சிறந்த படைப்பாளிகளாக, தத்துவவாதிகளாக, வரலாற்று ஆய்வாளர்களாகச் சிறக்கவில்லை. விதி விலக்காக ஒரு சிலரே இருந்தனர்.

பகுத்தறிவின் முடக்கம் சரி செய்யப்பட்டு அறிவு நீரோட்டம் மீண்டும் பாய்ந்து செல்ல வேண்டும். பெரியாரிடம் இயங்கியல் அணுகல் முறை இல்லை. வரலாற்றுப் பொருள் முதலியலின் சில கூறுகள் மட்டுமே உண்டு. இவற்றிலிருந்து தொடங்கி முடக்கம் களைய வேண்டும். பெரியாரின் மனித நேயம், சிறந்த ஒளி விளக்கு. அவரிடம் இருந்த சுயவிமர்சன உணர்வு நல்வழிகாட்டி.

பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் சமப்படுத்துவதில் ஒரு பயனும் இல்லை. பெரியாரியத்தின் மார்க்சியத்தையும் சமப்படுத்துவதில் ஒரு பயனும் இல்லை. பெரியாரியத்தின் குறுகிய எல்லைகள் தகர்ந்தால் மார்க்சியத்தின் எல்லைக்குள் அது வரும். அது இரு சார்பினருக்கும் நல்லது. தமிழக மார்க்சியம் இந்த உறவால் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்ளமுடியும். வெறும் சமாதான சகவாழ்வு இங்கும் நல்லதல்ல. பெரியாரிடம் கொள்ளும் மரியாதை வேறு, பக்தி வேறு, பக்தி, பெரியார் அறவே விரும்பாதது. பெரியாரிடமிருந்து திறனாய்வு முறையில் பெறப்படும் உருப்படியான சிந்தனைகள் புரட்சிகர இயக்கத்திற்கு வலுத்தருபவை. உடமை வர்க்கத்தைத் தகர்க்காத பகுத்தறிவுப் பார்வை, சாரத்தில் பெரியாரியத்திற்கு எதிரானது.

⁂

4. எல் சால்வடாரில் அதிகாரத்துக்கான போராட்டம்

– சிங்கராயர்

40 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சிறிய மத்திய அமெரிக்கக் குடியரசான எல் சால்வடாரில், ஆளும் ராணுவ கும்பலை எதிர்த்து ஆயுதப் போராட்டங்கள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மக்களின் போராட்டம் உத்வேகத்துடன் நடந்து வருகிறது. இப்போராட்டங்கள் வெற்றி பெறுமானால் அது ஹண்டுராஸ், குவாடமாலா என்ற இரு அரசுகளின் அடித்தளத்தையும் உடனடியாகச் சிதறடிக்கும். இதனாலேயே எல் சால்வடார் போராட்டம் உலகப் போராட்டத்தின் ஒரு பகுதியாகி உள்ளது. இதனாலேயே ஒடுக்குமுறையாளர் அனைவரும் எல் சால்வடாரில் நிகழும் உண்மையான தேசிய விடுதலைக்கான போராட்டத்தை நசுக்க ஒன்று கூடியுள்ளனர்.

எல் சால்வடாரில் ஆட்சி புரியும் ராணுவ கும்பலைத் தூக்கியெறிய ஆயுதப் போராட்டம் நடத்தும் அமைப்புகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் உள்நாட்டுத் தரகு முதலாளி வர்க்கத்தையும் நிலப்பிரபுக்களையும் தூக்கிவாரிப் போட்டிருக்கிறது. பல மூன்றாம் உலக நாடுகளையும் பிரதிபலிக்கும் எல் சால்வடாரில், ஐரோப்பாவில் போல் ஒரு முன்னணிக்கட்சி, மற்றும் தொழிலாளர், இளைஞர், பெண்டிர், உழவர் அமைப்புகள் மட்டுமே இல்லாமல், ஏராளமான புரட்சி அமைப்புகள் இருப்பதானது ஐரோப்பிய புரட்சியாளர்களுக்குத் தலைக்குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

1970இல் எல் சால்வடாரின் பொதுவுடைமைக் கட்சிச் செயலரான தோழர் மார் ல் புரோக், சீர்திருத்தப் போக்கை வளர்த்து அக்கட்சியிலிருந்து விலகி, ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் அமைப்பான மக்கள் புரட்சி இயக்கத்தை (FPL) நிறுவினார். இவ்வியக்கம் மக்கள் புரட்சிப்பிரிவு (BPR) என்ற மக்கள் திரள் அமைப்பையும் நிறுவியுள்ளது. BPR ஒரு அரசியல் கட்சி அல்ல, மக்கள்

அமைப்புகளின் ஒரு கூட்டு அணியே. பல்வேறு சங்கங்களும் இணைந்த இதன் உறுப்பினர் தொகை 1,00,000.

மற்றொரு ஆயுதப் போராட்டக் குழு ERP. இதன் அரசியல் கட்சி சால்வடார் புரட்சிக் கட்சி (PRS) என்பதாகும். இதன் மக்கள் அமைப்பு பிப்ரவரி 28. L.P. என்பது. (பிப்ரவரி 28 அன்று நூற்றுக்கணக்கான மக்கள் திரளினரைப் படுகொலை புரிய பயங்கரத்தை ஏவி விட்டது ராணுவ கும்பல்). குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் ERP க்குள் முரண்பாடுகள் எழவே, ஒரு பிரிவு பிரிந்து சென்று தேசிய எதிர்ப்பு இயக்கம் ஆக (FARN) தன்னை நிறுவிக் கொண்டது. இதன் மக்கள் அமைப்பு. மக்கள் ஐக்கிய செயல்பாட்டு முன்னணி (FAPU) ஆகும். இம்மூன்று குழுக்களும் புரட்சிகர ஒருங்கமைப்புச் செயற்குழுவை அமைத்தன.

தொழிலாளரிடையே ஓரளவு செல்வாக்கு பெற்றதும் 1930 முதல் இருந்து வருவதுமான பொதுவுடைமைக் கட்சி (CPS), கடந்த 11 வருடங்களாக அமைதி வழியில் சோசலிசத்துக்குச் செல்வதில் நம்பிக்கை கொண்டிருந்தது, எனவே ராணுவ ஆட்சியை ஆதரித்தது. காபினட்டில் தன் உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. இப்போது அதுவும் ஆயுதப் போராட்டப் பாதையை மேற்கொண்டு விட்டது. இந்நான்கு கொரில்லா அமைப்புகளுடன் அதன் மையக் கருவாக ஒரு தேசிய அமைப்பு - புரட்சிகர ஜனநாயக முன்னணி (FDR) நிறுவப்பட்டது.

புரட்சிகர ஜனநாயக முன்னணிதான் (FDR) சண்டையில் ராணுவக் கும்பலின் ஆட்சியைத் தூக்கி எறியும் பொது இலக்கைக் கொண்ட சிறு முதலாளி வர்க்கம், ஆகியவற்றின் பகுதிகளைக் கொண்ட ஐக்கிய முன்னணியாகும். இதன் தலைவர் கிறித்துவ ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் ஆவார். இருப்பினும் தலைமை முதலாளி வர்க்கத்திடமல்ல, தேசிய ஜனநாயகப் புரட்சி என்ற குறைந்தபட்ச இலக்குக்காக அணி சேர்ந்துள்ள கொரில்லாப் பிரிவினரிடமே உள்ளது.

பு.ஜ.மு.வின் கீழிணைந்த இப்பரந்த தேசிய முன்னணிக்கு எதிராக 14 குடும்பங்கள் சதிசெய்கின்றன.

இவை மொத்த மக்கள் தொகையில் 2% தான். ஆனால் நாட்டின் விளைநிலத்தில் 60% க்கும் மேல் இவற்றுக்குச் சொந்தமாக உள்ளன. ஆளும் கட்சியை இவை கட்டுப்படுத்துகின்றன.

ஆளும் கும்பலின் உள்நாட்டு அடித்தளம் தினமும் குறுகி வந்தாலும் அதன் சர்வதேச தொடர்புகள் வளர்ந்தே வருகின்றன. பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வெனிசூலா அரசாங்கம் இக்கும்பலுக்கு நிதிக்கடன் வழங்குகிறது. 'எதிர்க்கிளர்ச்சி நிபுணர்கள்' அதாவது கொலைபுரிவோர், சித்திரவதைப்போர், முரட்டுப்பேர்வழிகள் எல்லாம் இஸ்ரேல், சிலி, அர்ஜென்டைனா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இச்சிறிய நாட்டுக்குள் கொண்டுவந்து குவிக்கப்படுகிறார்கள்.

'மனித உரிமைகள்' பற்றிப் பேசிய கார்ட்டரின் கைங்கரியம் என்ன தெரியுமா? வதைத்தல், உளவு பார்த்தல், கிளர்ச்சியை ஒடுக்கல் ஆகிய கலையில் 100 பேருக்கு டெக்சாஸ் மாநிலத்தில் சி.ஐ.ஏ.வைக் கொண்டு பயிற்சியளித்தான். ஹாண்டுராஸில் ஒரு கூலிப்படையையும் தயார்படுத்தி வைத்துள்ளது அமெரிக்கா. இந்த எதிர்ப்புரட்சி வேலைகளை அதிகப்படுத்துகிறான் ரீகன்.

எல்சால்வடாரில் கிறித்துவத் திருச்சபை – குறிப்பாக கீழ்மட்டங்களில் – மக்கள் பக்கம் நிற்கிறது. இது ஆளும் கும்பலின் சினத்தைக் கிளப்பியுள்ளது. திருச்சபைத் தலைவர் (அதிமேற்றிராணியார்) ஆஸ்கார் ரோமரோ பட்டப்பகலில் ராணுவக் கும்பலின் படுகொலைப் பிரிவால் சுட்டுத்தள்ளப்பட்டு தியாகியானார். ஜூலை 3, அன்று எல் சால்வடார் படை ஒன்று 3 டாங்கிகளுடனும் 120 வீரருடனும் சான் ஜோஸ் கத்தோலிக்கப் பள்ளியில் புகுந்து, அங்கு முந்திய ராணுவ அதிபரின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆஸ்கார் ரோமரோ தயாரித்து வைத்திருந்த அறிக்கைகளைக் கைப்பற்றிச் சென்றது. தொழிற் சங்கத்தினரைத் தண்டித்தல். உழவர்களையும் அறிவு ஜீவிகளையும் கொலை செய்தல் முதலியவற்றை இப்படையே நிறைவேற்றுகிறது. அரசே இப்படை மூலம், தன்னை எதிர்ப்போரை ரகசியமாகத்

தீர்த்துக் கட்டிவருகிறது. பாதுகாப்பு மந்திரியும், எல் சால்வடாரின் அதிகாரத்தை உண்மையில் கையில் வைத்துள்ள கொடுங்கோலுமான தளபதி ஜோஸ் கிலர்மோ கார்சியாவே (Guillermo Garcia) இத்தகைய சம்பவங்களுக்குக் காரணமாவான். இவனே அவசர நிலையைப் பிறப்பித்து அதன் மூலம் எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்க பாதகம் புரியும் ரகசியப் படுகொலைப் பிரிவுகளை அமைத்தவன்.

கடந்த சில மாதங்களில் புரட்சி அமைப்புகளின் ஒற்றுமையால் சட்ட, மற்றும் சட்டவிரோத, ராணுவ மற்றும் அமைதியான போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. நாடு முழுவதிலும் 60,000 தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்கள் நடந்துள்ளன. சுமார் 10,000 ஆசிரியர்கள், துறைமுகத் தொழிலாளர், ரயில்வே தொழிலாளர், மருத்துவர், அரசு ஊழியரனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர். மக்கள் திரளினரின் இப்போராட்டங்களுக்கு இணையாக ஆயுதப் போராட்டத்துடன் இணைவது ஒரு சிறப்பான அம்சமாகும். இவ்வகையில் சமீபத்தில் கொரில்லா அமைப்புகள் வானொலி நிலையங்களைக் கைப்பற்றி அவை மூலம் மக்களுக்குச் செய்திகள் விடுத்தன; ஆளும் கும்பலையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அம்பலப்படுத்தின.

மற்றொரு வடிவம், கொரில்லாக்கள் நகரங்களில் நுழைந்து மக்களுக்கு கொரில்லாப் பயிற்சி, அரசியல் கல்வி இவற்றைப் பயிற்றுவித்து விட்டு பின்வெளியேறி மறைந்து விடுவதாகும். போராட்டத்தின் அரசியலை விளக்குவது மட்டுமன்றி ஆளும் கும்பலின் பலவீனத்தை எடுத்துக் காட்டுவதுமே இந்நடவடிக்கைகளின் நோக்கமாகும்.

சால்வடாரில் இப்போது நடக்கும் போராட்டம் இலக்கைப் பிடிக்கும் இறுதிக் கட்டத்தை எட்டவில்லையாயினும், தம் பெரும் அளவிலான தாக்குதல்களுக்கு மக்களின் ஆதரவு இருப்பதால் கொரில்லாக்கள் தயங்கி நிற்க இடமில்லை என்பது ஒரு உண்மையாகும். அந்நிய உதவியின்றி ஒரு சில மாதங்களுக்கு மேல் ராணுவக் கும்பலால் தாக்குப்பிடிக்க முடியாது.

சால்வடாரிலும் லத்தீன் அமெரிக்காவிலும் நடக்கும் புரட்சி இயக்கங்களின் சிறப்பு யாதெனில் அவை விஞ்ஞான

சோசலிசத்தைப் படைப்பாற்றலுடன் கையாள்வதேயாகும். தேசிய ஜனநாயகப் புரட்சியில் ஈடுபட்டுள்ள உலகின் பிறபகுதியினர்க்கு அவை முன்மாதிரியாய் அமைகின்றன.

அறுபதுகளில் "ஐரோப்பியர்", குறிப்பாக சோசலிச நாட்டவர், லத்தீன் அமெரிக்காவில் சோசலிசத்துக்கான சரியான போராட்ட நெறி சமாதானப்பாதையே என்றனர். சேகுவேரா இதை விலக்கி ஆயுதப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார். அவர் வழி நிற்கின்றனர். இன்றைய இளந்தலை முறையினர். இந்த மார்க்சிய லெனினியப் பாதை, குருசேவ் கும்பலின் பாதையை வென்றுள்ளது.

ஒரே முன்னணிக் கட்சி தான் மக்களை நடத்திச்செல்ல வேண்டுமென்பர் "ஐரோப்பியர்". எல்சால்வடாரில் "அதிகார பூர்வமான" ஒரே முன்னணி அமைப்பு என்ற கருத்து விலக்கப்பட்டது. ஏனெனில் அது சால்வடார் நடப்புக்கு உகந்ததல்ல. காரணம் இங்குள்ள முதலாளியம் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து நிற்கும் முதலாளியம். எனவே ஒரே முன்னணி என்ற அமைப்பை எல் சால்வடார் உதறித்தள்ளுகிறது; ஏனெனில் இத்தகைய முதலாளிய நாடுகளின் சமூக அடித்தளமானது, ஒன்றல்ல, பல புரட்சி அமைப்புகளைத் தோற்றுவிக்கிறது. இந்நிலைபாட்டினின்று எழுவது யாதெனில் ஒரு தனி புரட்சியமைப்பு ஒரு சார்புநிலை முதலாளிய நாட்டின் அதிகாரத்தை வென்றெடுப்பதில் தீவிரம் காட்டுமாயின், அது அவசியம் பிற புரட்சி அமைப்புகளுடன் இணைந்தாக வேண்டும் என்பதே.

புரட்சி அமைப்புகளின் பன்முகப்பாடு என்ற இப்புதிய கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே CPS ஆனது FPL, ERP-PTS மற்றும் FARN சேர்ந்த ஒருங்கிணைப்பு செயல் குழுவுடன் சமத்துவ அடிப்படையில் இணைந்தது. ஒரு புரட்சி அமைப்பு மற்றதன்மேல் மேலாண்மை செலுத்தாது. இதுவரை நிகழ்ந்ததுபோல் தன் தலைமையை நிலைநாட்டவோ, தன் சொந்தக்கட்சி உறுப்பினர்களைத் தேர்ந்து கொள்ளவோ ஒரு முன்னணி அமைப்பு இனி பரந்த மக்கள் திரள் அமைப்பில் புகுவதென்பது முடியாது.

மேற்கண்ட அமைப்புகள் தம்மை முழுக்க அர்ப்பணித்துக் கொண்ட இளைஞர்களின் கொரில்லா அமைப்புகளாகத் தொடங்கி, விரிந்த மக்கள் அரசியல் அமைப்புகளாக மலர்ந்துள்ளன. மக்களிடமிருந்து தனித்து நிற்கும் ஆயுதப்புரட்சி தோல்வியைத் தழுவியே தீரும் என்பதை அவை அறிந்துள்ளன. ராணுவப் போராட்டங்களை மக்கள் திரளினரின் அரசியல் போராட்டங்களுடன் இணைப்பதன் மூலமே புரட்சிகர சாத்தியப்பாடு மெய்மையாக முடியும். எல்சால்வடாரில் பொதுவுடைமை கட்சி தேர்தல் மற்றும் அரசியல் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டத்துக்கும் கொரில்லாக்கள் வெறும் ஆயுதப் போராட்டத்திலிருந்து அரசியல் பணிகளுக்கும் சென்றுள்ளது. இது நிச்சயம் போராட்டத்துக்கு நலன் பயக்கும்.

இறுதியாக, புரட்சிகர கட்சிகளிடையே ஒற்றுமை எவ்வாறு சாதிக்கப்பட வேண்டும்? ஜாக்குயின் விலாலுபாஸ் (Joachuin Villalebes) கூறுகிறார்: ஒரே இரவில் அமைப்பளவில் ஒன்றுபட்டு தம் வேறுபட்ட பாணிகள், கருத்துகள், மொழிகளை மறந்துவிட முயலும் பல்வேறும் அமைப்புகளின் மரபுவழி 'ஒற்றுமை' அல்ல நம்முடையது. நிரந்தர ஒற்றிணைப்பின் ஒரு நிகழ் முறையாகவே நம் ஐக்கியம் கட்டப்படுகிறது. செயலுக்கான ஒரு பொதுத்திட்டத்தின் கீழே ஒன்றுபட இந்நான்கு புரட்சி அமைப்புகளையும் தூண்டியது எதுவெனில், இவை அனைத்தும் மக்களின் ஆயுத எழுச்சி மூலம் ராணுவக் கும்பலின் ஆட்சியைத் தூக்கியெறிந்து, சோசலிசத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு மக்கள் அரசாங்கத்தை நிறுவவேண்டும் என்பதே ஆகும்.

எல் சால்வடோர் மக்கள் போராட்டம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இளைஞர்கள், மாணவர்கள், அறிவாளிகள், சமயவாதிகள், தொழிலாளர்கள், கறுப்பின மக்கள் ஆகியோரிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வியட்நாம் போர் நடந்த காலத்தில் அமெரிக்காவெங்கிலும் எழுந்த கிளர்ச்சிகள் மீண்டும் எழத் தொடங்கிவிட்டன. லத்தீன் அமெரிக்கப் பாட்டாளிவர்க்கம் உலகப் புரட்சியின் முன்னணியில் ஒன்றாக இருப்பது மீண்டும் ஒருமுறை மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

⁂

5. நூலரங்கு

– குறிஞ்சி

1 "மா சேதுங் கவிதைகள்

– தமிழாக்கம்: எஸ்.வி. ராஜதுரை

பற்பல ஆண்டுகட்கு முன்பே ஐந்து கோடி எழுபது இலட்சம் பிரதிகளுக்குமேல் விற்றுத் தீர்ந்த இந்தக் கவிதைத் தொகுப்பு, ஏறத்தாழ 148 நாடுகளின் போராடும் மக்களுக்கு ஓர் ஆதர்ச சக்தியாக விளங்குகிறது. மார்க்ஸ் – லெனின் ஆகியோர் கட்டியமைத்த மேடையின் மீது நின்று, மனித சமூகத்தைக் கண்டவர் மாவோ! அந்த அணுகுமுறை, கலை–இலக்கியத்துறையிலும் பரந்து வியாபித்திருப்பதை இத்தொகுப்பு உடனடியாக நமக்கு இனங்காட்டுகிறது. ஏனான் பேருரைகளில் காணப்படும் கலை – இலக்கியம் பற்றிய மாவோவின் பல கருத்துக்கள், இத்தொகுப்பில் நயமானதோர் கலை வடிவில் வெளிப்பாடு கொள்கின்றது.

ஒவ்வொரு படைப்பின் பின்னாலும் ஒரு வர்க்கப்பார்வை இருக்கிறது என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்வதில் மாவோ சலிப்படைவதேயில்லை. அவ்வகையில் இத்தொகுப்பு, ஐயத்திற்கிடமின்றி பாட்டாளி வர்க்கத்தினருக்காக - சிறப்பாகவும் குறிப்பாகவும் உழவர்கட்காக – உரக்க வாதிடுகிறது.

உலக இலக்கியத்திலேயே முதன் முதலாக உழவர்களின் பேரெழுச்சியைப் பாடும் பரணிப்பாடல்களாக மாவோவின், கவிதைகள் திகழ்கின்றன. அழுத்தப்பட்டும் அவமானப்படுத்தப்பட்டும் கிடந்த இந்த 'அழுக்கான' விவசாயிகள், மாபெரும் மாற்றங்களை படைத்துக் காட்டும் வல்லமை பெற்றவர்கள் என்ற புதிய உண்மையைக் கீழ்த்திசை நாடுகளின் சார்பாக மாவோ பிரகடனப்படுத்துகிறார். செஞ்சீனாவில் நிகழ்ந்த பல்வேறு புரட்சிகர ஆர்ப்பாட்டப் போக்குரலைச் செவிடு படும் வண்ணம் இக்கவிதைகள் எதிரொலிக்கின்றன.

புரட்சிகரப் புனைவியலின் (Revolutionary Romanticism) பல்வேறு அம்சங்கள் மாவோவின் கைகளில்

அலங்கரிக்கப்படுகின்றன. புரட்சியின் பால் நேசமும், உருவாகப் போகும் புதிய பொதுமைச் சமுதாயத்தின் பால் தகர்க்க முடியாத புரட்சிகர நம்பிக்கையையும் இக்கவிதைகள் வழங்குகின்றன. "வெல்ல முடியாதது நம் வலிமை" என எக்களிக்கும் மாவோவுக்கு, ஏகாதிபத்தியமே காகிதப்புலியாவதில் அதிசயமென்ன இருக்கிறது!

"எல்லாமே மாறிக்கொண்டிருக்கிறது என்பதுதான் என்றும் மாறாத உண்மை" என்றார் மார்க்ஸ். அந்த மாற்றத்தை வெகு இயல்பாகவே மாவோ, தன் கவிதைகளில் சித்தரிக்கிறார் –

"உலகம் மாறிவிட்டது", "எல்லாமே இப்படித்தான் இயங்கி மறைகின்றன"

உற்று நோக்கு –

உலகம் தலைகீழாய்ப் புரட்டப்படுவதை!"

"மலைத் தேவதை இன்னும் இருந்தால்,

மூக்கில் விரல் வைப்பாள் – இப்படி மாற்றம் அடைந்த புவியைக் கண்டு!" எனும் வரிகளில் மாற்றங்களை உற்சாகமாக வரவேற்கும் ஒரு மார்க்சியவாதியின் பேரெழுச்சியைக் காண்கிறோம்.

"முடக்கத்தைக் காட்டிலும் இயக்கம் நல்லது" என எதிர்மறைகளின் இயங்கியலைச் சுட்டிக்காட்டும் மாவோ, நவசீனத்தைக் கட்டியமைக்கும் ஒவ்வொரு சிறு பணியையும் மிக்க களிப்போடு வரவேற்கிறார். குன்றுகளைப் பாலம் ஆக்குவதும், கொள்ளை நோயைக் கட்டுப்படுத்துவதும் மாவோவுக்குப் புரட்சியின் கூறுகளாகத் தென்படுகின்றன; உழைப்பதில் இன்பங் காணும் ஒரு கம்யூனிஸ்டின் பெருமிதம் இவற்றில் மிதக்கிறது.

பெண்களைக் குறித்து மொத்தம் இரண்டு கவிதைகள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. இவ்விரு கவிதைகளுமே பெண்களைப் பற்றிய மார்க்சீயத்தின் சாராம்சத்தைப் புலப்படுத்துவனவாக உள்ளன. "சமுதாய மாற்றத்திற்கான புரட்சியில் பெண்களைப் புறக்கணிப்பது என்பது, ஒரு காலைக் கட்டிக்கொண்டு ஓட்டப்பந்தயத்தில் கலந்து

கொள்வதைப் போன்றதாகும்" என்றார் இலெனின். மாவோவும் "படைமாதர்" எனும் கவிதையில், புதிய சீனத்தைக் கட்டியமைக்கும் பீடுமிகு படைப்பாளிகளாகவே பெண்களைக் காண்கிறார். அதனாலேயே 'பட்டும் மிருதுப்பருத்தியும் வேண்டாது படைச்சீருடையையே விரும்பி' அணிவகுப்பு மைதானத்தில் துப்பாக்கி ஏந்தித் துணிவுடன் நடக்கும் சீனப் பெண்களின் மாட்சி மாவோவிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

"குடும்பத்தில் கணவன் முதலாளி வர்க்கமாகவும், மனைவி தொழிலாளி வர்க்கமாகவும் இருக்கின்றனர்" என வேடிக்கையாகக் குறிப்பிட்டார் ஏங்கெல்ஸ் "ஒரு கவிதையில்" ஓர் உண்மையான கம்யூனிஸ்ட், மனைவியை எப்படி நடத்துகிறான் என்பதைப் புலப்படுத்துகிறார், மாவோ!

"அருகருகே பறந்து சென்று

மேகங்களைத் தொட்டிடுவோம்" எனத் தன் மனைவிக்கு அவர் எழுதும் வரிகளில் தோழமையே மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம்.

"வரலாறு கற்றல்" எனும் கவிதை, வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் விளக்கவுரையாகவே உள்ளது. மனித வளர்ச்சிப் போக்கில், உற்பத்திக் கருவிகளின் பங்குபற்றி ஏங்கெல்ஸ் விளக்கியதைப் போலவே மாவோவும் வில் – கல் – இரும்பு - பொன் ஆகியவை எவ்வாறு மனித வரலாற்றை முன்னெடுத்துச் சென்றன என்பதை அழகுறப்படைத்துக் காட்டுகிறார்.

மக்கள் போராட்டத்தை வழி நடத்திச் சென்ற மாவோ, புரட்சிகரமான புதிய அழகியலை நமக்கு ஆற்றுப்படுத்துகிறார், "தபோதி" என்ற கவிதையில் –

"முன்னர் இங்கொரு கடும்போர் மூண்டது குண்டு துளைத்த கிராமச்

சுவர்கள் மலை கணவாயை அலங்கரிக்கின்றன அவற்றின் அழகை

இருமடங்காக்கி" எனும் வரிகள், ஒரு புரட்சிக்காரனின் அழகியற்

பரிமாணம் எவ்வளவு நுணுக்கமாக விரிந்திருக்கிறது என்பதையே சுட்டுகின்றன.

இவ்வரிகளைப் படிக்கும்போது ஔவை, தொண்டைமான் – அதியமான் பாசறைகளை ஒப்பிட்டுப் பாடிய புறநானூற்றுப் பாடல் வரிகளே நம் நினைவு திரையில் நிழலாடுகின்றன.

அதேபோல் "பிளம் மலருக்கு எழுச்சிப் பாடல்" எனும் கவிதையில், புரட்சியில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் மக்கள் தொண்டனின் பெருமிதம், இதமான அழகியலாகப் பரிணமிப்பதைத் தரிசிக்கிறோம்.

மாவோவின் கவிதைகளில் மலைகளைப் பற்றிய குறிப்பு பன்முறை பின்னிப் பின்னி வருவதை எளிதில் காணலாம். இங்கு "மலை" என்பது போராட்டத்தைக் குறிக்கும் குறியீடாகவே இருப்பதாகத் தோன்றுகிறது. "குன்றின்" கவிதை இதைப் பூடகமாக உணர்த்துகிறது.

இலக்கியத்தில் சொத்துரிமை வேண்டும் என்றவர், மாவோ! நமது முன்னோரது இலக்கியச் செழுமையைச் செரித்துக் கொண்டு, புதிய புரட்சிகரக் கலை வடிவங்களை உருவாக்க வேண்டும் என்பது அவரது கருத்து, அதற்கொப்ப, இக்கவிதைத் தொகுப்பில் மிகமிகப் பழமையான சீனப்பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியன அனைத்தையும் பாராட்டத்தக்க வகையில் மாவோ கையாண்டுள்ளார்; பழைய வடிவங்களில் புதிய உள்ளடக்கத்தைத் தந்துள்ளார். தத்துவப் போராட்டம் உச்ச கட்டத்தை அடையும் போது, படிமங்கள் அற்புதமாக வருகின்றன.

"முற்றும் ஐக்கியம்; போராட்டம் இல்லை என்பது முற்றும் போராட்டம்; ஐக்கியம் இல்லை என்பதும் இரண்டுமே தவறான கொள்கைகள். இது அரசியலிற் போலவே, இலக்கியத்திலும் கலையிலும் கூட உண்மையானதே" என்ற மாவோவின் ஏனான் பேருரைகளின் வெளிச்சத்திலேயே, உருவம் – உள்ளடக்கம் பற்றிய பிரச்சனையை இத்தொகுப்பிலும் நாம் காண்கிறோம்.

"சீனக்கம்யூனிஸம் என்பது மக்களின் மதம்" என மாவோ ஒருமுறை குறிப்பிட்டார். மகத்தான சீனப்புரட்சியின் போது, "பேன் ஷன்" (Fan Shen) என்ற முழக்கம், மக்கள் முன் வைக்கப்பட்டது. அம்முழக்கத்திற்கு "உருவத்தைத் தூய்மை யாக்குதல்" அல்லது "நம் காலில் நாமே நிற்றல்" என்பது பொருளாகும். மறுபிறப்பு, முக்தி, பாவமன்னிப்பு - போன்ற பல்வேறு அம்சங்கள் "பேன் ஷன்" முழக்கத்தில் புதிய மார்க்சிய உள்ளடக்கத்துடன் மக்களின் மனங்களைக் கவ்வியது. அவற்றின் வடிகாலாகவே மாவோவின் கவிதைகள் சில இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இறுதியாக, மொழியாக்கம் பற்றி ஒரு வார்த்தை. தமிழகத்தில் மொழியாக்கத்தை ஒரு துறையாகப் பயின்று, அதை ஒரு கலையாக வளர்த்து வருபவர்களில் திரு. எஸ்.வி. இராஜதுரை முதன்மையானவர். மிகவும் கரடுமுரடாகத் தோன்றும் அயல்மொழி இலக்கியங்களையும், ஆர்வத்தை ஈர்க்கும் தித்திப்புத் துண்டுகளாக மாற்றித்தரும் இரசவாதி அவர்; மரத்தூளையும் மகரந்தமாக்கும் எழுத்தாற்றல் படைத்தவர்!

"சிகரங்கள் ஏறத் துணிந்து விட்டால்,
கடினமானது உலகில் ஏதும் உண்டோ"

எனும் வரிகளை மனத்திற்கொண்டு, இராஜதுரை விசையொடிந்த தமிழ்த்தேகத்தில் புது இரத்தம் பாய்ச்சும் பணியைத் தொடரவேண்டியது அவசரத் தேவையாகும்.

2. "போர்க்குரல்"

(லூசன் சிறுகதைகள்)
மொழியாக்கம்: கே. கணேஷ்

"நூறு முறை கேட்பதைக் காட்டிலும், ஒருமுறை பார்ப்பது சாலச் சிறந்தது" என்பது சீனப்பழமொழி. சிவப்புப் புரட்சிக்கு முந்தைய சீனத்தைப் பற்றி எவ்வளவோ கேட்டிருக்கிறோம். ஆனால் தாழ்ந்துபட்ட அச்சீனத்தின் பின்தங்கிய சூழலை மனத்திற்தைக்கும் காட்சிகளாக தனது

சிறு கதைகளின் வாயிலாக லூசுன் அருமையாக வடித்துத் தந்திருக்கிறார்.

சுரண்டலைக் கண்டு கோபப்பட்டு எழுதியவர்கள் இலக்கிய உலகில் மிக அதிகம். ஆனால் அதை அருவருக்கத்தக்க ஒரு வி யம் என முதன்முதலில் சுட்டிக்காட்டியவர் லூசுன் தான்! இது ஒரு மாறுபட்ட அம்சம்.

மனித மாமிசத்தைத் தின்பது எவ்வளவு அருவருப்பானதும் வெறுக்கத் தக்கதுமான ஒரு வி யமோ, அது போலவே தான் சுரண்டலும் – லூசுனுக்கு!

"கல்லறைக்கு மேல் குவிக்கப்பட்டிருந்த மண் மேடுகள் செல்வந்தனின் பிறந்த நாளன்று வரிசையாக வைக்கப்படும் ரொட்டிச் சுருள்கள் போல் காட்சியளித்தன" என லூசுன்னைத் தவிர, யாருக்கு எழுதத் தோன்றும்?

புரட்சியில் பங்கேற்காமல், புரட்சியை வேடிக்கை பார்க்கும் மனிதர்களைக் கண்டால், லூசுனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது; மிகக் கேவலமான பூச்சிகளாக அவர்களைச் சாடுகிறார். புரட்சியின் பயன்கள் வேண்டும்; அதன் துன்பங்கள் கூடாது என எண்ணும் பாமரத்தனமான ஆசாமிகளைப் பிடித்திழுத்து வந்து லூசுன், தனது கதைகளில் உலவ விட்டிருக்கிறார். புரட்சிக்கு ஆயுத்தமாகிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சமுதாயத்திலும் இப்படிப்பட்ட பேர்வழிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களில் நடமாடிக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் புரட்சி எனும் ஊழிப் பெருந்தீ, இந்த மனிதப்பதர்களைத் தாண்டி பீறிட்டுப் பேரெழுச்சியுடன் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்ற யதார்த்தத்தையும் விடாப்பிடியாக லூசுன் வலியுறுத்துகிறார்.

இத்தொகுப்பிலேயே உள்ளத்தைத் தொடும்படியான படைப்பு "எனது பூர்விக வீடு" தான். சமுதாய பேதத்தின் சாயலே காணப்படாத குழந்தைகளின் உள்ளத்தில் பணம் எப்படிச் செயற்கையான ஏற்றத்தாழ்வுகளை இட்டு நிரப்புகிறது என்பதைக் குழந்தைப் பருவத்து நண்பர்களான ஜீண்டு-சுன் ஆகிய இரு பாத்திரங்களின் மூலம் கதாசிரியர் அற்புதமாகப் பின்னியிருக்கிறார்.

மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து எழுதினாலும், கதைகளில் தொய்வு ஏதும் காணப்படவில்லை. துப்பறியும் கதைகளை படிப்பதுபோல் விறுவிறுப்புத் தென்படுவது, கலை வடிவச் செழுமையையே குறிக்கும்.

"அமரத்துவம் பெற்ற பேனாவால் தான் அமரத்துவம் பெற்ற மனிதனின் செயல்களை எழுதமுடியும். எழுத்தின் மூலமாக அம்மனிதனைப் பற்றி பின் சந்ததியினர் தெரிந்து கொள்ளவேண்டும்; அல்லது அம்மனிதனின் மூலமாக அவ்வெழுத்தைப் பின் சந்ததியினர் தெரிந்து கொள்ளவேண்டும் – இறுதியில் எதனால் எது தெரியப்படுத்தப்பட்டது என்ற ஐயம் எழ வேண்டும்" என லூசுன் எழுதியது அவருக்கே பொருந்தும் தானே?

~~*

பரிமாணம் – 12

ஆகஸ்டு 1981

மாவோவுக்கு பிறகு சீனம்

1. நம் பார்வை

பரிமாணம் 12-வது இதழில் வெளியிட்டுள்ள இரண்டு கட்டுரைகளிலிருந்து பரிமாணம் சில கருத்துக்களை - சில படிப்பினைகளைத் தொகுத்துக் கொள்கிறது.

* சீனாவில் நடைபெற்ற பண்பாட்டுப் புரட்சி - எந்தக் காரணங்களுக்காகத் தோல்வியடைந்திருந்தாலும் – அதற்கான காரணிகளை விமர்சனம் செய்து களைதலும், மீண்டும் பண்பாட்டுப்புரட்சி தொடர்வதும் தேவை. வர்க்கநலன்களை எதிரொளிக்கும் போக்குகள் தொடர்ந்து சோசலிச சமூகத்தில் – கட்சியிலும் அரசிலும் நிலவுவதால் புரட்சியின் தொடர்ச்சி பண்பாட்டுப் புரட்சியின் மூலமே நிறைவேறுகிறது. மாவோ மார்க்சியத்திற்குத் தந்த மாபெரும் நன்கொடை பண்பாட்டுப் புரட்சி. எத்தனை திருத்தல்வாதிகள், எத்தனை முறை மறுத்த போதிலும் பண்பாட்டுப் புரட்சி மீண்டும் மீண்டும் தேவை.

* மாவோவின் புரட்சிகரமான அரசியல் பாதையை மறுக்கும் எதிர்ப்புரட்சிப் போக்கு, லிவ் சாவ்-சி மூலமாக அல்லாமல் லின் பியாவோ, குவா குவா – பெங்க் மூலமாகவும் வலிமை பெற்று, டெங்கின் மூலம் ஒப்பியல் நோக்கில் உயர் கட்டத்தை அடைந்திருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. திருத்தல்வாதிகள் எத்தனை வலிமை உடையவர்களாகக் காட்டிக் கொண்டாலும், எரிமலை மீது அமர்ந்திருக்கும் இவர்கள் புரட்சிகர வரலாற்றுப் போக்கைத் திருப்பி விட முடியாது.

* சோசலிச சமூகத்தில் கூட வர்க்கப் போராட்டங்களை உறுதியுடன் நடத்தாத பொதுவுடைமைக் கட்சி, சில நிலைமைகளில் பாசிசக் கட்சியாக மாறுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி மாவோ எச்சரித்திருக்கிறார். மக்கள் திரள்களின்

களையமுடியும். இத்தகைய போராட்டங்கள் கட்சியை ஒழித்து விடும் என்று கருதுவது திருத்தல்வாதப் பாதை. கட்சியின் இத்தகைய நடைமுறை தொடர்ச்சியான சோசலிசக் கட்டமைப்பைத் தகர்க்கும்.

புரட்சி செய்வது பொதுவுடைமைக் கட்சிகளுக்கே உரிமையுடையது என்பது வரலாற்றில் பலமுறை தோல்வியடைந்துள்ளது. மக்கள் திரள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், உழவர்கள், ஆகியவர்களின் புரட்சிகர ஆற்றல்கள் திரட்டப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டால் மட்டுமே புரட்சி - வெற்றி சாத்தியம் என்பது உண்மையாகிறது.

எந்த இயக்கமும் எத்தகைய சீரிய தலைமையிடம் இருந்தாலும், மக்கள் திரள்களின் பங்கு இல்லாத நிலையில், அது தடம் புரள்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இந்த உண்மை, அனைத்துக் கூறுகளிலும், இந்தியச் சூழலுக்கு முற்றாகப் பொருந்தும்.

பாட்டாளி வர்க்க அரசுக்குப் பதிலாக அரசு முதலாளியம் ஆதிக்கம் பெற்று மக்கள் மீது ஏறி அமர்ந்து கொள்வது, சோவியத் ருஷ்யாவில் நடைபெற்றதைப் போலவே, சீனாவிலும் நடைமுறையாகி வருவதை சார்லஸ் பெட்டல்ஹீம் நுணுக்கமாக விவரித்துள்ளார். இத்தகைய ஆய்வுகள், இந்தியாவில் புரட்சிகர மாற்றங்களுக்காகப் போராடும் அனைத்துச் சக்திகளுக்கும் தேவையான படிப்பினைகளைக் கொண்டுள்ளன.

- சமூக அரசியல் நிலைமைகளை ஒவ்வொரு காலகட்டத்திலும் சரிவரத்

தொகுக்கவும் மதிப்பிடவும் தேவையான தர்க்கவியல் வரையறைகளை, பருண்மையான சூழல்களுக்கு ஏற்பப் புதுப்பித்துக் கொண்டிருந்தால் அல்லாமல், சரியான மார்க்சிய ஆய்வைத் தொடர்ந்து செய்ய முடியாது. சரியான மார்க்சியப் பார்வை பெறுவது பற்றிய பிரச்சனை இது. மாவோ சிந்தனையோடு மார்க்சியம் முற்றுப் பெறவில்லை. அப்படி முற்றுப் பெறுவது மார்க்சியமும் ஆகாது.

மூன்றுலகக் கோட்பாட்டை ஒரு அறிவியல் அடிப்படையிலான கோட்பாடாகவே பெட்டல்ஃகீம் ஏற்கவில்லை. இந்தக் கோட்பாடு பற்றி மாவோவின் ஆய்வாக எந்த வெளியீடும் இல்லை. 2ஆம், 3ஆம் உலக நாடுகளுக்கிடையில் கடுமையான முரண்பாடுகள் உள்ளன. அதுபோலவே, 3ஆம் உலக நாடுகளுக்குள்ளும் கூர்மையான முரண்பாடுகள் உள்ளன. ஆகவே இவற்றுக்கிடையிலான உறவுகள் என்பவை, இவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை மீறியவையாக இருக்க முடியாது. இந்த முரண்பாடுகளைப் புதைத்து விட்டு மாவோ மூன்று உலகக் கோட்பாட்டை உருவாக்கியிருக்க முடியாது. இவ்வாறு, தன் கட்டுரைக்கான அடிக்குறிப்பு ஒன்றில் பெட்டல்ஃகீம் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது.

➢ பெட்டல்ஃகீம் 1978 கட்டுரைக்குப் பின் சீனாவில் நடைபெறும்

நிகழ்வுகளும், சீனா பற்றி வந்துள்ள பல ஆய்வுகளும் பெட்டல்ஃகீம் கட்டுரையில் கண்ட அடிப்படை மதிப்பீடுகளையே உறுதிப்படுத்துகின்றன.

மாவோவுக்குப் பிறகு சீனம்:

முன்னுரை:

(Monthly Review கட்டுரைகளின் தொகுப்பு)

மாவோவின் மறைவுக்குப் பிறகு சீனத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்துத் தன் ஐயங்களைத் தெரிவித்து, 1977, மே 11ல் பேராசிரியர் சார்லஸ் பெட்டல்ஃகீம், ஃபிரெஞ்சு - சீன நட்புறவுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார். இவர் கடிதத்தின் சுருக்கம் 'லே மாண்' இதழில் வெளிவந்தது. 1977 அக்டோபரில், பீகிங்கில் பணியாற்றும் நீல் பர்ட்டன் என்னும் கனடா நாட்டவர், பெட்டல்ஃகீமுக்கு ஒரு திறந்த மடல் எழுதினார், இதற்கு பெட்டல்ஃகீம் விரிவான பதில் தந்தார். சீனாவில் 1975 அக்டோபருக்குப் பிறகு நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் பற்றிய கட்டுக்கோப்பான சிந்தனைகளை இக்கடிதம் கொண்டிருந்தது.

பேராசிரியர், பெட்டல்ஃகீமின் விலகல் கடிதம், நீல்பர்ட்டனின் கடிதம், பிறகு பெட்டல்ஃகீம் தந்த பதில் ஆகியவற்றை 'மன்த்லி ரெவ்யூ" (Monthly Review) வெளியிட்டது. கடைசி இரு கடிதங்களின் தொகுப்பையும் 'பரிமாணம்' வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறது.

இன்றைய சீன நிலைமை பற்றிய சரியான கண்ணோட்டம் கொள்வதற்கும், சோசலிசக் கட்டுமானத்தில் ஏற்படும் சிக்கல்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் இத்தொகுப்பு பெரிதும் பயன்படும் என்று பரிமாணம் நம்புகிறது.

சோவியத் ரஷ்யாவில் வர்க்கப் போராட்டங்கள் பற்றியும் சீனக் கலாசாரப் புரட்சி பற்றியும் பேராசிரியர், பெட்டல்ஃகீம் விரிவாக ஆராய்ந்தவர் என்பதையும் வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறது பரிமாணம்.

'மன்த்லி ரெவ்யூ'வுக்குப் பரிமாணம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

⁂

புதிய ஆட்சியை ஆதரித்தது

- நீல். ஜி. பர்ட்டன்

அக்டோபர் 1, 1977

அன்புள்ள பெட்டல்ஃகிம்

ஃபிரென்சு - சீன நட்புறவுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து நீங்கள் விலகியது கேட்டு, மிகவும் வருந்தினேன். ஏற்கெனவே தங்கள் நூல்களைப் படித்திருந்த எனக்கு, சீனாவில் திருத்தல் வாதம் வெற்றி பெறுகிறது என்று தாங்கள் முடிவு செய்வதற்கு உரிய காரணங்களையும் ஆய்வையும் அறிந்து கொள்ள விரும்பினேன்.

சென்ற வாரம் தங்கள் விலகல் கடிதத்தைப் படிக்க நேர்ந்த போது, தங்கள் ஆய்வு போதுமானதாக இல்லை என்றும், ஒரு திருத்தல் வாதப் போக்கு மேலோங்குகிறது என்ற தங்கள் கருத்து தங்கள் கடிதத்திலிருந்து உறுதிப்படவில்லை என்றும் நான் கருதினேன். திருத்தல் வாதம் பற்றியும் முதலாளியப் புத்துயிர்ப்புப் பற்றியும் ஆழமாகப் பார்த்த ஒரு புகழ்பெற்ற மார்க்சிய அறிஞர் எப்படி இத்தகைய தவறான முடிவுக்கு வரமுடியும்?

தங்கள் கடிதத்தைப் பலமுறை படித்தேன். தங்கள் பார்வைக்குப் பல செய்திகளை முன்வைக்க விரும்புகிறேன். தங்கள் ஐயம் ஒவ்வொன்றுக்கும் விரிவாக நான் பதில் தரவில்லை. காரணம், அதற்குத் தேவையான ஆதாரங்கள் மிக விரிவானவை. தவிர, பெரும்பாலான தங்களது ஐயங்கள், நடைமுறை, கோட்பாடு பற்றிய ஒரு சில கருத்துக்களிலிருந்து எழுகின்றன. இத்தகைய கருத்துக்கள் சீனாவுக்கு வெளியில் பரவலாக உள்ளன. இவை கேள்விக்கு உரியவை.

முதலாவதாக, தாங்கள் மிக அவசரப்பட்டு முடிவுக்கு வந்து விட்டதாகத் தோன்றுகிறது. சீனாவிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட நம்மைப் போன்றவர் பலர், மாவோவின் இறப்புக்குப் பிறகு என்ன நேரும் என்பது பற்றி திடமான முடிவுக்கு வர முடியவில்லை. சீனாவின் வெளிநாட்டு

நண்பர்களில் பலர், குறிப்பாக மார்க்சியப் பகுப்பாய்வின் சட்டத்திற்குள்ளிருந்து சீனாவைப் புரிந்து கொள்ள முயன்றவர்கள், சீனாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எதிர்கொள்ளப் போதிய தயாரிப்பு நிலையில் இல்லை. வலதுசாரியிலிருந்துதான் திரிபுகள் வரும் என்று நாம் கருதினோம். ஆனால், நாம் புரிந்து கொள்ளத் தவறியது என்னவென்றால், சீனாவில் வலதுசாரியினருக்கு இன்று மரியாதை இல்லை, இடதுசாரி வேடத்தில் அல்லாமல் இவர்கள் இன்று முன்வர முடியாது என்பதுதான். சித்தாந்தமே தமக்குப் பலம் என்று கருதும் நம்மவர்களில் பலர், உண்மையான 'புரட்சிவாதிகள்' யார் என்பது பற்றி மிக உறுதியாக இருந்தோம். ஆகவே நம் கவனம், 'அனுபவவாதிகள்', 'அதிகார வர்க்கத்தினர்' என்று சிலரால் கூறப்பட்டவர்கள் மேல் பதியலாயிற்று. டெங்க் ஃகிசியோ-பிங்க்குக்கும் அவரது 'வலதுசாரித் திருத்தல்வாதிகளுக்கும்', எதிரான பிரச்சாரத்திலிருந்து, மிக ஆபத்தான வலதுசாரிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அல்லது அச்சில் வெளிவந்த ஆதாரங்களிலிருந்து, இப்படித்தான் தோன்றியது, மாவோவின் மரணத்திற்குப் பிறகு, சென்ற அக்டோபரில் நடைபெற்ற மிக முக்கியமான 'பின்னடைவுகள்' நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினாலும், இவற்றை விளக்கக் கூடிய தர்க்கவியல் வரையறைகளை நாம் ஏற்கனவே உருவாக்கியிருந்தோம்.

நால்வரின் வீழ்ச்சி என்பதை நீங்கள் உடனடியாக ஆதரிக்கவில்லை. பொறுத்திருந்து பார்க்கக் கருதினீர்கள். சீனாவில் சோசலிசக் கட்டமைப்பு உறுதிப்பட வேண்டும் என்று தங்களைப் போலவே விரும்பிய நானும் பொறுத்திருந்து பார்க்கவே விரும்பினேன். எனது நிலையில் வேறு ஒரு சிக்கல் இருந்தது. வெளிநாட்டைச் சேர்ந்த நான், நிபுணர் என்ற முறையில் சீன அரசினால் பணிபுரிய நியமிக்கப் பட்டவன். தவறு நடப்பதைப் பார்த்துக் கொண்டு ஒருவர் எத்தனை காலத்திற்கு இருக்கமுடியும்? ஆனால், நான் என் வேலையில் ஏன் தொடர்ந்து இருந்தேன்? சந்தர்ப்பவாதமா? நான் இப்படிக் கருதவில்லை. தங்களைப்

போலவே நானும் கொண்டிருந்த தர்க்கவியல் வரையறைகளில் ஏதோ தவறு இருக்க வேண்டும் என்றும் அச்சில் வெளிவந்த பிரச்சாரங்கள் என்னை வழி தவறச் செய்தன என்றும் கருதினேன். எனது தர்க்கவியல் வரையறைகளிலுள்ள தவறுகளை, மிகுந்த வேதனைக்குப் பிறகுதான் அறிந்து கொண்டேன்.

நால்வர் கைது பற்றிய செய்தி வந்தபோது – இவர்களின் வீழ்ச்சியைக் கொண்டாடும் முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோது – நான் சாங்காயில் இருந்தேன். இவ்வளவு பெருந்திரளான மக்கள் – பெரும் உற்சாகத்தோடு, ஒரு 'பின்னடை'வைக் கொண்டாட – நால்வரின் தளமாக விளங்கிய நகரில் ஆர்ப்பாட்டம் செய்தது எனக்கு ஒரு பெரும் சிக்கலாகத் தோன்றியது. டெங்கை விலக்கிய போதும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. மேற்கு நாட்டு ஆய்வாளர் சிலர் நம்புவது போல, உயர் அதிகார பீடத்தில் நேரும் அதிகார மாற்றங்களைக் கொண்டாட இயக்குவிக்கப்படும் சடங்குகளா இவை? சோசலிசத்தின் காவலர்களாகக் கருதப்பட்டவர்களின் வீழ்ச்சிக்காகச் சோசலிசப் பகைவர்களின் கொண்டாட்டமா? பலரும் முதலாளியத்தையே விரும்பும் போது, மார்க்சியவாதிகள் எனப்படுவோர் ஒரு கனவுலகில் வாழ்கிறார்களா? மக்களிடம் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று மாவோ கூறியது தவறா? இப்படி நான் கவலைப்பட்டேன்.

பீகிங்குக்குத் திரும்பினேன். எனது சீனத் தோழர்கள் – உடன் பணிபுரிவோர், நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி மனநிறைவு கொண்டிருந்தனர். அவர்கள் தாமாக இவை பற்றி என்னுடன் பேசவில்லை. நால்வர் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி (சியாங் சிங் பற்றிக் கூறப்பட்டவைகளில் எனக்குச் சந்தேகம் இல்லை) என் சந்தேகங்களை வெளியிட்ட போது, எனக்கும் நிறைவு தரும் முறையில் பதில் கிட்டவில்லை. நால்வர் பற்றி மத்திய குழுவின் அதிகாரபூர்வமான ஆவணத்தைப் படித்த போது, குற்றச்சாட்டுகள் பலமற்றவையாகவே தோன்றின. விரிவான இருபது கேள்வித் தொகுப்பு ஒன்றை என் மேலாளரிடம்

கொடுத்தேன். எனக்குக் கிடைத்த பதில் நிறைவு தரவில்லை. எனது திட்டவட்டமான கேள்விகளுக்கு ஏன் தெளிவான பதில்கள் கிடைக்கவில்லை? நான் கேள்வி கேட்பவரிடம் தேவையான விவரங்கள் இல்லை அல்லது நானும் அவரும் ஒரே மாதிரியான பகுப்பாய்வுச் சட்டகத்தைக் கொண்டிருக்கவில்லை என்று நான் கருதினேன்.

எனது நண்பர்களோடு - சீனரல்லாத நண்பர்களோடு விரிவாக விவாதித்தேன். இவர்களில் சிலர் சீனத் தோழர்களுடன் நெருக்கமான உறவு கொண்டவர்கள். இவர்கள் தந்த ஒரு நம்பிக்கை, சீன மக்களின் உற்சாகம் உண்மையானதுதான் என்பது.

நான் கிடைத்தவற்றையெல்லாம் படித்தேன். அதிகாரப்பூர்வமான 'மக்கள் நாளிதழ்' (People's Daily), டெங்கைக் கண்டித்து எழுதிய அதே நடையில்தான் நால்வர் குற்றச்சாட்டுக்களையும் விவரித்திருந்தது. ஃகிசின்குவா செய்தி அறிக்கைகள், கடுமையான குற்றச்சாட்டுக்களை - முக்கியமாக நால்வரின் தாறுமாறான வாழ்க்கை நடைகள் பற்றியும் செயல்கள் பற்றியும் - பல கட்டுரைகளில் விவரித்தது. பீகிங் ரெவ்யூ முதலிய பிற இதழ்களும் ஃகிசின்குவா செய்திகளையே வெளியிட்டன. இவற்றால் என் குழப்பம் தீரவில்லை.

ஒருநாள் ஃகிசின்குவா செய்தி நிறுவனத்திலிருந்து வெளிநாட்டவர்க்கான பிரச்சார முறைகளைச் சீர்திருத்துவது பற்றி என் கருத்தறிய ஒருவர் வந்திருந்தார். நால்வர் தம் நோக்கங்களுக்காகத் தங்கள் நிறுவனத்தைப் பயன்படுத்துவது பற்றியும் கூறினார். சீனப் பிரச்சார முறை பற்றி என் கருத்துக்களை விரிவாகக் கூறினேன். அவற்றை அவர் குறித்துக் கொண்ட பின், பிறர் கருத்தறியச் சென்றார். அதேசமயம் 'மக்கள் நாளிதழ்' தரும் செய்திகளின் நம்பகத் தன்மை பற்றிய கேள்விகளுடன் கடிதங்களும், அதே இதழில் வெளிவரத் தொடங்கின.

ஃகிசின்குவா, உலகச் செய்திகளைத் தொகுப்பதற்கும், மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் பொறுப்பேற்றுள்ள

செய்தி நிறுவனம், இதில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான ஆசிரியர் குழுவினர், எளிதில் மாற்றிக் கொள்ள முடியாத ஒரே மாதிரியான மொழி நடையில் பழகியவர்கள், போதுமான விவரங்களும் சமநிலையில் செய்தி தரும் முறையும் இல்லாதவர்கள், நிறைய மேற்கோள்களையே வாரிக் கொட்டுபவர்கள் இதற்கு ஒரு காரணம், பல ஆண்டுகளாக இவர்கள், வெளிப்படையாகத் தீவிரவாதிகள் போலத் தோற்றம் கொண்ட சந்தர்ப்பவாதிகளின் மேற்பார்வையில் – கட்டுப்பாட்டில் பணியாற்றினார்கள். இன்னொரு முக்கிய காரணம், தலைவர் மாவோ பற்றிய விமர்சனமாக இதற்கு எவ்வளவு தேவை இருந்த போதிலும் – எந்த விவரமும் வந்து விடக் கூடாது என்பதில் இவர்கள் கொண்ட கவனம். இதனால்தான் ஃசிசின்குவாவின் பிரச்சாரம். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எடுபடுவதில்லை. இதுபோலத்தான் 'மக்கள் நாளிதழும்.' இன்று மாறுதல்கள் மெதுவாகவே நடைபெறுகின்றன. முன்பு 'மக்கள் நாளிதழ்' படிப்பதைக் கைவிட்டவர்கள் இப்பொழுது மீண்டும் படிக்கத் தொடங்கியுள்ளனர்.

பிரச்சாரமே யதார்த்தமாகி விடாது. அதில் ஒரு பகுதியே யதார்த்தம். பிரச்சாரம், எளிதில் யதார்த்தத்தைத் திரித்து விடும். 'லே மாண்' பத்திரிகையும் இதை நிரூபிக்கும், சீனர்களைப் பொறுத்தவரை, தவறான நோக்கம் இல்லாமலேயே இந்தத் திரித்தல் நடைபெறுகிறது என்று நான் நம்புகிறேன். ஆனால், கடைசியாக நடந்த வீழ்ச்சி பற்றி நமது தர்க்கவியல் வரையறைகளை நாம் உருவாக்கிக் கொள்வதற்கு உதவிய பிரச்சாரம், பெரும் அளவில் சீன அரசியல் நிலை பற்றிய திட்டமிட்ட திரித்தல். இதற்கான குற்றத்தை ஏற்பவர் யார்? ஒருவரை மட்டுமே குற்றம் கூறுவது சரியில்லை. பிற தலைவர்கள் 'மக்கள் நாளிதழ்' படிப்பதில்லையா? செய்தி நிறுவனமும் மக்களும் என்ன செய்கிறார்கள்?

தலைவர்களைப் பொறுத்தவரை, உறுதியாகச் சொல்வதற்கு அதிகம் இல்லை, மாவோ, 'மக்கள் நாளிதழை' – அதன் நடை உள்ளடக்கம் பற்றி விமர்சனம்

செய்தார். நால்வர் முற்றான திரித்தலுக்கு அதனை உட்படுத்தியபோதுதான், மாவோ அதைப் படிப்பதை, மற்றவர்களைப் போலவே கைவிட்டிருக்க வேண்டும். பிற தலைவர்களின் படிப்புப் பழக்கம் பற்றி எனக்குத் தெரியாது. செய்தி நிறுவனத்தில் உள்ள ஆசிரியர்களும் எழுத்தாளர்களும், திரித்தலுடன் எப்படி ஒத்துப் போகிறார்கள்? திட்டமிட்ட நோக்கங்களுடன் திரித்தலுக்கும், நோக்கமின்றியே திரித்தலுக்கும் இடையிலுள்ள கோடு, வெகுநுட்பமானது. ஒருவர் கவனிக்காமலேயே அப்புறத்திற்குச் சென்றுவிடக்கூடும். திடீரென்று இந்தத் திரித்தல் நடைபெற்று விடுவதில்லை. முதலில், 'சரியானவழி' பற்றி மேலிருந்து நெறிப்படுத்தல், அப்புறம், கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் மேற்பார்வை: முக்கிய தலையங்கங்களை எழுதுவதில் உதவி, இப்படியாக இது தொடர்கிறது. யார் குற்றம் கூறுவது? பிரச்சாரத்திற்கு மத்திய குழு தரும் முக்கியத்துவம். இப்படித்தானே நடக்கிறது?

பொதுமக்களைப் பொறுத்தவரை, 'மக்கள் நாளிதழ்' தரும் செய்தி முறையில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மக்கள் சமூக யதார்த்தத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் எழுதப்படுவது அதிகார வட்டாரங்களிலிருந்து கேட்கப்படுவது ஆகியவற்றுக்கும், நேரிடையாக அனுபவப் படுவதற்குமான இடைவெளி அதிகரிக்கும் போது, இருநிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஒன்று மக்கள் படிப்பதில்லை. கேட்பதில்லை. இரண்டு, முன்பு நம்பியவர்கள் தம் பகுத்தறிவை மேலும் அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள்.

எனது இந்தப் படப்பிடிப்பு வருத்தம் தருவதாக இருந்த போதிலும், இதற்காகத் தற்காலத் தலைமையை மட்டுமே குற்றம் சொல்ல முடியாது. வரலாற்று முறையில் நம் ஆய்வைப் பின் நோக்கிச் செய்தால் - விடுதலைக் காலத்திலிருந்து அச்சில் வெளிவந்தவற்றை ஆராய்ந்து பார்த்தால், பத்திரிகை நடையிலும் உள்ளடக்கத்திலும் ஏற்பட்ட ஒரு முறிவை - பிளவை 1966 வசந்த கால முடிவில் பார்க்க முடியும். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்

புரட்சியின் விளைவுகளுள் ஒன்று இது. கலாச்சாரப் புரட்சி சில எதிர்விளைவுகளைத் தோற்றுவித்தது. அல்லது, ஏற்கெனவே உள்ளுறைந்து இருந்த சில எதிர்மறைப் போக்குகளைத் தீவிரப்படுத்தியது. கலாச்சாரப் புரட்சியின் நல்விளைவுகள் 70 சதம் என்றும், எதிர்மறை விளைவுகள் 30 சதம் என்றும் மாவோ கூறினார்.

இன்னொரு சான்று, சீனத்தின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய உங்கள் விமர்சனத்தில், முன்பு இரண்டு மேல்நிலை வல்லரசுகளுக்கு எதிரான போராட்டம் என்ற நிலைபாடு, தற்போது சமூக ஏகாதிபத்தியத்திற்கு மட்டுமே எதிரான போராட்டமாக மாறிவிட்டது என்று கூறுகிறீர்கள். சீனப் பொதுவுடைமைக் கட்சியின் சர்வதேச நடைமுறைகள், மக்கள் மத்தியில், குறிப்பாக மூன்றாவது உலக மக்கள் மத்தியில் சீனாவின் பெருமையைச் சிதைக்கிறது என்று கூறுகிறீர்கள். நீங்கள் பழைய 'பீகிங் ரெவ்யூ' இதழ்களைப் பார்த்தால், நீங்கள் குறிப்பிடும் இந்த நடைமுறை மாற்றம் இந்தப் பத்தாண்டின் தொடக்கம் முதலே கூட நடைபெறுவதை அறிவீர்கள். டெங்குக்கு இந்தக் கடமை ஒப்படைக்கப்படுவதற்கு முன் சூ என் லாய் தான் இதை முதன்மையாக நடைமுறைப்படுத்தினார் என்றால், மாவோ இதை வேண்டா வெறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தார் என்பதுதானே பொருள். ஆனால் நிழற் படங்களிலிருந்து, இதில் மாவோவின் பங்குக்கு ஏராளமான சான்றுகளைத் தொகுக்க முடியும். சீனப் பிரச்சாரத்திலிருந்து பார்த்தால், இந்தப் போர்த்தந்திரத்தை உருவாக்கியதில் முதன்மைப்பங்கு மாவோவுக்கே சேரும். இதை நடைப்படுத்துவதில் சீனத்தலைமை சில தவறுகளைச் செய்திருக்குமானால், இதற்கான பொறுப்பு சம அளவில் அனைவருக்கும் சேரும். நடைபெறும் பிரச்சாரத்திலிருந்து பார்த்தால் மூன்றாவது உலக மக்களுக்குச் சீனாவிடம் மரியாதை குறைந்திருப்பதாகத் தெரியவுமில்லை.

இதுபோல நான் நிறைய எழுதி உங்களைச் சலிக்க வைக்க விரும்பவில்லை. நால்வர் பற்றிய பிரச்னையில் நடைபெற்ற 'சொல்லாற்றல்' ஒரு புதிய கண்டுபிடிப்பு

அல்ல. வியூ சாவ்-சிக்கும் லின் பியோவோவுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் தீர்ப்புக்களின் போது நடந்தது என்ன? அந்தக் குற்றச்சாட்டுகள், 'திருத்தல்வாத நடைமுறை'யையா குறிக்கின்றன?. இதுபற்றி பீகிங் ரெவ்யூ நமக்குப் போதுமான சான்றுகளைத் தருகிறது.

சீன வெளியீடுகளைப் படிக்க வேண்டாம் என்று நான் கூறவில்லை. பல சமயங்களில், மிக முக்கியமான கட்டுரைகள், பிற மொழி வெளியீட்டுக்காக, மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை. ஃகி சின் குவா ஆசிரியர்களால் திருத்தமுற எழுதப்பட்ட கட்டுரைகளும் இப்படி மொழிபெயர்க்கப்படுவதில்லை. சீன மொழிப் பயிற்சி இவ்வகையில் உதவியாக இருக்கக் கூடும். உங்கள் கடிதத்தின் "முதலாளிய உரிமைக்கு எதிரான பேராட்டம் தற்போது குறிப்பிடப்படுவதில்லை" என்று எழுதுகிறீர்கள். சீன மொழிப் பத்தரிகைகள் படிப்பவர்கள் யாரும் இப்படிக் கூறமாட்டார்கள். (அவர்களும் 'எதிரான போராட்டம்' என்ற உங்கள் சொற்களை மறுப்பார்கள். 'முதலாளிய உரிமையைக் கட்டுப்படுத்தல்' பற்றியே அவர்கள் பேசுவார்கள்). இப்பிரச்னை பற்றி வந்த சித்தாந்த ரீதியான கட்டுரைகள் பலவற்றை நான் குறிப்பிட முடியும். செப்டம்பர் 27-ல் 'மக்கள் நாளித'ழில் லீ குங் வின் கட்டுரை இவற்றில் ஒன்று. முதலாளிய உரிமை – உழைப்புக்கு ஏற்ற நஷ்ட ஈடு – என்பதற்கும், வெளிப்படையான, சட்டமீறலான நடவடிக்கைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை இக்கட்டுரை துல்லியமாக விளக்குகிறது. இரண்டு ஆண்டுகளுக்குமுன் இத்தகைய தெளிவான வேறுபடுத்தல் இல்லை. சித்தாந்த அணுகலில் இவர்கள் முன்னேறி வருகிறார்கள்.

சீனாவைப் பற்றி மேற்கு நாட்டு அதிகார நிறுவனத்தின் பிரச்சாரத்தை விட சீனப் பிரச்சாரம் நம்பத் தகுந்ததாக இருப்பதாகத் தோன்றினால், உண்மையைத் தேடுபவர்களுக்கு இவற்றின் மூலம் மட்டுமே செய்திகளைப் பெறவேண்டும் என்பதில்லை. தலைவர்களிடமும் சாதாரண மக்களிடமும் தொடர்பு கொண்ட 'சுதந்திரமான'

பார்வையாளர்களின் அறிக்கைகள் கிடைக்கின்றன. அதிகாரபூர்வமாக, அதிகாரபூர்வ மற்ற முறையிலும், வெளியிடப்படும் - பிரச்னைகளைத் தொகுத்து முன்வைக்கும் பேச்சுக்களும், கொள்கை அறிக்கைகளும் கிடைக்கின்றன. இவற்றின் உள்ளார்ந்த பலமும் பலக்குறைவும் உங்களுக்கு நன்றாகவே தெரியும். சோவியத் ஆவணத் தொகுப்பைப் பற்றிய முழுமையான அறிமுகம் உடைய நீங்கள், ஒரு தலைமையின் அறிவு எல்லையையும் நேர்மையான தவறுகளுக்கும், தெரிந்தே செய்யும் ஏமாற்றுக்கும் உள்ள வேறுபாட்டையும் அறிவீர்கள்.

இதை விளக்க ஓர் உதாரணம் தருகிறேன். சென்ற வசந்த காலத்தில் நடைபெற்ற தேசிய தாச்கிங் மாநாட்டில் பேசிய துணைப் பிரதமர் யூ சியூ-லி, (பீகிங் ரெவ்யூ எண் 22, 1977) தத்துவார்த்த முறையில் முதலாளிய உரிமைகள் பற்றி அதிகம் பேசவில்லை என்றாலும், தொடர்ந்து முதலாளிய உரிமை இருப்பதன் விளைவாக ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் சிரமங்களையும் குறைக்கும் முறையில், பொதுச் சேவை நிறுவனங்களின் பணியை விரிவுபடுத்தக் கோரிக்கை விடுத்தார். கூடியவரை வசதியாக உள்ளவர்களிடமிருந்து சிலவற்றை எடுப்பதன் மூலமே இப்பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று கருதக் கூடியவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களானால், நான் காட்டிய உதாரணம் உங்களுக்கு நிறைவளிக்காது. உங்கள் கருத்து எதுவாக இருந்த போதிலும் முதலாளிய உரிமை இங்கு கட்டுப்படுத்தப்படும், கட்டுப்படுத்தப் படுகிறது என்பது உண்மை. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை இது விரைவுபடுத்தும். நால்வரைச் சேர்ந்த சித்தாந்திகள். இத்தகைய நடைமுறைச் செயல்களில் ஆர்வமே கொள்ளவில்லை என்பதையும் மக்கள் அறிவர்.

தவிர அச்சிடப்பட்ட அறிக்கைகள் பேச்சுகள் முதலியவற்றையே நீங்கள் பார்க்கிறீர்கள். இவற்றின் மூலம் ஒரு உண்மையான உரையாடல் நடைபெற முடியாது. மக்களோடும் தலைவர்களோடும், அல்லது தலைவர்களோடு பழகியவர் களோடும் நேரிடையாகப் பழகுவதன் மூலமே

அவர்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும். சோவியத் யூனியனுக்கு நீங்கள் செல்லாமலேயே நீங்கள் புத்தகம் எழுதியிருந்தால், அதன் பயன் குறைவாகவே இருந்திருக்கும். சீனாவின் சமகால நிகழ்ச்சிகளை இப்பொழுது இங்கு வந்து பார்க்காமல் இவை பற்றி நீங்கள் எழுதியிருப்பது எனக்குப் புரியவில்லை. நீங்கள் முன்பு பலமுறை இங்கு வந்திருக்கலாம். தற்போதைய நிகழ்ச்சிகளை அறிவதற்கு இதுபோதாது. உங்களுக்குச் சீனமொழி தெரியுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. வெளிநாட்டவருடன் தொடர்பு கொள்வது பற்றிய தற்போதைய விதிமுறைகள், சீன அதிகார பீடங்களின் வியக்கத்தக்க திறன்கள் – இவை பற்றி பிரான்சில் சீனா பற்றிய ஆய்வாளர்களுக் கிடையில் நிலவும் தவறான கருத்துக்களுக்குப் பலியான நிலையில், இங்கு வரவேண்டாம் என்று கருதுகிறீர்களா? இவை உண்மையாக இருக்குமானால், இயங்காவியல் சிந்தனை முறைக்கு நீங்கள் பலியானதாகப் பொருள்படும்.

நீங்கள் வந்திருந்தால் உங்கள் கடிதத்தில் நீங்கள் எழுப்பியுள்ள பல பிரச்னைகளைப் புதிய ஒளியில் பார்த்திருப்பீர்கள். முதலாவது, நீங்கள் தேர்ந்து கொள்ளும் ஒரு நிறுவனத்தை உதாரணமாக வெளிநாட்டு மொழிகள் அச்சகத்தைப் பார்வையிட்டிருந்தால், நிழற்படப் போலியாக்கம் பற்றிய முரண்பாட்டின் உண்மையை அறிந்திருப்பீர்கள். தலைவர்களின் படங்கள், அல்லது படங்களிலிருந்து அவர்களின் நீக்கம், தலைவர்களையும் அவர்களது அரசியல் வழிமுறையையும் மக்கள் ஏற்றுக் கொள்ளுதல் அல்லது மறுத்தலோடு தொடர்புற்றிருப்பதை அறிவீர்கள். ஒரு உண்மை நிகழ்வைத் தானே படம் காட்டுகிறது என்று நீங்கள் கூறினால், அதை இங்கே ஏற்கமாட்டார்கள். மாவோவின் இறுதிச் சடங்குகளின் போது தலைவர்களின் வரிசை பற்றிய படங்களை பீகிங் ரெவ்யூ சைனா பிக்டோரியில் முதலிய இதழ்களில் அச்சிட யாராவது முயற்சி செய்திருந்தால், அச்சிடுபவர்களே அதைத் தடுத்திருப்பார்கள். நால்வரின் கட்டளைப்படி நடைபெற்ற

இதே வகை உத்தியை ஃகீசின் சுவா எப்படிக் கடுமையாகச் சாடியது என்று நீங்கள் கேட்டால், எந்தெந்தத் தனிநபர்களின் உருவங்களை நீக்கினார்கள் என்பதை உங்களுக்கு நினைவு படுத்துவார்கள். பிரான்சில் இப்படி நடைபெறுவதில்லையா என்று கூடச் சிலர் உங்களைக் கேட்பார்கள். நீங்கள் சலிப்படைந்து, அப்படியானால் வரலாற்றுக்குப் பொருளே இல்லையா என்று நீங்கள் கேட்டால், வரலாறு என்பது தொல்சுவடித் தொகுப்பாளர்கள், வரலாற்றாசிரியர்களின் வேலை, இங்கு பிரச்னைக்கு உள்ளான இந்த நடைமுறை, வர்க்கப் போராட்டம் பற்றியது, 'வரலாறு' பற்றியது அல்ல என்பார்கள்.

சித்தாந்த அளவில் தாழ்ந்த தரம் உடையவர்கள் இவர்கள் என்று நீங்கள் கருதி வேறு பலரிடமும் இதே கேள்வியைக் கேட்பீர்களானால் அநேகமாக இதே பதில்தான் பெறுவீர்கள். உங்கள் ஐயங்களை முன்கூட்டியே எதிர்பார்த்து, தயாரிக்கப்பட்ட பதில்களையே எல்லோரும் தருகிறார்கள் என்று நீங்கள் கருதுவீர்கள். இது சாத்தியம் தானா? எப்படி இருந்த போதிலும், இதிலிருந்து, முன்பு இரண்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன் இல்லாத திருத்தல் வாத நடைமுறை இன்று மட்டும் எப்படி மேலோங்கிவிட முடியும்? 1967, 68-ல் 'சைனா ரிகன்ஸ்ட்ரக்ட்ஸ்' இதழ்களில் வெளியான நிழற்படங்களைப் பாருங்கள். அப்புறம் எந்தக் குறிப்பிட்ட தலைவர் குழுவையும் குற்றம் சொல்ல மாட்டீர்கள்.

'நம்ப முடியாத குற்றச்சாட்டுக்கள்' 'முழுமையான பொய்கள்' 'அவதூறுகள்' என்று நீங்கள் சில நிகழ்ச்சிகளை வர்ணிக்கிறீர்கள். இந்தக் கதைகளுக்கு யார் கர்த்தாக்கள் என்று ஆராய்வீர்களானால் நால்வர் வீழ்ச்சிக்குப் பொறுப்பான தலைவர்களை இக்கதைகளின் கர்த்தாக்களைக் காணமாட்டீர்கள். கீழ்நிலையிலுள்ள ஊழியர்கள் அல்லது சாதாரண உழைக்கும் மக்களையே காண்பீர்கள். இவர்கள் பொய்யர்கள் அல்லர். நால்வரின் நடவடிக்கைகளை இவர்களே நேரில் பார்த்தார்கள் அல்லது நால்வரின் அடக்குமுறைக்கு இவர்கள் பலியானவர்கள். இவர்களில்

சிலர் மார்க்சியம் பற்றி மிகச் சிறிய அளவே அறிந்திருக்கக் கூடும்.

நிகழ்ச்சி நடந்த போதே ஏன் இதுபற்றிப் பேசவில்லை என்று கேட்டால், முன்பே பேசினோம், அதற்காகத் துன்புற்றோம் என்று சிலர் கூறுவர். நாங்களும் பேசினோம், ஆனால் நால்வரின் பதில் தாக்குதலிலிருந்து தங்கள் தோழர்களும் தம் நிறுவனமும் தங்களைக் காத்தது என்றும் சிலர் கூறுவர். பெரும்பாலோர், அடக்குமுறைக்கு அஞ்சிப் பேசவில்லை என்பர். மேலும் தொடர்ந்து ஆராய்ந்தால் சென்ற ஆண்டு அக்டோபருக்கு முன்பே இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றதைப் பற்றியும் அறிவீர்கள்.

இங்கு நீங்கள் மீண்டும் ஒரு தேர்வைச் செய்ய வேண்டியிருக்கும். ஒன்று, நால்வருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் என்பவை, அவர்களின் நடைமுறைக்கும் அவர்களின் சோசலிசத்திற்கும் சம்பந்தமில்லாத அவதூறுகள், அல்லது, அவை குற்றம் சாட்டப்பட்டவர் பற்றிய சான்றுகள், முன்னதை நீங்கள் தேர்ந்தால், சோசலிச நடைமுறை என்பது, 8 மணி வேலையை 5 மணி நேரமாகக் குறைத்தல், தங்கள் 'வேலை' நேரத்தில் தாம் விரும்பியதைச் செய்யலாம் என்று நீங்கள் கருதுவதாகப் பொருள்படும். பின்னதை நம்பினால், பெரும்பாலான சீனர்களை நீங்கள் நம்புவதாகப் பொருள், தவிர இதிலிருந்து, மூன்றரை ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலை மாறி இன்று (உணர்வை) மாற்ற, புறக்காரணங்கள் அகக் காரணங்கள் வழியே – அகக் காரணங்கள்தான் முதன்மையானவை என்ற போதிலும் – செயல்பட வேண்டும். (ஆகஸ்டு 31, 1967).

தலைவர்களுக்கும் மக்கள் திரள்களுக்கும் உள்ள முக்கியமான பிரச்னை பற்றிப் பார்ப்போம். தற்போது வெற்றி பெறுவதாக நீங்கள் கருதும் திருத்தல்வாத நடைமுறைக்குத் தற்போதைய பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களே பொறுப்பு என்று நீங்கள் கருதுவதாகத் தோன்றுகிறது. நால்வர் அதிகாரத்தில் இருந்திருந்தால், அல்லது அதிகாரத்தில் பங்கு பெற்றிருந்தால் இப்படி நடந்திருக்காது என்றும் நீங்கள் கருதலாம். நான் ஏற்கெனவே விளக்கியவாறு, தற்போதைய

தலைமை இதற்குப் பொறுப்பாகாது. மாவோ மீது சந்தேகத்தை ஏற்படுத்துவது என் நோக்கம் அல்ல. எல்லாச் சீனத் தலைவர்களையும் ஏதாவது ஒன்றுக்காக குற்றம் சாட்டுவதும் என் நோக்கமல்ல. சீனத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் – தலைவர்களுக்கும் பொதுவான சமூக அரசியல் சூழலுக்கும் இடையிலான உறவைச் சுட்டுவதே என் நோக்கம். இதுபற்றி உங்கள் கடிதத்தில் எதுவுமே சொல்லப்பட வில்லை. இதற்குக் காரணம், தலைமை பற்றிய தங்கள் ஆழ்ந்த பார்வையிலுள்ள சில அடிப்படையிலான குறைபாடுகளின் பிரதிபலிப்பே, என்று கருதுகிறேன்.

சீனத்தின் உயர்மட்டத் தலைவர்கள், சீன மக்கள் அன்றாட வாழ்வு, வேலை ஆகியவற்றின் ஒவ்வொரு பகுதியின் மீதும் நேரிடையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று உண்மையாகவே நம்புகிறீர்களா? இது சாத்தியமா? சீனத் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை – அவை எவ்வளவுதான் மார்க்சிய லெனினியமாக 'முன்னேறிய' விஞ்ஞான பூர்வமானவையான இருந்த போதிலும் – அவற்றை மக்கள் மீது திணிக்க வேண்டும் - திணிக்க முடியும் என்று நம்புகிறீர்களா? அல்லது ஃகிசின்குவாவின் கட்டுரை ஒவ்வொன்றையும் தலைமைச் செயலக உறுப்பினர்கள் மறந்துவிட வேண்டுமா? தலைவர் மாவோ நால்வரைத் தானே விலக்கி விடுவதன் மூலம், ஒவ்வொருவரின் குழப்பத்தையும் வேதனையையும் தடுத்திருக்க முடியுமா? கலாச்சாரப் புரட்சியில் ஒவ்வொருவரின் குழப்பத்தையும் வேதனையையும் தடுத்திருக்க முடியுமா? நீங்கள் இப்படி நம்பமாட்டீர்கள் என்று கருதுகிறேன். இவற்றில் சில, பாசிச நடைமுறைகள்தான் என்பதை நீங்கள் ஏற்பீர்கள்.

லெனின், மாவோ போன்ற தனிச் சிறப்பு வாய்ந்த சோசலிசத் தலைவர்கள் சிக்கலான நிகழ்வுகள், இயக்கங்களைக் கூர்ந்து நோக்கி, அவற்றின் சாரத்தைக் கண்டறிந்து, அல்லது அவற்றின் முக்கியமான போக்கைக் கண்டறிந்து, திரும்பவும் முழுமையான யதார்த்தத்தினுள்

அதனை, உடன்பாட்டு முறையில் செலுத்தினார்கள். இன்று உடன்பாட்டுமுறைதான் வரலாற்றைப் படைப்பவர்களாகிய மக்கள் திரள் முன்னேறிச் செல்ல உதவுகிறது. இதுதான் அவர்களுக்குக் கற்றுத் தருகிறது. விடுதலை தருகிறது. நம் சித்தாந்தத்தை மாற்றுகிறது. உங்கள் நூல்களும் இந்த உண்மையைத்தான் கூறுவதாக உணர்கிறேன்.

இது உண்மையானால் சிறந்த தலைமையின் சாரம் கற்றுத் தருவதுதான். தமக்கே அறிவு முழுமையாக இருக்கிறது என்று கருதுபவர்கள் சிறந்த தலைவர்கள் அல்லர். மாணவர்களிடம் விவரங்களையும், கோட்பாட்டையும் – அவர்களின் குறுகிய அனுபவம் காரணமாகத் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை - திணிப்பவர்கள் சிறந்த தலைவர்களாகார். அச்சுறுத்தல் அறிவுச்செயலை வளர்க்கும் என்று கருதுபவர்கள் – தம் நேரிடை வளர்ப்பிலிருந்து நாளடைவில் சுதந்திரமாக வளர்ந்து விடுவார்களே தம் மாணவர்கள் என்று கருதும் ‘தந்தை மனோபாவம்’ உடையவர்கள் – இவர்களும் சிறந்த தலைவர்கள் அல்லர். தம் அறிவுச்செல்வத்தை மக்களிடமிருந்தே தாம் பெறுவதாகவும் கல்விப் பயிற்சி என்பது இருவழி அனுபவம் என்பதாகவும் கருதுவதோடு, தம்முன் உதாரணத்தின் மூலம் கடுமையான உழைப்பைக் கற்றுக் கொடுத்து, தம்மைச் சூழ உள்ள உலகை மற்றவர்களோடு ஆராய்ந்து மாற்றுவதில் பேரின்பம் கொள்பவர்களே சிறந்த தலைவர்கள்.

மாவோ இத்தகைய தலைவராகத் திகழ்ந்தார். நால்வரில் எவரும் இத்தகைய ஆசிரியராக மக்களால் கருதப்படவே மாட்டார். தற்போதுள்ள தலைவர்களைப் பொறுத்தவரை, பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஒரு மாவோவைத் தோற்றுவித்த சூழல் இன்று இல்லை, புதிய சூழல்கள், புதிய அறைகூவல்களோடு இன்று உள்ளோம். நாம் விவரித்த இலட்சியத் தலைவர்க்கான குணங்கள் இல்லை என்பதற்காக உடனே இவர்களைத் திருத்தல்வாதிகள் என்று முத்திரை குத்திவிட வேண்டாம்.

தற்போதைய தலைமை மக்கள் தாமே கற்றுக் கொள்வதற்கும் விடுவித்துக் கொள்வதற்கும் தேவையான

நிலைமைகளை உருவாக்க விரைகிறார்கள். அண்மைக் காலத்தில் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த குழப்பம், அச்சம், நிச்சயமின்மை ஆகியவற்றைப் போக்குவதில் முனைந்துள்ளார்கள். குறைந்த வருமானத் தரத்திலுள்ள நகர்ப்புறத்தவர்களின் பொருளாதார நிலைமைகளை மாற்ற முனைந்துள்ளார்கள். 'உற்பத்திச் சக்திகள் பற்றிய கோட்பாடு என்ற மயக்கத்திலிருந்து விடுபட்டு, சோசலிச உற்சாகம் என்ற அடிப்படையில் ஈடுபட்டுள்ளார்கள். இவை மக்கள் திரளின் செயலூக்கத்தை விடுவிக்கும்.

மக்களின் சுய-கல்வி, சுய-விடுதலைக்குத் தேவையான கருவிகள் என்ற முறையில், மாவோவின் முக்கிய நூல்களைப் பெருமளவில் வெளியிடத் தொடங்கியுள்ளார்கள். தாச்சாய், தாச்சிங் போன்ற முன்மாதிரிகளை மேலும் மேலும் விளம்பரப்படுத்துகிறார்கள். சோசலிச நிறுவனங்களைச் செயல்படுத்துவது பற்றிய – அன்யாங்க் உரிமைச்சாசனத்தை– (இதை மாவோ ஏற்றார்) திரும்ப வற்புறுத்துகின்றனர். கட்சி உறுப்பினர்களுக்கான நடத்தைத் தரங்களை புதிய கட்சி அமைப்பு விதிகளில் சேர்த்துள்ளனர். இந்தத் தரங்கள் செயல்படுவதைக் கவனிக்க சில நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவற்றை மக்கள் அனைவரும் அறியுமாறு அறிவித்துள்ளனர்.

இந்தச் செயல்பாடுகள் திருத்தல்வாதிகளின் செயல்கள் அல்ல என்று நம்புகிறேன். எனது கருத்துக்கள் சரியோ, தவறோ, இறுதியில் மக்கள் திரளும் வரலாறுமே நீதிபதிகளாக இருக்க முடியும்.

இன்று மக்கள் சீனக் குடியரசின் வயது இருபத்தெட்டு. 1949 அக்டோபரில் இருந்ததைவிட சீனச் சமுதாயம் சிக்கல் மிகுந்த – இயக்க ஆற்றல் மிகுந்த சமூகமாக உள்ளது. இது முழு நிறைவான சமுதாயம் அல்ல. முதன்மையான போக்கு, 'விரைந்து முன்னேறுதல்' சில பின்னடைவுகளும் உள்ளன. இது புதியது அல்ல. வர்க்கப் போராட்டம் தொடர்கிறது – தற்சமயம் நால்வருக்குச் சொல்லப்படும் குற்றங்களின் தொடர்பிலும்–வர்க்கப்போராட்டம் தொடர்கிறது. கலாச்சாரப் புரட்சியின் முன்னேற்றங்கள் துடைக்கப்படுவதாகக்

கூறுகிறீர்கள். சில விளைவுகள், கைவிடப் படும். சில திருத்தம் பெறும். சில சரியான காரணங்களுக்காக— வர்க்கங்களும் போராட்டமும் நம்மோடு மேலும் கொஞ்ச காலத்திற்கு இருக்கும். சதியின் மூலம், கவிழ்ப்பின் மூலம், அதிகாரத்திற்கான போராட்டத்திற்கான மூலம், ஒரு திருத்தல் வாதப் போக்கு என்றாவது கொஞ்ச காலத்திற்கு வலிமை பெறலாம். ஆனால், கலாச்சாரப் புரட்சியின் உண்மையிலேயே முக்கியமான நன்மைகள், நெடுங்காலத்திற்கு மூழ்கடிக்கப்பட முடியாது. இவை நம் இரத்தத்தில் கலந்து விட்டன. அவை உங்கள் நூலாக்கத்தைத் தூண்டியுள்ளன. தலைவர் ஃகுவா ஃகுவா பெங்கின் பேச்சுக்களைத் தூண்டுகின்றன. இவை இல்லாவிட்டால், நான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்க முடியாது.

தங்கள் கடிதத்தின் கருத்தை விளங்கிக்கொள்வதில் நான் தவறியிருந்தால் சுட்டிக் காட்டுங்கள். திருத்திக்கொள்கிறேன். நான் கூறியுள்ளவை பற்றிய விமர்சனங்களை வரவேற்கிறேன். தங்களைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லாவிட்டாலும், எனது ஆசிரியர்களுள் ஒருவராக உங்களை மதிக்கிறேன். எனது விமர்சனங்களையும் — அவை தரப்படும் நோக்கம் கருதி, ஏற்பீர்கள் என்று நம்புகிறேன். தற்போதைய தலைமையை - விமர்சனத்தோடு ஆதரிப்பவராகத் தங்கள் பங்களிப்பைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

- நீல். ஜி. பார்ட்டன்.

மாபெரும் பின்னோக்கிய பாய்ச்சல்

- சார்லஸ் பெட்டல்ஹீம்

மார்ச் 3, 1978

"இதுவரை இருந்து வந்துள்ள அனைத்துச் சமுதாயங்களின் வரலாறும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே"

- கார்ல் மார்க்சும் பிரடெரிக் எங்கெல்சும்
(கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை)

அன்புள்ள நீல் பர்ட்டன் அவர்களே

உங்களுடைய 1977 அக்டோபர் 1, கடிதத்தை மிக்க ஆர்வத்துடன் படித்தேன். வேறு சில பணிகளை முடிக்க வேண்டியிருந்தமையால் உங்கள் கடிதத்திற்கு உடனே பதில் எழுத இயலவில்லை. இதன் காரணமாகவே (உடல்நிலை காரணமாகவும்) சென்ற ஆண்டு நான் சீனத்திற்கும் செல்ல இயலவில்லை.

நான் சீனத்திற்கு 1977இல் சென்றிருந்தால், பிரெஞ்சு - சீன நட்புறவுக் கழகத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகியது குறித்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முடிவுகளுக்கு வந்திருக்க மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதனை நான் ஏற்கவில்லை. முதலாவதாக, சீனத்தில் இப்போது வெளியிடப்படும் ஆவணங்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் பாதையைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. இவ் அரசியல் பாதை இருப்பதே நான் எடுத்த முடிவுகளுக்குக் காரணம். இரண்டாவதாக நான் அக்கடிதம் எழுதுவதற்கு முன்னும் பின்னும் சீனத்திற்குச் சென்று, வந்த பல பயணிகளை- சீனத்தின் நண்பர்கள், சீனம் பற்றிய ஆய்வாளர்கள், வேற்று நாடுகளிலிருந்து சீனம் சென்று பணிபுரியும் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்தேன். அவர்களுடைய அனுபவங்கள் (சிலர் இப்போதைய அரசியல் பாதையை ஆதரிப்பினும்) என் முடிவுகளை உறுதி செய்கின்றன. வெளியிடப்பட்டுள்ள ஆவணங்களையும் நான் விலகிய பின்னர் சீனத்திலிருந்து வந்த பயணிகளிடம்

மேற்கொண்ட உரையாடல்களையும் நான் கணக்கில் கொள்கிறேன்.

இப்பல்வேறு காரணங்களும் சீனத்தில் நிகழ்வன பற்றி அறிய உதவும். ஆகவே, என்னுடைய இக்கடிதம் உமது கடிதத்திற்குப் பதில் என்ற முறையில் மட்டும் அமையாது, 1976 அக்டோபரிலிருந்து சீனத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்களையும், அதற்கான நிலைமைகளையும் பற்றிய முறையான சிந்தனைக்கு ஒரு முதல் முயற்சியாகவும் இருக்கும் என நம்புகிறேன். முன்னை விட இப்போது நிலைமைகள் தெளிவாக இருப்பதால், தற்போதைய நிலைமைகளையும், அவை தோற்றுவித்த நிகழ்ச்சிகளையும் கருத்திற் கொண்டு முடிவு செய்தால் நால்வர் குழுவை விலக்கியபின் வெற்றி பெற்ற கொள்கை முதலாளியக் கொள்கையே தவிர பாட்டாளி வர்க்கப் பாதையல்ல என அறியலாம்.

இந்நிலைமை தோன்றியதற்கான காரணங்கள் பற்றி எழுதுவதன் மூலம் உங்கள் கடிதத்திற்குப் பதிலளிக்க முடியும் என நம்புகிறேன்.

பண்பாட்டுப் புரட்சியை முடிவுக்குக் கொண்டு வருதல்

முதலாவதாக இன்றைய நிலைமைக்கும், பண்பாட்டுப் புரட்சிக்கும் இடையே உள்ள உறவைக் கணக்கில் கொள்ளவேண்டும். இன்றைய சீனத்தலைமை பண்பாட்டுப் புரட்சி முடிவுக்கு வந்து விட்டதாகத் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. இது, மக்கள் திரள்களின் செயல்பாடுகளைப் பெருமளவு கட்டுப்படுத்தி, பண்பாட்டுப் புரட்சியின் பயனாகக் கிட்டிய உரிமை வேட்கையையும், பேச்சுரிமையையும் தடை செய்து சமுதாய அரசியல் சக்திகளுக்கிடையே உள்ள உறவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத் தெளிவாக்குகிறது.

1965-66லிருந்து நிகழ்ந்தவற்றைப் பின்னோக்கி ஆய்வோமானால், 1967இன் தொடக்கத்திலிருந்தே, இச்சக்திகளுக்கிடையே இருந்த உறவுகளில் ஏற்பட்டு வந்த

மாற்றங்களையும் (சாங்காய் கம்யூனிஸ் தோற்றுவிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட அரசியல் வடிவம்) அவை தொடர்ந்து வந்ததையும் அறியலாம். பல ஆண்டுகள் நீடித்து வந்த ஒரு வரலாற்றியல் போக்கு – தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு வர்க்கப் போராட்ட நிகழ்வு – முடிவுக்கு வந்துவிட்டதையே, பண்பாட்டுப் புரட்சி முடிவுக்கு வந்து விட்டதென்ற அறிவிப்பு தெளிவாக்குகிறது. இவ் அறிவிப்பு வெளியிடப்பட்ட விதம் இரு கருத்துக்களைத் தெளிவாக்குகிறது.

முதலாவதாக, இவ் அறிவிப்பையொட்டி, பண்பாட்டுப் புரட்சி பற்றிய முழுமையான ஆய்வு வெளியிடப்பட வில்லை. இதைச் செய்யத் தவறிய, சீனப் பொதுவுடைமைக் கட்சியின் புதிய தலைமை – பண்பாட்டுப் புரட்சியின் பயனாக எழுந்த உழைக்கும் மக்களின் நோக்கிலிருந்து ஆக்கபூர்வ மாற்றங்களுக்கும், எதிர்மறை விளைவுகளுக்குக் காரணமான மாற்றங்களுக்கும் இடையில் வேறுபாடுகளைக் காணவில்லை என்பதை உணர்த்துகிறது. உண்மையில், பண்பாட்டுப் புரட்சியின் பயனாக எழுந்த அனைத்து ஆக்கங்களையும், எதிர்க்கும் வகையில் திறந்து விடப்படுகிறது. பண்பாட்டுப் புரட்சிக்கு வாயளவில் புகழ்மாலை சூட்டினாலும் இது நிகழ்கிறது. இதுபோன்றே வேறு பல புரட்சிகளும் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. கடந்த காலம் பற்றி, கூடுமானவரை தெளிவான ஆய்வில்லாமல் எதிர்காலத்தில் சரியான வழியைக் கண்டறிவது மிகவும் கடினம்.

இரண்டாவதாக, பண்பாட்டுப் புரட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த அறிவிப்பைத் தொடர்ந்து கடந்த ஓராண்டாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும், அரசு அறிவிப்புக்களும் பத்திரிகைகள் வெளியிடும் கருத்துக்களும் உண்மையில் பண்பாட்டுப் புரட்சியை மறுதலிக்கின்றன. ஒரு குறிப்பிடத்தக்க பின்னோக்கிய பாய்ச்சல் தென்படுகிறது. இன்றைய நிலைமையில் இவ்விரு அம்சங்களும் தற்செயலானவை அல்ல. இவை ஆழ்ந்த போக்கினங்களின் வெளிப்பாடே : வர்க்கங்களுக்கிடையிலான சக்திகளின் ஒரு

குறிப்பிட்ட உறவின் விளைவாகவும், இச்சக்திகளின் உறவில் ஒரு பகுதியாகவும், அதன் மேல் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ள ஒரு அரசியல் பாதையின் விளைவாகவும் இவை தோன்றியுள்ளன.

நான் மேற்குறிப்பிட்ட கருத்துக்களுக்கு நீங்கள் உடன்பட மாட்டீர்கள் என எண்ணுகிறேன். எனவே என் வாதத்தைக் கூறுகிறேன். அதுகூட முழுமையானதாக இராது. அதற்கு, சீனப் பொதுவுடைமைக் கட்சி பண்பாட்டுப் புரட்சி பற்றிய முழுமையான சீரான ஆய்வைச் செய்யாதது பற்றியும், அப்புரட்சியின் தொடக்கத்தில் கூறப்பட்ட நோக்கங்கள் பற்றியும், அதன் சாதனைகள், பின்வாங்கல்கள் பற்றியும் அவை ஏன் ஏற்பட்டன என்பது பற்றிய ஆய்வையும் குறிப்பிடவேண்டும். இத்தகைய ஆய்வை மக்களுடன் தொடர்புடைய ஒரு அரசியல் அமைப்பினால் மட்டுமே சாதிக்க இயலும். இதற்குப் பல்வேறு ஆவணங்களும், தகவல்களும் தேவை. அவை என்னிடம் இல்லை. இவை பற்றிய குறிப்புக்களை நான் சீனத்தில் தங்கியிருந்தால்கூட சேகரிக்க முடியாது. ஏனெனில் அவை 'இரகசியமானவை'யாகக் கருதப்படுகின்றன.

இதன் காரணமாக, கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட பின்னோக்கிய பாய்ச்சல்களையும் அதற்கான காரணங்களையும் பற்றி நான் விளக்க முற்படுகிறேன். பண்பாட்டுப் புரட்சியின் தொடக்க கால நோக்கங்களையும் – குறிப்பாக முந்தைய நடைமுறைகளிலிருந்து கூர்மையாக பிரிந்து செல்ல அடிப்படையாக இருந்து, சீன மக்கள் வாழ்வில் சில காலங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்திய நோக்கங்களையும், தற்போதைய எதிர்ப்புகளுக்குள்ளானவற்றையும் நினைவுபடுத்திக் கொள்வது அவசியமாகிறது.

மக்கள் திரள் ஜனநாயகப் பிரச்சனை

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழு 1966 ஆகஸ்ட் 6-இல் ஏற்றுக் கொண்ட 'பதினாறு அம்ச முடிவு'களை நாம் படித்தால், மக்கள் திரள்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாகவும், 'சிறுபான்மையோர் தவறாக

இருப்பினும்' (பதினாறு அம்ச முடிவுகளில் 6-வது அம்சம்) சிறுபான்மைக் கருத்துக்களைத் தடையின்றி எடுத்துரைக்கவுமான ஒரு அரசியல் பாதையை வளர்ப்பதை அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருந்ததை அறியலாம். மக்கள் திறள்களின் நடவடிக்கைகளைப் பல்வேறு அமைப்பு ரீதியான வடிவங்களில் மலரச் செய்தாலும், பல்வேறு தொழிற்சாலைகள், சுரங்கங்கள், தொழிலமைப்புக்கள், நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள பல்வேறு அமைப்புகள், அரசு நிறுவனங்கள், மற்றும் கல்வி நிலையங்களிலும் இவ்வதிகார அமைப்புகளை நிறுவுதலும் முக்கிய நோக்கமாகும். இந்த அனைத்து நடவடிக்கைகளும் 'பாரிஸ் கம்யூனில் நிகழ்ந்தாற் போன்ற பொதுத் தேர்தல் முறை'க்கு இட்டுச் செல்லப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் தொடர்ந்து விமர்சனம் செய்து மாற்றவோ, திருப்பி அழைக்கவோ செய்வர். (அம்சம் 9). இந்நோக்கம் வெறும் தற்காலிக குணம் கொண்டதாக இல்லாமல் அதன் 'மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தை' வலியுறுத்துவதாக அமைந்திருந்தது. "மக்கள் திரள்களே தம்மை விடுதலை செய்து கொள்ள வேண்டும்; அவர்களுக்காகப் பிறர் செயல்படும் முறையைப் பயன்படுத்தக் கூடாது. "இயக்கத்திலிருந்து மக்கள் திரள்கள் படிப்பினை பெற வேண்டும்." (அம்சம் 4) என்ற முக்கியமான கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. இக்கோட்பாட்டுக்கேற்ப கட்சி, மக்களின் செயற்பாடுகளை வளர்க்கவேண்டும். பல்வேறு மட்டங்களிலுமுள்ள கட்சித் தலைவர்களின் பணிகளில் ஏற்படக் கூடிய குறைகளையும், தவறுகளையும் மக்கள் விமர்சனம் செய்வது ஊக்குவிக்கப்பட வேண்டும். (அம்சம் 3).

அதே வேளையில், விமர்சனங்கள் ஒற்றுமை உணர்வையும், தவறுகளைச் சீர்படுத்துவதையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமேயன்றி, தவறுகள் இழைப்போரை வெளியேற்றுவதாக இருக்கக்கூடாது. கட்சி அணிகளுக்குள் 95 விழுக்காட்டுக்கு மேலாகவும், மக்கள் திரள்களுக்கிடையில் 95 விழுக்காட்டுக்கு மேலாகவும் ஒற்றுமையை அடைவதே" இறுதியில் குறிக்கோளாக இருக்க வேண்டும். அம்சம் 5.

மேலடுக்கில் செல்வாக்குடன் இருக்கும் முதலாளியக் கோட்பாட்டை மாற்ற வேண்டும். அது, "கல்வி, இலக்கியம், கலை ஆகியவற்றில் தேவைப்படுகிறது" (அம்சங்கள் 1,10).

புரட்சிக்கான போராட்டம், உற்பத்திக்கான போராட்டம் ஆகியவற்றுக் கிடையிலுள்ள இணைப்பும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் முன்னதற்கே முதன்மை தர வலியுறுத்தப்பட்டது.

இன்றைய நிலைமையைச் சரியாக உணர, 1966இலிருந்து ஏற்ற இறக்கங்களுடன் வளர்ந்து வந்த இயக்கத்தை ஆய்வு செய்யவேண்டும். இந்த இயக்கத்திற்கும் உரிய கோட்பாட்டு மெய்யியல் அடிப்படைகள் இருந்தன. இந்த அடிப்படையில் இருந்துதான் மாசேதுங்கும் இன்றைய தலைமையால் தூற்றப்படும் தலைவர்களும், "சோசலிசப் பெயர்ப் பலகையின் பின்னால்" முதலாளிய வளர்ச்சி ஏற்படுவதையும், முதலாளிய அமைப்பிலிருந்து பெருமளவு வேறுபாடற்ற ஊதிய முறை நிலவுவதையும் கட்சிக்குள் முதலாளிய வர்க்கத்தவர் இருப்பதையும் பார்த்தனர். மாவோவின் மறைவுக்குப் பின், நால்வர் குழுவை விமர்சனம் செய்தல் என்ற பெயரில் பண்பாட்டுப் புரட்சியும், அதனையொட்டிய கோட்பாட்டு வளர்ச்சியும் கைவிடப் படுகின்றன.

1976இன் இறுதியிலிருந்து நிகழ்ந்த பின்னோக்கிய பாய்ச்சல்

பண்பாட்டுப் புரட்சியின் குறிக்கோள்களிலிருந்து பின்வாங்குதல், 1976 இறுதியிலிருந்து மட்டும் தொடங்கவில்லை, இதற்குமுன்னரே வர்க்கப்போராட்டத்தின் ஏற்ற இறக்கங்களுடன் அது தொடங்கி விட்டது. மாவோவின் மறைவுக்குப் பின்னரும், நால்வரின் விலக்கலுக்குப் பின்னரும், 1966லிருந்து வளர்ந்த பல்வேறு ஆய்வு முறைகளும் வெளிப்படையாகக் கைவிடப்பட்டன. இதிலிருந்து பின்னோக்கிய பாய்ச்சல் எந்தளவுக்குச் சென்றதென அறியலாம். இது சீனப் புரட்சி மார்க்சியத்துக்கு

அளித்த கொடைகளை மறுப்பதாகும். அதாவது – மார்க்சியத்தையே மறுப்பதாகும்.

மாவோ மறைவுக்குப்பின் நிகழ்ந்த சில பின்னடைவுகளை மட்டும் குறிப்பிடுகிறேன். 1976க்குப் பின் புரட்சிகரக் குழுக்களால் அமைந்த சாங்காய் கம்யூனின் அரசியல் வடிவம் கைவிடப்பட்டது. இக்குழுக்கள் தாமே மறையத் தொடங்கின. ஏனெனில் தேவைப்படும் போது குழு உறுப்பினர்களை நீக்கவும், குறிப்பிட்ட காலங்களில் மறுதேர்வு செய்வதுமான கோட்பாடு நாளடைவில் மதிப்பிழக்கச் செய்யப்பட்டது; புரட்சிகரக் குழுக்களின் தலைமை, கட்சிக் குழுக்களின் கையில் சேர்ந்தது.

இதுபோன்றே பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் தோன்றிய பிற அதிகார வடிவங்கள் மறையத் தொடங்கின. 1975இல் மறுபடியும் நான் சீனம் சென்ற போது, பல்வேறு தொழிற்சாலைகளிலும் இத்தகைய குழுக்கள் இல்லாததை அறிந்தேன். சோசலிசத்தை நோக்கிய முன்னேற்றத்தின் தேவைகளில் இக்குழுக்களின் மறைவு ஓரடி பின்னுக்குச் சென்றதாகும். இப்பின்செல்லல் "தானே நடைபெறவில்லை" வர்க்கப் போராட்டத்தின் விளைவாகவும், முதலாளிய வர்க்கத்தின் மேலோங்கிய செல்வாக்கிலிருந்தும் இது நேர்ந்தது.

அரசு மற்றும் கட்சி அமைப்புக்களில் இருந்த முதலாளிய வர்க்க ஆதிக்கத்தின் விளைவாகவும் இதுநேர்ந்தது. இவர்கள் தம்மை மக்கள் திரளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டனர். 1976ல் கூட பண்பாட்டுப் புரட்சி உயிரோடு இருந்தது. அதுபற்றி ஆய்வுகளும் பல நடந்தன. அப்போதே இந்தப் பின்னடைவுகளும் இருந்தன. இன்றைய நடைமுறை வாழ்வின் மீதும் கோட்பாட்டு நிலைகளின் மீதும் ஒரு முதலாளியத் திருத்தல்வாதத் தாக்குதல் தொடர்கிறது.

உற்பத்தித் தளங்களில் புரட்சிகரக் குழுக்களும் ஒற்றை ஆள் நிர்வாகத்தை வலுப்படுத்தலும்

இந்த எதிரழிவு வேலை உற்பத்தித் தளங்களில் உள்ள புரட்சிகரக் குழுக்களுக்கு எதிராக நடத்தப்படுகிறது. "மூன்றடுக்கு இணைப்புக்" குழுக்கள் என்ற வடிவத்தை மாற்றி ஒற்றை ஆள் நிர்வாகத்தையும், கட்சிக் குழுவின் பங்கையும் வலுப்படுத்தும் முறைகள் பின்பற்றப்படுகின்றன. தொழிலாளருக்கான விதிமுறைகளும் ஒழுங்குகளும் கடினமாக்கப்படுகின்றன.

சான்துங் கட்சிக் குழுவின் முதல் செயலாளர் பை சு-பிங் 1977 சனவரி 31-இல் நிகழ்த்திய உரையில் இந்த எதிர்ப்புரட்சி நிலைபாடு வெளிப்படையாகத் தெரிந்தது. அவர் பேச்சு, புரட்சிகரக் குழுக்கள் பற்றி ஏதும் குறிப்பிடாமல் பொருளாதாரத் துறையில் கட்சிக் குழுக்களின் பங்கு வலுவாக்கப்பட வேண்டியது பற்றி மட்டுமே அமைந்தது. தொழிலாளர்கள் சுதந்திரமாக விமர்சனம் செய்வது பற்றிக் குறிப்பிடாமல், கட்சிக்குழுக்களுக்கு வரும் விமர்சனங்களைக் குறை கூறியது அப்பேச்சு. தொழிலாளர்களின் 'பணிவு' பற்றி வலியுறுத்தப்பட்டது.

இக்கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. 1977 ஏப்ரல் 6-இல் பீகிங் வானொலி அறிவித்தது: "ஒரு சோசலிச நிறுவனத்தில், கட்சிக்கும் பிற அமைப்புகளுக்கும் இருக்கும் உறவு, ஒரு குரு-பக்தர்கள் உறவாகவே இருக்க வேண்டும். "மக்கள் திரள்களின் எழுச்சி, மக்களிடமிருந்து கற்றல் என்பன பழங்கதையாயின, கட்சிக் குழுவே ஒட்டு மொத்த அதிகாரி: தொழிலாளிகள் வழி நடத்தப்பட வேண்டியவரே".

மக்கள் திரள்களின் தன்னெழுச்சிகள் 'பொருளாதார வாதம், அராஜக வாதம், தனி மனித அதீதவாதம்' எனக் குறை கூறப்பட்டன. தலைவர்கள் மீது கட்டுப்பாடு என்பது ஒழுங்கு பிறழ்தல் எனவும், நால்வரும் தொழிற்சாலைகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்குமிடையே

முரண்பாட்டை வளர்ப்பவர்கள் எனவும், அவர்கள் நிர்வாகத்திற்கும் மக்களுக்குமிடையே பகைமையை வளர்ப்பதாகவும் குறை கூறப்பட்டது. (நவ சீன செய்தி நிறுவனம் மே 21, 1977).

மாசேதுங்கால் வெறுத்தொதுக்கப்பட்ட 'முரண்பாட்டில் ஒற்றுமைக்கே முதன்மை' என்ற கொள்கை ஸ்டாலின் காலத்தில் சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை – மீண்டும் புத்துயிர் பெறுகின்றது.

கட்சி அணிகளும், தொழில்நுட்ப வாதிகளும் தொழிலாளர்களுக்கு மேலானவராகவும், தொழிலாளிகள் கட்டளைகளை அடிபணிந்து ஏற்பவராகவும் மாற்றும் கொள்கை வளர்க்கப்படுகிறது.

தொழிற்சாலை "எதேச்சதிகாரம்"

தொழிற்சாலைகளில் இருந்து வந்த கடுமையான நடைமுறை விதிகள் என்று முன்பு கூறப்பட்ட விமர்சனங்கள் அனைத்தும் இன்று ஒதுக்கப்பட்டுள்ளன. 'இன்றைய நவீனப் பெருமளவு உற்பத்தியால் தோன்றும் சிக்கலான நிலைமைக்குத் தக' கடுமையான விதிகள் தேவை என்று கூறப்படுகின்றன. ஆகவே, 'இவ்விருப்பு வெறுப்பற்ற புறநிலை விதிகளைத்' தொழிலாளி வர்க்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் 'மனிதன் தன் அறிவாலும், திறமையாலும் இயற்கையை வெற்றி கொண்டு தன் ஆளுகைக்குட்படுத்தும் போது, அந்த இயற்கை சமுதாய அமைப்புகளுக்கு முற்றாகக் கட்டுப்படாமல் மனிதனையும் ஓரளவு கட்டுப்படுத்துகிறது' என்று 1873 இல் எங்கெல்சு எழுதியதை மேற்கோள் காட்டுகிறார்கள். மார்க்ஸ் குறிப்பிட்ட "சமுதாய ரீதியாகத் தீர்மானிக்கப்படும் தொழிற்சாலை எதேச்சதிகாரம்" பற்றிக் குறிப்பேதுமில்லை.

அதாவது தொழிலாளரைப் பொறுத்தவரை அடக்குமுறை, நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படுகின்றன. தொழிலாளரின் தன்னூக்கம், அமைப்பு, தன்னுணர்வு ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி அதிகரிப்பு, பண்டங்களின் தரத்தை உயர்த்துதல் என்ற நிலைக்கு

மாறாகக் கடுமையான விதிகளைத் திணிப்பது என்ற நிலை மேற்கொள்ளப்படுகிறது. 1977 ஆகஸ்ட் 14, பீகிங் வானொலி, 'உற்பத்தி தொழில்நுட்ப வளர்ச்சி வளர வளர, விதிகளும், விதிமுறைகளும் கடுமையாக்கப் படும்; மக்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டும்; இது இயற்கை விதி' எனப் பறை சாற்றியது.

நால்வரை விமர்சிப்பது என்ற போர்வையில் விதிமுறைகள் கடுமையாக்கப் படுகின்றன. 'சில விதிமுறைகள் புகழப்பட்டன; 'முதலாளிய நிர்வாகத்தின் அம்சங்களும் பாராட்டப்பட்டன. மார்க்சு கூறிய 'தொழிற்சாலை எதேச்சாதிகாரத்தை' வளர்ப்பதற்கான காரணங்களாக, "நால்வர் செயல்களால் சீனப் பொருளாதாரம் சீர்கேடுற்றுள்ளது" என்றும் "நான்கு நவீனமயமாக்கலுக்கான தேவைகளுமே' என்றும் கூறப்படுகின்றன. இத்"தேவைகளுக்காக" "தன்னெழுச்சி நடவடிக்கைகள்" மேற் கொள்ளப்பட்டன.

தன்னெழுச்சி நடவடிக்கைகள்

1930களில் சோவியத் அனுபவமும் பண்பாட்டுப் புரட்சிக்கு முந்தைய சீன அனுபவமும், நமக்கு உணர்த்துவது என்னவென்றால், மக்கள் திரள்களின் உண்மையான இயக்கத்திலிருந்து தன்னெழுச்சி பிரிந்து விட்ட நிலையிலும், அது மேல்மட்டத்திலிருந்து செயல்படுத்தப்படும் "நடவடிக்கை" யாகும் போதும் அது தன் "சோசலிசத் தன்மை"யை இழந்து விடும் என்பதாகும். அது கட்சி அணிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் தொழிலாளர்களைத் துன்புறுத்தி உற்பத்தி அதிகரிப்பில் ஈடுபடுத்துவதற்கான வழியாகிறது. இந்நடவடிக்கைகள், தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் தொழில் நிலைமைகள் மீது கொண்டுள்ள சிறிதளவு கட்டுப்பாட்டையும் இழக்கச் செய்து, முன்னை விட மேலும் சுரண்டப்படும் நிலைக்கு வழிகோலுகின்றன.

1977 மார்ச்சில் இத்தகைய "தன்னெழுச்சி நடவடிக்கைகள்" மேற்கொள்ளப் பட்டன. இவை

மேல்மட்டத்திலிருந்து இயக்குவிக்கப்படும் நடவடிக்கைகள் ஆயின. நவசீன செய்தி நிறுவனம் 78 சனவரி 7இல் குறிப்பிட்டது: நிலக்கரிச் சுரங்க அமைச்சகம், நிலக்கரி உற்பத்தி அதிகரிப்பிற்காக அண்மையில் ஜனவரி 1ல் தொடங்கி நூறு நாட்களில் 125 சுரங்கங்களில் தன்னெழுச்சி இயக்கங்களை நடத்தியுள்ளது. 'நிலக்கரி கிடைக்கவும் அளவு, தரம், நுகர்வு, உற்பத்திச் செலவு மற்றும் பிற உற்பத்தி முறைகளை' எட்ட ஒரு 'வலுவான கட்டளை அமைப்பை' நிறுவி, நூறு நாட்கள் தொடர்ந்து வேலை செய்துள்ளது. அதிகாரிகளால் முடிவு செய்யப்படும் வேலைத் தரங்களை நிறைவேற்ற மட்டுமின்றி முந்தைய உற்பத்தி 'அளவு'களை மிஞ்சவும் இவ்வியக்கங்கள் பயன்பட்டன. உண்மையில் சோசலிசத் தன்னெழுச்சிக்கு இந்நடவடிக்கைகள் எவ்விதத்திலும் தொடர்புடையன அல்ல. பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு நேர் எதிர்மாறானவையே இவை, 77 நவம்பர் 27இல் பீகிங் வானொலி அறிவித்த ஒரு கூற்று அனைத்துக்கும் முத்தாய்ப்பாக அமைந்து விட்டது. "பொருளாதாரத்திற்கு அரசியல் சேவை செய்ய வேண்டும்".

தொழிலகங்களில் இலாபம் மூலதனக் குவிப்பு மற்றும் நிர்வாக அதிகாரச் சேர்க்கை

இலாபத்தின் பங்கை வலியுறுத்தி 1976இன் இறுதியிலிருந்து பல்வேறு ஆவணங்களும் வெளியீடுகளும் வந்துள்ளன. 1977ஆம் ஆண்டின் 'அங்கி' (இதழ் 8) 'ஒரு தொழிற்சாலை இலாபத்திற்காக நடத்தப்பட வேண்டுமா அல்லது புரட்சிக்காக நடத்தப்பட வேண்டுமா என்ற கேள்வி வினோதமானது' என எழுதியுள்ளது. சோசலிசத் தொழிலமைப்பில் இலாபம் அதிகம் சேரும் போது சோசலிசத்திற்கும் அதிகச் சொத்து சேருகிறது என்று (தொழிலாளரின் தன்னுணர்வு, தொழிலாளர்களின் நிர்வாகப் பங்கு, பெரும் புத்தாக்கங்கள் பற்றிக்குறிப்பிடாமல்) கூறுவது, பல்லாண்டுகள் சோவியத் திருத்தல்வாதிகள் கூறுவதினின்றும் எவ்வகையிலும் வேறுபட்டதல்ல.

"சோசலிச இலாபம் சோசலிசத்தைக் கட்டப் பயன்படுவதாகவும், முதலாளி இலாபம் தொழிலாளரின் உபரி மதிப்பிலிருந்து பெறப்படுவதாகும் என்றும், எனவே, கடினமாக உழைத்து சோசலிச அடிப்படையில் பெரும் இலாபம் ஈட்டவேண்டும்" என்றும் ஆகஸ்ட் 27, 1977 – 'ஜென்மின் ஜி பாவ்' தலையங்கம் கூறுகிறது. சோவியத் பொருளாதாரவாதிகளும் இதே 'சோசலிச இலாபம்' பற்றியே குறிப்பிட்டனர். எதார்த்தத்தின் சமுதாய நிலையைத் தீர்மானிப்பது 'சோசலிசம்' என்ற அடைமொழி வார்த்தையன்று. 'உற்பத்தி நிகழ்வுகள் எந்த சமுதாய நிலைமைகளில் நடைபெறுகின்றன' என்பதைப் பொறுத்தே அது அமைகின்றது. இதுகுறித்துப் பண்பாட்டுப் புரட்சிக்காலத்தில் எண்ணற்ற வெளியீடுகள் வந்துள்ளன. எனவே, இன்றைய அரசாங்கக்கோட்பாடு பண்பாட்டுப்புரட்சி வலியுறுத்தியவற்றை மறுப்பதில் சென்று முடிந்துள்ளது. 'கடும் உழைப்பு, கட்டுப்பாடு, கட்டளைகளுக்கு ஏற்ப நடத்தல்' என்பவை இலாபம் கருதி வலியுறுத்தப்படுகின்றன. இப்பாதை தொழிலாளர்களின் தொழிலாளரின் நிர்வாகக் குழுக்கள் இருந்த "இரு முதன்மைத் தலைவர்களை" நியமிக்கிறது. இதிலிருந்து இலாபமே முதன்மையாகக் கருதப்படுவது தெளிவாகிறது. இது அதிகாரச் சேர்க்கைக்கும், விதிமுறைகளைக் கடுமையாக்கவும், நிர்வாகத்தில் தொழிலாளர்களின் தலையீட்டை நிறுத்தவும் இட்டுச் செல்கிறது. 1960களின் இறுதியிலும் 1970களின் தொடக்கத்திலும் முதன்மையாக வைக்கப்பட்ட 'தொழிலக இலாபம்' 'சமுதாய இலாபம்' ஆகியவற்றுக்கிடையே இருந்த வேறுபாட்டைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

தொழில்களை 'நவீனமயமாக்கல்' என்ற பெயரில் இலாபமும் தொழில் மயமாக்கும் வீதத்துடன் இணைக்கப்பட்டது. இவை ஏதோ 'சில தவறுகளால்' ஏற்பட்டவை என நான் கருதவில்லை. இவற்றைத் 'தவறுகள்' எனச் சிலர் குறிப்பிட்டாலும், முதலாளிய உறவுகளைப் பலப்படுத்துதல், முதலாளிய வடிவில் தொழில்

பிரிவினை, உற்பத்தி அமைப்பு, நிர்வாகம் என்ற போக்குகளை வர்க்கப் பார்வையின் அடிப்படையிலேயே காண வேண்டும்.

ஊதிய நிலைகளில் "சமத்துவத்திற்கு" எதிரான போராட்டம்

ஊதிய நிலைகளிலும் அதே வர்க்கப்பாதையே கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது மேலோங்கி வரும் பாதை, ஊதிய சமத்துவத்திற்கெதிராகவும் ஊதியங்களில் வேறுபாட்டிற்காகவுமான போராட்டமாக உள்ளது. "இன்னும் சீனத்தில் சமத்துவம் மிகப் பெரிய பிரச்சினையே" என்ற 'கான் மின் ஜி பாவோ' என்ற இதழில் நவம்பர் 1977 இல் வெளியான கட்டுரை மாசேதுங் 1975 இல் இது குறித்து எழுதியதற்கு நேர்மாறாக இருக்கிறது. "விடுதலைக்கு முன் ஏறக்குறைய முதலாளித்துவ வடிவிலிருந்தது, இன்றும் பின்பற்றப்படும் எட்டுப்பிரிவுகளையுடைய ஊதிய முறை, உழைப்புக்கேற்ற ஊதியம், பணத்தின் மூலம் பரிமாற்றம் ஆகிய அனைத்தும் முந்தைய சமுதாயத்திலிருந்து பெரும்பாலும் வேறுபடவில்லை" என மாவோ குறிப்பிட்டார். சமத்துவத்திற்கெதிரான போராட்டம் போனஸ் முதலிய பொருள் ஊக்குவிப்புகளுக்கும் பிசிறு ஊதியங்களுக்கும் இட்டுச்செல்லும் இவையனைத்தும் உற்பத்திச் சக்திகளை வளர்த்தல், தொழிலாளியின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்ற பொருளாதார, உற்பத்தித் தன்மைகளின் அடிப்படையில் நடைபெறுகின்றன. "ஒவ்வொருக்கும் அவருடைய உழைப்புக்கேற்ப" என்ற கோட்பாட்டைக் குறிப்பிட்டு எழுதிய சாவ் லு கானின் 1977 நவம்பர் 22ஆம் நாள் கட்டுரையும் 1977க்குப் பின் வெளியான கட்டுரைகளும் உற்பத்திக்கான போராட்டத்தில் உந்து சக்தியாக தனி மனித நலன்களையே வளர்த்தன. ஒவ்வொருவரும் உழைப்பது மக்கள் தேவைகளை நிறைவேற்றவும், சோசலிசத்தைக் கட்டவுமே என்ற உணர்வுக்கு மாறாகத் தனி மனித நலன் முன்வைக்கப்படுகிறது.

உணர்வுக்குப் பதிலாகத் தனிமனித நலன்களை முன்வைத்தல் கட்சியில் பூர்ஷ்வாக்களின் நலன்களை வளர்ப்பதாக அமையும். இது தொழிலாளர்களிடையே

ஏற்றத்தாழ்வுகளை வளர்த்து தொழிலாளி வர்க்கத்தைப் பிரிக்கவே செய்யும். பல ஆண்டுகளாக வேலை நேர ஊதியங்களும், பொருள் ஊக்குவிப்பு நீக்கப்பட்ட நிலையும் நடைமுறையிலிருந்ததை மாற்றி பிசிறு ஊதியங்களையும், பொருள் ஊக்குவிப்புகளையும் கொணர்தல் ஒரு மாபெரும் பின்னோக்கிச் செல்லும் நடவடிக்கையே. இந்த பின்னடி வைத்தல் தொழிலக மேலாளர்களுக்கும் தொழில்நுட்ப வாதிகளுக்கும் பெரும் நன்மை பயப்பது; அரசு முதலாளிய வர்க்கத்தையும், பொருளாதார நிர்வாக மற்றும் கட்சி மட்டங்களில் உயர் பதவிகளில் இருப்போரை வளர்க்கவும், வலுப்படுத்தவுமே பயன்படும். இதுவே புதிய பாதையின் வர்க்க சாரமாகும்.

வேளாண்மைக் கொள்கையின் புதிய போக்குகள்

1976இன் இறுதியிலிருந்து வேளாண்மைத் துறையில் ஒரு புதுப்போக்கு தென்பட்டது. உழவர் திரள்களின் தன்னூக்கத்தைக் குறைக்கவும், உழைக்கும் மக்களின் உண்மையான கட்டுப்பாடற்ற – அதிகாரச் செறிவு கொண்ட தலைமைக்கு மேலும் அடிபணிந்து செல்லவுமே இது அடிப்படையாக இருந்தது. மக்கள் கம்யூன்கள் மீது, புறவயமாக முடிவு செய்யப்படும் வேலை அளவுகளைத் திணிக்கவும், நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து வெகுதூரம் விலகியிருக்கும் அமைப்புகள் முடிவு செய்யும் தொழில்நுட்ப மாற்றங்களை வளர்க்கவும் இது வழிகோலுகிறது.

இப்புதிய போக்கின் வர்க்க சாரம் தெளிவாகிறது. ஒருபுறம், கட்சியின் உள்ளூர் மற்றும் தலைமையிடங்களில் உள்ள அணிகள், உழவர் திரள்களைத் தமக்கடிமைப் படுத்தும் ஓர் உற்பத்தி முறையை வளர்த்து அதன்மூலம் ஒரு புதிய முதலாளியவர்க்கத்தை உருவாக்கும் நிலை ஏற்படுகிறது. மறுபுறம், அரசு முதலாளிய வர்க்க அதிகாரத்தைக் குவிமையப்படுத்தத் தவிர்க்கவியலாதபடி உருவாக்கப்படும் 'நான்கு நவீனமயமாக்கலு' க்கான மிகுந்தஅளவு மூலதன நிதியை உழவர்களிடமிருந்து உபரி உழைப்பாக உறிஞ்சி எடுக்கும் வழிவகைக்கான நிலைமையை இது உருவாக்குகிறது.

வேளாண்மைக் கொள்கையில் தோன்றிய புதுப்போக்கின் வர்க்க சாரம் தெளிவானாலும் முன்னர் குறைத்து மதிப்பிடப்பட்ட பல உண்மையான சிக்கல்களின் முக்கியத்துவத்தைப் போர்வையாகக்கொண்டே இப்போக்கு எழுந்தது. இச்சிக்கல்கள், முதலாவதாக உற்பத்தி பற்றிய சிக்கல்களே. பத்தாண்டுகளாகக் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறி வளர்ந்த வேளாண்துறை உற்பத்தி, வளரும் மக்கட்தொகையின் உணவுத் தேவைகளுக்கேற்ப அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே, இருக்கும் உற்பத்தி உறவுகளைக் கட்டிக் காக்கும் பிரச்சினைகளாகவும், தொழில்நுட்ப மாற்றம் உள்ளிட்டு உழைப்பு மற்றும் உற்பத்தி நிகழ்வை மாற்றும் பிரச்சினைகளாகவும் இச்சிக்கல்கள் இருந்தன. கோட்பாடு, அரசியல் போன்று இதுவும் மேலடுக்கில் சிக்கல்களை உருவாக்குபவையே. அவை அனைத்தும் குறித்து இங்கு ஆய்வு செய்யவோ, அல்லது அவற்றை அவ்வளவு எளிதாகத் தீர்த்து விடவோ இயலாது. ஆயினும், அவர்கள் முன்வைத்த சில 'தீர்வுகளை' நாம் ஆய்வு செய்து அதன் வர்க்கப் பொருள் என்ன என்று அறியலாம்.

கூட்டு உற்பத்தி முறை அமைப்பு உடைப்புக்குக் காரணமான போக்கின் இரு வடிவங்கள் 1976 இன் இறுதியிலிருந்தே குறிப்பிடப்பட்டது. தனி மனிதர் நிலமும் அத்துடன் இணைந்த குடும்பத்தினரின் செயல்பாடுகளும் மிகுந்து வந்தது ஒரு வடிவமாகும். இப்பிரச்சினைகள் 1976 டிசம்பரிலிருந்தே இருந்து வந்த பிரச்சினைகள் தாம்.

கூட்டு உழைப்பு முறிவதற்கான போக்கின் இன்னொரு வடிவம், கட்டுக்கடங்காத போக்கில் உழைப்பாளிகள் வளர்ந்ததும் வேளாண்மையல்லாத பிற செயல்பாடுகளில் ஈடுபட்ட கிராமப்புற உழைப்பாளிகள் அதிகரித்து வந்ததும் ஆகும். இப்போக்குகள் கண்டனத்திற்குள்ளாயின. எடுத்துக்காட்டாக, 1977 செப்டம்பர் 2 இல் நவசீன செய்தி நிறுவனம் வெளியிட்ட 'வேளாண்துறை உற்பத்தியின் முன்னணிப் பாதையை வலுப்படுத்துக' என்ற ஆவணம் கூட்டு உற்பத்தி அல்லது அரசு உற்பத்திப் பிரிவுகள்

கம்யூன்களிலிருந்தும், படைப்பிரிவுகளிலிருந்தும் உழைப்பாளிகளைத் தேர்ந்தெடுத்தது பற்றிக் குறிப்பிட்டது. மேலும், சில கம்யூன்களிலும் படைப் பிரிவுகளிலும் தொழிலாளிகள் வேளாண்துறை நடவடிக்கைகளல்லாத பிற செயல்களில் ஈடுபட்டது குறித்தும், உற்பத்தியில் ஈடுபடாத பல உறுப்பினர்கள் இவற்றில் சேர்த்துக் கொள்ளப்படுவது பற்றியும் குறிப்பிட்டன.

இவ் அறிவிப்பைத் தொடர்ந்து மாநில வானொலி நிலையங்கள், கட்சிக் குழுக்கள் ஆய்வுக்குழுக்களை அமைப்பதாக அறிவித்தன. கம்யூன்களில்லாத தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படைத் தொழிலாளிகள் கிராமப்புறங்களுக்கே செல்லுமாறு செய்வதே இக்குழுக்களின் பணி.

தொடர்ந்து உற்பத்தியையும், வேளாண்துறை உற்பத்தியையும் பாதிக்கும் போக்குகள் வளர்ந்தன. இப்போக்குகளையும், அதன் விளைவுகளையும் குறித்து அடிப்படையான ஆய்வு ஏதுமில்லை. மாறாக 1976 இன் இறுதியிலிருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒரு தெளிவான வர்க்க உண்மையைத் தெரிவிக்கின்றன. விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் தனி மனிதர்களின் நிலங்களின் அளவு குறைக்கப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மக்கள் கம்யூன்களின் பொருளாதாரத்தைச் கட்டிக் காக்கவும், கூட்டு உற்பத்தி அதிகரிப்பிற்கும் இச்செயல்கள் நோக்கமாக அமைந்தன. இவை ஒரு புரட்சிகர அல்லது திருத்தல்வாதப் போக்கிற்குச் சாதகமாக இருக்கக்கூடும். இந்த நிலைமைகளில் திருத்தல்வாதிகள்கூட 'நவீனமய மாக்கலுக்கு' கூட்டுவேளாண்துறை உற்பத்தியைச் சார்ந்தே இருக்கவேண்டும். சில குறிப்பிட்ட கூட்டு "கூடுதல் உற்பத்தி நடவடிக்கைகளை"க் கட்டுப்படுத்தும் நோக்குடன் வேறு நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இது, மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல் மற்றும் பண்பாட்டுப் புரட்சிக்குப் பின் பெருமளவு வளர்ந்த கிராமப்புறத் தொழில்மயமாக்கலுக்கு ஆபத்தாக இருக்கும். நகர்ப்புறத்திற்கும், கிராமங்களுக்கும் இடையே உள்ள

முரண்பாட்டைக் குறைக்கவும், உற்பத்திச் சக்திகளின் சோசலிச வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் மக்கள் திரள்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றவும் இத்தொழில்மயமாக்கல் வளர்வது தேவையாகும்.

போதிய "உழைப்பாளிகள் கிட்டவில்லை" எனக் கூறி "கூடுதல் உற்பத்தி நடவடிக்கைகளைக்" கட்டுப்படுத்தல் என்பது திருத்தல்வாதக் கண்ணோட்டத்தையே எதிரொளிக்கிறது. ஏனெனில் இக்கட்டுப்பாடு, அனைத்துத் தொழில்துறை உற்பத்தியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்பும் மையப்படுத்தப் பட்ட தொழில்களின் தலைவர்களின் எண்ணத்தையே வெளியிடுகிறது. ஆகவே, அதன் முக்கிய நோக்கம் வேளாண் துறை உற்பத்திக்குக் கூடுதல் உற்பத்தி சக்தி கிடைக்கச் செய்தல் என்பது அல்ல என விளங்குகிறது.

குடும்பம் மற்றும் தனிமனிதத் துணை உற்பத்தி முறை ஊக்கமூட்டப்படுகிறது. இம்முறையை 1977இன் இலையுதிர் காலத் தேசியப் பேரவை இதை; சோசலிசப் பொருளாதாரத்தை முழுமையாக்கும் ஒரு முக்கியத் தேவை" எனக் குறிப்பிட்டது. இதை "ஒரு முதலாளிய வடிவம்" என விமர்சனம் செய்ததைத் "திருத்தல்வாதப் பாதை" எனக் குறை கூறியது நவசீன செய்தி நிறுவனம்.

சீனவேளாண்மையைப் பாதித்த "உழைப்பாளர் பற்றாக்குறை"ப் பிரச்சினைகளைத் தீர்க்க எடுத்து வரும் அரசியல் நடவடிக்கைகள் உழவர்கள் மீது ஏதேச்சதிகாரமாகத் திணிக்கப்படுகின்றன. இது 'கிராமப்புற உழைப்புச் சக்தியை முறையாகப் பயன்படுத்தல்" என்ற முழக்கத்தோடு வெளியாகிறது. படைப்பிரிவுகள் மற்றும் கம்யூனின் கட்டளைக்குக் கீழ் உற்பத்திக் குழுக்கள் செயல்பட வேண்டும் என்றும் உற்பத்திச் சக்திகள் உற்பத்தி அதிகரிப்பு வேண்டுமிடங்களுக்கெல்லாம் அனுப்பப்பட வேண்டும் என்றும் 1976 நவம்பர் 23இல் அல்கோ வானொலி அறிவித்தது.

மேற்குறிப்பிட்ட 'பொருளாதாரக் குறிக்கோள்' விரும்பத்தக்கதே. ஆயின் அதை அடைய எடுக்கப்படும்

நடவடிக்கைகள் 'சோசலிச முறை' யன்று. உழவரை வெறும் உழைப்புச் சக்தியாகக் கருதிக் கட்டளைகளைத் திணித்தல் முதலாளிய முறையே. இதை உழவர் எதிர்க்கவே செய்வர். இந்த மாதிரி மேலிருந்து கட்டளையிட்டு வேலை வாங்கும்முறை சோவியத் ரஷ்யாவில் கூட்டுப் பண்ணைகளில் பின்பற்றப் பட்டதும் அதன் விளைவுகளும் அனைவரும் அறிந்ததே. வேளாண்துறை உற்பத்தியை அதிகரிக்க இம்முறையில் நடத்தப்பட்ட "போர்"களும், இத்தகைய போலி இராணுவ நடவடிக்கைகளும் 'உழவர்கள் மீது நம்பிக்கை வைக்காததையே காட்டுகின்றன.'

இந்நடவடிக்கைகள் தவிர்க்கவியலாதவாறு உழவர்களிடமிருந்து எதிர்விளைவு களைத் தோற்றுவிக்கும், அவர்களை உழைக்கும் சக்தியாக மாற்றவே மேலிருந்து "ஒருங்கிணைக்கப்பட்ட கட்டளைகள்" பிறப்பிக்கப்படுகின்றன. மேலிருந்து சர்வாதிகார முறையிலும் திணிக்கப்படும் நடவடிக்கைகள் தவிர்க்கவியலாத விளைவுகளை ஏற்படுத்தும். அதை எதிர்க்கத் தொடர்ந்த நடவடிக்கைகள் சிலவற்றை நவசீன செய்தி நிறுவனம் 1977 செப்டம்பர் 2இல் ஓர் அறிக்கையில் வெளியிட்டது. உழைப்பாளர் கட்டுப்பாடு, பணிக்குத் தவறாது குறித்த காலத்தில் செல்லல், பொறுப்புகளை வலியுறுத்தல், உழைப்பு விதிமுறைகளை ஏற்படுத்தல், இத்தகைய உழைப்புக்கேற்பக் கூலி நிர்ணயம், எழுச்சி இயக்கம் நடத்தல், தனியாகவும் உற்பத்திப் பிரிவுகளும் செய்த வேலைகளை மதிப்பிடல் என்பன அவ் அறிக்கை குறிப்பிட்டவை. இம்முறை பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் நிலவிய தன் மதிப்பீட்டு முறைக்கு நேர் எதிர்மாறானது. இத்தகைய உழைப்பு நியமங்களை நிர்ணயம் செய்யும் முறையும், உழவர்களின் வேலைகளைக் கண்காணித்தலும் எத்தகைய சாதாரண அல்லது ஏளனத்துக்குரிய விளைவுகளைத் தரும் என்பதற்கு சோவியத் அனுபவமே சான்று.

வேளாண்மையில் இயந்திர முறைத் "திணிப்பு"

சீனப் பொதுவுடைமைக் கட்சித்தலைமை வேளாண்மையில் இயந்திர முறையைத் திணித்த

விதத்திலிருந்து, அது வேளாண்மைத்துறை உற்பத்திச் சிக்கல்களைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் மிகவும் பொருந்தாதவை என்பதை உறுதிப்படுத்தின. வேளாண்மைத் துறையில் இயந்திர முறைகளைப் பின்பற்ற எடுக்கப்படும் சரியான தேவையான முடிவுகளுக்கும், 1980க்குள் இயந்திர முறையை நிறைவேற்றல் என்று சீனப் பொதுவுடைமைக் கட்சி இப்பாதையில் அவசரப்பட்டுப் பாய்வதற்கும் வேறுபாடுகள் இருப்பதை உணரவேண்டும். இத்தகைய அவசர நடவடிக்கைகள் ஏமாற்றத்திற்கே இட்டுச் செல்லும். இவை சமுதாய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்; ஏனெனில் படிப்படியான, முறைப்படியான வளர்ச்சிப் போக்கில்தான் "தொழில்நுட்பத் தேவைகள்" முழுமையை அடைய முடியும்.

இந்த அவசரக்கோலமும், அதன் விளைவான சமுதாய முரண்பாடுகளும், உழவர்களை மேலிடக் கட்டளைகளுக்குப் பணியவைத்தலும், சரியான கொள்கையைக் கைவிடுதலுக்குமே கொண்டு செல்லும். இதற்கு முன்னர் ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு கம்யூனிலும் இயந்திரமுறைப்படுத்தல், அவற்றின் சொந்த நிதி வளங்களைச் சார்ந்தே நடைபெற்றன.

பல்வேறு பிரிவுகளிலும், கம்யூன்களிலும் இருந்துவந்த வேளாண்துறை இயந்திரக் கருவிகளும் மையப்படுத்தப்பட்ட பணிமனைகளுடன் இணைக்கப்பட்டன. (இதே சூழ்நிலைகளில் இக்காரணங்களுக்காகவே சோவியத் ரஷ்யாவில் அவசர நடவடிக்கைகளாக இயந்திர டிராக்டர் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை ஏமாற்றமளிக்கும் விளைவுகளை அளித்ததை நினைவுக்குக் கொணர்கிறது) இந்த மையப்படுத்தப்பட்ட பணிமனைகள் கட்சியின் வட்டாரக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. அனைத்தும் கட்சிக் கட்டளைக்குக் கீழ் கொணரப்பட்டன. அதற்கேற்பக் கட்சிக் குழுக்கள் 'வேளாண் துறை' இயந்திரமயமாக்கலுக்கு முன்னணிக் குழுக்களை அமைக்குமாறு கோரப்பட்டன. தமது தேவைகளுக்கேற்ப சிறு அளவில் இயந்திர சாதனங்களைப் படைத்து வந்த மக்கள் கம்யூன்கள் மற்றும் பிரிவுகளின்

(பிரிகேடுகள்) பணியை இம் மையப்படுத்தல் கவருகிறது. வேளாண்மையில் இயந்திர முறையைக் கொணர்தல் என்ற மிகப் பொறுப்பும், இடர்ப்பாடும் உள்ள செயலை முன்யோசனையின்றி அவசரமாகச் செய்ததும், மையப்படுத்தப்பட்ட பணிமனை அமைப்பும் இன்று பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. சோவியத் யூனியனில் ஏற்பட்டது போன்றே இங்கும் வேளாண் துறைக்கு இயந்திர உதிரிப் பாகங்களை அளிக்க முடியாத சிக்கல் மயமானதாக மாறியுள்ளது.

1978 ஜனவரி 6இல் சென்-மின்சி-பாவோ இதழ் வெளியிட்ட மூன்று வாசகர் கடிதங்களில் ஒன்றான ஒரு மக்கள் கம்யூன் ஊழியரின் கடிதம், உதிரிப்பாகங்கள் கிடைக்காதது குறித்த பிரச்சினையைத் தொழிற்சாலை தீர்க்கவில்லை என விமர்சித்திருந்தது. கம்யூனுக்கு எங்குமே உதிரிப்பாகங்கள் கிட்டவில்லை என்பது 1977 குளிர்காலத்திலேயே கம்யூன், தொழிற்சாலைக்கு எழுதிப் பயனேதுமில்லாத நிலையில் ஒரு குழுவை அங்கு அனுப்பியது. அக்குழு அங்கு வரவேற்கப் படவில்லை. சென்-மின்சி-பாவோ மூலமாக ஒரு கடிதம் அனுப்பப்பட்ட பின்னரே, தொழிற்சாலை 'தன்போக்கை மறுஆய்வும்' 'தன்னாய்வும்' செய்து இக்குறைபாட்டுக்கு 'நால்வர் கும்பலின்' வேளாண்துறை இயந்திரமயமாக்கல் சதிவேலையே காரணம் எனக் கண்டுபிடித்தது. தொழிற்சாலை நிர்வாகம் 'தொழிலாளர் விதிமுறைகளைச் சரி செய்ய' முனைந்தது.

ஒரு சிறு நிகழ்ச்சிக்கு நான் இவ்வளவு அழுத்தம் கொடுப்பது அது பல வகைகளிலும் முக்கியத்துவமுடையது குறித்தே.

1. வேளாண்துறையில் இயந்திரக் கருவிகள் பெருமளவில் புகுத்தப்படாத 1976 குளிர்காலத்திலேயே டிராக்டருக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் ஒரு மக்கள் கம்யூனுக்குக் கிட்டவில்லை.
2. சோவியத் யூனியனில் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக நிலவிய சூழ்நிலையை ஒத்ததாக இது இருந்தது.

3. இயந்திரக் கருவிகள் புகுத்தப்பட்டபின், உதிரிப் பாகங்களை அளிக்கும் பிரச்சினைகளைத் தொழிற்சாலைகள் இத்தகைய முறையில் 'அணுகினால்' சீன வேளாண்மை எத்தகைய மாபெரும் அபாய நிலைகளுக்கிடையே செயல்பட வேண்டி வரும் என்பதை அனுமானிக்கலாம்.

4. இச்சிக்கல்களுக்கான அடிப்படைக் காரணத்தைக் காணாமல் தொழிற்சாலை நிர்வாகம் தன் தவறுகளுக்கு 'நால்வர் குழு'வின் செல்வாக்கைக் குறை கூறி தொழிலாளர் விதிமுறைகளைச் சீர்படுத்தும் தருணம் என்று தொழிலாளர் மீது ஒழுங்குமுறை நடவடிக்கைகளைக் கடுமையாக்கியது. இவ்விடத்தில் தீர்க்க வேண்டியது உற்பத்தியில் முன்னுரிமைகள் என்ற சிக்கலே; அதாவது கையிருப்பு மற்றும் பங்கீட்டு நிர்வாகமே.

தற்போதைய 'துரிதகதி'யிலான வேளாண்துறை இயந்திரமயமாக்கல், சமுதாய முரண்பாடுகள் முற்றியதன் காரணமாக ஒரு முன்னோக்கிய உந்துதலே என்பதை இச்சிக்கலைப் பற்றிய பட்டறிவுடையவர் எளிதில் உணர்வர். உழவரினத்தைக் கட்டளைகளை ஏற்று நடக்குமாறு செய்யப்படும் முயற்சியில், அதாவது – முதலாளிய உறவுகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சியில் இவை தவிர்க்க முடியாது தோன்றும். வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளில் தோன்றிய மாற்றத்தை மேற்குறித்த வளர்ச்சி தெளிவாகக்காட்டுகிறது. இத்தகைய மாற்றங்கள், அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வு நவீனதொழில்நுட்பத்தைப் பெருமளவு புகுத்தலே என்ற நிலைக்குக் கொண்டு செல்லும். சீனப் பொதுவுடைமைக் கட்சி 'நான்கு நவீன மயமாக்கல்களை' எத்தகைய அவசரக்கோலத்தில் செயல்படுத்துகிறது என்பதற்குத் தற்போதுள்ள நிலைமையே சான்று பகரும்.

வேளாண்மையை இயந்திரமயமாக்கத் தரப்படும் துரிதவேகமும், 'நான்கு' நவீனமயமாக்கலுக்குத் தரப்படும் அழுத்தமும் தொழில்நுட்ப முன்னேற்றம் என்ற

முதலாளியக் கண்ணோட்டத்தையே எதிரொளிக்கின்றன. இம்முறையில் குறிப்பிடத் தக்க அளவிலும், விரைவாகவும் குவிப்புவீதத்தைத் தவிர்க்கவியலாதவாறு அதிகரிக்கும் ஒரு நிகழ்வு உருவாகிறது. இது, தொழிலாளர்கள் மற்றும் உழவர்களின் வாழ்க்கை மற்றும் உழைப்பு நிலைகளில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

வேளாண்மையில் பிற தொழில்நுட்ப மாற்றங்களைவிட இயந்திரமய மாக்கலுக்கு முதன்மை தருவது தற்போதுள்ள அரசியல் பாதையின் வர்க்கத் தன்மையையே காட்டுகிறது. இயந்திரமயமாக்கல் மட்டுமே வேளாண்துறை உற்பத்தியை அதிகரித்தல் என்ற பிரச்சனையைத் தீர்த்து விடாது. (ஆயினும் அதுவும் ஓரம்சமே என்பதை நாம் உணர்கிறோம்). தெரிவு செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்துவதை வளர்ப்பது, பல்வகைப்பட்ட உரங்களைப் பயன்படுத்துவது, என்று வேறுபாடுள்ள முறைகளைக் கையாண்டே இச்சிக்கலைத் தீர்க்கமுடியும். இதற்கு பெருமளவு சோதனை முறையும் தன்னார்வமும் தேவைப்படும். ஆயின், இன்றைய பாதை அந்த வழியைக் காட்டவில்லை. மையப்படுத்தப்பட்ட தலைமை உழவரைத் தன்னடிப்படுத்தலை அதிகமாக்கி, அவர்களிடமிருந்து அதிக அளவு உபரி உழைப்பைப் பறிக்கவே செய்கிறது. வாழும் உழைப்பாளிகள் மீது இந்த இறந்த உழைப்பாளிகள் (மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு செலுத்துவோர்) ஆதிக்கம் செலுத்த வகை செய்வதால், இயந்திரமயமாக்கல் என்பது பெரும்பாலும் இத்தன்னடிப்படுத்தலை மேலும் சரிவர உறுதிப்படுத்தும் சாதனமே என்பதைக் காணலாம்.

வேளாண் துறையின் முக்கியப் பொறுப்புகளில் களையெடுப்பு

'மேலடுக்கில் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் பணி' என்பதற்குத் தற்போது அளிக்கப்படும் விளக்கம் அதன் முழுமையான பொருளை உணர்த்தும். அங்சி (எண் 6, 1977) இதழில் வாங் சியென், இப்பணியை 'மார்க்சியர்களின் கைகளில் தலைமையைக் கொடுத்தும், உழவர்க்கு

மார்க்சியம், லெனினியம், மாசேதுங் சிந்தனைகளைக் கற்பித்தும் முதன்மையான பொறுப்புகளை புரட்சிகரமாக வளர்த்தல்' எனக் குறிப்பிட்டார். இதைப் படிக்கும் அனைவரும், இது: முதன்மையான பொறுப்புகளில் களையெடுப்புச் செய்தல் என்பதையும், தற்போது வலியுறுத்தப்படும் ஒழுங்கு, கட்டளை, 'நவீனமயமாக்கல்' போன்ற கருத்துக்களை ஏற்காதவர்களை நீக்கும் செயல் என்பதையும் உணரலாம். தற்போதைய கருத்துக்களை உழவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் என்ற நிலையே தவிர அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளுதல் என்பது இல்லை எனவும் உணரலாம்.

வெளிநாட்டு வணிகக் கொள்கை

பொருளாதாரக் கொள்கையின் தற்போதைய புதுப்போக்குகள் திருத்தல்வாதத் தன்மையை வெளிப்படுத்துகின்றன. அவை முழுவதையும் இங்கு ஆய்வு செய்ய முடியாது. எனினும் வெளிநாட்டு வணிகம் பற்றிய சில குறிப்பிட்ட பிரச்சினைகளையும், அவற்றைத் 'தீர்க்க' முனைந்துள்ள விதம் குறித்தும் இங்கு குறிப்பிடலாம். 1977இன் தொடக்கத்தில் நடந்த ஒரு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட மாவோவின் 'பத்துப் பெரும் உறவுகளைப் பற்றி' என்ற நூலைப் பற்றிய ஓர் ஆவணம் வெளிநாட்டு வணிகம் குறித்ததாகும். இந்த ஆவணம் சாதாரண வெளிநாட்டு வணிகம்' பற்றிய கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.

புதிய தொழில்நுட்பத்திற்கும், கருவிகளுக்கும் பண்டமாற்றாக நிலக்கரியையும் எண்ணெயையும் முன்னுரிமை தந்து ஏற்றுமதி செய்வதை இந்த ஆவணம் 'நியாயப் படுத்துகிறது' இது. சாங்கன் சியாவோ சரியாகக் குறிப்பிட்டவாறு 'ஒரு குடியேற்றப் பொருளாதாரத்தை' ஒத்த அமைப்பாக மாறும் சீன வெளிநாட்டு வணிகத்தை நியாயப்படுத்தும் 'வாதங்களை' வைக்கிறது.

தற்போதைய சீனப் பொதுவுடைமைக் கட்சித் தலைமையின் "குறிக்கோள்" இது என நான் எண்ணவில்லை. சீனத்தை நவீனமயமாக்கி பெரும் ஏகாதிபத்திய சக்திகளைச் சாராத நாடாகவே மாற்ற விரும்பினர். முதலாளியக்

கருத்தான 'சாதாரண வெளிநாட்டு வணிகம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முன்னுரிமை தருவது. இத் தலைமை அடைய விரும்பிய இலக்கை அடையத் திறமையற்றது' என்பதைக் காட்டுகிறது. தொழில்துறை நாடுகளுக்குக் கச்சாப் பொருட்களை, ஐம்பதாண்டுகளுக்கு முன் ஏற்றுமதி செய்த சோவியத் யூனியன் இன்றும் அதைக் கடைப்பிடிக்கிறது. அது இன்றும் தொழில்துறை நாடுகளுக்கு இணையான தொழில்நுட்பத் திறனை வளர்த்துக் கொள்ளாது பெருமளவில் தொழில்நுட்ப அறிவையும் கருவிகளையும் இறக்குமதி செய்து வருகிறது.

சோவியத் யூனியனில் ஏற்பட்ட இந்த நிலைக்கு வெளிநாட்டு வணிகம் பற்றி ஒரு குறிப்பிட்ட 'கண்ணோட்டம்' கொண்டிருந்தது மட்டும் காரணமாக இல்லை எனினும் இக்கண்ணோட்டம் முழுமையின் ஒரு பகுதியாகவும், ஒரு அரசியல் பாதையின் காரணமாகவும் இருந்ததைக் காண வேண்டும். சீனத்தில் இன்று வெற்றி பெற்று வருவதும் அடிப்படையில் இதே அரசியல் பாதையே. இது ஒரு திருத்தல் வாதப் பாதையை – அதாவது 1930களில் சோவியத் யூனியனில் பின்பற்றப்பட்ட குறிப்பிட்ட சில தன்மைகளைக் கொண்ட பாதையே –

'சாதாரண வெளிநாட்டு வணிகம்' என்ற கருத்தாக்கம் தனித்த ஒன்றல்ல. சீனத்தில் அரசு ஆவணங்கள் மிகுதியாக இதைப் பயன்படுத்துகின்றன: இவை மார்க்சியத்துக்கு மிகவும் அந்நியமானவை.

கல்விச் சீர்திருத்தத்தை அழித்தல்

பண்பாட்டுப் புரட்சிக்கெதிராக நடைபெறும் அழிவுவேலைகளின் வெளிப்படையான தோற்றங்களை நாம் இப்போது காணலாம். இவற்றில் முக்கியமான ஒன்று கல்விமுறை 'கல்விப் புரட்சியில் நாம் உண்மையில் ஒரு சீரிய பணியைச் செய்ய வேண்டும்' என்று தேசிய அறிவியல் மாநாடு நடத்தப்படுவது குறித்துச் சுற்றறிக்கை அனுப்பும் போது சீனப்பொதுவுடைமைக் கட்சியின் மையக்குழு 1977 செப்டம்பர் 18இல் கூறியது. ஆயின் பண்பாட்டுப் புரட்சி

முடிவுக்குக் கொணரப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டதால், கல்வியில் எதிர்ப்புரட்சியை நடத்துவதற்கான முனைப்பாகவே இதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது 1966லிருந்து அடைந்த பெரும்பாலான மாற்றங்களை விலக்குதல் என்பதே பொருள். அண்மைக்கால முடிவுகளும் ஆவணங்களும் இதைப் புலப்படுத்துவதோடு இங்கும் ஒரு பின்னோக்கிய பாய்ச்சலைத் தெளிவாக்கும்.

கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்ட முறை வாழ்நிலையில் மேல்நிலைப் பிரிவினருக்குச் சாதகமாக அமைந்தது. தேர்வுகள் புத்தகப் புழுக்களுக்கு வாய்ப்பாக அமைந்தன. 1977, அக்டோபர் 21 ஜென் மின் ஜி பாவோ இதழ், நடைமுறை அனுபவமுள்ள உடலுழைப்பாளர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனக் குறிப்பிட்டாலும் 'அறிவு நிலையில் மேம்பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுக்க' அழுத்தம் தந்தது. இது பண்பாட்டுப் புரட்சிக்கு முந்தைய அமைப்பு முறைக்கே செல்லும் முயற்சி. 1977 அக்டோபரில் 20லிருந்து 30 விழுக்காடு வரை 'சிறந்த' மாணவர்களே தேர்வு செய்யப்பட்டனர். எனக்குக் கிட்டிய செய்திகளின் படியும் எதிர்பார்த்தவாறும் இவர்களில் பெரும்பாலானவர்கள் கட்சி அணியினரின் குழந்தைகளே. அதாவது தேர்வுக்காக இவர்கள் தனிப்பட்ட முறையில் தயார் செய்யப்பட்டவர்கள். செல்வாக்கும், பணமும் உடையவர்கள், அனைத்துக்கும் மேலாகக் கட்சியினரின் குழந்தைகளும் நுழைக்கப்பட்டனர். பண்பாட்டுப் புரட்சிக்கு முந்தைய நிலை பற்றிப் பெரும் புகழ்மாலை சூட்டிய 1977 செப்டம்பர் 18 சுற்றறிக்கை, சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தற்போதைய தலைமை அத்தகைய நிலைக்கே செல்ல விரும்புகிறது என்பதைத் தெளிவாக்கியது.

மேலும், பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் மிக விமர்சிக்கப்பட்ட 'கல்வி நிலையங்களில் இரட்டை வலைப் பின்னல்' முறை மறுசீர் செய்யப்பட்டதும் மிக முக்கியமானதாகும். 1977 அக்டோபர் 26இல் ஜென் மின் ஜி பாவே, கல்லூரிகளில் சிறு பிரிவினரே சேர்த்துக்

கொள்ளப்படுவர். பெரும்பாலான இளைஞர்கள் தேர்வுகளில் தோல்வியுறுகின்றனர். அவர்கள் மிக்க கவனத்துடன் கற்று அறிவியல் மற்றும் பண்பாட்டு அறிவைப் பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் இரண்டாவது முறையும் தேர்வெழுத அனுமதிக்கப்படுவர், இல்லையெனில் சூலை 21 தொழிலாளர் கல்லூரிகளிலும் மற்றும் பகுதி நேரப் பல்கலைக்கழகங்களிலுமே சேர்க்கப்படுவர் எனக் குறிப்பிட்டது. அதனால் 'சிறந்த' மாணவர்கள் மேனிலைக் கல்வி பெறவும் ஏனையோர் உடலுழைப்புத் தொழிலாளர்களாக மாறுவதுமான நிலை ஏற்படுகிறது.

பண்பாட்டுப் புரட்சிக்காலத்தில் கல்வித்துறையில் நடந்த அனைத்தையும் 'முழுவதும் சரி' யெனவோ, அதைத் தீர்க்கமாக ஆய்வு செய்ய வேண்டியதில்லை எனவோ நான் வாதிடவில்லை. மாறாக, அண்மையில் சீனத்திலிருந்து திரும்பிய சில மாணவர்களும், ஆசிரியர்களும் கூறியது போல், சில சீர்திருத்தங்கள் தேவையாகவே இருக்கலாம். ஆனால், பண்பாட்டுப் புரட்சிக்கு முந்தைய நிலைக்கு மீண்டும் செல்வதால் அதில் முன்னேற்றம் காண முடியாது என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. மாறாக, பண்பாட்டுப் புரட்சிக்காலத்தில் கல்வித்துறையிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களின் படிப்பினைகளைப் பொதுமக்கள் ஆய்வுக்குட் படுத்தியிருக்க வேண்டும். இதற்குப் பெரும் விவாதம் தேவை. ஆயின், 'கல்விப் புரட்சியில் ஒரு சீரிய பணியைச் செய்ய வேண்டும்' என்று 1965ஆம் ஆண்டு நிலைக்கே மாறிச் செல்லும் போது இதைச் செய்யவில்லை.

இந்த நிலை 'நான்கு நவீனமயமாக்கலு'க்காகத் தற்போது நடைபெறும் அவசரக் கோலத்தின் போக்கால் ஏற்பட்டதாகும். அனைத்துக்கும் மேலாகக் கல்வித் துறையினரின் அதிகாரத்தையும், அறிவாளர் கட்சியினரின் அதிகாரத்தையும் மீண்டும் நிலைநாட்டலே இதன் நோக்கம். மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் வளர்ந்து வரும் எண்ணமான கணிதத் துறைக்கு மிகுதியான அழுத்தம் சீனத்திலும் வலியுறுத்தப்படுகிறது. 'ஒரு நாட்டின்

தொழில்மயமாக்கல் அந்நாட்டுக் கணித அறிவு வளர்ச்சியை நேரிடையாகச் சார்ந்துள்ளது' என வுவென் சியு 1977 ஆகஸ்ட் 11இல் எழுதினார். இது கணித அறிவு 'கொண்டோரை' 'மதிப்பு' உடையராக்கும் செயல்முறை. இது அறிவாளர் பங்கை மிகைப்படுத்திக் கூறும் கருத்தாக்கத்தின் போக்கு.

தொழிலாளர் ஒழுங்குமுறை, தொழில் விதிமுறைகள், தொழிற்சாலைகளில் புரட்சிகரக் குழுக்கள், ஊதிய வேறுபாடுகள், வேளாண்துறை உற்பத்தி அமைப்பு முறை, வேளாண்மையை இயந்திரமயமாக்கலுக்கு மிகைப்பட்ட அழுத்தம், கல்வியின் சீர்திருத்தம் என்ற பல்வகைப் பிரிவுகளும் பற்றிய அனைத்துப் புதிய போக்குகளும் பண்பாட்டுப்புரட்சியின் கொடையான 'சோசலிச ஆக்கங்களை' மறுக்கும் செயலேயாகும். அதாவது அப்புரட்சியின் வெற்றிகளை மறுப்பதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பின்பாதியில் நடந்த மிக முக்கியமான புரட்சிகர இயக்கமான பண்பாட்டுப் புரட்சியின் போக்கில் ஏற்பட்டிருக்கக் கூடிய தவறுகளைச் சீர்செய்யும் ஓர் இயக்கத்தை நாம் இப்போது காணவில்லை. மாறாக, நாம் காண்பது, புரட்சிகர இயக்கத்தைக் கோட்பாட்டு, நடைமுறை வழியில் முடிவுக்குக் கொண்டு வரும் ஒரு முயற்சியே.

பண்பாட்டுப் புரட்சியைக் 'கோட்பாட்டு' வழியில் அழித்தொழிக்கும் முயற்சி

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமை, கோட்பாட்டு வழியில் பண்பாட்டு புரட்சியின் மீது நேரடித் தாக்குதலைத் தொடுக்க அஞ்சுகிறது. ஏனெனில் அது மாவோ வழிமுறையை வெளிப்படையாகத் தாக்குவதாக அமையும். இவ்வழிமுறைக்கு உண்மையுள்ளவர்களாகக் காட்டிக்கொள்வது தங்களை 'நியாயமானவர்'களாகப் பறை சாற்றவே, தற்போதைய தலைமையின் 'மறைந்திருந்து தாக்கும்' முயற்சிகள், கோட்பாட்டு வழியிலான 'அழித்தொழிப்பு' வேலைகளே. இத்தாக்குதல்களின் பல்வேறு வடிவங்களில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் நடைமுறை மற்றும் கோட்பாட்டிலும், பண்பாட்டுப் புரட்சியின் போதும் இருந்த 'எல்லைக் கோட்டைப் பிரிக்கும் வழிமுறை'யை மறுத்தது ஒரு மிக முக்கியமான அம்சம். எல்லைப் பாகுபாடு செய்யும் வழிமுறையை மாவோ அடிப்படையானதாகக் கருதினார். இரு நோக்கங்களுக்காகவும் வாழ்வை ஈடுபடுத்தியதாக மாவோ இறுதிக்காலத்தில் கூறினார். "ஒருபுறம் சீனத்திலிருந்து ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி சியாங்கே சேக்கை அகற்றுதலும் மறுபுறம் மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லுதலும்' எனக் குறிப்பிட்ட மாவோ, பண்பாட்டுப் புரட்சியையும் நாட்டு விடுதலையையும் ஒரு சேரவே கருதியதை அறிய முடியும்.

இன்றைய தலைமை பண்பாட்டுப் புரட்சியில் விளைந்த எல்லைப் பாகுபாட்டு வழிமுறையை அழித்தொழிக்க முனைகிறது. 1966க்கும் 1976க்கும் இடையில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட வலதுசாரிகளை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தியதன் மூலம் நடைமுறையில் மட்டுமின்றி 'கோட்பாட்டு' வழியிலும் அதைச் செய்கிறது. பண்பாட்டுப் புரட்சியின் போது விளைந்த 'சோசலிச ஆக்கங்களைப்' பற்றி பேசுவதை நிறுத்திக் கொள்கிறது. 1949க்கும் 1965க்கும் இடையில் நிகழ்ந்த சாதனைகளையிம் 1966லிருந்து 1976 வரை ஏற்பட்ட சாதனைகளையும் 'ஒரே தரத்தில்' காண்பதோடு, முதலில் குறிப்பிட்ட காலத்திலிருந்த கண்ணோட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் முன்னுரிமை தருகிறது. இது 1966 முதல் சோசலிசப் பயணத்திற்குத் தடைக் கற்களாக இருந்த சக்திகளைப் பற்றிய அரசியல் வழிமுறையையும், 1966க்குப் பின் ஒரு புதிய குண அளவு மாற்றத்திற்கும், புரட்சியில் ஒரு புதிய நிலையை அடையவும் காரணமாக இருந்த புரட்சிகரப் போக்குகள் பற்றிய அரசியல் வழிமுறையையும் மறுக்கிறது.

1949இலிருந்து 1966 வரை ஏற்பட்ட சாதனைகளை மட்டும் ஒரு தலைச்சார்பாகவே புகழ்வதுமூலம், அடிப்படையான எல்லைப் பாகுபாட்டு வழிமுறையைக் குழி

தோண்டிப் புதைக்கிறது. நால்வரைத் தாக்கி அவர்களைக் குறை கூறுவதன் மூலம் இது மேலும் வளர்க்கப்பட்டது. நால்வரும் புதிய சீனத்தின் முதல் பதினேழு ஆண்டுக்காலம் இருண்டிருந்ததாகவும், பண்பாட்டுப் புரட்சிக்குமுன் சோசலிச ஆக்கங்கள் இல்லை என்றும், அப்போது நடந்தவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் கோரியதாகவும்' நால்வரைப் பற்றிய தாக்குதலில் குறிப்பிட்டது. மேலும் பீகிங் வானொலி 1977 ஏப்ரல் 8ல் குறிப்பிட்டது: "மக்கள் சீனம் தோற்றுவிக்கப்பட்ட பதினேழு ஆண்டுகளில் லியு சாவ் சியால் திருத்தல்வாத இடையீடுகளும், அழிவுகளும் இருப்பினும், தலைவர் மாவோவின் புரட்சிகர வழிமுறை தலைமைப் பங்காற்றியது" என்ற கூற்று நால்வர் மீதான தாக்குதல் மட்டுமல்ல; 1949-65ஆம் ஆண்டுகளில் இருந்த திருத்தல்வாத வழிமுறையின் "இடையீட்டை"க் குறைத்து மதிப்பிடுதலுமாகும். இன்றைய தலைமைக்கு இது முக்கியத் தேவையாக இருப்பதன் காரணம், அது தானும் திருத்தல்வாத வழிமுறையில் செல்லுவதே.

எடுத்துக்காட்டாக, பண்பாட்டுப் புரட்சியின் போது ஒவ்வொரு தொழிலகத்திலும் வர்க்கப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததோடு, குறிப்பிட்ட வர்க்க முரண்பாடுகளுக்கு இடையில்தான் உற்பத்தியும் நடைபெற்றது. "ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு தேசியத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி என்பதே முதன்மையான குறிக்கோள்" என தாச்சிங் கட்சிக் குழுச் செயலாளர் கூறுவது எல்லா முதலாளிகளும் வழங்கும் அறிவுரையே.

இதே பொருளை வேறு வடிவத்தில் சீன இதழ்கள் 1977 நவம்பரில் எழுதின, வர்க்கப் போராட்டத்திலிருந்து உற்பத்திக்கான போராட்டம் வேறுபட்டதென ஒரு இயந்திரமுறையிலான பாகுபாட்டைச் செய்து இரண்டுக்குமிடையே உள்ள தொடர்பை மறுத்தது. புரட்சி என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டமே; மனிதருக்கு இடையே உள்ள சமுதாய உறவுகளை மாற்றுவது அதன் நோக்கம். உற்பத்தி என்பது

மனிதன் இயற்கையை எதிர்த்து நடத்தும் போராட்டம். உற்பத்திக்கான விதிமுறைகள் வர்க்கப்போராட்ட விதிமுறைகளிலிருந்து மாறுபட்டவை' என 1977, நவம்பர் 27 பீகிங் வானொலி ஆவண ஒலிபரப்பில் கூறியது. எப்போதும் 'இயற்கைக்கு எதிரான போராட்டம்', குறிப்பிட்ட சமுதாய நிலைமைகளின் அடிப்படையிலும்; குறிப்பிட்ட வர்க்க உறவுகளினுள்ளும், அது முன்னெடுத்துச் செல்லப்படும் போது வர்க்க விளைவுகளை உள்ளடக்கியும் இருக்கும் என்ற உண்மை பற்றி அது ஏதும் குறிப்பிடவில்லை. இவை அனைத்தையும் மார்க்சு நீண்ட காலத்திற்கு முன்பே விளக்கியுள்ளார்; இதிலிருந்து பண்பாட்டுப் புரட்சி அரசியல் முடிவுகளையும் பெற்றுள்ளது. மக்களை இதை மறக்கச் செய்து மிகவும் கொச்சைத் தன்மையுடைய 'பொருளாதாரவாதத்தை' நடைமுறைப்படுத்த இன்று தலைவர்கள் முயலுகின்றனர்.

உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும், மேலடுக்கிலும் மாற்றங்களை ஏற்படுத்துதல் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதாவது 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்தப் பொருளியல் அடிப்படையை வலுவாக்க"க் கோரினர். 'உற்பத்திச்சக்திகளின் வளர்ச்சிக்கு முதன்மையான பங்கை' வலியுறுத்தும் கருத்து பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் கடுமையாகக் குறை கூறப்பட்டது. சோவியத் அரசு முதலாளிய வர்க்கத்திற்குத் தன் அதிகாரத்தை விரிவாக்கவும், வலுப்படுத்தவும் இதுவே சித்தாந்தக் கருவியாகப் பயன்பட்டது.

பத்துப் பெரும் உறவுகளைப் பற்றி 'விவாதித்தல் என்ற போர்வையில் நடைபெற்ற பதினாறு மாநாடுகளிலும் இக்கோட்பாடே ஆதிக்கம் செலுத்தியது. உற்பத்திச் சக்திகளில் புரட்சிகர மாறுதலை ஏற்படுத்த வேண்டிய தேவை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இம்மாற்றமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இடைவிடாத புரட்சியின் அடிப்படை நோக்கமானது. வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு உற்பத்திச் சக்திகளுக்கே முதன்மை தரும் பொருளாதார வாதம் வளர்கிறது. "உற்பத்திச்

சக்திகளே உற்பத்தி உறவுகளை நிர்ணயிக்கின்றன" என்று நவசீன செய்தி நிறுவனம் 1977 செப்டம்பர் 21இல் எழுதுவது 1956இல் நடந்த எட்டாவது கட்சிப் பேரவையில் லியு சாவ்சி வலியுறுத்திய கருத்துக்களே.

"சோசலிச அமைப்பு முறை" நிலவுகிறது என்ற கொள்கையை நோக்கி மீண்டும்

பொருளாதார வாதத்திற்கும், உற்பத்தி வாதத்திற்கும் ஒரு சித்தாந்த 'அடிப்படை'யைக் கொடுக்கவும், உற்பத்தி உறவுகளில் புரட்சிகர மாறுதலை எதிர்க்கவும் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் புதிய தலைமை, பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் விமர்சிக்கப்பட்ட பழைய கருத்துக்களில் அடைக்கலம் தேடுகிறது. அவற்றில் ஒன்று 'சோசலிச அமைப்பு முறை' என்ற கண்ணோட்டம். இது 'சோசலிசத்திற்கான மாற்றம்' குறித்த கண்ணோட்டத்தை விலக்குகிறது. ஸ்டாலின் கால சோவியத் திருத்தல்வாதம் முன்வைத்த 'சோசலிச உற்பத்தி முறை' என்ற கொள்கையை ஒத்ததே இதுவும்.

'பத்துப் பெரும் உறவுகளைப் பற்றி' விவாதித்த பதினாறு மாநாடுகளும், 1956இல், "நிறுவப்பட்ட"தாகக் கூறப்படும் "சோசலிச அமைப்பு" முறையை வலிவுடையதாக்க உற்பத்திச் சக்திகளை வளர்க்க வேண்டும் என்று கூறின. 'சோசலிச அமைப்பு' என்ற கண்ணோட்டத்தை 'சோசலிசப் பொறுப்பிலிருத்தல்' என்ற கண்ணோட்டமாகக் கண்டனர். அதை 'அரசின் பொறுப்பிலி'ருப்பதாகக் கருதி, முரண்பாடுகள் இருப்பதையே காண மறந்தனர். 'பத்துப் பெரும் உறவுகளைப் பற்றி' என்ற நூலாக்கத்திற்கு இம்முரண்பாடுகளே முதன்மையான ஒரு பங்கினை ஆற்றுகின்றன. முரண்பாடுகள் இருப்பதாக அறிந்தால் முரண்பாடுகளை விட ஒற்றுமைக்கு முதலிடம் தரப்பட்டது.

தொழிற்சாலைகள் அரசின் பொறுப்பிலிருப்பதால் தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவு ஓரளவு அரசுக்கும் தொழிலாளர்க்கும்

இடையிலான உறவு' என்பது ஏழாவது மாநாட்டு முடிவு. இது, 'தொழிலாளர்களின் அரசு' என்பதால் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்கள் தொழிலாளர்களே என்ற பொய்ம்மைக்கே இட்டுச் செல்லும். இம்முறையில், சோசலிசத்திற்கான மாற்றத்தில் உள்ள முரண்பாடுகள் மறுக்கப்படுகின்றன. அதாவது தொழிலாளர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். ஏனெனில் அவர்கள் தமக்கே கட்டளைகளை இட்டுக் கொள்கின்றனர். ஒரு அரசு முதலாளி வர்க்க நலனைக் காக்கக் கூறப்படும் விந்தையான இயங்கியல் விளக்கம்! 'எழுச்சி இயக்கங் களிலும் இக்கருத்துக்கள் பறை சாற்றப்பட்டன. முதலாளிய வர்க்கம் இருப்பதைக் காணாததால் கட்சியிலும், தொழிலகங்களிலும் அவ்வர்க்கத்தைக் காண மறந்தனர். பண்பாட்டுப் புரட்சியின் அடிப்படைக் கொள்கைகள் இவ்விதம் கைவிடப்படுகின்றன.

முதலாளிய வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளைக் காண மறுக்கும் திருத்தல்வாத நிலைபாடே. அங் சி யில் சி சென்னை இவ்விதம் எழுதச் செய்கிறது. சோசலிசத் தொழிலகங்களில் உழைக்கும் வர்க்கமே எஜமானன், தொழிற் பிரிவினை காரணமாக உடலுழைப்பு, மூளையுழைப்புச் செய்வோர்க்கிடையில் காணப்படும் முரண்பாடுகள் மக்களுக் கிடையே உள்ள முரண்பாடுகளே' இவ்வாறு வர்க்கப் போராட்டம் மறுக்கப்பட்டு, மூளையுழைப்புக்கும், உடலுழைப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை அகற்ற நடத்தப்பட வேண்டிய முதன்மையான போராட்டத்தின் முக்கியத்துவமும் மறுக்கப் படுகிறது.

பண்பாட்டுப் புரட்சியின் பத்தாண்டு காலப் படிப்பினைகளை மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட மாட்டார்கள். எனவே 1975ல் சாங்சன்சியாவோ எழுதிய 'முதலாளியவர்க்கத்தின் மீது முழுமையான சர்வாதிகாரம்' என்ற கட்டுரையில் காணப்படும் கருத்துக்களுக்கு மறுப்பு அங் சி (1977 எண் 5)யில் வெளியாகிறது. சாங் முதன்மையாகக் குறிப்பிடுவது உற்பத்தி உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் தேவை என்பதே. பண்பாட்டுப்

புரட்சியின் மையமான இக்கருத்தையே லின் சின் சான் மறுத்து, சோசலிச மாறுதலில் 'அடிப்படை' நிறைவேறி விட்டதால், வர்க்கப் போராட்டம் சித்தாந்த அரசியல் துறைகளில் மட்டுமே நடைபெற வேண்டும் என எழுதுகிறார். தொழிலாளர்கள் தாமே உணர்ந்து உழைப்புச் செயல்முறை, உற்பத்தி, உற்பத்தி உறவுகள் ஆகிய மாற்றத்திற்காகப் போராடுவது என்ற மையக் கருத்து புறக்கணிக்கப்பட்டது.

இங்ஙனம் வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவது என்பது மார்க்சியத்தை அதன் எதிர்மறையாக்கும் செயலே, தொழிலாளர்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் போது "உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியோடு ஒவ்வாதவை" என்றும் 'இன்னும் தொழிலாளர்கள் முதலாளிய–குட்டி முதலாளியக் கருத்துக்களின் பிடியில் சிக்கியுள்ளனர்' எனவும் கூறி, அரசு முதலாளிய வர்க்கம் தாக்குதல் தொடுக்க இது உதவுகிறது.

லின் சின் சானின் கட்டுரை பொருளாதாரவாதத் தன்மையை முன்வைத்தே தொடருகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்பது 'சக்திவாய்ந்த பொருளியல் அடிப்படை'யை உருவாக்குவதே என்று முடிவு செய்கிறார். பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளிய வர்க்கத்திற்கும் இடையிலான போராட்டத்தை நீக்கி, வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்பவாதிகளின் தலைமையில் நடைபெறும் உற்பத்திக்கான போராட்டத்தை வலியுறுத்துவது இன்னும் அழித்தொழிக்கப்படாத முதலாளியத் தொழிற்பிரிவினையும், முதலாளிய உற்பத்தி உறவுகளையும் வலுவாக்கவே செய்யும்.

சீனத் தொழிலாளர்களும், கட்சி அணியினரும் இந்தத் திருத்தல்வாத பொருளாதாரவாதக் கண்ணோட்டங்களில் ஏமாந்தவர்களாகத் தெரியவில்லை. எனவே 1975இல் சாங் சன் சியாவோ எழுதிய கட்டுரைக்கு வாங் உதெ 'பீகிங் ரிவ்யூ' (1978 எண் 1)வில் மறுப்பு எழுதுகிறார். பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் தலைமை, உண்மையான மார்க்சியர்களிடமோ, தொழிலாளி மக்கள் திரள்களிடமோ இல்லை என மாவோ 1969இல் கூறியதை 1975இலும் சாங் திரும்பக் கூறுவதாக வாங் உதெ குற்றம் சாட்டுகிறார்.

அதாவது, பண்பாட்டுப் புரட்சியின் பயனாக 'ஒரு சில தொழிற்சாலைகள் மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் கையில் இல்லை' எனவும் உழைக்கும் வர்க்கமே அதிகாரத்தில் இருப்பதால் சோசலிச உடைமைப் பிரச்சினை 'தீர்க்கப்பட்டு' விட்டதாகவும் கூறுகிறார். பண்பாட்டுப் புரட்சியின் பயனாக, அரசுத் தொழிலகங்களில் நிர்வாக அதிகாரிகள் பற்றிய சிக்கல், சோசலிசத்திற்குச் சாதகமாக முடிவு செய்யப்பட்டுவிட்டது எனத் திட்டவட்டமாக வாங் கூறுகிறார். இந்தத் 'திட்டவட்டம்' எப்போது நிகழ்ந்தது? 1969க்கும் 1975க்கும் இடையிலா? பண்பாட்டுப் புரட்சி வெளியேற்றிய வலதுசாரிகள் ஒட்டுமொத்தமாக மீண்டும் அமர்த்தப்பட்ட காலமான 1976க்கும் 1978க்கும் இடையிலா? இன்றைய நிலைமை 1969க்கு முன்னிருந்த நிலைமையைவிட மிக மோசமாக உள்ளது என்பது உண்மையல்லவா?

சோசலிச உடைமைச் சிக்கல் என்பது அரசு அதிகாரத்தின் வர்க்கத்தன்மை பற்றிய சிக்கலே. இச்சிக்கலைப் பற்றி சாங் சான் சியாவோ இயங்கியல் முறையில் எழுதினார். அதிகாரத்தின் வர்க்கத் தன்மை ஒரே சமயத்தில் முடிவு செய்யப் படுவதில்லை. மாறாக, பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளிய வர்க்கத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டமும், கட்சிக்குள் தொடர்ந்து நடைபெறும் போராட்டமும் இதைத் தீர்மானிக்கின்றன. இப்போராட்டம் தொடரும் நிலையில் தான் அதிகாரம் அரசு முதலாளிய வர்க்கத்தின் கைகளில் அகப்படாமலிருக்கும். இப் பிரச்சினைகள் பற்றி வாங் விவாதிக்காமல், 'சீனம் ஒரு சோசலிச நாடு; அது நிலவுடைமை, முதலாளிய, தனியார் சிறு உடைமை உற்பத்தி முறைகளைக் கடந்த 'சோசலிசப் பொது உரிமை முறைக்கு மாறிவிட்டது' என வாதாடுகிறார். 'நாம் கட்சி மற்றும் அரசின் உயரிய தலைமை, முதலாளியச் சதிகாரத்தின் கைகளில் சிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்றும், நமது அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு' என்றும் கூறுகிறார். 1976 அக்டோபருக்குப் பின்னும், குவா குவோ பெங் மற்றும் டெங்க் சியோ பிங்கின் தலைமையிலான

குழு அதிகாரத்திற்கு வந்த பின்னும் அரசின் வர்க்கத் தன்மையில் மாறுதல் இல்லையா?

சொத்து உறவுகளின் தன்மை ; சொத்தைச் சொந்தமாக்கும் வழிமுறைகள் ஆகிய பிரச்சனைகளை பருண்மையான ஆய்வுகள் மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என சாங் கருதினார். ஆனால், இன்றைய தலைமைக்குச் சேவை செய்யும் சித்தாந்திகள் அரசு அமைப்பு 'சோசலிச'மாக உள்ளதாகவும், தொழிலாளிகள் 'கட்டளைகளுக்குக் கீழ்படிந்தும்', 'கடுமையாக உழைத்தும் இச்சோசலிச அமைப்பை வலுப்படுத்த வேண்டும்' என்றும் அறிவுரை வழங்குகின்றனர், இக்கொள்கை பண்பாட்டுப் புரட்சியின் படிப்பினைகளை மறுப்பதோடு, அரசு முதலாளிய வர்க்க நலனுக்குச் சேவை செய்கிறது.

வேளாண்மைக்கும், தொழிலுக்கும் இடையிலான உறவுகளும், கனரகத் தொழிலுக்கும் சாதாரணத் தொழிலுக்கும் இடையிலான உறவுகளும்

மார்க்சியத்தைக் கேலிக்குரியதாக்கும் அடுத்த செயல் வேளாண்மைக்கும், தொழிலுக்கும் இடையிலான உறவுகளையும், கனரகத் தொழிலுக்கும் சாதாரணத் தொழிலுக்கும் இடையிலான உறவுகளையும் செயல்படுத்திய விதம், மாவோவின் அரசியல் வழிமுறையை 'விசுவாசமாக'ப் பின்பற்றுவதாக இன்றைய சீனப் பொதுவுடைமைக் கட்சித் தலைமை கூறினாலும் நடைமுறையில் அது முரணாக இருக்கிறது. மாவோவின் தலைமையிலிருந்த சீனப் பொதுவுடைமைக் கட்சி, வேளாண்மை, சாதாரணத் தொழில், கனரகத் தொழில் என்ற வரிசை முறையில் முன்னுரிமை தந்தன. இன்றைய தலைமை இதே அடிப்படையில் முன்னுரிமை தருவதாகக் கூறினும் 'உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை தரும் புறநிலைப் பொருளாதார விதி'க்கு மிக அழுத்தம் தந்தது. இது முதலாளிய வளர்ச்சி விதியே. அதாவது, வேளாண்மை வளர்ச்சி என்பது, அது மூலதனக் குவிப்புக்கு அளிக்கும் கொடை என்ற நோக்கிலேயே காணப்பட்டது. திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்ட இக்கருத்துக்கள் சோவியத் தொழில் மயமாக்கல் வழி

முறையை ஒட்டியவையே. வேளாண்மையைப் பலியிட்டு கனரகத் தொழிலுக்கு முதன்மை தரும் இவ்வழிமுறை புகழப்பட்டது. வேளாண்மை பொருள்களுக்கும் தொழில்துறைப் பொருள்களுக்கும் இடையிலான சமநிலைப் பரிமாற்றும் அடியோடு ஒதுக்கப்பட்டது.

இந்தப் பொருளாதாரவாத, உற்பத்திவாதக் கண்ணோட்டம், பண்பாட்டுப் புரட்சிக்குமுன் நிலவிய கண்ணோட்டத்தையும், 1956இல் இருந்த கண்ணோட்டத்தையும் எதிரொளிப்பதாக இருந்தது.

வளர்ச்சி "வேகம்"

அறிவாளர்கள், கட்சி அணியினர். வல்லுநர்கள் அதாவது அரசு முதலாளிய வர்க்கத்தினரின் அதிகாரம் வலுவடைந்ததால்தான் வர்க்க உறவுகளில் பின்சரிவு ஏற்பட்டது. இவர் தம் அதிகாரம், வளர்ச்சி 'வேகத்'துக்கு மிகுதியான முக்கியத்துவம் கொடுக்கக் காரணமானது. பண்பாட்டுப் புரட்சிக்குப் பின் இதற்கு முக்கிய அழுத்தம் தரப்பட்டதால் 1978 புத்தாண்டு நாளன்று சீனத்தின் பல்வேறு ஏடுகளும் தலையங்கங்களில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரிக்குமாறு எழுதின. 'பண்பாட்டு மற்றும் உள்நாட்டு வர்க்கப் போராட்டங்களின் வளர்ச்சியே பொருளாதாரக் கட்டமைவை விரைவுபடுத்தக் காரணம்' எனவும் எழுதின. வளர்ச்சி வேகத்திற்கு வர்க்கப் போராட்டமே காரணம் எனக் கூறினாலும் உண்மையில் வர்க்கப் போராட்டங்களுக்குப் பதிலாக உற்பத்திக்கான போராட்டங்களைத் திணிக்கும் முயற்சியே இது, அதாவது உற்பத்தி வீதத்தின் 'தேவை'களுக்குத் தொழிலாளர்களைப் பணிய வைத்து, அவர்கள் மீது அதிக வேலையைத் திணித்து, கட்டுப்பாட்டை விதிப்பதே நோக்கமாகும்.

வளர்ச்சி 'வேகத்'திற்கு அழுத்தம் தருவது, வர்க்க உறவுகளில் இரு அம்சங்களையுடையது. ஒன்று அறிவாளர்கள், கட்சி அணியினர், வல்லுநர்களின் அதிகாரத்தை வலுப்படுத்துவது. மற்றொன்று, இத்தகைய அதிகார நிலைகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான சாதனம் இது. எனவே, தலையங்கங்கள், அறிவாளர்கள்,

கல்வி, அறிவியலறிவு ஆகியவற்றுக்கு மிகுந்த அழுத்தம் தந்தன. இந்த வளர்ச்சி வேகம் பண்பாட்டுப் புரட்சிக் காலக் கல்விச் சீர்திருத்தங்களைத் தாக்கவும் வழி வகுத்தது.

இவ் வளர்ச்சி வேகம், உற்பத்தி உறவுகளைப் புரட்சிகரமாக்குவது பற்றிக் கூறாமல் 'அறிவியல்' மற்றும் 'வல்லுநர்களு'க்கே அழுத்தம் தந்தது, முதலாளிய உற்பத்தி ஆதிக்கமுறை மிகுவதைத் தெளிவாக்குகிறது. இது மூலதனக் குவிப்பு விகிதத்தை அதிகரித்து, இலாபத்தின் தேவைகளுக்குத் தொழிலாளர்களை அடிமைப் படுத்தும். இம் முதலாளியப் பாதை பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி மக்கள் திரள்களின் வாழ்விலும், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலும் பெரும்பாதிப்புகளை ஏற்படுத்தும்.

வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கக் கோரிய அறைகூவலைப் போன்றே, 1930களில் ஸ்டாலின் உற்பத்திவாத முழக்கங்களை முன்வைக்கிறார். 'உணர்வெழுச்சி'யே அனைத்தையும் தீர்மானிக்கிறது' என்று அம்முழக்கமே 1932-33 மற்றும் 1936-37களில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி அரசியல் கொந்தளிப்புகளை உருவாக்குகின்றது. இது 1938க்குப்பின் கட்சி உறுப்பினர்கள் தேர்வில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துகிறது, கட்சியில் பெருமளவு அறிவாளர்கள், தொழிலறிவுடையவர்கள் மற்றும் வல்லுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இன்றைய தலைமை 'சோசலிச அமைப்பை' நிலைநாட்ட 'முதலாளிய வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் அதிக வளர்ச்சி வீதம் தேவை' என்ற உற்பத்திவாத வழிமுறையை நியாயப்படுத்துகிறது. அத்துடன் நால்வர் செயல்களின் விளைவாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தொடர்ந்த தேக்கத்திற்கும், பின்னிறக்கத்திற்கும் முடிவு கட்டவும் இது அவசியம் என்றனர். இந்த வாதம் ஒரு பச்சைப்பொய். நாட்டின் பொருளாதாரத்தில் தொடர்ந்த தேக்கமோ. பின்னறிக்கமோ இருக்கவே இல்லை. பண்பாட்டுப் புரட்சிக்கு முந்தைய ஆண்டான 1965இல் இருந்து அண்மைக் காலம் வரை பொருளாதாரத் தேக்கம் ஏற்படவில்லை. மின்சக்தி உற்பத்தி 1974இல் 42இல் இருந்து

108 பில்லியன் கிலோ வாட் ஆகவும், எஃகு உற்பத்தி 12.5 இல் இருந்து 32.8 மில்லியன் டன்னாகவும் நிலக்கிரி 220 இல் இருந்து 389 மில்லியன் டன்னாகவும் 1975இல் எண்ணெய் 10.8இல் இருந்து 75 முதல் 80 மில்லியன் டன்னாகவும் உயர்ந்தது, தொடர்ந்த தேக்கம், பின்னிறக்கம் என்பது உண்மைக்கு நேர்மாறானது. இங்ஙனம் கூறுவது பண்பாட்டுப் புரட்சியை வசை பாடவே. அதேபோல் இயந்திரக் கருவிகள் உற்பத்தியும் மிகுந்தது.

1975–76இல் 'எழுந்த இடர்பாடுகள், முதன்மையாக, புரட்சிகர வழிமுறைக்கு, டெங்க்சியோ பிங்கின் திருத்தல்வாத வழிமுறைக்கும் இடையே எழுந்த கடுமையான போராட்டங்களினால் தோன்றிய அரசியல் இடர்ப்பாடுகளே. 1976இன் பின்பாதியில் டாங்சான் நிலநடுக்கத்தாலும் அவை ஏற்பட்டன. இச்சிக்கல்களுக்கு 'நால்வர் குழுவின் தலையீடு மற்றும் சீர்குலைவுச் செயல்களே' காரணம் என்பது முற்றிலும் உண்மைக்கு மாறானதே. உண்மையில், நால்வர் ஒருபோதும் பொருளாரத்தைக் 'கட்டுப்படுத்த'வே இல்லை. ஏதேனும் 'சீர்குலைவு'கள் நடந்திருக்குமாயின், அதற்கு உற்பத்தியை நிர்வாகித்தவர்களே காரணமாயிருக்க முடியும். இவர்கள் செய்த தவறான செயல்களுக்கு நால்வரைக் குறைகூறலாம்; அல்லது இவர்கள் தொழிலாளர்களை நடத்திய விதத்தின் காரணமாகத் தொழிலாளர்கள் வெறுப்படைந்து வேலை நிறுத்தம் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதை நால்வர் ஆதரித்திருக்கக்கூடும். வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது, அவற்றிற்குப் 'போராடுபவர்'களையே பொறுப்பு எனக் கூறுவது முதலாளிய வழிமுறை எண்ணமே.

மேற்குறித்த இடர்ப்பாடுகள் சில இருந்திருப்பினும் 1979 வரை கிடைத்த விவரங்கள் 'தொடர்ந்த தேக்கமும், பின்னிறக்கமும்' இருந்ததை உறுதிபடுத்தவில்லை. 1965ஐக் காட்டிலும் 1976 இல் நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு உற்பத்தி மிகுந்திருந்தது. தொழிற்துறை உற்பத்தியும் கூடியது. 1976 நிகழ்ச்சிகளால் சில பிரிவுகளில் தற்காலிகமாக உற்பத்தி குறைந்திருக்கலாம். ஆயின் தொடர்ந்து தேக்கமும் பின்னிறக்கமும் அதனால் ஏற்படாது.

ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ச்சி வேகம் விரும்பத்தக்கதல்ல என்றோ தேவையில்லை என்றோ நாம் கருதவில்லை, ஆயின் 'பண்பாட்டுப் புரட்சியின் அடிப்படை வழிமுறைகளைக் கைவிடுவதன் மூலமும்' 'வர்க்கப் போராட்டத்தை உற்பத்திக்கான போராட்டமாகக் குறைப்பதன் மூலமும்' வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து காக்க முடியாது. உண்மையில், இக்குறைப்பு உழைக்கும் மக்களை இலாபத்தை அதிகரிக்க முயலும் முதலாளிய வர்க்கத்திற்கு அடிமைப்படுத்தும். உற்பத்தி உறவுகளிலும் சமுதாய உறவுகளிலும் புரட்சி மாற்றத்தைக் கொணரும் உழைப்பாளிகளின் வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவதே இது.

விஞ்ஞானம், தொழில் நுட்பத் துறையின் வர்க்கத்தன்மை மறுப்புச் சித்தாந்தம்

பண்பாட்டுப் புரட்சியை எதிர்த்தவர்கள் தற்போது விஞ்ஞானமும் தொழில் நுணுக்கமும் வர்க்கச் சார்பற்றவை என்று சித்தாந்தம் வகுக்கின்றனர். மேலோங்கிய வர்க்க உறவுகளைச் சார்ந்தே இவை வளர்கின்றன என்பதையும், பல்வேறு பட்ட தொழில்நுணுக்க உத்திகளைப் பயன்படுத்துவது குறிப்பிட்ட வர்க்கச் சார்போடு உறவுடையது என்பதையும் மறுக்கிறார்கள். இவற்றை முதலாளியத்திலிருந்து எடுத்து உருமாற்றியே சோசலிசப் பாதைக்குப் பயன்படுத்தியாக வேண்டும்.

1977 மார்ச்சு 22ல் வெளியான சென்-மின் சி-பாவோ இதழ். தொழில் நிர்வாகத் துறையில், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு முதன்மை தருவதையே மிக முக்கியமான பிரச்னையாகக் கூறியது. வர்க்க உறவுகளுக்கும் மேலாக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைக் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

"பத்துப்பெரும் உறவுகள் பற்றி" நடந்த 15வது மாநாடு பற்றிய அறிக்கை (பீகிங் வானொலி: 1977 பிப். 14) தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை, முதலாளிய

நாடுகளின் மிக முன்னேறிய உத்திகளின் விஞ்ஞானத் தன்மை பற்றிப் பேசியது. பாட்டாளி வர்க்கம் தன் உற்பத்தித் துறைகளை, முதலாளிய முறையில் நிர்வகிப்பதை உலகு தழுவிய விஞ்ஞான வியலாகக் காண்கிறது. பண்பாட்டுப் புரட்சியின் போது செங்காவலர்கள், "பத்து மாபெரும் உறவுகள் பற்றி"ய அறிக்கைகளில் இவ்வாறு – முதலாளிய நிர்வாக முறையின் விஞ்ஞானவியல் பற்றி – குறிப்பிடவில்லை. மாவோவின் கட்டுரையில் இடம்பெறாத – உறுதியான மையப்படுத்தல் – எனற தொடரை – தற்போது அக்கட்டுரையில் சேர்த்திருக்கிறார்கள், அதிகார மையக்குவிப்புக்கு எதிராகப் பரவலாக்குதலுக்கே மாவோ அழுத்தம் தந்தார்.

சூத்திரவாதமும் திருத்தல்வாதமும்

சுருக்கமாகச் சொன்னால், இன்றைய சீனத் திருத்தல்வாதத்தின் சாரம், குறுகிய அனுபவவாத நடைமுறைகளையும் சூத்திரவாதத்தின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்ட சித்தாந்தத்தையும் இணைத்தல் ஆகும்.

சமூக அரசியல் யதார்த்தங்கள் பற்றிய பருண்மையான ஆய்வைத் தொடர்ந்து செய்வதற்கு மாறாக, மார்க்சிய ஆதார இலக்கியங்களிலிருந்தும் மாவோவிடமிருந்தும் அவை எழுந்த சூழலிலிருந்து அவற்றைப் பிரித்தெடுத்து – இன்றைய நடைமுறைக்கும் பொருத்துகிறார்கள். இம்முறையில், பண்பாட்டுப் புரட்சியின் தோற்றத்தை ஒட்டிய மாவோ கருத்துக்களையும், அதற்கு முன்னைய மாவோ கருத்துக்களையும் சமப்படுத்துகிறார்கள். சரியாகச் சொன்னால், பிற்காலத்திய மேற்கோள்களைவிட முன்னைய – பண்பாட்டுப் புரட்சிக்கு முற்பட்ட – மேற்கோள்களுக்கு முதன்மை தருகிறார்கள். கட்சிக்குள் முதலாளியப் பாதையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் பிறந்த செழுமையான கருத்துக்கள் பின்னயவை.

தவிர. 1976 இறுதியிலிருந்து வளர்ந்த வறட்டுச் சூத்திரவாதம், அடிப்படைக் கோட்பாட்டுப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு விட்டதாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. "பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர்வது

பற்றிய முற்றான கோட்பாட்டை மாவோ உருவாக்கினார்' என்று 77, செப்.17. சென்-மின் சி-பாவோ இதழில் வு கியாங் எழுதினார். பழையவற்றுக்கு விரிவுரைகளே போதும்; புதிய ஆய்வு தேவை இல்லை என்றமுறையில், கோட்பாட்டை மலட்டுத்தனமாக்குவது இம்முறை. மாவோவை மாவோவுக்கு எதிராக நிறுத்துவது இம்முறை. லின்பியாவோவும் இதைத்தான் செய்தார்.

இவ்வாறு, எல்லாத் துறைகளிலும் 'பின்னோக்கிய பாய்ச்சல்' நிகழ்ந்துள்ளது. இதை ஒப்புக்கொள்ள மறுக்கும் தற்போதைய தலைவர்கள், சீனக் குடியரசின் முதல் 17 ஆண்டுக்காலச் சாதனைகளையே – ஒரு சார்பாகப் புகழ்ந்துரைக்கிறார்கள். 1966 முதல் தொடங்கிய புரட்சிகரக் காலகட்டம் பற்றிப் பேசுவதில்லை. அல்லது, இக்காலப் புரட்சியை மறுக்கிறார்கள்.

இந்த நிலை எப்படி நேர்ந்தது என்பதை இனி நாம் பார்க்க வேண்டும். இந்தக் கேள்வி இன்றியமையாதது. இதற்கான விடைகள் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான படிப்பினைகள் கொண்டவை.

"புரட்சிகரப் பாதை" என்று கூறுவதன் பொருள் பற்றி:

மாவோவின் இறப்புக்குப் பிறகு 'புரட்சிப் பாதை'யின் தோல்விக்குக் காரணமான அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கு முன், 'புரட்சிப் பாதை'யின் பொருள் பற்றிப் பார்க்கவேண்டும்.

உண்மையில், ஒரு கட்சியின் உயர்மட்டத்திலிருந்து அல்லது அதன் தலைவர் ஒருவரிடமிருந்து தரப்படும் திசை மார்க்கத்தின்படியே, ஒரு குறிப்பிட்ட அரசியல் பாதை நிறைவேறுவது இல்லை. (வர்க்கங்கள் அல்லது சமூகப்படிவுகள், இவற்றிலிருந்து வரும்) சமூக சக்திகளைச் சார்ந்தே, யதார்த்தத்தில் ஒரு அரசியல் பாதை செயல்படுகிறது. தலைமை தரும் இலட்சியத்தின் திசைமார்க்கம் பகுதியளவிலேயே நிறைவேறுகிறது. ஆகவே, கட்சியின் தலைமைப்பீடங்கள் தரும் அரசியல் பாதைக்கும்

நடைமுறையில் வரும் அரசியல் பாதைக்கும், பெரும் இடைவெளி இருக்கிறது. நடைமுறையில் வரும் அரசியல் பாதை, அதற்கு உள்ளடக்கத்தைத் தருவதான சமூக சக்திகளையே அடிப்படையில் சார்ந்திருக்கிறது. இந்தச் சமூகச் சக்திகளின் நலன்கள், ஆர்வங்கள் கருத்தாக்கங்கள் – இவையே நிறைவேறுகின்றன. ஆகவே, ஒரு கட்சியின் நடைமுறை அரசியல் பாதையையும், அதற்கு அதன் தலைவரோ, தலைமைப்பீடங்களோ தரும் திசை மார்க்கத்தையும் நாம் ஒன்றுபடுத்திக் கொள்ளக்கூடாது – தலைவர் அல்லது தலைமைப்பீடத்தின் திசைமார்க்கம், வர்க்கங்களுக்கு இடையிலான உறவின் வலிமையால் தீர்மானிக்கப் படும் வரையறைகள் அல்லது எல்லைகளுக்குள் மட்டுமே செயல்பட முடியும், மாற்றத்தைச் செய்ய முடியும்.

சீனக் குடியரசின் தோற்றம் முதற்கொண்டு, கட்சியாலும் தலைவர் மாவோவாலும் வரையறை செய்யப்பட்ட அரசியல் பாதைதான் செயல்படுத்தப்பட்டது என்று சீனப் பொதுவுடைமைக் கட்சி ஏற்கிறது, இதே பாதை, லியு சாவ்-சி, லின் பியாவோ ஆகியவர்கள் பெரும் அதிகாரம் செலுத்திய காலத்திலும் செயல்படுத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது. எதிரிகளின் பாதை'யின் 'தலையீடுகள்' இருந்த போதிலும் 'அடிப்படைப் பாதை'யே செயல்படுத்தப்பட்டது என்று கூறுகிறார்கள். இவ்வாறு தலைமை தரும் திசைமார்க்கத்திற்கும், நடைமுறைப்படும் பாதைக்கும் இடையில் விலகல்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மறுக்கவும் படுகின்றன. இந்த குழப்பத்திற்குக் காரணம், நடைமுறைப்படும் அரசியல் பாதை– யதார்த்தத்தில் நிலவும் சமூக சக்திகளோடு தொடர்புபடுத்தப்படாமல், சில சிந்தனைக் கட்டுக் கோப்புடன் தொடர்புபடுத்தப்படுவது ஆகும். இது தவிர்க்க இயலாதது என்பதும் உண்மை தான்.

இக்கருத்துக்கள் அனைத்துச் சமூக அமைப்புகளும் பொருந்தக் கூடியவை. சோவியத் பொதுவுடைமைக் கட்சி, இந்த 'விலகல்களை'ச் சந்தித்திருக்கிறது. ஒரு சமயம் இவை, பாதை மீறல்களாக விமர்சனம் செய்யப்பட்டன. 1933-ல் கட்சி நடையில் 'சில குறைபாடு'களாகவும், பிறகு

'எதிரிவர்க்கத்தின் அழிவு வேலை'களாகவும், பிறகு 'இறந்த காலத்தின் எச்சங்'களாகவும் இவை பலவகைகளில் கூறப்பட்டன.

பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் நடைமுறையிலிருந்த அரசியல் பாதை, கட்சியின் தீர்மானங்களிலும் தலைவரின் கருத்துக்களிலும் கண்ட அரசியல் திசை மார்க்கத்தின் செயல்பாடாக மட்டுமே கூறுவது சரியில்லை. இந்த அரசியல் பாதையின் சிக்கலான சமூகத் தன்மையைப் புரிந்து கொள்ள விரிவான, பலவகைப்பட்ட ஆய்வுகள் தேவை. தற்போது இது சாத்தியமில்லை, அக்காலச் சமூக சக்திகள் தான், மாவோ வகுத்த பாதையின் உள்ளடக்கமாக இருந்தன – இதனால் தான், 1966 – 76 காலத்தில் மேலோங்கியிருந்த 'மாவோவின் அரசியல் பாதை' பற்றி - நாம், பேசுகிறோம். இக்கால கட்டத்தில் – அதன் பருண்மை நிலைமைகளில் – இந்த அரசியல் பாதைதான் புரட்சிகரமானதாகவும், மாவோவின் இலட்சியத்திற்கு மிக நெருங்கியதாகவும் – இருந்தது. அதனால் தான் மாவோ இதற்கு ஆதரவு அளித்தார்.

"மாவோவின் அரசியல் பாதை"யின் தோல்விக்கான உடனடி அரசியல் நிலைமைகள்

மாவோ 76 செப்டம்பர் 9ல் இறந்தார். கட்சித் தலைமையிலிருந்த உடைசல் வெளிப்படையாகத் தெரியவில்லை. மாவோ நினைவாக நடந்த சடங்குகளில் எல்லாத் தலைவர்களும் கலந்து கொண்டனர். குவா குவா-பெங்கின் செப். 18 அரசியல் உரை, சோசலிசத்திற்கான மாறுதல் காலத்தின்போது நடைபெறும் வர்க்கப் போராட்டம் பற்றியும், டெங்க் பற்றிய விமர்சனத்தோடும் அமைந்தது. லியு சாவ்-சி, லின் பியாவோ, டெங் ஆகியவர்கள் முதலாளியப் புத்துயிர்ப்புக்காகச் செய்த முயற்சிகளைப் பண்பாட்டுப் புரட்சி தோற்கடித்தது பற்றியும் டெங்க் முதலிய வலதுசாரித் திருத்தல் வாதிகள் பற்றிய விமர்சனத்தை ஆழப்படுத்துவதன் தேவை பற்றியும் இதே உரை குறிப்பிட்டது, செப்.19ல் மாவோவின் தனிப்பட்ட கடிதங்கள் முதலியவற்றைக் கைப்பற்றியிருக்கக்கூடும். செப்.28ல்,

மாவோவின் அறிக்கைகளில் மாற்றங்கள் செய்ததாக நால்வரை, குவா குற்றம் சாட்டிப் பேசினார்.

அக்.6ல் குவா குவா-பெங்க், பாதுகாப்புப் படைகள், வடசீன இராணுவத் தலைவர்களின் உதவியோடு, ஆட்சிக் கவிழ்ப்பைச் செய்தார். நால்வரைக் கைது செய்தார். அக் 8ல் ஆட்சி பீடங்களிலிருந்த சில தலைவர்களைச் சிறையிட்டும் அச்சுறுத்தியும், குவா தன்னை மத்திய குழுவின் தலைவராக நியமனம் செய்து கொண்டிருக்க வேண்டும். மாவோவின் படைப்புக்களை வெளியிடுவதற்கும் அவற்றுக்கு விளக்கம் தருவதற்குமான உரிமையைத் தானே எடுத்துக் கொண்டார். மத்திய குழுவின் முடிவுகளாகவே இவற்றைத் தானே அறிவித்துக் கொண்டார். அக்.10 முதல் நால்வரின் சதி, திருத்தல்வாதம் பற்றிய பிரசாரம் தொடங்கியது.

அக்.21ல் குவாவின் 'நியமனம்' பற்றிய செய்தி வெளியிடப்பட்டதுடன் நால்வர் வீழ்ச்சிக்கான பெரும் கொண்டாட்டங்களும் நடைபெற்றன, நால்வருக்கு எதிராக மாவோ இருந்தார் என்ற பொய்யும் பரப்பப்பட்டது. அக்.25 சென்-மின் சி பாவோ இதழ், மாவோ செய்த முடிவின்படியே குவா 'நியமனம்' நடைபெற்றதாகக் கூறியது. கம்யூனிஸ்டுக் கட்சியில் இத்தகைய நியமனத்திற்கு இடம் இல்லை. "நீங்கள் பொறுப்பில் இருக்கும்போது, எனக்குக் கவலையில்லை என்று மாவோ கூறியதாகச் சொல்லப்படும் கூற்று, யாரை நோக்கி, எதற்காகக் கூறப்பட்டது என்பது பற்றி உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அக்டோபர் இறுதியிலிருந்து மாவோவின் சட்ட ரீதியான வாரிசாகத் தன்னை குவா நியமித்துக் கொண்டார்.

நவம்பர் முதல், தொழிற்கூடங்களில் கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் பற்றிய அறிவிப்புகள் வரத்தொடங்கின. நவம்பர் முடிவில் டெங்க் பற்றிய விமர்சனம் நின்றுவிட்டது. டிசம்பரில் உற்பத்தி பற்றி முழக்கங்கள் கேட்கத் தொடங்கின. 77 சனவரியில் டெங்கைத் திரும்பக் கொண்டுவரவேண்டும் என்பதற்கான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின. மார்ச்சில் குவா, டெங்கின் பெயரை மத்திய குழுவுக்கு

முன்மொழிந்தார். 'சோசலிச எழுச்சி'க்கான இயக்கம் இப்போதுதான் தொடங்கியது. வேளாண்மையை இயந்திர மயமாக்கல் பற்றிய அறிவிப்பு வெளிவந்தது. 77சூன் முடிவில் சென்—மின் இதழ், டெங்கின் சிந்தனைகளைப் பாராட்டியது. 77 சூலை 16–21 மத்திய குழுவின் 3–வது கூட்டத்தில், குவா அதிகார பூர்வமான முறையில் தலைவராக நியமிக்கப்பட்டார். டெங்க் எல்லாப் பொறுப்புகளையும் திரும்பப் பெற்றார். முன்பு டெங்கை விலக்கியத்திற்கும் 16 மாதங்களுக்குப் பிறகு டெங்க் திரும்ப அதிகாரத்திற்கு வந்ததற்குமான காரணங்கள் மக்களுக்குமுன் வைக்கப்படவில்லை.

இந்த முற்றான மாற்றங்கள் 'அமைதியாக' நடைபெறவில்லை. கிடைக்கும் தகவல்களை வைத்துப் பார்த்தால், எல்லா மாநிலங்களிலும் கடுமையான அடக்குமுறைகள் – கைதுகள், கொலைகள் நடந்துள்ளன. 77 முடிவில் பாதுகாப்புப் படைகளின் பங்கைச் செய்தி நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன. 77 முழுவதும் அடக்கு முறையோடு, கட்சியை விட்டுக் களையெடுத்தலும் தொடர்ந்து நடந்தன. மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் களையெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவர்களில் பெரும்பாலோர், பண்பாட்டுப் புரட்சியின்போது கட்சிக்குள் வந்தவர்கள். இதன் விளைவாக, 1977ல் கட்சி ஊழியர் வகைத் தொகுப்பு, 1965க்கு நெருக்கமாக இருந்தது.

வலதுசாரியினர், முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். டெங்கின் அதிகாரம் வலுப்பெற்றது. வர்க்கப் போராட்டத்தைவிட உற்பத்திக்கு மேலாதிக்கம் தரப்பட்டது. லியூ சாவ்-சி பற்றிய விமர்சனம் கைவிடப்பட்டது, இடதுசாரியினர் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

ஆட்சிக் கவிழ்ப்புடனும் தொடர்ந்தும் நடைபெற்ற நிகழ்வுகள் இவை. இவை ஏன் நடைபெற்றன என்று இங்கு விளக்கப்படவில்லை – அதாவது வர்க்கங்களுக்கு இடையிலான வலிமையில் ஏற்பட்ட மாற்றங்களால் இவை எப்படித் தீர்மானிக்கப்பட்டன என்பது இங்கு விளக்கப்படவில்லை. இதற்கான சில விளக்கங்கள் இறுதிப் பகுதியில் தரப்படும்.

வர்க்கங்களுக்கு இடையிலான உறவில் மாற்றங்களும் திருத்தல்வாத வெற்றியும்

முன்னைய "பொருளாதாரப் பாதை"யின் தோல்வி காரணமாகவே, புதிய பாதை தோன்றியது என்பது உண்மையில்லை. 1966-76 கால கட்டத்தில் பொருளாதார வளர்ச்சி சிறப்பாகவே இருந்தது. சில குறைகள் களையப்பட்டிருந்தால் இதன் வளர்ச்சி வேகம் மிகுந்திருக்கும். புரட்சிகரப்பாதை உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்ட சாங்காய் நகராட்சியில் பொருளாதார உற்பத்தி அற்புதமாக இருந்தது.

ஆயினும் புரட்சிப்பாதை தோற்றது. இப்பாதையின் எதிரிகள் செய்த சூழ்ச்சியால் இது தோற்றது என்று கூறுவது சரியில்லை. இந்தத் தோல்வியின் தன்மையையும் காரணத்தையும் நாம் ஆராய வேண்டும். வர்க்கங்களுக்கு இடையிலான உறவிலிருந்தே இவற்றைக் காணமுடியும். நாம் கண்டறியும் விடைகளும், தற்காலிகமானவை. அவை முழுமையானதாகவும் இருக்க முடியாது. ஆயினும் முயற்சி செய்ய வேண்டும்.

சரியான விடை கிடைப்பதற்கு முதன்மையான தடையாக இருப்பது, தற்போதைய சீனா பற்றிய வர்க்க ஆய்வு இல்லாமை தான். கட்சி இதைச் செய்யவில்லை. நால்வர் முயன்றனர். ஆனால் வெற்றிபெறவில்லை. இத்தகைய ஆய்வுக்கான கோட்பாட்டுக் கருத்தாக்கங்கள் பற்றிய போதுமான அறிவு அவர்களுக்கில்லை. இதனால்தான், உற்பத்தி உறவுகளில் இன்றைய சீன முதலாளியத்தின் பங்கை வரையறை செய்வதற்கு மாறாக, சித்தாந்த அல்லது அரசியல் அறிவிலிருந்தே விளக்குகிறார்கள். பொருளியல் அடித்தளத்திலிருந்தல்லாமல், மேற்கட்டின் விளைவாக முதலாளியப் போக்கு தோன்றுவதாக விளக்குகிறார்கள். இவ் விளக்கம் மார்க்சிய விளக்கமாகாது.

அண்மைக் காலத்தில் வர்க்க உறவுகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பற்றிய புரிதல் இல்லாமை, புரட்சிகரப் பாதையின் தோல்விக்குரிய காரணங்களில் ஒன்று.

உழைக்கும் வர்க்கத்தில் தோன்றியுள்ள பல்வகைச் சமூகப் பிரிவுகள், மக்கள் கம்யூன்களுக்குள் ஏற்பட்டுள்ள சமூகப் பிரிவுகள் ஆகியவை பற்றிப் போதிய கவனம் கொள்ளாமல், ஏழை உழவர்கள், மத்தியதர உழவர்கள், பணக்கார உழவர்கள், நிலக்கிழார்கள் என்பன போன்ற பழைய கருத்தினங்களிலேயே இன்றும் விளக்கம் தருகிறார்கள். இதுபோலத்தான், பல்வேறு பாதைகளுக்கு அடிப்படையான வர்க்கப் போக்குகள் பற்றியும் ஆய்வு இல்லாமல், குற்றச்சாட்டுகளை வாரி இறைக்கிறார்கள். இத்தகைய ஆய்வின்மையானது, தலைமையின் திறமையின்மை, அல்லது இவ்வாறு செய்யக்கூடாது என்ற அவர்களது போக்கையே காட்டுகிறது. முக்கியப் பிரச்னைகளில் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களும் பிளவுகளும், வர்க்கங்களுக்குள் ஏற்பட்ட மாற்றங்கள் - பிரிவுகளோடு தொடர்பு உடையவை. இவற்றை உணர்வு மட்டத்தில் மட்டுமே உணர்ந்தனர். அதனால், சரியான எல்லைக்கோடுகளை இவர்கள் வகுத்துக்கொள்ள அறியவில்லை. தெரிந்திருந்தால், வர்க்கங்களின் ஐக்கியத்திற்கு சோசலிச மாறுதல் காலத்தில் தேவையான சரியான சமரசங்களை உருவாக்கியிருக்க முடியும். பண்பாட்டுப்புரட்சியின் இறுதிக்கட்டத்தில் நேர்ந்தசில பின்னடை வுகளுக்குக்கூட காரணம், தேவையான வர்க்க ஐக்கியத்தையும் சமரசத்தையும் உருவாக்க இடதுசாரியினர் திறமையற்றிருந்ததேயாகும்.

நால்வருக்கு மாவோ தந்த அறிவுரைகளை, அவை தரப்பட்ட சூழல்களிலிருந்து பிரித்தெடுத்து, இன்றைய திருத்தல்வாதிகள், அவற்றை மாவோ செய்த விமர்சனங்களாகக் காட்டுகின்றனர்.

புரட்சிப் பாதையின் தோல்விக்குத் தீர்மானகரமான காரணியாக எனக்குத் தோன்றுவது, அறிவாளிகள், கட்சி ஊழியர்கள் பற்றிய பிரச்சினையைக் கையாளுவதில் இருந்த திறனின்மையாகும். உழைக்கும் வர்க்கத்தினருக்கும் அறிவாளிகளுக்கும் இடையிலான ஐக்கியத்தைக் கட்டிய புரட்சிப் பாதையாளர்கள், இந்த ஐக்கியத்திற்குள் நிலவும் முரண்பாடுகளைச் சரிவரக் கையாளத் தவறினார்கள். தம் கருத்துக்களை மற்றவர்கள் மேல் திணிக்க முயன்றார்கள்.

அரசியல் தலைமைக்கு மாறாக வன்முறையைப் பயன்படுத்தினார்கள். இதனால் பகைமை வளர்ந்தது. இதனால் எதிரிகள் மீதல்லாமல் எதிரிகளாகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் மீதும் அடக்குமுறை ஏவப்பட்டது. இப்படிச் செய்தவர்கள் இடதுசாரிப் போர்வையிலிருந்த சந்தர்ப்ப வாதிகள்.

இடதுசாரித் தலைவர்கள், விஞ்ஞானிகள் கலைஞர்கள் ஆகியவர்களிடம் கொண்ட தீவிர எதிர்நிலைபாட்டின் காரணமாக, விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிக்கும், கலை இலக்கியப் படைப்புக்கும் பெரும் குந்தகம் ஏற்பட்டது. வெளிநாட்டு இதழ்கள், புத்தகங்கள் படிக்கும் உரிமை கட்டுப்படுத்தப்பட்டது. இலக்கியம், திரைப்படம், நாடகம் முதலிய துறைகளின் மேல் கடுமையான மேற்பார்வையின் விளைவாக, இவை பாதிக்கப்பட்டன. விஞ்ஞான இதழ்கள் நின்று போயின. நூலக நுழைவும் கூடக் கட்டுப்படுத்தப்பட்டது. புரட்சிப் பாதையின் போர்வையில் எதிரிகளின் செயல்கள் இவை. இவற்றின் விளைவாக, அறிவாளிகள் புரட்சிப் பாதைக்கு ஆதரவு தரவில்லை. அல்லது வாயளவில் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர். அறிவாளிகளுடன் ஏற்பட்ட முரண்பாடு தீர்க்கப்படவில்லை.

ஐக்கியம் இடம்பெற வேண்டிய இடத்தில் வன்முறை இடம்பெற்றது. மேலும் வளர்ந்து, மக்கள் திரள்களின் சில பிரிவினரும் பாதிக்கப்பட்டனர். இளைஞர்கள், அவர்களின் ஒப்புதல் இல்லாமலே கிராமப்புறங்களுக்கு 'அனுப்பப் பட்டார்கள்.' மக்கள் திரள்களின் கருத்து வெளியீடுகள் பெறப்படாமல், 'பேச்சாளர்கள்' விரிவுரை நிகழ்த்தினர். இவ்வகைச் செயல்கள் எதிர்ப்புரட்சித் தாக்குதலுக்கான களத்தைத் தயார் செய்தன. வர்க்கநிலைகள் பற்றிய ஆய்வு இல்லாததால் தோன்றிய குறுகல் வாதமும், சூத்திரவாதமும், இத்தகைய நிலையைத் தோற்றுவித்தன. 1930களில் போல்ஸ்விக் சித்தாந்தம் தரம்தாழ்ந்து சீர்கெட்டு மார்க்சியத்தின் எதிர்நிலையாக மாற்றம் பெற்றது போன்ற நிலை இது. ரஷ்யாவில் நேர்ந்தது போன்ற தொடர்ச்சியான — முழுமையான சீர்குலைவு இங்கு நேரவில்லை—சூத்திரவாதமும்

கலப்படவாதமுமான நிலைபாடுகளைச் சீனத்திருத்தல்வாதம் பயன்படுத்திக் கொண்டது. இந்தக் கலப்படவாதம், திருத்தல்வாத நிலைபாட்டின் வன்முறை குறைந்திருந்தது போலத் தோன்றச் செய்தது, அறிவாளிகளின் அதிருப்தியும், மக்கள் திரள்களின் சோர்வும், உள்நாட்டுப் போர் வரும் என்ற அச்சமும் - திருத்தல்வாதிகள் ஆட்சிக் கவிழ்ப்பை முடித்த நிலையில், அவர்களுக்கு ஆதரவு தரச் செய்தது.

கடைசிச் சில ஆண்டுகளின் போராட்டங்கள் தனிநபர்க்கிடையிலான போராட்டங்களாகவும் வடிவம் கொண்டது. இதன் விளைவே, 'மாவோ வழிபாடு.' இதற்குப்பின் மறைந்து கொண்ட திருத்தல்வாதிகள், அவரின் பெயரால் தாம் செயல்புரிந்தனர். லின் பியாவோ, குவா குவா-பெங்க் ஆகியவர்கள் இதற்கான சான்றுகள். போராட்டங்கள் தனிநபர்களுக்கிடையிலானவையாக மாற்றப்பட்ட நிலையில், இவை, இலட்சியப்பாதை பற்றிய போராட்டங்களைப் பின்னுக்குத் தள்ளின.

'அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்று' என்ற முழக்கம் பதவி பிடிக்கும் சண்டையாயிற்று. வர்க்க உறவுகளை மாற்றுவதற்கான போராட்டங்களாக இவை இல்லாததனால், மக்கள் திரள்களிடையில் சோர்வும் வெறுப்பும் ஏற்படலாயின. அமைதியும், ஒழுங்கையும் ஏற்படுத்தியாக வேண்டும் என்று கூறி, அதிகாரத்திற்கு வந்தவர்கள் மிகக் கொடிய அடக்குமுறைகளை ஏவினர். லின் பியாவோ, கன்பூசியஸ் ஆகியவர்களை விமர்சனம் செய்த, 'பி-லின் பி-தங் இயக்கம்' சமயத்துக்கு ஏற்ற முறையில் சூ-என்-லாய், நால்வர், டெங்கு முதலியவர்களுக்கும் எதிராக - அதில் கலந்து கொண்டவர்களின் தேவைக்கு ஏற்றவாறு நடத்தப்பட்டது. தலைவர்களுக்கு இடையிலான போராட்டத்தின் வடிவங்களில் இந்த இயக்கமும் ஒன்று. இந்த இயக்கத்தின்போது மக்களிடம் உண்மையான பிரச்சனை பற்றிக் கூறவில்லை. எதற்கு ஆபத்து நேர்ந்துள்ளது, அதைத்தகர்க்கும் அரசியல் வழிமுறை என்ன என்று பேசவில்லை. இப்பிரச்னை தொடர்பாக சாங்காய் கம்யூன் அமைந்த சீர்குலைவு பற்றிப் பார்க்கலாம்.

சாங்காய் கம்யூன்

66 நவம்பர் முதற்கொண்டு, பண்பாட்டுப் புரட்சிப் பணியை மேற்கொள்ளும் தொழிற்கூடக் குழுக்கள் சாங்காயில் பெருமளவில் தோன்றின. இவை தம் நிறுவனங்களில் 'இரட்டை அதிகார'த்தை நிறுவின. பண்பாட்டுப் புரட்சியின் மையக் குழுவின் 12 குறிப்பு - நெறியால் இவை அங்கீகரிக்கப்பட்டன. கட்சி ஊழியர்களின் உற்பத்திக் குழுக்களோடு, இந்தப் புரட்சிக் குழுக்களும் அதிகாரம் பெற்றன. டிசம்பர் முடிவில் உற்பத்திக் குழுக்கள் சிதைந்தன. தொழிற்கூடக் குழுக்கள், புரட்சி நிறுவனங்களாக – தலைமைப் பீடங்களாக – வளர்ச்சி பெற்றன. நகராண்மைக் கழகத்தின் அதிகாரத்தை, இத்தகைய குழுக்கள் கேள்விக்கு உட்படுத்தின. 67 ஜனவரியில், நகராண்மைக் கழகம் வீழ்ந்தது. ஜனவரி 9ல் 32 நிறுவனங்கள் சேர்ந்து புதியதோர் ஆட்சி அதிகாரத்திற்கான விதிமுறைகளை வெளியிட்டன. சீனப் பத்திரிகைகள் இதனை வரவேற்றன. 'எல்லா அதிகாரங்களும் கம்யூன்களுக்கே' என்ற முழக்கம் நகர்ச்சுவர்களில் எழுதப்பட்டது. பிப்.5ல் 10 இலட்சம் தொழிலாளர் கூட்டத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பெயரிலும் மாவோவின் வழியிலும், கம்யூன் பிரகடனப்படுத்தப்பட்டது.

சாங்கான் கம்யூனையும் பிற கம்யூன்களையும் மத்திய–முக்கிய செய்தி இதழ்களும் மத்திய அதிகாரமும் ஏற்கவில்லை. 20 நாட்களுக்குப் பிறகு, சாங்காயில் கம்யூன் முடிவுக்கு வந்தது. சாங்காய் புரட்சிக்குழு அதிகாரத்திற்கு வந்தது. இதன் தலைவர் சாங்க் சுன் - சியாவோ, 16 குறிப்பு - அறிக்கைப்படி அமைந்த கம்யூன்கள் முடிவுக்கு வந்தன. கம்யூன் முறையை மாவோ மறுக்காவிட்டாலும், அது அமைக்கப்பட்ட முறையை மாவோ ஏற்கவில்லை என்று கூறப்பட்டது. சீனா முழுதும் கம்யூன்கள் அமைக்கப்படுவதனால் சர்வதேசச் சிக்கல்கள் ஏற்படும் என்றும் கூறப்பட்டது. இத்தகைய கருத்துக்கள் சரியானவையாகத் தோன்றவில்லை. உண்மையில், மாவோ, கட்சி பற்றிய பிரச்னையையே எழுப்பினார். பொறுப்புள்ள பதவிகளிலிருந்து எல்லோரையும் தூக்கி

எறிவது பற்றி அவர் கவலை கொண்டார். நம்மைப் பலப்படுத்த உறுதியான கட்சி ஒன்று – அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் – தேவை என்று கருதினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரத் தலைவர்கள், சீனா இன்னும் கம்யூன் என்ற அரசியல் வடிவத்திற்குத் தயாராக இல்லை என்று ஏன் கூறினார்கள் என்று புரியவில்லை.

சாங்காயிலும் பிற இடங்களிலும் எழுந்த புரட்சி நிறுவனங்கள் தமக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை, அவை தமக்குள் கடுமையாக மோதிக் கொண்டன. இதை மாவோ விமர்சனம் செய்தார். இது தவிர, உயர் மட்டத்தில் உள்ள கட்சித் தலைவர்களில், பெரும்பான்மையானோர், வெளிப்படையாகக் கூறா விட்டாலும், பண்பாட்டுப் புரட்சிக்கு எதிராக இருந்தனர். கட்சிக்குள் முதிர்ந்த தோழர்கள், கட்சி தாக்கப்படுவதை ஏற்கவில்லை. கட்சியின் ஐக்கியத்தை அவர்கள் காக்க விரும்பினர். லியு சாவ் சி, டெங்க் முதலியவர்கள் மீதானதாக மட்டுமே தாக்குதல்களை அவர்கள் குறுக்கினர். தவிர, மக்கள் விடுதலைப் படைக்கும் அதன் தலைவரான லின் பியாவோவுக்கும் தனிச் சிறப்பான பங்கு தரப்பட்டது.

இத்தகைய முடிவுகளின் விளைவாக, மக்கள் திரள்களின் இயக்கம் மெல்ல மெல்ல உதிர்ந்தது. கட்சியிலும் அரசிலும் மக்கள் விடுதலைப்படையின் செல்வாக்கு அதிகரித்தது. 69, ஒன்பதாவது கட்சிப் பேரவையில், பொலிட் பீரோவுக்குத் தேர்வு செய்யப்பட்ட, 25 உறுப்பினர்களில், 14 பேர் ம வி ப. யைச் சேர்ந்தவர்கள். மக்கள் இயக்கத்திற்குப் பதிலாக, மேலிருந்து இயக்கப்பட்ட விமர்சன இயக்கங்கள் நடந்தன. லின் பியாவோவைச் சூழ்ந்திருந்த மவிப. தலைவர்கள் புரட்சிப் போக்குக்கு எதிர்ப்பு நிலை காரணமாக, லின் பியா வோ விலக்கப்பட்டார். இந்த நிலையிலும் பொலிட் ப்ரோவுக்குள் மூன்றில் ஒரு பகுதியினரே புரட்சிக் குழுக்களின் பிரதிநிதிகள். இவர்கள் தம்மை வலிமைப்படுத்திக் கொள்ளவில்லை. இதன் விளைவு 1966 அக்டோபர் ஆட்சிக் கவிழ்ப்பு. இதில் மவிப.வும்

பாதுகாப்புப் படைகளும் முக்கியப் பங்காற்றின. பல்லாண்டுகளாக நடந்த நிகழ்வுகளின் வெளிப்பாடே இது. மேலிருந்து இயக்கங்களை இயக்கியதன் விளைவு இது. மக்கள் திரள் நிறுவனங்களுக்குள்ளும், இவற்றுக் கிடையிலும் உள்ள முரண்பாடுகளை சரிவரக் கையாளாததன் விளைவும் இது. புரட்சிகரக் கட்சியின் பங்கு பற்றிய பிரச்னையும் இது. உழைக்கும் மக்கள் அதிகாரத்தைத் தாமே செலுத்துவதா? அல்லது அவர்களுக்காக மற்றவர்கள் செலுத்துவதா? என்பதோடும் தொடர்புடையது இப்பிரச்சினை. மார்க்ஸ், கம்யூன் என்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அரசியல் உருவமாகத்தான் கண்டார். லெனின், உழைக்கும் மக்களின் அதிகார நிறுவனமாகவே சோவியத்துக்களைக் கண்டார். மக்களுக்கான நிறுவனங்களாக்க விரும்பவில்லை. இந்நிலை தொடர்ந்ததன் விளைவாகவே, சோவியத் உழைக்கும் மக்கள் தம் அதிகாரத்தை முற்றாக இழந்தனர்.

1966 ஆகஸ்டு 8ல் மேற்கொண்ட 16 குறிப்புத் தீர்மானம், சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டது. கம்யூன்களுக்கு மாறாக, புரட்சிக்குழுக்கள், மக்கள் திரள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மவிப.யின் பங்கு, புரட்சிக் குழுக்களுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டது – இம்முறையில் இது நிறைவேறியது.

புரட்சிப் பாதையின் தோல்வி இப்படி நடைபெற்றது.

‘சித்தாந்தப் பாரம்பரியமும்’ அதன் தீவிரமான பாத்திரமும்

1930களின் இறுதியிலிருந்து சீர்குலைந்த போல்ஷ்விக் சித்தாந்தத்தின் செல்வாக்கு, போராட்டங்களைத் தனி மனிதர்கள் சம்பந்தப்பட்டதாக்கியது. நிலப்பிரபுத்துவச் சித்தாந்தத்தின் பிடிப்பு - ஆகிய இந்தப் பாரம்பரியங்கள் ஏன் தொடர்ந்தன? மாவோவின் படைப்புக்களில் இடம்பெற்ற - சீர்குலைந்த போல்ஷ்விக் சித்தாந்த விமர்சனம் ஏன் முழுமையாக வளர்க்கப்படவில்லை? இந்த விமர்சன வழியில் நடவடிக்கைகள் ஏன் தீவிரப்படவில்லை? இவை சிக்கலான கேள்விகள், இவை பற்றி நான் என் சில சிந்தனைகளையே தர முடியும்.

மாவோ பாதையின் செயல்பாட்டைத் தடுத்து, திருத்தல்வாத எதிர்த் தாக்குதலுக்குச் சாதகமாக அமைந்த சில சமூக உறவுகளின் மையமாக அமைந்தவை சில, அவை, 1 கட்சி, அரசு இயந்திரத்தில் இருந்த பல தட்டு முறையில் அமைந்த – சரியாகச் சொன்னால் – முதலாளிய அரசியல் உறவுகள், 2 அரசு இயந்திரத்தின் பல்வேறு பகுதிகளைத் தனித் தனித் துறைகளாக்கி விடுதல், 3. கட்சியின் அடிப்படை நிறுவனங்களைப் பிரித்து விடுதல், இதனால் இவை தமக்குள் உறவு கொள்வது சாத்தியமில்லாமல், தமக்கு மேல்மட்ட நிறுவனத்தோடு மட்டுமே உறவு கொள்ளுதல், இம்முறைகளின் விளைவாக, கட்சியின் மேல்மட்ட நிறுவனங்கள் அதிகாரக் குவிப்பைப் பெறுகின்றன. இவை உடமைவர்க்க நிறுவனங்களில் நிலவும் உறவுகளைப் படைக்கின்றன. அதிகார அடுக்குமுறை, இரகசியம் முதலியவை உருவாகின்றன. அதிகாரிகளை நியமனம் செய்யவோ, திருப்பி அழைத்துக் கொள்ளவோ மக்கள் திரள்களுக்கு அதிகாரம் இல்லை. அதிகாரிகள் மக்களின் சேவகர்கள் அல்லர்.

இந்த அரசியல் உறவுகளுக்குப் பொருளாதார அடித்தளம் உண்டு. முந்திய முதலாளிய உற்பத்தி உறவுகள், மாற்றம் பெறாமையால், அவை பொருளாதார சமூக மறுஉற்பத்தியின் மேல் பாதிப்பைச் செய்கின்றன. பண்பாட்டுப் புரட்சியின் போது உற்பத்தி இயக்கத்தில் செய்யப்பட்ட உடனடியான – பகுதியளவிலான ஒரு சில மாறுதல்கள், (மறு உற்பத்தி இயக்கத்தில் அடிப்படையான மாற்றம் தொடர்ந்து செய்யப்படாததால்) தடைப்பட்டன. மூலதனக் குவியலின் அளவை நிர்ணயித்தல், துறைகளுக்கிடையில் முதலீட்டைப் பகிர்தல் முதலிய முக்கியப் பொறுப்புக்கள், உடனடி உற்பத்தியாளர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. இவர்களிடம் 'கருத்துக்கள்' மட்டும் கேட்கப்பட்டன. உற்பத்திக் கருவிகளிலிருந்து உடனடி உற்பத்தியாளர்கள் பிரிக்கப்பட்டதால் முதலாளிய, பண்ட உற்பத்தி முறை உறவுகளே தொடர்ந்து படைக்கப்பட்டன.

பகிர்விலும் இந்தச் சமத்துவமின்மை தொடர்ந்தது. ஊதியம் வழங்கலில் 30 தரங்கள் நிலவின. கட்சி, அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள் இருந்தன. கார் வசதி, வசதியான வீடு, தனிக் குடியிருப்பு, உடைகள், குளிர் சாதனங்கள், டி.வி. நிழற்படக் கருவிகள், பதிவு நாடாக் கருவிகள் முதலியவற்றுக்கான தனிக் கடைகள் முதலிய தனிச் சலுகைகள், உயர் மட்டங்களில் உள்ளவர்கள் பெற்றனர். மத்தியில் உள்ள தலைவர்கள், பல குடியிருப்புக்களை ஒருவரே பெறுவதற்கும், தமது சொந்தத் தேவைகளுக்காகத் தனிவிமானத்தைப் பயன்படுத்தலுக்கும் சலுகைகள் பெற்றிருந்தனர்.

'பெரிய எழுத்துச் சுவரொட்டிகள்' கட்சி அரசு ஊழியர்களின் தனிச் சலுகைகளை அம்பலப்படுத்தின. மிகக் கடுமையான விமர்சனங்கள் கொண்ட சுவரொட்டிகள் உடனடியாகக் கிழிக்கப்பட்டன. உயர்நிலையில் உள்ளவர்கள் மக்கள் திரள்களிலிருந்து பிரிந்து தனி உலகில் வாழ்வதை இவை அம்பலப்படுத்தின. 'சட்ட ரீதியான' இந்தச் சலுகைகள் 'சட்டத்திற்குப் புறம்பான' சலுகைகளுக்கு இடம் தருகின்றன. பல்கலைக்கழகம் செல்வதற்குக் கட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்குச் சலுகைகள் கிடைக்கின்றன. அண்மையில் வெளிவந்த சுவரொட்டிகள் – இவை வெளிவருவதை அரசு தடுத்த போதிலும் – இவ்வகைச் சலுகைகள் பற்றி பேசுகின்றன.

மையக் குவிப்பின் உயர் நிலையளவு காரணமாக, அரசியல் தலைவர்கள் தமக்கு வேண்டியவர்களை மத்திய குழுவிலும் பொலிட் பீரோவிலும் நியமித்துக் கொள்கின்றனர். இதன் விளைவாக உட்குழுக்கள் தோன்றுகின்றது. மையக் குவிப்பின் மற்றொரு விளைவு, கட்சிக்குள் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் தடுக்கப்படுதல்.

முதலாளிய அரசியல் உறவுகளும் சலுகைகளும் சேர்ந்து, சித்தாந்தச் சீர்குலைவுக்கு அடித்தளமாகின்றன. இப்போக்கைத் தீவிரமாக எதிர்த்தழிக்கக் கூடிய மக்கள் திரள்களின் இயக்கம் இல்லாததால், ஸ்டாலின் பற்றிச் சீனாவில் தொடங்கிய விமர்சனம் உறுதியாகவும் முறையான வடிவங்களிலும் தொடரப்படவில்லை.

ஏன் இத்தகைய மக்கள் திரள் இயக்கங்கள் தோன்றவில்லை? இதற்கான விடையாகச் சில குறிப்புக்களையே என்னால் தரமுடியும்.

ஏற்கெனவே நிலவும் சமூக உறவுகளில் மறு உற்பத்தியில் குறிப்பிட்ட அளவு ஐக்கியம் இருந்தாலொழிய சமூகச் செயல்பாடு நடைபெற முடியாது. அதே சமயம் இன்னொரு வகை ஐக்கியம் தோன்றினால்தான் முன்னைய நிலையைத் தகர்க்க முடியும். இது ஒரு முரண்நிலை. சமூக இயக்கத்தின் போதுதான் இத்தகைய புதிய ஐக்கியம் தோன்றமுடியும். கோட்பாடு இதனைக் கண்டுபிடிக்கமுடியாது. கோட்பாட்டு முறையிலான விமர்சனத்தோடு கூடிய சமூகப் பரிசோதனையிலிருந்தே இந்த புதிய ஐக்கியம் உருவாக முடியும். இதற்குத் தடை விதிக்கக் கூடாது. தவிர, ஏற்கெனவே நிலவும் அரசியல் உறவுகளின் வழியே ஏற்பட்டிருக்கும் ஐக்கியம் குலைவது பற்றி மக்கள் திரளின் அச்சமும், சமூகப் பரிசோதனைக்கான தடைக்குக் காரணமாகிறது. மக்கள் தமக்கான ஜனநாயக வளர்ச்சியைத் தேர்ந்து கொள்வதற்கு தலைவர்களும் தடையாகி விடுகின்றனர். மக்கள் 'பிரதிநிதிக'ளின் தேர்வு என்பது இவர்கள் கையாண்ட முறைகளில் ஒன்று.

முற்றான ஜனநாயகத்தின் அடிப்படையிலேயே சோசலிசம் நோக்கி முன்னேற முடியும். ஜனநாயக விரோத நடைமுறைகளை எதிர்ப்பதை மாவோ பெரிதும் போற்றினார். சீனக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி, அதன் சாரத்தில் வேறு எந்தக் கட்சியைக் காட்டிலும் புரட்சிகரமானதாக இல்லை என்று 64ல் மாவோ கூறினார். புரட்சிகரக் கட்சி ஒன்று, அதன் எதிர்மறையாகி, பாசிச – எதிர்ப்புரட்சிக் கட்சி ஆகி விட முடியும் என்றும் கூறினார். மக்கள் திரள்களின் செயல்பாட்டு வளர்ச்சியைத் தடுப்பது என்பது புரட்சி தொடர்வதைத் தடுப்பதாகும். செய்திக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதும், வரலாற்று உண்மைகளைத் திரித்துக் கூறுவதும், புரட்சியின் வளர்ச்சியைத் தடுக்கும். இத்தகைய புரட்சிப் பாதையைத் தடுப்பதால் தற்காலிகமாக சில நன்மைகளை அடைய முடியும் என்பது இறுதியில் தோல்வியையே தழுவும்.

தற்போதைய போக்கும் அதன் எதிர்காலமும்

பொருளாதார வாதமும் உற்பத்தி வாதமும் மேலோங்கிய தற்போதைய நிலையில் மக்கள் திரள்களுக்கும் புரட்சிக்கும் எதிரான தாக்குதல்கள் வலுப்படுகின்றன. 'ஆயிரம் மலர்கள் மலரட்டும்' என்றும் அறிவாளிகளைக் கவர்வதற்காகப் பேசப்படுகிறது. ஒரு நிபந்தனை, கட்சிக் கட்டளைக்கு அவர்கள் அடிபணிய வேண்டும். செத்துச் சவமான கட்சிகளுக்கு, தற்போதைய ஆட்சி மீண்டும் உயிர் கொடுக்கப்பார்க்கிறது. முன்னைய அறிவாளிகளையும் முதலாளிய வட்டாரங்களையும் கவர இப்படி முயற்சி செய்யப்படுகிறது. அதே சமயத்தில் தொழிற்கூடங்களிலும் கம்யூன்களிலும் கட்டுப்பாடுகள் கடுமையாகின்றன. உழைப்பாளிகள் ஒரு சில பிச்சைத் துணுக்குகளைப் பெற விரும்புவார்கள் என்ற கருத்தோடு நவீனமயமாக்கல் நடைபெறுகிறது. இவற்றின் விளைவாக அரசு உடமை வர்க்கச் சர்வாதிகாரமே வலுப்படும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய தலைமையின் உண்மையான வர்க்க இயல்பு, இவர்களின் சர்வதேச நடைமுறையில் மேலும் தெளிவாகிறது. இவர்களின் 'மூன்று உலகக் கோட்பாடு' ஆப்ரிக்காவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத் தலையீட்டை அனுமதிக்கிறது. ஆப்ரிக்காவில் மொபுட்டு, பொகாசா, இடி அமீன் இலத்தீன் அமெரிக்காவில் பினோசெட் ஆகியவர்களின் மிகப் பிற்போக்கான ஆட்சிகளை ஆதரிக்கிறது. சீனாவின் தேசிய நலன்களுக்குக் கூட இது விரோதமாகிறது. ஜனநாயக, தேசிய எழுச்சிகளுக்கு இப்போக்கு எதிரானது. எத்தியோப்பியாவின் காலனி யாதிக்கத்திற்கு ஆதரவாகவும், சோமாலிய மக்கள் எரிட்ரிய மக்களின் தேசிய விடுதலைக்கு எதிராகவும் தலையிடும் சமூக ஏகாதிபத்தியத்தின் நிலைபாட்டை இது வலுப்படுத்துகிறது.

உலகச் சந்தையில் சீனாவை இணைக்கும் முறையிலேயே சீன வெளிநாட்டு வாணிகக் கொள்கை அமைந்திருக்கிறது. இதன் விளைவாக, உலகச்சந்தையின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ற அளவிலேயே சீனாவின் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி அமையும்.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் புதிய தலைமை, நீண்டகால நோக்கில், தோல்வியையே தழுவும். திருத்தல்வாதம் வரலாற்றில் வெற்றி பெற முடியாது. சீனத் தலைமை, எரிமலையின் மேல் அமர்ந்திருக்கிறது. தற்போது முதன்மை தரப்படும் தொழில்துறை சிறிதுகாலத்துக்கு வளரும். இறுதியில், தொழில்துறைக்கும் வேளாண்மைக்கும், நகரத்திற்கும் கிராமத்திற்கும், மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும், மூலதனக் குவிப்புக்கும் நுகர்வுக்கும், இடையிலான முரண்பாடு தீவிரமடையும்.

தங்களைச் சோசலிசப் பாதையில் நடத்திச் செல்வதாக சீனத் தலைமையைப் பெரும்பாலான மக்கள் நம்புகிறார்கள். நாளடைவில் இந்தப் பொய் வெளிப்படும். சோசலிசத்திற்காகவும் பண்பாட்டுப் புரட்சிக்காகவும் நடைபெற்ற போராட்டங்களில் அனுபவம் பெற்ற சீன மக்கள், முன்னேறுதல் நோக்கிய தம் பயணத்தைத் தொடர்வர். இது எப்படி, எப்போது நிகழும் என்று இன்று கூறமுடியாது. இடையில் தலைமையில் மேலும் பிளவுகள் நேரலாம். டெங்கின் பாதைக்கும் குவாவின் பாதைக்கும் இடையில் மோதல் வரலாம். இறுதியில், தீர்மானிக்கும் வல்லமையுடையவர் சீன மக்களே.

இன்றைய நிலையில், சீனாவின் வெளிநாட்டு நண்பர்களின் கடமை, சீன மக்களை மேலும் அதிக அளவில் சார்ந்திருத்தலே. முதலாளியப்பாதையில் சீனாவைக் கொண்டு செலுத்தும் தலைமைக்கு வலிமை சேர்க்கும் எதையும் நாம் செய்யலாகாது. சோசலிசத்தின்பாலும் பண்பாட்டுப் புரட்சியின் பாலும் நம்பிக்கை இழந்தவர்களிடம் தீவிரமாக விவாதித்து, நம்பிக்கை ஏற்படுத்துதலும் நம் கடமை.

சீனா பற்றிய விளக்கத்தில் என் முயற்சி ஒரு முதற்படியே. இதை மேலும் பலர் செய்ய வேண்டும். இம்முயற்சியில் ஈடுபட என்னைத் தூண்டிய, அன்புள்ள நீல் பர்ட்டன் அவர்களே! உங்களுக்கு நன்றி.

–சார்லஸ் பெட்டல்ஹீம்

தமிழாக்கம்: பிருந்தா

~~*

பரிமாணம் – 14

அக்டோபர் – டிசம்பர் 1985

1. மீண்டும் பரிமாணம்

மார்க்சியத்தை ஆதாரமாகக் கொண்டு, மார்க்சியக் கோட்பாடு, வரலாறு, பண்பாடு கலை இலக்கியம் முதலியவற்றைப் பற்றிய ஆய்வுகளைத் தாங்கி வெளிவந்த 'பரிமாணம்' 13 இதழ்களுடன் பொருளாதார காரணங்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தற்போது அதன் நோக்கங்களை மேலும் சிறப்பாக நிறைவேற்றும் முறையில் பலர் ஒத்துழைப்புடன் 'பரிமாணம்' புதுப்பிக்கப்படுகின்றது.

மார்க்சியம் உலகளவில் பலதுறைகளில் பல்வேறு அனுபவங்கள் ஆய்வுகளைச் சந்தித்திருக்கிறது. உலக அரசியல் பொருளியல், சமூகவியல் நிலைமைகள் மேலும் சிக்கலாகி வருகின்றன. சோசலிசத்தை நோக்கிச் செல்வதாக அல்லது சோசலிசத்தை அடைந்துவிட்டதாக உரிமை பாராட்டிக் கொள்ளும் நாடுகளில் சோசலிசம் அடைந்த பின்னடைவுகள் இன்று வெளிப்படையாகத் தெரிகின்றன. மார்க்சியம் – தத்துவம், பொருளியல் புரட்சியியல் முதலிய பல துறைகளிலும் அடிப்படையான பல புதிய சிக்கல்களைச் சந்திக்கிறது.

இந்தியா குறிப்பாக தமிழ்நாடு என்று வரும்போது இவை பற்றிய வர்க்க வரையறை மேலும் மேலும் கேள்விக்கு உள்ளாகியிருக்கிறது. 'தேசிய இனவிடுதலை' என்ற பிரச்சனை முன்னுக்கு வந்துள்ளது. புரட்சிகர அரசியல் நடைமுறை பல பிரச்சனைகளில் சிக்கித்தடுமாறுகிறது. இந்த நிலையில் மார்க்சிய மூலநூல்களைப் படிப்பதற்கும் கற்பதற்கும் தேவையான முயற்சிகள் போதுமான அளவில் மேற்கொள்ளப் படவில்லை பொதுவுடைமை கட்சிகள் ஆட்சியதிகாரத்தில் உள்ள நாடுகளிலிருந்து வெளியாகும் 'விளக்க நூல்களிலிருந்தே 'மார்க்சியம்' கற்கப்படுகிறது. ஆழமான அறிவார்ந்த கருத்தாடல்களுக்கான கோரிக்கைகள் எழும்போது, 'இவை மக்களுக்குத் தேவையா, மக்களுக்குத் தாங்குமா?' என்ற எதிர்க்கேள்வி மூலம் நிராகரிக்கப்

படுகின்றன. சில பத்திரிகைகள் இடைக்காலத்தில் தோன்றினாலும், தம் கட்சிக் குழுவின் எல்லைக்குள்ளிருந்தே அவை செயல்பட்டாக வேண்டிய கட்டாயங்களால் விரிவான கருத்தாடல்கள் முழுமையாக நடக்க வழியின்றிப்போனது. மார்க்சியத்தை மக்களிடையே கொண்டு செல்வது என்ற நோக்கத்துடன் மிகவும் எளிமைப் படுத்தப்பட்ட (பல சமயங்களில் கொச்சைப்படுத்தப்பட்ட) தம் கட்சி முத்திரை பொறிக்கப்பட்ட ஒன்றே மார்க்சியம் என்று அறிமுகப்படுத்தப் படுகிறது. இதனால் புதிய பார்வைகளுக்கும் ஆய்வுகளுக்கும் கருத்துப் பரிமாறல்களுக்கும் இடமில்லாமல் போகிறது. திரும்பவும் சொல்கிறோம், உலகளவில் மார்க்சியம் பெற்றுவரும் புதிய பரிமாணங்கள் பற்றிய பார்வை இன்றைய சூழலில் இடம் பெற வாய்ப்பில்லை. மற்றும் மார்க்சியம் பற்றிய ஆய்வு நோக்கை அனுமதிக்கவில்லை எனில், குறுகிய நடைமுறைகளுக்குள் மார்க்சியமும் மார்க்சியர்களும் தொடர்ந்து சிறைபட்டுக் கிடக்க வேண்டியதிருக்கும். மார்க்சியர்களும், அவர்களது கட்சிகளும் மட்டுமே உண்மைக்கு முற்றுரிமை கொண்டாடமுடியாது. சமூக நீதிக்காகவும் ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பிற்காகவும் உறுதியாக நிற்கின்ற மார்க்சியரல்லாத இதர சிந்தனை யாளர்களுடன் இன்று திறந்த மனதுடன் உரையாடலை வளர்த்து ஒற்றுமையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டிய சமூகத்தேவைகள் உலகளவிலும் இங்கும் ஏற்பட்டுள்ளன.

'பரிமாணம்' தனது பணியை இச்சூழலின் தவிர்க்க இயலாத தேவையாகக் கருதுகிறது. மார்க்சியத்தைப் புதிய பரிமாணங்களுடன் மார்க்சியம் பற்றிய அறிவுத் தேட்டம் உள்ளவர்களிடம் கொண்டு செல்வதே தனது நோக்கமாகக் கருதுகிறது. 'பரிமாணம்' ஒரு கட்சி வெளியீடு அல்ல; எந்த ஒரு கட்சிக்கும் இது மாற்று அல்ல புரட்சிகர சமூக மாற்றத்தில் உண்மையான அக்கறை உள்ளோர் அனைவரையும் பரிமாணம் வரவேற்கிறது. அவர்களுடன் தனது உறவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறது.

இந்த இதழில் ரோசா லக்சம்பர்க் பற்றிய மொழிபெயர்ப்புக் கட்டுரையை தோழர் 'எம்.கே'யும்

தோழர் 'ராயனும்' எழுதியுள்ளனர் ரோசா, லெனினால் திறனாய்வுக்குட்படுத்தப்பட்டவர். ஆனால் மாபெரும் புரட்சியாளர் என லெனினினால் ஏற்கப்பட்டவர். இவரைப் பற்றிய அறிமுகக்கட்டுரை தமிழில் வெளிவருவது இதுவே முதல்தடவை. லெனினின் கலை இலக்கிய இரசனைகள் பற்றிய கட்டுரை வறட்டு மார்க்சியர்களும் மார்க்சியத்தின் பகைவர்களும் இதுகாறும் லெனின் பற்றி தவறாக வழங்கியுள்ளவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட சித்திரத்தை நமக்குத் தருகின்றது.

ஜேன்மிர்தாலின் நூலிலிருந்து வெளியிடப்படும் ஒரு பகுதியில் இந்திய வரலாறு, இந்தியப் பண்பாடு, இந்தியப் பொதுவுடைமை இயக்கம், அனைத்துலகப் பொதுவுடைமை இயக்ககம் முதலியன பற்றிய சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களைக் காணலாம். நம்மை விட, வடஇந்திய மார்க்சியர்களின் கருத்தாடலில் தென்படும் கருத்துவளமும், பக்குவமும் இக்கட்டுரையில் காணத்தக்கன.

கடைசியாக, இந்த இதழில் வெளியாகியுள்ள இரு கட்டுரைகள் கருத்துப் போராட்டத்தன்மை வாய்ந்தவை. அவதூறுகளுக்கும் திரித்துக் கூறல்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தால் எழுதப்பட்டவை. இவை குறித்த விமர்சனங்களை எழுதுங்கள்.

2. ரோசா லக்சம்பர்க் (1871 – 1919)

"அவர், பாட்டாளி வர்க்கத்தின் ஆத்மார்த்தமான பெருந்தலைவராய் இருந்தார்..."

- ஜார்ஜ் லூகாக்ஸ்

வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

ரோசா லக்சம்பர்க், 1871 ஆம் ஆண்டு, மார்ச்சு 5 ஆம் நாள் சிறிய போலந்து நகரத்தில் (ஸமோசி) பிறந்தவர். அப்போது இப்பகுதி ரஷ்யப் பேரரசின் கீழ் இருந்தது. ஆரவாரமற்ற அமைதியான நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த யூதப் பெற்றோர்களுக்கு மகளாகப் பிறந்தவர். இக்குடும்பத்திற்கு மேலை ஐரோப்பிய பண்பாட்டுப் பின்னணி இருந்ததாகத் தெரிகிறது. எனவே பண்பாட்டு வி யத்தில் பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக ரோசாவின் பெற்றோர் விளங்கினர்.

இடுப்பெலும்பில் ஓர் ஊனம் இருந்ததைத் தவிர அவருடைய குழந்தைப் பருவம் மகிழ்ச்சியானதாகவே இருந்தது. இந்த ஊனம் எலும்பில் காசநோய் என தவறாகக் கணிக்கப்பட்டது. இந்நோயினால் அவர் ஓராண்டுகாலம் படுக்கையிலிருந்தார். அந்நோய் அவருடைய பிற்கால வாழ்க்கை முழுதும் ஓர் ஊனத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றது.

இரண்டரை வயது இருக்கும்போது அவரது பெற்றோர் வார்சாவுக்குக் குடியேறினர். இத்தலைநகரம் அளித்த நல்ல கல்வி வாய்ப்புகளை தங்கள் குழந்தைகள் பயன்படுத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும்.

ரோசாவின் குழந்தைப்பருவமும் இளமைக்காலமும் இங்குதான் கழிந்தது. அவர் போலந்துக்காரராகவும் யூத மதத்தவராகவும் இருந்ததால் படிப்பில் இரு மடங்கு சிரமப்பட்டார். அவர் படித்துக்கொண்டிருந்த காலத்தில் போலந்துக்கான ரஷ்யமயமாக்கல் முழுமூச்சுடன் செயல்பட்டது. பள்ளிகளில் ரஷ்யமொழி பயன்படுத்தப்பட்டது. மாணவர்களிடையே போலந்து மொழியில் பேசுவது கூட

தடை செய்யப்பட்டது. இத்துடன் பலவிதமான சட்டங்கள் யூதர்கள் மீது விதிக்கப்பட்டன. ரோசா வெளிப்படையாகவே கலகக்கார மாணவியாக விளங்கினார். ஆனால் பட்டப் படிப்பில் அவர் அடைந்த தகுதிகளால் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டிய தங்கப்பதக்கம் மறுக்கப்பட்டது.

ரோசா உயர்நிலைப்பள்ளி மாணவியாக இருந்தபோதே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். தொழிலாளிக் கட்சியின் கடைசிக் காலத்தில் அதனுடன் அவருக்குத் தொடர் பேற்பட்டது. போலந்தில் சோசலிஸ்ட் கட்சியை அமைப்பதற்கான முதல் முயற்சியாக இக்கட்சி இருந்தது. அவருடைய அரசியல் நடவடிக்கைகள் போலிசின் கவனத்தைக் கவர்ந்ததனால் அவர் தன்னுடைய 19-வது வயதில் நாட்டை விட்டு வெளியேறினார். பல்கலைக் கழகத்தில் படிப்பதற்காகவும், அங்கு ரஷ்யா மற்றும் போலந்திலிருந்து நாடுகடத்தப்பட்டவர்களால் அமைக்கப் பட்டிருந்த காலனியில் சேர்வதற்காகவும் அவர் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச்சுக்குப் போக முடிவு செய்தார். அவ்வாறு நாடுகடத்தப் பட்டோருள் ரஷ்ய மார்க்சியத்தின் தந்தை என சரியாகவே அழைக்கப்பட்ட பிளக்கனோவும் இருந்தார். ரோசா ஜூரிச்சைத் தன் படிப்புக்கான இடமாகத் தேர்ந்தெடுக்க முக்கிய காரணங்களுள் ஒன்று, அக்காலத்தில் ஐரோப்பாவில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் மிகச் சில பல்கலைக் கழகங்களுள் இதுவும் ஒன்று. அவர் 1890-ல் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் பதிவு செய்து கொண்டார். இரண்டாண்டுகள் இயற்கை அறிவியல் கணிதவியல் படித்தார். 1892-ல் அவர் தன்னுடைய படிப்பை சட்டப்படிப்புக்கு மாற்றிக் கொண்டார். அவர் அங்கு ஐந்தாண்டுகள் தங்கி இருந்தார். 1898 ஆம் ஆண்டு, "போலந்தின் தொழில் வளர்ச்சி" என்னும் ஆராய்ச்சிக்காக டாக்டர் பட்டத்தைப் பெற்றார். இந்த ஆராய்ச்சி அதே ஆண்டு லிப்ஸிக்கில் வெளியாயிற்று. அது பெரும்மதிப்பைப் பெற்றது. அவரது சிறந்த அறிவாற்றலை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

ஜூரிச்சில், ரோசா, லியோ ஜோசிக்சஸ் என்னும் போலந்துக்காரரைச் சந்தித்தார். அவர் ரோசாவிற்கு சில

ஆண்டுகள் மூத்த மாணவர். ரோசாவின் சொந்த வாழ்க்கையில் பல ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தியவரும், ரோசாவின் பிற்கால வாழ்க்கை முழுவதிலும் அரசியல் ரீதியாக மிகுந்த செல்வாக்கு வகித்துவரும் இவரே. ஜூரிச்சில் இருந்த போதுதான் இவ்விருவரும் மற்றவர்களுடன் இணைந்து "போலந்து குடியரசின் சமூக ஜனநாயகம்" (Social Democracy of the Kingdom of Poland (SDKP) என்னும் அமைப்பைத் தோற்றுவித்தனர். இது தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையிலும் குறிப்பாக போலந்தின் சுயநிர்ணய விஷயத்திலும் போலந்து சோசலிஸ்ட் கட்சியிலிருந்து (Polish Socialist Party (PPS) பிரிந்து வந்ததாகும். 'போலந்தின் முடியரசு' என்ற சொற்றொடரை அவர்கள் பயன்படுத்தியது 1815 வியன்னா காங்கிரசுக்குப் பிறகு. 'போலந்தின் முடியரசு' அல்லது 'காங்கிரஸ் முடியரசு' (எம்.கே. ஜீவானோவ்ஸ்கி, போலந்து கம்யூ. கட்சி - மேலோட்டமான வரலாறு) என்றழைக்கப்பட்ட ரஷ்யாவின் ஆட்சியில் உள்ள பகுதிகளுக்குள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள சமூக ஜனநாயகவாதிகள் தீர்மானித்தனர். எல்லா நாடுகளின் சுயநிர்ணய உரிமைக்காகவும் சோசலிசவாதிகள் நின்றனர் என்ற அடிப்படையில் இது விவாதத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், SDKP என்ற அமைப்பு ரோசா லக்சம்பர்க் முதலில் வரையறுத்த தேசிய இனப்பிரச்சினைக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்றது. அதாவது போலந்து பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையை ரஷ்ய பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து அடைய வேண்டும். ஆனால் எந்த தேசியப் போராட்டத்திலும் போலந்து முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஆதரவு தரக்கூடாது என்பதாகும். போலந்து முதலாளித்துவ வர்க்கம் தனது தொழில்களுக்கு ரஷ்யாவின் பெரும் சந்தைகள் தேவை என்று ஜாரிசத்துடனும் ரஷ்யப் பேரரசுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் பலமான ஒரு போராட்டத்தை அது நடத்த முடியாது என்ற காரணமும், போலந்து பாட்டாளி வர்க்கம் ஒரு முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான போராட்டத்தைவிட சோசலிசப்

புரட்சிக்கான போராட்டத்தையே நடத்த வேண்டும் என்ற காரணமும் முன் வைக்கப்பட்டன. இக்கருத்து சிலவழிகளில் டிராட்ஸ்கியின் "நிரந்தரப் புரட்சி"க் கோட்பாட்டின் முன்னோடியாய் இருந்தது. சமநிலையற்ற மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சி என்ற விதியின் அடிப்படையில், ரஷ்யாவைப் போன்ற ஒரு பின் தங்கிய நாட்டில் எந்த ஒரு போராட்டமும் முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசு என்ற நிலையில் நின்று விடாமல் நேரடியாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்ல வேண்டியது இன்றியமையாதது என்பது டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையாகும். ரோசா லக்சம்பர்க்கின் பொது வாழ்க்கையில் பெரும்பகுதி ஜெர்மனியில் செலவிடப்பட்டது, என்றாலும் அவரது அந்திம காலம் வரையிலும் SDKPயே அவரது முக்கிய அக்கறையாய் இருந்தது.

1898இல் லக்சம்பர்க் ஜெர்மனிக்குப் போகத் தீர்மானித்தார். அப்போது ஜெர்மனி, வெகுஜன சமூக ஜனநாயகக் கட்சியுடன், சோசலிச உலகத்தின் மையமாகவும், மார்க்சிசத்தின் நிச்சயமான புதுப் பிறப்பிடமாகவும் விளங்கியது. 1913- இல் 13,53,212 பிரதிகள் விற்பனையாகும் 90 தினசரிகளை வெளியிடுகின்ற, 62 அச்சு அலுவலகங்களையும், கிட்டத்தட்ட மூவாயிரம் சம்பளம் பெறும் முழுநேர ஊழியர்களையும் கொண்ட கட்சியாக இது இருந்தது. ("ஜெர்மன் மக்களின் வரலாறு" – ரேமாஸ் ஒலிவிரா எழுதிய நூல் காண்க) 1898 வாக்கிலேயே கட்சி ரீஸ்ட்டாக்கில் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. மேலும் சோசலிச அகிலத்தில் பலம் பொருந்தியதாகவும் காணப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக சமூக ஜனநாயகக் கட்சி (Social Democratic Party) கோட்பாட்டுத் துறையில் புகழ்பெற்றிருந்தது. அறிவுத்திறன் மிக்க பலர் அக்கட்சியிலிருந்தனர். அவர்களுள் ஒளிமிக்க நட்சத்திரமாக 'மார்க்சிசத்தின் போப்' என்று அறியப்பட்ட கார்ல் காவுட்ஸ்கி (1854-1938) இருந்தார். ஜெர்மனியில் போலீசிடமிருந்து எந்தவிதத் தொல்லையுமில்லாமல்

தங்குவதற்குரிய உரிமையைப் பெற, 1898 ஏப்ரல் 19 ஆம் நாள் குஸ்டாவ் லுபெக் என்பவரை மணந்து கொண்டு ஜெர்மன் குடியுரிமை பெற்றார். இது அவர்களுக்கு முழுதும் ஒரு சட்டரீதியான பொய்த் திருமணம். இருவரும் பதிவு அலுவலக வாசலில் பிரிந்து சென்றனர்.

ஜெர்மனியில் லக்சம்பர்க் வருகையும் திரிபு வாதத்தின் மீதான விவாதத்தின் தொடக்கமும் இணைந்திருந்தன. SPD-யின் புரட்சிகர மார்க்சிசம் என்னும் சரியான திட்டத்தை மாற்றி அதனை மிதவாதப் போக்குடைய சீர்திருத்தக் கட்சியாக மாற்ற எட்வர்ட் டெர்ன்ஸ்டீன் மேற்கொண்ட முயற்சியே இத்திரிபு வாதமாகும் (இவர் ஏங்கல்ஸ் தன் வாழ்நாளில் வெளியிட இயலாது விட்டுச் சென்றவற்றைப் பதிப்பிக்கும் உரிமை பெற்றிருந்தார்). லக்சம்பர்க் இந்த விவாதத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவருடைய "சமூக சீர்திருத்தம் அல்லது புரட்சி" என்னும் நூலில் மிகச் சிறந்த முறையில் பெர்ன்ஸ்டீனுக்குப் பதிலளித்தார். பெர்ன்ஸ்டீனின் கருத்தைச் சுற்றி எழுந்த விவாதத்தைத் தொகுத்துக் கூறுகிறார்: "முடிவான நோக்கம் என்பது அது எதுவாக இருந்தபோதிலும்— ஒன்றுமில்லை; இயக்கம் என்பதே எல்லாமாக இருக்கிறது." லக்சம்பர்க் நேரடியாக விஷயத்தின் முக்கியப் பகுதிக்கு வந்து விடுகிறார்:

"சோசலிசத்தை இறுதி லட்சியமாகக் கொண்டிருப்பதே சமூக ஜனநாயக இயக்கத்தை முதலாளித்துவ ஜனநாயகம், முதலாளித்துவ முற்போக்குவாதம் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதுவே தொழிலாளர் இயக்க முயற்சியை முதலாளித்துவ அமைப்பு முறையை சீர் செய்யும் வீண் முயற்சியாக்கி விடாமல் அதை முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிரான வர்க்கப் போராட்டமாக, முதலாளித்துவ அமைப்பு முறையை ஒழிப்பதாக மாற்றுகிறது. பெர்ன்ஸ்டீன் முன் வைக்கும் சீர்திருத்தமா? புரட்சியா? என்ற கேள்விக்கெதிராய் – சமூக ஜனநாயகக்கட்சி வாழ்வா? சாவா? என்ற கேள்வியை முன் வைக்கிறது. பெர்ன்ஸ்டீன் அவரது ஆதரவாளர்களிடம் இந்தக்

கொள்கை மாறுபாட்டிலிருந்து எந்தப் போராட்டமுறையைக் கையாள்வது எந்தவகையான போர்த்தந்திரங்களை மேற்கொள்வது என்பதல்ல நம்முன் உள்ள கேள்வி, சமூக ஜனநாயக இயக்கம் உயிர்த்திருப்பது அல்லது அழிவது என்பதே நம்முன் உள்ள பிரச்சனை என்பதை கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொண்டாக வேண்டும்". (ரோசா லக்சம்பர்க் எழுதிய "சமூக சீர்திருத்தமா? புரட்சியா?" நூல் பக்கம்.7)

இந்த விவாதத்தில் தான் லக்சம்பர்க்கு கட்சியில் பெரும்புகழ் கிட்டியது. ஒரு மார்க்சியக் கொள்கையாளர் என்ற வகையில் தேசிய சர்வதேசிய அளவில் புகழ் பெற்றார்.

SPD-க்கு (ஜெர்மன்) எழுதுதல், சொற்பொழிவாற்றல், பயணம் மேற்கொள்ளல் போன்ற பல்வேறு வேலைகளோடு, அவர் தொடர்ந்து SDKP (போலந்து)யைத் தலைமை தாங்கி நடத்தினார். முக்கியமாக நூல்கள் மூலமாக இதைச் செய்தார். SPD-யில் SDKP-யின் பிரதிநிதியாயிருந்தும் போலந்து பிரச்சனைகளில் SPD-யின் செயற்குழுவின் ஆலோசகராகவும் இருந்தார்.

1905இல் ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டபோது, லக்சம்பர்க் SDKP யின் பணியில் தீவிரப் பங்கேற்கப் போலந்துக்குத் திரும்ப மிகவும் விரும்பினார். ஆனால் உடல்நிலை காரணமாக, 1905ன் பிற்பகுதி வரையிலும் போலந்துக்குப் போகமுடியாமலாயிற்று. (அப்போது உணரப்படவில்லையென்றாலும் புரட்சி வேகம் தணிந்த நிலையிலேயே அவர் போலந்து திரும்பினார்) வார்சாவுக்குத் திரும்பியவுடன் கட்சி வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் பத்திரிக்கைக்கு எழுதுவது, தொழிற்சாலைகளில் சொற்பொழிவு நிகழ்த்துவது ஆகிய பணிகளைத் தொடர்ந்து செய்தார். சில நேரங்களில் அவர் 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்நிலையில் ஜார் அரசாங்கம் நிலைமையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதால் போராட்ட வேகம் தணிந்தது. ரோசா கைது செய்யப்பட்டார். அவர் எந்தவித விசாரணையுமின்றி சில மாதங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார். ஜெர்மன் பிரஜை

என்பது ரஷ்ய அதிகாரிகளுக்குப் பிரச்சனையை ஏற்படுத்தியது. உடல் நலக்குறைவுற்ற காரணத்தால் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். பின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்று கைது செய்யப்படாமலிருந்த ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளைச் சந்தித்தார். பிறகு ஹெல்சிங்கிக்குப் போன போது அங்கு லெனினையும் மற்ற போல்ஷ்விக் பிரிவினரையும் சந்தித்தார். ரோசா பின்லாந்திலிருந்து ஜெர்மனுக்குத் திரும்பினார். அவருடைய போலந்து அனுபவத்திலிருந்தும், ரஷ்யப் புரட்சியைப் பற்றிய அவருடைய ஒட்டுமொத்த மதிப்பீட்டிலிருந்தும் "வெகுஜன வேலைநிறுத்தம், அரசியல் கட்சி, மற்றும் தொழிற்சங்கங்கள்', என்னும் நூலை எழுதினார்.

ஒப்புநோக்கில் அவரது வாழ்க்கையில் 1906-1911 இடையிலான காலம் அமைதியாகக் கழிந்தது எனலாம். அப்போது ஜெர்மன் கட்சியின் மனப்போக்கு எச்சரிக்கையானதாகவும் ரஷ்யப் புரட்சியின் பதட்டமான நாட்களுக்குப் பின் சற்று காலங்கடத்துவதாகவும் இருந்தது. ரோசா 1908இல் பெர்லினில், இருந்த SPD யின் மத்தியப் பள்ளியில் பணியில் சேர்ந்தார். அங்கு அவர் 1914 வரை இருந்தார். அப்பள்ளியில் இருந்த வேளையில் தான் அரசியல் பொருளாதாரம் குறித்துப் பாடப் புத்தகங்கள் எழுதும் முயற்சியில் அவர் மார்க்ஸ் தனது 'மூலதனம்' 2வது புத்தகத்தில் சில பிரச்சினைகளை வெளிப்படுத்த மட்டுமே செய்தார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அவர் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண முயற்சி செய்தார். அதன் விளைவுதான் "மூலதனக் குவியல்" என்ற நூல். (இது ஆங்கில
மொழிபெயர்ப்பில் 1951ல் வெளியிடப்பட்டது).

இந்தப் புத்தகம் இன்றும் அவருடைய மிகப்பெரிய கோட்பாட்டுப் (Theoritical) படைப்பாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் அந்நூல் எழுப்பிய (இப்போதும் எழுப்புகிற) கடுமையான விவாதத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு கருதப்படுகிறது. அவருடைய எழுத்துக்களில் பெரும்பகுதி இன்னும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவில்லை

என்பது விந்தையானதே. எனவே அவரது முழுவாழ்நாள் பணியின் ஒரு சிறு பகுதியை வைத்தே ஆங்கிலம் பேசும் பகுதிகளில் அவரைப் பற்றிய மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தது. அவர் இறந்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் கூட அவரது எழுத்துக்களுள் பல இன்றைய சூழலுக்கும் பொருத்தமுடையவையே.

1911-ஆம் ஆண்டுக்குப் பிறகு வந்த ஆண்டுகள் லக்சம்பர்க்குக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. SPD பிரஷ்யாவின் துயரப் பிரச்சினையின் மீதான போராட்டத்தைத் தொடங்கியது. அதுவரையிலும், ப்ருஷ்யன் டயட் (Prussian Diet) தேர்தலில் மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் ஓட்டுப்போடுவது கடுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இத்தடைக்கு எதிரான போராட்டத்தில் ரோசா முழுமையாகச் செயல்பட்டார். இதே ஆண்டுகளில் ரோசா காவுத்ஸ்கியுடனிருந்த நெருக்கமான அரசியல் ரீதியான தொடர்பை முறித்துக் கொண்டார். அவர் (காவுத்ஸ்கி) சந்தர்ப்பவாதப் பாணியில் செல்வதை தெளிவாகக் கண்டார். இந்த வி யத்தைப் புரிந்துகொள்வதில், ரோசா சர்வதேச மார்க்சிய இயக்கத்தின் சமகாலத்தவர்களைவிட முந்தி இருந்தார். குறிப்பாக லெனின், 1914 இல் உலகப்போர் வெடிக்கும்வரை லெனினுக்கு காவத்ஸ்கியின் (அதன் விளைவாய் SPD தலைமையின்) உண்மையான தன்மை தெரிவிக்கப்படவில்லை. மேலும் இந்த ஆண்டுகளில் தான் 1913இல் ரோசா தமது “மூலதனக் குவியல்” – நூலை எழுதினார்.

உலகப்போர் வெடித்தவுடன் தொடர்ந்து சோசலிஸ்ட் அகிலமும் தகர்ந்தது. லக்சம்பர்க் உடனே அதற்கு எதிராக சமரசமற்ற நிலையை எடுத்தார். இந்த எதிர்ப்பினால் அவர் போர்க்காலம் முழுவதையும் சிறையிலே கழிக்க வேண்டியவரானார். சிறையிலேயே, 1915இல் Accumulation of Capita Anti-Critique புத்தகத்தை எழுதினார். மேலும் அவர் மிகவும் புகழ்ந்து வரவேற்கப்பட்ட ஜூனியஸ் பிரசுரமான (Junius pamphlet) “ஜெர்மன் சமூக ஜனநாயகத்தில் நெருக்கடி” (The Crisis in the German Social Democracy) என்ற நூலையும்

எழுதினார். இது போர் எதிர்ப்பு இடதுசாரிகளை அணி திரள அழைப்பு விடுத்தது. பிரான்ஸ்மெகாங், கார்ல் லீப்னெக்ட், லியோ ஜோசிக்சஸ் ஆகியோர் இப்பணியில் அவருடன் சேர்ந்தனர். இந்தக் குழு இறுதியில் ஸ்பார்டகஸ் (Spartakus bund) பண்ட் என்ற அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தது.

1918 நவம்பர் புரட்சியில் 'கெய்சர்' தூக்கியெறியப்பட்டவுடன் லக்சம்பர்க் விடுதலை செய்யப்பட்டார். அவர் உடனே புரட்சிகர இடதுசாரிகளின் செல்வாக்கை உறுதிப்படுத்தவும் விரிவுபடுத்தவும் முனைந்தார். 1918 டிசம்பரில் ஸ்பார்ட்டகஸ் பண்ட் மற்ற இடதுசாரி குழுக்களுடன் இணைந்து ஒருமாநாடு நடத்தியது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை (KPD) அது தோற்றுவித்தது. லக்சம்பர்க் அந்த மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தினார். புதிய கட்சியின் திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார். போல்ஷ்விக் புரட்சியை ஆர்வமுடன் ஆதரிப்பவரானாலும் விமர்சனமற்ற முறையில் அல்ல என்பது அவருடைய எழுத்திலிருந்து தெளிவாகியது.

1919 ஜனவரி ஆரம்பத்தில் பெர்லின் போலீஸ் தலைமை அதிகாரி எமைல் எய்கோன் என்பவரை பதவியிலிருந்து நீக்கும் முயற்சிக்கு எதிராகத் தங்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக பெர்லின் தொழிலாளர்கள் பல ஆயுதந்தாங்கிய ஆர்ப்பாட்டங்களை தொடங்கினர். எய்கோன் புகழ்மிக்க இடதுசாரி சமூக ஜனநாயக வாதியாவார். குடியரசுவாதிகளின் சமூக - ஜனநாயக அரசின் மறைமுக ஆதரவுடன், இராணுவம், "சட்டம் ஒழுங்காக" நிலைநாட்டும் முயற்சிக்கு அவர் இடையூறாய் இருந்தார். ஸ்பார்ட்கஸ்பண்டின் தலைவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்த போதிலும் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தை கைவிடச் செய்ய முடியாது போனபோது அவர்கள் தாங்களே ஆர்ப்பாட்டங்களில் முன்நின்றனர். இந்த ஆர்ப்பாட்ட காலம் ஸ்பார்டகஸ் வாரம் எனப் பெயர் பெற்றது. இறுதியில் இந்த ஆர்ப்பாட்டம் இராணுவத்தால் மிருகத்தனமாக குருதிப்

பெருக்கெடுக்க அடக்கப்பட்டது. புரட்சிகர சோசலிசவாதிகள் மீது கடுமையான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

1919 ஜனவரி 15-ஆம் நாள் லக்சம்பர்க்கும், லீப்னெக்ட்டும் (புதிய குடியரசுவாதிகளின் சமூக - ஜனநாயக அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள) இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுக் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டனர். லக்சம்பர்க் துப்பாக்கிக் கைப்பிடியால் அடித்து நொறுக்கிச் சாகடிக்கப்பட்டார். பிறகு அவரது உடல் ஒரு கால்வாயில் தூக்கியெறியப்பட்டு சில வாரங்கள் அங்கேயே கிடந்தது. லீப்னெக்ட், தலையின் பின்பக்கம் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய உடல் சவக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு 'சுடப்பட்டுக்கிடந்த அடையாளம் தெரியாத நபர்' என்று உடலை வைத்தனர். லக்சம்பர்க் உயிரோடிருந்திருந்தால் KPD கட்சியின் பிற்கால வளர்ச்சி வேறு விதமாக இருக்கக்கூடும் என்பது சாத்தியமே. அவ்வாறிருந்திருப்பின் அது ஐரோப்பிய வரலாற்றின் போக்கையே மாற்றியிருக்கவும் கூடும்.

இறுதிவரையில் லக்சம்பர்க் வெகுஜனங்களால் ஒரு சோசலிசப் புரட்சியைச் செய்ய முடியும், அவ்வாறே செய்வார்கள் என்ற நம்பிக்கையை மாற்றிக் கொள்ளவே இல்லை. அவர், தான் கொல்லப்படுவதற்கு முன்தினம் இவ்வாறு எழுதினார்:

"வெகுஜனங்களே தீர்மானிக்கும் ஆற்றலுள்ள சக்தி. புரட்சியின் இறுதி வெற்றிக்குக் கட்டப்படும் அடித்தளம் அவர்களே. வெகுஜனங்கள் சோதனைகளை தாங்கினர். இந்தத் 'தோல்வி'யிலிருந்து அவர்கள் உலக சோசலிசத்தின் சக்தியும், பெருமையும் அடங்கிய வரலாற்று ரீதியான தோல்விகளின் தொடர்ச் சங்கிலியில் மேலும் ஒரு கண்ணியைச் செய்தனர். அதனாலேயே இந்தத் தோல்வியிலிருந்து வெற்றி பிறக்கும். நாளை மீண்டும் புரட்சி எழும். ஒளிரும் ஆயுதங்களுடன் அவள் புரட்சி முரசொலித்து உங்களை அச்சுறுத்துவாள். "நான் இருந்தேன், நான் இருக்கிறேன், இருப்பேன்," என்று. ரோசா லக்சம்பர்க்கின் சுதந்திரமும் புரட்சியும் என்ற நூல் பற்றிய கட்டுரையில் எஃப். எல். கார்டால் மேற்கோள்

காட்டப்பட்டது. (காண்க – லியோபாட லேபெட்ஸ் தொகுத்தளித்த 'மார்க்சிய சிந்தனை வரலாறு பற்றிய கட்டுரைகள்' என்ற நூல்.) இதுவே அவரது சொந்தக் கல்லறை வாசகமாக இருந்திருக்கலாம். ஐயத்துக்கிடமின்றி லக்சம்பர்க் மார்க்சியப் புரட்சிகர இயக்கம் உருவாக்கிய மிகச்சிறந்த பெண்மணியாவார். மேலும் அதே அளவில், கொள்கையாளர் என்ற வகையிலும், நடைமுறைத் தலைவர் என்ற வகையிலும் மார்க்சியம் உருவாக்கிய மிகச்சிறந்த நபர்களுள் அவரும் ஒருவர் எனச் சொல்லலாம். அவரது செல்வாக்கு, ஜெர்மனி, போலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் உணரப்பட்டது. இன்னும் பல இளம் மார்க்சிய வாதிகளின் மீது அவர் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறார்: அவரைப் பற்றி லெனின் கூறுவது: "ரோசா லக்சம்பர்க்... நமக்காக இருந்தார், இருக்கிறார், ஒரு கழுகைப் போல". (கூர்மையான நோக்குடன்).

லக்சம்பர்க்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜே.பி. நெட்டில் அவரைப் பற்றி எழுதினார்:

"இன்றைய சூழலில் அவரது எல்லா படைப்புகளையும் நியாயப்படுத்தவோ முழுத் தொடர்புடையவையென்று கூறவோ நான் முயலவில்லை. அதிகபட்சமாக சொல்லக் கூடியதெல்லாம் சில ஒதுக்கப்பட்ட அம்சங்கள் தன்னியல்பு பெறுகின்றன என்பதே. ஒரு அரசியல் எழுத்தாளரின் படைப்புகள் ஐம்பதாண்டுகால நிகழ்வுகளோடு ஒரு சில அம்சங்களிலேனும் தொடர்புடையதாய் இருக்கின்றன என்பது, குறிப்பாக அந்த எழுத்தாளர் பொதுத் தத்துவத்தில் அக்கறை காட்டவில்லை, சமகால நிகழ்வுகளில் பங்கேற்கவும் அவற்றை ஆராயவுமே செய்தார் என்ற நிலையில் நிச்சயமாய் அது அவரது சிறந்த அறிவாற்றலின் அடையாளமேயாகும்" (ஜே.பி. நெட்டில் எழுதிய "ரோசா லக்சம்பர்க் பக்கம் 6:7)

இவரே, நான் வாசகருக்கு அறிமுகப்படுத்த விரும்பும் எழுத்தாளர். இவர் தன் வாழ்நாள் முழுவதையும் ஆர்வமுடன் ஒரு கொள்கைக்கு அர்ப்பணித்து அதற்காகவே வாழ்ந்து

அதற்காகவே உயிர்துறந்த ஒரு பெண்மணி. இப்போராட்டம் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கொடுமைகளிலிருந்து உழைக்கும் வர்க்கத்தின், உண்மையில் மனிதகுல முழுமையின் விடுதலைக்கான போராட்டமாகும்.

மொழி பெயர்ப்பு: எம்.கே. ராயன்

மொழிபெயர்ப்பாளர்களின் குறிப்புகள்

லக்சம்பர்க்கின் இந்த வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு 1972இல் Monthly Review வெளியிட்டுள்ள, லக்சம்பர்க்கின் Accumulation of Capital – An-Anti Critique என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் "தொழிற்சங்கங்களின் பொருளாதார சீர்திருத்தவாதத்துக்கும் அரசியல் நடவடிக்கைக்கும் இடையே இருந்த இடைவெளியை இட்டு நிரப்பும் முயற்சியாய் இருந்தது. மேலும் 'வெகுஜன வேலை நிறுத்தம் என்பது இனி அராஜக வாதத்தின் கருவியல்ல, இவ்வகையான ஏங்கல்சின் முந்தைய விமர்சனம் இப்போது தவறாக முன்வைக்கப்படுகிறது, எனத் தெளிவுபடுத்துவதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

- David Mclellan, "Marxism After Marx" P-48.

இந்நூல் மற்றொரு நிகழ்ச்சியையும் குறிப்பிடுகிறது. "ஜெர்மனியில் சமூக ஜனநாயகத்திலிருந்து கம்யூனிச இயக்கம் பிரிவதை சுட்டுகிறது" என்று ரேடக் (Radek) கூறுகிறார்.

– Ibid – P – 50

3. இதைப்பற்றி ஜார்ஜ் லூகாக்ஸ் இவ்வாறு கூறுகிறார். மார்க்சியக் கொள்கையில் மறுபிறப்பை உருவாக்கிய இரு அடிப்படை ஆராய்ச்சிகள் ரோசா லக்சம்பர்க்கின் 'மூலதனக் குவியலும்' லெனினின் அரசும் புரட்சியும் ஆகும். இவ்விரு நூல்களுக்கும் இளம் மார்க்சின் முறை பயன்படுத்தப்பட்டது'.

George Lukacs, History and class conscious, p. 34 to 35

மேலும் லூகாக்ஸ் கூறுகிறார்.

"ரோசா லக்சம்பர்க் மிகச் சரியாக மார்க்ஸ் விட்ட இடத்திலிருந்து தொடங்கி, அவரது (மார்க்சின்) நோக்கிலேயே பிரச்சினைகளை தீர்க்க" முயல்கிறார்.

- ibid p:31

4. "தேர்தல் சீர்திருத்தங்களுக்காக 1910இல் நடந்த அணி அணியான வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும் சற்றே தீவிரப்படுத்தப்பட்டது. இதுவே காவுத்ஸ்கிக்கும், லக்சம்பர்க்குக்கும் இடையிலான பிளவுக்கு வழிகோலியது. காவுத்ஸ்கி, ரோசா லக்சம்பர்க்கின் 'இப்போது என்ன? என்ற கட்டுரையை – அது வெகுஜன வேலை நிறுத்தத்தையும் குடியரசு வாதத்தையும் முன் வைத்தது என்பதால் (காவுத்ஸ்கி தன்) பத்திரிக்கையில் பிரசுரிக்க மறுத்துவிட்டார்".

- David Mclellan, Marxism After Marx, P: 53

5. "அவர், போல்ஷிவிசத்தின் ஆதரவான விமர்சகராக இருந்தார்.

- C. Wright Mills, The Marxists, P. 147

3. லெனினின் கலை இலக்கிய ரசனைகள்

கலை – இலக்கியம் பற்றிய அழகியல் கோட்பாடு எதையும் லெனின் உருவாக்கவில்லை. அதற்கு முதன்மையான காரணம் 'நுனிப்புல் மேய்தல்' என்பதை அவர் வெறுத்ததே ஆகும். தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட விசயங்களை, ஆழமாக, கசடறக் கற்பதுதான் அவரது இயல்பு. இரஷ்யச் செம்மை இலக்கிய மரபில் ஊறித் திளைத்தவர் லெனின். புரட்சி என்ற ஒரே குறிக்கோளுக்கு அனைத்தையும் உட்படுத்திய லெனினிடம் பயனீட்டுக்கொள்கை மேலோங்கியிருந்ததில் வியப்பில்லை. இக்கொள்கைக்கு ஊற்றுக் கண்ணாக இருந்தவர் செர்னிெ வ்ஸ்கி ஆவார்.

மார்க்ஸ் – ஏங்கல்ஸ் போல இசை, நாடகம், ஓவியம் சிற்பம் போன்ற நுண்கலைகளில் அத்தனை பரிச்சயமும் பயிற்சியும் லெனினுக்கு இருக்கவில்லை. நுண்கலைகள் பற்றிய ஏராளமான விசயங்கள் மீது தன்னால் கவனம் செலுத்த முடியவில்லையே என்ற அங்கலாய்ப்பு அவருக்கு இருந்தது. இசையில் அவருக்கிருந்த நாட்டமும் மட்டுக்குட்பட்டதுதான் – பீத்தோவனின் 'அப்பே னிட்டா' போன்ற படைப்புகளை, அவர் தனது பயனீட்டுக் கொள்கையை ஒதுக்கிவிட்டு ரசித்தபோதிலும். ஓவியத்துறையில் அவருக்குப் பரிச்சயம் இல்லை என்றே சொல்லலாம். இத்தாலிய, பிரெஞ்சு, டச்சு, ஜெர்மானிய ஓவிய மரபுகளுக்கும் அந்நாடுகளில் ஓவியத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பரிசோதனைகளுக்கும் இணையானவற்றை ரஷ்யாவில் காணமுடியாது. கவிதையில் மாயகோவ்ஸ்கி போன்றோர் செய்த புதுமைகள் லெனினுக்கு கவர்ச்சியூட்டாதது போலவே, ஓவிய சிற்பத் துறையில் மேற்கொள்ளப்பட்ட புதுமைகளும் அவருக்கு உற்சாகம் தரவில்லை. அவை தனக்குப் "புரியவில்லை என்றும் "ராட்சசத்தனமானவை" என்றும் அவர் கூறியதுண்டு. ஆனால் அவரது ஒப்புதலின்மையையும் மீறி மாயகோவ்ஸ்கியால் கவிதைத் துறையில் ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், ரசனைகள் ஆகியவற்றை லெனின் கலை

இலக்கியக் கோட்பாடாக ஒருபோதும் உருவாக்கவில்லை; அதைத்தான் கலைஞர்கள் பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டதுமில்லை.

ஒரு விசயம் தனக்குப் பிடிக்கவில்லை, புரியவில்லை என்பதை வெளிப்படையாகக் கூறிய லெனின், அதை இன்னும் சரியாகப் படித்து அல்லது கற்று அதன் பிறகு மீண்டும் விவாதிப்பதாக ஒப்புக் கொண்டதுண்டு. 'கறாரான' பாட்டாளி வர்க்க இலக்கியம் கலை என்ற ஒன்றை செயற்கைப் பண்ணைகளில் உருவாக்கிவிட முடியாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுகளும் பழைய சமுதாயத்தின் அறிவு, கலை – இலக்கிய கருவூலங்களைச் சுவீகரித்துக் கொள்ளவும் அவற்றின் தொடர்ச்சியாகவே புதிய கலாச்சாரத்தைப் படைக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார். புரட்சியின் தலைவரான லெனின், இளம் ஓவியக் கலைஞர்கள், மாணவர்கள் ஆகியோரிடையே ஒரு நண்பனாக, சம வயதுள்ள ஒரு தோழனாகப் பழகினார். இக்கலைஞர்களும் மாணவர்களும் லெனினுடன் துணிச்சலாக வாதிட்டனர்; அவரது கருத்துகள் சிலவற்றை மறுத்தனர். லெனினின் விசாலமான பார்வைக்குச் சான்றாக சில நினைவுக் குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

– ஆசிரியர்

ரஷ்ய இலக்கியத்தின் அருமையான பகுதிகள்

I – என். வாலந்தினோவ்

மிக்கேல் ஸ்படினோவிச் ஓல்மினஸ்கி, லெனினிடம் கூறியதாவது:–

“விளாதிமிர் இலிச், நீங்கள் சாம்சனோவின் கருத்துகளை அறிந்தால் அவற்றை அருவெறுப்பது நிச்சயம். நிலப்பிரபுவின் மகனான அவர் தன்னையறியாது தன் சுயரூபம் வெளிப்படுமாறு பேசத் துவங்கியதும் குட்டு வெளிப்பட்டு விடுகிறது. தன் கிராமத்துப் பண்ணைகளைப் பற்றி அவர் பிதற்றுவதைப் பாருங்கள்: பூக்களைப் பற்றியும், அவை பதினாறு வயது பருவப் பெண்களைப் போல்

மணப்பது பற்றியும் அவர் பேசுகிறார். எலுமிச்சை, பிரப்ப மரங்களின் பற்றியும் அழகைப் பற்றிப் பேசும்போது, மனிதன் அப்படியே சொக்கிப் பேசுகிறார். அந்த அழகிய எலுமிச்சை மர வரிசைகளாக கொண்ட நிழற்பாதைகளில் பண்ணையார்கள் தம் குடியாள்களையும் படியாள்களையும் பிரப்பங்குச்சிகளால் விளாசுவது வழக்கம். இதை மறந்துவிட ஒரு புரட்சிக்காரனுக்கு உரிமையில்லை. சாம்சனோவ் கதைக்கும்போது, தன் பிள்ளைப் பருவச் சூழலுக்குத் திரும்பிப்போக அவருக்குக் கொள்ளை ஆசை என்பதை என்னால் காணமுடிகிறது. இத்தகைய உணர்ச்சிகளுக்கு ஆட்படுவது புரட்சிக்காரனைப் பொறுத்த வரையில் அபாயகரமானதாகும். முதலில் நீங்கள் அதற்கு ஏங்குவீர்கள். விரைவில் நாமும் ஒரு சின்ன பண்ணையை வாங்கிவிட்டால் என்ன என நினைப்பீர்கள். பின் மிக விரைவில் நீங்கள் உங்கள் குடியாள்கள் விடாமல் ஒழுங்காக வேலை செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பீர்கள். அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் உங்கள் எலுமிச்சை மரநிழற் பாதையில் ஒரு தூளியில் சவுகரியமாகச் சாய்ந்துகொண்டு கையில் ஒரு பிரெஞ்சு நாவலுடன் அரைத்தூக்கம் போட விரும்புவீர்கள்".

லெனின்... தன் அரைக்கோட்டின் சட்டைக் கைகளில் தன் பெரு விரல்களை நுழைத்துக் கொண்டார். பதில் சொல்லத் துவங்கினார்... சுருக்கெனத் தைக்குமாறு, வெளிப்படையான எரிச்சலுடன் அவர் பேசினார்:-

"சரிதான் மிக்கேல் ஸ்டீபனோவிச், நீங்கள் கூறியது எனக்கு வியப்பூட்டுகிறது. நீங்கள் சொல்வதைக் கவனித்தால் ரஷ்யஇலக்கியத்தின் பல அருமையான பகுதிகளையும் தீங்கு பயப்பவை எனக் கருதவேண்டும் எனத் தோன்றும். எனவே அவற்றைப் பிய்த்தெடுத்து எரித்துவிடத் தோன்றும். நீங்கள் கூறுவது, துர்கனேவ், டால்ஸ்டாய், செக்கோவ் போன்றோரின் படைப்புகளின் மிகச்சிறந்த பகுதிகளைத் தாக்குவதாக உள்ளது. இதுகாறும் நமது இலக்கியத்துக்கு நில உடமைப் பிரபுத்துவம்தான் பிரதான பங்களிப்பைச் செய்திருக்கிறது. அவர்களின் நிதிவசதியும் வாழ்க்கை முறையும் தான் (இதில்

எலுமிச்சை மர நிழற்பாதைகளும் பூம்பாத்திகளும் அடங்கும்) அவர்கள் கலைப்படைப்புகளை உருவாக்குவதை சாத்தியமாக்கின. இப்படைப்புகள் ரசனையின் ஊற்றாய் விளங்குகின்றன – ரஷ்யராகிய நமக்கு மட்டுமல்ல கலாரசனையுள்ள எவருக்கும். அப்பழைய எலுமிச்சை மரவரிசைகள் பண்ணையடிகளின் கைகளால் நடப்பட்டதாலோ அல்லது குடியாட்கள் அவற்றில் கட்டிவைத்து அடிக்கப்பட்ட தாலோ அவை ரம்மியமானவை அல்ல என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இது நரோத்னிக்குகளைப் பிடித்துள்ள ஒருவகை மிகவும் எளிமைப்படுத்தும் போக்காகும். மார்க்சியராகிய நாம் இப்போக்கை வென்று வந்துள்ளோம். நீங்கள் சொல்லும் கருத்து சரியானால், புராதனக் கோயில்களின் அழகைப் பாராமல் அவற்றைப் புறக்கணித்திருக்க வேண்டிவரும். ஏனெனில் அடிமைமக்களை காட்டுமிராண்டித்தனமாகவும் குரூரமாகவும் சுரண்டித்தானே ஆண்டைகள் அவற்றைக் கட்டுவித்தனர்? பண்டைப்பெரும் நாகரிகமானது... முழுக்கவும் அடிமைச் சமூகத்தின் அடிப்படையிலிருந்தே வளர்ந்தது. நீங்கள் இப்படி கோபித்துக் கொள்ளும் அளவுக்கு சாம்சனோவின் உணர்ச்சிகளாலோ சொற்களிலோ எதுவும் தவறானதாக எனக்குப் படவில்லை. அந்த ஆள் ஹெர்சனைப் படித்திருக்கிறார். தான் பிறந்த இடத்தை நினைவூட்டுவது போலமைந்த பகுதிகளால் கவரப்பட்டிருக்கிறார். எனவே ரஷ்யாவுக்குத் திரும்ப வேண்டும் என்ற தாயகநாட்டம் அவரை வருத்தியிருக்கிறது. எந்த அளவுக்கென்றால், கூடிய சீக்கிரம் இந்த நச்சுப்பிடித்த ஜெனிவாவைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். சரி, இந்த விருப்பத்தில் என்ன துர் எண்ணம், புதிர் அல்லது வினோதத்தைக் கண்டுவிட்டீர்கள்? ஒன்றும் கிடையாது. உங்கள் நினைப்புதான் குழப்பகரமாயிருக்கிறதே தவிர அவரதல்ல. சாம்சனோவ் கிராமப் பண்ணைகளின் எலுமிச்சை, பிரப்ப மர வரிசைகளைக் கொண்ட நிழற்பாதைகளையும் பூம்பாத்திகளையும் விரும்புவதைக் கொண்டு, அவர் நிலஉடைமை மனப்பாங்கால் பீடிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே அவர் விவசாயிகளைச் சுரண்டுவதில் போய் வீழ்வது

நிச்சயம் என நீங்களாக கற்பனை செய்து கொள்கிறீர்கள். அப்படியானால் என்னைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? நானும் என் தாத்தாவுக்குச் சொந்தமான கிராமத்துப் பண்ணை ஒன்றில் வசித்திருக்கிறேன். ஒரு விதத்தில் நானும் நில உடைமை மேல்குடியின் வழி வந்தவன்தான், இதெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பு. இருந்தும் நான் எங்கள் பண்ணையில் வாழ்ந்தபோது பெற்ற இனிய அனுபவங்களை இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். அதன் எலுமிச்சை மரங்களையோ பூக்களையோ நான் மறக்கவில்லை. அப்படியானால் என்னை நீங்கள் என்ன செய்வீர்கள்? சின்ன வயதில் நான் வைக்கோல் போர்களுக்குள் இருந்துகொண்டு பொழுதுபோக்குவது வழக்கம் – ஆனால் அது நான் அடுக்கிய போர்களல்ல. ஸ்டிராபெர்ரி, ராஸ் பெர்ரிப் பழங்களைப் பறித்துச் சாப்பிடுவது வழக்கம் – அவை நான் நட்ட செடிகளல்ல. கறந்த பாலை அப்படியே குடிப்பது வழக்கம் – அது நான் கறந்த பாலல்ல. இவற்றையெல்லாம் இன்று நினைத்துப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. சாம்சனோவைப் பற்றி நீங்கள் சற்றுமுன் சொன்னதில் இருந்து இத்தகைய நினைவுகள் எல்லாம் ஒரு புரட்சிக்காரனுக்குத் தகாதவை என நீங்கள் கருதுவதாய்த் தெரிகிறது – அப்படியா? நீங்கள் மிகவும் மிகைப்படுத்துகிறீர்கள் அல்லவா? இதுபற்றி கவனமாக சிந்தித்துப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் மிக்கேல் ஸ்டீபனோவிச்."

இளம் கலைஞர்களுடன்
லெனின் நினைவுக் குறிப்புகளிலிருந்து
II. எஸ். சென்கின்

குரோபாட்கின்னின் நினைவுமலருக்காக நான் வரைந்திருந்த ஓவியத்தை ஒருவர் கொண்டு வந்தார். விளாதிமிர் இலிச் (லெனின்) பற்கள் தெரியச் சிரித்தார். படத்தை நோக்கினார். பின் என்னைப் பார்த்தார். இது எதைக் குறிக்கிறது என்றார்.

"என் ஓவியம் குறிப்பாக எதையும் பிரதிநிதித்துவம் செய்வதற்காக வரையப்பட்டதல்ல. பழைய ஓவியர்கள்தான் தம் படைப்புகளில் தாம் ஏதோ ஒன்றைப்

பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்வார்கள். இப்படிச் சொல்வதன் மூலம் தம்மையும் பிறரையும் அவர்கள் ஏமாற்றிக் கொண்டார்கள். ஏனெனில் அத்தகைய காரியத்தை எவரும் இதுவரையில் செய்ய முடிந்ததில்லை! எங்களைப் பொறுத்தவரை நாங்கள் இப்போது கற்றுக் கொண்டிருக்கிறோம். எங்கள் பணி கலையை அரசியலுடன் இணைப்பதே ஆகும்" ஆகிய விசயங்களை என்னால் முடிந்தவரையில் விரிவாக லெனினுக்கு விளக்க முயன்றேன்.

விளா திமிர் தன்னிலைக்குத் திரும்ப சற்றுநேரம் எடுத்தது. பின் ஒரு சுருக்கமான கேள்வியைத் தொடுத்தார்.

'அப்படியா!... ஆமாம், கலையை அரசியலுடன் எப்படி இணைக்கிறீர்கள்? அந்த 'இணைப்பை'த் தாமே கண்டுபிடித்து விட முயல்வதுபோல் என் ஓவியத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

'அது... விளாதிமிர் இலிச், இன்னும் எங்களால் அதைச் சாதிக்க முடியவில்லை. ஆனால் அதை நாங்கள் சாதிப்போம். இப்போதைக்கு நாங்கள் எங்களைத் தயாராக்கி வருகிறோம். எப்படி அதை வசப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொள்வதற்கான எல்லா அடிப்படைக் கூறுகளையும் இன்று நாங்கள் பரிசீலித்து வருகிறோம்...'

இரண்டு மூன்று வாக்கியங்களில் என் மனதிலிருந்ததை என்னால் விளக்கிவிட முடியவில்லை என்பதை உணர்ந்தேன் குழம்பத் துவங்கினேன்! விளாதிமிர் இலிச் என் சங்கடத்தைப் போக்கினார்.

'நல்லது, இன்னும் இத்துறையில் நான் கற்றுக்கொள்ள வேண்டிய சங்கதிகள் உள்ளன என்பதை உணர்கிறேன். அதை நான் செய்தபின் திரும்பி வருவேன். அப்போது நாம் மீண்டும் விவாதிப்போம்'.

III. எம் கார்லோவ்ஸ்கி

அந்த இளம் மாணவர்கள் நவீன கலைப்போக்கைச் சேர்ந்தவர்கள். இயல்பாகவே ஆக்கவாதத்தில் (Constructionism) மட்டுமே அக்கறையுடையவர்கள். அவர்களில் ஒரு சகிக்க முடியாத கலைஞன் இருந்தான். அவனை நாங்கள்

எல்லோரும் 'சாயம் பூசுபவன்' என வெறுப்புடன் அழைப்போம். ஆனால் அவன் எதற்கும் கலங்காமல் தொடர்ந்து தன் யதார்த்தவாத ஓவியங்களை உருவாக்கி வந்தான். அவனது படைப்புதான் லெனினுக்கு மகிழ்ச்சியளித்தது. 'பாருங்கள் – இது எனக்கு தெளிவாக இருக்கிறது. இதை நான் புரிந்து கொள்கிறேன். உங்களுக்கும் புரியும். தொழிலாளிகளும் புரிந்துகொள்கிறார்கள். எல்லாருக்கும் இது புரிகிறது. ஆனால் உங்கள் படங்களில் காண்பதென்ன என்பதைக் கூறுங்களேன். நீங்கள் வரையும் படங்கள் அனைத்திலும் மனித முகங்களில் மூக்கையும் காணோம் முழியையும் காணோம்!

லெனின் மென்மையாய்ப் பேசிக்கொண்டிருந்தார் லேசான எள்ளற் சிரிப்புடனும் சிலபோது ஒரு தந்தைக்குரிய கண்டிப்புடனும் அவர் பேசினார். நாங்கள் பேசும்போது அக்கறையுடன் கவனித்தார்.

'நான் புஷ்கினைப் புரிந்துகொள்ள முடிகிறது. அவரை நான் உயர்வாக மதிக்கிறேன். நெக்ரசோவ் மீதும் எனக்கு மதிப்புண்டு. ஆனால் மாயகோவ்ஸ்கி இருக்கிறாரே, அவரை என்னால் புரிந்து கொள்ளவே முடியாது. இதுபற்றி வருந்துகிறேன்'

நடேழ்டா கான்ஸ்டான்டிநோவ்னா சிரித்தார். 'நீங்கள் மாயகோவ்ஸ்கியின் நூல்களை எடுத்துப் படிக்க வேண்டும் என்று எத்தனை தடவை நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்! அவரையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அதை விட்டு நீங்கள் இப்படி முடிவுக்கு வருவது கூடாது!

யுனோவிஸ் குழு எழுதிய நூல் ஒன்றை லெனின் கண்ணுற்றார். யுனோவிஸ் என்பதின் விரிவாக்கம் (புதிய கலைத்தொகுப்பாளர் அமைப்பு) எனத்தெரிந்து கொண்டார். லெனின் சிரித்தார் – தோழர்களே, இதை மட்டும் நினைத்துப் பாருங்கள்; யு-னோ-விஸ்: இது எப்படி இருக்கிறது?! இப்படிப் பெயர் வைத்தால் யாருக்குப் புரியும்?

மாணவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை - விளாதிமிர் இலிச், சோவ் நார்கம் (SOVNARKOM = Council

of the People's Commissars) என்பது மட்டும் புரிகிற பெயரா? சோவ்-நார்கம்: இது எப்படி இருக்கிறது? – என்றார்கள்.

லெனின் கூறினார்: நீங்கள் சொல்வது சரிதான், தோழர்களே. சோவ்-நார்-கம் என்பதும் புரிகிறதாயில்லை. இலக்கியத்துறையில் இப்படிச் சுருக்கப் பெயரைத் தலைப்பாக வைக்கக்கூடாது. மிகவும் அபூர்வமான சந்தர்ப்பங்களில்தான் இப்படிப் பெயர்கள் வைக்கப்படுகின்றன. இந்த ஒரே காரணத்தால்தான் நாம் அவற்றை சகித்துக் கொண்டு போகவேண்டியிருக்கிறது.

உரையாடல் நீண்டு சென்றது... லெனின் பிற்பாடு மீண்டும் மாணவர்களைச் சந்திப்பதாக வாக்களித்தார்.

IV. என். ஆல்மன்

யாரோ லெனினிடம் என்னை வருங்கால வியலாளன் (Futurist) என்று சொல்லியிருக்க வேண்டும். என்னைப் பார்த்தவுடன் எடுத்த எடுப்பில் எனக்கு அவரது மார்பளவு உருவத்தை 'பியூச்சரிசப் பாணியில்' சிற்பமாய் வடிக்கும் உத்தேசமுண்டா என்று கேட்டார்! நான் அவரைத் தத்ரூபமாக வடிக்க விரும்புவதாய்ச் சொன்னேன். எந்த முடிவு எடுத்துக் கொள்கிறோமோ அதுவே நமது படைப்புக்கான அணுகலை நிர்ணயிக்கும் என்றேன். பின் அவர் 'பியூச்சரிஸ்ட்' கலைக்கு சில மாதிரிகளைக் காட்டுமாறு என்னிடம் கேட்டார். அவற்றைப் பார்த்துவிட்டு சொன்னார் - எனக்கு ஒன்றும் புரியவில்லை. இவற்றைப் புரிந்துகொள்ள ஒருவர் நிபுணராக இருந்தால்தான்' உண்டு.

நான் வடித்த லூனசார்ஸ்கியின் மார்பளவுச் சிலையின் புகைப்படத்தை அவருக்குக் காட்டினேன். லூனசார்ஸ்கியின் கண்களில் ஏதோ வித்தியாசம் தென்பட்டது அவருக்கு. 'லூனசார்ஸ்கியின் முகத்தில் எல்லாரும் பார்த்துப் பழக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி இச்சிலையில் இல்லை – அது தான்' என்றேன்.

'அப்படியானால், ஒரு சிலையில் மூக்குக்கண்ணாடியை எப்படிப் பொருத்துவீர்கள்?' என்றார் லெனின்!

மற்றொரு சந்தர்ப்பத்தில் லெனின் நான் தினமும் எத்தனை மணிநேரம் வேலை செய்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார்: 'வழக்கமான வேலை நேரம்தானா, அதைவிடக் கூடுதலா அல்லது குறைவா? என வினவினார்.

V. ஒய் யாகவ்லேவ்

'... பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் பற்றி தோழர் லெனினின் கருத்துக்களை இங்கு தொகுத்துக் கொள்ள விரும்புகிறேன். இத்தலைப்புப் பற்றி அவரிடம் ஐந்து முறை உரையாடியிருக்கிறேன். அவரது வாதத்தின் சாரம் இதுதான். பாட்டாளிவர்க்கக் கலாச்சாரத்தை ஒருவித சோதனைச் சாலைப் பண்டம் போல பாவிப்பதை அவர் எதிர்த்தார். குஞ்சுபொறிக்கும் இயந்திரம் மூலம் குஞ்சுகளை உருவாக்குவது போல் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டையும் யந்திரத்தனமாக உருவாக்கிவிடலாம் என்ற எண்ணமே கூட ஆபத்தானது என கருதினார். ரெடிமேட் பாட்டாளி. வர்க்கப் பண்பாடு (புராலட் கல்ட்) அத்தகைய ஒரு குஞ்சு பொறிக்கும் யந்திரம் தான், செயற்கை வளர்ப்புப் பண்ணைதான்.

சோவியத் அதிகாரத்தின்கீழ் மக்களனைவரும் கல்வி பெறுவதற்காக அமைக்கப்படும் அடிப்படைகளில் மீதே பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் அமையமுடியும் என்பதில் லெனின் உறுதியாயிருந்தார். இப்போது நம்மில் படித்தவர் மிகமிகக் குறைவு. சோவியத் ஆட்சியின் விளைவாக நம்மிடையே படித்தோர் தொகை கோடிக் கணக்கில் பெருகிவிடும்போது தான் புதியவகைக் கலாச்சாரமும் புதியவகை இலக்கியமும் மெய்யாகவே நம்மிடையே நிலவ வரும். நமது சோவியத் அரசியல் முதலாளியக் கலாச்சாரத்தின் நல்ல சாதனைகள் அனைத்தும் சாதாரண மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டியது அத்தியாவசியமானதாகும். கோடிக்கணக்கானோர் இச்சாதனைகளை தமதாக்கிக் கொள்ளும் போதுதான் நிஜமான தளம் அமையும். அதன்மீது ஒரு உண்மையான கலாச்சாரமும் வளரத்துவங்கும். அது முதலாளியப் பண்புள்ளதாக இராது. இதனால்தான் லெனின்

தொழிலாளர்களுக்குப் பின்வருமாறு கூறுவது வழக்கம் – முதலாளியக் கலைகளைக் கற்றுத் தேர்ச்சி பெறுங்கள். எங்கோ ஓரிடத்தில் ஏதோ ஒரு பெயரைக் கொண்ட நிறுவனத்தில் பாட்டாளிவர்க்கக் கலாச்சாரம் என்ற மரம் வளர்ந்து நிற்கிறது என்பதான கட்டுக்கதைகளால் உங்களை எவரும் ஏமாற்ற அனுமதிக்காதீர்கள்.

செயற்கை வளர்ப்புப் பண்ணைகள், குஞ்சு பொறிக்கும் யந்திரங்கள் என்ற ரீதியில் சிந்திப்போர் படைப்பு உருவாதலின் நிகழ்முறைகளைப் பற்றி எதுவும் புரிந்திருப்பதில்லை. அந்தக் காலத்திலேயே லெனின் ஏககாலத்தில் போல்ஷாய் அரங்கையும் புராலட் கல்ட் அமைப்பையும் ஒருங்கே இழுத்து மூடும்படி யோசனை கூறினார். இரண்டும் அவசியமற்றவை என்று கருதினார். இது தோழர் லெனினின் மிகப் பிரத்தியேகப் பண்பாக இருந்தது.

குறிப்புகள்:

1. Valentinov, (Fine Pages of Russian Literature') Encounters with Lenin (London, Oxford University Press, 1968) Trans. by Paul Rosta & Brian, Pearce) PP-105-7.
2. S. Senkin, Quoted in E. Dobin, Lenin I Iskusstro P.225, (TD P. 192)
3. M Garlovsky, Quoted in ibid PP. 225-6 (192-3)
4. M. Garlovsky, Quoted in ibid P. 138, (P.193)
5. N. Altman, Quoted in ibid PP. 226-7, (PP. 193-4)
6. Y. Yokavlev, Quoted in ibid PP. 229, (PP. 194-5)

4. இந்தியாவின் பிளவுண்ட நிலை
– யேன் மிர்தால்

நாங்கள் சுராஜின் வீட்டில் ஐந்துமணி நேரம் இருந்தோம். காப்பி குடித்தபடி இந்தியாவின் வளர்ச்சிகளைப் பற்றி விவாதித்தோம். அதாவது மற்றவர்கள் விவாதிக்கையில் நான் குறிப்பெடுத்துக் கொண்டும் அவ்வப்போது கேள்வி கேட்டுக் கொண்டும் இருந்தேன். சுராஜ் ஆந்திராக்காரர். பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார். நக்சலைட் என்பதாலும் சிரீகாகுளம் விவசாயிகள் இயக்கத்தில் பங்கு பற்றியவர் என்பதாலும் 1970 முதல் பல தடவைகள் சிறையிடப்பட்டிருந்தார்.

சுராஜ் சொன்னார்: நான் ஹெகலியவாதியல்ல. வரலாற்றைத் தீர்மானிப்பது அருவமான சக்திகளல்ல.

மக்கள்தாம் தம் போராட்டங்கள் வழியாக வரலாற்றைச் சமைக்கிறார்கள். வரலாற்றின் உந்து சக்தி மக்கள் தாம். போராடுவது மக்களின் உரிமை. அதனால்தான், இந்திய கிராமத்தை முதலாளியம் அழித்த விசயம் பற்றி எழுதுவது அபத்தமானது என்றும் மார்க்சின் கூற்றைத் திரிப்பதாக ஆகும் என்றும் நான் கருதுகிறேன். "வரலாற்றுச் சக்திகளின் தர்மங்களுக்கு உட்படாத செயல்பாட்டால்தான் சமுதாயம் முன்னேறியுள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது" என்பது இப்பண்டிதர்களால் திரிக்கப்படும் மார்க்சின் கூற்று. 1850களில் இங்கிலாந்திலிருந்தபடி மார்க்ஸ் இது போன்றதொரு கருத்தைக் கூறியிருப்பதற்கான காரணத்தை இன்று நாம் விளக்கிவிட முடியும். இந்தியாவைப் பற்றி அவருக்குப் போதிய விவரங்கள் கிடைக்கவில்லை. எனவே மாறாத கிராம சமூகம், செயலற்ற மக்கள் திரள் என்ற ஐதீகத்தை அவர் நம்பிவிட நேர்ந்தது. எதிர்ப்புரட்சியின் கீழிருந்த ஐரோப்பாவின் அதிகாரபூர்வ ஹெகலியத்தில் நீங்கள் இதற்கு ஓரளவு விளக்கம் காணலாம். இருப்பினும் பெரும்பான்மையான இந்திய அறிவாளிகள் (உதாரணத்துக்கு ஏ.ஆர். தேசாயைப் போன்றோர்) 'வரலாற்றுச் சக்திகள்'என்ற

அருவமான கருத்தை முதன்மைப்படுத்தி, அதில் போராடும் மக்கள் மறைந்துபோகும்படிச் செய்துவிட்டனர். அவர்கள் இப்படித் தான் மார்க்சியத்தைப் படித்து புரிந்து கொள்கிறார்கள் என்பது மட்டுமல்ல விசயம், மார்க்ஸ் ஏங்கல்சின் படைப்பிலிருந்து, தங்களுக்கு முக்கியமானது என்று படுவதைத் தெரிவு செய்து கொள்கிறார்கள். இப்படித் தெரிவு செய்வதுகூட சமூக ரீதியாகத் தீர்மானிக்கப்படுகிறது. இது மார்க்சியருக்கும் பொருந்தும். இதற்குக் காரணம், இந்தியாவின் 'பிளவுண்டநிலை'க்கு அவர்கள் பலியாகி விட்டதுதான்.

இந்தியாவின் பிளவுண்டநிலை என்று நான் கூறுவதை பின்வருமாறு சுருக்கமாய் குறித்துக்காட்டலாம்.

காலகட்டம்	சமூகப் பண்பாட்டுப் பாத்திரம்	அரசியல் பாத்திரம்
19 ஆம் நூ.	முற்போக்கு	பிரிட்டிஷ் சார்பு
மறுமலர்ச்சி இயக்கம்		
முதல் சுதந்திரப் போர் – 1857	-	பிரிட். எதிர்ப்பு
காந்தி தேசிய இயக்கம் அம்பேத்கார்	பிற்போக்கு	பிரிட். எதிர்ப்பு
'தீண்டத்தகாதார்' இயக்கம்	முற்போக்கு	பிரிட். சார்பு
கம்யூ. இயக்கம் 1920-41	-	பிரிட். எதிர்ப்புபாட். வர்க்கச் சார்பு
கம்யூ. இயக்கம் 1942-48	முற்போக்கு	பிரிட். சார்புபாட். வர்க்கச் சார்பு
திராவிட இயக்கம்	முற்போக்கு	பிரிட். சார்பு
தெலுங்கானா எழுச்சி	-	நிசாம் எதிர்ப்பு விவசாயிகள் சார்பு

இனி, அடிமட்டங்களில் நடக்கும் போராட்டங்களை மேற்காணும் பட்டியலில் வகைப்படுத்திக்கொள்க (1967-69 மார்க்சிய – லெனினிய, நக்சலைட் போராட்டத்தை எப்படி வகைப்படுத்துவது என்பதை விவாதிக்கமுடியும்)

அடுத்தடுத்து மக்களுக்கு நேர்ந்துவரும் தோல்விகளுக்கான காரணத்தை இப்போது நீங்கள் கண்டுகொள்கிறீர்கள்; இரண்டு நிலைகளும் இணையவில்லை என்பதே காரணம். குமார் ஒரு பஞ்சாபி, வெளிநாட்டில் பேராசிரியர் – பொருளியலாளர். ராஜஸ்தானின் பழைய அரசகுடும்பங்களைச் சேர்ந்தவர். அவர் அப்பா, அரண்மனையில் பரம்பரையாய் தொடர்ந்து ஒரு உயர்பதவி வகித்தவர். குமார் இங்கிலாந்தில் படித்தார். கட்டான உடல் தோற்றம் வாழ்நாள் முழுவதும் நிலத்தில் பாடுபட்டவர் போல் தோன்றினார்.

குமார்: ஜனநாயகம் என்பது பிரிட்டிசாரின் கொடை அல்ல. அப்படி நம்புவது தவறாகும். அந்தத்தவறை நாம் செய்ய வேண்டும் என்றே எப்போதும் பிரிட்டிஷ் நிர்வாகம் விரும்பியது. இந்த நம்பிக்கை நம்மை குறுங்குழுவாதத்துக்கும் தோல்விகளுக்குமே இட்டுச்செல்கிறது.

அதிகாரப்பூர்வ வரலாறு 'நாயகர்களையும் வில்லன்களையும்' கொண்டுள்ளது. இந்த ரீதியிலேயே வரலாற்றைப் பற்றி நாம் பேச, நினைக்க வேண்டுமென பிரிட்டிஷ் கல்வியாளர்கள் செய்துவிட்டனர். வில்லன் யார்? பண்ணையடிமைகள்தான்! அதிகார பூர்வ வரலாற்றில் மக்கள் என்போர் செயலற்ற பிற்போக்குப் பிண்டமாகவே காட்டப்படுகிறார்கள். செயல்தீவிரமுள்ளோர் 'வில்லன்களாக' சித்தரிக்கப்படுகிறார்கள். சில தனிப்பட்ட நாயகர்களே நமக்கு சுதந்திரத்தை வாங்கித் தந்தார்கள் என்றும் பிரிட்டிஷ் ஆட்சியே நமக்கு ஜனநாயகத்தையும் சட்ட ஒழுங்கையும் தந்தது என்றும் அவ்வரலாற்றில் தோன்றும்.

நுணுகி ஆராய்ந்தோமானால் உண்மையான உந்துசக்தி, உண்மையான நாயகர்கள் விவசாயி மக்களே, பிரிட்டிசார்தான் வில்லன்கள் என்பது தெளிவாகும். மக்கள் எழுச்சியடைகிறார்கள், போராடுகிறார்கள், புரட்சி

செய்கிறார்கள். பிரிட்டிசாரின் ஒவ்வொரு சீர்திருத்தமும் மக்களின் ஒவ்வொரு கலகத்துக்கும், கலக அச்சுறுத்தலுக்கும் பின்னரே வேறுவழியில்லாமல் தரப்பட்டது. 19ஆம் நூற்றாண்டிலும் மக்களே செயல்பட்டவர்கள். அவர்களை அடக்க பிரிட்டிசார் ரத்த வெள்ளத்தில் நீந்த வேண்டியிருந்தது. அதிகாரத்தில் தொடர்ந்து இருக்க அவர்கள் அடுத்தடுத்து சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டியிருந்தது.

காந்தி முக்கியமான மனிதர்தான். ஆனால் மக்களின் ஆதரவு இருந்ததால்தான் அவர் முக்கியமானவராய் விளங்க முடிந்தது. கொஞ்சகாலம் அவர் சமரசங்களைச் செய்தல், மக்களின் வேகத்தை மட்டுப்படுத்துதல், முட்டுக்கட்டையிடுதல் போன்றவற்றைச் செய்ய முடிந்தது. என்றாலும் கடைசியில் மக்கள் அவரை விஞ்சிச் சென்றனர். 1946 பிப்ரவரியில் இந்தியக் கடற்படை கலகம் செய்தது. அப்போது, மக்கள் தம்நாட்டைத் தாமே விடுவித்து அரசையும் ஆட்சியாளர்களையும் இந்தியாவிலிருந்து விரட்டியடிப்பதைத் தவிர்க்க வேண்டுமானால், அரசாங்கத்தை காங்கிரசிடமும் முஸ்லீம் லீக்கிடமும் கூடிய சீக்கிரத்தில் ஒப்படைத்துவிட்டு இந்தியாவைவிட்டு தாம் வெளியேறிவிட வேண்டும் என பிரிட்டிசார் உணர்ந்து கொண்டனர். எனவே சுதந்திரமும் அரசியல் ஜனநாயகமும் இந்திய விவசாயி மக்களின் போராட்டங்களின் பயன்தான். ஒருவர் அர்த்தமுள்ள அரசியல் பணியில் ஈடுபடவேண்டுமானால் முதலில் இந்த உண்மையை ஒத்துக்கொண்டால் வேண்டும்!

சந்தோஷ் ஒரு வங்காளி. பத்திரிக்கையாளர். ஆரம்பகால நக்சலைட்டுகளுடன் சில ஆண்டுகள் காட்டில் இருந்தார். பின் சில ஆண்டுகள் சிறையிலிருந்தவர்.

சந்தோஷ்: நீங்கள் சொன்னது ஒத்துக்கொண்டாக வேண்டிய விசயம் என்பதைவிட கண்டு கொண்டாக வேண்டிய விசயம். படித்த குடும்பங்களில் இருந்து வந்த என்னைப் போன்றோர் வங்க மறுமலர்ச்சியாளர்களையும் அவர்கள் மரபையும் மதித்தனர். ராம்மோகன்ராய் முதல் ரவீந்திரநாத் தாகூர் வரையான நூறாண்டு அறிவாளி மரபின்

முயற்சிகள்தாம் 'புதிய வங்கத்தைப்' படைத்தன. தீய பழம் மரபுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மரண அடி கொடுத்தன.

ராம்மோகன்ராய் போன்ற நமது அறிவாளிகள் தான் உடன் கட்டையேறல், சிசுக்கொலை, பலதாரமணம், பாலிய மணம் போன்ற இழிவு பயக்கும் நிலக்கிழமை வழக்கங்களை எதிர்த்த போராட்டத்தை நடத்தினவர்கள். இதை நாம் மறவாது மனதில் கொள்வது முக்கியமாகும். அவர்கள்தாம் கல்விச் சீர்திருத்தம், பெண்களுக்குப் படிப்புரிமை, போன்றவற்றை ஆதரித்தவர்கள். இருப்பினும் வங்காள மறுமலர்ச்சி என்பது 1820களிலும் பிறகும் புது (வங்க) நடுத்தரவர்க்கம் முன்னெடுத்த வெறும் சீர்திருத்த இயக்கம் மட்டுமல்ல. அது ஒரு உண்மையான மறுமலர்ச்சியாகும்.

வெளிநாட்டுத் தாக்கமும் ஒரு விடுதலைப் பாத்திரத்தை வகித்தது உண்மை. ஐரோப்பாவில் முன்னொரு சகாப்தத்தில் அராபியர் ஏற்படுத்தி தாக்கத்துக்கு சமமாக, இதைக் கூறலாம். ராம்மோகன்ராய் நடத்திய ஆங்கில இந்தியப் பள்ளியின் மாணவர்கள் யூக்ளிட்டையும் வால்டேரையும் வானியலையும் கற்றனர். அவர் 1815 முதல் 17 வரை வேதாந்த நூல்களை சமற்கிருதத்திலிருந்து பெயர்த்ததும் பின் வைதிகத்தை எதிர்த்து ஈவிரக்கமற்ற விவாதம் நடத்தியதும் ஒரு விடுதலை வீரனின் செயல்களாகும். அதை அவர் உணர்ந்துமிருந்தார். அடிமைத்தனத்திலிருந்து மக்களைக் காப்பதும் அவர்களின் மகிழ்ச்சிக்குப் பாடுபடுவதும் தன் கடமை என அவர் கருதினார். அண்மையில் தார்க்குண்டேயும் பிற தாராளவாதிகளும் குருட்டு நம்பிக்கையின் ஆபத்தைப் பற்றிப் பேசிய பேச்சு நூறாண்டுகளுக்கு முன் இருந்த ராம் மோகன்ராய் மற்றும் வங்க மறுமலர்ச்சியின் எதிரொலிதான். ராம்மோகன்ராய் கூறியதுபோல 'பகுத்தறிவின்மையும் குருட்டு நம்பிக்கையும் சமுதாயத்தின் கட்டமைப்பை நாசமாக்குகிறது. அந்தப் பண்பாட்டுப் புரட்சியின் அடித்தளத்தின் மீதுதான் இன்றும் நாம் நமது சமூக இயக்கத்தை கட்டிக் கொண்டிருக்கிறோம்.

சுராஜ்: நமது பேச்சு, கவிதை, தத்துவம், புரட்சி பற்றிப் பேசும்போது வங்காளம்தான் இந்தியா என்பதுபோல தோன்றினாலும் உண்மையில் மறுமலர்ச்சி இயக்கம் இந்தியா முழுவதையும் தழுவிய நிகழ்வு ஆகும். வெளிநாட்டில் இருந்து கொண்டு நீங்கள் கல்கத்தாவில் நடக்கும் விவாதத்தை இந்தியாவில் நடக்கும் விவாதமாக சமப்படுத்தி விடுகிறீர்கள். ஆனால் வங்கம் இந்தியாவின் பகுதிதான். இந்திய மறுமலர்ச்சியில் வங்கம் ஒரு பகுதி - அவ்வளவே. இன்றைய புரட்சி இயக்கங்கள் பற்றி விவாதிக்கும் போதும் இதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்! மறுமலர்ச்சியைப் பொறுத்தவரை அது ஓர் அவசியமான அறிவுத்துறை சார்ந்த விடுதலைப் போராட்டம் ஆகும். சமுதாயவளர்ச்சியின் விதிகளுக்கு இசைந்ததே அது. என் தாய்மொழி தெலுங்கு. இது மகத்தான மரபுடன் கூடிய வளமான மொழி. எமது மறுமலர்ச்சி ஆளுமையாக வீரேசலிங்கம் பந்துலு இருந்தார். தெளிவான, எளிய உரைநடைத் தெலுங்கில் அவர் எங்களுக்காக எழுதினார். புதிய கருத்தாக்கங்களுக்கு தடையும் முடையுமாயிருந்த சிக்கலான சமற்கிருதம் கலந்த நடையை அவர் முற்றாக விலக்கினார். அவர் மக்களுக்குப் பணிசெய்தார். அவரே எங்கள் லூசுன். அவர் சேக்ஸ்பியரையும் காளிதாசரையும் தெலுங்கிலாக்கினார். எம் முதல் நாவலையும் நவீன நாடகத்தையும் எழுதியவர் அவரே. பத்திரிகைகளைத் தோற்றுவித்தார். அவரே எமது முதல் பத்திரிகையாளரும் கட்டுரையாளருமாவார். தம் சுயசரிதையை எழுதினார். அவரது எழுத்துக்கு ஒரு குறிக்கோள் இருந்தது. மக்கள் அவர் எழுதியதைப் புரிந்து கொண்டனர். பழையமொழி நொறுங்கி வீழ்ந்தது. அவர் ஒரு ஈடுபாடுள்ள அறிவாளி. பாலிய மணத்தை எதிர்த்தார். விதவை மண உரிமைக்காக வாதாடினார். வரதட்சணைப் பிரச்சனை, விபச்சாரப் பிரச்சினை போன்றவற்றில் அக்கறை காட்டினார். அதிகாரிகளின் ஊழலையும் மக்களை அவர்கள் ஒடுக்குவதையும் அம்பலப்படுத்தினார். மாபெரும் செம்மைத் தெலுங்குக் கவிஞர்களைப் பற்றி அவர்தான் எழுதி எம் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். தெலுங்கு

மட்டும் உங்களுக்குத் தெரிந்தால் நீங்களே இவற்றைப் புரிந்துகொள்வீர்கள். இருப்பினும் இந்த உலகத் தகுதியுள்ள எழுத்தாளர் 6 கோடி மக்களே பேசுகிற மொழிக்குள்ளேயே அறியப்பட்டுள்ளார்.

1919ல் தம் 67 ஆம் வயதில் அவர் இறந்தார். இன்றும் பிற்போக்காளர்கள் அவரைத் தூற்றுகிறார்கள். அவர் எழுத்து முழுக்க முழுக்க கம்யூனிசம் என்கிறார்கள்.

குமார்: உண்மை. இந்தியா என்பது வங்கம் மட்டுமல்ல. மறுமலர்ச்சி நாடு தழுவிய நிகழ்வே. புது இந்திய நடுத்தர வர்க்கம் 19ஆம் நூற்றாண்டு முழுதும் நாடு பரவலாய் முன்னோடி அறிவாளிகளை வழங்கிற்று. சிலர் உண்மையிலேயே மறுமலர்ச்சியாளர்கள். பிறர் நன்னோக்கமுள்ள முதலாளிய சீர்திருத்தவாதிகள். கடந்த நூற்றாண்டின் கடைசியில் பம்பாயிலிருந்த மகதேவ் கோவிந்த ராண்டேயைக் குறிப்பிடலாம். அவரது சிறப்புகளையும் வரம்புகளையும் பற்றிப் பேசமுடியும். அதேபோது வங்காளத்தில் கல்கத்தாவில்தான் இந்திய மறுமலர்ச்சி துவங்கியது என்பது உண்மை. வங்க மறுமலர்ச்சியைத் துவக்கியவர் ராம்மோகன்ராய். இன்றும் தாராளவாத முற்போக்கான இந்திய முதலாளி வர்க்கத்தின் முன்மாதிரியாக அவரையே கருதமுடியும்.

சந்தோஷ்: இப்படிச் சொல்வதன் மூலம் நீங்கள், ராம்மோகன் ராய் இரண்டு மாறுபட்ட பாத்திரங்களை வகித்தார் என்கிறீர்கள். முஸ்லீம்களுடன் அவரது உறவு எப்படி? நாமெல்லாரும் வங்காளிகள், ஒரே மக்கள், ஒரே மொழி, ஒரே பாரம்பரியம். மதமாற்றங்கள் அவர் காலத்தில் நடந்தன. இசுலாமியத்துக்கு மாறிய குடும்பம் இந்து மதத்திலேயே இருக்கிற குடும்பத்திலும் அதிக விடுதலையும் வலுவும் பெற்றதைக் கண்டார். இந்துமதம் தன் அனைத்து விதிகளையும் கட்டுப்பாடுகளையும் பயன்படுத்தி இந்துக்களை இறுக்கியது. அவற்றைத் தளர்த்த அவர் போராடினார். அவர் அரபு, பெர்சிய மொழிகளையும் பேசினார். இசுலாமியத்தை அறிந்துகொண்டார்.

குமார்: 1804ல் அவர் தன் முதல் மத-தத்துவப் படைப்பை எழுதினார் – அதன் முகவுரையை அராபியிலும் நூலைப் பாரசீகத்திலும், எழுதினார். பகுத்தறிவுவாத, ஆத்திகனாகப் பரிணமித்த ஒரு முஸ்லீமால்தான் அப்படி எழுதியிருக்கமுடியும்.

சந்தோஷ்: அவர் முஸ்லீம்களை மதித்தார். நீதிமன்றங்களில் இருந்த இந்து வழக்கறிஞர்களைவிட முஸ்லிம் வழக்கறிஞர்கள் நேர்மையானவர்கள், உயர்ந்தவர்கள் என்று அவர் கருதினார். இருப்பினும் இந்துக்கள் மேலிருந்த முஸ்லிம் ஆதிக்கத்தைப் பிரிட்டிசார் உடைத்ததை அவர் புகழ்ந்தார். 900 ஆண்டுகளாய் இந்து மதத்தை முஸ்லீம்கள் அச்சுறுத்திக் கொண்டிருந்ததற்கு பிரிட்டிசார் முடிவு கட்டினதைப் பாராட்டினார். இங்குதான் – சீர்திருத்த இயக்கமாகவும் முதலாளிய தேசியவாதமாகவும் பின்னர் வளரவிருந்த இந்திய மறுமலர்ச்சியின் இந்தத் துவக்கத்திலேயே தான் – வகுப்பு வாதத்துக்கான துவக்கத்தையும் நாம் காண்கிறோம். மதங்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஏற்கனவே இருந்தன. பிரிட்டிசார்தான் இவற்றை நமக்கு பயங்கரத் தீய விளைவுகளைத் தருவதாய் மாற்றிவிட்டனர்.

குமார்: ராம்மோகன் இவ்விரட்டைத் தன்மைக்கு ஆட்பட்டது ஏன்? இது வெறும் மதப்பிரச்சனையோ தத்துவப் பிரச்சினையோ அல்ல. அதைவிட ஆழமான விசயம் இது. ராம் மோகன் யார்? என்ன இருந்தாலும் அவர் மேல்சாதி பிரபு வர்க்கத்தவர். நிலஉடைமையாளர். முஸ்லிம்கள் யார்? 'தீண்டத்தகாதவர்கள்', கீழ்சாதியார், ஏழைகள். அம்பேத்கார் தன் சகோதரர்களை எந்தக்காரணத்தால் பவுத்தர்களாகுமாறு வலியுறுத்தினாரோ அதே காரணத்தால்தான் இவர்கள் முஸ்லீம்களாயினர். கேடுகெட்ட நிலக்கிழமைச் சீரழிவில் இருந்து வெளியேற அது ஒரு வழியாக இருந்தது. பழைய பண்பாட்டிலிருந்து விடு பட்டவராகத்தான் இருக்க வேண்டுமென ராய் எவ்வளவுதான் விரும்பினாலும் அவர் தம் வர்க்கத்திலிருந்து வெளியேறிவிட முடியவில்லை. எனவே அவரது அரசியல், பெரிய ஜமீன்தார்கள்,

நிலஉடைமையாளர்கள், பெருவணிகர்கள், மதத்தலைவர்கள், சுதேசி அதிகாரிகள், அதிக அதிகாரத்தைப் பெருமுயற்சி செய்த புதிய இந்திய நடுத்தரவர்க்கம் ஆகியோரின் குரலாக ஒலித்தது. வரலாற்றின் ஒளியில்தான் அவரை விமர்சன பூர்வமாய் நாம் மதிப்பிட வேண்டும். இப்படி நாம் செய்யாவிட்டால் இந்திய ஜனநாயகத்தின் பிரச்சினைகளை நம்மால் ஒருபோதும் தீர்க்கமுடியாமல் போகும்.

சந்தோஷ்: நான் என்ன நினைக்கிறேன் என்றால், இன்றைய இந்தியாவில் உள்ள மிக தாராளவாத, மனிதாபிமான அறிவாளிகள் இந்த இரட்டைத் தன்மையைப் புரிந்து கொண்டு வருகிறார்கள். தார்க்குண்டே இதைப் பார்க்கிறார். இன்றும்கூட வங்க மறுமலர்ச்சி இந்திய நடுத்தரவர்க்க அறிவாளிகளுக்கு விடுதலையாகவே இருக்கிறது. ஒரு இளம் மாணவன், ஒரு பட்டிக்காட்டுச் சூழலில் வளர்கிறவன், வயதில் பெரியவர்கள் மீது மரியாதை கொண்டவன், ஆசிரியர் சொற்படி ஒழுகுபவன். இத்தகையவன் திடீரென ராம்மோகன்ராயை எதிர் கொள்வதாகக் கொள்வோம். அவன் விடுதலை அடைகிறான்!

நமக்கு ஓயாமல் என்ன சொல்கிறார்கள்? ஆன்மிகமே இந்தியாவின் சிறப்பு என்கிறார்கள். மோட்சம், கருமம், யோகம், அகிம்சை போன்ற கருத்தாக்கங்களை நம்நாட்டில் உருவாக்கினார்கள். அவர்கள் கருத்துப்படி, மோட்சம் – தன் மறுப்பு மூலம் ஆன்மீக விடுதலை அடைதல். அவித்யை – சடஉலகம் எந்தப் பரம்பொருளில் இருந்து தோன்றியதோ அதை உணராதிருத்தல். இந்த அவித்யை ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்ற ஞானத்தில் அகல்கிறது. கருமம் – முற்பிறவிகளில் செய்த நல்லது கெட்டதுகளில் விளைவுகளை இப்பிறவியில் அனுபவிக்க நேரும் என்ற விதி. இவ்விதியால்தான், தான் முன்புசெய்த தீமையினால் இப்பிறவியில் ஏழை துன்புறுகிறான். தான் முன்புசெய்த நன்மையினால் செல்வன் இப்பிறவியில் இன்புறுகிறான். யோகம் – மூச்சுப் பயிற்சியும் உடற்பயிற்சியும் கூடிய முறைமை. பயில்பவனுக்கு இயற்கை மீறிய நலன்களையும் உள்ளொளியையும் வழங்குவது. அகிம்சை – கொல்லாமை.

மரக்கறி உணவுக் கொள்கையாகவோ அல்லது காந்திய அரசியலாகவோ மாற்றப்படக்கூடிய கொள்கை. இவ்விதக் கருத்துகளும் மக்களுக்கு விலங்கிடுகின்றன. கருமம் என்பது உண்மையாக இருக்குமானால் கலகம் செய்வதால் பயன் என்ன? யதார்த்தம் மாயை என்றால் போராட்டத்தினால் பயன் ஏது? ஆனால் இதுதான் நிலக்கிழமைச் சித்தாந்தம். இந்த முடக்க நிலையிலிருந்து வெளிப்பட ராம்மோகன்ராயைப் படித்தால் போதும். ஒரு இளம் மாணவன் 1830இன் இளம் வங்கத்தையும் டெராசியோவையும் முதன்முதலாய் எதிர்ப்படும்போது அவனில் சுதந்திர உணர்வும் புளகாங்கிதமும் பொங்குகின்றன.

சுராஜ்: மக்கள் கருமத்தையும் மோட்சத்தையும் நம்பி வந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் அதற்காக அவர்கள் போராட்டத்தில் பங்கெடுக்காமல் இருந்துவிடவில்லை – அல்லவா? வாரங்கலில் இருந்து கொஞ்சம் முந்திதான் வந்தேன். அங்கு கர்மா என்ற கருத்தும் போலீஸ் துருப்புகளும் இருந்தும் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வரும் வழியில் எமிலிஜோலவின் 'ஜெர்மினல்' படித்து வந்தேன். ஜெர்மினலுக்கும் வேலவாடாவுக்கும் பெரிய வித்தியாசம் எனக்குத் தெரியவில்லை. வேமுலவாடாவிலும் அற்புதங்கள் நிகழ்கின்றன. புனிதப் பயணங்கள் நடத்தப்படுகின்றன. சித்தாந்தங்களைக் கண்டு நாம் ஏமாந்து போகக்கூடாது. யதார்த்தத்தில் நடப்பதென்ன என்பதைக் காண்பதே முக்கியம். யதார்த்தத்தில் விவசாயிகளின் புரட்சி வளர்ந்து வருகிறது!

குமார்: ஆனால் தலைகளில் இருந்து விடுவிக்கும் விமர்சனத்தின் ஆற்றலை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது.

சுராஜ்: நான் குறைத்து மதிப்பிடவில்லை. இருப்பினும் இந்த ஐரோப்பியப் பகுத்தறிவு வாதத்தை கேள்விக்குள்ளாக்க வேண்டியே உள்ளது. அது பகுத்தறிவு வாதம் என்பதாலல்ல. அது ஐரோப்பியப் பகுத்தறிவுவாதம் என்பதால். சந்தோஷ் சொன்னாரே! அந்த நமது மேற்குவங்கக் கிராமத்து இளம் மாணவனைக் கவனிப்போம். முதலில் அவன் ராம்மோகன் ராயைப் பற்றிக் கொள்கிறான். பின்

இளம் வங்கத்தையும் 150 ஆண்டுகளுக்கு முந்திய மகத்தான விமர்சனா விடுதலையையும் கண்டு கொள்கிறான். பின் மார்க்சின் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிடம்" திரும்புகிறான். அவன் சாதாரண வங்காள அறிவாளியானால் இக்கட்டத்தில் வங்கப் பாமர மக்களிடமிருந்து வெகுதூரம் விலகியிருப்பான். ஏனென்றால் அந்த மக்களால் அறிக்கையைக் கூட படிக்க முடியாது. முதல் சட்டரீதியான இந்தியப் பதிப்பு 1944ல் வந்தது. அதில் அவர்கள் முழுமையானதும்... அருமையானதுமான - ரையசனோவின் விளக்கக் குறிப்புகளைச் சேர்க்க வேண்டி வந்தது. 16 பக்கம் முன்னுரை 32 பக்கம் அறிக்கையுடன் 160 பக்கம் விளக்கக் குறிப்புகள், 86 பக்கம் பிற்சேர்க்கை – இவ்வளவும் வங்க அறிவாளிக்குத் தேவையாயிருந்தது. அறிக்கை எழுதப்பட்டு நூறாண்டுகள் கழித்து இந்தியாவில் உதித்த அவனுக்கு அது என்ன கூறுகிறது என்பதைப் புரிந்து கொள்ளவே இவ்வளவும் தேவைப்பட்டது. இத்தனைக்கும் மேல் மார்க்சும் ஏங்கல்சும் குறிப்பிடும் விவிலிய மேற்கோள்களைப் புரிந்து கொள்ள ஒருவன் கிறித்தவப் பள்ளியில் படித்தாக வேண்டும். கதே, ஹைறன், செம்மை ஜெர்மன் எழுத்தாளர்கள் ஆகியோரின் படைப்புகளிலிருந்து அறிக்கையில் எடுத்தாளப்படும் மேற்கோள்களைப் புரிந்து கொள்ளாவிட்டால் அறிக்கையை உண்மையாக, சரியாகப் படித்ததாக ஆகாது என்கிறார் ஆரோன். இவர் ஜெர்மன் மொழி கற்பிப்பவர். இத்தனைக்கும் ஐரோப்பியாவில் 1848ல் மார்க்ஸ் எழுதிய இச்சிறுநூல் தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ள, உற்சாகத்தைத் தூண்டுகிற நூலாகும். மாவோ சீனாவில் செய்ததை நாம் நம் நாட்டில் செய்யவேண்டும். அவர் மார்க்சியத்தை சீனமயப் படுத்தினார். அதை சீனாவுக்கேற்ப எளிமையும் பண்பாடும் மிக்கதாக்கி அதன்மூலம் சீன மக்களின் ஆயுதமாய் அதை மாற்றினார். நாம் மார்க்சியத்தை இந்தியமயப்படுத்த வேண்டும். (இந்து மயப்படுத்துதல் அல்ல). அப்போதுதான் அது இந்திய மக்களின் ஆயுதமாகும்... மக்களின் தேவைகளுக்கேற்புடையதாக மார்க்சியத்தை ஆக்குதல் என்பதே பிரச்சனை. வெறும்

மொழி பெயர்ப்பு போதாது. நாம் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும். பகுத்தறிவு வாதமும் ஐரோப்பிய மயமும் மக்களிடமிருந்து நம்மை விலக்குகிறது.

ஒரு எதிர்மறை உதாரணத்தைப் பார்ப்போம். இந்தியாவில் நாம் அகிம்சையின் பல்வேறு விதங்கள் பற்றிப் பேசுகிறோம். உலக முழுவதும் காந்தியின் தத்துவம் பற்றிப் பலர் எழுதுகிறார்கள். ஆயின் இவ்வளவு தூரம் அகிம்சை பேசும் அந்தத் தலைவர்களே மறுகணம் அண்டை நாடுகள் மேல் வன்முறையைப் பிரயோகிப்பதைக் கண்டு மக்கள் திகைக்கிறார்கள். ஆனால் இந்து மரபில் வளர்ந்தவனுக்கு இப்பிரச்சினை அதிகம் வராது. பகவத்கீதையில் அகிம்சைக் கருத்து வருகிறது. ஆனால் இந்நூல் எத்தகையது? மிகப்பெரிய ரத்தக்களரியான மகாபாரதச் சண்டையைத் துவக்கி வைப்பதற்கான அருமையான உரையாடலே இந்நூல். போருக்குப் போவதற்கு பாண்டவநாயகன் அர்ஜுனனைக் கண்ணன் சம்மதிக்கச் செய்ய வேண்டி வருகிறது. வன்முறைக்கும் படுகொலைக்குமான வாதத்தில் அதற்கு உதவிகரமாய் அகிம்சை என்ற கொல்லாமைக் கருத்து வருகிறது: ஏன் போரில் அர்ஜுனன் பங்கேற்கக் கூடாது? ஆன்மாக்களைப் போர்த்திய வெறும் போர்வைகளே உடம்புகள். இவற்றைக் களைதலும் புதியன புகுதலும் கூடும். கொல்லப்படப் போகிறவர்கள் ஏற்கனவே சாக விதிக்கப்பட்டவர்களே. தவிர்க்க இயலாததை நிறைவேற்றி முடிப்பதற்காக மட்டுமே அவர்களைக் கொலை செய்வதென்பது அமையும். இக்கருத்து நம்மைப் பொறுத்து யோசிப்பதற்குக் கூடத் தேவையில்லாதது. கிறித்தவர்களின் கிறித்துவக் கொள்கை போல் இதில் அறிவுக்கெட்டாத அமானுடக் கருத்து ஒன்றுமில்லை. ஆனால் கட்டுக் கதைகளால் சூழப்படாமல் வளர்க்கப்பட்டவனுக்கும் அகிம்சை என்பதை ஒரு கோட்பாடாக மட்டுமே கருதுபவனுக்கும் இது பிரச்சினை தான்...

குமார்: ஆனால் அவற்றில் இருந்தெல்லாம் விடுபடுவதே நம் இலக்கு.

சுராஜ்: ஒருவர் தன் சொந்தக் கலாச்சாரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்போதே சுதந்திரமானவராக

இருக்கமுடியும். பின்னின் (Finn) 'கலிவாலா'வில் (Kalevala) இருந்து விடுபடல் எனக்கு எளிதான விவகாரம். அது பற்றிய ஒரு அடிக்குறிப்பைப் படித்துவிட்டே அதிலிருந்து நான் விடுபட்டுக்கொள்ள முடியும். மாறாக என் சொந்தக்கலாச்சார மரபுகள், வழக்குகளால், நம்பிக்கைகளால் என்மேல் நூறு நிலக்கிழமைத் தலைமுறைகள் புகுத்தியுள்ள சித்தாந்தப் பிடிப்பிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள நீண்டதும் குறிக்கோளோடு கூடியதுமான போராட்டத்தை நான் நடத்தியாக வேண்டும். டெராசி யோவோ, 'இளம் வங்கமோ' எனக்காக இதைச் செய்துவிட முடியாது. நான்தான்.

சந்தோஷ்: இதை நான் ஏற்கமுடியாது. கல்கத்தாவின் தனிச்சிறப்பு இந்தியாவுக்கோ ஆந்திராவுக்கோ இல்லை. கல்கத்தா சர்வதேச சந்திப்பாகும். 1830இலும் அது அப்படியே இருந்தது. அறிவாளிகளின் மையங்களில் தானும் ஒன்று என சாதாரணமாய் கல்கத்தா இருக்கவில்லை. மாறாக அறிவாளிகளைத் தோற்றுவிக்கும் இடமாய் அது விளங்கியது. இங்கு இளம் வங்காளிகள் மிக வளர்ச்சி பெற்ற அறிவுத்துறை, அரசியல் நிலைகளில் இருந்தனர். இதற்குப் பெரிதும் காரணம் டெராசியோவும் அவரது சீடர்களும் ஆவர்.

1830 டிசம்பர் 10 அன்று 200 தாராளவாதிகளும் (Liberals) இளம் அறிவாளிகளும் கல்கத்தாவில் சந்தித்தனர் பாரிசில் நடந்த ஜூலைப் புரட்சியைக் கவரவிக்க அவர்கள் கூடினர். மூவண்ணக்கொடி சூழ அவர்கள் திரண்டனர்: அவர்களுக்கு ஆதர்சமளித்தவர் டெராசியோதான். 1826ல் இந்துக் கல்லூரியில் ஆசிரியரான போது அவருக்கு வயது 18. கவர்ச்சிகரமான ஆளுமை கொண்ட அறிவாளியாயிருந்தார். யூரேசியர், இந்திய தேச பக்தர். நாடு கடந்து வாழ்ந்த ஸ்காட்லாந்தியரும் சுதந்திரச் சிந்தனையாளரும் குடியரசு வாதியுமான ஒருவரால் வளர்க்கப்பட்டார். எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குமாறு தன் மாணவர்களை ஊக்குவித்தார். சுதந்திர சித்தம், நிர்ணயவாதம், கடவுளின் இருப்பு, பெண்களுக்கு கல்வி உரிமை, மதம் என்பது சாமியார்களின் சூழ்ச்சி, பிரெஞ்சுப் புரட்சி, கிரேக்க சுதந்திரப் போராட்டம், உண்மையைத் தேடவும் தத்தம் மனசாட்சிக்குக்

கீழ்ப்படியவுமான கடமை என எல்லாவற்றைப் பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

டெராசியோ கற்பித்தார், எழுதினார், விவாதித்தார். இந்திய அறிவாளிகளில் அவர் ஒரு முன்னவர். புதுவகை அறிவாளிகளில் ஒருவர். பழைய வைதிக, வங்காளிய அப்பாமார், அவர் பரப்பிய 'நசிவுக் கருத்துகளை' கண்டு திகைத்தனர். டெராசியோவின் சீடர்களுக்கு உண்மையை விடப் புனிதமானது வேறில்லை. அவர்கள் வால்டேர், பேக்கன்லோக், ஹியூம், பெங்காம், தாமஸ் பெயின் ஆகியோரைப் படித்தனர். ஆனால் இளைஞர்கள் மதுகுடிப்பது, மாட்டுக்கறி தின்பது போன்றவற்றால் புனித விதிகளை மீறுவதாக வந்த வதந்திகளால் அதிகாரத்திலிருந்தோர் அருவறுத்தனர். டெராசியோவின் மாணவர்கள் நாத்திக அயோக்கியர்களாகி விட்டதாகக் கூறப்பட்டது. விவாத மன்றங்கள் மூடப்பட்டன. பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. டெராசியோ வேலையிலிருந்து நீக்கப்பட்டார். விரைவில் காலராவால் இறந்தார். அப்போது அவருக்கு வயது 23 ஆனால் அவர் உருவாக்கிய 'இளம் வங்கம்' வாழ்ந்தது. டெராசியோவின் ஆன்மா இன்னும் கல்கத்தாவில் வாழ்கிறது எனலாம். இங்கிலாந்து, அமெரிக்கா, கண்ணியமான உலகம் முழுவதிலும் சபிக்கவும் வெறுக்கவும் பட்ட தாமஸ் பெயினின் நூல் கல்கத்தாவில்தான் பதிப்பிக்கப்பட்டது. 1832ல் அவரது 'பகுத்தறிவு யுகம்' (The Age of Reason) என்ற நூல் கல்கத்தாவில் வெளியிடப்பட்டது.

சந்தோஷ்: இதற்கு 'எதிர்வினை' கடுமையாக இருந்தது. சில சமயங்களில் அதன் கையே மேலோங்குவதாகத் தெரிந்தது என்றாலும் 1830களில் இருந்து கல்கத்தாவின் அறிவாளிக் கூட்டம் உண்மைத் தேடல் என்ற இந்த கலகத்தன்மை வாய்ந்த பகுத்தறிவு மரபில் வாழ்ந்து வந்தது.

சுராஜ்: டெராசியோ மாமனிதர் என்பது உண்மைதான். டெராசியவாதிகளுக்கு நம் ஆழ்ந்த மரியாதையைத் தெரிவித்துக் கொள்வதற்கு சகல நியாயமும் உண்டுதான். 'எதிர்வினைக்கு' எதிராகப் பல ஆண்டுகள் கடுமையாகப் போராடியபோது அவர்கள் தங்கள் அடையாளத்தை நன்கு

தக்க வைத்துக்கொண்டனர். எனினும் மொத்தத்தில் அவர்களுக்கு நேர்ந்தது என்ன? இதேகாலத்தில் பிரான்சில் இருந்த ான் சைமனியவாதிகளுக்கு ஏற்பட்ட கதியே இவர்களுக்கும் ஏற்பட்டது. கலகத்தைக் கைவிட்டு அரசாங்க உயர்பதவிகளை ஏற்றனர். 1833 சார்ட்டர் சட்டத்தின்படி புதுப்பதவிகள் உருவாக்கப்பட்டன, பல டெராசியவாதிகள் தாராளவாதிகளால் ஐரோப்பியமயராய் ஆகிவிட்டனர். காலனிய ஆட்சியின் பணித்துறை ஊழியர்களாகி விட்டனர். (இதேபோல்தான் பிரான்சிலும் பல சைமனியவாதிகள் லூயி பிலிப்புக்கும் மூன்றாம் நெப்போலியனுக்கும் ஊழியர்களாகினர்) இதுதான் பிரச்சினையின் சாரமாகும்.

'இளம் வங்கம்' என அறியப்பட்ட மாணவர்களை விமர்சிக்கும்போது நான் வேறொரு விசயத்தை வலியுறுத்த வேண்டும். 1830களில் இவர்கள் பரங்கியர்களைப் போலி செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். வேதத்துக்கு மாறான சிந்தனையை ஏற்றுக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். அதிலும் ஓரளவு ஏற்கப்படக்கூடிய புத்த, சமண தத்துவங்களை அல்ல, முழுக்க நிந்திக்கப்படும் பொருள்முதல் சிந்தனைப் பள்ளியான சர்வாகத்துக்கு அவர்கள் மாறியதாக சொல்லப்பட்டது. இது இந்தியாவின் எதிர்காலத்துக்கு மிக முக்கியமான ஒன்றைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பது என் கருத்து. ஏனெனில் 1830களில் இந்தியப் பொருள் முதல்வாதம் மீண்டும் உதித்ததானது, நமது மறுமலர்ச்சி உண்மையாகவே ஒரு மறுபிறப்புத்தான் என்பதற்கு சான்றானது. இந்தியாவில் உள்ள மக்கள் வெற்றிபெற வேண்டுமானால் நம் சொந்த தத்துவ மரபுக்குள்ளும் நாம் போராட்டம் நடத்தியாக வேண்டும். மக்கட்சார்பான இந்தியப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையில் நாம் மோட்ச, கர்மங்களைத் தோற்கடிப்போம்!

இருப்பினும் தீர்மானகரமான விசயம் என்னவென்றால், இந்த முழு மறுமலர்ச்சியுமே – அது ராம்மோகன்ராயின் மிதவாத சீடர்களதானாலும் தீவிரவாத டெராசியோவின் 'இளம் வங்கத்'ததானாலும் – இறுதியில் மக்களுக்கு எதிராக பிரிட்டிசாருடன் சேர்ந்து விட்டதே. ஆகும்...

ராம்மோகன்ராயின் வர்க்கநலன்கள் வகுப்பு வாதத்துக்கு இட்டுச் சென்றதுபோல் மறுமலர்ச்சியாளர்களின் வர்க்க நலன்கள் இத்தகைய வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றன.

சந்தோஷ் – உண்மைதான். இதுதான் முக்கியமான விசயம். நான் கூற விரும்பியதும் இதுவே. நமது வங்க மறுமலர்ச்சி, விவசாயிகளுக்கு எதிரான நிலைபாட்டை எடுத்தது. இது எவ்வளவு சோகமுடிவு என்பதை உள்ளபடி புரிய மறுமலர்ச்சியின் மகத்தான தன்மையை நாம் நினைவில் கொள்ள வேண்டும். 1857ல் சிப்பாய் எழுச்சியை பிரிட்டிசார் நசுக்கியதும் பிரிட்டிசாருக்கு இந்திய (படித்த) மேட்டுக்குடி முழுவதும் ஆதரவளித்தது. விதிவிலக்குகள் இருந்ததாக புத்தகங்களில் காணலாம். இப்புத்தகங்கள் குறிப்பிடும் விதிவிலக்குகளில் ஒருவர் அரிஷ் சந்திர முகர்ஜி ஆவார். 'இந்து தேசபக்தன்' என்ற நூலில் அவர் கலகக்காரர்களுக்குப் பரிவு காட்டியவராய் காட்டப்படுகிறார். ஆனால் 1857ல் எழுதப்பட்டவற்றை இன்று பெனாய்கோஷ் மறுபதிப்பு வெளியிட்டிருப்பதில் பார்த்தால் முகர்ஜி பிரிட்டிசாருடன் முழுமையாக ஒத்துழைத்தார் என்பதை நிச்சயமாய் சொல்ல முடிகிறது. எனவே மாதம் 25 ரூபாய் சம்பளம் வாங்கும் எழுத்தராயிருந்து ரூ.440 வாங்கும் உதவி ராணுவத் தணிக்கையராக அவர் பதவி உயர்ந்தது மிக இயல்பே என்பது தெளிவு. இந்து முஸ்லீம் சுதேசிகள் எல்லாரையும் குற்றவாளிகள் என்றும் இழிபிறவிகள் என்றும் சொல்லவில்லை என்பதுதான் அவருக்கும் பிரிட்டிஷ் வெறியர்களுக்குமிருந்த ஒரே வித்தியாசம்.

குமார்: இருப்பினும் கலகக்காரர்களுக்குக் கடும் தண்டனை வழங்க அவர் வற்புறுத்தினார். சிப்பாய்களைக் கட்டுப்பாட்டில் வைக்க ஐரோப்பிய வீரர்களையும் அதிகாரிகளையும் அதிக அளவில் தருவித்தார்.

சுராஜ்: கருத்து முதல்வாதிகளாக நாம் இருக்கக் கூடாது. ஏனெனில் அப்படி இருந்தால் எல்லாவற்றையும் ஒரேயடியாய் கண்டனம் செய்து தீர்ப்பளித்து விடுவோம். உண்மையில் கல்கத்தாவில் இருந்த முகர்ஜி, பிரிட்டிசாருடன் வேலை செய்து கொண்டும் ஆங்கிலம் பேசுவோருக்கான

பத்திரிகையில் எழுதிக்கொண்டும் இருந்த முகர்ஜி, மேலைமயப்பட்டும் படித்தவர்க்கமாயும் பொருளாதார ரீதியில் பிரிட்டிசாரைச் சார்ந்தும் இருந்து முகர்ஜி, எப்படிக் கலகத்தை ஆதரித்திருக்க முடியும்? அந்தக் கலகம் பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படைகளையே அல்லவா அச்சுறுத்தியது? அதற்குப் பதில் அவுரிக் கலகத்தின்போது அவரது நிலையை நாம் பரிசீலிக்கலாம். பிரிட்டிஷ் ஜவுளித் தொழில் துறைக்கு கச்சாப் பொருள்கள் வழங்க பிரிட்டிஷ் பண்ணையதிபர்கள் பீகாரிலும் வங்கத்திலும் கட்டாயமாக அவுரி சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்தித்தனர். மிகமிகக் குறைந்த விலையில் அதைத் தமக்கு விற்கும்படி கட்டாயப்படுத்தினர். இது குரூரமான சுரண்டலும் அப்பட்டமான ஒடுக்கு முறையும் ஆகும். அரை நூற்றாண்டாக இம்முறையை எதிர்த்து ஒடுக்கப்பட்ட ஏழை விவசாயிகள் சண்டையிட்டனர். இந்தப் பிரச்சினையின் பேரில்தான் வங்க மறுமலர்ச்சி இயக்கம் உடைந்தது. ராம்மோகன்ராய், துவாரகநாத்தாகூர் போன்ற மிதவாதிகள் வெள்ளைப் பண்ணையதிபர்களை ஆதரித்தனர். அந்த முறை மூலம் அவர்களுக்கு தனிப்பட்ட ஆதாயம் இருந்தது. மறுமலர்ச்சியின் இக்கட்டம் நேரடியாக மிருகத் தனமான சுரண்டலைச் சார்ந்திருந்தது. மறுமலர்ச்சியாளரின் நலன்களைக் காக்க பிரிட்டிஷ் படைகள் தேவைப்பட்டன. இருப்பினும் 1860-61ல் சுரண்டப்பட்ட விவசாயிகள் கலகம் செய்தபோது அவர்களை முகர்ஜியும் புது இந்திய மத்திய வர்க்கத்தின் பெரும் பகுதியினரும் ஆதரித்தனர். இதுவும், பெருந்தோட்ட முறையை ஒழித்து விவசாயத்தை வளர்க்க விரும்பிய அவர்களின் வர்க்க நலன்களை முன்னிட்டுத்தான். இங்கு முகர்ஜி பெரும்பங்களிப்பு செய்தார். அதை வேண்டுமானால் நீங்கள் 'மனிதாபிமானம்' எனச் சொல்லிக் கொள்ளலாம். இது அவர் சக்திக்கு உட்பட்டதாயிருந்தது. அதற்குரிய மதிப்பை அவருக்குத் தரவேண்டியதே. ஆனால் அவர் தன் சொந்த உடனடி வர்க்க நலன்களுக்கு எதிராகச் செயல்பட்டிருக்க முடியும் என நம்புகிற கருத்து முதல் வாதிகளாக நாம் இருக்கக் கூடாது.

குமார்: இங்குதான் நாம் மாறுபடுகிறோம். ஒரு பரந்த அளவிலான ஐக்கியத்தை உருவாக்குவது சாத்தியமில்லை என்ற கருத்தை நான் ஏற்கமுடியாது. 1857 புரட்சி தோற்றிருக்க வேண்டியதே என்பதையும் நான் நம்பவில்லை. மறுமலர்ச்சி, 1857 – இரண்டையும் கவனமாக விவாதிக்க வேண்டியிருப்பதன் காரணம், 150 ஆண்டுகளுக்கு முன் நாம் எதிர்ப்பட்ட பிரச்சினைகளை இன்னும் நாம் தீர்க்கவில்லை. தீர்க்க வேண்டும் என்பதே ஆகும்.

சந்தோஷ்: அடிப்படையான உந்துசக்தி மக்கள்தான். இந்தியாவைப் பொறுத்து 'மக்கள்' என்போர் பழங்குடியினர். 'தீண்டத்தகாதோர்' 'கீழ்ச்சாதியர்' நிலமற்ற விவசாயிகள். ஏழை விவசாயிகள் ஆகியோராவர். இன்னும், வருங்காலத்திலும் இவர்களே வரலாற்றின் உந்துசக்திகளாய் இருப்பார்கள். இதுபற்றி நகர நடுத்தர வர்க்கம் கருதுவது என்ன என்பதை நாம் அறிவோம். போல்பாட் பற்றி அவர்கள் என்ன சொல்வார்கள் என்பது நமக்குத் தெரியும். மக்களின் கோபம் குறித்து அவர்கள் அஞ்சுகிறார்கள். உழவர்கள் கிளர்ந்தெழுந்தால் 1855-56 சந்தால் கலகத்தின்போது நடந்ததே நடக்கும் இதை நான் என் கண்களால் கண்டவன். சந்தால்களின் போராட்டம் பற்றி பிரிட்டிசார் எழுதிவைத்தவற்றிலிருந்து ஒன்று: விவசாயிகள் வட்டிக்காரனைப் பிடித்ததும் முதலில் அவன் பாதங்களைத் தறித்தனர்: ரூபாயில் நாலணாவை திருப்பிச் செலுத்திவிட்டதாய் முழக்கமிட்டனர்; பின் அவன் கால்களை வெட்டி எட்டணாவை செலுத்திவிட்டதாகக் கொண்டனர்; பின் முண்டத்தை வெட்டி பன்னிரண்டணாவை செலுத்திவிட்டதாகக் கொண்டனர்; இறுதியாய் தலையைத் துண்டித்து பதினாறணாவையும் திருப்பிவிட்டதாய் உரக்கக் கூவினர்! தற்போதைய விவசாயப் போராட்டத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறேன். ஐக்கியம் பற்றியும், நடுத்தரவர்க்கம் மக்களுடன் ஒன்றுபட வேண்டுமென்பது பற்றியும் பேசுவதும், அத்தகைய கூட்டணியின் தாக்குதல் பொது எதிரியை நோக்கியே திருப்பப்படவேண்டும் என்பதும் பேச எளிதுதான். ஆனால் உண்மை என்னவென்றால் 1857ல் சிப்பாய்களைக் கண்டு

முகர்ஜி அஞ்சியதுபோல் மக்களின் கலகம் பற்றி நினைத்தாலே இந்திய நகர நடுத்தரவர்க்கத்தின் பெரும்பான்மை நடுங்கி வருகிறது. எனவேதான் மக்களின் கலகம் தலைமையற்றுப் போகிறது. அப்படியும்கூட தலைவர்கள் இல்லாமலே பிரிட்டிஷ் ஆட்சியை தூக்கியெறிவதில் அவர்கள் பெரும்பாலும் வென்றுவிட்டார்கள்.

குமார்: 1857ல் வர்க்கங்கள் எவ்வெத் தரப்பில் நின்றன என்பதைச் சொல்வது எளிதல்ல. மொத்தத்தில் எழுச்சியை விவசாயிகளும் சிறு, நடுத்தர நிலக்கிழமை நில உடமையாளர்களும் ஆதரித்தனர் எனலாம். அவர்கள் நலன்கள் அச்சுறுத்தப்பட்டதால் அவர்கள் கலகம் செய்தனர். அதுவெறும் ராணுவக் கிளர்ச்சி மட்டுமல்ல, அது மக்களால் ஆதரிக்கப்பட்டதாயும் நாடாளாவியதாயும் இருந்தது. ஆனால் ஐரோப்பியக் கல்வியுள்ள புது நடுத்தரவர்க்கம் இதற்கு எதிராக நின்றது.

சந்தோஷ்: பெரிய நில உடைமையாளர்கள் கலகத்தில் சேரமறுத்து பிரிட்டிசாரை ஆதரித்தனர் என்பதைக் கவனியுங்கள். 1857ஐ சில நூல்கள் மன்னர்களின் போராட்டமென வருணிக்கின்றன. இந்து உரிமையையும் அரச குடும்பங்களின் வாரிசுரிமையையும் தக்கவைத்துக் கொள்ள மன்னர்கள் போராடினர் என்கின்றன. பொதுவாக மன்னர்கள் பிரிட்டிசாரை ஆதரித்தனர்; இந்த ஆதரவு தந்ததற்காக பிற்பாடு பிரிட்டிசாரின் சன்மானத்தையும் பெற்றனர்; அதனால்தான் சுதந்திரம்வரைக்கும் நம்மிடையே மன்னர்கள் இருக்க முடிந்தது. பிரிட்டிசார் மக்களை அடக்க மன்னர்கள் அவர்களுக்கு உதவியதால் கைம்மாறாக அவர்களின் வாரிசுகள் தாமே மக்களை ஒடுக்க பிரிட்டிசார் அவர்களுக்கு வாய்ப்பளித்துச் சென்றனர். ஜான்சிராணி லட்சுமிபாய் போரில் சேர நிர்ப்பந்திக்கப்பட்டதால் சேர்ந்தாள். இதனால் அவளது தனிப்பட்ட (வர்க்க) குணாம்சம் ஒருபுறம் இருந்தும் தியாகி ஆனாள். ஆனால் அவளது வீரத்தை நாம் மறுப்பதற்கில்லை.

குமார்: வரலாற்று ஆகிருதி வாய்ந்த பெண்மணி அவள். நானா சாகிப் போன்ற நிலக்கிழமை வர்க்க உறுப்பினர்களும் எழுச்சியில் தலைமை பற்றினர்.

இருப்பினும் 1799 ஏப்ரல் 28ல் சீரங்கப்பட்டினத்தின் மீதான தாக்குதலின்போது திப்பு சுல்தான் கொல்லப்பட்டதுடனேயே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கடைசி நிலக்கிழமைத் தலைவரும் போய்விட்டதாகக் கூறலாம். 1857 எழுச்சி ஒரு தேசிய எழுச்சிதான்; தேசிய விடுதலைப்போர்தான். ஆனால் பழைய ஆளும் வர்க்கமானது போராட்டத்தை நடத்தத் திறன் பெற்றிருக்கவில்லை. அத்திறன் வாய்ந்த புது இந்திய மறுமலர்ச்சியாட்களோ விவசாயிகளுக்கும் எதிராக பிரிட்டிசார் பக்கம் சேர்ந்து விட்டனர்.

சந்தோஷ்: தெற்கே நடந்த சம்பவங்கள் தனிவகையானவை. அங்கு நிலக்கிழமைச் சீமான்கள் கலகம் நடத்தினர். ஆனால் விரைவில் பிரிட்டிசார் அவர்களை விலைக்கு வாங்கி விட்டனர். தேசிய போராட்டத் தலைமையை, சிப்பாய்களை வஞ்சித்த ஒரு செத்துக் கொண்டிருந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள் எடுத்துக் கொண்டனர். இதிலிருந்து, 1857 முதல் 59 வரை நடந்த போரின் முழுப்போக்கையும் புரிந்து கொள்ள முடியும். சிப்பாய்கள் நல்ல வீரர்கள். போர் உத்திகள் தெரிந்தவர்கள். ஆனால் போர்த்தந்திரம் பற்றிய முழுமையான பார்வை கொண்ட தலைவர்கள் அவர்களுக்கு இல்லை. எனவே டெல்லியைக் கைப்பற்றிய பின் அதைத் தளமாகக் கொண்டு நாடு முழுவதிலும் போரைப் பரப்புவதற்குப் பதில் அவர்கள் தற்காப்புப் போர் முறையையே கையாள ஆரம்பித்தனர்.

சுராஜ்: மேலும் இரு குறிப்பான அம்சங்களையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிப்பாய்கள் காட்டிய அளவற்ற வீரம். சந்தால்களைப் பற்றி பிரிட்டிசார் 'சரணாகதி தவிர எல்லா ஆயுதங்களையும் அவர்கள் அறிவார்கள்' என்றனர். அந்தக் கிளர்ச்சியாளருக்குச் சமமாக சிப்பாய்கள் விளங்கினர். சிப்பாய்களைப் பிரிட்டிசார் பிடித்து மிகவும் மிருகத்தனமான பாணியில் தீர்த்துக்கட்டின போதும் சிப்பாய்கள் தம் கவுரவத்தை தன்மானத்தை விட்டுக்கொடுக்கவில்லை. எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்ட பின்னும் அவர்களிடமிருந்த துணிவும் லட்சிய நோக்குமே போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தது. இத்துணிவும் இலட்சிய நோக்கும்

இந்திய விவசாயிகளின் எழுச்சிகளில் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வந்துள்ளது. இன்றும், அது கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்கப்பட்டு, சுட்டுத் தள்ளப்படுவதற்காக காட்டுக்கு இழுத்துச் செல்லப்படும் நக்சலைட் இளைஞர்களை ஆகர்ஷிக்கிறது. காலனிய இலக்கியத்தில் இந்தியர்களை அசடர்கள், அடிமைகள், சதிகாரர்கள் என்று பலவாறு சித்தரித்து வந்தனர். உண்மையில் தலைமுறை தலைமுறையாக இந்திய கிளர்ச்சியாளர்களும் விவசாயத் தலைவர்களும் மானத்துடன் சாவது எப்படி என்பதை அறிந்தவர்களாய் இருந்தார்கள். இது நம் மக்களுக்குப் பெரும் ஆதர்சமாய் விளங்கியது.

(2) ஆள்வோர் பழிதீர்த்துக் கொள்வது எப்போதும் மிக ரத்தக்களரியான முறையிலேயே நடந்தேறி வந்துள்ளது. சந்தாலிலும் 1857லிலும் நடந்து இன்றும் தொடர்வது அது. 1921 மலபார் 'மாப்பிள்ளைக் கலகம்' பற்றி இந்தியாவுக்கு வெளியில் அரிதாகவே தெரியும். காந்தி அதிலிருந்து தன்னைக் கழட்டிக் கொண்டதில் வியப்பில்லை. அதில் ஈடுபட்ட ஏழை முஸ்லீம்கள் ஏற்கனவே 35 தடவைகள் பிரிட்டிசாரை எதிர்த்துக் கலகம் செய்தவர்கள். ஆனால் 1921ல் காந்தியின் சுயராஜ்ஜியம் பற்றிய வார்த்தைகளை நம்பி மீண்டும் அவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இயல்பாகவே சிலர் கிளர்ச்சிக்கு ஒரு வகுப்பு வாதத் தன்மையை மூட்டிவிடவும் முயன்றார்கள். ஆனால் ஒன்பது மாதப்போராட்டத்துக்குப் பின் பிரிட்டிஷ் துருப்புகள் கலகத்தை நசுக்கி அதிகாரத்துக்கு மீள்வதில் வெற்றிபெற்றன. பிரிட்டிசாரில் 43 பேர் இறந்தனர். 12 பேர் காயமடைந்தனர். ஏழை விவசாயிகள் 3000 பேர் இறந்ததாக பிரிட்டிசாரின் கணக்கு. உண்மையில் 10,000த்துக்கும் அதிகமான பேர் கொல்லப்பட்டனர்.

கலகக்காரர்களின் குரூரம் பற்றியும் வட்டிக்காரர்களுக்கு அவர்கள் வழங்கிய தண்டனை பற்றியும் பேசும்போது பிரிட்டிசாரும் பின் காங்கிரசாரும் அவர்கள் மேல் காட்டிய உண்மையான குரூரத்தை மறந்துவிடக் கூடாது. இன்றுவரை அதிகாரபூர்வ வரலாறு மாப்பிள்ளைக்குலத்தை சட்ட விரோத கூட்டமாகவே சித்தரிக்கிறது.

1857ல் புதிய கருத்துக்களையும் மேல்கட்டுமானம் முழுவதிலும் அவசியமான மாற்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய கூட்டம், கல்கத்தாவில் பிரிட்டிசாருடன் கூட்டாயிருந்தது; சிப்பாய்க் கிளர்ச்சிக்குத் தலைவர்களோ, முற்போக்கான சமூக – பண்பாட்டு இலக்குகளோ இருக்கவில்லை என்றோம். 1921 மலபாரிலோ நிலைமை மேலும் மோசமாயிருந்தது. காந்தியும் அவரது இயக்கத்தினரும் பிரிட்டிசாரை எதிர்த்தனர். அதேபோது ஏழை விவசாயிகளின் நியாயமான போராட்டத்தையும் முற்போக்கு சமூக – பண்பாட்டுச் சீர்திருத்தங்களையும் அவர்கள் எதிர்க்கவே செய்தனர். மேலைப்படிப்புள்ள முற்போக்குவாதிகள் என்போர் காந்திக்கு ஆதரவு தருவதற்கும் ஏதோ மூன்றாவது மாற்று வழிக்கும் இடையில் ஊசலாடினர், ஆனால் அவர்களும் ஏழை விவசாயிகளுடன் சேரவில்லை.

குமார்: காந்தி விவசாயிகளின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டார். ஆனால் சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளில் அவர் படுபிற்போக்காளராக விளங்கினார். தன் பிற்போக்கு நிலைபாட்டினைக் கொண்டு விவசாய மக்களை வெற்றிகொள்ள முயன்றார். ஆனால் தம்மை முற்போக்கென கருதிய படித்த அறிவாளிகள் அதைக்கூட செய்யவில்லை.

சந்தோஷ்: இதனால் இந்தியக் கம்யூ. கட்சி மக்களிடமிருந்து தனிமைப்பட்டே இருந்தது. போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் விவசாயிகளின் பாத்திரம் பற்றி ஆலோசித்த ஒரே இந்தியக் கம்யூ. தலைவர் எம்.என். ராய்தான். விவசாய மக்கள் என்போர் இருக்கிறார்கள் என்ற அளவிலாவது அவர் உணர்வுடனிருந்தார். சுருங்கச் சொன்னால், கம்யூ தலைவர்கள் தரகு வர்க்கத்திலிருந்து வந்தவர்கள், நகர வார்ப்புகள் லண்டன் படிப்பாளிகள்.

சுராஜ்: 1857-ஐ அவர்கள் எப்படிப் பார்த்தனர்? பிரிட்டிசாரிடமிருந்து தேசிய விடுதலை பெற்றுக் கொள்வதுதான் முதன்மையான உடனடிப் பணியாக இருந்த காலம் முழுவதிலும், கம்யூ. தலைவர்கள், 1857ல் நடந்தது ஒரு தேசிய எழுச்சி என்பதை ஒத்துக்கொள்ளவேயில்லை.

கல்கத்தா அறிவாளிகளின் கருத்தையே பாமிதத்தும் எம்.என். ராயும் கொண்டிருந்தனர். அக்கலகம் பிற்போக்குத் தனமானது என்றார். இவ்விசயத்தில் நேருவுடன் அவர்களுக்கு முழு உடன்பாடு. 1946 கடற்படைக் கலகம், 47 சுதந்திரம், 46-51 தெலுங்கானா போராட்டம் ஆகியவற்றுக்குப் பிறகுதான் 1857-59 ஆண்டுகாலப் போரை இந்திய சுந்திரப் போர் எனப் பார்க்கத் துவங்கினர். முன்பே சரியாக இதைப் பார்த்தவர்கள் படு பிற்போக்காளர்களும் பாசிசச் சார்பாளர்களுமான வி.டி. சாவர்க்கர் போன்றோர் தான். கம்யூ. கட்சியால் மக்களையும் தேசத்தையும் உள்ளது உள்ளபடி பார்க்க முடியவில்லை. முதலாளிய ஜனநாயகக் கோரிக்கைகளுக்காகக் கூட அதனால் போராட முடியவில்லை. ஒவ்வொரு முறையும் அக்கட்சி மக்களியக்கத்துக்குப் பின்தாங்கியே நின்றது. குறிப்பிடத்தக்கதான பங்கெதையும் ஆற்றும் நிலையில் அது இருக்கவில்லை.

சுராஜ்: இன்றும் பிரச்சினைதான், இல்லையா? சமுதாய முற்போக்கு இயக்கங்கள் அரசியலில் பிற்போக்காயுள்ளன. அரசியல் இடதுசாரிகளோ உண்மையான பிரச்சினைகளைக் கண்டுகொள்ள முடியாமலும், அவசியத் தீர்வுகளை உருவாக்க முடியாமலும் இருக்கின்றன. நக்சலைட்டுகள் கூட கடந்தகால வரலாற்றை மறுத்துவிடும் போக்குக்குள்ளேயே சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள்!

1974, 75 வரையான கடும் தோல்விகளுக்குப் பிறகுதான் இந்த விவாதங்களை நாம் துவங்கினோம். முதல் தடவையாக கடந்த நூற்றாண்டின் பண்பாட்டு மறுமலர்ச்சி, தேசிய விடுதலைப் போர் போன்றவற்றைத் தீவிரமாக விவாதிக்கத் துவங்கினோம். வரதட்சணை ஒழிப்பு, பெண்கல்வி, விதவை மண உரிமை போன்ற பல சமூகப் பிரச்சினைகளுக்கான போராட்டங்களில் 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்த வாதிகளைவிட இன்றைய கம்யூனிஸ்டுகள் பின்தங்கியே இருக்கிறார்கள். வீரேசலிங்கம் பந்துலுவை பிற்போக்கான நிலக்கிழமைக் கூட்டம் "கம்யூனிஸ்டு" என முத்திரை குத்துகிறது. கம்யூனிஸ்டுகளோ இதைத் தமக்கு விடப்பட்ட சவாலாக உணர்ந்து கொள்வதில்லை. புரட்சிகரப்

பண்பாட்டியக்கத்தின் வருகைக்குப் பின்னரே நாம் நம் பல்வேறு பணிகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ளத் துவங்கியுள்ளோம்.

குமார்: மார்வாடிகள், அறிவொளி இயக்கம் என்பதை ஆதரித்தார்கள். ஆனால் அவர்கள் மார்வார்ப் பகுதி மக்கள் அல்லர். அவர்கள் வெறும் பணியாக்கள்தான் - வியாபாரிகளும் வட்டிக்காரர்களும் கடைக்காரர்களும்தான். அவர்கள் ஒரு வணிக சாதியினர். வட்டிக்கடை மார்வாடிகளைப் பரவலாய் இந்தியாவில் மட்டுமல்ல, கிழக்கு ஆப்பிரிக்கா தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் காணலாம். மார்வாடிகள் ஐரோப்பாவின் யூதரைப் போன்றவர்கள். அவர்கள் சாதித்தொழிலே பிற வியாபாரமும்தான். தனிப்பட்டவர்கள் வேண்டுமானால் வேறு வேலைகளில் இருக்கின்றனர். அவர்கள் பொதுவில் அறிவொளி இயக்கத்தையும் மேலைக் கல்வியையும் ஆதரித்தனர். இந்தியப் பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்கைக் கட்டுப்படுத்தும் பிர்லா குடும்பம் போன்றவர்கள் இக்கல்வியில் அதிக அக்கறை காட்டியுள்ளனர். ஆனால் அவர்களின் பண்பாட்டுச் சித்தாந்தம்தான் என்ன? 1947 ஆகஸ்டு 5 அன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும் பிர்லா நிறுவனத் தொழிலாளர்கள் அனைவருமே அந்த சுதந்திரத் தினவிழாவில் ஐரோப்பிய முறைப்படி ஆடையணிந்து வருவதற்காக அவர்களுக்கு விசேட (tie allowance) வழங்கப்பட்டது. இது பொதுவான பண்பாடா? அல்ல, தரகுப் பண்பாடு.

சுராஜ்: முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் நமக்கு இங்கு மாவோ இல்லை. மாவோ ஹூனான் விவசாயிகள் இயக்கத்தைப் பகுத்தாய்வு செய்ததுபோல், தன் நாட்டு சமூகப் பண்பாட்டுத் தேவைகளை இணைத்தது போல், சீனாவை விடுவிக்கும் உண்மைச் சக்திகளை இனம்கண்டு கொண்டது போல் இங்கு செய்யக்கூடிய திறமையான கம்யூனிஸ்டோ விவசாயத் தலைவரோ இருக்கவில்லை அல்லது வரலாற்று ரீதியாய் முன் தீர்மானிக்கப்படும் தவிர்க்கவியலாததுமான போக்கைப் பற்றி மாவோ போல்

தொகுத்து விளக்கம் அளிக்க ஒருவராலும் இங்கு முடியவில்லை. மாவோ சிந்தனையை இங்கு பரப்புவதுடனும் அவரது ஹூனான் பகுப்பாய்வைப் பரப்புவதுடனும் நாம் திருப்தி அடைந்து கொண்டோம். இந்தியாவுக்கும் சீனத்துக்கும் ஒற்றுமைகள் நிலவவே செய்வதால் இது ஓரளவு உதவியதுதான். ஆனால் இரண்டுக்கும் வேற்றுமைகள்தான் அதிகம் என்பதால் ஹூனான் பற்றிய மாவோவின் விளக்கத்தை நாம் ஆந்திராவிலோ பீகாரிலோ வழிகாட்டியாய் பிரயோகிக்க முடியாது.

மாவோ அரசியலும் பேசினார். பெண்ணடிமைத் தனம் பற்றியும் பேசினார். ஆனால் டாங்கே போன்றவர் இதை செய்யப் போவதில்லை. டாங்கேயால் உழைக்கும் வர்க்கத் தொழிற்சங்கப் பிரச்சினைகள் பற்றிப் பேசமுடியும். ஆனால் சமூகப் பண்பாட்டுப் பிரச்சினைகள் பற்றிப் பேச வராது. இவர்கள் இந்த முக்கியப் பிரச்சனைகளைப் பேச முடியாததல்ல, மாறாக இவர்களால் (பிரச்சனைகள் என) பார்க்கக் கூட முடியாது என்பதே இன்றுள்ள நிலை. தெலுங்கானாவில் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, விவசாயிகள் நிலக்கிழமைக்கு எதிராகப் பரந்த ஐக்கியத்தை நிறுவி ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டபோது, கட்சியின் பொதுச்செயலர் பி.டி. ரணதிவே பகிரங்கமாய் அவர்களின்மேல் கடுந்தாக்குதல் தொடுத்தார். ஐக்கியத்தையும் நிலக்கிழமையை எதிர்த்த போராட்டத்தையும் ஏற்க மறுத்தார். ஆந்திரக் கம்யூனிஸ்டுகளை சீர்திருத்தவாதிகள், வர்க்க ஒத்துழைப்பாளர்கள் என்றார். மாவோவை நேரடியாகத் தாக்கினார். அப்போது நடைமுறையில் சரியென மெய்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்த மாவோவின் பகுத்தாய்வுகளையே அவர் 'விமர்சித்தார்' இந்தியக் கம்யூ. தலைவர் பி.டி. ரணதிவே, மாவோவின் 'புதிய ஜனநாயகத்தை' மார்க்சியமல்ல எனப் பழித்துரைத்தபோது, சீன மக்கள் விடுதலைப்படை அந்தக் கோட்பாட்டின் உதவியால்தான் வெற்றிபெற்றுக் கொண்டிருந்தது.

குமார்: ஒரு நிமிடம்... 1935ல் சீனக் கம்யூனிஸ்டுகள் சோவியத் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர். எனவே தம் சொந்த நாட்டில் குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக அவர்கள் விளங்கமுடிந்தது. இந்தியக் கம்யூ. கட்சி தோற்றமைக்கு ஒரு வெளிநாட்டை நாம் குறைகூற முடியாது. அதே போது நம் ஆய்வில் 'வெளிபாதிப்பு' என்ற அம்சத்தை நாம் புறக்கணித்துவிடவும் கூடாது. இந்தியக் கம்யூ. கட்சி இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்ததால் தன் சொந்த ஆய்வைச் செய்ய அதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஒரு வேளை எம்.என். ராய் அதைச் செய்திருக்க முடியும். 20களின் பிற்பகுதியில் அவரது சில எழுத்துக்கள் காரணமாக மூன்றாம் அகிலத்தின் (கோமிண்டர்ன்) நான்காம் உலக காங்கிரசில் அவர் விமர்சிக்கப்பட்டார். இதன் விளைவாக உலகக் கம்யூ. இயக்கத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். ஆனால் இவ்வெழுத்துகளில் ஏராளமான உண்மை இருக்கிறது. எப்படியும் அவர் கூறிய கருத்துக்கள், அவரை எதிர்த்துப் பேசிய குசினென் முன்வைத்த கருத்துகளைவிட சரியானவையே.

கிரேட் பிரிட்டனின் கம்யூ. கட்சியை இந்தியப் புரட்சிக்காரர்கள் ஒருவித காலனியத் தனத்துடன் சார்ந்திருந்தார்கள். இதுநம் சுதந்திரமான வளர்ச்சியைத் தடுத்தது. சீனா மார்க்சியத்தை தன் சொந்த நிலைகளுக்கேற்ப தழுவிக்கொண்டதால் தன் சொந்தப் புரட்சியைச் சாதித்தது. நாமோ காலனியப்பட்ட மார்க்சியத்துக்குள் அமுந்திவிட்டதால் நாம் சொந்த வழியில்போக வழியில்லாது போனது.

ரணதிவேக்கு சோவியத் ஆலோசகர்கள் இருந்தார்கள் என்பது வெளிப்படை அப்போது டிட்டோவும் கோமுல்காவும் எதிரிகளாய் அறிவிக்கப்பட்டுள்ளனர் என்றும் சீனாவில் பெரிய நிகழ்ச்சி ஒன்று நடக்கப்போகிறது என்றும் ஒரு பேச்சு கட்சிக்குள் அடிபட்டுக் கொண்டிருந்தது. இவ்விசயத்தில் பி.டி. ரணதிவேக்கு ஏதோ ஆலோசனை கூறப்பட்டது என்பது வெளிப்படை. அதன்படி அவர் மாவோ மேல் பகிரங்கத்

தாக்குதலைத் துவங்க அதைத் தகுந்த சந்தர்ப்பமாய் எடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் மாவோவின் பலம் கண்டு சோவியத்தலைவர்கள் பின்வாங்கினர். இவ்விதச் சூழ்ச்சிகள்தான் இந்தியாவில் மக்களாதரவு பெற்ற ஜனநாயக இயக்கம் வளர்வதைத் தடுத்தன. இந்த வெளிநாட்டு ஆலோசகர்களும் சூத்திரதாரிகளும் கட்சியில் கருத்துப்பிளவு ஏற்படும் நிலைக்குக் கட்சியைக் கொண்டு சென்றார்கள். இந்நிலையில்தான் பல கம்யூனிஸ்டுகள் நக்சல்பாரிப் பாதையையும் உழவர் புரட்சிப் பாதையையும் மேற்கொள்ளத் துவங்கினார், அவர்களின் முழக்கங்கள் பின்வருமாறு அமைந்தன சீனப்பாதையே நமது பாதை! சீனாவின் தலைவரே நமது தலைவர்!! இறுதியில் இதில் சூஎன்-லாய் தலையிட்டு இம்முழக்கங்கள் தவறானவையென விமர்சிக்க வேண்டியதாயிற்று!

சுராஜ்: ஒவ்வொரு கட்டத்திலும் கம்யூனிஸ்டுகள் தப்பான நிலைபாடுதான் எடுத்து வந்திருக்கிறார்கள். இரண்டாம் உலகப்போர் வெடித்ததும் 'ஏகாதிபத்தியப் போரை எதிர்த்துப் போராட்டம், போன்ற முழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் அடிமைத்தனமாக நடந்துகொண்டனர். எந்த அளவுக்கெனில் காபூலில் இருந்த ஜெர்மன், இத்தாலிய உளவு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் நலன்களுக்கு தம் கட்சியைச் சேவகம் செய்யவைத்தார்கள். 1942 வரை இதிலிருந்து அவர்களால் முறித்துக் கொள்ளமுடியவில்லை, சிலர் ஒருபோதும் இத்தொடர்பு-களிலிருந்து முறித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அனைத்து இந்தியாவும் 1942ல் பிரிட்டிசாருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது கட்சி ஏற்கனவே முற்றாகத் திசை மாறியிருந்தது. போராட்டத்துக்குச் சரியான மக்கள் சார்பான, ஜனநாயக வழிகாட்டலைத் தருவதற்குப் பதில் கட்சியினர் இப்போது பிரிட்டிசாரை ஆதரித்தனர்!

போர்க்காலம் முழுவதும் கட்சி சாதித்ததெல்லாம் செல்வாக்கு மிக்க பண்பாட்டு இயக்கத்தை நிறுவினதுதான். 19ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சி வேலையைக் கட்சி செய்தது. அதேபோது தீவிரப் பிற்போர்க்கான, பிரிட்டிஷ் சார்பு

அரசியல் மார்க்கத்தை மேற்கொண்டது. இதனால் உழைக்கும் வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்களான வேலை நிறுத்தங்களைக்கூட அது கடுமையாய் எதிர்க்க வேண்டியிருந்தது.

தெலுங்கானாப் போராட்டத்தை விமர்சிக்கக் காரணம் ஏதும் இருக்கிறது என்றால், அது பரந்த அளவிலான நிலக்கிழமை எதிர்ப்பான ஐக்கியமுன்னணி கட்டப்பட்டதற்காகவல்ல; ஆனால் 'உழுபவனுக்கு நிலம், என்ற கோரிக்கையுடன் முற்போக்கான, நிலக்கிழமை எதிர்ப்பான சமூக – பண்பாட்டுக் கோரிக்கைகளையும் இயக்கம் இணைத்துக் கொள்ளவில்லை என்பதே. இதுதான் 1946ன் தெலுங்கானாவுக்கும் 1927ன் ஹீனானுக்கும் உள்ள வித்தியாசம்.

குமார்: சாதியும் வர்க்கமும் பொதுவாக இணைவாய்க் கை கோர்த்துச் செல்வதை நாம் மறக்கக் கூடாது. இன்னும் ஒன்றாயிருந்த கம்யூ. கட்சியின் தேசியத் தலைமையில் 90% பேர் பார்ப்பனர்களாகவே இருந்தனர். இன்றும் சிபிஐ. சிபிஎம் இரண்டின் நிலையும் இதுவே. சாதிக்கும் கட்சிக்கும் இடையிலான இவ்வுறவு. தீர்மானகரமானதாகும். நாத்திகத்துக்கு மாறிய பார்ப்பனர், 'தீண்டத்தகாதவர்' கோயிலில் வழிபடும் உரிமைக்குப் போராடுவதை பிற்போக்கென கூறிவிடுவது எளிது. அவர்கள் இந்தியா பற்றிப் பேசினபோது மேல்சாதி இந்தியாவைப் பற்றியே கவனம் கொண்டனர். வேறெதும் அவர்களுக்குத் தெரியாது. எனவே இந்த சமூக – பண்பாட்டுப் போராட்டத்தில் சரியான கோரிக்கைகளை எப்படி அவர்களால் முன்வைத்திருக்க முடியும்?

சந்தோஷ்: விவசாயிகள் இயக்கத்திலும் அதை அடுத்த நக்சல்பாரிப் புரட்சியிலும் நான் சேர்ந்தபோது நானே இதைக் கண்டிருக்கிறேன். ஏழை விவசாயிகளுக்கும் நிலமற்றவர்களுக்கும் அவர்கள் மனதில் நிலப்பிரச்சினைகள் முதுன்மையானதாய் இருக்கும் என நான் எண்ணியிருந்தேன். இறுதியில் உண்மையும் அதுதான். ஆனால் அவர்கள்

போராட்டத்தின் உடனடிக் காரணம் யதார்த்தத்தில் என்னவாயிருந்தது? அவர்களின் தன்மானம், சுயமரியாதை, சமஉரிமை – இதுதானே? நிலப்பிரவின் முன்னால் நிமிர்ந்துநின்று அவன் கண்களை நேருக்குநேர் சந்திக்க உரிமை; அவன் வீட்டின் முன்பாக நடந்து செல்ல உரிமை; அவன் வீசியெறிந்த துண்டுபீடியைக் குனிந்து பொறுக்கிக் கொள்ள மறுக்கும் உரிமை. புரட்சி என்பது, மனித கண்ணியத்துக்கான போராட்டமன்றி வேறென்ன?

அரசியல் – பண்பாடு – பொருளாதாரம் என்ற அம்சங்கள் அடிமட்டத்தில் நன்கு இணைக்கப்பட வேண்டும். இந்த இணைப்பை தேவையைக் கோட்பாடாக வடிவமைத்துக் கொள்ள தம்மால் முடியாவிடினும் கீழ்மட்ட, வட்டாரத் தொண்டர்களுக்கு எப்போதும் இவ்வவசியம் இருக்கிறது. ஆனால் தலைவர்களோ இதை ஒருபோதும் நிறைவேற்றவில்லை. அடிமட்டத்தில்தான் கோட்பாடென்பது தெளிவு பெறுகிறது. வரதட்சனைப் பிரச்சனையை எடுத்துக் கொள்வோம்: வரதட்சனையை நாம் எதிர்த்தோம். ஏனெனில் மக்களுக்கு அது ஒரு சுமை, நிலப்பிரபுக்களையும் போலீசையும் நாம் ஒழித்தோ துரத்தியோவிட்ட பகுதிகளில் – மக்களதிகாரத்தை நாம் நிறுவத்துவங்கிய பகுதிகளில் – வரதட்சனை தரப்படவில்லை. பெரிய போலீஸ் பட்டாளத்துடன் அரசாங்கம் புகுந்தபின் நாம் தோற்கடிக்கப்பட்டு பின்வாங்க நேர்ந்தது. நம் அரசியல் தவறுகள் பற்றி வேறொரு முறை பேசலாம். இப்போது உங்களுக்கு ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நிலப்பிரபுக்கள் அதிகாரத்துக்குத் திரும்பி, போலீஸ் அப்பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தகாலம். ஒரு கிராமத்துக்குள் சட்ட விரோதமாய் நுழையும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. எனக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய தோழருடன் நான் தொடர்பு கொண்டேன். அவர் ஒரு ஏழை விவசாயி. நல்லவர். அரசியல் உணர்வுள்ள இளம் தோழர். அப்போது தான் மணம் செய்திருந்தார். வரதட்சணை வாங்கியிருந்தார்!

"நமது கொள்கை இதற்கு எதிராயிற்றே, எப்படி சம்மதித்தீர்கள்?" என்றேன். அவர் சொன்னார் – "எனக்கும் என் தங்கைகளுக்கும் திருமணம் நடந்தாக வேண்டும். முதலில் நான் வரதட்சணை வாங்க மறுத்தேன். உடனே என் அம்மா சொன்னார் - 'நீ வரதட்சணை வாங்க மறுத்தால் உன் தங்கைகள் திருமணத்துக்கு நம்மிடம் இருக்கிற சின்னத்துண்டு நிலத்தையும் இழந்துவிட வேண்டியிருக்கும். நம் வாழ்வே சீரழிந்து போகும்' என்றார். ஏனெனில் வரதட்சணை கொடுப்பது குடும்பங்களுக்கு அவ்வளவு பெரிய சுமை. தனிமனித அளவில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தேன். என் விருப்பப்படி இந்த விசயத்தில் நடத்துகொண்டால், என் அன்புக்குரியவர்களின் வாழ்க்கையை நாசப்படுத்துவதில் நான் வெற்றி பெறலாமே தவிர உருப்படியாக எதையும் அதன்மூலம் சாதித்திருக்கமுடியாது". அதிலிருந்து இச்சம்பவத்தை நான் அடிக்கடி நினைத்துப் பார்த்திருக்கிறேன். ஏனெனில் அந்த அம்மாள் புரிந்து கொண்டிருப்பதையும், மக்கள் அறிந்து கொண்டிருப்பதையும், பொறுப்பிலிருக்கும் அறிவாளிகள்கூட புரிந்து கொள்வதில்லை. தனிமனித சாகசமோ ஒரு சிலரின் வீரச் செயல்களோ தீர்மானகரமானது அல்ல. மக்களின் ஒருங்கிணைந்த போராட்டமே தீர்மானகரமானது. மக்கள் போராடுவதோ உடனடிப் பொருள்வகை நலன்களுக்காக மட்டுமல்ல, மானிட கவுரவத்துக்காக அவர்கள் போராடுகிறார்கள்.

குமார்: நக்சல்பாரியைப் பொறுத்தவரை, யதார்த்த ரீதியில் பேசினால், சுமார் 10000 இளைஞர்கள் – மேல் சாதி நடுத்தர வர்க்க அறிவாளிக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள் அனைத்து மரபு சாதிய வரம்புகளையும் உடைத்துக்கொண்டு புரட்சியில் சேர்ந்தார்கள். இதை 'தலைவர்களாக இருக்காமல் மக்களோடு மக்களாக ஒன்றித்தல்' என்றார்கள். இதில் சீன அரசியல் இயக்கங்களில் இருந்து நாங்கள் நிறைய கற்றுக்கொண்டோம். ஒன்றாய்ச் சாப்பிட்டோம்; ஒன்றாய் உழைத்தோம்; ஒன்றாய்ப் பேசினோம்; ஒன்றாய்ப் போரிட்டோம். எல்லா சாதியக்

கட்டுப்பாடுகளையும் இப்படி உடைத்து புதுவாழ்க்கை துவங்கியதன் மூலம் இவ்விளைஞர்கள் இனி பார்ப்பனர், சத்திரியர்... போலன்றி, இந்தியர் என ஆகிவிட்டார்கள் எனச் சொல்லமுடியும். புரட்சியில் ஈடுபடுவோர் மாற்றமடைகிறார்கள்.

சந்தோஷ்: அதுசரி. ஆனால் இதை நாம் மிகைப்படுத்த வேண்டாம். 60களின் பிற்பகுதியிலும் 70களின் ஆரம்பத்திலும் காடுகளிலிருந்து சண்டையிட்டுக்கொண்டு, பின் கைதாகாமல், சிறைசெல்லாமல் ஊர் திரும்பினவர்கள் பலர். அவர்களில் ஒருவரை இன்று காலை நான் சந்தித்தேன். அவர் இப்போது ஒரு கார் விற்பனையாளர்; சொந்தவீடு; வழக்கமான மேல் நடுத்தர வர்க்க வாழ்க்கை நடத்துகிறார். எல்லாம் எப்படி வந்தது என்றேன். சும்மா வீடு திரும்பினேன், கதவை திறந்தேன், அறைக்குப் போனேன், உடையை மாற்றினேன், குடும்ப உறவுகளில் இணைந்து கொண்டேன் என்றார். ஒரு செயல் மற்ற செயலுக்கு இட்டுச் செல்கிறது. தனியொரு ஆள் தன்னந்தனியாய் தன் கடந்த காலத்திலிருந்து முறித்துக் கொள்வது முடியாது.

சுராஜ்: நீங்கள் சொன்னதில் ரொம்ப அர்த்தமுண்டு. எல்லாப் புரட்சிகளும் ஒரேபோல இல்லை. காடுகளிலும் சிறைகளிலும் நான் இருந்திருக்கிறேன். புகைபோக்கி போல் சதா புகை பிடிப்பேன். என் அப்பாவுக்கு இது நன்கு தெரியும். இருந்தும் அவர் முன் நான் புகைத்ததே இல்லை. அவமரியாதை படுத்துவதில் எனக்கு விருப்பமில்லை. ஆனால் இதை நான் தப்பென நினைக்கவில்லை. எனக்கு அவர் மேல் மதிப்புண்டு. ஆனால் அவர் வைதிகர்.

குமார்: இத்தகைய மரியாதை தப்பல்ல. ஆனால் அரசியல் பொருளியல் போராட்டங்களை மனித மாண்புக்கான போராட்டத்துடன் நம்மால் இணைத்துச் செயல்பட முடியாவிட்டால் தான் கஷ்டம். இந்திய மக்கள் திரும்பத் திரும்பத் தோல்வியைத் தான் தழுவ நேரும்.

சுராஜ்: முக்கியமானது என்னவென்றால் வரலாற்றைத் தீர்மானிப்பது ஏதோ அருவமான சக்திகளல்ல என்பது தான். நான் ஹெகலியனல்ல. வரலாற்றின் போக்கை நிர்ணயிக்கிற

அருவசக்திகள் என எதுவுமில்லை. சாதாரண மக்களின் போராட்டத்தால் தான் வரலாறு உருப்பெறுகிறது.

நேரமாகிவிட்டது. சந்தோசும் குமாரும் பஸ் பிடிக்கப் போய்விட்டார்கள். சுராஜ் மேலுமொரு தம்ளர் தென்னிந்திய கடுங்காப்பியை ஊற்றித் தந்துகொண்டு பேசினார். "அகிம்சை பற்றி நாம் பேசினோம். ஏங்கல்சின் 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றத்தில்' ஸ்காண்டிநோவியப் புராணங்கள் பற்றிப் படித்தேன். உங்கள் வாலஸ்பாவிலிருந்து அவர் மேற்கோள் காட்டுகிறார். "சகோதரர்கள் ஒருவர் மேல் ஒருவர் போர் தொடுப்பார்கள். ஒருவரை ஒரு வர் கொன்று கொள்வார்கள். சகோதரிகளின் குழந்தைகள் உறவு முறையிலிருந்து விலகிப் போவார்கள்". இது எங்களுக்கு மிகவும் சுவையான விசயமாகும். ஏனெனில் மகாபாரதம் முழுதுமே குலக்குழுக்கள் அழிக்கப்பட்டு புதிய அதிகாரம் அதனிடத்துக்கு வருவது பற்றிய கதை தானே? கீதையும் உண்மையில் வல்லடிவாதம் தானே? குல முறையின் மிகப் புனிதமான கட்டளையை மீறுவது – அதாவது 'சொந்தபந்தங்களைத் தகர்ப்பது' – சரியானதும் முறையானதுமாகும் என அர்ஜுனனை ஏற்கச் செய்ய வேண்டும். பாரதப் போருக்கு முன் குடும்ப உறுப்பினரின் உயிரைப்பலி கொள்வது நினைத்துப்பார்க்கவும் முடியாதிருந்தது. ஆனால் இப்போது அகிம்சை 'உயர்ந்த' நலன்களுக்காக குடும்ப உறுப்பினர்களைக் கொல்லுவதை நியாயப்படுத்துவதாக மாற்றப்படுகிறது. கீதையில் அகிம்சை அர்ஜுனனின் அறச்சிக்கலை விடுவிக்கும் நுணுக்கமான வல்லடிவாதக் கருத்தாக்கப்படுகிறது. இது பற்றி நாங்கள் ஓரளவு விவாதித்திருக்கிறோம். இதுபற்றி டாங்கே ஒரு அபத்தமான நூல் எழுதியுள்ளார். அதில் இந்தியாவின் வரலாற்றுக்கு முந்திய நிலை பற்றி ஜோடனை செய்கிறார். ஆனால் டி.டி. கோசாம்பியும் தேவிபிரசாத் சட்டோபாத்தியாவும் இவ்விசயத்தில் அதிக அக்கறையும் அறிவும் கொண்டவர்கள். இதுபற்றி சிறப்பான முறையில் எழுதியுள்ளனர். நமது பண்பாட்டின் சித்தாந்தங்களைப் பற்றிய புரிதலை நோக்கிச் செல்வது என்பது நமக்கு மிகவும் அவசியமாக இருக்கிறது..."

தமிழில்: பா. சிங்கராயர்

குறிப்புகள்:

1. ஜோன் மிர்தால்: (Jane Myrdal) உலகப் புகழ்ப் பெற்ற ஸ்வீடன் பொருளாதாரவாதியான குன்னர் மிர்தாலின் மகன்; ஸ்வீடனிலுள்ள மார்க்சிய லெனினிய இயக்கத்தைச் சேர்ந்தவர். சீனாவிற்குப் பலமுறை சென்று பல மாதங்கள் தங்கி அங்கு ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்கள் பற்றிப் புத்தகங்கள் எழுதியுள்ளவர். பிரபலமான பத்திரிகையாளர். இவர் முதலில் ஸ்வீடன் மொழியில் எழுதி 1980 இல் வெளியிட்ட நூல் INDIA WAITS என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (Sangam Books (India) Pvt Ltd., Madras. 1984) இப்புத்தகத்திலுள்ள ஒரு அத்தியாயம் மொழி பெயர்க்கப்பட்டு சற்றே சுருக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. ஜேன்மிர்தால், தனது இந்திய நண்பர்கள் சிலர் தமக்கிடையே நடத்திய உரையாடலைப் பதிவு செய்து நமக்குத் தருகிறார். இந்திய வரலாறு பற்றிய தொடர்ச்சியான ஆய்வுக்கான தொடக்கமே இம்மொழிபெயர்ப்பு.

2. லூர்து: (St. Lourdes): பிரான்சிலுள்ள கத்தோலிக்கப் புனிதத்தலம்.

3. வேமுலவாடா: தெலிங்கானாவின் மலைப்பகுதி.

4. ரையசனோவ்: (D. Ryazanov): சோவியத் ரஷ்யாவிலிருந்த மார்க்சிய அறிஞர். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் படைப்புகளைத் தொகுத்து வெளியிட்டவர். மிகச்சிறந்த கலை இலக்கிய விமர்சகர், ஸ்டாலின் காலத்தில் ஒடுக்கப்பட்டவர்.

5. கலிவலா: பழம் ஐரோப்பியப் புராணங்களில் ஒன்று.

6. குகினென்: பின்லாந்துக்காரர். 3-ம் அகிலத் தலைவருள் ஒருவர். சீனப்புரட்சி பற்றி தவறான நிலைபாடுடையவர்.

7. டிட்டோ: யூகோ. கம்யூ. கட்சித்தலைவர்.

8. கோமுல்கா: போலந்து கம்யூ. கட்சித்தலைவர்.

9. வாலஸ்பா: ஸ்காண்டிநேவிய நாடுகளில் உள்ள புராணம்.

***

5. தேவையை நோக்கிய பயணம்

- ராயன்

"தமிழகத்தில் 'புதுஇடது' கருத்துகளை குறிப்பிட்ட சிலர் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றனர். இவர்கள், மார்க்சியத்தை நோக்கி வருகின்ற இளைஞர்களை மையமாகக் கொண்டு இயங்குகின்றனர். இவர்களின் எழுத்துத்தளங்களாக படிகள், பரிமாணம், இலக்கிய வெளிவட்டம், நவயுகக் கலாச்சாரம், மார்க்சியம் இன்று போன்ற பத்திரிக்கைகள் உள்ளன. இவர்கள் புது இடதுக் கருத்துகளையும் அவற்றின் மூலவர்களையும் தமிழகத்திற்கு இறக்குமதி செய்வதோடு, தமிழகச் சூழலுக்கேற்ற வகையில் புது-இடது கருத்துக்களுக்கு மறுவிளக்கம். கொடுக்கின்றனர் இத்தகைய கருத்துக்களைப் பரப்புநர்களாக கோவைஞானி, சத்யமங்கலம் நாகராசன், எஸ்.வி. ராஜதுரை, தமிழவன் போன்றோர் உள்ளனர்".

"... இவர்கள் மார்க்சியத்தைச் செழுமைப்படுத்து கிறோம் எனச் சொல்லியும், உண்மையைத் தேடுகிறோம் எனச் சொல்லியும் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்".

"இவர்களே, ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் பாதிப்புக்கு உள்ளான புது இடதுக் கருத்துக்களைத் தமிழகத்தில் பரப்பி மார்க்சியத்தை நோக்கிவரும் இளைஞர்களைக் குழப்பும் பணியில் உள்ளனர். நகர்ப்புறத்துப் படித்த இளைஞர்களே இவர்களது தளமாக அமைகின்றனர்"

செந்தூரன் 'நமது இலக்குகள்' என்னும் தலைப்பில் செந்தாரகை 3வது இதழில் புதிய இடதுசாரிகள் குறித்து விமர்சித்துள்ளார். அவ்விமர்சனத்தின் சாரமே இவை. இவ்விமர்சனம் எந்த அளவுக்கு உண்மையானது என்பதைப் பரிசீலிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதலாவதாக புதிய இடது கருத்துக்கள் என்பன யாவை? அவை ஞானி, நாகராசன், ராஜதுரை, தமிழவன் போன்றவர்களின் எழுத்துக்களில் எங்கு இடம் பெற்றுள்ளன? அவை மார்க்சியத்துக்குப் பகையானவையா, செந்தூரன் போன்றோர் நம்பும் புரட்சிக்கு விரோதமானவையா

என்பனவற்றை அவர் (கோ. கேசவன்) எந்த ஆதாரங்களைக் கொண்டும் நிரூபிக்கவோ, மறுக்கவோ இல்லை. வெறுமனே மொட்டையாக, எதையாவது எழுதி விடுவதுதான் அவருக்குத் தெரிந்த 'நுனிப்புல் கலை' யாக உள்ளது. புதிய இடதுசாரிகளைப் பற்றிய ஒரு நேர்மையான ஆய்வின் துவக்கமாக சில கருத்துக்களை இங்கு நாம் முன்வைக்க விரும்புகிறோம்.

முழுமையானது பொய்யானதாக இருக்கிறது

- தியோடர் அடர்னோ

இருபதாம் நூற்றாண்டின் சமுதாயவளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி 19-ஆம் நூற்றாண்டைப் பிரதி செய்பவையா? அப்படி நிகழுமானால், செந்தூரன் முதற்கொண்டு, அவரால் குறிப்பிடப்பட்ட தமிழகப் 'புதிய இடதுசாரிகள்' வரை சமுதாயத்திற்காகத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்திருக்காது. சமுதாயம் மட்டும் இயக்கத்தில் இருக்கும். ஆனால் சிந்தனை மட்டும் முன்னதைப் (19ஆம் நூற்றாண்டு மார்க்சியத்தை) பிரதிசெய்யும். இப்படித்தான் செந்தூரனின் விமர்சனம் அமைந்திருக்கிறது. ஏனெனில் இருபதாம் நூற்றாண்டின் சிந்தனை வளர்ச்சியையொட்டி செந்தூரனின் 'மார்க்சிய' சிந்தனையும், விமர்சனமும் வளரவில்லை. 19ஆம் நூற்றாண்டிலே நின்றுவிட்டது என நினைக்கிறேன்.

இயக்கம் என்பது முன்னதைப் பிரதி செய்வதல்ல. இருக்கும் நிலையிலிருந்து வேறொரு நிலைக்குக் கடந்து செல்வது. இது மார்க்சியத்துக்கும் பொருந்தும். இயங்கியலைப் பேசுபவர்களுக்கு இது புரியாமல் போயிருக்கிறது. மார்க்சியத்தின் இன்றைய வளர்ச்சி எல்லாமே திரிபுவாதமுடையது என்று கூறினால் லெனின் வளர்ச்சியும், மாவோ வளர்ச்சியும் இதற்குள் அடங்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். லெனினிசம், மாவோயிசம் என்று தனித்தனியாகப் பிரித்துக் கூறுவதே வளர்ச்சியையொட்டித்தான். ஆனால் லெனினிசத்திற்கும், மாவோயிசத்திற்கும் பிறகு மார்க்சியத்தின் வளர்ச்சியெல்லாம்

திரிபுவாதமுடையது என்றால் இங்குள்ள கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சியை சந்தேகிக்க வேண்டியுள்ளது. அவர்களின் சிந்தனைத் தேக்கத்தைப் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் இந்த வறட்டுக் கம்யூனிஸ்டுகள், வளர்ச்சியை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல், அதையொட்டி வெளிவரும் படைப்புகளைப் படிக்காமல், முறையாக விமர்சனம் செய்யாமல் ஒருவித பயத்தில் எல்லாவற்றையும், கம்யூனிசத்துக்கு விரோதமானது என்று முடிவுகட்டி அதையே விமர்சனமாக வெளியிடுகின்றன.

ஆனால் எந்தப் பழைய முறையும் (Orthodoxy System) அது மார்க்சியமானாலும், தொடர்ந்து சமுதாயத்தை விளக்குவதற்கும் மாற்றி அமைப்பதற்கும் போதுமானதாக இருக்க முடியாது. சமுதாயத்தின் வளர்ச்சியினூடே அது தானும் மாறுதலுக்குட்பட்டு வளர வேண்டியுள்ளது. அவ்வாறல்லாமல் அது 'கன்னித்தமிழ்' போல் இருக்குமானால் அது இயக்கமற்றதாகி இறந்து போகும். மார்க்சியத்தைப் பொறுத்தவரை வறட்டுக் கம்யூனிஸ்டுகள் இப்படி இருக்கத்தான் விரும்புகின்றனர். ஆனால் மார்க்சியத்தின் வரலாறு, வறட்டு வாதிகள் நினைப்பது போலல்லாமல் வேறானதுதான். லெனினின் 'புதிய பொருளாதாரத் திட்டத்தை' உருவாக்க வேண்டியதன் அவசியம், 'ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடு உருவாக்கல் எல்லாம் சமுதாய வளர்ச்சியின் தேவையாகும்'. ஆகவே மார்க்சியத்தின் இன்றைய வளர்ச்சியானது, ஒவ்வொரு நாட்டின் சிறப்புச் சூழலுடன் நெருங்கிய தொடர்புடையது. ஒரு நாட்டில் சமுதாய இயக்கங்களுடன் வளர்ச்சியடைந்த மார்க்சியம் வேறொரு நாட்டின் சமூகப் புரட்சிக்குப் பொருந்திப் போய்விடாது. மார்க்சியத்தின் வளர்ச்சி எல்லா இடத்திலும் ஒரே மாதிரியானதல்ல. அது பொதுவிதிகளை உருவாக்கலாம், உருவாக்காமலும் போகலாம்.

மேலைநாடுகளில் மார்க்சியமானது பல்கலைக்கழக அறிவாக இருப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டு – தற்போது சமுதாய விமர்சனத்துக்கும், இயக்கங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில்

அது புரட்சிக்குரிய தத்துவமாக, அரசியல் கோட்பாடாகத் திகழ்கிறது. மேற்கில், "கடந்த ஒரு நூறாண்டு காலத்தில் முதலாளித்துவ சமூகங்களுக்குள் புரட்சிகரமற்ற வடிவிலான மார்க்சியமானது... முன்னேறிய முதலாளித்துவ உலகில் மிகப்பெரிய எதிர்ப்பியக்கமாக இருந்து கொண்டிருக்கிறது" அதாவது சீர்திருத்த இயக்கமாக ஆகிவிட்டது. ஆனால் மூன்றாம் உலகநாடுகளில் புரட்சிகர இயக்கங்களுடன் மார்க்சியம் காணப்படுகிறது. வளர்ந்த நாடுகளுக்கும் 3-ம் நாடுகளுக்கும் இடையிலுள்ள பொருளாதார, பண்பாட்டு வேறுபாடுகளே அங்கங்கே நடக்கும் சமுதாயப் போராட்டங்களின் தன்மைகளைத் தீர்மானிக்கின்றன.

இந்த வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளாமல் மேலைநாட்டின் "புதிய இடதுசாரி"களையே மூன்றாம் அறிவாளிகள் பிரதி செய்கிறார்கள். அதன் மூலம் புரட்சிகரச் சக்திகளை, சீர்திருத்த சக்திகளாக உருவாக்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எந்த வகையில் சரியானது? மேலைப் புதிய இடது சாரிகளைப் போல் இங்குள்ள சி.பி.ஐ. சி.பி.எம். சீர்திருத்த இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கும்போது அப்படிப்பட்ட புதிய இடதுசாரிக்கு மீண்டும் இங்குத் தேவையில்லை.

இரண்டு வகைப் புதிய இடதுசாரிகள்:

புதிய இடதுசாரிகளில் உள்ள இரு முதன்மையான போக்குகளை செந்தூரன் கவனிக்கவில்லை. இந்த இரண்டு வகைகளில் ஒன்று சீர்திருத்த இயக்கமாகவும், மற்றொன்று புரட்சிகர இயக்கமாகவும் இருக்கின்றன. அதே சமயம் எல்லாருமே தங்களை புதிய இடதுசாரிகளாக அறிவித்துக் கொண்டவர்களல்லர். ஆனால் இக்காலத்தில் ஏற்பட்ட சமுதாயப் போராட்ட வடிவங்களும் அவற்றின் உள்ளடக்கமும், தலைமை தாங்கியவர்களையும் பற்றிய திட்டவட்டமான கருத்துக்கு வர நேரும்போது குறிப்பிட்ட பெயரில் அவைகளை உள்ளடக்கி விடுவது அவசியமாகி விடுகிறது. மேலும், இக்காலப் புரட்சிகள் மரபு ரீதியான புரட்சியிலிருந்து மாறுபட்டு, நவீன காலத் தேவையை உள்ளடக்கிய புரட்சிகளாக இருக்கின்றன. அந்த வகையில்

மாரிஸ் கிரான்ஸ்டன் தொகுத்து வெளியிட்டுள்ள 'புதிய இடதுசாரி' என்னும் புத்தகத்தில், சேகுவேரா, ஜீன்பால் சார்த்தர், ஹெர்பர் மார்க்யூஸ், பிராண்ட்ஸ் ஃபனான், ஆர்.டி. லெய்ங் ஆகியோர் புதிய இடதுசாரிகளாகக் கருதப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றனர். சோவியத் முகாமைச் சேர்ந்த 'அதிகாரப்பூர்வமான' மார்க்சிய வாதிகளைப் பொறுத்தவரை சோவியத் சமூக அமைப்பையும் அதன் புதிய ஆளும் வர்க்கத்தையும் விமர்சனம் செய்பவர்கள் அனைவரும் புதிய இடதுகள் தான்; மாசேதுங் கூட புதிய இடதாகவே கருதப்படுகிறார் – சோவியத் 'மார்க்சியவாதி'களால்! சோவியத் புத்தகங்களிலிருந்து மட்டுமே தனது 'மார்க்சியத்தை' உருவாக்கிக் கொண்டுள்ள செந்தூரனுக்கு இது புரியாது.

ஆனால், அமெரிக்காவில் ஜெர்மன் அகதிகளாக வந்திருந்த தியோடர் அடர்னோ, மாக்ஸ் ஹர்க்கிமெர், ஹெர்பட் மார்க்யூஸ் அகிய மூவரும் முக்கியமான புதிய இடதுசாரி கருத்துருவத்தை (Ideology) உருவாக்கியவர்கள். இவர்கள் மூலம் புதிய இடதுசாரி இயக்கம் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்டது" என்றும் கூறப்படுகிறது. ஆனால் "பொதுவில் புதிய இடதுசாரிகள் காஸ்ட்ரோ, சேகுவேரா, ரெஜிடெப்ரே, ஹோசிமின் இவர்களோடு தங்களை அடையாளம் காட்டி காக்கின்றனர். பெரும்பான்மையான முற்போக்குவாதிகள் தங்கள் நாட்டில் காலனியத்திற்கு எதிராகக் கொரில்லா போரை ஆதரிக்கின்றனர்" அதே சமயம், லத்தீன் அமெரிக்காவில் உள்ள புரட்சிகர இயக்கங்கள் கம்யூனிஸ்டுகளைச் சாராதவைகளே.

காஸ்ட்ரோவும், குவேராவும் கியூபா புரட்சிக்காலத்தில் கம்யூனிஸ்டுகளாக இருந்ததில்லை. ஆனால் காஸ்ட்ரோ புரட்சிக்கு ஒரு முன்னணிப்படைத் தேவை என்பதை வலியுறுத்துகிறார். "ஒரு முன்னணிப்படை இல்லாமல் புரட்சி இல்லை. அந்த முன்னணிப்படை மார்க்சிய – லெனினியக் கட்சியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் புரட்சி செய்வதற்கு உரிமையுண்டு. அக்கட்சிகள்

தனியாகவே தங்களுக்குள் ஒரு முன்னணிப் படையை உருவாக்கிக் கொள்வது கடமையாகும்" என்று. இத்தன்மையைக் கொண்ட புரட்சிகள் தாம் லத்தீன் அமெரிக்காவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு மற்றுமொரு உதாரணம்: கத்தோலிக்கப் பாதிரியான கமிலோ டாரஸ், ஏழை மக்களுக்கு, இந்தச் சர்ச்சுகள் நிரந்தரமாக எவ்வித நன்மையையும், விடுதலையையும் அளித்துவிட முடியாது என்பதை உணர்ந்து கொரில்லா போர் வீரனாக உருவானார். அவர் "மக்கள் தேர்தலில் நம்பிக்கை வைக்கவில்லை. சட்டப்பூர்வமான வழிகள் பயனற்றுவிட்டதை அறிவர். ஆயுதந் தாங்கிய போரைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் அறிவர்". என்று கூறியுள்ளார். இவரையும் இவர்களைப் போன்றவர்களையும் புரட்சிகர புதிய இடதுசாரிகள் பட்டியலில் சேர்த்துவிட முடியும். மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் புதிய இடதுசாரிகளின் புரட்சிகரத் தன்மை இதுவே.

ஆனால் 1960களில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் தோன்றிய புதிய இடதுசாரிகள் தங்கள் நாட்டில் முற்போக்காளர்களாகவும், சீர்திருத்தவாதிகளாகவும் இருந்தனர். பொருளாதார விசயங்களில் அக்கறையற்றவர்களாகவும், அதிலிருந்து விலகி (வளர்ந்துவிட்ட நாடுகளில் ஏற்படும் நிலை) கல்வி, பண்பாடு, அடுத்தவர்களோடு மற்றும் வேலை செய்யும் இடங்களில் கொள்ளும் உறவு பற்றிய வி யங்களில் அதிக சிரத்தையைக் காட்டினர். மனிதனை வெறும் நுகர்வோனாக்குவதற்கு எதிராகவும் அவர்கள் இயக்கம் இருந்தது. குறிப்பாக அமெரிக்க "முற்போக்கு அறிவாளிகள் மூன்றாம் உலகின் வளரும் நாடுகளுக்கும் அங்கு தோன்றிய புரட்சிகர இயக்கங்களுக்கும் ஆதரவு கொடுப்பதைத் தங்கள் கடமையாகக் கருதினர்". மொழியியலாளர் நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) முதற்கொண்டு பல புதிய இடதுசாரிகள், அமெரிக்கா வியட்நாமில் நடத்திய யுத்தத்திற்கெதிராகவும், மூன்றாம் உலகநாடுகளில் அது பின்பற்றும் அயல் நாட்டுக் கொள்கைகளுக்கு எதிராகவும், கியூபாவில் புரட்சியை ஒடுக்குவதற்கு அந்நாடு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இயக்கங்கள் நடத்தினர். இந்த இயக்கங்களை

ஒடுக்குவதற்கு அமெரிக்க அரசு எடுத்த அடக்குமுறை நடவடிக்கைகளால் இரத்தம் சிந்திச் சிறை சென்றவர்கள் பலர். இந்தப் புதிய இடதுசாரி இயக்கத்தில் அமெரிக்கக் கறுப்பர்களின் விடுதலை இயக்கமும், பெண் விடுதலை இயக்கமும் உள்ளடங்கியதே. இவை பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளாமல், போகிற போக்கில் எஸ்.என். நாகராஜன், எஸ்.வி. ராஜதுரை, ஞானி, தமிழவன் ஆகியோர் மேலைப் புதிய இடதுசாரிகளின் கொள்கைகளைத் தமிழ்ச் சூழலுக்கேற்ப மறுவிளக்கம் செய்கின்றனர் என்று கூறுவது நேர்மையற்ற செயலாகும்.

இந்நூற்றாண்டின் மத்தியில் மேலை மார்க்சியவாதிகள் மார்க்சியத்தை அணுகிய முறையும், அதை மறுவிளக்கம் செய்ததும் இங்குள்ள வறட்டுவாத அமைப்பில் அங்கம் வகிக்காத அல்லது அங்கம் வகித்து வெளியேறிய மார்க்சியவாதிகளைக் கவர்ந்துள்ளது உண்மை. தேவையும் ஆகும். புதிய இடதுசாரிகளின் புதிய மார்க்சியம், மார்க்சின் பொருளாதாரத்தை விட அவரின் சமூகவியல், தத்துவக் கருத்துகளுக்கே முதலிடம் அளித்தது. அவரது "அந்நியமாதல்" கருத்து மார்க்சியத்தை மேலும் ஆழமாகவும், மானிடத் துயரத்தின் மூலவேர்களை மிகத் தெளிவாகவும் புரிந்து கொள்ளும் ஆற்றலை அளித்துள்ளது. ஆனால் வறட்டுவாதிகளோ 'அந்நியமாதல்' கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதானது புரட்சியைக் கையைப் பிடித்து உட்கார வைத்து விட்டதாகக் கருதுகின்றனர். "கை சுடாத புரட்சியை" அவர் கூறிய தமிழகப் புதிய இடதுசாரிகள் மட்டுமல்ல செந்தூரனும் அதைத்தான் இப்போது செய்து வருகின்றார். உண்மையில் இங்கு ஒரு புரட்சி தோன்றும்போது யார் "கை சுடாத புரட்சியை செய்கிறவர்கள்" என்பது அப்போது புலப்படும்.

இடதுசாரிகளும் கம்யூனிஸ்ட்டுகளும்:

எல்லா நாட்டிலும் உள்ள எல்லா கம்யூனிஸ்ட்டுகளும் புரட்சிக்காரர்கள் அல்லர். மேலை நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவ ஜனநாயகத்தில் தேர்தல் மூலம் சோசலிச சமுதாயத்தைக்

கொண்டு வந்துவிடலாம் என நம்புகின்றனர். மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளும் அதே நிலையை எடுக்கின்றனர். கியூபாவில் காஸ்ட்ரோ புரட்சியை நடத்தியபோது அதை விமர்சித்தபடி, காஸ்ட்ரோவை தாக்கியபடி இருந்தனர். இந்த அனுபவங்களிலிருந்து தான் காஸ்ட்ரோ, "யார் புரட்சி செய்வது? மக்கள். புரட்சியாளர்கள். கட்சியுடனோ அல்லது கட்சி இல்லாமலோ," என்று கூறினார். ஆனால் புரட்சி முடிந்த பின்பு கம்யூனிஸ்டுகள் காஸ்ட்ரோவுடன் ஐக்கியப்படுகின்றனர். கொலம்பியா கம்யூனிஸ்ட்டுகளைப் பற்றி கொரில்லா போர்ப்படைத் (ELN) தலைவர் ஃபேபியா கூறுகிறார். கம்யூனிஸ்ட் கட்சியினர் முதலாளித்துவ ஜனநாயக விதிகளின்படி செயல்படுகிறார்கள். இப்போது நடைபெறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலையும் இது போன்றதே. ஆயுதந் தாங்கிப் போராடும் விடுதலைப்புலிகள், மற்ற குழுக்களும் கம்யூனிஸ்ட்டுகள் அல்லர். அங்கு நடப்பது வர்க்கப் போராட்டமல்ல வென்றாலும், அடக்கி, ஒடுக்கி, அழிக்க விரும்பும் இனத்தை எதிர்த்து ஆயுதந்தாங்கிய போரை நடத்தியே தீரவேண்டிய நிலையில் அங்கும் இங்குமுள்ள கம்யூனிஸ்ட்டுகள்; மார்க்சிய – லெனினிய அடிப்படையில் நிதானமாக யோசித்தும், விவாதித்துக் கொண்டுமிருக்கின்றனர். இறுதியில் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வது பற்றி வசதியாகச் சொல்லிவிடுகின்றனர். வர்க்கப் போராட்டத்தைத் தவிர, வேறு வகையிலான தவிர்க்க முடியாத நிலையில் ஒடுக்கப்பட்ட இனம் நடத்தும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை இவர்களால் ஆதரிக்க முடியவில்லை. அதில் பங்கெடுக்க முடியவில்லை. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை என்னும்போது தீர்வைத் திரும்பத் திரும்ப லெனின் – ஸ்டாலினியத்துக்குள் தேடிக் கொண்டிருப்பதிலும், விளக்கம் கொடுப்பதிலும் திருப்தியுறுகின்றனர். இன்றைய இலங்கைத் தமிழினப் பிரச்சினைக்கு லெனின், ஸ்டாலின் கடந்த காலத்தில் தீர்வு சொல்லியிருக்க முடியாது. இது போன்ற நிலைபாட்டை

எடுக்கும்போது தான் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் மூன்றாம் உலகப் புதிய இடதுசாரிகளுக்கும் உள்ள வேறுபாடு புரிகிறது. லெனினும் ஸ்டாலினும் சந்திக்காத சிக்கலான பிரச்சினைகளை இன்றையப் போராட்ட வீரர்கள் சந்திக்கின்றனர். இப்போது அவர்கள் வழியிலே அதை வெற்றி கொள்ளப் போராடுகின்றனர். இதுதான் இன்றைய புதிய இடதுசாரிகளின் புரட்சியின் உள்ளடக்கம் என்பதை செந்தூரன் புரிந்து கொள்ளட்டும். இதேபோல 1968இல் பிரான்சில் இளம் தொழிலாளர் – மாணவர் புரட்சி வெடித்தபோது அதை ஆதரித்தவர்கள் புதிய இடதுகள்; எதிர்த்தவர்களோ ஸ்தாபனக் கம்யூனிஸ்ட்டுகள்.

பாட்டாளி வர்க்கமும் புரட்சியும்

"The city is a cemetery of revolutionaries and resources" என்னும் காஸ்ட் ரோவின் கருத்து இங்கும் உண்மையாகி இருப்பதை உணர முடிகிறது. அதே சமயம் வளர்ந்துவிட்ட நாடுகளில், "ரைட்மில்ஸ், மார்க்சியவாதிகள் கூறும் பாட்டாளி வர்க்கத்தின் சமூகப் பாத்திரத்தை நிராகரிக்கிறார். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் அந்தக் கருத்து உண்மையற்றதாகிவிட்டது. ஆகவேதான் விரும்பிய முற்போக்கான சமூக மாறுதலைத்தேட வேண்டியவரானார்". மற்ற சமூகக் குழுக்களைக் கொண்டுவரும் தகுதி பெற்ற மேலை நாடுகளில் தொழிலாளி வர்க்கம் ஒரு புதிய மத்தியதர வர்க்கநிலைக்குப் போய்விட்டது. ஆகவே அது புரட்சி செய்ய வேண்டிய அவசியமில்லை என்பது அனுபவமாக இருக்கிறது. "அமெரிக்காவில் பெரும்பான்மையான நகர்ப்புறத் தொழிலாளிகள் வியட்நாம் போன்ற போர்களின் போது எடுக்கும் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து அதிகப்படியான லாபம் அடைந்ததால், போரைத் திடமாக ஆதரிப்பவர்களாக இருந்தனர்". இந்நிலையில் அமெரிக்க மாணவர்கள். அறிவாளிகள் முற்போக்குச் சக்திகளாகத் திகழ்கின்றனர். ஆகவே அமெரிக்காவில் ரைட் மில்ஸூம், மார்க்யூசும் செய்த ஆய்வுகள், விமர்சனங்கள் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருந்தாது. (அல்லது 3வது உலக நாடுகளைப்

பற்றியதல்ல) என்றாலும் மூன்றாம் உலக நாடுகளில் கூட இதுபோன்ற நிலை இருப்பதை அறிய முடிகிறது. பிரான்ட்ஸ் பனான் என்னும் அல்ஜீரிய தேசிய விடுதலைப் போராட்டம் தலைவர், ஐரோப்பிய தொழிலாளி வர்க்கத்தை, காலனி சமுதாயத்தின் தொழிலாளி வர்க்கத்தோடு ஒப்பிட முடியாது என்றார். காலனி நாடுகளில் உண்மையான தொழிலாளி வர்க்கம் என்பது... விவசாயிகள் மட்டுமே என்றும் கூறியுள்ளார். மேலும் கொலம்பியா போன்ற இடங்களில் "தொழிற்சங்க வாதிகள், புரட்சிக்கு எவ்வகையிலும் தயாராக இல்லை. தொழிலாளர் இயக்கம் என்பது எப்போதும் அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. இந்தியாவிலும் தொழிலாளர் வர்க்கம் கூலி உயர்வு போராட்டத்தைத் தவிர அரசியல் போராட்டத்தை எட்டவில்லை. தலைமை தாங்கி நடத்தும் இரு கம்யூனிஸ்ட் அமைப்புகளும் (CPI, CPM) இன்றைய ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்து கொள்வதை நியாயப்படுத்துகின்றன. அவைகள் சகட்டு மேனிக்கு, ஊர்வலம், உண்ணாவிரதம், பந்து, தர்ணா என்று நடத்தி நிறைவு கொண்டு விடுகின்றன. புரட்சிக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படும் மார்க்சிய – லெனினிய வாதிகளின் அமைப்புகளில் நூற்றுக்கு 99% குட்டி பூர்சுவாக்களும் கிராமப்புற உழைப்பாளிகளுமே உள்ளனர். பாட்டாளி வர்க்க உறுப்பினர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளில் விவசாயிகள் கிராமப்புற உழைப்பாளிகளே. புரட்சிகர சக்தியாக இருக்கிறார்கள். அதனால்தான் கிராமப் புறங்களை விடுவித்த பிறகு நகர்ப்புறங்களை விடுவிக்கும் நிலை மாவோவுக்கும் காஸ்ட்ரோவுக்கும் ஏற்பட்டது. தொழிலாளர்கள் முற்போக்கான சக்தியாக இருந்தாலும், புரட்சிக்குத் தயாரில்லை. விவசாயிகள் அவர்களைவிட பின்தங்கி இருந்தாலும் ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறையிலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுபட அவர்கள் புரட்சியைத் தவிர (ஆயுதந் தாங்கிய போராட்டத்தைத் தவிர) வேறொன்றைத் தேர்ந்தெடுக்க முடியாது. ஆகவே நவீன

காலனியாதிக்கத்தின் கீழ் தொழிலாளி வர்க்கம் ஒரு புரட்சிகர சக்தி என்பது மூன்றாம் உலக நாடுகளிலே கூட வெறும் கோட்பாட்டளவில்தான் இருந்து வருகிறது. இந்த மெய் நிலையை வெளிப்படையாகக் கூறுபவர்கள் புதிய இடதுசாரிகள். இந்தப் புதிய இடதுசாரிகள் (காஸ்ட்ரோ, குவேரா போன்றோர்) முதலில் புரட்சியாளர்கள், பிறகு தான் மார்க்சியவாதிகள், மார்க்சியம் அவர்களின் புரட்சிகரச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டது.

உலகக் கருத்து உருவாக்கல்?

ஹெர்பட் மார்க்யூசின் One Diamentional Man ரைட்மில்சின் White Collar ஆகட்டும் அல்லது வேறெந்த புதிய இடதுசாரிகளின் விமர்சனமாகட்டும் அது தத்தம் சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களைப் பற்றிய ஆய்வும், விமர்சனங்களுமே தவிர மூன்றாம் உலக நாடுகளின் வர்க்கங்களைப் பற்றி ஆய்வல்ல. அவ்வாறிருக்க அவர்கள் கருத்துக்களின் இறக்குமதி நம் சமுதாயத்தை விமர்சிக்க அல்லது ஆய்வு செய்ய எப்படிப் போதுமானதாகவும் பொருத்தமுடையதாகவும் இருக்கும்? இதை அவர்கள் எல்லா நாட்டுக்கும் பொருந்தும் "உலகக் கருத்தாக முன்" வைக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அதை ஏற்கவும் முடியாது. ராஜதுரை, ஞானி போன்றோரும் அப்படிக் கருதவும் இல்லை; செய்யவும் இல்லை. அதே நேரத்தில் மார்க்சியத்துக்குக் கிடைத்துள்ள புதிய பங்களிப்புகளை மறுக்கவும் இல்லை. ஆனால் செந்தூரன் புதிய இடதுசாரிக் கருத்துக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை வைக்கிறார்.

மார்க்சியம் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பின்பு, மார்க்சிய இலக்கிய விமர்சனத்தையும் இறக்குமதி செய்ததை மறந்துவிடக் கூடாது. எது இறக்குமதி செய்யப்பட்டாலும் அது தேவையையொட்டியதாகவும், தேவையை நிறைவு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பின்னால் அது சுய படைப்புகள் உருவாகும் சூழலை உருவாக்க வேண்டும். நா. வானமாமலையிலிருந்து இன்றைய கோ. கேசவன் வரைக்கும் (ஏன் அவரது குருநாதர்

உள்பட) மார்க்சிய இலக்கிய விமர்சனத் துறையானது வறட்டுவாத எல்லையைத் தாண்டாத நிலையிலிருக்கிறது. இந்த கம்யூனிஸ்ட்டுகளிடம், இலக்கிய விமர்சனங்களிலும், இலக்கிய போக்குகளிலும் நிலைத்த தலைமை தெரிகிறது. இவர்களின் இயங்கியல் பார்வையில் இயக்க மறுப்பியல் வாதம் இருக்கிறது. குறிப்பாக இவர்களுடைய இலக்கியப் பார்வையில் நிரந்தர உண்மையையும், உலகக் கருதத்தையும் எல்லாத் துறைகளிலும் நிறுவிட முயலும் போக்கானது இயக்க மறுப்பியல் நிலை கொண்டதே. இவர்களுக்கு இப்போது எது தேவையோ அதை நோக்கிச் செல்வதில்லை. தேவையை, ஏற்கனவே வைத்திருக்கும் அமுதசுரபியிலிருந்து எடுத்து நிறைவு செய்து கொள்வது இவர்களின் பழக்கமாகிவிட்டது. இந்த அமுதசுரபியிலிருந்து கிடைப்பது புளித்துப்போன பழங்கஞ்சிதான். இவர்களின் வாய்ப்பாட்டு மார்க்சியம் எல்லாத்துறைகளின் கேள்விகளுக்கும் பதிலளித்துவிட முடியும் என்னும் கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் புதிய மார்க்சியவாதிகள் தேவையை நோக்கிப் பயணம் செய்யக் கூடியவர்கள். மார்க்சிய அடிப்படையிலிருந்து புதியனவற்றைக் காலச் சூழலுக்கேற்ப படைத்துக் கொள்கின்றனர். இந்த படைப்புதான் தேவையை நிறைவு செய்யும். எஸ்.வி. ராஜதுரையின் “எக்சிஸ்டென்சியலிசமும்” “அந்நியமாதலும்” தமிழவனின் “ஸ்ட்ரக்சுரலிசமும்” இன்றைய மார்க்சியச் சிந்தனை வறட்சியில் செழுமையூட்டும் செயலாக அவை வெளிவந்திருக்கின்றனர். இன்றைய எல்லாக் கலை வடிவங்களையும் பற்றிய விமர்சனமுறையாக ஸ்டிரக்சுரலிசம் உலகில் செயல்பட்டு வருகிறது. இப்போது இலக்கிய விமர்சனத்தில் “ஸ்டிரக்சுரலிசத்துக்குப் பிறகு” என்னும் நிலையை எட்டிய பிறகும், இன்னும் வறட்டுவாத மூலவர்களின் காலடியிலிருந்து இந்த இலக்கியப் பேராசிரியர்கள் எழுந்திருக்கவில்லை.

இவர்களுக்கு இலக்கிய விமர்சனம் மட்டுமல்ல இலக்கியமும், மாக்சிம் கார்க்கி, லூசுன்

போன்றவர்களுடையது போலிருக்க வேண்டும். (மாக்சிம் கார்க்கியின் படைப்புகளிலும் கூட 'தாய்' என்ற ஒரே நாவலைப் பற்றித்தான் திரும்பத் திரும்பப் பேசுவார்களேயன்றி கார்க்கியின் ஏராளமான பிற படைப்புகளைப் பற்றிய எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை) செரபண்டராஜீ, பாணிக்கிரகிபோல் கவிதை எழுதவேண்டும். கத்தாரைப்போல் எல்லாரும் கலையை வெளிப்படுத்த வேண்டும். இந்த நிலைதான் செந்தூரனுக்குக் குழப்பத்தை விளைவிக்காத சீரியசெயல். அவருக்கு இந்த எல்லைக்குட்பட்டு வராத கலை இலக்கியமும் எல்லாம் ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தின் பாதிப்புக்குள்ளானதாகும். புரிந்துகொள்ள முடியாதது எல்லாம் அல்லது புதியது எல்லாம் (புதியதாகப் பிறந்த குழந்தையும்கூட) மார்க்சியத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது! ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தைப் பற்றிய ஆழமான கூர்மையான விமர்சனங்கள் மார்க்யூஸ், அடேர்னோ போன்றவர்களின் படைப்புகளில் காணமுடியும் இவர்களின் படைப்புகளில் ஒரு பக்கத்தையாவது செந்தூரன் படித்திருப்பதற்கான சான்று ஏதும் இல்லை. ஆனாலும் புதிய இடது கருத்துகள் ஏகாதிபத்தியக் கலாச்சாரத் தாக்கத்தில் பிறந்தது என்று கேசவன் தனது சோவியத் தத்துவ குருமார்களின் கருத்தையே எதிரொலிக்கிறார். இவரைப் போன்றே மருதமுத்துவும் ஏந்தும் 'மார்க்சியம்' தொடுக்கின்ற தாக்குதல்கள், சோவியத் அதிகாரவர்க்க மார்க்சிய தத்துவ சிகாமணிகளிடமிருந்து கடன்வாங்கப் பெற்றவைதாம். "ரஷ்ய மூளை என்பதாலே"யே ரஷ்ய மூளைக்கு அடிமைப்பட்டுப்போன இவர்கள் அக்கருத்துக்களை ஆதரிக்கின்றனர்.

பரிமாணம், படிகள், இலக்கிய வெளிவட்டம், மார்க்சியம் இன்று போன்ற இதழ்களின் பணியானது இன்றைய சிந்தனை வளர்ச்சிக்கும் மார்க்சியப் புரிதலுக்கும் சிறப்பான பங்களிப்பைச் செய்திருக்கின்றன. இவைகளில் மார்க்சிய அடிப்படையிலான பல சிந்தனைகள் வந்து மோதி புதியவைகளின் பிறப்புக்கான உக்கிரத்தில் இருப்பது இவர்களுக்குக் குழப்பத்தை விளைவிப்பதாக அமைகிறது.

வறட்டுக் கம்யூனிஸ்ட்டுகள் எல்லோருமே தங்களது 'மார்க்சிய லெனினியம்' மட்டுமே. உலகத்தைப் பற்றிய முழுமையான சரியான அறிவு கொண்டிருப்பதாக நம்பி அமைதி அடைந்து விடுகின்றனர். புதிதாக எந்த அறிவுத்துறை தோன்றினாலும் மார்க்சியத்துக்கு விரோதமானது, ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவத்துக்கு ஊழியம் செய்கிறது என்னும் முடிவோடு இருப்பவர்களுக்குக் கூறிக் கொள்வது:

'... ... ... மார்க்ஸ் கண்டு பிடித்திருந்த வரலாறு பற்றிய அதே லோகாயத வாதக் கருத்தோட்டத்தைத்தான் மார்கன் தமது சொந்த வழியிலே அமெரிக்காவில் மீண்டும் கண்டுபிடித்தார்' என்னும் ஏங்கல்சின் இந்த வார்த்தைகள் கம்யூனிஸ்டுகள் அல்லாதவர்களும் சரியாகச் சிந்திக்கவும் ஆய்வு செய்யவும் முடியும் என்பதைப் புலப்படுத்துகிறது. இதை வறட்டுவாதிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பத்தி விமர்சனம்

ராஜதுரையின், எக்சிஸ்டென்ஷியலிசம், 'அந்நியமாதல்', நாகராஜனின் 'கம்யூனிசம் விடுதலையின் இலக்கணம்; ஞானியின் 'இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும் ஒரு விவாதத்துக்கான முன்னுரை' ஆகியவை செந்தூரனின் ஒரு பக்தி விமர்சனத்தில் விமர்சிக்கப்பட்டுவிட்டது.

'எக்ஸிடென்ஷியலிசம், அந்நியமாதல் இரண்டும் "சார்த்தரின் வழியில் நின்று எழுதப்பட்டது' என்று கூறுகிறார். செந்தூரன் இதை ஒரு விரிவான கட்டுரையின் மூலம் நிரூபிக்க வேண்டும். ஏனெனில் செந்தூரனின் 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' முறையில் தெளிவுபடவில்லை என்பதே. செந்தாரகை வாசகர்களுக்கு அது போதுமானதாக இருக்கலாம். ஆனால் ஒரு அறிவாளி என்ற வகையில் தீவிரமான சிந்தனைப்போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்நூல்களை அதே சிரத்தையுடன்; விமர்சித்திருக்க வேண்டும். ஒருசில மேற்கோள்களை எடுத்துக்காட்டி, இவர்கள் மார்க்சியத்துக்கு விரோதிகள், திரித்துப் புரட்டிவிட்டார்கள் என்று மொட்டையாகக் கூறுவது

சிறுபிள்ளைத்தனமான விமர்சனம். நாகராஜன், ஞானி இருவரின் நூல்களும் தமிழ்ச் சூழலுக்கேற்ப மார்க்சியத்தில் சுயபடைப்புகளாக வெளிவந்தவை. மார்க்சியத்தின் இறுதி எல்லையைத் தாங்கள் தொட்டுவிட்டதாக இவர்களில் எவரும் கூறிக் கொள்ளவில்லை. விவாதத்துக்குத் தங்கள் படைப்புக்களை உட்படுத்தத் தயாராக இருக்கிறார்கள். அவற்றின் சில முடிவு மார்க்சிய வரலாற்றின் இன்றைய நெருக்கடியில் எழுந்தவை. அவர்கள் அவைகளை முற்றிலும் புறந்தள்ளிவிட்டு இங்கு மார்க்சியத்தில் எழும் பிரச்சனைகளைத் தீர்த்துவிடுவது என்பது சாத்தியமில்லை என்கின்றனர். ஆகவே அறிவுத்தளத்தில் சரியான முறையில் விமர்சித்து இந்நூல்களின் மையத்தை யார் வேண்டுமானாலும் தகர்க்கலாம். வெற்று அவதூறுகளும் ஒற்றைவரித் தகவல்களும் அறிவு வறட்சியை முடிமறைக்கும் திரையாக மட்டுமே செயல்படும்.

தன்னார்வக் குழுக்களும் அவற்றின் தராதரங்களும்

கேசவன், மருதமுத்து போன்றோரின் இலக்கிய தத்துவ 'விமர்சனம்' மட்டுமல்ல, பிற புரட்சிக் குழுக்கள் – தன்னார்வக் குழுக்கள் பற்றிய 'அரசியலாய்வும்' சோவியத் ஆதரவு மார்க்சிய வாதியான பிரகாஷ் கரத், தீக்கதிர், மார்க்சிஸ்ட், மெயின் ஸ்டிரீம், பேட்ரியாட் ஆகிய சோவியத் சார்பு மற்றும் காங்கிரஸ் ஆதரவு ஏடுகள், சில இந்திரா காங்கிரஸ் எம்.பி.க்கள் சிலருக்கும் கடன்பட்டுள்ளது. குறிப்பாக தன்னார்வக் குழுக்கள் பற்றி பிரகாஷ் கரத் எழுதிய கட்டுரையும் 'An ideological dead end' என்ற தலைப்பில் அவர் எழுதிய மற்றோர் கட்டுரையும் சி.பி.எம். மின் தத்துவார்த்த ஏடான 'The Marxist'--இல் வெளிவந்துள்ளது. கேசவன், மருதமுத்து ஆகியோரின் பல வாதங்களுக்கும், பிரகாஷ் கரத்தின் கருத்துகளுக்கும் வியக்கத்தக்க ஒற்றுமை காணப்படுகிறது. பிரகாஷ் கரத்தின் நோக்கம் – இந்தியாவில் சோவியத் ஆதிக்கத்தை எதிர்த்தும், அதிகார வர்க்க மார்க்சியத்தை எதிர்த்தும், மரபு வழி மார்க்சிய நடைமுறையின் வறட்டுத் தனத்தை எதிர்த்தும் புரட்சிவாதிகளால் அக்கறை

செலுத்தப்படாத விஞ்ஞானம் – தொழில்நுட்பம் – சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற, துறைகளில் அக்கறை செலுத்தியும், குடியுரிமைகளுக்கும் மக்கள் உரிமைகளுக்குப் போராடியும் வருகின்ற பல ஜனநாயகச் சக்திகளை, அவை பாராளுமன்ற மார்க்சியவாதிகளின் அரசியல் செல்வாக்கை குறைக்கின்றன என்பதாலும் நக்சல்பாரி இயக்கத்தவருக்கு ஒத்தாசை புரிகின்றன என்பதற்காகவும், ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளாகச் சித்தரித்து இழிவுபடுத்துவதுதான்.

தன்னார்வக் குழுக்கள் பல வகையானவை. அவை பெறும் உள்நாட்டு மற்றும் அந்நிய நிதிஉதவிகளும் பலவகையானவை. சில வகை உதவிகள் வெளிநாட்டு அரசாங்கங்களின் மானியங்கள்; வேறு சில வெளிநாடுகளிலுள்ள தரும சிந்தனையுள்ள தனிமனிதர்கள், பிரஜைகள் ஆகியோரால் திரட்டித் தரப்படுபவை. சில மத நிறுவனங்களால் தரப்படுபவை. இப்படிப் பலவகைப் பட்டவை. நிதிபெறுபவர் நிதி வழங்குவோர் அனைவருமே ஒரே விதமான நிபந்தனைகளை விதிக்கவும் கட்டுப்படவும் செய்கின்றவரல்லர். தன்னார்வக்குழுக்களினுடைய செயல்பாடுகளையும் அவற்றின் உண்மையான இயல்புகளையும் மிக எளிமைப்படுத்தப்பட்ட முறையில் விளக்கிவிட முடியாது. ஒவ்வொன்றும் ஆழ்ந்த விரிவான பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டியவை. மேலும் தன்னார்வக் குழுக்கள் மட்டுமல்லாது. இந்தியாவில் உள்ள அனைத்து நிறுவனங்களும் – தொழிற்சாலைகள், வங்கிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பத்திரிக்கைத் துறைகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், அரசாங்க அலுவலகங்கள் முதலியன – அதிகார வர்க்க மற்றும் ஏகாதிபத்திய மூலதனத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன. சி.பி.ஐ., சி.பி.எம். ஆகியவற்றுக்கும் சோவியத் யூனியனின் நேர்முக, மறைமுக உதவிகள் ஏராளமாக உண்டு. நிலைமை மிகவும் சிக்கலானது. ஆனால் பிரகாஷ் கரத்தின் 'ஆய்வை'ப் போலவே கேசவன், மருதமுத்து (இன்னும் சில வறட்டு மாவோயிஸ்டுகள்) ஆகியோரின் 'ஆய்வும்' வி யங்களைத் தெளிவுபடுத்துவதில்லை. மாறாக, தற்காலிக அரசியல்

வெற்றிகளையும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களையும் பிற புரட்சிக் குழுக்களையும் இழிவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டவை. சிந்தனைத் தளத்தில் அறிவுப்போர் நடத்தும் திறனின்றி எதிராளிகளை 'வயிற்றுக்குக்கீழ் அடிப்பதை' நோக்கமாகக் கொண்டவை.

இங்கு சில விவரங்களைக் குறிப்பிடுவது பொருத்தமானது. செந்தூரன் சார்ந்திருக்கும் இயக்கத்தின் அனைத்திந்திய புரட்சிகர மாணவர் அமைப்பின் மாநாடு சென்ற பிப்ரவரியில் ஹைதராபாத்தில் நடந்தது. அதைத் தொடக்கி வைத்துப் பேசியவர் மத்தியப் பிரதேசத்திலுள்ள தன்னார்வக் குழுவான 'கிடே ார் பாரதி'யின் தலைவர் டாக்டர். அனில் சடகோபால்; 1983-இல் இதே இயக்கத்தைச் சேர்ந்த ரயக்கூலி சங்க மாநாடு ஆந்திராவில் கரீம் நகரில் நடந்தது. இதில் சிறப்புரையாற்றியவர் 'கொத்தடிமை விடுதலைச் சங்கம்' என்ற தன்னார்வக் குழுவின் தலைவர் சுவாமி அக்னிவேஷ். பம்பாயிலுள்ள Center for Education and Documentation என்ற தன்னார்வக்குழு பம்பாயில் 19 மாதங்கள் நடைபெற்ற ஜவுளி ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் பற்றி 'Fact Sheet' என்ற பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. இதில் முக்கியப் பங்கேற்றவரும், கட்டுரை எழுதியவரும் செந்தூரனின் இயக்கத்தைச் சேர்ந்த 'நவஜவான் பாரத் சபா' என்ற இளைஞர் அமைப்பின் முன்னணி ஊழியரான குருபீர்சிங் என்பவராவர். சென்ற ஏப்ரலில் வாரங்கல், கம்மம், ஆகிய நகரங்களில் கோபிர ராஜண்ணா (இவர் செந்தூரனின் இயக்கத்தைச் சேர்ந்தவர். சென்ற ஜனவரியில் R.S.S. போலீஸ் ஆட்களால் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது) நினைவுச் சொற்பொழிவுகள் அதே இயக்கத்தின் குடியுரிமை அமைப்பான A.P.C.L.C.யால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இச்சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர் கேசவன் – மருதமுத்து - பிரகாஷ் கரத் போன்றோரால் இழிவு செய்யப்பட்ட லோகாயன் என்ற ஆராய்ச்சிக் குழுவிலிருந்தவரும் P.U.C.L.இன் தலைவருமான பேராசிரியர் ரஜனி கோத்தாரி ஆவார். A.P.C.C.L.யில் அங்கம்

வகிப்போர் சிலர் தன்னார்வக் குழுவைச் சேர்ந்தவர்கள். செந்தூரனின் இயக்கத்தின் மராட்டிய மாநிலத்தில் குழுவுடன் சம்பந்தப்பட்டவர் என்று, பிற குழுக்கள் கூறி வருகின்றன. கேசவனின் இலக்கிய குருவான கைலாசபதி இலங்கையிலுள்ள 'விமுக்தி தருமகேந்திரா' என்ற சமய நிறுவனத்தின் நான்கு புரவலர்களில் ஒருவராக இருந்தார். பேராசிரியர் மனோரஞ்சன் மோகந்தி (டெல்லி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவர்; மாவோயிசம் பற்றியும் சீனம் பற்றியும் சிறந்த நூல்களை எழுதியவர்; P.U.D.R. என்ற மக்கள் உரிமை அமைப்பின் செயல் வீரர்; அண்மையில் ஆந்திராவிலுள்ள இந்திரவல்லிக்குச் செல்லும் போது போலீசாரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டவர்) வெளிநாட்டு உதவி பெறுகின்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புடையவர். இன்னும், உலகவங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், அரசாங்கத்தின் முக்கியத் துறைகள் போன்றவற்றில் பணியாற்றும் ஏராளமான மார்க்சிய - லெனினிய அனுதாபிகளை சுட்டிக்காட்ட முடியும். இந்தச் செய்திகளைக் கூறுவது, மேலே குறிப்பிட்ட தனி மனிதர்களை இழிவு செய்வதற்கல்ல. தங்களைப் புனிதமானவர்களாக காட்டிக்கொள்ளும் பல வறட்டு மாவோயிஸ்டுகளின் வாய்ச்சொல் வீரத்துக்கும் சுவரெழுத்துப் புரட்சிக்கும் மாறாக, தன்னார்வக் குழுக்களையும் ஆராய்ச்சிக் குழுக்களையும் சேர்ந்த பலர், சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக உயிரைப் பணயம் வைத்துப் போராடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். குடி உரிமைகளுக்காகவும் மக்கள் உரிமைகளுக்காகவும் போராடக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இந்திராகாந்தியின் கொலையை அடுத்து டெல்லியில் சீக்கியர்களுக்கெதிராக நடந்த கொடும் வன்செயல்கள் பற்றிய அறிக்கையை வெளியிட்ட P.U.C.L., P.U.D.R. ஆகியவற்றை C.I.A. ஆதரவு பெற்ற அமைப்புகள் என அண்மையில் பாராளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பேசியதை இங்கு நினைவில் கொள்ளலாம். இவற்றையெல்லாம் சொல்வதன்

நோக்கம், தன்னார்வக் குழுக்கள் அனைத்துக்கும் கண்ணை மூடிக்கொண்டு வக்காலத்து வாங்குவதற்கல்ல. பிரகாஷ் கரத் – சோவியத் ஆதரவுக் கும்பலின் நோக்கங்களுக்கும் சில வறட்டு மாவோயிஸ்டுகளின் சீர்குலைவு நோக்கங்களுக்கும் உண்மையான புரட்சியாளர்கள் துணை போகக்கூடாது என்பதற்காககத்தான்; கேசவன் போன்றவர்கள் தங்களுக்கு ஒரு அளவுகோலும் பிறருக்கு ஒரு அளவுகோலும் பயன்படுத்தக்கூடாது என்பதற்காகத் தான்.

நவகாலனியச் சூழலில் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வின் அனைத்துத் துறைகளும் பன்னாட்டு மூலதனத்தோடும் ஏகாதிபத்தியத்தோடும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. நம்மில் பெரும்பாலோர் விரும்பியும் விரும்பாமலும் அவற்றிலேயே பணிபுரிய வேண்டியிருக்கிறது. எனவே ஒவ்வொருவரது சிந்தனையும் செயலும் எந்த அடிப்படையில் எந்த லட்சியத்துக்காக இயக்குகின்றன என்பதைப் பொறுத்தே அவரைப் பற்றிய மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும். தங்களது தத்துவ வறட்சியையும் நடைமுறைக் கோளாறுகளையும் மூடிமறைப்பதற்காகச் சில குழுக்கள் கற்பனையான ‘ஏகாதிபத்தியப் பூச்சாண்டி’யைப் பற்றி ஓயாது பேசுகின்றன. புரட்சி இயக்கத்துக்கான ஆபத்துகள், பிளவுகள், உள்காரணங்களையே பெரிதும் சார்ந்திருக்கின்றன. 1969-71-லும் பிறகும் புரட்சி இயக்கத்தில் ஏராளமான போலீஸ் உளவாளிகள் ஊடுருவியிருந்தது தெரியும். அடக்குமுறை காலத்தில் ஓடி ஒளிந்து கொண்டு அமைதிக் காலத்தில் புரட்சி பேசும் குட்டிபூர்சுவா அறிவாளிகள் தங்கள் வரட்டுத்தனத்தின் வெற்றியை நிலைநாட்டிக் கொள்வதற்காக சிந்தனைவளம் மிக்க, அடக்குமுறைகளை எதிர்கொண்ட தோழர்களை அவதூறு செய்து வருகின்றனர். கருத்துப்போராட்டங்கள், தத்துவ வலிமையின் அடிப்படையிலேயே நடத்தப்பட வேண்டும். மேலும், ஜனநாயக சக்திகள் எனப் புரட்சிவாதிகளால் கருதப்படுபவை முற்றிலும் மார்க்சிய சக்திகளால் இருப்பதில்லை. மார்க்சியத்துக்கு மாற்று வழியை முன் வைப்பவையாகவும்

மார்க்சியத்தைக் கடுமையாக விமர்சிக்கக் கூடியவையாகவும் அச்சக்திகளில் சில விளங்குகின்றன. இவற்றை எதிர்கொள்வதும், விரிந்த அறிவு, ஆழ்ந்த ஞானம், சகிப்புத்தன்மை ஆகியவற்றையே சார்ந்துள்ளன. அடையாளச் சீட்டுகளை ஒட்டி அவதூறு செய்துவிடுவதால் நாம் வெற்றிகொள்ள முடியாது. ஆனால் துரதிருஷ்டவசமாக மார்க்சியவாதிகளுக்கிடையிலேயும் மார்க்சிய வாதிகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலேயும் நடக்க வேண்டிய நேர்மையான, ஆரோக்கியமான கருத்துப் போராட்டம், சில வறட்டு மாவோயிஸ்டுகளால் அவதூறுப் போராட்டமாகவே நடத்தப்படுகிறது. கீழ்த்தர பூர்சுவா அரசியல் பத்திரிக்கைளிலும் பேச்சுமேடைகளிலும் பயன்படுத்தப்படும் வார்த்தைகளான 'கழிசடை', 'அரிப்பெடுத்தவன்', போன்றவையும் 'குடிகாரன்' போன்ற தனிநபர் தாக்குதல்களும் மாவோயிஸ்டுகள் எனக் கூறிக்கொள்பவர்களின் பத்திரிகையில் இடம் பெறுகின்றன. துணிந்து பொய் சொல்வது என்பதும் அதை அந்தந்தக் குழுவைச் சேர்ந்த அணிகள் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வதும் வாடிக்கையாகி வருகின்றன. தமது பத்திரிகையின் வாயிலாகவும், தலைவர்கள் வாயிலாகவும் பிறரைப் பற்றிக் கூறப்படும் குற்றச்சாட்டுகள், அவதூறுகள் உண்மையானவையா என்பதை விசாரித்தறியும் வாய்ப்போ மனப்பாங்கோ அணிகளுக்கு இல்லை. மேலிருந்து திணிக்கப்படுவனவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டாக வேண்டிய பாசிச அமைப்பு முறைக்கு அவர்கள் பலியாகியிருக்கிறார்கள். ஒரு புரட்சிகர சமூக மாற்றத்துக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளவர்களின் ஆற்றல்களுக்கான வடிகாலாக இத்தகைய பாசிச அமைப்புகள் இருக்க நேர்வது இந்தியப் புரட்சியின் துரதிருஷ்டம். தங்கள் அணிகளை வறட்டுவாதச் சேற்றில் ஆழ்த்தி வைத்திருக்கும் வகையில் அவதூறு பிரசாரங்கள் நடைபெறுகின்றன; மார்க்சிய ஞானம் என்பது ஆழ்ந்த பயிற்சி, படிப்பு, கடும் முயற்சி ஆகியவற்றின் மூலமே சாத்தியமாகும் என லெனின் கூறினார். உலகின் அறிவுத் துறைகள் பலவற்றையும் ஒரு மார்க்சியவாதி செரித்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார். ஆனால்

இங்கோ படிப்பாளிகளையும் சிந்தனையாளர்களையும் 'அரிப்பெடுத்தவர்கள்' என்று வறட்டு மாவோயிஸ்டுகள் கூறுகின்றனர். நேற்று வரை தோழர்களாக இருந்தவர்கள் இன்று ஏகாதிபத்திய ஏஜண்டுகள் என இழிவுபடுத்தப்படுகின்றனர்.

மாவோ என்னும் புதிய இடதுசாரி

செந்தாரகையில் எழுதிய செந்தூரனும் ஒரு அவதூறு புத்தகம் எழுதியுள்ள மருதமுத்துவும் இப்போது வெவ்வேறு முகாம்களில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டாலும் அவர்களது 'தத்துவ' அறிவுக்கும் விமர்சனத் 'திறனுக்கும்' மூலம் ஒன்றுதான். அது, மலிவு விலையில் தரப்படுவதும் பல்லாயிரக்கணக்கில் பிரதிகள் அச்சிடப்பட்டு உலகம் முழுவதிலும் விநியோகிக்கப்படுவதும், மார்க்சியத்தை விளக்குவதற்கான ஏகபோக உரிமை கொண்டாடுவதும் ஆன சோவியத் 'மார்க்சிய' நூல்கள்தான். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சோவியத் யூனியனை 'முன்னேறிய சோசலிச நாடாகக் கருதும்' வலது இடது கம்யூ. கட்சி எழுத்தாளர்களானாலும் சரி, அதை சமூக ஏகாதிபத்தியம் எனக்கருதும் 'மாவோயிஸ்ட்' எழுத்தாளர்களானாலும் சரி. சோவியத் 'மார்க்சியமே' அவர்களது அறிவின் மூல வேராக உள்ளது. அதனால் தான் யாந்திரிக மார்க்சியம் என மாவோயிஸ்ட் புரட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்ட மாரிஸ் கான்போர்த்தின் நூலை மொழிபெயர்த்து அதைத் தூக்கிப் பிடிக்கும் வேலையை 'மாவோயிஸ்ட்'கோ கேசவன் (பாலன் என்ற பெயரில்) செய்ய, 'இந்திய அரசியலில் புதிய இடதுசாரிகள்' என்ற (வெறும் அவதூறுகள் அடங்கிய) புத்தகத்தை எழுதி 'தீக்கதிர்' பரமேசுவரனின் புகழாரத்தை மருதமுத்து பெற்றுக் கொள்கிறார். இதே தீக்கதிர் தான் 18 ஆண்டுகளுக்கு முன்பு 'புதிய தலைமுறை' என்ற புரட்சிகர ஏட்டை சி.ஐ.ஏ. பத்திரிகை என அவதூறு செய்தது என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறோம். இன்று கேசவனால் புறம் பேசப்படும் நாகராஜனும், ஞானியும், எஸ்.வி. ராஜதுரையும்தான் அறுபதுகளின் இறுதியில் முன்கூட்டியே இவ்விதழைத் தொடங்கியதோடு திரிபு

வாதத்திற்கு எதிரான கலை, இலக்கியத் தத்துவப் போராட்டத்தையும் தொடங்கி வைத்தனர் என்பதையும் எண்ணற்ற இளம் தோழர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சோவியத் யூனியனின் மார்க்சியத் தத்துவம் நடைமுறை ஆகியவை பற்றிய பாரதூரமான விமர்சனங்களும், புதிய வரலாற்றுச் சூழலில் மார்க்சியம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் பற்றிய ஆய்வும் ஏகாதிபத்திய முதலாளியக் கலாச்சாரத்தைப் பற்றிய கூர்மையான பகுப்பாய்வும் 'புதிய இடதுசாரிகள்' என இகழப்படுபவர்களால் முன் வைக்கப்பட்டுள்ளன. சோவியத் யூனியன் என்ற சாம்ராஜ்ஜியத்தின் நுகத்தடியின் கீழே வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள மார்க்சியவாதிகள், மார்க்சியத்தை அதிகாரவர்க்கத் திரிபுகளிலிருந்து மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். 1960களில் அமெரிக்காவின் வியத்நாம் போருக்கு எதிராகவும் முதலாளியப் பொருளாதார கலாச்சார ஒடுக்குமுறை எதிராகவும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் நடத்த போராட்டங்களிலும் 1968 பிரெஞ்சுப் புரட்சியிலும் முன்னணியில் நின்றவர்களும் சிறைக்குச் சென்றவர்களும் சோவியத் மார்க்சியவாதிகளாலும் கேசவன் – மருதமுத்து போன்றவர்களாலும் இழிவு செய்யப்படும் 'புதிய இடதுசாரிகள்' தான். தனது அரசியல் நோக்கத்துக்காக எல்லாத் தத்துவாதிகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவந்து அவர்களைப் "புதிய இடதுசாரிகள்" "புரட்டல்வாதிகள்" "மார்க்சிய விரோதிகள்" "மார்க்சியப் போலிகள்" என இழிவுபடுத்துவதில் சோவியத் மார்க்சியவாதிகளுக்கும் அவர்களது தமிழக ஆதரவாளர்களுக்கும் உள்ள அக்கறையை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் 'மாவோயிஸ்டுகள்' எனத் தம்மைக் கூறிக்கொள்பவர்களும் இதே சரக்கை விற்பனை செய்வதுதான் வியப்புக்குரியதும் வேதனைக் குரியதுமாகும். கடந்த 18 ஆண்டுகளாக, ஜனசக்தி - தாமரை - தீக்கதிர் செம்மலர் வகை மார்க்சியவாதிகள் செய்துவந்த அதே காரியத்தைத்தான் இன்று மாவோயிஸ்டுகள் எனக் கூறிக் கொள்பவர்களும்

செய்துவருகின்றனர். முழுக்க முழுக்க சோவியத் 'மார்க்சிய' நூல்களிலிருந்தே தம் சிந்தனை வார்ப்பைப் பெற்றுள்ள கேசவனும் மருதமுத்துவும் தந்துள்ள புதிய இடதுசாரிகள் பட்டியலில் ஒரே ஒரு புதிய இடதுசாரியின் பெயரே விடுபட்டுள்ளது. அந்தப் புதிய இடதுசாரி மாசேதுங் தான்! ஆதாரம்: சோவியத் புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:

"... பலவகையான தத்துவப் போக்குகளைப் பற்றிய – குறிப்பாக மார்க்சியத்தின் "போலிகளாக" அமைகின்ற தத்துவப் போக்குகள் பற்றிய – ஒரு ஒட்டு மொத்தமானதும் விரிவானதுமான ஆய்வும், ஆக்கபூர்வமான தத்துவத்தை உருவாக்குபவர்கள் நாங்கள்தாம் என உரிமை கொண்டாடும் புரட்டல் வாதப் போக்குகளை மறுதலிப்பதும் முன்னைப் போலவே இப்போதும் மிகமிக முக்கியமானவையாக உள்ளன. சர்வதேசிய சித்தாந்தப் போராட்டத்துக்காக, மார்க்சியத் தத்துவத்தின் வரலாறு பற்றிய விஞ்ஞான ரீதியான விளக்கத்துக்காக, மார்க்யூசே, எரிக்ஃபிராம், பிளாஃஹ், மாவோ போன்றவர்களுக்கு எதிரான தத்துவார்த்த ரீதியான ஆய்வுகளை உருவாக்குவது இன்றியமையாதது; இந்த ஆய்வுகளில் "மார்க்சியத்தை ஆக்கபூர்வமாக வளர்த்தல்" "புதுப்பித்தல்" ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் லெனினிய விரோதத் தத்துவப்போக்குகளிலும் சமூகவியல் சிந்தனையிலும் இன்று பரவலாகக் காணப்படும் கருத்தாக்கங்களை விஞ்ஞான ரீதியில் முறியடிக்கும் விளக்கங்களை வழங்க வேண்டும்".

கேசவன் – மருதமுத்துவின் குருமார்களின் கூற்றுகளில் இதுவும் ஒன்று!

புதிய இடதுசாரிகளுக்கு அல்லது புதிய மார்க்சியவாதிகளுக்கு (பழைய இடதுகளுக்கு அல்ல?)

வரலாறு முடிந்து விடவில்லை. தேவையை நோக்கிய பயணமும் முடிந்துவிடவில்லை...

குறிப்புகள்

1. கலகத்தின் தத்துவம் ப. 141
2. The Marxists – Wright Mills (1979) P.17.
3. Leftism – Erik von kuehnelt Leddihn : PP. 373 to 374.
4. The Agony of the American Left. – Christopher Lasch P.130.
5. Revolution in the Revolution? Regis Debreys. PP.96-97.
6. New Left – A Documentary History Edited by Massimo Teodori. P.263
7. Critics of Society - T.B. Bottomore. P.74
8. Revolution in the Revolution? P.96
9. Camilo Torres. P.265
10. Castro – Herbert Mathew. P.98
11. Castro of Society – T.B. Bottomore P.103
12. New Left – A Documentary History P.262-263
13. Fighters for National Liberation – Moscow 1984 P.172
14. Camilo Torres P.265
15. டி.பி. பாட்டோமோர் தமது சமுதாய விமர்சகர்கள் (Critics of Society) என்னும் நூலில் சி. ரைட்மில்ஸின் நூல்கள் அமெரிக்கச் சமுதாயத்தை எவ்வாறு ஆய்வு செய்கின்றன என்பதை விளக்குகிறார்.

தமது ஆரம்ப கால நூல்களான 'The New Men of Power' America's Labour Leaders' (1948) ஆகியவற்றில் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் பரிணாமம் குறித்தும், அமெ. தொழிற்சங்கத் தலைவர்கள், அமெ. முதலாளித்துவத்தின் சமூகப் பொருளாதார அமைப்பைக் குறித்த திறனாய்வாளர்களாக ஆவதைக் காட்டிலும் தேசிய மேட்டுக் குடியில் தமக்கும் ஓரிடத்தைத் தேடிக் கொள்வதில் நாட்டமுற்ற சூழலைக் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.

மில்ஸின் அடுத்த நூலான White Collar *(1951)* அமெ. நடுத்தர வர்க்கத்தைப் பற்றி ஆய்வு செய்கிறது...

மில்ஸ் தமது Power Elite (1956) *என்ற 2-வது நூலை அமெ. வர்க்க அமைப்பு மற்றும் அமெ. மேல்தட்டு வர்க்கம் குறித்த ஆய்வுகளுக்கு அர்ப்பணித்தார். ப.54-56.*

16. *குடும்பம் தனிச்சொத்து அரசு – ஆகியவற்றின் தோற்றம், ஏங்கல்ஸ், ப.5.*

17. M. Lovchuk: Philosophyical Traditions Today, Progress Publishers, Moscow, 1973, PP. 292-3.

⁂

6. ஸ்தானோவிசமும் அதன் தமிழக எதிரொலிகளும்

— எஸ்.வி. ராஜதுரை

நான் சென்ற ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் 'அலை' என்ற மாத ஏட்டிற்கு எழுதிய கட்டுரையொன்றில் ஸ்தானோவிசம் பற்றிச் சிலவற்றைக் குறிப்பிட்டிருந்தேன். அவற்றை இக்கட்டுரையின் நோக்கம் கருதி இங்கு மீண்டும் தர விரும்புகிறேன்.

"... இந்த இறுகிப்போன பார்வையை சோவியத் யூனியனில் நாற்பதுகளில் ஸ்தானோவ் தோற்றுவித்தார். ஒரு தத்துவத்தை, அது 'பூர்சுவா தத்துவம்' 'கருத்துமுதல்வாதம்' 'பிற்போக்கு' என்று வருணிப்பதுடன் விசயங்கள் முடிவடைந்து விட்டதாகக் கருதுகிறது இப்போக்கு. இது எப்போதேனும் அக்குறிப்பிட்ட தத்துவத்தின் உள்ளடக்கத்தை 'ஆழமாகப் பரிசீலிக்க முயற்சி செய்கிறதென்றால், அது அத்தத்துவத்தைப் பற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட பொதுவான மதிப்பீட்டை விவரிக்க ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளைத் 'தோண்டி' எடுப்பதுதான். குறிப்பிட்ட தத்துவத்திலுள்ள உடன்பாட்டுவகைக் கூறுகள், எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு அதுதரும் ஓரளவுக்கு உண்மையான தீர்வுகள் ஆகியவற்றை இப்போக்கு முற்றாகப் புறக்கணிக்கிறது. ஏனெனில் இவை முன்கூட்டியே வகுத்துக் கொள்ளப்பட்ட பொதுவான மதிப்பீட்டில் பொருத்தப்பட முடியாதவையாக உள்ளன. திறனாய்வுக்குட்படுத்தப்பட்ட தத்துவத்தில் உடன்பாட்டு வகையான பிரச்சனைகளையும் அங்கீகரிப்பதை Objective academism என்று ஸ்தானோவியம் கருதியது. எதிராளியின் கருத்துகளை மேற்கோள் காட்டாமலோ அல்லது அதைத் திரித்துக் கூறியோ அவரைத் தாக்குவது என்பது நியதியாகியது. நேர்மையான முறையில் எதிராளியின் கருத்துக்களை எடுத்துக்காட்டினால் அது, "எதிராளிக்கு மேடை அமைத்து கொடுத்தல்" எனத் தாக்கப்பட்டது. இப்போக்குடன் கொச்சைச் சமூகவியலும் சேர்ந்து கொண்டது. ("இவர் குட்டி பூர்சுவா; எனவே இவரது சிந்தனையும்

இப்படித்தான் இருக்கும்") அடையாளச் சீட்டுகளை எதிராளியின்மீது ஒட்டிவிடுவதே ஸ்தானோவியத் திறனாய்வுக்குப் போதுமானதாக இருந்தது. தான் ஒரு மார்க்சியன் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் என்ற நினைப்பே ஒருவனை மற்றவர்களைக் காட்டிலும் புனிதமானவனாகவும் உயர்ந்தவனாகவும் ஆக்கிவிடும் என்று இப்போக்கு கருதியது. இப்போக்கு ஆதிக்கம் செலுத்திய சூழலில் நுனிப்புல் மேய்பவர்கள் கொட்டமடித்தனர்.

"இத்தகைய போக்கு மார்க்சியத்துக்குச் சேவைபுரிய கூடியதல்ல; மாறாக மாற்றுத் தத்துவங்களுக்கு, குறிப்பாக பூர்சுவா தத்துவங்களுக்கு எதிரான போராட்டத்துக்கு ஊறுவிளைவிக்கவே செய்யும். வெறும் எதிர்மறைத் திறனாய்வு அல்லது வெறும் மறுப்பு (அவதூறு) ஏற்கனவே நமது கூடாரத்தில் இருப்பவர்களின் கைத்தட்டலைப் பெற்றுத் தரலாம். ஆனால் திறனாய்வு செய்யப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களை, அவற்றின் தாக்கத்துக்கு உட்பட்டவர்களை வென்றெடுக்காது. (விவாதத்தின் குறியிலக்கு இவர்களேயன்றி நமது ஆதரவாளர்களல்லர்). மாற்றுக் கருத்துள்ளவர்களின் படைப்புகளைப் படிக்க முயற்சி செய்யாத, அவர்களைத் திரித்துக் கூறுகிற, அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள இயலாத 'மார்க்சிய' விமர்சகர்களுக்கு அவர்கள் கட்டி வைத்துள்ள குட்டி முகாம்களிலிருந்து பாராட்டுக்கள் வரலாம். இந்த விமர்சகர்கள் தமது அம்பறாத் தூணியிலிருந்து எடுத்து வீசுகிற மொண்ணை அம்புகள் எதிராளியின் அல்லது நம்மால் வென்றெடுக்கப்பட வேண்டியவர்களின் முகாமுக்குள் சிறு சலனத்தைக்கூட ஏற்படுத்தாது. மேலும் எதிராளியின் தத்துவத்தைப் பற்றிய ஆழமான நேர்மையான படிப்பும் ஆய்வும் நம்மால் வழங்கப்பட வேண்டிய மாற்றுத்தீர்வுகளும் இல்லாமல் நமது உள்நம்பிக்கைகளை, ஏற்கனவே நாம் ஏற்றுக்கொண்டுவிட்ட கருத்துகளை வலுப்படுத்த முடியாது. எதிர்மறைத் திறனாய்வு இலக்கைத் தவறவிட்டு விடுகிறது. துவக்கத்திலிருந்தே நமக்குத் தோல்வியை உருவாக்கிவிடுகிறது; நமது

சிந்தனையை வறட்சிக்குட்படுத்தி அதன் வளர்ச்சியைத் தடுக்கிறது. எதிர்மறைத் திறனாய்வும் கொச்சைச் சமூகவியலும் (இது 'சித்தாந்தம்' பற்றிய மார்க்சிய வரைவிலக்கணத்தை மிகவும் எளிமைப்படுத்துகிறது) மாற்றுத் தத்துவங்களில் ஆய்வுக்குரிய பிரச்சினைகள் ஏதும் இல்லை என்று கருதுகின்றன. மார்க்சியத்துக்கு வெளியே உண்மையான பிரச்சினை ஏதும் இல்லை என்றும், எந்த ஒரு பிரச்சனைக்கும் ஆக்க பூர்வமான தீர்வு முன்கூட்டியே மார்க்சியத்துக்குள் வகுக்கப்பட்டுவிட்டது என்றும் (நடைமுறை உண்மைகளுக்கு மாறாக) இத்திறனாய்வு கருதுகிறது. இந்த நிலைபாடு மார்க்சியத்தை ஆக்கபூர்வமாகப் புரிந்துகொள்வதிலிருந்து தோன்றுவதல்ல; மாறாக அதை வறட்டுத் தனமாகத் திரிப்பதிலிருந்தும் வாய்பாடுகள் மூலமாக மார்க்சியத்தைக் 'கற்றுக்கொள்ள' முயற்சிப்பதிலிருந்தும் தோன்றுவதாகும். எனவே இது வலிமையின் அறிகுறியல்ல; வலுக்குறைவின் அடையாளமே"

ஸ்தானோவிசம், சோவியத் யூனியனில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டம் முழுவதிலும் பண்பாட்டுத் துறையில் மேலோங்கியிருந்த ஒரு அதிகார வர்க்க நிலைபாடு. அது தன் அதீத வடிவத்தை எடுத்தபோது அறிவுத் துறையில் புலப்பட்ட சில போக்குகளை நான் மேலே சுட்டிக் காட்டினேன். ஸ்தானோவிசம் தோன்றி நிலை பெற்றதற்கான வரலாற்றுக் காரணங்களையும் அதன் தீய விளைவுகளையும் நான் பிறிதொரு சமயம் ஒரு நீண்ட கட்டுரை மூலம் விளக்கக்கடமைப்பட்டுள்ளேன். ஸ்தானோவிசம் நிலவுவதற்கான நியாயங்கள் எங்கும் இல்லை. சோவியத் யூனியனிலேயே அதன் கொடூரமான வடிவங்களைப் புதைப்பதற்கான முதல் முயற்சியை 1952இல் 19ஆம் கட்சிக் காங்கிரசில் மாலங்கோவ் ஆற்றில் உரையில் காணலாம். ஆனால் சோவியத் யூனியனில் அதிகார வர்க்கம் இருக்கும் வரை ஸ்தானேவியம் வேறு சில வடிவங்களில் தொடர்ந்து நீடிக்கவே செய்யும். அல்பேனியா போன்ற ஒரு மூடிய, இறுகிப்போன 'சோசலிச' சமுதாயத்தில் வேண்டுமானால் அது தன் மூலச் சிறப்புள்ள வடிவத்தில் இன்னும் உயிர்வாழ்ந்து

கொண்டிருக்கக் கூடும்! என்வர் ஹோஜா தோற்றுவித்த 'கறாரான' மார்க்சியத்துக்கு அது இணைப்பொருத்தமானது. தமிழ்நாட்டில் அதன் குரல் பலமாக ஒலிக்கின்றது. காரணம், இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்ட ஸ்தானோவிசப் போக்குகள் இங்கும் வேரூன்றியிருப்பது தான். சோவியத் யூனியனில் ஏற்படும் ஒவ்வொரு கொள்கை மாற்றத்துக்கும் ஏற்பத் தங்கள் குரல்களை மாற்றிக் கொள்ளும் சோவியத் ஆதரவு மார்க்சியர்கள், கலை இலக்கியக் கொள்கைகளைப் பொறுத்தவரை 30-40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பத்தாம் பசலிக் கொள்கையையே இன்னும் பிடித்துக் கொண்டிருப்பது வியப்புக்குரியது!

தமிழ் பேசும் உலகில் ஸ்தானோவிசத்தின் செல்வாக்கு மிக ஆழமானதாக உள்ளது. காலஞ்சென்ற பேரா. நா. வானமாமலை போன்றவர்கள் கூட இதிலிருந்து விடுபட முடியவில்லை. அதனால்தான் ஜீன் பால் சார்த்தரைப் பற்றி அவர் எழுதுகையில் ('புதுக்கவிதை – முற்போக்கும் பிற்போக்கும்', 'சார்த்தர் ஒரு கவிஞரல்ல அவருக்கும் பிராய்டின் இணைவிழைச்சுக் கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை' என்ற எளிய உண்மை கூட பேராசிரியருக்குத் தேவைப்பட்டிருக்கவில்லை. "ஜீன்பால் சாத்ரே என்பவர் புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர்" என்றும் "அவர் பிராய்டிய இணைவிழைச்சுக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்" என்றும் நா.வா. எழுதினார். இவரது நூல்களின் தாக்கத்துக்குட்பட்ட மற்றொரு பேராசிரியரோ, "கட்டுப்பாடற்ற புணர்ச்சியின்பம் வேண்டுமென்று சொல்வது தான் சாத்ரேயின் தத்துவம்", என்று எழுதினார்!

பேராசிரியர் நா.வா.வை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவருமே தப்பமுடியவில்லை. இன்றும் ஸ்தானோவிசத்துக்கு விசுவாசமாக இருப்பவர்களை நம் நாட்டு சோவியத் ரஷ்ய ஆதரவு மார்க்சியவாதிகளிலிருந்து மாவோயிஸ்டுகள் என்று கூறிக் கொள்பவர்கள் வரை எல்லா முகாம்களிலும் காணலாம்.

இத்தகைய ஸ்தானோவிஸ்டுகளில் ஒருவரை மட்டும் நாம் இக்கட்டுரையின் நோக்கத்துக்காக எடுத்துக்

கொள்கிறோம். காரணம், இலக்கிய விமர்சனத்திலும் மார்க்சிய ஞானத்திலும் தமிழகத்தில் இவர் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படுகிறார். இரண்டு, அவரையும் அவரது இயக்கத்தையும் கடுமையாகத் தாக்கியுள்ள ஒரு 'மாவோயிஸ்'டிடமிருந்து கீழ்க்காணும் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்: "நுனிப்புல் மேயாது மார்க்சியப் பார்வையில் விமர்சனம் செய்கிறவர். கைலாசபதி போன்றோரது மார்க்சிய விமர்சனங்களை அடிப்படையக் கொண்டு இத்துறையில் இறங்கியவர்". மூன்றாவதாக, ஸ்தானோவ் வாதத்தை ஒரு கோட்பாடாகத் தமிழ்நாட்டில் எழுத்து வடிவில் உயர்த்திப்பிடித்துள்ள ஒரேமனிதர் இவர்தான். இந்த வகையில் அவர் எழுத்துக்கள் சிலவற்றைப் பரிசீலிக்க விரும்புகிறேன்.

முதலில் அவரது (கோ. கேசவன்) 'இலக்கிய விமர்சனம் ஒரு மார்க்சியப் பார்வை' என்ற நூலை எடுத்துக் கொள்வோம். இந்த நூல் பற்றிய விமர்சனம் எழுதப் புகுந்தால் அது மற்றொரு பெரும் நூலாகவே விரிவடையும். எனவே எனது விமர்சனத்தை ஸ்தானோவிசத்தின் முக்கிய அம்சங்கள் – என நான் கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ள அம்சங்களுடன் மட்டுப்படுத்திக் கொள்கிறேன்.

1. முதலாவதாக இந்த நூல் மார்க்சிய மூலவர்களின் நூல்களையோ அல்லது பிற நூல்களையோ படித்துச் செரித்து எழுதப்பட்டதல்ல. மார்க்சியத்தினுடைய அடிப்படையான கருத்துகள் கூட இவருக்குப் பிடிபடவில்லை. உதாரணமாக, சமுதாய நிலைமைகளை வெறும் விமர்சனத்தைக் கொண்டே மாற்றிவிட முடியும் எனக் கருதியவர்களுக்கெதிராக மார்க்ஸ் எழுதினார்: "Weapon of Criticism can not, ofcourse; replace criticism by weapons, material force must be overthrown only by material force; but theory also becomes a material force as soon as it has gripped the masses..." (Karl Marx. Critique of Hegel's Philosophy of Law. Introduction in Marx Engels 'The Individual and Society', Progress Publishers, Moscow, 1984, P.73).

இதன் மொழியாக்கம் "விமர்சனம் என்ற ஆயுதம் ஆயுதங்களால் செய்யப்படும் விமர்சனத்துக்கு மாற்றீடாக இருக்கவே முடியாது. ஒரு பௌதீக சக்தியை மற்றொரு பௌதீக சக்தியைக் கொண்டே தூக்கியெறிய வேண்டும். ஆயினும் ஒரு தத்துவம் வெகுசனங்களை இறுகப் பற்றியதும் அதுவே ஒரு பௌதீக சக்தியாகி விடுகிறது..." இக்கூற்று இலக்கிய விமர்சனத்துக்கோ அழகியலுக்கோ சம்பந்தப்பட்ட கூற்றல்ல; இளம் ஹெகலியருடன் நடத்திய கருத்துப் போராட்டத்தில் எழுந்த அரசியல் கூற்று. சமூக நிலைமைகளை (ஆயுத) புரட்சிகர வன்முறை ஒன்றே மாற்ற முடியும் என்பதே இதன் பொருள். ஆயினும் கேசவன், மார்க்சின் புத்தகம், பதிப்பாளர் ஆகிய விவரங்களோடு இக்கூற்றை, கலை இலக்கியத் தத்துவப் பிரச்சினைகளை பலாத்காரத்தின் மூலம் தீர்க்கவியலாது என்று பொருள்படுவதாகக் கூறுவதுடன் அதைத் தலைகீழான முறையில் திரித்தும் விடுகிறார்.

"விமர்சனம் என்ற ஆயுதத்தை எடுத்து அந்த இடத்தில் ஆயுதங்கள் மூலம் விமர்சனம் என்பதை வைக்கக்கூடாது" (ப.71)

"ஆயுதங்கள் மூலம் விமர்சனம் என்பது கூடாது என மார்க்ஸ் கூறினார்" (ப.207)

2. Neccessity என்ற அடிப்படையான மார்க்சியக் கருத்தாக்கத்தைக் கூட இவர் புரிந்துகொள்ளவில்லை. அதை Need என்கின்ற பொருள்படும் 'தேவை' என்ற பொருளில் புரிந்துகொண்டு எழுதுகிறார்: "சுதந்திரம் என்பது எந்த நிபந்தனைகளில் இருந்தும் விடுபட்டு நிற்பது. அதுமட்டுமன்றி, அது தேவையோடு தொடர்புடையதாகும். இத்தேவையைப் பற்றி அறிந்து கொள்ளுதலே சுதந்திரத்தின் முன்னிபந்தனையாகவும் உள்ளது. சுதந்திரம் என்பது தேவையை அறிந்து கொள்வதில் அடங்கியுள்ளது. இத்தேவை என்பது வர்க்க சமூகத்தில் வர்க்க அளவிலானது. அனைத்து வர்க்கங்களுக்கும் பொதுவான தேவை என்பது இல்லை எனச் சொல்லி விடலாம். ஆனும் வர்க்கத்தின் தேவையும்

சுதந்திரமும் அடக்கப்படும் மக்களின் தேவையாக இருக்காது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும்" (ப.120)

மேற்காணும் முதல் மூன்று வாக்கியங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவது ஒருபுறமிருக்க, 'தேவை' என்ற மார்க்சியக் கருத்தாக்கம் என்னவென்று பார்ப்போம். 'இன்றியமையாதது என்பதே தத்துவத்தில் 'தேவை' எனப்படும். 'நிகழவேண்டியது எப்படியும் நிகழத்தான் வேண்டும்' என்பதே தேவை என தத்துவத்தில் கூறப்படுகிறது. அதாவது பொருட்களுக்கும் இயக்கங்களுக்கும் காரணவிழைவு உறவு இன்றியமையாதது என ஏற்றுக்கொள்வதையே தேவை Neccessity என்ற சொல் குறிக்கிறது. புறநிலைப் பொருட்களிலான அகமுரண்பாடுகளை அடியொற்றியும் புறமுரண்பாடுகளின் அழுத்தத்தாலுமே வளர்ச்சியும் விளைவுகளும் தோன்றுகின்றன. அத்தகைய இயக்கங்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உரிய காரண விளைவு உறவையே தேவை எனக் குறிப்பது தத்துவ வழக்கமாகும். பொருட்களிலும் இயக்கங்களிலும் விளங்குகின்ற விதிகளைக் கொண்டே அத்தேவையை அறிந்து கொள்ள முடியும். அப்பொருட்களும் இயக்கங்களும் மனித உள்ளங்களுக்கப்பால் புறநிலையில் இருக்கின்ற இயல்புடையவை. அதனால் அவற்றில் விளங்குகின்ற விதிகளும் கூட அவ்வகையில் புறநிலை மெய்மைகளாகும். எனவே அத்தேவையும் அதுபோன்று புறநிலை ரீதியானதாகும். எடுத்துக்காட்டாக புவிஈர்ப்பு விதி, மதிப்பு விதி போன்றவை தேவைகளாகும். தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு புவிஈர்ப்புவிதியும் முதலாளி வர்க்கத்துக்கு ஒரு புவிஈர்ப்பு விதியும் இருக்கமுடியாது!

3. 'லூயி போனபார்ட்டின் 18ஆம் புருமேர்' என்பது மார்க்ஸ் எழுதிய மிகப் பிரசித்திபெற்ற நூலாகும், மூன்றாம் நெப்போலியன் என அழைக்கப்படும் லூயி போனபார்ட், சூழ்ச்சிகள் மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதைக் குறிக்கும் வகையிலேயே '18ஆம் புருமேர்' என்ற பதம் மார்க்சால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு நெப்போலியன் போனபார்ட் இதேபோன்ற முறையில் ஆட்சியைக் கைப்பற்றிய நாள்

18ஆம் புருமேர் ஆகும். புருமேர் என்பது பிரெஞ்சுக் காலண்டரில் உள்ள ஒரு மாதமாகும். மார்க்சிய விமர்சகர் என்று உரிமை கொண்டாடி மாபெரும் மார்க்சிய அறிஞர்களான ஜார்ஜ் லூகாக்ஸ், மார்க்யூசே, வால்டர் பெஞ்சமின், ரேமாண் வில்லியம்ஸ் போன்றோரை எள்ளி நகையாடும் கோ. கேசவனுக்கு 18ஆம் புருமேர் என்பது மாதமா ஒரு ஆளின் பெயரா என்பது கூடத் தெரியவில்லை. "18ஆம் புருமேரின் அரண்மனைப் புரட்சி" (ப.107) என்று குறிப்பிடும் கேசவன் 18ஆம் புருமேர் என்பது ஒரு ஆள் என்று நினைத்துக் கொள்கிறார். அவரது படிப்பின் ஆழம் இத்தகையது!

4. மார்க்சிய அழகியலைப் பற்றி பெரிய புத்தகமே இவர் எழுதுகிறார். ஆனால் அவருக்கு ஓவியனுக்கும் (Painter) வர்ணந்தீட்டுபவனுக்கும் வித்தியாசம் ஏதும் தெரியாது. Painter என்பதை வர்ணந்தீட்டுபவன் என்று மொழிபெயர்த்து விடுகிறார். 'கம்யூனிச சமூகத்தில் வர்ணந்தீட்டுபவர்களே இருக்கமாட்டார்கள். ஆனால், மக்களிடையே வர்ணம் தீட்டுவதில் ஈடுபடுபவர்கள் இருப்பார்கள். பக். 193.

5. கேசவனின் பெயர் உதிர்ப்புகள்: சோவியத் வட்டாரங்கள் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக கலாச்சாரத் துறையிலும் தத்துவத் துறையிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ள ஜார்ஜ் லூக்காஸ், கெயோ பெட்ரோவிஸ் லூசியன் கோல்டுமின் போன்ற கிழக்கு ஐரோப்பிய மார்க்சிய வாதிகளையும் ரேமாண் வில்லியம்ஸ், அடார்னோ, மார்க்யூசே போன்ற மேலை மார்க்சியவாதிகளையும் நிராகரிக்கின்றன. இவர்கள் எல்லோருமே சோவியத் முகாமிலுள்ள அதிகாரவர்க்கத் திரிபுகளுக்குள்ளான மார்க்சிய நடைமுறையையும் தத்துவத்தையும் விமர்சித்தவர்கள். இலக்கியம், தத்துவம், அரசியல் ஆகியவற்றுக்குள்ள இடைவெளியை அங்கீகரித்தவர் லெனின். அவர் தன்னை விமர்சித்தரோசா லக்ஸம்பர்க்கை எதிர்புரட்சிவாதி என்று கூறியதில்லை; புரட்சிகர வீராங்கனை என்று அங்கீகரித்தார். பிழையான அரசியலும் பிழையான தத்துவமும் இருந்தபோதிலும் சிறந்த கலைஞன் என்பதற்காக

கார்க்கி போன்றவர்களை மட்டுமல்லாது டால்ஸ்டாய், புஷ்கின் போன்றவர்களையும் லெனின் வெகுவாக மதித்தார். அரசியலில் பிழை செய்தார் என்பதற்காக பிளக்கனோவின் பிற பங்களிப்புகளை லெனின் மறுத்துவிடவில்லை. (கார்க்கி, பிளாக்கனோவ் இருவருமே அக்டோபர் புரட்சியை விமர்சித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) ஆனால் புதிய சுரண்டல் அமைப்பை சோசலிசச் சொற்கள் கொண்டு மூடிமறைக்கும் சோவியத் வட்டாரங்கள் அந்த அமைப்பை விமர்சிப்பவர்களை - அவர்கள் பிற அறிவுத் துறைகளில் எவ்வித சாதனைகள் புரிந்திருந்த போதிலும் - மார்க்சியவாதிகள் அல்ல என்றும் மார்க்சிய விரோதிகள் அல்லது மார்க்சியத்தை திரிப்பவர்கள் என்றும் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக கேசவனின் சோவியத் குருமார் ஒருவரது புத்தகத்திலிருந்து:-

"தங்களை மார்க்சியவாதிகள் என அழைத்துக் கொள்ளும் சில தத்துவவாதிகள் சோசலிச சமுதாயத்திலுள்ள தனிநபரின் இன்றைய நிலைபற்றிய தவறான மதிப்பீடுகளை முன்வைக்கிறார்கள். இந்த மதிப்பீடுகள் மார்க்சியக் கோட்பாட்டின் எல்லைகளை மீறுபவை. சோசலிசத்தைப் பற்றி முதலாளியச் சித்தாந்திகள் முன்வைக்கும் குரோதமிக்க கட்டுக்கதைகளுடன் ஐக்கியப்பட்டவை. இது முதன்மையாக பெல்கிரேடில் பதிப்பிக்கப்படும் 'பிராக்சிஸ்' 'பிலசாபியா' போன்ற ஏடுகளுக்கு மிகவும் பொருந்தும். எடுத்துக்காட்டாக பிராக்சிஸ் ஏட்டில் எழுதும் எஸ்.ஸடாஜனோவிஸ் 'அரசு வடிவத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட சோசலிச சமுதாயமானது ஒரு புதிய சுரண்டல் சமுதாயமாக அமைகிறது' என்றும், அங்கு அதிகாரவர்க்க கூறுக்கும் ('புதிய வர்க்கம்') பொது மக்களுக்கும் இடையில் ஒரு பாகுபாட்டைக் காணடியும் என்றும், பொதுமக்களுக்கு "முடிவுகளை எடுக்கும்" வாய்ப்பு ஏதுமில்லை என்றும் எழுதுகிறார். மற்றொரு எழுத்தாளர் எல்.டாடிஸ் என்ற பெயருடைய அரசியல் ஆராய்ச்சியாளர், வரலாற்று உண்மையை மறுக்கும் வண்ணமாக சோவியத் யூனியனில் "லெனினுக்குப் பிறகு, சரிசமத்துவவாதம் எனக் கூறுப்படும் ஒன்றுக்கு எதிரான போராட்டம் என்ற

போர்வையின் கீழ், அரசதிகார வர்க்கத்துக்கு பிரத்தியேகமான சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. இதனால் லட்சியங்களும் அறநெறிகளும் குறைந்துபோயின. அவற்றுக்கு குழிபறிக்கப்பட்டன," என எழுதினார். (M. Lovchok, Philosophical Tradition Today, Progres Publishers 1973 P.235)

சோவியத் யூனியன் ஒரு 'முன்னேறிய சோசலிச' நாடு என்ற கருத்தை கேசவன் ஏற்றுக் கொண்டிருந்தால் தான் அவர் ஐவோசிக் பெல்கிரேட் அறிஞர்கள் மீது வைக்கும் விமர்சனத்தையும் ஏற்றுக் கொள்ள முடியும். கேசவனின் மார்க்சியத்துக்கு ஊற்றுக்கண்ணாக உள்ள சோவியத் புத்தகளிலிருந்தே கேசவனின் மேலை மார்க்சிய வாதிகள், பிராங்பர்ட் மார்க்சியவாதிகள், எர்னஸ்ட் பி ர் போன்றோர் பற்றிய விமர்சனங்கள் அமைந்துள்ளன. இவர் சுயமாக எதனையும் படித்து சுயமான கருத்துக்கு வந்திருப்பதற்கான சான்று எங்குமில்லை.

'கலையில் மார்க்சிய விரோத மார்க்சியம் அல்லாத குரல்கள்' என்ற தலைப்பில் (பக். 194-215) அவர் செய்துள்ள விமர்சனங்கள் சோவியத் புத்தகங்களிலிருந்து அரைகுறையாகத் தெரிந்துகொண்ட சில விசயங்கள், பெயர்களைப் பற்றிய பெயர் உதிர்ப்புகளே. எடுத்துக்காட்டாக பிராங்கர்ட் கருத்தோட்டம் (பக் 197) என்ற தலைப்பின் கீழ் அவர் செய்யும் விமர்சனத்தில், சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர்களைக் கூட ஒழுங்காக அவரால் குறிப்பிட முடியவில்லை: ஜர்கன் ஹேபர்மாஸ் என்பவரை ஜீல்ஸ் ஹேபர்மஸ் என்று குறிப்பிடும் கேசவன் அமெரிக்க உளவியல் அறிஞரான எரிக்ஃபிராமை ஜெர்மனியில் பிராங்பர்ட்டில் இருந்த ஆராய்ச்சிக் குழுவில் ஒருவராகச் சேர்த்து விடுகிறார்!

6. தனது புத்தகத்தின் பக்கங்களை நிரப்புவதற்காக எர்னஸ்ட் பி ரிடமிருந்து ஏராளமான பகுதிகளை எடுத்து மேற்கோள்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் (பக். 53,78 79,86,90,93,118,150,154,174,175,182,193) அதே கேசவன்தான் மார்க்சிய விரோதமான குரல் என்று அதே எர்னஸ்ட் பி ரை குற்றம் சாட்டுகிறார் (பக். 30,31,141,142)

Deidealogization. இதை 'தத்துவமயநீக்குதல்' என்று கேசவன் மொழி பெயர்த்துள்ளார். (தத்துவம் (Philosophy) வேறு சித்தாந்தம் (idealogy) வேறு என்பதைக் கூட அவர் புரிந்து கொள்ளவில்லை) கலை இலக்கியத்தைப் பொய்ச் சித்தாந்தத்திலிருந்து விடுவித்தல் என்ற பொருளிலேயே எர்னஸ்ட் பி ர் இப்பதத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால் சோவியத் புத்தகங்களிலிருந்து ஒப்பிக்கும் கேசவன் எர்னஸ்ட் பி ரை சோசலிசக் கருத்துகளையும் லட்சியங்களையும் எதிர்ப்பவராகச் சித்தரிக்க முயல்கிறார். இங்கும் கேசவன் சோவியத் வட்டாரத்தின் எதிரொலியாகச் செயல்படுகிறாரே தவிர பி ரின் de idealogization கட்டுரையை சுயமாகப் படித்து எழுதவில்லை. எர்னஸ்ட் பி ரின் என்ற கருத்தாக்கம் அவரது, 'Art against idealogy' என்ற நூலில் (பெங்குவின் 1968) முன்வைக்கப்படுகிறது. சித்தாந்தம் (idealogy) என்பதை பொய்யுணர்வு (false consciousness) என்ற பொருளில் பயன்படுத்தும் பி ர், ஏற்றத்தாழ்வுகளும் புதியவகைச் சுரண்டலும் ஒடுக்கு முறையும் முரண்பாடுகளும் நிலவும் சோவியத் சமுதாயத்தைப் பற்றிய யதார்த்த பூர்வமான சித்தரிப்பை வழங்காமல் முரண்பாடுகள் பூசி மெழுகப்பட்ட கற்பனையான, அருவருமான சம்பவங்களை நிகழ்த்தும் அருவ மனிதர்களைச் சித்தரிக்கும் பொய்மையான கலை இலக்கியப் படைப்பை வழங்கும் போக்கை எதிர்க்கிறார். இத்தகைய சித்தாந்தத்திலிருந்து கலை இலக்கியத்தை விடுவிக்க வேண்டும் என்ற பொருளிலேயே de idealogization என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார்.

எர்னஸ்ட் பி ரினுடைய கருத்துக்களின் தராதரத்தை ஆராய இங்கு நாம் புகவில்லை; ஆனால் அவரது கருத்துகளை விவாதிக்கும் போது அவற்றை நேர்மையான முறையில் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்பது தான் நமது கோரிக்கை. Deidealogization என்ற பதம் அமெரிக்காவிலுள்ள மார்க்சிய விரோதியான டானியல் பெல் போன்றவர்களாலும் பயன்படுத்தப்படுகிறது – ஆனால் அது வேறொரு பொருளில்; சித்தாந்தங்களின் சமூக செயல்பாட்டையே மறுக்கும் வகையில் அதற்கும் பி ர் கையாளும் பொருளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

7. கேசவனின் பொருள் முதல்வாதம் சிந்தனையையும் செயலையும் தனித்தனியே பிரித்துவிடுகிற, மார்க்சியத்துக்கு முந்திய பொருள் முதல்வாதம். அதனால் தான் அவரால் உண்மையான மார்க்சியப் பொருள் முதல் வாதத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் தான் ஸ்தானோவின் யாந்திரிகப் பொருள் முதல் வாதத்தைப் பிடித்துக் கொண்டு ஞானியையும், மேலை மார்க்சியம் என அவரால் சொல்லப்படுவனவற்றையும் இழிவுபடுத்துகிறார். ஞானியினுடைய தவறான கருத்துகள் என கேசவன் முன்வைக்கும் சில கருத்துகளை இங்கு பார்ப்போம் (ஞானியின் ஒவ்வொரு கருத்தையும் ஆதரித்து கேசவனை மறுப்பதற்கு ஒரு புத்தகமே தேவைப்படும்)

(i) "சுரண்டப்படும் வர்க்கத்தின் மூலம் வரலாறு வளர்ந்ததைப் போலவே சுரண்டும் வர்க்கத்தின் மூலம் வரலாறு வளர்ந்திருக்கவே செய்கிறது" என்ற ஞானியின் கூற்றை கேசவன் எடுத்துக்காட்டுவதன் நோக்கம், ஞானி சுரண்டும் வர்க்கத்தின் ஆதரவாளர் என்று நிரூபிக்கத்தான். அப்படியானால் பூர்சுவா வர்க்கம் வரலாற்றில் ஆற்றியுள்ள பிரம்மாண்டமான முற்போக்குச் சாதனைகளைப் பற்றி கம்யூனிஸ்ட் அறிக்கையில் எழுதியுள்ள மார்க்சும் ஏங்கல்சும் எத்தகைய மார்க்சிய விரோதிகள்! பிற்போக்காளர்கள்!!

(ii) "பொருள் அல்லது நிகழ்ச்சிக்கும் அவற்றின் மனப்பதிவுக்கும் இடையில் வரலாறு கலாச்சாரம் முதலியவை சம்பந்தப்பட்டிருக்கின்றன" என்ற ஞானியின் கூற்றில் என்ன மார்க்சிய விரோதக் கருத்தைக் கேசவன் கண்டுவிட்டார்? ஒருபொருள் நேரடியாக எல்லார் மனதிலும் ஒரே மாதிரியாகப் பதிகிறதென்றால் எல்லாருமே மார்க்ஸ் ஏங்கல்ஸ் லெனின் மாவோ போலவே இருப்போமல்லவா? அல்லது எல்லாருமே கேசவன்களாகவே இருப்பார்களல்லவா! ஆயின் பொருளுக்கும் மனப்பதிவுக்கும் இடையிலான சம்பந்தங்கள் யாவை...?

(iii) "கலை இலக்கியங்கள் இவ்வகையில் பொருளியலின் பிரதிபலிப்புகளாக இல்லாமல் எதிர்த்தாக்குதலாகவும் மாற்றாகவும் உள்ளன". எனும் ஞானியின் கூற்றில் என்ன தவறு உள்ளது?

கலையை சமூகப்பிரக்ஞையின் வடிவம் என்பதை கேசவன் ஒப்புக் கொள்வாரேயானால் லெனினின் கீழ்க்காணும் கூற்றை மறுக்கத்தானே வேண்டும்? "பிரக்ஞை என்பது... புறவுலகைப் பிரதிபலிக்க மட்டும் செய்வதில்லை; அதைப் படைக்கவும் செய்கிறது" (லெனின், Collected works, Vol. 38, FLPH, Moscow 1961, P.212) லெனினுக்குப் போவானேன்? கேசவனை எந்த நாவலும் (இலக்கியச் சூரியனான கார்க்கியின் நாவலும் கூட) பாதித்ததே இல்லை போலும்!

8. கலை இலக்கிய விமர்சனங்களைச் செய்ய ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று இரண்டு இடங்களில் குறிப்பிடும் கேசவன், சோவியத் அதிகாரவர்க்கப் போக்குப் பற்றி மென்மையாகக் குறிப்பிடும் கேசவன், ஸ்தானோவ் காலத்தில் ஆயுதங்கள் கொண்டு கலைஞர்களும் சிந்தனையாளர்களும் ஒடுக்கப்பட்டதை மூடிமறைப்பது ஏன்? சுதந்திரமான விவாதங்களின் மூலம்தான் கருத்து முரண்களைத் தீர்க்கமுடியும் என மாவோ கூறினார் எனக் கூறும் கேசவனிடம் இந்த நேர்மை உள்ளதா? இல்லை என்பதற்கு ஒரு உதாரணம்.

தனது கொச்சை மார்க்சியத்தோடு ஒத்துப் போகாதவர்களை எல்லாம் 'புதிய இடதுசாரிகள்', 'மேலை மார்க்சியவாதிகள்', 'மார்க்சிய விரோதிகள்', 'டிராட்ஸ்கிய வாதிகள்' என வசைபாடும் கேசவன், எர்னஸ்ட் பி ர், அடால்போ, சாஞ்சஸ் வாஸ்க்குவஸ், மக்லெல்லன் போன்ற மேலை மார்க்சியர்களையும், கிளிப்ஸ்லாட்டர், தமராடா ர் போன்ற டிராட்ஸ்கிய வாதிகளையும் தன் உடன்பாட்டோடு மேற்கோள் காட்டுவது ஏன்? தனது புத்தகத்தை நிரப்பி முடிக்க அவர்கள் துணை புரிகிறார்கள் என்பதாலா? அல்லது கருத்து வேறுபாடுகள் இருந்தும், அவர்களும் மார்க்சிய எல்லைக்குள் இருப்பவர்கள்தான் என்பதைக் கேசவன் அங்கீகரிப்பதாலா?

தனது வறட்டுப் பொருளாதார நிர்ணய வாதத்தை எப்பாடுபட்டேனும் நிறுவுவதற்காக மார்க்சையே திரிக்கத் துணியும் கேசவனின் துணிவை மெச்சத்தான் வேண்டுமா? இதற்காக டிராஸ்ட்கியத் தலைவரான கிளிப்ஸ் லாட்டரையும் துணைக்கழைத்துக் கொள்கிறார். மார்க்சின் கூற்று ஒன்றை

மறுப்பதே மார்க்சிய விரோத செயலாகிவிடும் என்று நான் கருதவில்லை; ஆனால் மார்க்சின் கருத்தை முழுமையாக எடுத்துக்கூறி இதைச் செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மார்க்சிடம் ஹெகலியம் இருந்தது, மார்க்சிடம் மார்க்சியமே இல்லை என்று மொட்டையாகக் கூறாமல் ஹெகலியம் என்றால் என்ன, மார்க்சின் கூற்றில் அது எப்படி இடம் பிடித்துள்ளது என்பதை விளக்கவேண்டும். ஆனால் கேசவனால் இதைச் செய்யமுடியாது. பண்டைக்கால கிரேக்கக் கலைகள் நமக்கு இன்றும் ஏன் மகிழ்வூட்டுகின்றன என்ற கேள்விக்கு மார்க்சே தரும் பதிலை கேசவன் இருட்டடிப்புச் செய்துவிட்டார். பிற்பட்டப் பொருளாதார வளர்ச்சி உள்ள சமூகத்தில் கலையின் வளர்ச்சியும் பிற்பட்டதாகவே இருக்கவேண்டும் என்ற தனது பொருளாதார நிர்ணய வாதக் கருத்தை எப்படியேனும் நிலைநாட்டிவிட வேண்டும்; அதற்காக மார்க்சின் கூற்றை கேசவன் எப்படித் திரிக்கிறார் என்று பார்ப்போம்.

மார்க்சின் 'அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு' என்ற நூலின் முகவுரையில் மார்க்ஸ் கூறுவதை கீழ்க்காணும் வகையில் கேசவன் மேற்கோள் காட்டுகிறார்:—

நான் எழுதிய பொதுவான முன்னுரை இதில் விடுபட்டுள்ளது. ஏனெனில்

> மேலும் ஆய்ந்ததில் எதிர்பார்த்த முடிவுகள் நம்மைக் குழப்புவதாகத் தோன்றுகின்றன. அவை உறுதிப்படுத்தப்படவும் வேண்டும். என்னை உண்மையில் பின்பற்றும் வாசகன் இந்தத் தனித்தன்மையிலிருந்து பொதுத்தன்மைக்கு முன்னேறிச் செல்வது குறித்துத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். (கேசவனின் புத்தகம், பக்.14)

கேசவன் மேற்கோள் காட்டும் பகுதியின் சரியான மொழி பெயர்ப்பையும் அதன் ஆங்கில மூலத்தையும் காணலாம்:

"நான் எழுதிய பொதுவான முன்னுரையை இங்கே சேர்க்கவில்லை. ஏனெனில் மேற்கொண்டும் சிந்தித்த

பொழுது, இன்னும் ஆதாரங்களைத்திரட்டி நிரூபிக்க ப.6 வேண்டிய முடிவுகளை முன்கூட்டியே தெரிவிப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் என்று எனக்குத் தோன்றுகிறது. உண்மையிலேயே என்னைப் புரிந்து கொள்ள விரும்பும் வாசகர் குறிப்பானதிலிருந்து பொதுவானதற்குச் செல்லத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்..."

"A General Introduction, which I had drafted, is omitted since on further consideration it seems to me confusing to anticipate results which still have to be substantiated and the readear who really wishes to follow me will have to decide to advance from the particular to the general..." – Karl Marx, A contribution to the Critique of Political Economy, Progress Publishers, Moscow, 1970, P.19)

மார்க்ஸ் இங்கு குறிப்பிடும் 'பொதுவான முன்னுரையில் கலையின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலுள்ள பிரச்சினை மட்டுமல்லாது உற்பத்தி நுகர்வு, பங்கீடு, பரிவர்த்தனை, அரசியல் பொருளாதாரம், சட்ட உறவுகள், குடும்ப உறவுகள் முதலிய பல பிரச்சனைகளும் கையாளப் டுகின்றன. தான் கற்றவை, புரிந்து கொண்டவை, தான் வந்து சேரும் முடிவுகள் கருதுகோள்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை மார்க்ஸ் எந்தக் கட்டத்திலும் ஒரு போதும் திருப்தி அடைந்ததே இல்லை. இடைவிடாது புதிய சான்றாதாரங்களைத் தேடுவதும் பழைய முடிவுகளைத் திருத்தியமைப்பதும் மாற்றுவதும் செழுமைப் டுத்துவதும் அவரது இயல்பு. இதன் காரணமாகத் தான் இவர் மேற்காணும் நூலில் தான் முன்பு எழுதிய 'பொதுவான முன்னுரையைச்' சேர்க்கவில்லை என்றே கொள்ள வேண்டும்.

அடுத்து, மார்க்சின் கூற்றான 'ஏனெனில் மேற்கொண்டும் சிந்தித்த பொழுது, இன்னும் ஆதாரங்களைத் திரட்டி நிரூபிக்க வேண்டிய முடிவுகளை முன்கூட்டியே தெரிவிப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் என்று எனக்குத் தோன்றுகிறது' என்பது கேசவனின் நூலில் – "ஏனெனில் மேலும் ஆய்ந்ததில் எதிர்பார்த்த முடிவுகள் நம்மைக்

குழப்புவதாகத் தோன்றுகின்றன. அவை உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்" என்று உருமாறிவிட்டது! அடுத்து "குறிப்பானதிலிருந்து பொதுவானதற்குச் செல்லத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்" என காரல்மார்க்ஸ் தனது வாசகனுக்குச் சொல்ல, கேசவன் தனது வாசகனுக்கோ காரல் மார்க்ஸின் கருத்துகளை ஒதுக்கி விடச் சொல்கிறார். உண்மையில் மார்க்ஸின் வாசகன் கேசவனும் கிளிஃப்ஸ் லாட்டாரும் (பின்னவர் என்ன சொல்கிறார் என்பது நமக்குத் தெரியவில்லை, கேசவனும் தெரியப்படுத்தவில்லை) வரும் முடிவுகளுக்குத்தான் வர வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. மேலும் The Particular என்பது கேசவனின் கையில் 'இந்தத் தனித்தன்மை, என்று இடப்பொருத்தமின்றி உருமாறியிருக்கிறது. தனது வறட்டுத் தனத்தை மார்க்சியம் என்று விலை பேசுவதற்காக அந்தோகேசவன் மார்க்சையே திரித்துப் புரட்ட வேண்டியுள்ளது!

10. கலை இலக்கிய விவகாரங்களில் ஸ்டாலின் காலத்திய ஸ்தானோவிச நடைமுறைக்கு சப்பைக்கட்டு கட்டும் முறையிலும் ஸ்தானோவின் 'உன்னதமான' அழகியல் நோக்கு பற்றியும் கேசவன் எழுதுகிறார்:

"1928ல் ஐந்தாண்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ருசியப் பாட்டாளி வர்க்க எழுத்தாளர் மன்றம் அமைக்கப்பட்டது. கட்சியின் புது நெறியைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லக் கலைகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. 'சகலமும் மக்களுக்கே!' என்பதற்கிணங்க 'கலையும் மக்களுக்கே' என்ற முழக்கம் வைக்கப்பட்டது" (ப.204)

கட்சியின் பொது நெறிக்கு சேவகம் செய்யக் கூடிய அளவுக்கு கலைகள் குறுக்கப்பட்டன என்பதை கேசவன் ஒப்புக் கொள்கிறார். இந்தப் பொதுநெறி தவறானதாக இருக்குமானால், கட்சியில் அதிகாரவர்க்கப் போக்கு மேலோங்கியிருக்கு ானால் அப்போதும் கலைஞன் அந்தப் பொது நெறிக்கு ஏவல் புரிபவனாயிருக்க வேண்டுமா? 'கலையும் மக்களுக்கே' என்ற கோ ம் தன்னளவிலேயே மிகுந்த ஜனநாயகத் தன்மை உடையது என்று நம்மை நம்ப

வைக்க கேசவன் முயற்சி செய்கிறார். 'கட்சித் தலைமையால் தன்னிச்சையாகத் தீர்மானிக்கப்பட்ட கலைகள் மட்டுமே மக்களுக்கு' என்பதுதான் நடைமுறையில் அக்கோ த்தின் பொருளாக இருந்தது.

கேசவன் மேலும் எழுதுகிறார். "இத்தகைய நேரத்தில் தான் ஒரு கவிஞர் கட்சியையும் அதிகாரிகளையும் விமர்சித்து எழுதிய கவிதைக்கு கடும் விமர்சனம் செய்யப்பட்டார். இந்த நேரத்தில்தான் – 1930ல் தான் – ஸ்டாலின் நேரடியாக அக்கவிஞருக்குக் கடிதம் எழுதினார். இதுதான் அவரது முதல் தலையீடு" (பக். 204)

மாயகோவ்ஸ்கி கட்சித் தலைவர்களும் ஊழியர்களும் கூட்டங்கள் போட்டுக் காலம் கழிப்பதையும் தீர்மானங்கள் போட்டு திருப்தி அடைவதையும் விவாதங்களில் நேரத்தையும் சக்தியையும் அரசாங்கப் பணத்தையும் விரயமாக்குவதையும் கண்டித்துக் கவிதை எழுதினார். லெனின் அதை வரவேற்றதோடு அதற்காக ஒரு தலையங்கமே தீட்டினார். இல்ப், பெட்ரோவ் போன்ற எழுத்தாளர்கள் 1920களில் சோவியத் அதிகார வர்க்கத்தை கிண்டல் செய்து ஏராளமான நையாண்டிக் கதைகளை எழுதினர். அவர்களை எல்லாம் லெனினோ கட்சியோ கண்டிக்கவுமில்லை கழுவிலேற்றவுமில்லை. இத்தகைய லெனினிய மார்க்கம் 1930லிருந்து கடைப் பிடிக்கப்பட்டதா? உண்மையையும் சத்தியத்தையும் உழைக்கும் மக்களின் நலன்களையும் பாதுகாக்கும் ஏகபோக உரிமை கட்சிக்கு மட்டும்தானா? கட்சியையும் அரசையும் விமர்சித்தவர்கள் அனைவருமே சோசலிச விரோதிகள்தானா? அறுதியில் கட்சிக்காக மக்களா, மக்களுக்காக கட்சியா?

11. தஸானோவ், வாதம் என்பது சிந்தனைக்கும் சமூக உணர்வுக்கும் மேல்தளத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மேலை மார்க்சியவாதிகளால் மிகவும் குரூரமாகச் சித்தரிக்கப்படும் ஸ்டாலின் எழுத்தாளர்களைப் பற்றிச் சொன்ன கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது அவர் சொன்னார்: 'எழுத்தாளர்கள் மனித ஆத்மாவின் பொறியியலாளர்கள்'. இதை கலைக்கு முதலிடம்

அரசியலுக்கு அடுத்த இடம் எனச் சொல்பவர்கள் மறுப்பதுதான் வரலாற்று விந்தையாகும்" (பக். 205) கேசவனின் கூற்று இது.

முதலாவதாக சிந்தனைக்கும் சமூக உணர்வுக்கும் மேல் தளத்துக்கும் ஸ்தானோவ் வாதம், முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று யாரும் கூறவில்லை. சிந்தனை சமூக உணர்வு மேல்தளம் என்பனவற்றை வளர்க்க ஸ்தானோவிசம் பயன்படுத்திய விதிமுறைகள் தான் கேள்விக்குட்படுத்தப்படு கின்றன. இரண்டாவதாக, எழுத்தாளர்கள் மனித ஆத்மாவின் 'பொறியியலாளர்கள்' என்ற கூற்று, மக்களுக்கு மேலான ஏசமானத்துவத்தைத்தான் – கட்சி தீர்மானிப்பதை மட்டும் மக்கள் மூளைக்குள் திணிக்கும் அதிகாரத்தை (மட்டுமே) கலைஞர்களும் எழுத்தாளர்களும் பெற்றிருக்கிறார்கள் என்பதைத்தான் – காட்டுகிறது. கலைஞர்கள் எழுத்தாளர்களுடைய ஆத்மாக்களுக்கான 'பொறியியலாளர்களாக' வெகு மக்கள் இருக்கிறார்கள். என்பதும் 'கற்றுக்கொடுப்பவனே கற்றுக் கொள்ளவேண்டும்' என்ற மார்க்சின் கருத்தும் (ஃபயர்பாஹ் மீதான ஆய்வுரை) இதில் இடம் பெறவில்லை. மேலும் 'பொறியியலாளர்கள்' என்ற படிமமே ஒரு யாந்திரிக பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பாக உள்ளது.

"கலைக்கும் அழகியலுக்கும் ஸ்தானோவ் எதிரி அல்ல" எனக் கேசவன் நிரூபிக்க முயல்கிறார் (பக்கம் 205). 1962இல் மாலங்கோவால் இந்த 'அழகியல்' நிராகரிக்கப்பட்டதே கேசவனின் கூற்றுக்கு மறுப்பாகும்.

12. தனது 'கறாரான' மார்க்சியத்துக்கு அடிப்படையாக 1905இல் லெனின் எழுதிய 'கட்சி அமைப்பும் இலக்கியமும்' என்று கட்டுரையைக் கொள்கிறார் கேசவன். சமூக ஜனநாயக (கம்யூனிஸ்ட்) இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் சமூக ஜனநாயகக் கட்சிப் பத்திரிகையில் மட்டுமே எழுதவேண்டும் என்பது லெனின் அக்கட்டுரையில் வற்புறுத்தும் கருத்துகளில் ஒன்று கேசவனிடம் இந்த அளவிலாவது நேர்மையுண்டா? அவர் எழுதும் எல்லாப் பத்திரிகைகளும் அவரது நூல்களை வெளியிடும் பதிப்பகங்களும் சமூக ஜனநாயக (பழைய அர்த்தத்தில்) கட்சி சார்ந்தவைதானா?

கேசவனின் புத்தகத்தில் காணப்படும் இத்தகைய 'சிந்தனை வளத்தையும்' 'நேர்மையையும்' அவரது வேறு சில கட்டுரைகளிலும் காணலாம். 'செந்தாரகை' அக்டோபர் 1984 இதழில் 'நமது இலக்குகள்' என்ற தலைப்பில் அவர் கலாச்சாரம் பற்றித் தொடர்ந்து எழுதிய கட்டுரையின் சாரம், கேசவனின் கொச்சை மார்க்சியச் சேற்றில் உழலாத சிந்தனையாளர்களை, 'ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்' என்று 'நிறுவு'வதாகும். இதற்காக அவர் கலப்பற்ற பொய்களை வெட்கமற்ற முறையில் தெளிப்பதற்கு சிறிதும் தயங்குவதில்லை. எடுத்துக்காட்டாக எனது நூல்கள் இரண்டைப் பற்றிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறார்.

I. "எஸ்.வி.ராஜதுரையின் 'அந்நியமாதல்' நூல் சார்த்தரின் கண்ணோட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது ஆனால் மார்க்சியப்பதப் பிரயோகங்களுடன். இது எர்னஸ்ட் பிஷர் என்பவரின் தத்துவமயமற்ற போக்கை (de idealogization) அணுகுமுறையாகக் கொள்ளப்பட்டுள்ளது. மார்க்சியம் 'அந்நியமாதலில் இருந்து தொடங்குகிறது' என விளக்கப்படுகிறது".

முதலாவதாக சார்த்தரின் கண்ணோட்டம் என்ன என்பதை அவர் விளக்கியிருக்க வேண்டும். அது எவ்வாறு மார்க்சியப் பதப்பிரயோகங்களில் மூடிமறைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபித்திருக்க வேண்டும். 1932ல் மார்க்சின் 'பொருளாதாரத் தத்துவக் கையெழுத்துப்படிகள் – 1844' என்ற தலைப்பிலான கட்டுரைகள் வெளியிடப்பட்ட காலமுதல் உலகெங்கிலும் மார்க்சிய வாதிகளிடையேயும் மார்க்சியவாதிகள் அல்லாதோரிடையேயும் அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் பல ஆயிரக்கணக்கான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. அதிகார வர்க்கச் சிதைவுகளின் காரணமாக மதிப்புக்குறைந்த மார்க்சியத்துக்கு உயிரூட்டியதும் மனிதநேயப் பரிமாணத்தை அதனிடம் மீண்டும் கண்டறிந்ததும் இத்தகைய விவாதங்களே. இத்தகைய ஒரு கருத்தாக்கம் கேசவனால் எவ்வளவு கொச்சைப்படுத்தப்படுகிறது!

இரண்டாவதாக 'அந்நியமாதல்' என்பதைப் பொறுத்தவரை இருத்தலியலாளர்களும் பிற கருத்து முதல்வாதிகளும் அது வரலாற்றுக்கு அப்பாற்பட்ட, என்றென்றும் நிலவுகிற மானிட நிலைமை எனக் கருத, நானோ மார்க்சியத்தின் அடியொற்றி கீழ்க்காணும் கருத்தை 'அந்நியமாதல்' என்ற நூலின் 15ஆம் பக்கத்தில் கூறியுள்ளேன்.

"அந்நியமாதல் என்ற நிகழ்ச்சிப் போக்கு வரலாற்றுக்கு முற்றிலும் புதிய போக்கு அல்ல என்றும் நாம் வாழ்கிற காலத்துக்கு மட்டுமே உரிய ஒன்று அல்ல என்றும் கூறினோம். இதன்பொருள், மானிட வாழ்வே என்றும் தனிமையையும் அந்நியமாதலையும் அனுபவிக்கக் கட்டுப்பட்டுள்ளது, இது மானிட நிலைமை (Condition Humaine) என்பதல்ல; நாம் 'அந்நியமாதல்' என்பதை வரலாற்று ரீதியான கருத்தாக்கமாகக் கொள்கிறோம். ஒரு மனிதன் அந்நியமாக்கப்படுகிறான் என்றால் அவன் ஏதோ ஒன்றிலிருந்து அந்நியமாக்கப்பட வேண்டும். அதற்குக் காரணம் இருக்கவேண்டும். இக்காரணங்கள் வரலாற்றுக் கட்டுக்கோப்பில் தான் தோன்றுகின்றன. அதேபோல 'அந்நியமாதலைக் கடந்து செல்லுதல்' என்பதுமே உள்ளார்ந்த வரலாற்று ரீதியான கருத்தாக்கமாகும்".

மூன்றாவதாக நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியதுபோல எர்னஸ்ட் பி ரின் deidealogization என்ற கருத்தாக்கம் பற்றி கேசவனுக்கு எதுவும் தெரியாது. அது என்ன என்பதை நான் விளக்கியிருக்கிறேன். அதற்கும் எனது புத்தகத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. எர்னஸ்ட் பி ரிடமிருந்து ஒரேஒரு மேற்கோள் மாத்திரமே நான் பயன்படுத்தியிருக்கிறேன். உழைப்பின் பிரிவினை பற்றிய மார்க்சிய விளக்கமே அது. மாறாக கேசவன் தனது 'இலக்கிய விமர்சனம்' புத்தகத்தில் 15,16 இடங்களில் எர்னஸ்ட் பி ரின் மேற்கோள்களைக் காட்டுகிறார் – கருத்துடன்பட்டு!

II. எனது 'எக்சிஸ்டென்ஷியலிசம்' நூலைப் பற்றி செந்தூரன் 'செந்தாரகை'யில் எழுதுவதாவது:-

"எஸ்.வி.ஆரின் எக்சிஸ்டென்ஷியலிசம், சார்த்தரின் அணுகுமுறைப்பட்டதே. 'எக்சிஸ்டென்ஷியலிசம், மார்க்சியத்தின் எல்லையிலிருந்து தொடங்குகிறது' என்ற சார்த்தரின் கூற்றை விளக்குகிறது. இது வாழ்க்கையை வாழ்க்கையாக மாற்றும் சீரிய முயற்சியாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்நூலில் புது இடது ஆசான்கள் போற்றப்படுகின்றனர்".

கேசவனின் மார்க்சிய அறிவு எத்தகையது என்பதை நான் மேலே காட்டியிருக்கிறேன். சிந்தனைத் தளத்திலிருந்து வரும் நேர்மையான, ஆரோக்கியமான, கடுமையான விமர்சனங்கள் மூலம் எனது புத்தகங்கள் நிராகரிக்கப்படுமேயானால் நான் மகிழ்ச்சியோடும் மரியாதையோடும் ஏற்றுக்கொள்வேன். ஆனால் கேசவன்களிடமிருந்து இத்தகைய விமர்சனங்களை எதிர்பார்க்க முடியுமா?

'எக்சிஸ்டென்ஷியலிசம்' புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:-

(i) ...கீர்கெ கார்ட், மார்க்ஸ் இருவருக்கிடையில் எல்லா இருத்தலியலாளரையும் நிறுத்திவிட முடியும். இதன்பொருள், இருவரும் ஒரே துவக்க முனையில் புறப்பட்டு வெவ்வேறு திசைகளில் சென்றனர் என்பதுதான்".

"முழுமையான தனிமனிதன் என்கிற பிரச்சினை கீர்க்கெ கார்டை ஆட் கொண்டது போலவே மார்க்சையும் எதிர்கொண்டது. ஆனால் சமுதாயத்திலிருந்து விலகி தன்னை உறுதிசெய்து, அறிவை முற்றிலுமாக நிராகரித்து வெறும் நம்பிக்கையின் மூலம் தனக்கு விமோசனம் தேடிக்கொள்ளும் கீர்க்கெ கார்டின் மனிதனுக்கு மாறாக, சமுதாயத்துடன் இணைந்து அறிவைப் பயன்படுத்தி, சோசலிசம் என்ற அறிவுக்குகந்த நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்து சமுதாயம் முழுவதற்கும் விமோசனம் தேடி, தன்னை உறுதிப்படுத்திக் கொள்பவன் மார்க்சின் மனிதன்" *(இரண்டாம் பதிப்பில் பக்.14)*

(ii) மார்க்சும், கீர்க்கெ கார்டும் சமகாலத்தவர் என்றோம். "ஒரு தூய தர்க்க சாத்திர அமைப்பைக் கொள்ள

முடியும். ஆனால் வாழ்க்கை பற்றிய தர்க்க சாத்திர அமைப்பைக் கொள்ள முடியாது" என்று கீர்க்கெ கார்ட் கூறியதிலிருந்து மார்க்ஸ் சிறிதும் வேறுபடமுடியாது. ஆனால் வாழ்வை எப்படி வாழ்வது? வாழ்வின் நோக்கம் என்ன? மனித வாழ்வின் விமோசனம் எங்குள்ளது? பல்வேறு வகையான விளக்கங்களிலும் அமைப்புகளும் நிறுவனங்களிலும் சராசரித் தனத்திலும் பொய்மையிலும் மாய்மாலத்திலும் கேவலமான பொருளாசையிலும் மனித வாழ்வை அடைத்து விடும் மோக்குகளுக்கு எதிராக வாழ்வை மானிட வாழ்வாக வாழ்வது எவ்வாறு? இத்தகைய கேள்விகளுக்கு விடையளிப்பதில் இருவரும் எதிரெதிர்க் கோடிகளில் அல்லவா நிற்கிறார்கள்?" (பக். 129)

மார்க்சியத்திடமும் மார்க்சியவாதிகளிடமும் நெருங்கி வந்தவர் என்று நான் கருதும் சார்த்தரைப் பற்றிய எனது கட்டுரையில் நான் கூறுவதாவது:-

(iii "இங்கு சார்த்தர் மார்க்சியம் கூறும் விஞ்ஞான வகையான பொருண்மை விளக்கத்தையும் வறட்டுத்தனமான நிர்ணயக் கொள்கையையும் வேறுபடுத்திப் பார்க்கத் தவறுகிறார்" (பக்.247)

(iv) "சார்த்தர் தனது இறுதி நாட்களில் மார்க்சியத்திடம் மிகவும் நெருக்கமாக வந்த போதிலும் முரணற்ற மார்க்சியக் கண்ணோட்டத்தை அடைந்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை... உண்மையில் அவர் மார்க்சியத்தைத் தன் இருத்தலியலுக்குள் இழுத்துக் கொள்கிறார்; இருத்தலியலைக் கைவிடுவதில்லை." (பக். 248)

எனது நூலைக் கவனமாக படிக்கக்கூடிய எவருக்கும் குறைந்த அளவு அதன் கடைசி அத்தியாயத்தைப் படிப்பவருக்கேனும் அது இருந்தலியல் பற்றிய ஒரு ஆழமான மார்க்சிய விமர்சனத்தைச் செய்துள்ளது என்பது புரியும், வறட்டு மார்க்சியம் பற்றி சார்த்தர் போன்றவர்கள் வைத்த விமர்சனங்கள் ஏற்கத்தக்கவையே. அவற்றைக் கண்டு அஞ்ச வேண்டியவர்கள் ஸ்தானோவிஸ்டுகளும் அவர்களது தமிழகச் சீடர்களும்தான்; மார்க்சியர்கள் அல்லர்.

மார்க்சியத்தின் அடிப்படை கருத்தாக்கங்கள் கூட கேசவனுக்கு இன்னும் பிடிபடவில்லை என்பதற்கு மற்றொரு உதாரணம் தர விரும்புகிறேன். செந்தூரன் என்ற பெயரில் 'அன்னம் விடு தூது' மே'85 இதழில் 'இருட்டில் தவிக்கும் இளைஞர்கள் என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைகளின் ஒரு பகுதி.

"...மனிதனுக்கும் விலங்குக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் சாரமானது, மனிதன் தனக்குத் தேவையான பொருட்களைத் தானே திட்டமிட்டு உற்பத்தி செய்கிறான் என்பதாகும். மனிதனையும் விலங்கையும் பிரிக்கும் எல்லைக் கோடுகளில் இதுவும் ஒன்றாகும். இதுவே மனித சமூகத்தின் சாரம் (essence) ஆகும். எனவே எந்த மனிதன் சமூக உற்பத்தியில் ஈடுபடவில்லையோ அல்லது ஈடுபட ராய்ப்பில்லையோ அவன் மனித சாரத்தை இழந்தவன் ஆகிறான்..."

எனது 'அந்நியமாதல்' புத்தகத்தில் 'மனிதனும் சாராம்சமும்' என்ற பகுதியும், பிற அத்தியாயங்களிலும் மனிதசாரம் பற்றிய மார்க்சியக் கருத்தை மார்க்சின் கூற்றுகளைக் கொண்டே விரிவாக விளக்கியுள்ளேன். வெறும் "விளக்க நூலான" அதிலிருந்து தெரிந்து கொள்வதற்கு ஏதும் இல்லை என கேசவனின் மேதாவிலாசம் நிராகரிக்கக்கூடும். அவரே மொழி பெயர்த்துள்ள ஜார்ஜ் தாம்சனின் 'Human Essence' என்ற புத்தகத்தையாவது அவர் ஒருமுறை படித்துப் பார்க்கட்டும். மனித சாரத்தை (மனித சமூக சாரம் என்றுதான் கேசவன் கூறுவார். சமூகத்தை விட்டுவிட்டால் எங்கே தனி மனித வாதத்துக்கு ஆட்பட்டு விடுவோமோ என்ற பயம் அவருக்கு. அவ்வளவு 'கறாரான' மார்க்சியவாதி அவர்! 'இயற்கையை' ஏனோ விட்டுவிட்டார்!! நியாயமாக 'மனித சமூக இயற்கைச்சாரம்' என்றே அவர் மொழிபெயர்த்திருக்க வேண்டும்) படைப்பது சக மனிதர்களுடன் உறவுகொண்டு இயற்கை மீது செயல்புரியும் கூட்டுழைப்புத்தான். தலைமுறை தலைமுறையாக மனிதசாரம் என்பது வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் உட்பட்டு வருவது. இதுகாறும் மனிதகுலம் கூட்டு முயற்சியினால் படைத்த பொருள்வகைச்

செல்வங்கள், ஆன்மீகச் செல்வங்கள் அனைத்தும் மனிதசாரம் ஆகும். 'மனிதசாரமும்' 'தனிமனிதனும்' ஒன்றல்ல. ஒன்று, சாரம்; மற்றொன்று அதன் புலப்பாடு. மனிதசாரம் ஒருவனில் எப்படிப் புலப்படுகிறது என்பது அவன் சார்ந்திருக்கும் வர்க்கம், பொருள்வகைச் செல்வங்களையும் ஆன்மீகச் செல்வங்களையும் தன் வயமாக்கிக் கொள்வதில் அவனுக்குள்ள வாய்ப்பு அல்லது வாய்ப்பின்மை, வரையறைகள் ஆகியவற்றைப் பொறுத்தது. வேலை வாய்ப்பில்லாத ஒருவன் அல்லது வேலை செய்யமுடியாத அங்கவீனன் ஒருவன் ஒரு சிறந்த கலைஞனாகவோ, இலக்கியவாதியாகவோ சிந்தனையாளனாகவோ இருக்கலாம். வேலை ஏதும் செய்யாமல் ஆராச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கலாம். அல்லது அரசியல் வேலைகளில் மூழ்கியிருக்கலாம். அத்தகையோரிடத்திலும் மனிதசாரம் இருக்கவே செய்யும். மனித சாரத்தைப் படைப்பது உழைப்பு. ஆனால் உழைப்பே மனித சாரம் ஆகிவிடாது. மார்க்ஸ் எங்கும் வேலைக்கு அமரவில்லை. எனவே கேசவனின் கருத்துப்படி மார்க்சிடம் மனிதசாரம் இல்லை – அப்படியா?

30-40 ஆண்டுகளாக தமிழக மறுமலர்ச்சிக்கு உரிமை கொண்டாடி அரசியல் பண்பாட்டுத் துறைகளில் மேலாதிக்கம் செலுத்திவரும் ஒரு போலி இயக்கம் தோற்றுவித்த 'நுனிப்புல் மேய்தல்' என்ற போக்கு தமிழகத்தின் மார்க்சியர்களையும் பாதித்துள்ளது. அறிவை அடைவதற்கான குறுக்குவழி ஏதும் இல்லை என்றார் லெனின். தலைசுற்ற வைக்குமே என மலைமுகடுகள் மீது ஏறிப்பார்க்கத் துணியாதவனால் அறிவுச் சிகரங்களைத் தரிசிக்க முடியாது என்றார் மார்க்ஸ். அறிவைப் பெறுவதற்கும் கடின உழைப்புத் தேவை; கூட்டு முயற்சியும் மனந்திறந்த கருத்தாடல்களும் இன்றியமையாதன. அறிவுபெறுதலும் கூட ஒரு நடைமுறைதான். இந்த நடைமுறைக்கு மரியாதை தரும் போதுதான் மார்க்சியம் இங்கும் வளரும். இறுமாப்பும், அவதூறுகளும் இதைச் சாதிக்காது.

~~*

பரிமாணம் – 15

ஜனவரி–மார்ச் 1986

1. நமது பார்வை

'பரிமாணம்' - சென்ற இதழ் உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. செறிவான செய்திகள் தரப்பட்டுள்ளன என்பது பரவலான கருத்து. கருத்துப் போராட்ட (Polemics) வகையிலான கட்டுரைகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தினருக்குத் தனக்குள்ள எதிர்ப்பை 'பரிமாணம்' காட்டுகிறதா எனச் சிலரின் கேள்விகள். நம் உறுதியான விடை: 'இல்லை', உண்மையான மார்க்சிய – லெனினியப் புரட்சியாளர் அனைவருக்கும் நாம் தலை வணங்குகிறோம். இன்று அவர்கள் பிளவுபட்டிருந்த போதிலும், கடுந்தவறுகளை இழைத்து வந்த போதிலும், இந்த நாட்டின் விமோசனத்துக்கான திறவுகோலை வழங்கப்போவது அவர்கள்தான் என்று நாம் நம்புகிறோம். 'ஸ்தானோவிசம்' போன்று ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் தோன்றிய போக்குகள், மக்களுக்கும், மார்க்சியத்துக்கும், கட்சிகளுக்கும் பெருங்கேடு பயத்தன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆதாரமற்ற சில அவதூறுகளுக்குத்தான் 'பரிமாணம்' பதில் சொல்ல வேண்டியிருந்தது. வேறு சில வட்டாரங்கள் கொண்டுள்ள பகைமையும், பரப்பி வரும் அவதூறுகளும் விரைவில் மறைந்துவிடும் என்ற பிரமை இப்போது நமக்கில்லை. இவற்றின் ஆத்திரமூட்டல்களுக்கு நாம் இரையாகிவிட மாட்டோம்.

தேசிய இனச்சிக்கலைப் பயன்படுத்தி மாநில அரசாங்கங்களில் அதிகாரத்துக்கு வந்துள்ளவர்கள் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். போன்ற உள்ளூர்க்கொடுங்கோலர்கள். ஆசிரியர்களையும், மீனவர்களையும் எம்.ஜி.ஆரின் (இரத்தத்தால்) 'சிவந்த கரம்' ஒடுக்கிற்று. சென்ற நவம்பரில் ஆந்திரப்பிரதேசக் குடியுரிமைச் சங்கத்தின் (APCLC) பொதுச் செயலாளர் டாக்டர் கே. பாலகோபால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். குற்றம் நிரூபணமானால் தூக்குத் தண்டனை! மிகப் பிரகாசமான

வேலை வாய்ப்புகளையும், புகழையும், விளம்பரத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு சாதாரணமான கணித விரிவுரையாளர் பணிஏற்று தன் இலட்சியப் பயணத்தை மேற்கொண்டவர் அவர். மெல்லிய உடலும், உறுதியான நெஞ்சும் கொண்ட பாலகோபால், போராடும் மக்களனைவருக்கும் ஓர் ஒளிமிக்க எடுத்துக்காட்டு.

போபால், டெல்லி, எண்ணூர், மெரினா முதலானவை சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பானவை மட்டுமல்ல. இவை, நவீன விஞ்ஞானம் – தொழில்நுட்பம் பற்றிய மரபு வழி மார்க்சியப் புரிதலைக் கேள்விக்குட்படுத்துகின்றன. ‘அழகுமயமாக்கல்’ என்ற ஆளும் வர்க்க அணுகலுக்கு எதிராக, சுற்றுச்சூழல் போராட்டத்தை மனித உரிமைகளுக்கான போராட்டத்துடன் இணைத்து நடத்த வேண்டும். கட்சி சாராத குழுக்களும், தனி மனிதர்களும் காட்டிவரும் அக்கறைகளில் ஒரு சிறிதளவு கூட புரட்சிக் குழுக்கள் காட்டாதது வருந்தத் தக்கது. ‘தொழில்நுட்பம்’ என்பது இன்று ஏகாதிபத்தியத்திடம் உள்ள கொடுங்கருவி என்பதை ‘வெண்மைப் புரட்சி’ கட்டுரை விளக்குகிறது.

வரும் பிப்ரவரியில் போப் இரண்டாம் ஜான் பால் சென்னை வருகிறார். அவர் போகுமிடங்களில் எல்லாம் புரட்சிகர மக்களியக்கங்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளார். அவரது உண்மைச் சொரூபத்தை விளக்கும் முகமாக ஒரு ‘பகிரங்கக் கடிதம்’ இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழப் போராட்டத்தில் நமக்குள்ள அக்கறையை சேரனின் கட்டுரையை வெளியிடுவதின் மூலம் தெரிவிக்கிறோம்.

அவதூறுகளும், அரைவேக்காட்டுத்தனமும், மேதாவிலாசங்களாக கருதப்படுகிற தமிழகச் சூழலில் ‘பரிமாணம்’ ஆழமான கருத்தாடல்களை ஊக்கிவிட விரும்புகிறது. அனைத்து வகை உதவிகளும், அறிவுரைகளும் அதற்குத் தேவை.

- ஆசிரியர்.

2. இந்தியக் கம்யூனிசத்திற்கு நேர்ந்த அவலம்

கே. தாமோதரன்

தமிழில் பா. சிங்கராயர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) இந்தியாவில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள நீண்டகாலம் பிடித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஆரம்பகாலத்தில் அதன் செயல்பாடுகள் யாவை? அன்று தேசிய இயக்கத்துடன் அதன் உறவுகள் எப்படி? தேசிய இயக்கமாகிய பிரதான நீரோட்டத்திலிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுகளை ஒரு முக்கியமான தருணத்தில் தனிமைப்படுத்தித் திசைமாற்றியது மூன்றாம் அகிலத்தின் (கோமிண்டர்ன்) பெயர்போன 'மூன்றாவது காலகட்டமே' என்பது உண்மைதானா?

கட்சி பற்றிய எனது சொந்த அனுபவம் இக்காலகட்டத்தில் கேரள அளவிலேயே இருந்தது. எனவே நான் அந்த அளவிலேயே கருத்துச் சொல்ல முடியும். என்றாலும் நாடு முழுதிலுமே கட்சிப்போக்கு சாரத்தில் ஒன்றுபோலவே இருந்தது. 1934ல் பம்பாயில் குறிப்பாக துணியாலைத் தொழில்துறையில் ஏற்பட்ட வேலை நிறுத்த எழுச்சிகளுக்குப்பின் சிபிஐ தடை செய்யப்பட்டது. அப்போதுதான் நான் கட்சியில் சேர்ந்தேன். கட்சி தடை செய்யப்பட்டதால் கட்சிப் பிரசுரங்களைக்கூட ஒழுங்காக விநியோகிக்க முடியாத நிலை. இந்நிலையில் ஒழுங்கான உட்கட்சி விவாதம் என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. அக்காலத்தில் தேசிய அளவில் பார்த்தால் சிபிஐ மிகச்சிறிய அமைப்பாகவே இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உண்மையில் 'மூன்றாம் கால கட்டத்தின்' மோசமான விளைவுகளுக்குப் பின்னர் 1935-6ல் தான் சிபிஐ ஒரு தேசிய அளவிலான அரசியல் சக்தியாக வளரத் துவங்கியது. 20களிலும், 30களின் ஆரம்பத்திலும் பிரதேச அளவில் நிலவி வந்த கம்யூனிஸ்டுக் குழுக்களைத் திசை பிறழச் செய்ததில் நிச்சயம் மூன்றாம் அகிலத்தின் அரசியலுக்கு முக்கியமான பங்கு உண்டுதான். இந்திய முதலாளி வர்க்கம், அதன் அரசியல் கருவியான இந்தியக் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிருந்த ஒப்பளவு சுயேச்சை நிலையை மூன்றாம் அகிலத் தலைவர்கள்

குறைத்து மதிப்பிட்டனர். தேசிய இயக்கத்தை ஏகாதிபத்தியத்துடன் இணைத்துக் கூறிக் கொண்டிருந்தனர். காலனியப் பிரச்சினைகளில் ஸ்டாலினின் சொல்விளம்பியான குசினெனும் Inprecot என்ற ஏட்டில் எழுதி வந்த பலரும் இந்தியத் தேசியக் காங்கிரசை ஏகாதிபத்தியச் சார்பான எதிர்ப்புரட்சிக் சக்தி என்று கூறுமளவுக்குச் சென்றனர். காங்கிரஸ் சோசலிஸ்டுகள் (2) 'சமூகப் பாசிஸ்டுகள்' என முத்திரை குத்தப்பட்டனர். 20களின் பிற்பகுதியிலும், 30களிலும் தேசியத் தலைவர்கள் மீது தொடுக்கப்பட்ட வசைத் தாக்குதல்கள் அதி இடது பாணியிலிருந்தன. இந்தியாவிலிருந்த வெவ்வேறு கம்யூனிஸ்டுக் குழுக்கள் இப்பழியுரைகளை கிளிப்பிள்ளைகள் போல் திருப்பி ஒப்பித்தன. என்றாலும் முழுத்தவறையும் அகிலத்தின் மீதே சுமத்திவிடவும் முடியாது. மூன்றாம் அகிலத்தின் அறிவுரையால் சீனக்கட்சியும் தான் தவறியது. ஆனால் அவர்கள் அதிலிருந்து மீண்டு இறுதியில் ஆட்சியையும் பிடிக்கவில்லையா?

ஆகவே அகநிலைக் குறைபாடுகள் இருந்ததை நாம் புறக்கணித்து விடக்கூடாது என்னும் அதே நிலையில் மேலும் ஆழமாக நாம் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பார்த்தால் தான் இந்தியக் காங்கிரஸ் போன்றதொரு வலுவானதும் நிலையானதுமான முதலாளிய ஜனநாயகக் கட்சி நிலவியதற்குப் புறநிலை அடிப்படை இருந்ததை நாம் கண்டுகொள்வோம். இந்திய முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சிதான் அது; இது தரகு முதலாளி வர்க்கமாக இருக்கவில்லை. ஆங்கில ஆட்சி முழுமலர்ச்சி பெற்றிருந்த காலத்திலேயே இவ்வர்க்கம் ஓரளவு சுயேச்சையுடன் செயல்பட்டதாகும். ஏகாதி பத்தியங்களுக்கிடையில் நடந்த போர்களில் பிரிட்டன் ஈடுபட்டுக் கிடந்த காலத்தில் இந்திய முதலாளிகள் எப்போதுமில்லா துரித வளர்ச்சி பெற்றார்கள். இந்த முதலாளி வர்க்கமும், இந்தியர் பலரைக்கொண்ட ஒரு பணித்துறையும், ராணுவமும் இருந்ததாலேயே காலனிய அரசு யந்திரம் இயங்க முடிந்தது. இந்த யந்திரம் தன் உறுப்புகளுடன் காங்கிரசைக் கட்டிப்போடுவதில் வெற்றிபெற்றது. இதனால்தான் சுதந்திரம் பெறும் வேளை

வந்ததும் ஆட்சிக் கைமாற்றம் சுமுகமாக நடந்தேறியது. ஆக இந்தியக் கம்யூனிஸ்டுகள் முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரத்தியேகப் பொருளாதார அரசியல் கட்டமைப்பை எதிர்ப்பட்டார்கள். ஆனால் அதை அவர்கள் ஒருபோதும் சரியானபடி ஆய்வு செய்யவில்லை.

1934-35ல் முறைப்படி சிபிஐ நிறுவப்பட்டதிலிருந்து அதன் வளர்ச்சி சீரற்ற முறையிலேயே ஏற்பட்டது. உதாரணமாக கேரளாவில் முதல் கம்யூனிஸ்டுக் குழு 1937-ல் தான் ஐந்து தோழர்களால் அமைக்கப்பட்டது. அவர்களில் நம்பூதிரிபாடு, கிருஷ்ணப்பிள்ளை, நான் ஆகியோரும் இருந்தோம். 'நாம் நம்மைப் பகிரங்கமாகக் கம்யூனிஸ்டுக் கட்சி என அழைத்துக் கொள்ளக்கூடாது. மாறாக காங்கிரஸ் சோசலிஸ்டுகளிடையே நமக்கொரு தளத்தை வென்றெடுக்க வேண்டும்' என நாங்கள் தீர்மானித்தோம். (இது சரியென்றே நான் நினைக்கிறேன். ஆனால் இது தேச அளவில் நடக்கவில்லை). அதன்படி காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சிக்குள் கம்யூனிஸ்டு இலக்கியத்தைப் பரப்பினோம். காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சி காங்கிரசுக்குள் ஒரு ஒழுங்கமைக்கும் குழுவாக இயங்கிவந்தது. கேரளக் காங்கிரசுக்குள் எமக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. நம்பூதிரிபாடு, ஏ.கே.கோபாலன், கிருஷ்ணப்பிள்ளை - பிற்பாடு நான் எல்லாரும் கேரளக் காங்கிரசின் பிரபலத் தலைவர்களாயிருந்தோம். முன்னணிச் செயற்குழுக்களில் நாங்கள் பதவி வகித்தோம். காங்கிரசுக்குள் எமக்கிருந்த அந்தஸ்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள், உழவர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு - முற்போக்கு எழுத்தாளர் சங்கங்கள் போன்றவற்றை நாங்கள் அமைத்தோம். 1939 இறுதியில்தான் கேரளாவில் கிரமமான கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. எமது மக்கள் பணியும், மக்களின் தேசிய அபிலாசைகளுடன் எங்களை நாங்கள் இணைத்துக் கொண்டோம் என்பதும்தான் சுதந்திரத்துக்குப் பின் கேரளா, கம்யூனிசத்தின் முக்கியமான கோட்டைகளில் ஒன்றாக விளங்கியதற்குக் குறிப்பிடத்தக்க காரணமாக பங்காற்றியது.

✦ கம்யூனிஸ்டு என்பதற்காக நீங்கள் முதன் முதலாகக் கைதானது எப்போது?

1938ல் அப்போது நான் கட்சி உறுப்பினராயிருந்தேன். ஆனால் மக்களின் பார்வையில் நான் அப்போதும் தேசியப் போராட்டக்காரனாகவே கருதப்பட்டேன். திருவனந்தபுரத்தில் இளைஞர் சங்க மாநாடு ஒன்றில் நான் ஆற்றிய உரைதான் நான் கைதாகக் காரணமாகும். அக்கூட்டத்துக்கு என்னைத் தலைமை தாங்கச் செய்திருந்தார்கள். துவக்கவுரையில் ஏகாதிபத்தியத்துக்கெதிராக வசைபாடினேன். திருவாங்கூர் "மகாராஜாவை" ஒடுக்குமுறையின் மொத்தவடிவம் என்றும், அவ்வொடுக்கு முறையை மக்கள் மீது பிரயோகிப்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றும் பேசினேன். மாநிலக் காங்கிரசின் வலது சாரித் தலைவர்கள் "மகாராஜா கண்ணியமான மனிதர். அவரது வட்டாரப் பிரதிநிதிகள்தான் அவருக்குத் தவறான வழிகாட்டுகிறார்கள். எனவே அவர்களே கண்டிக்கப்படவேண்டியவர்கள்" என்று சொல்லி வந்தார்கள். இந்த மடத்தனமான கருத்தை நான் நேருக்குநேர் தாக்கினேன். பிரெஞ்சு, ரஷ்யப் புரட்சிகளின் அனுபவங்களை எடுத்தாண்டேன். அவர்கள் முடியாட்சிப் பிரச்சினையைக் கையாண்ட முறைகள் காங்கிரஸ் தலைவர்களின் முறைகளினும் பயனார்ந்தவை என்பதை அவதானித்துச் சொன்னேன்! போராட்டத்தில் விவசாயிகளும், தொழிலாளிகளும் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை கூட்டத்திடம் விளக்கிவிட்டு 'புரட்சி நீடூழி வாழ்க' என்ற முழக்கத்துடன் பேச்சை முடித்தேன். கூட்டத்தினர் அனைவரும் இம்முழக்கத்தை ஆனந்தமாய் அங்கீகரித்தனர். அன்றே திருவனந்தபுரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், போலீசாருடன் மோதல்களும் நிகழ்ந்தன. மறுநாள் காலை நான் இளைஞர் சங்கத் தலைவர்களுடன் கைது செய்யப்பட்டேன். இரண்டு மூன்று மாதங்கள் சிறைவாசம். பின் விடுவிக்கப்பட்டோம். அதிலிருந்து சிறை வாழ்க்கை எனது வாழ்வின் கிரமமான பகுதியாயிற்று.

✦ சோவியத் நாட்டில் ஏற்பட்டு வந்த வளர்ச்சிகள் இந்தியக் கம்யூனிசத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம்பற்றி சுருக்கமாக விளக்குவீர்களா? நாம் விவாதித்து வரும் இக்கால கட்டம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புரட்சியின் போதிருந்த போல்ஷ்விக் தலைமை ஏறக்குறைய முழுமையும் ஸ்டாலின் பயங்கரத்தால் அழித்தொழிக்கப்பட்டது. அதையடுத்து அதிகாரவர்க்கச் சர்வாதிகாரம் துவங்கியது. இவ்வர்க்கம் பொதுவாழ்வின் எல்லாத் துறைகளிலும் தன் ஏகபோகத்தை நிறுவியது. இவையெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் மேல் ஏற்படுத்திய பாதிப்பு பற்றிக் கூறுவீர்களா?

என்னைப் பொறுத்தவரை நான் முதன்மையாய் கேரளா பற்றியே பேச முடியும். அந்த சமயத்தில் நான் அனைத்திந்தியக் கட்சியமைப்பின் உறுப்பினனல்ல. நாட்டின் பிறபகுதிக் கட்சி உறுப்பினர்களுடன் படர்ந்த தொடர்பு கொள்வதை சூழ்நிலைகள் அனுமதிக்கவில்லை. மூன்றாம் அகிலத்தின் ஏழாம் காங்கிரசில் 'மக்கள் முன்னணிப் போர்த் தந்திரம்' என்ற ஆய்வுரையைத் திமித்ரோவ் சமர்ப்பித்தார். அதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு தான் நான் கட்சியில் சேர்ந்திருந்தேன். ஏழாம் காங்கிரசுக்குப் பிறகுதான் ஸ்டாலின் இந்தியாவில் 'பெருந்தலைவர்' என்று பிரபலியமடைந்தார். இந்த ஆய்வுரைகள் பிரிட்டிசாருக்கு எதிராகக் காங்கிரசுடன் (பிந்தியாவது) ஐக்கிய முன்னணி அமைக்கும் தேவைக்குப் பொருந்தி வந்தன. 1929-34 காலகட்டக் குறுங்குழு வாதமும், அதிஇடது வாதமும் எம்மைத் தனிமைப்படுத்தி இருந்தது. இந்த ஐக்கிய முன்னணி யோசனை, தவறுகளைத் திருத்திக் கொள்ளும் முயற்சியாகப் பார்க்கப்பட்டது. எனவே இது சரியான திசையில் ஒரு படி முன்னேறுவதாகும் என நினைத்தோம்: கேரளாவில் விட பம்பாயிலும், கல்கத்தாவிலும் இது துலக்கமாய்த் தெரிந்தது. ஏனெனில் 30களின் ஆரம்பத்தில் கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கவில்லை. 'பம்பாயுடன் ஒப்பிடும் போது தொழில் மயமாகியிராத கேரளாவில் சிபிஐ வலுப்பெற்றது எப்படி' என மக்கள் என்னிடம் கேட்கும் போது அவர்களுக்கு நான்

தரும் பதில். 1930-33ல் கேரளாவில் சிபிஐ இல்லை என்பதாகும். எனவே அதைப் புதிதாய்த் துவங்குதல் சாத்தியமாயிற்று. இன்று கேரளாவிலுள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்களில் பெரும்பாலோர் 1930-32ல் காங்கிரஸ் துவக்கிய சட்ட மறுப்பு இயக்கத்தில் முற்றாக ஈடுபட்டிருந்தவர்கள். இது மக்களிடம் அவர்கள் ஆதரவு பெற்றது எவ்வாறு என்பதையும் பிற்பாடு காங்கிரஸ் கட்சியின் ஏகபோகத்தை அவர்களால் உடைத்தெறிய முடிந்தது எவ்வாறு என்பதையும் தெளிவாக்குகிறது.

ஆனால் உங்கள் கேள்விக்கு வருவோம் – இந்தியக் கம்யூனிஸ்டுகள் தீவிர கவனமெடுத்து மார்க்சியத்தை ஆழ்ந்து கற்றவர்கள் அல்லர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு உதாரணம் சொல்கிறேன். காலனியப் பிரச்சினை பற்றிய லெனினின் ஆய்வுரைகள் பற்றி 1950களின் இறுதிவரை இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாது – போதுமா? மேலும் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி பற்றிய ஏழாம் காங்கிரசின் பாதை ஆறாம் காங்கிரசின் பாதையிலிருந்து முறித்துக் கொள்வதாகப் பார்க்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாகவே பார்க்கப்பட்டது. தேசிய, சர்வதேசியச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகத் தேவைப்பட்ட செயல்தந்திர மாற்றமாகவே அது விளக்கப்பட்டது. இந்தக் கட்டத்தில்தான் ஆறாம் காங்கிரசின் கேடு பயக்கும் காலனிய ஆய்வுரைகள் மலையாளத்திலும் பிற இந்திய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன என்பதை அறிய உங்களுக்கு விநோதமாய்ப் படலாம். ஆனால், நடப்பில் ஐக்கிய முன்னணி என்பது இடது குறுங்குழுவாதப் பாதையில் இருந்து முறித்துக் கொள்வதாக இருந்தது. பி.சி. ஜோஷியின் தேர்ந்த தலைமையின் கீழ் கட்சி செயல்படுத்திய புதிய பாதை, துரிதமாய் நாங்கள் முன்னேற உதவியது. முதல் தடவையாக சிபிஐ ஒரு அரசியல் சக்தியாக, காங்கிரசிலும், காங்கிரஸ்-சோசலிஸ்டுகளிடையிலும் மக்கள் இயக்கங்களிலும் கணிசமான செல்வாக்குப் பெற்றது. போட்டித் தொழிற்சங்கங்கள் எல்லாம் அனைத்திந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் (AITUC) என்ற ஒரே தொழிற்சங்க

மாக்கப்பட்டது. இதில் சிபிஐ தலைமைச் சக்தியாயிற்று. அனைத்திந்திய உழவர் சபை (AIKS) அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பு, (AISF) அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (AIPWA) ஆகியன உருவாக்கப்பட்டன. அவற்றை ஒன்றிணைப்பதிலும் அவற்றின் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பங்காற்றினர். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தேசிய ஒற்றுமை, வலதுசாரிகளின் சமரச, போராட்ட எதிர்ப்புக் கொள்கைகளுக்கெதிராக இடதுசாரிகளின் ஒற்றுமை, இடது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காக சோசலிச ஒற்றுமை, சிபிஐ.யே சோசலிச ஒற்றுமையின் அடிப்படை, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டிப் பலப்படுத்துவதற்காக மக்கள் அமைப்புகளும், மக்கள் போராட்டங்களும் – இவையே புதியபாதையின் முழக்கங்களும், உடன்பாட்டுக் கூறுகளுமாகும். இந்தப் பாதை நிச்சயமாகப் பலன் தந்தது. அனைத்திந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வலுப்படுத்த இது உதவியது. கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1934-ல் சுமார் 150ஆக இருந்தது, 1939-ல் 3000க்கும் அதிகமாயிற்று. அதன் செல்வாக்கோ மேலும் விரைவாக வளர்ந்தது. ஆனால் இவ்வாண்டுகள் ஸ்டாலினியத்தின் ஆண்டுகளுமாகும்.

"ஸ்டாலினே நமது 'பேராசான்', 'வழிகாட்டி'; அவரே சோவியத் நாட்டில் சோசலிசம் கட்டுகிறார்; உலக சோசலிசத்தின் தலைவர் அவரே" என எங்களுக்குச் சொல்லப்பட்டது. நான் கம்யூனிசத்துக்குப் புதியவன். மேலும் மார்க்சியம் – லெனினியத்தை அதிகம் கற்றுத் தேராதவன். எனவே எனக்குச் சொல்லப்பட்டதை அப்படியே ஏற்றுக்கொண்டேன். அரசியல்குருமார் பாமரமக்களுக்கு ஞானஒளி புகட்டுவது இந்திய அரசியல்மரபு. இம்மரபுடன் ஸ்டாலினியம் சரியாகப் பொருந்தியது. எனவே கட்சி மூப்பர்கள் சொல்லும் எதனையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் நாங்கள் இருந்தோம். மூப்பர்கள் தமக்குத் தேவையான தகவல்களுக்கு முழுக்கவும் மாஸ்கோவைச் சார்ந்திருந்தார்கள். இதுவே நான் கம்யூனிஸ்டாக வளர்ந்த சூழல். இருப்பினும் மாஸ்கோவிலிருந்து வந்த படுகொலைச் செய்திகள் கேட்டு

மிகவும் கலங்கின தோழர்களும் இருந்தனர். சிபிஐ. யைக் கட்ட உதவுவதற்காக பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்ட கம்யூனிஸ்டுகளில் ஒருவரான பிலிப் ஸ்பிராட் மிகவும் மனமுடைந்தும் ஸ்டாலினியத்தில் நம்பிக்கையற்றும் போனார். இறுதியில் கம்யூனிசத்தையே கைவிட்டுத் தாராளவாத மனிதாபிமானி ஆனார். கடைசிக்காலத்தில் கம்யூனிச எதிர்ப்பாளராகவும் மாறினார். ஆரம்பகாலத்தில் எமக்கு உதவுவதில் மதிப்பரிய பங்காற்றின நல்லதோழர் அவர். மாஸ்கோ 'களையெடுப்புகள்' பற்றி காங்கிரசின் இடதுசாரிகளும் மிக விமர்சனமுகம் காட்டினர். அவர்கள் தலைவர்களில் சிலர் சிபிஐ முன்னணியின் இதழான 'தேசிய முன்னணியின்' பிரச்சாரம் கண்டு மிகவும் வெறுப்படைந்தனர். 'தேசிய முன்னணி' டிராட்ஸ்கியை 'நச்சுப்பாம்பு' என்றும் 'பாசிசத்தின் கைக்கூலி' என்றும் சித்தரித்தது. ரஷ்யப் புரட்சியையும் சோவியத்தின் சாதனைகளையும் பிரபலப்படுத்திய காங்கிரஸ்காரர்களில் ஒருவரான நேருவே, 1938ல் நடந்த களையெடுப்புகள் பற்றி தன் இசைவின்மையை வெளியிட்டார். ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நாங்களோ டிராட்ஸ்கியவாதிகளும் பாசிசமும் ஒன்றே என்றோம். ஸ்டாலினின் களையெடுப்புகளுக்குப் பலியான புகாரின், ஸினோவியவ், ராடக் போன்றோர் சோசலிசத்தின் எதிரிகள் என்றும் ஏகாதிபத்தியத்துக்கும் பாசிசத்துக்கும் சேவை செய்த ஒற்றர்கள், நாசகாரர்கள் என்றும் நானும்தான் நம்பினேன். கட்டற்ற சிந்தனை கொண்ட சோசலிஸ்டுகளுடன் விவாதிக்கும்போது நான் வன்மையாக ஸ்டாலின்பக்கம் வாதாடினேன். இதற்கு முக்கியக் காரணம் நாங்கள் சோவியத் நாட்டுடன் எங்களை முழுமையாக ஒருமைப்படுத்திக் கொண்டதுதான் – எனக் கருதுகிறேன். சோவியத் நாடோ அப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளாலும் காங்கிரசிலிருந்த வலதுசாரிகளாலும் தொடர்ந்து தாக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு வேலை நிறுத்தத்தையும் தூண்டுவது மாஸ்கோவே, ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்துவோர் மாஸ்கோவிடம் சன்மானம் பெறுவோரே என்று அவர்கள் கருதினர். இவர்களுக்கு எதிராகவே நாங்கள் சோவியத் தரப்பை ஆதரித்தோம் – விமர்சன பூர்வமற்றுத்தான்! இடதுசாரிகளால்

சோவியத்நாடு விமர்சிக்கப்பட்டபோது அவர்களையும் நாங்கள் (எதிரிகளிடம் வைத்த) அதே வாதங்களால் எதிர்த்தோம். இன்று திரும்பிப் பார்க்கும்போது, இதெல்லாம், எங்களுக்கு மட்டுமல்ல, கம்யூனிச இயக்கம் முழுமைக்குமே நன்மை பயக்கவில்லை என உணர்கிறேன். டிராட்ஸ்கி பாசிசத்தைக் கடுமையாக எதிர்த்தார். ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் பாசிசப்பொறியில் விழுந்துவிடக் கூடாதென எச்சரித்தார். இதே டிராட்ஸ்கியைத்தான் நாங்களும் எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கானோரும் பாசிஸ்டு என முத்திரை குத்தினோம் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஸ்டாலினியத்தைக் காப்பது ரஷ்யப் புரட்சியைக் காப்பதாகும் என நாங்கள் உண்மையாகவே நம்பினோம். டிராட்ஸ்கி கொலை செய்யப்பட்டபின் கேரளாவில் நான் மலையாளப் பத்திரிகைகளில் ஸ்டாலினை ஆதரித்துக் கட்டுரைகள் எழுதினேன். 'மாபெரும் சதி' என்ற நூலை சில சான்றுகளுக்காக – அல்லது சான்றுகள் என உண்மையிலேயே நான் நம்பியவற்றைத் தொகுப்பதற்காக – பயன்படுத்திக் கொண்டேன். இதெல்லாம் எனக்கு நினைவில் வருகிறது. 30களின் இறுதியில் வெளியான 'சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஎஸ்யு) அதிகார பூர்வ வரலாறு' என்றநூல் எனது ஸ்டாலின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. இந்நூல் மலையாளத்தில் பெயர்க்கப்பட்டு முதன்முதலில் 1941–ல் சட்டவிரோதமாக வெளியாயிற்று. விரைவில் எமது ஊழியர்களுக்கு அது மார்க்சியப் பாட நூலாயிற்று. சிறையில் எங்கள் தோழர்களுக்கு நான் எடுத்த வகுப்புகள் ஸ்டாலினியச் சாயை படிந்திருந்தன. உண்மையில் ஸ்டாலினியத்தையே நாங்கள் மார்க்சியம் – லெனினியம் என நம்பிக் கொண்டிருந்தோம்.

✦ போரைப் பற்றி சிபிஐ முதலில் மேற்கொண்ட நிலைபாடு யாது? எந்தச் சூழ்நிலைகளில் அது மாறியது? உங்கள் முன்னாள் தோழர்களில் ஒருவரான இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) (சிபிஎம்) தலைவர் ஏ.கே. கோபாலன், தன் நூலின் 'போர்க்காலத்தில் சிபிஐ ஒரு மக்கள் கட்சியாயிற்று' என்கிறார். அவர் கருத்து சரியா?

எங்கள் கட்சியின் எதிர்வினை முதலில் போரை எதிர்ப்பதாகவே இருந்தது. 1939-க்கு முன்னரே நாங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை மும்முரப்படுத்துமாறு காங்கிரசை வற்புறுத்தி வந்தோம். போர் துவங்கினவுடனே அதைச் செய்யத் தயங்கினது காங்கிரஸ்தான். 1940-ல் அனைத்திந்தியக் காங்கிரஸ் செயற்குழுவின் அமர்வு பூனாவில் நடந்தது. அதில் காந்தி கொண்டு வந்து நேருவும் ஆதரித்த மூலத்தீர்மானத்துக்கு நான் திருத்தம் கொண்டு வந்தேன் என்பது நினைவிலிருக்கிறது. காந்தியின் பாதையை எதிர்த்து, பிரிட்டிசாருக்கு எதிரான புதிய மக்கள் போராட்டம் ஒன்றைத் துவக்க வேண்டும் என்ற கருத்தை நான் முன்வைத்தேன். இதுவே அப்போது சிபிஐ.யின் நிலைபாடுமாகும். விரைவில் நான் கைது செய்யப்பட்டு போர் முடிவுவரை சிறைவைக்கப்பட்டேன். பெரும்பாலான கம்யூனிஸ்டுகள் 'மக்கள் போர்க்' கொள்கையை (3) அமுல்படுத்துவதற்காக விடுவிக்கப்பட்டபோது, என்னை ஏன் விடுவிக்கவில்லை என்பதை விளக்குவது தேவையாகிறது.

போர் மூண்ட உடனேயும், அதற்கடுத்த ஆண்டிலும் கம்யூனிஸ்டுகள் பெரிய அளவில் கைது செய்யப்பட்டனர். நமது பாதை சரியா தவறா என்ற வாதங்கள் சிறையில் துவங்கின. அப்போது சோவியத்நாடு நாஜிச் சேனைகளால் ஆக்கிரமிக்கப் பட்டது. இந்நிலையில் எமது சர்ச்சைகள் மென்மேலும் சூடாகின. எங்களுடன் சிறையிலிருந்த பேராசிரியர் கே.பி. கிருஷ்ணன், 'மக்கள் போர்'ப் பாதையை வளர்க்குமுகமாய் ஓர் ஆய்வுரைத் தொகுதியை எழுதினார். சோவியத் நாடு நாஜிச்சேனையால் ஆக்கிரமிக்கப்பட்டதும், நிலைமை முழுக்க மாறிவிட்டதென்றும், எனவே கம்யூனிஸ்டுகள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை தமது போர் எதிர்ப்பை மூட்டைகட்டி வைத்துவிட வேண்டுமென்றும் அவர் கருத்து வைத்தார். நான் அதற்கெதிரான ஓர் ஆய்வுரைத் தொகுதியை எழுதினேன்: சோவியத் நாடு வாழவேண்டுவது ஜீவாதாரமான விசயம்தான். ஆனால் ரஷ்யத் தோழர்களுக்கு உதவ மிகச் சிறந்த வழி, ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை விட்டுவிடுவது அல்ல; மாறாக

அதை மேலும் தீவிரப்படுத்துவது தான் சரி என்பது என்வாதம். நமது எதிரி இப்பவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே.

சிறையிலிருந்த கம்யூனிஸ்டுகளில் பெரும்பாலோர் எனது பாதையை ஆதரித்தனர். மிகச் சிறுபான்மையரே 'மக்கள் போர்' ஆய்வுரையை ஆதரித்தனர். சில மாதங்களுக்குப் பிறகு பிரிட்டிஷ் கட்சி தனது பாதையை மாற்றிக் கொண்டதென்றும், மாஸ்கோ அந்த மாற்றத்தை வழிமொழிகிறதென்றும் கேள்விப்பட்டோம். சிறைக்கு வெளியே கட்சிச் செயலர் பி.சி. ஜோஷி 'மக்கள் போர்ப்' பாதையை வன்மையாய் எதிர்த்துக் கொண்டிருந்தவர்களுள் ஒருவர். மேற்படி அறிவிப்பின் பின் அவரும் பாதை மாற வேண்டியதாயிற்று. போர் முயற்சிகளுக்கு உதவுவதன் முக்கியத்துவம் பற்றி கட்சி உறுப்பினர்களும் மக்களும் ஏற்கும்படிச் செய்ய தனது பேச்சுத் திறனைப் பயன்படுத்தத் துவங்கினார். பாதை மாறியதற்குப் பின், போரை ஆதரித்த கம்யூனிஸ்டுகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் நான் உட்பட்ட சிலர் சிறையிலேயே இருத்தப்பட்டோம். யாரை வெளியே விடவேண்டும், யாரை உள்ளே இருத்த வேண்டும் என்பது பிரிட்டிஷ் உளவாளிகளுக்கு நன்கு தெரிந்திருந்தது.

✦ கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடந்த விவாதங்களைப் பொறுத்தவரை சிறைக்கு வெளியிலிருந்ததைவிட சிறையில் அதிக ஜனநாயகசூழல் நிலவினதாகவும், அங்கு கட்சி உறுப்பினர் அனைவரும் தரவேறுபாடின்றி இவ்விவாதங்களில் பங்கேற்றது மாதிரியும் உங்கள் பேச்சிலிருந்து தோன்றுகிறது – சரிதானா?

சரிதான். ஆனால் சிறைக்குள் வைத்து நடந்த விவாதங்களுக்கும் வரம்பிருந்தது. கட்சிப் பாதைக்கு நேரடியாக முரண்படாதவரைதான் விவாதம் நடைபெற்றது. உதாரணமாக, போர் விசயமாக ஒரு சுற்றறிக்கை கட்சித் தலைமையிடமிருந்து சிறையிலிருந்த எமது கட்சிக் குழுவுக்கு வந்து சேர்ந்தது: அதில் போரை ஆதரிக்கும் பாதையைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. உடனே நான் நானாகவே என் நிலைப்பாடுகளை விட்டு விலகிவிட்டேன். பிறர் என்னைப் பரிகசித்தனர்: 'கட்சிக்கு

நீதான் ஆசிரியர் என்ற நினைப்போ? உன் நினைப்பு தப்பு என்றனர். நாங்கள் கம்யூனிஸ்டுகளாகப் பயிற்றுவிக்கப்பட்ட லட்சணத்தை இந்தச் சம்பவம் குறித்துக் காட்டுகிறது. நான் 'சுயவிமர்சனம்' செய்து கொண்டேன். என் நிலைப்பாடு தவறு தான் என ஒத்துக்கொண்டேன். அதற்குக் காரணம் 'அமைப்பு எப்போதுமே தப்புசெய்யாது' என்ற நம்பிக்கைதான் என்றாலும் மனத்துள் சந்தேகங்கள் தொடர்ந்தன. என் நிலைப்பாடு சரிதான் என்பது பிந்தின ஆண்டுகளில் தெளிவாயிற்று. இன்று சிபிஐ, சிபிஎம் தலைவர்கள் "சில தவறுகள் நேர்ந்துவிட்டன" என ஒப்புக் கொண்டுள்ளார்கள். இந்த ஒப்புதல் எவ்வளவோ பேசுகிறது. நிற்க. நான் 'சுயவிமர்சனம்' செய்து கொண்டாலும் பிரிட்டிசார் என்னை விடுவிக்கவில்லை. எனது சுயவிமர்சனம் மிகவும் மேலோட்டமானது என்பது அவர்களின் உளவுக் கண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நான் தொடர்ந்து சிறைவைக்கப்பட ஒரு காரணம். நான் 'மக்கள் போர்ப்' பாதையை எதிர்த்தது ஆகும் என சிறையில் என்னிடம் தரப்பட்ட அதிகாரபூர்வக் குற்றப்பத்திரிகை எழுத்து மூலம் கூறியது! எங்களை விடுவிக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் அநேகதடவை கோரினது என்னவோ உண்மை. ஆனால் ஒன்றும் காரியமாகவில்லை. 1945 அக்டோபர் வரை என்னைப் பிரிட்டிசார் விடுவிக்கவில்லை.

✦ அப்படியானால் 1942 ஆகஸ்டில் காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடுத்தபோது நீங்கள் சிறையில் இருந்திருக்கிறீர்கள். அந்த இயக்கத்தை ஒட்டி சிறைகளில் நிரம்பிய காங்கிரஸ் தொண்டர்களும் தலைவர்களும் சிபிஐ மீது மிகுந்த கசப்பைக் காட்டினார்களா?

'மக்கள் போர்ப்' பாதையின் அனுதாபிகள் ஒரு நிலைப்பாட்டை வளர்த்தெடுத்தார்கள்: 'நீரோட்டத்துக்கு எதிராக நீச்சல்போட்டதன்' விளைவாக சிபிஐக்கு ஏராளமான ஆதவு சேர்ந்துள்ளது என்பது அந்நிலைபாடு. நான் இதனை ஏற்கமாட்டேன். சட்டரீதியாக செயல்படப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கிய உரிமையைக் கட்சி தனக்கு

அனுகூலமாக்கிக் கொண்டு புதுஉறுப்பினர் சேர்க்கவும் தொழிற்சங்க பலத்தைப் பெருக்கவும் முடிந்ததுதான். ஆனால் அதன் நீச்சல், மக்கள் இயக்கம் என்ற நீரோட்டத்துக்கு எதிராக இருந்துவிட்டது என்பதும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாய் அது கருதப்பட்டது என்பதுமே விசயம். இச்சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டுகளாக இருப்பது கவுரவத்துக்குரியதாக ஆயிற்று. பல கம்யூனிஸ்டு இளைஞர்கள் 'சோவியத் நாட்டைக் காப்பதற்காக' பிரிட்டிஷ் சேனையில் சேர்ந்து இத்தாலிக்கும், வடஆப்பிரிக்காவுக்கும் சென்றனர். அவர்களில் சிலர் தமது 'கம்யூனிசச்' சட்டையை விரைவில் உரிந்து எறிந்துவிட்டு போருக்குப் பின்னும் சேனையிலேயே நிரந்தரமாகிவிட்டனர்! 1942 ஜூலையில் சுமார் 4500 பேராயிருந்த கட்சி உறுப்பினர் தொகை 1943மேயில் முதல் கட்சிக்காங்கிரசின் போது – 15,500க்கும் அதிகமாயிற்று. மக்கள் அமைப்புகளின் உறுப்பினர்தொகையும் கூடியது உண்மை. ஆனால் இந்தப் புதுஉறுப்பினர்களில் பெரும்பாலார் எந்தப்புரட்சிகரமான மக்களியக்கத்திலோ போலீஸ் ஒடுக்கு முறையிலோ பட்டுத்தேறாதவர்கள். மாறாக கட்சி நடத்திய 'உணவுப்பயிர் விளைச்சலைப் பெருக்குவோம்', 'உற்பத்தியை அதிகரிப்போம்', 'தேசியத் தலைவர்களை விடுதலைசெய்', 'தேசிய அரசாங்கத்தை அமை', ஒருநாளும் வராத 'ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தாய் நாட்டை விடுவிப்போம்' போன்ற அமைதியான இயக்கங்களையே கண்டவர்கள்! வேலை நிறுத்தம் செய்வதை இந்தக் கட்டத்தில் நாசவேலை என்றனர் – கம்யூனிஸ்டுகள். 1943 வங்காளப் பஞ்சத்தில் சிக்கினவர்களைக் காப்பாற்றும் சமூகநல நடவடிக்கைகளில் கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டனர். பெரியம்மை, வாந்திபேதி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்தனர். உயிரிழப்புக்குப் பயங்கரமாக அஞ்சும் இந்தியாவில் மேற்படி சமூகப்பணிக்கு உரிய ஆதாயம் கிடைத்ததுதான். ஆனால் மக்கள் சந்திக்கிற எல்லாப் பிரச்சினைகளின் மூலகாரணங்களையும் கண்டு வெளிப்படுத்துவதல்லவா நம் அடிப்படைப் பணியாயிருக்க வேண்டும்? அதைத்தான் நாம் செய்யத் தவறினோம்.

மறுபுறம் 1942 - 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்குப் பிறகு காங்கிரஸ் கண்ட வளர்ச்சியும் செல்வாக்கும் எடுப்பானதாயிருந்தது. லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் – குறிப்பாக இளைஞர்கள் – போராட்டத்தால் கவரப்பட்டு தீவிரமானவரானார்கள். இப்போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சியாகக் கருதப்பட்டது. கைதான காங்கிரஸ் தலைவர்களை விடுவிக்கக் கோரியும், 'மக்கள் போரை' நடத்துவதற்காக ஒரு தற்காலிகத் தேசிய அரசாங்கம் அமைப்பதற்காகவும் நாங்கள் இயக்கம் நடத்தினோம் என்பது உண்மைதான். ஆனால் அதேபோது காங்கிரஸ் – சோசலிஸ்டுகளையும் போசின் ஆதரவாளர்களையும், கைதுகளுக்கும் போலீஸ் அராஜகத்துக்கும் அஞ்சாமல் போராட முன் வந்த பிற தீவிரவாதிகளையும் ஐந்தாம் படையினர் என்றும் நாசக்காரர்கள் என்றும் முத்திரை குத்தினதும் – நாம்தான். இந்த மனிதர்களின் வன்முறைகளைக் கண்டிக்குமாறு காந்தியிடமும் பிற காங்கிரஸ் தலைவர்களிடமும் கோரி நின்றோம். தாம் விடுதலையானபின் நேருவும் பிற அகிம்சாவாதிகளும் மேற்படி மனிதர்களைக் கண்டிப்பதற்குப் பதில் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசபக்தர்கள் என அவர்களைப் பாராட்டினர். சுபாஷ்போஸ் ஜெயப்பிரகாஷ் நாராயண், அருணா ஆசாப் அலி போன்றோர் மட்டுமல்ல. அநாமதேயங்களாயிருந்த கர்னல் லெட்சுமி போன்றோர் கூட தேசிய வீரர்களாயும் வீராங்கனைகளாயும் போற்றப்பட்டனர்.

ஒரு தசாப்தத்தில் இரண்டாவது தடவையாக தேசியப் போராட்டமென்னும் பிரதான இயக்கத்திலிருந்து சிபிஐ. தனிமைப்பட்டு விட்டது என்பதே யதார்த்தம். கட்சியின் கொள்கையானது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை முழுமையாகத் தாம்பாளத்தில் வைத்து காங்கிரசுக்கும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கும் தாரை வார்த்து விட்டது என்பதே எனது கருத்தாகும். அந்த சமயத்திலும்கூட சிபிஐ ஒரு சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கடைப்பிடித்திருந்தால், காங்கிரசின் கணிசமானதும், தாக்கமானதுமான பகுதியினரை கம்யூனிசத்துக்கு வென்றெடுத்திருக்கக் கூடிய சாத்தியப்பாடு

நிலவியது. 1936-42 கட்டத்தில் நேருவே தன்னளவில் மிகத் தீவிரமான நிலை எடுத்தார். காங்கிரசுக்குள் அநேக இடதுசாரிப் போக்குகள் (காங்கிரஸ் – சோசலிஸ்டுகள், சுபாஷ் போசின் ஆதரவாளர்கள் போன்றோர்) நிலவின. சிறையிலிருந்து விடுதலையானதும், எமது கூட்டங்களில் 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்கள் ஒழிக' என முழங்கும் வழக்கமுடைய இடது தேசியவாதிகளின் சீற்றத்தைக் கண்டேன். ஆக நீரோட்டம் சரியான திசையில் இருந்த போது அதை எதிர்த்து நீச்சலிட்டவர்கள், உண்மையான சுதந்திரத்துக்கும் சோசலிச மாற்றத்துக்கும் இருந்த வாய்ப்பை மூழ்கடித்து விட்டார்கள். இந்திய முதலாளி வர்க்கம்தன் சூழ்ச்சித்திறத்தால் நம்மை விஞ்சி தாண்டியும் சென்றுவிட்டது.

இந்நிலையில் எங்களுக்கென கொஞ்ச ஆதரவையேனும் தக்க வைத்துக் கொள்ள முடிந்ததென்றால் அதற்குக் காரணம் 1946-47 கட்டத்தில், இரண்டாம் உலகப் போர் முடிந்த உடனேயே தீவிரமான வேலைநிறுத்தப் போராட்டம் வளர்ச்சி பெற்றதும் அதில் நாங்கள் ஈடுபட்டதும்தான். எங்கள் அரசியலோ இப்பவும் பிழையானதாகவே இருந்தது. உதாரணமாக பாகிஸ்தான் தனிநாடாவதை நாங்கள் ஆதரித்தோம். பம்பாயில் 1946-ல் கப்பற்படையினர் துவங்கிய கிளர்ச்சிக்கு ஆதரவு திரட்டியது சிபிஐ தான். ஆனால் அதன் அரசியல்பாதை காங்கிரஸ் – முஸ்லீம்லீக் ஒற்றுமையை ஆதரிப்பதாக இருந்தமை, கப்பற்படையினருடனான உண்மையான ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிப்பதாயிற்று. கப்பற்படைக் கிளர்ச்சி முறியடிக்கப் பட்டதற்கு பிரிட்டிசாரைவிட அதிகமாய் காரணம் காங்கிரஸ்லீக் தலைவர்கள்தான். இடப்பக்கமிருந்து வந்த புது அச்சுறுத்தலை எதிர்கொள்ள இருவரும் தற்காலிகமாக இணைந்து கொண்டார்கள். ரஷ்யப்புரட்சியில் நடைபெற்ற சில சம்பவங்களை ஒத்திருந்த இது அவர்களுக்கு அசௌகரியமானதாயிருந்தது. நான் உட்பட எங்களில் பலர், வர்க்கப் போராட்டங்களைத் தூண்டிவிட்டதற்காக மீண்டும் கைது செய்யப்பட்டோம். சுந்திரத்துக்கு 24 மணி நேரத்துக்கு

முன்பாகத்தான் — அதாவது 1947 ஆகஸ்ட் 13 அன்றுதான் — நாங்கள் விடுவிக்கப்பட்டோம்.

✦ சுதந்திரத்துக்குப் பின்பு சிபிஐ அதி இடதுப் பாதையில் செல்லக் காரணமாயிருந்த அபகீர்த்தி வாய்ந்த 'ரணதிவே ஆய்வுரைகளின்' (4) பின்னணி என்ன?

ஒன்றுக்கொன்று தொடர்புள்ள காரணிகள் பலவற்றையும் நாம் கவனமாக வேறுபடுத்திக் கொள்ளவேண்டும். ரணதிவேயால் வரையப்பெற்றதும் 1948-ல் கல்கத்தாவில் நடந்த 2-ஆம் கட்சிக் காங்கிரசால் ஏற்கப்பட்டதுமான ஆய்வுரைகள் அதிஇடது தன்மையனவே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 50களின் பிற்பகுதியிலோ அல்லது இன்றோ கூட அவற்றைப் பற்றி பல கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி காங்கிரஸ்காரர்களும் செய்கின்ற விமர்சனங்கள், அவை சீர்திருத்தவாத வட்டத்துக்குள்ளிருந்து செய்யப்படுவதால், பொருளற்றதும் போலியானவையுமாய் உள்ளன.

ஆட்சியதிகாரம் கைமாறியதும் நாட்டின் பலபகுதிகளில் எதிர்பார்க்கப்பட்ட போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களுக்கு ஒரு இரட்டைத்தன்மை இருந்தது. அவை காங்கிரசுக்கு ஆட்சியதிகாரம் மாற்றப்பட்டதைக் கொண்டாடின. அதே சமயம் காங்கிரஸ் தன் முற்போக்கான வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் எதிர்பார்த்தன. (1937-ல் பிரிட்டிசார் இந்தியாவில் இருந்த வேளையிலும் மாகாண அரசாங்கங்களுக்குக் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கப் படுகையிலும் போராட்டங்கள் வெடித்தன). இப்போராட்டங்கள் நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால், முதலாளிய அரசியலரங்குக்குள் பெறப்படும் முக்கியமான வெற்றிகளுக்கும் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியிலான மக்களியக்கத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு என்பதைத்தான். தெலிங்கானாவிலும் (ஐதராபாத்) போராட்டம் நடந்தது. இது சுதந்திரத்துக்கு முன்பே துவங்கியிருந்தது. ஐதராபாத் நிசாமுக்கும் அவனது நிர்வாகத்துக்கும் ஐதராபாத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலிருந்த அவன் ஆதரவுபெற்ற நிலக் கிழார்களுக்கும்

எதிராக அப்போராட்டம் தொடுக்கப்பட்டிருந்தது. இங்கும் இந்தியச் சேனையின் தலையீடு, நிலைமையை மாற்றிவிட்டது. நிசாமை அகற்றிவிட்ட அதேபோது இடதுகளின் வளர்ச்சியையும் அது தடுத்துவிட்டது.

சுதந்திரத்துக்குப் பிந்திய எழுச்சியில், தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொழிற்சங்க உரிமைகள் மற்றும் பிற உரிமைகளைக் கூடுதலாய்ப் பெறவும் நிலக்கிழமையை ஒழிப்பதற்காகவும் பல இடதுசாரி காங்கிரஸ் ஆதரவாளர்களும் இப்போராட்டங்களில் கலந்து கொண்டனர். காங்கிரசைக் கூடக் கொஞ்சம் இடதுபுறம் தள்ளிவிடும் நோக்கமே அவர்களுடையது. முந்தின ஆண்டுகளில் இந்திய நிலைமைகளைப் பற்றிய ஆய்வின் அடிப்படையில் ஒரு சரியான போர்த்தந்திரத்தை உருவாக்கியிருந்தால், இந்தப் போராட்டங்களில் சிபிஐ தலைமைப் பாத்திரம் வகித்திருக்கமுடியும். அப்படி நேர்ந்திருந்தால் ரணதிவே ஆய்வுரைகள் அந்த நேரத்தில் பொருத்தமற்றதாகப் போயிருக்கும் அதேவேளையில், பெரிய அளவில் எதிரொலிகளையும் தோற்றுவித்திருக்கும். எப்படியும், 1948 கட்சிக் காங்கிரசின் அதிஇடதுவாதம் பேரழிவு பயப்பதாகவே ஆயிற்று. நேருவின் அரசாங்கத்தைத் தூக்கியெறிய மக்கள் தயாராயிருக்கவில்லை. மாறாக மக்களிற் பெரும்பாலோர் அதைத் தங்களது அரசாங்கமாகவே கண்டனர். இந்நிலையில் சிபிஐ முன்வைத்த 'பெற்ற சுதந்திரம் போலிச் சுதந்திரம்' என்ற முழக்கம், கட்சியைத் தொடர்ந்து தனிமைப்படுத்துவதற்கே உதவியது. இந்த முழக்கத்துடன் சேர்த்துத் தொடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டம், துணைக்கண்டம் முழுவதிலும் பல ஊழியர்களின் சாவுக்கும் கைதுகளுக்கும் சித்திரவதைக்குமே வழிகோலியது. நேருவின் அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் தரகு – அடிமை அரசாங்கமாகும் என்ற ஆய்வுமுடிவு மற்றொரு தவறாகும். ஏனெனில் அதன் பொருள், காலனிய பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காலனியத்துக்குப் பிந்திய நேருவின் அரசாங்கத்துக்கும் வேறுபாடில்லை என்றாகும். இந்திய ஆளும் வர்க்கம்

உண்மையில் ஒருபோதும் தரகுவர்க்கமாய் இருந்ததில்லை என்பதை இன்று மார்க்சியர்கள் பொதுவாக ஒப்புக் கொள்கிறார்கள். காலனிய ஆட்சிக் காலத்திலேயே ஒப்பளவில் சுயேச்சை பெற்றிருந்த அவ்வர்க்கம், சுதந்திரத்திற்குப் பின்பு போய் தரகுவர்க்கமாகிவிட்டது என்பது ஒரு தவறான போர்த் தந்திரப் பாதையைத் தாங்கிப் பிடிப்பதாகும். அவ்வகையில் அது அதி இடதுவாதமாகும். அது மட்டுமல்ல, இந்தியக் கம்யூனிசத்தின் கோட்பாட்டு வறுமையையும் அது வெளிப்படுத்துகிறது. அக்கால கட்டத்தில் கட்சி வைத்திருந்த பல தவறான கருத்தோட்டங்களையும், 60களின் பிற்பகுதியில் மீண்டும் நக்சல்பாரியிலும் இந்தியாவின் பிறபகுதிகளிலுமிருந்த மாவோயிசப் புரட்சிக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். இதன் விளைவுகள் எவ்வளவு பேரழிவு பயத்தன என்பதை நாமறிவோம். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் சித்திரவதைக்கப்பட்டனர் என்பதுடன் இயக்கம் தொடர்ந்த பின்னடைவுகளைச் சந்தித்தது. ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளை இந்திய ஆளும் வர்க்கம் சிறைவைத்திருக்கும் வடிவில் இன்றும் அதன் நிழல் தொடர்கிறது. இதிலுள்ள பரிதாபநிலை என்னவென்றால் இந்தக் கைதிகளுக்கு எவ்வித பொதுமக்கள் ஆதரவும் இல்லாதிருப்பதுதான்.

1948-க்குத் திரும்புவோம்: நான் உட்பட ஏராளமான கம்யூனிஸ்டுகள் மீண்டும் கைதானோம். சிறையில் ரணதிவே ஆய்வுரைகள் பற்றி பல விவாதங்கள் துவங்கின. புதிய பாதை பற்றி மிகுந்த அதிருப்தி காணப்பட்டது. தொழிற்சங்கத் தோழர்கள் மென்மேலும் கட்சித் தலைமையிடம் முரண்பட்டு வந்தார்கள். கட்சித் தலைமை தேசிய ரயில் வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது. வேலை நிறுத்தம் படுதோல்வியடைந்தது.. ரயில் தொழிலாளர் சங்கத்தில் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் யார் யார் என்பதைக் காட்டிக் கொடுப்பதில் தான் அது வெற்றிபெற்றது. பலர் கைதாகினர். "தொழிற்சங்கத் தலைவர்கள் புரட்டல்வாதிகள், சீர்திருத்தவாதிகள்; எனவேதான் ரயில் வேலைநிறுத்தம் வெற்றி பெறவில்லை" என கட்சித்தலைவர்கள் கூறினர்.

ஆனால் இந்த விவாதமும் விரைவில் ஒரு குறிப்பிட்ட பாணிக்கு மாறியது. இந்தியாவின் யதார்த்த நிலைமைகள் பற்றி ஆய்வு முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. மாறாக பின் கண்டபாணியில் 'விவாதம்' நடந்தது: "ஸ்டாலின் என்ன சொல்கிறார் என்றால்..."; அதற்கு எதிர்த் தரப்பினரின் பிரதிவாதம்: "ஆனால் மாவோ சொல்வது என்ன என்றால்...". ஆக விவாதம் பெரிதும் பலனற்றதாகப் போனது. அவ்வாறே இந்த விவாதங்களில் பெறப்பட்ட முடிவைக் கட்சி முழுவதும் விவாதிக்க அனுமதிப்பதோ அதன் பயனாய்க் கிடைக்கும் ஆலோசனைகளைக் கொண்டு கட்சிக் காங்கிரஸ் ஒரு முடிவு எடுப்பதோ, நடைபெறவில்லை. மாறாக தன் ஸ்டாலினிய மரபு கெடாமல் கட்சித் தலைமை மாஸ்கோவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பிவைக்கத் தீர்மானித்தது – ஸ்டாலினைச் சந்திக்க. இந்த பிரத்தியேகத் தகுதிக்கு உரியவராய் நான்கு தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்: அஜாய்கோஷ், ராஜேஸ்வரராவ், எஸ்.ஏ.டாங்கே, பசவ புன்னையா ஆகியோர் அவர்கள். ரணதிவே பின்னுக்குத் தள்ளப்பட்டார். போனவர்கள் ஒரு புதுநடைமுறைத் தந்திரத்துடனும் நகல் திட்டத்துடனும் திரும்பினர். 1951 அக்டோபரில் கல்கத்தாவில் கூடிய கட்சியின் சிறப்பு மாநாடு அவற்றை ஏற்றுக்கொண்டது.

ஸ்டாலின், மாலடவ், சுஸ்லோவ் ஆகியோரின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் வடிவமைக்கப்பட்ட புதிய பாதையாவது:– "காங்கிரஸ் அரசாங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியரின் சம்மதத்துடன் நிறுவப்பட்டதாகும். இந்தியாவில் இன்னும் காலனிய அமைப்பு நிலவுகிறது. ஏகாதிபத்தியவாதிகள் தம் ஆட்சியை இப்போது காங்கிரஸ் அரசாங்கமென்ற போர்வைக்குள் மறைத்துள்ளார்கள். காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்கு முழுக்கவும் அடிமைப்பட்டதாகும். எனவே கம்யூனிஸ்ட் கட்சியின் உடனடிக்கடமை, இந்திய அரசைத் தூக்கி எறிவதும் அதனிடத்தில் ஒரு மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவதும்தான்". ஆக அதிகாரம் கைமாற்றப்பட்டு நான்காண்டுகள் கழிந்தபின் ஸ்டாலினும் சோவியத் நாட்டின் பிற தலைவர்களும் இந்தியாவை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்பட்ட ஒரு காலனிய நாடு எனக் கருதினர். புதிய பாதையைக் கட்சி

மாநாடு ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை. அதிலும் 'மாபெரும் மார்க்சிய லெனினியவாதி'யும், உலகப் புரட்சியின் தலைவருமாகியவரே அப்பாதைக்கு ஆசி வழங்கியிருக்கிறாரே! குறைந்தது 1956 வரை நம் தோழர்கள் பெரும்பாலோரின் சிந்தனைப் போக்கு இப்படித்தானிருந்தது. நானுமே கொஞ்சகாலம் இந்த அபத்தப் பார்வையையே கொண்டிருந்தேன். ஆனால் விரைவில் சந்தேகங்கள் எழுந்தன. இந்தியா அரசியல் ரீதியில் சுதந்திரமானது என வாதிடத் துவங்கினேன்.

இருப்பினும் நடைமுறையில் ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது. 1951ல் புதிய திட்டத்தைத் தழுவின கையோடு, சமீபித்து வந்த பொதுத் தேர்தலிலும் கலந்து கொள்வதெனக் கட்சி முடிவெடுத்தது. இம்முடிவு தன்னளவில் சரியே ஆயினும் தேர்தலுக்குப் பின் கட்சி மேற்கொண்ட கொள்கைகள், கட்சிக்கு நேர்ந்திருந்த மாற்றத்தை மிகத்தெளிவாகக் குறித்துக்காட்டின: அதிஇடது வாதத்திலிருந்து கட்சி பாராளுமன்றக் குறுகல் வாதத்துக்குப் பயணப்பட்டிருந்தது. தேர்தல் அறிக்கையும் 1951ன் புதிய திட்டமும், இந்தியா இன்னும் பிற்பட்ட காலனிய நாடாயிருப்பதால் 'சோசலிசம் கட்சியின் உடனடி இலட்சியமல்ல' என்று அறிவித்தன. "ஜனநாயக விரோத, மக்கள் விரோத நேருவின் அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக அரசாங்கத்தை அமைப்பதே உடனடிக் கடமை. இதற்காக அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலக்கிழமை எதிர்ப்புக் கட்சிகளுடனும் சக்திகளுடனும் கூட்டணி அமைப்பது வேண்டும்". **வர்க்கம்** என்பதற்குப் பதில் **கட்சி** என்ற சொல்லும் அரசு (State) என்பதற்குப் பதில் அரசாங்கம் (government) என்ற சொல்லும் ஆளப்பட்டுள்ளது காண்க. இது சொல்மாற்றம் மட்டுமல்ல. 1948-51லிருந்து கட்சி தன் லட்சியம் மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவதே என்றும், இவ்வரசே பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் அடிப்படையாயிருக்கும் என்றும் கூறிவந்தது. மக்கள் ஜனநாயகம் என்ற புதிய வாய்ப்பாட்டிலும், அதிலுள்ள தெளிவற்ற பகுதிகள், மழுப்பல்கள் ஆகியவற்றைத் தூர வீசிவிட்டுப் பார்த்தால்

'இலட்சியம்' தெளிவாகிறது. மதுரையில் கூடிய மூன்றாம் கட்சிக் காங்கிரஸ், "கட்சியின் மையக்கடமை, காங்கிரஸ் அரசாங்கத்தை இறக்கி ஜனநாயக ஒற்றுமை கொண்ட 'மக்கள் அரசாங்கத்தை' அமைப்பதற்காகப் போராடுவதே ஆகும்" என்பதை வலியுறுத்தியது. இங்கு 'மக்கள் ஜனநாயகம்' எனப்படுவது 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' அல்ல என்பது வெளிப்படை. 'மக்கள் ஜனநாயகம்' என்பது சிபிஐ.யும் காங்கிரஸ் எதிர்ப்பு 'ஜனநாயகக்' கட்சிகளும் கொள்ளும் கூட்டணியிலிருந்து பிறப்பது. பாராளுமன்றப் பெரும்பான்மையை எய்துவதும் அரசாங்கங்களை அமைப்பதற்குப் போதிய கூட்டாளிகளைப் பொறுக்குவதும்தான் கட்சியின் லட்சியம். வெவ்வேறு வடிவில் இதுவே சிபிஐ, சிபிஎம் இரண்டின் கொள்கையாகவும் இருந்து வருகிறது.

✦ சிபிஐ குறுங்குழுவாகத் தவறுகள் கொண்டதாயிருந்தும் கூட 1951 பொதுத் தேர்வில் அக்கட்சி வெற்றி பெற்றது எப்படி என்பதை விளக்குவீர்களா? அடக்கு முறையை அனுபவித்திருந்த கட்சி அது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளிடமிருந்து தனிமைப்பட்டிருந்தது. தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென முடிவு செய்ததும் கடைசி நேரத்தில்தான். ஆயினும் அம்முடிவு சரியானதானது எப்படி?

தேர்தல் முடிவுகளைப் பார்த்து நாங்கள் எல்லோரும் வியப்படைந்தோம். பாராளுமன்றத்தில் சுமார் 26,27 இடங்களைப் பிடித்தோம். காங்கிரசுக்கு அடுத்த மிகப்பெரும் கட்சியாகவும் அரசாங்கத்துக்கு மிகப்பெரும் எதிர்ப்பு மையமாகவும் ஆனோம். சில இடங்களில் எங்கள் வேட்பாளர்கள் நேருவைவிட அதிகவாக்குகள் பெற்றனர். சமீபத்தில்தான் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த அல்லது சிறையிலிருந்த அநேகத் தோழர்கள் ஒரேநாளில் பாராளுமன்றம் அல்லது தற்காலிக சட்டமன்றங்களின் உறுப்பினர்கள் ஆனார்கள். இவ்வெற்றிக்கு முதன்மையான காரணம் என்ன? நமக்கு வாக்களித்த மக்கள் நமது குறுங்குழுவாதப் பாதை சரியானதென நினைத்தார்கள் என்பது அல்ல. கட்சி ஊழியர்கள் மக்களியக்கத்தில்

ஊறியிருந்தார்கள் என்பதே முதன்மையான காரணமாகும். அவ்வூழியர்கள் தொழிற்சங்கங்களிலும் உழவர் சங்கங்களிலும் பணியாற்றினார்கள். அவர்களில் பலர் தம் நேர்மைக்காகவும் துணிச்சலுக்காகவும் மெச்சப்பட்டார்கள். ஆகவே 1951 தேர்தலில் சிபிஐ.க்குக் கிடைத்த வாக்குகள் நேரடியான வர்க்க வாக்குகளாகும். அன்றைய சூழலில் நிலவிய உள்ளுறை ஆற்றல்களை அது குறித்தது. இவ்வாற்றல்கள் வெளிக்கொணரப்படவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன் – பாராளுமன்றத்தில் கட்சியின் பிரதிநிதித்துவம் 1951-ல் இருந்த அளவிலேதான் ஏறக்குறைய இன்றும் உள்ளது. எப்படி?

✦ பாராளுமன்றவாதத்தை நோக்கிய திருப்பம் ஏற்பட்டபின், பாராளுமன்றத்துக்குப் புறம்பாக எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது பற்றி கட்சிக்குள் விவாதம் ஏதும் நடந்ததா? மக்கள் போராட்டங்களிலிருந்து கட்சி உறுப்பினர்கள் முற்றாக விலகிக் கொள்வது அறவே இயலாத காரியமல்லவா?

ஆம். கட்சிக் குழுக்களில் விவாதங்கள் நடந்தன. கொரியப் போருக்குப் பின் சோவியத்நாடு 'முதலாளிய அரசுகளுடன் சமாதானமும் ஒத்துழைப்பும்' என்ற கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்கத் துவங்கியது. இதைப் பின்னர் குருச்சேவ் 'சமாதான சகவாழ்வு' எனக் கோட்பாடாக்கினார். சோவியத் நாடும் சீன மக்கள் குடியரசும் இந்திய அரசாங்கத்தை அதன் 'முற்போக்குக்' கொள்கைகளுக்காகவும் குறிப்பாக அணிசேரா அடிப்படையிலான அதன் வெளிநாட்டுக் கொள்கைகளுக்காகவும் புகழத் துவங்கின. குருச்சேவும் சூ என் லாயும் இந்தியாவுக்கு வந்தபோது அவர்களுக்குப் பெருங்கூட்டம் வந்தது. 'பாண்டுங் உணர்வின்' (5) சிற்பிகளில் ஒருவரானார் நேரு. இந்தப் பின்னணியில்தான் எங்கள் கட்சிக்குள் விவாதம் தொடர்ந்தது. இந்தியா உண்மையாகவே சுதந்திரநாடா? அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடா? அரசியலரங்கில் யாருடன் நாங்கள் நட்புக்கொள்வது? சிபிஐ.யின் மலபார் மாகாணக் குழுவில் நாங்கள் விவாதங்கள் நடத்தியது எனது நினைவில் இருக்கிறது. அக்குழுவுக்கு நான்

செயலராயிருந்தேன். கட்சிக் காங்கிரஸ் கூடுவதற்கு முன் மலபாரில் கூட்டப்பட்ட மாநாட்டில் நடந்த விவாதத்திலும் நான் பங்கேற்றேன். சிலர் காங்கிரஸ் – கம்யூனிஸ்ட் கூட்டணி அரசாங்கத்தை விரும்பினர். பிறர் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணிக்குச் சார்பாக வாதிட்டனர். காங்கிரஸ் தலைமையின் கீழிருந்த இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசை (ஐஎன்டியுசி) அவர்கள் கடுமையாகத் தாக்கினர். இருசாராருமே பிரச்சினையை தேர்தலில் வெற்றி பெறும் பிரச்சினையாகப் பார்த்தனர். ஒடுக்குமுறையாளர்களுக் கெதிராகப் போராடுவதற்காக மக்களை வர்க்கரீதியில் ஒன்று திரட்ட முயல்வதுவே, தேர்தல் ரீதியாகக் காங்கிரசைப் பலவீனப்படுத்துவதுமாகும் என்பதை இத்தோழர்கள் உணரவில்லை. எனவே இருபாதையினரிடமிருந்தும் நான் மாறுபட்டேன். அப்போதைய எனது நிலைபாடு என்னவென்றால், முதல்வேலையாக சிபிஐ இனிவரும் போராட்டங்களுக்கு ஒரு மக்கள் பாதையை முன்வைக்க வேண்டும் என்பதாகும். இந்தப் போராட்டத்தை கட்சிகளுக்கிடையிலானதாக அன்றி வர்க்கங்களுக் கிடையிலானதாகவே கருதவேண்டும். ஆயின் ஏஐடியுசி, ஐஎன்டியுசி மற்றும் பிற தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை முதலாளிகளுக்கெதிராக ஒன்றுபடுத்த நாம் முனைதல் வேண்டும். இதன்மூலம் போருக்குப் பிந்திய உடனடிக் காலகட்டத்தில் (கட்சிகளாக) பிளவுபட்டிருந்த தொழிலாளிவர்க்கத்தையும் பிற மக்கள் அமைப்புகளையும் நாம் ஒன்றுபபடுத்த முடியும். வர்க்க ஒற்றுமை என்பதன் அடிப்படையில் மக்களின் முற்போக்குப் பிரிவினர் அனைவரையும் ஒன்றுபடுத்த நாம் பாடுபடவேண்டும் (இவர்களில் காங்கிரஸ் ஆதரவாளர்களும் இருக்கலாம்). இதன் மூலமே நிலச்சீர்திருத்தம். தொழிலாளர் உரிமைகள், ஜனநாயக உரிமைகள், உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கை போன்றவற்றைச் செயல்படுத்த முடியும். இந்தப் போராட்டங்கள் மூலமே மக்களை முதலாளியத் தாக்கத்திலிருந்து விடுவித்து தொழிலாளிவர்க்க மேலாண்மையை உருவாக்க முடியும் என்பது எனது வாதம்.

இந்த அடிப்படையில் நான் கொண்டுவந்த அரசியல் தீர்மானம் மலபார் கட்சி மாநாட்டில் பெரும்பான்மை ஆதரவுடன் ஏற்கப்பட்டது.

கட்சியின் நாலாம் காங்கிரஸ் 1956ல் பாலக்காட்டில் நடத்தப்பட்டது. பெரும்பான்மை உறுப்பினர்கள் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணியையே வலியுறுத்தினர். இந்திய முதலாளி வர்க்கம் பிரிட்டிஷ் நிதி மூலதனத்திற்குக் கீழ்ப்பட்டுள்ளது என்ற அவர்களின் கொள்கைக்கு இது இசைவானதே. பி.சி. ஜோஷி, பவானி சென், நான், இன்ன சிலர் ஒரு மாற்றுத் தீர்மானத்தை விநியோகித்தோம். எங்கள் சார்பில் ஜோஷி அதை முன்வைத்தார். காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்பட்டதல்ல. அவ்வப்போது அதனுடன் சமரசங்கள் செய்து கொள்கிறது – அவ்வளவே. காங்கிரஸ் அரசாங்கம் இந்திய முதலாளிவர்க்கத்தின் நலன்களுக்கே பிரதானமாய் சேவை செய்கிறது – மக்களுக்கல்ல. நம் மக்களை வாட்டும் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் நாட்டின் முதலாளியத் தலைமையே. எனவே முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்யும் பாட்டாளிவர்க்கத் தலைமையை நிறுவுவதிலேயே உண்மையான நிவாரணம் உள்ளது' என்று எங்கள் தீர்மானம் கூறியது. ஏஐடியுசி, ஐஎன்டியுசி, எச்எம்எஸ், யுடியுசி போன்ற பல்வேறு தொழிற்சங்கங்களையும் ஒன்றுபட்ட தொழிற்சங்க மையமாக இணையவருமாறு அது அறைகூவியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை மக்கள் நலன்களுக்கும் நாட்டின் உண்மையான நலன்களுக்கும் ஏற்றதாக உருவாக்கப் போராடுவதற்கு ஒன்றுபடுமாறு மக்கள் அமைப்புகளை அது அழைத்தது. வலுவான மக்களியக்கமாக ஐக்கியதேசிய ஜனநாயக முன்னணியை நிறுவி, ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் எச்சங்கள், வலதுசாரி பிற்போக்காளர்களின் அரசியல் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்கள் மூலமாக பாட்டாளிவர்க்க மேலாண்மையை நிறுவ அத்தகைய ஐக்கிய ஜனநாயக முன்னணியே வழி என நாங்கள் கருதினோம். எங்கள் தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது. கால்வாசிப் பிரதிநிதிகள் எங்களை ஆதரித்தனர். நாங்கள் முன்வைத்த சில திருத்தங்கள் அதிகாரபூர்வ

தீர்மானத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. பிற்பாடு தீர்மானம் வெவ்வேறு வழிகளில் வியாக்கியானம் செய்யப்பட இடமேற்பட்டதே அத்திருத்தங்களைச் சேர்த்துக் கொண்டதால் கிடைத்த பலன்.

✦ சிபிஐ.யின் காங்கிரசின் மீது சிபிஎஸ்யு.வின் 20ஆம் கட்சிக் காங்கிரஸ் செலுத்திய நேரடித்தாக்கம் யாது? இப்பிரச்சினை விவாதத்துக்கு எடுக்கப்பட்டதா?

நிச்சயமாக சோவியத் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஒரு தீர்மானம் கட்சிக் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டது. குருச்சேவின் பேச்சின் பொதுப் போக்கை அது ஏற்றுக் கொண்டது. ஆனால் அவர் எழுப்பிய பிரச்சினைகள் பற்றி மேலுமான விவாதம் வேண்டுமெனக் கோரப்பட்டது. ஆனால் கட்சிக் காங்கிரசிலோ பிறகோ இது பற்றி ஒரு உருப்படியான விவாதமும் நடத்தப்படவில்லை. தொடர்ந்த விவாதம் கோரப்பட்டதன் காரணம், ஸ்டாலின் மீதான தாக்குதல் சரி என்பதை பெரும்பாலான தோழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நானுமே 1956க்குப்பின் பல பிரச்சினைகள் குறித்துத் தீவிரமாகப் புதிதாய்ச் சிந்திக்கலானேன். ஸ்டாலினைத் தாக்குவதால் குருச்சேவை ஆதரிக்க விரும்பினேன். அதேபோது அந்த நிமிசம்வரை நான் ஒரு வைராக்கியமான ஸ்டாலினிஸ்டாகவே இருந்து வந்தேன். 20ஆம் கட்சிக் காங்கிரஸ் நடந்தபின் 2, 3 நாட்கள் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. வழிபாட்டுக்குரியவர் என கற்பிக்கப்பட்டிருந்த ஒருவர், எமது உலக இயக்கத்தின் வழிபாட்டு விக்கிரகமாயிருந்தவர், அவரது பழைய தோழர்களாலேயே தாக்கப்படுகிறார்! குருச்சேவின் ரகசிய அறிக்கையைப் படித்த பின்னரும் நான் அதிர்ந்துபோன நிலையிலேயே இருந்தேன். கொஞ்சகாலத்துக்கு அதை என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் மீண்டும் வாசித்து நிதானித்தபோது குருச்சேவின் கருத்து சரி என்ற முடிவுக்கு வந்தேன். ஸ்டாலினின் ஆதரவாளர்களுக்கெதிராக குருச்சேவை ஆதரித்தேன். ஸ்டாலினைத் தாக்கியதால் மட்டும்தான் குருச்சேவைப் பல தோழர்களும் புரட்டல்வாதி என்றனர். ஏனெனில் மற்றபடி அவரது ஆய்வுரைகள்

ஸ்டாலினின் நடைமுறைக்கு அதிகம் மாறுபட்டனவாயில்லை.

1956 கட்சிக் காங்கிரசில் கட்சியின் உயரங்கமாகிய தேசியக் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கு முன் நான் முழுக்க மாகாண அளவிலேயே வேலை செய்து வந்திருந்தேன்: கேரளாவில் கட்சி கட்டுவதிலேயே முழுக்கவனம் செலுத்தி வந்திருந்தேன்.

✦ உங்கள் கட்சியின் நாலாம் காங்கிரஸ் நடந்த பின் சீக்கிரமே கேரளாவில் நடந்த மாகாணத் தேர்தலில் சிபிஐ மகத்தான வெற்றி பெற்றது. சட்டசபையில் மிகப்பெரும் கட்சியாக உதயமாகியது. இந்தியாவின் முதன்முதலான கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை ஈஎம்எஸ் நம்பூதிபாடு அமைத்தார். மாகாணத்தில் கட்சிக்கு மக்களாதரவு இருந்ததை தேர்தல் முடிவு தெளிவாகக் காட்டியது. அப்போது தூக்கலாய்த் தெரிந்த கெடுபிடிப் போர்ச் (6) சித்தாந்தத்துக்குப் பலத்தஅடி கொடுத்தது. மக்களியக்கத்திலும் சரி சிபிஐ.யின் வருங்கால வளர்ச்சியிலும் சரி இந்த வெற்றி ஏற்படுத்திய நிஜமான பாதிப்புகள் என்ன என்பதாக நீங்கள் கருதுகிறீர்கள்?

கம்யூனிஸ்டு அரசாங்கம் அமைக்கப்பட்டவுடனேயே கேரளக் கட்சிக் காங்கிரசின் தலைமையில் புதிய அரசாங்கத்தின் தன்மை பற்றி சூடான விவாதம் நடந்தது. நம்பூதிரிபாடு உட்பட்ட மத்தியத் தலைவர்கள் கொண்டிருந்த ஆதிக்கமான நிலைபாடாவது – "கேரளாவில் தொழிலாளிகள் தேர்தல்களில் பெரும்பான்மையை வென்றதன் மூலம் அமைதியான முறையில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி விட்டார்கள். சமாதான வழியில் சோசலிசத்துக்கு மாறமுடியும் என்பதற்கு கேரளம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும். உலகிலேயே இப்படி நடந்தது இதுதான் முதல்தடவை. எனவே உலகமுழுவதன் தோழர்களுக்கும் வருங்காலத்தில் செயல்பட கேரளா புதுவழி காட்டியிருக்கிறது" என்பதாகும். ஆரம்பத்தில் தலைமையின் பார்வை இதுவே.

இந்தப் பார்வைக்கு நான் உட்படவில்லை. வெற்றி பெற்றது கம்யூனிஸ்டுகள் என்றாலும், அரசு, முதலாளிய அரசாகவே உள்ளது; இதற்கு மாறான பிரமைகளைப் பரப்புதல் தவறாகும் என நான் வாதாடினேன். சிறுபான்மைத் தோழர்கள் என்னை ஆதரித்தனர். கட்சிச் செயலரான அஜாய்கோஷ் கேரளத் தலைமையுடன் விவாதித்து பிரச்சினையைத் தீர்த்து வைக்க டெல்லியிலிருந்து கேரளாவுக்கு அனுப்பப்பட்டார். இரண்டு பார்வைகளும் அவர் முன் வைக்கப்பட்டன. சிறுபான்மைக் கருத்தை நான் முன்வைத்தேன்: நாம் ஒரு மாகாணத்தில் அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுள்ளோம். ஆனால் மாகாண அளவிலும் தேசஅளவிலும் அரசானது முதலாளிய அரசாகவே உள்ளது. கட்சியையும் மக்களியக்கத்தையும் வலுப்படுத்துவதற்கு இப்போதைய சூழ்நிலையை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே நம்மை எதிர்ப்பட்டுள்ள முதன்மையான பிரச்சினை ஆகும். சுருங்கச் சொன்னால் இப்போது ஆட்சிக்கு வந்துள்ளது தொழிலாளி வர்க்கம் அல்ல என்றேன். பெரும்பாலோர் கருத்தை ஈஎம்எஸ் முன்வைத்தார். அவர் முடித்ததும் அஜாய்கோஷ் என்னை நோக்கி விரல் நீட்டி "அப்படியானால் ஈஎம்எஸ் நம்பூதிரிபாடை பூர்சுவா என்கிறீரா? அவர் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதி அல்ல என்கிறீரா?" என்றெல்லாம் கேட்டார். எனது கருத்தை அதுவல்ல என்பது கூறாமலே விளங்கும். அரசு, முதலாளிய அரசா இல்லையா என்பதே பிரச்சினை. நம்பூதிரிபாடு ஒரு மாகாண அரசாங்கத்தின் முதலமைச்சர் – அவ்வளவுதான். கோஷ் பெரும்பான்மையை ஆதரித்தார் – முடிந்தது. என் கருத்து என்னோடு இருந்தது. கோஷ் தீர்ப்புக் கூறியபின் எதிர்ப்புக்கு இடமேது? கேரள அரசாங்கம் பதவி இறக்கப்பட்ட பின்தான் நம்பூதிரிபாடு "அரசு தொழிலாளர் அரசாக இருக்கவில்லை" என 'கம்யூனிஸ்ட்' ஏட்டில் கட்டுரை எழுதினார். (அப்போது சிபிஐ.யின் கேரளக் கிளையின் தத்துவார்த்தப் பத்திரிக்கையாக 'கம்யூனிஸ்ட்' இருந்தது). இந்த ஞானம் முன்னமே அவருக்கு வந்திருந்தால் நிலைமை முற்றிலும் வேறு மாதிரி ஆகியிருக்கக்கூடும். மக்கள்

போராட்டங்களுக்கே முன்னிலை அளித்திருக்க முடியும். கட்சி ஆட்சியதிகாரத்துக்கு வரக் காரணமானதாயிருந்தது பாராளுமன்றத்துக்குப் புறம்பான மக்கள் போராட்டம் தானே? ஆனால் கேரள சம்பவம் சிபிஐ தலைவர்கள் மனதில் தேர்தல் மூலம் ஆட்சிக்கட்டில் ஏறி மந்திரிசபைகள் அமைக்கும் தணியாத ஆசையை வளர்த்துவிட்டது. முன்பு சிபிஐ.யாக இருந்த இன்றைய இருகட்சிகளிடமும் நாம் இத்தன்மையைப் பார்க்கமுடியும். கொள்கை அடிப்படையிலன்றி அரசாங்கப் பதவிபெறும் நோக்கத்துடனேயே கூட்டணிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

மக்கள்மேல் இவ்வெற்றி ஏற்படுத்திய பாதிப்பு பிரமாண்டமானதாயிருந்தது. வெற்றி கிடைத்ததுமே தொழிலாளிகளும் ஏழை உழவர்களும் களிப்பால் துள்ளினர். புதிய அரசாங்கம் தமது கோரிக்கைகளைப் பூர்த்திசெய்யும் என மிகவும் ஆழமாக நம்பினர். தொழிலாளி வர்க்கத்தினிடையில் மகத்தான பெருமித உணர்வும், தான் ஒரு பலசாலி வர்க்கம் என்ற உணர்வும் ததும்பியது. எளிய பாமரத் தொழிலாளிகள் வீதிகளில் போலீஸ்காரர்களிடம் ‘இப்போ நீங்கள் எம்மேல் கைவைக்க முடியாது. ஏனெனில் ஆட்சியிலிருப்பது எங்கள் அரசாங்கம். நம்பூதிரிபாடு எங்கள் தலைவர். ஆளும் வர்க்கம் நாங்கள்தான்’ எனச்சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் மீது பரவலாக நல்லெண்ணம் நிலவியது. ஏழை உழவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மகிழ்ச்சி உணர்வு பொங்கியது. நிலக்கிழார்களுக்கும் முதலாளிமார்களுக்கும் பிற்போக்காளர்களுக்கும் இவ்வெற்றி எவ்வளவு திகிலை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் காண அவர்களின் மகிழ்ச்சி மேலும் அதிகரித்தது. தேர்தல் முடிந்த ஆரம்ப வாரங்களில் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர்கள் மிகப் புரட்சிகரமான சொற்பொழிவுகள் ஆற்றினர். தொழிலாளர் போராட்டங்களுக்குத் தம் ஆதரவு உண்டு என இடைவிடாமல் முழங்கினர்.

ஆனால் இந்த வாக்குறுதிகள் எல்லாம் பேச்சோடு நின்றுவிட்டன. ‘பணித்துறை ஒரு வலுவான யந்திரம்.

மாகாண பணித்துறை ஊழியர்களில் தலைமையானவர் தலைமைச்செயலர். இவர் மாகாண முதல்வரின் உத்தரவுகளுக்குக் கட்டுப்படுவதில்லை. மத்திய அரசின் உத்திரவுகளின்படியே செயல்படுவார்' என்ற விவரங்களை நம்பூதிரிபாடும் அவரது மந்திரிகளும் விரைவில் கண்டு கொண்டனர். போலீஸ் சம்பந்தமாகவும் இதுவே கதை, மேலும் மத்திய அரசின் அங்கீகாரமில்லாமல் எந்த சட்டத்தையும் இயற்றமுடியவில்லை. எனவே சில பல சீர்திருத்தங்களைத் துவங்கி வைக்கக்கூட கம்யூனிஸ்டுக் கட்சி அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை என்பது தெரிந்தது. வேறு யதார்த்தமான திட்டங்களும் கட்சியின் கைவசம் இல்லாமையால் முட்டுச்சந்தில் மாட்டிக்கொண்டது. புரட்சிகரமான எதுவும் நிகழ்ந்து விடவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சியேறியதால் ஏற்பட்ட புதுமைக் கிளர்ச்சியுணர்வு சிறிது காலத்திலேயே வடிந்து விட்டது. சில இடங்களில் கொண்டாட்டம் முடிந்து செயலற்ற தன்மை பரவியது. பிற இடங்களில் வெளிப்படையான கசப்பான ஏமாற்றம் நிலவியது.

சில மாதங்கள் கழித்து புது அரசாங்கத்துக்கு ஒரு முக்கியமான சோதனை ஏற்பட்டது. தலைநகரான திருவனந்தபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள கொல்லம் என்ற நகரில் ஒரு தொழிற்சாலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். அந்தத் தொழிற்சாலையில் இருந்த சங்கம் புரட்சிகர சோசலிசக் கட்சியின் (ஆர்எஸ்பி) தலைமையிலிருந்தது. வேலைநிறுத்தம் அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பட்டதல்ல, அந்தத் தொழிற்சாலையின் முதலாளிக்கு எதிராக ஏற்பட்டது. அது ஒரு தொழிற்சங்கப் போராட்டம். அப்போது நடந்தது எனக்கு ஒன்றுவிடாமல் நினைவிலிருக்கிறது: சுமார் 60 தோழர்கள் அடங்கிய சிபிஐ மாநிலக் கவுன்சில் கூட்டத்தில் நாங்கள் அமர்ந்திருக்கிறோம். வேலை நிறுத்தம் செய்த மூன்று தொழிலாளிகளைப் போலீஸ் சுட்டுக்கொன்று விட்டது எனச் செய்தி வருகிறது. நாங்கள் திகைத்துப் போகிறோம். கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் தொழிலாளிகள் போலீசால் சுட்டுக்

கொல்லப்பட்டு உள்ளார்கள்! கூடியிருந்த தோழர்கள் அனைவரின் உடனடி எதிர்வினையும் எப்படி இருக்கவேண்டும்? நாங்கள் போலீஸ் சூட்டை கண்டிக்க வேண்டும். உடனடி விசாரனை நடத்த வேண்டும். இழப்பு நேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளிகளுக்கு பகிரங்க ஆதரவு வழங்க வேண்டும். நாங்கள் அரசாங்கத்தில் இருக்கும்வரை இனி ஒரு போதும் இப்படி நிகழாது என்ற பொது உத்திரவாதம் அளிக்க வேண்டும் – இதுதான் எங்களில் இயல்பாய் உதித்த வர்க்க யோசனை. ஆனால் ஒரு விவாதம் துவங்கி இரண்டு மணிநேரம் நீடித்தது. முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எங்கள் ஆரம்ப எதிர்வினைக்கு முற்றிலும் மாறானவை. என்னைப் பொறுத்தவரை முழுக்காரியமும் நியாயமற்றது என ஒரேவரியில் சொல்லிவிடலாம். என்றாலும் அன்றைய சூழலைப் புரிந்து கொள்ள விளக்கம் அவசியம்.

பிற்போக்குக் குழுக்களும் கட்சிகளும் எங்களுக்கெதிராக ஒரு போராட்டம் துவங்கியிருந்தனர். ‘கம்யூனிஸ்டு ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் சேருங்கள்’ என்ற கலகமுழக்கத்துடன் அவ்வியக்கத்தை அவர்கள் நடத்தினர். எமது பலவீனங்களை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் துவங்கினார்கள். இந்த இயக்கத்தில் முன்னணியில் நின்றவர்கள் கத்தோலிக்கப் பாதிரிகளும் நாயர் வகுப்பு வாதிகளும் ஆவர். (கேரளாவில் கத்தோலிக்கர் அதிகம்). ஆனால் வலது இடது சமூக ஜனநாயக வாதிகள் (சோசலிஸ்டுக்கட்சி, ஆர்எஸ்பி) உட்பட்ட பிரிவினரும் அதில் இணைந்து கொண்டனர். அவ்வியக்கம் மக்களாதரவைப் பெறத் துவங்கியது. இந்தச் சூழ்நிலையில்தான் போலீஸ் துப்பாக்கிச்சூடு நடந்தது. ஆரம்பத்தில் தோன்றிய நிலைபாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற தோழர்களின் தர்க்கம் என்னவென்றால் “நாம் போலீசைத் தாக்கினால் அவர்களின் உளஉரம் கெடும். அதனால் கம்யூனிச எதிர்ப்பு இயக்கம் வலுப்பெற்றுவிடும். அப்படி நேர்ந்தால் நமது அரசாங்கம் தூக்கியெறியப்படும்.

அந்நிலை ஏற்பட்டால் அது கம்யூனிச இயக்கத்துக்கு பலத்த அடி விழுந்ததாகும்". கடைசியில் கட்சி நிறைவேற்றிய தீர்மானம் போலீஸ் நடவடிக்கையை நியாயப்படுத்தியது. பிறகு சூடு நடந்த இடத்துக்கு ஒருவர் சென்று கட்சியின் நிலைபாட்டை நியாயப்படுத்துவதென முடிவாயிற்று. (ஆர்எஸ்பி.யைத் தாக்கிப் பேசுவதும் போலீஸ் செயலை ஆதரிப்பதுமே கட்சி எடுத்த நிலைபாடு). கட்சியின் திறமையான மலையாளச் சொற்பொழிவாளர்களில் நான் ஒருவன் எனக் கருதப்பட்டேன். எனவே கேரளக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் பேச என்னைப் போகச் சொன்னார்கள். நான் அதற்கு மறுத்திருக்க வேண்டும். கவுன்சிலின் தீர்மானத்தை என்னால் சீரணிக்க முடியவில்லை என்றும் எனவே அதற்கு சார்ந்துபேச என்னாலாகாது என்றும் அடித்துச் சொல்லியிருக்க வேண்டும், செய்யவில்லை. கட்சித் தலைமை நான் போய் கட்சி நிலைபாட்டை ஆதரித்துப் பேச வேண்டுமென சம்பிரதாயமாக உத்திரவிட்டது. போனேன். ஒன்றரை மணிநேரம் சாரமில்லாமல் பேசினேன் மேடைப்பேச்சு: மூன்று தொழிலாளரின் மரணத்துக்கு ஆர்எஸ்பி.யின் பொறுப்பின்மையே காரணம் என்று குற்றம்சாட்டினேன். இந்தத் தொழிலாளிகள் சுட்டுக் கொல்லப்படும் நிலையைத் தோற்றுவித்து அவர்கள் இதற்கு தாம்தான் பொறுப்பு என்பதை பொதுமக்கள் முன் விளக்கிச் சொல்ல வேண்டும் என்றேன். வேலை நிறுத்தத் தலைவர்கள் மீது நேர்மையற்ற தாக்குதல்களைத் தொடுத்தேன். அன்றிரவு வீடு திரும்பினவன் உள்ளுக்குள் வருந்தினேன். என்னால் உறங்கமுடியவில்லை. கட்சிச் சார்பில் பேசமுடியாதென நான் மறுத்திருக்க வேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்தேன். பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. என்னை இக்கதிக்கு ஆக்கிய கட்சித் தலைவர்களைத் திட்டி நொறுக்காமல் வந்துவிட்ட குறையை, என் மனைவியைத் திட்டித் தீர்த்தேன். மறுநாள் மூன்று இடங்களில் அதே சொற்பொழிவை ஆற்றவேண்டும் என்றார்கள். முடியாதெனப் பட்டவர்த்தனமாய்த் தெரிவித்தேன். இம்முறை என்மறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

✦ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உங்களைப் போன்ற பல கட்சி உறுப்பினர்களின் மனங்களைப் புண்படுத்திவிட்டது. சரி. தொழிலாளி வர்க்கத்திலும் இது ஒரு நீடித்த பாதிப்பை ஏற்படுத்தியதா?

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி அதற்கிருந்த மக்கள் ஆதரவில் ஒரு வடு ஏற்படுத்தியது உண்மையே. இருப்பினும் கொல்லம் சம்பவங்களின் பின்பும் எங்கள் ஆதரவாளர்கள் பெரும்பகுதியினர் ஏதும் நிகழாதது போல் தொடர்ந்த ஆதரவு தந்தனர். பிற்போக்காளருக்கும் ஆதரவு கூடியதுதான். ஆனால் இந்தக் கட்டத்திலும்கூட பாராளுமன்ற வேலைக்கும் மக்கட்பணிக்கும் இடையிலான இயங்கியல் உறவை சிபிஐ தலைவர்கள் புரிந்து கொண்டிருந்தால், பாராளுமன்ற வேலைகள் எப்போதுமே போராட்டத்தின் தேவைக்குக் கீழ்ப்பட்டே இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருந்தால், இந்தக் கட்டத்திலும் கூட நாங்கள் எங்கள் பலத்தை நிலைநிறுத்தியிருக்க முடியும். ஒருவேளை பன்மடங்காய் அதை உயர்த்தியிருக்கவும் முடியும். இந்த முயற்சிகளின்போது நாங்கள் பதவியிலிருந்து விலக்கப்படலாம் (எப்படியும் இது நேர்வதே). ஆனால் எமது நிலை அளவிடற்கரிய பலம் பொருந்தியதாக ஆகியிருக்கும். முதலாளிய ஜனநாயகத்தின் வரம்புகள் பற்றி பொதுமக்களுக்கு நாம் கற்பித்திருக்க இது வாய்ப்பாகியிருக்கும். உண்மையான புரட்சியுணர்வை வளர்த்தெடுத்திருக்க முடியும் – ஆனால் நாங்கள் இந்த வழியில் செல்லவில்லை. அதே நேரத்தில் நம்பூதிரிபாடு 'உள்நாட்டுப் போர் நடக்கும்' என முன்னறிவிப்புச் செய்து சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருந்தார். தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்துக்கு வந்துவிட்டது என்ற அவரது பார்வைக்கு மேற்படி சோதிடம் பொருத்தமானதே. கம்யூனிஸ்டு அரசாங்கத்தை மேலும் தாக்கிப் பலவீனப்படுத்த நம்பூதிரிபாடின் மேற்படி பேச்சுக்களைக் காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டது. கேரள மாநில அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு குடியரசராட்சியைத் திணிக்க மத்திய அரசு

ஆலோசித்து வருகிறது என பத்திரிகையறிக்கைகள், காங்கிரஸ் தலைவர்களின் அறிக்கைகளில் இருந்து விரைவில் வெளிப்படையாயிற்று. கேரளாவில் பிற்போக்காளர்கள் தலைமையிலான மக்களியக்கம் உச்சமடைந்தது. கல்லடிவாங்காமல் வெளியில் போகமுடியாத நிலைமை விரைவில் சகத்தலைவர்களுக்கு ஏற்பட்டது – எனக்கும்தான். இச்சந்தர்ப்பத்தில் நேரு நிலைமையை நேரில் காணத் தீர்மானித்து கேரளாவுக்கு வருகைதந்தார். உடனடியாக அரசாங்கத்தைப் பதவியிறக்குமாறு கோரி அவரை அக்கோரிக்கையினர் முற்றுகை செய்தனர். எங்களையும் அவர் சந்தித்தார். அரசாங்க அமைச்சர்களுடனும் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழுவின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். பிரதிநிதிக்குழுவில் நானும் ஒருவன். இந்த விவாதங்களின் போது எங்களிடம் அவர் கேட்ட முதல் கேள்வி - எனக்கு இன்றும் மறக்கவில்லை – "அது எப்படி அய்யா இவ்வளவு குறுகிய காலத்தில் மக்களிடமிருந்து இவ்வளவு அற்புதமான முறையில் தனிமைப்பட்டுப் போனீர்கள்?!" பின், வாக்காளப் பெருமக்களின் தீர்மானத்துக்கு விட்டுப் புதிய தேர்தல்கள் நடத்த சம்மதமானால் கம்யூனிஸ்டு அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருக்கலாம் என்று யோசனை கூறினார். நேரு முன்வைத்த திட்டத்தை விவாதிக்க ஒரு சிறப்பமார்வை மாநிலக்குழு கூட்டியது. நம்பூதிரிபாடு வலியுறுத்தியதன் பேரில் அந்தத் திட்டத்தை நிராகரிப்பதென முடிவு செய்யப்பட்டது: "எல்லா மாகாணங்களிலும் புதிதாய் தேர்தல் நடத்துவதானால்தான் கேரளாவிலும் நடத்தச் சம்மதிப்போம்!" அப்பவும் நான் இது தவறான தீர்மானம் என உணர்ந்தேன். நேருவின் திட்டத்தை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். எங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்க அவகாசம் ஈட்டியிருக்க வேண்டும். பின் எதிர்க்கட்சிகளுடன் மோதலில் புகுந்திருக்க முடியும். எதிர்க்கட்சிகள் யார் - பிற்போக்காளர்களும் கட்சிதாவும் சுயநலவாதிகளும் சமூக ஜனநாயகவாதிகளு மாகிய கதம்பம்தானே? இரண்டாவதாக, தேர்தல்களை ஒப்புக்கொண்டு அது நடக்கையில், கம்யூனிஸ்டு அரசாங்கம்

அதிகாரத்திலிருந்திருக்கும். இதனைக் கொண்டு பணித்துறை ஊழியரும் போலீசுகளுமாகிய அரசுயந்திரம் எங்களுக்கு எதிராய்ச் செயல்படுவதை முற்றாகத் தடுத்திருக்க முடிந்திராவிட்டாலும் அவர்களை ஓரளவுக்காவது கட்டுப்பாட்டில் வைக்க முடிந்திருக்கும். எப்படியோ – நாங்கள் மறுத்துவிட்டோம். 1959-ல் அரசாங்கம் பதவி நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒன்றரை ஆண்டுகள் கழித்து நடந்த அடுத்த தேர்தலில் எமக்குக் குறைவான பதவி இடங்களே கிடைத்தாலும், அதிகமான மக்களின் வாக்குகள் கிடைத்தன. ஆக, தேர்தல் ரீதியில் நாங்கள் தோற்கடிக்கப்பட்டாலும் மக்களின் பார்வையில் நாங்கள் உண்மையில் தோற்கவில்லை. எங்களின் இத்தனை தப்பு தவறுகளுக்கும் பின்னும் மக்கள் எங்களை ஆதரித்தனர்.

கேரளாவில் தேர்தலில் சிபிஐ பெற்ற வெற்றி அதனைச் சந்தேகமின்றி ஒரு தேசிய சக்தியாக்கிற்று. அதன் மதிப்பு பன்மடங்காக உயர்ந்தது. பூர்சுவா வியாக்யானிகளின் புளித்துப்போன பத்திரிகைத் தலைப்புகளுக்குப் பதிலளிக்குமுகமாக கம்யூனிஸ்டு ஆர்வலர்கள் "நேருவுக்கு அடுத்தது நம்பூதிரிபாடு தான்!" என முழக்கமிட்டனர். இந்த வகையில் கேரளாவின் முக்கியத்துவம் என்னவென்றால் – காங்கிரசைத் தோற்கடிக்க முடியும், அதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற மாற்று உண்டு என்ற நிச்சய உணர்வு ஏற்பட்டதாகும். அன்றைய சர்வதேசச் சூழ்நிலையில் இது ஒரு முக்கியமான காரணியாகும். தொழிலாளர்கள் கொல்லப்பட்டதற்கு ஈஎம்எஸ் அமைச்சரவை "பரிகாரம்" கண்ட விதத்தைப் பற்றி சிபிஐ.க்குள்ளேயே விமர்சனங்கள் எழுந்தன. கேரளக் கட்சியை விமர்சித்து மேற்கு வங்க சிபிஐ. மாநிலக்குழு கடிதம் எழுதியது. இருந்தாலும் வேறெந்த சிபிஐ தலைவருக்கும்விட நம்பூதிரிபாடுக்கு பெரிய கூட்டம் வந்தது. வெற்றிகரமான கேரள சிபிஐ.யின் தலைவர் என்ற ரீதியில் நம்பூதிரிபாடு தேச அளவிலான பிரமுகராகிவிட்டார். 1958-ல் அமிருதசரசில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் அவரை ஒரு நாயகனாகப் போற்றியது. தேர்தல் முறையில் அரசதிகாரம் வெல்ல முடியும் என அறிவித்தது. சோவியத்

கட்சி வளர்த்து வந்த நிலைபாடுகளுக்கு இவ்வறிவிப்பு கனகச்சிதமாய்ப் பொருந்தியது. மூலத் தீர்மானத்துக்கு சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. சில தோழர்கள் சில சந்தேகங்கள் எழுப்பினார். மற்றபடி மொத்தத்தில் ஒரேகருத்து நிலவியது. அமிருதசரசுப் பாதை இனி தேச அளவில் கடைபிடிக்கப்படும்.

✦ சோசலிச மாற்றத்தைக் கொண்டு வருவோம் என வாக்குறுதி வழங்கும் கட்சிகள் தேர்தல் வெற்றிகளிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் நிலையில் எழுகின்ற போர்த்தந்திரப் பிரச்சினைகளைப் பற்றித் தலைமைக்குள் ஒருபோதும் சரியான விவாதம் நடந்ததில்லை என்கிறீர்களா? கேரள சிபிஐ யிலாகட்டும், மேற்குவங்க சிபிஎம்.மிலாகட்டும் பிற்பாடு சிலியின் 'மக்கள் ஒற்றுமை' (Popular Unity) யிலாகட்டும், காணப்படும் அடிப்படையான குறைபாடு என்னவென்றால், மக்கள் அதிகாரத்துக்கான சோவியத்வகை அமைப்புகளை உருவாக்கும் அவசியத்தை அவை எதுவும் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான். அத்தகைய சோவியத் அமைப்புகளே முதலாளிய அரசிலிருந்து சுயேச்சையாக மக்களை ஒழுங்கமைக்க முடியும். தருணம் வாய்த்ததும் அரசுக்கு எதிரான மக்கள் அமைப்புகளாகவும் அவற்றையே பயன்படுத்த முடியும் — அல்லவா? ஆனால் பல பத்தாண்டுகளாகவே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திரத்தில் இந்தப் பரிமாணத்தை சுத்தமாகக் காணோமே?

நீங்கள் முன்வைக்கும் இப்பிரச்சினைகள் மிக முக்கியமானவை, அடிப்படையானவை. ஆனால் நடைபெற்ற விவாதங்களில் இப்பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன். மக்களை 'அவர்களின் சொந்த அதிகார அமைப்புகள் (அதாவது சோவியத் போன்றன) மூலமே திரட்டல் வேண்டும் என்ற இந்த அடிப்படை முக்கியத்துவமுடைய நிலைபாடு காணாமற்போனது ஸ்டாலினியத்தின் விளைவே ஆகும். ஸ்டாலினியத்தில் கட்சி மட்டுமே மக்களின் ஒரே பிரதிநிதியாகக் கருதப்பட்டது.

என்னுடைய தனிப்பட்ட அரசியல் பரிணாமத்தைப் பற்றிச் சொன்னால், எனக்கு 1956-க்குப் பின் தொடர்ந்து ஐயங்கள் பெருகிச் சென்றன. ஸ்டாலின் பிரச்சினை குருச்சேவின் உரையைப் படித்தபின் தீர்ந்துபோனது. ஆனால் சர்வதேச விவகாரங்களில் நான் இன்னும் முழுக்கக் குழம்பியவனாகவே இருந்தேன். உதாரணமாக ஹங்கேரி பற்றிய எனது நிலைபாடு முற்றிலும் வைதிகத் தன்மையிலேயே இருந்தது. எல்லா முதலாளியப் பத்திரிகையிலும் சோவியத் நாட்டை நீளமாகத் தாக்கி எழுதியிருந்தார்கள். அதை மறுக்குமுகமாக நான் 'ஹங்கேரியில் நடந்ததென்ன?' என்ற பிரசுரத்தை எழுதினேன். ஆக என் சிந்தனை படிப்படியாகவே மாறிவந்தது. நிறையப் படிக்க வேண்டியதன் தேவையை அடிக்கடி உணர்ந்தேன். ஆனால் அப்போது இந்தியாவில் படிக்கக் கிடைத்தவை மிகக் குறைவே. 1956-ல் நான் ஸ்டாலினியத்திலிருந்து முறித்துக் கொண்டதாக நினைத்தேன். ஆனால் இன்று திரும்பிப் பார்க்கும் போது அது உண்மையல்ல என்பது புலனாகிறது. அமிருதசரஸ் பாதை, கேரள அரசாங்கம் ஆகிய சமாச்சாரங்கள் எனது சந்தேகங்களுக்கு வலுவூட்டின. என்றாலும் சந்தேகங்கள் சந்தேகங்களாகவே நின்றுபோயின. தனிப்பட்ட ஐயங்கள் பலவும் கட்சிக்குள்கூட வெளிப்படுத்தப்படவில்லை. அன்றைய கம்யூனிஸ்டுகள் பலரின் கதையும் இதுவே என நான் கூறுவேன். ஆனால் அன்றைய நிலையில் சிபிஐ.க்கு மாற்று நிலவவில்லை.

1958-ல் எனக்கு சோவியத் நாட்டைச் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது என்னில் மேலுமொரு மாற்றம் நிகழ்ந்தது. ஆப்பிரிக்க ஆசிய எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய எழுத்தாளர் பிரதிநிதிக்குழுவில் ஒரு உறுப்பினனாக நான் 1958ல் தாஷ்கண்ட் சென்றேன். சீனப் பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தார்கள். சோவியத் நாட்டுடனான தம் வேறுபாட்டை வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள். சோவியத் தரப்பை பார்க்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான முன்னேற்றங்களை மறுக்க முடியாது. ஆனால் அதன்

மறுபக்கம் என்னை நிலைகொள்ளாமற் செய்தது. இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாஸ்கோவில் சிறப்பு வரவேற்பு தரப்பட்டது. அதில் குருச்சேவ் கலந்து கொண்டார். விழாவில் கலைநிகழ்ச்சி நடந்தது. கலைநிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த நான் எனக்குப் பக்கத்திலிருந்த காலிநாற்காலியில் குருச்சேவ் வந்து அமர்ந்து கொள்ளவே, ஒருகணம் திடுக்குற்றேன். பின் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவருடன் விவாதித்து எனது ஐயங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற முடிவு செய்தேன். அக்காலத்தில் பாஸ்டர்நாக் விவகாரம் பரவலான கவனத்தை ஈர்த்திருந்தது. எனவே 'பாஸ்டர் நாக்குக்குச் (7) செய்தது நியாயம்தானா' என நான் குருச்சேவிடம் வினவினேன். புரட்சி நடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் பாஸ்டர்நாக் எழுதிய ஒரு நாவலைக் கண்டு சோவியத் அரசாங்கம் பயப்படுகிறது என்றால் அது எப்படி? நான் ஒரு மார்க்சியன் என்ற வகையில் பாஸ்டர்நாக்கின் அரசியலுக்கு முரண்பட்டவன் என்றாலும் எழுத்தாளன் என்ற முறையில் அவருக்குச் செய்யப்பட்டதை என்னால் நியாயமெனப் பார்க்க முடியவில்லை என்றேன். கவிதைகள், சிறுகதைகள் உள்ளிட்ட தாம் எழுதிய எழுத்துகளுக்காக இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் பலர் சிறைத் தண்டனை பெற்றதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் சோவியத் நாட்டில் பாஸ்டர்நாக் விசயத்தில் இப்படி நடப்பதை எப்படிப் புரிந்து கொள்வது? என்றேன். குருச்சேவ் எல்லாப் பொறுப்புகளையும் மறுத்தார். பாஸ்டர்நாக் பிரச்சினை எழுத்தாளர் சங்கத்தின் பிரச்சினை அங்கே கேளுங்கள் என்றார். இப்பிரச்சினையை விவாதிக்க அவருக்கு ஆர்வமில்லை என்பது தெளிவாயிற்று. அடுத்து சோவியத் நாட்டில் குடிப்பழக்கம் இருப்பது பற்றிக் கேட்டேன். மதுவிலக்கு கொண்டுவரும் உத்தேசமுண்டா என்றேன். உண்டு என்றார். "ஆனால் மதுவைத் தடை செய்தால் கள்ளச்சாராயத்தொழில் உடனடியாக பெருகிவிடும். அது இப்போதுள்ளதைவிட பெரும்பிரச்சனையாகிவிடும்" என்றார். உடனே நான் சொன்னேன்: "நீங்கள் புத்தக வெளியீடுகளைத்

தடைசெய்தால் சட்டவிரோத வெளியீடுகள் உடனடியாகப் பெருகிவிடும். அது இப்போதுள்ளதைவிட பெரும்பிரச்சினையாகிவிடும்!" இப்போது மிகவும் எரிச்சல் அடைந்த மனிதர் 'நடனத்தைப் பார்ப்போமா? என்றார். 'ஸ்டாலினிய நீக்கத்தின்' வரம்புகளைப் புரிந்து கொள்ளத் துவங்கினேன். யூகோஸ்லாவியா, சீனா ஆகியவை பற்றி விவாதிக்க முயன்றதும் பயனற்றுப் போனது. எழுத்தாளர் சங்க அலுவலர்களுடன் விறுவிறுப்பான விவாதங்கள் நடந்தன விளைவுதான் ஏமாற்றம். எனது பிரமைகள் மென்மேலும் அகன்றுவந்தன.

✦ சோவியத்நாடு தவிர வேறுநாடுகளுக்குப் போயிருக்கிறீர்களா? மக்கள் சீனத்துக்குப் போகும் வாய்ப்பு கிடைத்ததுண்டா? சீனப்புரட்சி சமீபகாலத்ததும் ஒரு வகையில் இந்தியாவின் பிரச்சினைகளுக்கு மேலும் சம்பந்தப்பட்டதும் ஆயிற்றே.

எனது சோவியத் ஒன்றியப் பயணத்துக்குப் பின் வெளிநாடுகளுக்குச் செல்லவும் அந்நாட்டுத் தோழர்களுடன் விவாதிக்கவும் எனக்கு அதிக வாய்ப்புகள் கிடைத்தன. எனது அரசியல் வளர்ச்சிக்கு வெளிநாட்டுப் பயணங்கள் மிகமுக்கியமான உதவி புரிந்தன. 1960-ல் ஹனாயில் நடந்த வியத்நாம் தொழிலாளர் கட்சியின் மூன்றாம் காங்கிரசில் நான் கலந்து கொண்டேன். இந்தியக் கட்சியிலிருந்து நானும் ஹரிகிருஷ்ணன் கோனாரும் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தோம். இந்தியக் கம்யூனிஸ்டுகளின் அன்பு வாழ்த்துகளைக் காங்கிரசுக்குத் தெரிவித்துக் கொண்டோம். பின் பலநாட்டுத் தோழர்களுடனும் விவாதித்தேன். அது மிகக் கிளர்ச்சிகரமான காலம். தென்வியத்நாமில் தேசிய விடுதலை முன்னணி (என்எல்எப்) அமைக்கப்படவிருந்தது. கம்யூனிஸ்டுகளின் கூட்டங்களில் சீன – சோவியத் தகராறே தலையாய பிரச்சினை ஆகத் துவங்கியிருந்தது. சோவியத் தூதுக்குழு தம் நிலைப்பாட்டை விளக்க எம்மை விருந்துக்கு அழைத்தது. அவர்கள் நிலைபாடு நமக்கு ஏற்கனவே தெரிந்தது தான். விவாதம் மறுநாளும் நடந்தது. நானும் கோனாரும் ரஷ்யர்களிடம் சற்று தர்மசங்கடமான

கேள்விகளை கேட்டோம். சீன சோவியத் தகராறின் ஆரம்பகாலக் கட்டத்திலிருந்த ஒரு நல்ல அம்சம் என்னவென்றால் 20களின் பின் முதன்முறையாக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குள் அடிப்படை விசயங்களை விவாதிக்க அப்போது அனுமதிக்கப்பட்டதுதான்.

ஒரு நீண்ட விவாதம் நடத்த சீனக்குழு எம்மைப் பீகிங்குக்கு அழைத்தது. நாங்கள் காண்டனுக்குப் பறந்தோம். அங்கிருந்து ஒரு தனி விமானத்தில் பீகிங் சென்றோம். சீனத் தலைநகரில் மொத்தம் 4 நாட்கள் இருந்தோம். சூ என் லாயிடமும் பிறகட்சித் தலைவர்களிடமும் ஆக ஐந்தரை மணி நேரம் விவாதித்தோம். விவாதத்தின் முக்கிய விசயம் சீன – இந்திய எல்லைத் தகராறு. பழைய நிலப்படங்கள், எல்லை ஒப்பந்தங்கள் சம்பந்தமான மிக நுட்பமான விளக்கங்கள் போன்றவற்றைப் பேசுவதில் ஒரு மணி நேரம் நகர்ந்தது. "எனவே எல்லைத் தகராறில் சீனத் தரப்பே சரி" என முடித்தனர். என் கருத்துக்களை நான் சீனத் தோழர்களிடம் ஆணித்தரமாகத் தெரிவித்தேன்: "சட்டரீதியாக, புவியியல் ரீதியாக, வரலாற்றுரீதியாக நீங்கள் சரியாயிருக்கலாம். அரசியல்ரீதியாக அணுகுவதே எனக்கு முக்கியமாகப்படுகிறது. மனிதர் வசியாத இப்பிரதேசம் பற்றிய தகராறால் நமக்குக் கிடைக்கும் அரசியல் நன்மை யாது? பாகிஸ்தானுடன் நீங்கள் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்து கொஞ்சம் நிலப்பரப்பை விட்டுக் கொடுத்தீர்கள். அதையே ஏன் இந்தியா சம்பந்தமாகவும் பின்பற்றக்கூடாது? அப்படிச் செய்தால் இந்தியப் பிற்போக்காளர்கள் சீன எதிர்ப்புத் தேசியவெறியைப் பரப்பி வருவதற்குப் பங்கமுண்டாகும். இந்தியாவிலுள்ள இடதுசாரி இயக்கத்துக்குப் பலமுண்டாகும். சோசலிச அரசுகள் எல்லைத் தகராறுகளைத் தீர்க்கும் முறையே அலாதி பார்த்தீர்களா என நாம் உலகுக்கு உணர்த்த முடியும். சீனப்புரட்சிக்கும் இந்திய மக்களுக்கும் உறவு வலுப்பட இது உதவும்". பின்லாந்து போன்ற முதலாளிய அரசாங்கங்கள் அல்லது ஆப்கன் போன்ற முதலாளியத்துக்கு முந்திய முடியரசுகள் ஆகியவற்றிடம் லெனின் நடந்து கொண்ட பாங்கு இத்தகையதே என விளக்கினேன். அவ்வாறு

நடந்து கொண்டதன்மூலம் லெனின் ரஷ்யப் புரட்சியை வலுப்படுத்தினார்; பரந்துபட்ட மக்களிடம் அதன் செல்வாக்கையும் வலுப்படுத்தினார் என்றேன். லெனின் செய்தது சரிதான் என சட்டெனப் பகன்றார் சூ. "ஆனால் அதற்குக் காரணம் அன்று சோவியத் அரசு தனித்திருந்ததும் 'சோசலிசமுகாம்' இல்லாதிருந்ததுமே ஆகும்" என்றார். "உண்மையில் லெனினின் நோக்கம் அந்நாட்டு மக்களுடன் நட்புறவுகளை வளர்ப்பதே ஆகும். அந்நாடுகளின் ஆளும்வர்க்கங்கள் சோவியத் நாட்டை, தம் நாடுகளை விழுங்கவரும் வல்லரசாகச் சித்தரிக்க இடந்தரக்கூடாது என்ற நோக்கமே ஆகும். கைவசம் என்னிடம் தேவையன ஏடுகள் இல்லையாயினும், லெனினின் உண்மையான நோக்கம் இதுவே எனக்காட்டப் போதிய ஆதாரங்கள் உள்ளன" என நான் பதிலுக்கு வாதிட்டேன். கடைசியில் சூ தன்னால் இதை ஒத்துக் கொள்ள முடியாதென்றார். சீனத்தோழர்கள் மீதும் அவர்களின் புரட்சிமீதும் எனக்கு அளவுகடந்த அக்கறை உண்டு. எனவே நான் விவாதத்தை அத்துடன் முடித்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே சூவிடம் கேட்டேன்: "தகராறிலிருக்கும் எல்லைப் பகுதி வழியாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வந்து உங்களைத் தாக்கலாம் என்ற அபாயத்துக்கு இடமுண்டா?" அதற்கு சூ சொன்னார்: "இப்போது அபாயம் அமெரிக்கரிடமிருந்து அல்ல, நேருவின் அரசாங்கத்திடமிருந்துதான் வருகிறது".

விவாதத்தின் அடுத்த விசயம் சீன – சோவியத் தகராறு.

"அரசியல் மாறுபாடுகளைக் காரணமாக்கி ஓரேநாளில் சோவியத் நாடு சீனாவிலிருந்து தன் தொழில் நுட்பக்காரர்களைத் திருப்பி எடுத்துக் கொண்டது. இது சோவியத் நாடு சீனாவுக்கிழைத்த துரோகமாகும்" என்று அழுத்திக் கூறினார் சூ. இதுபற்றி அவர் மிகுந்த கசப்பை வெளியிட்டார். ப்ளூ-பிரிண்டுகளைக் கூடத் தூக்கிச் சென்றுவிட்டார்கள் என முறையிட்டார். ரஷ்யர் செய்தது முற்றிலும் தவறே என உணர்ந்தேன். ஆனால் அதை வாய்விட்டுச் சொல்லவில்லை. ஏனெனில் இருபெரும்

நாடுகளுக்கிடையில் அணிசேர நான் விரும்பவில்லை. சீனாவிடம் சோவியத்நாடு நடந்து கொண்ட முறையையும் இந்தியாவிடம் சீனா (எல்லைத்தகராறில் சூ) நடந்து கொண்ட முறையையும் பற்றி எண்ணிச் சோர்வடைந்தேன். சூவின் போக்கில் இழையோடிய தேசியவெறியை உணராதிருக்க முடியவில்லை. கோனார் சீனர் சார்பாக நிலை எடுத்துக் கொண்டார். இந்தியா திரும்பினதும் பல ஆய்வுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து சீனரின் கருத்துக்களை விளக்கினார்.

✦ அந்நாட்களில் வியத்நாமியத் தோழர்களின் நிலைபாடு எப்படி இருந்தது?

இன்று அவர்களுக்குள்ள அதே நிலைபாடுதான். "இந்தத் தகராறு தொடர்ந்தால் முரண்பாடு அதிகரிக்கவே செய்யும். அது ஏகாதிபத்தியத்துக்கே உதவுவதாய் முடியும்" என்பது அவர்களின் நிலைபாடு. அப்படிப்பார்த்தால் ரஷ்யரையும் சீனரையும் விட வியத்நாமியர் தேவலை. வியத்நாமியப் போராட்டத்தின் மீது சோவியத்நாடும் சீனாவும் கொண்டிருந்த மனோபாவமும் உண்மையில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கவில்லை. பீகிங்குக்குப் புறப்படுமுன் நாங்கள் ஹோசிமினுடன் நீண்ட நேரம் விவாதித்தோம். பேச்சுப்போக்கில் வியத்நாம், இந்தியா, சீன – சோவியத் தகராறு பற்றியெல்லாம் பேசினோம். கடைசி விவகாரம் பற்றிச் சொல்லும்போது ஹோசிமின், தனக்கு சோவியத் நாடு, சீனம் இரண்டின் போக்கும் பிடிக்கவில்லை என்றார். அவர்களின் சண்டை வளர்ந்துகொண்டே போய் சர்வதேசத் தொழிலாளிவர்க்க இயக்கத்துக்கே உலைவைக்கும் நிலைவரும் என்றார். இவ்விசயத்தில் அவர் மிகுந்த கரிசனம் கொண்டு காணப்பட்டார். "இத்தகராறைக் கிளறிவிடும்படியாக எதையும் செய்யாதிருக்க வேண்டும்" என்றார். "வியத்நாமியர் தம் நிலைபாட்டை ஏன் அச்சேற்றிப் பரப்பக் கூடாது? இயக்கத்தை ஒன்றுபடுத்தி வைத்திருக்க அது ஒரு உதவிகரமான வழியாயிருக்குமே?" என கேட்டேன். அவர்களின் தகராறில் குறுக்கிடக் கூடாதெனத் தாங்கள் முடிவெடுத்திருப்பதாக அவர் சொன்னார். மூன்றாம்

உலகப்போர் பற்றிய ஆய்வுரைகள் (8) பற்றி நகைச்சுவை தொனிக்கப் பேசினார். மூன்றாம் உலகப் போருக்குப் பின் சீனாவில் சிலராவது மிஞ்சலாம். சின்ன நாடான வியத்நாமில் என்ன மிஞ்சும்? ஓர் ஆள்கூட மிஞ்சாது. எனவே அக்கோட்பாட்டை நாங்கள் ஆதரிக்க முடியாதது சுத்த தற்காப்பு நோக்கம் கருதிதான் என்றார். அவர் பேச்சு நெடுக இழிவரல் விரவியிருந்தது. நான் சந்தித்த கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அனைவரிலும் மிகவும் பண்பட்டவரும் வசீகரமானவரும் அவர்தான் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். வியத்நாமுக்கு வந்த தூதுக் குழுவினரை ஆறு மொழிகளில் வரவேற்று அவர் பேசினது என்னை மிகவும் கவர்ந்தது. அவை வியத்நாமிய, சீன, ரஷ்ய, பிரெஞ்சு, ஆங்கில, ஸ்பானிஷ் மொழிகள்.

30களில் இந்தியக் கட்சியினும் பெரியதாய் இல்லாதிருந்த உங்கள் வியத்நாமியக் கட்சி வெற்றிபெற, நாங்கள் தோற்றுப் போனதேன் என்றேன். அதற்கு அவர் ஒரு அருமையான பதில் அளித்தார்: "உங்களுக்கு மகாத்மாகாந்தி இருந்தது போல இங்கு நான்தான் மகாத்மாகாந்தி". கம்யூனிஸ்டுகளின் தலைமை உருவாக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தாங்கள் பயன்படுத்திக் கொண்ட விதம்பற்றி விளக்கிச் சொன்னார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் தலைமைச் சக்தி ஆனார்கள். சோசலிசம் நோக்கி இயங்கினார்கள். அவர் கூறியதன் உள்ளர்த்தம் - 'இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியது காந்தியும் காங்கிரசும். இதைச் செய்யாததே சிபிஐ.யின் தவறு' என்பதாகும். வியத்நாமிய முதலாளி வர்க்கத்தின் பலவீனம்பற்றி விளக்கினார். (பிற வியத்நாமியத் தலைவர்களும் இதைக் குறிப்பிட்டனர்). இதற்கு நேர்மாறாக இந்திய முதலாளி வர்க்கம் பலம் கூடியது.

வெளிநாட்டுப் பயணங்களே என் மனதைத் திறந்து விட்டவை. ஆரம்பத்தில் சோவியத் நாட்டுக்கும் பிற முதலாளியமல்லா நாடுகளுக்குமே போய்வந்தேன். உடல்நலக் காரணங்களுக்காக 1962ல் மீண்டும் சோவியத்நாடு

சென்றேன். 1940-45ல் சிறையிலிருந்த காலத்தில் நான் கொஞ்சம் ரஷ்யமொழி கற்றிருந்தேன். 'பிராவ்தா'வை எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றிருந்தேன். மாஸ்கோவில் நானிருந்த சமயம், நெப்போலியன் மாஸ்கோவைக் கைப்பற்ற முயன்று தோற்றுப் பின்வாங்கியதன் ஆண்டுவிழா நடந்தது. ஜார்மன்னனின் வெற்றியைக் கொண்டாடுவதே எனக்கு விசித்திரமாய்ப்பட்டது. அதைவிட பிழையாகப்பட்டது, பிராவ்தா ஏட்டில் நெப்போலியனுக்கு எதிராக வரைந்திருந்த நீண்ட வசைமாரி. கட்டுரையின் தேசியவாத உக்கிரம் பயங்கரமாயிருந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் சூழலில் நெப்போலியன் எதிர்ப்புரட்சியாளன்தான். ஆனால் ஜாரிய முடியாட்சிக்கு எதிரான போரில் ஜாருடனா நெப்போலியனுடனா என்றால் நெப்போலியனுடன்தான் சாரவேண்டும். திரிக்கப்பட்ட, கலப்படமான வடிவிலேனும், தான் வென்றபகுதிகளுக்கு அவன் முதலாளிய ஜனநாயகப் புரட்சியைக் கொண்டு சென்றான். பிற்போக்கு ஐரோப்பா முழுவதும் அவனுக்கெதிராக அணிவகுத்தது. இரண்டாம் உலகப்போர் முடிவில் கிழக்கு ஐரோப்பாவில் முன்னேறிச் சென்ற செஞ்சேனை அங்கு முதலாளிய உற்பத்திமுறையை அழித்ததை நெப்போலியனின் படையெடுப்புடன் ஒப்பிடமுடியும். மருத்துவமனையில் படுக்கையிலிருந்தபடி பிராவ்தா கட்டுரையை நான் வாசித்தேன். வேறு வேலையும் அதிகம் இருக்கவில்லை. எனவே பிராவ்தா பதிப்பாசிரியருக்கு ஒரு கடிதம் எழுத முடிவு செய்தேன். அதில் கட்டுரையின் பிற்போக்குத் தன்மைபற்றி அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தேன். அதன்பின் தினமும் பிராவ்தா தினசரியை எடுத்து எனது கட்டுரை அச்சாயுள்ளதா எனத் தேடுவது வழக்கமாயிற்று. ஏமாந்ததே மிச்சம். ஒருவாரம் கழித்து சிபிஎஸ்யு.வின் மத்தியச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் என்னைப் பார்க்கவந்தார். உடல் நலம் பற்றி பகட்டாக விசாரித்துக் கொண்டார் – ஏதோ அதற்காகவே வந்ததுபோல். பின் பிராவ்தாவுக்கு நான் எழுதியிருந்த கடிதத்தைத் தான் படித்ததாகச் சொன்னார். பதிப்பாசிரியருக்கு எழுதியிருந்த கடிதம் அவருக்குக் கிடைத்தது எப்படி என்றேன். எனது

கேள்விக்குப் பதில் சொல்லவில்லை அவர். அதற்குப் பதிலாக பிராவ்தாவின் மதிப்பீடு சரிதான் என்று வாதிட்டார். அவருடனோ வேறெந்தத் தோழருடனோ பிராவ்தாவில் இதுபற்றி விவாதிக்க நான் தாராளமாகத் தயார் என்றும் மருத்துவமனையிலிருந்தபடி முன்பின் கிரமமற்ற முறையில் வாதிடத் தயாரில்லை என்றும் மட்டும் சொல்லி நிறுத்தினேன். இதெல்லாம் கடுமையான உள்நோயின் வெளி அறிகுறிகளே. ஆனால் என் கண்கள் திறந்து கொண்டது இப்படித்தான். உங்களுக்கு மட்டும் திறந்த மனம் இருந்தால் சோவியத் நாட்டிடமிருந்தேகூட வேண்டிய பாடங்கள் படிக்கலாம்!

அடுத்த ஆண்டுகளில் எனது பரிணாமம் தொடர்ந்தது. 1967–69 கட்டத்தில் இரண்டு தடவை மேற்கு ஐரோப்பா சென்றேன். இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சிலருடன் மட்டுமன்றி II Manifesto (9) *தோழர்களுடனும் விவாதித்தேன். பிரான்சில் கரோடி போன்ற கருத்து மாறுபாட்டுக் கம்யூனிஸ்டுகளுடனும் புதிய இடதுத் தோழர்கள் சிலருடனும் விவாதித்தேன். மே 1968ன் பின்விளைவுகளை நேரடி அனுபவத்தில் உணர்ந்தேன். பின் பிரிட்டன் சென்றேன். நான் மேற்கு ஐரோப்பாவில் பயணம் செய்தகாலம் அங்கு புதிய எழுச்சிகளும் புரட்சிமயமாதலும் பெருமளவில் ஏற்பட்டு வந்த காலம். அங்கும் எனது அரசியல் வளர்ச்சி தொடர்ந்தது. வளர்ச்சிகளைத் திறந்த மனதுடன் ஆராய விரும்பினேன். எனவே நடப்புப் போக்குகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுடன் விவாதித்தேன். பிரான்சின் கடைத்தெருக்களில் அதிஇடதினருக்கும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும்* (PCF) *இடையிலான வேறுபாடுகளைக் கண்களால் கண்டேன். அதிஇடது ஆர்ப்பாட்டக் காரர்களின் தீவிரம், பற்றுறுதி ஆகியவை கண்ட நான் அவர்கள்மேல் அனுதாபம் வைத்தேன் – அவர்களுடன் முற்றாக என்னால் உடன்பட முடியாதது வேறு விசயம்.*

✦ இந்தியக் கம்யூனிசம் சிபிஐ, சிபிஎம் என இரு பிரதான கட்சிகளாக உடையக் காரணம் என்ன? சீன சோவியத் தகராறின்

எதிரொலிதானா அது? சிபிஐ தன் இருகோட்டைகளான கேரளாவையும் மேற்கு வங்கத்தையும் சிபிஎம்.மிடம் இழந்துவிட்ட நிலையில், பிளவு சிபிஐ.க்குள் என்ன தாக்கங்களை ஏற்படுத்தியது?

சிபிஐ - சிபிஎம் பிளவென்பது சீன – சோவியத் தகராறின் பிரதிபலிப்பு மட்டுமே என பலரும் நினைத்து எழுதியுள்ளார்கள். இது உண்மையல்ல. அதைவிடக் குறிப்பிடத்தக்கதான காரணி சீன இந்தியத் தகராறு பற்றிய நிலைபாடே ஆகும். ஏற்கனவே சொன்னது போல் எல்லை விவகாரத்தில் சீன நிலைபாடு பற்றிய சூஎன்லாயின் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சிபிஐ. சீன நிலைபாட்டை எதிர்த்து சரிதான் என்றே இன்றும் நான் நம்புகிறேன். இருப்பினும் சீன நிலைபாட்டை ஆதரிக்காதிருப்பது ஒன்று, தங்கள் நாட்டு முதலாளி வர்க்கத்தை ஆதரிப்பது வேறு. இரண்டுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. சில சிபிஐ தலைவர்களின் அறிக்கைகளை வாசித்தால் அவர்கள் தேசியவெறியரோ, காங்கிரஸ் தலைவர்களின் உரைகளை அப்படியே ஒப்பிக்கிறார்களோ என்றே தோன்றுகிறது. 'மஞ்சள் அபாயம்!' போன்ற இனவெறியான அவதூறுகளும் சீனத்தலைவர்கள் மீது தொடுக்கப்படுகின்றன. சீனாவைத் தாக்கியும் இந்திய முதலாளி வர்க்கத்தைத் தூக்கியும் டாங்கே எழுதியுள்ள கட்டுரைகள் மட்டுமீறினவாய் உள்ளன. ஸ்டாலினிய மரபுகளில் ஊறியவனுக்குக் கூட அவை குமட்டும். சிபிஎம் தோழர்கள் பலர் இதைக்கண்டு அறுவெறுத்தனர். அது சரியே. ஆனால் இவ்விவகாரம் கூட உடைவுக்கு முதன்மைக் காரணமல்ல. சீன இந்திய எல்லைமோதல்கள் நடந்து சில ஆண்டுகள் கழித்து 1964-ல் தான் கட்சி உடைந்தது.

தேர்தல் கூட்டுகள் சம்பந்தமாகக் கட்சிக்குள் நிலவிய கருத்து மாறுபாடுகளே உடைவுக்கு முதன்மைக் காரணம் என்பது எனது கருத்து. கேரள அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதிலிருந்து கூட்டாளிகள் பற்றிய விவாதம் நடந்து வந்தது. 1964ல் அது ஒரு முடிவை அடைந்தது. 1960 முதல் 64 வரையிலான கட்சி ஆவணங்களை நாம்

ஆராய்ந்தால் பிளவின் உண்மைக் காரணங்களை நாம் கண்டுகொள்ள முடியும். இந்த ஆவணங்களில் நெடுக ஒரு குறிப்பிட்ட தன்மை பரவிக் காணப்படும். அதுதான் பாராளுமன்றக் குறுகல் வாதம். இவ்விசயத்தில் இருதரப்புகளுக்குமிடையில் பெரிய வித்தியாசம் இல்லை. 'மாநிலங்களில் அதிகத் தேர்தல்களிலும் மக்கள் சபையில் அதிக இடங்களிலும் வெல்லும்' அவசியம் என்ற விசயத்தில் இருசாராருக்கும் கருத்தொற்றுமை உண்டு: அதாவது இந்தியாவில் இதுவே கம்யூனிசத்துக்கான பாதை. இத்துடன் சேர்ந்த துணைமுழக்கம் 'காங்கிரஸ் ஏகபோகத்தை உடைத்தெறிவோம்' என்பது. இதில்தான் கருத்து வேறுபாடுகள் வந்தன. காங்கிரஸ் ஏகபோகத்தை உடைப்பதே பிரதானம் – அதனால் ஜனசங்கம் அல்லது முஸ்லீம் லீக் போன்றன பங்காளிகளாகிக் கொண்டாலும் பரவாயில்லை என்பது கட்சித் தலைவர்கள் சிலரின் கருத்து. ஏகபோகத்தை உடைக்க சிறந்த வழி, காங்கிரசுக்குள்ளேயே உள்ள வலதுசாரிகளுக்கு எதிரான முற்போக்கான காங்கிரசாருடன் கூட்டுச் சேருவதேயாகும் என்பது மற்ற சிலரின் கருத்து. ஆக இருக்கிற அரசு அமைப்பைத் தூக்கியெறியச் சிறந்தவழி எது என்ற விவாதமல்ல, மாறாக அதிகப் பதவியிடங்கள் வெல்லச் சிறந்தவழி என்ன என்ற விவாதமே இந்தியக் கம்யூனிசத்தில் உடைவு ஏற்பட்டதன் காரணம். ஆயின் என் கருத்தில், நடைமுறைத் தந்திரத்தில் ஏற்பட்ட வித்தியாசங்களே பிளவு ஏற்பட்டதன் காரணமாகும்.

சீன – இந்திய உறவுப் பிரச்சினை, சோவியத் நாட்டின் கொள்கை பற்றிய மதிப்பீடு போன்ற பிற விசயங்களிலும் வேறுபாடுகள் இருந்தன. ஆனால் கட்சி உடைய முதன்மைக் காரணம் தேர்தல் உத்திகளைக் கையாள்வது பற்றிய வேறுபாடுகளே. உடனடிக்காரணம், டாங்கே கடிதவிவகாரம் ஆகும். 1924ல் டாங்கே பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு தான் சேவை செய்யத் தயார் எனக் கடிதம் எழுதியதாய் சொல்லப்படுகிறது. இதன் நகல் தேசிய ஆவணக் காப்பகத்தில் இருந்தது. இதனைப் பற்றி ஆராய சிபிஐ தேசியக்கவுன்சில் ஒரு விசாரணைக் குழுவை நிறுவியது.

குழுவின் பெரும்பாலோர் கடிதம் போலியானது, டாங்கே குற்றமற்றவர் என்றனர். சிறுபான்மையர் டாங்கே அந்தக் கடிதத்தை எழுதவில்லை என்பதற்கு சான்று எதுவுமில்லை என்றனர். கவுன்சிலின் 32 உறுப்பினர்களில் 1/3 பகுதியினர் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். பிறகு அவர்கள் திரும்பவே இல்லை. டாங்கேயின் கடிதம் என்பது வெளியேற அவர்களுக்கு ஒரு சாக்குத்தான் என்பது வெளிப்படை. அத்துடன் இரு சாராரிடையிலும் அடிப்படை வேறுபாடுகள் கிடையாது என்பதும் தெளிவு. அதுமுதல் இருகட்சிகளும் பரிணமித்து வந்துள்ள விதமே இதற்கு சாட்சி. தேசியக் கவுன்சிலில் சிபிஐக்கு அறுதிப்பெரும்பான்மை இருந்தபோது மாநிலக் கவுன்சில்களில் நிலைமை வேறுமாதிரியிருந்தது. மேற்குவங்கத்தில் சிபிஎம்.முக்குப் பெரும்பான்மை. கேரளாவில் சிபிஐ பெரும்பான்மை விளிம்பில் இருந்தது. ஆனால் இத்தோடு நிறுத்துவதும் தவறான முடிவுகளுக்கே இட்டுச்செல்லும். ஏன் என்று சொல்கிறேன் கேளுங்கள்: மாநிலக் கவுன்சிலிலிருந்து மாவட்டக் குழுக்களுக்குச் சென்றீர்கள் என்றால் சிபிஐ.யே இல்லாமல் போயிருப்பதைப் பார்ப்பீர்கள். கேரளாவில் அடிப்படைய உறுப்பினர்களின் பெரும்பகுதி சிபிஎம்.மில் சேர்ந்து விட்டது. ஆந்திராவிலும் ஏறக்குறைய இதே நிலைமை. மக்களியக்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதித்துவப்படுத்திய இடங்களில் எல்லாம் சிபிஎம்.முக்கே பலம் இருந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால் கட்சி உடைந்தபின் சிபிஎம் தலைவர்கள் பலரும் இடைநிலை ஊழியர்களும் (பின்வந்த ஆண்டுகளில் சிபிஎம்.மிலிருந்து முறித்துக்கொண்டு பீகிங்கைச் சார்ந்து நின்றவர்களும்) உடைவு ஏற்பட்ட காரணத்தை பின்வருமாறு சொன்னார்கள் – அதாவது "சிபிஐ.காரர்கள் 'வலது' கம்யூனிஸ்டுகள். இவர்கள் தேர்தல் வெற்றிகள் மூலம் சீர்திருத்தங்கள் பெறுவதற்காகப் போராடுபவர்கள். சிபிஎம். தான் புரட்சிக்காக நிற்கிறது." சிபிஎம்.மின் இடைநிலை ஊழியர்கள் பலரும் இதை நம்பியே சொன்னார்கள். ஆனால் சிபிஎம் தலைமை புரட்சியில் ஈடுபடவில்லை. தேர்தல் வெற்றிகளுக்கே முனைந்து நின்றது. 1967-ல் மேற்குவங்கத்

தேர்தலில் அவர்கள் வெற்றிபெற்றபின் அவர்கள் நடந்துகொண்ட முறை இதை மிகத் தெளிவாகக் காட்டியது. ஆனால் உடைவுக்குப் பின் சிபிஎம்.மில் சேர்ந்த பெரும் திரளினர் அக்கட்சி அவர்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என மனமார நம்பியே சேர்ந்தார்கள். சிபிஐ, சிபிஎம் இரண்டின் வழியையும் எதிர்த்தவர்களும், சிபிஎம்.மிலேயே சேர்ந்தனர். காரணம் ஒன்றாயிருந்த கட்சியின் புரட்சிகரமான அடிப்படைப்பிரிவினர் பெரிதும் அக்கட்சிக்கே போய்விட்டதால் அதற்குத்தான் ஆற்றல் அதிகம் என நம்பினர். ஆக கம்யூனிஸ்டுப் பாரம்பரியமுள்ள பகுதிகளில் எல்லாம் அணிகள் பெரிதும் சிபிஎம்.முடன் சேர்ந்து கொண்டன.

✦ ஆமாம், நீங்கள் ஏன் சிபிஐ.யிலேயே இருக்கத் தீர்மானித்தீர்கள்?

நான் கட்சி உடைவதை விரும்பவில்லை. இருகுழுக்களுக்குமிடையில் எந்த வேறுபாடும் எனக்குத் தெரியவில்லை. கட்சி உடைந்தால் தொழிற்சங்க இயக்கமும் உடையும் என அஞ்சினேன். அதுவே நடந்தது. சிபிஎம் பிரிந்து போனபின் கொஞ்ச காலத்தில் ஏஐடியுசி.யும் உடைந்தது. விவசாயிகள் சங்கங்கள் உடைந்தன. மாணவர் சங்கங்கள் உடைந்தன. இது இடதுசாரிகளை அதிகமாய் பலவீனப்படுத்தியது. இதனால் காங்கிரசும் பிற வலதுசாரிகளும் மக்களிடையே பிடிப்பு ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. தொழிலாளர் இயக்கம் இப்படி நிரந்தரமாய்ப் பிரிந்தே போகவேண்டுமென்ற வாதம் கண்டனத்துக்குரியதாகும். தொழிற்சங்க ஒற்றுமை சம்பந்தமான பெரிய பெரிய வி யங்களை விடுங்கள், குறைந்தபட்சம் இருகட்சிகளும் தாங்கள் எந்த வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்வதாய் கூறுகின்றனவோ அந்தப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை முன்னிட்டாவது தொழிற்சங்க அமைப்பைப் பொதுவானதாய் வைத்திருந்திருக்கமுடியும். இதை அவர்கள் செய்யாததற்கு அவர்களின் குறுங்குழு வாதமே காரணம் என்று மட்டும் சொல்லிவிடுவது விளக்கமாகாது. தேர்தல்வாதத்துக்கு அவர்கள் முக்கியத்துவம் தந்ததும் பாராளுமன்றத்துக்குப்

புறம்பான போராட்டங்களைப் பாராளுமன்றத்துக்குக் கீழ்ப்படுத்தி விட்டதும்தான் தொழிற்சங்கத்தை அவர்கள் உடைத்துக்கொள்ளக் காரணமாகும். ஏனெனில் தேர்தலில் ஆதரவு கிடைக்க தமக்கென தனித்தனி தொழிற்சங்கம் முதலானவை அவர்களுக்குத் தேவைப்பட்டது. இவ்வாறு இருகட்சிகளும் தொழிற்சங்கம், மாணவர் சங்கம், உழவர் சங்கம் ஆகியவற்றைத் தமக்குள் பங்குபோட்டுக் கொண்டது முதன்மையாய் அவர்களின் தேர்தல் நலன்களுக்குத் தான். ஒவ்வொரு முனையிலும் வர்க்க எதிரிக்கெதிரான வர்க்க ஒற்றுமையைச் சாதித்தல் என்ற அடிப்படைத் தத்துவமே அவர்களின் அரசியலில் இல்லாமல் போய்விட்டது. எப்படியும் சிபிஐ.யிலிருந்து பிரிந்து சிபிஎம்.மில் சேருவதற்கான எந்த அத்தியாவசியமும் எனக்குத் தோன்றவில்லை. இன்றும் நான் சிபிஐ.யிலேயே உறுப்பினனாயிருக்கிறேன். நான் எடுத்த முடிவு சரிதான் என்றே கூறுவேன்.

+ செக்நாட்டில் சோவியத் யூனியன் படையெடுத்தது பற்றி சிபிஐ. தலைமைக்குள் சர்ச்சை எழுந்தது. சிபிஎம். சந்தடியின்றி படையெடுப்பை ஆதரித்தது. ஆனால் சிபிஐ.க்குள் அதற்கு எதிர்ப்பு இருந்தது என்றும் இதற்குக் காரணம் இந்தியாவிலிருந்த 'ஜனநாயகக் கூட்டாளிகளுக்கு மனத்தாங்கல் ஏற்படுத்துவிடக்கூடாது' என்ற விருப்பம் அல்ல என்றும் கேள்வி. இதுபற்றி...

1968-ல் தேசியக் கவுன்சில் ஏகமனதாய் ஒரு தீர்மானம் இயற்றியது. டூப்செ(10) (Dubeek) மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அங்கீகரித்தும், 'மனிதமுகத்துடன் கூடிய சோசலிசத்துக்கு' தமது ஆதரவை வாக்களித்தும் அத்தீர்மானம். பின் சோவியத் நாட்டு ராணுவம் தலையிட்டது. உடனடியாக எங்களிடையே விவாதம் துவங்கியது. எங்களில் பலர் செக்கோஸ்லோவேகியக் கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரிக்க புதுடில்லி செக்கோஸ்லோவேகியத் தூதரகத்துக்குச் சென்றனர். தேசியக் கவுன்சில் உறுப்பினர்கள் சரி சமமாகத் தரப்பு பிரிந்து நின்றனர். சோவியத் நாட்டை ஆதரித்தோர் 35 பேர். நாங்கள்

34 பேர் (உறுப்பினர் பெரும்பாலோர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை). 2 பேர் நடுநிலை. விவாதம் தொடர்ந்தது. வாக்களிக்காதிருந்த 2 பேர் எங்கள் பக்கம் வந்தனர். சோவியத் தலையீட்டை எதிர்த்த அணி பெரும்பான்மையாயிற்று. தாம் தோற்கடிக்கப்படுவோம் என்பதைக் கட்சித் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர். உடனே இறங்கி வந்தனர். உடனடி வாக்கெடுப்பு வேண்டாம், கட்சி முழுவதும் 3 மாத விவாதம் நடக்க விடுவோம், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் யாவற்றையும் சுற்றுக்கு விடுவோம், பிறகு பார்க்கலாம் என்றனர். கட்சி முழுவதிலும் இப்பிரச்சினை சம்பந்தமான அறிக்கைகள் யாவையும் பற்றி விவாதம் நடப்பது நல்லதுதானே என நினைத்து நான் சம்மதித்தேன்: எங்களுக்கு நட்டமில்லை, விவாதம் நடப்பதோ ஆதாயம்தானே என நினைத்தேன். ஆனால் தலைமை தான் சொன்னபடி நடக்கவில்லை.

நான்கு மாதங்கள் கழித்து அடுத்த கவுன்சில் கூடியது. அச்சமயத்தில் சோவியத் நாட்டிலிருந்து ஆட்கள் வந்து குவிந்த வண்ணமிருந்தார்கள். அவர்களில் சிலர் என்னுடனும் வாதித்தார்கள். ஆனால் நான் துளியும் மசியவில்லை. உண்மையில் நான் ஒரு புனைபெயரில் "செக்கோஸ்லோவேகியாவில் நடப்பதென்ன?" என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டேன். அதில் எழுதியவர்கள் எல்லாம் சிபிஐ சார்பாளர்கள். ஆனால் சோவியத் பாதையை எதிர்ப்பவர்கள். ஒரு கட்டுரையாளர்கூட 'சிபிஐ.க்கு எதிரி' என்ற தாக்குதல் வராதபடி தேர்ந்து கொண்டேன். என்னென்ன நெருக்கடிகள் பிரயோகிக்கப்பட்டதோ எனக்குத் தெரியாது. கவுன்சில் கூட்டத்தில் கட்சியந்திரம் தன்சக்திகள் அனைத்தையும் திரட்டியது. பெரும்பான்மை பெற்றது. அதன்பின் உடனடியாக புத்தகம்பற்றி என்னிடம் விசாரித்தார்கள். நான்தான் பொறுப்பு என ஒத்துக்கொண்டேன். என்னைக் கண்டித்தார்கள். என் நூலை சிபிஐ உறுப்பினர்களுக்கு விநியோகிப்பதோ சிபிஐ.யினர் அதைப் படிப்பதோ கூடாது என உத்தரவு அனுப்பப்பட்டது. கட்சிப் பத்திரிகையில் நான் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட

வேண்டும் எனக் கருத்துக் கூறப்பட்டது. New Age-இல் கண்டனம் வெளியிடப்படும் முன்பாக மீண்டும் சிந்தித்து 'நல்ல முடிவு' எடுக்க எனக்கு 15 நாள் கெடுவைக்கலாம் என கட்சித் தலைவர் ஒருவர் யோசனை சொன்னார். புனராலோசனை செய்ய உங்களுக்குத்தான் தரவேண்டும் அவகாசம் என்றேன் நான். இருப்பினும் 15 நாட்கள் அவகாசம் தந்தார்கள். இடையில் சிலர் என்னிடம் வந்து "தப்புதான்" என ஒத்துக்கொள்ள வற்புறுத்தினார்கள். பகிரங்கமாய் என்னைக் கண்டனம் செய்யத் தாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் நான் கட்சியில் ஒரு தலைவன் என்பதோடு செல்வாக்குமுள்ளவன் என்பதைச் சொன்னார்கள். நான் ஒரேயடியில் மறுத்துவிட்டேன். ஆனால் மறுநாளே எல்லா முதலாளியப் பத்திரிகைகளும் சோவியத் படையெடுப்பை விமர்சித்து நூல் எழுதியதற்காக நான் கண்டிக்கப்பட்டதுபற்றி விஸ்தாரமாய் செய்தி வெளியிட்டு விட்டன! இதனால் மொத்த விவகாரத்தையும் எனது கட்சித் தலைவர்கள் புறக்கணித்திருந்தால் நூல் எவ்வளவு பிரதிகள் விற்றிருக்குமோ அதைவிட அதிகப் பிரதிகள் விற்றுப்போயின. இதெல்லாமிருக்க, சிபிஐ.க்குள் விவாதம் நடைபெற்றது என்பதைக் குறித்துக் கொள்ளுதல் இங்கு போதுமானது. சிபிஎம்.மினர் முழுமனதாக படையெடுப்பை ஆதரித்தார்களே.

✦ டிராட்ஸ்கியம் பற்றியும் டிராட்ஸ்கி பற்றியும் உங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

நான் டிராட்ஸ்கியன் அல்லன். ஸ்டாலினே எனது வழிபாட்டுத் தெய்வமாயிருந்தவர். அந்த விக்கிரகம் சுக்கு நூறாய் உடைந்து போனது. அதற்குப் பதிலாக உடையாத புதிய விக்கிரகம் வேண்டுமென நான் விரும்பவில்லை. ஏனெனில் இப்போது சிலைவழிபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. டிராட்ஸ்கி, புகாரின், ரோசா லக்சம்பர், கிராம்சி, லூகாக்ஸ் இன்னபிற மார்க்சியரை எல்லாக் கம்யூனிஸ்டுகளும் சிரத்தையாய்ப் படித்து விமர்சனபூர்வமாய் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன். உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றிலிருந்து இவர்களைக்

கழித்துவிட்டோமென்றால் மார்க்சியம் ஏழ்மைப்பட்டுப்போகும். டிராட்ஸ்கி ஏகாதிபத்திய ஒற்றன், பாசிசக் கைக்கூலி என்ற ஸ்டாலினிய வரலாற்றுத் திரிபை நான் நம்பவில்லை. இத்தகையக் கருத்துகளை இன்று சோவியத் வரலாற்றாளர்களே கைவிட்டுவிட்டார்கள் எனத் தோன்றுகிறது. 60களின் பிற்பகுதியில் சிபிஎஸ்யு வெளியிட்ட புதிய வரலாற்றில் டிராட்ஸ்கி 'பாசிச ஒற்றன்' என்பதற்காக அல்ல, 'சரியான பார்வைகள் இல்லாதவர்' என்பதற்காகவே விமர்சிக்கப்படுகிறார். இந்த மாற்றமும் போதியதல்ல. லூகாக்ஸ் சொன்னது போல, ரஷ்யப் புரட்சியில் டிராட்ஸ்கியின் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால் ரஷ்யப் புரட்சியின் வரலாற்றையே புரிந்துகொள்ள முடியாது. ரஷ்யப்புரட்சியின் கொந்தளிப்பான நாட்களையும் அதில் டிராட்ஸ்கியின் பங்கையும் பற்றிய அருமையான சித்திரத்தை ஜான் ரீடின் 'உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்' தருகிறது. அந்நூல் சமீபத்தில் சோவியத் நாட்டிலிருந்து லெனினின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டதை அறிந்து மகிழ்ந்தேன். 1923-ல் Inprecor-*ல் வந்த அதிகாரவர்க்கமயமாதல் பற்றிய டிராட்ஸ்கியின் கட்டுரை, 'மார்க்சியத்தைக் காப்போம்'* (In defence of Marxism) *'கலை இலக்கியம் பற்றி', 'ரஷ்யப்புரட்சியின் வரலாறு' போன்ற அவரது நூல்கள் முக்கியமான பங்களிப்புகள், மதிப்புக்குரியவைகள். அவரது சில கருத்துகள் இன்றைக்கும் பொருந்துபவை. இதன் பொருள் டிராட்ஸ்கியின் எல்லா எழுத்துடனும் சொல்லுடனும் நான் உடன்படுகிறேன் என்பதல்ல. விமர்சனப் பார்வை மார்க்சியத்தின் வளர்ச்சிக்குத் தேவை.*

✦ 40 ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். பாராளுமன்றத்தில் பிரதிநிதியாயிருந்திருக்கிறீர்கள். சகோதரக் கட்சிகளின் காங்கிரசுகளுக்குப் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறீர்கள். அதன் விவாதங்களில் பங்கு பெற்றிருக்கிறீர்கள். கம்யூனிஸ்ட் இயக்கம் பெரும் வெற்றி பெற்ற இருபகுதிகளில் கேரளா ஒன்று. அங்கு அக்கட்சியின் அடித்தளங்களைக் கட்ட உதவியதில் உங்கள் முன்னோடிப்

பாத்திரம் பற்றி சொல்ல வேண்டியதில்லை. சிபிஐ, சிபிஎம், பிளவுபட்டுள்ள எம்எல் குழுக்கள் ஆகியவற்றை 'மரபு இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம்' என நான் பொதுமைப்படுத்திக் கொள்கிறேன். இந்த மரபு இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் தனக்குள் வேற்றுமைகள் கொண்டிருந்தாலும் பொதுவான அரசியல் சித்தாந்த அடிப்படை கொண்டதாயுள்ளது. இவ்வியக்கத்துக்கு எதிர்காலம் – இந்தியாவில் – இருக்கிறது என நினைக்கிறீர்களா? வேறுவிதமாகக் கேட்டால், இந்தக் கட்சிகளையும் குழுக்களையும் சீரமைத்துவிட முடியுமா அல்லது புத்தம் புதிய வகைக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தோன்றுதல் தேவையாகுமா?

இந்தியக் கம்யூனிசத்தின் கடந்த காலம் முழுவதையுமே மறுத்துவிட வேண்டும் என்ற பார்வையை நான் எதிர்க்கிறேன். பல தவறுகளும் திரிபுகளும் நடந்திருந்தாலும் சோசலிசத்துக்காகவும் புரட்சிக்காகவும் போராடி சகலவிதத் துன்பங்களையும் ஏற்று அனுபவித்த லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் இருந்திருக்கிறார்கள். அநேக உழவர் போராட்டங்களையும், தொழிற்சங்கப் போராட்டங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியவர்கள் அருமையான கம்யூனிஸ்ட் போராளிகளே ஆவர். துயரத்துக்குரிய சேதி என்னவென்றால் தலைமையர்தான் – நான் மேலேகுறிப்பிட்ட காரணங்களால் – தம் திறமைகளையும் ஆற்றல்களையும் புரட்சிகரத் திசைநோக்கி ஒருங்குதிரட்ட முடியாதிருக்கிறார்கள். ஆகவே பழைய அனுபவம் முழுவதையும் அப்படியே புறந்தள்ளி விடமுடியாது என்பதை வலியுறுத்துகிறேன். எந்தப் புதிய கம்யூனிஸ்டு இயக்கமும் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அத்தியாயங்கள் அவ்வரலாற்றில் உண்டு. சிபிஐ, சிபிஎம், எம்எல் குழுக்கள் ஆகியவற்றின் அடித்தளத்தில் சோசலிசப் புரட்சியை விரும்பி அதற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இவர்களை நாம் புறக்கணித்து விடக்கூடாது. இவர்களில் பலர் மக்கள்

போராட்ட அனுபவங்களைப் பெற்றவர்கள். மரபுக்கட்சிகளின் ஸ்டாலினியத்தைச் சுவைத்தறியாத தீவிரவாத இளைஞர்கள் பலரும் மார்க்சியம் – லெனினியத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மார்க்சியம் – லெனினியத்தின் அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்துக் கம்யூனிசச் சக்திகளையும் ஒன்றுபடுத்துவதே கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும் என்பது என் அழுத்தம் திருத்தமான நம்பிக்கை. இதை எப்படிச் சாதிப்பது, ஒரு கூட்டுவிவாதத்தின் மூலம் இவ்வனைத்துச் சக்திகளையும் புதிய பெயரின் கீழே ஒன்று திரட்டிக் கொள்வதா, அல்லது புத்தம் புதிதாய் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி தோன்றித் தீரவேண்டுமா போன்றவற்றை வரலாற்றின் பதிலுக்கு விட்டு விடலாம். ஒவ்வொருவரும் மற்றவரைத் தாக்கிக் கொண்டிருப்பதன் மூலம் ஒற்றுமை வந்துவிடாது. கோட்பாட்டு ரீதியான விவாதங்கள், தோழமையுடன் கூடிய வாதங்கள், பொதுவாக அங்கீகரிக்கப்படும் திட்டத்துக்கான ஒன்றுபட்ட செயல்பாடுகள் மூலம்தான் ஒற்றுமை சாத்தியம். வெவ்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளின் அணிகளும் தம் கோட்பாட்டறிவை முயன்று உயர்த்திக் கொண்டு இப்பெரும் விவாதத்தில் பயனார்ந்த முறையில் பங்குகொண்டால் மட்டும் தான், மேற்படி சாத்தியப்பாடு வெற்றிபெற முடியும். நான் ஒரு நம்பிக்கைவாதி. எனவே வயசாகிப் போன பழைய தலைமுறைத் தலைவர்கள் இக்கடமையில் தவறிவிட்டாலும், இளந்தலை முறையின் புதிய புரட்சியாளர்கள் நிலைமையுணர்ந்து செயல்படுவார்கள் என நான் உறுதியாய் நம்புகிறேன்.

***

குறிப்புகள்:

1. **கே.தாமோதரன்:** இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர். சிபிஐ.யின் தேசியக்கவுன்சில் உறுப்பினராகவும் பாராளுமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தவர். கேரளத்தின் மிகச்சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர்களில் ஒருவராக இருந்த இவர் எழுதிய நூல்களில் 'Marx comes to India', Indian Thought', 'Man & Philosophy' ஆகியன குறிப்பிடத்தக்கவை. தாரிக் அலி 1974-ல் கே. தாமோதரனுடன் நடத்திய இப்பேட்டி -New Left Review வில் முதன்முதலாகப் பிரசுரிக்கப்பட்டது.

கே. தாமோதரனின் கருத்துக்களில் முழுஉடன்பாடு கொள்ளாத மார்க்சியர்களும் (**'பரிமாணம்'** இதிலடங்கும்) அவரது ஒளிவுமறைவற்ற சுயவிமர்சன வகையிலான பேட்டியில், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் 1950களிலிருந்து எழுந்த முக்கியப்பிரச்சினைகளை நிதானத்தோடு மறு ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தூண்டுதலைப் பெறுவர் எனப்பரிமாணம் கருதுகிறது. இந்தியப் பொதுவுடைமை இயக்கம் பிளவுண்டிருப்பதும், ஒவ்வொரு பிரிவின் பார்வையை மட்டுமே முழு உண்மையென அந்தந்தப் பிரிவின் ஆதரவாளர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதும், ஒரு புறநிலையான, மனந்திறந்த ஆய்வைச் செய்ய முடியாமல் தடுத்து வந்துள்ளன. இந்த நிலைக்கு, சோவியத் அல்லது சீனக் கம்யூ. கட்சியின் எல்லா நிலைபாடுகளையும் முழுக்கமுழுக்க, எவ்வித விமர்சனமுமின்றிப் பின்பற்றி வந்தமை வலுவூட்டி யிருக்கிறது. இளந்தலைமுறையைச் சேர்ந்தவர்கள் – குறிப்பாக 1970க்குப் பின்னர் பொதுவுடைமை இயக்கங்களில் சேர்ந்தவர்களுக்கு, இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் வரலாறு அந்தந்தக் கட்சி குழுவின் கண்ணோட்டத்திலிருந்தே எழுதிப் பரப்பப்பட்டுள்ளது. இந்தியக் கம்யூனிசத்தின் கடந்த காலம் முழுவதையும் மறுத்து விடவேண்டும் என்ற பார்வையை 'பரிமாணம்' ஏற்கவில்லை. இந்த இயக்கத்தில் தோன்றிய பிரச்சினைகளில் வெவ்வேறு நிலைபாடுகளைக்

கொண்டவர்கள் அனைவரையும் கருப்பும் வெள்ளையுமாக எளிமைப்படுத்தப்பட்ட வடிவத்தில் வகைப்படுத்திப் பார்த்துவிடக் கூடாது என்று கருதுகிறது. புரட்சிக்காக கட்சிகளிலும் குழுக்களிலும் சேர்ந்துள்ள இளைஞர்கள், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் தோன்றிய முக்கியப் பிரச்சினைகள் சிலவற்றை, சென்ற பரிமாணம் இதழில் ஜேன்மிர்தால் கட்டுரையில் சொல்லப்பட்டிருந்தவற்றை அடுத்து, தாமோதரனின் பேட்டியிலிருந்தும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற காரணம் கருதி அதனைப் 'பரிமாணம்' வெளியிடுகிறது. 'பரிமாணம்' தனது ஒவ்வோரிதழிலும் இந்தியப் பொதுவுடைமை இயக்கம் தொடர்பான பல்வேறு நிலைபாடுகளை வெளியிட விரும்புகிறது.

2. காங்கிரஸ் சோசலிஸ்டுகள்: சோசலிசக் கருத்துக்களை ஏற்றிருந்த, ஆனால் மார்க்சிய சோசலிசத்தை முழுமையாக ஏற்காத – எதிர்த்த – காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள். 1934ல் காங்கிரஸ் சோசலிஸ்டுகள் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தனி ஒரு அமைப்பாகச் செயல்பட்டனர். ஆச்சாரிய நரேந்திரதேவா (இவர் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவர்), ஜெயப்பிரகாஷ்நாராயண், ராம் மனோகர் லோகியா முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

3. 'மக்கள் போர்ப்'பாதை: சோவியத் யூனியனை நாஜி ஜெர்மனி தாக்கும்வரை இரண்டாம் உலகப்போர் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போராகச் சித்தரிக்கப்பட்டது. பிறகு சோவியத் யூனியன் தாக்கப்பட்ட பின் பாசிசத்துக்கு எதிரான 'மக்கள் போராக' அது சித்தரிக்கப்பட்டது. முதல் சோசலிச நாடான சோவியத் யூனியனைப் பாதுகாப்பதென்பது உலகக் கம்யூனிச இயக்கத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்றாக இருந்தபோதிலும், பாசிசத்துக்கு எதிரான போரில் நேச நாடுகளில் ஒன்றாக இருந்த பிரிட்டனின் ஆட்சிக்கு எதிராக இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கைவிடாது தொடரவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குப் பதிலாக, நேச நாடுகளில் ஒன்றான பிரிட்டனின் போர்முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவது, ஏகாதிபத்திய எதிர்ப்புப்

போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவது என்ற நிலைபாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்தது. ஆனால் இந்த நிலைபாட்டின் காரணமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமையை எடுத்துக் கொள்ள முடியாமல் போயிற்று.

4. 'ரணதிவே ஆய்வுரைகள்': 1947 ஜூனில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாடு, வலது சீர்திருத்தவாதமாகவும் காங்கிரசுடன் மேலிருந்து ஐக்கிய முன்னணி அமைத்துக் கொள்வதாகவும் இருந்தது. 1947 டிசம்பரில் மத்தியக் கமிட்டியிலிருந்த 'தீவிரவாதிகள்' ரணதிவே தலைமையில் புதிய தீர்மானத்தை முன்வைத்தனர்: இது ஜூனில் நிலவிய நிலைபாட்டைக் கண்டித்தது. 1948 ஆரம்பத்தில் கல்கத்தாவில் கூடிய கட்சியின் இரண்டாம் காங்கிரசில் முன்வைக்கப்பட்ட ரணதிவேயின் ஆய்வுரைகளுக்கு மேற்படி தீர்மானமே அடிப்படையாக அமைந்தது.

இரண்டாவது கட்சிக் காங்கிரசில் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரணதிவேயின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட ஆய்வுரை, 'கீழிருந்து' மக்கள் ஜனநாயக முன்னணியை அமைக்க அறைகூவியது. தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம், புரட்சிகர அறிவாளி வர்க்கம் (அல்லது ஒடுக்கப்படும் நடுத்தர வர்க்கம்) ஆகியவற்றைக் கொண்ட புதிய வர்க்கக் கூட்டணியை அமைக்க வேண்டுமென்றும், தாம் அமைக்கப்போகும் ஆட்சி, தொழிலாளிகள், விவசாயிகள், சிறுமுதலாளி வர்க்கத்தினர் ஆகியோரின் ஜனநாயக அரசாக இருக்குமென்றும், ஒருகட்ட மக்கள் ஜனநாயகப் புரட்சி மூலம் வன்முறை வழிகளில் இதை அடையவேண்டுமென்றும் ரணதிவே ஆய்வுரை கூறியது. ஒருகட்டப் புரட்சி, அதனை வன்முறை வழிகளில் சாதித்தல் என்ற கருத்தாக்கங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. 'நீடித்த மக்கள் போர்', 'புதிய ஜனநாயகம்' போன்ற மாவோயிசக் கருத்துகளை மறுதலித்தது இந்த ஆய்வுரை. மேலும் ரணதிவே எழுதிய கட்டுரைகள்

மாவோவை எர்ல் ப்ரௌடர் போன்ற புரட்டல்வாதிகளுடன் ஒப்பிட்டுத்தாக்கின. கல்கத்தா ஆய்வுரைகளில் காணப்பட்ட இடது குறுங்குழுவாத மிகைஎளிமை விளக்கம் நடைமுறையில் குறுங்குழுவாத விலகல்போக்காக வெளிப்பட்டது. கட்சிக் காங்கிரஸ் நடந்து முடிந்தபின் வந்த மாதங்களில் சிபிஐ தங்குதடையற்ற அதிதீவிரப் போக்கில் இறங்கியது. தொடர்ந்த வேலைநிறுத்தங்களை நடத்தியது. பகுதி வேலை நிறுத்தம் ஒவ்வொன்றையும் பொது வேலைநிறுத்தமாக மாற்றமுயன்றது. மக்களிடமிருந்து தான் தனிமைப்படக் கண்டதும் பயங்கரவாதம், நாசவேலை, வன்முறை போன்றவற்றில் ஈடுபட்டது. உடனே அரசாங்கம் எதிர்த்தாக்குதல்கள் தொடுத்து ஒடுக்கியது. இதன் விளைவாக 1949 நடுவில் பல இடங்களில் கட்சி முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது.

5. பாண்டுங் உணர்வு: 1954 ஏப்ரலில் சூஎன்லாய் நேருவுடன் ஒரு நட்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். பஞ்சசீலக்கொள்கை என அழைக்கப்பட்ட சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள் இந்த ஒப்பந்தத்தில் இருந்தன. இந்தக் கொள்கைகள் 1955 ஏப்ரலில் இந்தோனேசியாவிலுள்ள பாண்டுங் எனுமிடத்தில் நடந்த ஆசிய ஆப்பிரிக்கத் தலைவர்களின் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டு, இந்த நாடுகள் பின்பற்ற வேண்டிய கொள்கையாக ஏற்கப்பட்டன. சோசலிசமுகாம், ஏகாதிபத்திய முகாம் ஆகிய இரு முகாம்களிடையே ஒரு சமாதான மண்டலமாகக் கூட்டுசேரா நாடுகள் அமையவேண்டும் என்றும், ஒரு சுயேச்சையான வளர்ச்சிப் பாதையை அவை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது படிப்படியாக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சக்தியாக அமையுமென்றும் சீனத்தலைவர்கள் அன்று கருதினர். அன்று வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை சீனக் கம்யூ. கட்சிக்கும் சோவியத் கம்யூ. கட்சிக்கும் சாராம்சமான வேறுபாடு ஏதும் இல்லை என்று கூறலாம். பாண்டுங் கொள்கையை உருவாக்கியவாகளில் சூஎன்லாய், நேரு, நாசர், சுகர்ணோ மற்று SWRS பண்டார நாயகா ஆகியோரடங்குவர்.

6. கெடுபிடிப்போர் (Cold War): இரண்டாவது உலகப்போர் முடிந்த பிறகு அமெரிக்கா கையாண்ட உபாயம். நேரடியான சண்டையில் இறங்காமல் பொருளதார நடவடிக்கைகள், கம்யூனிச விரோதப் பிரச்சாரம் ஆகியவற்றின் மூலமாக சோவியத் யூனியனையும் சோசலிச நாடுகளையும் தனிமைப்படுத்துவதற்காகவும், புரட்சி இயக்கங்களையும் தேசிய விடுதலைப் போர்களையும் கட்டுப்படுத்தவும் அமெரிக்கத் தலைமையிலிருந்த ஏகாதிபத்தியம் செய்த முயற்சியாகும். இந்தக் கெடுபிடிப்போர் அவ்வப்போது தணிவதும் மீண்டும் உயர்ந்தெழுவதுமாயிருக்கிறது.

7. பாஸ்டர்நாக் விவாகாரம்: போரிஸ் பாஸ்டர்நாக் ரஷ்யாவின் புகழ்பெற்ற கவிஞரும் விமர்சகரும் மொழிபெயர்ப்பாளரும் ஆவார். புரட்சிக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களில் மிகப்புகழ் பெற்றவராக இருந்த பாஸ்டர்நாக், மிகுந்த தேசப்பற்று மிக்கவராக விளங்கினார். ஆயினும் 1917 புரட்சி, அதைத் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம்பவங்கள், பிறகு நடைபெற்ற சோசலிச நிர்மாணம் போன்றவற்றில் அவருக்குக் கருத்துவேறுபாடு இருந்தது. 1917 புரட்சியின் வன்முறை பற்றிய அவரது கடுமையான விமர்சனங்களைக் கொண்ட 'டாக்டர் ஷிவாகோ' எனும் நூல் சோவியத் கட்சித் தலைமையினதும் அதன் கட்டுப்பாட்டிலிருந்த எழுத்தாளர் சங்கத்தினதும் கடுமையான தாக்குதலுக்கும் கண்டனத்துக்கும் உள்ளாயிற்று. அதனைத் தொடர்ந்து இந்த நாவலுக்கு நோபல்பரிசு அளிக்கப்பட்டது. இந்த சம்பவம் ஒருபுறம் ஏகாதிபத்தியத்தின் கெடுபிடிப்போருக்கும் சோவியத் விரோத கம்யூ. விரோதப் பிரச்சாரத்துக்கும் பயன்பட்டது. மற்றொரு புறம் ஒரு கருத்துமாறுபாடுள்ள நேர்மையான கலைஞனை கலைஇலக்கிய சித்தாந்தத் தளத்தில் வைத்துப் பரிசிலித்து அதே தளத்திலிருந்து அவருடன் போராட்டம் நடத்த வேண்டியதை விடுத்து, வெறும் நிர்வாகரீதியான நடவடிக்கையிலும் அவரது எழுத்தாளர் சங்க உறுப்பினர் பதவியைப் பறிப்பதற்கான முயற்சியிலும் சோவியத் கட்சித் தலைமை இறங்கியது.

8. மூன்றாம் உலகப் போர் பற்றிய ஆய்வுரைகள்: 1960களில் சீனக்கம்யூ. கட்சிக்கும் சோவியத் கம்யூ. கட்சிக்கும் இடையில் நடந்த சித்தாந்தப் போராட்டத்தில் அணுகுண்டு அபாயம் என்பதைப் பெரிதுபடுத்தி உலக மக்களின் புரட்சிகர ஆயுதமேந்திய போராட்டங்களை மறுதலிக்கும் வகையில் குருச்சேவ் முன்வைத்த புரட்டல்வாத நிலைபாட்டுக்கு எதிராக, சீனக் கம்யூ. கட்சி முன்வைத்த நிலைபாடு. ஆயுதங்களைவிட மனிதர்களே தீர்மானகரமான சக்தி என்பதும், உலகில் புரட்சி இயக்கங்கள் வளர்ச்சியடைந்தால் அவை மூன்றாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்தும் அல்லது மூன்றாம் உலகப் போர் மூண்டால் அது பல நாடுகளில் புரட்சிகளைத் தோற்றுவிக்கும் என்பதும் சீனத் தலைவர்களின் நிலைபாடு. சமாதான சகவாழ்வு என்ற பெயரில் புரட்சிகர இயக்கங்களை நம்பிக்கை இழக்க வைத்த குருச்சேவின் புரட்டல்வாத மார்க்கத்தைவிட அவ்வியக்கங்களுக்கு ஊக்கம் தந்த சீனநிலைபாடு சாராம்சத்தில் சரியானதே என 'பரிமாணம்' கருதுகிறது.

9. II Manifesto: இத்தாலியிலுள்ள ஒரு சுயேச்சையான மார்க்சிய சஞ்சிகை.

10. அலெக்சாண்டர் டுப்சே: செக்கோஸ்லாவேகியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச்செயலராக இருந்தவர். சோவியத் யூனியனின் இறுக்கமான கட்டுப்பாட்டிலிருந்தும் அதிகாரவர்க்கக் கம்யூனிசத்தின் பிடியிலிருந்தும் செக். கம்யூனிஸ்ட் கட்சியை விடுவித்து ஜனநாயக உரிமைகளைப் பரவலாக வழங்கி கருத்துச் சுதந்திரத்தைப் பரவலாக்கி 'மனித முகத்துடன் கூடிய' சோசலிசத்தை உருவாக்க விரும்பிய இவருக்கு செக்நாட்டுத் தொழிலாளிவர்க்கம் உட்பட செக்மக்களின் மிகப்பெரும்பாலாரின் ஆதரவு இருந்தது. 1968-ல் சோவியத்யூனியன் செக்நாடு மீது ராணுவப் படையெடுப்பு நடத்தி அதை ஆக்கிரமித்த பிறகு டுப்சே பதவியிலிருந்து இறக்கப்பட்டார்.

ஆசிரியர்.

3. "வெண்மைப் புரட்சி"

- எஸ்.வி. இராசதுரை

பி.எஸ். பவிஸ்கரும் ரந்தி ஜார்ஜும் கூறுவது போல "ஐரோப்பாவின் பொங்கிவழியும் பால்மடிகளுக்கும் இந்தியாவின் தகித்துக்கிடக்கும் பால் பண்ணைகளுக்கும் இடையில் போடப்பட்ட முடிச்சின்" நேரடிவிளைவே 'வெண்மைப் புரட்சி' அல்லது பால்வளத்திட்டம் [Operation Flood (OF)]. அதிகாரிகளின் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகள், பச்சைப் பொய்கள், 'ஏழை மக்களுக்கு உதவுவதற்காகவே உருவாக்கப்பட்டது' என்னும் வழக்கமான பகட்டுரைகள் போன்றவை OF-இன் உண்மையான தன்மையைப் புரிந்துகொள்ள விடாதபடி மூடிமறைத்துள்ளன. OF திட்டத்தைச் சரியானபடி புரிந்து கொள்ள பி.எஸ். பவிஸ்கர், ரந்தி ஜார்ஜ், டாக்டர் க்ளாட் ஆல்வாரெஸ், பரத் டோக்ரா போன்ற சமுகவியலாளர்களும் திறனாய்வாளர்களும் பல முயற்சிகள் செய்துள்ளனர்.

க்ளாட் ஆல்வாரெஸ் மேற்கத்திய விஞ்ஞானம்-தொழில்நுட்பம் ஆகியவற்றின் உள்ளார்ந்த சுரண்டல் தன்மை பற்றியும் பன்னாட்டு மூலதனக் குழுமங்களின் கொள்ளை பற்றியும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் மார்க்சியவாதியல்லர்; ஆனால் மூன்றாம் உலக நாடுகளின் சுதேசித் தொழில்நுட்பம், விஞ்ஞானம், பண்பாடு முதலியவற்றுக்காக வழக்காடுபவர். அவரது டாக்டர் பட்டத்துக்கான ஆய்வுரை Homo Faber: Science & Technology in the west, India & China from *1500* to 1972 (Allied Publishers), பிரிட்டிஷ் மார்க்சியரும் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஜோசஃப் நீதாம் போன்றவர்களின் பாராட்டுதல்கள் பெற்றுள்ளது. 'வெண்மைப் புரட்சி பற்றி அவர் எழுதிய 'White Lie' என்ற கட்டுரை, நாடாளுமன்றத்தில் பெரிய சர்ச்சையை உருவாக்கி, பின் எல். கே. ஜா தலைமையிலான விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கிற்று. ஆனால் அரசாங்கம் நியமிக்கும் எல்லா "விசாரணைக் குழு" க்களையும்

போலவே, இந்தக் குழுவினது விசாரணையின் வரம்புகள், OF-க்குப் பொறுப்பானவர்கள், மைய அரசாங்கம், பன்னாட்டு மூலதனக் குழுமங்கள் போன்றவற்றின் மீது ஆல்வாரெஸ் சுமத்திய குற்றச்சாட்டுகள் பெரும்பாலானவற்றை விசாரணையிலிருந்து விலக்குவதாக அமைந்தது. எனவே தனது எதிர்ப்பைத் தெரிவிக்கு முகமாக, ஆல்வாரெஸ் இந்த விசாரணைக் குழுமுன் தனது குற்றச்சாட்டுகளை முன்வைத்துவிட்டு, விலகவேண்டியதாயிற்று.

க்ளாட் ஆல்வாரெசின் இக்கட்டுரை, Imperialism through Food Aid என்ற அவரது மற்றொரு கட்டுரை, பரத் டோக்ரா முதலியோர் எழுதிய கட்டுரைகள், வெண்மைப் புரட்சித் திட்டத்தின் அடிப்படை ஆவணங்கள் முதலியன பேராசிரியர் ஜனி கோத்தாரியின் அறிமுகத்துடன நூல் வடிவில் வெளிவந்துள்ளன. (2) இந்த நூலில் கூறப்படும் முக்கியக் கருத்துகளைத் தொகுத்துக் கூறும் எனது கட்டுரை, OF குறித்த வேறுசில கட்டுரைகளிலுள்ள சில தகவல்களையும் உள்ளடக்குகிறது. (3)

"வெண்மைப்புரட்சி" யும் ஏகாதிபத்தியத்தின் உணவு உதவியும்

ஏகாதிபத்தியம் உணவு உதவி வழங்குவதன் நோக்கத்தை ரத்தினச் சுருக்கமாக பின்வருமாறு கூறிவிடலாம்: "இன்று நமது சரக்குகளை உதவியாகப் பெறும் மக்கள், நாளை நம்மிடமிருந்து அவற்றை விலைக்குப் பெறும் வாடிக்கையாளராவார்கள்" (4). பன்னாட்டு முதலாளிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் உணவை ஒரு ஆயுதமாய்ப் பயன்படுத்துகிறார்கள். இதை மூன்றாம் உலக மக்கள்- நம்நாட்டு மக்கள் உட்பட - நீண்ட காலமாகவே அறிந்திருக்கிறார்கள். அமெரிக்காவின் உணவு உதவித் திட்டம் 1954-ல் துவங்கப்பட்டது. அப்போதிருந்து அத்திட்டம் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையின் பகுதியாய் இருந்து வந்திருக்கிறது. அதன் பண்ணையதிபர்கள் நலன்களுக்கும் ஏகபோக மூலதன (கார்ப்பரேட்) நலன்களுக்கும் சேவை செய்வதாய் இருந்து வந்திருக்கிறது.

(இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஆதரவானவை). இந்தக் கொள்கையின் நோக்கங்கள்-

1. அமெரிக்கச் சந்தைகளில் தேங்கிக் கிடக்கும் உபரி (உணவுச்) சரக்குகளைக் கழித்துக் கட்டுதல்.
2. அமெரிக்க பண்ணைப் பண்டங்களின் விற்பனைக்குப் புதிய சந்தைகள் பெறுதல். அதன்மூலம் வணிகப் பற்றாக்குறைகளைச் சரிக்கட்டுதல்.
3. மூன்றாம் உலகில் அமெரிக்க ராணுவத் தலையீடுகளுக்குத் துணைபுரிதல்.
4. வெளிநாட்டு உணவுப் பொருளாதாரங்களில் அமெரிக்க விவசாய வணிகக் குழுமங்கள் மேலும் ஊடுருவுதல்.
5. அமெரிக்கப் பொருளாதார ராணுவ நலன்களுக்கு ஒத்ததாக மாறும்படி வெளிநாட்டு அரசாங்கங்களை நிர்பந்தம் செய்தல்.

இந்த நோக்கங்களை முன்னிட்டு Public Law 480 (PL480) என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. PL480 மூலம் வந்த 'உதவி' இந்தியாவில் பெரிய சீரழிவை ஏற்படுத்தியது. இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு ராத்தல் 480 தானியத்தாலும், உள்நாட்டுத் தானிய உற்பத்தி சுமார் ஒன்றரை ராத்தல் குறைந்து போனது. இந்தியாவின் இறக்குமதியால்விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கான விலை குறைந்து போனதே இதற்குக் காரணமாகும். உள்நாட்டுத் தானியங்களை அரசாங்கம் போதுமான அளவு கொள்முதல் செய்யவில்லை என்பதையும் மாறாக PL480 இறக்குமதியையே அதிகமாகச் சார்ந்து நின்றது என்பதையும் இந்தியப் பொருட்களைச் சமத்துவமான முறையில் பங்கிட்டிருந்தால் உள் நாட்டு உற்பத்தியே போதுமாயிருந்திருக்கும் என்றும், அதனால் இறக்குமதியை முற்றிலுமாகத் தவிர்த்திருக்க முடியாவிட்டாலும் அதைக் குறைத்திருக்கவாவது முடிந்திருக்குமென்றும் பொருளியலறிஞர் கே. என். ராஜ் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இம்முறையில் (1951-1952, 52-53 ஆகிய ஆண்டுகளில் தவிர மற்ற காலங்களில்) உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டு

மட்டுமே நமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியும் சாத்தியம் இருந்தது. ஆனால் அது பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. இறக்குமதியை மென்மூலம் சார்ந்து நின்றமை, நமது வெளி நாட்டுச் சார்பை அதிகரித்தது. அது மட்டுமல்லை, ரூபாயில் நாம் செலுத்திய தொகையை நம் நாட்டிலேயேஅமெரிக்கா நமக்கே எதிரான இழிவான நோக்கங்களுக்குப் பயன்படுத்தியது.

உணவு தானியங்களில் தன்னிறைவடைய இந்திய ஆட்சியாளர்கள் போட்ட அடுத்த திட்டம் 'பசுமைப் புரட்சி'. இதன் மோசடியான தன்மை பற்றி ஏற்கனவே நிறைய ஆய்வுகள் வெளிவந்துவிட்டன. (5) அடுத்து அரசாங்கம் 'நீலப்புரட்சி' (மீன்வளத் திட்டம்) நடத்தியது. இது ஆயிரக்கணக்கான மீனவரின் வாழ்வை நாசமாக்கி பன்னாட்டு மூலதனக்குழுமங்களுக்கு ஆதாயம் சேர்த்தது. இப்போது 'வெண்மைப் புரட்சி' பன்னாட்டுக் குழுமங்களுக்கு மேலுமொரு வேட்டைக் காட்டைத் திறந்துவிட்டுள்ளது.

பாலும் பால்பொருள்களும் முக்கியமான புரத உணவாக உள்ளது. காலகாலமாக கால்நடைகளின் எண்ணிக்கையை இயற்கையான முறையில் அதிகரித்ததன் மூலம் பாலுற்பத்தி பெருகிவந்தது. கால்நடைகள் பெரிதும் உழவுமாடுகள் வண்டிமாடுகளுக்காகவே இனம் பெருக்கப்பட்டு வந்தன. மனிதர்களால் உண்ணமுடியாத விவசாயக் கழிவுகள், தழைகள் முதலியவற்றை கால்நடைகளுக்குத் தீனியாக அளித்துவந்தனர். ஆனால் மக்கள் தொகையும் கால்நடைகள் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வந்ததால் நிலமானது அதன் இயற்கை வரம்புகளைத் தெரிவித்துக் கொள்ளத் துவங்கியது. நிலத்தைச் சரியான முறையில் பங்கீடு செய்து அதன் மூலம் தீவன உற்பத்தியைப் பெருக்கி வளர்ப்பினங்களையும் மேம்படுத்தி வந்தால் மேற்சொன்ன பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும். ஆனால் சரியான நிலப்பங்கீடென்பது உணவுப் பிரச்சினையைத் தீர்க்க இன்றியமையாதது என்பதையும் அது கண்டு கொள்ளவில்லை. மாறாக

வெளிநாட்டு 'உதவிகள்' மற்றும் தொழில்நுட்ப இறக்குமதி ஆகியவற்றையே தொடர்ந்து சார்ந்திருந்தது, இருக்கிறது.

சுதந்திரத்துக்கு முன்பிருந்தே நவீனமுறைப் பால் உற்பத்தியில் வெளிநாட்டார் செல்வாக்கு இருந்து வந்தது. சுதந்திரத்துக்குப்பின்பும் இது முழுவிசையோடு தொடர்ந்தது. 1953-62 காலத்தில் UNICEF இந்தியாவில் பால் பண்ணைகளைக்கட்டுவதிலும் அவற்றுக்கு சாதனங்கள் வழங்குவதிலும் பெருமளவில் முதலீடு செய்தது (6). பால்பண்ணைத் துறையில் ஈடுபட்டுள்ள இடைநிலை நிர்வாக ஊழியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்காக FAO மூலம் டென்மார்க் 1951லிருந்து உதவியளித்து வந்தது. (7) இந்த வெளிநாட்டுத்தாக்கம் மேலும் ஆழப்பட வழிசெய்து தந்திருக்கிறது பால்வளத்திட்டம். நிர்வாக வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம், பண்ணைச் சாதனங்கள் மற்றும் யந்திரங்களில் வெளியாரின் முதலீடு போன்றன நமதுநாட்டுப் பொருளாதாரத்தில் கால்நடைத்துறைக்கு நிதியாதாரங்களை ஒதுக்கீடு செய்யும் முறையில் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. 1947-72 காலத்தில் பால் பண்ணைச் சாதனங்கள் மற்றும் பண்டங்கள் என்ற வடிவில் இந்தியா 13.3 கோடி டாலர் மதிப்புள்ள 'உதவிகளைப்' பெற்றது.

'அமுல்' வளர்ந்த கதை

வழக்கமாக நமது நாட்டின் நகர்ப்புறப் பண்ணைகள் தமக்கு வரும் புதுப்பாலின் பற்றாக்குறையை ஈடுகட்ட இறக்குமதியான மலிவு விலைப் பால்பவுடரையே சார்ந்திருந்தன. குஜராத் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு (Gujarat Co-operative Milk Manufacturers' Federation-GCMMF அல்லது அமுல் தயாரிப்பாளர்கள்) உட்பட பால் பண்ட உற்பத்தியாளர்கள் குழந்தைப் பாலுணர்வு மற்றும் பாலடைக்கட்டி போன்றவற்றுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால்பவுடரையே பயன்படுத்தினர். ஆனால் உள்நாட்டு உற்பத்தித் திறன் வளர்ந்து விட்டதால் 1970க்கு முன்பே இவ்வகை வணிகரீதி இறக்குமதிகளின் அளவும் தேவையும் குறைந்து விட்டது. பெரும்பாலும் இந்த இறக்குமதியும் அதன் தாக்கமும் (நகரத்து) பால்

பண்ணைகளுக்குள்ளேயே உணரப்பட்டது. நாட்டின் பிற பகுதிகளில் இல்லை. 1960களின் பிற்பகுதியில் அமுல், நாட்டின் மிகப்பெருமளவான பால்பவுடரையும் வெண்ணையையும் உற்பத்தி செய்யும் தொழில்நிறுவனமாயிற்று. இந்தியச் சந்தையைக் கணிசமாய்க் கைப்பற்றிக் கொள்ள இறக்குமதிப் பால்பவுடர் முயன்ற இக்கால கட்டத்தில் அமுலுக்குக் கடுமையான சரிவு ஏற்பட்டது. ஆனால் EEC நாடுகளின் அபரிமித உபரிப் பால் பண்டங்கள் நிலைமையைத் திசை மாற்றிவிட்டன. (8) இந்த உபரி தற்செயலாய் ஏற்பட்டதல்ல, 60களில் EEC நாடுகள் மேற்கொண்ட விவசாயக்கொள்கையின் விளைவாகும் அது. அந்நாடுகளில் பண்ணை உற்பத்திப் பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலையைவிட கூடுதலான விலை தரப்படுமென விவசாயிகளுக்கு உத்திரவாதம் தரப்பட்டது. இதனால் அவர்கள் உற்சாகமாக உற்பத்தியை விரிவுபடுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தார்கள். இந்நிலையில் இந்த உபரியை வெளியே கடத்த சிறந்த வழி வெளிநாட்டுப் பண்ணைகளுக்கு ''உதவுவதே'' என கருதப்பட்டது. இந்த முடிவு எடுக்கப்படக் காரணங்களாவன—

1. உலகச் சந்தைகளில் பால்பண்ணைப் பொருள்களுக்கு கிராக்கி குறைவாக இருந்தமை.
2. உள்நாட்டு நுகர்வை மேற்கொண்டும் அதிகரிக்க முடியாமை.
3. சேமித்து வைப்பதற்கு ஆகும் அதிகச் செலவு.
4. பண்ணையின் உற்பத்திப் பொருள்களைப் பெரிய அளவில் கால் நடைத் தீவனமாக உபயோகிக்க முடியாமை.
5. சலுகை விலையில் சோவியத் முகாம் நாடுகளுக்கு விற்றால் ஏற்படக்கூடிய உள்நாட்டு நுகர்வாளர்களின் எதிர்ப்பு.

உபரியில் ஒரு பகுதி தானமாகத் தரப்பட்டது. (மொத்த உபரியில் இது மிகச்சிறிய பங்கே. மேலும் இத்தானம் EEC நாடுகளுக்கு அரசியல் ரீதியில் ஆதாயமே அளித்தது). என்றாலும் அதன்மூலம் OF வெற்றிபெற்றால்

அது பிறநாடுகளிலும் இத்திட்டத்தைத் துவங்கி நடத்த வாய்ப்புகளை உருவாக்கும்; இதனால் உபரியை வெளியேற்ற அதிக வாய்ப்புக் கிடைக்கும்; மேலும் வருங்காலத்தில் பால்பண்டங்கள், பால்பண்ணைத் தொழில் நுட்பம் ஆகியவற்றின் விற்பனைக்கு அது வாயில்களைத் திறந்துவிடும். ஆகவே உபரியைக் கொஞ்சம் தானம் செய்வதில் நீண்டகால நோக்கில் லாபமிருந்தது.

ஐரோப்பிய மிச்சமீதிகளை இலவசமாய் இந்தியாவின் தலையில் கட்டுவதில் பொதிந்திருந்த ஆபத்தை 'அமுல்' கண்டு கொண்டு விழிப்புற்றது. அந்நியப் பால் பொருள்கள் இந்தியச் சந்தையில் தாராளமாய்க் குவிந்தால் 'அமுலு'க்கிருக்கும் பெரிய லாபம் முழுக்க அடிபட்டு விடும். எனவே இந்த புதிய சூழ்நிலைமையைத் தனக்குச் சாதாகமாகக் கையாள 'அமுல்' முடிவுசெய்தது. OF அவதாரம் எடுத்த கதை இதுதான். இது வர்கீஸ் குரியனின் திருவுளத்தில் ஜெனித்ததாகும். இவர் அமுல் கூட்டிருப்புக் குழுமத்தில் (JSC) 1950 முதல் 1983 வரை ஊழியம் புரிந்தவர். அமுல், இந்தியாவின் 30 பெரிய கம்பெனிகளில் ஒன்று; மிகப்பெரிய விவசாயம் சார்ந்த வணிக நிறுவனமும் ஆகும். இத்திட்டத்துக்கான வித்தை உலக உணவுத்திட்டத்திலிருந்து (World Food Project-WFP) அமுல் எடுத்துக் கொண்டது. அத்திட்டம் 1957-ல் 'சரிவிகித முறையில் கால்நடைகட்குத் தீவனமிடுவது மற்றும் பால்வளத்தை அதிகரிப்பதற்காகத் துவங்கப்பட்டதாகும். இதற்காக WFP ால் 45,885 மெட்ரிக்டன் மக்காச்சோளமும் 24,391 மெ.டன் சோளமும் அமுலுக்கு வழங்கப்பட்டன. மேலும் 10,552 மெ.டன் வெண்ணையெடுத்த பால்பவுடரும் (Skimmed Milk Powder-SMP) வழங்கப்பட்டது. பெயரளவுக்கு இவற்றுக்கு மெ.டன்னுக்கு ரூ. 350 – வீதம் வசூலிக்கப்பட்டது. வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தானியங்களைக் கால்நடைத் தீவனமாக மாற்றி விவசாயிகளுக்கு விற்றதில் அமுலுக்கு லாபப் பங்கு கிடைத்தது. குழந்தைப் பாலுணர்வுக்காக SMP-யை இறக்குமதி செய்துவந்த அமுல், SMP-யையும் வெண்ணையெண்ணையையும் (Butter Oil-BO) பெரிய அளவுகளில் புழங்கும் மேற்படி திட்டத்தால் தனக்கு

ஏராளமான ஆதாயம் கிடைக்கும் வாய்ப்பைக் கண்டு கொண்டது. (ஆதாயங்களில் ஆகப்பெரிய பங்கை தான் அமுக்கிக் கொள்வதற்கு வேண்டிய வசதியும் அரசியல் செல்வாக்கும் அமுலிடம் இருந்தது).

இத்திட்டத்துக்கு 'Operation Flood' என்ற திருநாமம் சூட்டப்பட்டு, ஒரு புதிய சித்தாந்த ஆடை அதற்கு உடுத்தப்பட்டது. ''புதிய உணவு உதவி பழைய உணவு உதவிகளில் இருந்து வேறுபட்டதாகும். முன்பெல்லாம் அவை ஏழைகள் நேரடியாய்த் துய்க்கத்தக்க தானமாய் வழங்கப்பட்டது. இப்போதோ அவை பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும்; நீண்டகாலப் பால்பண்ணை வளர்ச்சியை நோக்கிய முதலீடுகளுக்கு இதன் மூலம் நிதி திரளும்.'' PL480 வகையான எதிர்விளைவுகளைத் தவிர்ப்பதற்காக உணவு உதவியானது உள்நாட்டுச் சந்தையில் கிடைக்கும் பாலின் விலைக்கே ஏறத்தாழ விற்கப்படும். ''சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகள் கூட்டுறவுகளில் ஒழுங்கமைக்கப்படுவர். இதனால் அவர்களின் பண்டங்களுக்கு நியாயவிலை கிடைக்கும்.திட்டம் முடியும்போது (1981) பால்நுகர்வு அளவு தலைக்கு 107 கிராமிலிருந்து 180 கிராமாக உயர்ந்திருக்கும்''

இதுபோன்ற உயரிய நோக்கங்கள் திட்டத்தில் கூறப்பட்டன. திட்டத்துக்கு சமூக ஒப்புதலைப் பெற பால் ஒரு அத்தியாவசியமான சைவ உணவு என்று வாதிடப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதில் அமுலுக்கு சிரமம் ஏதும் இருக்கவில்லை எனெனில் அமுலிடம் சம்பளம் வாங்கும் குரியன் இந்தியப் பால்பண்ணைக் கார்ப்பரே னில் (Indian Dairy Corporation-IDC) தலைவராக இருந்தார். இக்கார்ப்பரேசன் 1970-ல் திட்டத்தை நிர்வாகம் செய்வதற்காக இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. தேசியப் பால்பண்ணை வளர்ச்சி வாரியத்துக்கும் (National Dairy Development Board-NDDB) அவர் தலைவராயிருந்தார். 1965 ஆரம்பத்தில் நிறுவப்பட்ட இவ்வாரியம் திட்டத்துக்குத் தொழில்நுட்ப ஆலோசனை தரும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. NDDB, IDC,

ஆகியவற்றின் இயக்குநர் குழுவில் அமுல் கம்பெனி ஆட்களும் குசராத்திகளும் பெரும்பான்மையராக இருந்தனர். இவர்களே திட்டத்தின் பயனை அனுபவித்தவர்களுமாவர்.

'வெண்மைப்புரட்சியின்' முதல் கட்டம் (OF-I) 1970-ல் துவங்கப்பட்ட போது EEC 10,26,000 மெட்ரிக்டன் SMP-யையும் 42,000 மெ.டன் BO வையும் WFP மூலமாக இந்தியாவுக்கு உதவியாக அளித்தது. இவை நகர்ப்புறப் பண்ணைகளுக்கு விற்கப்பட்டன. (இப்பண்ணைகள் இவற்றைக் கொண்டு பால் தயாரித்தன). இதில் கிடைத்த நிதி கிராமப் பகுதிகளில் புதுப் பால் உற்பத்தியிலும் கொள்முதலிலும் முதலீடு செய்யப்பட்டது. கிராமத்துப்பால் நகரங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் OF-I திட்டம் 1975-ல் முடியுமெனக் கூறப்பட்டது. பின்னர் மேலும் 6 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. (1981 வரை).OF-I முடிவதற்குள் திட்டத்தின் இரண்டாம் கட்டம் (OF-II) 1978 ஜூலையில், முன்பிலும் கூடுதலான செலவுத் திட்டத்துடன் (ரூ. 485 கோடி) 1985-ல் முடியும் விதத்தில் திட்டமிடப்பட்டுத் துவங்கப்பட்டது. திட்டம் துவங்கிய பின் அமுலின் பண்ணைகள் துரிதமாக விரிவடைந்தன. OF-II முடிவடையும்போது அனைத்துப் பண்ணை விரிவாக்கப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டிருக்கும்: இவற்றில், அமுலுக்காக ரூ. 2 கோடி செலவில் பரோடாவிலிருந்து ஆனந்துக்குப் (9) போடப்படும் 57கிமீ நீள எரிவாயுக் குழாய்களும் அடங்கும். ஆனந்திலிருந்து டெல்லிக்கும் கல்கத்தாவுக்கும் பெரிய அளவில் திரவப்பால் அனுப்பப்படுகிறது. கொள்கல வாகனங்களுக்கும் பாரவண்டிகளுக்குமான முதலீடு OF இலிருந்து கிடைக்கிறது. நாட்டின் மிகப்பெரிய குழந்தைப் பால் உணவு தயரிப்பாளர்களாக அமுல் வளர்ந்திருக்கிறது. சந்தைக்கு வரும் குழந்தை உணவில் அமுலின் குழந்தை உணவு 55% க்கும் அதிகம். இந்திய அரசாங்கத்துக்கும் WFPக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கு மாறாக, இறக்குமதிச் சரக்குகளில் பெரும்பகுதி அமுலின் கட்டுப்பாட்டில் உள்ள குஜராத் பண்ணைகளுக்குத் திருப்பி விடப்பட்டன. இவை

குழந்தைப் பாலுணவு மற்றும் பாலடைக்கட்டி உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டு புது உறைகளில் அடைக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்கப்பட்டன. மற்ற மாநிலங்களின் பண்ணை வளர்ச்சிக்கென்று ஒதுக்கப்பட்ட தொகைகளும் குஜராத்துக்கே அனுப்பப்பட்டன.

அதிகரிக்கும் வெளிநாட்டுச் சார்பு

OFக்கு முந்திய கட்டத்தில் வெளிநாட்டுச் சார்பு கொண்டிருந்த பால் பண்ணைகள் என்பன அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இருந்தன. திட்டத்தின் விளைவாக இந்நிலை மாறியது. பால்வளத்துறை முழுவதும் EEC நாடுகளின் விநியோகத்தைச் சார்ந்தியங்க வேண்டியதாயிற்று. இன்று 150 பண்ணைகளுக்குக் குறையாமல் இறக்குமதிப் பால்பவுடரையும் வெண்ணையெண்ணையையும் தமது தொழிற் பாட்டுக்காக சார்ந்து நிற்கின்றன. ஏனெனில் இப்பவுடரையும் எண்ணெயையும் கலந்து தயாரிக்கும் பாலின் விலை புதுப் பாலை விட மலிவாயுள்ளது. மேலும் இறக்குமதிச் சரக்கின்மீது ஒரு 'தனிச்சுவை' உணர்வு உருவாக்கப்பட்டு விட்டதால், பண்ணைகள் பால்பவுடரை இறக்குமதி செய்வதைத் தடுக்கவும், கூட்டுறவு அமைப்புகளிலிருந்து புதுப்பாலை வாங்கும்படி அவற்றை நிர்பந்திக்கவும் வேண்டிய நிலை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. பெருமளவில் பண்ணைச் சாதனங்களை இந்தியா இறக்குமதி செய்ததினாலும் EEC பயனடைந்துள்ளது. 1987ல் 'உதவி' முடிந்துவிடும். அதற்குப் பிறகும் EEC நமக்கு உதவி வழங்குமா அல்லது சரக்குகளை விலைக்கு விற்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இதற்கிடையே ஐரோப்பிய SMPயின் விற்பனை விலை (பால்வளத் திட்டத்துக்கு) முன்பு ரூ. 1200/ டன் ஆக இருந்தது, இப்போது ரூ. 14000/ டன் ஆக உயர்ந்துள்ளது.

OFஇன் 'சமுதாயக் குறிக்கோள்கள்' என்னாயிற்று பார்ப்போமா? நடுத்தர வர்க்கத்தினருக்கும் பணக்காரர்களுக்கும் இப்போது பால் ஏழெட்டு வடிவங்களில் கிடைக்கிறது. ஏழைகள் புரதச்சத்துக்கு தானியங்களையும்

பருப்புகளையும் உபயோகித்து திருப்திபட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று அதிகாரிகள் வெளிப்படையாகக் கூறகிறார்கள்! பவுடரும் எண்ணெய்யும் கலந்து தயாரிக்கும் பாலுக்கும் உள்நாட்டில் உற்பத்தியாகும் புதுப் பாலுக்கும் விலையில் வித்தியாசம் இருந்து வருகிறது. இதனால் உள்நாட்டுப்பாலுக்கு விலை குறைக்கப்பட நேர்கிறது. பால்வளத் திட்டத்தின் பெரும்பகுதி நிதி, மூலதனம் அதிகம் தேவைப்படும் பால் பதனத் தொழிற்களங்களாகிய பால் பண்ணைக் கட்டமைப்பை நிறுவச் செலவிடப்பட்டுள்ளது. இத்தகையத் தொழிற்களங்கள் எந்த அளவுக்கு பெருக்கப்பட்டு விட்டன என்றால் அவற்றில் பலவற்றுக்கு பதப் படுத்துவதற்குப் போதுமான பாலே கிடைப்பதில்லை. மேலும் இத்தகையத் தொழிற்களங்களை நிருவகிக்கும் செலவு மொத்தமும் கூட்டுறவு நிறுவனங்களின் தலையில் கட்டப்படுகிறது. இதனால் பெரிதும் நட்டமே இறுதிவிளைவு. இத்தொழிற்களங்களை எப்படியாவது அவற்றின் முழுத்திறனோடு இயங்க வைக்க வேண்டும் என்பதற்காக OF-IIன் தொழில்நுட்பப் பொருளாதார நடைமுறைச் சாத்தியம் பற்றிய அறிக்கை கூறும் யோசனையாவது: '' நமக்குக் கிடைத்துள்ள பாடம், இறக்குமதிப் பொருள்களிலிருந்து மீண்டும் பால் பொருள்களைத் தயாரிக்கும் வேலை கிராமத்திலிருக்கும் பால் வழங்கும் பண்ணைகளில் செய்யப்படவேண்டும். இதனால் இறக்குமதிப் பவுடரின் பயன் விவசாயிகளின் (பால்) சங்கங்களுக்குக் கிட்டும் வகையேற்படும். கிராமத்து விவசாயிகள் பெரு நகரங்களுக்கு பால் விநியோகம் செய்ய முடியும் என்பதுடன், தமது பண்ணைகளைச் சுற்றியுள்ள சிற்றூர் பேரூர்களுக்கு பால் மற்றும் பால்பொருட்களை வழங்கவும் முடியும்.'' இதன் வெளிப்படையான பொருள் என்ன? கறந்த பாலை பெருநகரங்களில் விநியோகிக்க வேண்டும், பவுடர்பாலை சிற்றூர், பேரூர்களுக்கு தந்துவிட வேண்டும் என்பதுதானே?

OF-இன் பயனாக பால்பவுடர் உற்பத்தி 80000 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. 1976-ல் பால் பவுடர்

இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டது'' என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்தியாவில் பால் மற்றும் பால் பவுடர் உற்பத்தி இந்நாட்டின் பொருளாதார, தொழில் கட்டமைப்புகளால் கடுமையாகக் குறுக்கப்படுமென்ற தகவல் EECக்கு முன்பே கிடைக்காமலில்லை. இதனால்தான் OF துவங்கியபின் EEC நாடுகள் வழங்கிய SMP, BO ஆகியவற்றின் அளவு OFக்கு முந்திய உதவியளவையும் விஞ்சியது. இந்த இறக்குமதிகளுக்கு அவற்றின் சந்தை விலைகளைச் செலுத்த நேர்ந்திருந்தால் நாம் தீர்ந்திருப்போம்! OF ற்றிய IDC ஆவணத்தின்படி 82-87கால கட்டத்துக்கான SMP இறக்குமதி சராசரியாய் ஆண்டுக்கு 43 ஆயிரம் டன்கள். ஆனால் உண்மையில் 1982-ல் மட்டும் மொத்த (SMP,BO, வெண்ணை) இறக்குமதி 95 ஆயிரம் டன்கள்.

யதார்த்தத்தில் பால் உற்பத்தி அதிகரிக்கவில்லை. எனவே ''கிராமப் புறங்களில் இறக்குமதிப் பொருட்களுக்கான சந்தைகளை உருவாக்கும் முயற்சிதான் இத்திட்டம்'' எனத் திட்டத்தின் நோக்கத்தை மாற்றிப் பிரச்சாரம் செய்ய விளம்பர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நகரங்களிலிருந்து நகர எல்லைகளுக்கு வெளியே பால் பண்ணைகளை இடம் மாற்ற வேண்டும் என்ற திட்டம் சத்தமில்லாமல் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. இந்நோக்கத்துக்காக என்று ஒதுக்கப்பட்ட தொகை பால் பதனத் தொழிற்சங்கங்களுக்கு மாற்றப்பட்டது. இதனால் பால் உற்பத்தியில் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை. கொள்முதல் செய்வதே திட்டத்தை உந்திச் செலுத்தும் ஒரே நோக்கமாயிற்று. கொள்முதல் அளவு வீழ்ச்சியுற்றதும் EEC உபரியின்மீதான சார்பு அதிகரித்தது. கிராமங்களில் கிடைக்கும் சொற்பப்பாலைச் சேகரித்துக் கொள்வது, பால் சேகரிக்கும் சுற்றுவட்டார அளவை அதிகரித்துச் செல்வதன் மூலம் அதிகமதிகப் பாலைத் திரட்டிக்கொள்ள முயல்வது என்ற நிலையிலேயே கிராமப் பால்வளத்திட்டம் நின்றுவிட்டது. இந்த நிகழ்ச்சிப்போக்கில் கிராம மேய்ச்சல் நிலவளங்கள் மிகையாகச் சுரண்டப்படும் பிரச்சனை பற்றி எந்த

அக்கறையும் செலுத்தப்படவில்லை. இதன் விளைவாகக் கிராமங்களின் உபயோகத்துக்கு பால்கிடைப்பது அரிதாயிற்று: ஒரு கோப்பைத் தேநீரில் கலந்து கொள்ளக்கூட பல சமயங்களில் கிராம மக்களுக்குப் பால் கிடைக்காமல் போனது. அணைகள், கால்வாய்கள் என ஏற்கனவே முன்னேறிய அகக்கட்டுமானத்தைக் கொண்ட பகுதிகளிலேயே 'பசுமைப் புரட்சி' யை ஒருமுனைப்படுத்தி, அதனால் பெற்ற வெற்றியை பசுமைப்புரட்சியின் 'வெற்றியாக' முன்பு சித்தரித்தது போலவே 'வெண்மைப் புரட்சியிலும்' செய்யப்பட்டது. குஜராத்தில் ஏற்கனவே பால் உற்பத்திக்கும் பால் கொள்முதலுக்குமான வளர்ச்சி பெற்ற கட்டமைப்பு நிலவுகிறது. அப்படியிருக்க, OF நிதியாதாரத்தின் 20% முழுசாக குஜராத்துக்கே ஒதுக்கப்பட்டது. OF ஒப்பந்தங்களின்படி ''SMP, நகரப் பால் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவை நகரங்களின் பால் விற்பனையில் பெரும் பகுதியைத் தாமே மேற்கொள்ள முடியும். இந்த ஒப்பந்தம் முழுக்க மீறப்பட்டு, இறக்குமதியான SMPயும் BO வும் அமுலுக்கும் பிற பண்ணைகளுக்கும் சலுகை விலையில் தரப்பட்டன. பின் பால் பவுடர் நகர மக்களுக்குக் கொள்ளை விலையில் விற்கப்பட்டது. குஜராத் பண்ணைகள் தம்மால் விற்கமுடியாத அளவுக்கு உள்நாட்டில் உற்பத்தியான ஏராளமான உபரிப்பாலைச் சேகரித்திருந்தன. டெல்லியிலும் கல்கத்தாவிலுமிருந்த பண்ணைகளுக்கு திரவப்பாலை விநியோகித்ததுடன், மீந்த உபரியை குழந்தை உணவுகள், வெண்ணை போன்றனவாக தயாரித்துக் கொண்டன, மேலும் டெல்லியிலிருக்கும் 'மதர்' பால் பண்ணை (இது NDDB யால் கட்டுப்படுத்தப்படுவது) அரியானா, உ.பி., பஞ்சாப், ஆகிய மாநிலங்களிலுள்ள பண்ணைகளுக்குத் தந்ததைவிட குஜராத்திலுள்ள அமுலுக்கு அதிகவிலை தந்திருக்கிறது. இந்த வசதியெல்லாம் இருந்தும்கூட 1977இலும் 80இலும் குஜராத் மாநிலத்தில் பால் உற்பத்தியின் அதிகரிப்பு குறைவாகவே இருந்தது. பஞ்சாப், அரியானா போன்ற குறைந்த அளவு நிதி வழங்கப்பட்ட மாநிலங்கள் 13% வளர்ச்சி வீதம்

கண்டன. ஏறக்குறைய எல்லா தேசியப் பால் பண்ணை அமைப்புகளும் குஜராத்தில்தான் உள்ளன. குரியனும் குஜராத் முதலாளிகளும் திட்டவேலை முழுவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டதால் இது சாத்தியமாயிற்று.

பால்வளத் திட்டமா? கொள்முதல் திட்டமா?

தோல்வியின் நடுவில், திட்டப்படி பால் உற்பத்தியை அதிகரித்தாக வேண்டுமே என்பதற்காக அரசாங்கப் பண்ணைக் கார்ப்பரேசன்கள், பால்வளத் திட்டத்தின் கீழ்வரும் அமைப்புகளாக மாற்றப்படுகின்றன (Cluster Federations). இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள குறிப்பிட்ட மாவட்டங்கள் பால்வளத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எவ்வளவு சீக்கிரம் இந்த மாற்றத்தை அவை ஏற்படுத்திக் கொள்ளுமோ அவ்வளவு எளிதில் அவற்றுக்குப் புதிய திட்டங்களுக்கான பணஉதவி கிடைக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பிரதேசம் முழுவதிலும் ஆனந்த் (அமுல்) மாதிரியான கூட்டுறவுச் சங்கங்கள் துரிதமாய்க் கட்டியெழுப்பப்படு கின்றன. ஏற்கனவேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆனந்தின் பெயர் வைக்கப்படுகிறது. இவ்வாறு பத்தாண்டுகள் வேலை செய்தபின், தான் 10409 சங்கங்களை அமைத்துள்ளதாக IDC மார்தட்டுகிறது. 81-ல் இந்த எண்ணிக்கை 12,210 ஆயிற்று. 83-ல் 23,483 எனக் காட்டப்பட்டது. ஆக மற்றக் கூட்டுறவுகளை தான் எடுத்துக் கொண்டு அல்லது அவற்றின் பெயரை மாற்றி, OF இப்போது கொள்முதல் மற்றும் பிற முன்னேற்றங்களின் கர்த்தாவாகத் தன்னை அறிவித்துக் கொள்கிறது. பால்வளச் சங்கங்கள் பெருகிய கதை இதுதான்.

"பால் பண்ணைச் சாதன இறக்குமதி முன்பு 70% ஆக இருந்து இப்போது 10% ஆகக் குறைந்துள்ளது" என்பது குரியனின் கூற்று. உலகவங்கியின் கூற்று குரியனின் கூற்றுக்கு எதிராக உள்ளது: "கடந்த கால அனுபவம் ஒவ்வொரு சங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் எவ்வளவு முதலீடு தேவைப்படும் எனக் காட்டியுள்ளது. இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் திட்டச் செலவுகள் அமைகின்றன. அவை

312.8 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. தீர்வைகளும் வரிகளுமான 31 கோடி ரூபாயும் இதில் அடக்கம். இதில் அந்நியச் செலாவணியாகப் போகக்கூடியது சுமார் 100.5 கோடி ரூபாய். இத்தொகை மொத்த திட்டச்செலவில் 32% ஆகவும் வரிகள் தீர்வைகள் கழிந்த நிகரச்செலவில் 35% ஆகவும் உள்ளது".

எனவே அமுலிலும் குஜராத்திலும் மட்டுமே 'வெண்மைப் புரட்சி' 'வெற்றி' பெற்றுள்ளது.

கிராமங்களில் இருந்து பாலை வெளியேற்றுவதுடன் சேர்ந்து, பதப்படுத்தும் வேலைகளும் கிராமங்களை விட்டு பெருமூலதனப் பண்ணைகளுக்குப் போய்விட்டன. இதனால் சில ஆண்டுகளுக்குள் பெரும்பாலான கிராமங்களில் நெய், மோர் ஆகியவை மக்களுக்குக் கிடைப்பது குறைந்துள்ளது.

சுதேசி மாடுகளும் வெள்ளைக்கார மாடுகளும்

வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைச் சார்ந்திருப்பதால் உள்நாட்டுக் கால்நடை இனங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. அதற்குப்பதில் நமது சூழலுக்கு ஒத்துவராத வெளிநாட்டினக் காளைகளையும் கன்று போடாத பசுக்களையும் இறக்குமதி செய்வதை அதிகமாகச் சார்ந்து நின்றனர். முதலில் இறக்குமதியான மொத்த ஜெர்சிக் காளைகள் அனைத்தும் தரமற்றவையாக இருந்தமையால் மீண்டும் புதிதாக இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. இந்தியச் சூழலுக்கு இவ்விலங்குகள் முற்றிலும் பொருத்தமற்றவை என்ற அடிப்படையான உண்மை முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டது. கேரளம் போன்ற பகுதிகளில் அந்நியக் கலப்பின மாடுகள் ஒரு பால் ஊறும் காலத்துக்கு சுமார் 1500 கிலோ பாலே தருவதாக NDDBயே தன் ஆவணங்களில் குறித்துள்ளது. கலப்பில்லாத இந்திய இனங்கள் ஒரு பால் பருவத்துக்கு 3000 லிட்டர் அளவு பால் தரக்கூடியவை தேர்ந்தெடுத்த சில சுதேசி இனங்களை வளர்த்துப் பெருக்கும் பணி 1923-ல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அரியானா தார்பார்க்கர் சாதிப் பால்மாடுகள் வளர்க்கப்பட்டன. இவை தினம் 4-6.5 கி.கி பால் தரவல்லன.

ஒரு பருவத்துக்கு (300 நாள்) சுமார் 1575 கி.கி. பால் தரவல்லன. இதே கால அளவில் இங்கிலாந்திலுள்ள பண்ணைமாடுகள் சுமார் 2165 கி.கி. பால் தரவல்லன. ஆனால் நல்லமுறையில் பராமரிக்கப்படும் சுதேசிக் கால்நடைகள் பாலுக்கும் நல்லது, உழவுக்கும் உத்தமம். ஆனால் அந்நியக் காளைக்கன்றுகள் உழவுக்கோ வண்டி இழுக்கவோ பிரயோசனப்படாது. அவற்றில் 75% கசாப்புக்கு விற்கப்பட்டுவிடுகின்றன. நமது உள்நாட்டுக் கால்நடை இனங்களான சாகிவால், சிவப்பு சிந்தி, ஓங்கோல், சாகி கிர், தார்பார்க்கர் போன்றவை, பன்னாட்டுக் குழுமங்களின் தீவனமோ மருந்துகளோ இன்றி வாழ வளரமுடியும். ஓங்கோல் இனம் ஆந்திராவில் அழிந்துபோக இருந்தது. அதற்குள் பிரேசிலில் அதற்குப் புதுவாழ்வு கிடைத்துள்ளது. அங்கு 20 லட்சம் ஓங்கோல் மாடுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. எனவே இனி ஆந்திராவின் ஓங்கோல் மாடுகளை பிரேசிலிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டும்.

திட்டம் அறிவித்த சமுதாயக் குறிக்கோள் நிறைவேறியதா, "கூட்டுறவுகள் மூலம் ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் நல்வாழ்வு" கிடைத்ததா என்று பார்த்தால், கூட்டுறவுகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் மேல்வர்க்க மேல்சாதிக்காரர்களே. ஏழை மக்களுக்கு அதில் எந்தவித உரிமையும் அதிகாரமும் இல்லை. கால்நடை உடைமைக்கும் நில உடைமைக்கும் நேரடித் தொடர்பு உண்டு என்பது அடிப்படையான ஒரு உண்மை. நிலமே கால்நடைகளுக்கு தீவனக் களஞ்சியமாக, மேய்ச்சல் தரையாக, நீர்நிலையாக அமைகிறது. எனவே நிலமற்ற ஏழைகளும் மிகச்சிறிய நிலங்களை வைத்திருப்பவர்களும் தீவனம் முதலியனவற்றை வெளியாரிடமிருந்தே வாங்க வேண்டியிருக்கிறது. இந்நிலையில் உற்பத்தியாகும் பாலுக்குக் கிடைக்கும் விலையுடன் ஒப்பிட்டால் இடுபொருள்களுக்குச் செலவழிக்கும் தொகை அதிகமாயிருக்கிறது. பணக்கார விவசாயி தன் முதன்மைத் தொழிலான விவசாயத்துடன், கொஞ்சம் கால்நடைகளையும் வைத்துப் பராமரிப்பதன் மூலம் தன் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடிகிறது.

ஏழை மற்றும் சிறுநில உடைமையாளர் கால்நடைப் பராமரிப்பின் மூலம் ஆதாயம்பெற முடிவதில்லை. பால் கறக்கும் பருவம் வரும்வரை கன்றுபோடாத பசுக்களையோ கன்றுகளையோ அவர்கள் வளர்ப்பதற்கு சூழ்நிலைமைகள் அனுமதிப்பதில்லை.

ஏழைகளுக்கு உதவுவதே தன் நோக்கம் என்று கூறும் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் (IRDP) மேற்சொன்ன காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. விலை மிகுந்த கலப்பினங்களை வைத்திருக்கும் பணக்கார விவசாயிகளும், நலிந்த உள்நாட்டு இனங்களைப் பேணிவரும் ஏழை விவசாயிகளும் இன்று உள்ளனர். அந்நிய இனங்களை வாங்க நிர்ப்பந்திக்கப்பட்ட ஏழைகளும் பழங்குடி மக்களும், அவற்றைப் பராமரிப்பதில் நேர்ந்த, தம்மால் கட்டுப்படுத்த முடியாத பிரச்சினைகளால் சீரழிந்து போனார்கள். அந்நிய இனங்கள் எளிதில் காம்பு அழற்சி நோயால் பாதிக்கப்படுவன ஆதலால் ஆயுள்காப்புத் தொகையை சேகரித்துக் கொள்வதற்காக சில விவசாயிகள் தம் கால்நடைகளைக் கொன்று விடுகிறார்கள். இந்நோய்களுக்கு நுண்கிருமிக் கொல்லிகளைத் (antibiotics) தருவதே வழக்கமாக உள்ளது. சிகிச்சை செய்யப்பட்ட மடிகளிலிருந்து கறக்கும் பாலை மூன்று நாட்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. ஆனால் காசுக்காக அப்பாலை சங்கங்களுக்கு விற்று விடுகிறார்கள். பாலை சங்கத்திடம் ஒப்படைக்கும்வரை பால் கெடாதிருக்க விவசாயிகள் காஸ்டிக் சோடா, பார்மல் டிஹைட் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்கள். கிருமி நீக்கம் செய்யும் போது (pasteurization) மேற்படிப் பொருட்கள் பாலிலிருந்து விடுபடுவதில்லை. IRDP திட்டத்தில் முறைகேடுகளும் ஊழலும் மலிந்துள்ளன. இதனால் நலிந்துபோன உள்நாட்டுக் கால்நடைகளை, மானியம் பெற்றவர்கள் விலைக்குவாங்கி விடுகிறார்கள். ஏழை மற்றும் பழங்குடி விவசாயிகளின் விலைமதிப்பு மிக்கக் கால்நடைகள், கால்நடை வைத்தியர்களின் உதவிகிடைக்காத தொலைவான பகுதிகளில், அக்காரணத்தால் சிலபோது அனாவசியமாக

பலிகொள்ளப்பட்டு விடுகின்றன. ஏழைகளின் கால்நடைகள் பெரும்பாலும் கருத்தரியாமல் போவதற்கு முக்கியக் காரணம் கால்நடைகளுக்கு சத்தான தீவனம் கிடைக்காததுதான் என்பது நன்கு அறியப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமும் மேற்கத்தியச் சுரண்டலும்

பால்வளத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் (OF-II) பின்வரும் ஊகங்களின் அடிப்படையில் அமைந்தது: 1) நல்ல விளைநிலங்களில் உணவுப்பயிர், பணப்பயிர் ஆகியவற்றைவிட்டு தீவனப்பயிர்கள் பயிரிட்டால், தீவனநெருக்கடி குறையும். 2) செறிவுத் தீவன விநியோகத்தை அதிகரிக்கவும் அவற்றை முழுமையும் பால் மாடுகளுக்கே வழங்கவும் வேண்டும். 3) பசும்புல் இப்போதைய அளவில் தொடர்ந்து வழங்கப்படும். 4) தேசியத் திட்டத்துக்குத் தக கால்நடைகளின் எண்ணிக்கையை கூட்ட, குறைக்க, அல்லது அளவுமாறாமல் வைத்திருக்கப்படும். (இந்த ஊகங்கள் கேள்விக்குரியவை).

பால் உற்பத்தியை அதிகரிப்பதில் பெரிய தடை தீவனப் பிரச்சினைதான் என்பதைத் திட்ட அதிகாரிகள் உணர்ந்தனர். கிடைக்கும் தீவனத்தைக் கொண்டு உற்பத்தியை அதிகரிக்க முயன்றனர். அத்துடன் உயர்ந்த அளவு சத்துள்ளதும் சீரணிக்க எளிதானதுமான செறிவுத் தீவனத்தையே (பிண்ணாக்கு முதலியவை) அதிகம் உட்கொள்ளும் அந்நியக் கலப்பின மாடுகளைச் சார்ந்திருக்கும் தொழில்நுட்பத்தை அவர்கள் கைக்கொண்டார்கள். இங்கும்கூட நமது பண்ணை நிபுணர்களின் அறியாமையே வெளிப்பட்டது. அரிதாகக் கிடைக்கிற செறிவுத்தீவனத்தை நமது விவசாயிகள் பால்மாடுகளுக்கு மட்டுமே வாங்கிப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்பதை அந்தப் புத்திசாலிகள் உணரவில்லை. ஏனெனில் விவசாயிகளுக்குப் பால்மாடுகளைப் போலவே உழவுமாடுகளும் முக்கியம். செறிவுத் தீவன உற்பத்தியை அதிகரிப்பது என்பது உணவுதானியங்களின் ஒட்டுமொத்த அதிகரிப்பைப் பொறுத்திருக்கிறது. எனவே செறிவுத்தீவனத்தை நிறைய ஊட்டி கலப்பின மாடுகளை ஊக்குவிக்கும் தொழில் நுட்பத்தைச் சார்ந்து நிற்பது

கேள்விக்குரியது. கேரளாவிலும் குஜராத்திலும் இத்தொழில்நுட்பம் வெற்றி பெற்றுள்ளதே என்றால் இம்மாநிலங்கள் தம் செறிவுத் தீவனங்களின் மொத்தத் தேவையில் 80% பிற மாநிலங்களிடமிருந்தே சேகரித்தன என்பதைக் கவனிக்க வேண்டும். மாநிலத்துக்கு மாநிலம் செறிவுத் தீவனத்தைக் கொண்டு செல்லக் கூடாது என்று தடை செய்திருந்தால் அந்நியக் கலப்பினங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பால் பண்ணைத் தொழில் இம்மாநிலங்களில் சீர்குலைந்து போயிருக்கும்.

கூட்டுறவுகளும் நகரப் பண்ணைகளும் வளர்த்துவரும் கலப்பினங்களுக்கும் அந்நியச் சாதி மாடுகளுக்கும் செறிவுத் தீவனத்தைக் கொடுத்துத் தீவனத்தை வீணாக்குவதைவிட, பிரதானமாய் நார்ச்சத்துள்ள தீவனத்தையே தின்று வாழும் உள்நாட்டுக் கால்நடைகளுக்கு அறிவார்ந்த முறையில் செறிவுத் தீவனத்தைப் பகிர்ந்தளித்தால் பால்உற்பத்தி அதிகரிக்கும். காட்டுப் பரப்பும் புல்வெளிப் பரப்பும் தொடர்ந்து சுருங்கி வருகிறது. இந்நிலையில் சமூகக் காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ் யூகலிப்டஸ் போன்ற மரங்களை வளர்ப்பது கால்நடைகளுக்குப் பயன்படாது. சுபாபுல் மரத்தைப் பயிரிடுவதிலும்கூட உரிய கவனம் செலுத்தப்படவில்லை. மேலும் சுபாபுல் இலைகளைத் தீவனத்தில் 20% தான் கலக்க முடியும். ஏனெனில் இத்தீவனத்தில் நச்சுப்பொருட்களும் உண்டு. புதிய துணியாலைக் கொள்கையால் பருத்தி பயிரிடுவது குறைகிற அபாயமிருக்கிறது. இதனால் பருத்திக் கொட்டை கிடைப்பது குறையும்...

எல்லாவற்றிலும் மிகுந்த கவலைக்கிடமான விசயம் என்னவென்றால் செறிவுத் தீவனத்தைப் பெரிய அளவில் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதாகும். (அந்நிய) கலப்பின — செறிவுத்தீனித் தொழில்நுட்பத்தை ஆதரிக்கும் பால்வளத்திட்ட நிபுணர்கள் இந்த ஏற்றுமதி மடத்தனமானது என்பதைக் கண்டுகொள்வதே இல்லை. உணவுப் பயிர்களையும் பணப்பயிர்களையும் பதப்படுத்தும் தொழில் கிராமங்களிலிருந்து அகற்றப்பட்டு நகரங்களில் குவிக்கப்பட்டதிலிருந்து, செறிவுத் தீவனம், தவிடு

போன்றவற்றின் மீது கிராமங்களுக்கிருந்த கட்டுப்பாடு போய்விட்டது. நகரஞ்சார்ந்த வியாபாரி செறிவுத் தீவனத்தை ஏற்றுமதி செய்வதில்தான் தனக்கு மிகுந்த லாபத்தைக் காண்கிறான். நகரஞ்சார்ந்த பால்பண்ணையாளனுக்கு பிண்ணாக்கு எளிதாகக் கிடைக்கும் நிலை உள்ளதால், மற்ற ஏற்றுமதிகளைப் பற்றிக் கவலைப்படாமல் தனது பால்மாடுகளை அவனால் பராமரிக்க முடிகிறது. 80%க்கும் அதிகமான செறிவுத்தீவனம் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது – அங்கிருந்து நமக்கு அந்நிய மாடுகள் இறக்குமதி ஆகின்றன மேலைநாடுகள் / மாடுகள் நம்மை எவ்வளவு முட்டாளாக்குகின்றன என்பதற்கு டென்மார்க் (EEC நாடு) ஒரு தெளிவான உதாரணம்.

டென்மார்க்கின் கால்நடைகளுக்குக் கிடைக்கும் தீவனங்களில் 60% மட்டுமே உள்நாட்டு மூல வளங்களிலிருந்து கிடைக்கின்றன. கணிசமான அளவு கால்நடைத் தீவனத்தை டென்மார்க் இறக்குமதி செய்கிறது. புரதச்சத்துமிக்க தீவனத்தை இறக்குமதி செய்துவிடுவதால் அதன் விவசாயத்தில் ஒரு புதுவளர்ச்சி ஏற்பட்டுள்ளது: டென்மார்க் தனது சாகுபடி நிலங்களின் ஒரு பெரும்பகுதியை இலை தழை புல் சாகுபடிக்கு மாற்ற முடிந்துள்ளது. இதனால் தானிய உற்பத்தியளவை விட அதிக அளவு புல் தழை உற்பத்தியாகிறது. எனவே ஒருபுறம் தீவன இறக்குமதியாலும் மறுபுறம் உயரளவு உள்நாட்டுத் தீவன விளைச்சலாலும் அங்கு கால்நடைகளுக்கு அதிக அளவில் தீவனம் கிடைக்கிறது. பண்ணைகளில் மாடுகளை வளர்ப்பது மிகுந்த உழைப்புத் தேவைப்படும் ஒன்றாதலாலும் பிறதுறைகளிலும் கூடுதல் வேலை வாய்ப்புகளை அது உருவாக்குவதாலும், தீவனத்தை இறக்குமதி செய்வதுதான் டென்மார்கின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாக உள்ளது – இந்தியா போன்ற நாடுகளைச் சுரண்டி!

OF-இன் இறுதிக் கட்டமாகிய இப்போது (இப்போது இத்திட்டக் காலம் 1990 வரை என நீட்டிக்கப்பட்டுள்ளது!) பால் கொள்முதல் அதிகரித்துள்ளது – உற்பத்தி அதிகரிக்கவில்லை. பெருநகரங்களுக்கு விநியோகிக்கப்படும்

பாலின் அளவு அதிகரித்துள்ளது – பரந்துபட்ட கிராமங்களின் பால் உபயோகம் அதிகரிக்கவில்லை. SMPயையும் BOவையும் தொடர்ந்து இறக்குமதி செய்ததாலேயே இருப்பு கூடியிருக்கிறது என்பதால், உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர் மீது அது PL 480 வகையான விளைவை ஏற்படுத்தியுள்ளது. தானம் பெறுவதை ஒரேயடியாகச் சார்ந்திருப்பது, பால் பதனத் தொழிற்களங்களில் திறன் குறைவையும் தேக்கத்தையும் ஏற்படுத்துகிறது. 'SMP, BO ஆகிய இடு பொருட்களைப் பதனத் தொழிற்களங்களுக்கு வழங்க தானமாகக் கிடைத்த பொருட்களை விற்பதால் கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்திக் கொள்வது' என முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டுப் பால்உற்பத்தியில் துரிதமான, தொடர்ந்த வளர்ச்சி தென்படாததால், 'பதனத்திறனை விரிவுபடுத்தல்' போன்ற எளிதான இலக்குகளுக்காக நிதி வசதிகளை ஒதுக்கும் போக்கே இனி மேலும் வலுப்படும். தானமாகக் கிடைப்பதை விற்பதன் மூலம் பதனத்திறனை அதிகரிப்பதற்கான மூலதனத்தைத் திரட்டுவதற்கு, தொடர்ந்து அதிக தானம் பெறுவது தேவையாகிறது. அப்போதுதான் தொழிற்களங்களை முழுஅளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்படியாக இந்த நச்சுச்சுழல் தன்னைத்தானே நிலைநிறுத்திச் செல்லும். இன்றைய பால்பண்ணைக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய ஏதேனும் முயற்சி எடுக்கப்பட்டால் பாலில் தயாரிக்கப்பட்ட ஏழெட்டுவகைப் பொருட்களில் தனிச் சுவையை வளர்த்துக் கொண்டுள்ள உயர்மத்தியதர, பணக்கார வர்க்கங்கள் அம்முயற்சிகள் ஒவ்வொன்றையும் எதிர்க்கும். BOவை நேரடியாக விற்பனை செய்வது நெய்விலையைப் பாதிக்கும். பிண்ணாக்கைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்வது நமது திட்ட நிபுணர்களின் இனிய கனவைப் பொய்யாக்கும். வெளிநாட்டு கலப்பின மாடுகளை இறக்குமதி செய்வது, நம் நாட்டுக் கால்நடை இனங்களின் அழிவுக்கே வழிகோலும். இதற்கிடையில் இறக்குமதி செய்யப்படும் பால்பவுடரைக் கொண்டு பால்வளம் பெருக்கிவிட்டதாக நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கலாம்.

மிக வெற்றிகரமான பால்வளத்திட்டம் என உலக வங்கியாலும், நாடுகளாலும், இந்திய ஆட்சியாளர்களாலும் பேராரவாரத்துடன் புகழப்படும் Operation Flood என்ற பன்னாட்டு மூலதனச் சுரண்டல் வெள்ளம் இந்தியாவைப் பாதித்ததோடு மட்டுமல்லாமல், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியாவின் 'பங்களிப்பு' இது!.

குறிப்புகள்

1. சென்னையிலுள்ள Patriotic & Peoples – oriented Science & Technology (PPST) கூட்டத்தில் 15-12-85 அன்று வாசிக்கப்பட்ட கட்டுரையின் சுருக்கம்.
2. Another Revolution Fails, Edited by Claude Alvares, Ajanta Publications, Jawahar Nagar, Delhi – 110 007, 274 + XV Pages, Price Rs.130/-
3. Import of donated commodities, Export of feed and New Technology of Milk Production, Surrender Singh, Kamaljit Singh, Economic & Political Weekly (EPW), July 20, 1985.

   Milk Surpluses Against Poverty – Report of an International Workshop, B.S.

   Baviskar, Shanti George, EPW, Sep.14, 1985. Operation flood and Rural India,

   Shanti George, EPW, Dec. 7, 1985.
4. அமெரிக்காவிலுள்ள டெமாக்ரடிக் கட்சி செனட்டர் ஜார்ஜ் மக்கவர்ன் 1964-இல் கூறியவை.
5. 'மார்க்சியம் இன்று' முதலிதழில் 'தோழன்' எழுதிய கட்டுரை. தமிழில் முதன் முதலாக எழுதப்பட்ட சிறப்பான ஆய்வுக் கட்டுரையாகும்.
6. UNICEF - ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் – United Nations Childrens'

   Fund.

7. FAO - உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் – Food and Agricultural Organisation.

8. EEC - ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகள் – European Economic Community - 1957இல் நிறுவப்பட்ட இவ்வமைப்பில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க்ஸ், பிரிட்டன், டென்மார்க், அயர்லாந்து, கிரீஸ், ஸ்பெயின், போர்த்துகல் ஆகியவை உள்ளன. இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 26% இந்த நாடுகளிடமிருந்து பெறப்படுபவை. (The Hindu, 13-6-1985).

9. அமுல் கம்பெனி அமைந்துள்ள இடம். குஜராத்தில் உள்ளது.

~~*

பரிமாணம் – 16

ஏப்ரல் – ஜுன் 1986

(Hope is given to those who are without Hope)

-Walter Benjamin

1. நமது பார்வை

ஆண்டுவிழாவுக்கென்றே சில நியதிகள் உள்ளன: சடங்குகளும்தான். கடந்த சில ஆண்டுகளின் மே நாள் விழாக்கள் போலவே தான் 100-வது மேநாள் விழாவும். இன்றுள்ள நிலைமைகள் ஏற்படுத்தும் உணர்வுகள், சர்ச்சைக்குட்படுத்தப்பட்ட கவிதையொன்றில் இன்குலாப் இரண்டாண்டுகளுக்கு முன்பு பிரதிபலித்தவற்றுக்கு ஒத்ததாகவே உள்ளன. Mindless Optimism என ஹெகலும், மார்க்சும் கூறியதை நிகர்த்த, மெத்தனமும் சுயதிருப்தியும் நிறைந்த ஒரு நம்பிக்கை வாதத்தைவிட, புரட்சிகர, ஆதங்கத்தோடு எழுப்பப்படும் ஐயங்கள் ஆக்கப்பூர்வமான தேடலுக்கு உதவக் கூடியவைதான். கார்க்கி, லூசுன் ஆகியோரின் படைப்புகள் சிலவற்றில் இத்தகைய ஆதங்கத்தைக் காணமுடியும்.

"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற முழக்கம் பொருளிழந்து வெளிறிப் போனதை, சென்னையில் நடந்த டஜன் கணக்கான மே நாள் ஊர்வலங்களில் தொழிலாளர்கள் பிளவுபட்டிருப்பதில் மட்டுமல்லாது, ஏறத்தாழ ஒரே இலட்சியங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தியவர்கள் தனித்தனியாக நடத்திய குற்றூர் வலங்கள், கலை நிகழ்ச்சிகளிலும் காணமுடிந்தது. பிற பகுதிகள் போலவே சென்னைப் பாட்டாளி வர்க்கத்தின் மிகப் பெரும் பகுதி, தொழிற்சங்க வாதத்திலும், பொருளாதார வாதத்திலும், புரட்டல்வாதத்திலும், நுகர்வுப் பண்பாட்டிலும் ஆழ்ந்து கிடக்கிறது. தம்மோடு பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளரின் அடிப்படை உரிமைக்காக சுட்டுவிரலைக் கூட அசைக்க நிரந்தரத் தொழிலாளர்களோ அவர்களது தலைவர்களோ தயாராக இல்லை. பாதுகாப்பற்ற தற்காலிகத்

தொழிலாளருக்கு ஆதரவாக புரட்சிக் குழுக்கள் சிலவற்றிலிருந்து மட்டுமே இப்போது ஒரு மெல்லிய குரல் எழுந்து கொண்டிருக்கிறது. புரட்சி இயக்கத்திலுள்ள பிளவே புரட்டல்வாதத்தின் வலு. மே நாளில் இல்லாத செவ்வண்ணத்தை மே 11-இல் சென்னை பூண்டிருந்தது. அது, சமூக மாற்றத்தில் அக்கறையுடைய ஒவ்வொருவருக்கும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் தந்த ஒரு நிகழ்ச்சி: செவ்வாடைகள் அணிந்த பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்ட பிரம்மாண்டமான ஊர்வலம், அரசியல் கட்சிகள் ஊர்வலம் போலவே பதாகைகள், கொடிகள், பாட்ஜுகள், மகளிர் அணி, இளைஞர் அணி, சீருடைத் தொண்டர்கள், 60 அடி உயரத்தில் தலைவரின் கட்அவுட். முழக்கம் மட்டும் ஒன்றே ஒன்றுதான்: "ஓம்சக்தி, பராசக்தி", "மக்கள் சக்தி"க்கு எதிராக 'பராசக்தி'யை வலுப்படுத்திக் கொண்டிருக்கும் மேல்மருவத்தூர் பங்காருவால் ஒரு பயங்கரமான பாசிசப் படையை உருவாக்க முடியும். இந்த அச்சந்தரும் நிகழ்ச்சிப் போக்கு ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் உடனடி ஆய்வுக்குரியது.

* இந்த இதழின் அட்டையை அலங்கரிப்பது, 1978-ல் காலமான வங்கக் கலைஞர் சிட்டபிரசாத்தின் 'தொழிலாளிகள்' என்ற மரச்செதுக்கு (Wood Cut).

* 'பரிமாணம்' வெளியிடும் ஒவ்வொரு கட்டுரையிலும் உள்ள ஒவ்வொரு கருத்தும் அதன் ஆசிரியர் குழுவினரால் ஒரே சீராகப் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை. சில பொதுவான குறிக்கோள்களின் அடிப்படையில் இயங்கும் இவர்கள், தமக்குள்ளேயும் தமக்கும் பிறருக்குமிடையேயும் கருத்தாடல்களை ஊக்குவிக்க விரும்புகின்றனர். தலையங்கங்கள், ஆசிரியர் குறிப்புகள் மூலமாக வெளியிடப்படுபவை மட்டுமே 'பரிமாணத்'தின் பொதுக் கருத்துகள்.

* சோவியத் உக்ரைனில் ஏற்பட்டுள்ள அணுஉலை விபத்து, அங்கும் கிழக்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மிகப் பயங்கரமான உயிர்ச்சூழல் (ecology) பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. அணுமின் திட்டங்களை உடனடியாகக்

கைவிட வேண்டியதுதான் மனித தர்மம். அப்படியிருந்தும் அந்த விபத்தைப் பற்றியும், இந்தியாவில் அணுமின் நிலையங்கள் உருவாக்கி வருகின்ற, உருவாக்கப் போகின்ற அபாயங்கள் பற்றியும் வாய்திறக்காமலிக்கின்ற அரசியல்வாதிகள் எவ்வளவு அயோக்கியர்கள், தடுப்பு முறைகளும், பாதுகாப்பு முறைகளும் இங்கு இருப்பதாகக் கூறும் ராஜீவ் காந்தியும், ராஜா ராமண்ணாவும் எத்தகைய மோசடிப் பேர்வழிகள்.

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய விமர்சன ரீதியான ஆய்வின் உடனடித் தேவையை, இம்மாதம் முதல்வாரம் யாழ்நகரில் நடந்த LTTE-TELO மோதலும், ஸ்ரீ சபாரத்தினம் உட்பட்ட 200 போராளிகளின் மரணமும், மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. சென்ற மார்ச் 16-இல், நாகார்ஜுனன் வ.ஐ.ச. ஜெயபாலனுடன் நடத்திய 'நேர்காணல்', அது தொடர்பாக ஒரு மார்க்சிய – லெனினியத் தோழர் எழுதிய கட்டுரை ஆகியன இவ்விதழில் பிரசுரமாகின்றன.

⁂

2. நிகரகுவாப் புரட்சி

-பொன். தனசேகரன்

1979-ம் ஆண்டு ஜுலை 19 லத்தீன் அமெரிக்காவில் உள்ள நிகரகுவா மக்களுக்கு மிக முக்கியமான நாள். அன்று சான்டினிஸ்டா விடுதலை இயக்கத்தின் தலைமையில் அங்கு புரட்சிகர அரசு நிறுவப்பட்டது. நிகரகுவா மக்கள் போராட்டத்தின் வெற்றி, பல்வேறு தேசங்களில் புரட்சியாளர்களுக்குப் புது உற்சாகத்தை அளித்துள்ளது.

நிகரகுவா

தென் வடஅமெரிக்காக் கண்டங்களை இணைக்கும் குறுகிய நிலப் பிரதேசத்தில் நிகரகுவா அமைந்துள்ளது. இதன் வடக்கில் ஹோண்டுராஸ், தெற்கே கோஸ்டாரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. நிகரகுவாவின் மொத்தப் பரப்பளவு 1 லட்சத்து 28 ஆயிரம் சதுர கிலோ மீட்டர்கள்: மக்கள் தொகை 30 லட்சம்.

ஸ்பானியர்களுக்கும் உள் நாட்டில் உள்ள தொல்குடிகளுக்கும் பிறந்த மிஸ்டிசா (Meztiza) இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டின் மக்கள் தொகையில் 96% மிஸ்டோ, ரமா, சுமா இந்தியர்கள், கிரிலோஸ் இனத்தவர் ஆகியோர் மீதமுள்ள 4%த்தில் அடங்குவர். மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். கிராமங்களில் வசிப்பவர்கள் இந்த நாட்டில் குறைவு, நிகரகுவாவின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் அந்நாட்டின் தலைநகரான மனாகுவாவில் வசிக்கிறார்கள்.

இந்த நாட்டின் தேசிய வருமானம் விவசாயப் பொருளாதாரத்தைச் சார்ந்திருக்கின்றது. பருத்தி, காப்பி, கரும்பு போன்ற வணிகப் பயிர்கள் இங்கு பயிரிடப்படுகின்றன. இந்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி கால்நடை ஏற்றுமதி வருமானம் மூலமாகவே கிடைக்கிறது.

காலனியாட்சியின் வரலாறு

நிகரகுவா 16-ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் காலனி நாடாக இருந்தது. பின்னர் அட்லாண்டிக் கடற்கரைப்

பகுதியை ஆங்கிலேயர் ஆண்டனர். 1921-ல் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து நிகரகுவா விடுபட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியது.

1855-ல் அமெரிக்க ராணுவம் நிகரகுவா மீது தாக்குதல் நடத்தி கைப்பற்றியது. வில்லியம் வாக்கரே என்ற அமெரிக்க தளபதி நிகரகுவாவின் அதிபதியாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். ஆங்கில மொழியை அவர் தேசிய மொழி ஆக்கினார். அந்த அரசை அமெரிக்கா அங்கீகாரம் செய்தது.

1912-ல் நிகரகுவாவை தன் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் நிகரகுவாவிற்கு அமெரிக்க அரசு கடற்படையை அனுப்பியது. அமெரிக்கக் கடற்படையை எதிர்த்து நிகரகுவா மக்கள் போரிட்டனர். அமெரிக்கக் கடற்படையினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. சொந்த ராணுவ பலத்தினால் மட்டும் நிகரகுவா மக்களை அடிமைப்படுத்தி வைக்க முடியாது என்று உணர்ந்து கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் வேறு சூழ்ச்சியைக் கையாண்டது.

சோமோசா என்பவன் தலைமையில் 'தேசிய பாதுகாப்புப் படை' என்ற பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நிகரகுவாவில் ஒரு கூலிப் படையை உருவாக்கி, அதற்கு ராணுவ தளவாடங்களை வழங்கி பயிற்சி அளித்தது. சில காலத்தில் அமெரிக்காவின் கைப்பொம்மையான சோமோசா நாட்டின் அதிபரானான்.

அதன்பின் நாட்டின் பெரும்பான்மையான சொத்துக்களை அவன் தனது குடும்பச் சொத்தாக்கிக் கொண்டான். 20 ஆயிரம் சதுர கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாகுபடி நிலங்கள் அவனுக்கும், அவனது உறவினர்களுக்கும் சொந்தமாக்கப்பட்டது. அதில் ஆண்டில் 500 மில்லியன் டாலருக்கும் மேற்பட்ட வருமானமும் அவனுக்குச் சென்றது.

நாட்டின் முக்கிய ஏற்றுமதியான இறைச்சி ஏற்றுமதி லைசென்சுகள் அவன் உறவினர்களுக்கே வழங்கப்பட்டன. சர்க்கரை ஆலைகளில் பாதிக்கு மேற்பட்டவை

சோமோசாவிற்கே சொந்தம். 40 சதவிகித அரிசி உற்பத்தி அவனுக்கு சொந்தமாய் இருந்தது. இதுதவிர விமான கம்பெனி, பத்திரிகை, ரேடியோ நிலையம், டெலிவிசன் நிலையம் ஆகியவையும் சோமோசாவிற்குச் சொந்தம்.

சோமோசாவின் சுரண்டல் ஆட்சியில் மக்கள் கடுமையான பஞ்சத்திற்கும் துன்பத்திற்கும் ஆளானார்கள்.

சான்டினோ

சோமோசாவின் ஆட்சிக்கு எதிராக அகஸ்டினோ சான்டினோ என்ற புரட்சியாளரால் தேசிய விடுதலைப் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டது. 1933-ல் கொரில்லாப் போர் முறையில் சான்டினோ நாட்டின் பல பகுதிகளை சோமோசாவின் பிடியிலிருந்து விடுவித்து புரட்சிகர நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார். சோமோசாவின் ஆட்சி ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போது, புரட்சிப் படையினரால் மீட்கப்பட்ட பகுதிகளில் புரட்சிகர அரசு உருவாக்கப்பட்டது.

சான்டினோ ஆரம்பித்த தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தேசிய ரீதியிலோ, சர்வதேச ரீதியிலோ ஆதரவு கிடைக்கவில்லை. இதற்கிடையில் 1934-ல் சோமோசாவின் பேச்சு வார்த்தைக்கு இணங்காத சான்டினோ வீடு திரும்பும் போது சோமோசாவின் கூலிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து சான்டினோ ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். சோமோசாவின் சர்வாதிகார ஆட்சி நிகரகுவாவில் மக்களை தனது இரும்புப் பிடியில் நசுக்கி வெறியாட்டம் ஆடத் தொடங்கியது. இந்நிலை 1961-ம் ஆண்டு வரை தொடர்ந்தது.

சான்டினிஸ்டா விடுதலை இயக்கம்

1961-ம் ஆண்டில் சான்டினோ நினைவாக சான்டினிஸ்டோ தேசிய விடுதலை இயக்கம் கார்லோஸ் பொன்சேகா என்பவரால் துவக்கப்பட்டது. இந்த விடுதலை இயக்கத்தின் கொரில்லாப் படையினர் நிகரகுவாவின் வடக்கு எல்லைப் பிரதேச மலைப் பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் தாக்குதலைத் தொடங்கினர். இந்த

இயக்கத்திற்கு நாடு முழுவதும் மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது.

1978-ல் சான்டினிஸ்டோ கொரில்லாக்கள் 25 பேர் தேசிய மாளிகையைக் கைப்பற்றி பணயமாக 1 கோடி டாலரை சோமோசா அரசிடமிருந்து பெற்றனர். 80 அரசியல் கைதிகளையும் விடுவித்தனர். இதைத் தொடர்ந்து சான்டினிஸ்டா தேசிய விடுதலை இயக்கம் நாடு தழுவிய கிளர்ச்சியைத் தொடங்கியது. சோமோசா அரசு இதனை அடக்க வன்முறையைப் பயங்கரமாகக் கட்டவிழ்த்து விட்டது.

1979-ல் ஜுலை 17-ந் தேதி நாட்டில் தொடர்ந்து ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்ற நிலையில் சோமோசா தப்பியோடி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தான். 17-ந் தேதி சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

இந்தப் போராட்டத்தில் 50 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்;

1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்; 40 ஆயிரம் குழந்தைகள் அனாதைகள் ஆனார்கள்; 2 லட்சம் குடும்பங்கள் வீடிழந்தன. ஏழரை இலட்சம் மக்கள் உணவிற்காக பிறரிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டது. சோமோசா நாட்டின் கருவூலத்தில் விட்டுச் சென்றது 3.5 மில்லியன் டாலர் மட்டுமே.

சோமோசா ஆட்சியை விட்டு ஓடுவதற்கு முன்னதாக 1979 மே மாதம் சர்வதேச நிதி உதவி நிறுவனம் (IMF) 66 மில்லியன் டாலர் கடன் வழங்கியது. அந்தத் தொகை ஜுலை 1-ந் தேதி மனாகுவாவில் உள்ள மத்திய வங்கியில் போடப்பட்டது. சோமோசாவை எதிர்த்து கிளர்ச்சி அதிகரிக்கவே அந்த வங்கி மூடப்பட்டது. புரட்சிக்குப் பின்னால் அந்த வங்கியில் போடப்பட்டிருந்த அந்த 66 மில்லியன் டாலர் தொகையும் மோமோசா பெயரில் ஒரு வெளிநாட்டு வங்கிக்கணக்கிற்கு மாற்றப் பட்டது தெரிய வந்தது. இவ்வாறு அரசு பணத்தை சுருட்டிக் கொண்டு சோமோசா வெளியேறி விட்டான்.

சோமோசாவின் வீழ்ச்சியின் போது சோமோசாவின் கூலிப்படையினரால் 200 மில்லியன் டாலர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

நிகரகுவாப் புரட்சியின் தனித்தன்மை

சான்டினிஸ்டா விடுதலை முன்னணியில் இருந்தவர்கள் பெரும்பாலும் தேசிய குட்டி பூர்சுவாக்கள்தான். அவர்கள் மரபு ரீதியான மார்க்சிய தத்துவத்தை கற்றுத் தேர்ந்தவர்கள் அல்ல. சான்டினிஸ்டா விடுதலை இயக்கம் வெளிப்படையாக 'மார்க்சியம்', 'சோசலிசம்' என்ற முழக்கங்களை முன்வைத்ததில்லை. மரபுரீதியான மார்க்சியர்களோ ஆயுதமேந்திய போராட்டத்தை நடத்தவில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஆயுதப் போராட்ட அவசியம், சமூக, பொருளாதார அரசியல் அமைப்பு மாற்றம், சுரண்டப்படும் வர்க்கம் தங்கள் விடுதலையை தாங்களே சாதித்துக் கொள்ளுதல், ஆட்சி முடிவுகளில் பங்கு முதலிய கொள்கைகளைக் கொண்ட 'சான்டினிஸ்மோ (SANDANISMO) அதன் கொள்கை பிரகடனமாக வெளியிடப் பட்டது. சான்டினிஸ்மோவிற்கும், மார்க்சியத்திற்கும் உள்ள ஒத்த தன்மைகள் மற்றும் உறவுகள் குறித்து அவர்கள் மத்தியில் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்றன.

ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் உட்பட எந்த நாட்டின் புரட்சிகர முன்மாதிரியையும் பின்பற்ற சான்டினிஸ்டா விடுதலை இயக்கம் மறுத்து வருகிறது. புரட்சிகர மாதிரிகளை எந்திரத்தனமாக கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை என்பதை அவர்கள் நம்புகின்றனர். நிகரகுவாவிற்கேற்ற புரட்சியைப் பற்றித் தான் சிந்திக்க வேண்டும் என்பது அவர்களது தீர்க்கமான அபிப்பிராயம். 'மக்கள் அதிகாரத்தைப் பெறுவது லட்சியம்'. 'தொழிலாளர் விவசாயிகள் புரட்சிக்கு முதுகெலும்பு' இதுதான் அவர்கள் முன்வைக்கும் கோஷம்.

சான்டினிஸ்டா விடுதலை முன்னணி தனிநபர் தலைமையில் இயங்குவது அல்ல. 9 பேர் கொண்ட இயக்குநர் குழுதான் பின்னர் புரட்சிகர கட்சியாக மாறியது.

நிகரகுவா ஜனத்தொகையில் 16 சதவிகிதம் பேர் உழைக்கும் வர்க்கத்தினர், அவர்களில் 50 சதவிகிதம் பேர் விவசாயத்திலும், அரசுப் பணிகளிலும் ஈடுபட்டவர்களும், குட்டி பூர்சுவாக்களும், பூர்சுவா வேலைகளிலும் உள்ளவர்கள். விவசாயிகளில் 8 சதவிகிதம் பேர் நிலமற்றவர்கள், 33 சதவிகிதம் விவசாயிகள் சிறிது நிலம் வைத்திருந்த போதிலும் கூட பருவ சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் ஏழை விவசாயிகள்தான்.

நிகரகுவாவில் இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள், வேலையற்றவர்கள், குட்டி பூர்சுவாக்கள் ஆகியோர் சர்வாதிகாரத்தை எதிர்த்து போராட்டத்தில் கிளர்ந்தெழுந்தனர். புரட்சிகர ராணுவத்தின் பெரும்பகுதி நகரங்களில்தான் இருந்தது. சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து கொரில்லா தாக்குதல்களிலும், மக்களை அமைப்பாகத் திரட்டுவதிலும் சான்டினிஸ்டா விடுதலை முன்னணி ஈடுபட்டது.

உழைப்பாளர்களைச் சுரண்டும் முதலாளிகளை எதிர்த்தும், ஊழலைக் கண்டித்தும், சர்வாதிகார அடக்குமுறையை எதிர்த்தும்தான் மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஜனநாயக உரிமைகளை மீட்கவும், அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றக் கோரியும்தான் மக்கள் இந்தக் கிளர்ச்சிகளைத் தொடர்ந்தனர்.

1972-ல் பூகம்பத்தினால் நாடு முழுவதிலும் வறுமை கோரத் தாண்டவம் ஆடியது. நிவாரணத்திற்காகத் தரப்பட்ட பணம் சரிவர வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்படவில்லை. இதனால் பூர்சுவாக்கள் உட்பட நடுத்தர மற்றும் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்களும் சோமோசாவிற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

சான்டினிஸ்டா மக்கள் முன்னணி நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் மக்கள் குழுக்களை அமைத்தது.

நிகரகுவாவில் இப்போது சாத்தியமாகக் கூடியது என்ன?

புரட்சிக்குப் பின்னால் நிகரகுவாவில் உள்ள வெளிநாட்டு மூலதனங்களை, நிறுவனங்களை வெளியேற்ற

நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும், பூர்சுவாக்களுக்கு ஆட்சியில் இடம் அளித்திருப்பது குறித்தும் நிகரகுவா ட்ராட்ஸ்கிய கம்யூனிஸ்ட் கட்சி (PCN) சந்தேகத்தைத் தெரிவித்தது.

"சான்டினிஸ்டா விடுதலை முன்னணியால் முதல் புரட்சி நடந்து விட்டது.

2-வது கட்ட புரட்சி கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில்தான் நடக்கும்" என்றும் அக்கட்சி கூறியது.

நிகரகுவாவில் கலப்புப் பொருளாதார அமைப்புதான் தொடர்ந்து நிலவும் என்பதை சான்டினிஸ்டா விடுதலை முன்னணி மீண்டும் உறுதிப்படுத்தியது. சர்வாதிகாரி சோமோசாவிற்குச் சொந்தமான சொத்துக்கள் தேசஉடமை ஆக்கப்பட்டன. வங்கிகளும் அரசுக் கட்டுப்பாட்டில் வந்தது. 75 சதவிகித அந்நிய செலாவணி ஈட்டித் தரும் விவசாய ஏற்றுமதியை நிகரகுவா அரசு தனது பொறுப்பில் வைத்துக் கொண்டது.

நாட்டில் 50 சதவிகித நிலங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் இருந்தது. மற்ற நிலங்கள் தனியாரிடமும், சில பன்னாட்டு நிறுவனங்களிடமும் இருந்தன.

தொழிற்சாலை உற்பத்தியிலும், நிர்வாகத்திலும் தொழிலாளர்களுக்குப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. நிகரகுவாவிலிருந்து வெளிவரும் 3 பத்திரிகைகளில் அதிக விற்பனையாவது எதிர்க்கட்சிப் பத்திரிகையான La-Prensa தான்.

அங்கு வாழும் கிறிஸ்துவர்கள் பல்வேறு கட்சிகளில் உள்ளனர். சான்டினிஸ்டா கட்சியைச் சேர்ந்த 5 கிறிஸ்துவத் துறவிகள் கேபினட் அமைச்சர்களாக உள்ளனர். இவர்கள் அதிகாரப்பூர்வமான சர்ச் மற்றும் போப் ஆகியோரின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளனர்.

சான்டினிஸ்டா முன்னணியின் பதில்

அனைத்துத் தொழில் நிறுவனங்களையும், நிலங்களையும் தேசியமயமாக்காதது ஏன்? பூர்சுவாக்களுடன்

உறவு சரிதானா என்றெல்லாம் எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு சான்டினிஸ்டா முன்னணி பதில் தருகிறது:

"அனைத்துத் தொழில் நிறுவனங்களையும் தேசியமயமாக்கினால் தொழிற் சாலைகளை நிர்வகிக்க புரட்சியாளர் மத்தியில் போதுமானவர்கள் இல்லை. அப்படியே அவற்றைத் தேசியமயமாக்கினாலும் கூட முதலாளிகளிடம் ஏற்கெனவே பணிபுரிந்து வந்த மானேஜர்களையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும்தான் நம்பி இருக்க வேண்டும். அரசு நிறுவனங்களை முதலாளித்துவ அமைப்பில் பணி ஆற்றியவர்கள் நடத்துவதற்கும், தனியார்கள் அரசு மேற்பார்வையில் நடத்துவதற்கும் அதிக வித்தியாசம் கிடையாது. தற்போது புரட்சியாளர்களுக்குக் கல்வி அறிவை வளர்க்க கட்சி முயன்று வருகிறது.

நிகரகுவா மக்கள் நீண்டகாலம் சர்வாதிகாரத்தின் பிடியில் சிக்கி, சுதந்திரமின்றி வறுமையில் வாடியவர்கள் தற்போதுதான் ஆசுவாசமாக மூச்சுவிடத் தொடங்கி இருக்கிறார்கள். ஏற்கெனவே ஆட்சியிலிருந்து சர்வாதிகாரியால் பரப்பப்பட்ட கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தால் கம்யூனிசம் பற்றிய தவறான அபிப்பிராயம் பாமர மக்கள் மத்தியில் இன்னும் நிலவுகிறது. எனவே 'மக்கள் அதிகாரம்' என்பதை முன்வைக்கிறோம்.

முதலாளித்துவ நடைமுறை சட்டம் தொடர்ந்து இருந்தாலும்கூட அது ஒழுங்குபடுத்தப்பட்டு, சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கும்.

நிகரகுவா போன்ற சிறிய நாடு, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய சக்திகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. பூர்சுவாக்களின் சொத்துகளை முழுமையாக தேசியமய மாக்குவதும், வெளிநாட்டு முதலாளிகளை விரட்டுவதும் சோவியத் முகாமிற்கு எங்கள் நாட்டை அடிமையாக்கி விடும். ஆனாலும் கியூபாவும், சோவியத் நாடும் எங்களுக்கு நேச நாடுகள் என்பதில் மறுப்பில்லை.

நிகரகுவா கம்யூனிஸ்ட் கட்சி கூற்றுப்படி அனைத்தையும் தேசியமயமாக்கினால் இந்தநிலைதான் ஏற்படும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

ஐரோப்பாவில் உள்ள சில சோசலிச ஜனநாயக நாடுகள் நிகரகுவாவை ஆதரிக்கின்றன. எதிர்காலத்தில் எப்படியும் நிகரகுவா கம்யூனிச எதிர்ப்பு நாடாகிவிடும் என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் எங்களை ஆதரிக்கிறார்கள். ஐரோப்பாவில் பூர்சுவா ஆட்சி நடக்கும் சில நாடுகள் நிகரகுவாவின் புரட்சி, ஜனநாயக கட்டத்துடன் நின்றுவிடும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் நாங்கள் அவ்வாறு எண்ணவில்லை."

இவ்வாறு சான்டினிஸ்டா விடுதலை இயக்கம் பதிலளிக்கிறது.

நிகரகுவா போன்ற அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் தேசிய பூர்சுவாக்கள் புரட்சிகர பாத்திரம் வகிக்கிறார்கள். ஏகாதிபத்திய ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் தேசிய பூர்சுவாக்கள் ஆதரவைப் புறக்கணிக்க முடியாது.

நாட்டு நிர்வாகம்

நிகரகுவாவில் புரட்சிக்குப் பின்பு அரசியல் நிர்வாக அமைப்பு சீரமைக்கப் பட்டது. நிர்வாக வசதிக்காக நிகரகுவா 6 பிராந்தியங்களாகவும், 3 விசே மண்டலங்களாகவும் பிரிக்கப்பட்டது. சோமோசா அரசினால் நாட்டின் சீரழிந்துபோன பொருளாதாரத்தை சரிப்படுத்த புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டன.

நிகரகுவாவில் கூட்டு அரசு (Coalition Govt) ஏற்படுத்தப்பட்டது. தேசிய புனரமைப்பு கவுன்சிலான Junta வில் கட்சிப் பிரதிநிதிகள், சமூக அமைப்புகள், தொழிற்சங்கம், வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 5 பிரதிநிதிகள் இடம்பெறுகிறார்கள்.

நிகரகுவாவின் சுப்ரீம் கோர்ட்டில் 7 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

புரட்சி நடந்த நாட்டில் தேர்தல் நடப்பது என்பது ஆச்சரியமான வி யம். ஆனால் நிகரகுவாவில் 1984-ல் பொதுத்தேர்தலை சான்டினிஸ்டா விடுதலை முன்னணி நடத்தியது. இந்தத் தேர்தலைக் காண பார்வையாளர்களாக பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும் அழைப்பு

விடப்பட்டது. அனைத்துக் கட்சிகளுக்கும் இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டது. புரட்சி நடந்த நாடுகளிலிருந்து நிகரகுவாவை வித்தியாசப்படுத்தும் வி யங்களில் இதுவும் முக்கியமானது.

5 பேர் கொண்ட உயர்மட்டக் கவுன்சில் மேற்பார்வையில் நடந்த இந்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதியாக டேனியல் ஆர்ட்டேகா சவேத்ரா தேர்ந்தெடுக்கப் பட்டார். செர்ஜி ராமீர்ஜ் மெர்கடோ துணை ஜனாதிபாதியானார். இவர்கள் இருவரும் சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள். இதுதவிர தேசிய கவுன்சிலுக்கு 7 கட்சிகளைச் சேர்ந்த 96 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேசிய நிர்வாகக்குழுவில் ஒரு தலைவர், 3 துணைத்தலைவர்கள்,

3 செயலாளர்கள் இடம்பெறுகிறார்கள். சான்டினிஸ்டா விடுதலை முன்னணி, ஜனநாயக கன்சர்வேடிவ் கட்சி (PCD), பாப்புலர் சோசியல் கிறிஸ்துவ கட்சி

(PPSC), நிகரகுவா சோசலிஸ்ட் கட்சி ஆகியவை ஆட்சியில் இடம் பெற்றுள்ளன. இதில் சான்டினிஸ்டா விடுதலை முன்னணிதான் பெரும்பான்மை இடங்களைப் பெற்றுள்ளது. தேசிய அமெம்பிளியில் குறைந்தது 4 இடங்களைப் பெறும் கட்சிகளுக்கு நிர்வாகக் குழுக்களில் இடம் அளிக்கப்பட்டது. சிறிய கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. ஜனாதிபதி, துணை ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையும் எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு அசெம்பிளியில் இடம் அளிக்கப்படும். சிறிய கட்சிப் பிரதிநிதிகளும் நிர்வாகக் குழுவில் இடம் பெறலாம்: சட்டசபையில் தீர்மானம் கொண்டு வரலாம்.

அரசியல் நிர்வாகங்களில் பூர்சுவா கட்சிகள் பிரதிநிதித்துவம் பெற்றாலும்கூட ராணுவம் மட்டும் சான்டினிஸ்டா புரட்சியாளர்கள் கையில்தான் இருக்கும். நிகரகுவா பாதுகாப்பு அமைச்சராக இருப்பவர் பூர்சுவா கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் ராணுவ கமாண்டர்

சான்டினிஸ்டா கட்சியைச் சேர்ந்தவர்தான். இதேபோல் விவசாய அமைச்சராக இருப்பவரும் பூர்சுவா கட்சியைச் சேர்ந்தவர்தான். ஆனால் தேசிய மயமாக்கப்பட்ட நிலங்கள் சான்டினிஸ்டாக்கள் தலைமையேற்றுள்ள விவசாய புனரமைப்பு நிறுவனக் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

புரட்சிகர ஆட்சிக்குப்பின் மக்களுக்குக் கல்வியை வளர்க்க அரசு தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டது.

இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்கப்படுவதுடன், விவசாயப் பணிகளும், தொழில்களும் கற்றுத் தரப்படுகின்றன. 12 வயதான சிறுவர்கள் 85 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 5 மாதங்கள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். இதனால் அவர்கள் கிராம மக்களின் பழக்கவழக்கங்களையும், தொழில்களையும் கற்றுக் கொண்டனர். கிராமங்களில் வாழும் படிப்பறிவில்லாத மக்களுக்கு இவர்கள் மூலம் கல்வி அறிவு கிடைக்க வாய்ப்பும் ஏற்பட்டது.

இதனால் அறியாமை 50 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைந்தது.

புரட்சிகர அரசை எதிர்த்து எதிர்ப்புரட்சி சக்திகள்

நிகரகுவாவில் புரட்சிகர அரசு ஏற்பட்டது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பேரிடியாக விழுந்தது. நிகரகுவாவின் புரட்சிகர அரசிற்கு எதிராக அமெரிக்கா எதிர்ப்பரட்சி நடவடிக்கையில் இறங்கி வருகிறது.

1979-ல் நிகரகுவாவில் ஏற்பட்ட புரட்சிகர அரசு அண்டை நாடுகளுடன் நல்லுறவை விரும்பியது. ஆனால் ஹோண்டுராஸ் மட்டும் நிகரகுவாவின் அமைதிப் பேச்சு வார்த்தை முயற்சிகளை புறக்கணித்து வருகிறது. எல்லைகளில் படை விலக்கம் செய்வது தொடர்பாக நிகரகுவா தெரிவித்த யோசனைகளைப் பரிசீலிக்க ஹோண்டுராஸும், கோஸ்டாரிக்காவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலால் நிராகரித்து விட்டன.

1981-ல் ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் நிகரகுவாவிற்குத் தொல்லைகள் மேலும்

அதிகமாயின. நிகரகுவாவிற்கு வாக்குறுதி அளித்த 75 மில்லியன் டாலர் நிதியுதவியை ரீகன் நிறுத்தினார்.

நிகரகுவா அரசைக் கவிழ்க்க கான்ட்ராஸ் (Contras) என்ற கூலிப்படையை அமெரிக்க அரசு உருவாக்கி அதற்கு நிதியுதவியும், ஆயுத உதவியும் அளித்துள்ளது. இதற்கு சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் ராணுவப் பயிற்சி அளித்து வருகின்றனர். கான்ட்ராஸ் கூலிப் படைக்காக 1981 முதல் 1984 வரை அமெரிக்க ஏகாதிபத்தியம் 80 மில்லியன் டாலர் தொகையை வழங்கி புரட்சிகர அரசைக் கவிழ்க்கத் தூண்டி வருகிறது.

'கான்ட்ராஸ்' கூலிப்படையினர் 1984 ஜூலை மாதத்தில் மட்டும் 2,311 நிகரகுவா மக்களைக் கொன்று குவித்துள்ளனர். 3,720க்கும் மேற்பட்டவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இவர்கள் 130 மில்லியன் டாலருக்கு மேற்பட்ட நிகரகுவா நாட்டின் சொத்துக்களையும் நாசப்படுத்தியுள்ளனர்.

இந்த எதிர்ப்புரட்சி சக்திகள் ஹோண்டுராஸ் நாட்டில் தளம் அமைத்துக் கொண்டு செயல்படுகிறார்கள்.

எல்சால்வடார் நாட்டில் புரட்சிகர கொரில்லாக்களுக்கு நிகரகுவா அளித்து வரும் உதவியை நிறுத்த வேண்டும் என்றும், உள்நாட்டில் அமெரிக்கா கூறுகிறபடி மாற்றங்கள் கொண்டுவரவேண்டும் என்றும் 1981-ல் பேச்சு வார்த்தையின் போது அமெரிக்க அரசு வலியுறுத்தியது. ஹோண்டுராஸ் நாட்டில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு அளிக்கப்படும் ஆதரவு நிறுத்தப்படுமா என்பது பற்றி அமெரிக்கா உறுதிகூற மறுத்து விட்டது. கடந்த 6 ஆண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியம், நிகரகுவாவிற்கு எதிராகப் படையெடுக்க எல்சால்வடார், ஹோண்டுராஸ், குவாதிமாலா, கோஸ்டாரிக்கா ஆகிய நாடுகளுக்கு 3.55 மில்லியன் டாலர் வரை பண உதவி செய்து வருகிறது.

நிகரகுவாவில் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட சோமோசாவின் ஆதரவாளர்களை 'விடுதலை வீரர்கள்' என்று அழைக்கிறார் அமெரிக்க அதிபர் ரீகன்.

நிகரகுவா மக்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட 1982-ல் 30 மில்லியன் டாலரும், 1983-ல் 24 மில்லியன் டாலரும், 1975-ல் 39 மில்லியன் டாலரும் அமெரிக்க அரசு செலவிட்டுள்ளது.

1984-ல் ஹோண்டுராஸ் நாட்டில் இயங்கும் அமெரிக்கக் கூலிப்படையினருக்கு சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் ரகசிய பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர். நிகரகுவாவில் ஆட்சியாளர்களை எப்படித் தாக்கிக் கொல்ல வேண்டும் என்றும், நிகரகுவாவில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியை எப்படி கவிழ்ப்பது என்றும் அதில் வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வன்முறை மூலம் நிகரகுவா புரட்சிகர அரசை பலகீனப்படுத்துவது சி.ஐ.ஏ. பிரசுரத்தின் பிரதான நோக்கம்.

அமெரிக்கப் படைகள் நிகரகுவா எல்லைப் பகுதிகளில் அடிக்கடி ராணுவப் பயிற்சிகளை நடத்தி நிகரகுவா அரசை மிரட்டி வருகிறது.

ராணுவ ரீதியாக நிகரகுவா அரசைப் பணிய வைக்க முடியாத அமெரிக்க அரசு சென்ற வருடம் மே மாதம் பொருளாதாரத் தடைகளை விதித்தது. நிகரகுவாவுடன் வர்த்தகத் தொடர்பையும் துண்டித்துக் கொண்டது. கோதுமை ஏற்றுமதியையும் நிறுத்தியது.

நிகரகுவாவின் கலப்புப் பொருளாதார நிலையைப் பயன்படுத்தி அமெரிக்க அரசு நிகரகுவாவிற்கு வழங்கிய கடனுதவிகளை நிறுத்தியது. நிகரகுவாவிற்கு உலக வங்கி அளிக்க இருந்த கடன் உதவிகளை அமெரிக்கா தடுத்து நிறுத்தி விட்டது. இது தவிர 1983-ல் நிகரகுவாவிலிருந்து 90 சதவிகிதம் சர்க்கரை இறக்குமதி செய்வதையும் ரத்து செய்துவிட்டது. நிகரகுவாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு அமெரிக்கா தடை விதித்ததன் மூலம் நிகரகுவாவிற்குக் கடுமையான பொருளாதார நெருக்கடியை அமெரிக்கா ஏற்படுத்தி வருகிறது.

நிகரகுவாவின் மூல வளங்களையும், உள் கட்டுமானத்தையும் 'கான்ட்ராஸ்' திட்டமிட்டு அழித்து

வருகிறது. மருத்துவர்களை, ஆசிரியர்களை, செவிலியர்களை, தொழில்நுட்ப வல்லுநர்களைக் குறி வைத்துக் கொல்கிறது. நிகரகுவா தனது தேசிய வருவாயில் 75 சதவிகிதத்தை நாட்டுப் பாதுகாப்பிற்காகச் செலவிட வேண்டியுள்ளது. ஏராளமான உயிர்ச் சேதங்களுக்கிடையே, மிகப் பெரும் ஏகாதிபத்தியத்தின் அனைத்து வகை அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு கோலியத் என்ற ராட்சதனை எதிர்த்துப் போரிடும் தாவீது என்ற சிறுவனாக அவதரித்துள்ளது நிகரகுவா.

1930களில் ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரில் குடியரசுவாதிகள் பக்கம் நிற்பதா, பாசிசவாதிகள் பக்கம் சாய்வதா என்ற கேள்வி உலக மக்களுக்கு விடுக்கப்பட்டது போல இன்று உலகின் முன் உள்ள கேள்வி: நீங்கள் யார் பக்கம்? நிகரகுவா புரட்சி அரசாங்கத்தின் பக்கமா? அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியம் பக்கமா? நடுநிலை வகிப்பதோ, கேள்வியையும் பதிலையும் வேறுவிதமாகத் திசை திருப்புவதோ, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தரும் ஆதரவுதான்.

இக்கட்டுரை எழுதத் துணைபுரிந்தவை:

1. The Lesson of Nicaragua by Gail Omvelt, Frontier, Vol. No.14, No.20,21,22 & 23.
2. Nicaragua Libre by Manab Mitra, Frontier, Vol.18, Nos. 9-11
3. Nicaragua Flashpoint, Third World Network Digest, No:1, May 1985.
4. Nicaragua: The Strategy of Counter Revolution by William I Robinson & Kent Noteworthy, Monthly Review, Vol.37, No:7.

ஆசிரியர் குறிப்பு:

1936 முதல் 1979 வரை நிகரகுவாவின் ஆட்சியதிகாரத்திலிருந்தவன் 'சோமோசா' என்ற ஒரே நபர் அல்ல. 1933 ஜனவரியில், அமெரிக்காவால் நிகரகுவா தேசியப் பாதுகாப்புப் படையின் (National Guide) தலைவனாக்கப்பட்டவன் அனாஸ்டாசியோ சோமோசா கார்சியா என்பவன். 1936இல் நாட்டின் அதிபராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட இவன், 1956 செப்டம்பர் 21இல், லோபஸ் பெரஸ் என்ற கவிஞரால் சுட்டுக் கொல்லப்பட்டான். பின்னர் அவனது மகன் லூயிஸ் சோமோசா டெபெய்ல் என்பவன் தற்காலிக அதிபரானான். அவனது தம்பி இரண்டாம் அனாஸ்டாசியோ தேசிய பாதுகாப்புப் படையின் தலைவனானான். 1967ல் லூயிஸ் இறந்து போனான். அதன் பிறகு இரண்டாம் அனாஸ்டாசியோ சோமோசா Anastasio II Tachito Somoza) நாட்டின் அதிபரானான். 1979இல், சான்டினிஸ்டாப் புரட்சி வெற்றிக்குப் பின், அமெரிக்காவிற்கு ஓடிப் போனவன் இவனே. பொன்.தனசேகரனின் கட்டுரையை மேற்காணும் விவரங்களுடன் சேர்த்துப் படிக்குமாறு வாசகர்களை வேண்டுகிறேன்.

- எஸ்.வி. ராஜதுரை

3. ஒரு வங்காளப் புரட்சிக்காரனைப் பற்றிய குறிப்புகள்

- யேன் மிர்தால்

நாங்கள் ரயிலில் கல்கத்தாவுக்குப் போய்க் கொண்டிருந்தோம்... வண்டி காலை 2 மணிக்கு ஜாஜா நிலையத்தில் நின்றது. நான் கண் விழித்தேன். படுத்தபடியே காளியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவர் என் மாமனாராயிருந்தவர். அவரது கடைசிக் காலத்தில் நாங்கள் அதிகம் சந்தித்துக் கொள்ளவில்லை. சொல்லப் போனால் 1963-ல் நான் சீனாவிலிருந்து திரும்பியபின் அவரை கடைசியாய் சந்தித்திருந்தேன். பிளிட்ஸ் போன்ற ஏடுகளில் அவர் கட்டுரைகள் எழுதி வந்தார். கடைசியில் முற்றாக ரஷ்ய சார்பாளராகிப் போனார். அவரது கருத்துக்கள் டாங்கேயின் கருத்துகளே ஆகிவிட்டன. இந்திய சீன எல்லை விவகாரத்தில் காளி ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதில் அவரது நிலைபாடு தவறானது. நான் தில்லியில் வசித்து வந்த போது என்னிடம் சம்பந்தப்பட்ட நிலப்படங்கள் இருந்தன. எனவே அவரது நிலைபாடு தவறானது என அப்போதிருந்தே எனக்குத் தெரியும். ஆனால் எப்படித் தவறு என்பதை அப்போது என்னால் அறிய முடியாதிருந்தது. எனவே அவரது நிலைபாடு தவறென அன்று நான் அறிந்திருந்தபோதும் அதனால் எந்த வேறுபாடும் தோன்றவில்லை. எல்லைத் தகராறின் அடிப்படை ஓலோஃப் கரோவின் ((Olof Caroe) வழிகாட்டலின் கீழ் 30களில் செய்யப்பட்ட பிரிட்டிஷ் போலி யாவணங்களாகும். இவை 1970கள் வரைக்கும் பரவலான பொதுமக்கள் பார்வைக்கு வரவில்லை. அந்த ஆவணங்கள் சிலவற்றைப் பார்வையிடும் காலம் வரை காளி உயிர் வாழ்ந்திருப்பாரேயானால் அவர் தன் மனத்தை மாற்றிக் கொண்டிருந்திருக்க முடியும். ஆனால் கடைசியாய் அவர் ஸ்வீடனிலிருக்கையில் ஃபாகர்விக்கிலிருந்த (Fagervik) எங்களைச் சந்திக்க வந்த போது, இந்திய அரசாங்கத்தின் அதிகாரபூர்வ நிலைபாட்டை முழுமனதாக ஆதரிப்பவராக மாறிப் போயிருந்தார். எனவே விவாதத்துக்கு வழியில்லாமல் போயிற்று.

கடைசி முறையாக நானும் அவரும் உண்மையிலேயே விவாதம் நடத்தியது, நானும் என் துணைவியும் இந்தியாவிலேயிருந்து சீனாவுக்குப் புறப்படவிருந்த போதுதான். அப்போது எல்லைத் தகராறும் கடுமையாக இருந்தது. என்றாலும் அப்போது பெரிய மோதல்கள் ஏதும் நடக்கவில்லை. 1962 இலையுதிர் காலத்தில்தான் எல்லைப் பூசல்கள் சிறு சண்டையாக வெடித்தன. இந்தியாவின் பக்கம் தவறு இருந்தது என்பது மட்டுமல்ல, மொத்த போருமே படுதோல்வியாக முடிந்தது; யதார்த்தத்துக்கு வந்ததும் நிலைகுலைந்து விடும் பகற்கனவாகி விட்டது. இதற்காகவே காளியால் சீனாவை மன்னிக்க முடியவில்லை...

காளி 1950 கோடையில் ஸ்வீடனில் எங்கள் வீட்டிற்கு வந்தார். இந்தியாவில் கிளர்ந்து வந்த வகுப்புவாதம், பிரிவினைப் போராட்டம் ஆகியன எனக்குப் புரியவில்லை. இவைபற்றி அவரிடம் கேட்டேன்.

அவர் சொன்னார்: 'மத முரண்பாடுகள் உண்மையில் அரசியல் சமூகவியல் தன்மை கொண்டவை. ஆகவே மதரீதியான பிரிவுகளுக்கு வரலாற்று ரீதியில் விளக்கம் காணமுடியும். மதப்பிரிவுகள் இந்திய நிலக்கிழமையின் ஒரு விளைவாகும். ஆளும் வமிசங்கள் முசுலீம்களாயும் அவர்களின் ஆட்சி முசுலீம் ஆட்சியாயும் இருந்த அதே போது சமூகத்தில் சில மிக எளிய, மிக ஒடுக்கப்பட்ட பிரிவுகள் தம் அவலநிலையிலிருந்து தப்பிக்கொள்ள இசுலாம் சந்தர்ப்பம் அளித்தது. ஆனால் சுதந்திரத்துக்கு முந்திய தசாப்தங்களிலும் இப்போது பிரிவினையின் போதும் எழுந்துள்ள முரண்பாடுகள் பிரிட்டிஷாரின் தீர்மானமான கொள்கையின் விளைவேயாகும். இந்த விளைவுகளை அவர்கள் விரும்பினார்களா இல்லையா என்பது சர்ச்சைக்குரியது. பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் தம் ஆட்சியைக் காத்துக் கொள்ளலாம் என அவர்கள் நம்பினர். நெருப்போடு விளையாடுவோருக்கு என்ன நேருமோ அதுவே அவர்களுக்கும் நேர்ந்தது. பாலஸ்தீனில் நடப்பதும் அதுவே.

'இங்கு வங்காளத்தில் நடந்ததென்ன? பிரிட்டிசார் ஒரு மதக் கலவரத்தைத் தூண்டிவிட்டார்கள்). 1909க்கு முன் மதக் கலவரங்கள் நடந்ததில்லை. பிரிட்டிசார் வங்காளத்தைப் பிரித்ததற்குப் பிந்திய ஆரம்ப ஆண்டுகளில் எல்லையில் ஒற்றுமையை நிறுவ முயற்சிகள் செய்யப்பட்டன. ஒரு பக்கம் முசுலீம்கள் பெரும்பான்மையும் மறுபக்கம் இந்துக்கள் பெரும்பான்மையும் இருந்தது. நிச்சயமாக பெரிய மகாகாணமாயிருந்த வங்காளம் பிரிக்கப்பட்டிருக்கக் கூடியதுதான்; பிரிக்கப்பட்டிருக்க வேண்டியதுதான். ஆனால் எப்படி? ஒரியமொழி பேசுவோர் ஒரே ஆட்சியலகின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இந்தி பேசுவோர் மற்றொரு அலகின் கீழும் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் காரியம் அப்படிச் செய்யப்படவில்லை. வங்காளி பேசுவோர் சிறுபான்மையராயிருந்தனர். இந்தி பேசுவோர் 2 கோடி பேராயிருக்க வங்காளி பேசுவோர் 1.7 கோடியாயிருந்தனர். கிழக்கு வங்காளம் இசுலாம் பிரதானமாயுள்ள வங்காளமாயிருந்தது. திறமைமிக்க ஆட்சியலகுகள்தாம் பிரிட்டிசாரின் நோக்கமென்றால் வங்காளி பேசுவோருக்கெல்லாம் பொதுவான ஒன்றுபட்ட வங்காளத்தை அவர்கள் அமைத்திருக்க முடியும். வங்காளம் ஒரே பொருளாதாரத் தொகுதியாக அமைந்திருப்பது தேசப் படத்தைப் பார்த்தால் தெரியும். பிரிவினையால் எனது குடும்பம் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்ததாகி விட்டது.

'இம்முறையில் அரசியல், சமூக முரண்பாடுகளை மதவகை முரண்பாடுகளாக பிரிட்டிசாரால் மாற்றி விட முடிந்தது. எல்லா அரசியல் செயல்பாட்டு வடிவங்களும் பயனற்றுப் போனபின், 1905ல் விலக்கீடு இயக்கம் துவங்கப் பெற்றது. இந்த யோசனை சீனாவிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த சீனர்களுக்கு இனப் பாரபட்சத்தால் அல்லல் ஏற்பட்டது. அமெரிக்காவில் சீனர் கொத்தடிமைகள் போல் நடத்தப்பட்டனர். இனி வேலைக்கு ஆகமாட்டார்கள் என்றவுடன் நாடு கடத்தப்பட்டனர். இதற்கு முடிவுகட்ட சீனாவில் அமெரிக்கப் பண்டங்களை விலக்கும் இயக்கம்

தொடங்கியிருந்தது. பிரிட்டிஷ் பண்டங்களுக் கெதிரான வங்காளரின் இயக்கம் பிரிட்டிசாருக்கு எதிராக 5 கோடி வாக்காளர்களை ஒன்றிணைக்கும். பிரிட்டிசாரை எந்த இடத்தில் தாக்கினால் அவர்கள் துடித்துப் போவார்களோ அந்த இடத்தில் – அவர்களின் பணப்பெட்டிகளைப் போய்த் தாக்கும். அதே போது உள்நாட்டுத் தொழில்துறை வளர்ச்சிக்கும் அது நல்லது. சமீன்தார்கள் முதல் வண்ணார் வரை எல்லாரும் சுதேசி இயக்கத்தில் பங்கேற்றனர். தொடர்ந்து பிரிட்டிஷ் பண்டங்களை வாங்கிக் கொண்டிருந்தவர்களும் பிரிட்டிசாருக்குச் சேவை செய்தவர்களும் சமுதாய விலக்கம் செய்யப்பட்டனர். ஒரு பொருளில், சாதியமே சமூகவிலக்கத்தில் தன் முத்திரையைப் பதித்தது. தற்செயலாக இது பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் செயல் திட்டங்களிலும் ஒன்றாயிருந்தது. அவர்கள் இம்முறையை 'Sending to Coventry' என்றனர். எனவே இந்தச் சாதிய வழக்கத்தைப் பெரிதுபடுத்திக் கருதவேண்டியதில்லை. சுதேசி இயக்கத்தை மீறியவர்களுக்குத் தண்டனை கடுமையாக இருந்தது – அவர்களுடன் யாரும் உண்ணமாட்டார்கள்; அவர்களின் குழந்தைகளுடன் பிற குழந்தைகள் விளையாடவோ பேசவோ மாட்டார்கள். தமக்குச் சேவை செய்தோருக்குப் பிரிட்டிசார் பெருமளவு உதவியிருக்க முடியும். ஆனால் இத்தகைய சமூக விலக்கை உடைக்க எந்த அரசாங்கத்தால்தான் முடியும்? ஒரு சிறுநகரில் ஒரு குடும்பத்துக்குப் பைத்தியம் பிடிக்க வேண்டுமானால் அதை இவ்வாறு விலக்கி வைத்தால் போதுமானது. மனிதன் ஒரு சமூக விலங்கு என்பது அரிஸ்டாட்டில் கருத்து – இல்லையா?

'ஆனால் பிரிட்டிசாரிடம் ஒரு ஆயுதம் இருந்தது. அதுதான் மதம். 1905, 6, 7ல் சுதேசி இயக்கம் வளர்ந்தது. ஆனால் அதை முன்னின்று நடத்தியதும் அதனால் ஆதாயம் அடைந்ததும் இந்து நடுத்தர வர்க்கம்தான். தேசிய இயக்கத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவர்கள் கல்வியற்ற, வசதியான குடும்பங்களைச் சேர்ந்த புதிய நடுத்தர வர்க்க இந்துக்களும், ஓரளவுக்கு சமீன்தார்

குடும்பத்தினரும்தான். எனவே 1909ல் பிரிட்டிசார் தொடர்ச்சியான சிறு சீர்திருத்தங்களை நிறைவேற்றினர். மத அடிப்படையில் முஸ்லீம்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் தந்தனர். நிர்வாகத்தில் அவர்களுக்குக் கூடுதல் பதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு தனிப்பட்ட சலுகைகளும் தரப்பட்டன. இங்கு சாதி, வர்க்கம், மதம், தேசிய இனம் எல்லாம் ஒன்றுடன் ஒன்று சிக்கலான வலையாகப் பின்னப்பட்டிருப்பதைக் காணலாம். முதலில், இந்துக்களும் முஸ்லீம்களும் ஒரு ஒன்றுபட்ட வங்காளத்துக்காக தோளோடு தோள் சேர்ந்து நின்றார்கள். மக்கள் கூட்டம், 'அல்லாஹோ அக்பர்' என்றும் 'வந்தே மாதரம்' என்றும் ஒன்றாய்க் கூவியது. ஆனால் ஏழை மக்களுக்கும் அவர்களைச் சுரண்ட வந்த கடும் வட்டிக்காரர்களுக்கும் இடையிலான வர்க்க முரண்பாடு, பிரிட்டிசாரின் செயலால் முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலான முரண்பாடாக மாற்றப்பட்டது. பிரிட்டிஷ் அரசியல் போலீஸ் உளவாளிகள் இந்து முஸ்லீம் வெறியர்களுக்குத் தூபம் போட்டனர். 1907 மார்ச் 4 அன்று அவர்களின் முயற்சிகள் கைகூடின. அன்று இன்றைய கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள கோமிலா என்ற இடத்தில் இன அழிப்பு (Pogrom) என்று சொல்லத்தக்க முதல் சம்பவம் நடைபெற்றது. அதற்கு இங்கு 'வகுப்பு வாதக் கலவரம்' என்று பெயர் தந்தார்கள். இனக்கொலை வகுப்புக் கலவரம் இரண்டிலும் நடப்பன சமூகக் கொலை, கொள்ளை, கற்பழிப்புகள்தான். அதிகாரிகள் கைகட்டிக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இன ஒழிப்புகள் ('வகுப்புக் கலவரங்கள்') அவர்களுக்கு சாதகமானவை. பிரிட்டிஷ் அரசாங்கமும் ஜாரின் கருப்பு நூற்றுவரும் இதில் ஒரே விதமான கொள்கையையே கடைபிடித்தார்கள். யூதர் அயூதருக்கும், இசுலாமியர் இந்துக்களுக்கும் எதிராக திருப்பிவிடப்பட்டால் ஆட்சியாளர்களுக்கு அவர்களையெல்லாம் ஒடுக்குதல் எளிதாகும். ஒரு தடவை மதக்கலவரம் வெடித்து விட்டால் பின் அது தனக்கேயுரிய முறையில் வளர்ச்சி பெறுகிறது. நமது நாட்டிலோ அயர்லாந்திலோ பாகிஸ்தானிலோ நடந்ததைப் பார்க்கும்போது இது வெளிப்படையாகிறது. நெருப்பை

மூட்டி விட்டவர்கள் பிரிட்டிசார். ஆனால் அவர்களால் அதனை அணைக்க முடியவில்லை.

“ஆனால் இயல்பாகவே நாங்கள் எமது கலாச்சாரத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறோம். நாங்கள் (அல்லது எங்கள் தலைமுறையைச் சேர்ந்தவர்கள்) உள்முகத் தியானத்திலும் பகுப்பாய்விலும் பயிற்சி பெற்றோம் (அல்லது பெற்றுள்ளோம்) இந்துமதம் விநோதமான, மறைஞானச் சடங்குமதம் என பெரும்பாலான ஐரோப்பியர் நம்புகிறார்கள். இது முற்றிலும் தவறாகும். நான் மதவாதி அல்ல. ஆனால் எனக்கு உபநிடதங்கள் மீது கவர்ச்சி இருப்பது இயல்பு. ஏனெனில் எனது வளர்ப்பு அப்படி. நல்ல இந்துவாக இருப்பதற்குக் கடவுள் நம்பிக்கை இன்றியமையாதது அல்ல. சமரசமற்ற அறிவாண்மையையே உபநிடதங்கள் கோருகின்றன. அதாவது உபநிடதங்களைப் பெற்ற ஒருவர் தத்துவ நாட்டமுள்ளவராய், அல்லது அறிவாளி மரபினராய் அல்லது அறிவாளி சாதியினராய் இருப்பது போதுமானது. மற்றவர்களுக்கும் உபநிடதங்கள் பைபிளைப் போல் மதஞ்சாராப் படிப்புக்குப் பயன்படமுடியும். ஆனால் இந்துமதமானது ஐரோப்பியர்களுக்குத் தோன்றுகிற மாதிரி நமக்குத் தோன்றுவதில்லை – தோன்ற வேண்டுவதில்லை.

‘நான் சாதி மதத்துக்குக் கட்டுப்பட்டவனல்லன். ஆனாலும் – நல்லதற்கோ கெட்டதற்கோ – இந்து மதத்தின் செல்வாக்கு என் மீது உண்டு என்பதையும் நான் இந்து என்பதையும் நான் அறிவேன். வங்காளிகளாகிய எங்களுக்கு இந்துமதம் அதிகம் கெடுதலே செய்திருக்கிறது. உபநிடதங்களைக் கற்பதில் நாங்கள் பெற்ற அறிவுப் பயிற்சி, மயிர் பிளக்கும் வாதங்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. இவை புலன்களையும் அறிவையும் திசை பிறழச் செய்வன. முதலில் பகுத்தறிவான வாதங்களைக் கொண்டே தொடங்குவான். பின் அதிபக்குவமாகவும் அதிபுத்திசாலித்தனமாகவும் அதிஇயங்கியல் தன்மையோடும் தொடர்ந்து வாதிடுகிறான்; கடைசியிலோ நிலையியல் புதைசேற்றில் ஆழ்ந்து விடுகிறான். இது ஒரு ஆழவேரூன்றிய மரபாகும். உள்முகம் நோக்கிய

ஊகவாதமாகிய மொத்தப் பழமை மரபும் எமது ஆண் பெண்களை மலட்டுத் தியானம், தன் மறுப்பு. செயலின்மை ஆகியவற்றுக்கே இழுத்துச் சென்றுள்ளது. இது ஆபத்தான சோதனையாகும். நானே இதை உணர்ந்திருக்கிறேன். எமது சிறந்த மனிதர்கள் பலரும் இதற்குப் பலியாகி இருக்கின்றனர். வங்காளிகடையே நிலவும் சாபம் இது. எமது மாபெரும் மரபு, நல்ல கூறுகளைக் கொண்டிருப்பது போலவே தீய கூறுகளையும் கொண்டுள்ளது. ஆனாலும் அது எமக்கே சொந்தமான மரபாகும்.

அன்று மாலை அவர் எனது நூல்களைப் பார்வையிட்டார். இந்தியா சம்பந்தமாக என்னிடமுள்ளவை யாவை எனக் கேட்டார். அதிகம் இல்லை. நினோ ரூன்பர் மொழிபெயர்த்த பகவத்கீதை, முல்க்ராஜ் ஆனந்தின் 'கூலி' (பெங்குவின் பதிப்பு), தாகூரின் 'எனது நினைவுகள்' இன்ன சில.

அவர் சொன்னார்: "கீதையைப் பல்வேறு முறைகளில் பயிலமுடியும். ஆனால் நம்மைப் போன்ற தேசியவாதிகளைப் பொறுத்தவரை அது தேசபக்தச் செயலுக்கு அறைகூவும் நூலாகும். இன்றும் அது இந்திய மக்களுக்கு ஒரு புரட்சிப் படைப்பாக, புரட்சிக் காவியமாக இருக்கிறது. இந்த முறையில் அதற்கு உரை செய்வதே தேவை. 20களின் இறுதியில் எமது தலைவர்கள் எல்லோரும் சிறைகளில் உட்கார்ந்திருந்தார்கள். எம்மில் பலர் ஜாந்தரிலும், அனுசீலனிலும் இருந்தோம். அப்போது வங்காளத்தில் இருந்த தேசியக் கட்சியின் மேலை, கீழை பிரிவினர் 'பயங்கரவாதத்தின் காலம் கடந்து விட்டது என நம்பினர். நாங்கள் இயக்கமற்றவர்களாய் ஓய்ந்து கிடந்தோம். நான் உட்பட கட்சி உறுப்பினர்கள் பலரும் சமாதானக் காலத்தில் வாழ்வதாக நம்பினோம். இந்தியாவில் இப்போதைக்கு கிளர்ச்சிகள் நேராது; நாங்கள் செயல்படத் தேவையிராது; அடுத்த உலகப் போருக்கு முன்பாக எழுச்சி எதுவும் ஏற்படாது; அடுத்த உலகப் போர் மூளவோ நீண்ட காலமாகும் என்று நம்பினோம். எங்களில் சிலர் காந்தியைக் கூட நம்பினர். சட்ட மறுப்பு இயக்கம் இந்திய சுதந்திரத்துக்கு

வழியாகும் என நம்பினர். ஆயுதக் கிளர்ச்சி என்ற எமது வழியை நாங்கள் கைவிட்டு விடுவோம் எனக் கருதினர். சிறையிலிருந்த எமது தலைவர்கள் இதனையறிந்து வாட்டமுற்றனர். நாங்கள் நாட்டுக்குப் பயன்படாதவர்களாய்ப் போய்க் கொண்டிருக்கிறோம் என உணர்ந்தனர். எனவே அவர்கள் எங்களுக்கு ஒரு சேதி அனுப்பினார்கள். அதில் கூறப்பட்டிருந்ததாவது: 'கீதையுகம் இன்னும் கழிந்து விடவில்லை. நாம், பலன் எதிர்பாராமல் கருமம் செய்ய, தன்னலமற்றுச் செயல்பட நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்' இந்த சேதியின் பொருளைப் புரிந்து கொள்வது எங்களுக்குக் கடினமாக இருக்கவில்லை. நாங்கள் உடனே எமது போக்கை மாற்றி ஆயுதப் போராட்டத்துக்கு ஆயத்தமானோம்'.

பகவத்கீதைக்கு இவ்விதம் உரை கூற முடியுமென எனக்குத் தோன்றியதில்லை. ஆனால் காளியுடன் பேசினபின் நான் அதை புதிய ஒளியில் மீண்டும் வாசித்தேன்.

எனவே உலக நலனைக் கருதி
கடமை உணர்ந்து கருமம் புரிக!
பெரிய மனிதர் செய்யும் எதையும்
எளிய மக்களும் பின்பற்றி நடப்பர் (III, 19-20-21)

கீதையுகம் இன்னும் கழியவில்லை என்பதன் பொருள் என்ன? பிரிட்டிசாரைத் தோற்கடிக்க முடியும் என்பதை மக்கள் உணரும்படியாக திமிர் பிடித்த பிரிட்டிசாரைக் கொல்ல யாராவது முன்வந்தாக வேண்டும் என்பதே.

'பயங்கரவாதத்தை வரலாற்று உள்ளடக்கத்தில் வைத்துப்பார்க்க வேண்டும். அதைப் பற்றி ஒழுக்கவியல் தீர்ப்பு கூறிக்கொண்டிருந்தால் போதாது. 19ஆம் நூற்றாண்டின் ரஷ்யப் புரட்சிக்காரர்களுக்கு எப்படியோ அப்படியேதான் எமக்கும். நாங்கள் பூரண ஒடுக்குமுறையின் கீழ் வாழ்ந்தோம். எங்களிடையே செயலற்ற தன்மையும் பூரணமாக நிலவியது. மக்களை வெருட்டுவதல்ல, வீரமுள்ள விடுதலைச் செயலுக்கு அவர்களை விழிப்புறச்

செய்வதே நம் கருத்து. பயங்கரவாதம் பற்றி மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் சொன்னவை எனக்குத் தெரியும். அத்துடன் சில மனிதர்களின் சுய தியாகமும் வீரமும் பொதுமக்களை உசுப்பிவிடமுடியும் என்பதை என் கண்களாலேயே கண்டேன் என்பதையும் நான் கூறுவேன்; சட்ட மறுப்பு இயக்கம் என்ற அளவிலேயே போராட்டம் இருந்தவரை அதனால் இந்தியரிடையே கொந்தளிப்பு நிலவியதேதவிர ஆங்கிலேயர் அமைதியாகவே இருந்தார்கள். கிளர்ச்சிகளால் பாதிக்கப்படாதவர்களாய் அதனை எளிதாக ஒடுக்கிவிடும் நிலையில் இருந்தார்கள். இயக்கத்தின் அகிம்சைப் பண்பை அவர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ஆனால் ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராக நாம் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடத் துவங்கினதும், கைதுகள், சித்திரவதை, நாடு கடத்தல், தூக்கிலிடல் போன்றவற்றால் நம்மை மடக்கி விட முடியாதென்பதை பிரிட்டிஷார் உணர்ந்தனர். உணர்ந்து நடுங்கினர். தமது சன்னல்களுக்குத் திரைகள் போட்டனர். உயரதிகாரிகள் பயணங்களின் போது மெய்க்காவலர்களைச் சேர்த்துக் கொண்டனர். சிவில் ஊழியர்கள் துப்பாக்கிகள் வைத்துக் கொள்ளத் துவங்கினர். தமது சொந்த அலுவலகங்களிலும் முன்பின் அறியாத இந்திய இளைஞரைச் சந்திக்கப் பயந்தனர். ஆங்கிலேயர் வெல்லற்கரியர் அல்லர் என்பதைத் தேசமே கண்டு கொண்டது. அதன்பின் இந்தியர் ஆங்கில 'சாகிபு' களின் முன் மண்டியிடுவதை நிறுத்தினர். இந்தியர் சுயமரியாதை பெற்றனர். மக்களியக்கத்தின் வளர்ச்சியில் பயங்கரவாதம் ஒரு படிக்கட்டாக உதவியது. இன்றும் இதை நான் நம்புகிறேன்.

'இத்தன்மை நடுத்தர வர்க்கப் புரட்சியாளர்களின் தன்மை என்பது மெய்யே. ஆனால் நடுத்தர வர்க்கத்தை அப்படியே முழுவதுமாகப் புறக்கணித்து விட முடியுமா? நாங்கள் எல்லாருமே – நேரு, போஸ் உட்பட – நடுத்தர வர்க்கங்களிலிருந்து வந்தவர்கள்தாமே. ஆனால் வெவ்வேறு பாதைகளில் வளர்ந்தோம். சிலர் வலது பக்கம் போய் கொடுநெறியாளர் ஆயினர். (அவர்கள் போகுமிடத்தைக்

கண்டு கொள்ளவே சிறிதுகாலமாயிற்று). பிறர் இடது பக்கம் சென்றனர். எம்மில் சிலர் எப்போதும் பொதுவுடமைக் கட்சி வழியில் சென்றோம். வளர்ச்சிகளைக் கவனிக்கும் போது எப்படி 19-ம் நூற்றாண்டின் ரஷ்யாவிலிருந்து நடுத்தரவர்க்கப் புரட்சியாளர்களை விலக்கியிருக்க முடியாதோ அப்படியே வங்காளத்திலிருந்தும் அவர்களை விலக்கி விட முடியவில்லை. சில சூழ்நிலைமைகளில் அடக்குமுறை கடுமையாய் இருக்கும் போது சுயதியாகம் செய்யக் கூடிய தலைவர்கள் அடங்கிய சிறு குழு ஒன்று தேச முழுவதற்கும் பாதுகாப்புத் தர வேண்டியிருக்கிறது. ஒரு சிலராகிய வீரர்கள் தடையை உடைத்து மக்களனைவரும் பின்தொடர வழி ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. இதனால்தான் சிறையிடப்பட்ட எமது தலைவர்கள் எங்களுக்கு கீதையையும் செயல்படுவதன் தவிர்க்க இயலாமையையும் நினைவுபடுத்தியமை முக்கியத்துவம் வாய்ந்தாயிருந்தது'.

காளி சொன்னது சரி. 19-ம் நூற்றாண்டு ரஷ்யாவைப் போலவே இந்தியாவிலும் பயங்கரவாதம் இருக்கிறது. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் தம்மைப் புரட்சிகரப் பயங்கரவாதிகள் என அழைத்துக் கொண்ட குற்ற வகுப்பினருடன் (demimonde) இந்திய பயங்கரவாதிகளைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. எனவே ரஷ்யா, இந்தியா, மேற்குஐரோப்பா ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாகக் காண வேண்டும். 1925-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு தடை செய்யப்பட்ட தேசியவாத நூலிலிருந்து:

இந்தியப் புரட்சிக்காரர்கள் பயங்கரவாதிகளல்ல. அராஜகவாதிகளுமல்ல. நாட்டில் அராஜகத்தைப் பரப்புதல் ஒருபோதும் அவர்களின் நோக்கமாயிருந்தது கிடையாது. எனவே அவர்களை அராஜகர் என்று சொல்லிவிட முடியாது. பயங்கரவாதம் அவர்களின் குறிக்கோளல்ல. எனவே அவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் கூறமுடியாது. பயங்கரவாதமே சுதந்திரத்தைக் கொணர்ந்து விடுமென அவர்கள் நம்பவில்லை. பயங்கரவாதத்துக்காவே

பயங்கரவாதத்தை விரும்பும் தன்மை அவர்களிடமில்லை. என்றாலும் பழிவாங்குதலின் மிகப் பயன் தரக்கூடிய உத்தியாக சில சமயங்களில் அவர்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள். இந்திய மக்களை அந்நியர் வெற்றிகரமாக வெருட்டி வைத்திருப்பதால் மட்டுமே இன்றைய அரசாங்கம் நிலவ முடிகிறது. இந்திய மக்கள் தம் ஆங்கில ஆண்டைகளை நேசிக்கவில்லை. அவர்கள் இங்கிருப்பதை விரும்பவுமில்லை. என்றாலும் அவர்களைக் குறித்து இந்தியர் வெகுவாக அச்சமுற்றுக் கிடப்பதன் மூலமே அவர்கள் இங்கிருக்க உதவி வருகிறார்கள். இந்த அச்சமே இந்தியர்கள் புரட்சிக்காரர்களுக்கு உதவிக்கரம் விரிப்பதைத் தடுக்கிறது. புரட்சிக்காரர்களை இந்தியர் நேசிக்கவில்லை என்பதல்ல காரணம்.

இந்த அரசு பயங்கரவாதத்தை எதிர் பயங்கரவாதத்தால் சந்திப்பது நிச்சயமாக அவசியமாகும். நமது சமுதாயத்தின் எல்லா அடுக்கிலும் முற்றான கையலாகாத்தனம் ஊடுருவியுள்ளது. இதற்கு மாற்றான சரியான உளநிலைகளை சமுதாயத்துக்கு மீட்டுத்தர பயங்கரவாதம் ஒரு பயனுள்ள வழியாகும். இத்தகைய சரியான உளநிலை இன்றி முன்னேற்றம் ஏற்படுவது கடினமானதாகும்.

ஐந்தாண்டுகள் கழித்து மற்றொரு தடைசெய்யப்பட்ட ஏடு கூறியதாவது:

"நமது பயங்கரவாதக் கொள்கைக்காக நாம் கண்டிக்கப்படுகிறோம். புரட்சிக்காரர்களின் லட்சியம் பயங்கரவாதமல்ல என்பதே நமது உறுதியான பதில். பயங்கரவாதம் மட்டுமே சுதந்திரத்தை வழங்கிவிடும் என அவர்கள் நம்புவதுமில்லை. அதே சமயம் பழிவாங்க மிகச் சிறந்த வழி பயங்கரவாதத்தை நாடுவதே என்றே புரட்சிக்காரர்கள் நம்புகிறார்கள். இது சரியானதே."

இதற்கெதிரான வாதங்கள் பிரச்சினையின் மையத்தைத் தொடுவனவாகவும் தெளிவான முறையில் வெளியிடப்பட்டனவாகவும் உள்ளன. காட்டாக, பொதுவுடமை இளைஞர் அகிலம் 1925 ஜூலையில் வங்காளப் புரட்சிகர இளைஞர் அணிக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தைப் பார்ப்போம்:

"இந்திய மக்களை விடுவிக்கத் தனியாள் பயங்கரம் உதவ முடியாது. ஏனெனில் 1. தனியாளுக்கெதிராக ஏவி விடப்படும் பயங்கரச் செயல், அமைப்பை முழுமையாய் அகற்றி விடுவதில்லை. ஒழிக்கப்பட்ட ஒருவனின் இடத்தில் இன்னொருவனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியர் நிரப்பி விடுகின்றனர். ஒரு அதிகாரியின் இடத்தில் இன்னொருவன் வந்து அமர்ந்து கொள்கிறான்; அவ்வளவே. ஒடுக்குமுறை அமைப்போ கட்டுக்குலையாமல் இருக்கிறது. 2. பயங்கரச் செயலுக்கு அளவற்ற செலவும் முயற்சியும் தேவையாகிறது. இது மக்களைத் திரட்டி, ஒழுங்கமைத்துப் புரட்சிகரமான முறையில் அவர்களைப் பயிற்றுவிக்கும் அடிப்படைக் கடமைகளிலிருந்து நம் கவனத்தைத் திருப்பி விடுகிறது.

மக்கள் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாதவர்களும் (மக்கள் போரின் சாத்தியங்களில் நம்பிக்கையில்லாதவர்களும்), உழைக்கும் மக்களின் நேரடிப் பங்கெடுப்பில்லாமல் அறிவாளிகள் சிலர் சேர்ந்த குழுவே புரட்சியைக் கொண்டு வந்து விட முடியும் என நம்புபவர்களுமான அறிவாளிகளின் குழுக்களே வழக்கமாக தனியாள் பயங்கரவாதத்தைத் தமது போராட்ட முறையாகக் கடைப்பிடிக்கின்றன.

நமது ஆகச் சிறந்த சக்திகளைப் பயங்கரச் செயல்களில் பலியிடுவதைப் பார்க்கினும், அத்தகைய சக்திகள் நேரே மக்களின் மத்தியில் செல்ல வேண்டும். போராட்டத்துக்கு அவர்களை எழுச்சியூட்ட வேண்டும். போராடுவதற்காக மக்களை அணி திரட்டுவதிலேயே உங்கள் கவனம் முழுவதும் ஈடுபடுத்தப்பட வேண்டும். ரஷியாவின் அனுபவமும் பிற நாடுகளின் அனுபவமும் ஏன் உங்கள் சொந்த அனுபவமுமே இதைத்தானே கற்பிக்கிறது?

லெனினின் அண்ணன் ஒரு பயங்கரவாதி. அவர் ஜாரைக் கொலை செய்ய முயன்றார். அம்முயற்சிக்காக அவர் படுகொலை செய்யப்பட்டார். தன் அண்ணன் இறந்ததும் லெனின் அதே லட்சியத்துக்காகக் கடைசிவரை போராடுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார் — ஆனால் வேறுமுறையில், அண்ணன் காட்டிய வழியை விடவும்

நிச்சயமான வழியில், அறிவாளிகள் மேற்கொண்ட தனிநபர் போராட்டத்தை அவர் வரித்துக் கொள்ளவில்லை. விடுதலைக்காக வீரமிக்க போராட்டம் நடத்த மக்களைத் திரட்டும் பணியிலேயே அவர் ஈடுபடத் துவங்கினார். அங்ஙனமே பாட்டாளி மக்களை வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

மேற்கண்ட கடிதத்தை எழுதும் பொறுப்பை பொதுவுடமை இளைஞர் அகிலத்தின் நிர்வாகச் செயற்குழு, எம்.என்.ராயிடம் ஒப்படைத்தது. அப்போது அவர் கோமிண்டர்ன் தலைமைக்குள் இந்தியாவின் பிரதிநிதியாயிருந்தார். தனியார் பயங்கரவாதம் பற்றித் தான் பேசியதென்ன என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

1905-ல் வங்காளத்தில் சாங்கிரிபோடாவில் (Changripota) இருந்த பார்ப்பன மாணவன் நரேந்திரநாத பட்டாச்சாரியன். பட்டாச்சாரி, கரிபால்டி பற்றிய நூல்களை வாசித்துக் கொண்டும், கல்கத்தாவில் நடந்த அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்டும் இருந்தான். இவனுக்கு இவனது பள்ளி முதல்வரிடமிருந்து ஒரு எச்சரிக்கை வந்தது. முதல்வரின் எச்சரிக்கைக்கு எதிராக, வகுப்பு நடக்காத நேரத்தில் நரேந்திரநாத் பள்ளியின் முன்பேயே ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தான். அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள். நரேந்திர நாத்தும் வேறு ஏழு பேரும் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டனர். அப்போது அவனுக்கு வயது 18.

அடுத்த பத்தாண்டுகளில் வங்காளப் பயங்கரவாத இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவனானான். அவன் ஒரு தீவிரத் தேசியவாதி. குறி தவறாத ஒரே சூட்டில் காதின் பின்புறம் தாக்கி பிரிட்டிஷ் போர் வீரர்களை வீழ்த்தும் உத்தியை அவன் பயின்று தேர்ந்தான். துப்பாக்கித் தண்டு அவன் ஆடை மறைவில் இருக்கும். சுடும் கணத்திலேயே அது வெளிப்படும். படைவீரன் தரையில் விழுவதற்குள் தாக்கினவன் மக்கள் கும்பலுக்குள் மறைந்து போயிருப்பான். பத்தாம் ஜாட் படை வகுப்பில் அவன் கலக வேலை நடத்தினான். பிரிட்டிசார் அந்தப் படை வகுப்பைக் கலைக்க

வேண்டியதாயிற்று. துறவி வேடமிட்டு பிரிட்டிசாரின் உளவாளிகளிடமிருந்து தப்பிக் கொண்டான். இந்தியா முழுவதும் அலைந்து 1857 கிளர்ச்சியில் மிஞ்சினவர்களைச் சந்தித்தான். அவர்களின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டான். பறிமுதல்கள், வைப்பகக் கொள்ளைகள் போன்றவற்றில் தலைமைப் பங்கு வகித்தான்.

பிற்காலத்தில் ராய் என்று அறியப்பட்ட இளம் நரேந்திரநாத் பட்டாச்சாரி வங்காளத்தில் இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, பிற்காலத்தில் ஸ்டாலின் என்று அறியப்பட்ட இளம் கோபா (Koba) காக்கசில் தன் கட்சிக்காகப் பறிமுதல்களையும், வைப்பகக் கொள்ளைகளையும் நடத்திக் கொண்டிருந்தார். இந்தியாவிலேயே முதன்முதலாக மோட்டார் வாகனங்கள் உதவியுடன் ஒரு கொள்ளையைத் திட்டமிட்டு நடத்தி முடித்தவர் ராய். பர்ட் குழுமத்திலிருந்து இங்ஙனம் களவாடிய 18,000 ரூபாய் கட்சி வேலைக்குப் பயன்பட்டது. அப்போதிருந்து அவரது நண்பர்களும், தோழர்களும் அவரை அரசியலை முற்றும் உணர்ந்தவரென வருணிக்கத் துவங்கினர். ‘அவர் ஒருவனைக் கொன்றால், உணர்ச்சி வேகத்தாலல்ல, அரசியல் அவசியத்தாலேயே கொல்வார்’, அமைப்புக்குள் பயங்கரவாதத்தை கொரில்லாப் போர்முறையாக மாற்றி விடுதலைக்கு அதுவே பாதை என ஆக்க மிகத் தீவிரமாய் முயன்றவரும் அவரே. மற்றவர்கள் கடவுளரையும், உணர்ச்சிகளையும் பற்றிப் பேசிக் கிடந்த போது புரட்சிகரப் பயங்கரவாதத்தின் மூலம் பிரிட்டிஷ் சேனையைத் தகர்ப்பது எப்படி என்பதை அவர் விவாதித்தார்.

1914-ல் முதல் உலகப்போர் மூண்டது. காந்தி என அறியப்பட்ட மோகன்தாஸ் கரம்சந்த் – இங்கிலாந்தில் படித்து வழக்கறிஞரானவர் - பிரிட்டிசாருக்கு முழு ஆதரவு தருவதாக வாக்களித்தார். வங்காளப் பார்ப்பனராகிய நரேந்திரநாத பட்டாச்சாரியாருக்கு ஜெர்மானியரிடமிருந்து ஆயுதத்தளவாடங்கள் வாங்கி வரும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. அவற்றைக் கொண்டு இந்தியாவில் பிரிட்டிசாருக்கெதிரான ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டும் என்பது முடிவு.

சிலவற்றில் கூடுதல் சிக்கல் நேர்ந்த பல சாகசங்களுக்குப் பிறகு அவர் கலிபோர்னியாவில் சான்பிரான்சிஸ்கோ 'மார்டிக் பாதிரியாக' – ஐரோப்பாவுக்கு மேல் படிப்புக்குப் போகவுள்ள இளம் இறையியலார் வேடத்தில் இறங்கினார். கரையிறங்கிய பின் அவர் 'எம்.என்.ராய்' ஆகி விட்டார். இப்பெயரையே அவர் சாகும்வரை பயன்படுத்தினார். இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்துவதற்காக காதர் கட்சியுடன் சேர்ந்து அவர் ஆயுதங்கள் பெற வேண்டும்.

சிறிது பின்னர் அவர் மாஸ்கோவில் லெனினுடனும் மூன்றாம் அகிலத்திலும் செயல்பட்டார். கொஞ்ச காலம் காலனிய, சார்பு நாடுகளின் நடவடிக்கைகளுக்கு மூன்றாம் அகிலத்தின் தலைமைப் பிரதிநிதியாயிருந்தார். சீனாவுக்கு அனுப்பப்பட்டார். அவரது சந்திப்பு வெற்றி பெறவில்லை. மாவோவுடன் மோதிக் கொண்டார். 1936-ல் வடசெ ன்சியில் நடந்த தன் பேச்சுகளில் மாவோ ராயை 'திறமையற்றவர்' என ஒதுக்கினார். ராய் மாஸ்கோ திரும்பினார். ஸ்டாலினுடன் முரண்பட்டுக் கொண்டார். அகிலத்திலிருந்து விலகினார். இந்தியா திரும்பினார். பிரிட்டிசாரால் சிறையிடப் பட்டார். தனக்கென ஒரு கட்சியை நிறுவ முயன்றார். பின் தனது சொந்த அரசியல் தத்துவமான 'புரட்சிகர மனிதாபிமானம்' என்பதை உருவாக்கவும் முயன்றார். 1954-ல் இறந்தார். இந்நூற்றாண்டின் மிகக் குறிப்பிடத்தக்க மனிதர்களில் அவர் ஒருவர். மற்ற எவரினும் பார்க்க அதிக தேசியத் தன்மை கொண்ட தேசியவாதி அவர். 1916-ல் மார்க்சை படித்துக் கொண்டிருந்த அவர் சில ஆண்டுகளுக்குள் முன்னணி உலகப் புரட்சியாளருள் ஒருவர் ஆனார். 1928-ல் நடந்த ஆறாம் உலகக் காங்கிரசுக்குப் பின் அகிலத்திலிருந்து முறித்துக்கொண்டார். – அல்லது அகிலம் அவரிடமிருந்து முறித்துக் கொண்டது எனலாம். இந்தியாவுக்குத் திரும்பினவரை பிரிட்டிசார் சிறை பிடித்தனர். காங்கிரசுக்குள் வேலை செய்தார். 1940ல் கொடுநெறி எதிர்ப்பாளராக ஹிட்லரே முதன்மை எதிரி என்ற கருத்துடன் காங்கிரசிலிருந்து விலகினார். தன்னை வெளியேற்றிய

ஸ்டாலினுக்கு ஆதரவாக வாதிட்டார். அவரது கருத்துக்களுக்கு நியாயம் கற்பித்தார். கருத்தொளி வீசும் நூல்கள் எழுதினார். பயங்கரவாதக் கோட்பாட்டை வளர்த்தவரும் அவரே. அறிவுபூர்வ வாதங்களைக் கொண்டு அதனை எதிர்த்தவரும் அவரே. ஆனால் அவரது வாழ்நாளின் கடைசியில், முற்றுப்பெறாத தனது சுயசரிதையில் அவர் எழுதினார்:

அந்தச் சிந்தனைகள் என்னைப் பின்வரும் முடிவுக்கு இட்டுச்சென்றன: மேலும் பழமையான, சம்பிரதாயம் குறைந்த பண்பாட்டு மரபு மட்டுமே, முதலாளியச் சமூக அமைப்பின் செயற்கைத்தனங்கள், கொச்சைத்தனங்கள் ஆகியவற்றை நிராகரிப்பதற்கு நமக்கு உதவும்: மேலும் அத்தகைய பண்பாட்டு மரபு மட்டுமே, மேலும் வளமான மனிதப் பண்பாட்டு வடிவமைப்புகளையும், மேலும் உயர்வான பண்பாட்டு இலட்சியங்களையும் கண்டறிய உதவும். திட்டவட்டமாகக் கூறுவதானால், தனது வர்க்கச் சார்புக் கருத்துகளிலிருந்து தன்னை அறிவு ரீதியாக விடுவித்துக் கொண்ட ஒரு மேட்டுக்குடி சார்ந்தவரே, மிகுந்த உணர்ச்சி பூர்வமான வர்க்க உணர்வுள்ள பாட்டாளி வர்க்கத்தவரைக் காட்டிலும் பற்றற்றவராகவும் பண்பாட்டு வளமிக்க சமூகப் புரட்சியாளராகவும் விளங்க முடியும் என்பதே என் கருத்து. வேறு வார்த்தைகளில் சொன்னால், பொதுவான மனித பண்பாட்டு மரபைப் பிரதிநிதித்துவம் செய்யும் மேட்டுக்குடி அறிவாளிகள் மட்டுமே உண்மையாகவே புதிய ஒரு சமூக அமைப்பின் அடித்தளத்தை நிறுவ முடியும்.

காளி இவ்வாறு சொன்னதேயில்லை. ஆனால் அவரும் அராஜக, தனிமனித அறிவுவாதத்துக்கும், அல்டஸ்ஹக்ஸ்லியின் மீது தனக்குள்ள பிரியத்துக்கும் இடையில் தனக்குள் நடந்த போராட்ட சோதனைகள் பற்றி ஒருமுறை சொல்லியிருக்கிறார். சமதரும லட்சியங்கள் மீது அவருக்கிருந்த தேசியபற்று ருசியாவின் மீது அவருக்குள்ள விசுவாசமாக மாறிவிட்ட போதும், ஒருகாலத்தில் தான் அறிந்திருந்த வங்காளப் பயங்கரவாதத்தின் மீது அவருக்குள்ள பரிவு குன்றவேயில்லை. பல வழிகளில் ராயும், காளியும்

ஒருவர் ஒருவரையும் இருவரும் சேர்ந்து வங்காள அறிவாளியையும் எனக்கு விளங்கச் செய்தார்கள்.

பல ஆண்டுகளாக நான் கற்றுக்கொள்ளாதிருந்ததும், பி.சுந்தரய்யா வெளியிட்டிருந்த நூலை 1974-இல் பம்பாயில் நான் காண நேர்ந்ததற்கு முன் எனக்கு உறுதியாகாதிருந்ததுமான விசயம் ஒன்றுண்டு; காளி பயங்கரவாதம் பற்றி என்னுடன் பேசியதற்கு 6 மாதத்துக்கு பின்பு, இந்தியப் பொதுவுடைமைவாதிகளுக்கிடையில் ஏற்பட்டு வந்த ஓயாத கருத்து மாறுபாட்டால் சோர்ந்து போன ஜோசப் ஸ்டாலின், இந்தியப் பொதுவுடைமைவாதிகளை விமர்சித்திருந்தார் என்பதும், தனி நபர் பயங்கரத்தைப் பிரயோகிப்பது பற்றி இந்தியப் பொதுவுடைமையருக்கிடையில் இருந்த குழப்பமான நிலைபாட்டைப் பற்றியதே அவ்விமர்சனம் ஆகும் என்பதுமே அவ்விசயமாகும்.

எப்போதுமே பிரிவுற்றுக் கிடந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சி வேறெந்தக் காலத்தையும் விட இந்தக்காலத்தில் அதிகம் பிளவுற்றுக் கிடந்தது. தெலுங்கானாவில் உழவர் போர் நடந்து கொண்டிருந்தது. இந்நிலையில் கட்சி ஒன்றுபட்ட அமைப்பாகச் செயல்படாது போயிற்று. பல்வேறு குழுக்களும் பிரிவுகளும் தம்மிச்சையாக இயங்கின. இப்பிளவுகள் அரசியல் ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும், தனிநபர் ரீதியாகவும் ஏற்பட்டவையாயிருந்தன. வெவ்வேறு தலைவர்கள் ஒருவரையொருவர் கடுமையாக வெறுத்துக்கொண்டார்கள். எந்தவிதமான ஒற்றுமைக்கு வருவதும் அசாத்தியமாகிறது. இந்நிலையில் மத்தியச் செயற்குழு, தான் கூடுவதை ஒத்தி வைக்கத் தீர்மானித்தது. அப்போதைக்கு ஒரு தூதுக்குழுவை மாஸ்கோவுக்கு அனுப்புவதென்றும், சோவியத்கட்சியிடமிருந்து ஆணைகள் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியச் செயற்குழுவின் தூதுக்குழுவில் கட்சியின் பொதுச்செயலர் சி. ராஜேஸ்வரராவ், எம்.பசவபுன்னையா, பம்பாய் எதிர்த்தரப்பின் பிரதிநிதிகளான எஸ்.ஏ.டாங்கே, அஜாய் குமார் கோஷ் ஆகியோர் இருந்தனர். சோவியத் கட்சியின் மத்தியச் செயற்குழு, இந்திய

விவகாரங்களைக் கவனிக்கும் ஆணைக்குழுவை நிறுவியிருந்தது. இதற்கு கட்சியின் பொதுச்செயலர் ஜே.வி. ஸ்டாலின் தலைமை ஏற்க, ஜி.எம். மாலங்கோவ், வி.எம். மாலடவ், எம்.ஏ. சுஸ்லவ் ஆகியோர் உறுப்பினராயிருந்தனர். மாஸ்கோவில் நடந்த பேச்சு வார்த்தைகளில் செயல் திட்டம் வரையப்பட்டது. இது 1951-ல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் பேராயத்தில் முன்வைக்கப்பட்டது. இந்தியாவில் அரசியல் வேலை செய்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. கட்சியின் பொதுச்செயலர் பதவி நீக்கப்பட்டார். கட்சித் தலைமையில் வேறு மாறுதல்களும் செய்யப்பட்டன. இதுபற்றி விரிவாகப் பின், இங்கு நான் குறிப்பிட விரும்புவது, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தன் பொறுப்பை இம்முறையில் ஜே.வி. ஸ்டாலின் மற்றும் குழுவினருக்கு ஒப்படைக்க எந்தச் சட்டபூர்வமான அதிகாரமும் கிடையாது என்பதாகும். ஏறக்குறைய எட்டாண்டுகளாக அகிலம் தொழிற்படாதிருந்தது.

20களில் மூன்றாம் அகிலத்தின் பல்வேறு ஆணைக்குழுக்களில் ஸ்டாலின் ஏற்றிருந்த பாத்திரத்தைப் போன்ற பாத்திரத்தை ஸ்டாலின் கடைசியாய் ஏற்றது மேற்சொன்ன சமயத்தில்தான் என்றே எனக்கு நினைவு, ஓராண்டுக்கு முன்புதான் சீனாவில் மாவோவின் புரட்சி வாகை சூடியிருந்தது. இந்நிலையில் ஸ்டாலினுக்கு தான் ஒரு மக்கள் சார்பு தலைவர் (PARTISAN LEADER) என்ற பெயரை உறுதி செய்து கொள்வது தேவையாயிருந்தது. அதேவேளை, 1907ல் ஜார்ஜிய நாட்டின் டிப்ளிசிலும் பாக்குவிலும் நடத்தப்பட்ட கொள்ளைகளுக்கு அரசியல் பொறுப்பேற்ற கோபா (ஸ்டாலினின் இயற்பெயர்– மொழிபெயர்ப்பாளர்) விற்கு இப்போது தனியாள் பயங்கரவாதத்தை மார்க்சியக் கோட்பாட்டு வகையில் வன்மையாய்க் கண்டிப்பதும் முக்கியமாயிருந்தது.

மக்கள் சார்புப் போர், தனிநபர் பயங்கரவாதம் ஆகியவை பற்றிய சில கேள்விகள்

கள்வி: ஒரு கிராமப்புறத்தில் சூழ்நிலைமைகள் முதிர்ச்சியடைந்திருந்து, மற்ற கிராமப்புறங்களில்

நிலைமைகள் இன்னும் முதிர்ச்சியடையாமலும், தொழிலாளர்கள் மக்கள் திரள் நடவடிக்கைகளின் மூலம் அதற்கு ஆதரவளிக்கத் தயாரில்லாமலும் இருந்தால், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் மக்கள் சார்புப் போரில் இறங்குவது சரியாகுமா?

பதில்: சரியாகும். நீங்கள் அவ்விடத்தில் மக்கள் சார்புப் போரில் ஈடுபட முடியும், ஈடுபட வேண்டும். துவங்குவதா வேண்டாமா என்பது எம்மைப் பொறுத்தது அல்ல. அது மக்களின் அமைப்பாக்க நிலையையும் அவர்களின் மனோநிலையையும் பொறுத்தது. மக்கள் சித்தமாகயிருந்தால் நீங்கள் போரைத் தொடங்க வேண்டியதுதான்.

• கே: விவசாயிகளின் போராட்டமானது மக்களின் அரைகுறையான கோரிக்கைகள் என்ற கட்டத்திலிருந்து நிலப்பங்கீடு, கிராம உழவர் செயற்குழுக்களை நிறுவுவது என்ற கட்டத்தை அடையும்போது மட்டுமே மக்கள் சார்புப் போரில் ஈடுபட வேண்டுமா? அல்லது குத்தகைக் குறைப்பு என்ற ஆரம்ப நிலைக் கோரிக்கைகளுக்கான போராட்டக் கட்டத்திலேயே இப்போரில் ஈடுபடல் முடியுமா?

ப: மக்கள் சார்புப் போருக்குக் கட்டங்கள் உண்டு. அது சிறிய கோரிக்கைளுடனேயே துவங்குகிறது. எடுத்துக்காட்டாக. குத்தகைக் குறைப்பைச் சொல்லலாம். இன்னும் இது மக்கள் சார்புப் போராட்டம் ஆவதில்லை. இந்த சின்ன கோரிக்கைகளைக் கூட எதிரி வழங்க மறுத்தால், உழவர்கள் பலாத்காரமாக அவற்றை வென்றுகொள்ள ஆவலாயிருந்தால், அப்போது மக்கள் சார்புப் போராட்டம் துவங்கமுடியும். இது நிலப்பறிக்கான போராட்டம் அல்ல, குத்தகைக் குறைப்புக்கான போராட்டமே. என்றாலும் அது மக்கள் சார்புப் போராட்டமாக இருக்கும். எனவே அது எம்மைப் பொறுத்ததல்ல. மக்கள் ஆயத்தமாயும், ஆவலாயுமிருந்தால் நாம் அவர்களுக்கு உதவத்தான் வேண்டும்.

கே: தொடர்பு வசதிகள் நன்கு வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளில் எளிய வகையிலான மக்கள் சார்புப் போராட்டத்தைக் கூட வளர்த்தெடுப்பது இயலுமா?

ப: இயலும். சூழ முற்றுகை இடப்பட்டால் சிறந்த படைப்பிரிவுகளை வேறு பகுதிக்கு இடம் மாற்றி விடுக. உமக்கே உரிய விடுதலைச் சேனையை உருவாக்கும் பொருட்டு, வேறிடத்திலுள்ள ஆயுதப் படைகளுடன் சேர்த்துக் கொள்ளும் படியாக அந்த ஆயுதப் படைகளை வெளியேற்றி நடத்திச் செல்க.

கே: மக்கள் சார்புப் போராட்டத்தின் நோக்கம் உழவர் திரளினரின் தீவிரத் துணையுடன் எதிரியின் ஆயுதப் படைகளை அழித்தொழிப்பதாக வேண்டும். மற்ற ஒடுக்குமுறையாளரை அச்சுறுத்தும் நோக்கில் தனிப்பட்ட ஒடுக்குமுறையாளர்களைக் கொல்வதும், அதன்மூலம் மற்றவர்கள் தம் ஒடுக்குமுறையைக் கைவிடச் செய்வதும் பயங்கரவாதமாகும்.ஆனால் ஒடுக்குமுறையாளனான ஒரு நிலக்கிழான், கொடுமைக்குப் பெயர் பெற்ற ஒரு அதிகாரி, அல்லது இயக்கத்துக்கெதிரான ஒரு எட்டப்பன் போன்றோரைத் தனிப்பட்ட முறையில் ஒழிப்பதையும் பயங்கரவாதம் என்ற பெயரில் முழுமையாய்த் தடை செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மக்கள் சார்புப் போராட்டத்தின் வெகு ஆரம்பக் கட்டத்திலேயே கூட சில போது சில கொடிய ஒடுக்குமுறையாருக்கெதிரான தனிப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பது அவசியமானது என்பது என் கருத்து. மற்ற ஒடுக்குமுறையாளர்கள் அவர்களின் ஒடுக்குமுறையைக் கைவிடும்படியாக அச்சுறுத்த அல்ல, மாறாக மக்கள் சார்பு அணிகளின் தற்காப்புக்காக இது தேவையாகிறது. இத்தகைய நடவடிக்கைகள் எப்படி மக்களைச் செயலற்றவராய் முடக்கிவிடும் என்பது எனக்கு விளங்கவில்லை. சர்வதேச இலக்கியங்களிலிருந்து நான் புரிந்து கொண்டவரை, கொடுநெறி (பாசிச) எதிர்ப்புப் போரின் போது ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் ஜெர்மானிய, ஜப்பானியக் கொடுநெறியருக்கெதிராக மக்கள் சார்பினர் இத்தகையத் தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். மலேயோ, பர்மா, இந்தோசீனா போன்ற மக்கள் சார்புப் போர்முறை இன்று நடந்து கொண்டிருக்கும்—ஆசிய

நாடுகளிலும் இத்தகைய முறைகள் கையாளப்படுகின்றன. மக்கள் சார்புப் போர்முறை பற்றிய தன் கட்டுரைகளில் லெனின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடை செய்யவில்லை. அது மட்டுமல்ல, மாறாக இதனை அராஜகம் எனக் கண்டித்த மென்ஷ்விக்குகளை அவர் கடுமையாக விமர்சித்தார் என்பது எனது நினைவுக்கு வருகிறது. இந்தச் சிக்கலில் எனக்குத் தெளிவு தேவை.

ப: தனிநபர் பயங்கரவாதம் ஏன் பொதுமக்களின் செயல்பாட்டை மந்தப்படுத்த வேண்டும் என்பது தனக்கு விளங்கவில்லை எனத் தோழர் கூறுகிறார். தனிநபர் பயங்கரவாதத்துக்கு அப்பெயர் வரக் காரணம், அது தனிப்பட்ட ஒடுக்குமுறை யாளர்களுக்கெதிராக நடத்தப்படுவது என்பது மட்டுமல்ல, அது மக்கள் திரளினரைப் பற்றிக் கவலைப்படாமல் சில தனியாள்கள் அல்லது குழுக்களால் நடத்தப்படக் கூடியதாக இருக்கிறது என்பதுமாகும். முதன்மையான தீமை, ஆட்சியல்ல, அதிலுள்ள தனியாள்களே என்ற பொய்மையைத் தனிநபர் பயங்கரவாதம் உருவாக்குகிறது. இதிலிருந்து மக்கள் என்ன முடிவுக்கு வருவார்கள்? இவ்வித பயங்கரவாதம் மூலம் ஒரு நீண்ட போராட்டம் நடத்தினால் இந்த ஆட்சியை அழித்துவிடலாம், அது சாத்தியமே என்ற முடிவுக்கு வருவார்கள். இத்தகைய முடிவுகளுக்கு வரும் உழவர்கள் என்ன கூறுவார்கள்? "இந்த ஆட்சிக்கெதிராக நாம் போராட முன்வரத் தேவையில்லை. நமது பெருமைமிக்கப் பயங்கரவாதியே வேலையை முடித்துவிடுவான்" என்பார்கள். இத்தகைய உணர்வால் ஆட்சியின் மீது மக்கள் போர் தொடுக்கும் நிலை பலவீனப்படுகிறது. எனவே இது தீங்கு பயப்பது. ஆபத்தானது.

பிரதான ஆற்றல் மக்களில் இல்லை, தீரமிக்க பயங்கரவாதிகளிடமே இருக்கிறது என்ற நம்பிக்கையைத் தனிநபர் பயங்கரவாதம் உருவாக்குகிறது. மக்களின் வேலை, கண்டுகளித்துக் கைகொட்டுவதுதான். இதுதான் செயலின்மையை வளர்த்தது என்பதாகும். மக்களின் விடுதலையை மக்களேதான் வென்றெடுக்க வேண்டும்

என்றனர் மார்க்சும் ஏங்கல்சும், நீங்கள் மக்களிடம் சொல்ல வேண்டுவதும் அதுவே. தனிநபர் பயஙகரவாதத்தில் வேறுபட்ட விளைவுகள் தொடர்கின்றன. மக்கள் பயங்கரவாதிகளை நாயகர்களாயும் ரட்சகர்களாயும் பார்க்கிறார்கள்.

லெனினைப் பற்றித் தோழர் தரும் குறிப்பு ஆதாரமற்றது. தனிநபர் பயங்கரவாதத்தை எதிர்ப்பது பற்றி லெனின் எழுதியுள்ள கட்டுரைகள் நாம் அவருக்குக் காட்ட முடியும். புரட்சிச் சூழல் தணிந்திருந்த நிலையில் பயங்கரத்தில் ஈடுபட்ட மென்ஷ்விக்குகளை லெனின் அவ்வளவு கடுமையாய்த் தாக்கினார் என்பதை நீங்கள் அறியவேண்டும்.

புரட்சி பின்னடையும் காலத்தில் தனிநபர் பயங்கரவாதம் முன்னணிக்கு வருகிறது. இயக்கம் பலவீனப்பட்டிருப்பதன் பிரதிபலிப்பே அது, புரட்சி இயக்கம் எழுச்சியுறும் போதெல்லாம் மக்களும் எழுச்சியுறுகின்றனர்; தனிநபர் பயங்கரவாதம் மறைகிறது. தோழர் இதை மனதில் இருக்க வேண்டும்.

இதனை 1972 டிசம்பரில் வெளியிட பி.சுந்தரய்யாவுக்கு தனிப்பட்ட காரணங்கள் இருந்தன: (1) முழுக்க ருசியச் சார்பாயிருந்த வலது கம்யூனிஸ்டுக் கட்சியான இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையில் இருந்த சி.ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ.டாங்கே போன்றோரின் பெயருக்குப் பங்கம் ஏற்படுத்த விரும்பினார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைவராயிருந்த சுந்தரய்யா என்பது ஒரு காரணம். (2) இந்திய மார்க்சிய – லெனினியப் பொதுவுடைமைக் கட்சிகளிலும் அதனுடன் நெருக்கமாக இணைந்திருந்த குழுக்களிலும் இருந்த உழவர் புரட்சியாளர்களை வென்றெடுக்கும் பொருட்டு மாவோவை மேற்கோள் காட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு எதிராக ஸ்டாலின் கூற்றுக்களைப் பிரயோகிக்க விரும்பினார் அவர் என்பது மற்ற காரணம்.

என்றாலும் இவற்றையெல்லாம் விட முக்கியமானது, தனி நபர் பயங்கரவாதம் பற்றிய ஸ்டாலின் கருத்துக்களை

விடவும் முக்கியமானது என்னவென்றால், (தோழரின் கேள்விக்கு ஸ்டாலின் தந்த பதில் பதிலே அல்ல என்பது வேறு) இந்தியாவிலிருந்த இடதுசாரி அரசியல்வாதிகளின் பரிதாப நிலையாகும். அவர்களுக்குத் தேசியப்பொறுப்புணர்ச்சி போதவில்லை. தனிப்பட்ட சில வீரர்களல்ல – அவர்கள் ஜே.வி. ஸ்டாலினோ, வி.எம். மாலடவோ ஆக இருந்தாலும் சரியே, அவர்களல்ல – மாறாக மக்களே, தம் சொந்த சக்திகளில் தங்கி நின்று தம்மை விடுவித்துக் கொண்டாக வேண்டுமென்ற வெளிச்சம் அவர்களுக்கு இல்லை. தரகு முதலாளி வர்க்கம் இருப்பதால் இந்தியா துன்புறுதல் போலவே தரகுப் புரட்சிக்காரர்கள், தரகுப் பொதுவுடைமையர் ஆகியோர் இருப்பதாலும் இந்நாடு அவதியுற்றது, உறுகின்றது. புரட்சிக்காரர்கள் 19-ஆம் நூற்றாண்டில் கல்கத்தாவின் அறிவாளிகள் செயல்பட்டது போல் செயல்படுகிறார்கள்: அவர்கள் மக்களிடமிருந்து விலகி கடல்களைத் தாண்டிச் சென்று மைய நாடொன்றில் போய்த் தமக்கு வழிகாட்டும் அதிகாரபூர்வமான வேதத்தைத் தேடுகிறார்கள்.

1948-ல் கட்சியின் பொதுச்செயலர் பி.டி. ரணதிவேயால் இந்தியப் பொதுவுடைமையரிடையில் கூர்மையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தெலுங்கானா உழவர் இயக்கத்தை பி.டி. ரணதிவே தாக்கிப் பேச வந்தபோது, அவர் மாவோவை விமர்சித்தார். "மாவோவால் உருவாக்கப்பட்டு மார்க்சியத்துக்கு ஒரு புதிய பங்களிப்பாகிவிட்டதாகச் சொல்லப்படும் ஜனநாயகம் எனப்படும் கோட்பாட்டை"யும் அவர் விமர்சித்தார், ரணதிவே மாவோவின் கொள்கைகளைக் கண்டித்தார். டிட்டோவையும் பிரவுடரையும் நினைவு கூர்ந்தார். 'மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரை மார்க்சியத்தின் அதிகாரபூர்வ ஊற்றுகள், இவர்களுக்கப்பால் மார்க்சியத்துக்குப் புதிய ஊற்றுகள் இதுவரை வேறு இல்லை' எனப் பிரகடனித்தார்.

பி.டி.ரணதிவேயின் அறிக்கை வறட்டு இறையியல் தனமான வெளியீடாகும். இது முழுக்க மார்க்சுக்கு

அந்நியமானது. (மார்க்சின் மார்க்சியம் ஏதாவது அதிகாரப்பூர்வ ஏடுகளில் தனது 'ஊற்றைக்' கொண்டிருப்பதில்லை). அப்படியிருந்தும் 1948 டிசம்பரில் பொலிட்பீரோவுக்கும் மத்தியச் செயற்குழுவுக்கும் தரப்பட்ட இந்த அறிக்கை கட்சியின் அதிகாரபூர்வ நிலைபாடாக பொலிட் பீரோவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்படி ஏற்கும்படி கட்டளையிட்டவர்கள் ருசியர்களே. இதை நாம் மனதில் வைக்கவேண்டும். பொதுச் செயலாளரான ரணதிவே சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவரைப் புரட்டல்காரர் எனப் பெயர் சொல்லித் தாக்கியது, மாஸ்கோ தைரியம் தராவிட்டால் நினைத்துப் பார்க்கவும் முடியாத செயலாகும். அதற்குப் பத்தே மாதங்கள் கழித்து மாவோவின் படைகள் வெற்றி சூடின. ஆனால் இன்று 32 ஆண்டுகள் கழிந்தபின்னும் அதிகாரபூர்வ, இந்தியப் பொதுவுடைமையர் பலவீனமாய், ஒற்றுமையின்றி, பாராளுமன்றச் சூழ்ச்சிகளிலும் பரவலான சீர்கேட்டுக்குள்ளும் ஆழ்ந்து கிடக்கிறார்கள். காடுகளில் கொரில்லாப் போர் நடந்து வருகிறது. ஆனால், இந்திய விவசாய மக்கள் இன்னமும் கொடிய வறுமையிலும், ஒடுக்குமுறையின் கீழுமே தங்கியிருக்கிறார்கள் – 20களில் சீனா இருந்த மாதிரி.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் எதில் வேறுபாடு? கோட்பாட்டைச் சரியாகக் கிரகித்துக் கொள்வதிலா வேறுபாடு? நான் நம்பவில்லை. இரண்டு நாடுகளிலிருந்தும் பெறப்பட்ட புரட்சி பற்றிய ஆவணங்கள் என்னிடம் முழக் கணக்கில் உள்ளன. இவற்றில் நிறைய புத்திசாலித்தனமும் இருக்கிறது. முட்டாள்தனம் என நிரூபிக்கப்பட்டு விட்டதும் நிறைய இருக்கிறது. அல்லது சீனர் இயற்கையிலேயே அதிபுத்திசாலிகளா? அதுவுமல்ல. இந்திய ஏழை உழவர்களும், தீண்டப்படாதவர்களும் முடிந்த போதெல்லாம் போராட்டம் நடத்தியுள்ளனர். பொருத்தமான முழக்கங்கள், அமைப்புகள், பதாகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். அல்லது சீனத் தலைவர்கள் அதிஅறிவும் திறனும் கொண்டவர்களுமல்லர். மாவோ உலகறிந்த தலைவரானார்தான். ஆனால் உழவர்

போராட்டங்களின் முன்னணியில் நின்றமையால்தான் அந்தச் சிறப்பு அவருக்குக் கிடைத்தது. சீனாவில் 'அவதரித்த' 'பிறவிமேதை' அல்லர் அவர்.

ஆயின் இந்தியாவின் வளர்ச்சிக்கும் சீனாவின் வளர்ச்சிக்கும், எதில்தான் வேறுபாடு என்றால், இந்தியப் புரட்சியாளர்கள் ஐரோப்பாவின் அதிகார ஆதிக்கத்திலிருந்து ஒருபோதும் தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. சீனப் புரட்சியர் மூன்றாம் அகிலத்தில் இருந்தும் அதன் பிரதிநிதிகளிடமிருந்தும் கற்க வேண்டியதைக் கற்றுக்கொண்டார்கள். பின் தமது தனிவழியில் போனார்கள். அவர்கள் செய்த தப்பு தவறுகள் அவர்களுக்கே உரியவை. (எனவே) அவற்றை அவர்களால் திருத்திக் கொள்ள முடிந்தது.

மூன்றாம் அகிலத்தில் இந்திய விவகாரங்களுக்கு ராய் தலைமையில் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருந்த வரையிலும் ஒரு இயல்பான உறவு இருந்தது. ஆனால் அகிலத்தின் சூழ்ச்சிகள் நடந்த காலத்தில் ராய் இந்திய நடப்புகளுக்கான பொறுப்பை இழந்து விட்டார். மூன்றாம் அகிலத்தில் நிதிகளை நிர்வகித்து வந்தவர் ஜாத்னிஸ்கி

(Pjatnitsky) அவருக்கு ராய் எதிராக நின்றதும், மேட்டிமை மிகுந்த ராயைக் காட்டிலும் எளிதில் கறைபடக்கூடிய அயல்நாட்டுத் தோழர்களையே ஜாத்னிஸ்கி விரும்பினதும் மேற்படி சூழ்ச்சி நடக்கப் பெரிதும் காரணம் எனலாம். பின் இந்தியப் பொதுவுமையாளர்கள் பிரிட்டிஷ் பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டனர். இந்நிலையில் இந்தியப் புரட்சியைத் தடுப்பதுவே போலீசின் அன்றாட வேலையாக ஆயிற்று. தம் சொந்த நாட்டின் வளர்ச்சிகளில் செல்வாக்குச் செலுத்த கையாலாகாது இருந்த பிரிட்டிஷ் பொதுவுடைமைவாதிகளால் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களைச் சமுதாயப் புரட்சிப் பாதையில் இட்டுச் சென்றுவிட முடியும் என்ற எண்ணமே காலனியச் சிந்தனையில் விளைந்ததுதான். இது இந்தியாவில் பேரழிவு பயக்கத்தக்க பின்விளைவுகளை ஏற்படுத்தியது. இதனால், அயல்நாடுகளில் உண்மையான புரட்சியாளர்கள் தோன்ற வேண்டுமென்ற விருப்பம்

20களிலேயே கூட மாஸ்கோவுக்கு உண்மையில் இருந்ததா என நமக்குள் கேட்டுக்

கொள்ளாமல் இருக்க முடியவில்லை. எப்படியும், புரட்சியும் தேசியமும் இந்தியாவில் ஒன்று கலக்கவில்லை. பொதுவுடைமைத்தலைவர்களும் பழுப்புநிறப் பறங்கியர்களாகவே இருந்தனர்... அவர்களில் பெரும்பாலும் பார்ப்பனர்கள்!

தமிழில் : பா. சிங்கராயர்

குறிப்பு:

யேன் மிர்தால் (Jane) என்ற ஸ்வீடிஷ் பெயரை 'யேன்' என்றே உச்சரிக்க வேண்டும்) எழுதிய INDIA WAITS என்ற நூலிலிருந்து ஏற்கெனவே ஒரு பகுதி மொழிபெயர்க்கப்பட்டு 'பரிமாணம்' இதழ் 14-இல் வெளியிடப்பட்டுள்ளது. அதே நூலிலுள்ள 'Notes on a Bengal Revolutionary' என்ற அத்தியாயத்திலிருந்து ஒரு பகுதி இப்போது மொழியாக்கம் செய்து தரப்படுகிறது. இந்தியப் பொதுவுடைமை இயக்கம் பற்றி 'பரிமாணம்' வெளியிட்டு வரும் கட்டுரைகளில் இது மூன்றாவதாகும்.

-

ஆசிரியர்.

4. அவர்களை அசைத்துவிட முடியாது
– ராயன்

'பரிமாணம்' 14-வது இதழில் வந்த "தேவையை நோக்கிய பயணம்" என்னும் என் கட்டுரைக்கு மறுப்பாக, செந்தூரன் "எதன் தேவையை நோக்கிய பயணம்?" என்னும் தலைப்பில் "செந்தாரகை" (மார்ச் 1986)யில் எழுதியுள்ளார். "ராசதுரையரே, ராயரே" என்று விளித்து விமர்சன ரீதியிலான (?!) கேள்விகளை, சந்தேகங்களை முன்வைத்துள்ளார். கேள்விக்கான பதிலையும், சந்தேகங்களுக்கான தெளிவையும் அளிக்கும் கடமையை தோழர் செந்தூரன் எனக்கு அளித்துள்ளார். ஆனால் செந்தூரன் என்னிடமும், ராஜதுரையிடமும் எதிர்பார்ப்பது, நாங்கள் இருவரும் மார்க்சியவாதிகள் அல்லர் என்பதை அவரிடம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. மேலும் நாங்கள் ஜனநாயகவாதிகளும் அல்லர் என்பது செந்தூரனின் துணிபு. ஆகவே இந்தியாவில் செந்தூரன் போன்ற 'கம்யூனிஸ்ட்டுகள்' மட்டுமே ஜனநாயகவாதிகள். மக்கள் மற்றும் மற்ற அமைப்புகள் எல்லாமே ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்பவர்கள் அல்லது முதலாளித்துவ ஜனநாயகவாதிகள். இப்படி வகைப்படுத்தி இந்த திருப்தியில் செந்தூரனும் அவரது நண்பர்களும் இயக்கங்கள் நடத்துவதை நாம் ஆட்சேபிக்க முடியாது. இப்படிப்பட்ட குறுகிய எல்லையிலிருந்து எல்லாவற்றையும் வகைப்படுத்தி ஒதுக்கிவிட்டு அமர்ந்து கொள்வதில்தான் எவ்வளவு சுகம்! சிந்தனைக்குத் தொல்லை கொடுக்காத சீரிய பணி இது.

செந்தூரன் புதிய இடதுசாரிகள் குறித்து எந்தவிதமான ஆய்வை மேற்கொள்ளாமலே "அவர்கள் இப்படிப்பட்டவர்கள்" (ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்கிறவர்கள்) என்று முடிவுக்கு வந்துவிட்டவர். அவருடைய முடிவு சரியா தவறா என்பதைக் கூட சோதித்துப் பார்க்க அவருக்கு விருப்பமில்லை. ஏனெனில் அவருக்கு அவர் முன்கூட்டியே மேற்கொண்டுள்ள முடிவே "மாறாத உண்மையாக" இருக்கிறது. அவர் தன் கட்சி கொண்ட முடிவை தன் முடிவாக ஏற்று அதிலிருந்து புதிய

வேண்டிய அவசியமில்லைதான். ஏனெனில் இப்படிப்பட்ட விவாதங்கள் செக்கு மாடாக ஒரே இடத்தில் சுற்றிக் கொண்டே இருக்கும். இருந்தாலும் செந்தூரன் கேட்ட சில கேள்விகளுக்கு பதில் சொல்ல விரும்புகிறேன்.

"... மூன்றாம் உலக நாடுகளில் புது இடதுசாரிப் போக்கு சேகுவேரா, ரெஜிடெப்ரே, ஹோசிமின், பாதிரியார் கமிலோடாரஸ் ஆகியோரோடு அடையாளம் கண்டு கொள்கின்றதெனக் குறிப்பிடுகின்றது. இக்கூற்றே சுயமுரண் கொண்டது. ஹோசிமின், மார்க்சிய–லெனினியப் போராளி, கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக் குள்ளும், தலைமைக்குள்ளும் நின்று மக்களோடு ஐக்கியமாகி நீண்டகால மக்கள் யுத்தப் பாதையில் புரட்சி செய்தவர். ஆனால், சேகுவேராவும், காஸ்ட்ரோவும் அப்படியில்லை. அவர்கள் புரட்சிக்காலத்தில் மார்க்சியர்களாக இல்லை. புரட்சியை நடத்த கட்சி அவசியமில்லை என்று காஸ்ட்ரோ குறிப்பிட்டார். இது லெனின், மாசேதுங், ஹோசிமின் ஆகியவர்களின் வழிமுறைகளை நிராகரிக்கிறது."

(செந்தாரகை, மார்ச் 1986, பக்:21)

இந்த இடத்தில் முதலில் செந்தூரன் செய்த முதல் தவறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய கட்டுரையில் எடுத்துக்காட்டிய மேற்கோளை திரித்துக்காட்டி தன் வாசகர்களிடம் தன் வாதத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறார். நான் காட்டிய அந்த மேற்கோளில் பாதிரியார் கமிலோடாரஸின் பெயர் கிடையாது. மேலும் அவரை ஒரு தலைவராகவோ, கோட்பாட்டாளராகவோ காட்ட முயற்சிக்க வில்லை. அடுத்து, புது இடதுசாரிப் போக்கு' என்றும் குறிப்பிடுகிறார். இந்த "போக்கு" என்ற வார்த்தையும் அந்த மேற்கோளில் இல்லை. ஆகவே நான் எடுத்துக்காட்டிய அந்த மேற்கோளை மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"பொதுவில் புதிய இடதுசாரிகள் காஸ்ட்ரோ, சேகுவேரா, ரெஜிடெப்ரே, ஹோசிமின் இவர்களோடு தங்களை அடையாளம் காட்டிக் கொள்கின்றனர்.

பெரும்பான்மையான முற்போக்குவாதிகள் தங்கள் நாட்டில் காலனியாதிக்கத்திற்கு எதிராகக் கொரில்லா போரை ஆதரிக்கின்றனர்". (பரிமாணம் 14வது இதழ் பக்:52-53).

இனி அவருடைய கருத்து ரீதியான வி யத்துக்கு வருகிறேன். "இக்கூற்றே சுயமுரண் கொண்டது." ஏனெனில் "ஹோசிமின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் (மார்க்சிய-லெனினியப் போராளி) மற்றவர்கள் புரட்சிக்காலத்தில் கம்யூனிஸ்ட்டுகளாக இல்லை" என்கிறார். "சுயமுரண்" குறித்து இவ்வளவு தெளிவான பார்வை செந்தூரனுக்குத் தவிர வேறு யாருக்கும் வராது என நம்புகிறேன்.

அந்தப் புதிய இடதுசாரிகள், காஸ்ட்ரோ, சேகுவேரா, ரெஜிடெப்ரே, ஹோசிமின் இவர்களைக் குறிப்பிட்டார்களென்றால் அவர்களுடைய புரட்சியின் வடிவத்தை அல்ல. மாறாக அவர்களுடைய புரட்சியின் தன்மையைத்தான். காஸ்ட்ரோ முதல் ஹோசிமின் வரை ஒவ்வொருவரும் வெவ்வேறான வடிவங்களில் புரட்சியை நடத்தியிருக்கின்றனர். அவையெல்லாவற்றையும் ஒருங்கே ஒரு புதிய இடதுசாரி தன் நாட்டில் பயன்படுத்த முடியுமா? இத்தகைய அர்த்தத்தில் அவர்கள் சொல்லியிருக்க முடியுமா? அல்லது அவர்களின் புரட்சி வடிவத்தில் ஒற்றுமை உண்டு என்று கூறியிருந்தால் செந்தூரன் கூறிய கருத்து சரியானதாக இருக்கும். ஆனால், அவர்கள் "காலனி ஆதிக்கத்திற்கு எதிராகக் கொரில்லாப் போரை ஆதரிக்கின்றனர்" என்னும்போது. இது ஹோசிமின் நடத்திய புரட்சியின் தன்மையையும் உள்ளடக்கியது என்பது புலப்படவில்லையா? காலனியாதிக்கத்திற்கு எதிராக காஸ்ட்ரோ முதல் ஹோசிமின் வரை கொரில்லாப் போரை ஆதரிக்கின்றனர். அதேசமயம் புரட்சியாளர்கள் தங்கள் முன்னோடிகளுடன் தங்களை இணைத்துப் பார்ப்பது, தங்கள் போராட்டத்துக்கு உத்வேகத்தையும், ஆற்றலையும் அளிக்கும் செயலாகத்தான் பார்க்க வேண்டும். இதிலென்ன சுயமுரண் உருவாகிவிட்டது. சுயமுரண் செந்தூரனிடம்தான் இருக்கிறது.

அடுத்து, "புரட்சியை நடத்த கட்சி அவசியமில்லை என்று காஸ்ட்ரோ குறிப்பிட்டார். இது லெனின், மாசேதுங்,

ஹோசிமின் ஆகியோர்களின் வழிமுறைகளை நிராகரிக்கிறது" என்கிறார் செந்தூரன்.

ஒவ்வொரு புரட்சியும் முன்னதன் வழிமுறைகளை விலக்கித்தான் வந்திருக்கிறது. ஒரே வழிமுறையில் எல்லா புரட்சியும் நடக்கவில்லை. ஏனெனில் ஒவ்வொரு நாட்டின் புரட்சியும் அதன் வரலாறு, புவியியல், பொருளாதாரம், பண்பாடு, அரசியல், மக்களின் போராட்ட குணம், தலைமை தாங்குபவர்களின் தன்மை, மேலும் அந்நாட்டுக்கே உரிய புரட்சிகர மரபு இவைகளைச் சார்ந்ததே. அப்படி இருக்கும்போது, "லெனின், மாசேதுங். ஹோசிமின் வழிமுறைகளை நிராகரிக்கிறது" என்பது குருட்டுத்தனமானது. லெனின் வழிமுறைகளுக்கு மாறுபட்டுத்தான் மாசேதுங் புரட்சியை நடத்தியிருக்கிறார். மாசேதுங், லெனின் இவர்களின் வழிமுறைகளுக்கு மாறுபட்டுதான் ஹோசிமின் புரட்சியை நடத்தினார். ஆனால் மூன்று நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தாங்கியது என்பதைத் தவிர வேறு ஒற்றுமை என்பது இல்லை. ஹோசிமின்னை ஒரு மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் வழிகாட்டி என செந்தூரனின் கட்சி இதுவரை கூறியதில்லை. அப்படியிருக்க அவரது கட்சியின் கோட்பாட்டாளர் நிலையிலிருந்து பேசும் செந்தூரன், லெனின், மாவோவுக்கு நிகராக ஹோசிமின்னை ஒப்பிடுவது வியப்புத் தருகிறது.

ஆனால் லத்தீன் அமெரிக்காவில் கம்யூனிஸ்ட்டுகள் புரட்சி செய்யாத போது அதே சிந்தனையுள்ள வேறு சில குழுக்கள் புரட்சி செய்ய முன்வருகின்றனர். அதனால் அவை மார்க்சிய – லெனினியத்துக்கு விரோதமானவையா? அல்லது கம்யூனிஸ்ட் கட்சி இல்லாத இடங்களில், கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி புரட்சி நடத்தும் வரை வேறொரு இயக்கங்கள் அதை செய்யக் கூடாதா? அப்படிச் செய்தால் அது மார்க்சிய, லெனினியத்துக்கு விரோதமான செயலா? 'கம்யூனிஸ்ட் கட்சி' என்ற விளம்பரப் பலகையை வைத்திருந்தால்போதும், புரட்சியை நடத்தும் குத்தகை உரிமை அதற்குத்தான் உண்டு என்பது எவ்வகையில் சரியானது?

மேலும் செந்தூரன் இதே மாதிரியான வி யத்தை விவரிக்கிறார்.

"…. பரிமாணம் இலத்தீன் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து எதை எடுத்துக்கொள்கிறது? முரணற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பையா? இல்லை, ஒரு மார்க்சிய லெனினியக் கட்சியின் முன்னணி பங்கு இன்றியும் புரட்சி வெற்றி பெற இயலும் என்பதை எடுத்துக் கொள்கிறது. கட்சியின் பங்கு குறித்து லெனினியக் கோட்பாட்டை இது மறுக்கிறது.

(செந்தாரகை, மார்ச் 1986. பக்:21)

முதலாவதாக, முன்னர் லெனின் என்ன சொன்னாரோ அவையெல்லாம் நிகழ்ந்துதான் ஆகவேண்டும் என்று நிகழ்கால அல்லது எதிர்கால வரலாற்றைக் கட்டாயப்படுத்த முடியாது. அல்லது அதில் எதையும் திணித்து வளர்ச்சி கண்டுவிட முடியாது. சமுதாய வளர்ச்சியில், சூழ்நிலையையொட்டியே முன்னவைகளுக்கு மாறுபட்ட நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன என்பதைச் செந்தூரன் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, மார்க்சிய-லெனினியக் கட்சி புரட்சி நடத்துவதை யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அது புரட்சியைச் செய்யாத போது, வேறொரு புரட்சிகர முன்னணிப் படை அதை சாதிக்கிறது என்றால், அதை புரட்சிகர வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியாகக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட புரட்சியும் வரலாற்றில் சாத்தியப்பட்டிருக்கிறது என்பதை அங்கீகரித்தே ஆகவேண்டும். இதை மறுக்கிறவன், நிச்சயம் மார்க்சியவாதியாக இருக்கமாட்டான். உண்மையான மார்க்சியவாதி இதை லெனினியத்துக்கு எதிரான கோட்பாடாகக் கருதமாட்டான். மாறாக இது சுயமாக அந்த நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்ப உருவாகி வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் இது எல்லா நாட்டிற்கும் (அதாவது இதற்கு முன்னர் நடந்த புரட்சிகளைப் போன்றே) பொருந்தி வராது என்ற முடிவோடு

தன் களத்தில் சுயமாக புதிய புரட்சிகரப் போர் முறையை உருவாக்கிக் கொள்வான். லெனின் சொன்ன விதிக்கு மாறாக நடக்கும் எந்தச் சரியான நிகழ்ச்சியும் லெனினியத்துக்கு விரோதமானது என்பவன், லெனினைக் கடவுளாக்கி விட்டவன். இவனுடைய குருட்டு பக்திக்கு லெனின்தான் காரணம் எனச் சொல்லிக் கொள்பவனாக இருப்பான். இந்தவகையில்தான் செந்தூரன் மேலும் தன் கேள்வியைத் தொடுக்கிறார்.

"லெனினிய சகாப்தத்தில் ஒரு தேசிய இனப்பிரச்சனைக்கான பொதுப்படையான தீர்வு லெனினிய வழிகாட்டுதலில் கிடைக்கவில்லையா? அப்படியாயின் லெனினிய சகாப்தமும், லெனினிய வழிகாட்டுதலும் மாறிவிட்டனவா?"

(செந்தாரகை, மார்ச் 1986, பக்:21).

எவருடைய வழிகாட்டுதலும் ஒரு எல்லை வரைக்கும்தான். அதன்பிறகு அந்தந்த வரலாற்றிற்குரிய மனிதர்களின் சுய கண்டுபிடிப்பின் வழியே நிகழ்வது. மார்க்சியம் வளர்ந்திருப்பதும் இப்படித்தான். நிகழ்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் நேர்கொள்ளும் எல்லாப் பிரச்சனைக்கும் இறந்த காலத்து மனிதர் ஒருவர் வழிகாட்டுவதற்காக மற்றவர்கள் குருடர்களாய் நிற்க வேண்டிய அவசியமில்லை என நினைக்கிறேன்.

மேலும் செந்தூரன் கேட்கிறார்: "... பாட்டாளி வர்க்கம் கரு நிலையில் இருப்பினும் அங்கும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை குறித்து அழுத்தமாக லெனின் குறிப்பிட்ட (மூன்றாம் அகிலத்தின் இரண்டாம் மாநாட்டுரை) கருத்து இன்றைக்குப் பொருந்தாதா? (செந்தாரகை, மார்ச் 1986, பக்:22)

பொருந்துமா பொருந்தாதா என்ற கேள்வியை விட இன்றுள்ள யதார்த்த நிலைமைகளை ஆய்வதே புரட்சி இயக்கத்துக்குப் பலனளிக்கும் செயலாக இருக்கும். இன்றைய தொழிலாளி வர்க்கம் எந்தவிதமான அரசியல் போராட்டத்திற்கும் தயாரில்லை. அப்படியிருக்கும்போது

அதைப் புரட்சிகரப் பாத்திரம் வகிக்குமாறு செய்வது எவ்வாறு? கம்யூனிஸ்ட் கட்சியினர் எல்லாரும் வேறு வழியில்லாமல் இப்போது தொழிற்சங்கங்களில் வெறும் பொருளாதாரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்றனர். இருந்தாலும் 'கம்யூனிஸ்ட்டுகள் முன்னணிப் படையினர்' என்று லெனின் சொல்லிவிட்டதனாலே அவர்கள் புரட்சிக்குத் தலைமை தாங்கிவிடப் போகிறார்களா? செந்தூரன் இப்படி நம்புகிறார் என்றால் அந்த நம்பிக்கையைக் கைவிடச் சொல்ல எனக்கு உரிமை இல்லை என்பதையறிவேன். சீனப்புரட்சி முதல், க்யூபா, வியத்நாம், கம்பூசியா, நிகரகுவா வரை, பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தம் எனப்படும் மார்க்சிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட பிற வர்க்கத்தினரே புரட்சியைச் செய்துள்ளனர். பாட்டாளி வர்க்கத்தின் நேரடியான பங்கேற்றல் என்பது மிக மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது. கிழக்குத் தைமூர், எரித்ரியா போன்ற தேசங்களிலும், பல ஆப்பிரிக்க நாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் என்பது எண்ணிக்கையில் மிக மிக சொற்பமானதாகவே உள்ளது (அல்லது அறவே இல்லை). இங்கெல்லாம் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டு விட்ட விதிகளின்படி இலக்கணச் சுத்தமாகப் புரட்சிகள் நடந்தால்தான் செந்தூரன் அவற்றை ஒப்புக்கொள்வார் போலும். இத்தகைய எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பவர்கள் ட்ராட்ஸ்கியவாதிகள் மட்டுமே என்று நாங்கள் நினைத்திருந்தது தவறு என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

புதிய இடதுசாரிகளான ஹெர்பர்ட் மார்க்யூஸ், ரைட்மில்ஸ் போன்றோர் "மார்க்சியத்துக்குக் கொடுத்த புதிய பங்களிப்புகளை விளக்க வேண்டும்" என்று செந்தூரன் கேட்கிறார். அவரின் 'சாமார்த்தியத்தை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. செந்தூரன் எந்த அடிப்படையிலிருந்து புதிய இடதுசாரிகளை (ஹெர்பர்ட் மார்க்யூஸ், ரைட்மில்ஸ் போன்றோர்) ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்கிறார்கள் என்று முன்பு கூறினார்? அவர்களின் நூல்களின் அடிப்படையிலிருந்துதான் கூறியிருப்பார் என்றுதான் நாம் நம்புவோம். அவர்கள் தங்கள் கருத்துகள் மூலம் மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டி புரட்சியை

மழுங்கடிக்கின்றனர் என செந்தூரன் கூறுவதெல்லாம் அவர்களின் நூல்களின் அடிப்படையில்தானே இருக்க வேண்டும்? அப்படியிருக்க அவர்களின் பங்களிப்பு என்ன என்பதை நாங்கள் விளக்க வேண்டும் என்று செந்தூரன் கேட்பது அபத்தமல்லவா? இவர் இப்படியொரு அபத்தமான விவாதத்தில் இறங்குவதற்குக் காரணம் என் கட்டுரையில் (பரிமாணம், 14ஆவது இதழ், பக்கம் 60), (ராஜதுரையின்) "எக்சிஸ்டென்ஷியலிசம், அந்நியமாதல் இரண்டும் சார்த்தரின் வழியில் நின்று எழுதப்பட்டது" என்ற தனது கூற்றை, செந்தூரன் ஒரு விரிவான கட்டுரையின் மூலம் நிரூபிக்கவேண்டும்" என்று நான் கூறியிருந்ததனால்தான் என நினைக்கிறேன்.

தனக்குப் பக்கபலமாக இருக்கும்படி மருதமுத்து, தணிகைச் செல்வன், வே. சிதம்பரம் ஆகியோரை செந்தூரன் அழைக்கிறார். 'தீக்கதிர்' பரமேஸ்வரன், செந்தில்நாதன் முதலியவர்களை அவர் ஏனோ விட்டுவிட்டாலும் மாவோயிஸ்டுகளின் "நண்பரைப் போல் நடிப்பவர்" தான் செந்தூரன் என்பதை நிரூபித்து விடுகிறார். அமெரிக்க செனட்டர் மக்கார்த்தியும், அமெரிக்க ராணுவத் தளபதி ஜெனரல் மக்கார்தரும் வேறு வேறு நபர்கள் என்பது கூடத் தெரியாமல் ஜெனரல் மக்கார்தி என்று எழுதும் மருதமுத்துவின் "திறனாய்வு"களின் வெளிச்சத்தில் செந்தூரன் தன் அறிவை வளர்த்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

விவாதத்திற்கு சம்பந்தமில்லாத ஒரு வி யத்தை செந்தூரன் எழுப்புகிறார். "எஸ்.என். நாகராசனின் படைப்பு குறித்த விமரிசனத்தை அவர்கள் பத்திரிகை ஒன்றில் போட மறுத்ததாக அறிகிறோம்". கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களை "ஏகாதிபத்திய ஏஜண்ட்", "குழப்பவாதி" "அவரைப் பற்றிய குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களடங்கிய டாகுமெண்ட் எங்களிடம் உண்டு" என்று மொட்டை வதந்திகளைப் பரப்பி வரும் கட்சிக் கலாச்சாரம் நிரம்பிய செந்தூரனிடமிருந்து நாம் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில்களை எதிர்பார்க்கலாமா?

அக்கட்டுரையை எழுதிய நபர் யார்? அவருக்கும் செந்தூரனுக்கும், அவரது கட்சிக்கும் என்ன உறவு? எந்தப் பத்திரிகை அதை வெளியிட மறுத்தது? அதற்கான காரணங்கள் என்ன? அந்தப் பத்திரிகைக்கும் எங்களுக்கும் என்ன உறவு?

செந்தூரனின் சில கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் என் நிலையிலிருந்து தரப்பட்டுள்ள சில பதில்கள் அவருக்குப் புரியும்படியாக இருக்கும் என நம்புகிறேன். ஆயினும் அவர் இதைப் படித்துவிட்டு "ராயரே, ராஜதுரையே, நான் ஏற்கெனவே கூறியதுபோல் நீங்கள் மார்க்சிய - லெனினிய விரோதிகள்தான் என்பது இதன்மூலம் நிரூபணமாகி விட்டது! இதற்கு ஆதாரமாக மூன்றரையாவது அகிலத்தின் எழுபத்தேழாவது பேராயத்தின் ஒன்றரையாம் இலக்கமிட்ட தீர்மானத்தை நினைவூட்டுகிறேன். மேலும் உங்களது ஏகாதிபத்தியத் தொடர்புகளை நிரூபிக்கும் டாகுமெண்டுகள் எங்கள் தலைவர்களின் சட்டைப் பைகளில் தயாராக உள்ளன. அதைப் பார்க்க, படிக்க, நம்ப எங்களுக்கு மட்டுமே உரிமை உண்டு" என்று கூறி மகிழ்ச்சியும், மன நிறைவும் கொள்வார் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. எனவே கருத்துப் போரில் என் தோல்வியை நிபந்தனையின்றி ஒப்புக் கொள்கிறேன்.

ஆசிரியர் குறிப்பு:

இக்கட்டுரையுடன் தொடர்புபடுத்திச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மார்க்சிய - லெனினிய இயக்கத்தினர் சிலர் வலது இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து, எங்கள் மீது சுமத்தி வருகிற அவதூறுகளை நாங்கள் நன்கறிவோம். குசுகுசுப்புப் பிரச்சாரத்திலிருந்து, அச்சிடப்பட்ட அவதூறுகள் வரை, தாக்குதலின் பல வடிவங்களை நானும் 'பரிமாணம்' நண்பர்களும் பல ஆண்டுகளாகவே எதிர்கொண்டு வருகிறோம். இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்துக் கொண்டால், சாக்கடையில்தான் போய் விழ வேண்டியிருக்கும். மேலும், ஒரு நெருக்கடி மிகுந்த காலத்தில் நானும் என் தோழர்களும் சரியாகவோ,

தவறாகவோ தொடர்பு கொண்டிருந்த புல புரட்சிகரத் தோழர்களை சந்திக்கு இழுக்க வேண்டியிருக்கும். கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நம் நாட்டுப் புரட்சி இயக்கத்திற்கோ, மார்க்சியத்தின் வளர்ச்சிக்கோ இத்தகைய 'தெருச்சண்டைகள்' பங்களிப்புச் செய்யப் போவதில்லை. நாங்கள் அக்கினிப் பிரவேசம் செய்து, எங்களை அவதூறு செய்பவர்கள் முன்நின்று, 'நாங்கள் புனிதமானவர்கள்தான், எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறத் தேவையு மில்லை. மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் எனக் கூறிக் கொள்பவர்கள், மிக அண்மைக்காலம் வரை என்னோடு ஒரே படுக்கையில் புரண்டவர்கள், தாங்கள் கூறி வரும் அவதூறுகளை, தங்கள் மனச்சாட்சியே ஏற்றுக் கொள்கிறதா என்பதை சோதித்துப் பார்த்துக் கொள்ளட்டும்.

ராயனின் கட்டுரையுடன் கீழ்க்காணும் சில மேற்கோள்களையும் சேர்த்துப் படிக்குமாறு வாசகர்களை வேண்டுகிறேன்:

1. "வெளிப்படையான ஒரு மூடக் கருத்தை ஒரு எதிராளிக்கு ஏற்றிச் சொல்வது, பிறகு அதனை மறுதலிப்பது என்பது மூளையில்லாதவர்கள் கடைப்பிடிக்கும் ஒரு தந்திரமாகும்". (லெனின்: புரட்டல்வாதத்துக்கு எதிராக).
2. "வன்முறை, எதிரிகள் மீது மட்டுமே பிரயோகிக்கப்படக் கூடியது. நம்மில் ஒரு பகுதியினராக இருப்பவர் மீதமல்ல; இவர்கள் விரைவாக நம்மால் உட்கிரகிக்கப்படக் கூடியவர்கள்; இவர்களது நல்லெண்ணமும், உற்சாகமும் நமக்குத் தேவையானவை."

-அன்டோனியோ க்ராம்ஸ்சி (ரஷ்யப் பொதுவுடமைக் கட்சியில் 'களையெடுப்பு' என்ற பெயரில் நடைபெற்ற பயங்கரச் செயல்களின் போது, இத்தாலியப் பாசிசச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த புரட்சியாளர் க்ராம்ஸ்சி 1932ல் எழுதிய வாசகங்கள் இவை. அவதூறுகள், வன்முறையின் ஒரு கொடிய வடிவம்).

3. "ஞானி நிலவைச் சுட்டிக் காட்டுகிறான். மூடனோ சுட்டு விரலையே பார்த்துக் கொண்டிருக்கிறான்."

- ஒரு பௌத்தப் பழமொழி (சிலருக்கு இயல்பாகவே வாய்க்கப் பெற்ற 'கோணல் பார்வை' சுட்டு விரல் மீது மட்டுமே பதியுமானால், நாம் என்ன செய்ய முடியும்)

4. "குழியில் விழுந்த யானையைத் தவளை கூட எட்டி உதைக்கும்."

- சீனப் பழமொழி

(தவளைகளிடமிருந்து உதை வாங்குவதால் எங்களுக்கு இழப்பு ஏதுமில்லை)

-எஸ்.வி. ராஜதுரை

⁂

5. பொதுவுடைமையாகும் கதிரியக்கம்

– நாகார்ஜுனன்

ஏப்ரல் 28, 1986: இந்தியக் காலைத் தினசரிகளில் மூலையில் ஒரு செய்தி வெளியாகிறது: ஸ்வீடன், சோவியத் யூனியனைக் கண்டிக்கிறது. ஏன்? ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க், நார்வே ஆகிய நாடுகளில் கதிரியக்க அளவுகள் (radiation levels) வேகமாக ஏறி வருகின்றன. காற்றும், நீரும், மண்ணும், வானும் அணுக் கதிரியக்கத்தால் தாக்கப்பட்டு விட்டன. காரணம்: சோவியத் நாட்டின் மேற்குப் பகுதி மாநிலமான உக்ரைனிலுள்ள செர்னொபில் அணுமின் நிலையத்திலுள்ள நான்கு அணு உலைகளில் (reactors) ஒன்று வெடித்து எரிந்து கொண்டிருக்கிறது. மேகக் கூட்டத்தினூடே சாவின் தூதன் கதிரியக்கமாக வருகிறான் அரசியல் பூகோளப் பிரிவுகளைத் தாண்டி.

இரண்டு நாட்களுக்குள் இந்நிகழ்வின் தீவிரம் புரிந்து மெதுவாக செய்தி முதல் பக்கத்துக்கு வந்து விடுகிறது. மேற்கூறப்பட்ட நாடுகளில் கதிரியக்க விளைவுகளுக்கு அஞ்சி அரசுகளும், மக்களும் பீதியடைகின்றனர். டென்மார்க்கிலும், போலந்திலும் கதிரியக்க எதிர்ப்புச் சக்தியாகக் கருதப்படும் அயோடின் மாத்திரைகளை மக்கள் விழுங்குகின்றனர். போலந்தில் இலட்சக்கணக்கான லிட்டர் பசும்பால் கடலில் கொட்டப்படுகிறது. டென்மார்க்கில் பிரதம மந்திரி பால்ஷ்லூட்டர், சோவியத் யூனியன் உடனடியாக செர்னொபில் விபத்து பற்றி உலகுக்கு அறிவித்திருக்க வேண்டும் என்று கடிந்து கொள்கிறார்.

ஸ்வீடனுக்கும் இது அதிர்ச்சியே. அந்நாட்டில் அணுமின் நிலையங்களைக் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மின்சக்தித் துறை அமைச்சர் பிரிகிட்டா டால், சோவியத் மெத்தனம் பற்றிக் கவலைப்படுகிறார். அணுமின் நிலைய விபத்தைப் பற்றி அறிவிப்புச் செய்யாதது தவறு என்று கண்டிக்கிறார்.

இதற்குள் கதிரியக்கக் காற்று ஒரே சுற்றாகத் திரும்பி மத்திய ஐரோப்பாவை நோக்கி வீசுகிறது. அடிபடுவது பூராவும்

சோசலிச நாடுகள்: செக்கோஸ்லோவேகியா, ருமேனியா, பல்கேரியா, மீண்டும் போலந்து, கதிரியக்கத் தாக்கத்துக்கு எதிரான மருந்து என்பது எதுவுமில்லை என்று தெளிவாகிறது.

இப்போதுதான் செர்னொபில் அருகிலும், உக்ரைன் மாநிலத்திலும் ஏற்பட்ட தாக்கம் என்ன என்பதைப் பற்றிய கவலை உலகுக்கு எழுகிறது. தேசிய நலன்களுக்கு அப்பால் தானே மிச்சக் கருணை எல்லாம்.

ஐக்கிய நாடுகள் சபையிலும், உலக அணுசக்திக் கழகத்திலும் விபத்து பெரும் விவாதத்தை உண்டு பண்ணுகிறது. ஐ.நா. உறுப்பினர் ஒருவர் 'கதிரியக்க அகதிகள்' பற்றிப் பேசுகிறார்.

எட்டு வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பெற்ற செர்னொபில் அணுமின் நிலையத்தில் நடந்ததுதான் என்ன? இந்நிலையம் உரேனியத்தை எரிபொருளாகக் கொண்டு இயங்குகிறது. அதாவது இயங்கியது. உரேனியத்தை நியூட்ரான்கள் கொண்டு தாக்கும் போது அதிக நியூட்ரான்களும், புளுட்டோனியமும் தோன்றுகின்றன. புளுட்டோனியம் அணு தகர்ந்து பெரும் சக்தியை வெளிப்படுத்துகிறது. இச்சக்தி பெரும் உஷ்ணமாக (2000'சி) வெளிப்படுகிறது. இதைக்கொண்டு தண்ணீரை ஆவியாக்கி, அதை வைத்து ஒரு டர்பைனை ஓட்டி, மின்சக்தியை உண்டாக்கும் முயற்சியே ஒரு அணுமின் நிலையத்தின் இயக்க அடிப்படை. இங்கே மேலதிக நியூட்ரான்கள் வெளிப்பட்டால் அவற்றை உறிஞ்சிக்கொள்ள கிராஃபைட் உபயோகப்படுகிறது. இதை RBMK வித அணுமின் நிலையம் என்கிறார்கள்.

கல்பாக்கம் மற்றும் ராஜஸ்தானிலுள்ள கோட்டா ஆகிய இடங்களில் கிராஃபைட்டுக்குப் பதிலாக அடர் தண்ணீர் (Heavy Water) உபயோகிக்கப்படுகிறது. மேலும் நீராவி மிகுந்த அழுத்தத்துடன் உண்டாக்கப்படுகிறது.

எல்லா வகை அணுமின் நிலையங்களைப் போலவே RBMK வகையிலும் பெரும் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உண்டு. இவ்வித ஆபத்துக்களில் அதிகமாக நடக்கக்

கூடியது எரிபொருளாகிய உரேனியக் கலவை வைக்கப்பட்டுள்ள கரு (Core) உருகிவிடக் கூடும் என்பதுதான். அணுசக்தி உஷ்ணமாக வெளிப்படும் போது அவ்வுஷ்ணத்தை அப்புறப்படுத்த முடியாமற்போவதால் இது நடக்கிறது. தண்ணீரையோ, நீராவியையோ எடுத்துச்செல்லும் ஒரு பம்ப் அல்லது ஒரு குழாய் பழுதடைந்து போனால்கூட இது நடக்கலாம். அல்லது ஏதாவது ஒரு வால்வ் எங்காவது சிக்கிக் கொண்டால் கூட இது நடக்கலாம்.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது இதுதான்: இப்படிப்பட்ட சமயங்களில் அணுமின் நிலையம் என்பது நம் கையை விட்டுப் போய் விட்ட சமாச்சாரம். நிலையத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது தன்னிச்சையானதொரு நிகழ்வு. அதற்குள் எரிபொருள் வைக்கப்பட்டுள்ள 'கரு' உருகி, அணுஉலையும், அதிலுள்ள கதிரியக்க வீச்சுப் பொருட்களும் நேரடியாகக் காற்றுக்குள்ளும், சுற்றுச் சூழலிலும் கலந்து விடுகின்றன. இதில் உரேனியம், புளுட்டோனியம் உட்பட்ட பல பொருட்களும் அடங்கும்.

கதிரியக்கத் தாக்கம் படைத்த இப்பொருட்கள் பெரும் அபாயம் மிக்கவை. இவை காற்றிலும், சுற்றுச்சூழலிலும் கலந்தால் மனித, தாவர, மிருகவாழ்வுக்குப் பெரும் நோய்களை ஏற்படுத்தும்.

இதுதவிர, கதிரியக்கத் தாக்கம் எரிபொருள் தயாரிக்கும் நிலையிலும், அணுமின் நிலையங்களிலிருந்து 'கழிவு'ப்பொருட்களாக எடுத்து பூமிக்கடியில் தோண்டி வைக்கும் நிலையிலும் ஏற்படக்கூடும். சொல்லப் போனால் அணுமின் நிலையங்களின் கருவிலிருந்து 'கழிவு'ப்பொருட்களாகப் பெறப்படுபவை கழிவுகளல்ல. இவற்றிலிருந்தே அணுகுண்டுக்கான மூலப் பொருளான புளுட்டோனியத்தைப் பெற முடியும். இதைப் பற்றிப் பின்பு பார்ப்போம்.

செர்னொபில் அணுமின் நிலையத்தில் உரேனியம் கரு உருகிவிட்டிருக்கிறது. இந்நிலை உடனடியாக கதிரியக்கத் தாக்கத்தையும், அது தொடர்பான தீயையும் கிளர்ந்தெழச் செய்துள்ளது. அமெரிக்க உளவு செயற்கைக்கோள் எடுத்த

படங்களிலிருந்து செர்னொபிலிலுள்ள நான்கு அணுஉலைகளில் ஒன்ற இவ்விபத்தால் வெடித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற உலைகள் உடனே மூடப்பட்டு விட்டதாக சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் கூறியது. ஆனால் இன்னொரு உலையும் எரிந்து கொண்டிருப்பதாக மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் அலறின.

விபத்தில் இருவர் மட்டுமே கதிரியக்கத் தாக்கத்தால் உடனடியாக மாண்டதாகவும், பதினெட்டுப் பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் டாஸ் கூறியது. மருத்துவமனைகளில் 300 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி சொன்னது. சோவியத் அதிபர் மிக்காயில் கோர்பச்சேவ் "உக்ரைன் பகுதியிலுள்ள சில அண்மைக் கிராமங்களிலிருந்தும், குடியிருப்புகளிலிருந்தும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்" என்று ரேடியோவில் அறிவித்தார். சோவியத் டிவி, செர்னொபில் அணுமின் நிலையத்தின் புகைப்படத்தைக் காட்டி, தீ அணைக்கப்பட்டு விட்டதாகக் கூறியது.

ஆனால் மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் மற்றும் விஞ்ஞானிகள் செர்னொபில் விபத்தின்அளவையும், கதிரியக்கத் தாக்கத்தால் ஏற்படும் உடனடி மற்றும் நெடுங்கால விளைவுகளையும் பற்றிப் பேச ஆரம்பித்தனர். ஸ்வீடன் நாட்டின் கிழக்குக் கடற்கரையோரம் பலமான கதிரியக்கம் இருப்பதையும், போலந்தில் பால் மற்றும் தண்ணீரில் கதிரியக்க அளவுகள் மிகுந்திருப்பதையும் கணக்கில் கொண்டு ஆராய்ந்தனர். செர்னொபில் விபத்து மிகவும் பயங்கரமான ஒன்று என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களின் கணிப்பில்:

ஆயிரக்கணக்கான மக்கள் உக்ரைன் பகுதியில் நேரடியான கதிரியக்கத் தாக்கத்தால் இறந்திருக்கக்கூடும். அண்மைப் பகுதிகளில் வாழும் 10,000 பேர் அடுத்த 10 ஆண்டுகளில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படலாம். தவிர பிறக்கப் போகும் குழந்தைகளும் பெரிதும்

பாதிக்கப்பட்டு, பயங்கரமான ஊனங்களுக்கும், குறைகளுக்கும் ஆளாகலாம். மற்றும், உக்ரைனின் தலைநகரான கீவ் நகரப்பகுதியில் வாழும் 35 லட்சம் மக்களுக்கான குடி தண்ணீர், பால் மற்றும் இறைச்சி ஆகியவை கதிரியக்கத்தால் தாக்கப்பட்டிருக்கலாம். இதுவரை சுமார் 60,000 பேர் செர்னொபில் பகுதியிலிருந்து வெளியேறிக் கதிரியக்கத்தாக்கத்துக்கான பரிசோதனைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கணிப்புக்களை சோவியத் யூனியன் வன்மையாக மறுத்தது. இப்படிப்பட்ட விபத்து நடக்கவில்லை என்று அது வாதிட்டது. அணுமின் நிலையத்தில் பரவிய தீ, கட்டுக்குள் அடங்கி விட்டதாக அறிவிப்புச் செய்தது. தானே, முன்பு தீயை அடக்க பிரெஞ்சு மற்றும் ஜெர்மானிய விஞ்ஞானிகளின் உதவியை நாடியதை அப்புறம் கண்டுகொள்ளவில்லை.

ஆனால் இதற்குள் கீவ் நகரப் பகுதிகளில் வாழும் அந்நிய நாட்டவர்கள் சோவியத் யூனியனிலிருந்து வெளியேறினர் – இந்தியர்கள் தவிர.

உடனடியாக, மேற்கத்திய நாடுகள் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் உணவு, இறைச்சி ஆகியவற்றைத் தடை செய்தன. கதிரியக்கத்துக்கு இலக்கான உக்ரைன் பகுதியில் வருங்காலத்தில் பயிர் செய்ய இயலாமல் போகலாம் என்று மேற்கத்திய விஞ்ஞானிகள் அறிவித்தனர். உடனே சோவியத் விவசாய உற்பத்தி குறைந்து விடும் என்று கண்டுபிடிக்கப்பட்டு சிகாகோ கோதுமை ஒட்டு மொத்த மார்க்கெட்டில் விலைகள் கூடின.

உலக அரங்கில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் கூடி டோக்கியோவில் மாநாடு போட்டார்கள். ஜப்பானிய இடதுசாரிகள் சும்மா எதிர்ப்புக்காக குண்டுகளை வெடித்துப் போட்டார்கள். நடுவே எல்லாருமாகச் சேர்ந்து சோவியத் யூனியனிலுள்ள 50 அணுமின் நிலையங்களைப் பரிசோதனைக்கு விட வேண்டும் என்று சொல்லிக் கவலைப்பட்டார்கள். மேற்கத்திய உலகின் அணுமின் நிலையங்கள், எரிபொருள் உலைகள், தளவாட உற்பத்தி மையங்கள் பற்றியெல்லாம் வரும் நவம்பர் மாதம்

ஜெனிவாவில் கோர்பச்சேவின் தோளில் கை போட்டு ரீகன் பேசுவார் என்று சொல்லப்பட்டது.

சோவியத் யூனியன் கூறுவது போல செர்னொபில் விபத்து சாதாரணமானதல்ல. உக்ரைனின் கீவ் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் ரயில்கள் மூலம் இன்னும் வெளியேறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. சோவியத் யூனியன் மற்ற அரசியல் வி யங்களைப் போலவே இதையும் மூடி மறைக்கும் செயலைச் செய்தது பெரும் தவறு. ஏற்கெனவே அணுமின் நிலையங்களில் ஏற்பட்ட பல விபத்துக்களை சோவியத் யூனியன் மூடி மறைப்பதாகச் செய்திகள் உள்ளன. இதனால் சோவியத் அரசு, தனது மக்களுக்கும், அண்மை நாடுகளில் உள்ள மக்களுக்கும் பெரிய கொடுமை ஒன்றை இழைக்கிறது.

மேலும், சோவியத் யூனியனில் நடந்த இந்த விபத்தை மேற்கத்திய நாடுகள் அரசியல் காரணங்களுக்காக மிகவும் பெரிதுபடுத்துகின்றன என்ற வாதமும் தவறுதான். கதிரியக்கத்தைப் பொறுத்தவரை முதலாளித்துவம், சோசலிசம் என்ற வேறுபாடு எதுவுமில்லையே

செர்னொபில் என்ற பெயர் இந்தியத் தினசரிகளின் முதல் பக்கத்திலிருந்து வெளிநாட்டுச் செய்திகள் பக்கம் (இந்துவில் பக்கம் ஐந்து, எக்ஸ்பிரசில் பதினொன்று) போய்ச் சேர்ந்தது. மீண்டும் பஞ்சாப் பிரச்சனை, இலங்கைப் பேச்சு வார்த்தை, சென்னையில் கத்திரி வெய்யில் ... AIDS!

உக்ரைன் பகுதியில் கதிரியக்கத்தால் பிடிக்கப்படப் போகும் மக்கள், கர்ப்பிணிகள், பிறக்கக் கூடும் பயங்கரக் குழந்தைகள்...? "கவலையை விடுங்கள். நீங்கள் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவராயிருந்தால் தேசிய டிவி நிகழ்ச்சி பார்த்து, மகிழ்ந்து, மறந்து விடுங்கள். இந்த விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட நாங்கள் இருக்கிறோம்" என்று இந்திய அணுசக்தி துறையின் தலைவர் டாக்டர் ராஜா ராமண்ணா சொல்கிறார்.

இந்திய அணுசக்தித் துறையும் மக்கள் அதீதமாய்க் கவலைப்படாமலிருக்கச் சில வி யங்களைச் சொல்லியது.

1. செர்னொபில் விபத்தால் இந்தியத் துணைக் கண்டத்துக்கு எந்தவித ஆபத்துமில்லை. மத்திய ஆசியாவிலிருந்து கதிரியக்கக் காற்று வீசும் போது இமயமலைத் தொடர் தடுத்து விடுகிறது.

2. செர்னொபில் அணுமின் நிலையத்தின் கதிரியக்க வீச்சு மங்கியவுடன் இந்திய விஞ்ஞானிகளும் அங்கே போய்ப் பார்க்கப் போகிறார்கள். ஏன்? அதைப் போலவே இரண்டு RBMK வகை நிலையங்களை வாங்கப் போகிறார்களே, அதனால்தான், (இப்படிப்பட்ட விபத்துக்குள்ளாகும் அணுமின் நிலையங்களை வாங்க வேண்டாம் என்று சோவியத் நாட்டிலிருந்து வெளியேறிய ஜோரஸ் மெத்வதேவ் என்ற மார்க்சிய விஞ்ஞானி லண்டனிலிருந்து சொல்கிறார்).

மேற்கத்திய நாடுகளில், அணுசக்தியைப் பொறுத்த வரை பலவிதமான குழுக்கள் தம் வன்மையான எதிர்ப்பை முனைப்படுத்த செர்னொபில் விபத்து இன்னுமொரு சந்தர்ப்பம், அணுமின் நிலையங்கள் மேலும் அமையாதிருக்க ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும், டென்மார்க்கிலும் பல குழுக்கள் மீண்டும் போராட முன்வந்துள்ளன. பிலிப்பைன்ஸ் தீவுகளிலும்கூட அமெரிக்கக் கம்பெனியான வெஸ்டிங் ஹவுசின் அணுமின் நிலையம் அமைக்கப்படப் போவதில்லை. மொராங் என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள அணுமின் நிலையம் திருமதி அகீனோவின் அரசாங்கத்தால் மே 1 அன்று மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (அதன் கீழே பூமியதிர்ச்சியோ, எரிமலைக் குமுறலோ எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பது ஏற்கெனவே தெரிந்ததுதான்).

உலகெங்கிலும் அணுமின் சக்தியானது மேலும் பரவ முடியாமல் தடைப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் அணுமின் சக்தி தயாரிப்பதால் ஏற்படும் அபாயங்கள் மிக பயங்கரமானவை என்பதால் மட்டுமல்ல; அணுமின் நிலையங்கள் கட்டி, அவற்றைப் பராமரிப்பது என்பது பொருளாதார ரீதியாகவே மிகவும் கடினமான வி யம். தவிர எண்ணிறந்த விபத்துக்கள் உலகெங்கும் அணுமின் நிலையங்களிலும், தொடர்பான

ஆலைகளிலும் நடந்துள்ளன. முக்கியமான விபத்துக்களைப் பின்வருமாறு பட்டியல் போடலாம் (இவை தவிர அறிவிக்கப்படாமலேயே பல விபத்துக்கள் நடந்துள்ளன).

மூன்று மைல் தீவு, பென்சில்வேனியா (அமெரிக்கா)

மார்ச் 28, 1979:

ஒரு பம்ப் வேலை செய்யாததால் அணு உலை உருகும் நிலையில் பயங்கரமான கதிரியக்கம் வெளியாகியது. கர்ப்பிணிப் பெண்களும், குழந்தைகளும் வெளியேற்றப்பட்டனர். அணுமின் சக்தி தயாரிப்பது மிகவும் பயங்கரமான விஷயம் என்பதை அமெரிக்க மக்கள் நேரடியாக உணர்ந்தனர்.

ப்ரௌன்ஸ் ஃபெர்ரி, அலபாமா (அமெரிக்கா)

மார்ச் 22, 1975:

ஒரு மெழுகுவர்த்தியை வைத்து காற்றுக் கசிவுகளைக் கண்டுபிடிக்க முயலும்போது அணு உலைகள் தீப்பிடித்து எரிந்தன. இரண்டு உலைகள் முற்றும் உருகியிருக்கக் கூடும்.

செவ்செங்கோ, காஸ்பியன் கடல், சோவியத் யூனியன், 1974

இங்குள்ள ஒரு ப்ரீடர் உலையின் சோடியம் தீப்பற்றியதால் அணுஉலை வெடித்தது. கதிரியக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் விளைவுகள் பற்றி ஏதும் தெரியவில்லை.

ட்ராவர்ஸ் பே, மிச்சிகன், அமெரிக்கா, ஜனவரி 1971:

ஒரு பி-52 போர் விமானம், அணு உலையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர்கள் தொலைவில் நொறுங்கி விழுந்தது. நேரடியாக உலையில் விழுந்திருந்தால் பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

ஹான்ஃபோர்ட், வாஷிங்டன், அமெரிக்கா, செப்டம்பர் 30, 1970:

மீண்டும் ஓர் அணு உலை உருகியிருக்கக் கூடும். கடைசி நிமிடத்தில் என்பது கன்ட்ரோல் ராடுகளை

உலைக்குள் நுழைத்து, நியூட்ரான்களைக் கட்டுப்படுத்தினர் விஞ்ஞானிகள்.

லூசன்ஸ், ஸ்விட்சர்லாந்து, ஜனவரி 21, 1964:

உலை உருகிக் கதிரியக்கம் வெளியேறியது. அணுமின் நிலையம் மூடப்பட்டது.

என்ரிகோ ஃபெர்மி, மிச்சிகன், அமெரிக்கா, அக்டோபர் 5, 1966

இங்குள்ள ப்ரீடர் உலை அநேகமாக உருகிவிட்டது. அணுகுண்டுக்குச் சமமான வெடிச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம்.

ஷிப்பிங் போர்ட், பென்சில்வேனியா, அமெரிக்கா 1984:

நீராவி ஜெனரேட்டர்கள் அணுஉலையின் மீது நொறுங்கி விழுந்தன. அதிர்ஷ்டவசமாக, அப்போது அணு உலை இயக்கத்தில் இல்லை.

இடாஹோ நீர் வீழ்ச்சி, அமெரிக்கா, ஜனவரி 3, 1961:

அணு உலை ஒன்று திடீரென்று வெடித்ததில் மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

யூரல் மலைச்சாரல், சோவியத் யூனியன், 1958:

இங்கே அணுக்கழிவுகளும், பிற கதிரியக்கப் பொருட்களும் வைக்கப்பட்டிருந்த இடம் ஒன்று வெடித்தது. சுமார் 100 டன் TNT சக்தியுள்ள இந்த வெடிச் சம்பவம் பெரும் கதிரியக்கத்தை சோவியத் யூனியனின் மேற்குப் பகுதி முழுவதும் பரப்பியது. சுமார் 30 கிராமங்களின் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். நவீன சோவியத் வரைபடங்களில் இந்தப் பிரதேசத்திலுள்ள 60 கிராமங்களைக் காணோம். பழைய வரைபடங்களில் இல்லாத ஏரிகள் புதிய வரைபடங்களில் காணப்படுகின்றன. அப்பிரதேசத்தில் தாவர இனம் எதுவும் வளருவதில்லை.

இதை சோவியத் யூனியனிலிருந்து வெளியேறிய டாக்டர் ஜோரஸ் மெத்வதேவ் பலமான ஆதாரங்களுடன் 1976இல் நிருபித்தார்.

விண்ட்ஸ்கேல், இங்கிலாந்து, அக்டோபர் 7, 1957: அணுக்கழிவுகள் வைத்திருந்த இடம் தீக்கிரையானது. சுற்றியுள்ள 200 மைலுக்கு கதிரியக்கத் தாக்கம் பெற்ற பால் கடலில் கொட்டப்பட்டது.

இன்னும் எத்தனையோ விபத்துக்களைக் கூறலாம். இதைத்தவிர, உலகெங்கும் அணுமின் நிலையங்களிலும், எரிபொருள் தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் பலமான கதிரியக்கத்துக்கு ஆளாகிறார்கள். உரேனியம் சுரங்கங்களில் பல தொழிலாளர்கள் ரேடான் காஸ் தாக்கி நோயுறுகின்றனர். இவர்களிடையே புற்றுநோய் மிகச் சாதாரணமாக காணப்படும் ஒன்று.

இதுதவிர, ஒரு அணுமின் உலையின் காலம் முடிந்து விட்டால் அதைப் பாதுகாத்து மூடி வைப்பது என்பது மிகவும் அபாயகரமான செயலாகும். அணுக் 'கழிவு' களை எப்படிப் பாதுகாத்து வைப்பது என்பது விஞ்ஞானிகளால் தீர்க்கவே முடியாத ஒரு பிரச்சனையாக உள்ளது. இக்கழிவுகள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்குக் கதிரியக்கச் சக்தியைக் கொண்டிருக்கும்.

இவ்வளவு அபாயகரமான ஒரு தொழிலை உலகெங்கும் பல அரசாங்கங்கள் – இந்தியா உட்பட – மேற்கொள்வது எதற்காக?

விடை: மிகவும் நேர்மையாகக்கூற வேண்டுமானால், இதுதான்: அணுகுண்டுகள் தயாரிக்க மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை அணுத் தளவாடங்களை உற்பத்தி செய்ய புளுட்டோனியம் தேவைப்படுகிறது. அதற்கு அணுமின் நிலையங்களிலிருந்து வெளியாகும் 'கழிவுகள்' உபயோகமாக உள்ளன. இந்தியாவிலும், அணுமின் சக்தியைத் தயாரிப்பது என்பது மிகவும் சிக்கலான, பொருளாதார ரீதியில் நஷ்டத்தைக் கொடுக்கும் தொழில் என்று உணரப்பட்டு விட்டது. எனவே இன்று அணுசக்தித் துறையில் போடப்படும் கோடிக்கணக்கான பணம் குண்டுகளைத் தயாரிக்கவே ஆகும்.

இதை இந்திய அரசாங்கமோ, அணுசக்தித் துறையோ நேரடியாய் ஒத்துக் கொள்வதில்லை. அதிகமான

பொருட்செலவில் மேலும் மேலும் அணுமின் நிலையங்களைத் திறந்து கொண்டு அவர்கள் செல்கின்றனர். இந்தியா போன்ற ஒரு நாட்டின் மின்சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சூரிய ஒளி, பயோ-மாஸ், காற்றாடி, கடல்நீரின் வெப்பத்தைச் சக்தியாக்குதல் போன்ற பல முயற்சிகளை மேற்கொள்ளாமல் அரசு அணுசக்தித் துறையில் பெரும் முதலீடுகளைச் செய்து வருகிறது.

அரசின் அணுத்துறைக் கொள்கை பற்றிய திட்டவட்டமான விமரிசனத்தை டாக்டர் திரேந்திர சர்மா என்ற பேராசிரியரும், ப்ரஃபில் பித்வாய் உள்ளிட்ட சில பத்திரிகையாளர்களும் மட்டுமே வைத்துள்ளனர். திரேந்திர சர்மா டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் விஞ்ஞானக் கொள்கைத் திட்டம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர். பௌத்த தர்க்கம் பற்றிய பல புத்தகங்களை எழுதிய இவர், 1960களில் அமெரிக்காவில் வாழ்ந்த போது வியட்நாம் போருக்கு எதிரான போராட்டங்களில் பங்கெடுத்தவர். இந்திய அணுசக்தித் துறையின் போக்கைப் பற்றி இவர் எழுதிய விரிவான ஆய்வுப் புத்தகமான India's Nuclear Estate 1983ல் வெளிவந்தது.

இதில் இவர் கூறுகிறார்:

"இந்திய அணுசக்தித் துறை மிகவும் மோசமான, பயங்கரமான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. மின் சக்தித் திட்டங்களும், ப்ரீடர் உலைத் திட்டமும் எந்தவித விளக்கமுமின்றித் தள்ளிப் போய்க் கொண்டிருப்பதால், பொருளாதார ரீதியாக இத்திட்டங்கள் நஷ்டத்தையே ஈட்டும். அடர்நீர் தொழிற்சாலைகளில் (heavy water plants) வெடிப்புச் சம்பவங்களுக்குப் பின்பு உற்பத்தி ஏதுமில்லை"

"ஆனால் இந்திய அணுசக்தித் துறையின் நிர்வாகிகள் பெரும் சக்தி வாய்ந்தவர்களாக உள்ளனர். அணுசக்தித் துறையின் போக்கு பற்றி எந்தவித விமரிசனத்தையும் அவர்கள் அண்ட விடுவதில்லை. இந்தியப் பல்கலைக் கழகங்களும், கல்லூரியில் பணியாற்றும் விஞ்ஞானிகளும், பத்திரிகையாளர்களும் அணுசக்திக் கொள்கையைப் பற்றிய

விவாதங்களில் கலந்து கொள்வதை இவர்கள் விரும்பவில்லை...

"அணுமின் நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும் நடக்கும் நிகழ்வுகளை 'இரகசியம்' என்ற போர்வையால் மறைத்து விடுகிறார்கள். இவற்றில் விபத்துக்களும், தொழிலாளரைக் கதிரியக்கத்துக்கு உட்படுத்துதலும், தொழிற்சங்க உரிமைகளை நசுக்குவதும் அடங்கும்...

இந்நிலையில் இந்திய அணுசக்தித் துறை எதற்கும் கட்டுப்படாமல் ஒரு இரகசிய அரசாங்கமாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த 25 வருடங்களில் இத்துறையின் அமைப்பிலும், கொள்கைகளிலும் எந்தவித மாற்றமுமில்லை. கொள்கைகளை மறுபரிசீலனை செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை... ஜனநாயக அமைப்பாக இந்தியா செயல்படுவதற்கு இந்திய அணுத்துறை தடங்கலாக உள்ளது."

இப்புத்தகம் வெளியானவுடன் திரேந்திர சர்மாவின் பதவி பறிபோய், அவர் அதே பல்கலைக்கழகத்தின் மொழித்துறைக்கு மாற்றப்பட்டார். தற்போது இந்திய அணுமின் நிலையங்களிலும், தொடர்பான தொழிற்சாலைகளிலும் நடக்கும் நிகழ்வுகளைத் தொகுக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருக்கிறார்.

இவ்விடங்களிலும் விபத்துக்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இதுவரை பெரிய அளவில் விபத்து ஒன்றும் நேராத போதும், அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. மேலும் இத்தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கும், சூழலில் வாழ்பவர்க்கும் பலவிதமான இன்னல்கள் கழிவுப் பொருட்களாலும், கதிரியக்கத் தாக்கத்தாலும் ஏற்பட்டுள்ளன;

* பம்பாய் அருகேயுள்ள தாராப்பூர் அணுமின் நிலையம் உலகிலேயே அதிகமான கதிரியக்கத்தாக்கம் கொண்டது என்று கூறப்படுகிறது. பம்பாய் அருகே கடற்பிரதேசத்தில் 40-50 கிலோ மீட்டர் வரை கதிரியக்கத்தால் தாக்கப்பட்டுள்ளது என்று நம்பப்படுகிறது.

* இங்குள்ள நீரும், காற்றும் கதிரியக்கம் கொண்டவை. பலமுறை விபத்துக்கள் நடந்துள்ளன. 1972ல் இரண்டு பொறியாளர்கள் கதிரியக்கத்தால் உடனடியாக மரணமடைந்தனர். மேலும், தலைமைப் பொறியாளரான டாக்டர் வி.வி. கோத்தாரி என்பவரும் தன் நண்பரைக் காப்பாற்றுவதற்காக உலையின் மையப் பகுதிக்கு விரைந்தார். மயக்கமுற்று பல வருடங்கள் மருத்துவமனைகளில் கழித்தார். 1977ல் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமடைந்தார்.

* இங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மேலதிகமான கதிரியக்கத்துக்கு தினமும் ஆளாகிறார்கள். 1977லும், 1983லும் இதைப் பற்றிப் பத்திரிகையாளரான ப்ரஃபுல் பித்வாய், டைம்ஸ் ஆஃப் இந்தியாவில் கட்டுரைகள் எழுதினார். 1980ல் ஒரு பைப் உடைந்து கதிரியக்கம் கொண்ட நீர் தாராப்பூர் முழுவதும் பரவியது. அணுத்துறைத் தலைவர் சேத்னா இதை ஒரு pin-hole leake என்றார். எதிர்த்துக் கட்டுரைகளை Science Todayவில் எழுதிய டாக்டர் கே.எஸ். ஜெயராமனுக்கு அந்த வேலை போயிற்று.

* ராஜஸ்தானிலுள்ள கோட்டா அணுமின் நிலையம் பல சிறு விபத்துக்களுக்குப் பிறகு மூடப்பட்டு விட்டது.

* அடர்நீர் தொழிற்சாலைகளான பரோடா, தூத்துக்குடி, தால்சேர் ஆகிய இடங்களில் கடந்த ஐந்து வருடங்களில் தீ விபத்துக்களும், வெடிப்புச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இவை அனைத்தும் சரியாக இயங்காத நிலையில் உள்ளன.

* அணு எரிபொருள் தொழிற்சாலை ஐதராபாத்தில் உள்ளது. இதிலும் தீ விபத்து உட்பட பல விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. 1982ல் தமிழ்நாட்டிலிருந்து கட்டிட வேலை செய்யப் போன தொழிலாளிப் பெண்ணின் குழந்தைகள் இருவர், ஏதோ ஒரு உலோகத்தைப் பொறுக்கி அங்கேயே (தொழிற்சாலைக்கு வெளியில்) எரிந்து மாண்டனர்.

மேலும், அதிகமான கழிவுகளை இத்தொழிற்சாலை சுற்றுப்புறத்தில் உள்ள மக்கள் வாழுமிடங்களுக்கு அனுப்புகிறது. இதுகுறித்து கிராமவாசிகள் பல போராட்டங்களை நடத்தித் தடியடி சம்பாதித்தனர்.

* ஆல்வாய் அருகே உள்ள Indian Rare Earths என்ற தோரியம் எரிபொருள் தயாரிப்புத் தொழிற்சாலையில் வேலை செய்வோரிடையே புற்றுநோய் அதிகமாக உள்ளது என்று முன்னாள் நீதிபதி கிருஷ்ண அய்யர் தலைமையிலான குழு ஒன்று விஞ்ஞானிகளுடன் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறுகிறது.

* தொழிலாளர்களின் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம்: தாராப்பூரிலும், கோட்டாவிலும், பாபா அணு ஆராய்ச்சி மையத்திலும் தொழிலாளர்களும், விஞ்ஞானிகளும் மிக மோசமாக அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில் டாக்டர் ராஜா ராமண்ணா, அணுமின் சக்தித் துறைத் தலைவர் எம்.ஆர். சீனிவாசன், பாபா அணு ஆராய்ச்சி மையத் தலைவர் டாக்டர் பி.கே. அய்யங்கார் ஆகியோர் இவற்றைப் பற்றிய கவலை எதுவுமின்றி மேலும் அணுமின் நிலையங்கள் கட்டுவதைப் பற்றிப் பேசி வருகிறார்கள். கர்நாடகத்தில் கைகா, குஜராத்தில் காக்ரபர், உத்திரப் பிரதேசத்தில் நரோரா (இது பூமியதிர்ச்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ளது) என்று பல இடங்களிலும் அணுமின் நிலையங்கள் கட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டின் அதீத நிலை பற்றிக் கேட்டால் அதிர்ச்சி அடைவீர்கள். ஒரு அணுகுண்டைப் போல் எந்நேரமும் வெடித்து விடக் கூடிய பரிசோதனை ப்ரீடர் உலை ஏற்கெனவே கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டு விட்டது. (இது தவிர சாதாரண அணு உலைகள் இரண்டு ப்ரேக்டவுன் ஆகிக் கொண்டே கல்பாக்கத்தில் உள்ளன). மேலும் திருநெல்வேலி – கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடன்குளம் என்ற இடத்தில் ஒரு அணுஉலை 1990ல் அமைக்கப் போவதாக எம்.ஆர். சீனிவாசன் கூறுகிறார்.

அணுமின்சக்தியைப் பொறுத்தவரை, மக்களிடையே அரசியல் ரீதியான எதிர்ப்புணர்வு கர்நாடகத்தில் கைகா நிலையம் அமைக்கப்படும் போது கிளம்பியது. ஆனால் ஓரிரு மாதங்களில் அது அடங்கி விட்டது. இடதுசாரிகளும் கூட அரசின் அணுசக்திக் கொள்கையை ஆதரிக்கிறார்களே.

இன்றுள்ள அரசியல் – பொருளாதார – கலாச்சார சூழ்நிலையில், அணுசக்தி தயாரிக்கும் 'திறமையும்' – ஏன் அணுகுண்டு தயாரிக்கும் திறமையும் கூட – இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் பெரிதாக மதிக்கப்படுகிறது.

சமீபத்தில் தமிழில் அறிவியல் பற்றி வெளிவந்துள்ள ஒரு புத்தகத்தில் பாருங்கள்.

"இன்று இந்தியா அணுகுண்டு தயாரிக்கும் வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்கிறது" (பக்கம் 109).

"அணுகுண்டை வெடித்தோம், இன்சாட்டை விடுத்தோம், அண்டார்ட்டிக்கா போனோம், கல்பாக்கம் கண்டோம் - சிறந்த வெற்றிகள்தாம்" (பக்கம் 126).

(அறிவியல் - சில பார்வைகள், டாக்டர் ப.க. பொன்னுசாமி, அன்னம் வெளியீடு, டிசம்பர் 1981).

பரந்துபட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, எரிபொருள், உடை ஆகியவற்றுக்கான அரசியல் திட்டங்களோ, அரசியல் போராட்ட நடவடிக்கைகளோ மழுங்கிப் போன காலகட்டத்தில் வாழ்கிறோம் நாம், இன்று உணவுக்குப் பதிலாக 'பொதுவுடைமை ரீதியில் எல்லாருக்கும் கிடைப்பதாக ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருள் இந்தியாவின் அணுகுண்டு. இங்கேயே, நமது அணு உலைக் கழிவுகளிலேயே தயாரித்தது. இல்லாவிட்டால் நிச்சயமாக ஏதோ ஒரு அணுமின் உலையில் நடக்கப் போகும் 'விபத்தால்' நாம் அனைவருக்கும் கிட்டக்கூடிய பொதுவுடைமையான கதிரியக்கம். செர்னொபில் மாதிரி.

6. மார்க்சுக்குப் பிறகு 100 ஆண்டுக்கால மார்க்சியமும் புரட்சியும்

- பால் எம்.ஸ்வீஸி

செர்மானிய தத்துவம், பிரெஞ்சு சோசலிசம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம் என்ற மூன்று மாபெரும் அறிவார்ந்த நீரோட்டங்களை மார்க்சியம் ஒன்றிணைத்தது என்று அடிக்கடி கூறப்படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் தனது சொந்த விளக்கங்களையும், மாற்றங்களையும் மார்க்சியம் கொண்டு வந்துள்ளது. ஆனாலும், இவற்றையெல்லாம்விட, இவற்றிலிருந்து புதியது ஒன்றை உருவாக்கியதுதான் மார்க்சியத்தின் அசல் பண்பாகும். இது புதியது, உலகையே உலுக்கிவிடும் பின்விளைவுகளைக் கொண்டது.

இப்படி உலுக்கும் வாக்கியத்தை 1845-ல் மார்க்ஸ் எழுதிய "ஃபயர்பாஹ் மீதான ஆய்வுரைகள்" என்னும் படைப்பில், 11-வது (கடைசி) ஆய்வுரையில் காணலாம்: "தத்துவ ஞானிகள் உலகை விளக்க மட்டும் செய்திருக்கின்றனர்; எனினும், அதனை மாற்றுவதே முக்கிய விஷயமாகும்."

உலகை விளக்குவதன் அவசியத்தை மறுப்பதாக இது பொருள்படாது. ஒன்றைப் புரிந்து கொள்வதின் நோக்கம் மாற்றத்திற்கான அடிப்படையை இடுவதற்காகத்தான் என்பதுதான் இதன் பொருள். இவ்வாறு தொடக்கம் முதற்கொண்டு, மார்க்சியம் என்பது சமூகம் மற்றும் வரலாறு குறித்த ஒரு அறிவியலாகவும், உலகை மேம்பாட்டிற்கு மாற்றிச் செல்வதற்கான ஒரு திட்டமாகவும் அமைகிற இரட்டைக் குணங் கொண்டதாக இருந்து வந்துள்ளது.

மேற்பார்வைக்கு இந்த இரு குணங்களுக்குள்ளே எந்தவிதமான இணக்கமின்மையோ, முரண்பாடோ இருக்கவில்லை. ஆனாலும், தங்கள் இளமைக்கால ஆர்வத்தில் மார்க்சும், எங்கல்சும் கற்பனை செய்து பார்த்திருக்கக் கூடியதற்கு மாறாக, மேற்சொல்லிய இரு குணங்களையும் ஒரு சீரான, முனைப்பான செயல்பாட்டில்

இணைப்பது அதிகக் கடினமாக இருப்பதை நீண்ட கால அனுபவம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

1848 வசந்தத்தில் மார்க்ஸ் 'ஃபயர்பாஹ் மீதான ஆய்வுரை' களை எழுதிய காலமுதற்கொண்டே, அவரும், அவருடைய வாழ்நாள் கூட்டாளியும் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட பெரும் பணியைத் தொடங்கினார்கள். அதாவது, உலகைப் புரிந்து கொண்டு, அதே சமயம் அதனை மாற்றுவதற்கான ஓர் உபாயத்தைக் கண்டடையும் பணியைத் தொடங்கினார்கள். தாங்கள் சொந்தமாகக் கண்டறிந்த அறிவார்ந்த முடிவுகளைச் சோதித்து, பிற மரபுகளின் மிக முன்னேறிய சிந்தனைகளைக் கணக்கில் கொண்டு, தங்கள் நிலையை விரிவுபடுத்துவது அவர்களுடைய அணுகுமுறையாக இருந்தது. இத்தகு பிற மரபுகளின் சிந்தனைகளில் குறிப்பிடத் தக்கவை: ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோசலிசம். இம்முயற்சியில் அவர்கள் ஏற்கெனவே இரு நூல்களை முடித்து அல்லது முடிக்கும் நிலையில் இருந்தார்கள். இவற்றில், சம கால செர்மானிய சிந்தனையாளர்களை விமர்சிப்பது பெரும் பகுதி: பின் உலகைப் புரிந்து கொள்ளும் தங்களுடைய சொந்த வித புரிதலையும் (வரலாற்றுப் பொருள் முதல் வாதம்) இந்த உலகை மாற்றக் கூடிய வழிமுறையையும் (பாட்டாளி வர்க்கப் புரட்சி) இந்நூல்களில் முன்வைத்தனர். அந்த இரு நூல்கள்: 1. 'புனிதக் குடும்பம் அல்லது விமர்சனத்தின் விமர்சனம் பற்றிய விமர்சனம்' 2. 'செர்மானிய கருத்தியல்: மிக அண்மைக்கால செர்மானிய தத்துவப் பிரதிநிதிகளான ஃபயர்பாஹ், புருனோபுயர், ஸ்டைனர் மற்றும் செர்மானிய சோசலிசத்தின் பல்வேறு தீர்க்கதரிசிகள் பற்றிய விமர்சனம்'. அடுத்த ஈராண்டுகளில் மேலும் மூன்று நூல்களை முடிக்கும் தருவாயில் இருந்தார்கள். அவை: 1. 'இங்கிலாந்தின் உழைக்கும் வர்க்கத்தின் நிலைமை' (ஏங்கல்ஸ்) 2. 'தத்துவத்தின் வறுமை' (மார்க்ஸ்) 3. 'பொதுவுடைமை அறிக்கை' (இருவரும்).

மேற்குறித்த ஐந்து நூல்களும், இந்த இரு இளைஞர்களின் ஆழ்ந்த, அறிவார்ந்த செயல்பாட்டுக்

காலகட்டத்தின் படைப்புக்களாகும். அப்போது இருவரும் தங்கள் இருபதுகளில் (வயது) இருந்தனர். இவர்களுடைய உலகக் கண்ணோட்டம் ஒரு வடிவு எடுத்துக் கொண்டிருந்தது. 1848 புரட்சிகளின் தொடக்க காலத்தில் 'பொதுவுடைமை அறிக்கை' வெளிவந்ததோடு அவர்களுடைய கருத்துக்கள் வெகுதொலைவு பரவி, இன்றைக்கு நாம் அறிந்து வைத்துள்ள மார்க்சியத்தின் கருத்தியல் வகையான (Idealogical) திட்டப்பாங்கான அடிப்படையாயின. இதற்காக, அவர்களுடைய பிற்காலத்திய படைப்புக்களில் முக்கியமானவை எவையும் மார்க்சிய அடிப்படையுடன் சேர்க்கப்படவில்லை என்று பொருளில்லை. உண்மை இதற்கு மாறானது. அடிப்படை முடிவுகள் தக்க வைக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டன. வரலாற்றுப் பொருள் முதல் வாதம் பெரிதும் செம்மை செய்யப்பட்டு, முதலாளியத்தை விளக்குவதற்காக விரிவாக்கப்பட்டது. அது, உலகைப்புரிந்து கொள்வதற்கான திறவுகோலாகத் தொடர்ந்து கையாளப்பட்டது. தொடக்க முதலே, புரட்சியின் நோக்கம் பொதுவுடைமை என்று மார்க்சும், எங்கல்சும் நம்பி வந்தனர். நாளாவட்டத்தில் மாறிச் செல்லும் ஓர் இடைநிலைக் கட்டத்தின் தேவையை அங்கீகரித்தார்கள். 1875-இல் இதனை மார்க்ஸ் பொதுவுடைமையின் முதற்கட்டம் என்றழைத்தார். சோசலிசம் என இதனை இவருடைய ஆதரவாளர்கள் அழைத்தார்கள். இதற்கான ஒரு விளக்கத்தை மார்க்சோ, ஏங்கல்சோ வழங்கிச்செல்லவில்லை. ஆனால் இவர்கள் எழுத்துக்களிலிருந்து உதிரியாகக் கிடைத்துள்ளவற்றை வைத்துப் பார்த்தால், மாறிச் செல்லும் இந்த இடைநிலைக் கட்டமானது பிரதானமாக முதலாளியத்தின் ஒரு மறுப்பாக இருக்கும் என்றும்; ஒரு புரட்சிகரப் போராட்டத்தின் மூலமாகவே இந்த இடைநிலைக் கட்டம் தனக்குரிய சொந்த நிலையை (பொதுவுடைமையை) உருவாக்கும் என்றும்; இந்தப் புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தை மறு ஆக்கம் செய்யும் என்றும்; இவ்வாறு செய்வதினூடாகத் தன்னையே அது மறு ஆக்கம் செய்யும் என்றும் அறிய முடிகிறது. (இக்கருத்தை

ஃபயர்பாஹ் மீதான மூன்றாவது ஆய்வுரையில் குறிப்பாகக் காணலாம்).

வரலாற்றுப் பொருள் முதல்வாதத்திற்கும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையிலுள்ள உறவு என்ன என்பது மார்க்சியத்தின் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும் – அன்றும் சரி இன்றும் சரி, மார்க்சும், ஏங்கல்சும் தங்களுடைய தொடக்ககால நூல்களில் இதற்கு மிக நேரடியான, சிக்கலற்ற பதிலைத் தந்துள்ளார்கள். இங்கிலாந்து, மற்றும் வளர்ச்சி பெற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சி வேகமாகப் பரவி, எந்திரம், ஆலைமுறை, பாட்டாளி வர்க்கம் (அதாவது உடைமையற்ற, கூலி வருவாய் கொண்ட உழைக்கும் வர்க்கம்) ஆகியவை வெகுவாக வளர்ச்சி பெற்றதாகக் கருதப்பட்டது. இதற்கான அனுபவ ரீதியான முன்மாதிரிகையை ஏங்கல்சின், ‘இங்கிலாந்தின் உழைக்கும் வர்க்கத்தின் நிலைமை’ என்ற நூல் வழங்கிற்று. இதில் முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் பற்றிய ஆய்வினை ‘பொதுவுடைமை அறிக்கை’ முன்வைத்தது. முழுமையாக வளர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிக் குணம் பற்றி ‘புனிதக்குடும்பம்’ வலுவாக முன்வைத்தது: “ஏனெனில் எல்லா மனித அம்சத்தின், பார்க்கப் போனால், மனித அம்சத்தின் தோற்றமும் கூட, சுருக்கப்பட்டுவிட்ட நிலை முழுமையாக வளர்ந்த பாட்டாளி வர்க்கத்திடம் பூர்த்தியாகிறது: ஏனெனில் நவீன சமூகத்தில், சகலவிதமான மனிதத் தன்மையற்ற நிலைகளின் குவி மையத்தைப் பாட்டாளி வர்க்க நிலைமைகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன; ஏனென்றால் மனிதஇன வாழ்வு, பாட்டாளி வர்க்கத்தில் இழக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வர்க்கம் இந்த இழப்புப் பற்றிய ஒரு கோட்பாட்டு உணர்வினைத் தனக்கென வென்று வைத்துள்ளது. மனிதத்தன்மை யற்றவற்றுக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு பாட்டாளி வர்க்கம் தவிர்க்க முடியாத – கட்டாயமான அவசியத்தால் – நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்கம் தன்னையே விடுதலை செய்யவேண்டும், செய்ய முடியும் என்பதற்கு இவையெல்லாம் காரணங்கள்.”

உலகம் பற்றிய புரிதலுக்கும் அதனை மாற்றுவதற்கும் இடையிலுள்ள உறவு குறித்த மேற்படிக் கண்ணோட்டத்தை மார்க்சும், ஏங்கல்சும் தங்கள் வாழ்நாளில் ஒருபோதும் மாற்றிக் கொள்ளவில்லை. கோட்பாட்டு ரீதியாக இக்கருத்து மார்க்சுடைய 'மூலதனம்' என்ற நூலில் பெரிதும் விரிவாக்கப்பட்டு, ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் (முதல் அகிலம்) அவர்கள் ஆற்றிய பணிக்கும் 1895-இல் ஏங்கல்ஸ் காலமாகும்வரை சோசலிசக் கட்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் ஆலோசகர்களாகவும், வழிகாட்டிகளாகவும் அவர்கள் வகித்த பாத்திரத்திற்கும் அடிப்படையாக இருந்தது இக்கருத்துதான்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கடமை என்பது மார்க்சியத்தின் மைய இடமாகும். தங்களுடைய ஆதரவாளர்களுக்கு இதனை மார்க்சும், ஏங்கல்சும் தந்து சென்றனர்.

பாட்டாளி வர்க்கமே புரட்சிகர மாற்றத்தை நிகழ்த்தும் என்ற இந்த நம்பிக்கை மார்க்ஸ் இறந்தபின் வந்த நூறாண்டுக்கால அனுபவ ஒளிக்குமுன் நின்றுள்ளதா என்ற வினாவுக்குரிய விடை சிறப்பானதாக இல்லை.

'மூலதனம்' நூலில் விளக்கப்பட்டுள்ள முதலாளிய வளர்ச்சிக் கோட்பாட்டிலிருந்து பெறப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் புரட்சிகள் எவையும் நிகழவில்லை.

இதற்கு முக்கிய காரணம், 1850ஆம் ஆண்டிற்குப் பிறகு, அதாவது மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து நூல்களை மார்க்சும், ஏங்கல்சும் படைத்து முடித்த பிறகு, பாட்டாளி வர்க்கம் அடைந்த வளர்ச்சி, 'புனிதக் குடும்பம்' என்ற நூலிலிருந்து மேலே எடுத்துச் சொல்லப்பட்ட பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறான முறையில் நிகழ்ந்தது. (இதற்கு இரண்டாம்பட்சக் காரணமாக இருப்பது, பாட்டாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் இடைப்பட்ட நடுத்தர வர்க்கம் என்பது 'பொதுவுடைமை அறிக்கை' கூறுவதுபோல மறைந்தொழிவதற்குப் பதிலாக, எண்ணிக்கையிலும் வகைகளிலும் பெருகியே வந்துள்ளது.

இதன் காரணமாக பாட்டாளி வர்க்கம் முதலாளிய சமூகக் கட்டமைப்பில் எண்ணிக்கைப் பெரும்பான்மை கொண்டதாக உருவாகவில்லை). தொழிலாளர்களின் உண்மை ஊதியம் (real wage), அதாவது உழைப்புச் சக்தியின் மதிப்பு, படிப்படியாக அதிகரித்தது; வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நீடித்து, சில சமயங்களில் ஆழமடைந்த போதிலும், தொழிலாளிகளைப் பொறுத்தவரை, முதலாளிய அமைப்பைப் புரட்சிகரமான முறையில் தூக்கியெறிதல் என்பதாக அல்லாமல் முதலாளியக் கட்டமைப்புக்குள்ளேயே தமது நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் என்ற குறிக்கோளை மேற்கொண்டனர். எனவே 19ஆம் நூற்றாண்டு முடிவதற்கு முன்பாகவே, புரட்சிகரக் குறிக்கோள்களுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதாகத் தொடர்ந்து பிரகடனப்படுத்தி வந்த மார்க்சியக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் உண்மையில் சீர்திருத்த அமைப்புகளாகவே மாற்றப்பட்டிருந்தன.

மார்க்சும், ஏங்கல்சும் பாட்டாளி வர்க்கம் பற்றித் தாங்கள் முன்பு கொண்டிருந்த சித்திரத்திற்கும், பல ஆண்டுகளுக்குப் பின் தம்மை எதிர்கொண்ட நிலைமைகளுக்கும் இடையே உள்ள பிளவைப் பார்க்கத் தவறினர் எனக் கருதக்கூடாது. எடுத்துக் காட்டப்படக் கூடிய பல உதாரணங்களில், ஏங்கல்ஸ், மார்க்சுக்கு 1863 ஏப்ரல் 8இல் எழுதிய கடிதத்தைக் கூறலாம்: "இங்கிலாந்துப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து புரட்சிகர ஆற்றல் முழுவதும் நடைமுறையில் மங்கிப் போய் விட்டது. இங்கிலாந்துப் பாட்டாளி, முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்குத் தன் முழுச் சம்மதத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறான்." மேலும், தாங்கள் தொடர்பு கொண்டிருந்த தொழிலாளி வர்க்க இயக்கங்களில், குறிப்பாக முதல் அகிலம், ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவற்றில் புரட்சிகர உணர்வு அர்ப்பணிப்பு ஆகியன இல்லாமை என அவர்கள் கருதியதற்கு எதிராக ஆழமான, விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்தினர். மார்க்சின் செயல்திட்டக் கூற்றுகளில் மிகப் புகழ்பெற்றது "கோதா செயல்திட்டம் பற்றிய விமர்சனம்"

என்பதாகும். இது, அப்போதிருந்த இரண்டு பெரும் ஜெர்மானியத் தொழிலாளர் கட்சிகளின் ஐக்கியத்திற்காக 1875இல் தயாரிக்கப்பட்ட ஒரு புரட்சித் தன்மையற்ற, பூசி மெழுகப்பட்ட நகல் தீர்மானத்திற்கு எதிரான விட்டுக் கொடுக்காத ஆனால் வெற்றி பெறாத கருத்துப் போராட்டமாகும்.

ஆயினும், 1850திற்குப் பிறகு தொழிலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் பற்றி அவர்கள் வெளிப்படுத்திய எதிர்மறை மதிப்பீடுகளுக்கும், உணர்வுகளுக்குமான அடையாளங்கள் ஏதும் அவர்கள் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு விட்டுச் சென்ற மார்க்சியத்தின் மீது இருக்கவில்லை. அதற்கான காரணங்களை இங்கு நம்மால் பரிசீலிப்பது இயலாது. 'பொதுவுடைமை அறிக்கை' யும் 'மூலதனம்' நூலும் இயக்கத்தின் அதிகாரபூர்வமான வழிகாட்டி நூல்களாக இருந்தன. 1888ல் நிறுவப்பட்ட இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் (இதில் முதன்மையானவர் காட்ஸ்கி) பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பதை உதட்டளவில் கடைப்பிடித்தனர். 1914இல் அகிலத்தின் உறுப்பினர்களாக இருந்த தேசியக் கட்சிகளிடையேயும் அவற்றுக்குள்ளேயும் பிளவுகள் ஏற்பட்டன. உலகப் போரில் தம் நாடுகளை ஆதரிப்பது என்ற நிலைபாட்டை அவை எடுத்ததன் காரணமாக இப்பிளவு ஏற்பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள மார்க்சிய இயக்கத்தின் புரட்சிகர உள்ளுறையாற்றல் என்பது ஒரு கட்டுக்கதையாக இப்போது வெளிப்படுத்தப்பட்டது.

இதில் புதிர் என்னவென்றால், இந்த நெருக்கடியான சூழலில்தான், இக்கட்டுக்கதைக்கு ஒரு மறுவாழ்வும் கிட்டியது. ரஷ்யப் போல்ஷ்விக்குகளின் தலைவரான லெனின் – அவருமே ஒரு முழுமையான நெறி பிறழாத மார்க்சியர் – சோசலிசக் கட்சிகள், குழுக்கள் ஆகியவற்றின் தலைவர்கள் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் அல்லர் என்றும், மார்க்சும், எங்கல்சும் துவக்கம் முதலே கூறிவந்த பண்புகளுடைய சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் துரோகிகள் என்றும் கண்டனம் செய்தார். 1917-

இல் ரஷ்யப் புரட்சியில் போல்ஷ்விக்குகள் வெற்றியடைந்த பிறகு இந்த நிலைபாடு விரைவில் வலுப்பெற்றது. தலைமைக்குள்ளிருந்த அர்ப்பணிப்பு மிக்க புரட்சிகரக் குழு, தீர்மானகரமான தருணத்தில், ஊசலாடுபவர்களை வென்றெடுத்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்றது. இந்த அனுபவம், 1914-இல் ஏற்பட்ட பிளவுகள் தொட்டு லெனின் முன்வைத்து வந்த ஆய்வினை உறுதி செய்வதாக இருந்தது. அதாவது, பாட்டாளி வர்க்கம் தனது வரலாற்றுக் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தது. பாட்டாளி வர்க்க வேர்களிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்ட ஒரு தலைமைதான் என்பதாகும்; இத்தலைமை, பாட்டாளி வர்க்கம் முழுவதையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை; மாறாக, நடைமுறையில் முதலாளிகள் பக்கம் போய் விட்ட ஒரு சிறுபகுதியை (பாட்டாளி வர்க்க சீமான்கள் – labour aristocracy) மட்டுமே பிரதிநிதித்துவம் செய்வதாயிற்று.

இந்த விளக்கமும் இதற்கு அடிப்படையாக இருந்த 'பாட்டாளி வர்க்க சீமான்கள்' என்ற கோட்பாடும் முதல் உலகப் போருக்கும், ரஷ்யப் புரட்சிக்கும் பின்பு எழுந்த பொதுவுடைமை இயக்கத்தின் மரபுக் கோட்பாடாயின. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள புதிய பொதுவுடைமைக் கட்சிகள் தத்தம் நாட்டுப் பாட்டாளி வர்க்கங்களுக்குத் தலைமை ஏற்று, முற்றுகைக்குள்ளான ரஷ்யப் புரட்சியாளர்களுக்கு ஓடி வந்து உதவி, இரண்டாம் அகிலத்தின் தவறான தலைவர்களாலும், அதன் சீர்திருத்தவாத உறுப்பினர்களாலும் தற்காலிகமாகத் தடம்புரள வைக்கப்பட்ட வரலாற்றுத் தொடர்வண்டியை மீண்டும் சரியான பாதையில் வைக்க வேண்டியது அவற்றின் கடமையாக இருந்தது.

ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. ஒரு சில விதிவிலக்குகளைக் கழித்துப் பார்த்தால் வளர்ச்சி பெற்ற நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகள் தத்தம் உழைக்கும் வர்க்கங்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெறத் தவறின: 1930களில் அக்கட்சிகளால் பாசிசத்தின் பரவலைத் தடுக்க

முடியவில்லை; ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலைக்கு அருகாமையில் கூட வர அவற்றால் முடியவில்லை. மேலும் 2-ஆம் உலகப் போருக்குப் பின் வந்த நீண்டகால முதலாளிய விஸ்தரிப்பின் போது, ஓரளவு வெற்றிகரமாக வளர்ச்சி பெற்று வந்த ஐரோப்பிய பொதுவுடைமைக் கட்சிகள் – யூரோ கம்யூனிஸக் கட்சிகள் எனப்படுபவை – படிப்படியாக மேலும் சீர்திருத்தப் போக்குள்ளவையாக வளர்ந்தன. மார்க்ஸ் இறந்த ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின் இன்று வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளில், பாட்டாளி வர்க்கத்தைப் புரட்சிகர மாற்றத்திற்கான காரணியாகக் கருதுவதற்குப் போதிய ஏதுக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. (ஆனால் வருங்காலத்தில், மாறிய நிலைமைகள் இந்த முடிவினை மீள்பார்வை செய்யத்தூண்டலாம். ஆனாலும் மார்க்சியம், வரலாற்று எதார்த்தங்களைப் பற்றியே பேச முடியும்; எதிர்காலம் பற்றிய ஆருடங்களைத் தர முடியாது.

இந்த நிலைமை, பலருக்கு மார்க்சியத்தில் உள்ள ஒரு ஓட்டையாகவும், காலப் போக்கில் இந்த மார்க்சிய இயக்கம் சரிவுற்று வீழ்ந்துவிடும் என்றும் தோன்றியது. வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில், இந்த எதிர்பார்ப்பிற்கு ஆதரவும் கிடைத்துள்ளது. இந்நாடுகளில் உழைக்கும் வர்க்கங்கள் மார்க்சியத்திலிருந்து அப்பால் விலகிச் செல்லும் போக்கில் உள்ளன, அல்லது முதலாளியக் கட்டமைப்பிற்குள்ளேயே ஒரு சீர்திருத்தத் திட்டத்திற்கு உருமாறிப் போகும் போக்கில் உள்ளன. இந்த முதலாளிய அமைப்பையே தூக்கி எறியும் மூலத் திட்டத்திற்கு வரும் நிலை அங்கு இல்லை. இவ்வாறு தனது புரட்சிகர சாராம்சத்திலிருந்து கழற்றப்பட்ட ஒரு மார்க்சியம் ஒரு முரண்பாடாகும்.

ஆனாலும், மார்க்சியம் தாக்குப் பிடித்து வந்திருப்பதோடு மட்டுமின்றி, மார்க்ஸ் இறந்தபின் வந்துள்ள நூறு வருடங்களில் மனித வரலாற்றின் ஏனைய வகைக் கருத்துக்களை விட மார்க்சியமானது பலருக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாகவும் ஆகியுள்ளது. இத்தகைய வெளிப்படையான முரண்நிலைக்கு என்ன விளக்கம் தருவது?

இந்த வினாவுக்கு விடை தர வேண்டுமானால், மேற்கு ஐரோப்பிய வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளிலிருந்து நம் கவனத்தைத் திருப்பி, உலகளாவிய முதலாளியமுறை மீது கவனத்தை வைக்க வேண்டும். இந்த முதலாளியம், 16 முதல் 18ஆம் நூற்றாண்டுகளின் வழியாக உருவான வணிக வாதத்தில் வேர் பிடித்திருந்தாலும் 19ஆம் நூற்றாண்டின் பின்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் தீர்மானிக்கிற சக்தியாக உலகில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

முதலாளியத்தின் உலகளாவிய தன்மையை மார்க்ஸ் ஒருபோதும் மறுக்காத போதிலும், இந்த முதலாளிய அமைப்பின் முழு மொத்தமான செயல்நிலை பற்றி ஒரு கோட்பாட்டை மார்க்ஸ் விவரிக்க முயற்சிக்கவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில் முதலாளிய வளர்ச்சி பற்றி 'பொதுவுடமை அறிக்கையும்' 'மூலதனமும்' விளக்கியவற்றை, 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், உலக முழுவதற்குமான முதலாளிய வளர்ச்சிக்கும் பொதுமைப்படுத்திப் பார்த்த முயற்சி நடந்தது. இந்த நோக்கில் மேற்கில் வகைப்படுத்திப் பார்த்த முயற்சி நடந்தது. இந்த நோக்கில் மேற்கில் வகைப்படுத்திய வளர்ச்சிக் கட்டங்களின் வரிசையை உலகின் பிறபகுதியிலும் பொருத்திப் பார்க்கவேண்டியது வந்தது. இந்த வரிசை: நிலப்பிரபுத்துவம், பூர்ஷ்வா புரட்சி, தொழில்மயமாதல், வர்க்கங்கள் எதிரெதிர் முனைகளில் திரளுதல் (பூர்ஷ்வா – பாட்டாளி வர்க்கம் என்று திரளுதல்), பாட்டாளி வர்க்கப் புரட்சி, சோசலிசம், இவ்வாறு வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகள் மீது கொண்ட குவி மையம், உலகளாவிய முதலாளியத்தின் பக்கம் திரும்பியது ஒரு அளவு வகைப் பட்ட பிரச்சினையாகவே (quantitative)) தோன்றும்படி காட்டப்பட்டதால், இந்தப் பிரச்சினையை விளக்க எந்தவிதக் கோட்பாட்டுத் திருத்தங்களும் தேவை எனப்படவில்லை.

ஆனால் படிப்படியாக இவ்வித அணுகுமுறை போதுமானதாக இல்லை என்பது தெளிவாயிற்று. மையப்பகுதியிலிருந்து ஓரப்பகுதிகளுக்கு முதலாளியம்

பரவிய நிகழ்வு, ஒரு எளிதான விஸ்தரிப்பாக இல்லை. மாறாக, ஓரப்பகுதிகளைத் தனது ஆளுகைக்கு கொண்டு வருவதற்காக மையப்பகுதியானது தனது மேம்பட்ட பொருளாதார – அரசியல் – இராணுவ சக்திகளைப் பிரயோகித்தது மையப்பகுதிக்கும், அதன் ஆளும் கும்பலுக்கும் பயன்தரத் தக்க விதத்தில் வடிவமைக்கப்பட்ட பொருளாதார உறவுகளையும், நிறுவன அமைப்புக்களையும் ஓரப்பகுதிகள் மீது திணித்தது. இவ்வாறு சுரண்டலின் உச்சஅளவு ஓரப்பகுதிகளில் நிலைநாட்டப்பட்டது. இதன் விளைவாகக் கிடைத்த உபரி உற்பத்தி ஓரப் பகுதியின் மேல் மட்டங்கள், மையப்பகுதியின் ஆளும் வர்க்கங்கள், ஓரளவிற்கு மையப் பகுதியின் உழைக்கும் வர்க்கங்கள் ஆகியவற்றிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. (ஓரப் பகுதிகளிலிருந்து உறிஞ்சிக் கொள்ளப்படும் செல்வத்தின் ஓரப்பகுதி மையப்பகுதியிலுள்ள தொழிலாளிகளைச் சென்றடைகிறது என்பது, 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிக்குப் பிறகு மையப் பகுதியிலுள்ள தொழிலாளரிடையே சீர்திருத்தவாத தன்மை அதிகரித்து வருவதற்கான மற்றொரு காரணமாகும்).

இந்த நாணயத்தின் மறுபக்கம் 'வளர்ச்சியின்மையின் வளர்ச்சி' என்று அழைக்கப்படும் தொழிலாளர் – குடியானவர்களின் அவலநிலை, வேலையில்லாத் திண்டாட்டம், ஏற்றுமதியையும், ஆடம்பரப் பொருள் சந்தையையும் நோக்கிய வேளாண்மையும் தொழில்துறையும், வேகமாகப் பெருகும் ஜனத் தொகைக்கு ஏற்பப் புதிய வேலைகள் தோன்றாமை ஆகியவையாகும். இந்த ஓரப் பகுதிகளில் மையப்பகுதி முதலாளியம் பரவியதால் உருவான மனிதர்கள், மார்க்ஸ், ஏங்கல்ஸ் 'புனிதக் குடும்பத்தில்' விளக்கிய 'பூரணமாக வளர்ச்சி பெற்ற பாட்டாளி வர்க்கம்' என்ற வருணனைக்கு நெருக்கமாக வருகின்றனர். இந்த மனிதர்களின் "வாழ்க்கை நிலைமைகள் நவீன சமூகத்தின் சகலவிதமான மனிதத்தன்மையற்ற நிலைமைகளின் குவிமையப் புள்ளியாக உள்ளன."

ஓரப்பகுதிகளுக்கு முதலாளியம் பரவியதைத் தொடர்ந்து மார்க்சியம் பரவியதில் வியப்பில்லை. மூல

மார்க்சிய அர்த்தத்தில் பார்க்கும்போது, இன்றுள்ள புதிய பாட்டாளி வர்க்கம், இன்று மூன்றாம் உலகின் மனித அவமதிப்புக்குள்ளாகிவரும் மனிதஇனமேயாகும்.

இத்தகைய வளர்ச்சிகள், 1840களில் மார்க்சும், ஏங்கல்சும் உருவாக்கிய மார்க்சியத்தைக் கேள்விக்குள்ளாக்கவில்லை. உலகைப் புரிந்து, அதனை மாற்றும் காரியம் ஓர் இரட்டைக் குணமுள்ள திட்டமாகும். மார்க்சியர்கள் உலகை மறுவிளக்கம் செய்ய வேண்டிய காலம் வந்துள்ளது தெளிவு. இக்காரியத்தைச் செய்கையில், தாங்கள் கடந்து வந்த பழைய விளக்கங்களையும் விமர்சிக்க வேண்டும். கீழ்வரும் நூறாண்டு நிறைவுச் செயல் நிரலில் சில முக்கிய பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டலாம்.

1. புரட்சிகர மாற்றத்திற்கான முன்னணிச் சக்தியைப் புதிய பாட்டாளி வர்க்கம் வழங்கும் ஆற்றல் கொண்டது என்பதில் ஐயமில்லை. இதனை 2ஆம் உலகப் போருக்குப் பின் மூன்றாம் உலகில் நிகழ்ந்துள்ள தொடரான பல புரட்சிகள் எடுத்துரைத்துள்ளன. ரஷ்யப் புரட்சியின் ஆரம்பக் கட்டத்தில் தொழில்மயமான பாட்டாளி வர்க்கத்தின் பங்கு பணி இருந்தாலும், மையப் பகுதியின் வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் மார்க்சியம் எதிர்பார்த்த பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியை விட ரஷ்யப் புரட்சியானது, மூன்றாம் உலகின் புரட்சியை நெருங்கியே உள்ளது. உலக முதலாளிய நெருக்கடி ஆழப்பட்டு, ஓரப் பகுதி நாடுகளைத் தாக்கும் போது, மேற்கொண்டு மூன்றாம் உலகப் புரட்சிகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. இவை பற்றி மார்க்சியர்கள் அதிகம் அறிவது அவசியம். இப்புரட்சிகளின் பொது அம்சங்கள், வேறுபட்ட வரலாற்றுப் பின்னணிகள், உலக அமைப்பில் அவை நிகழும் இடங்கள், வித்தியாசமான இயற்கை அமைப்புக்கள் போன்ற காரணங்களால் தோன்றக் கூடிய மாறுபட்ட அம்சங்கள் ஆகியவற்றை அறிவது அவசியம். இத்தகைய அறிதலின்றி, இருபதாம் நூற்றாண்டின் இறுதி வருடங்களில் உலகு பற்றிய நமது புரிதல் குறைபாடானதாகிவிடும்.

2) மேம்பாட்டிற்காக உலகை மாற்றுவது என்று வந்துவிட்டால், பல பிரச்சினைகள் எழுகின்றன. கீழ்க்கண்டவாறு இவற்றின் முக்கியத்துவத்தை வரிசைப்படுத்தலாம். இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகள் எவ்விதமான சமூகங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன? எந்த அளவிற்கு அவை மூலமார்க்சியப் பொருளில் (Classical Marxism) சோசலிசத் தன்மையுள்ளவையாகி உள்ளன? அதாவது எந்த அளவிற்கு இவை பொதுவுடைமையை நோக்கி மாறும் கட்டத்திலுள்ள சமூகங்களாக இருக்கின்றன? (வேலை பற்றிய மாறுபட்ட அணுகல்களையும் தேவைக்கு ஏற்பப் பகிர்வும் கொண்ட, வர்க்கம் அரசு அற்ற ஒரு சமூகம்) எந்த அளவிற்கு இவை அரசு முதலாளியமாக உள்ளன? எந்த அளவிற்கு இவை தமக்கே உரித்தான குணங்களையும் வளர்ச்சி விதிகளையும் கொண்ட புதிய வர்க்க சமூகங்களாக உள்ளன? இந்தக் கேள்விகளுக்குத் தரக் கூடிய பதில்களை ஒட்டி இனி வரக்கூடிய புரட்சிகளில் இந்தப் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்கள் வகிக்கக் கூடிய பாத்திரம் பற்றி மார்க்சியர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள்.

8) இன்றைய காலகட்டத்திலும், சமீபத்திய எதிர்காலத்திலும், முதலாளிய அமைப்பில் புரட்சிக்கான சாத்தியமான ஆற்றல், மார்க்சியம் முன்னர் சொன்னது போல மையப் பகுதியில் இல்லாமல் ஓரப்பகுதிகளில்தான் இருக்கிறது என்பதை வரலாறு எடுத்துக் காட்டியுள்ளது. ஆனால், இதற்காக வேண்டி, ஓரப்பகுதிகளை விட மையப் பகுதிக்குப் புரட்சி தேவைப்படாது என்பது அர்த்தம் இல்லை. இரு பகுதிகளுமே பிரிக்க முடியாத அளவிற்கு ஒன்றாய்க் கட்டப்பட்டுள்ளன. காலப் போக்கில் இரண்டுமே ஒரே முடிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். எனவே 19-ம் நூற்றாண்டில் நடுப்பகுதிக்குப் பின் மையப் பகுதியில் மார்க்சியம் நீண்ட சரிவு கண்டிருந்தாலும், அது மையப்பகுதிக்கு சம்பந்தமற்ற வி யமல்ல. மையப்பகுதியின் மார்க்சியத்திற்கு உடனடியாக ஒரு மறுபிறப்பு தேவை. இதற்கு, ஓரப் பகுதிகளுக்கு முதலாளியம் பரவியதன் வரலாறு பற்றிய புதிய

புரிதல் அவசியம். ஆண்டுக்கணக்காக அல்லாமல் தலைமுறைக் கணக்கில் அளக்கத்தக்க ஒரு நீண்டகால கட்டத்தில் புரட்சிகரப் போராளிகளைப் பற்றிய பங்கினை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். இதனைச் செய்து முடிக்க மையப்பகுதி மார்க்சியர்கள் முதலில் பிறப்பு முதற்கொண்டே தங்களைப் பாதிக்கக் கூடிய ஏகாதிபத்தியத் திமிர், இனவெறி போன்ற நோய்களிலிருந்து தங்களைத் தாங்களே குணப்படுத்திக் கொள்ளுதல் அவசியம். புரட்சிகரத் தலைவர்களாக இல்லாமல், புரட்சிகரத் தொண்டர்களாக உண்மையிலேயே தங்களை ஒத்துக்கொள்ள வேண்டும். தங்கள் சக்திக்கு உட்பட்ட வரையில் தங்களுடைய சொந்த ஆளும்வர்க்கங்களின் 'உலகளாவிய எதிர்ப்புரட்சி' முயற்சிகளைத் தாக்கிக் கலவரப்படுத்த வேண்டும். மேலும், இந்த மார்க்சியர்கள், முதலாளியத்தால் பாதிக்கப்பட்டோர், தொழிலாளர் ஆகியோருடைய சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் நலன்களைத் தளராமல் பாதுகாக்கப் போராட வேண்டும். சரியான செயல் இது என்பதற்காக மட்டுமின்றி, புரட்சிகர நோக்கத்திற்கு வெகுஜனங்களைக் காலப்போக்கில் வென்றெடுக்க இதுவே சிறந்த உபாயம் என்பதற்காகவும் இதைச் செய்ய வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டுப் புரட்சிகளின் வரலாறு, இதுவரை சந்தேகத்தை ஏற்படுத்தாதிருந்து வந்த ஒரு மார்க்சியப் பிழையை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, எந்த மக்கள் புரட்சிப் போர்களில் உண்மையாகப் போராடினார்களோ அவர்களுக்கு மேலாக நின்று, அவர்களிடமிருந்து ஒதுங்கிய புரட்சித் தலைமைகள் மார்க்சியத்தைச் சொல்லிக் கொண்டு தங்களையே ஆளும் மேட்டுக்குடிகளாக ஆக்கிக் கொண்டதை வரலாறு எடுத்துரைத்துள்ளது. இந்த விதப் பிளவு ஏற்படும்போது, ஒரு ஆளும் கூட்டமானது மார்க்சியத்தின் பேரால் தனது ஆட்சியை நியாயப்படுத்த முனையும் அபத்தத்தைக் காணலாம். சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சமீபத்தில் போலந்து ஆகிய அனுபவங்கள் இதனை எடுத்துரைக்கும். இவை, மக்களின் கண்களில் மார்க்சியத்தை அசிங்கப்படுத்துகின்றன.

இது ஒரு பிழையே அன்று எனக் கூறலாம். ஒரு புரட்சிகரத் தலைமை, தன்னுடைய இலக்கினைச் சாதித்தபின் மார்க்சியத்தை விட்டுவிடும் என்று எதிர்பார்ப்பது சரிதானா என்று கேட்கலாம். கேள்வியை இப்படிக்கேட்பது, மார்க்சியத்தைத் தவறாகப் புரிந்த உண்மையை மறைப்பதாக ஆகும். உண்மையான ஒரு புரட்சிகரத் தலைமையின் இலக்கு அதிகாரத்தைக் கைப்பற்றுவது (மட்டும்) அன்று. இது போராட்டத்தின் ஏதோ ஒரு கட்டத்திற்குத் தேவைப்படலாம்; இது ஒரு சம்பவம் – முக்கிய ஒரு யோக்கியதையான மனித சமூகத்தை ஏற்படுத்துகிற உண்மையான இலக்கை நோக்கிச் செல்லும்போது நடக்கும் ஒரு சம்பவம்: அவ்வளவே. அப்படிப்பட்ட மனித சமூகத்தைப் பொதுவுடமை என்கிறது மார்க்சியம். இதனை ஒருபோதும் அடைய முடியாது. ஆனால் தொடர்ந்து அதனை நெருங்கி வர முடியும் என்று குறிப்பாக மார்க்சியம் அங்கீகரிக்கிறது. எனவேதான் ஒரு மார்க்சியத் தலைமை தனக்குத் தானே உண்மையாயிருக்க, புரட்சியை மட்டுமே தன்னுடைய இலக்காகக் கொண்டிருக்காது; இடைவிடாத புரட்சியையே இலக்காகக் கொள்ளும். மார்க்சும், ஏங்கல்சும் இதனை உணர்ந்துள்ளனர். லெனினும் அப்படித்தான். ஆனால் மாசேதுங் என்ற புரட்சிகரத் தலைவர் ஒருவரே இதனைச் சிறப்பாக உணர்ந்து, தெளிவாகச் செயல்படுத்தியவர்.

மாவோ மறைந்தபின், சீனப் பொதுவுடைமைக் கட்சி அவரைக் கண்டனம் செய்தது. சோவியத் யூனியன் போலவே சீனத்திலும் தற்காலிகமாகவேனும் மார்க்சியம் ஆளும் கருத்தியல் (ruling ideology) என்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்டுள்ளது. ஆனால் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோ ஆகியோரின் மார்க்சியம் வாழ்கிறது. தொடர்ந்து மனிதஇனத்தின் மாபெரும் விடுதலை இயக்கத்தின் வீச்சிற்கு உத்வேகத்தை அது தரும்.

தமிழில்: ராஜ் கௌதமன்

நன்றி: 'Monthly Review'

Vol.34 March 1983.

7. மாசேதுங் படைப்பிலிருந்து...

உண்மைகளை முன்வைத்து, விளக்கங்கள் கூறி, சான்றுகளின் மூலமாகக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதுதான் பயன்படுத்தப்பட வேண்டிய முறை, மாறுபட்ட கருத்துக்களை வைத்துள்ள ஒரு சிறுபான்மையினரை வலுக்கட்டாயமாக கீழ்ப்படியுமாறு செய்வது அனுமதிக்க முடியாதது. சிறுபான்மையினரைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் சில சமயங்களில் சிறுபான்மையினரிடமே உண்மை இருக்கும். சிறுபான்மையினரின் கருத்து தவறானதாக இருக்கும் போதும்கூட அவர்கள் தம் கருத்துகளுக்காக வழக்காடவும் தம் கருத்துகளை வைத்துக் கொண்டிருக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒரு கருத்தாடல் இருக்குமானால், அது சான்றாதார விளக்கங்களுடன் நடத்தப்பட வேண்டுமேயன்றி நிர்ப்பந்தத்தின் மூலமும் பலவந்தத்தின் மூலமும் அல்ல.

கருத்தாடலின் போது ஒவ்வொரு புரட்சியாளனும் வி யங்களைத் தானே சுயமாக சிந்தித்துப் பார்ப்பதிலும் சிந்திக்கவும், பேசவும், செயல்படவும் துணிதல் என்ற கம்யூனிச உணர்வை வளர்ப்பதிலும் சிறந்தவனாக இருக்க வேண்டும்...”

From Mao Papers (Ed: Jerome Chen)

சிங்காங் மலையில் மீண்டும் ஏறுதல்


– மாசேதுங் (மே 1965)

மேகங்களைத் தொடுவது
என் நெடுநாள் ஆசை.
நான் மீண்டும் சிங்காங்மலை ஏறுகிறேன்.
நம் பழைய புகலிடம் காண
தொலைவிலிருந்து வந்த நான்,
பழைய காட்சிகள் மாறி
புதியவை இருப்பதைக் காண்கின்றேன்.

காஞ்சனங்குருவிகள் எங்கும்
கானமிசைக்கின்றன.
தூக்கணாங் குருவிகள் பாய்ந்து செல்கின்றன.
ஓடைகள் சலசலக்கின்றன.
வானை நோக்கி வளைந்து
உயர்ந்து செல்கிறது சாலை.
ஒருமுறை ஹுவாங்யாங்சியோவைத் தாண்டியதும்
நம் பார்வையில் படும்
ஆபத்தான இடம் வேறு ஏதும் இல்லை.

காற்றும் இடியும் மோதுகின்றன
மனிதர் வாழும் இடம் எல்லாம்.
முப்பத்தெட்டாண்டுகள் பறந்தன
கை நொடிக்கும் நேரத்தில்.
நம் கைக்குள் அடக்கலாம்
ஒன்பதாம் சொர்க்கத்தின் நிலவை.
ஐந்து கடல்களின் ஆழத்தில்
ஆமைகளைப் பிடிக்கலாம்.
வெற்றிப் பாடல் சிரிப்பொலிக் கிடையில்
நாம் திரும்பிடுவோம்.
சிகரங்கள் ஏறத் துணிந்துவிட்டால்
கடினமானது ஏதும் உண்டோ உலகில்?

~~*



ஒரு குழுவாக இணைந்திருந்து மார்க்சியத்தைத் தேடித் தேடிக் கற்றும் விவாதித்தும் எழுதியும் வந்ததோடு இலக்கியமாக நாங்கள் இணைந்திருந்த அந்தக் காலம் எங்கள் வாழ்வின் பொற்காலம். உலகச் சூழல் பெருமளவு மாறுபட்டுள்ள இன்றைய நிலையிலும் தம் வாழ்வுக்கு உயிர்ப்பும் அழகும் ஆற்றலும் தருவது மார்க்சியம் அன்றி வேறில்லை என்றும் நம்பும் அனைவருக்கும் இந்தப் பெருந்தொகுப்பு ஒரு கல்வி நூலாகப் பயன்படும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

காவ்யா